
D
N60: 34.
1:7 994.

# MADRAS LEGISLATIVE ASSEMBLY DEBATES

EIGHTH SESSION OF THE THIRD LEGISLATIVE ASSEMBLY UNDER THE CONSTITUTION OF INDIA.

## TABLE OF CONTENTS.

**Volume XXXIV (Nos. 1 to 7).**

*26th and 28th February and 1st March to 5th March 1966.*

PAGES

*Saturday, 26th February 1966.*


I Questions and Answers .. .. .. .. .. .. 1–19

II Request for supply of full information during question hour .. 19–20

III Presentation of the Budget for 1966–67 .. .. .. .. 20–60

IV Papers laid on the Table of the House .. .. .. .. 60–64


*Monday, 28th February 1966.*


I Obituary references to (1) Sri V. D. Savarkar, and (2) Sri Abdul Hameed Khan .. .. .. .. .. .. .. 15

II Questions and Answers .. .. .. .. .. .. 151–167

III Adjournment Motions—

(1) Enforcement of Betterment Levy in Manimuthar area .. 167–169

(2) Drought conditions in Thanjavur District .. .. 169–170

(3) Financial assistance to repatriates from Burma .. .. 170–171

IV Announcement—

Business of the House .. .. .. .. .. .. 171

V General Discussion on the Budget for 1966–67 .. .. .. 172–222

VI Papers laid on the Table of the House .. .. .. .. 223–225


*Tuesday, 1st March 1966.*


I Questions and Answers .. .. .. .. .. .. 227–242

II Adjournment Motion—

Dispute between the tenants and mirasdar of A.K.R. Farm Karuppur .. .. .. .. .. .. .. .. 242–244

பள்ளிகளை ஏற்படுத்தவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. இத்தகைய விரிவாக்க வேலை நடைபெற்றதும் ஹரிஜன, ஆதிவாசி மாணவர்கள் மேற்கொண்டும் அதிகமான தொழிற்பயிற்சி - வாய்ப்பையும் வேலை வாய்ப்புக்களையும் பெறுவர். மேலும், சென்னை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, மதுரை மாவட்டங்களில் செயலாற்றும் வேலைவாய்ப்பு அலுவலர்கள் நால்வரும், வேலை வாய்ப்பு பற்றி ஹரிஜன ஆதிவாசி மாணவர்களுக்கு ஆலோசனை கூறுவதுடன், பயிற்சி தேவையான பதவிகளில் அவர்கள் நியமிக்கப் படுவதற்காக அவர்களுக்குப் பயிற்சி வகுப்புகளையும் பொது அறிவு வளர்ச்சிக்காக குறுகிய காலப் பயிற்சி வகுப்புக்களையும் நடத்தவும் வேண்டுமென அரசாங்கம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

**திரு. வை. சங்கரன் :** மெட்ராஸ் பப்ளிக் சர்வீஸ் கமிஷன் நடத்தும் போட்டித் தேர்வுகளில் ஹரிஜன மக்களுக்குத் தனியாகப் பயிற்சி கொடுப்பதற்கு பள்ளிகளோ அல்லது பயிற்சிக் கூடங்களோ ஏற்படுத்துவதற்கு சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா?

**கனம் திரு. பூ. கக்கன் :** கனம் அங்கத்தினர் கேட்பது தொழிற் பயிற்சி சம்பந்தமானது அல்ல. ஏற்கனவே மத்திய சர்க்கார் ஐ.ஏ.எஸ். பயிற்சி கொடுப்பதற்கு ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இது தவிர நாமும் மத்திய அரசாங்கத்துடன் கலந்து பேசி எந்த இடங்களில் அவ்விதமான பயிற்சி கொடுக்கலாம் என்ற முடிவுக்கு வரலாம்.

**திரு. மீ. கலியாணசுந்தரம் :** சார், மலை ஜாதியினர்கள் அதிகமாக உள்ள சேலம், நீலகிரி ஆகிய இரண்டு ஊர்களில் அவர்களுக்கு விசேஷப் பயிற்சி கொடுப்பதற்கு என்ன ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. பூ. கக்கன் :** முதலிலே பதிலில் சொன்னேன். கோயம் பத்தூர், திருச்சிராப்பள்ளி, மதுரை ஆகிய மாவட்டங்களில் வேலை வாய்ப்பை அதிகப்படுத்துவதற்கு அவர்களுக்கு வேண்டிய சலுகை அளிப்பதற்கு ஏற்பாடு செய்திருக்கிறோம். இனிமேல் ஒவ்வொரு ஜில்லாவாக எடுத்துக் கொள்ளப்படும்.

**திரு. மீ. கலியாணசுந்தரம் :** மலை ஜாதியினருக்காக இத்தனை ஸ்தானங்கள் என்றாவது ஒதுக்கப்பட்டிருக்கிறதா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** மலை ஜாதியினருக்கு மட்டுமல்ல. மலை ஜாதியினர், ஆதிவாசிகள் எல்லோருக்கும் 16 சதவிகிதம் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

**திரு. செ. மாதவன் :** ஹரிஜனங்களுக்குப் பயிற்சிப் பள்ளிகளிலே ஒதுக்கப்பட்டிருக்கிற ஸ்தானங்கள், போதுமானதாக இருக்கிறதா அல்லது பற்றாக் குறையாக இருக்கிறதா ? அப்போதைக்கப்போது பரிசீலனை செய்து மேலும் இடங்களை ஒதுக்குவதற்கு சர்க்காரிடம் திட்டம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. பூ. கக்கன் :** தனிப்பட்ட இடங்களில் சலுகை அளிப்பதில்லை. அரசாங்கம் நடத்துகின்ற இடங்களில் சலுகை அளிக்கப்பட்டு வருகிறது. மேலும் விவரம் அறியவேண்டுமென்றால் தனியாகக் கேள்வி போடவேண்டும்.

**திரு. கே. பொன்னையன் :** கோவை நகரிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் ஏராளமான இன்ஜினீரிங் தொழிற்சாலைகள் இருக்கின்றன. அரிசன மாணவர்கள், அரைகுறையாகப் படித்தவர்கள், அவற்றில் சேர்ந்து தொழில் பழகுகிறார்கள். ஆனால், அவர்களுக்குப் போதிய ஊதியம் கிடைப்பதில்லை. சென்னையில் இருப்பது போன்று அங்கு ஒரு இன்டஸ்ட்ரியல் ஹாஸ்டல் ஏற்படுத்திக்கொடுத்தால் அரிசன மாணவர்கள் நன்றாகப் பயின்று வேலை வாய்ப்பு தேடிக் கொள்ளுவார்கள். அதனால், கோவையில் இன்டஸ்ட்ரியல் ஹாஸ்டல் ஏற்படுத்திக்கொடுக்க சர்க்கார் முன் வருமா ?



**கனம் திரு. பூ. கக்கன் :** எங்கெல்லாம் 'தொழில் பள்ளிக்கூடங்கள் இருக்கின்றனவோ அங்கெல்லாம் அரசாங்கம் பார்த்து, நிதி நிலைக்குத் தக்கபடி, விடுதிகள் ஏற்படுத்திக்கொண்டே வருகிறார்கள். கோவையிலும் ஒன்று அவசியமானால் அதுபற்றி அரசாங்கம் பின்னாலே பரிசீலனை செய்யும்.

**திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் :** தலைவர் அவர்களே, சென்னை மாநிலத்தில் 30 தொழில் பயிற்சிப் பள்ளிகள் ஏற்படுத்தியிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்தத் தொழிற் பயிற்சிப் பள்ளிகள் எல்லாம் எந்த எந்த இடங்களில் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன என்று அமைச்சர் அவர்கள் சொல்லுவார்களா ? அதிலும் குறிப்பாக, ஆதித் திராவிட வகுப்பைச் சேர்ந்தவர்கள் அதிகமாக இருக்கும் பகுதிகளிலே வர இருக்கிற தொழிற் பயிற்சிப் பள்ளிகளை ஏற்படுத்த அரசாங்கம் முன் வருமா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** 30 தொழிற் பயிற்சிப் பள்ளிகள் எங்கெங்கே ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன என்பதற்கான விவரம் என்னிடம் இப்பொழுது இல்லை. தனியாகக் கேள்வி போடலாம். ஆதித் திராவிட வகுப்பைச் சேர்ந்தவர்கள் அதிகமாக இருக்கும் பகுதிகளில் தொழிற் பள்ளிகளை ஏற்படுத்தவேண்டும் என்று கனம் அங்கத்தினர் சொல்கிறார். அரிசனங்களாக இருந்தாலும், ஆதிவாசிகளாக இருந்தாலும், வித்தியாசம் இல்லாமல் சேர்ப்பதற்கு ஏற்பாடு செய்யப்படும்.

**திரு. ஜே. மாதா கவுடர் :** ஆதிவாசி மக்களுக்கு ஐ.ஏ.எஸ். தேர்வுக்குப் பயிற்சி கொடுப்பதற்கான இன்ஸ்டிட்யூட் இப்பொழுது பங்களூரில்தான் வைக்கப்பட்டிருக்கிறது. அதுபோன்று நம்முடைய மாநிலத்தில் வைக்க ஏதாவது முயற்சி செய்யப்பட்டதா ? அப்படிச் செய்யப்பட்டிருந்தால், எந்த ஆண்டிலிருந்து நம்முடைய மாநிலத்தில் அப்படிப்பட்ட பயிற்சி கொடுக்க ஏற்பாடு செய்யப்படும் ?

**கனம் திரு. பூ. கக்கன் :** முயற்சி செய்யப்பட்டு வருகிறது. அந்த முயற்சி வெற்றி பெற்று, எப்பொழுது, எந்த இடத்தில் வைக்கப்படும் என்பதைப் பின்னால் அரசாங்கம் தெரிவிக்கும்.

**திரு. ஜே. மாதா கவுடர் :** அத்தகைய இன்ஸ்டிட்யூட் ஒன்றை இந்த மாநிலத்தில் எங்கே வைப்பது என்பதைக் குறித்து ஆலோசிக்கும்போது, அதிகமாக ஆதிவாசிகள் உள்ள நீலகிரி ஜில்லாவில் இந்தப் பயிற்சிப் பள்ளியை வைக்க அரசாங்கம் யோசிக்குமா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** எங்கே அதிகமாகக் கல்லூரிகள் இருக்கின்றனவோ, அங்கேதான் ஐ.ஏ.எஸ். தேர்வுக்குப் பயிற்சி அளிக்கக் கூடிய இன்ஸ்டிட்யூட்டுக்கு வேண்டிய கல்லூரிப் பேராசிரியப் பெருமக்கள் கிடைக்கக்கூடிய வாய்ப்பு இருக்கும். ஆகவே, அத்தகைய இடத்தில்தான் மாணவர்களுக்குப் பயிற்சி கொடுக்க வேண்டியிருக்கிறது. ஆகையால், திட்டவட்டமாகச் சொல்லப்போனால், நீலகிரியில் அந்த இன்ஸ்டிட்யூட் இருக்காது என்பதை நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

**திரு. கே. பொன்னையன் :** நாஷனல் அப்ரென்டீஸ் ஸ்கீம் என்ற பெயரில் சர்க்காரே சில தனிப்பட்ட தொழிற்சாலைகளை அங்கீகாரம் செய்து, அவற்றிலே ஏழை மாணவர்கள் படிக்கும்போதே ஊதியம் பெற்று வந்தார்கள். இப்பொழுது அந்த ஸ்கீம் நிறுத்தப்பட்டிருக்கிறது. அதைப் புதுப்பிக்க அரசாங்கம் முன்வருமா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** அதற்குத் தனியாகக் கேள்வி வேண்டும்.

**திரு. வை. சங்கரன் :** தொழிற்பயிற்சிப் பள்ளிகள், கல்லூரிகள், இதர பள்ளிகள் இவைகளில் எல்லாம் அரிசனங்களுக்கும், ஆதிவாசிகளுக்கும் 16 சதவிகிதம் ஸ்தானங்கள் ஒதுக்கியிருக்கிறோம் என்றாலும், ஓரளவு அட்மிஷன் ஆனவுடனே 'இடம் இல்லை' என்று சாக்குப் போக்குச் சொல்லி, அரிசன மாணவர்களுக்கு இடம் கொடுக்காமல் நிறுத்தி

விடுகிறார்கள். ஆகையால், 16 சதவிகிதம் இடங்கள் நிரப்பப்படும் வரையில், ஒரு காலவரையறை வைத்து, அதற்குப் பின்னால்தான் காலியாக இருக்கும் இடங்களில் வேறு மாணவர்களைச் சேர்க்கலாம் என்ற வகையில் நடவடிக்கை எடுக்கப்படுமா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** இப்பொழுது காலியாக வைப்பதில்லை. அநேக மாணவர்கள் வந்துகொண்டிருக்கிறார்கள். 16 சதவிகிதம் இடங்களைத் தவிர, திறமை அடிப்படையிலும் பரீட்சை எழுதி மேலும் ஸ்தானங்களை அரிசன, ஆதிவாசி மாணவர்கள் பெறவும் வாய்ப்பு இருக்கிறது.

**திரு. மீ. கலியாணசுந்தரம் :** தொழிற்பயிற்சிப் பள்ளிகளில் ஒதுக்கப்பட்டுள்ள ஸ்தானங்களில் அரிசனங்களுக்கும் ஆதிவாசிகளுக்கும் எத்தனை சதவிகிதம், அது போன்று பின்னிலை வகுப்பினருக்கு எத்தனை சதவிகிதம் என்று அமைச்சர் அவர்கள் தெரிவிக்க முடியுமா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** இது மத்திய அரசாங்கத்தின் உதவி பெற்று நடக்கின்ற திட்டம். ஆகையால், ஆதிவாசிகளுக்கும், அரிசனங்களுக்கும் தான் இங்கே சலுகைகள் கொடுக்கப்படுகின்றன.

**புலவர் கா. கோவிந்தன் :** தலைவர் அவர்களே, இவ்வாறு தொழிற் பயிற்சி பெற்றவர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்காத நேரத்தில் அவர்கள் தனியாகத் தொழில் செய்ய இந்தச் சர்க்கார் ஏதாவது நிதி உதவி செய்யத் திட்டம் இருக்கிறதா ? அப்படியானால், எவ்வளவு நிதி உதவி அளிக்கக் கூடும் ?

**கனம் திரு. பூ. கக்கன் :** வேலைவாய்ப்புப் பற்றித் தகவல் வேண்டுமானால், கனம் அங்கத்தினர் அவர்கள், தொழில் அமைச்சர் அவர்களுக்குத் தனிக் கேள்வி போட வேண்டும். அரசாங்கம் மூலம் தொழிற் பயிற்சி பெற்றவர்களிடம் கருவிகள் கைவசம் இல்லாவிட்டால், அவர்களுக்குக் கருவிகள் கொடுக்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் விண்ணப்பித்து, சலுகை பெற்று, தனிப்பட்ட முறையில் தொழில்களை ஆரம்பிக்கலாம்.

**திரு. து. ப. அழகமுத்து :** வேலை தேடித் தரும் ஸ்தாபனம் அரிசனங்களுக்கும் ஆதிவாசிகளுக்கும் போதுமான வாய்ப்பு அளித்திருக்கிறதா என்பது பரிசீலனை செய்யப்பட்டிருக்கிறதா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** அவர்களுக்குப் பல சலுகைகள் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. கனம் சபாநாயகர் அவர்கள், அது பற்றிய விவரங்களை வாசிக்க அனுமதித்தால் வாசிக்கலாம்.

**கனம் சபாநாயகர் :** சுருக்கமாகச் சொன்னால் போதும்.

**கனம் திரு. பூ. கக்கன் :** 16 சதவிகிதம் ஸ்தானங்கள் ரிசர்வ் பண்ணுவதைத் தவிர, திறமைக்கான பரீட்சை எழுதும்போது, அதன் மூலமாகவும் அவர்கள் இடம் பெறலாம். 27 வயது வரைக்கும் ' ஏஜ் ரிலாக்ஸேஷன் ' இருக்கிறது. அதன் மூலமாகவும் சலுகை பெறலாம். இப்பொழுது அவர்களுக்கு ரூ. 25 தான் ஸ்டைபெண்டு கொடுத்து வருகிறோம். அதை ரூ. 45-க்கு உயர்த்தலாம் என்று ஆலோசனை கூறப்பட்டிருக்கிறது. அது சம்பந்தமாக டைரக்டர் ஆப் எம்ப்ளாய்மெண்ட் அண்டு ட்ரெய்னிங் மத்திய அரசாங்கத்திற்கு எழுதியிருக்கிறார்கள். அங்கிருந்து பதிலை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். அந்தப் பதில் சாதகமாக வரும் என்றே நான் நம்புகிறேன். அந்த வகையிலும் சலுகை இருக்கும்.

**திரு. சா. கணேசன் :** ' ஆதிவாசிகள் ' என்ற வரம்புக்குள்ளே, மிகப் பழங்காலமாக நகரத்தை ஒட்டியும் நகரத்திலும் வசிக்கின்ற வலையர்கள் எனப்படும் ஆதிவாசிகள் அடங்குகிறார்களா ? அல்லவா ? என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. பூ. கக்கன் :** அந்தப் பெருமக்கள் ஆதிவாசிகள் பட்டியலில் இடம் பெறுவது இல்லை.





**திரு. டி. கார்ச்சா கவுடர் :** கடந்த மூன்று ஆண்டுகளாகக் கூனூரில் உள்ள தொழிற் பயிற்சிப் பள்ளியில் போதிய மாணவர்கள் வந்து சேரவில்லை என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ? அங்கே தங்கிப் படிக்க ஹாஸ்டல் வசதி இல்லை என்பதும், வெகு தூரத்திலிருந்து வந்து அங்கே படிக்கவேண்டியிருக்கும் அரிசன மாணவர்களுக்கு இடைஞ்சலாக இருக்கிறது என்பதும் அரசாங்கத்திற்குத் தெரியுமா ? அப்படியானால், உடனடியாக அங்கே ஹாஸ்டல் கட்ட அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** ' உடனடியாக ' என்பது இல்லை. எங்கெல்லாம் தொழிற் பயிற்சிப் பள்ளிகள் இருக்கின்றனவோ அங்கெல்லாம் படிக்கின்ற மாணவர்களுக்கு விடுதிகள் ஏற்படுத்தி உதவி செய்யவேண்டும் என்பதுதான் அரசாங்கத்தின் முக்கியமான அவாவாகும்.

**திருமதி ராஜாத்தி குஞ்சிதபாதம் :** தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டத்தில் பாபநாசம் மலையில் ஆதிவாசிகள் நிறைய இருக்கிறார்கள். பிரம்புக் கூடைகள், கைப் பைகள் போன்ற ' ஃபான்ஸி ' பொருள்கள் முடைவதற்கான பயிற்சி, பெண்கள் நல இலாகாவின் மூலம், நாங்கள் கொடுக்கிறோம். அவர்கள் தொழில் செய்வதற்கேற்ற கருவிகள் வாங்கிக் கொள்ளுவதற்கு முதலானவற்றுக்குச் சிறு கடன் கொடுக்கும் விஷயத்தில் இது வரை ஒன்றும் செய்யப்படவில்லை. அங்கே முக்கியமாகப் பெண்கள் தான் அந்த வேலையில் ஈடுபட்டிருக்கிறார்கள். அது குறித்து அந்த மாவட்ட நல அதிகாரியைக் கேட்டு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** ஆதிவாசிகளுக்கு, கைத்தொழிலில் பயிற்சி பெற்றிருக்கிறவர்களுக்காகக் கூட்டுறவு சொஸைட்டிகள் மூலம் பல கைத் தொழிற்சாலைகளை அமைத்து, அவர்களுக்கு ஒத்தாசை உதவி செய்யப்படுகிறது. என்றாலும், தனிப்பட்ட முறையில் கடன் உதவி தேவைப்படுகிறவர்கள் அரசாங்கத்திற்கு அது பற்றித் தெரிவித்தால் அரசாங்கம் பரிசீலனை செய்யும்.

### *Control of bug poison sale*

* 128 *Q.*—Sri V. SANKARAN :
Sri A. THANGAVELU : } Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) Whether the Government are aware of the opinion expressed by the Madras High Court in a referred trial from the Additional Sessions Judge, Madurai on the necessity to impose restrictions on the sale and purchase of bug poison ; and

(*b*) If so the action taken thereon ?

**கனம் திரு. பூ. கக்கன் :** (அ) ஆம்.

(இ) மூட்டைப் பூச்சி மருந்துகள் உட்பட, சில விஷப் பொருள்களை விற்பனைக்காக வைத்திருத்தல், அவற்றை விற்பனை செய்தல் பற்றி, விஷப்பொருள்கள் சட்டத்திலும், விதிகளிலும் ஏற்கெனவே போதுமான விதித்துறைகள் உள்ளன. மூட்டைப் பூச்சி மருந்துக் கரைசலை அடர்த்தியான நிலையிலன்றி நீர்ப்பான நிலையிலும், உடனே பயன்படுத்தும் நிலையிலும் சிப்பம் செய்து விற்கவேண்டும் என்றும் விதித்துறையை மாநில நச்சுப்பொருள்கள் விதிகளின் படிக்கான நச்சுப்பொருள்கள் விற்பனை உரிமத்தில் சேர்ப்பது பற்றியும் ஆலோசனை செய்யப்பட்டு வருகிறது.

**திரு. வை. சங்கரன் :** தற்போது செய்யப்படுகிற போஸ்ட்மார்ட்டம் ரிசல்ட் எல்லாம் பெரும்பாலும் தற்கொலைக்குக் காரணம் மூட்டைப்பூச்சி மருந்து என்று இருக்கின்றதே, அதை உடனடியாகத் தடைசெய்வதற்கு, அல்லது அதன் வீரியத்தைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா ?

[28th February 1966

**கனம் திரு. பூ. கக்கன் :** ஏற்கனவே அரசாங்கம் இதைக் கட்டுப்படுத்துவதற்குப் பல விதிமுறைகளை மேற்கொண்டிருக்கிறது.

The Government have already asked the Board of Revenue, the Director of Medical Services, the Director of Public Health, the Inspector-General of Police and the Commissioner of Police to issue suitable instructions to their subordinates with a view to ensure strict enforcement of the rules especially Rules 13 to 17 of the Rules issued under the Poisons Act, 1919.

**திரு. சா. கணேசன் :** மூட்டைப்பூச்சி மருந்து பரவலாக மூட்டைப் பூச்சிகளைக் கொல்வதற்குப் பதிலாக மனிதர்களைக் கொன்று வருகிறது என்பது உண்மையா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** அதை உண்மை என்று ஒப்புக்கொள்ள முடியாது என்று தெரிவித்துக்கொள்கிறேன். (கனம். திரு எம். பக்தவத்சலம் : அது மருந்தின் மேன்மை, தற்கொலை செய்துகொள்ளவேண்டும் என்று துணிந்தவர்களுக்கு,)

**திரு. இரா. நெடுஞ்செழியன் :** மூட்டைப்பூச்சி மருந்தில் மனிதனைக் கொல்லக் கூடிய அளவிற்கு அதிக சக்தியுள்ள விஷம் இருப்பதனால் அதைத் தடைசெய்வதற்கோ, விற்பனையைக் கட்டுப்படுத்துவதற்கோ முயற்சி எடுத்துக்கொண்டால் தான் தற்கொலை செய்துகொள்வதற்கு அதை உபயோகித்துக் கொள்வதைக் குறைக்க முடியும். இது பற்றி அரசினர் உடனடியாக நடவடிக்கை எடுப்பார்களா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** கனம் சபாநாயகர் அவர்களே, திரு. சங்கரன் அவர்கள் கேட்ட கேள்விக்கு அரசாங்கம் எடுத்துக்கொண்டுள்ள நடவடிக்கைகளைப் பற்றிக் குறிப்பிட்டேன். பதினெட்டு வயதுக்கு உட்பட்டவர்களுக்கு விற்கக்கூடாது, குறிப்பு இல்லாமல் விற்கக் கூடாது என்றெல்லாம் விதி இருக்கிறது.

**திரு. ம. கமலநாதன் :** மூட்டைப்பூச்சி மருந்துகளைவிட இப்போது தற்கொலை செய்துகொள்வதற்கு பாலிடால் அதிகமாகப் பயன்படுத்தப் பட்டு வருகிறது. விவசாயிகளுக்குப் பயிர்ப் பூச்சிகளைக் கொல்வதற்கு வழங்கப்படுகிற இந்த மருந்தையும் கட்டுப்படுத்தவும், அதன் வீரியத்தைக் குறைக்கவும் நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படுமா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** தனியாகக் கேள்வி போட்டால் முழு விவரம் தருகிறேன்.

**திரு. மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, முதல் அமைச்சர் அவர்கள் குறுக்கிட்டுச் சொல்லும்போது உயிரைப் போக்கிக்கொள்ள விரும்புகிறவர்களுக்கு மூட்டைப் பூச்சி மருந்து பயன்படுவது அதன் மேன்மையைக் காட்டுகிறது என்றார்கள். அது ஒரு வேளை வஞ்சப் புகழ்ச்சியாக இருக்கலாம். ஆனால் பத்திரிகையில் இப்படி வெளிவருவது மற்றவர்களுக்கும் தூண்டுகோலாக அமைந்துவிடாதா என்று அறியவிரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** பத்திரிகையில் படித்துத்தான் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதில்லை. தற்கொலையில் அக்கறையுள்ளவர்கள் தெரிந்துகொண்டுதான் இருக்கிறார்கள். அதுதான் துரதிருஷ்டம்.

**திரு. து. ப. அழகமுத்து :** மூட்டைப் பூச்சி மருந்தைப் பலர் தற்கொலை செய்துகொள்வதற்காகப் பயன்படுத்துகிறார்கள். அதைத் தடுக்க இப்போது மலேரியா ஒழிப்புக்கு அரசாங்கம் கையாள்கிற முறைப்படி ஒரு இலாகாவை ஏற்படுத்தி அரசாங்கமே இந்த மூட்டைப் பூச்சி ஒழிப்பு இயக்கத்தை நடத்தக்கூடாதா ?



28th February 1966]

**கனம் திரு. பூ. கக்கன் :** ஒவ்வொரு பூச்சிக்கும் ஒவ்வொரு இலாகா ஏற்படுத்துவது என்றால் அது முடியாத காரியம். அரசாங்கத்தின் நிதி ஆதாரம் அதற்கு இடம் கொடுக்காது. ஆகவே, கனம் அங்கத்தினர் யோசனையை ஏற்றுக்கொள்வதற்கில்லை.

**திரு. செ. மாதவன் :** இந்த மருந்தின் கட்டுப்பாட்டுக்கு ஏற்கனவே விதிகள் இருப்பதாகக் கனம் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். உயர் நீதி மன்றம் இதைப்பற்றிக்கொடுத்துள்ள தீர்ப்பு என்ன ? அதைக் குறித்து இந்த அரசாங்கம் பரிசீலனை செய்ததா ?

THE HON. SRI P. KAKKAN : While delivering the judgment Their Lordships stated :..'Very unfortunately for the public this powerful insecticide poison is being sold freely with very little regulation on sale or purchase....It appears in the interest of the public, some legislation or framing of rules must be considered for the control of stocks of this poison or its sale to the public'...

இந்தமாதிரி ஆலோசனை கொடுத்திருக்கிறார்கள்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இப்போது உள்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்த கருத்தையொட்டி ஒன்று கூற விரும்புகிறேன். இதைத் தடைசெய்வதற்கு, கட்டுப்படுத்துவதற்குச் சட்டம் வேண்டும் என்கிறார்கள். ஏற்கனவே தற்கொலை செய்துகொள்வது குற்றம் என்கிற சட்டம் இருக்கிறது. தற்கொலைக்கு முயற்சி செய்கிறபோது வெளிப்பட்டால் அந்தச் சட்டப்படி தண்டிக்கப்படுகிறார்கள். யாருக்கும் தெரியாமல் தற்கொலை செய்துகொள்ளத் துணிந்துவிட்டவர்களுக்கு இந்த மருந்து அல்ல, வேறு எதுவும் ஒரு சாதனமாக அமைந்துவிடுகிறது. இதற்கென்று மட்டும் எப்படி ஒரு சட்டம் கொண்டுவருவது என்று தெரியவில்லை முன்பே ஒரு கருத்துத் தெரிவித்து இருக்கிறேன். தற்கொலை செய்து கொள்கிற பழக்கம், மனப்பான்மை நம் நாட்டில் இருக்கிறது என்று சொல்வதற்கில்லை. மிக்க செழிப்புள்ள நாடுகளில் இதைவிட அதிகமாகவே இருக்கிறது.

## *Prohibition*

*129 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) Whether the Government of India have called for the opinion of the State Government regarding prohibition and its enforcement ; and

(*b*) If so, the opinion expressed thereon ?

**கனம் திரு. பூ. கக்கன் :** (அ) & (இ) இந்த அரசாங்கத்தின் கருத்தினை அறிவதற்காக மது விலக்கு ஆய்வுக்குழுவின் விவர அறிக்கையைக் கடந்த 1964-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் இந்திய அரசு அனுப்பி வைத்தது. மது விலக்கைச் செயல்படுத்தும் முறைகள், இதற்கு மக்கள் அளித்துள்ள ஆதரவின் பெருக்கம், சமூக சேவை நிறுவனங்களும் சமூக சேவை ஊழியர்களும் தாமே வலிய வந்து நல்கும் தொண்டு, குடிப்பழக்கத்தை மறக்கும் வகையிலே அமைத்துக் கொடுத்த பற்றுக்கள் பொழுது போக்குகள் போன்ற பல்வேறு திசைகளின் மூலமாகவே மது விலக்கு போன்ற ஒரு தேசியக் கொள்கையை அணுகவேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. வழி பொதுவானதாக இருந்தாலும் நாட்டின் பற்பல பகுதிகளிலும் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் அந்தந்த இடத்தின் நிலைமைகளையும் சூழ்நிலைகளையும் பொறுத்து ஓரளவு வேறுபடுவதற்கு இடமுண்டு. இம்மாநிலத்தில் மது விலக்குச் சட்டத்தைத் தளர்த்த வேண்டிய அவசியமில்லை என்று இந்திய அரசுக்கு அறிவிக்கப்பட்டது.

[28th February 1966

**திரு. வை. சங்கரன் :** பொருளாதாரத்தைப் பெருக்குவதாக எண்ணி, பெரும்பான்மையான ராஜ்யங்கள் மதுவிலக்கைத் தளர்த்துவதற்கு இசைவு கொடுத்தாலும் கூட நம் ராஜ்யம் இதில் உறுதியாக இருக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. பூ. கக்கன் :** கனம் அங்கத்தினருக்கு இதுபற்றிச் சந்தேகம் வேண்டாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. மீ. கலியாணசுந்தரம் :** நம்முடைய ராஜ்ய சர்க்கார் டேக்சந்த் கமிட்டியிடத்தில் தெரிவித்த கருத்துக்கள் என்ன ? அவர்கள் என்ன சிபார்சு செய்தார்கள் ? உண்மையில் இந்தச் சர்க்கார் சட்டம் நம்முடைய மாநிலத்தில் அமலில் இருக்கிறது என்று நினைக்கிறார்களா அல்லது மதுவிலக்கு அமலில் இருக்கிறது என்று நினைக்கிறார்களா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** சட்டத்தின் மூலமாகத்தான் மதுவிலக்கை அமலுக்குக் கொண்டுவர முடியும். திரு. டேக்சந்த் தலைமையில் வந்த தூதுக் குழுவிடம் எங்களுடைய அபிப்பிராயத்தைச் சொன்னோம். முதல் அமைச்சர் அவர்களும் சொன்னார்கள். அவர்கள் ஏற்றுக்கொண்டு போனார்கள். அது சம்பந்தமான அறிக்கை லைப்ரெரியில் இருக்கிறது. மேற்கொண்டு அதைப்பார்த்தால் விவரம் தெரியும்.

**திரு. இராம. அரங்கண்ணல் :** மதுவிலக்குச் சட்டத்தை எல்லோரும் ஆதரிக்கிறோம். இந்த ஆண்டு குற்றம் குறைந்திருக்கிறது. குடிக்கின்றவர்களின் குற்றப்பட்டியல் அதிகரித்திருக்கிறது. அதற்கு மூலகாரணம் குறிப்பிட்ட கஷாயம் விற்பனை அதிகரித்திருப்பது தான். போன ஆண்டு 200 கடைகள் என்றால் இப்போது இரண்டாயிரம் கடைகளுக்கு மேல் இருக்கின்றன. இதைத் தடுக்க முடியவில்லை. காரணம் மத்திய சர்க்கார் ஆயுர்வேத கட்டுப்பாடு சட்டம் இருக்கிறது. இதன்பேரில் அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ள இருக்கிறார்கள் ?

**கனம் திரு. பூ. கக்கன் :** இதுபற்றித் தனியாகக் கேள்வி போட வேண்டும்.

9-00 a.m. **திரு. இரா. நெடுஞ்செழியன் :** கனம் அவைத் தலைவர் அவர்களே, மது அருந்துவதற்கான அனுமதிச் சீட்டுக் கொடுக்கின்ற அடிப்படையில் அனுமதிச்சீட்டு வழங்கப்படுகின்ற தன்மை நிலையாகவே இருந்து வருகின்றதா அல்லது ஆண்டுக்காண்டு தளர்த்தப்பட்டு வருகின்றதா ? அனுமதிச் சீட்டுப் பெறுவோரின் எண்ணிக்கை வளர்ந்துகொண்டு போகிறதா ? அல்லது குறைந்து கொண்டு வருகிறதா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** தொடர்ந்து பல பேர் அனுமதி கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். டாக்டர்கள், குறிப்பாக கவர்ன்மெண்ட் டாக்டர்கள் கொடுக்கலாம் என்று அத்தாட்சி கொடுக்கப்படுபவர்களுக்குக் கொடுக்கப்பட்டு வருகிறது.

**திரு. கே. ஏ. மதியழகன் :** இந்த மாநிலத்தில் மது விலக்கை அமல் செய்வது இந்த மாநிலத்தின் அதிகாரத்திற்கு உட்பட்டது. ஆகவே அகில இந்திய ரீதியிலே இதை எடுக்கவேண்டுமென்று முடிவு செய்யப் பட்டாலும் நம்முடைய மாநிலத்திலே மதுவிலக்கு தொடர்ந்து இருந்து வருமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அகில இந்திய ரீதியிலே அப்படி ஒன்றும் நடைபெறாது என்று உறுதியாகச் சொல்லுகிறேன்.

**திரு. சா. கணேசன் :** இந்த மாதிரி, மது அருந்துபவர்களுக்குப் பெர்மிட் கொடுப்பது அதிகரித்துக்கொண்டு வருகிற காரணத்தாலேயே அன்னிய நாட்டுச் செலாவணி அதிகமாக ஆகிறது. அன்னிய நாட்டுச் செலாவணியை மிச்சப்படுத்துவதற்காகவாவது இந்திய நாட்டிலே தயாரிக்கப் படுகின்ற வகைகளைத்தான் இந்தியக் குடிமக்கள் பெறவேண்டுமென்று வரன் முறை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.



28th February 1966]

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அன்னிய நாட்டுச் செலாவணி வேறு விஷயம். எந்த எந்தப் பொருள்களைத் தவிர்க்க வேண்டுமென்று முடிவு செய்வது மத்திய அரசாங்கத்தாரால் கவனிக்கப்பட்டு வருகிறது. கடையிலே கிடைப்பதை உடல் நலத்தையொட்டிக் கோரினால் அதைத் தடைசெய்வது அரசியலமைப்புச் சட்டத்தின்படி நியாயமல்ல. இதை அடிப்படையாக வைத்துக்கொண்டுதான் கொடுக்கப்பட்டு வருகிறது. எவ்வளவு தூரம் தவிர்க்க முடியுமோ அதுவும் தவிர்க்கப்பட்டு வருகிறது.

**திரு. மா. தண்டாயுதபாணி :** இப்பொழுது மதுவிலக்கு தீவிரமாக அமலில் இருந்து வருகிறது. பதநீர் இறக்குவதற்காக நாம் லைசென்ஸ் வழங்குகிறோம். ஆனால், உண்மையிலேயே பதநீருக்குப் பதிலாக கள் தான் இறக்குகிறார்கள். ஆகவே, பதநீர் வழங்குவதற்குக் கொடுக்கப் படும் லைசென்ஸ்களை நிறுத்துவதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** பதநீர் இறக்குவதற்கு அரசாங்கம் அனுமதி கொடுத்துவருகிறது. ஃபெடரேஷன் மூலமாக, சொஸைடி மூலமாக பதநீர் இறக்கப்பட்டு மகாஜனங்களுக்கு வழங்கப்படுகிறது. சில சமயங்களில் வெல்லக்கட்டி, சர்க்கரை செய்வதற்கும் இந்தப் பதநீரை உபயோகப் படுத்துகிறார்கள். ஆகவே, அதை இறக்குவதைத் தடைசெய்வதாக உத்தேசம் இல்லை.

**திரு. கே. ஏ. மதியழகன் :** ஜெய்ப்பூர் மாநாட்டிலே, இதுபற்றிக் காரசாரமான விவாதம் நடைபெற்றபொழுது முதலமைச்சர் அவர்கள் மௌனமாக இருந்ததற்கு என்ன காரணம் ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** பேசுவதற்கு ஒன்றுமில்லை. காரசாரமாக அங்கே ஒன்றும் நடைபெறவில்லை.

**திரு. மு. கருணாநிதி :** அகில இந்திய அளவிலே மதுவிலக்கு இருக்கும் என்று முதலமைச்சர் அவர்கள் உறுதியளித்தார்கள். ஆனால், இப்பொழுது பல்வேறு மாநிலங்களில் அது தளர்த்தப்படுவதற்கான அடையாளங்கள் தெரிகின்றன. சில இடங்களில் தளர்த்தப்பட்டிருக்கின்றது. அப்படித் தளர்த்தப்படுவதைத் தடுப்பதற்கும், அகில இந்திய ரீதியிலே மதுவிலக்கு இருந்துவருவதற்கும் முதலமைச்சர் அவர்கள் முன் நின்று வலியுறுத்துவார்களா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** தளர்த்தப்படுவது ஒன்று. ரத்து செய்யப்படுவது ஒன்று. மதுவிலக்கை ரத்துசெய்யக்கூடாது என்பதுதான் அகில இந்திய ரீதியிலே நிலவுகின்ற கருத்து. எந்த மாநிலமும் மது விலக்கை ரத்துசெய்யவேண்டுமென்று வற்புறுத்துவது கிடையாது. ஆனால், தளர்த்தப்படுவது அந்தந்த மாநிலங்களாலே கவனிக்கப்படுகின்ற விஷயம். ஆனால், இப்படிச் செய்வதால் அகில இந்தியாவில் மதுவிலக்குக்கு விரோதமாக, அதற்குப் பாதகமாக முடிவு செய்யப்படும் என்ற அச்சம் ஏற்படுவதற்கே வழியில்லை.

**திரு. எஸ். முருகையன்:** இந்த மதுவிலக்குச் சட்டம் நீண்ட நாட்களுக்குப் முன்பாகச் செய்யப்பட்டது. ஆனால் இப்பொழுது பரவலாகக் கள்ளச்சாராயம் இருந்துகொண்டுதான் இருக்கிறது. ஆகவே, இதைத் தடுப்பதற்கு மாநில அளவிலே ஒரு கமிட்டியைப் போட்டு இதைப் பரிசீலனை செய்து சட்டத்தினைத் திருத்துவத்ற்கு முயற்சி எடுக்கப்படுமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** முன்பு ஒரு கமிட்டி நியமிக்கப்பட்டு அந்தக் கமிட்டியின் சிபாரிசின் பேரில் சில ஆண்டுகளுக்கு முன்பு இந்த மன்றத்தில் ஒரு சட்டத் திருத்தம் கொண்டுவரப்பட்டது. அந்த திருத்தத்தின்படி கடுமையான தண்டனை கொடுப்பதற்கு இடம் இருக்கிறது. ஆனால், இந்தச் சட்டம் கொண்டுவந்ததற்குப் பிறகு குற்றங்கள் குறைந்துகொண்டு வருகின்றன என்பது நமக்குத் தெரிகிறதுகவலை.

[28th February 1966

**திரு. மீ. கலியாணசுந்தரம் :** சில ராஜ்யங்களில் தளர்த்தப்பட்டாலும் மதுவிலக்கு ரத்தாகாது என்று முதலமைச்சர் அவர்கள் கூறினார்கள். ஆனால் நம்முடைய அண்டை ராஜ்யங்களிலே சில இடங்களில் மது விலக்குச் சட்டமே கிடையாது. அதனாலே நம்முடைய ராஜ்யம் பாதிக்கப் படுகிறது. இதைத் தடுப்பதற்கு என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ளப் பட்டிருக்கிறது ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** சில ராஜ்யங்களில் தளர்த்தப் படுகிறது என்று சொன்னேன். மகாராஷ்டிரா மாநிலத்தில் நம்முடைய மாநிலத்தைக்காட்டிலும் கண்டிப்பான முறையைக் கையாண்டு வந்தார்கள். அது இப்பொழுது அங்கே தளர்த்தப்பட்டிருக்கிறது. இது தொல்லை கொடுப்பது உண்மைதான். ஆனால், அதைப்பற்றி இந்த மாநிலம் ஒன்றும் செய்யமுடியாது. இதையெல்லாம் கவனித்து எவ்வளவு கண்டிப்பாக இருக்கமுடியுமோ அவ்வளவு கண்டிப்பாக இருந்து வருகிறோம்.

**திரு. மு. கருணாநிதி :** மதுவிலக்கு அமலில் இருக்கின்ற காரணத்தால் நாடகம், திரைப்படம், இவைகளிலே "மது அருந்தலாம்" என்று அறிவுரை கூறுகின்ற காட்சிகள் வந்தால் அவை தடைசெய்யப்படுகின்றன. ஆனால் "கள் வேண்டுவோர் கழகம்" என்ற ஒரு கழகம் மதுவேண்டும் என்று பிரச்சாரம் செய்து வருகிறது. அப்படிச் செய்வது சட்டத்திற்குப் புறம்பானது அல்லவா ? அதைத் தடுக்க என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கிறது ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** சட்டத்திற்குப் புறம்பானதுதான். ஆனால், ஜனநாயகத்தின் பேரில் அவர்கள் சில உரிமைகள் கோருகிறார்கள்.

### அனாதைக் குழந்தைகள்

*130 கேள்வி.—**திரு. எஸ். ஜே. ராமசாமி :** கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1964–65-ல் பெற்றோர்களால் நிராகரிக்கப்பட்டு, ஆறு, வாய்க் கால் போன்ற இடங்களில் விட்டுச்செல்லப்பட்ட குழந்தைகள் எத்தனை, மாவட்டவாரியாக ?

(இ) அவைகளுள், எடுத்துக் காப்பாற்றப்பட்டவை, இறந்துபோன பின் கண்டு பிடிக்கப்பட்டவை முறையே எத்தனை, மாவட்டவாரியாக ?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** (அ) & (இ) : வட ஆர்க்காடு மாவட்டத்தில்தான் ஆறு குழந்தைகள் அவற்றின் பெற்றோர்களால் நிராகரிக்கப்பட்டு ஆற்றோரங்களில் விட்டுச் செல்லப்பட்டனர். இவ்வாறு விட்டுச்செல்லப்பட்ட ஆறு குழந்தைகளில் ஒன்று உயிருடன் இருக்கிறது. மற்றவை இறந்துவிட்டன.

**திரு. எஸ். ஜே. ராமசாமி :** தலைவரவர்களே, இந்த அனாதைக் குழந்தைகளைப் பராமரிப்பதற்காக, பெற்று விடப்பட்டுக்கிடக்கிற சிசுக்களைக் கவனிப்பதற்காக, அரசாங்கமே முன்வந்து ஹாஸ்டல் மாதிரி, ஒரு விடுதி கட்ட முன்வருமா ?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** ஏற்கனவே இதற்காக ஏற் படுத்தப்பட்டிருக்கிற ஸ்தாபனங்களுக்கு பெற்று விடப்படுகின்ற அனாதைக் குழந்தைகள் எடுத்துச் செல்லப்படுகின்றன.

### அம்மை நோய்

*131 கேள்வி.—**திரு. ஆ. தங்கவேலு :** கனம் சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

திண்டிவனம் நகரத்தில் 1965 ஜூலை முதல் டிசம்பர் முடிய அம்மை நோயால் இறந்தவர்கள் எத்தனை பேர் ?



28th February 1966]

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** திண்டிவனம் நகராட்சியில் 1965 ஜூலை முதல் 1965 டிசம்பர் வரையுள்ள கால அளவில் பெரிய அம்மை நோயால் எவரும் இறக்கவில்லை.

**திரு. ஆ. தங்கவேலு :** தலைவரவர்களே, திண்டிவனம் நகரத்தில் சுகாதார அதிகாரிகளின் கவனக் குறைவால் 1965 ஜூலையிலிருந்து டிசம்பர் முடிய பெரிய அம்மையினாலும், சிறிய அம்மையினாலும் பல பேர்கள் இறந்திருக்கிறார்கள். ஆனால், அதை மறைத்துவிட்டு வேறு வியாதியால் இறந்தார்கள் என்று எழுதிவைக்கப்பட்டிருக்கிறது. இனிமேலாவது எந்த வியாதியால் இறந்தார்களோ அந்த வியாதியையே எழுதிவைக்கும்படி உத்திரவிடப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** மூலக் கேள்வியில் 1965 ஜூலையிலிருந்து டிசம்பர் முடிய அம்மை நோயால் இறந்தவர்கள் எவ்வளவு என்றுதான் கேட்கப்பட்டது. அதற்குத்தான் 1965 ஜூலையி லிருந்து 1965 டிசம்பர் வரை அம்மை நோயால் ஒருவரும் இறக்கவில்லை என்று கூறினேன். ஆனால் அதற்கு முன்பு பிப்ரவரியில் 2 பேர்கள் இறந்து விட்டார்கள்.

**கனம் சபாநாயகர் :** கணக்குத் தப்பாக எழுதிவிட்டார்கள் என்று சொல்லுகிறார்கள்.

### *Films*

* 132 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Public Health be pleased to state whether the Government have proposed to prohibit exhibition of pictures depicting the life and activities in night-clubs of various countries, in the cinema houses of the State ?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** இல்லை.

**திரு. வை. சங்கரன் :** இம்மாதிரிப் படங்கள் சுமார் ஓராண்டுக்கு மேலாக ராஜ்யத்தில் சஞ்சரித்துக்கொண்டிருக்கின்றன. கடைசியாக, "இரவிலே தமிழ் நாடு" என்று யாராவது படம் எடுத்து தமிழ் நாட்டின் கவுரவம் சந்திக்கு வந்தால்தான் சொரணை ஏற்பட்டு இம்மாதிரிப் படங் களுக்குத் தடை விதிக்க முடிவு எடுப்பார்களா ?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** இதை அனுமதிக்கும் அதி காரம் சினிமாட்டோகிராப் ஆக்டின்படி மத்திய அரசாங்கத்திற்குத்தான் இருக்கிறது. இதிலே ஸ்டேட் கவர்ன்மெண்ட் தலையிட அந்த ஆக்டின்படி ப்ரொவிஷன் கிடையாது.

**திரு. கே. ஏ. மதியழகன் :** ஆபாசங்கள் தடுக்கப்படுமா என்பதுதான் கேள்வி. ஆபாசங்கள் நம்முடைய திடகாத்திரத்திற்கும், ஆரோக்கியத்திற் கும், மனவளத்திற்கும் கேடு பயப்பதாகும். ஆகவே, அவை தடுக்கப்பட வேண்டும். அதோடு கோயில்களில் இருக்கிற ஆபாசங்கள், கிருஷ்ணன் படங்கள், காமக் களஞ்சியமாக இருக்கும் திருப்புகழ் இவற்றையெல்லாம் கூடத் தடுக்க அரசாங்கம் மசோதா கொண்டு வருமா ?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** கனம் அங்கத்தினர் இந்தப் படங்களைப் பற்றி சென்ட்ரல் போர்டு ஆப் பிலிம் சென்சாருக்குத் தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. மீ. கலியாணசுந்தரம் :** இந்த மாதிரிப் படங்கள் வெளிநாட்டி லிருந்து இறக்குமதி செய்யப்படுகிற படங்கள்தான், நம்முடைய நாட்டில் அவ்வளவு கேவலமான நிலைமை இல்லை. வெளிநாட்டிலிருந்து வரக்

[28th February 1966

கூடிய படங்களைப் பொறுத்து நம்முடைய ராஜ்யத்தைப் பொறுத்தமட்டில் அவற்றிலே ஆபாசம் இருப்பதாகத் தெரிந்தால் இங்கே காட்டக்கூடாது என்ற அளவுக்கு மத்திய அரசாங்கத்திற்குத் தெரியப்படுத்தினார்களா ?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** ஏற்கனவே, மத்திய அரசாங்கத்திற்கு எழுதி, இந்த மாதிரிப் படங்களை அனுமதிப்பதைப் பொறுத்த வரை கவனமாகச் செய்யவேண்டுமென்று ரிக்வஸ்ட் செய்திருக்கிறோம். ஆர்டராகப் பிறப்பிக்க முடியாது.

**திரு. இராம. அரங்கண்ணல் :** தமிழ் நாட்டைப் பொறுத்தமட்டில் இருக்கின்ற சென்சார் போர்டு, தமிழ் நாட்டுத் தயாரிப்பாளர்கள் சிறிது கவனப் பிசகாக ஒரு காட்சியை எடுத்துவிட்டாலும் அதை வெட்டிவிடுகிறார்கள். வெளிநாட்டிலிருந்து வருகின்ற படங்களுக்கும் தமிழ் நாட்டு சென்சார் போர்டுக்கும் தொடர்பு இல்லை. பெரும்பாலும் அவை கல்கத்தாவிலோ அல்லது பம்பாயிலோதான் சென்சார் செய்யப்படுகின்றன. இந்த மாதிரிப் படங்களை அந்தந்த மாநில சென்சார் போர்டும் பரிசீலிக்க வேண்டுமென்பதற்கு வழி செய்ய வேண்டுமென்று மத்திய அரசாங்கத்திற்கு நம்முடைய அரசாங்கம் தெரிவிக்குமா ?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** கொஞ்ச காலத்திற்கு முன்பு இதை ஸ்டேட் லெவலில்தான் வைத்திருந்தார்கள். இப்போது சென்ட்ரல் போர்டு ஆஃப் சென்சார் கட்டுப்பாட்டில் இருக்கிற காரணத்தால் கனம் அங்கத்தினர் அவர்களுடைய ஆலோசனையை எவ்வளவு தூரம் எடுத்துச் சொல்லலாம் என்பதை அரசாங்கம் பரிசீலிக்கும்.

**திரு. இரா. நெடுஞ்செழியன் :** சாதாரணமாக இந்த நாட்டினுடைய பண்பாட்டுக்கு ஏலாத வகையில் வெளிநாடுகளிலிருந்து வருகிற பல படங்கள் ஆபாசமாகக் கருதப்படுகிற நிலையில் இருக்கின்றன. தமிழகப் பண்பாட்டுக்கும், நாகரிகத்திற்கும் மாறாக, அண்மையில் வரக்கூடிய வெளி நாட்டுப் படங்கள் மிக மிக ஆபாசமாக இருக்கின்றன. போக்குவரத்திலே இருக்கின்ற மக்கள் அந்த விளம்பரச் சுவரொட்டிகளைப் பார்த்து அருவருப்படைகிற அளவுக்கு ஆபாசத்தை வெளிப்படுத்துகின்றன. இதைத் தடுப்பதற்குத் தீவிரமான நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளவேண்டுமென்று நம்முடைய அரசாங்கம் இந்திய அரசாங்கத்திற்கு வற்புறுத்திக் கூற முயற்சி எடுத்துக்கொள்ளுமா ?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** நான் ஏற்கனவே சொன்னேன். இந்த மாதிரிப் படங்களைக் காட்டுவதைத் தவிர்க்க வேண்டுமென்று மத்திய சர்க்காரை ரிக்வஸ்ட் செய்திருக்கிறோம். பொதுவாக, மக்கள் சினிமாவுக்குப் போகும் பழக்கத்தை விட்டு விட்டால் நல்லது.

**திரு. சா. கணேசன் :** மக்கள் சினிமா போகும் பழக்கத்தை விட்டு விடுவதா இல்லையா என்பது சாதாரணமான விஷயம் அல்ல. அதற்குள்ளே இப்போது தலையிட முடியாது. மத்திய சோதனைக் குழு சோதனை செய்து அனுமதித்திருந்தாலும் அல்லது அனுமதிக்காவிட்டாலும், இதனாலே தீமை, ஒழுக்கத்திற்கு, பண்பாட்டுக்கு, குறைந்தபட்ச நாகரிகத்திற்குக் கேடு என்று தெரிந்தால் அப்படிப்பட்ட படங்களை நமது மாநிலத்தின் உள்ளே காட்டக்கூடாது என்று தடை செய்வதற்கு அரசாங்கத்திற்கு உரிமை உண்டு என்றுதான் கருதுகிறேன். மது போன்றவை நம்முடைய மாநிலத்திற்குள் நுழையக் கூடாது என்று தடுக்க எவ்வாறு உரிமை இருக்கிறதோ அதே போன்று இதையும் தடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொள்ளுமா ?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM: Certification of films for public exhibition is governed by sections 3 to 9 of Part II of the Cinematograph Act of 1952 (Act XXXVII of 1952). Under section 3 of the said Act, the Central Government constitute a Board of Film Censors consisting of such number of members as may be prescribed for the purpose of examining and certifying films as suitable for unrestricted public exhibition.



28th February 1966]

There is no provision in the Act which lays down that the Board of Film Censors should consult the State Government concerned in the matter of framing rules and regulations regarding censorship.

**திரு. மு. கருணாநிதி :** அமைச்சர் அவர்களே சினிமாவுக்குப் போகிற பழக்கத்தை விட்டு விட்டால் நல்லது என்று குறிப்பிட்டார்கள். அமைச்சர் அவர்கள் ' கார்த்திகை தீபம் ' என்ற படத்தைப் பார்த்து விட்டு, அந்தப் படத்தை "அடல்ட்ஸ்"-க்கு மட்டும் என்று தணிக்கையாளர் போட்டதைப் பற்றிக் கண்டித்துப் பேசியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட நல்ல படங்களையாவது அமைச்சர் சிபாரிசு செய்கிறார்களா ? சினிமாவுக்குப் போவதே தவறு என்று அவர்கள் கூறுவது சரியான வாதமாகுமா ?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** பொதுவாக, தவறாமல் தினந்தோறும் சினிமாவுக்குப் போகிறவர்கள் இருக்கிறார்கள் ; வாரந்தோறும், மாதந்தோறும் சினிமாவுக்குப் போகிறவர்கள் இருக்கிறார்கள் ; நான் சாதாரணமாக சினிமாவுக்குப் போவது கிடையாது. யாராவது ரொம்ப வற்புறுத்திக் கூப்பிட்டால் நான் சென்று பார்த்து என்னுடைய கருத்தைக் கூறுவதுண்டு.

**திரு. கே. ஏ. மதியழகன் :** சினிமாவுக்குப் போகக்கூடாது என்று அமைச்சர் அவர்கள் சொன்னது அவருடைய சொந்தக் கருத்தா அல்லது அமைச்சரவையினுடைய கருத்தா ?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** இந்த மாதிரி ஆபாசமான படங்கள் வரும்போது நிறையக் கூட்டம் சேருகிறது. ஆகையினால் அதற்குப் போகாமல் இருந்தால் உத்தமம். பொதுவாக சினிமாவுக்குப் போகாமல் இருப்பது நல்லது ; அதிலும் கண்டிப்பாக இந்த மாதிரிப் படங்களுக்குப் போகாமல் இருப்பது உத்தமம்.

**திரு. இரா. நெடுஞ்செழியன் :** தமிழ்நாட்டில் தயாரிக்கப்படும் திரைப் படங்களைத் தணிக்கை செய்ய தமிழ் நாட்டில் ஒரு போர்டு இருக்கிறது. அதைப் போன்று தமிழகத்திற்கு வரும் பிற நாட்டுத் திரைப்படங்களையும் அந்த போர்டைக் கொண்டு தணிக்கை செய்ய அரசாங்கம் முயற்சி எடுக்குமா ?

MR. SPEAKER: 'Sanctioning of cinematograph films for exhibition' comes under the Union List and not under the State List. Unless the Constitution is amended, I do not think the State Government can control it. But they can prohibit the exhibition of such posters outside, as it leads to accidents.

**திரு. இராம. அரங்கண்ணல் :** அப்படி இருந்தாலும் மத்திய சென்சார் போர்டுக்கு நமது அரசாங்கம் எழுதி அங்கிருந்து ஒருவர் வந்து பார்த்து தடை விதிக்கலாம் என்று விதி இருக்கிறது. அதையாவது கையாளலாம் அல்லவா?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM: I will consider that.

### மரக்காணம் பகுதியிலுள்ள நிலங்கள்.

* 133 கேள்வி.—**திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் :** கனம் கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டம், திண்டிவனம் வட்டம், மரக்காணம் பகுதியில் காடுகளாக இல்லாத சில ஏக்கர் நிலங்கள் வன இலாகாவின் கீழ் பராமரிக்கப்பட்டு வருவது உண்மையா ?

(இ) ஆமெனில், அந்நிலங்களை விவசாயிகளுக்குக் கொடுக்க உத்தேசம் உண்டா ?

[28th February 1966

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் :** (அ) ஆம்.

(இ) இல்லை.

**திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் :** காடு என்ற பெயரால் நிறைய நிலங்கள் அந்த கடற்கரைப் பகுதியில் இருக்கின்றன. ஆடு, மாடுகள் கூட போகமுடியாத நிலையில் அவைகளை பட்டியில் அடைத்து விடுகிறார்கள். இந்த நிலங்களை விவசாயத்திற்கு கொடுக்காவிட்டாலும் ஆடு, மாடுகளை ஓட்டவாவது, அவைகளைப் பட்டியில் அடைக்காமல் இருக்கவாவது, அரசாங்கம் முன்வருமா ?

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் :** அவர்கள் குறிப்பிட்ட இடங்களில் சவுக்கு மரங்களும், யூகலிப்டஸ் ஹைப்ரீட் மரங்களும் வைக்கப்பட்டிருக்கின்றன. ஐந்து ஆண்டுகள் கழித்து ஆடு, மாடுகளை மேய விடுவார்கள் ; அதற்கு ஆட்சேபம் இருக்காது.

### கரி உற்பத்திக்கு மரம் வெட்டல்

* 134 கேள்வி.—**திரு. கரு. சீமைச்சாமி :** கனம் கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) குற்றாலத்திலுள்ள தெற்கு மலை எஸ்டேட்டில் மரங்களை வெட்டி, எரித்து, கரிக்காக (coal) புதைக்கப்படுவது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார்:**

(அ), & (இ) தெற்குமலை எஸ்டேட்டில் 15 ஏக்கர் பரப்பில் இருந்த மரங்களை அறவெட்டு முறையில் (clear felling system) வெட்டி எடுத்துக் கொள்ள அந்த எஸ்டேட்டின் சொந்தக்காரருக்குத் திருநெல்வேலி கலெக்டர் 1964, பிப்ரவரியில் அனுமதி வழங்கினார். அனுமதி வழங்கப்பட்ட நிலத்தில் இருந்த மரங்களை எஸ்டேட் உரிமையாளர் அறவெட்டு முறையில் வெட்டி எடுத்துக் கொண்டார். அந்த எஸ்டேட்டிலிருந்து எடுத்துச் செல்ல முடியாத கரடுமுரடான மரத்திம்மைகள், மொக்கையான அடிக்கட்டைகள், விறகு ஆகியவை, மரங்களை அறுத்து எடுத்துச் செல்ல அனுமதிக்கப்பட்ட பகுதிக்குள்ளேயே சுட்டுக் கரியாக்கப்பட்டன. மரங்களை அறுத்து எடுத்துக் கொள்ள அனுமதிக்கப்பட்ட 15 ஏக்கர் பரப்புக்கு வெளியே எவ்விடத்திலும் கரி சுடப்படவில்லை.

**திரு. கரு. சீமைச்சாமி :** இந்த குற்றாலம் மலை மேல் உள்ள மரங்களை வெட்டியதால் மழை ஸீஸனில் மழை பெய்யாமல் குற்றாலத்தின் மகிமையே கெட்டு விட்டது என்று அந்தப் பிராந்தியத்தில் சொல்கிறார்கள். ஆகவே, இனிமேலாவது அங்கு மரங்களை வெட்டி கரி எடுப்பதைத் தடுக்க நடவடிக்கைகள் எடுக்கப்படுமா ?

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் :** குற்றாலத்திலே மேலே உள்ள மரங்களை எல்லாம் வெட்டி விட்டார்கள் என்பது சரியல்ல. நான் கொடுத்துள்ள தகவல்படி 15 ஏக்கர்களில் வெட்டிக் கொள்ள அனுமதி வழங்கப்பட்டது. அப்படிக் கொடுக்கப்பட்டதில் அதை வெட்டி எடுத்து கொஞ்சம் கரி சுட ஏற்பாடு செய்து விட்டார்கள். ஆனால், இப்போது கரி சுடுவதற்குக்கூட அனுமதி வேண்டுமென்ற ஒரு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. ஆக கரி சுடுவது என்று சொன்னாலும் கூட அவர்கள் அந்த அனுமதி இல்லாமல் செய்ய முடியாத ஒரு நிலையில் அமெண்ட்மெண்ட் ஒன்று கொண்டு வரப்பட இருக்கிறது. அது அநேகமாக கூடிய சீக்கிரத்தில் வந்து விடும்.

**திரு. சா. கணேசன் :** இதேமாதிரி குற்றாலம் போன்ற மலைப் பிராந்தியங்களில் உள்ள மரங்களை—நீலகிரியில் எல்லாம் அனுமதி கொடுக்கப்பட்டு முழுக்க வெட்டப்பட்டு விட்டன—அதேமாதிரி குற்றாலத்திலும் தொடங்கப்பட்டிருக்கிறது. முழுக்க போய் விட்டது என்று சொல்ல முடியாவிட்டாலும் கூட தெற்கு மலைப் பகுதியில் சில பகுதிகள் தனிப்பட்டவர்களுக்கும்



28th February 1966]

சில பகுதிகள் அரசாங்கத்தின் உடைமைக்கும் உரியதாக இருப்பதினால் தனிப்பட்டவர்களுடைய இடமாக இருந்தாலும் சரி, அரசாங்கப் பொறுப்பில் உள்ள பகுதிகளாக இருந்தாலும் சரி, இனிமேல், தற்செயலாக விழுந்த மரங்களை வெட்டுவது அன்றி, கரிக்காக அல்லது விறகுக்காக என்று வெட்டக் கூடாது என்று நிரந்தரமாக தடை உத்தரவு ஒன்று போட அரசாங்கம் ஏற்பாடு செய்திருக்கிறதா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** மலைப் பிராந்தியங்களில் மரங்களை வெட்டுவது என்றால் அரசாங்கத்தினுடைய அனுமதி இன்றி வெட்டக் கூடாது என்று சட்டம் இருக்கிறது. அந்தச் சட்டம் கண்டிப்பாக அமல் நடத்தப்பட்டு வருகிறது. ஆனால் குற்றாலத்திலே கூட சில மரங்களை முதிர்ச்சி அடைந்த பிறகு அவற்றை வெட்டி விட்டு மீண்டும் செடிகள் வைக்க வேண்டியிருக்கிறது. விறகும் தேவையாக இருக்கிறது. விறகுக்கு என்று மரங்களை வைத்தால் அவை முதிர்ச்சி அடைந்த பிறகு வெட்டி விட்டு வேறு மரங்களை வைக்கவேண்டியிருக்கிறது. குற்றாலத்தைப் பொறுத்தவரை சில ஆண்டுகளுக்கு முன்னால் ஒரு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. நீர் வீழ்ச்சியில் வருகிற அருவித் தண்ணீர் மருத்துவத் தன்மை உடையதாக இருக்கிறது. அந்த மருத்துவத் தன்மை அங்குள்ள மரங்கள், செடிகள் அவற்றின் மூலம் வருவதால் ஏற்படக் கூடியது என்ற எண்ணத்தோடு அந்த மெயின் ஃபால்ஸின் மேலே உள்ள மரங்களை, ஐந்தருவிக்கு மேலே உள்ள மரங்களை வெட்டவே கூடாது என்று உத்தரவு போடப்பட்டிருக்கிறது.

Sri C. CHIRANJEEVULU NAIDU : Sir, while felling these trees, generally tamarind trees are being cut and sold for the purpose of making charcoal. So, will the Government consider the desirability of issuing instructions to Collectors to see that the tamarind trees are not cut ?

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் :** மரங்களை வெட்டுவதற்கு கூப்புகள் கொடுத்தாலும்கூட புளிய மரங்களை வெட்டக் கூடாது என்பது விதி. ஆகவே, புளிய மரங்கள் வெட்டப்படுவதில்லை.

### ஆசிரியர்களை மாற்றுதல்

* 135 கேள்வி.—**திரு. எஸ். ஜே. ராமசாமி :** கனம் தல நிர்வாக அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ஆசிரியர்கள் மாற்றம் சம்பந்தமாக ரெவின்யூ டிவிஷனல் அதிகாரி பிறப்பித்தக் கட்டளையை மீறி வடாற்காடு மாவட்டம், அரக்கோணம் பஞ்சாயத்து தலைவரிடமிருந்து அண்மையில் அரசாங்கத்திற்கு மனு ஏதேனும் வந்ததா ?

(இ) ஆம் எனில், அதன் பேரில் எடுத்த நடவடிக்கை என்ன ?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

**திரு. வி. எஸ். எஸ். மணி :** பஞ்சாயத்து யூனியன் பள்ளிகளில் பணி புரியும் ஆசிரியர்களை மாற்றுவது போன்ற காரியங்களில் அந்த அதிகாரம் யாரிடம் இருக்கிறது ?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** யூனியன் அடிப்படையில் அட்ஹாக் கமிட்டி ஒன்று இருக்கிறது. வருட ஆரம்பத்தில் அவர்கள் எல்லாம் கூடி நியாயமான அளவில் செய்யக் கூடிய டிரான்ஸ்பர்களைப் பற்றி முடிவு எடுத்துக் கொள்ளலாம்.

**புலவர் கா. கோவிந்தன் :** இந்த அட்ஹாக் கமிட்டி பொதுவாக ஏப்ரல் மாதத்தில் ஆண்டுக்கு ஒரு முறை கூடவேண்டுமென்று விதி வந்திருக்கிறது. அந்த கமிட்டி செய்த முடிவு தவறானது என்று அந்தக் கமிட்டியில் இருக்கிறவர்கள் உணர்ந்தால் மீண்டும் கூடி அந்த முடிவை மாற்ற விதிகளில் இடமிருக்கிறதா ?

[28th February 1966

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** அட்ஹாக் கமிட்டியின் முடிவிற்கு மேல் ஸ்தல நிர்வாகத் துறையின் கவனத்திற்குக் கொண்டு வரலாம்.

**திரு. ம. கமலநாதன் :** சென்ற ஆண்டிலிருந்து இந்த அட்ஹாக் இந்த கமிட்டியே டிரான்ஸ்பர் செய்யவேண்டுமென்ற நிலைமை இருக்கிறது. இந்த முறையினால் டிரான்ஸ்பர்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்கிறதா ? அல்லது இடைக்காலத்தில் டிரான்ஸ்பர் செய்யக் கூடாது என்ற தடை விதிக்க மட்டும்தான் இந்தக் கமிட்டிக்கு அதிகாரம் அளிக்கப்பட்டிருக் கிறதா ?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** வட ஆற்காடு மாவட்டம், அரக்கோணம் பஞ்சாயத்து தலைவரிடமிருந்து சர்க்காருக்கு அண்மையில் மனு ஏதேனும் வந்ததா என்பது கேள்வி. பொதுவாக அங்கத்தினர் அவர்கள் போடக் கூடிய கேள்விக்கு பதில் அளிக்கவேண்டுமென்றால் தனிக்கேள்வி வேண்டும். அப்படித் தனிக் கேள்வி போட்டால் விவரங்கள் எல்லாம் சேகரித்து பதில் அளிக்கலாம்.

**திரு. எஸ். ஜே. ராமசாமி :** பொதுவாக அந்தந்த சேர்மனுக்குள்ள அதிகாரம் உபாத்தியாயர்களை மாற்றுவதுதான். கலெக்டரிடம்கூட சிபார்சு செய்து, எஜுகேஷன் ஆபீசர்களிடம் கூட சிபார்சு செய்து எப்படியாவது மாற்றவேண்டுமென்று ஏற்பாடு செய்கிறார்கள். ஆகவே, இந்த உபாத்தி யாயர்கள் விஷயத்தில் இம்மாதிரி ஆண்டுக்கு ஒரு ஆர்டர் போட்டு மாற்றக் கூடாது என்ற ஒரு ஆணை பிறப்பிக்கப்படுமா ?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** அட்மினிஸ்ட்ரேட்டிவ் இன்கன்வீனி யன்ஸ் சில சமயங்களில் ஏற்படலாம்; தவிர்க்க முடியாத காரணங் களினால் ஒன்றிரண்டு மாறுதல்கள் செய்யக் கூடிய நிலைமை ஏற் படலாம். அப்படி ஏற்படும்போது கலெக்டர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்து அவர் நடவடிக்கை எடுக்கலாம். நடுவில், வருட மத்தியில், டிரான்ஸ்பர் செய்யக்கூடாது என்ற தடை விதிக்கவில்லை.

## பஞ்சாயத்து யூனியன் அலுவலகக் கட்டடங்கள்

* 136 கேள்வி—**திரு. சி. கோதண்டராம பாகவதர் :** கனம் தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வட ஆற்காடு ஜில்லாவில் சொந்தமாக அலுவலகக் கட்டடங்கள் இல்லாத பஞ்சாயத்து யூனியன்கள் எவை, எவை ?

(இ) அவைகள் கட்டும் உத்தேசம் உண்டா ?

(உ) ஆம் எனில், எப்போது ?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** (அ) (1) அனக்காவூர், (2) குடியாத் தம், (3) கஸ்தம்பாடி, (4) தெள்ளார்.

(இ) & (உ) அனக்காவூரில் பஞ்சாயத்து யூனியன் அலுவலகக் கட்டடம் கட்டுவதை மேற்கொள்ளுமாறு முன்னமேயே உத்தரவு வழங்கப்பட் டுள்ளது. குடியாத்தத்திலும், தெள்ளாரிலும் பஞ்சாயத்து யூனியன் அலுவலகக் கட்டடங்கள் கட்டுவதற்கு அனுமதி வழங்கப்பட்டு இருக்கிறது. கஸ்தம்பாடி பஞ்சாயத்து யூனியன் தலைமையிடம் குறித்துச் சென்னை உயர் நீதி மன்றத்தில் முடிவுறாமல் இருக்கும் மனுவின் மீது தீர்ப் பளிக்கப்பட்ட பின்னரே கஸ்தம்பாடியில் பஞ்சாயத்து யூனியன் அலுவலகக் கட்டடம் கட்டும் வேலை மேற்கொள்ளப்படும்.

**புலவர் கா. கோவிந்தன் :** இந்த அனக்காவூர் பஞ்சாயத்து யூனியன் அலுவலகக் கட்டடம் கட்ட முன்பு ஒரு முறை பஞ்சாயத்து முடிவு எடுத்து அதற்கான உத்திரவுகளும் பிறப்பிக்கப்பட்டுவிட்டன. பிறகு செல்வாக்குள்ளவர்கள் சிலர் தலையீட்டால் அந்தக் கட்டடம் கட்டுவது நிறுத்தப்பட்டது. இப்போது மீண்டும் அதற்கு சர்க்கார் அனுமதி அளித்து அது தொடங்கப்படும் நிலை இருப்பதால் மீண்டும் அதில் தலையீடு



28th February 1966]

ஏற்பட்டு அந்தக் கட்டடம் கட்டுவதை நிறுத்த முயற்சி செய்தால் அந்த முயற்சிக்குச் செவி சாய்க்காமல் இதை முடித்துக்கொடுக்க வழிவகை செய்யப்படுமா ?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** ஜனநாயகத்தில் மக்களுக்கு பலவித அபிப்பிராயங்கள் கூற உரிமை உண்டு. அவர்கள் கூறிய கருத்துக்களை எல்லாம் கவனித்து அதற்குத் தகுந்த முறையில் அந்த இலாகா தீர்மானம் செய்து உத்தரவிட்டிருக்கிறார்கள் என்பதை அங்கத்தினர் அவர்கள் மெச்சுவார்கள் என்று நான் நம்புகிறேன்.

**திரு. ஆ. தங்கவேலு :** பஞ்சாயத்து யூனியன் அலுவலகக் கட்டடம் கட்டுவதில் என்ஜினியரிங் டிப்பார்ட்மெண்ட் ஒரு மாதிரி உத்தேசித்திருக் கிறது. பஞ்சாயத்து யூனியன் தீர்மானம் போட்டு அவர்கள் வேறு ஒரு மாதிரியாகத் தீர்மானிக்கிறார்கள். இந்த இரண்டும் கெட்டான் நிலைமையில் பஞ்சாயத்து யூனியன் அலுவலகங்கள் கட்டுவதில் காலதாமதம் ஏற் படுவதைத் தவிர்க்க உறுதியாக இன்னார்தான் அதற்கு அனுமதி கொடுக்க லாம் என்ற உத்தரவு இட முடியுமா ?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** விதி முறைகள் இருக்கின்றன. அதற்கு இணங்கத்தான் செயல்பட முடியும்.

**திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் :** வட ஆற்காடு மாவட்டத்தில் எந்தெந்த இடங்களில் பஞ்சாயத்து யூனியன் அலுவலகங்கள் கட்டப்படவில்லை என்ற கேள்விக்குப் பதில் சொன்னார்கள். அண்டை மாவட்டமான தென் ஆற்காடு மாவட்டத்தில் அதிகமான இடங்களில் பஞ்சாயத்து யூனியன் அலுவலகங் கள் கட்டமுடியாமல் தடைபடுகின்றன, முடியாமல் இருக்கின்றன. அந்த விவரங்கள் அமைச்சர் அவர்களிடம் இருந்தால் சொல்வார்களா ?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** தென் ஆற்காடு சம்பந்தமாக விவரம் இல்லை. அதிகமாகக் கட்டடங்கள் கட்டவில்லை என்று சொன்னால் அங்குள்ள மக்கள் அதிகமாகச் சண்டை போடுகிறார்கள் என்றுதான் அர்த்தம். நல்லமுறையில், சுமுகமான முறையில் செய்திருந்தால் இதற்குள்ளே கட்டடங்கள் கட்டி முடித்திருக்க முடியும் அந்த ஜில்லாவில்.

**திரு. கேஆர். ஆர். எம். கரியமாணிக்கம் அம்பலம் :** ஸார், பஞ்சாயத்து 9–3
யூனியன் அலுவலகங்கள் ஒருசில இடங்களில் கட்டப்பட்டு முடிந்திருத் a.m.
தாலும்கூட, ஆபீஸ் போகமுடியாத நிலைமை இருக்கிறது. அங்கே யுள்ள அதிகாரிகளுக்கு இருப்பதற்கு ஆபீஸ் இருக்கின்ற இடங்களில் இடம் இல்லாமல் இருக்கிறது. வீடும் கிடைப்பதில்லை. ஆகவே, இப்படிப்பட்ட இடங்களில் அவர்களுக்கு வீடு கட்டிக் கொடுப்பதற்கு வசதி செய்து கொடுத்தால்தான் பஞ்சாயத்து யூனியன் ஆபீஸ்கள் புதிய கட்டடத்திற்குப் போக முடியும். இதை மனதிற் கொண்டு சர்க்கார் உடனடியாக க்வார்ட்டர்ஸ் ஏற்பாடு செய்வார்களா ?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** தேசிய நெருக்கடி ஏற்பட்டதற்குப் பின்னால் சன்னஞ்சன்னமாக ஒவ்வொரு வருடமும் சில லட்சக்கணக்கான ரூபாய்களை ஒதுக்கி க்வார்ட்டர்ஸ்களைக் கட்டிக்கொடுக்கலாம் என்று சர்க்கார் உத்தரவு போட்டிருப்பதை கனம் அங்கத்தினர் அவர்கள் அறிந்திருப் பார்கள் என்று நம்புகிறேன்.

**கனம் சபாநாயகர் :** கேள்விகள் முடிவடைந்தன.

[*Note.*—**An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.**]

## III.—ADJOURNMENT MOTIONS.

### (1) ENFORCEMENT OF BETTERMENT LEVY IN MANIMUTHAR AREA.

MR. SPEAKER : The Hon. Member Sri M. Kalyanasundaram has given notice of an adjournment motion. He may briefly explain how the matter can be considered fit for an adjournment motion.

[28th February 1966

SRI M. KALYANASUNDARAM: Sir, I have given notice of the following motion:—

That the business of the House be adjourned to discuss the following matter of urgent public importance, namely :—

"the hardship caused to the ryots in Tirunelveli district due to the enforcement of betterment levy in Manimuthar area together with collection of all arrears of land revenue postponed during the last fasli especially when there has been a crop failure due to drought conditions in several taluks of the district"

ஸார், திருநெல்வேலி ஜில்லாவில் சென்ற வருடம் மழை இல்லாமல் கிஸ்தி வசூலிப்பது ஒத்தி வைக்கப்பட்டது. ஒத்தி வைக்கப்பட்ட கிஸ்தியை இந்த ஆண்டு வசூலித்து வருகிறார்கள். அதோடு இந்த ஆண்டு கிஸ்தியும் வசூல் செய்து வருகிறார்கள். அதோடு மணிமுத்தாறு அபிவிருத்தி வரி குறைந்த பட்சம் ஒரு எக்கருக்கு 50 ரூபாய் என்ற அளவில் வசூலித்து வருவதாகத் தெரிகிறது. இது பலவிதமான கஷ்டங்களை ஏற்படுத்தியிருக்கிறது என்று அங்கேயிருந்து எனக்குப் பல தகவல்கள் வந்திருக்கின்றன. அந்த ஜில்லாவிலிருந்து வந்திருக்கக்கூடியவர்கள் என்ன காரணத்திற்காகவோ இதைக் கிளப்பாமல் இருக்கலாம். குறிப்பாக அந்த ஜில்லாவிலிருந்து எதிர்க்கட்சியில் யாரும் இல்லை. அதனால்தான் நான் இந்தப் பிரச்னையைக் கொண்டுவரக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட கஷ்டங்களினால் விவசாயம் பாதிக்கப்பட்டிருக்கிறது. விளைச்சலும் இல்லை. ஆகவே, இப்போது வரி வசூல் செய்வதை ஒத்தி போடவேண்டும், இதன் பேரில் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதை அரசாங்கத்திற்கு எடுத்துக் கூறுவதற்காகத்தான் இதை அவசரமாகக் கொண்டு வர நேர்ந்தது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

***கனம் திரு. எம். பக்தவத்சலம்:** கனம் சபாநாயகர் அவர்களே, எப்படியிருந்தாலும் திருநெல்வேலி ஜில்லாவைப் பற்றி இவ்வளவு அக்கறையெடுத்துக் கொண்டதற்காக கனம் அங்கத்தினர் அவர்களைப் பாராட்டுகின்றேன். அவர்கள் சொன்னதையும் வரவேற்கின்றேன். ஆனால் மற்ற உறுப்பினர்கள் அக்கறை எடுத்துக்கொள்ளவில்லை என்று குறிப்பிட்டதை நான் வன்மையாகக் கண்டிக்கின்றேன். (குறுக்கீடு) அது அவர்கள் சாதாரணமாக குத்தலாக பேசுவது—அது அவருடைய வழக்கம். எனக்கும் திருநெல்வேலி ஜில்லாவில் அக்கறையிருக்கிறது. அந்த ஜில்லாவைச் சேர்ந்தவன் என்றில்லாவிட்டாலும்கூட, இந்த அரசாங்கத்திற்கும் அக்கறை இருக்கிறது. என்ன கஷ்டம் எங்கு வந்தாலும் அதில் நிவாரணம் அளித்துவருகிறோம். அந்த முறையில் திருநெல்வேலி மாவட்டத்திற்கும் வேண்டிய நிவாரணம் அளித்துவருகிறோம். அதில் இந்த அரசாங்கம் என்றுமே தவறியதில்லை. இனியும் தவறாது என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். அபிவிருத்தி வரி போடுவதைப்பற்றி கனம் அங்கத்தினர் அவர்கள் சொன்னார்கள். மணிமுத்தாறு திட்டம் போடப்பட்டதிலிருந்தே இத்தனை ரூபாய் கொடுக்கவேண்டும் என்று சொல்லப்பட்டு வந்திருக்கிறது. சென்ற ஆண்டில் மழை தவறியது. மக்கள் ஓரளவு கஷ்டப்பட்டார்கள். நிவாரண வேலை நடந்தது. இப்போதும் நடந்து கொண்டிருக்கிறது. இப்போது இந்த ஆண்டு ஒரு சுபீட்ச நிலை இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. பயிர்கள் ஓரளவுக்கு நல்ல முறையில் வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால் அபிவிருத்தி வரியை வசூலிப்பதால் உண்மையில் கஷ்டம் ஏற்படுமா என்பது அவ்வப்போது பரிசீலித்துப் பார்க்க வேண்டிய விஷயம். அரசாங்கம் இதைத் தொடர்ந்து பரிசீலனை செய்து கொண்டு வருகிறது. விவசாயிகளுக்குக் கஷ்டம் வரும் போது தக்க நடவடிக்கைகளை இந்த அரசாங்கம் எடுத்துக்கொள்ளும். இருக்கின்ற நிலைமைகளை எல்லாம் ஆராய்ந்து பார்த்து, அவ்வப்போது நடவடிக்கை எடுத்துக்கொள்ளும். ஆகவே, இது அவசரப் பிரேரணைக்குரியது அல்ல. அதோடு இன்று முதற்கொண்டு பட்ஜெட் விவாதம் நடைபெறவிருக்கிறது. திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த அங்கத்தினர்கள் இதைப்பற்றிப் பேச மாட்டார்கள் என்று சொல்ல



28th February 1966] [திரு. எம். பக்தவத்சலம்]

முடியாது. அப்போது நிலைமையை நான் விளக்கக் கூடும். கனம் ரெவின்யு அமைச்சர் அவர்களும் விளக்கக்கூடும். ஆகவே இது அவசரப் பிரேரணைக்குரியது அல்ல என்பதை நான்தெரிவித்துக்கொள்கிறேன்.

SRI M. S. SELVARAJAN: On a point of personal explanation, Sir, I want to say a few words.

MR. SPEAKER: All right.

SRI M. S. SELVARAJAN: As a legislator from Tirunelveli district I would like to explain to the hon. Member Sri M. Kalyanasundaram in the Opposition, that we have been careful enough to take to the notice of Government, even a month earlier, about the drought conditions in Tirunelveli district. Perhaps the hon. Member Sri M. Kalyanasundaram is not aware of that. I have also given notice under rule 41 of the Assembly Rules about this matter. This is for the information of the hon. Member Sri Kalyanasundaram.

**திரு. மீ. கலியாணசுந்தரம்:** இந்தத் தகவல் கொடுத்ததற்காக கனம் அங்கத்தினர் திரு. செல்வராஜ் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். எப்படியானாலும் கனம் முதலமைச்சர் அவர்கள் இதை நான் கொண்டு வந்திருக்கிறேன் என்பதற்காகப் புறக்கணிக்காமல் இது சம்பந்தமாக சீக்கிரமாக பரிசீலனை செய்து முடிவு எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

MR. SPEAKER - It is a competition between two clever politicians. I withhold my consent to the hon. Member to raise this subject as an adjournment motion.

## (2) DROUGHT CONDITIONS IN THANJAVUR DISTRICT.

MR. SPEAKER: The hon. Member Sri A. K. Subbiah has also given notice of an adjournment motion. He may now briefly explain how the matter can be considered fit for an adjournment motion.

***திரு. ஆ. கு. சுப்பையா:** கனம் சபாநாயகர் அவர்களே, "தஞ்சை மாவட்டத்தில் தண்ணீர் தட்டுப்பாட்டின் காரணமாக இந்தப் பசலியில் விவசாய உற்பத்தி பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதால் ஏற்பட்டுள்ள அசாத்திய நெருக்கடி நிலையைப்பற்றி விவாதிக்க சபையை ஒத்தி வைக்கும்படி கோருகிறேன்"

தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் ஏறக்குறைய 14 லட்சம் எக்கர்களில் விவசாய உற்பத்தி செய்யப்படுகிறது. இந்த 14 லட்சம் எக்கர்களில் 4 லட்சம் எக்கர் வரையிலும் இருபோக சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. இந்த வருடம் தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டதின் காரணமாகவும், அதிகமாக மழை பெய்து தண்ணீர் பெருக்கம் பின்னால் ஏற்பட்டதின் காரணமாகவும், விவசாயம் பெருமளவு பாதிக்கப்பட்டு பெரு நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. விவசாய நெறியாளர் ஒரு போகத்திற்கு 80 சதமானம்தான் விளைவு ஏற்பட்டிருக்கும் என்றும், இதைப்போலவே இரு போகத்தில் 50 சதமானம் ஒரு பகுதியும், இன்னொரு பகுதி 25 சதமானமும் விளைவு விளைந்திருக்கிறது என்று கணித்திருக்கிறார். இதன் காரணமாக விவசாய உற்பத்தி மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறது. இந்த நிலையில் அவர்கள் புதிய வரி கொடுக்கவேண்டியிருக்கிறது. பழைய நில வரி கொடுக்கவேண்டியிருக்கிறது. இவற்றை வஜா செய்து கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். குத்தகைதாரர்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள், அவர்களுக்கு ஓரளவு குத்தகையும் தள்ளுபடி

[திரு. ஆ. கு. சுப்பையா] [28th February 1966

செய்து கொடுக்கவேண்டும். இதற்கான உத்தர்வு போடவேண்டும் என்பதற்காகத்தான் இந்த ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டு வந்திருக்கிறேன்.

***கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கனம் சபாநாயகர் அவர்களே, சென்ற 18-ம் தேதி நான் கும்பகோணத்திற்குச் சென்றிருந்தபோது, தஞ்சை மாவட்டத்திலுள்ள விவசாயிகள், மற்றுமுள்ள விவசாயப் பிரதிநிதிகள் முதலியோர், சுமார் 100-க்கு மேற்பட்டவர்கள், என்னைப்பார்த்து இது சம்பந்தமான பிரச்னைகளை எல்லாம் தெரிவித்தார்கள். நானும் இருக்கின்ற நிலைமைகளை விளக்கினேன். அரசாங்கம் இதில் வேண்டிய கவனம் செலுத்தும் என்று குறிப்பிட்டேன். இந்த அரசாங்கம் இது சம்பந்தமான பிரச்னையில் எப்போதும் தொடர்ந்து கவனம் செலுத்தும். இது அரசாங்கத்தின் கவனத்தில் தொடர்ந்து இருந்து வருகின்ற பிரச்னை. நிர்வாகப் பிரச்னையும் கூட. ஆகவே இது அவசரப் பிரேரணைக்குரியது அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

MR. SPEAKER : I withold my consent to the hon. Member to raise this subject as an adjournment motion.

### (3) FINANCIAL ASSISTANCE TO REPATRIATES FROM BURMA.

MR. SPEAKER : The hon. Member Sri Rama. Arangannal has also given notice of an adjournment motion. He may now briebly explain how the matter can be considered as an adjournment motion.

**திரு. இராம. அரங்கண்ணல் :** ஸார், என்னுடைய ஒத்திவைப்புப் பிரேரணை அவசரமான காரணத்தைக் கொண்டதாக இருக்கிறது. பர்மாவிலிருந்து வெளியேற்றப்பட்ட தமிழர்கள், தமிழ் நாட்டிலுள்ள பல மாவட்டங்களிலும், சென்னை மாநகரத்திலும் இருந்து கொண்டிருக்கிறார்கள். சுமார் இவ்வாறு 2 லட்சம் பேர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு வேண்டிய உதவியைச் செய்வதற்கு மாவட்ட கலெக்டர்களுக்கு அரசாங்கம் சில உத்தரவுகளை அனுப்பியிருக்கிறது. அவர்களுக்கு நிலம் தரப்படவேண்டும் என்றும், தரப்படுகின்ற நிலம் சம்பந்தப்பட்ட விவரங்கள் மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை கலெக்டரால் அரசாங்கத்திற்கு அனுப்பப் படவேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் திருச்சியில் அண்மையில் இவ்வாறு வெளியேற்றப்பட்ட தமிழர்கள், ஆர்ப்பாட்டம் செய்திருக்கிறார்கள். என்னசெய்வது என்று தெரியாமல் திண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். அதோடு மட்டுமல்ல. சென்னை மாநகரத்தில், குறிப்பாக என்னுடைய தொகுதியில், இவ்வாறு பர்மாவிலிருந்து வெளியேற்றப்பட்ட தமிழர்கள் படுகின்ற பாட்டைச் சொல்வதற்குக்கூட மிகச் சங்கடமாக இருக்கிறது. சென்னையிலிருக்கின்றவர்களுக்கு 2,000 ரூபாய் கொடுக்கவேண்டும் என்று அரசாங்கம் முடிவு எடுத்திருப்பதாகத்தெரிகிறது. ஆனால் ஒரு பகுதியாக 200 ரூபாயும், இன்னொரு பகுதியாக 500 ரூபாயும் கொடுக்கப்படுகிறது என்று தெரிகிறது. கடந்த ஓராண்டு காலமாக காலணா கூட கிடைக்காமல் அவர்கள் குழந்தை குட்டிகளோடு கஷ்டப்படுகிறார்கள். ராஜாமணி என்கிற பெண் தன் நான்கு குழந்தைகளையும் வைத்துக் கொண்டு வயிற்றுப்பிழைப்புக்கு வழியில்லாமல் வீதியில் திண்டாடிக் கொண்டு இருக்கிறாள்......

MR. SPEAKER : The hon. Member is going into details.

**திரு. இராம. அரங்கண்ணல்:** இம்மாதிரியான பரிதாபகரமான நிகழ்ச்சிகளைப் பார்க்கிற நேரத்தில், சர்க்காருடைய கவனம் உடனடியாக ஈர்க்கப்பட்டால்தான் ஏதாவது நடவடிக்கை எடுக்க முடியுமே தவிர அவர்களுடைய பசியை உடனே போக்குவதற்கு வேறு வழி தேட முடியாது என்று எண்ணுகிறேன்.



28th February 1966] [திரு. இராம. அரங்கண்ணல்]

இந்தப் பிரச்னையைப் பொது விவாதத்திலே எழுப்பி, அதற்கான பதிலைப் பெறுகிற அளவுக்கு நாங்கள் காத்து இருக்கக் கூடும். இது மிக மிக முக்கியமான பிரச்னையாக இருப்பதாலும், அன்றாடம் வாழ்க்கை நடத்துவதற்குச் சங்கடப்பட்டுக்கொண்டு இருப்பதாலும், அரசாங்கம் இதிலே உடனடியாக கவனம் செலுத்தவேண்டுமென்ற ஆசையினாலும், சபையின் அலுவல்களை ஒத்திவைத்து இதைப்பற்றி விவாதிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

***கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கனம் சபாநாயகர் அவர்களே, அவசரப் பிரேரணைக்கு உரியதாக இருப்பதற்கு, சம்பவம் சமீபத்தில் நடைபெற்ற சம்பவமாக இருக்கவேண்டும்; இரண்டாவது, ஸ்பெஸிஃபிக் மேட்டராக இருக்கவேண்டும்—அதாவது ரீஸெண்டாக இருக்கவேண்டும்; ஸ்பெஸிஃபிக்காக இருக்கவேண்டும். இரண்டும் இதிலே இல்லை. அரசாங்கம் சமீபத்திலே ஒன்றும் உத்தரவு போடவில்லை. ஏற்கனவே இருக்கிற முறைப்படி தான் அமல் நடத்தப்பட்டு வருகிறது. இதிலே சில மாவட்டங்களில் நல்ல முறையில் கவனிக்கப்பட்டு வருகின்றது என்று கூடக் கூறுவேன். திருச்சி மாவட்டத்தில் நன்றாக கவனிக்கப்பட்டு வருகின்றது. மற்ற மாவட்டங்களிலும் கவனிக்கப்பட்டு வருகின்றது. அகதிகள் விஷயத்தில் பெரிதும் கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது. இருந்தாலும் குறைகள் இருக்கலாம். அவைகள் மீதும் அப்போதைக்கப்போது கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது. இதைப் பற்றி மேலும் கருத்துகள் தெரிவிக்கவேண்டுமென்றால், பட்ஜெட்மீதான பொது விவாதத்தில் தெரிவிக்கலாம். அவற்றையும் அரசாங்கம் கவனிக்க சந்தர்ப்பம் இருக்கும் என்று கூறிக்கொண்டு, இது அவசரப் பிரேரணைக்கு உரியது அல்ல என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

MR. SPEAKER : This is not a matter for an adjournment motion. Hence, I withhold my consent to it.

## IV.—ANNOUNCEMENT.

### BUSINESS OF THE HOUSE.

MR. SPEAKER : I wish to inform the House the following decisions of the Business Advisory Committee which met on the 26th February 1966.

| | |
|---|---|
| 28th February 1966 to 5th March 1966. | General Discussion on the Budget for the year 1966–67. |
| 7th March to 26th March 1966 except holidays on 13th, 20th and 23rd March 1966. | Voting on Demands for Grants for 1966–67. |
| 26th March 1966 .. .. | Introduction of Appropriation Bill. |
| 28th March 1966 .. .. | (i) General Discussion on the Final Supplementary Statement of Expenditure for 1965–66 and Voting on Demands for Further Grants for 1965–66.<br>(ii) Introduction of Appropriation Bill. |
| 29th March 1966 ... ... | Consideration of Appropriation Bills. |
| 30th March 1966 and 31st March 1966. | Official business. |

The House will sit as usual daily from 8-30 a.m. to 1-30 p.m.

[28th February 1966

## V.—GENERAL DISCUSSION ON THE BUDGET FOR 1966-67.

MR. SPEAKER: We may now have general discussion on the Budget for 1966–67.

**திரு. செ. மாதவன் :** தலைவர் அவர்களே, இந்த ஆண்டு அரசாங்கம் சமர்ப்பித்திருக்கும் நிதி நிலை அறிக்கை, அரசாங்கம் ஏற்று இருக்கக்கூடிய கொள்கைகளைச் செயல்படுத்தக் கூடிய முறையில் அமையவில்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன். ஆட்சியிலே உள்ள கட்சி எந்தப் பொருளாதாரக் கொள்கையை ஏற்றுக்கொண்டிருக்கிறதோ அந்தக் கொள்கையின் அடிப்படையிலே இந்த மாநிலத்தினுடைய நிதி நிலை அறிக்கை அமையவேண்டுமென்ற தத்துவத்தை நாங்கள் வற்புறுத்த ஆசைப்படுகிறோம். சமதர்ம சமுதாயத்தை இந்த நாட்டிலே அமைக்க வேண்டுமென்று திட்டமிட்டிருக்கக்கூடிய, ஒப்புக்கொள்ளக் கூடிய, ஒரு ஆட்சி, அந்தத் தத்துவத்தை 18 ஆண்டுகளாக நிறைவேற்றாவிட்டாலும், மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களின் முடிவிலேயாவது, அந்தத் திட்டங்கள் அடிப்படையிலே, என்னென்ன புதிய திட்டங்களை உருவாக்கியிருக்கிறார்கள் என்பதற்கு இந்த நிதி நிலை அறிக்கையிலே எத்தகைய தெளிவும் இல்லை என்பதைத் தெளிவுபடுத்த ஆசைப்படுகிறேன்.

சோஷலிஸ அடிப்படை சமுதாயம் பற்றி பல ஆண்டுகளுக்கு முன்னாலேயே ஆவடியிலே தீர்மானம் போட்டு நாட்டு மக்களுக்குத் தெரிவிக்கப் பட்டது. அதையே மீண்டும் புவனேசுவரத்திலே தெளிவுப் படுத்தப்பட்டது. அண்மையிலே ஜெய்பூரிலே, ஆளும் கட்சியினால் இந்தத் தீர்மானங்கள் செயல்படுத்தப்படவில்லை, ஆட்சியிலே உள்ளவர்கள் இதைச் செயல்படுத்தவில்லை என்று கூறியிருக்கிறார்கள். ஆளும் கட்சியிலேயே, தாங்கள் போட்ட தீர்மானங்களை, கருத்துக்களை நிறைவேற்றுவதிலே, செயல்திட்டங்களை உருவாக்குவதிலே தவறியிருக்கிறோம் என்று ஒப்புக்கொள்ளக்கூடிய இழி நிலையைத்தான் இன்றைக்குக் கண்டிருக்கிறோம். நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் இப்போது சமர்ப்பித்திருக்கும் நிதி நிலை அறிக்கையிலேயாவது ஏதாவது புதிய திட்டங்களை, எதிர் காலத்தில் இந்த நாட்டிலே சமதர்ம சமுதாயத்தை ஏற்படுத்தக்கூடிய புதிய திட்டங்களை, கொடுப்பார்கள் என்று தான் நாங்கள் எதிர்பார்த்தோம். அப்படிப்பட்ட எந்த செய்தியும் அவர்கள் நிதி நிலை அறிக்கையிலே காணப்படவில்லை என்பதைச் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். நகராட்சி, மாநகராட்சிபோன்ற அமைப்புகளிலே தான் வருகிற வருமானத்தை எப்படி செலவழிக்கப் போகிறோம் என்ற விவரங்கள் கொடுப்பதை நாங்கள் கண்டிருக்கிறோம். ஆனால், ஒரு மாநில ஆட்சியே இதே போன்று ஒரு முறையைப் பின்பற்றி வருமானத்தையும் செலவையும் காட்டிக்கொண்டு வருகிற நிலை ஒவ்வாத நிலை என்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அப்படிப்பட்ட வரவு–செலவுத் திட்டமாக அமையாமல், புதிய முறையிலே நம் சமுதாயத்திற்கு என்னென்ன நன்மைகளைத் தர இருக்கிறார்கள், திட்டங்களைச் செயல்படுத்த இருக்கிறார்கள் என்பது இந்த அறிக்கையிலே தெளிவுபடுத்தப்படவில்லை என்று குறிப்பிட ஆசைப்படுகிறேன். சம தர்ம சமுதாய அடிப்படையானது வரி அல்லாத முறையிலே வருமானத்தைப் பெருக்குவதிலே அமைந்திருக்கிறது என்பதை ஒப்புக்கொள்ள வேண்டும். வரியற்ற முறை நம் மாநிலத்திலே எந்த முறையில் அனுஷ்டிக்கப்பட்டிருக்கிறது என்ற விவரமே இந்த ஆண்டிலே காணப்படவில்லை என்று சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். வரியை மட்டும் போட்டு அரசாங்கம் சமதர்ம சமுதாயத்தை ஏற்படுத்த முடியும் என்பதை வலியுறுத்துகிற அதுதான் அரசாங்கத்தின் திட்டமா என்பதையும் தெளிவுபடுத்தவேண்டும். வரியைப் பொறுத்த அளவுக்கு, இந்த ஆண்டு நிதி நிலை அறிக்கையிலே புதிதாக வரி போடவில்லை என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். உபரி பட்ஜெட் கொடுக்கப்பட்டிருக்கிறது. பற்றாக் குறை பட்ஜெட் சமர்பித்து, அதன் மூலமாக ஏற்கனவே இருக்கிற பண வீக்கத்தை மேலும் அதிகப்படுத்தாமல் உபரி நிதி நிலை அறிக்கை கொடுக்கப்பட்டது வரவேற்கப்படக் கூடிய சூழ்நிலை, தான். ஆனால் போடப்பட்ட வரிகள் எந்த அளவுக்கு அதிகப்படுத்தப்பட்டு வருகிறது என்று காணவேண்டும். நில வரியைப் பொறுத்த அளவுக்கு, 1955–56–ல் இந்த மாநிலம் போட்ட வரி கிட்டத் தட்ட ஐந்து கோடி ரூபாய். ஆனால்



28th February 1966] [திரு. செ. மாதவன்]

1963–64-லே 8,92,00,000 ரூபாய். இப்படி வரியை அதிகப்படுத்துவதற்குள்ள காரணம் விளக்கப்படவில்லை. நம்முடைய மாநிலத்தைப் பொறுத்த அளவுக்கு "காமதேனு" போல் அதிக வருமானம் கொடுக்கும் வரி, விற்பனை வரி. இந்த வரி காங்கிரஸ் கட்சிக்காரர்களால் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட வரி. இந்த வரியின் அதிகரிப்பையும் நாம் கொஞ்சம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். 1948–49-ம் ஆண்டு இதன் மூலம் விதிக்கப்பட்ட வரி சுமார் 13 கோடி ரூபாய். அது ஒன்பது கோடி ரூபாயாக மாறியது. 1955–ம் ஆண்டிலே, 1959–ம் ஆண்டிலே அது 16 கோடி ரூபாயாக உயர்ந்து, 1960-ம் ஆண்டிலே 19 கோடி ரூபாயாகி, 1964–65-ம் ஆண்டிலே 35 கோடியே 30 லட்சம் ரூபாயாக உயர்ந்திருக்கிறது. (கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அது நம் வளர்ச்சியைக் காட்டுகிறது.) ஆக, வரியைத் தொடர்ந்து அதிகப்படுத்திக்கொண்டு வந்திருக்கிறார்கள் என்பதிலே நாம் கருத்து வேறுபாடே காண முடியாது. இதற்கு அடுத்த வரி வாகனங்களின்மீது போடக்கூடிய வரி—மோட்டார் வெஹிகிள்ஸ் ஆக்டின் கீழ் போடக்கூடிய வரி. இது பற்றிப் பார்த்தால், 1938–39-ல், சுதந்திரம் கிடைப்பதற்கு முன்னாலே, இந்த வரி மூலம் கிடைத்தது ரூ. 81 லட்சம். 1946–47 பட்ஜெட்படி இந்த வருமானம் ரூபாய் ஒரு கோடியே 36 லட்சமாக இருந்தது. 1957–58-ல் தமிழகம் தனியாகப் பிரிந்து காங்கிரஸ் கட்சி ஆட்சிக்கு வந்ததற்குப் பின்னால் இதன் மூலம் கிடைத்த வருமானம் ரூபாய் நான்கு கோடியே 54 லட்சம். 1964–65-ல் இந்தத் தொகை ரூ. 13 கோடியாக உயர்ந்திருக்கிறது......

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** இது பொருளாதார வளர்ச்சியைக் காண்பிக்கிறது. இதை ஒரு "கிரிடிஸிஸமாகச்" சொல்லுவது ஆச்சரியமாக இருக்கிறது.

**திரு. செ. மாதவன் :** மக்களிடமிருந்து அதிகமாக வரியை வசூலிப்பது நம்முடைய பொருளாதார வளர்ச்சியைக் காட்டுகிறது என்று சொல்லுகிறார்களா ? அதை நாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். இந்த மாநில பட்ஜெட் முன்பு ரூ. 55 கோடியாக இருந்தது. இப்பொழுது ரூ. 188 கோடிக்கு உயர்ந்திருக்கிறது. இது பணத்தினுடைய வீக்கமா ? அல்லது பொருளாதார வளர்ச்சி அதிகரிப்பா ? பொருளாதார வளர்ச்சி அதிகரித்திருக்கிறது என்றால், தேசிய வருமானம் கூடியிருக்கவேண்டும். தேசிய வருமானம் எந்தஅளவுக்குக் கூடியிருக்கிறதோ அந்த அளவுக்குப் பொருளாதார வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது என்பதை ஒப்புக்கொள்ள முடியும். வரியை மட்டும் அதிகரித்துவிட்டு, அது தான் வளர்ச்சி என்பது பொருத்தமற்ற பொருளாதார வாதம் என்பது தான் என்னுடைய கருத்தாகும். அதே போல் தான் "ஸ்டாம்ப்ஸ் அட்மினிஸ்ட்ரேஷன்" துறையும். 1946–47-ல் சுதந்திரத்திற்கு முன்னால் இந்தத் துறையின் மூலம் ரூபாய் நான்கு லட்சம் வருமானம் கிடைத்தது. சுதந்திரத்திற்குப் பின்னால் 1964–65-ல் இந்தத் தொகை ரூபாய் ஏழு கோடி 75 லட்சமாகக் கூடியிருக்கிறது. ரூ. 4 லட்சத்திற்கும் ரூ. 6 கோடி 75 லட்சத்திற்கும் சம்பந்தம் உண்டா என்பதை கனம் தொழில் அமைச்சர் அவர்கள் சற்று சிந்தித்துப் பார்க்கவேண்டும். என்னுடைய, குற்றச்சாட்டெல்லாம் வரி மூலம் வருமானத்தைப் பெருக்குகிற அரசாங்கம் வரியற்ற வருமானத்தைப் பெருக்குவதற்குத் தயக்கம் காட்டுவது ஏன் ? வரி மூலம் அல்லாத வருமானத்தை உயர்த்துவதன் மூலம் தான் சமதர்ம சமுதாயத்தை நிலை நிறுத்த முடியும். பொருளாதார ஏற்றத் தாழ்வை அகற்றுவது தான் சமதர்மத்தின் அடிப்படைக் கொள்கை என்பதை ஆளும் கட்சியே ஒப்புக் கொண்டிருக்கிறது. அவர்களுடைய மகாநாட்டில் தீர்மானம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. அண்மையிலே அகில இந்திய காங்கிரஸ் கமிட்டித் தலைவர் அவர்களே இந்தக் கருத்தை தெள்ளத் தெளிவாக வலியுறுத்தியிருக்கிறார்கள். இந்த நாட்டில் பல திட்டங்கள் நிறைவேற்றப்பட்டாலும் கூட, பொருளாதார ஏற்றத் தாழ்வு அகற்றப்படவில்லை. பணக்காரர்களிடம் பணம் குவியக்கூடிய சூழ்நிலை தான் உருவாகியிருக்கிறது. ஏழைகள் மேலும் ஏழைகளாகப் போகக் கூடிய நிலை தான் உருவாகியிருக்கிறது என்று, நான் சொல்லவில்லை, ஆளும் கட்சித் தலைவர் அவர்களே தன்னுடைய தலைமை உரையில் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

[திரு. செ. மாதவன்] [28th February 1966

இந்தச் சூழ்நிலை அகற்றப்படாததற்கு என்ன காரணம்? இந்தச் சூழ்நிலை அகற்றப்படுவதற்கு என்ன திட்டத்தை அரசாங்கம் தர இருக்கிறது? இது பற்றி ஏதாவது பொருளாதாரத் துறையிலே ஆலோசிக்கப்பட்டதா? இந்தச் சூழ்நிலையைத் தடுப்பதற்கு நிதிநிலை அறிக்கையிலே புதுக் கருத்துக்கள் எதுவுமே தரப்படவில்லை என்பதை நான் இங்கே எடுத்துக்கூற ஆசைப்படுகிறேன். மாநிலத்திட்டங்களெல்லாம் மத்திய அரசாங்கத் திட்டங்களின் அடிப்படையிலே தான் அமைகின்றன. இதைத் திராவிட முன்னேற்றக் கழகம் வன்மையாகக் கண்டிருக்கிறது. திட்டங்கள் போடுவதற்கு, திட்டங்கள் செயல்படுவதற்கு யாரிடம் அதிகாரம் இருக்கவேண்டும் என்பது கொள்கை பொருளாதாரம். இது சம்பந்தமாக மாநிலத்திற்கு முழுக்க முழுக்க அதிகாரம் கொடுக்கப்பட வேண்டும் என்பதை எங்கள் கட்சி வற்புறுத்துகிறது. அந்த நிலை ஏற்படுவதற்கான சூழ்நிலையே இல்லை. மாநிலத் திட்டங்கள் மத்திய அரசாங்கத்தினுடைய உதவியின் அடிப்படையிலே தான் அமைகின்றன. மாநில அரசாங்கம் வருமானம் திரட்டுவதற்கு மத்திய அரசாங்கம் எந்த முறையிலே திரட்டப்படவேண்டும் என்று சொல்லுகிறதோ அந்த அடிப்படையைப் பின்பற்றித் தான் திரட்டுகிறது. இது உண்மையான கூட்டு ஆட்சித் தத்துவத்திற்கு முரணான செயல் என்பதை எடுத்துக்காட்ட விரும்புகிறேன். தனி ஆட்சி உரிமை இருக்க வேண்டும், உண்மையான கூட்டு ஆட்சி இருக்க வேண்டும் என்றால், நம்முடைய மாநில அரசாங்கம் மத்திய அரசாங்கத்தோடு போராடி மத்திய அரசாங்கத்தினிடம் உள்ள அதிகாரத்தை எந்த அளவுக்குக் குறைக்க முடியுமோ அந்த அளவுக்குக் குறைத்து, பெரும்பாலான துறைகளில் மாநில அரசு அதிகாரத்தைத் தன்னிடத்திலேயே வைத்துக்கொள்ள வேண்டும். அந்த அளவுக்கு முயற்சி எடுக்கப்பட வேண்டும். கடந்த பல ஆண்டுகளாக இந்த அரசு அந்த முயற்சியில் ஈடுபட்டுச் செயல்படவில்லை என்பதை இங்கே எடுத்துக்கூற ஆசைப்படுகிறேன். மாநில அரசு வசூலித்து அதை மத்திய அரசுக்குக் கொடுத்து, மத்திய அரசு அதை நிர்வகிப்பது தான் கூட்டு ஆட்சி தத்துவத்தின் அடிப்படை. இப்பொழுது இருக்கக்கூடிய முறையில் மத்திய அரசாங்கம் வசூலித்து, அது தரக்கூடிய பங்குத் தொகையின் அடிப்படையிலே தான் மாநில அரசுத் திட்டங்கள் அமைகின்றன. இதை நாம் சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். இந்த முறை மாற்றப்பட வேண்டும் என்று பல முறை நாங்கள் வற்புறுத்தியிருக்கிறோம். இந்த மாநிலத்திற்கு என்று தனியாக ஒரு திட்டக் குழு வேண்டும். மத்திய அரசு திட்டக்குழு போடக்கூடிய திட்டங்களை எந்த அளவுக்கு செயல்படுத்துவது என்ற உரிமை தான் மாநில அரசுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த முறை மாறவேண்டும். மாநிலத்தினுடைய தேவைகளை மாநில அளவிலே உள்ள திட்டக்குழு நிர்ணயிக்க வேண்டும். அவர்கள் கொடுக்கக்கூடிய திட்டங்களுக்கு மத்திய அரசு எந்தத் காரணத்தைக் கொண்டும் தடங்கல் செய்யக்கூடாது என்ற கருத்தை இந்த அரசாங்கம் மத்திய அரசாங்கத்தினிடம் வலியுறுத்த வேண்டும் என்று நான் இங்கே கூற ஆசைப்படுகிறேன்.

பொருளாதாரச் சீர்குலைவுக்குக் காரணம், மத்திய அரசாங்கம் பொருளாதாரத் திட்டங்களைக் கொடுப்பதிலே சுணக்கம் ஏற்படுத்துவதற்குக் காரணம், மாநிலஅரசின் வரிகள் விரிவடையக்கூடிய வரிகளாக இல்லை. அதாவது "ஃப்ளெக்ஸிபிளாக" இல்லை. இதை காங்கிரஸ் கட்சி ஆட்சிக்கு வந்ததற்குப் பின்னாலே பல முறைகளில், பல சந்தர்ப்பங்களில் ஒப்புக்கொண்டிருக்கிறது. விரிவடையக்கூடிய வரித் துறைகள் மத்திய அரசாங்கத்தினிடம் இருக்கின்றன. இந்தச் சூழ்நிலை இருக்கிற காரணத்தினால் மாநில அரசாங்கத்திற்கு வருமானத்தைப் பெருக்கக் கூடிய வாய்ப்பு இல்லாத நிலை இருக்கிறது. இதுபற்றி மாற்று யோசனைகளை, மாற்றுக் கருத்துக்களை மத்திய அரசாங்கம் பரிசீலித்து, எதிர்க்கட்சிகளின் ஆலோசனைகளின் பேரில் புதிய முறைகளைச் செயல்படுத்த வேண்டும் என்று நான் இங்கே வேண்டிக் கொள்கிறேன்.

பொருளாதாரத் திட்டங்களை இந்த ஆட்சி ஏற்றுக்கொண்டிருக்கிறது. இவைகளெல்லாம் சமதர்ம சமுதாயத் திட்டங்கள் என்று கூறுகிறார்கள். ஆனால், செயல்படுத்தக்கூடிய திட்டங்களெல்லாம் "மிக்ஸெட் எகானமி"—கலப்படப் பொருளாதாரம்—என்று சொல்லுகிறார்கள். கலப்படப் பொருளாதாரத்தைப் பின்பற்றுகிற ஒரே காரணத்தினால் நாட்டில் குழப்பம் ஏற்படுகிறது. ஒன்று சமதர்மத் திட்டங்களை ஏற்றுக்கொள்ளவேண்டும். அல்லது முதலாளித்துவத்தை விரும்பினால் அதை ஏற்றுக்கொள்ள வேண்டும். சமதர்மத் தத்துவத்தை ஏற்றுக் கொண்டோம் என்று சொல்லிவிட்டு, கலப்படப் பொருளாதாரத் திட்டங்களை செயல்படுத்தினால், அதுதான் நாட்டினுடைய பொருளாதாரம் சீர்குலைவதற்கு முக்கிய காரணமாக இருக்கிறது என்பதை நான் இங்கே எடுத்துக்கூற ஆசைப்படுகிறேன்.



28th February 1966] [திரு. செ. மாதவன்]

ஆட்சியிலே உள்ள கட்சி வெகுசில நாட்களில், குறிப்பிட்ட சில நாட்களில் ரூ. 20 லட்சம் தேர்தல் நிதி திரட்டக்கூடிய ஒரு வாய்ப்பைப் பெற்றிருக்கிறது. சமதர்ம லட்சிய சமுதாயத்தை நிர்மாணிக்க முடியுமா என்பது கேள்விக் குறி தான். எப்படி இந்தப் பணம் வந்து சேருகிறது? சில நாட்களிலே ஆளும் கட்சி சில லட்ச ரூபாய் சேர்க்கக்கூடிய வாய்ப்பு பெற்றிருக்கிற ஒரு நாட்டில் சமதர்ம சமுதாயம் அமைய முடியுமா என்பதைச் சற்று சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

மூன்று திட்டங்களைப் பற்றி கனம் முதல் அமைச்சர் அவர்கள் உரையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களில் செலவழிக்கப்பட்ட தொகை ரூ. 613 கோடி. ரூ. 613 கோடி செலவழித்ததற்குப் பின்னால் இந்த நாட்டிலே பொருளாதாரச் சீர்குலைவு ஏற்பட்டிருக்கிறது என்பதை அவர்களுடைய உரையிலேயே குறிப்பிட்டிருக்கிறார்கள். பொருளாதார முன்னேற்றத்திற்குப் பல தடைகள் இருக்கின்றன என்பதை அவர்கள் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். அவர்களே இதற்கெல்லாம் காரணம் என்ன என்பதையும் விளக்கியிருக்கிறார்கள். உணவு உற்பத்தியில் குறைவு ஏற்பட்டிருக்கிறது, அரசாங்கத்தின் உணவு உற்பத்தித் திட்டங்களில் தோல்வி ஏற்பட்டிருக்கிறது, திட்டங்களில் முதலீடு செய்திருக்கிறோம், ஆனால் செய்த முதலீட்டிலிருந்து பெறக்கூடிய பலன்களில் சுணக்கம் ஏற்பட்டிருக்கிறது, தடங்கல் ஏற்பட்டிருக்கிறது என்றெல்லாம் குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்தக் காரணங்களினால் பொருளாதார முன்னேற்றத்திற்கு தடை ஏற்பட்டிருக்கிறது என்பது அவர்களுடைய வாதம்.

உணவு உற்பத்தி பற்றியும் முதல் அமைச்சர் அவர்கள் தெளிவாகக கூறியிருக்கிறார்கள். நாட்டில் உணவுப் பஞ்சம் இருக்கிறது என்பதை ஆளும் கட்சியே ஒப்புக்கொள்ளக்கூடிய சூழ்நிலை இன்றைக்கு உருவாகியிருக்கிறது. கனம் முதல் அமைச்சர் அவர்கள் அருமையான புள்ளி விவரங்களை நாட்டிற்குத் தந்திருக்கிறார்கள். முதல் ஐந்தாண்டுத் திட்ட ஆரம்ப காலத்தில், 1951-ம் ஆண்டில் இந்த நாட்டில் உணவு உற்பத்தி 38 லட்சம் டன் என்று கூறியிருக்கிறார்கள். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்குப் பின்னாலே, 10 ஆண்டுகளுக்குப் பின்னாலே உணவு உற்பத்தி 53 லட்சம் டன்னாக உயர்ந்திருக்கிறது என்ற புள்ளி விவரத்தையும் கொடுத்திருக்கிறார்கள். 1966-ம் ஆண்டில், இந்த ஆண்டு இறுதியில், மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் முடிந்ததற்குப் பின்னால் உற்பத்தி 70 லட்சம் டன்னாக இருக்கும் என்று எதிர்பார்த்தோம், 66 லட்சம் டன் நிச்சயம் கிடைக்கும் என்று கூறியிருக்கிறார்கள். அதே காரணத்தை முதல் அமைச்சர் அவர்கள் கூறி புள்ளிவிவரம் தந்திருக்கிறார்கள். 1970-71-ம் ஆண்டில் இந்த நாட்டிலே ஜனத்தொகை பெருகியதற்குப் பின்னாலே, இப்பொழுதுள்ள ஜனத் தொகை அல்ல, ஐந்து ஆண்டுகளுக்குப் பின்னாலே உள்ள ஜனத்தொகைக்கு 18 அவுன்ஸ் உணவு கொடுக்கவேண்டும் என்ற ஒரு திட்டம் போட்டு, இந்த மாநிலத்திற்குத் தேவைப்படக்கூடிய உணவு 61 லட்சம் டன் என்று புள்ளிவிவரம் கொடுத்திருக்கிறார்கள். 1970-ம் ஆண்டில் 61 லட்சம் டன் உற்பத்தியை வைத்துக்கொண்டு நாட்டிலுள்ளவர்களுக்கு 18 அவுன்ஸ் உணவு கொடுக்க முடியும் என்று நாட்டு மக்களுக்கு அறிவித்திருக்கிறார்கள் முதல் அமைச்சர் அவர்கள். ஏற்கனவே அவர்கள் சொல்லியிருக்கிறார்கள், 60 லட்சம் டன்னுக்கு மேலாக, கிட்டத்தட்ட 65 லட்சம் டன் உற்பத்தி ஆகியிருக்கிறது என்று எங்கே சென்றது இந்த உணவு? ஆட்சியில் உள்ளவர்கள் கணக்குபடியே லட்சக்கணக்கான டன் உணவுப்பொருள் உற்பத்தியாயிருக்கிறது என்று சொன்னால்,

நாட்டில் ஏழு அவுன்ஸ் கொடுக்கக்கூடிய சூழ்நிலை எப்படி உருவாகியிருக்கிறது ? அதே முதல் அமைச்சர் அவர்கள் ஏழு அவுன்ஸ் கொடுப்போம் என்று கூறுகிறார்கள். 61 லட்சம் டன்னை வைத்துக்கொண்டு 18 அவுன்ஸ் கொடுக்க முடியும், 65 லட்சம் டன் உற்பத்தியாகியிருக்கிறது, 7 அவுன்ஸ் தான் கொடுக்க முடியும் என்று சொன்னால் உற்பத்தியான உணவு எங்கே போயிற்று ? உண்மையிலேயே புள்ளிவிவரத்தில் ஏதாவது பித்தலாட்டம் இருக்கிறதா ? அல்லது உற்பத்தியான உணவை எங்கேயாவது அனுப்பிவிட்டார்களா ? அல்லது கள்ளச் சந்தைக்காரர்களுக்கு வாய்ப்புத் தரப்பட்டிருக்கிறதா ? இதையெல்லாம் நாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். மக்கள் தொகை அதிகமாகிவிட்டது, ஆகையால் குறைந்துவிட்டது என்று
10-00 a.m. வாதாடலாம். ஆனால் அதற்கும் கனம் முதல் அமைச்சர் பதில் கொடுத்திருக்கிறார்கள். ஒரு ஆண்டுக்கு உணவு உற்பத்தி அதிகரிப்பு 3 சதவீதம், அதே நேரத்திலே ஜனத்தொகை அதிகரிப்பு 2·3 சதவீதம்தான் ; ஆகவே, அந்தக் காரணத்தைச் சொல்ல முடியாது. வேறு ஏதோ காரணம் இருக்கவேண்டும். அது என்னவாக இருக்கும் என்பதைப் பரிசீலிக்க வேண்டும். என்ன காரணம் என்பதனைக் கண்டு பிடிக்க வேண்டும்.

உணவு உற்பத்தி வினியோகத்தைப் பொறுத்த வரையில் உணவு மண்டலங்கள் இருக்கின்றன. தமிழகத்தைப் பொறுத்த வரையில், உணவு மண்டலம் இருந்து தனித்தனியாகத்தான் இயங்க வேண்டும் என்பதை நாங்கள் மனப்பூர்வமாக வரவேற்கிறோம். வற்புறுத்துகிறோம். அப்படி உணவு மண்டலம் இருப்பதால், இன்றைக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் புள்ளி விவரங்கள் சரியானவைதான் என்றால், ஏராளமான உணவுப்பொருள் இருக்கவேண்டும். உண்மையிலேயே அதுதான் நிலைமை. அது எங்கே போயிற்று? வினியோகத்தில் குறை ஏற்பட்டிருக்கிறதா? அதன் காரணமாகப் பஞ்ச நிலைமை ஏற்பட்டதா ? அப்படிப்பட்ட கருத்து காங்கிரஸ் தலைவர்களால் சொல்லப்பட்டு வருகிறது. இன்றைக்கு முழு மூச்சுடன் மத்திய சர்க்கார் உணவு மண்டலத்தை ஒழித்துக் கட்டவேண்டும் என்று முயற்சி செய்கிறார்கள். அதற்கு மற்ற மாநிலங்கள் இடம் கொடுக்கக்கூடாது. அதற்கு இந்த அரசாங்கம் ஒத்துக்கொள்ளக் கூடாது. அப்படி ஒத்துக்கொண்டால், கள்ள மார்க்கெட்டு பெருகுவதற்குத்தான் வாய்ப்பு ஏற்படும் என்பதை எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

உணவுக் கொள்முதல் செய்வதில் பின்பற்றும் முறையும் சரியானதாக இருக்கவில்லை. நெல் விலையைக் கட்டுப்படுத்துவதால் மட்டும் அல்லது அரிசி விலையைக் கட்டுப்படுத்துவதால் மட்டும் விலைவாசி ஏற்றத்தைக் கட்டுப்படுத்தி விடமுடியாது. விவசாயிகள் உபயோகப்படுத்தக் கூடிய அத்தனை சாமான்களின் விலைகளும் ஏறியிருக்கின்றன. அவற்றின் விலைகள் கட்டுப்படுத்தப்படாத நிலையில் இருக்கின்றன. அப்படி இருப்பது நியாயமா என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். நகர வாசிகளுக்கு நன்மை செய்வதற்காக உணவுக் கட்டுப்பாடு செய்திருக்கிறோம் என்கிறார்கள். ப்ரொக்யூர்மெண்ட், கொள்முதல் செய்கிறோம் என்கிறார்கள். அதை நாங்கள் ஆட்சேபிக்கவில்லை. நகரவாசிகளைப்பற்றிச் சர்க்கார் கவலைப் படட்டும். ஆனால் அதே நேரத்தில் விவசாயிகளைப் பற்றியும் இந்தச் சர்க்கார் கவலைப்பட்டதா என்றால் இல்லை. அவர்களுக்கு வேண்டிய அத்தனை அத்யாவசியப் பொருள்களும் கட்டுப்படுத்தப்பட வேண்டும் என்பதை ஒத்துக்கொள்ளுகிறதா ? அப்படி அவற்றின் விலைகளைக் கட்டுப் படுத்தியிருக்கிறதா ? இல்லை. அப்படிக் கட்டுப்பாடு செய்த பிறகு உணவுப் பொருள் கொள்முதல் செய்வது என்றால் அது பொருத்தமாக இருக்கும்.

முன்பு அந்நிய ஆட்சிகாலத்திலே, 1948-ம் ஆண்டிலே கொள்முதல் செய்தார்கள். அப்பொழுது பின்பற்றிய கொள்கை என்ன ? அப்பொழுது பணம் போனஸாகக் கொடுத்தார்கள். விவசாயிகளுக்கு உரம் போனஸாகக் கொடுத்தார்கள். அந்த முறை இன்றைக்குப் பயன் படுத்தப் பட்டிருக்கிறதா ? இல்லை. விவசாயிகளிடமிருந்து, பயங்கரமான முறையில், பாதுகாப்புச் சட்டத்தைக் காட்டி உணவுக் கொள்முதல் செய்யும் சூழ்நிலையைத்தான் பார்க்கிறோம். பாதுகாப்புச் சட்டதின்கீழே உத்தரவு போட்டு, மட்ராஸ் பாடி அண்ட் ரைஸ் டிக்ளரேஷன் அண்ட் ரிக்விஸிஷன் ஆப் ஸ்டாக்ஸ்



ஆர்டர் 1964 என்கிற உத்தரவின் கீழே கொள்முதல் செய்கிறார்கள். அது செல்லுமா செல்லாதா என்பது வேறு பிரச்சினை. இப்படிப் பாதுகாப்புச் சட்டத்தின்கீழே உத்தரவு போட்டுக் கொள்முதல் செய்யப் புகுவதற்கு முன்னால் அந்த விதிகளைப் பரிசீலித்தார்களா என்பது சந்தேகமாக இருக்கிறது. இந்த ஆர்டரின் மூன்றாவது பிரிவின்படி ஒரு நபர் உணவு தானியத்தைப் பதினைந்து நாட்களுக்கு ஒரு முறை கணக்குக் கொடுக்க வேண்டும் என்பது தான். இன்றைக்குச் சுதந்திரம் அடைந்ததன் பிறகு நாம் காணும் பலன் இது. விவசாயி வீட்டிலே வைத்திருக்கும் நெல்லை பதினைந்து நாட்களுக்கு ஒரு முறை கணக்குக் காட்ட வேண்டும். கணக்குக் கேட்பதைக் கூட ஆட்சேபிக்கவில்லை. அப்படிக் கணக்குக் கொடுக்காவிட்டால் என்ன என்பதைத்தான் பார்க்க வேண்டும். கொடுக்காவிட்டால் என்ன என்று ஆறாவது பிரிவில் கொடுக்கப் பட்டிருக்கிறது ; ஆறாவது பிரிவு, ஒருவர் கணக்குக் கொடுக்கவில்லை என்றால், தேவைக்குப் போக அதிகமான பொருளை அரசாங்கம் கேட்பதையும் ஆட்சேபிக்கவில்லை. ஆனால் அது பற்றிய விளக்கம் அந்தப் பிரிவில் இல்லை. கணக்குக் கொடுக்க வில்லை என்கிற ஒரே காரணத்திற்காக வீட்டிலே உள்ள அவ்வளவு தானியத்தையும் கொள்ளையிடுவது போல் எடுத்துக் கொண்டு போய் விடலாம். அந்த விதிக்கு அர்த்தமே புரியவில்லை. மதுரை மாவட்டத்தில் கருங்காளப்பட்டி என்கிற ஊரிலே, கனம் உள்துறை அமைச்சருடைய ஊருக்குப் பக்கத்து ஊரிலே, ஒரு அருமையான நிகழ்ச்சி நடந்திருக்கிறது. ஒரு பஞ்சாயத்துத் தலைவர், மண்டல காங்கிரஸ் தலைவராக இருந்தவர், 1942-ல் சிறந்த தியாகி 1—2—1966 தேதியன்று, அதிகாரிகள் அவருடைய வீட்டிற்குச் சென்றார்கள். அவருடைய வீட்டிலே உள்ள அறைகளை யெல்லாம் சீல் வைத்துவிட்டார்கள். முன் அறிவிப்பு இன்றி, கொடுக்க வேண்டும் என்று சட்டத்திலே இருக்கிறது. கொடுக்க வில்லை என்கிற காரணத்திற்காக அத்தனை அறைகளையும் சீல் வைத்தார்கள். இது நடந்தது 1—2—1966-ஆம் தேதி அன்று. பிறகு 5—2—1966 தேதி அன்று, சீல் வைத்ததற்குப் பிறகு நோட்டீஸ் கொடுக்கிறார்கள், " உன்னிடமிருந்து சர்க்காருக்கு 191 மூட்டை நெல் கிடைக்கவேண்டும் " என்று. சீல் வைத்ததற்குப் பின்னால் நோட்டீஸ் கொடுத்திருக்கிறார்கள். அதிலே அவருடைய வீட்டிலே 191 மூட்டை நெல் இருக்கிறதா என்று தெரியாது. அது வேறு பிரச்னை. அரசாங்கத்திற்கு 191 மூட்டை கொடுக்க வேண்டும். அவ்வளவுதான். இந்த நோட்டீஸ் எத்தனை மணிக்குக் கொடுக்கிறார்கள் ? மாலை 4 மணிக்குக் கொடுக்கிறார்கள். சொந்தக்காரர் வீட்டிலே இல்லை. இவர்கள் மாலை 7 மணிக்கு அவர் வீட்டிலே புகுந்து கொள்ளைக்காரர்கள் கொள்ளை அடிப்பது போல, வீட்டிலே பெண்கள் மட்டுமே இருக்கும்போது, வீட்டிலே புகுந்து நெல் எடுக்கிறார்கள். இது உண்மையிலேயே பரிதாபமானது. கனம் உள்துறை அமைச்சருக்குத் தெரியும். அவரும் குடிசையில் வாழ்ந்தவர்தான். ஏழைகள் பற்றித் தெரிந்தவர்தான். அவர்களிடம் மனுக் கொடுத்திருக்கிறார் பாதிக்கப்பட்டவர். என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார் என்பது ஆண்டவனுக்குத்தான் தெரியும்.

**கனம் திரு. பூ. கக்கன் :** பல பேர் அப்படி மனுக்கள் கொடுத்திருக்கிறார்கள். அவையெல்லாம் சம்பந்தப்பட்டவர்களுக்கு அனுப்பப்பட்டிருக்கின்றன. மனுக் கொடுத்தவுடனே உடனடியாகக் கவனிக்க வேண்டும் என்று அங்கத்தினர் கருதுகிறார்களா ?

**திரு. செ. மாதவன் :** ஒருவர் வீட்டிலே இல்லாதபோது புகுந்து அதிகாரிகள் நெல்லைக் கொள்ளையடிக்கிறார்கள் என்று மனுக்கொடுத்தால் அதை உடனடியாகக் கவனிக்க முடியாது என்று உள்துறை அமைச்சர் சொல்வது கண்டு ஆச்சரியப்படுவதிற்கில்லை தான். அவரும் ஒரு காலத்தில் உள்துறை அமைச்சருக்கு வேண்டியவர் தான். ஆனால், இப்பொழுது அந்தக் கட்சியில் அவர் இல்லை. அவ்வளவுதான்.

அதே தாலூகாவிலே இன்னொருவருக்கு இன்னொரு நிகழ்ச்சி நடந்திருக்கிறது. அவருக்கு உள்ள மொத்த வருமானமே 200 மூட்டைதான். அவர் 403 மூட்டை கொடுக்க வேண்டும் என்று நோட்டீஸ் கொடுத்திருக்கிறார்கள். மாவட்டத் தலைமை அதிகாரியைக் கண்டு அவர்களிடம் விளக்கம்

கேட்டபோது, கீழே இருக்கும் அதிகாரிகள் அவ்வளவு மூட்டைகள் வரும் என்று கணக்கிட்டிருக்கிறார்கள் என்கிறார். அது தனிப்பட்டவர் சம்பந்தப்பட்டது அல்ல. தேவஸ்தானம். அந்த அதிகாரி சொல்கிறார், 'அது எனக்கே தெரியாது' என்று சட்ட மன்ற உறுப்பினரிடம். எந்த விதியின்படி இதைப் போட்டிருக்கிறீர்கள் என்று கேட்டால் அதுவும் எனக்குத் தெரியாது என்கிறார் அந்த அதிகாரி. சர்க்கார் சொல்கிறார்கள் நாங்கள் செய்கிறோம் என்கிறார்..............

**கனம். திரு. எம். பக்தவத்சலம் :** சட்ட மன்ற உறுப்பினர் என்ற முறையில் அங்கே சென்றாரா என்று தெரியவில்லை. வழக்கு அறிஞர் என்கிற முறையில் சென்றிருந்தால் கலெக்டர் சொல்லும் பதில் வேறு முறையாகத்தான் இருக்கும்.

**திரு. செ. மாதவன் :** முழுக்க முழுக்கச் சட்ட மன்ற உறுப்பினர் என்கிற முறையிலேதான் சென்றிருந்தேன். ஆனால் சாதாரண சட்டை போட்டுக்கொண்டு ; கருப்புக் கோட்டு இல்லை (சிரிப்பு).

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கருப்புக் கோட்டு இல்லாவிட்டால் பாதகமில்லை. அவர்களுடைய தொகுதிக்கு வெளியிலே உள்ள விவகாரமாக இருந்தால், சட்ட மன்ற உறுப்பினராகச் சென்றிருக்க முடியாது.

**திரு. செ. மாதவன் :** அது தொகுதி வேறு என்றாலும், சம்பந்தபட்டவர் என் தொகுதியில் இருப்பவர், ஆகவே எனக்கு உரிமை உண்டு என்ற வகையிலேதான் சென்றிருந்தேன். ஒரு பொறுப்புள்ள அதிகாரி "உங்களிடம் நெல் இல்லாவிட்டால் பரவாயில்லை, ஒரு ரூபாய், இரண்டு ரூபாய் அதிகமானாலும், வெளியில் வாங்கி சர்க்காருக்குக் கொடுங்கள்" என்று ஒரு எம்.எல்.ஏ.விடம் சொல்கிறார் என்றால், சாதாரண விவசாயி நிலைமை என்ன என்பதைச் சிந்தித்துப்பார்க்க வேண்டும். அவர்களுடைய அறிக்கையை நான் ப்ரிண்ட் செய்து மக்களுக்கு வழங்கியிருக்கிறேன். வேண்டுமானால் ஒரு நகல் முதல் அமைச்சருக்குக் கொடுக்கிறேன். இது ராமநாதபுரம், சிவகங்கை சம்பந்தப்பட்டது. இதிலே ஒரு எக்கருக்கு 25 மூட்டை கொடுக்க வேண்டும் என்று எதிர் பார்க்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். சிவகங்கை ஜமீன் பிரதேசம், வானோக்கி நிற்கும் பிரதேசம். அங்கே 10 மூட்டையே கிடைக்காது. அங்கே 25 மூட்டை என்று, பாதுகாப்புச் சட்டத்தின் கீழே உத்தரவு போட்டிருக்கிறார்கள். கொடுக்காவிட்டால் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் எச்சரிக்கிறார்கள்..

இப்படிப்பட்ட சம்பவங்கள் பற்றி முன்பே இந்த மன்றத்தில் எடுத்துக் காட்டியிருக்கிறோம். இருந்தும் தொடர்ந்து அதிகாரிகள் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இந்த மன்ற உறுப்பினராகிய சீராமுலு அவர்களுக்கு, "நீங்கள் 6 எக்கர் 52 செண்ட் வைத்திருப்பதாகத் தெரிகிறது, ஆகவே, 48 மூட்டைகள் கிடைக்கும் என்று நாங்கள் கணக்குப் போட்டிருக்கிறோம், உங்கள் தேவைக்கு 20 மூட்டைகள் போக, பாக்கி 28 மூட்டைகளை சர்க்காருக்குக் கொடுக்கவேண்டும்" என்று உத்தரவு போட்டிருக்கிறார்கள். அப்படிக் கொடுக்காவிட்டால் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்வோம் என்கிறார்கள்.

ஒரு சட்டமன்ற உறுப்பினர். அவருடைய வீட்டில் இருப்பது 17 உருப்படிகள். அவருக்குக் கிடைக்கின்ற வருமானம் 28 மூட்டை. இப்படியிருக்க அரசாங்கத்திலிருந்து கணக்குப் போட்டிருப்பது 48 மூட்டை. இந்த நிலைமை நாட்டில் இருக்கலாமா என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும். அரசாங்கம் குறிப்பிடுகின்ற நெல்லைக் கொடுக்காவிட்டால் பாதுகாப்புச் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொல்கிறார்கள். உணவுப் பொருட்களை எடுப்பது என்பது எஸன்ஷியல் ஆர்டிக்கிள் சட்டத்தின்படி எடுத்துக்கொள்ளப்படுகின்ற நடவடிக்கை. வெள்ளைக்காரன் காலத்தில் போடப்பட்டு இப்போது மீண்டும் இங்கே வந்திருக்கிறது. ஆனால் பாதுகாப்புச் சட்டம் இதற்கு எப்படிப்





பொருந்தும் என்பதுதான் தெரியவில்லை. அங்கே இந்தியா பிரதம மந்திரியும், உள்துறை மந்திரியும், பாதுகாப்புச்சட்டம் நாட்டின்பாதுகாப்புக் காகவே பயன்படுத்தப்படும் என்று அறிக்கை விடுகின்றார்கள். அறிக்கை விடுகின்ற அதே நேரத்தில் இங்கே சட்டமன்ற உறுப்பினர் அதே பாதுகாப்புச் சட்டத்தின் படி கைது செய்யப்படுகின்றார். உண்மையாகவே பாதுகாப்புச் சட்டத்தைப்பற்றி மத்திய சர்க்கார் கொண்டு இருக்கும் கொள்கையையேதான் மாநில சர்க்கார் கொண்டிருக்கும் என்று கூறுகிறார்கள். ஆனால் மாநில சர்க்கார் இதற்கு நேர்மாறாக நடந்து கொண்டிருக்கிறது. ஆகவே இப்படிப்பட்ட உத்தரவை ரத்து செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்திய உள்துறை அமைச்சர் அவர்கள் இந்தப் பாதுகாப்புச்சட்டம் அந்நியனை விரட்டுவதற்குத்தான் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே இதை அந்நியனை விரட்டுவதற்குப் பயன்படுத்தவேண்டுமே தவிர, விவசாயிகளைக் கொடுமைப்படுத்துவதற்கு வைத்துக்கொள்ளக் கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

திட்டங்களை நிறைவேற்றுவதைப்பற்றி சொல்லியிருக்கிறார்கள், நமது முதலமைச்சர் அவர்கள். திட்ட வேலைகளைப்பற்றி கண்காணிப்பு, அதிலுள்ள குறைபாடுகள் , வீண் விரயச் செலவு இவைகளில் போதுமான கவனம் செலுத்த முயற்சி எடுத்துக்கொள்ளவில்லை என்பதுதான் இந்த அரசாங்கத்தின்மீது தொடர்ந்து இருந்து வருகின்ற குற்றச்சாட்டு. நமது முதலமைச்சர் அவர்கள் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு பஞ்சாயத்து யூனியன்களையும் கூட்டுறவு சங்கங்களையும் தான் முழுக்க முழுக்க நம்பியிருக்கிறார்கள். அவர்களுக்குத்தான் முழுப்பொறுப்பையும் கொடுத்திருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். உணவு உற்பத்தி தடை படுவதற்கு மூல காரணம் பஞ்சாயத்து யூனியன்களிடத்தில் திட்டங்களை ஒப்படைப்பதுதான். இதனால்தான் பலவிதமான ஊழல்கள் ஏற்படுகின்றன என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். ஜாதி, கட்சி, கோஷ்டி இப்படிப்பட்ட பலவிதமான சிக்கல்கள் இருக்கக்கூடிய பஞ்சாயத்து யூனியன்களிடத்தில் திட்டவேலைகளை ஒப்படைப்பது முற்றிலும் சரியல்ல என்பதை நான் தெளிவாகக் கூற விரும்புகிறேன். பி. டி. ஓ., கிராம சேவக்குகள் இவர்கள்தான் பஞ்சாயத்து யூனியனில் செயல்படுகின்ற அதிகாரிகள். இந்த அதிகாரிகள் அரசாங்கக் கடன்களை வசூலிப்பது, நன்கொடை வசூலிப்பது, இப்படிப்பட்ட வேலைகளுக்குத்தான் பயன்படுத்தப்பட்டு வருகிறார்கள். கூட்டுறவுச் சங்கத்தை எடுத்துக்கொண்டால், மோசடி, கூட்டுக்கொள்ளை இவைதான் பெரும்பாலான கூட்டுறவுச் சங்கங்களில் நடந்து கொண்டிருக்கின்றன. இவ்விதம் யார் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பதைநான் வெளியிட விரும்பவில்லை. முதலமைச்சர் அவர்கள் இவற்றையெல்லாம் உணர்ந்து அருமையான ஒரு தத்துவத்தை வெளியிட்டிருக்கிறார்கள். "கூட்டுறவு அமைப்பில் எனக்கு நம்பிக்கை குறைந்து வருகிறது" என்று அவர் சொன்னதில் நன்கு கவனம் செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம். அதாவது கூட்டுறவு அமைப்பு விவசாய உற்பத்தியைக் குலைத்துவிடுகின்றது நாம் என்பதை நான் ஆதரிக்கின்றேன். இது முதலமைச்சர் அவர்கள் கூறிய கருத்து. நான் கேட்டுக்கொள்வது, திட்டங்களை நிறைவேற்றுவதற்குப் பஞ்சாயத்து யூனியன்களையே முழுக்க முழுக்க நம்பியிராமல், உயர்தர மட்டத்தில் ஒரு குழு அமைத்து, ஊழல்கள் ஏற்படாதவாறு எந்த மாதிரியான திட்டங்களை நிறைவேற்றலாம் என்பதைப்பற்றிப் பரிசீலிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நிர்வாகச் செலவைப்பற்றி விரிவாக முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். நிர்வாகச் செலவுக்கும் தேசீய வருமானத்திற்கும் பொருத்தம் இருக்கவேண்டும். ஆனால் ஒன்றுக்கொன்று சம்பந்தம் இல்லாமல் இருக்கிறது. அகவிலைப்படியைப்பற்றிக் கூறும் பொழுது, விலைவாசி உயர்ந்திருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அதை ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். அகவிலைப்படியை

உயர்த்தும்போது, விலைவாசியும் உயருகிறது என்கின்ற கருத்தை நீண்ட நாட்களுக்குப் பின்னால் கண்டுபிடித்திருக்கிறார்கள். ஆனால் உண்மையில் இதனால் பாதிக்கப்பட்டிருக்கும் அரசாங்க சிப்பந்திகளுடைய நிலைமை என்ன ? இரண்டாம் திட்டத்தில் ஹோல்ஸேல் விலை 30 சதமானம் உயர்ந்திருக்கிறது. இரண்டாம் திட்டத்தின் முடிவில் 35 சதமானம் உயர்ந்திருக்கிறது, இதைக் காரணமாகச் சொல்லி அகவிலைப்படியைக் கொடுக்காமல் இருப்பது பொருத்தமா என்பதைச் சற்று ஆலோசித்துப்பார்க்கவேண்டும். இதற்கு மாறாக மாற்று யோசனைகளை முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். உபயோகிப்போர் கூட்டுறவு சங்கம் ஏற்படுத்தி நியாயமான விலைக்கு எல்லாப் பொருட்களையும் கொடுக்கலாம் என்று திட்டமிட்டிருப்பதாகத் தெரிகிறது. அப்படியானால் இதற்கு ஏதாவது திட்டம் போடப் பட்டிருக்கிறதா ? அரிசியை மட்டும்தான் கொடுக்கப்போகிறார்களா ? அப்படியென்றால் மற்ற பொருட்களுக்கு என்ன செய்வது ? அல்லது அத்தனை பொருட்களும் நியாயமான விலையில் கிடைப்பதற்கு அரசாங்கத்தினிடம் என்ன வழி இருக்கிறது ? விலைவாசி உயர்வைப் பற்றியும் அகவிலையைப்பற்றியும் நிபுணர் குழு பரிசீலிக்க வேண்டும் என்று சூசகமாகக் கூறியிருக்கிறார்கள். இது அனைவருக்கும் தெரிந்த விஷயம். நிபுணர் குழு பரிசீலிக்கவேண்டும் என்றால், எப்போது பரிசீலிக்கப்போகிறார்கள் ? அதற்கான குழு நியமித்தாய்விட்டதா ? இதற்கு என்ன திட்டம் போடப்பட்டிருக்கிறது ? பொதுவாக விலைவாசியைக் கட்டுப்படுத்துவதற்கு எப்படியாவது ஒரு திட்டத்தைப் போடுவதற்குப் பரிசீலனை செய்தேயாகவேண்டும். அந்த முறையில் அகவிலைப்படியையும் நிர்ணயிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். எதிர்கட்சிகளின் முழு ஒத்துழைப்பு அடிக்கடி வேண்டப் படுகிறது, அத்தனை காங்கிரஸ் கட்சித் தலைவர்களாலும். ஆனால் எதிர்கட்சியினர் பலவழிகளிலும் அவமானப்படுத்தப்படுகிறார்கள். இதற்குக் காரணம் அதிகாரிகள்தான் என்று வேறு சொல்லி விடுகிறார்கள். இப்படிப்பட்ட நிலைமையில் நாட்டில் தொடர்ந்து இருந்து வருகின்ற பஞ்சத்திற்கும் பட்டினிக்கும், இன்னொரு பக்கத்தில் பணவீக்கத்திற்கும், அதன் காரணமாக ஏற்படுகின்ற பொருளாதார சீர் குலைவிற்கும் காரணமாக இருக்கின்ற சூழ்நிலைகளைப் போக்காமல் தொடர்ந்து இதே நிலைமையை வைத்துக்கொண்டிருந்தால், அதைப் பொறுத்துக்கொள்கின்றவர்கள் அரசாங்க சிப்பந்திகளாக இருந்தாலும் சரி, சாதாரண ஏழை மக்களாக இருந்தாலும் சரி, இவர்கள் நீண்ட காலத்திற்குப் பொறுத்துக்கொண்டிருக்க மாட்டார்கள். அதே நேரத்தில் பெரும் மக்கள் புரட்சி இந்த நாட்டை எதிர் நோக்கிக் கொண்டிருக்கும் என்பதைக்கூற ஆசைப்படுகிறேன். ஒரு நாட்டில் ஏற்படுகின்ற பஞ்சம்தான் புரட்சிக்கு வித்தாக இருக்கும். இத்தனையும் வைத்துக்கொண்டு நாங்கள் சோஷலிஸ சமதர்ம சமுதாயத்தை அமைக்கப்போகிறோம் என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். ஒன்று, சோஷலிஸத்தை விட்டுவிடுங்கள், அல்லது அதை நிலை நிறுத்துவதற்கு வேண்டிய வேலைகளைச் செய்யுங்கள். இந்த இரண்டில் ஒன்றைச் செய்ய வழி வகை செய்யாத அரசாங்கம் இந்த நாட்டில் இருப்பதற்கு லாயக்கற்ற அரசாங்கம் என்பதைக் கூறி என் வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

*திரு. ஏ. பி. சி. வீரபாகு : கனம் சபாநாயகர் அவர்களே, 1966-67 வரவு செலவு திட்டத்தை நான் வரவேற்கிறேன். இதைப்பற்றி விமர்சிக்கும்போது, இதற்குக் கொடுத்திருக்கும் புள்ளி விவரத்தைப்பற்றி சந்தேகம் தெரிவிக்கப்பட்டது எனக்கு முன் பேசிய கனம் அங்கத்தினர் அவர்களால். "நாட்டில் உணவு உற்பத்தி 65 லட்சம் டன்னாக இருக்கிறது, 18 அவுன்ஸ் அரிசி கொடுப்பதற்கு 61 லட்சம் டன் போதுமானது, அப்படியிருக்க இந்த அரசாங்கம் 7 அவுன்ஸ் எதற்காகக் கொடுக்கிறது" என்று மேலெழுந்தவாரியாக விமரிசனம் செய்தார். 7 அவுன்ஸ் அரிசி என்பது புன்செய் தானியம் சேர்க்கப்படாமல் கொடுக்கப்படுவது. 65 லட்சம் டன் என்று சொல்வதில் 35 லட்சம் டன் தான் அரிசி கிடைக்கிறது.





அதாவது உற்பத்தியாளருக்கு வேண்டிய அத்தனை செலவையும் கொடுக்கவேண்டியிருக்கிறது. அவர்களுக்கு 18 அவுன்ஸ் வீதம் கணக்கிட்டுக் கொடுக்கப்படுகிறது. அவர்கள் சொன்னதுபோல், 28 மூட்டை நெல்லையும் கெடுபிடியாக வாங்கவில்லை. அவர்களுடைய செலவையெல்லாம் நீக்கி, உபரியாக இருக்கின்ற தானியத்தைத்தான் அரசாங்கம் வாங்கிக்கொள்கின்றது. அந்த முறையில் கிடைக்கின்ற தான்யத்தைக் கொடுக்கும்போது தான் 7 அவுன்ஸ் அரிசி கொடுக்கப் படுகின்ற நிலைமை ஏற்படுகிறது. இதில் சந்தேகம் ஏற்படுவதற்கு என்ன காரணம் இருக்கிறது என்று தெரியவில்லை; இதைப்பற்றிச் சரியாகப் படிக்காத குற்றம் தான்.

மற்றொன்று, இந்த அரசாங்கத்திற்கு சோஷலிஸ உபதேசம். இந்த அரசாங்கத்திற்கு சோஷலிஸத்தைப்பற்றித் தெரியவில்லை என்ற முறையில் எடுத்துச் சொல்லப்பட்டது. வரியில்லாமல் அரசாங்கம் நடத்தினால் தான் சோஷலிஸ அரசாங்கம், வரி போட்டு அரசாங்கம் நடத்தினால் சோஷலிஸ அரசாங்கம் அல்ல என்று விமரிசனம் செய்வது புதிதாக இருக்கின்றது. வரி போடாமல் அரசாங்கம் நடத்துவது கம்யூனிஸ அரசாங்கமே தவிர சோஷலிஸ அரசாங்கம் அல்ல. சோஷலிஸத்தை முதலில் ஏற்படுத்திக்கொண்டு, அதிகாரமே இல்லாத அளவில், ஆண்டான், ஆளப்படுபவன் என்கிற வித்தியாசம் இல்லாத ஒரு சூழ்நிலையைத் தோற்றுவிக்கவேண்டும் என்பதுதான் லட்சியம். அதற்கான வழியில் இருப்பது சோஷலிஸம் என்கிற லட்சியம். இதை சீக்கிரமாகக் கொண்டு வருவதற்கு எவ்வளவோ கஷ்டங்களும் இருக்கின்றன. உண்மையிலேயே இந்த அரசாங்கம் நல்ல விதமாக சோஷலிஸ நடைமுறைகளை மேற்கொண்டு வருகிறது என்பதற்கு என்னால் எவ்வளவோ சொல்ல முடியும். எவ்வளவோ நடவடிக்கைகளை நாம் சோஷலிஸ முறையில் தான் ஆக்கபூர்வமாக நடத்திக் கொண்டு வருகிறோம். அதற்கு நேர் மாறாக இருக்கின்ற வரியில்லாத ஒரு அரசாங்கத்தை, சோஷலிஸ அரசாங்கம் என்று சொல்ல முடியாது; அது கம்யூனிஸ அரசாங்கமாகத்தான் இருக்கும், என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இங்கு சோஷலிஸம் இருக்கிறதா இல்லையா என்பதைப் பார்க்கவேண்டும் என்று கருதினால், சோஷலிஸத்தை ஏற்படுத்துவதற்கான பல காரியங்களைப் பரக்கக் காணலாம் இந்த பட்ஜெட்டில் பெரிய தொழில்கள், சிறிய தொழில்கள், கூட்டுறவு மூலமாக நடக்கின்ற தொழில்கள், உணவு உற்பத்தி, உணவு விநியோகம் இவை அத்தனையிலும் பங்கு கொள்ளுகின்ற அரசாங்கம் சோஷலிஸ அரசாங்கமாக இல்லையென்று சொன்னால், வேறு எந்த அரசாங்கம் அவ்வாறு இருக்க முடியும் ? போலீஸ் அரசாங்கமா நடக்கிறது ? போலீஸ் அரசாங்கம் என்றால் திட்டமிட்டு, 188 கோடி ரூபாய்க்கு வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிப்பானேன் ? 'வெல்ஃபேர் ஸ்டேட்' ஆகவும், சோஷலிஸ அரசாங்கமாகவும் மலர வேண்டிய ஒரு பெரிய போக்கை எடுத்துக் கொண்டதன் காரணமாகத்தான் வர வர அதிகமாக வரியைப் போட வேண்டியிருக்கிறது ; ஏராளமான பணத்தை மக்களுக்காகச் செலவழிக்க வேண்டியிருக்கிறது ; உணவு உற்பத்தியிலிருந்து உணவு விநியோகம் வரையிலும் பொறுப்பை ஏற்றுக் கொள்ள வேண்டியிருக்கிறது. ஆகவே, இந்த அரசாங்கம் சோஷலிஸப் பாதையில் போகிறது என்பதற்கு இதைவிட அதிகமாக எடுத்துக் காட்டத் தேவை இல்லை என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

சோஷலிஸத்திற்கு அடிப்படையானது தொழில் வளர்ச்சி. தொழில் வளர்ச்சி இல்லாமல் சோஷலிஸம் வர முடியாது. தொழில் வளர்ச்சிக்காக தமிழ்நாட்டு அரசாங்கம் எத்தனை நடவடிக்கைகள் எடுத்து வந்திருக்கிறது என்பதை அண்மையில் நம்முடைய தொழில் அமைச்சர் அவர்கள் குந்தா திட்டத்தைக் குறித்துப் பேசும்போது கூறியிருக்கிறார்கள். "பெர் காபிட்டா கன்ஸம்ஷன் ஆப் எலெக்ட்ரிஸிடி 12 யூனிட்டிலிருந்து 100 யூனிட் அளவுக்குப் போயிருக்கிறது, நான்காவது ஐந்தாண்டுத் திட்டகாலத்திற்குள்ளே 150 யூனிட் அளவுக்குப் போகும்" என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அவ்வாறு மின்சார வளர்ச்சி ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. இந்த மின்சார

வளர்ச்சியைப் பராமீட்டராகக் கொண்டு நம்முடைய தமிழ்நாட்டிலே நடக்கின்ற பெரிய தொழில் வளர்ச்சியை நாம் கணக்கிட்டுப் பார்த்தால், நாம் உற்பத்திப் பெருக்கத்திலும், தொழில் வளர்ச்சியிலும் முன்னேற்றம் கண்டு, வேகமாக சோஷலிஸப் பாதையில் போகிறோம் என்பதில் சந்தேகம் இல்லை என்று நான் குறிப்பிட விரும்புகிறேன்.

இப்பொழுது இருக்கின்ற இந்த வேகமான தொழில் வளர்ச்சி சில இக்கட்டான கட்டங்களில் மாட்டிக்கொண்டிருக்கிறது. முதலாவது, ரிஸர்வ் பாங்க் க்ரெடிட் ஸ்க்வீஸ். பணமும் கிடைக்கவில்லை. விலையும் குறையவில்லை. இந்த நாட்டினுடைய பணப் புழக்கத்தைக் கண்ட்ரோல் செய்கின்ற அதிகாரம் ரிசர்வ் பாங்குக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. பணம் கிடைக்காமல் இருப்பதற்கு அவர்கள் என்ன நடவடிக்கை எடுக்க முடியுமோ அந்த நடவடிக்கையை எடுத்து வருகிறார்கள். இதற்கு அவர்கள் கூறுகிற முக்கிய காரணம் என்ன ? விலைவாசியைக் குறைப்பதற்காக என்று காரணம் சொல்லப்படுகிறது. ஜப்பான் முதலிய தேசங்களில் பாங்குகளில் இருக்கக்கூடிய டெபாஸிட் எந்த அளவுக்கு இருக்கிறதோ அந்த அளவுக்கு டெபாஸிட்டைப் பூரணமாகவும், அதற்கு மேல் கடன் வாங்க முடியுமானால் அதையும் வாங்கிக் கடன் வழங்குவது என்ற முறை இருந்து வருகிறது. வளர்ச்சி பெற்ற பிரதேசங்களில் கூட இன்னும் அந்த முறை கையாளப்பட்டு வருகிறது. ஆனால், நம்முடைய நாட்டில் உள்ள பாங்குகள் டெபாஸிட் தொகையில் 30 சத வீதத்தைப் பணமாக வைத்துக்கொண்டிருக்க வேண்டும் என்ற விதியை ரிசர்வ் பாங்க் விதித்திருக்கிறது. முதலில் அது 20 சத வீதம் என்று ஆரம்பித்து, பிறகு, 25 சத வீதமாக உயர்ந்து, இப்பொழுது 28 சத வீத அளவு வந்து இனி 30 சத வீதமாகக் கூட வைத்துக்கொள்ளலாம் என்ற அளவிற்கு நிலைமை வந்திருக்கிறது. இதிலே என்ன கஷ்டம் என்றால், எப்போதுமே பாங்குகள் தங்களிடம் இருக்கும் பண வசதியைப் பூரணமாக உபயோகித்துக்கொள்ள முடியாது. ஸீஸன் காலமும் இருக்கிறது; ஸீஸன் அல்லாத காலங்களும் இருக்கின்றன. ஸீஸன் காலத்தில், இருக்கும் பணத்தைப் பூராவும் கொடுக்க வேண்டும். ஸீஸன் அல்லாத காலத்தில் பணம் பூராவும் பாங்குக்கு வந்து விடும். ஆனால், இன்றைக்கு ரிசர்வ் பாங்க் கண்ட்ரோல் பிரகாரம், ஸீஸன் இருக்கிற காலத்திலும் சரி, ஸீஸன் அல்லாத காலத்திலும் சரி, 30 சத வீதம் டெபாஸிட்டைப் பணமாகப் பாங்குகள் வைத்துக் கொண்டிருக்க வேண்டும். இன்றைக்கு 100 ரூபாய் ஒரு பாங்கில் டெபாஸிட் இருந்தால், அதில் 30 ரூபாயைப் பாங்க் தன் கையில் ரொக்கமாக வைத்துக்கொண்டிருக்க வேண்டும். பாக்கி 70 ரூபாயைத்தான் லேவாதேவி பண்ண வேண்டும். ரிசர்வ் பாங்க் வைத்திருக்கும் இந்த விதியை அமுல் நடத்துவதன் காரணமாக உண்மையிலேயே கிட்டத்தட்ட 40 சத வீதம், 45 சத வீதம்தான் பணப் புழக்கத்தில் இருக்கிறது. இது வளர்ந்து வருகிற திட்டமிட்ட பொருளாதாரத்தில்—தொழில் வளர்ச்சிக்கு எவ்வளவு தூரம் உதவிகரமாக இருக்கும் என்பதை இரண்டு வருஷ அனுபவத்தில் நாம் பார்க்கிறோம்.

இன்று பெரிய தொழிற்சாலை நடத்துகிறவர்கள் புதிய புதிய தொழில்களை நடத்த முன்வருவதில்லை. ஏற்கனவே நடக்கும் தொழில்களுக்கே பண வசதி வேண்டும் என்று சர்க்காரைக்கூட அணுக வேண்டிய நிலையில் இருக்கிறார்கள். ஸ்பின்னிங் மில்களை எடுத்துக்கொண்டால், இரண்டு மூன்று மாதங்களுக்கு முன்பு, அவர்களிடம் நாலைந்து மாத உற்பத்தி அவர்கள் கையில் தேங்கிப் போய்விட்டது. ரிசர்வ் பாங்கிலிருந்து பணம் கிடைக்கவில்லை. சர்க்காரைப் பார்த்து, "நீங்கள் ஏதாவது ஏற்பாடு செய்ய முடியுமா" என்று கேட்கக் கூடிய அளவுக்கு நிலைமை வந்திருக்கிறது. தமிழ்நாட்டில் பெரிய தொழில் என்றால் ஸ்பின்னிங் மில்லைத்தான் சொல்ல வேண்டும். ஸ்பின்னிங் மில் வைத்து நடத்துகிறவர்கள்கூட, பருத்தி வாங்கி, வைத்திருப்பதற்கோ, அல்லது நூல் தேக்கம் ஏற்பட்டால் அந்த நிலையைக் கடந்து செல்வதற்கோ கடன் வசதி இல்லாமல் இருக்கிறார்கள். "மின்சார வெட்டு" வந்ததை அவர்கள் வரப்பிரசாதமாகக் கருதியிருப்பார்கள். மின்சார வெட்டு வந்திருக்கவில்லையென்றால், அவர்கள் தொழிலை நடத்தத் திக்குமுக்காடியிருப்பார்கள். ஆகவே, பெரிய





அளவிற்குத் தொழில் வளர்ச்சி ஏற்பட வேண்டும் என்று சொல்லும்போது, ரிசர்வ் பாங்க் க்ரெடிட் ஸ்க்வீஸ் எவ்வளவு தூரம் பாதிக்கிறது என்பதைப் பரிசீலிக்க வேண்டும். அரசாங்கம் இதிலே ஒரு பரிசீலனை செய்து, அதற்குரிய 'ரெகமண்டேஷனை' மத்திய அரசாங்கத்திற்கு ரிசர்வ் பாங்கு அனுப்பவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இப்பொழுது 'ட்ரௌட் கண்டிஷன்' காரணமாக, மழையின்மை காரணமாக உற்பத்தி பெருமளவிற்குப் பாதிக்கப்பட்டிருக்கிறது. 61 லட்சம் டன் உற்பத்தியில், மழையின்மை காரணமாக 10 லட்சம் டன் வரையில் ஸ்லாஷ் டௌன் ஆகும் என்று முதலில் அமைச்சர் அவர்களே குறிப்பிட்டிருக்கிறார்கள். தமிழ் நாட்டில் சென்ற வருஷம் மழையின்மை காரணமாக அதிகமாகப் பாதிக்கப்பட்ட ஜில்லா எங்கள் ஜில்லாதான். இந்தியா பூராவையும் எடுத்துக்கொண்டு பார்க்கும்போது, பல பகுதிகள் மழையின்மையினால் பாதிக்கப்பட்டிருக்கின்றன. இறக்குமதி செய்ய வேண்டுமானால், அதற்கு அன்னியச் செலாவணி வசதி குறைவாக இருக்கிறது. இந்தக் காரணத்தினாலே எவ்வளவு தூரம் அரசாங்கத்தினுடைய தொழில் வளர்ச்சி தடைப்படும், இந்தச் சிக்கல்களை எப்படி நீக்குவது என்பதைப் பரிசீலனை செய்வது அரசாங்கத்தினுடைய கடமையாக இருக்க வேண்டும். இம்போர்ட் ரெஸ்ட்ரிக்ஷன் இருக்கிறது; அன்னியச் செலாவணி கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது; ஆகவே, கடன் வாங்காமல் முடியாது என்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. திட்டக் கமிஷன் அங்கத்தினராக இருந்து, சமீபத்தில் மத்திய அரசாங்க மந்திரியாகி இருக்கும் திரு. அசோக் மேதா அவர்கள் "கடன் வாங்காமல் முடியாது" என்று சமீபத்தில் கூறியிருக்கிறார்கள்.—பத்து வருடங்களாகக் கடன் தானாக வந்தது. இப்பொழுது நாம் கேட்கிறோம்—கடன் வாங்காமல் முடியாது என்று சொல்லும்போது, நாம் கடன் கேட்டால் கடன் கிடைக்க முடியும் என்ற நிர்ணயம் இல்லை. எங்கே கடன் கிடைக்கிறது என்பதைக் கண்டறிந்து, கிடைக்கக்கூடிய கடன்களை 'பூல்' செய்து, அதைச் சீக்கிரமாகக் கிடைக்கும்படியாக வசதி ஏற்படுத்திக் கொடுத்தால்தான் இப்பொழுது இருக்கும் தொழில் வளர்ச்சி தொடர்ந்து செயல்பட முடியும். இல்லையென்றால் தொழில் வளர்ச்சி தடைப்படும். தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில் ஏற்கனவேயே வெகு வேகமாகத் தொழில் வளர்ச்சி ஏற்பட்டிருப்பதனால், நாம் இதில் அதிக அக்கறை செலுத்த வேண்டிய நிர்ப்பந்தம் இருக்கிறது என்பதை மாத்திரம் நான் இந்தச் சந்தர்ப்பத்தில் குறிப்பிட விரும்புகிறேன்.

சமீபத்தில் எண்ணெய் வித்துக்கள் போன்றவற்றின் பற்றாக்குறையைத் தீர்ப்பதற்கு அண்டை நாடான சிலோனோடு நாம் ட்ரேட் அக்ரிமெண்ட் மூலமாகப் பண்டமாற்று ஒப்பந்தம் செய்து கொண்டோம். அவர்கள் வெங்காயம், வத்தல் போன்ற சரக்குகளுக்கு நம் நாட்டை நம்பித்தான் இருக்கிறார்கள். இன்று சர்வதேச அரங்கில் மற்ற நாட்டினரைவிடக் குறைவான விலைக்குக் கொடுக்கக்கூடிய சக்தி இந்த நாட்டுக்குத்தான் இருக்கிறது. கொழும்புவுக்குச் சாமான்களை ஏற்றிச் செல்வதற்கான ட்ரான்ஸ்போர்ட் காஸ்டும் குறைவாக இருக்கிறது. அவர்களிடம் இருக்கும் கொப்பரையை நாம் ஏராளமாக இறக்குமதி செய்யலாம். கொழும்பு சம்பந்தப்பட்ட வரையில், அட்வர்ஸ் ட்ரேட் பாலன்ஸ் அவர்களுக்குத்தான் ஜாஸ்தி இருக்கிறது. எப்பொழுதும் அவர்கள்தான் அதிக இறக்குமதி செய்கிறார்கள். ஆகவே, அட்வர்ஸ் பாலன்ஸை எண்ணெய் வித்துக்களை நாம் இறக்குமதி செய்வதற்குப் பயன்படுத்திக்கொள்ளலாம். அவர்களிடம் இருக்கும் பாலன்ஸை ஸ்டர்லிங்காக நமக்குக் கொடுக்கும்படி கேட்கலாம். ஆனால், அது முடியாது. ஏனெனில் அந்த அளவிற்கு அந்தத் தேசத்திலே அட்வர்ஸ் ட்ரேட் பாலன்ஸ் இருக்கிறது. ஷார்ட் டர்ம், லாங் டர்ம் எதுவாக இருந்தாலும், நமக்குக் கொடுக்க வேண்டிய பணத்தை பதினைந்து வருஷம் கழித்துக் கொடு என்று சொல்லக்கூடிய நிலைமை வந்திருக்கிறது. பதினைந்து வருஷம் கழித்துக் கொடு என்று சொல்வதைவிட, அந்த நாட்டிலே உற்பத்தி செய்யும் பண்டங்களை நாம் ஏற்றுக்கொண்டோமானால்,—பண்டமாற்று விதிப் பிரகாரம்—நாம் எண்ணெய் வித்துக்களைத் தருவிப்பதற்கு உதவிகரமாக இருக்கும். சமீபத்தில் ஏற்பட்ட ட்ரேட் அக்ரிமெண்டில் ஒரு கோடி ரூபாய்க்கு ஒப்பந்தம் செய்துகொண்டிருக்கிறார்கள்.

[திரு. ஏ. பி. சி. வீரபாகு] [28th February 1966

அது போதாது. 15 கோடி ரூபாய் அளவிற்கு ட்ரேட் அக்ரிமெண்ட் செய்து கொள்ள வேண்டிய அவசியம் இருக்கிறது. தென்னாட்டில் உள்ளவர்கள் தான் இதிலே அதிக அக்கறை செலுத்த வேண்டியிருப்பதால் இந்தச் சட்டசபை முன்னால் கனம் அங்கத்தினர்களுடைய கவனத்திற்கு இதை நான் கொண்டு வருகின்றேன்.

10-30 a.m. நம்முடைய வரவு செலவுத் திட்டத்தில் மிகப் பெரிய பங்கை இப்போது உணவு உற்பத்தித் திட்டத்திற்காக ஒதுக்கி வைத்திருப்பதில் இருந்து இந்தச் சர்க்கார் அதன் அவசியத்தை நன்கு உணர்ந்திருக்கிறது என்பது தெரிகிறது. 9 கோடி ரூபாய் அளவுக்கு உணவு உற்பத்திக்காக ஒதுக்கி வைத்திருக்கிறது, அதை வரவேற்கிறோம்.

உணவு உற்பத்திப் பெருக்குக்குத் தடையாக இருப்பது லாண்டு டென்யூர்-நிலச் சீர்திருத்தச் சட்டம் ஒழுங்கு செய்யப்படாதது தான். நாம் அநேக சட்டங்கள் கொண்டு வந்திருக்கிறோம். ஆனாலும் டெம்பிள் லாண்டு, மட் லாண்டு என்று எடுத்துக் கொண்டால் இடைக் குத்தகைக்காரன் இன்று டெனண்ட்டாக இருக்கிறான். 200 எக்கரா, 300 எக்கரா என்று அவன் எடுத்துக்கொள்வது—உழுகின்றவன் வேறு. இதை எல்லாம் பரிசீலனை செய்து பர்மனெண்ட் லாண்டு டென்யூர் கொண்டு வந்தாக வேண்டும். இதில் காலதாமதம் செய்வது உற்பத்தியைப் பாதிக்கும். ரெவின்யூ அமைச்சர்கூட இது பற்றி ஒரு சட்டம் கொண்டுவரப் போவதாக சமீபத்தில் குறிப்பிட்டார். நல்ல முறையில் அதைச் சீக்கிரம் கொண்டு வந்தால் உணவு உற்பத்திப் பெருக்கத்திற்கு உதவியாக இருக்கும்.

அடுத்து, $2\frac{1}{2}$ லட்சம் பம்பு செட்டுகளுக்கு மின்சாரம் கொடுக்கப்போகிறோம் என்று பட்ஜெட்டில் கூறியிருக்கிறார்கள். அது வரவேற்கத்தக்க அம்சம். அதோடு உணவு உற்பத்தி என்றால் நாம் அரிசி உற்பத்தியில் தான் அதிகம் கவனம் செலுத்துகிறோம். புதுப்புது கிணறு எடுப்பது, ஏ.டி.டி. 27 போன்ற கலப்பு விதைகளைக் கண்டுபிடிப்பது இவை எல்லாம் அவசியம் தான். இது போல புஞ்சை தானியத்தைப் பற்றி அக்கறை எடுத்துக்கொள்வதாகத் தெரியவில்லை. புஞ்சைப் பயிர் வைக்கக் கூடிய நிலப்பரப்பு அதிகமாக இருக்கிறது. புஞ்சை தானியங்களுக்கும் இந்த நாட்டில் கிராக்கி இருக்கிறது. அவை ஒன்றும் கேட்பாரற்றுக் கிடக்கவில்லை. இன்றைக்கு அத்துறையில் கொஞ்சம் கவனம் செலுத்தினால் புஞ்சை தானிய விளைவை இரட்டிப்பாக்க முடியும். ஆகவே நெல்லுக்கு மட்டும் அல்ல, புஞ்சை தானியத்திற்கும் போதுமான கவனம் எடுத்துக் கொண்டு உற்பத்தியைப் பெருக்க கவனம் செலுத்தவேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, பாரஸ்ட் லாண்டு என்று ஒதுக்கி வைத்திருப்பதைப் பற்றிக் கூட மரக்காணம் அருகில் உள்ளது பற்றி இங்கே ஒரு கேள்வி கேட்கப் பட்டது. காட்டு வளர்ச்சிக்குப் பயன் அளிக்கக்கூடிய நிலத்தை அவ்வாறு ஒதுக்கி வைப்பதைப் பற்றி கவலையில்லை. சாலிக்குளம் என்று ஒட்டதாரம் பக்கத்தில் இருக்கிறது. அங்கே கிட்டத்தட்ட நானூறு எக்கராவுக்கு மேல் நல்ல வெட் லாண்டு உரிய நிலம் இருக்கிறது. பாஞ்சாலங்குறிச்சி கட்டபொம்மன் வம்சாவழியினர் பயிரிட்டு வந்தார்கள். அந்த 200 குடும்பங்களுக்கும் தலைக்கு 5 எக்கரா என்று கொடுத்தால் உணவு உற்பத்திப் பெருக்கத்திற்கு உதவியாக இருக்கும் என்பதாக சில ஆண்டுகளுக்கு முன்பு நாங்கள் ரெப்ரசென்டேஷன் கொடுத்தோம். அப்படிக் கொடுத்த காரணமோ என்னமோ அவற்றை பாரஸ்ட் லாண்டு என்று ரிசர்வ் செய்து விட்டார்கள். ஆனால் அங்கே இது வரை காடு ஒன்றும் வளரவில்லை. இதைப்பற்றி சட்டசபை அங்கத்தினர்கள்கூடக் கவனம் செலுத்தவேண்டும். காடு குறைவாக நமக்கு இருக்கிறது என்பது உண்மைதான். அதற்காக காட்டை வளர்க்க முடியாத இடங்களில் எல்லாம் நிலத்தை ரிசர்வ் செய்து வைத்துவிடுவது சரியல்ல. எந்த எந்தத் தொகுதியில், எந்த எந்தப் பகுதியில் இப்படி ரிசர்வ் பாரஸ்ட் ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கிறதோ அங்கெல்லாம் சர்வே எடுத்து அந்த வெட் லாண்டுகளில் புஞ்சைப் பயிர்களையாவது அதிகமாக வளர்ப்பதற்கு வேண்டிய நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். வீர பாண்டிய கட்டபொம்மன் என்று பேசும்போது நாம் உணர்ச்சி பெறுகிறோம். அந்தப் பரம்பரையில் வந்தவர்கள் பலர் நாடு மாறி விட்டார்கள். இருக்கக்கூடிய 200 குடும்பங்களுக்கு பாஞ்சாலங்குறிச்சியில் வாழ்வளிக்க வேண்டியது நம் கடமை. காட்டு இலாகாவுக்குப் பிரயோசனம் இல்லாமல் இருக்கும் சாலிக்குளம் பகுதியில் உள்ள பூமியை தலைக்கு 5 எக்கராக அங்கே கொடுப்பதன் மூலம் நம்மால் அவர்களுக்கு வாழ்வளிக்க முடியும். ஆகவே இதுபற்றியும் கவனம் செலுத்த வேண்டும்.



28th February 1966] [திரு. ஏ. பி. சி. வீரபாகு]

அடுத்து, ஏராளமான கடன் வசதிகளை நாம் இப்போது ஏற்படுத்திக் கொடுத்திருப்பதாகச் சொல்லிக்கொள்கிறோம். இந்த வருஷத்தில் கடனே கொடுக்கவில்லை. விவசாயிகளுக்குப் பயன்படுகிற அளவுக்கு நீண்ட கால, குறுகிய காலக் கடன் அளிக்க வசதி செய்யவில்லை. "50 கோடி கொடுத்தாகிவிட்டது. நீங்கள் திருப்பிக் கொடுக்கவில்லை. அதனால் உங்களுக்குக் கடன் இல்லை" என்ற நிலைமையை ஏற்படுத்துவது சரியல்ல. நாமும் கடன் கொடுக்காமல், அவர்களுக்குக் கடன் கொடுக்க என்று ஏற்படுத்தப்பட்ட ஸ்தாபனத்தினிடத்திலும் பணம் இல்லாத நிலைமையை உண்டாக்கி விடுவது, விவசாய உற்பத்திக்கு அனுகூலமாயிராது.

இன்னொன்று. நிலவரியைக்கூட நாம் அதிகமாக வசூல் செய்கிறோம். அதுவும் ரெட்ராஸ்பெக்டிவ் எபெக்ட் கொடுத்து சட்டங்களைப் போட்டிருக்கிறோம். நிலவரியில் இருந்து கிடைக்கக்கூடிய பணத்தைப் பஞ்சாயத்துகளுக்குக் கொடுக்கிறோம் என்று சொல்லி அந்தப் பணம் பஞ்சாயத்துக்கள் எத்தனை வசூல் செய்கிறதோ அந்த அளவுக்கு இது தரப்படும் என்றார்கள். அதன் காரணமாக இன்று பஞ்சாயத்துக்கள் தங்கள் இஷ்டம் போல் வரியைப் போட்டிருக்கிறார்கள். வெட் லாண்டுக்கு எக்கருக்கு 60 ரூபாய் என்ற அளவுக்கு வரி வருகிறது. ஒரு எக்கர், $\frac{1}{2}$ எக்கர் வைத்திருப்பவர்களுக்கு என்ன வருமானம் வரும் என்று யோசித்துப் பார்க்கவேண்டும். ஒரு போக நஞ்சையாக இருக்கலாம். மழையையே எதிர்நோக்கியுள்ள பூமியாக இருக்கலாம். அவர்களுக்கு எல்லாம் இது ஒரு பெரிய சுமையாக இருக்கிறது. சேல்ஸ் டாக்ஸை எடுத்துக்கொண்டால் சென்ற ஆண்டு 35 கோடி என்றால் இவ்வாண்டு 45 கோடி வந்திருக்கிறது. மோட்டார் டாக்ஸை எடுத்துக்கொண்டால் 7 கோடியாக இருந்தது இன்று 14 கோடியாக வந்திருக்கிறது. சென்ட்ரல் எக்ஸைஸ் டாக்ஸ் மூலம் 27 கோடி ரூபாய் அளவுக்கு வருகிறது. இப்படிப் பட்ட நேரத்தில் ஒரு எக்கரா, $\frac{1}{2}$ எக்கரா வைத்திருக்கிறவர்களுக்காவது வரி விலக்குக் கொடுக்கக் கூடாதா என்பதை நாம் பரிசீலிக்கவேண்டும். (எதிர்க்கட்சியினர் சிலர், "நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம்" என்றார்கள்) நீங்களும் ஏற்றுக்கொள்வதாக இருந்தால் சந்தோஷம். அதற்காக நான் அதை வற்புறுத்திச் சொல்லக்கூடாது என்று இல்லை. ஒரு எக்கரா, இரண்டு எக்கரா உள்ளவர்களுக்கு கண்டிப்பாக வரி விலக்கு கொடுக்க வேண்டும். அப்படிச் செய்வது நில உடைமையை ஆதரிப்பதாக இருக்கும் என்று நினைக்கக்கூடாது. பூராவும் சர்க்கார் உடைமையாகவே இருக்க வேண்டும் என்பது அல்ல. இன்றைக்கு எக்கருக்கு 50 ரூபாய் என்பது குருவி தலையில் பனங்காயை வைத்தாற்போல விவசாய மக்களைத் துன்பத்திற்கு உள்ளாக்கியிருக்கிறது. விளையாமல் போகிற காலமும் உண்டு. அதுவும் ரெட்ராஸ்பெக்ட்வ் எபெக்ட் கொடுத்து கடந்த 5 வருஷத்திற்கும் கட்டு என்று 300, 400 என்றால் அவர்கள் மிகவும் துன்பத்திற்கு ஆளாகியிருக்கிறார்கள். ஆகவே உண்மையில் இதைப் பரிசீலனை செய்து எந்த அளவுக்கு சிறிய நிலச்சுவான்தார்களுக்கு உதவி அளிக்கலாம் என்று பார்க்கவேண்டும்.

அடுத்து, உணவு உற்பத்திப் பெருக்கத்துக்காக மீன் வளத்தை அதிகப்படுத்த பாப்லோ போட்டுக்கு 90 லட்சம்—ஒரு கோடி அளவில்—ஒதுக்கப் பட்டிருக்கிறது. அதுகூட 30 மைல் தூரம்தான் போகும். கட்டுமரம் கூட 30 மைல் போகிறது. இதில் இவ்வளவு அக்கறை காட்டுகிறபோது டீப் சீ.·.பிஷ்ஷிங் பற்றியும் கவனம் செலுத்தவேண்டும். தூத்துக்குடி துறைமுகத்தைப் பொறுத்தவரையில் முதல் கட்டமாக டீப் சீ.·.பிஷ்ஷிங் ஏற்பாடு செய்தால் உதவிகரமாக இருக்கும். வரியற்ற சமுதாயத்தை ஏற்படுத்தவேண்டுமென்பதற்காக இந்த அரசாங்கம் எடுத்துக்கொண்டிருக்கின்ற முயற்சிகளில், இன்றைக்கு ஒவ்வொன்றாக கார்ப்பொரேஷனாக ஆக்கிக்

கொண்டு வருகிறார்கள். ஸ்மால் ஸ்கேல் இண்டஸ்ட்ரீஸ் கார்பொரேஷன், பெரிய வருவாயைத் தரும் என்று இந்த பட்ஜெட்டில் எதிர்பார்த்தேன். ஒன்றையும் காணோம். தனியாக கார்ப்பரேஷனை ஏற்படுத்தினால் அதன் வருவாய் குறிக்க முடியாதுதான். எலக்டிரிசிடி போர்டை எடுத்துக்கொண்டால் 8 கோடி ரூபாய், 9 கோடி ரூபாய் என்று வருவாய் எதிர்பார்க்கிறோம். அதேபோல் இந்த ஸ்மால் ஸ்கேல் இண்டஸ்டிரீஸ் கார்ப்பரேஷனிலும் வருவாய் எதிர்பார்க்கமுடியும் என்று நினைக்கிறேன். இண்டஸ்ட்ரியல் டெவலப்மெண்ட் பாங்க் என்று மத்திய சர்க்கார் ஏற்படுத்தியிருக்கிறார்கள். மாநில சர்க்காரும் அதை அனுசரித்து அதே மாதிரி ஏற்படுத்திக்கொண்டு வருகிறார்கள். இப்பொழுது பாங்குகளிலே டெபாசிட்டுகள் குறைந்து வருகிறது. பாங்குகளின் பாலன்ஸ் ஷீட்டை எடுத்துக்கொண்டு பார்த்தால், வருமானம் முன்பு எந்த அளவு இருந்ததோ அதே அளவுதான் சென்ற ஆண்டு இருந்திருக்கிறது. சென்ற ஆண்டு இருந்த அளவுதான் இந்த ஆண்டும் இருக்கிறது. ஆனால் இரண்டு வருஷங்களுக்கு முன்பு எடுத்துக்கொண்டு பார்த்தால் வருமானம் கூடிக்கொண்டே போயிருக்கிறது. டெபாசிட்டுகளும் கூடிக்கொண்டே போயிருக்கிறது. ஆனால் இப்பொழுது டெபாசிட்டுகளும் கூடாமல், வருமானமும் கூடாமல் இருக்கிறது. இந்த நிலையிலே புதிய புதிய பாங்குகள் ஏற்படுத்திக்கொண்டே போனால் அது எவ்வளவு தூரம் சக்ஸஸ்ஃபுல் ஆக இருக்குமென்பது தெரியவில்லை. இப்பொழுது அரசாங்கம் எல்லாக் கடன்களுக்கும் கியாரண்டி கொடுக்கிறார்கள். அவர்களுக்கு வேண்டிய கடன், எலக்டிரிசிடி போர்டு கடன், கோவாப்பரேடிவ் பாங்குகளுக்கு உண்டான கியாரண்டி இவை எல்லாவற்றிற்கும் தமிழ் நாடு அரசாங்கம் கியாரண்டி கொடுத்திருக்கிறது. இரண்டு மூன்று வருஷங்களாக அரசாங்கம் உதவி செய்து வருகிறது. இதன் காரணமாக ஏராளமான டெபாசிட்டு வந்திருக்கிறது. ஆனால் இன்றைக்கு ஃபர்தர் டெபாசிட்ஸ் வராமல் இருக்கிறது. காரணம் என்னவென்றால், இண்டஸ்ட்ரியலிஸ்ட்களிடம்—பணம் இல்லையா என்று கேட்டால் அவர்கள் சர்ப்பளஸ் இல்லையென்று சொல்லுகிறார்கள். விவசாயிகளிடத்தில் கேட்டால் சேமிப்பு இல்லையென்று சொல்லுகிறார்கள். முன்பெல்லாம் கிராமங்களில் பாங்குகளைத் துவக்கினால் பணம் வந்து கொண்டிருந்தது. இன்றைக்குஅந்தச் சூழ்நிலை இல்லை. கிராமங்களில் பணம் இல்லை. ரூரல் சேவிங்ஸ் டெபாசிட்ஸ் எல்லாம் குறைந்துக் கொண்டுதான் வருகிறது. இந்த நிலைமையைப் பரிசீலித்து, டெபாசிட்ஸ்-க்கு ரேட்டை அதிகமாக்கி ஊக்குவித்தால்தான் வருமானம் வரும். இப்பொழுது ஜாயிண்ட் ஸ்டாக் பாங்குகளில் எல்லாம் 7 அல்லது $7\frac{1}{2}$ சத வீதம் கொடுக்கிறார்கள். அதை 9 சத வீதமாகக் கூட்டினால் பணம் வரலாம் என்று நினைக்கின்றேன். இல்லையென்றால் பாங்குகளில் டெபாசிட் பண்ணுவதற்குப் பதிலாக கிராம மக்கள் அந்தத் தொகையை ஏதாவது ஒரு சாமானில் போட்டு விடுகிறார்கள். அதன் மூலம் கிடைக்கின்ற வருமானம் போதும் என்று நினைக்கிறார்கள். ஆகவே தற்போதுள்ள, இண்டரஸ்ட் ரேட் ஊக்குவிப்பதாக இல்லை. அதனால் பணத்தைப் போடுவதற்குப் பதிலாக பருத்திக்கொட்டை போன்றவைகளை வாங்கி வைத்தால் மிச்சம் கிடைக்கிறது என்று நினைக்கிறார்கள். ஆகவே, வட்டி விகிதாச்சாரத்தைத் திருத்தியமைக்கவேண்டும். இந்த டெவலப்மெண்ட் பாங்க் கார்ப்பரேஷன் அமைக்கின்ற இந்த நேரத்தில் வட்டி விகிதாச்சாரத்தைக் கூட்டி அமைத்துக்கொடுத்தாலதான் ஃபர்தர் டெபாசிட்ஸ் நமக்குக் கிடைக்கும் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

உணவு உற்பத்திக்காக இப்பொழுது ஒரு பெரிய வேலையில் இறங்கி ஒரு வருஷமாக அதை நல்ல முறையிலே இயக்கி வருவதற்காக இந்த அரசாங்கம் பாராட்டுதற்குரியது. உணவுக் கண்ட்ரோல், உணவு விநியோகம் இந்த இரண்டை எடுத்துக்கொண்டாலே பிளாக் மார்க்கெட் இருக்கத்தான் செய்யும். இப்பொழுது உணவு விநியோகம் எந்த அளவுக்கு இருக்கிறது என்று சொன்னால் மக்களுக்கு 8 லட்சம் டன் உணவு விநியோகிக்கக்கூடிய அளவுக்கு இருக்கிறது. ஒரு லட்சம் டன் இல்லை, 50 ஆயிரம் டன் இல்லை, 8 லட்சம் டன் அளவில் விநியோகத்தை கண்ட்ரோல் விலைக்குக் கொடுக்கக்கூடிய நிலை இருந்து வருகிறது. கூடிய விரைவில் இந்த 8 லட்சத்தைப் பத்து லட்சமாக்கலாம். இன்றைக்கு





இருக்கிற நிலைமை அட்வர்ஸ் ஆக இருக்கலாம். ரொக்க வசதி பாதிக்கக்கூடிய நிலையிலே இருக்கலாம். வேஸ் அண்ட் மீன்ஸ் இப்பொழுது, 40 லட்சம் தான் இருக்கிறது. இந்த உணவு விநியோகத்திலே இன்றைக்கு 25 கோடி ரூபாய் வரை முடக்க வேண்டியிருக்கிறது. விநியோகத்திலேயே நம்முடைய பணம் பூராவும், நம்முடைய காலம் பூராவும் செலவழிக்க வேண்டிய நிலையிலே நாம் இருக்கிறோம். நம்முடைய அரசாங்கம் $1\frac{1}{2}$ வருஷத்திற்குள் 25 கோடி ரூபாய் அளவில் விநியோகப் பொறுப்பை ஏற்றிருப்பது ஒரு பெரிய பொறுப்பு. இவ்வளவு பெரிய அளவில் 8 லட்சம் டன் உணவு விநியோகம் செய்தாலும்கூட உற்பத்தியாளர்களுக்கு குறைபாடு இல்லாமல் இருக்கிறது. அவர்களுக்குக் கிடைக்கவேண்டிய விலை கிடைக்கிறது. ஆனால் இன்று இந்த விவாதத்தை ஆரம்பித்துவைத்துப் பேசியவர் ஏதோ வழிப்பறி போவதுபோல் கொண்டு போகிறார்கள் என்று சொன்னார்கள். அதுமாதிரி 2, 3 இன்சிடண்ட்ஸ் இருக்கலாம்; அட்மினிஸ்ட்ரேஷனில் வரம்பு மீறுதல் இருக்கத்தான் செய்யும். அதற்காக அவ்வளவும் தப்பு என்று சொல்லிவிட முடியாது. இதை ஏன் நடத்துகிறீர்கள் என்று கேட்பதும் நியாயமல்ல. அரசாங்கம் வாங்கவேண்டுமென்று சொல்லுகிறது, அதற்காக அதிகாரிகள் வழிப்பறிபோல் அடித்துக்கொண்டு போகிறார்கள் என்று சொல்லிவிட முடியாது. நம்முடைய அமைச்சர் அவர்கள் தம்முடைய சுற்றுப்பயண திட்டத்திலே இதையும் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அங்கங்கே செல்லும்பொழுது, கிராமங்களிலே அவர்களுக்கு லெவி எந்த அளவுக்குக் போடப்பட்டது, வாங்கியது எவ்வளவு என்பதையெல்லாம் விசாரித்து நடவடிக்கை எடுக்க வேண்டும். (குறுக்கீடு) இதற்கு அமைச்சர் தலைமறைவாகப் போகவேண்டுமென்பதில்லை. (குறுக்கீடு) இப்பொழுது மாறுவேடம் என்று சொல்லுகிறார்கள். இப்படியெல்லாம் தமிழில் மாற்றிச் சொல்கிறார்கள். (குறுக்கீடு) நாங்கள் 150 பேர்கள் இருக்கிறோம். தேர்தல் வந்தால்கூட நாங்கள்தான் வரப்போகிறோம். மந்திரி சபை அமைக்கப்போகிறோம். எக்ஸஸ் இல்லை என்று சொல்லமுடியாது. ஒன்றிரண்டு இருக்கத்தான் செய்யும். வசதியிருக்கிறவர்களிடத்தில் சென்று மிரட்டமாட்டார்கள். வசதியில்லாதவர்களிடத்தில் சென்று மிரட்டுவது சாதாரணமானதுதான். ஆகவே இந்த அப்யூஸஸ்கூட, ஒன்றிரண்டு அப்யூஸ்கள் கூட இல்லாத அளவுக்கு நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த வகையிலே அப்யூஸஸே இல்லாத அளவுக்கு உதவி செய்யவேண்டுமென்று நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். அப்படிச் செய்தால் இப்பொழுது சொல்லப்படுகின்ற புகார்கள்கூட மறைந்துவிடும். இதிலே சொல்லப்படுகின்ற குற்றம், உற்பத்தியாளர்களிடமிருந்து தேவைக்கு அதிகமாக இருப்பதை மட்டும் வாங்குவதை விட்டுவிட்டு அவர்கள் உபயோகத்திற்கு வைத்திருப்பதைக் கேட்கிறார்கள் என்று சொல்வதுதான். இந்த முறை எதிர்காலத்தில் சிறப்பாகவும், திறமையாகவும் நடைபெறவேண்டுமென்பதால், இந்தக் கொள்கையை நல்ல முறையில் அமல் நடத்த, இப்பொழுதே, இதில் கண்காணிப்பு அவசியமானது, அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென்று நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். இந்தச் சந்தர்ப்பத்தில் நான் திருநெல்வேலி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் ஒரு வேண்டுகோள் விடுக்க விரும்புகிறேன். அங்கே $1\frac{1}{2}$ வருஷ காலமாக நெல் வீட்டிற்கு வருவதில்லை. தீர்வையைக் கொடுத்துவிடவேண்டுமென்று சொல்கிறார்கள். அங்கெல்லாம் இன்னும் செண்டா நடவேயில்லை. (குறுக்கீடு) நட்டாகிவிட்டது என்று சொல்கிறார்கள். ஒருவேளை அவர்கள் பகுதியில் நட்டுவிட்டார்களோ என்னமோ? அதனால் மே மாதத்திற்குள் இந்தத் தீர்வையை வாங்க ஏற்பாடு செய்யவேண்டும். அதற்கு முன்னால் எவ்வளவு தூரம் வசதியுள்ளவர்களிடமிருந்து வாங்க முடியுமோ அதை வாங்கட்டும். வசதியில்லாத, இரண்டு, மூன்று ஏக்கர் நிலம் வைத்திருக்கக்கூடிய சிறிய விவசாயிகளுக்கு நிலவரி வஜாகூடச் செய்து விடலாம். அவ்வாறு வரி வஜா செய்யும் கொள்கையை ஏற்றுக் கொள்ளும் வரையில் வரி வசூல் கெடுபிடி இல்லாமல் இருக்கவேண்டும். சில இடத்தில் ஜப்திக்குகூட ஆர்டர் போட்டிருக்கிறார்கள். அவ்வாறு ஜப்தி செய்வதற்கு அவன் வீட்டில் என்ன இருக்கும்? ஆள்தான் இருப்பான். ஆனாலும் அவன்

[திரு. ஏ. பி. சி. வீரபாகு] [28th February 1966

மானத்திற்கு அஞ்சுகிறன். அவன் வீட்டிற்கு ஒன்றுமில்லாவிட்டாலும் தன் வீட்டுக்கு ஜப்தி என்று சொன்னால் அதை அவமானமாகக் கருது கிறன். அந்த மாதிரி நிலைமைகள் ஏற்படாமல் இருக்க அதற்குரிய உத்தரவுகளை ஜில்லா ரெவின்யூ அதிகாரிகளுக்கு அனுப்ப வேண்டும்.

தாம்பிரபரணி சிஸ்டத்தில் குறைவாகத் தண்ணீரை உபயோகப் படுத்தி நிறைய ஏக்கரேஜை எப்படி விவசாயத்திற்குக் கொண்டு வருவது என்பதற்காக ஸ்லுயிஸ் போட்டு, சானல்ஸ் மாற்றப்படும் என்று சொன்னார் கள். அதற்கு பட்ஜெட்டில் ஏதாவது புரொவிஷன்ஸ் இருக்கிறதா என்று பார்த்தேன். என் கண்ணில் ஒன்றும் தட்டுப்படவில்லை. தாம்பிரபரணி சிஸ்டத்தில் ஒரு லட்சம் ஏக்கரேஜ் இருக்கிறது. அதோடுகூட 20 ஆயிரம் ஏக்கர் வரை "அன்லாபுல் கல்டிவேஷன்" இருக்கிறது. ஆகவே, தண்ணீர் இருக்கும் காலங்களில் 1,20,000 ஏக்கர் விளைந்திருக்கிறது. அப்படி இருக்கும்போது அங்கு எதற்காக எக்ஸஸ் வாட்டர் ரேட் போட வேண்டும்? இது எப்படி உணவு உற்பத்தியைப் பெருக்குவதாக ஆகும்? இதைப் பற்றி இதுவரை இரண்டு முறை கான்பரன்ஸ் போட் டார்கள். உள்துறை அமைச்சர் அவர்கள் மராமத்துத்துறை அமைச்சராக இருந்தபோது ஒரு கான்பரன்ஸ் நடந்தது. ஆனால் இதுவரை வாட்டர் ரேட் பிரச்சினை தீர்ந்தபாடில்லை. இதிலே சீக்கிரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். தாம்பிரபரணி சிஸ்டத்தை ரீ-மாடலிங் செய்வதற்கான வழி வகைகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையை ஆதரித்து என்னுடைய பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

**திரு. கரு. சீமைச்சாமி :** மதிப்புக்குரிய சபாநாயகர் அவர்களே, இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையை வரவேற்பதற்கில்லை. இது வரி இல்லாத பட்ஜட் என்று சொல்லப்படுகிறது. 1965-ம் ஆண்டு நவம்பரில் போடப்பட்ட வரிகள் எல்லாம் வரிகள் இல்லையா? குறிப்பாக, விவசாய மக்கள்மீது போடக்கூடிய வரிகளை எல்லாம் போட்டு விட்டு 1966-ம் ஆண்டு பட்ஜெட்டில் வரியே போடவில்லை என்று பிரமாதமாகத் தாங்கள் தயாரித்த பட்ஜெட்டைப் பற்றிச் சொல்வது உண்மையிலேயே வருந்தத் தக்க விஷயமாகும் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இந்த ஆண்டு நீங்கள் தேர்தலில் மக்களைச் சந்திக்கிற ஆண்டு. அவ்வாறு மக்களைச் சந்திக்கிறபோது வரியைப் போட்டு விட்டுச் சந்திக்கப் போகிறீர்களோ என்று நினைத்தேன். இப்போது வரி போடாதது போல் இனிமேல் வரியே போடமாட்டார்கள் என்று திரு. வீரபாகு அவர்கள் மனதார நம்புகிறரா? அந்தத் தைரியம் இருக்கிறதா? மத்திய சர்க்கார் என்ன வரி போடப்போகிறது என்பது இன்றைக்குத் தெரியும். அதிலே இங்குள்ளவர்களுக்குப் பங்கு வரப்போகிறது.

மாதம்...கிஸ்தானுக்கும் இந்தியாவுக்கும் ஏற்பட்ட தகராறு முடிந்து ஒரு
1965 நவம்ப... படைகள் வாபஸ் பெறப்பட்டு வருகின்றன. விவசாயிகளுக்கு
செய்வது, தே...ரில் வரிகள் போடப்பட்டபோது "இது யுத்த கால வரி, என்ன
வாங்கினாலும் ...வை இருக்கிறது" என்று சொன்னார்கள். படைகளை வாபஸ்
விரும்புகிறேன் ... என் விவசாய வரியை வாபஸ் வாங்கவில்லை என்று கேட்க

மதிப்புக்குரி...
காங்கிரஸ்காரர் ...ய வீரபாகு அவர்கள் பேசும்போது ஆரம்பத்தில் சுத்தமான
சுதந்திராக் கட்... ஊமாதிரிப் பேசினர். வர வர எதிர்க்கட்சியினரின் குரலிலே,
மென்று நினை...மசி மாதிரியே பேசினர்கள். நான் என்ன பேச வேண்டு
கள். விவசாய... த்தேனே அதையெல்லாம் கிட்டத்தட்டச் சொல்லி விட்டார்
சொன்னர்கள். ...ந்... பிரச்சினையைப் பற்றி ...யல்லாம் நன்றாக எடுத்துச்
மென்று சொன்... விவசாயிகளுக்கு வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டு
வசதிகளைச் செய்...ன்னர்கள். இந்தப் பதினெட்டு ஆண்டு காலமாக என்ன
போகிறது, உண...நிது கொடுத்திருக்கிறர்கள்? இந்த ஆண்டு பஞ்சம் வரப்
சொல்ல முடியா...ஆ...வுப் பஞ்சம் வரப் போகிறது, என்ன நடக்கும் என்று
...ளுக்கு மேலும் ...வித்து என்று சொல்லிக் கொண்டிருக்கிறர்கள். விவசாயி
...ந்மேலும் பல தொந்தரவுகள் கொடுக்கப்பட்டு வருகின்றன



28th February 1966] [திரு. கரு. சீமைச்சாமி]

விவசாய உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்பதற்காக இந்த அரசாங் கத்திடம் ஏதாவது திட்டம் இருக்கிறதா? இந்த உணவுப் பிரச்னைக்குக் காரணமே இந்த அரசாங்கம்தான். அரசாங்கத்தின் சட்ட திட்டங்களாலும் கொள்கையாலுந்தான் இவ்வளவு பெரிய பஞ்சம் வந்திருக்கிறது என்று சொல்ல முடியும். திரு வீரபாகு அவர்கள் பேசும்போது இந்த ஆண்டு மழை பெய்யவில்லை என்று சொன்னர்கள். நம்முடைய விவசாயிகள் இயற்கையை நம்பித்தான் இருக்க வேண்டுமா? அரசாங்கத்தை நம்பி இருக்க வேண்டாமா? கிணறுகள் வெட்டுவதற்காக ரூபாய் கொடுக்கிறேம் என்று நவம்பரில் சொல்லப்பட்டது. இராமநாதபுரத்தில் 8,000 கிணறு களும், மதுரையில் 8,000 கிணறுகளும் வெட்டுவதற்குப் பணம் கொடுக்கப் படும் என்று சொன்னர்கள். ஆனல் அதற்கு அலாட்மெண்ட் இன்னும் வரவில்லை என்று ரெவின்யூ அமைச்சர் அவர்கள் சொல்லுகிறர்கள். அப்போது உறுதிமொழி கொடுத்தார்களே, அதைச் செய்ய இந்த அரசாங்கம் தவறி இருக்கிறது. ஆகவே, இந்த மந்திரி சபை ராஜினமாச் செய்ய வேண்டும். இராமநாதபுரம் டெவலப்மெண்ட் கூட்டத்தில் கிணறு வெட்டு வதற்குக் கொடுப்பதற்கான பணம் வரவில்லை என்று சொல்கிறர்கள். வரட்சியான காலத்தில் சாங்ஷன் செய்தால் கிணறு தோண்டலாம். விவசாய உற்பத்தி பெருகவும் வழி ஏற்படும். அதன் பலன் மக்களுக்கும் கிடைக்கும். ஆனல் இப்போது பணம் இல்லை. மூன்று பெரிய ஐந்தாண்டுத் திட்டங்களைப் போட்டாயிற்று. அவற்றிலே விவசாயத்திற்காக முதலிடம் கொடுக்கப்பட்டது. அகில இந்திய ரீதியில் முதல் ஐந்தாண்டுத் திட்டத் தில் 620 கோடி ரூபாய், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 630 கோடி ரூபாய், மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 1,218 கோடி ரூபாய் விவ சாயத்திற்காகச் செலவழிக்கப்பட்டது. முதலாவதிலே 65 லட்சம் ஏக்கர் பாசன வசதி பெறுவதற்காக 300 கோடி ரூபாய் செலவழிக்கப்பட்டது. இரண்டாவதிலே, 420 கோடி ரூபாய் 52 லட்சம் ஏக்கர் பாசன வசதி பெறு வதற்காகச் செலவழிக்கப்பட்டது. மூன்ருவதில் 62 லட்சம் ஏக்கர் பாசன வசதி பெற 640 கோடி ரூபாய் செலவழிக்கப்பட்டது. எங்கே அதன் பலன்? பெரிய பெரிய அணைக்கட்டுகளைக் கட்டினேம் என்று சொல் கிறர்கள். வைகை அணைக்கட்டில் தண்ணீர் இல்லையென்று நிபுணர்கள் சொல்லுகிறர்கள். அது இன்னும் பத்து வருஷத்தில் மணல் மேவி அணைக்கட்டே இல்லாத நிலை ஏற்பட்டுவிடும் என்று சொல்கிறர்கள். இந்த நிலைமை ரெவின்யூ அமைச்சர் அவர்களுக்கே நன்றாகத் தெரியும். அடிக்கடி அதிகாரிகள் அணைக்கட்டைப் பார்க்கிறர்கள். தூர்ந்து விட்டால் தண்ணீர் குறைந்து விடுகிறது. அது அவர்கள் காலத்தில் கட்டப்பட்ட அணைக் கட்டுத்தானே! அதைப் பார்த்து, பரிசீலித்துச் செய்திருக்கக் கூடாதா?

உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்று சொல்லுகிறபோது இந்தப் பதினெட்டு வருஷ ஆட்சியில் அபிவிருத்தி எங்கே ஏற்பட்டிருக்கிறது? சோற்றுக்காக ரோட்டில் திரிகிறர்கள். இதுதான் அபிவிருத்தி. இதுதான் ஜனநாயக சோஷலிஸம், சமத்துவம். விவசாயிகள் மண்ணெண்ணெய்க் கார்ட்டை வைத்துக்கொண்டு அலைகிறர்கள். மின்சாரம் விவசாயிகளுக்குத் தேவையான போது கொடுக்கப்படுவதில்லை. மழை இல்லாத காலத்தில் விவசாயிகளுக்கு மின்சாரம் தேவை. அப்போது மழை பெய்யாததால் மின்சாரம் "கட்" ஆகிவிட்டது என்று சொல்கிறர்கள். (கனம் திரு. ஆர். வெங்கடராமன் :—விவசாயிகளைப் பொறுத்தவரை மின்சார வெட்டு கிடை யாது). அமைச்சர்கள் சட்ட மன்றத்திலே சொல்லுகின்ற பதிலுக்கும் வெளியே உள்ள அனுபவத்திற்கும் சம்பந்தமே இல்லை. கொள்முதல் செய்வதைப் பொறுத்து விவசாயிகள் எப்போது மனமுவந்து மீதியுள்ள நெல்லைக் கொடுக்கிறர்களோ அப்போதுதான் வாங்கிக்கொள்கிறேம் என்று சொன்னர்களே தவிர அந்த நிலைமை இல்லை. இதைப் பற்றி மதிப்புக் குரிய திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த திரு. மாதவன் அவர்கள் கூறியதில் தவறு இல்லை.

விவசாயிகள் என்ன எடுப்பார்க் கைப்பிள்ளைகளா? போலீஸை வைத்து 11–00
அவர்களை மிரட்டுகிறர்கள். அதனல் பத்து மூட்டை வருமா? கட்டாயக் a.m.
கொள்முதல் திட்டத்தை இந்த அரசாங்கம் வாபஸ் வாங்க வேண்டும். நான்கு மூட்டைகள்கூட வரவில்லை. தேவைதான், மறுக்கவில்லை. விவ சாயிகள் தங்கள் பொருள்களை நீண்ட நாட்கள் சேமித்து வைக்க முடி

யாது. விவசாயிகளுக்கு மட்டும் ஏன் இந்தக் கட்டுப்பாடு என்று நான் கேட்கிறேன். விவசாய உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்றால் இந்த அரசாங்கம் அவர்களுக்கு வேண்டிய எல்லா வசதிகளையும் செய்து கொடுக்க வேண்டும். விவசாயிகளுக்குக் கடன் தருகிறோம் என்று நீங்கள் சொல்லலாம். அவர்கள் இன்று அஸ்திவாரம் இல்லாமல் ஆடிக் கொண்டிருக்கிறார்கள். ஒரு கட்டடத்திற்கு நல்ல அஸ்திவாரம் இல்லாவிட்டால் அந்தக் கட்டடத்தில் விரிசல் ஏற்பட்டு விடும். அதேபோன்று விவசாயிகள் இன்று நொந்து கிடக்கிறார்கள். புயலால், பூச்சித் தொந்தரவினால், வெள்ளத்தால், மழையின்மையினால் விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். விவசாயிகளுக்குக் கடன் உதவி எல்லாம் தருகிறோம் என்று சொல்கிறார்கள் அமைச்சர்கள். அது போதுமா? இதே சட்ட மன்றத்தில் நான் பல முறை கூறியிருக்கிறேன். விவசாயிகளுக்குக் கடன் கொடுப்பது மட்டும் போதாது. அவர்களுக்குப் பயிர் பாதுகாப்பு இன்ஷூரன்ஸ் திட்டத்தை அமல் செய்யவேண்டுமென்று நான் பல முறை இங்கு எடுத்துக் கூறியிருக்கிறேன். இந்த ஆண்டு விவசாயிகளுக்கு விளைச்சல் இல்லை. அடுத்த ஆண்டு அவர்கள் உழுவதற்கு முடியாது. பூச்சித் தொல்லை இருக்கிறது. மருந்துகூட அடிக்க முடியாத நிலை 67-ல் நிச்சயமாக வரும். ஏர் முனை, ஏர் முனை என்று சொல்கிறார்கள், ஏர் முனை விழா என்று சொல்கிறார்கள். ஆக, நான் வற்புறுத்த விரும்புவது விவசாயிகளுக்குப் பயிர் பாதுகாப்பு இன்ஷூரன்ஸ் திட்டத்தை நிச்சயமாக அமல் நடத்த வேண்டுமென்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்த ஆண்டு விளைச்சல் இல்லை. ஆனால் கட்டாயமாக வசூல் செய்கிறார்கள். அவர்களால் நில வரி கொடுக்க முடியவில்லை. 1938-ம் ஆண்டு திரு. ராஜாஜி அவர்கள் முதல் மந்திரியாக இருந்தபோது கடன் நிவாரணச் சட்டத்தைக் கொண்டு வந்தார்கள். மூன்று ஆண்டுகளுக்கு யாரும் கடனைத் திரும்பக் கேட்கக் கூடாது என்று. அதிகப்படியாக வட்டி வாங்கியிருந்தால் வசூல் செய்ய முடியாது. இப்பேர்ப்பட்ட ஒரு சட்டத்தைக், கொண்டு வந்து விவசாயிகளையும் அவர்கள் நிலங்களையும் திரு. ராஜாஜி அவர்கள் காப்பாற்றினார்கள். அதேபோல் தஞ்சாவூர் பண்ணையாள் பாதுகாப்புச் சட்டத்தைக் கொண்டு வந்தார்கள். திரு. பிரகாசம் அவர்கள் முதன் மந்திரியாக இருந்தபோது கிணறுகள் வெட்ட மான்யம் கொடுக்கப்பட்டு கிணறுகள் வெட்டப்பட்டன. திரு. பிரகாசம் அவர்களால்தான் இன்று ஓரளவிற்கு விவசாயம் தலைதூக்கி நிற்கிறது என்று நிச்சயமாகச் சொல்ல முடியும்.

அரசாங்கக் கொள்முதலுக்கு விவசாயிகள் தங்களிடம் உள்ள நெல்லைக் கொடுத்தால் ஒரு க்விண்டலுக்கு இரண்டு ரூபாய் போனஸ் கொடுப்பதாகச் சொல்லப்படுகிறது. எவ்வளவு ரூபாய் போனஸாக கொடுக்கப்பட்டிருக்கிறது என்று தெரியவில்லை. நிச்சயமாக போனஸ் கொடுக்கப்படவில்லை. லெவி விகிதம் ஏக்கருக்குப் பத்து மூட்டை என்று சொன்னால் அதையே கொடுக்காமல் இருக்கும்போது அதற்குக் கூடுதலாக ஐந்து மூட்டைகள் கொடுத்தால் பத்து ரூபாய் போனஸ் கொடுப்பதாகச் சொல்கிறார்கள். லெவி விகிதத்தை அதிகமாக நிர்ணயித்து விட்டு பிறகு எப்படி வாங்க முடியும்? இதை ரெவன்யூ அமைச்சர் அவர்கள் சிந்திக்க வேண்டும் என்று தங்கள் மூலம் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். இந்த அரசாங்கம் போனஸ் ஒன்றும் புதிதாகக் கொடுத்து விடவில்லை. திரு. ஓ. பி. ராமஸ்வாமி ரெட்டியார் அவர்கள் முதல் மந்திரியாக இருந்தபோது ஒரு மாண்டுக்கு இரண்டு ரூபாய் கொடுக்கப்பட்டது. கதருக்குப் போனஸ் கொடுக்கிறீர்கள். கைத்தறிக்குக் கொடுக்கப்படுகிறது. இதேபோன்று ஒவ்வொரு மூட்டைக்கும் ரிபேட் கொடுக்க வேண்டும். இப்போதுள்ள கொள்முதல் விகிதத்தை மாற்றி ஒவ்வொரு மூட்டைக்கும் நிச்சயமாகப் போனஸ் கொடுக்க வேண்டுமென்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, விலைவாசி நிர்ணயம் செய்வதில் பலவிதக் குழப்பங்கள் ஏற்படுகின்றன. ஆண்டுதோறும் விலைவாசிகள் நிர்ணயிக்கப்பட வேண்டும். உணவுக் கார்ப்பரேஷன் மாஜித் தலைவர் திரு. டி. ஏ. பாய் அவர்தள் சொல்லும்போது உணவு விலையை ஆண்டுதோறும் நிர்ணயிக்க வேண்டும் என்று கூறியிருக்கிறார்கள். ஜப்பானில் கொள்முதல் செய்வது போல் இந்தியாவிலும் செய்ய வேண்டும். ஜப்பானில் பல விவசாயச் சங்கங்கள் இருக்கின்றன. அந்தச் சங்கங்களை அரசாங்கம் சந்தித்துப் பேசி இந்த ஆண்டு என்ன விலை என்று அவர்களோடு கலந்து பேசி முடிவு



செய்து பிற்பாடு விவசாயச் சங்கங்கள் மூலமாக அரசாங்கம் நெல்லைக் கொள்முதல் செய்கிறது. அங்கு பொருளாதார நிபுணர்களால் இதற்கு விலை நிர்ணயம் செய்வது கிடையாது. ஆகவே ஜப்பானில் உள்ளது போன்று இங்கும் விவசாய மக்களைச் சந்தித்து இன்றுள்ள நிலைமை என்ன, காஸ்ட் ஆஃப் ப்ரொடக்ஷன் என்ன என்று பார்த்து விலை நிர்ணயம் செய்யப்பட வேண்டும். வீரமாக அவர்கள் பேசுகிறபோது தொழில் பற்றிப் பேசினார்கள். தொழில் துறையில் எவ்வளவு முன்னேற்றம் அடைந்தாலும் விவசாய முன்னேற்றம் அடையாவிட்டால், விவசாய மக்களின் வாங்கும் சக்தி அதிகரிக்காவிட்டால், தொழில் துறையில் எவ்வளவு முன்னேற்றம் இருந்தாலும், நாட்டில் சுபீட்சம் ஏற்படாது என்று தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, ரசாயன உரம், பஞ்சாயத்து யூனியன்களினாலும் சரி, எங்கு பார்த்தாலும் சரி, ஆண்டுதோறும் உள்ள ஒரு பிரச்னை ரசாயன உரம் தேவை என்பதை அரசாங்கம் உணர்ந்திருக்கிறது. இந்த ஆண்டு நமக்கு வேண்டிய ரசாயன உரம் 5·80 லட்சம் டன்; கிடைத்தது 3·26 லட்சம் டன். இந்தப் பதினெட்டு வருட ஆட்சியில் உரத் தொழிற்சாலை ஏற்படுத்தி விவசாயிகளுக்கு வேண்டிய உரங்களைக் கொடுக்க அரசாங்கம் தவறி விட்டது என்ற குற்றச்சாட்டை நான் இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அடுத்தபடியாக, வைகைக் கால்வாய்த் திட்டம். கடந்த நான்கு ஆண்டுகளாக இந்தத் திட்டத்தைப்பற்றி இந்த மன்றத்தில் எடுத்துச் சொல்லி வந்திருக்கிறேன். ரெவின்யூ அமைச்சர் அவர்கள், நாம் இன்று சிறப்பாகச் செய்வதாகச் சொன்னார்கள். திட்டக் கமிஷனின் டெக்னிக்கல் அப்ரூவலுக்காகச் சென்றிருக்கிறது, அது வந்த உடன் அதைச் செய்து கொடுப்பதாகச் சொல்கிறார்கள். ஆகவே இதைத் துரிதமாக நிறைவேற்ற ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வைகைப் பாசனத்தில் இந்த ஆண்டு கிட்டத்தட்ட 40,000 ஏக்கர் பஞ்சமாகி விட்டது. அது ரெவின்யூ அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். ரெவின்யூ அமைச்சர் அவர்கள் அங்கு அடிக்கடி சுற்றுப் பிரயாணம் செய்தார்கள். அங்கு எவ்வளவு தண்ணீர் இருந்தது, எவ்வளவு விவசாயம் செய்யப்பட்டது என்ற புள்ளிவிவரம் அவர்களுக்குத் தெரியும் என்பது எனக்குத் தெரியும். அங்கு விளையவில்லை. ஆகவே அங்கு அவர்களுக்கு வரி வஜா செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதைப் பஞ்சப் பிரதேசம் எனப் பிரகடனம் செய்து அவர்களுக்குச் செய்ய வேண்டிய உதவிகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நிலச்சட்டம். நிலச் சட்டம், நிலச் சட்டம் என்று பிரமாதமாகப் பேசப்பட்டது. இந்த நிலச் சட்டம் மலையைத் தோண்டி எலியைப் பிடித்தது மாதிரி இருக்கிறது. சென்னை நகரம், நீலகிரி நீங்கலாக 11 மாவட்டங்களில் இருந்து நிலச் சட்டத்தின் மூலம் 4,030 ஏக்கர் வந்தது. நன்செய் நிலம் 1,344 ஏக்கர், புன்செய் நிலம் 2,686 ஏக்கர். இந்த நிலச் சட்டம் வருவதற்கு முன்னால் பெரிய நிலத் திமிங்கிலங்கள் எல்லாம் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களை வைத்திருக்கிறார்கள். அதைப் பிடுங்கி எடுத்து ஏழை விவசாயிகளுக்கும், ஹரிஜன விவசாயிகளுக்கும் கொடுத்தால் உற்பத்தி பெருகும் என்று அரசாங்கம் கருதியது. சட்டமும் வந்தது. சில உத்தியோகஸ்தர்கள் எல்லாம் போடப்பட்டார்கள். கடைசியில் பார்க்கும்போது இப்படிக் குறைச்சலான அளவிற்கு நிலம் வந்திருப்பது உண்மையிலே வருந்தத்தக்கது. ஐந்து லட்சம், பத்து லட்சம் ஏக்கர்கள் உபரியாக வரும், அதைக்கொண்டு உணவு உற்பத்தியைப் பெருக்கமுடியும் என்று சொன்னார்கள். இந்த நான்கு ஆண்டுகளில் இந்த நிலச் சட்டத்தினால் எவ்வளவு உபரி நிலம் இருக்கிறது என்பதைக் கண்டுபிடிக்க எவ்வளவு செலவாயிற்று என்று பார்க்கும்போது இது வெறும் ஏமாற்று திட்டமாகத்தான் இருக்கிறது. இதுதான் ஜனநாயக சோஷலிஸமா என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். ரெவின்யூ அமைச்சர் அவர்கள் பெரும் மனது வைத்து கிழக்கு இராமநாதபுரம் மாவட்ட மக்களின் மீது கண்திறந்து பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அங்கு வரி வஜா செய்வது மட்டும் போதாது. பழைய பாக்கிகளை வசூல் செய்கிறார்கள். இந்த ஆண்டு விளைச்சல் இல்லாமல் இருக்கும்போது பழைய பாக்கிகள், தக்காவிக் கடன் போன்றவற்றை அவர்

களால் நிச்சயமாகக் கொடுக்க முடியாது. ஆகவே இந்த ஆண்டு வரி பாக்கி வசூல் செய்வதை வசூல் செய்யாமல் தள்ளி வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

***திரு. ஏ. சிதம்பரநாத நாடார்:** கனம் சபாநாயகர் அவர்களே, நம் மாநில முதல் அமைச்சர் அவர்கள் இந்த மன்றத்தில் சமர்ப்பித்துள்ள வரவு செலவுக் கணக்குகளை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் பேசலாம் என்று ஆசைப்படுகிறேன். ஸ்ரீமான் சீமைச்சாமி அவர்கள் பேசும்போது இந்த நாட்டில் ஆந்திர கேசரி பிரகாசம் அவர்கள் ஆண்டபோதும், திரு. ஓ. பி. ராமஸ்வாமி ரெட்டியார் அவர்கள் ஆண்டபோதும் எல்லாவிதமான கிணறுகளும் வெட்டப்பட்டு நாட்டிலே உள்ள மக்கள் அத்தனை பேர்களும் சுபீட்சமாக வாழ்ந்தார்கள் என்று சொன்னார்கள். உண்மையில் அதை நான் வரவேற்கிறேன். அதே போல் இன்றைக்கு இங்கும் காங்கிரஸ் கட்சியின் அரசாங்கம்தான் நடைபெறுகிறது. அந்த முறையில் தான் இன்றைக்கு இங்கு கனம் பக்தவத்சலம் தலைமையில் மந்திரி சபை இருந்து வெற்றிகரமாக ஆட்சி நடத்தி வருகிறது. இதை மக்களும் கண்கூடாகப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் சொல்லத் தேவையில்லை. இன்றைக்கு இருக்கின்ற காங்கிரஸ் அரசாங்கத்தின் மூலமாகத்தான் வேளாண்மைக்காக எவ்வளவோ லட்சக்கணக்கான ரூபாய்களைச் செலவுசெய்து கொண்டிருக்கிறோம். ஆனால் இந்தச் சர்க்காரில் வேலை பார்த்து வருகின்ற அதிகாரிகள் காங்கிரஸ் ஆட்சி நல்ல முறையில் வெற்றிகரமாக நடைபெறக் கூடாது என்கிற எண்ணத்தில் சில முட்டுக் கட்டைகளைப் போட்டுவருகிறார்கள் என்பதைக் காங்கிரஸ் மெம்பராக இருக்கின்ற நான் இந்தச் சபையில் சொல்லாமல் இருக்க முடியாது. காங்கிரஸ் சர்க்கார் நல்ல முறையில் பல திட்டங்களைப் போட்டு வேலை செய்து வருகின்ற இந்த வேளையில் நல்ல முறையில் உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்று சொல்லி வருகின்ற இந்த நேரத்தில், தாங்கள் பயிர் செய்த விளைவை எடுக்க வரும்போது, அதற்குச் சர்க்கார் அனுமதி வேண்டும் என்று அதிகாரிகள் கேட்கிறார்கள். ஒரு பகுதியிலிருந்து இன்னொரு பகுதிக்கு அறுவடை செய்து கொண்டு போக வேண்டுமென்றாலும் அதற்கும் சர்க்கார் அனுமதி வேண்டும் என்று கேட்கிறார்கள். இதை நான் சும்மாச் சொல்லவில்லை. எங்கள் மாவட்டத்தில் விவசாயிகள் எவ்வாறு விவசாயம் செய்து வருகிறார்கள் என்றால், விவசாயம் செய்கின்ற செலவுக்குத் தன் மனைவியுடைய அல்லது மகளுடைய கழுத்திலுள்ள செயினையோ அல்லது பிற நகைகளையோ விற்று அல்லது அடகு வைத்துத்தான் செலவுக்குப் பணம் கொண்டு வருகிறார்கள். இந்த அளவுக்கு கஷ்டப்பட்டுச் செலவுசெய்து விவசாயம் செய்து, மகசூலை எடுக்கவேண்டும் என்று வரும்போது இந்த அதிகாரிகள் சர்க்காரின் பெயரைச் சொல்லிக் குறுக்கே நிற்கிறார்கள். இதைப்பற்றி திரு. மாதவன் அவர்கள் சொன்னவை அத்தனையும் பொய் என்று நான் சொல்ல முடியாது. எங்கள் பக்கத்தில் நடப்பதைப் பார்த்தால் மிகவும் பரிதாபமாக இருக்கிறது. எங்கள் பகுதியைச் சார்ந்த மணக்காவிளை என்ற இடம், கல்குளம் தாலூகாவில் இருக்கிறது. திரு. குஞ்சன் நாடார் அவர்களுடைய தொகுதியில் இருக்கிறது. அங்கே ஒரு வயலில் அறுக்கப் போன இடத்தில் அறுக்கக்கூடாது என்று தடுத்திருக்கிறார்கள். இந்த நிலைமை நீடிக்குமானால் எப்படி இந்த அரசாங்கத்தை அந்தப் பகுதியிலுள்ள மக்கள் ஆதரிப்பார்கள் என்பது எனக்குத் தெரியவில்லை. இந்த நிலைமையை உடனடியாக மாற்றியாக வேண்டும் என்று நமது காங்கிரஸ் சர்க்காரிடம் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, செக் போஸ்ட் வைத்திருக்கிறார்கள். இந்த இடங்களின் பக்கத்திலுள்ள ஊர்களிலிருந்து சாதாரண ஏழை மக்கள் ஐந்தாறு பக்கா அரிசி கொண்டுபோனால்கூட அதைப் பிடுங்கிப் பறிக்கிறார்கள். இவ்விதம் செக்போஸ்டில் வாங்கப்படுகின்ற நெல்லுக்கோ, அரிசிக்கோ உடனடியாக விலை கொடுக்க வேண்டும் என்று அரசாங்கம் ஆணை பிறப்பித்திருக்கிறது. ஆனால் அங்கேயிருக்கின்ற அதிகாரிகள் இதை அமல் நடத்தாமல் இருக்கிறார்கள் என்பதை நான் ஆணித்தரமாகச் சொல்லிக்கொள்ளுகிறேன். இதையெல்லாம் செய்வது சர்க்கார் அதிகாரிகள் என்று சொல்லுகிறார்கள். அவர்கள் இவ்வாறு செய்கிறார்கள். ஏன் செய்கிறீர்கள் என்று கேட்டால் இந்தக் காங்கிரஸ் அரசாங்கம்தான் செய்யச் சொல்லுகிறது என்று சொல்லுகிறார்கள். கடைசியில் இந்தக் காங்கிரஸ் அரசாங்கத்திற்குக் கெட்ட பெயர் ஏற்படுகிறது. இதற்கு இந்தச் சர்க்கார் இடம் கொடுக்கக்கூடாது என்பது தான் என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம். இந்த நிலைமை நிச்சயமாக மாறியாக வேண்டும்.



அடுத்தபடியாக, நாட்டில் உணவுப்பொருட்களில் மாற்றம் காண வேண்டும். இப்போது நாம் அதிகமாக நஞ்சையைதான் விவசாயம் செய்கின்றோம். இதை மாற்றி அதிகமாகப் புஞ்சையை விவசாயம் செய்வதற்கும் முன் வரவேண்டும். இதை ஆங்கிலத்தில் 'ரொட்டேஷன் ஆஃப் கிராப்ஸ்' என்று சொல்லுவார்கள். இவ்விதம் மாற்றி மாற்றி—நஞ்சையும் புஞ்சையும் விவசாயம் செய்ய வேண்டியது மிகவும் அவசியம். இதற்கு சர்க்கார் தக்க கவனம் செலுத்த வேண்டும் என்பது என் அபிப்பிராயம்.

சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களைப் பொறுத்தவரையில். எங்கள் மாவட்டத்தில் சிறிய நீர்ப்பாசனத் திட்டங்கள் எதுவும் சரியான முறையில் நிறைவேறியதாகத் தெரியவில்லை. எங்கள் மாவட்டத்தைப் பொறுத்தவரை, இருக்கக்கூடிய குளங்கள், கிணறுகள் இவைகளை ஆழப்படுத்தினால் மட்டுமே, ஆண்டில் 360 நாட்களுக்கும் தண்ணீர் கிடைக்கும். இந்த சென்னை ராஜ்யத்தோடு நாங்கள் அதாவது திருவிதாங்கூர்–கொச்சி ராஜ்யத்திலிருந்து 1956-ல் சேர்ந்தோம். ஆனால் இன்று வரையிலும் எங்கள் பகுதியில் யில் எந்தவிதமான ஒரு குளமும் தோண்டப்படவில்லை என்பதை நான் மிகவும் வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன். இருக்கின்ற குளங்களைச் சரியாக ஆழப்படுத்தினால்கூட நிச்சயமாக எங்கள் பகுதியில் பஞ்சமே வராது என்பதை நான் ஆணித்தரமாகச் சொல்லிக்கொள்ள முடியும். எங்கள் மாவட்டத்தில் பழையாறு என்ற ஒரு நதி இருக்கிறது. மழை காலத்தில் வெள்ளப் பிரவாகமாகத் தண்ணீர் ஓடும். இதை ஒரு சிறிய அணைகட்டித் தடுத்து நிறுத்தினால் பக்கத்திலுள்ள நான்குனேரி பகுதிக்கு தண்ணீர் கொடுக்க முடியும். இதைப் பற்றி இந்தச் சபையில் பல தடவை எடுத்துச் சொல்லியிருக்கிறேன். ஆனால் இதுவரையிலும் எந்தவிதமான நடவடிக்கையும் எடுத்திருப்பதாகத் தெரியவில்லை. இதையும் இந்தச் சர்க்கார் நல்லெண்ணத்தோடு எடுத்துக்கொண்டு வேலை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஐந்தாண்டுத் திட்டத்தை எடுத்துக்கொண்டால், சாதாரணமாகச் சொல்லுவார்கள். "இக்கரை மாட்டுக்கு அக்கரை பச்சை" என்று; நாங்கள் திருவிதாங்கூர்-கொச்சி ராஜ்யத்திலிருந்து இந்த நாட்டுக்கு வந்தோம். இங்கு வந்தால் நாம் சுபீட்சமாக வாழலாம். இங்கே இருக்கின்றவர்கள் நம்மை ஆதரிப்பார்கள். சகோதர சகோதரிகள் என்ற எண்ணத்தில் நாங்கள் இங்கு வந்தோம். ஆனால் இங்கு வந்த பின்னால், "அக்கரை மாட்டுக்கு இக்கரை பச்சை" என்ற நிலைமைதான் ஏற்பட்டிருக்கிறது. இந்த ஐந்தாண்டுத் திட்டங்களில் உருப்படியாக ஏதாவது ஒரு திட்டத்தை எங்கள் பகுதியில் நிறைவேற்றியிருக்கிறார்களா என்று இந்தச் சர்க்காரை கேட்க ஆசைப்படுகிறேன். (எதிர்கட்சி பக்கத்திலுள்ள அங்கத்தினர்கள் கைதட்டல். . . .) நீங்கள் கை தட்டுவதால் எந்தவிதமான பிரயோசனமும் இல்லை. இதை நான் சொல்வதால் உங்களுக்கு எந்த விதமான சாதகமும் ஏற்படப் போவதில்லை. எங்கள் பகுதியில் இருக்கின்ற நிலைமையை அரசாங்கத்தினிடத்தில் எடுத்துச் சொல்வது என் கடமை. இதைச் சொல்லவேண்டிய மாபெரும் பொறுப்பு எனக்கிருக்கிறது. அந்த முறையில்தான் இதைச் சொல்லுகிறேன். அதல்லாமல் நான் சொல்லும்போது, நீங்கள் கைதட்டுவதால் உங்களுக்கு எந்தவிதமான பிரயோசனமும் ஏற்படாது என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

அது தவிர, எங்கள் பகுதியில் வள்ளியாறு என்ற ஆறு ஓடிக்கொண்டிருக்கிறது. இதைத் தடுத்து மூன்று இடத்தில் லிப்ட் செய்தால் போதும். இதன் அருகாமையில் இருக்கின்ற இடங்களிலுள்ள தண்ணீர்ப் பஞ்சம் எல்லாம் போகும். மாம்பழத்தாறு திட்டம் நிறைவேற்றப்படவேண்டும் என்று கழிந்த பத்து வருடங்களாகச்சொல்லிக்கொண்டுதான் இருக்கிறேன். இதுவரையிலும் அதற்கு எந்தவிதமான நடவடிக்கையும் எடுத்திருப்பதாகத் தெரியவில்லை.

[திரு. எ. சிதம்பரநாத நாடார்] [28th February 1966

அடுத்தபடியாக, கோதையாறு என்ற ஒரு அணை இருக்கிறது. நான் திருவிதாங்கூர்-கொச்சியில் மந்திரியாக இருந்த காலத்தில் 1953-வது ஆண்டு என்று நினைக்கிறேன். அப்போது தண்ணீர் மிகக் குறைந்த அளவில் இருந்தது. லீலெவலுக்குக் கீழே போயிருந்தது. அப்போதும் அந்தத் தண்ணீரை இறைத்துச் சாகுபடிக்குக் கொடுத்தோம். அந்த முறையில் இப்போதும் தண்ணீர் கொடுக்கவேண்டும் என்று கழிந்த ஆண்டில் நானும் இதர மக்கள் பிரதிநிதிகளும் விவசாயிகளும் சேர்ந்து கலெக்டர் அவர்களிடத்தில் சொன்னோம். இதை ஏன் இங்கு கேட்கிறீர்கள் என்று சொல்லுகிறார் கலெக்டர். அவரிடம் கேட்காமல் யாரிடம் கேட்பது என்று தெரியவில்லை. இவர் நடவடிக்கை எடுத்துக்கொள்ளாமல் இருந்ததின் காரணமாக இன்றைக்கு எத்தனையோ கோட்டை நெல் நஷ்டம். இதை நான் இந்தச் சபையில் சொல்லாமல் இருக்க முடியாது. இதைக் கலெக்டர் அவர்கள் சொன்னதும் அவரது மாறான மனப்போக்கை நினைத்து நானும் ஒன்றும் சொல்லாமல் வந்துவிட்டேன். அவர் மாதிரி நானும் நடந்து கொள்ள முடியவில்லை. நானும் டி.ஐ.ஆர். சட்டத்தின் கீழ் உள்ளே போக வேண்டிய நிலைமை கூட வரும்போல் இருக்கிறது. மாவட்ட கலெக்டர் என்பவர் எல்லா விஷயங்களையும் நன்கு தெரிந்தவராக இருக்க வேண்டும். எனக்கும் வயது 51 ஆகிறது. எங்கள் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் அனுபவ பூர்வமாக ஒரு காரியத்தைப் பற்றிச் சொன்னால், நியாய அநியாயத்தைப் பார்த்து முடிவு செய்ய வேண்டியது கலெக்டருடைய கடமை. இவர் நாங்கள் எடுத்துச் சொல்வது எதையுமே எடுத்துக்கொள்ள மாட்டார். நான் சொல்வதில் ஏதாவது உண்மை இருக்கிறதா என்பதை வேண்டுமென்றால் நமது முதலமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்து பார்க்கட்டும். சிதம்பரநாதன் சொல்வதில் உண்மையிருக்கிறது என்று தெரிந்தால் அதற்குத் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, எங்களுக்கு ராஜாக்க மங்கலம் என்று ஒரு பஞ்சாயத்து யூனியன் இருக்கிறது. 1956-ல் நாங்கள் இந்த ராஜ்யத்தோடு சேர்ந்தபோது எங்கள் மாவட்ட கலக்டராக இருந்தவர் திரு. ஆர். திருமலை அவர்கள் இப்போது பி. டப்ளியூ. டி. செக்ரட்டரியாக இருக்கிறார். அப்போது இந்த ராஜாக்கமங்கலம் பஞ்சாயத்து யூனியனை என் தொகுதியில் கொண்டுவருவதற்கு நான் பட்டபாடு ஆண்டவனுக்கும், திருமலை அவர்களுக்கும்தான் தெரியும். இப்போது அந்தப் பஞ்சாயத்து யூனியனில் ஒரு கமிஷனர் இருக்கிறார். அவா இருப்பது நகர எல்லைக்குள்; அங்கு நடைபெறும் ஆட்சி மிக மோசமாக இருக்கிறது. உத்திரப் பிரதேசத்தில் பஞ்சாயத்து யூனியன்கள் எல்லாம் ஸ்கராப்–ஆகிவிட்டது என்று சொல்லப்படுகிறது. அந்த நிலைமை இங்கும் வந்து விடுமோ என்று பயமாக இருக்கிறது. சாதாரணமாக யூனியன் கமிஷனர், யூனியன் எல்லைக்குள் இருக்கவேண்டும் என்றிருக்கிறது, ஆனால் அவர் தங்குவது நகர எல்லைக்குள் ஆனால் டூர் நோட் எழுதும் போது, 'புறப்பாடு பழவிளை' என்று எழுதுகிறார். இதைப்பற்றிக் 'கேட்டால்' அங்கேதானே நான் தங்குகிறேன் என்று சொல்லுகிறார். இதைப்பற்றி நான் டி.டி.ஸி. மெம்பர்கள் கூடுகின்ற கூட்டத்தில் கேட்டேன். இதையெல்லாம் இங்கே சொல்லக்கூடாது என்று கலெக்டர் அவர்கள் சொல்லுகிறார்கள். எனக்கு வயது 51 ஆகிறது. எனக்கு சிறுவயதிலேயே பெண் கட்டியிருந்தால் அவரை மாதிரி எனக்கு ஒரு மகன் இருந்திருப்பான். அவ்வளவு வயதில் இருக்கக்கூடிய ஒருவர் என்னைப்பார்த்துச சொல்கிறார், இதையெல்லாம் இங்கே கேட்கக் கூடாது என்று. அங்கே கேட்காமல் எங்கே கேட்பது என்று தெரியவில்லை. இப்படிக் கலெக்டர்களைப் போடும்போது, ஒரு தடவைக்கு நான்கு தடவை ஆலோசித்துப் பார்த்து நல்ல பக்குவமுள்ளவராகப் பார்த்து நல்ல அனுபவமுள்ளவராகப் பார்த்து கலெக்டர்களை நியமிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். நாட்டில் இப்படிப்பட்ட துஷ்பிரசாரம்தான் இருக்கிறது. காங்கிரஸ் ஆட்சி அநியாயம் செய்கிறது என்ற பிரசாரம்தான் இருக்கிறதே தவிர வேறு இல்லை. ஆனால் எதைச் சொன்னாலும் கேட்கக்கூடாதுதான். செய்தாலும் சரி, செய்யாவிட்டாலும் சரி செவிசாயுங்கள் என்றால் செவி சாய்க்கக்கூடாதா? எங்கள் மாவட்ட டி.டி.ஸி. மெம்பர்களைக் கேளுங்கள். சிதம்பரநாதன் இந்த மாதிரி சொன்னது உண்டா என்று கேளுங்கள்.



28th February 1966] [திரு. எ. சிதம்பரநாத நாடார்]

அதற்கு சொன்ன பதில் என்ன என்று கேளுங்கள். சிதம்பரநாதன் நல்ல காலமாக ஒன்றும் சொல்லாமல் போனார் . என்று சொல்லுவார்கள். நான் சாதாரணமாக விட்டிருக்க மாட்டேன். என்னைப்பற்றி இந்த மந்திரி சபையில் வீற்றிருக்கிறவர்கள் அத்தனை பேர்களுக்கும் தெரியும். அடியேனுக்கு உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசும் பழக்கம் கிடையாது. முதல் அமைச்சரைப் பற்றி ஏதாவது சொல்ல வேண்டுமென்றால் முகத்திற்கு நேரே சொல்லுவேனே தவிர, அவரைப் பற்றி அவருக்குப் பின்புறமாகச் சொல்ல மாட்டேன். ஆகவே இதிலே நல்ல நியதியை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மீனளம் அதற்கு வேண்டி, கடலோர மக்களுக்கு நமது சர்க்கார் எத்தனையோ கோடி ரூபாய் செலவழித்துக் கொண்டிருக்கிறது. ஆனால் எதிர் பார்த்த முறையில் கடலோரப் பகுதி மக்களுக்குச் சர்க்கார் நல்ல திட்டம் வகுக்கவில்லை. இன்னும் அவர்கள் பட்டினி பசியாக இருக்கிறார்கள். அவர்களுக்கு நல்ல திட்டங்களை வகுக்க வேண்டும்.

அடுத்து தொழில் வளர்ச்சி பற்றி நம் சர்க்கார் சொல்லியிருக்கிறர்கள். அதற்கு வேண்டி எத்தனையோ கோடி ரூபாய் செலவழித்து வருகிறார்கள். ஆனால் இது பாமர மக்களுக்கு எங்காவது பயன்படுகிறதா என்றால் இல்லை. இந்தப் பணக்காரன், அந்தப் பணக்காரன் என்று பணக்காரர்களுக்குத்தான் பயன்படுகிறது. தொழில் இயக்கம், தொழில் வளர்ச்சி யாரிடம் இருக்கிறது என்று பார்த்தால், பட்டவர்த்தனமாகத் தெரியும், பணக்காரர்கள் கையில் இருக்குமே தவிர ஏழை மக்கள் கையில் இருக்கவே இருக்காது. சர்க்கார் எவ்வளவோ செய்கிறது. அதை வரவேற்கிறேன், பாராட்டுகிறேன், பெருமைப்படுகிறேன். இந்த நிலைமை மாற வேண்டும். அதற்கு நல்ல முறையில் சீர்திருத்தம் கொண்டுவர வேண்டும்.

இனி, சிமெண்ட் தொழிற்சாலை என்னென்னவோ தொழிற்சாலைகள் எங்கெங்கோ வருகின்றன. எங்கள் பகுதிக்கு சிமெண்ட் தொழிற்சாலை வேண்டுமென்று கேட்டோம். அது வரவேயில்லை. நாங்கள் காலம் தொட்டு என்றும் இந்தச் சர்க்காரை ஆதரிக்கக் கூடியவர்கள். எங்கள் உயிருக்கு ஆபத்து வந்தாலும் இந்த சர்க்காரை ஆதரிக்கக்கூடியவர்கள். இந்தச் சபையில் பட்டவர்த்தனமாகச் சொன்னாலும், எங்கள் மாவட்டத்தில் உள்ள அத்தனை ஓட்டுக்களும் காங்கிரஸ் கட்சிக்குத்தான் நிற்குமே தவிர எதிர்க் கட்சிக்காரர்களுக்குப் போகாது. எங்கள் பகுதியிலே ரயில் வேண்டும், பள்ளிக்கூடம் வேண்டும், தொழிற்சாலை வேண்டும் என்று கேட்டால் கிடைப்பதில்லை. எங்களிடம் மாற்றாந்தாய் மனப்பான்மை காட்டக்கூடாது, இங்கு இருக்கிறவர்களுக்குச் சேய்களாக நாங்கள் வந்தோம். குழந்தைகளாக வந்தோம். தாயாக நம்மை ஆதரிப்பார்கள், எதிர்பார்த்தது கிடைக்கும் என்று வந்தோம். இப்போது உள்ள மனப்பான்மை மாறி எங்களுக்குச் செய்ய வேண்டிய அத்தனையையும் செய்து தர வேண்டுமென்று மக்கள் சார்பில் தாழ்மையாகக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கல்வித் திட்டம். மதுரையிலே திடீரென்று ஒரு வித்தியாசாலை இடிந்து விழுந்தது. அதே மாதிரி ஒரு சர்க்கார் பள்ளிக்கூடம் எங்கள் பகுதியில் குளச்சல் நகர எல்லைக்குள் அதாவது ரெஜிஸ்டிரார் ஆபிஸ் காம்பவுண்டுக்குள் இடிந்து விழக்கூடிய நிலையில் இருக்கிறது. நான் டி.டி.ஸி மீட்டிங்கில் இதைப்பற்றிச் சொன்னேன். கவர்ன்மெண்ட் மிடில் ஸ்கூல் கட்டடம் இடிந்து போகப் போகிறது, அதைக் கொஞ்சம் பார்க்க வேண்டும் என்று சொன்னேன். நான் இதைச் சொன்னவுடனே கலெக்டருக்கு கோபம். நான் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவன். என் தொகுதியிலுள்ள மக்கள் அதிகமாக ஓட்டுப் போட்டிருக்கிறார்கள். 20,000-க்கு அதிகமாகப் போட்டிருக்கிறார்கள். கடந்த 10 ஆண்டுகளாக, அதாவது இரண்டு தடவைகள் இந்த மன்றத்திலும் திருவாங்கூர்-கொச்சியில் இரண்டு தடவைகள், திருவாங்கூரில் ஒரு தடவை ஆக ஐந்து தடவைகள் நான் அங்கத்தினராக இருந்து வருகிறேன். எப்படிப்பட்ட மனப்பான்மை எனக்கு இருக்கும் என்று யோசித்துக் கொள்ளுங்கள். "பள்ளிக்கூடம் இடிந்து விழும் நிலையில் இருக்கிறது" என்று சொன்னேன். அவ்வளவு தான். அதற்குக் கலெக்டருக்குக் கோபம். இதைப் பற்றி எங்கள் நாகர்கோயில்

முனிசிபல் மைதானத்தில் மீட்டிங் வைத்து அதிலே கலெக்டரையும், பிளானிங் பி. எ.யையும் வைத்துப் பிடித்தால் அப்போது தெரியும். எனக்கு அதற்குத் தைரியம் உண்டு-எனக்குப் பயம் கிடையாது. எனக்கு நெஞ்சு பொறுப்பதில்லை. பள்ளிக்கூடம் இடிந்து விழும் நிலையில் இருக்கிறது என்று சொன்னால் கோபம் வரக் காரணம் என்ன? நல்ல பக்குவம் உள்ள, பருவம் உள்ள கலெக்டரை நியமிக்காததுதான். மதுரை வித்தியாலயத்தின் தலைவிதி எங்கள் மாவட்டத்திலுள்ள பள்ளிக்கட்டடத்திற்குவரக் கூடாது.

இனி, குழந்தைகளுக்கு யூனிஃபார்ம் கொடுக்கிறார்கள். யார் கொடுக்கிறார்கள் என்று கேட்டால் தெரியாது. நானா வாங்கிக் கொடுக்கிறேன்? அல்லது மற்றவர்களா வாங்கிக் கொடுக்கிறார்கள்? சர்க்கார் கொடுக்கிறது. இங்கு காங்கிரஸ் சர்க்கார் என்றைக்கும் பாமர மக்களுக்கும், ஏழைகளுக்கும், மாணவர்களுக்கும் ஒத்தாசை செய்யக் காத்திருக்கிறது. சர்க்காரிலே கீழே உள்ள ஒரு நபராவது காங்கிரஸ் சர்க்காரை ஆதரித்து ஒரு வார்த்தையாவது கூறுகிறாரா? காங்கிரஸ் சர்க்கார் நாட்டிலே இருப்பதால்தான் மக்களுக்கு நன்மை கிடைக்கிறது என்று பேசுகிறாரா? அத்தனை பேர்களும் அந்தப் பகுதியிலுள்ள எதிர்க் கட்சிகளிடத்தில் போய்ப் பேசுகிறார்கள். இதையெல்லாம் நான் பேசுவதால் நான் கட்சியை விட்டு விலகி விடுவேன் என்று எண்ண வேண்டாம். சிதம்பரநாதன் அடுத்த தடவையும் இந்தப் பக்கத்திலேயேதான் இருப்பான். அதைப் பற்றி யாருக்கும் சந்தேகமே வேண்டாம்.

அடுத்தபடியாக, டிரான்ஸ்போர்ட் கண்டக்டர்களைப் பற்றி நான் சொல்லியிருக்கிறேன். அன்றைக்கு கனம் தொழில் அமைச்சர் அவர்கள், அப்படி ஒன்றும் வித்தியாசமாகப் பார்க்கவில்லை என்று சொன்னார்கள். இன்றும் சொல்லுகிறேன், கன்னியாகுமரி கண்டக்டர் என்றால் போதும், டிரான்ஸ்போர்ட் டிபார்ட்மெண்டில் இடம் கிடையாது. நல்லகாலமாக, பொறி இயல் கல்லூரியிலும், மருத்துவக் கல்லூரியிலும் மாவட்டவாரியாக இடம் ஒதுக்கிக் கொடுப்பதால் எங்கள் பகுதியினருக்குக் கிடைக்கிறது. டிரான்ஸ்போர்ட் டைரக்டரிடம் சொன்னேன். அவர் உடனே கோபப் படுகிறார். ஏன் அப்படிக் கோபப்படுகிறார் என்று கேட்க வேண்டும். காங்கிரஸ் மெம்பர், காங்கிரஸ் ஆட்சி நல்ல முறையில் நடைபெறுகிற சந்தர்ப்பத்தில், அஸெம்பெளிக்குள் இவ்வளவு தூரம் பேச வேண்டுமென்றால் எனக்கு எவ்வளவு வருத்தம் இருக்கும் என்று நினைத்துக் கொள்ளுங்கள். இப்போது நான் ரூமுக்குள் போனால் குறைந்தது 20 கண்டக்டர்கள் இருப்பார்கள், 20 டிரைவர்கள் இருப்பார்கள். எங்கள் பகுதி பைலிங்குவல் பகுதி. அங்கே இருக்கிறவர்கள் மலையாளம் படித்திருப்பார்கள், தமிழும் படித்திருப்பார்கள். தாய் பாஷை தமிழாக இருந்தாலும், மலையாளம்தான் நன்றாகப் பேசுவார்கள். இதே நிலையில்தான் தமிழில் பேசுவதற்குக் கஷ்டம் இருக்கும். நான் இந்த நாட்டிலே பிறந்து வளர்ந்தவன். நான் கூட அப்படித்தான். மாவட்ட ஆட்சியானது மாநில சர்க்காருக்குக் கீழே, அதற்குக் கட்டுப்பட்டு, அடங்கி ஒடுங்கி இருக்க வேண்டும். மலையாளம் படித்த காரணத்தினால் உத்தியோகம் இல்லை என்று சொல்லுவதை ஆண்டவன்தான் கேட்க வேண்டும், மந்திரியும் கேட்கவேண்டும். இந்தச் சர்க்காரும் கேட்கவேண்டும். எனவே அதை நன்கு, நல்ல முறையில் சிந்தித்து, சீர்தூக்கிப் பார்த்து, நல்லதொரு முடிவுக்கு வர வேண்டும்.

11-30 a.m. நான் பேப்பரிலே அடிக்கடி பார்க்கிறேன். "தி.மு.க. கட்சியினர் மந்திரி சபை அமைக்க வேண்டும், அதை என் வாழ்நாளில் நான் கண்ணாலே காண வேண்டும்" என்று சில அரசியல் மேதைகள் பத்திரிக்கையிலே எழுதுவதைப் பார்க்கிறேன். நான் ஒன்று சொல்லுகிறேன். இது முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்பட்ட கதைதான். இந்த நாட்டைப் பிரிக்கும் கொள்கையை தி.மு.க. கட்சி கைவிட்டு விட்டது. நாட்டுப் பிரிவினைத் தத்துவத்தைக் கைவிட்டுவிட்டது. கட்சியின் கொள்கையே போய்விட்டது. அவர்கள் எந்தக் காரணத்தைக் கொண்டு தங்களுக்கு வோட்டு வேண்டும் என்று கேட்கப் போகிறார்கள்? ஏதாவது கொள்கை வைத்திருந்தால் அந்த அடிப்படையில் வோட்டுப் போடு என்று கேட்கலாம், இங்கிருக்கிற என் அருமைத்





தோழர்கள் 51 பேர்கள் எந்த அடிப்படையிலே வோட்டு கேட்கப் போகிறார்களோ எனக்குத் தெரியவில்லை. நான் சொல்லுகிறேன் என்று கோபப் படக் கூடாது. உண்மையை மனம் திறந்து சொல்லுகிறேன். அவர்கள் எதிர் பார்க்கக்கூடிய சந்தர்ப்பம் இன்னும் 2,000 வருஷங்களானாலும் வரபபோவதில்லை.

நான் மேலே சொன்ன தாழ்மையான வேண்டுகோள்கள் அத்தனையையும் நல்ல முறையில் சர்க்கார் பரிசீலித்து நல்லதொரு முடிவுக்கு வந்தால், நமது நாடு என்றைக்கும் சீரும் சிறப்புமாக வாழும், நமது காங்கிரஸ் சர்க்காரை அனைவரும் போற்றுவார்கள் என்று சொல்லிக் கொண்டு, எனது உரையை முடிக்கிறேன். வணக்கம்.

***புலவர் கா. கோவிந்தன் :** கனம் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையை நமது முதல் அமைச்சர் அவர்கள் தம்முடைய முதுமைப் பருவத்தில், அதிலும் உடல் நலம் கெட்டிருந்த நேரத்தில், நின்றவாறு 90 நிமிட நேரம் படித்திருக்கிறார்கள். நாற்பத்தேழு பக்கங்கள் கொண்ட ஆங்கில உரையைப் படித்திருந்தால் சிறிது நேரம் குறைந்திருக்கும். ஆனால் 59 பக்கங்கள் கொண்ட தமிழ் உரையைப் படித்திருக்கிறார்கள். அந்த அளவுக்கு அவருக்குத் தமிழ் பற்று இருக்கிறது என்பதற்காக நான் அவரைப் பாராட்டுகிறேன். இதைப் படிப்பதற்கு இவ்வளவு அரும்பாடு பட்டிருக்க வேண்டுமா ? இந்த அறிக்கையில் அதற்கு ஏற்றதாக ஏதாவது நல்ல செய்தி இருக்கின்றதா என்றால், நிச்சயம் இல்லை. ஆனால், இதுதான் தாம் அளிக்கும் கடைசி நிதிநிலை அறிக்கை என்பதாலோ, அல்லது 1967-ம் ஆண்டு தேர்தலுக்கு முன்னாலே சமர்ப்பிக்கப்படுகிற நிதி நிலை அறிக்கை என்ற காரணத்தினாலோ, அரும்பாடுபட்டு பற்றாக் குறை இருக்கக் கூடாது. உபரி இருக்கவேண்டும். வரிக் கழிவு இல்லை என்றாலும், புதிய வரி இல்லாமலாவது இருக்க வேண்டும் என்ற கருத்தோடு மிகவும் ஜாக்கிரதையாகத் தம்முடைய நீண்டகால அனுபவத்தையொட்டி இதைத் தயாரித்திருக்கிறார்கள். ஏட்டில்தான் பற்றாக்குறை இல்லை. ஆனால் நாட்டில் எல்லா நிலையிலும் பற்றாக் குறைதான். உணவுப் பற்றாக்குறை, மழைப் பற்றாக் குறை, மின்சாரப பற்றாக்குறை, நிதிப் பற்றாக்குறை, மூலப் பொருள்கள் பற்றாக்குறை, அன்னியச் செலாவணிப் பற்றாக்குறை என எல்லாம் பற்றாக்குறை என்ற நிலைதான்.

வரி இல்லை என்று சொன்னார்கள். வரி இல்லையா? நான்கு திங்கள்கூட ஆகவில்லை. மின்சார வரி உயர்வு, விற்பனை வரி உயர்வு, எரி பொருள் விற்பனை வரி உயர்வு, நிலவரி, நீர்வரி உயர்வு இவற்றின் காரணமாக இன்றைக்கு அவர்கள் கணக்குப்படி ரூ. 8·10 கோடி வரக்கூடிய அளவுக்கு வரிகளைப் போட்டிருக்கிறார்கள். அந்த வரிகளைத் தண்டுகின்ற நேரம் இப்பொழுது. ஆகவே, இப்பொழுது எங்கே வரி போட முடியும் ? நிதி நிலை அறிக்கையிலே வரி இல்லை. ஆனால், இந்தச் சர்க்காரை நம்ப முடியாது. வரி போடுவது நிதிநிலை அறிக்கை கொடுக்கிற நேரத்தில் தான் என்ற ஒரு முறையைச் சர்க்கார் கைக்கொண்டிருக்கிறதா என்றால், நிச்சயமாக இல்லை என்று தான் சொல்ல வேண்டும். சென்ற ஆண்டில் 1965-66-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கை சமர்ப்பிக்கிற நேரத்தில் பற்றாக் குறை பட்ஜெட்தான். ஆனாலும் அப்பொழுது வரிபோடவில்லை. அடுத்து, 1965-ம் ஆண்டு நவம்பர் மாதம் 3-ம் தேதியில் நிதி நிலைமை பற்றிய அறிக்கையில் புதிய வரிகளைப் போட்டுவிட்டார்கள். ஆகவே, இந்த நிதிநிலை அறிக்கையிலே வரி இல்லை என்று சொன்னாலும், எதிர்காலத்தில் வரி போடாமல் இருப்பார்கள் என்று சொல்லுவதற்கு எந்தவிதமான உறுதிப்பாடும் இந்தச் சர்க்காரைக் கொண்டு மதிப்பிட முடியாது என்ற நிலை இருக்கிறது.

நாட்டிலே இன்று இருக்கும் நிலைமையை எண்ணிப் பார்க்கவேண்டும். "திங்கள் கிழமை இரவு ஒரு வேளை உணவைத் தியாகம் செய்யுங்கள் ; திங்கள் கிழமை மாலை உணவு விடுதிகள் திறக்கப்படக் கூடாது ; திங்கட் கிழமை மாலை காபி, தேனீர் மட்டும் தரலாம் ; திங்கள் கிழமை மாலை நடைபெறும் உணவு விடுதிகள் தண்டனைக்குள்ளாகும் ; திங்கட்கிழமையோடு, பிறிதொரு நாளும் ஒரு வேளை உணவைத் தியாகம் செய்யுங்கள் ;

கோதுமை உணவாளர் தங்கள் அரிசி ரேஷனைத் தியாகம் செய்யுங்கள் ; இந்தியப் பிரதமர் தம் அரிசி ரேஷனைத் தியாகம் செய்து வழிகாட்டினார். உலகமக்களே, இந்தியாவுக்கு உணவு தாருங்கள் ; இந்தியாவுக்கு உணவு அனுப்ப அயல் நாடுகளில் ஒரு நாள் சம்பளம் நன்கொடை வசூலிக்கப்பட்டது : இந்தியாவுக்கு உணவு அளிக்குமாறு உலக கத்தோலிக்கர்களுக்குப் போப்பாண்டவர் வேண்டுகோள் ; இந்தியாவுக்கு உணவு அளிக்க நிதி திரட்ட அயல் நாடுகளில், டெலிவிஷன் நிகழ்ச்சிகளைக் கைவிட வேண்டுகோள் ; இந்தியாவுக்கு உணவுக் கப்பலில் சென்றால் காலம் அதிகமாகும்: அதுவரை தாங்காது. ஆகவே, விமானத்தில் அனுப்ப அமெரிக்கா ஏற்பாடு; கப்பலில் இருந்து இறக்கப்படும் உணவை உள் நாட்டுக்குக் கொண்டு செல்ல போப்பாண்டவர் டிரக்குகள் நன்கொடை ; அமெரிக்கா அளிக்கும் உணவு மூட்டைகளை ஏற்றுக் கொள்ள ஒரு விழா ; அவர்கள் அளிக்க அதை கனம் முதல் அமைச்சர் அவர்கள் வாங்கிக் கொள்கிற காட்சிக்கு ஒரு படம். அந்தப் படத்தை பத்திரிகைகளில் பொது மக்கள் பார்த்துவிட்டுச் சிரிக்க மாட்டார்களா ? "தனி ஒருவருக்கு உணவு இல்லையெனில் ஜகத்தினை அழித்திடுவோம்" —இது அக்காலப் பாடல். ஜகத்தினை மண்டியிட்டுப் மடிப் பிச்சை கேட்போம்—இது இக்காலப் பாடல். இந்த நிலைதான் இப்பொழுது இருக்கிறது.

" இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகியற்றி யான் ".

ஒருவர் பிச்சை எடுத்து வாழக்கூடிய நிலைமை இருந்தால், நாட்டை ஆளுகின்றவனை அழித்துவிடலாம் என்று சொன்னார் வள்ளுவர். எதற்குப் பிறகு இந்நிலை ? 17 ஆண்டு கால இடைவிடா ஆட்சிக்குப் பிறகு, எங்களை அசைக்க முடியாது என்று சொல்லக்கூடிய நிலையில் 17 ஆண்டுகள் கழித்த பிறகு இந்த நிலை ஏற்பட்டிருக்கிறது. 1954–55-ல் 43 கோடி ரூபாயாக இருந்த வரித் தொகை இப்பொழுது ரூ. 188 கோடிக்கு உயர்ந்திருக்கிறது. இவ்வளவு வரி போட்ட பிறகு, மூன்று திட்டங்களின் பெயரால் ரூ. 607 கோடி பாழாக்கிய பிறகு இந்த நிலை இருக்கலாமா ? வரி உயர்வைப் பற்றிப் பேசுகிற நேரத்தில், நம்முடைய தொழில் அமைச்சர் அவர்கள் வரி உயர்வு நாட்டின் பொருளாதார வளர்ச்சியைக் காட்டுகிறது என்று சொன்னார்கள். பொருளாதாரம் எந்த அளவுக்கு வளர்ச்சி அடைந்திருக்கிறது. பொருளைச் செய்ய வேண்டும் என்று தான் வள்ளுவர் கூறினார். ஆனால், பொருளை வரியாக வாங்குவதா ? வரி உயர்ந்திருக்கிறது. எனக்கு முன்பு பேசிய திரு வீரபாகு அவர்கள் வரியில்லாத வருவாய் கம்யூனிஸ்டு நாட்டில் தான் இருக்கும் என்று சொன்னார். ஆனால் அவரே பஞ்சாயத்து வரி, நிலவரி போன்றவற்றையும் கண்டித்துப் பேசக்கூடிய அளவுக்குப் பேசியிருக்கிறார்கள். வரிக் கொடுமை இந்த நாட்டில் தாங்கக்கூடிய நிலையில் இல்லையே ? நமது பொருளாதாரம் வளர்ந்திருக்கிறதா ? நல்ல பணக்காரர் வீட்டில் கலியாணம் செய்து கொண்ட ஒரு ஏழை வீட்டு இளைஞன் பணக்கார மாமனார் வீட்டிற்குப் போவதற்கு அச்சத்தோடு போவான். ஏனென்றால், மாமனார் ஏழை வீட்டுப் பையன் என்று அவனை இடித்துக் காட்டுகிற நிலை இருந்தால் அவன் அச்சத்தோடுதான் போவான். அந்த அளவுக்கு அவன் தன்னைக் கூனிக் குறுக்கிக் கொண்டு தான் மாமனார் வீட்டிற்குப் போவான். அதேபோல் தொழில் அமைச்சர் அவர்கள் ஜப்பான் நாட்டிற்குப் போய் வந்திருக்கிறார்கள். சேலம் இரும்பு ஆலைக்கு ஜப்பான் பணம் உதவி செய்யலாமா, செய்யக் கூடாதா என்பது பற்றிய பரிசீலனையின் போது கடன் கொடுத்தால் கடனைத் திருப்பிக் கொடுக்கக்கூடிய அளவுக்கு இந்தியாவுக்கு வாய்ப்பு, வசதி இருக்கிறதா என்று அவர்கள் கேட்கக்கூடிய நிலை இருந்தது. அது கேட்டுத் தொழில் அமைச்சர் தம்முடைய தலையை இறக்கிக் கொள்ளக் கூடிய அளவுக்கு நம்முடைய நாட்டுப் பொருளாதாரம் சீர்கெட்டிருப்பதை நாட்டு மக்கள் அறியாமலா இருக்கிறார்கள் ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** அம்மாதிரி அவர்கள் கேட்கவில்லை. அம்மாதிரி ஏதாவது சொன்னார்களா என்று ஜப்பானியக் குழுத் தலைவரைக் கேட்டதற்கு 'ஜப்பானிய பாஷையிலே பேசினேன், ஆங்கிலத்தில் அதை 'டிரான்ஸ்லேஷன்' செய்தது சரியான டிரான்ஸ்லேஷன் இல்லை' என்று சொல்லிவிட்டார்கள்.





**புலவர் கா. கோவிந்தன் :** விளக்கத்திற்கு நன்றி. பத்திரிகையிலே அவர்கள் கேட்ட செய்தி தான் வந்ததே தவிர, அமைச்சர் அவர்கள் சொன்ன விளக்கம் பத்திரிகையில் வந்ததாக எனக்குத் தெரியவில்லை. என்றாலும், அமெரிக்கா நமக்கு உணவு கொடுக்கிற நேரத்தில் 'நாம் இந்தியாவுக்கு எப்பொழுதும் சோறு போட்டுக் கொண்டே இருக்க முடியுமா, எப்பொழுதும் பற்றாக்குறையைச் சரிக்கட்ட அமெரிக்கா உணவு வைத்திருக்கிறதா, அவர்களுக்கு வேண்டிய சோற்றை அவர்களே உற்பத்தி செய்து கொள்ள வேண்டும். அந்த முறையில் முயற்சி நடந்து கொண்டிருக்கிறதா, அதற்கான வாய்ப்பு இருக்கிறதா என்று தெரிந்தால்தான் உணவு அளிக்க முடியும்' என்று கூறினார்கள், கூறுகிறார்கள். இப்படிப்பட்ட கட்டுப்பாட்டில் வாங்குகிற உணவை வாங்கக் கூடாது என்று தேசீயத் தலைவர்கள்கூட வாதிட்டார்கள். அது நம்முடைய நாட்டின் பொருளாதார வளர்ச்சியையா . காட்டுகிறது என்று எண்ணிப் பார்க்க வேண்டும்.

உணவு உற்பத்தித் திட்டம் எந்த அளவுக்குப் பின் தங்கியிருக்கிறது என்பதைப்பற்றி எங்களுடைய கட்சி உறுப்பினர் திரு. மாதவன் அவர்கள் குறிப்பிட்டார்கள். மூன்றாவது திட்டக் குறிக்கோள் 17 லட்சம் டன். ஆனால் சாதனை 13·30 லட்சம் டன் தான். இந்த நேரத்தில் நான்காவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திற்குள் ரூ. 71·75 லட்சம் டன்னுக்குப் போகப் பார்க்கிறார்கள். எப்படிப் போக முடியும் ? நிலத்தின் உற்பத்தித் திறன் உயர் கட்டத்தை அடைந்து விட்டது. இனிமேலும் அதை உயர்த்த முடியாது. உற்பத்தியாகும் நிலப்பரப்பையும் இனி உயர்த்த முடியாது. நாட்டில் ஒரு துளித் தண்ணீர்கூட வீணாகாமல் பயன்படுத்திவிட்டோம். ஆக பயன்படுத்தக்கூடிய தண்ணீர் இல்லை என்று சொல்லுகிறார்கள். உற்பத்தித் திறன் உயராது ; நிலம் கிடைக்காது ; உற்பத்தி செய்யத் தண்ணீர் வசதி கிடையாது. இவ்வளவும் இருந்த நேரத்தில் குறிக்கோளை அடையாதவர்கள் இப்போது எப்படி அடைவார்கள் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். உணவிலே தன்னிறைவு பெற வேண்டும் என்று சர்க்கார் குறிக்கோள் வைத்திருக்கிறார்கள். அதை ஓரளவு கைவிட வேண்டும். நாட்டிலே கிடைக்கும் உணவுப் பொருள்களுக்குமேல் வேண்டியிருந்தால் அதை அந்நிய நாட்டில் இருந்து அடைவதில் பிசகு இல்லை. ஆனால், அதைப் பிச்சையாகக் கேட்டு வாங்காமல், பண்டமாற்று முறையில் வாங்கத் தக்க ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். அப்படிப் பொருள்களை உற்பத்தி செய்யத் தொழில்களைப் பெருக்க வேண்டும். அதற்கான வழிவகைகளைச் சர்க்கார் செய்ய வேண்டும். எல்லாவற்றையுமே நம் நாட்டில் விளைவிக்க வேண்டும் என்பது பிற்போக்கான கொள்கை. சாதாரணமாக விவசாயியைப் போல அவ்வளவு வறுமை உள்ள குடும்பங்கள் அல்ல வியாபாரம் செய்கிறவர்கள் என்பதை மனதில் கொள்ள வேண்டும்.

பதினெட்டு அவுன்சு பற்றிக் கனம் அங்கத்தினர் வீரபாகு கேலியும் கிண்டலுமாகப் பேசினார்கள். பதினெட்டு அவுன்சு கொடுக்க 61·41 லட்சம் டன் தானியம் வேண்டும் என்று நான்காவது திட்டம் என்கிற அறிக்கையில் சர்க்காரே கொடுத்திருக்கிறது. ஆனால் இன்றைக்கு நாட்டின் நிலைமை என்ன ? அத்தனைபேரும் 18 அவுன்சு சாப்பிடுகிறார்களா ? பொருள் இல்லை என்பதால் மக்கள் தொகையில் பாதிப்பேர் பாதிகூடச் சாப்பிடவில்லை. அம் முறையில் நம்முடைய தேவைக்குப் போக மிச்சப்படும் உணவு எங்கே போய் விட்டது? பற்றாக்குறை இருப்பதற்கே நியாயம் இல்லையே.

கொள்முதல் பற்றிப் பல கனம் நண்பர்கள் பேசினார்கள். அதைப் பற்றிச் சர்க்கார் தீவிரமாகச் சிந்தித்தாக வேண்டும். உண்மையிலேயே நெல் விளைந்திருக்கிறது என்றே வைத்துக் கொள்வோம். விவசாயியின் தயக்கத்திற்குக் காரணம் என்ன ? ஒரே அறுவடை காலத்தில் நெல்லுக்கு இரண்டு விலைகள். இச்சிலி சம்பாவிற்கு இன்று ஒரு விலை. பின்னால் ஒரு விலை. ஆகவே விவசாயி என்ன நினைக்கிறான் ? இன்றைக்கு விற்காமல், இன்னும் கொஞ்ச காலம் தாழ்த்தி விற்றால், சர்க்கார் அதிகவிலை கொடுக்கும் என்று நினைக்கிறார்கள்.

மேலும் சர்க்கார் சில வியாபாரிகளைக் கொள்முதல் வியாபாரிகளாக நியமித்திருக்கிறார்கள். அவர்கள் ஒருவிலை கொடுக்கிறார்கள். அதே நேரத்திலே ஜே. லைசென்சுதாரர்கள் வேறு விலை கொடுக்கிறார்கள். இவர்கள் கொள்முதல் செய்துகொண்டு போகும் நெல்லை எங்கே விற்கிறார்கள் என்பதைக் கண்காணிக்க அமைப்பு இல்லை. வாங்கிய நெல்லை அப்புறப்படுத்த ஏ.டி.எஸ்.ஓ. பர்மிட் கொடுக்கிறார். ஆனால், கார்டுக்காரர் விற்பது பற்றி அறிய முடிவதில்லை. ஆகவே அவர் வாங்கியதில் 10 மூட்டைகளைச் சர்க்கார் விலைக்கு விற்றுவிட்டு, பாக்கியைத் தன் இஷ்டத்திற்கு அதிக விலைக்கு விற்கத் தலைப்படுகிறார்கள். 5, 6 ரூபாய் கூட்டி விற்கும் நிலைமை ஏற்படுகிறது. இம்முறையில் ஜே. லைசென்சுதாரர் சற்று அதிக விலையும் கொடுக்கிறார்கள் என்கிற காரணத்தினால், விவசாயிகள் கொள்முதல் வியாபாரிகளிடம் கொடுக்கத் தயங்குகிறார்கள்.

அதோடுகூட, பாலாற்றுக்கு அக்கரையிலே செய்யாறு தாலுக்காவில் 34·50 ரூ. என்றால், செங்கல்பட்டிலே 42 ரூ. என்று இருக்கிற காரணத்தினால், வெளியிடங்களில் விற்கப் போகும் நிலைமையும் இருக்கிறது. ஆகவே ஆள் மாறினால் அதிக விலை, இடம் மாறினால் அதிகவிலை, காலம் கடந்தால் அதிக விலை என்றிருப்பதால்தான் கஷ்டங்கள் ஏற்படுகின்றன. இப்படிப்பட்ட சூழ்நிலையில், அவர்கள் வீட்டிலே சீல் வைப்பது என்பது சீர்கேடான முறை. என்னுடைய தொகுதியில் இருமரம் என்கிற கிராமத்தில் ஒரு அம்மையார் அவதிக்கு உள்ளாகி இருக்கிறார்கள். அவருடைய வீட்டிலிருந்து நிலம் ஒரு பர்லாங்கு தூரத்தில் இருக்கிறது. அவர்கள் வீட்டில் 50 மூட்டை நெல் இருந்திருக்கிறது. கொள்முதல் செய்த வியாபாரி ஒருநாள் அவன் லாரிக்கு 8 மூட்டைதான் வேண்டியிருந்தது. ஆகவே அன்று அவன் எட்டு மூட்டையை எடுத்துக் கொண்டு, பாக்கி மூட்டைகளுக்குப் பின்னால் வருவதாகச் சொல்லிப் போயிருக்கிறான். ஆனால் அந்த நாளில் அவன் வரவில்லை. இதற்குள் அதிகாரிகள் சென்று வீட்டை சீல் வைத்து இருக்கிறார்கள். அன்றைக்கு அவள் கணவன் வீட்டில் இல்லை. பக்கத்து ஊருக்குப் போயிருக்கிறார். கணவன் மனைவி தவிர வீட்டில் ஒரு சிறு குழந்தைதான். கதவைப் பூட்டிக் கொண்டு அந்த அம்மையார் நிலத்திற்குத் தண்ணீர் பாய்ச்சப் போயிருக்கிறார்கள். அது பக்கத்தில்தான், ஒரு பர்லாங்கு தூரத்தில்தான் இருக்கிறது. இருந்தும், அதிகாரிகள் எதுவும் கேட்காமல் வீட்டைப் பூட்டிவிட்டுச் சீல் வைத்து விட்டுச் சென்றுவிட்டார்கள். ஆக்கிய சோறு அப்படியே இருக்க, கன்று போட்ட மாடு கட்டுத்தரையில் நிற்க, தட்டுமுட்டுச் சாமான்கள் எல்லாம் அப்படி அப்படியே போட்டது போட்டபடி இருக்க, சீல் வைத்துச் சென்று விட்டார்கள். இரவு எட்டு மணிக்கு அந்த அம்மையார் யாரிடமோ செலவிற்கு வாங்கிக்கொண்டு வாணியம்பாடி சென்று கணவனை அழைத்துக் கொண்டு செய்யாறுக்கு என்னிடம் வந்தார்கள். கலெக்டரிடம் சென்று கேட்டால், ஒரு பர்லாங்கு தூரத்திலேதான் இருந்தார்கள். வந்து நெல் இல்லை என்று சொல்லியிருக்கலாமே என்கிறார். நெல் இருப்பது, அவர்கள் கொடுத்தது, கொடுக்காதது என்பதெல்லாம் மணியக்காரருக்குத் தெரியாதா, கணக்கப் பிள்ளைக்குத் தெரியாதா ? இப்படி அதிகாரிகள் நடந்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த அம்மையார் என் மானமே போய்விட்டது என்று கண்ணீர் விட்டு அழுதாலும் அதிகாரி அதைக் கவனிக்கவில்லை. நாங்கள் வழிவழியாக நல்ல குடும்பத்தில் வந்தவர்கள், இப்படிப் பூட்டிவிட்டது, சீல் வைத்துவிட்டது, எங்கள் குடும்பத்திற்கே மானக்கேடாகப் போய்விட்டது என்று ஆர்.டி.ஓ.விடம் அழுதார்கள். ஆனால் அவர் மனம் இரங்கவில்லை.

எங்கள் பகுதியிலே பாலாற்றிலே தண்ணீர் இல்லை. அதனால் விளைச்சல் இல்லை என்பது உணவு அமைச்சருக்குத் தெரிந்ததே. பாலாற்றுப் பாய்ச்சலுக்கு உட்பட்ட ஒழுக்கவாக்கம் என்ற ஊரில் ஒரு நல்ல குடும்ப விவசாயி. அவருக்குப் பத்து ஏக்கர் நிலம் இருக்கிறது. 18 மூட்டைதான் இவ்வாண்டு விளைந்தது. வீட்டிலே வயதான தந்தையார் இருக்கிறார். அவர் பல நிறுவனங்களிலே பணியாற்றியவர். அவர் மிக்க யோக்கியமானவர். அவரிடம் அதிகாரிகள், நீங்கள் யோக்கியமாக நடந்து கொள்ள வேண்டும் என்று ஏசி, வீட்டிலே குதிரையும் கதவுகளையும் உதைத்திருக்கிறார்கள். நீங்கள் 90 மூட்டை கொடுக்க வேண்டும் என்று நோட்டீஸ் கொடுக்கிறார்கள். ஆர்.டி.ஓ.விடம் சொன்னால், " சார், நீங்கள் என்ன சொன்னாலும் சரி. எப்படியாவது கேட்ட அளவு நெல்லைக் கொடுங்கள் " என்றுதான் கூறுகிறார்கள். விவசாயியின் நிலைமை எப்படி இருக்கும் என்பதை அமைச்சர் எண்ணிப் பார்க்க வேண்டும்.





கடைசியாக இந்த நிதி நிலை அறிக்கையிலே சில பணிகள் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆசிரியர்களுக்கு ஓய்வுகால ஊதிய உயர்வு கொடுத்திருக்கிறார்கள். முதல் அமைச்சர் அவர்களே பலமுறை குறிப்பிட்டிருக்கிறார்கள். அதனால் பயன்படுபவர்கள் 500 பேர்கள் தான் இருப்பார்கள் என்று. 500 பேர்கள் பல ஆண்டுகாலமாகக் கேட்டு வந்ததை, இப்பொழுது கொடுக்க முன்வந்திருப்பதை நிதி நிலை அறிக்கையில் பெரிய பணியாகக் காட்டியிருப்பது அவ்வளவு பாராட்டுக்குரியதாகாது என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, 1, 2, 3 வகுப்புகளில் படிக்கும் பிள்ளைகளுக்குப் புத்தகங்கள் இலவசமாகக் கொடுப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அதுவும் மதிய உணவு உண்ணும் பிள்ளைகளுக்குக் கொடுக்கப் போவதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். மதிய உணவுத் திட்டம் எப்படி நடைபெறுகிறது என்பதை நாம் சொல்லத் தேவையில்லை. நாட்டிலே பல கமிட்டிகள் போடப்பட்டு, அவர்கள் தங்களுடைய கருத்தை அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்த மாணவர்களுக்கு ஸ்லேட்டு கொடுக்கப் போகிறார்கள். அரசாங்கம் வெளியிடும் புத்தகங்கள் நல்ல முறையில் அச்சடிக்கப்படாமல் இருக்கின்றன என்று நான் முன்பே கூறியிருக்கிறேன். பெருமாள் கோயில் சுவற்றில் செம்மண் தீட்டியிருப்பது போன்று பார்க்க சகிக்கமுடியாத நிலையில் விற்கப்படாமல் கட்டுக் கட்டாகக் கட்டி வைத்திருக்கும் அப்புத்தகங்களைத் கழித்து விட வழி கண்டதாக இருக்கிறதே தவிர, அதிலும் பாராட்டுக்குரியது ஒன்றும் இல்லை என்று நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

அடுத்து மாநில அரசு பணியாளர் நிலையைப் பார்ப்போம். நிதிநிலை அறிக்கை வரும்போதெல்லாம் அவர்களும் ஏதாவது வரும் வரும் என்று எதிர்பார்க்கிறார்கள். அவர்கள் தங்களுக்கு ஏதாவது வரும் என்று எதிர்பார்ப்பதற்குக் காரணம், மத்திய அரசாங்கம் தன்னுடைய பணியாளர்களுக்கு ஓரளவு கூட்டிக் கொடுத்து இருப்பதுதான். அப்படி அவர்கள் எதிர்பார்த்ததற்கு மாறாக, நிதி நிலை அறிக்கை அமைந்திருக்கிறது. அவர்களுக்கு அதில் ஒன்றும் இல்லை. ஒரு கேள்வியின் போது, ' அலவன்ஸைக் கூட்டிக் கொடுக்கக் கூடத் தேவையில்லை, அதற்கு மாறாக, பத்து ஆண்டுகளுக்கு முன்பு என்ன விலைக்கு பொருள்கள் விற்றனவோ, அந்த விலைகளுக்குப் பொருள்கள் தந்துவிட்டால் போதும் என்று நான் கூறினேன். முதல் அமைச்சர் அவர்களும், " கொள்கை அளவில் ஒத்துக்கொள்ளுகிறேன் " என்று சொன்னார்கள். அதற்கு ஒரு வழிமுறை இன்னும் ஏற்படவில்லை. ஆனால், எதைக் காட்டியிருக்கிறார்கள் ? கன்ஸ்யூமர்ஸ் கூட்டுறவு சொஸைட்டி வைத்து அதன் மூலமாக விலையைக் கட்டுப்படுத்துகிறோம் என்று சொல்கிறார்கள். யார் சொல்கிறார்கள் ? " கூட்டுறவு இயக்கத்திலே இருக்கும் நம்பிக்கையை நான் அறவே இழந்துவிட்டேன் ; கூட்டுறவு இயக்கம் இனி வாழ்வுக்கு வழி காட்டாது " என்று சொல்லும் முதல் அமைச்சர் அந்தக் கூட்டுறவு இயக்கத்தின் மூலமாக, பொருள்களின் விலைவாசியைக் குறைத்து அவர்களுக்குத் தருவதாகச் சொல்வது, போகாத ஊருக்கு வழி காட்டிய கதையாக இருக்கிறதேயொழிய, உண்மையிலேயே நடைபெறுகிற நிகழ்ச்சியாக இல்லை. இப்படி, ஏமாற்றங்கள் நிறைந்த, பலன் ஏதும் அளிக்கக்கூடிய திட்டம் இல்லாத இந்த நிதி நிலை அறிக்கையைப் பாராட்டுவதற்கில்லை என்று கூறி என்னுடைய கருத்துரையை முடிக்கின்றேன். வணக்கம்.

* **திரு. ரா. சுப்பிரமணியம் :** கனம் தலைவர் அவர்களே, முதல் அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள இந்த 1966-67-ம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் நான் கூற ஆசைப்படுகிறேன்,

நாம் இப்பொழுது மூன்றாவது திட்டம் முடிவுறும் தறுவாயில் இருக்கிறோம். ஒவ்வொரு திட்ட காலத்திலும், கூடுதலாக எவ்வளவு தானியம் உற்பத்தி செய்ய வேண்டும் என்று நாம் திட்டம் போட்டு, ஒவ்வொரு திட்ட முடிவிலும் அதிகமான அளவில் நாம் தானிய உற்பத்தியைச் செய்து கொண்டு வந்திருக்கிறோம். முதல் திட்ட முடிவில் கூடுதலாக 6 லட்சம் டன் உணவு தானிய உற்பத்தி செய்திருக்கிறோம். இரண்டாவது திட்ட முடிவில் அதைவிட 9 லட்சம் டன் அதிகமாக உற்பத்தி செய்திருக்கிறோம். அதே போன்று இந்த மூன்றாவது திட்ட இறுதியிலும் நாம் மேற்கொண்டு 13½ லட்சம் டன் அதிக உற்பத்தி செய்திருக்கிறோம். நாம் அதிகமாக உற்பத்தி செய்திருந்தாலும் கூட, அது நாம் கூடுதலாக என்ன அடையவேண்டும் என்று திட்டம் போட்டிருந்தோமோ, அதைவிடக் குறைவாகவே இருக்கிறது. இதற்குக் காரணம் போதிய உரம் இல்லை என்று முதல் அமைச்சர் அவர்களே சொல்லியிருக்கிறார்கள். ஒவ்வொரு திட்டக் கடைசியிலும், நமக்குக் குறைவாக தானிய உற்பத்தி ஏற்படும்போது நாம் சொல்லக்கூடிய காரணம், உரம் போதிய அளவு நமக்குக் கிடைக்கவில்லை என்பதுதான். அதையே நாம் ஒவ்வொரு தடவையும் சொல்லிக் கொண்டு வருகிறோம். ஆனால், உரம் கிடைக்கவில்லையென்றால், இப்பொழுது நமக்குக் கிடைக்கக்கூடிய தானிய விளைச்சல், அதே அளவில் இருக்குமா அல்லது மேலும் குறையுமா என்பதை நாம் கவனிக்கவேண்டும். நாம் ஒரு சமயத்தில், இந்த ரசாயன உரங்களையெல்லாம் அதிகமாகப் போட வேண்டும் என்று விவசாயிகளிடத்தில் சொன்ன நேரத்தில், விவசாயிகள் அதைப் போடுவதற்கு மறுத்த காலமும் ஒன்று உண்டு. ஆனால், இப்பொழுது விவசாயிகள் அதிகமான ரசாயன உரம் போடுவதனால் அதிகமான பலனை அடையலாம் என்ற முறையில் இப்பொழுது ரசாயன உரம் போடுவதில் அவர்களுக்குப் பழக்கம் ஏற்பட்டுவிட்டது. ஆகையால், இப்பொழுது ரசாயன உரம் போடுவதை நாம் தடுத்து நிறுத்த முடியாது. அம்மாதிரி தடுத்து நிறுத்தினாலும்கூட, அதனால் பலன் குறைய ஆரம்பிக்குமே தவிர, அதே நிலையில்கூட இருப்பதற்கு ஏது இல்லை. ஆகையால், விவசாயிகளுக்கு நாம் உரத்தை அதிகமாகக் கொடுக்க வழி செய்தாக வேண்டும்.

இப்பொழுது புதிய ரக நெல்லைக் கண்டுபிடித்திருக்கிறோம். புதிய ரக நெல்லின் மூலமாக அதிகமான விளைச்சலை ஏற்படுத்த முடியும் என்ற நம்பிக்கை நமக்கு இருக்கிறது. அம்மாதிரி அதிகமாக விளைச்சல் ஏற்படும் என்றால், அதிகமான உரத்தை அதற்குப் போடவேண்டும். நல்ல விளைச்சலைக் கொடுக்கக் கூடிய புதிய ரக நெல்லுக்கு அதற்கேற்ப அதிக உரம் போட வேண்டும். சாதாரண நெல்லுக்கும் எந்த அளவுக்கு உரம் போடுகிறோமோ, அதே அளவு ஏ.டி.டி. 27 போன்ற புதிய ரகத்திற்கும் உரம் போட்டால் சாதாரண ரக நெல் கண்டுமுதல் ஆகிற அளவுக்குக் கூட புதிய ரகத்தில் கண்டுமுதல் ஆகாமல், குறைய ஆரம்பிக்கிறது. ஆகையால், நாம் உயர்ந்த ரக நெல்லை போடும்போது, அதற்கு அதிகப்படியான அளவில் உரத்தை நாம் கொடுக்க வேண்டியதாக இருக்கிறது. இந்த உரம் விவசாயிகளுக்குக் கிடைக்க வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். ஏற்பாடுகளைச் செய்வதோடுகூட, காலா காலத்தில் அவர்களுக்குக் கிடைக்கவும் நாம் ஏற்பாடு செய்யவேண்டும். இந்த வருஷம் ஆரம்ப காலத்தில் விவசாயிகளுக்கு ஸூபர்பாஸ்பேட் கிடைப்பது மிகவும் அரிதாகிவிட்டது. அநேக விவசாயிகளுக்கு ஸூபர்பாஸ்பேட்டு கிடைக்கவில்லை. அம்மாதிரி ஸூபர்பாஸ்பேட் கிடைக்காததால், விவசாயிகள் கஷ்டமான நிலையை அடைந்தார்கள். ரசாயன உரத்தைப் போடும் பழக்கத்தை அவர்களுக்கு நாம் ஏற்படுத்திவிட்ட பிறகு, திடீர் திடீர் என்று இம்மாதிரி ரசாயன உரத்தைக் கொடுக்காமலிருந்தால், உற்பத்தி ஏதோ இப்பொழுது உள்ள அளவில்தான் இருக்கும் என்று சொல்ல முடியாது; இதைவிட விளைச்சல் குறைய ஆரம்பித்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. ஆகையால், இதைக் கவனித்து, விவசாயிகளுக்குப் போதிய உரம் கிடைப்பதற்கான வழிவகை செய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நல்ல ரக விதைகள் விவசாயிகளுக்குக் கிடைக்க வேண்டும். சர்க்கார் விதைப் பண்ணைகள் ஏற்படுத்தி வருகிறோம். அவற்றின் மூலமாக விதைகள் கொடுத்து வருகிறோம், சர்க்கார் விதைப் பண்ணைகள் என்று சொல்லும்போது, எதிர்க்கட்சி நண்பர்களில் சிலர், "லாபத்தில் ஓடியதா? நஷ்டம் வந்ததா?" என்று கேட்கிறார்கள். விதையைப் பொறுத்த வரையில், லாப நஷ்டக் கணக்கை நாம் பார்த்துக் கொண்டிருக்கக் கூடாது. விதையைப் பொறுத்த வரையில், நல்ல ரக விதை ஏராளமாக விவசாயிகளுக்குக் கிடைக்கின்றதா என்பதுதான் நம்முடைய குறிக்கோளாக இருக்கவேண்டும். அம்மாதிரி குறிக்கோளுடன் நாம் நம்முடைய விதைப் பண்ணைகளில் நல்ல விதைகளை உற்பத்தி செய்யவேண்டும். இப்பொழுது கிராமங்களில் கிராம சகாயத் திட்டம் ஒன்று ஏற்படுத்தி, அவர்கள் மூலமாக இப்பொழுது நாம் விதை விநியோகம் செய்து வருகிறோம். கிராம சகாயத் திட்டம் நன்றாக வெற்றி பெற வேண்டுமானால், அவர்கள் கொடுக்கக்கூடிய விதைக்கு ஸப்ஸிடி இன்னும் அதிகமாகக் கொடுக்கவேண்டும். இப்பொழுது ஏதோ மூட்டை ஒன்றுக்கு 3 ரூபாய், 2½ ரூபாய் கொடுக்கிறார்கள். இது போதாது. குறுவை நெல்லை அவர்கள் எடுத்துக் காய வைத்து விதையாகக் கொடுப்பதென்றால், கிட்டத்தட்ட நாலில் ஒரு பங்கு காய்ச்சல்பாட்டிற்குப் போய்விடுகிறது. இப்படியெல்லாம் கஷ்டமான நிலை ஏற்படுகிறது. ஆகையால், ஸப்ஸிடியை நாம் சற்று அதிகரித்துக் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். இம்மாதிரி விதைகள் சேமித்து வைத்துக் கொடுப்பதற்கு ஒவ்வொரு யூனியனிலும் ஒரு விதைச் சேமிப்புக் கிடங்கை நாம் ஏற்படுத்த வேண்டும். விதைச் சேமிப்புக் கிடங்கு இருந்தாலொழிய நல்ல முறையில் நல்ல விதைகளைச் சேகரித்து வைத்து விவசாயிகளுக்குக் கொடுக்க முடியாது என்பதை நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.





ஸாயில் டெஸ்டிங் யூனிட்டை நாம் வைத்திருக்கிறோம். ஸாயில் டெஸ்டிங் யூனிட் வைத்திருந்தாலும், எந்த விவசாயி அக்கறை எடுத்துக் கொள்ளுகிறானோ, அந்த விவசாயி கொண்டுவருகிற மண் வளத்தைத்தான் நாம் பரிசோதனை செய்து கொடுக்கிறோமே தவிர, ஒரு பஞ்சாயத்தை எடுத்துக் கொண்டால், அந்தப் பஞ்சாயத்து பூராவாக அங்குள்ள மண் வளத்தைப் பரிசோதனை செய்வதில்லை. எந்த எந்த இடங்களில் எந்த எந்த விதமான மண் இருக்கிறது, அந்த மண்ணுக்கு என்ன உரம் போட வேண்டும் என்ற ஒரு திட்டம் நம்மிடம் கிடையாது. ஏதோ கிராமசேவக் வைத்திருக்கிறோம். விவசாய விஸ்தரிப்பு அதிகாரி இருக்கிறார். அவர்களெல்லாம் ஏதோ அன்றாடம் வேலை செய்துகொண்டு, ஆபீசர் என்ன சொல்லுகிறாரோ, அதை வைத்துக்கொண்டு செயல்படுகிறார்களே தவிர, உண்மையிலேயே விவசாயிகளுக்கு ஊக்கம் ஏற்படுத்தக்கூடிய முறையில் எந்த வேலையும் செய்வதாக எனக்குத் தோன்றவில்லை. ஆகையால், பஞ்சாயத்துப் பகுதியில் உள்ள மண் வளத்தைப் பரிசோதனை செய்து, "ஸாயில் மாப்" ஒவ்வொரு பஞ்சாயத்திலும் வைத்து, எந்த எந்த மண் வளத்திற்கு எந்த எந்த விதமான உரம் போட வேண்டும் என்பதையும் நாம் அதில் குறித்து ஒவ்வொரு விவசாயினுடைய கையிலும் நாம் கொடுக்கவேண்டும். அம்மாதிரி கொடுத்தால்தான் உணவு உற்பத்தி பெருக முடியுமே தவிர, பல திட்டங்களைச் சொல்லிக்கொண்டு போவதனால் மட்டும் எந்தவிதமான பிரயோசனமும் ஏற்படாது என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, பூச்சித் தொல்லை. இதைப்பற்றி அடிக்கடி சொல்லிக் கொண்டு வருகிறோம். காலரா, ப்ளேக், அம்மை போல இது ஒரு தொத்து
வியாதி. ஒரு வயலுக்கு வந்தால் அதோடு நின்றுவிடுவதில்லை. தொடர்ந்து 12-00 noon.
எல்லா வயலையும் அடித்துக்கொண்டு போகிறது. பணம் உள்ளவர் தம் வயலுக்கு பூச்சி மருந்து வாங்கி அடிக்கிறார், இல்லாதவர்கள் அப்படியே விட்டுவிடுகிறார்கள். பொதுவாக இந்தப் பூச்சியினால் அந்தப் பகுதியில் வெள்ளாமை குறைந்துவிடுகிறது. ஆகவே ஒரு பஞ்சாயத்து பகுதியில் பூச்சி விழுந்தது என்றால் உடனே அங்குள்ள கிராமசேவக்கைக் கொண்டோ அல்லது மற்ற அதிகாரிகளைக் கொண்டோ, அந்தப் பகுதி பூராவும் மருந்து அடிக்கச் செய்ய வேண்டும். இதற்கு ஆகும் செலவை நிலவரியோடு கூடச் சேர்த்து வசூல் செய்துகொள்ளலாம். பூச்சி என்றால் ஒருவிதமான பூச்சியில்லை. பலதரப்பட்டவை. எந்தப் பூச்சிக்கு எந்த மருந்தை அடிக்க வேண்டும் என்று பார்த்து, பூச்சி விழும் காலத்தில் மருந்தை ஒட்டு

[ திரு. ரா. சுப்பிரமணியம் ] [ 28th February 1966

மொத்தமாக அடித்துவிட்டு, அந்தச் செலவை நிலவரியோடு வசூல் செய்து கொள்வதுதான் நல்லது. விளைச்சல் பெருக வசதியாக இருக்கும் என்பதைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதற்கடுத்தபடியாக நான் ஏற்கனவே குறிப்பிட்டதுபோல கிராம சேவக்குகள் காலையில் எழுந்திருந்தால் எந்த எந்த வகையில் தங்கள் மேலதிகாரிகளைத் திருப்தி செய்யலாம் என்று பார்க்கிறார்களே தவிர, கிராம வேலைகளைக் கவனிப்பதில்லை. அவர்கள் திறமையை—பஞ்சாயத்துகளில் உற்பத்தி சென்ற ஆண்டு எவ்வளவு, இந்த ஆண்டு எவ்வளவு அதிகப்படுத்தப்பட்டிருக்கிறது என்று பார்த்து—உற்பத்தியை அதிகப்படுத்த தீவிரமாக வேலை செய்துள்ள கிராம சேவக்குகளுக்குப் பரிசு கூட அளிக்கலாம். அதுபோல பஞ்சாயத்து யூனியன்களை எடுத்துக்கொண்டு எந்த பஞ்சாயத்து யூனியன் அதிக உற்பத்தி செய்திருக்கிறதோ, அதன் விவசாய அதிகாரிகளுக்குப் பரிசு அளிக்கலாம். இது எல்லாம் ஊக்கத்தை அதிகப்படுத்தும். போட்டி மனப்பான்மை ஏற்படும். இதில் போட்டி மனப்பான்மை நல்லது.

மேலும் நான் முன்பு குறிப்பிட்டதுபோல பூச்சித் தொல்லை, பருவ மழைக் கோளாறு ஆகியவற்றின் மூலமாக விவசாயிகளுக்கு எதிர்பார்த்த பலன் கிடைப்பதில்லை. வாங்கிய கடனைக்கூடக் கொடுக்க முடியாத நிலை ஏற்படுகிறது. அவர்களுக்கு நன்மை செய்யும் பொருட்டு பயிர் பாதுகாப்புத் திட்டத்தை நாம் எவ்வளவு சீக்கிரம் கொண்டு வருகிறோமோ, அவ்வளவுக்கு நல்லது. பயிர் பாதுகாப்புத் திட்டத்தைக் கொண்டு வந்தால் தான் விவசாயிகளுக்குத் தெம்பு ஏற்படும். நவீன முறைகளைக் கையாள அவர்களுக்கு தைரியம் ஏற்படும். அதுபோலவே கால் நடைப் பாதுகாப்புத் திட்டத்தையும் கொண்டு வந்தாகவேண்டும்.

அடுத்தபடியாக, விலைக்கட்டுப்பாடு. ஒரு மூட்டைக்கு 23·94 ரூபாய், குவிண்டாலுக்கு 2 ரூபாய் போனஸ் சேர்த்துக்கொடுப்பது என்று சொல்லியிருக்கிறார்கள். விலைக் கட்டுப்பாடு என்றால் நகரத்தில் உள்ளவர்களை மனதில் நினைத்து நெல்லுக்குத்தான் கட்டுப்பாடு என்ற நிலைக்கு வந்துவிட்டோம். பாக்கியுள்ள எல்லாப் பொருள்களுக்கும் கட்டுப்பாடு வேண்டும். இன்றைக்கு விவசாயிகள் தங்களுக்குத் தேவைப்படுகிற விவசாய சாதனங்கள், புளி, பருப்பு, மிளகாய், துணி போன்ற பலபொருள்களை வாங்கிக்கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறார்கள். நெல்லுக்குத் தவிர மற்றவற்றுக்குக் கட்டுப்பாடு இல்லை என்றிராமல் எல்லாவற்றுக்கும் கட்டுப்பாடு கொண்டு வரவேண்டும்.

அடுத்தபடியாக விவசாய வருமான வரியைப் பொறுத்த வரையில் மலைத்தோட்டம் நீங்கலாக 50 லட்சம் ரூபாய் வந்திருப்பதாகச் சொன்னார்கள். இது அதிகம் இல்லை. இதற்கென்று தனி அதிகாரிகளைப் போடாது, ரெவின்யூ ஆபீசர்களைக் கொண்டே இதை இனிமேல் வசூல் செய்ய ஏற்பாடாயிருக்கிறது. இதைப்பற்றி முதல் அமைச்சரவர்கள் சொல்லி வந்தபோது இதை எடுத்துவிடப்போவதாக அறிவிக்கப்போகிறார்கள் என்று நினைத்தேன். விவசாய் வருமான வரியையே எடுத்துவிட்டு—தலைவர் திரு. காமராஜ் அடிக்கடி குறிப்பிடுவதுபோல—கிஸ்ட் ஆன் க்ராப் பாடர்ன் கொண்டுவந்துவிட வேண்டும். பயிருக்குத் தகுந்த கிஸ்தி போடுவது நல்லது.

இந்த ஆண்டு தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்த வரையில் மழை கிடையாது. ஆற்றிலும் தண்ணீர் இல்லை. தாளடியைப் பொறுத்தவரையில் 75 சத வீதம் பயிர் போய் விட்டது, சம்பாவைப் பொறுத்த வரையில் 25 சத வீதம் கெட்டுவிட்டது. முதல் அமைச்சர் அவர்கள் 18-ம் தேதி கும்பகோணத்திற்கு வந்திருந்தபோது நிலவரி வஜா அளிக்கவேண்டும் என்பதாக நாங்கள் எல்லாம் ரெப்ரசென்டேஷன் செய்தோம். வரி வஜா செய்தாகவேண்டும்: அதோடு போன ஆண்டு குத்தகை அளக்க முடியவில்லை என்பதற்காக நிலத்திலிருந்து வெளியேற்றம் செய்வதையும் தடுக்க வேண்டும்: அடுத்து வடிமுனைக் குழாய்க் கிணறுகள் இரண்டாயிரம் இறக்குவதாக இருக்கிறது. உடனடியாக அவற்றுக்கு மின்சாரமும் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன், வணக்கம்,



28th February 1966 ]

*** திரு. வி. எஸ். எஸ். மணி:** கனம் சபைத்தலைவர் அவர்களே, 1966-67-ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின் பேரில் ஒரு சில கருத்துகளைச் சொல்ல விரும்புகிறேன். முதல் அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்தது நீண்ட அறிக்கை, புது வரிகள் இல்லை. இதுதான் ஆளும் கட்சியினர்களுக்கு ஒரு தெம்பாக இருக்கிறது. ஏதோ மக்களிடம் தாராளமாக நடந்துகொண்டுவிட்டதைப்போல காட்டிவிட்டார்கள். இருக்கக்கூடிய வரிகள் ஒன்றிரண்டைக்கூடக் குறைப்பார்களோ என்று நான் நினைத்தேன். காரணம் அவர்களுடைய உள்நோக்கம் எல்லாம் வரக்கூடிய பொதுத் தேர்தல்தான். கனம் முதல் அமைச்சர் அவர்கள் மிகவும் சாமார்த்தியமாகத் தயாரித்திருக்கிறார்கள். அதற்காகப் பாராட்டுகிறேன்.

இந்த அறிக்கையில் வேளாண்மைத்துறையில் அதிகக் கவனம் காட்டப்பட்டிருக்கிறது. எப்படியாவது உணவு வகையில் தன்னிறைவு பெற வேண்டும். தன்னிறைவு பெற முடியாததற்குக் காரணம் மழை இன்மை, போதுமான உரம் கிடைக்கவில்லை. உரம் என்கிறபோது நாம் பெரும்பான்மையும் ரசாயன உரத்தை நம்பியிருந்த காரணத்தினால் தான் நமது நாட்டில் உணவு பற்றாக்குறை ஏற்பட்டிருக்கிறது. ரசாயன உரத்தை ஓரளவுக்குத்தான் உபயோகப்படுத்தலாம். ரசாயன உரம் வருவதற்கு முன்பே இயற்கை உரங்கள் மூலம் விளைச்சல் இரண்டு பங்கு இருந்ததாகச் சொல்லப்படுகிறது.

அப்பொழுது எல்லாம் அவர்கள் நம்பியிருந்தது இயற்கை உரம், ஆர்கானிக் மேன்யூர், நேச்சுரல் மேன்யூர்தான். அவர்கள் அப்பொழுது பசுந்தாள் உரத்தை நம்பியிருந்த காரணத்தால்தான், நிலத்தின் பண்பு நல்ல வளர்ச்சியடைந்திருந்த நிலை இருந்தது. ஆனால் இன்று ரசாயன உரத்தை நம்பியிருப்பதால்தான் வளர்ச்சி குன்றி, பற்றாக்குறை இருக்கிறது. நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வது எல்லாம், அதிகப்படியாக இயற்கை உரத்திற்கு ஆக்கம் கொடுக்கவேண்டும். பசுந்தாள் உரத்திற்கு முதலிடம் கொடுக்கவேண்டும்.

இப்பொழுது இருக்கிற அரசாங்க கட்டாய நெல் கொள்முதலின் காரணமாக, குறிப்பாக எனது மதுரை மாவட்டத்தில், நிர்ணயித்த லெவி அளவுக்கு மேல் உழவர்களிடமிருந்து அதிகப்படியான நெல் வாங்கப்படுகிறது என்ற குற்றச்சாட்டுகள் என்னிடம் வந்துகொண்டிருக்கின்றன. ஒரு ஏக்கருக்கு 4 மூட்டை என்று இருக்கும்பொழுது, ஏழைகளாக இருக்கின்ற பல சிறு உழவர்களிடம் அதிகப்படியாக நெல் மூட்டைகள் கொடுக்க வேண்டுமென்று கேட்கிறார்கள். இதனாலே உழவர் பெருங்குடி மக்கள் பெரிதும் வேதனைப்படுகிறார்கள். இப்பொழுது அவர்கள் எல்லோரும் என்ன சொல்கிறார்கள் என்றால் இந்த முறை ஏதோ தெரியாமல் நெல்லைப் பயிர் செய்துவிட்டோம், அடுத்த முறை, நெல்லுக்குப் பக்கத்திலேயே நாங்கள் போகமாட்டோம். நெல்லைப் பயிர் செய்ய மாட்டோம், மற்றவைகளைத்தான் பயிர் செய்ய வேண்டுமென்று முடிவுக்கு வந்திருக்கிறார்கள். காரணம் என்ன என்றால் வருஷம் முழுவதும் அவர்கள் கஷ்டப்பட்டு கழனியில் வேலை செய்கிறார்கள் தங்களுடைய குடும்பத்தினுடைய உணவிற்காக. ஆனால் வரக்கூடிய மகசூலைக் கட்டாயமாகக் கொள்முதல் செய்துவிடுவதால் அவர்கள் அப்படி நினைக்காமல் வேறு எப்படி நினைக்க முடியும் என்று கேட்க ஆசைப்படுகிறேன். பம்பு செட்டுகள் வைத்து ஒரு வருஷம், இரண்டு வருஷம் ஆகியும்கூட இன்னும் மின்சாரம் கிடைக்காத நிலைமை இருந்து வருகிறது. ஆகவே உடனடியாக பம்பு செட்டுகளுக்கு எல்லாம் மின்சாரம் கிடைப்பதற்கு வழிவகைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக நிதிநிலை அறிக்கையில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் பற்றி முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். 120 ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஆரம்பிக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். எண்ணிக்கைக்காக ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஆரம்பிப்பதில் பயனில்லை. ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஆரம்பிப்பதற்கு முன்பே அதற்கு வேண்டிய வசதிகள் எல்லாவற்றையும் செய்யவேண்டும். இட வசதி வேண்டும், மருந்துகள் வசதி வேண்டும், இன்னும் எல்லா வசதிகளும்

இருந்தால்தான் ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஆரம்பிக்க வேண்டும். கணக்குக்காக இந்த ஆண்டு இத்தனை ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஆரம்பித்து விட்டோம் என்று சொல்வதில் பயன் இல்லை. சுருக்கமாக இருந்தால்கூட, அவைகள் எல்லாம் நல்ல முறையில் பொருள் உள்ள தன்மையில் செயல்பட வேண்டும். இப்பொழுது இருக்கிற சுகாதார நிலையங்களை எடுத்துக்கொண்டால் மருந்து இல்லை, மற்ற வசதிகளும் இல்லை, டாக்டர்கள் குடியிருக்க வீடும் கிடையாது. கிராமங்களிலே டாக்டர்கள் போய் தங்கி இருப்பதற்கு விரும்பவில்லை. அதனால்தான் டாக்டர்கள் பஞ்சம் என்று சொல்கிறார்கள். டாக்டருக்கு குடியிருப்பு வசதி, மருத்துவ நிலையத்திலே மருந்து வசதிகள், டாக்டருக்கு ஒத்துழைக்க கம்பவுண்டர். இன்னும் மற்ற ஊழியர்கள் அமைத்தல் இவைபோன்ற வசதிகளையெல்லாம் செய்துகொடுத்தால், அவர்கள் தாராளமாகக் கிராமங்களுக்குப் போய் பணியாற்றத் தயாராக இருக்கிறார்கள். ஆனால் அவ்விதம் நடப்பது இல்லை, ஏதோ ஆரம்பித்து விட்டோம் என்று சொல்லக்கூடிய நிலையிலேதான் அவை விடப்பட்டிருகின்றன. உண்மையிலேயே அவற்றை மருத்துவ நிலையங்கள் என்று சொல்லக்கூடிய நிலையில் இல்லை. டாக்டர்கள் ராணுவத்தினருக்கு உதவி செய்யப் போய்விட்டார்கள், அதனால்தான் டெர்த் ஆஃப் மெடிகல்மென் (பஞ்சம்) இருக்கிறது என்று சொல்லுகிறார்கள். ராணுவத்திற்குச் சென்றவர்கள் 72 பேர்கள்தான். மற்றவர்கள் என்ன ஆனார்கள்? அவர்களுக்கு ஒரு இன்செண்டிவ் கிடையாது. போதுமான கவர்ச்சி கிடையாது. ஊதியத்தை எடுத்துக்கொண்டாலும் கவர்ச்சி இல்லை. எனவே அவர்களுக்குக் கவர்ச்சிகரமான ஊதியம் கவர்ச்சிகரமான இடம், இன்னும் கவர்ச்சிகரமான மற்ற வசதிகள் எல்லாம் செய்து கொடுத்தால் நிச்சயமாக மருத்துவர்கள் கிராமங்களுக்குப் போய் தங்கி பணியாற்றுவதற்குத் தயாராக இருக்கிறார்கள். அது மட்டுமல்ல, எம்.பி.பி.எஸ். படித்த ஒரு டாக்டர் முதலில் ஒரு ஆரம்ப சுகாதார நிலையத்தில் பணியாற்றுகிறார். அவர் அங்கே ஒன்றிரண்டு வருஷங்கள் பணியாற்றினாலும்கூட, அவருடைய உத்தியோகம் நிரந்தரமாக்கப்படுவதில்லை. தாற்காலிகமாகவே இருக்கவேண்டிய நிலைமை ஏற்படுகிறது. அவர்களை நிரந்தரம் ஆக்குவதில் என்ன கஷ்டம் இருக்கிறது? அவர்களை நிரந்தரம் ஆக்கினால்தான் அவர்களுக்கு அதிகப்படியான சம்பளம், இன்கிரிமெண்ட் இவையெல்லாம் கிடைக்கும். அவையெல்லாம் இல்லாத காரணத்தால்தான், கிராமங்களுக்குப்போய் அவர்கள் பணியாற்றத் தயங்குகிறார்கள்.

அடுத்தபடியாக இந்த அறிக்கையிலே வேளாண்மைக்கு அடுத்தபடியாக கைத்தறி நெசவுக்கு முக்கியத்துவம் கொடுக்காதது மட்டுமல்ல, கைத்தறியைப்பற்றி ஒரு வார்த்தைக்கூடக் கிடையாது. வேளாண்மைக்கு அடுத்த முக்கியத்துவத்தை கைத்தறி நெசவுத் தொழிலுக்குத்தான் கொடுத்திருக்க வேண்டும். ஆனால் முதலமைச்சர் அவர்களுடைய கருத்து என்னவென்றால், கைத்தறி நாளடைவில் அழிந்து போகக்கூடியது என்பது. கைத்தறி அழிந்து போகக்கூடியது என்றால் கதரும் அழிந்து போகக் கூடியதுதானே. கதருடைய கதி என்ன ஆகும் என்பதையும் சிந்தித்து பார்க்கவேண்டும். கதருக்குப் கொடுக்கக்கூடிய சலுகைகள் எல்லாவற்றையும் கைத்தறிக்கும் கொடுக்கவேண்டும். இந்த மாநிலத்தில் கைத்தறி நெசவுத் தொழிலில் ஈடுபட்டவர்கள் 25 லட்சம் பேர்களுக்குக் குறையாமல் இருக்கிறார்கள். எல்லா மாவட்டங்களிலும் அவர்கள் பரவலாக இருக்கிறார்கள். ஏதோ நமது தொழில் அமைச்சர் அவர்கள் மனது வைத்து, இந்தத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் கடன் உதவி பெறுகின்ற வகையில், மெட்ராஸ் ஸ்டேட் ஹாண்ட்லூம் பைனான்ஸ் கார்ப்பரேஷன் ஒன்றை ஸ்தாபித்தார்கள். அதற்காகப் பங்குத் தொகைகள் வசூலிக்கப்பட்டன. ஒரு சில குறிப்பிட்ட மாவட்டங்களிலிருந்துதான் பங்குத்தொகைகள் வசூலிக்கப்பட்டிருக்கின்றன. வடஆற்காடு, தென் ஆற்காடு மாவட்டங்களை எடுத்துக்கொண்டு பார்த்தால் அதிகமான பேர்கள் இந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள். ஆனால் இந்த இரண்டு மாவட்டங்களிலும் இதற்கான பங்குத் தொகைகள் வசூல் செய்யவில்லை. பங்குத் தொகை எடுத்துக்கொண்டால்தான் அந்தக் கார்ப்பரேஷனில் கடன் வாங்கமுடியும் என்ற ஒரு நிலை இருந்து வருகிறது. ஆகவே ஒரு சில மாவட்டங்களில் மட்டும் பங்குத் தொகைகள் வசூல் செய்யப்பட்டதால், மற்ற மாவட்டங்களில் உள்ளவர்களுக்குக் கடன் கிடைக்காமல் போய்விடுகிறது. அவர்கள்





கடன் வாங்க முடியாமல் கஷ்டப் படுகிறார்கள். நெசவாளர்களுக்காக ஏற்படுத்தப்பட்ட இந்தக் கார்ப்பரேஷனில் அவர்களுக்குப் பணவசதி கிடைப்பது இல்லை என்று சொன்னால் அந்தக் கார்ப்பரேஷனால் என்ன பயன் என்பதை யோசித்துப் பார்க்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆகவே நெசவுத் தொழிலில் ஈடுபட்டுள்ள மக்களுக்குக் கடன் வசதி கிடைக்க ஏற்பாடு செய்யவேண்டும். மீண்டும் ஒரு முறை பங்குத் தொகை வசூல் செய்வதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். பங்குத் தொகை எடுத்தால்தான், கடன் வாங்கமுடியும் என்ற நிலையும் இருக்கக் கூடாது என்பதையும் நான் தொழில் அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக ஏழை மாணவர்களுக்கு மதிய உணவு வழங்குவதைப்பற்றி குறிப்பிட்டிருக்கிறார்கள். ஒரு மாணவனுக்கு 10 காசு என்ற நிலை விலைவாசி ஏற்றமில்லாத காலத்தில் ஏற்பட்டது. இப்பொழுது நாளுக்கு நாள் விலைவாசி ஏற்றம் இருக்கும்பொழுது 10 காசு போதாது. அதையும் உயர்த்தவேண்டும். அதற்கான வழிவகை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக ஒன்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்த என். ஜி. ஓக்களுக்குச் சம்பள உயர்வு கொடுக்கவேண்டும். மத்திய அரசில் பணியாற்றுகிறவர்களுக்கு எந்த நிலை இருக்கிறதோ, எந்த ஸ்டேட்டஸ் இருக்கிறதோ அதே நிலை, அதே ஸ்டேட்டஸ் இவர்களுக்கும் இருக்க வேண்டும். ஒரு வீட்டில் மேல் மாடியில் மத்திய அரசில் பணியாற்றுகின்றவர் இருக்கிறார். கீழ்ப் பகுதியில் மாநில அரசில் பணியாற்றுகின்றவர் இருக்கிறார். இரண்டு பேரும் ஒரே தகுதியுடையவர்களே. ஒரே ஊரில் பணியாற்றுகிறவர்கள்தான். மேலே இருக்கக்கூடியவருக்கு அதிகப்படியான சம்பளம் இருக்கும் போது, கீழே இருக்கக்கூடியவருக்குக் குறைவான சம்பளம் இருக்குமானால் அவர்களுடைய மனம் என்ன பாடுபடும்? மத்திய அரசு அவர்களுடைய ஊழியர்களுடைய சம்பளத்தைக் கூட்டும்போது, அதற்கு மறுநாளே மாநில அரசாங்கமும் ஊழியர்களுடைய சம்பளத்தைக் கூட்ட வேண்டுமென்ற நிலைமை ஏற்படவேண்டும். இவற்றையெல்லாம் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்து என்னுடைய பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

***திரு. வை. சங்கரன் :** கனம் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு நிதி நிலை அறிக்கையிலே, குறிப்பாக இன்று நாடு உணவுப் பற்றாக்குறையில் உள்ள நிலைமையில், வேளாண்மைத் துறைக்கு அதிகக் கவனமும், முக்கியத்துவமும் கொடுக்கப்பட்டிருப்பது உண்மையிலேயே வரவேற்கத்தக்க அம்சம். உணவுப் பொருளை உற்பத்தி செய்து நல்ல முறையில் விநியோகம் செய்யத் திட்டமிடப்பட்டிருக்கிறது. அவ்வாறு உணவுப் பொருளைச் சேமித்து வைப்பதிலே சிறு கோளாறு இருக்கிறது. உதாரணமாக, எங்கள் பகுதியில் ஆட்டா மாவு விநியோகிக்கப்படுகிறது. அது ஒருசில மாதங்கள் தேக்கி வைப்பதற்கு உரியதாக இல்லை. மூன்று நான்கு மாதங்களுக்கு மேல் வைக்கப்பட்ட ஆட்டா மாவு வண்டுகள், புழுக்கள் நிறைந்தவையாக ஆகிவிட்டன. பதினைந்து நாள் அல்லது ஒரு மாதத்திற்கு மேல் அதை வைத்திருந்தால் கெட்டு விடும். இதைப் பற்றி நான் ஸ்தல அதிகாரிகளிடத்தில் எடுத்துச் சொன்னேன். அவர்கள் பூரணமாக ஏற்றுக் கொள்ளவில்லை. மேலிடத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்த பிறகு அதை அவ்வாறு நீண்ட நாட்கள் சேமித்து வைக்காமல் வேறு இடத்திற்கு அனுப்பக்கூடிய நிலை ஏற்பட்டிருக்கிறது. பொருள்களைச் சேமித்து வைக்கும்போது எந்தக் கால அளவு வைக்கலாம், எப்போது விநியோகிக்க வேண்டும் என்பதையெல்லாம் நன்றாகத் தெரிந்து செய்யவேண்டும்.

லெவி சம்பந்தமாகச் சொன்னார்கள். ஒருசில தனிப்பட்ட கேஸ்களில் ஹார்டுஷிப் ஏற்பட்டிருக்கிறது. இதைப் பற்றி ஸ்தல அதிகாரிகளுக்குத் தகுந்த முறையில் உத்தரவு பிறப்பிக்கவேண்டும். கிணற்று விவசாயமாக இருந்தால் அதிகமாகச் செலவிட வேண்டியிருக்கும். பருவ மழை தவறியிருப்பதால் விளைவு குறைந்திருக்கிறது. இந்த மாதிரி இன்டிவிஜுவல் கேஸை நல்ல முறையில் பரிசீலிக்கவேண்டும்.

[திரு. வை. சங்கரன்] [28th February 1966

இஸ்தி வசூல் சம்பந்தமாக திரு. வீரபாகு அவர்கள் சொல்லியது போல் என்னுடைய பகுதியிலும் சோழவந்தான், பெரியாறு போன்ற இடங்களில் நிலைமை இருக்கிறது. இஸ்தியை பிப்ரவரி, மார்ச்சு, எப்ரல், மே என்று நான்கு தடவையாக வசூலிக்க வேண்டுமென்று பல தடவை சொல்லி இருக்கிறோம். ஏதோ காரணத்தால் பிப்ரவரி, மார்ச் ஆரம்பத்திற்கு முன்னாலேயே, உள்ளடக்கமாக உத்தரவு வந்திருக்கிறது என்று கண்டிப்பாக நடவடிக்கை எடுத்துக்கொள்ளுகிறார்கள். பலவிதமான முறையில் விவசாயிகள் வற்புறுத்தப்படுகிறார்கள். இந்த ஆண்டு பொதுவாக பல இடங்களில் அறுப்புக் கூட ஆகவில்லை. பொதுவாக விவசாயிகள் அறுப்பான பிறகு, மகசூலை வைத்துக் கொண்டுதான் இஸ்தியைக்கொடுக்க முடியும். ஆகவே, எப்போதும் போல் நான்கு பகுதிகளாகக் கிஸ்தியை வசூல் செய்யவேண்டுமென்று கண்டிப்பாக உத்தரவு பிறப்பிக்கவேண்டும். அதே போன்று காலாகாலத்தில் உரம் கிடைக்கவில்லை என்ற குறையும் இருந்து கொண்டிருக்கிறது. அதையும் நல்ல முறையில் சீர்திருத்த வேண்டும்.

உணவுப்பொருள்களின் விலை மட்டுமல்லாது எண்ணெய்களின் விலையும் ஏறிக்கொண்டே இருக்கிறது. கடலை எண்ணெய் நல்லெண்ணெய் விலை விற்கிறது, நல்லெண்ணெய் தேங்காய் எண்ணெய் விலை விற்கிறது, தேங்காய் எண்ணெய் நெய் விலை விற்கிறது. அரைப்படி தேங்காய் எண்ணெயின் விலை ஐந்து ரூபாய்க்கு மேல் ஆகிறது. இந்த விலைகளையும் கட்டுப்படுத்த சர்க்கார் தீவிர நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும்.

டிராக்டர்களை லீஸில் கொடுக்கஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பல டிராக்டர்கள் ரிப்பேராகி நல்ல கண்டிஷனில் இல்லாமல் இருக்கின்றன. அதற்குத் தகுந்த ஒர்க்ஷாப்ஸ் வைப்பதோடு கூட, அதிகப்படியான டிராக்டர்களுக்கும் ஏற்பாடு செய்யவேண்டும்.

கூட்டுறவு பாங்குகள், சங்கங்கள் மூலமாக விவசாயிகளுக்குக் கடன் கொடுக்கும் வசதி பெருக்கப்பட்டிருக்கிறது. அதோடு மட்டுமல்லாமல் அந்தக் கடன்கள் எளிதில் கிடைக்கச் செய்ய வேண்டும். கடன்கள் எளிதில் கிடைக்காததன் காரணமாக, விவசாயிகள் அதிக வட்டி கொடுத்துத் தனிபட்டவர்களிடமிருந்து கடன் வாங்கி விடுகிறார்கள். ஆகவே, சுலபமாக, கஷ்டம் இல்லாத வகையில் கடன் கிடைக்க வழி செய்ய வேண்டும்.

தொழிலைப் பொறுத்தவரையில் இந்துஸ்தான் போட்டோ பிலிம் பாக்டரி வேகமாக முன்னேற்றம் அடைந்து வருகிறது என்று சொல்லப்பட்டது. அது வேகமாக நடக்கவில்லை. காலதாமதம் ஏற்பட்டுக்கொண்டு வருகிறது என்ற செய்தி முன்பு வந்தது. எப்படியும் சீக்கிரத்தில் அது இயங்குவதற்கான நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டும். சென்ட்ரல் ஸ்பான்ஸர்ட் ஸ்கீம்களில், நம்முடைய ராஜ்யத்தில் எஞ்சினியர்கள் ரிட்ரென்ஞ்ச் செய்யப்படுகிறார்கள் என்று கூறப்படுகிறது. இதைப் பற்றி நன்றாகக் கவனித்து அந்த மாதிரி எஞ்சினியர்கள் குறைக்கப்படாமல் இருப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டும்.

பொதுவாக, ராஜ்யத்தின் தெற்குப் பகுதியைப் பொறுத்தவரை கனரகத் தொழிற்சாலைகள் இல்லை. மதுரையில் மெஷின் டூல்ஸ் ஃபாக்டரி ஆரம்பிப்பதாகச் சொல்லப்பட்டது. தெற்குப் பகுதியில் கனரகத் தொழிற்சாலைகள் ஏற்பட வழி செய்ய வேண்டும். அதுவும் பரவலாக ஏற்பட வேண்டும்.

கல்லூரிகளைக் கூடப் பரவலாக அமைக்கவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. 'அது உண்மையிலேயே வரவேற்கத்தக்க ஒன்று. எஞ்சினியரிங் கல்லூரி, மெடிகல் கல்லூரி ஆகியவையெல்லாம் ஒரே பகுதியில் அமையாமல், சென்னை நகரைச் சுற்றியே அமையாமல், பரவலாக இருந்தால்தான், ராஜ்யத்திலுள்ள மக்கள் எல்லோருக்கும், மாணவர்கள் எல்லோருக்கும் வசதியாக இருக்கும்.



28th February 1966] [திரு. வை. சங்கரன்]

'நான்-டீச்சிங் ஸ்டாஃப்' நிலைமை பற்றிப் பல முறை எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. அவர்களுக்கு சர்விஸ் கண்டிஷன்ஸ் பிரிஸ்கிரைப் பண்ணாத நிலைமையில், நினைத்தால் அவர்களை வீட்டுக்குப் போகச் சொல்லிவிடமுடியும். அவர்கள் எவ்வளவு ஆண்டுகள் சர்வீஸ் செய்தாலும் போதிய கல்வி யோக்கியதாம்சம் இல்லாவிடில் 90 ரூபாய்க்குமேல் சம்பளம் கொடுப்பது கிடையாது. அவர்களுக்கு எந்த விதமான பிராஸ்பெக்டசும் கிடையாது. அவர்களுக்கும் ஓரளவு சம்பளத்தை உயர்த்துவது அவசியம். 'அப்பர் டிவிஷன் கிளார்க்' ஸ்தானங்கள் வைப்பதற்காவது ஏற்பாடு செய்ய வேண்டும்.

ஆசிரியர்களுடைய சம்பளத்திற்கு சீலிங் இருக்கிறது. 250 ரூபாய்க்கு மேல் அவர்களுக்குச் சம்பளம் போகக் கூடாது. 25 வயதில் ஆசிரியர் வேலைக்குப் போகிறவர்களுக்குப் பதினைந்து ஆண்டுகளில் சீலிங் வந்துவிடுகிறது. இப்போது 58 வயது வரை வேலை செய்யலாம் என்று செய்துவிட்ட பிறகு, அவர்கள் தங்களுடைய 40-வது வயதில் 250 ரூபாயை பெறும் நிலைமை ஏற்பட்ட பிறகு 18 வருஷங்களுக்கு அதே சம்பளத்தில் வேலை செய்ய வேண்டியிருக்கிறது. அவர்களுக்கு எந்தவிதமான இன்ஸென்டிவ்ஸும் இல்லை. அவர்களுக்கு வேலையிலே இன்டரஸ்ட் இல்லை. ஆகவே, அவர்களுக்கு 250 ரூபாய்க்கு மேல் ஸ்பெஷல் க்ரேடு போட்டுக்கொடுத்தால் தான், வேலையிலே அவர்களுக்கு இன்டரஸ்ட் ஏற்படும். அந்த வகையில் அதை அமைத்துக் கொடுக்கவேண்டும்.

அதோடு சர்க்காரின் கீழ் வந்த பிறகு, ஆசிரியர்களுக்கு இருந்த பிரிவிலேஜ் லீவை எடுத்து விட்டார்கள். திடீரென்று வீட்டில் ஏதாவது அசந்தர்ப்பமோ அல்லது விசேஷமோ என்றால் லீவு கிடையாது. அவர்களுக்கு காஷுவல் லீவ் 15 நாட்கள், அதற்குப் பிறகு மெடிகல் லீவ்தான் இருக்கிறது. ஆகவே, அவர்கள் வீட்டிலே ஏற்பட்ட ஒரு சம்பவத்திற்காக லீவ் எடுக்க வேண்டுமென்றால் சம்பளத்தை இழந்து லீவ் எடுக்க வேண்டிய நிலைமை இருக்கிறது. இதையும் கவனிக்க வேண்டும்.

ஸ்காலர்ஷிப்பைப் பொறுத்தமட்டில் 'பாவர்ட்டி-கம்-மெரிட்'டுக்குப் 15 சதவிகிதம் ஒதுக்கவேண்டும். குறிப்பிட்ட ஒரு வகுப்பைச் சேர்ந்த காரணத்தால் ஏழைமையாகப் பிறந்த அவனுக்குக் கிடைக்கக் கூடியவாய்ப்பு தடுத்து நிறுத்தப்பட்டால் அது ராஜ்யத்திற்கே நஷ்டமாகும். ஆகவே, 15 சதவிகிதம் 'பாவர்டி-கம்-மெரிட்' ஸ்காலர்ஷிப் கொடுக்கவேண்டும். அந்தத் தத்துவ அடிப்படையை மத்திய அரசாங்கம் ஏற்றுக்கொண்டது. நம்முடைய 12-30 p.m.
அரசாங்கம் அதை அமல் நடத்துவதில் சற்றுத் தயங்கி வருகிறது என்பதை இந்தச் சமயத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

தூத்துக்குடி-திருச்சி ப்ராட்கேஜ் சம்பந்தமாக அதை சீக்கிரத்தில் அமல் நடத்த ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 'if traffic justifies' என்று மத்திய அரசாங்கத்திலிருந்து பதில் வந்திருக்கிறது என்று சொன்னார்கள். நெருக்கடி ஏற்பட்ட பிறகு போடுவதைவிட, நெருக்கடி ஏற்படுகிறது, ஏற்படும் என்று அறிந்து போட வேண்டும். தூத்துக்குடி, நெய்வேலி போன்ற இடங்களைப் பார்க்கும்போது நிச்சயமாக டிரூபிக் ஜாம் ஏற்படத்தான் செய்யும். பாலம் கட்டிய பிறகு ரஸ்தா அமைப்பதுபோல் ரெயில் பாதை அமைப்பது என்றால் அதில் பல கஷ்டங்கள் ஏற்படும். ஆகவே இந்த ரயில் பாதையை இப்போதே அமைத்தால் நல்லது என்று கூறி அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பின்னர், இந்த 'ஈஸ்ட் கோஸ்ட் ரோட்' பற்றி நாலைந்து வருடங்களுக்கு முன்பிலிருந்தே சொல்லப்பட்டு வருகிறது. ஏற்கனவே ரஸ்தாக்கள் இருக்கின்றன. நடுவில் லிங்க் ரோடுகள்தான் அமைக்கவேண்டுமென்று சொல்கிறார்கள். சென்னையில் இருந்து கீழ்க்கோடி வரையில் அந்த ரோடு இருக்கும் என்று சொல்லப்படுகிறது. அதையும் சீக்கிரத்தில் எடுத்து நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நகர்ப்புறங்களில் உள்ள வாட்டர் சப்ளை ஸ்கீம் சம்பந்தமாக ஆக்க ரீதியில் பல உதவிகள் கொடுப்பதாக இருக்கிறது. பொதுவாக நகர்ப்புறங்களை எடுத்துக்கொண்டால் மூன்று பிரச்னைகள் இருக்கின்றன. மத்திய அரசாங்கக் கட்டடங்கள் எல்லாம் இன்று வாடகைக் கட்டடங்களில் இருக்கின்றன. அதற்காக வாடகை மூலம் ஏராளமான பணம் விரயமாகிறது. அதை மாற்றி அரசாங்கக் கட்டடங்களில் அவற்றை

அமைக்கவேண்டும். அதே போன்று கோர்ட்டுகளையும் அரசாங்க கட்டடங்களில் அமைத்து விட்டால் ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கான ரூபாய் மீதமாகும்.

அடுத்தபடியாக, லெவல் கிராஸிங் சம்பந்தமாக நகர்ப்புறங்களில் பல கஷ்டங்கள் ஏற்படுகின்றன. அவை மூடப்பட்டு விடுவதனால் வண்டிகள் எல்லாம் நிறுத்தப்பட்டு அதனால் பலவித நஷ்டங்களும், இடைஞ்சல்களும் ஏற்படுகின்றன. ஆகவே நகர்ப்புறங்களில் முக்கியமாக மதுரை போன்ற இடங்களை எடுத்துக்கொண்டால், இவற்றினால் பலவித கஷ்டங்கள் ஏற்படுகின்றன. ஆகவே இவற்றிற்கும் சீக்கிரத்தில் ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பின்னர், பி. ட்பிள்யூ.டி. வொர்க்ஸ் எஸ்டாப்ளிஷ்மெண்ட் எடுத்துக்கொண்டாலும் சரி, போலீஸ் டிபார்ட்மெண்டில் உள்ள மீனியல்களை எடுத்துக்கொண்டாலும் சரி, கோவாப்பரேட்டிவ் டிபார்ட்மெண்டை எடுத்துக்கொண்டாலும் சரி டெம்பரரியாக வேலை பார்ப்பவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் 10, 12 ஆண்டுகளாக டெம்பரரியாகவே இருந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் பிரச்னையையும் பரிசீலிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பின்னர், ஃபுட் அடல்டரேஷன் ஆக்ட் இருக்கிறது. இந்த ஆக்ட்படி 'ஸப்-ஸ்டாண்டேர்ட்' ஆக இருப்பதற்குக்கூட சிறை தண்டனை கொடுக்கப்படுகிறது. 0·05 கூடிவிட்டாலும் அதற்கும் சிறை தண்டனை என்று ஆக்டில் இருக்கிறது. இதை மத்திய அரசாங்கத்தினிடம் எடுத்துச் சொல்லி அதை மாற்றியமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். என்.ஜி.ஓ.க்கள் கிராக்கிப்படி சம்பந்தமாக தத்துவ அடிப்படையில் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். அதையும் பரிசீலனை செய்து அதற்கும் ஒரு ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

*திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : கனம்தலைவர் அவர்களே, இப்போது நடந்து கொண்டிருக்கிற 1966–67-ம் ஆண்டு நிதி நிலை அறிக்கையின் மீதுள்ள விவாதத்தில் என் கருத்துக்களையும் சிலவற்றை சொல்ல ஆசைப்படுகிறேன். நம் அரசாங்கம் முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 80 கோடியும், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 186 கோடியும், மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 341 கோடியும் ஆக மொத்தம் 607 கோடி ரூபாய் செலவு செய்து இப்போது கடைசி ஆண்டில் இருக்கிறோம். இன்னும் அடுத்து வருகிற நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் எத்தனை கோடியில் நிற்கப்போகிறதோ, தெரியவில்லை. எத்தனை கோடி ரூபாய் செலவு செய்தாலும் நம் நாடு விவசாய நாடு. விவசாயத்தை எதிர்பார்த்திருக்கிற நாடு நம் நாடு. வேறு எந்த வழியும் இல்லாத நாடு. நாம் அன்னிய நாடுகளிலிருந்து கடன் வாங்குகிற நிலையில்தான் இருக்கிறோம், மங்கள வார்த்தையில் சொல்ல விரும்புகிறேன். வேறு வார்த்தைகள் சொல்லி, பிச்சை என்று சொல்கிறார்கள், அதை சொல்ல நான் விரும்பவில்லை. உணவுக் கடன் வாங்கும் நிலையில்தான் நாம் இருக்கிறோமே தவிர, சுய தேவைபூர்த்தி அடையும் நிலையில் நாம் இல்லை. ஆகவே இதில் எங்கு ஓட்டை இருக்கிறது என்பதை இதுவரை பரிசீலனை செய்யாததற்குக் காரணம் என்ன என்பதுதான் என் கேள்வி. வேளாண்மைக்கு முதல் இடம் தந்திருக்கிறோம் என்று இந்த அறிக்கையில் முதல் பாராவிலேயே சொல்லியிருக்கிறார்கள். இந்த மன்றத்திலே உள்ள அத்தனை பேர்களும், இங்கிருப்பவர்களில் முக்காலே மூன்று பங்கு பேர்களும் விவசாயக் குடும்பங்களில் இருந்து வந்திருப்பவர்களாகத் தான் இருக்க முடியும். ஆனால் அமைச்சர் அவர்கள் அடிக்கடி எங்களுக்குச் சொல்கிற பதில் எல்லாம், மந்திரத்தில் மாங்காய் காய்க்கிறது என்ற கருத்தைச் சொல்கிறார்களே தவிர, நாம் எல்லாம் விவசாயக் குடும்பத்தில் பிறந்தவர்கள் தான், விவசாயத்தை எப்படிச் செய்வது என்பதைத் தெரிந்தவர்கள்தான்—ஆனால் எங்களை ஏமாற்றுவதாகக் கருதி மந்திரத்தில் மாங்காய் காய்க்கிறது என்ற கருத்தை சொல்லுகிறார்கள். இதை எப்படி நம்புவது ?

கனம் திரு. பூ. கக்கன் : நான் எப்போதும் மந்திரத்தில் மாங்காய் காய்க்கிறது என்று சொன்னதே கிடையாது. அங்கத்தினர் அவர்கள் வெறுமனே வேண்டுமென்று தம் மனதில் தோன்றிய எண்ணத்தைச்



சொல்கிறார்களே தவிர, மந்திரத்தில் மாங்காய் காய்க்கிறது என்ற அப்பேர்ப்பட்ட வார்த்தையை நான் என்றைக்குமே இந்த சபையில் சொன்னதில்லை என்பதை அழுத்தந்திருத்தமாக சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : அமைச்சர் அவர்கள் எப்போதும் நான் பேசும்போது குறுக்கிடாமல் இருந்து பழக்கம் கிடையாது. மந்திரத்தில் மாங்காய் காய்க்கின்றது என்று சொன்னதில்லை என்று சொல்வதை ஓரளவு ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் விவசாய நாடாகிய நம் நாட்டில் விவசாயத்திற்காக இவ்வளவு கோடி ரூபாய் செலவு செய்தும், இந்த நாட்டில் ஏன் பஞ்சம் ஏற்பட்டது என்பதற்கு அமைச்சர் அவர்கள் பதில் சொல்ல மறுக்கிறார்களே, காரணம் என்ன ?

கனம் திரு. பூ. கக்கன் : முதல் அமைச்சர் அவர்களின் சொற்பொழிவில் சொல்லியிருக்கிறார்கள். பருவ மழை சரியாக இல்லை, போதுமான உரம் ஃபாரின் எக்சேஞ்ச் கிடைக்காததால் வரவில்லை. எவ்வளவு பிரயத்தனங்கள் செய்யவேண்டுமோ, அவற்றை செய்து வருகிறோம் என்று கூறியிருக்கிறார்களே. அதையெல்லாம் நன்றாகப் படித்துப் பாருங்கள்.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : அமைச்சர் அவர்கள் அடிக்கடி குறுக்கிடுவதற்கு மிக்க நன்றி. இருந்தாலும் இதற்கு வழி என்ன ? பருவ மழை இல்லை, உரம் வாங்க பணம் இல்லை என்று சொல்லிக் கொண்டிருந்தால் மட்டும் போதுமா ? இதற்கு என்ன வழி ? மழை இல்லை, உரம் இல்லை, நிதி வசதி இல்லை என்று மட்டும் சொல்லிக் கொண்டிருந்தால் அவை அதற்குச் சமாதானமாகும் என்று அமைச்சர் அவர்கள் கருதுகிறார்களா என்பதே என் கேள்வி. ஒரு முறைக்காக குறுக்கிடுகிறார்களே தவிர, இந்தக் கஷ்டம் அவர்களுக்குத் தெரியாமல் இல்லை. தயவு செய்து நாங்கள் சொல்வதைக் குறையாகக் கருதாதீர்கள். நம் உணவு நிலையை சீர்படுத்த வழியில்லையா என்பதுதான் என் கேள்வி. இதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். எங்கள் தலைவர் அறிஞர் அண்ணா அவர்கள் பாராளுமன்ற மேல் அவையில் இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன்பே ஒரு கருத்தைச் சொன்னார்களே, யாராவது அதைக் குறித்து சிந்தித்துப் பார்த்தீர்களா ? உணவைப் பெருக்குவதற்குள்ள வழிகள் என்ன என்பது குறித்து நான்கு கருத்துக்களைச் சொன்னார்கள். யாராவது அதைப்பற்றி சிந்தித்தீர்களா ? என்ன என்னவோ கமிட்டிகள் என்று சொல்கிறார்களே அவர்களையாவது அதைச்செய்யச் சொன்னார்களா என்று கேட்காமல் இருக்க முடியவில்லை. நிலச்சீர்திருத்த சட்டம் அமல் நடத்தப்படுகிற விதத்தில் விவசாயிகளுக்கு ஊக்கம் குறைந்து விட்டது என்ற கருத்தைச் சொன்னார்கள். அதற்கு இப்போதுகூட அமைச்சர் அவர்கள் ஏதோ ஒரு பதிலைச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். பொருள் இல்லாத பதில் என்றுதான் நான் கருதுகிறேன். முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின்போதே கிருஷ்ணா, கோதாவரி தண்ணீரை செங்கல்பட்டு, வட ஆற்காடு மாவட்டம், தென் ஆற்காடு மாவட்டம் இவற்றிற்குக் கொண்டு வருவது குறித்து எல்லா வேலைகளும் முடிந்தது எந்தக் காரணத்தினாலோ அவ்வேலை நின்றுவிட்டது. அதை உடனடியாகச் செய்தீர்களா? மூன்றாவதாக, நிலவரியைக் குறைக்க வேண்டும், என்பதும் நான்காவதாக, பயிர் பாதுகாப்பு இன்சூரன்ஸ் திட்டம், பாராளுமன்ற மேல் அவையில் அறிஞர் அண்ணா அவர்கள் கூறியுள்ள இந்தக் கருத்துக்களைப் பற்றி யாராவது சிந்தித்தீர்களா? எதிர்க் கட்சியில் உள்ளவர்கள் சொன்னார்கள் என்பதற்காக இதை மறந்துவிட்டீர்கள். குறைகளைச் சொல்கிறீர்களே, ஏதாவது திட்டங்களைச் சொல்கிறீர்களா என்று இந்த மன்றத்தில் அனேக அங்கத்தினர்களால் அடிக்கடி சொல்லப்பட்டிருக்கிறது. தயவுசெய்து இவற்றையாவது சிந்தித்துப் பாருங்கள். நாங்கள் குறையாக சொல்லவில்லை. உங்களுடைய கடமை பல பேர்களுடைய அபிப்பிராயங்களைக் கேட்டு, அவற்றினால் பலன் இருக்குமா இருக்காதா என்று பரிசீலனை செய்யவாவது வாருங்களேன். இதையாவது சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று அமைச்சர் அவர்களைப் பணிவன்

போடு கேட்டுக் கொள்கிறேன். வேளாண்மை உற்பத்தியைப் பெருக்க நில வளம், உர வளம், நீர் வளம், விவசாயிகளின் மன வளம் இவை வேண்டுமென்று சொல்கிறார்கள். இந்த நான்கும் இருக்கிறதா என்று பார்த்தால் ஒன்று இருக்கிறது. மூன்று இல்லை. நில வளம் இருக்கிறது, நீர் வளம் இல்லை, விவசாயிகள் மன வளமும் இல்லை. உர வளம் இல்லை. இதற்குக்காரணம் என்ன ? எதைச் செய்தால் இந்த நான்கு வளங்களும் வரும் என்பதுபற்றி சிந்தித்துப் பார்ப்பது யாருடைய கடமை ? இதைத் தயவுசெய்து அமைச்சர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். நாங்கள் இப்படிச் சில குறைகளைச் சொல்லிக் கொண்டுதான் இருப்போம். தீர்வு காண வேண்டியவர்கள், அதற்கானவற்றைச் செய்ய வேண்டியவர்கள் அமைச்சர்அவையில் உள்ளவர்கள். சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தரவு இட வேண்டியவர்கள் அமைச்சர்கள். ஆகவேதான் இந்த நான்கு வளங்களையும் பெருக்க வழி என்னவென்று இது வரைக்கும் கண்டுபிடிக்க முடியவில்லை என்ற குற்றச்சாட்டை அரசாங்கத்தின்மேல் என்னால் சொல்லாமல் இருக்க முடியவில்லை.

இந்த நிலையிலே தான் இது வரைக்கும் நாம் பல திட்டங்களைத் தீட்டி, நீர்ப்பாசன வசதிகளையெல்லாம் செய்து என்னென்னவோ செய்து கொண்டிருக்கிறோம் என்று பின்னாலே வருகிறது.

அடுத்தபடி, விலைவாசி உயர்வைப்பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். 1966 பிப்ரவரியிலாவது விலைவாசி ஏறிவிட்டது என்று ஏற்றுக் கொள்கிறார்களே, அது வரைக்கும் சந்தோஷம். 1962-ல் விலைவாசி ஏறிவிட்டது, அதைக் குறையுங்கள் என்று ஒரே வார்த்தை சொன்ன எனக்கு நான்கு மாத கடுங்காவல் தண்டனை கொடுத்தது இந்த சர்க்கார். குற்றம் செய்த பல பேர்களைச் சிறைக்கு அனுப்பிய என்னை கைவிலங்கு போட்டு இழுத்துச் சென்றது இந்த சர்க்கார். இப்போதாவது விலைவாசி ஏறிவிட்டது என்று சொல்லிய சர்க்காருக்கு எனது நன்றி.

அடுத்ததாக, சம்பா போகம் கெட்டு விட்டது, நவரை போகத்தில் நல்ல பலன் கிடைக்கும் என்று சொல்லுகிறார்கள். அது எப்படி என்று என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. கன்று இருக்கும்போதே கலப்பால் கறக்காத பசு கன்று போன பிறகு எப்படி கலப்பால் கறக்கும். ? இதற்குத்தான் மந்திரத்தால் மாங்காய் வருவது என்று சொல்லுவார்கள். தாயோடு கன்று இருக்கும்போது கலப்பால் கறக்காது கன்று 'இறந்த பிறகு பால் சுத்தமாக வற்றித்தான் போகும். அப்போது எப்படிக் கறக்கும் ? சம்பா போகத்தின்போது, விவசாயத்திற்கு தண்ணீர் வந்து கொண்டே இருக்கும் நேரத்தில் முழுப் பலன் கிடைக்கவில்லை. தண்ணீர் இல்லாமல் காய்ந்து போயிருக்கும் நேரத்தில் முழு பலன் கிடைக்கும் என்று சொன்னால், எப்படிக் கிடைக்கும் ? இதைத்தான் சொல்லுகிறேன். இதை தயவுசெய்து சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

அடுத்தபடியாக, அரசாங்கத்திலே விதைப்பண்ணை என்று சொல்லுகிறார்கள். நேற்றுகூட இதைப்பற்றி ஒரு கேள்வி வந்தது. வானூரில் ஒரு விதைப் பண்ணை இருக்கிறது. நீண்ட நாளாக அது நஷ்டத்தில் ஓடிக்கொண்டிருக்கிறது. அனேக புகார்கள். அது சம்பந்தமாக விவசாயிகளுடைய அனுமதி இல்லாமலேயே பல ஏக்கர் நிலங்களைப் பண்ணைக்கு எடுத்துக் கொண்டார்கள். அதற்குக் கூட ஹைகோர்ட்டிலே ஸ்டே வாங்கியிருக்கிறார்கள் என்று சொல்லுகிறார்கள். விவசாயிகளிடமிருந்து நிலத்தை வற்புறுத்தி வாங்கி, அதில் இப்படிப்பட்ட நஷ்டம் வரக் காரணம் என்ன என்றால், லாபத்தில் ஓடுகிறது என்று நேற்றுகூட பதில் சொல்லியிருக்கிறார்கள். அந்தப் பண்ணையில் விளைகிற நெல்லை எங்கு கொண்டு விற்கிறார்கள் என்று பார்த்தால், பண்டிக்குப் போவதாக சொல்லுகிறார்கள். எனக்கு முன் பேசிய அங்கத்தினர் ஒருவர் கிராம சகாயக்களுக்கு ஊக்கம் அளிப்பதாகச் சொன்னார்கள். 1965-ல் எஸ்ட்டிமேட்ஸ் கமிட்டியில் அங்கத்தினராக இருந்தபோது நான் கண்ட உண்மை. கிராம சகாயக் என்பது ஏட்டளவில் எழுதி வைத்து, தங்களுக்கு எப்படி எப்படி எந்தெந்த நேரத்தில் சரிக்கட்டிக்கொள்ள வேண்டுமோ அதற்காகச் செய்து வைத்திருக்கிறார்களே தவிர, கிராம சகாயக் திட்டமும்





இல்லை, அதற்காகப் பணம் கொடுப்பதும் இல்லை. குப்பன் மகன் சுப்பனுக்கு இவ்வளவு கொடுக்கப்பட்டது என்று எழுதி வைத்திருப்பார்கள். உண்மையில் அவன் வாங்கியிருக்க மாட்டான். இது விவசாயத்தில் ஈடுபட்டுள்ள அத்தனை அங்கத்தினர்களுக்கும் தெரியும். இதைத் தவிர்க்க வேண்டாமா ?

அடுத்தபடியாக, விவசாயத் துறையிலே, அரசாங்க விதைப் பண்ணைகள் இந்த நிலையிலே போய்க் கொண்டிருக்கின்றனவே, நஷ்டத்தில் ஓடிக் கொண்டிருக்கின்றனவே, அதன் காரணம் என்ன என்று கேட்டால், விதைப் பண்ணைகள் நீர் வசதி இல்லாத இடத்தில் இருக்கின்றன என்று சொல்லுகிறார்கள். நீர் வசதி இல்லாத இடத்தில் ஏன் இவற்றை அமைத்தார்கள் ? இதைப் பற்றிச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். நல்ல முறையில் விதைகளை உற்பத்தி செய்து விவசாயிகளுக்குக் கொடுத்தால் நன்றாக இருக்கும் என்பதுதான் எங்கள் கருத்தும். நடந்தது போனாலும் இனியாவது ஒழுங்காகச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

புன்செய் தானியம் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். புன்செய் தானியம் எது ? எங்கு இருக்கிறது ? தென் ஆற்காடு மாவட்டத்திலே, திண்டிவனம் தாலுகாவில். குறிப்பாக என் பகுதியில் புன்செய் தானியம் எது ? புன்செய் நிலம் பூராவும் சவுக்கு ஆகத்தானே காட்சி அளிக்கிறது ? கம்பு விளைகிறதா ? சோளம் விளைகிறதா ? கேழ்வரகு விளைகிறதா ? நஞ்சையில்கூட சவுக்குதானே விளைகிறது. வேறு மாவட்டத்தில் வேண்டுமானால் இருக்கலாம், எங்கள் பகுதியில் புன்செய் தானியம் சுத்தமாகக் கிடையாது. புன்செய் தானியத்தில், கம்புக்கு ஒரு பெயர், சோளத்திற்கு ஒரு பெயர், கேழ்வரகுக்கு ஒரு பெயர் இப்படிப் பெயர்களை மாற்றி மாற்றிச் சொல்லி ஏன் ஏமாற்றுகிறார்கள் ? பெயர்களை மாற்றி வைத்தால் என்ன பிரயோசனம் ? புன்செய் தானியங்கள் என்று சொல்லுவதிலே யார் யாருக்கோ பலன் கிடைக்கிறதே தவிர, ஏழை மக்களுக்கு நன்செய் பயிராகிய நெல்லை வாங்கிச் சாப்பிட முடியா விட்டாலும் புன்செய் தானியங்களையாவது வாங்கிச் சாப்பிடலாம் என்றால் கிடைக்கிறதா ? இந்த நிலையை யார் உருவாக்கியிருக்கிறார்கள் ? சர்க்கார் தான். இதைப்பற்றி நான் சொன்னால், " ஏதாவது சொல்லிக்கொண்டு திரிவார்கள் " என்று சொன்னால் என்ன செய்வது ?

சிறு பாசனத் திட்டத்தில், கிணறு, ஏரி, ஊற்றுக் குட்டை முதலியவைகளைத் தூர் வாருவது, மின்சார இணைப்புக் கொடுப்பது, இதற்கெல்லாம் ஒரு பக்கம் எழுதி வைத்திருக்கிறார்கள். நான் இந்தச் சபைக்கு வந்த 1962-ம் ஆண்டிலிருந்து இதுவரைக்கும், "இதிலே என்னடா பேசுவது ஒன்றும் காணோமே" என்று பார்த்தால், 1962-ல் என்ன பேசினேனோ அதைத்தான் இன்றும் பேசவேண்டியிருக்கிறது. ஏதாவது மாற்றம் இருக்கிறதா ? ஏதாவது செய்து விட்டோம் என்று சொல்ல முடியுமா ? வருஷம் ஐந்து முடிந்து போயிற்று. அடுத்த தடவை நான் வருகிறேனோ, இல்லையோ அது வேறு விஷயம். தினம் 15 ரூபாய் டி.எ. கொடுத்து, மாதம் 250 ரூபாய் சம்பளம் தருகிறார்களே, அதற்கு ஏதாவது பிரயோசனம் இருக்க வேண்டாமா ? பழைய பாட்டையேதான் பாடி வருகிறேன். இப்படிப்பாடிக்கொண்டிருந்தால் என்னதான் முடிவு ? இதைத் தயவு செய்து சிந்தித்துப் பார்க்க வேண்டும்..............

**கனம் திரு. பூ. கக்கன் :** சட்ட சபையிலே பேசத்தான் வேண்டுமே தவிர பாடுவதற்கு இது இடம் இல்லை. அது வேறு இடம்.

**திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் :** அமைச்சர் அவர்கள் நான் சொல்லுகிற கருத்துக்களை கவனிக்க வேண்டும் என்று சொல்லுகிறேனே தவிர வேறு கருத்துப்பட பேசவில்லை. ஆகவே, எனது பேச்சின் திசையைத் திருப்ப வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நடுத்தர பாசனத் திட்டத்தைப் பற்றிக் கூறியிருக்கிறார்கள். வீடூர் டாமை எதிர்பார்த்தோம். எங்கெங்கோ டாம், டாம் என்று சொல்லுகிறார்கள். எங்கள் பகுதியில் ஒரு டாமும் காணோம். வீடூர் டாம் ஆயக்கட்டு குழப்பத்தைப் பற்றி ரெவின்யூ அமைச்சரிடம் பெரிய மிராசுதார்கள்

மூலமாக மனுவைக் கொடுத்தோம். ஆயக்கட்டில் சேர்த்து விட்டார்களே தவிர, அன்று முதல் அமலுக்குக் கொண்டு வந்ததாகச் சொல்லி வரிகளைப் போட்டு விட்டார்கள். இதனால் விவசாயிக்குப் பாதகம். அதனால் பலன் ஏதும் இடைக்கவில்லை. அந்தப் பகுதியில் கலெக்டர் அவர்கள் காம்ப் போட்டிருந்தபோது அவரிடம் எடுத்துச் சொன்னோம். போர்ட் மெம்பர் கூட பார்த்தார்கள். எந்த முறையில் செய்தால் நலமாக இருக்குமோ அதைச் செய்ய வேண்டுமென்று கூறிக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கிருஷ்ணா-கோதாவரி தண்ணீர் வருவதாகத் தெரியவில்லை. எந்தக் காலத்தில் வருமோ. **அல்லது** வராதோ, தெரியாது. அப்போது பார்த்துக்கொள்வோம்.

கூட்டுறவுபற்றி அருமையாக எழுதி வைத்திருக்கிறார்கள். என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம், இது வசதி உள்ளவர்களுக்குத் தேவை இல்லை, ஏழை விவசாயிகளுக்குத்தான் இது தேவை. விதை வாங்க, உரம் வாங்க, விவசாயம் செய்ய அவர்களுக்குத்தான் கடன் பணம் தேவைப்படுகிறது. இன்றைக்கு கூட்டுறவு சொஸைட்டிகளில் தலைவராக யார் இருக்கிறார்கள் ? அத்தனையும் பெரும் புள்ளிகள். கிராமத்தில் பணம் கேட்டால் 12 ரூபாய், 24 ரூபாய் வட்டி தருகிறாயா என்று கேட்டவர் இன்றைக்குத் தலைவராக இருக்கிறார். இதற்கு பழைய மாதிரியே விட்டு விடலாமே. இதற்கு சர்க்கார் பணத்தைக் கொடுத்து நிர்வாகம் செய்ய வேண்டிய அவசியம் இல்லை. எனது பகுதியில் பெரும்பாக்கத்தில் ஒரு பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் இருக்கிறது. ஆனால், அது இப்போது இயங்கவில்லை. ஏன் அது இரண்டு ஆண்டுகளாக இயங்கவில்லை என்று சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடத்தில் கேட்டுப் பார்த்தேன். அமைச்சர் இடத்தில் கூட கேட்டுப் பார்த்தேன். இன்னும் தக்க பதில் கிடைக்கவில்லை. என்ன செய்யப் போகிறார்களோ தெரியவில்லை. ஒரு அரிஜன், ஆதி திராவிடன் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவராக வந்து விட்டதால், இரண்டு வருஷங்களாக அதை இயக்காமலா வைத்திருப்பது ? நியாயமா ? உள்துறை அமைச்சர் அவர்கள் நான் பேசும்போது என்முகத்தையே பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அதனால் நான் எதையும் வேகமாகப் பேசுவதற்கு முடியவில்லை. நான் பேசுவதில் நியாயம் இருக்கிறதா, உண்மை இருக்கிறதா என்பதை தயவுசெய்து சிந்தித்துப் பாருங்கள். நான் ஏதாவது தவருகச் சொல்லியிருந்தால் கண்டியுங்கள்.

**கனம் திரு. பூ. கக்கன் :** கனம் உறுப்பினர் பேசும்போது நான் அவர்கள் முகத்தையே பார்த்துக்கொண்டிருக்கிறேன் என்று சொல்லுகிறார்கள். அவர் பேசும்போது வேண்டுமானால் நான் வேறு பக்கம் திரும்பிக் கொள்கிறேன்.

**திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் :** எங்கள் பகுதியில் தொழில் வளர்ச்சி ஒன்றுமே ஏற்படவில்லை. பூத்துரை, கடப்பேரிகுப்பம் பகுதியில் சுண்ணாம்புக்கல் 34 லட்சம் டன் கிடைக்கிறது என்று கணக்குப் போட்டிருக்கிறார்கள். அதுபற்றி கூட அசெம்பளியில் கேள்வி கேட்டிருக்கிறேன். அங்கே கிடைக்கும் சுண்ணாம்புக்கல்லைக் கொண்டு ஒரு சிமெண்டுத் தொழிற்சாலை ஏற்படுத்துவதாகச் சொன்னார்கள். அதுபற்றி ஒன்றும் தெரியவே இல்லை. மேலும், எங்கள் பகுதியில் வெள்ளைக் களிமண் 4 மில்லியன் டன் கிடைக்கிறது என்று சொன்னார்கள். அதை, எடுத்து ஏதாவது பயன்படுத்தக் கூடாதா ? அதனால் வேலையில்லாமல் இருப்பவர்களுக்கு வேலை கிடைக்கும். அதுபற்றியும் ஒன்றும் சொல்லப்படவில்லை. ஒன்றும் செய்யப்படவும் இல்லை; நாங்கள் இப்படி மக்கள் மத்தியிலும், உங்கள் மத்தியிலும், இருந்து கொண்டு ஒன்றும் சொல்ல முடியாமல் தவிக்கிறோம். ஏதாவது அபிவிருத்தி செய்ய வேண்டும். சுண்ணாம்புக் கல்லை வைத்துக்கொண்டு சிமெண்டு தொழிற்சாலையாவது ஏற்படுத்த வேண்டும். வெள்ளைக் களிமண்ணைக் கொண்டு பீங்கான் சாமான்களைச் செய்யலாம். இதுபற்றி எத்தனையோ தடவை சொல்லி யிருக்கிறேன். தயவுசெய்து அமைச்சர் அவர்கள் இதை கவனத்தில் கொண்டு ஏதாவது தக்க வழி செய்து ஒரு தொழிற்சாலை அமைக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.





சென்னையிலிருந்து கன்னியாகுமரி வரைக்கும் கடலோரமாக ரோடு போட வேண்டும் என்று ஒரு வருஷத்திற்கு முன்பு சொன்னார்கள். இந்த அறிக்கையில் அதுபற்றி கூறப்பட்டிருக்கிறதா என்று பார்த்தால் ஒன்றும் காணோம். இது மத்திய சர்க்கார் வேலையாக இருந்தாலும்கூட, தயவுசெய்து மாநில சர்க்கார் மத்திய சர்க்காருக்குத் தெரியப்படுத்தி, இந்த ரோடை அவசியமாக காலதாமதம் இல்லாமல் போட்டுக்கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும், இந்த ரோடு ஏற்பட்டு விட்டால், அதன்மூலம், மீனவர்களுக்கு ரொம்ப வசதி, ரொம்ப சௌகரியம் ஏற்படும். இதில் எத்தனையோ பிரச்னைகள் அடிபட்டுவிடும். ஆகவே, மத்திய சர்க்காரிடம் இதுபற்றி எடுத்துக் கூறி, சீக்கிரம் இந்த ரோடை போடுவதற்கு வேண்டிய ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். . . (மணி அடிக்கப்பட்டது).

* **திரு. எம். எஸ். செல்வராஜன் :** கனம் தலைவர் அவர்களே, கனம் முதல் அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கக்கூடிய நிதிநிலை அறிக்கையை வரவேற்கிறேன், முதல் ஐந்தாண்டுத் திட்ட காலத்திலும் சரி, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திலும் சரி, செலவு செய்த தொகையைவிட ஏறக்குறைய ரூ. 81 கோடி அதிகமாக மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் செலவிட்டு பெருமைப்படக் கூடிய அளவுக்கு நிதிநிலை அறிக்கையை கடைசி ஆண்டில் முதல் அமைச்சர் அவர்கள் இங்கே சமர்ப்பித்திருக்கிறார்கள். அடுத்த ஆண்டிலும் பற்றாக்குறை ஏற்படாத ஒரு பட்ஜெட்டை இங்கே கொடுத்திருப்பது மிகவும் வரவேற்கத் தகுந்தது. புதியதாக வரி வருமோ என்று எத்தனையோ பேர்கள் எதிர் பார்த்துக் கொண்டிருந்தார்கள் என்றாலும், அவர்களெல்லாம் ஏமாறுகின்ற அளவுக்கு புதிய வரி விதிப்பு இல்லாத அளவுக்கு நிதிநிலை அறிக்கை இங்கே சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது.

வருமானம் கணிசமான அளவுக்குப் பெருகக்கூடிய சில இலாகாக்கள் குறிப்பிடத்தக்க அளவுக்கு நல்ல பணி செய்திருக்கின்றன. குறிப்பாக, வர்த்தக வரி இலாகாவில் பல கோடி ரூபாய் அதிக வருமானம் வரக் கூடிய அளவுக்கு நல்ல முயற்சிகள் நடந்திருக்கின்றன. அது மிகவும் பாராட்டத் தகுந்தது.

நம் எல்லோருக்கும் இருக்கிற குறை விவசாயத்தைப் பொறுத்த மட்டில் திட்ட இலக்கை நிறைவேற்ற முடியாத ஒரு கஷ்டம் இருக்கிறது. அதற்கு இரண்டு முக்கியமான காரணங்களை முதல் அமைச்சர் அவர்கள் தன்னுடைய அறிக்கையிலே தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். நாம் போட்டிருக்கிற திட்டங்கள், அணைத் திட்டமாக இருந்தாலும் சரி, அல்லது நீர்ப்பாசன திட்டமாக இருந்தாலும் சரி, அவற்றின் முழுப் பலனையும், ஏக காலத்தில், செலவு செய்த அந்த நேரத்திலோ அல்லது சமீப காலத்திற்குள்ளோ அனுபவிக்க முடியாத அளவுக்கு, அவைகளெல்லாம் பூரண பலன் அளிப்பதற்குத் தாமதம் ஏற்பட்டிருப்பது ஒரு காரணம். மற்றொரு காரணம், எதிர்பாராத அளவுக்கு இயற்கையால் ஏற்படக்கூடிய கோளாறு இந்தச் சிரமத்தை யெல்லாம் ஏற்படுத்துகிறது என்றும் சொல்லியிருக்கிறார். சிறிய அளவுக்கு இயற்கை பொய்த்து விட்டாலும், 10 லட்சம் டன் அளவுக்கு உணவுப் பொருள் உற்பத்திக் குறைவு ஏற்படும் என்று கணித்திருக்கிறார்கள். இந்தக் கஷ்டமான நிலையில்தான் உணவு உற்பத்தி இலக்கை நாம் பூரணமாக நிறைவேற்ற முடியாத சூழ்நிலை இருக்கிறது. உணவுப் பற்றாக்குறை என்பது நம்முடைய ராஜ்யத்தில் மட்டுமல்ல, தேசம் பூராவிற்கும் அது பொதுவானது. அது மட்டுமல்ல. உலக நாடுகளிலும் கூட உணவுப் பற்றாக்குறை இருக்கிறது. சந்திரனை எட்டிப் பிடிக்கக்கூடிய விஞ்ஞான வலிமை பெற்றிருக்கக்கூடிய ரஷ்ய நாட்டில் கூட 12 கோடி டன் வருஷா வருஷம் உற்பத்தியாகும் என்றால், அதில் 3 கோடி டன் பள்ளம் விழுந்திருக்கிறது என்பதை விவரம் அறிந்தவர்கள் தெரிந்திருப்பார்கள். உணவுப் பற்றாக்குறை ஒரு தேசத்தில் மட்டுமல்ல, ஒரு ராஜ்யத்தில் மட்டுமல்ல, என்றாலும் கூட நாம் உணவு உற்பத்தி சம்பந்தமாக நம்முடைய இலக்கை எட்ட முடியவில்லை என்பதை மிகவும் பெருமைப்படக்கூடிய அளவுக்கு நாம் எடுத்துக்கொள்ள

முடியாது. இன்னும் நாம் செய்ய வேண்டிய விஷயங்கள் உண்டு. கனம் முதல் அமைச்சர் அவர்கள் தன்னுடைய அறிக்கையிலே சில நுணுக்கமான விஷயங்களைத் தெரிவித்திருக்கிறார்கள். விவசாயத்தைப் பொறுத்த மட்டில், தஞ்சாவூர், செங்கற்பட்டு, தென் ஆற்காடு போன்ற பகுதிகளில் நவீன விதைகள் உபயோகப்படுத்தினால், பாசன நிலைமைகளில் சில மாறுதல்களை ஏற்படுத்தினால், சராசரி உற்பத்தி அதிகரிக்கக் கூடும், அதற்கான தீவிர முயற்சிகள் நடந்து கொண்டிருக்கின்றன என்று சொல்லியிருப்பது ஆறுதல் அளிக்கிறது. நாம் எவ்வளவு நவீனமான விதைகளை, புதிய ரக விதைகளை விவசாயிகளுக்குக் கொடுத்து உதவுகிறோமோ அந்த அளவுக்கு அதிகமாக உரம் தேவை. எந்த அளவுக்குக் கிராமங்களில் கிடைக்கும் உரத்தையெல்லாம் நாம் பயன்படுத்தினாலும் கூட, வெளியிலிருந்து உரம் நமக்கு ஏராளமாகத் தேவை. அடுத்த ஆண்டில் கூட 2 லட்சம் டன் அதிகமாக உர உற்பத்திக்கு எல்லாவிதமான ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருக்கின்றன. அதுபோன்று உர பற்றாக்குறை ஏற்படாத அளவுக்கு நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்திற்குள்ளாக வாவது, மிகவும் ஜாக்கிரதையாக முன்னேறக் கடமைப்பட்டிருக்கிறோம். ஜனங்களிடையே ஏற்பட்டிருக்கக்கூடிய வளர்ச்சிக்குக் குறைவில்லை. நல்ல விதைகளைப் போட்டு சிறந்த முறையில் சாகுபடி செய்ய வேண்டும், உரங்களை உபயோகப்படுத்த வேண்டும், உற்பத்தியை அதிகரிக்க வேண்டும் என்ற எண்ணத்திற்கு ஜனங்களிடையே பஞ்சம் இல்லை. அரசாங்கத் துறையில் இது சம்பந்தமாக இன்னும் தீவிர கவனம் தேவை. விவசாயிகளுக்கு வேண்டிய உதவிகள் காலாகாலத்தில் கிடைக்கும்படி செய்தால்தான் நல்ல பலன் கிடைக்கும், விவசாயிகள் தலை நிமிர்ந்து நிற்கக்கூடிய நிலைமை ஏற்படும்.

விவசாய உற்பத்திப் பொருள்களை அரசாங்கம் கொள்முதல் செய்வதற்குத் தீவிர ஏற்பாடுகளைச் செய்திருக்கிறார்கள். கொள்முதல் திட்டம் நல்ல திட்டம் தான். அதனால் ஓரளவுக்கு முறையான விலையும் விவசாயிகளுக்குக் கிடைக்கிறது. சாதாரண காலத்தில் ஜில்லாவுக்குள் தலைச் சுமையாகவோ அல்லது சைக்கிள்களிலோ சாப்பாட்டிற்காகக் கொண்டு போகக் கூடிய நெல், அரிசியைத் தடை செய்வதில்லை என்றாலும், கொள்முதல் காலத்தில் அத்தகைய கெடுபிடிகள் திருநெல்வேலி ஜில்லாவில் இருக்கின்றன. இந்த நிலைதான் மற்ற ஜில்லாக்களிலும் இருக்கும் என்று நம்புகிறேன். தலைச் சுமையாகவோ அல்லது சைக்கிளிலோ சாப்பாட்டிற்காகக் கொண்டு போகக்கூடிய அரிசியை அல்லது நெல்லை ஓர் அளவு வரை மட்டுமாவது கொண்டுபோவதற்கு அனுமதிக்கவேண்டும். அமைச்சர் அவர்கள் இதில் கவனம் செலுத்தி, சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குத் தகுந்த தாக்கீது கொடுக்கவேண்டும். அவர்களுக்கு இதனால் எந்த விதத்திலும் சிரமம் இல்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டியது தலையாய கடமை என்பது என்னுடைய கோரிக்கை. திருநெல்வேலி ஜில்லாவைப் பொறுத்த மட்டில், சென்ற வருஷம் வரையில் பஞ்ச நிலைமைதான். சென்ற வருஷம் பெரும்பாலும் பயிர்கள் தீய்ந்துபோய்விட்டன. இந்த வருஷம் ஏதோ ஓரளவுக்கு உற்பத்தி நல்லவிதமாக இருக்கிறது. திரு. ஏ. பி. ஸி. வீரபாகு அவர்கள் கூறியதுபோல், நிலவரியை வசூல் செய்வதற்குக் காலதாமதம் செய்வது மாத்திரமல்ல, சென்ற வருஷம் ஒத்திவைத்த கடன் தொகைப் பணத்தை வசூலிப்பதற்கான கெடுபிடிகள் சில பகுதிகளில் நடந்துகொண்டிருக்கின்றன, மே மாதம் 12-ம் தேதி கடைசியில் இதை வசூல் செய்யக்கூடிய அளவுக்கு அவர்களுக்கு அவகாசம் கொடுக்கவேண்டும், சந்தர்ப்பம் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல, பத்து வருஷங்களுக்கு முன்பு மணிமுத்தாறு தேக்கம் கட்டினார்கள், அதற்குரிய சட்டமும் செய்யப்பட்டது. அந்தத் தீர்வையை இந்த ஆண்டு வசூல் செய்வதற்கு பல பகுதிகளில் தீவிரமாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. 25 சத விகிதம் சர்சார்ஜ் விதித்து, அதையே ஒரு சுமைபோல சுமந்துகொண்டு விவசாயிகள் கஷ்டப்படுகிறார்கள். அந்த நிலையில் 10 வருஷங்களுக்கு முன்பு நிர்ணயித்த ஒன்றை இந்த ஆண்டில் வசூல் செய்ய வேண்டியது அவசியம்தானா என்பது





தீவிரமான யோசனைக்குரியது. அந்த வரி வசூலைக் காலதாமதப்படுத்தி வசூல் செய்யலாமா என்பது பற்றி யோசிப்பது அவசியம். அல்லது முற்றிலும் அதை விட்டுவிடலாமா என்பது பற்றியும் யோசிக்கலாம். வருஷத்திற்கு ரூ. 5 லட்சம் வீதம், பத்து வருஷங்களில் ரூ. 50 லட்சம் வசூலாகும். சுமார் 6 கோடி செலவழித்து நிறைவேற்றியிருக்கக் கூடிய மணிமுத்தாறு தேக்கம் சம்பந்தமாக, 10 வருஷங்களில் ரூ. 50 லட்சம் வசூல் செய்துவிட்டால், நமது கஷ்டம் தீர்ந்துவிடுமா என்பது சிந்தித்துப் பார்க்கவேண்டிய விஷயம். ஒருக்கால் அந்த வரியை முழுவதுமே விட்டுக் கொடுக்க முடியுமா, தாட்சண்யம் காட்டி அதை வசூல் செய்யாமலே இருப்பதற்கு முடியுமா என்பதை அரசாங்கம் தீவிரமாக யோசிக்கலாம். எப்படியும் வசூல் செய்வது என்று இருந்தால், குறைந்தது ஐந்து வருஷத்திற்காவது தள்ளிப்போட்டு, சாவகாசமாகச் செய்யலாம்.

திருநெல்வேலியில் ஒரு விசேஷ அமைப்பு இருக்கிறது. ஏறக்குறைய 20,000 எக்கரா ஒரு போகத்திலே இரு போகம் பயிர் செய்வதும், 1.00 p.m. புஞ்சையில் நஞ்சை பயிர் செய்வதும் அதற்கு தண்ணீர் தண்டத் தீர்வை போடுவதும் இருந்து வருகிறது. காலம் காலமாக அமைச்சர்கள் வந்து பார்த்திருக்கிறார்கள். இப்பொழுது பப்ளிக் ஒர்க்ஸ் அமைச்சராக இருக்கும் அமைச்சரும் வந்து பார்த்து அதற்கு வேண்டிய பரிகாரங்கள் செய்து வருகிறார்கள். முக்கியமானது, இருந்த 20 ரேட் என்பதை மாற்றி தண்டத் தீர்வை இரண்டு ரேட்டாக மாற்றியமைத்திருக்கிறார்கள். ஒரு ரேட் தண்ணீர் ரேட் அட்வான்ஸ் கார் பயிருக்கும், புஞ்சையிலே நஞ்சை பயிருக்கு ஒரு ரேட்டும் போடவேண்டும் என்று தாக்கீது விடுத்திருக்கிறார்கள். அதே சலுகை இன்றையதினம் தண்ணீர் அதிகமாக இருந்து, கடலுக்கு வீணாகப்போகும் அந்தக் காலத்தில், அந்த பிசானம் பயிருக்கும் ஒரு போகத்திலே இருபோகம் விளைக்கும் பகுதிக்கும் தண்டத் தீர்வை போட வேண்டுமா என்று பார்க்க வேண்டும். உடனடியாகத் தண்டத் தீர்வைக்கே இடம் இல்லாத அத்தகைய வழிவகைகளைச்செய்யலாம். அரசாங்கம் விவசாயிகளுடைய சிரமங்களைப் பார்த்து தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தாம்பிரபரணி பாசனத்தில் முக்கியமாக 9 கால்வாய்கள் இருக்கின்றன. அவைகளைப் புனரமைப்புச் செய்து நல்ல முறையில் அமைக்க வேண்டும் என்று கிட்டத்தட்ட 15 லட்சம் ரூபாய் அளவில் திட்டம் போடப்பட்டது. கன்னடியன் கால்வாய் உள்பட சென்ற வறட்சிக் காலத்திலேயே பூர்த்தி செய்யக் கோரினோம். சர்க்கார் அனுமதிக்காததால் அது காலாகாலத்தில் நிறைவேற்றப்படவில்லை. அதனால், சிரமங்கள் நீடித்து இருக்கின்றன. அந்தக் கால்வாய்களைப் புனரமைப்புச் செய்து கொடுத்தால், அந்த 20,000 எக்கராவிற்கும் நிலத்தீர்வையை ரேஷனலைஸ் செய்துகொடுக்க வசதியாக இருக்கும். அதில் காலதாமதம் ஏற்பட்டுவிட்டது என்றாலும், இனியாவது அந்த வேலையைக் காலாகாலத்தில், இந்த வறண்ட காலத்தில் முடித்து, சாங்ஷன் செய்து கொடுத்தால், விவசாயிகளுக்குச் சிரமம் இல்லாமல் இருக்கும். அந்த நிலங்களை லோகலைஸ் செய்து தண்டத் தீர்வைக்கு இடம் இல்லாமல் செய்யலாம். முறையான தீர்வையை ஏற்படுத்தலாம்.

திருநெல்வேலி ஜில்லாவிலே மூன்றாவது திட்டக் காலத்திலேயே ஒரு எஞ்ஜினீயரிங் கல்லூரி ஏற்படுத்த தனியார் முன் வந்தும், அதை நிறைவேற்றவில்லை. இந்த நான்காவது திட்டத்திலும் அதை அமைக்கும் பிரஸ்தாபமே இல்லை. ஆனால் ஒரு கேள்விக்குப் பதில் சொல்லும் வகையில், தஞ்சையிலும், திருநெல்வேலியிலும் அப்படிப்பட்ட கல்லூரிகள் அமையும் என்று சொன்னார்கள். எங்களுடைய விருப்பம், கோரிக்கை கூட, திருநெல்வேலியில் கிராமச் சூழ்நிலையில் நாசரேத் பக்கத்திலே, 5 லட்ச ரூபாயும், நிலமும், கட்டடமும், பணமும் கொடுத்து பாலிடெக்னிக் அமைக்க முயற்சிகள் நடந்தன. அந்த இடத்தை இப்பொழுது கிறிஸ்துவ மிஷனரி ஸ்தாபனத்தைச் சேர்ந்தவர்கள் இலவசமாக சர்க்காருக்குக் கொடுக்கத் தயாராக இருக்கிறார்கள். 50 எக்கரா மட்டுமின்றி, இன்னும் எவ்வளவு நிலம் வேண்டும் என்றாலும் அவ்வளவும் அந்தப் பக்கத்திலே கிடைக்க வாய்ப்பு இருக்கிறது. நிலம் இருக்கிறது. கட்டடம் இருக்கிறது,

[திரு. எம். எஸ். செல்வராஜன்] [28th February 1966

தண்ணீர் கிடைக்கிறது. ஆகவே அந்த இடத்தில் கிராமாந்தரச் சூழ்நிலையில் திருநெல்வேலிக்கு ஒரு எஞ்ஜினியரிங் கல்லூரியைக் கொடுத்து காலாகாலத்தில் அதை ஏற்படுத்த, நாசரேத்துக்குப் பக்கத்திலே உள்ள வசதிகளைப் பயன்படுத்திக்கொள்ளலாம்.

அதேபோல தூத்துக்குடிக்கு அருகிலே ஒரு மெரைன் கல்லூரியை அமைக்க, தனியார் ஒருவர் பல லட்சக்கணக்கான ரூபாய்களை நன்கொடையாகக் கொடுக்க இருக்கிறார் என்கிற தகவல் அரசாங்கத்திற்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. தூத்துக்குடி வளர்ச்சியிலேயே மிக்க அக்கறை கொண்டுள்ள சர்க்கார் இந்த மெரைன் கல்லூரி அமைப்பதிலும் வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யலாம். அதே போன்று, திருச்சிக்கு அப்பால் தெற்கே ஹெவி எஞ்ஜினியரிங் தொழிற்சாலைகள் அமைக்க வசதி குறைவாக இருப்பது, அங்கே பிராட்கேஜ் பாதை இல்லாததுதான். மாநில அரசாங்கம் நல்ல முறையில் மத்திய அரசாங்கத்திடமிருந்து தொழிற்சாலைகளைத் தென் பகுதிக்குக் கொண்டுவரும்போது, பிராட்கேஜ் பாதை இல்லாததால் அவற்றை விஸ்தரிக்க முடியாத நிலைமை இருக்கிறது. ஆகவே, தூத்துக்குடி, திருநெல்வேலி வரை பிராட்கேஜ் பாதையைத் திருத்தி அமைக்க தக்க ஏற்பாடுகள் செய்ய வேண்டும்.

பூமிக்கு அடியிலே உள்ள நீரைப் பயன்படுத்தும் முயற்சியில், தூத்துக்குடி, ஆத்தூர், திருச்செந்தூர் பகுதிகளில் 82' கீழே தண்ணீர் இருப்பதாக போரிங்கு போட்டு இருக்கிறவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அது சம்பந்தமாக தீர்க்கமாகப் பரிசீலனைசெய்ய அதிகாரிகளைப் போட்டு ஆவன செய்யவேண்டும். தூத்துக்குடியை ஒட்டியிருக்கும் பகுதிகளெல்லாம் தண்ணீர் இல்லாத காரணத்தினால் வளம் பெறாமல் இருப்பதைத் திருத்தி அமைக்க இது நல்ல வழிவகை செய்ததாக இருக்கும். அது பற்றித் தீர்க்கமாகப் பரிசீலனை செய்ய வேண்டும்.

திருச்செந்தூர் பகுதியில் 12,000 ஏக்கரா குதிரை மொழி தேரி என்று ரிசர்வ்ட் பாரஸ்டாக இருக்கிறது. வருடத்திற்கு 12 ஆயிரம் ரூபாய்தான் வரவு. சிலவு ஏராளம். மண் மேடு. அங்கே மழை காலத்திலே, பெய்யும் மழைத் தண்ணீர் வீணாகி மண்ணை அரித்துக்கொண்டு போய் பன்னிரண்டு ஏரிகளுக்கெல்லாம் தாய் ஏரியாக இருக்கும். கடம்பாக்குளம் என்பது சில்ட்டாக படிந்து, மண் மேடிட்டுப் போகிறது. அது வீணாகிக்கொண்டு இருக்கிறது. அத்தேரியிலே தண்ணீர் வீணாகாமல் தடுப்புச் சுவர்கள் கட்டி தண்ணீரைத் தேக்கவேண்டும். சுற்றிலுமுள்ள நீர் ஊற்றுக்களுக்கு உபயோகமாயிருக்கும். அதுபற்றி 10 வருஷ காலமாக நான் இந்தச் சபையிலே சொல்லிக்கொண்டிருந்தும், அதிலே கவனம் செலுத்தப்படவில்லை. எஸ்டிமேட்டு கூட தயாரித்தார்கள். ஆனால் காலதாமதம் ஏற்பட்டிருக்கிறது. அதிலே தீவிரக் கவனம் செலுத்த வேண்டும்.

மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களிலும் எவ்வளவு கேட்டும் நடக்கவில்லை. திருநெல்வேலி கடலோரப் பகுதியாகிய குலசேகரப் பட்டணம் சிறு போர்ட்டாக அபிவிருத்தி செய்யப்படவேண்டும் என்கிற அபிலாஷை இருந்தும், நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. அங்கே வருகிற தோணிகளுக்கு ஒரு கமிட்டி நிறுவி பல ஆண்டுகளாக சுங்கம் கூட வசூல் செய்தார்கள். ஆனால் மேற்கொண்டு அதைச் செய்து முடிக்கவில்லை. புன்னைக்காயலை ஓர் மீன்பிடித் துறைமுகமாக அபிவிருத்தி செய்ய இருந்த திட்டம் என்னாயிற்று? காலாகாலத்தில் அத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும்.

இப்பொழுது உப்புத் தொழிலுக்குப் பாதகம் ஏற்பட்டிருக்கிறது. இன்றைக்குத் தேசத்தில் உற்பத்தியாகும் அளவில் நான்கில் ஒன்று அல்லது ஐந்தில் ஒன்று இந்த ராஜ்யத்திலே உற்பத்தி செய்யப்படுகிறது. சௌராஷ்ட்ரா, குஜராத் முதலிய பகுதிகளிலிருந்து 1,800 மைலுக்கு மேல் சுற்றி வந்து ஜப்பான், இந்தோனேஷியா முதலிய இடங்களுக்குப் போகும் கப்பலுக்கும், தூத்துக்குடியிலிருந்து போகும் கப்பலுக்கும் ஒரே கட்டணமாக இருப்பதால் நமது ராஜ்யத்தில் உற்பத்தியாகும் உப்பு



28th February 1966] [திரு. எம். எஸ். செல்வராஜன்]

ஏற்றுமதிக்குப் பெருத்த தொல்லை ஏற்பட்டிருக்கிறது. அதைப் பரிசீலனை செய்து இந்த ராச்சியத்திலே எந்த அளவுக்கு நம் தொழிலைப் பெருக்கிக் கொள்ள முடியும் என்று ராச்சிய சர்க்காரும் பார்த்து தக்க ஏற்பாடுகள் செய்ய வேண்டும்.

இன்றைக்கு நெல் கொள்முதல் செய்வதில் சர்க்காரும் பணம் கொடுக்கிறார்கள். நாம் செலவிடும் தொகைகள் மத்திய சர்க்காரிலிருந்து பெற்றால்தான் வேறு ஏற்பாடுகளைச் செய்ய முடியும். அந்த வகையில் மத்திய சர்க்காரிடமிருந்து தொகைகளைப் பெற என்ன ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

கிண்டியிலே இண்டஸ்ட்ரியல் கோவாப்பரேட்டிவ் பாங்குக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அதற்கு நிதி பற்றாக்குறை ஏற்பட்டிருப்பதாகத் தெரிகிறது. சிறு தொழில்கள் வளர்ச்சி அடைய தக்க வசதி செய்கிறது. அப்படிப்பட்ட பாங்குக்கு பணம் பற்றாக்குறை என்றால் அவர்கள் கொடுக்கும் உதவியிலும் தடை ஏற்படுகிறது. சொற்ப வட்டியிலே அடங்கிக் கிடக்கும் தேவஸ்தானங்களின் நிதிகள் கல்வி ஸ்தாபனங்களின் எண்டோமெண்டுகளின் பணத்தை இது போன்ற பாங்குகளுக்குக் கொடுக்க டெபாசிட் மூலமாகக் கொடுத்து உதவி செய்ய முடியுமா என்பதைப் பற்றி அரசாங்கம் தீவிரக் கவனம் செலுத்தவேண்டும். இந்தப் பாங்குக்கு டெவலெப்மெண்ட் பாங்குகளில் ரீ பைனான்ஸிங் வசதிக்கு ஏற்பாடு செய்யலாம். அரசாங்கம் நேரடியாக பங்காகவும், கடனாகவும் உதவி செய்யலாம்.

சென்ற ஆண்டு நான் பேசும்போது தெரிவித்த ஒரு கருத்தை மறுபடியும் கூறவிரும்புகிறேன். கூட்டுறவு நூற்பாலைகளில் தொழிலாளர்கள் பங்கு பெறுவது பற்றிச் சொல்லும்போது, திருச்செந்தூர் பக்கத்திலே நாசரேத் கூட்டுறவு மில்லிலே தொழிலாளர் பங்கு கொண்டு இருக்கும் நல்ல செய்தி பரவி வருவதிலே சந்தோஷம். திருநெல்வேலியில் சந்தோஷத்திற்குரியது என்னவென்றால், கணபதி மில் என்கிற ஒரு தனியார் ஸ்தாபனத்தில் வேலை செய்யக் கூடிய 600 தொழிலாளர்களும் அந்த மில் நிர்வாகத்திலே பங்கு பெற வசதி வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறார்கள். அந்த வசதியை மேலும் விஸ்தரிப்பதற்கு முடியும். அது போன்ற நல்ல நிலையை இந்த ராஜ்யம் முழுவதிலும் உள்ள கூட்டுறவு நூற்பாலைகளில் உள்ள தொழிலாளர்களுக்குக் கொடுக்கலாம் என்று நான் மீண்டும் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

புதிதாக ஏற்படுத்திய கூட்டுறவு நூற்பு ஆலைகள் ஒன்பது இருக்கின்றன. அவற்றை விஸ்தரிப்பதற்கான வழிவகைகளுக்கு 20 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். மற்றொரு நூற்பு ஆலையைத் திருநெல்வேலி ஜில்லாவில் ஏற்படுத்தி, இலங்கை, பர்மா ஆகிய நாடுகளிலிருந்து வரக்கூடிய தமிழர்களுக்கு வேலை கொடுத்து வாழ்வு அளிப்பதற்கும் சேர்த்துத் தற்போது அரசாங்கம் ஒதுக்கியிருக்கும் 20 லட்ச ரூபாய் மிகவும் குறைவாக இருக்கும் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மீன் பிடித் துறையில் இருப்பவர்களுக்கு வேண்டிய கட்டுமரத்திற்கு வேண்டிய அல்பீசியா என்கிற மரம் இலங்கையிலிருந்து வந்துகொண்டிருந்தது. இப்பொழுது அது தடைபட்டிருக்கிறது. அந்த மரம் நம் ராஜ்யத்தில் அவ்வளவாகக் கிடையாது. குற்றாலம் மலையில் உற்பத்தி செய்வதற்கான முயற்சி இருந்தது. அந்த முயற்சி எந்த அளவில் இருக்கிறது என்று தெரியவில்லை. கட்டுமரத்திற்குத் தேவையான இந்த மரம் இந்த ராஜ்யத்தில் கிடைப்பதற்கு வழி உண்டா, அல்லது அதற்கு மாற்று வசதிகள் என்ன என்ன என்று இந்த ராஜ்ய அரசாங்கம் தீவிரமாக யோசிக்க வேண்டும். மீனவர்களுக்கு வேண்டிய வலைகளுக்கு நைலான் நூலுக்கு உள்ள ஸப்ஸிடி ஓரளவுக்குத் தொடர்ந்து இருந்தாலும், நைலான் நூலின் விலையிலும் தரத்திலும் வித்தியாசம் இருக்கிறது. இதையெல்லாம் கவனித்து மீனவர்கள் துயரைக் களைய அரசாங்கம் ஏற்பாடு செய்ய வேண்டும்.

திருநெல்வேலியில் ஆயிரக்கணக்கான ஆசிரியர்கள் படித்து விட்டு, வேலை இல்லாமல் வேலை தேடித் தரும் ஸ்தாபனத்தில் பதிவு செய்து ஏங்கிக்கொண்டிருக்கும் நிலை இருக்கிறது. அதற்குக் காரணம் திட்டத்தில்

ஏற்படும் கோளாறு, மேற்கொண்டு பாடசாலைகளை அதிகரித்துக் கொடுக்க முடியுமா, பாடசாலைகளில் அதிக ஆசிரியர்கள் நியமிப்பது பரிகாரமாகுமா என்று அரசாங்கம் யோசிக்க வேண்டும்.

என்.ஜி.ஓக்களுக்கும் இதர சர்க்கார் சிப்பந்திகளுக்கும் ஆசிரியர்களுக்கும், விலைவாசி ஏற்றத்தைச் சமாளிப்பதற்கு மாற்று யோசனைகள் என்ன என்பது யோசிக்கவேண்டும். பணமாகக் கொடுப்பதற்குப் பதிலாக விளை பொருள்களையும், இதர தேவைப் பொருட்களையும் குறைந்த விலைக்குக் கொடுக்கும் ஏற்பாடு நல்லதுதான். அது எவ்விதம் சாத்தியம் என்று தீவிரமாகப் பரிசீலித்துத் துரித முடிவு செய்யவேண்டும்.

இந்த அரசாங்கம் மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களை நல்ல முறையில் நிறைவேற்றிய பெருமையோடு, நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தை உறுதியோடு நிறைவேற்ற முடியும் என்ற நம்பிக்கையை நாட்டு மக்களிடையே ஏற்படுத்தியிருக்கிறது. அத்தகைய நம்பிக்கையை நாட்டு மக்களுக்குக் கொடுக்கக் கூடிய நல்ல திட்டமாக இந்த பட்ஜெட் அமையும் என்ற கருத்தைத் தெரிவித்து, இந்த பட்ஜெட்டை நான் வரவேற்கிறேன்.

1-10 p.m. ***திரு. தா. சின்னசாமி :** கனம் தலைவரவர்களே, இந்த 1966-67-ஆம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையைக் குறித்து என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைத் தெரிவிக்கலாம் என்று நான் நினைக்கிறேன்.

மூன்று ஐந்தாண்டுத் திட்டங்கள் முடிந்து நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தைத் துவக்கும் நிலையில் இந்த நிதி நிலை அறிக்கையை இந்த அமைச்சரவை சமர்ப்பித்திருக்கிறது. இந்த நிலையில் எங்களுடைய மாவட்டத்தில் உள்ள சில குறைபாடுகளைச் சொன்னாலும், ஜனநாயகக் குடியரசு ஆட்சியிலே பேச்சுரிமை காரணமாகச் சில கருத்துக்களைச் சொன்னாலும், தெரிந்தோ தெரியாமலோ, புரிந்தோ புரியாமலோ நாங்கள் சொன்னாலும், கனம் அமைச்சர் அவர்கள் குறுக்கிட்டுப் பேசுவார்களானால் கருத்துக்கள் தடைப்பட்டுவிடும் என்பதைக் கனம் அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொண்டு, என்னுடைய உரையைத் துவக்குகின்றேன்.

தென்னாற்காடு ஜில்லாவில், எங்களுடைய வட்டத்தில் 1,360,080 ஏக்கர் விவசாயத்திற்கு லாயக்காக உள்ள நிலமாக இருக்கிறது. அதே இடத்தில் விவசாயம் செய்வதற்குத் தகுதியுள்ளவர்கள், நல்ல திறமை உள்ளவர்கள் இருக்கிறார்கள். 10 கெஜம், 12 கெஜம், 20 கெஜம் ஆழம் தோண்டி தண்ணீர் எடுத்து, பத்து ஏக்கர், பதினைந்து ஏக்கர் நிலத்தில் நல்ல முறையில் விவசாயம் செய்து, உணவுப் பொருள்களைப் பெருக்குவதில் அக்கறையுள்ள விவசாயிகள் அந்த மாவட்டத்தில் இருக்கிறார்கள் என்பதையும் கனம் அமைச்சர் அவர்கள் கண்கூடாகப் பார்த்திருப்பார்கள். கோமுக நதி அணைக்கட்டுத் திட்டம் எங்கள் கள்ளக்குறிச்சி வட்டத்திற்கு உபயோகப்படாமல் சில கிராமங்களுக்குப் பயன்படுகிறது. கோமுக நதி அணைக்கட்டுத் திட்டத்தை விரிவுபடுத்தி, கோடிக்கணக்கான பணத்தைச் செலவு செய்து, நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலாவது, கள்ளக்குறிச்சி, சின்னசேலம், குகையூர் வரைக்கும் தண்ணீரைத் திருப்பினால் இரண்டு லட்சம் ஏக்கரா நிலத்திற்குப் பாசன வசதி ஏற்பட்டு, உணவு உற்பத்தி அதிகமாக முடியும் என்று கனம் உள்துறை அமைச்சர் அவர்களுக்கு நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அவர் செய்வார் என்றும் நம்புகிறேன். அந்தப் பகுதியில், 770,000 ஏக்கர் நிலம் மேட்டு நிலங்களாக இருக்கின்றன. அங்கே கேணி வெட்டி விவசாயம் செய்யக்கூடிய நல்ல வாய்ப்பு இருக்கிறது. அந்த இடங்களுக்காவது கனம் அமைச்சர் அவர்கள்—குறிப்பாக விவசாய, அரிசன நல அமைச்சர் அவர்கள்—பாசன வசதி செய்துகொடுப்பதற்குக் கவனம் செலுத்த வேண்டும். நாடெங்கும் வாழ்ந்தால் கேடொன்றும் இல்லை என்ற முறையில், ஏழைக் குடியானவர்களுக்கும், ஏழை அரிசனங்களுக்கும் பாசன வசதியைச் செய்து கொடுக்க முடியாவிட்டாலும், கேணி வெட்டிக்கொடுப்பதற்காவது உதவி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். கேணி வெட்டுகிறோம் என்று ஏட்டிலே எழுதி வைத்துவிடுவதால் பிரயோசனம் இல்லை. கேணி வெட்ட உதவி வேண்டும் என்று கேட்கும் ஏழை விவசாயிகளுக்கு ஐந்து





வருஷம், ஆறு வருஷம் ஆகியும், இதுவரை கேணி வெட்ட உதவி கிடைக்கவில்லை. இதுபற்றி பஞ்சாயத்து யூனியனிலே நடக்கக் கூடிய பல குறைகளை நான் சொன்னால் அமைச்சர்கள் தடை சொல்வார்கள் என்று கருதுகிறேன். ஆகையால், நம்முடைய அரசாங்கம் உண்மையிலேயே ஜனநாயக அரசாங்கமாக இருந்தால், ஏழைகளுக்கு உபகாரம் செய்யக்கூடிய ஆட்சியாக இருந்தால், ஏழைக்கு உபகாரம் செய்கிறோம் என்று மேடையிலே பேசுகிறதெல்லாம் உண்மையாக இருந்தால், அரிசனங்களுக்கு உதவி செய்கிறோம் என்று சொல்லிக்கொள்ளும் நம்முடைய சர்க்கார், இந்த ஏழைகளுக்கு, 3 ஏக்கர், 5 ஏக்கர் நிலம்—மேட்டுப் புறத்திலே இருந்தாலும்—அவர்களுக்கு இரண்டாயிரம், மூவாயிரம் ரூபாய் கடன் கொடுத்து, பம்ப் செட் வாங்கிக் கொடுத்து, உணவு உற்பத்தியைப் பெருக்க உதவி செய்யவேண்டும் என்று நம்முடைய அமைச்சரவையை நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

நம்முடைய சர்க்கார் அரிசனங்களுக்குச் சலுகை செய்வதாகச் சொல்கிறது. பழைய காலத்தில், துரியோதனதியர் ஆட்சியிலே அவர்களுக்கு உறுதுணையாக சகுனி என்ற ஒருவர் இருந்ததாகச் சொல்வார்கள். பாண்டவர்களைப் போரில் ஜெயிக்க முடியாது என்று சில காரியங்களைச் செய்ததாகச் சொல்லுவார்கள். நான் மற்ற வார்த்தையில் சொல்ல முன்வரவில்லை—கதர் சட்டையைத்தான் நான் சொன்னேனே தவிர, அரிசனங்களுக்கு அமைச்சர் ஏதோ செய்ததை அவர் வாங்கிக்கொண்டார் என்று சொல்லவில்லை. "கதர் சட்டையைப் போட்டுக்கொண்டு ஆபீசர்களை மிரட்டுகிறார்கள்" என்று சொன்னேன். அதைக் கனம் அங்கத்தினர் அருமை நண்பர் திரு. ஆனந்தன் அவர்கள் தவறாக எடுத்துக்கொண்டார். என்னிடம் என்ன அதிகாரம் இருக்கிறது ? எங்களுக்கு எதிர்த்தரப்பில் இருக்கிறவர்கள்தான் எங்கே கறுப்பு சிவப்பு இருக்கிறது என்று பார்த்துக்கொண்டிருக்கிறார்களே. நாங்கள் என்ன செய்துவிட முடியும் ? எங்களிடம் என்ன இருக்கிறது ? "கதர் சட்டை போட்டுக்கொண்டு அரசாங்கத்தில் உள்ள பணியாளர்களை மிரட்டுகிறார்கள்" என்று நான் சொன்னேனே தவிர வேறு அல்ல. அதனுடைய காரணம் என்னைக் கேட்டால் நான் நன்றாகச் சொல்வேன். ராயப்பூர் எல்லையில் 125 ஏக்கர் நிலம் ஆதிவாசிகளுக்குப் பட்டா போட்டு, அதே நிலத்தை சேலம் ஜில்லா வாசிக்கு அடைமானம் செய்திருந்ததை, அரிசன மக்களும் பொது மக்களும் எடுத்துக்கொண்ட நடவடிக்கையின் பேரில், அந்த நிலத்தை ரத்துசெய்துவிட்டு, ஆதிவாசிகளுக்கு அந்த நிலத்தைக் கொடுக்காமல், தற்போது விதைப் பண்ணைக்காக எடுத்துக்கொள்வதாகச் சொல்லப்படுகிறது. அப்படிப் பல காங்கிரஸ்காரர்கள் வெளியே கதர்ச் சட்டை போட்டுக்கொண்டு ஏதேதோ செய்கிறார்கள் என்று சொன்னேனே தவிர, வேறொன்றும் அல்ல. நம்முடைய இந்த ஜனநாயக நாட்டில், 18 ஆண்டு காங்கிரஸ் ஆட்சியில், தமிழ்நாட்டில் உள்ள 13 ஜில்லாக்களில் எத்தனை அரிசனங்களுக்கு பஸ் ரூட் வாங்கிக்கொடுத்தார்கள் ? சொல்லட்டும். தாம்பரத்திலிருந்து சென்னை வரையில், 20, 22 மைலுக்குள்ளே எத்தனை கட்டடங்களை ஆதிவாசி மக்கள் வாங்கியிருப்பார்கள் என்று சொல்லட்டும். எத்தனை ஆதிவாசி மக்கள் பஸ் முதலாளிகளாகியிருக்கிறார்கள் என்று சொல்லட்டும். எந்த மாவட்டத்தில் எத்தனை ஆதிவாசிகள் ஆலை அதிகாரிகளாகி இருக்கிறார்கள் என்றாவது சொல்லட்டும். எந்த மாவட்டத்திலாவது இப்படி ஆதிவாசி மக்கள் இருக்கிறார்கள் என்று நண்பர் ஆனந்தன் அவர்கள் எடுத்துச் சொல்லட்டும். நண்பர் ஆனந்தன் அவர்கள் தன்னுடைய கட்சியைக் குறைவுப்படுத்துவதாக நினைக்க வேண்டாம். என்னைப் பற்றி அவர்கள் உண்மை சொல்லவேண்டும். மூன்று ஏக்கர், மூன்றரை ஏக்கர் நிலம் நூறாண்டு காலமாக 47,200,208, ஏக்கர் 37-சர்வே நம்பரில் ஜில்லா கலெக்டர் 1916-ல் எங்கள் முப்பாட்டனாருக்குக் கொடுத்த நிலத்தை நாங்கள் நான்கு பேர்கள் வைத்துக் கொண்டிருக்கிறோம். அப்படியிருக்க நண்பர் ஆனந்தன் அவர்கள், நான் ஏதோ அதிகாரத்தைப் பயன்படுத்தியதாகச் சொன்னது சரியல்ல என்று தெரிவித்துக்கொள்கிறேன். எந்த மாவட்டத்தில் தீண்டாமை ஒழிக்கப் பட்டிருக்கிறது ? மேடையில் வேண்டுமானால் தீண்டாமையை ஒழித்துவிட்டதுபோலப் பேசுகிறார்களே தவிர அவரவர்கள் வீட்டுக்குள்

போனால் ஒருவிதமாகத்தான் நடந்து கொள்ளுகிறார்கள். எத்தனை மாவட்டத்தில் ஹரிஜனங்கள் ஆலை முதலாளிகளாக வந்திருக்கிறார்கள் ? எந்தச் சேரியில் அவர்கள் பில்டிங் கட்டியிருக்கிறார்கள் ? ஓடையோரத்திலும், ஆற்றோரத்திலும் தவித்துக்கொண்டிருக்கிற அவர்களுக்கு மனை வழங்கும் திட்டம்கூட இன்னும் நல்ல முறையில் நிறைவேற்றப்படவில்லை. அதைத்தான் நான் சொன்னேன்.

எங்களுடைய தொகுதி மக்கள், ஹரிஜனங்கள் சார்பாகவும், ஏழைக் குடியானவர்கள் சார்பாகவும் சொல்கிறேன், மின்சாரம் வேண்டும் என்று கேட்டால் தங்கப் பத்திரத்திற்கு 100 ரூபாய் கடன் தரவேண்டும் என்றார்கள். கடனோடு கடன் என்று 100 ரூபாய் கொடுத்தும் மின்சாரம் வந்தபாடில்லை. ஐந்து வருஷம், மூன்று வருஷம் என்று ஆகிறது. கம்பம் நட்டும் இன்னமும் மின்சாரத்தை எதிர்பார்த்துக்கொண்டுதான் இருக்கிறார்கள்.

எதிர்க்கட்சிக்காரர்கள் சொல்கிறார்களே என்று நினைக்கப்படாது. ஆளும் கட்சியில் உள்ளவர்களுக்கு இந்தக் காரியங்களை எல்லாம் செய்துகொடுக்க வேண்டிய கடமை இருக்கிறது. எல்லா மனிதர்களும் அவர்களுடைய ஆட்சிக்கு அடங்கித்தான் இருக்கிறார்கள். செய்வன திருந்தச்செய் என்பதாக சர்க்கார் செய்கிற காரியங்களை ஒழுங்காகச் செய்ய வேண்டும். அவர்கள் செவ்வனே செய்தால் காங்கிரஸ் ஆட்சிதான் நீடிக்கும். அவர்கள் ஆட்சி குடியரசு ஆட்சிதான். நாங்கள் வந்தாலும் ஜனநாயக ஆட்சி தான். நாங்கள் சொல்வது சர்வாதிகார ஆட்சியை அல்ல. அமைச்சர் அவையில் உள்ளவர்கள் நாங்கள் சொல்கிற கருத்துகளுக்கு மதிப்புக்கொடுக்கவேண்டும்.

இன்றைக்கு ஆசிரியர் பயிற்சிப் பள்ளியில் படிக்கிறவர்களுக்கு இன்னமும் ஸ்டைபண்ட் கொடுக்கப்படவில்லை என்கிற புகார் இருக்கிறது. வடலூர், கடலூர், விழுப்புரம், சின்னசேலம் போன்ற இடங்களில் உள்ள ஆசிரியர் பயிற்சிப் பள்ளியில் படிக்கும் ஹரிஜனங்கள் வந்து சொல்கிறார்கள். அதைப்பற்றியும் கவனம் செலுத்தவேண்டும்.

அடுத்து எங்கள் பகுதியில் ஆடுகள் வைத்துக்கொண்டிருக்கிறவர்கள் நிறைய இருக்கிறார்கள். முன்பெல்லாம் சர்க்கார் தரிசு நிலங்களில் மேத்துத்துண்டு, பன்னிரத்துண்டு என்று வைத்திருப்பார்கள். ஒரு துண்டு என்றால் ஆயிரம் ஆடுகள். இப்போது ஏரிகளில் ஃபாரஸ்ட் லாண்டு என்று அடைத்து முள் செடியை வளர்த்துவிடுவதனால் ஆடுகளைவிட முடியவில்லை. ஆடுகளுக்கு நிற்க இடமில்லை. சர்க்கார் தரிசு நிலத்தில் பக்கத்திற்கு 50 ஏக்கர் என்பதாக ஒதுக்கவேண்டும். இது மிகவும் முக்கியமானதாகும்.

நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலாவது கல்விக்கு முக்கியமாக இடமளித்து எல்லா ஹரிஜனப்பிள்ளைகளும் படிக்க வசதி செய்யவேண்டும். தீண்டாமை ஒழிப்புக்குக் கல்விதான் முக்கியமானது. இன்றைக்குக் காங்கிரஸ்காரர்களையே எடுத்துக்கொண்டால் 1942-ல் அவர்கள் தீண்டாமை ஒழிப்பில் எவ்வளவு தீவிரமாக இருந்தார்கள் என்பதை நான் பார்த்திருக்கிறேன். ஓடி ஓடி நூல் இழுத்து உள்ளகங்கள் நூல் இழுக்கும் போதினில், பாவியான பூனை வந்து பாவினில் குதித்தது, இழுத்தது, முறிந்தது, இழை அறுந்து போனது என்பதாக காரியம் போய்விட்டதே தவிர தீண்டாமை ஒழிப்பு என்பது கல்வி மூலமாகத்தான் முடியும், ஆகவே நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஹரிஜனங்களின் கல்விக்கு அதிக முக்கியத்துவம் காட்டவேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

1-25 p.m. **Mr. CHAIRMAN (Sri M. DHANDAYUTHAPANI) : The House will now adjourn and meet again at 8-30 a.m. tomorrow.**

**The House then adjourned.**





## VI.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

### A. Statutory Rules and Orders.

*130. Notification issued with G.O. Ms. No. 2086, Education, dated the 7th December 1965, approving the list of all the parks and play-fields set out in the Schedule of the notification in the area within the jurisdiction of the Shencottah Municipal Council, the same having been previously published as required by sub-section (2) of section 3 of the Madras Parks, Play-fields and Open Space (Preservation and Regulation) Act, 1959. [*Laid on the Table of the House under section* 14(3) *of the Madras Parks, Play-fields and Open Spaces* (*Preservation and Regulation*) *Act*, 1959 (*Madras Act* 26 *of* 1959)].

*131. Notification issued with G.O. Ms. No. 3925, Industries, Labour and Co-operation, dated the 7th August 1965, making certain amendments to the Madras Minor Mineral Concession Rules, 1959, published with the Industries, Labour and Co-operation Department Notification S.R.O. No. A-1027 of 1960, dated the 24th September 1959 at pages 58–74 of Part I of the Fort St. George Gazette, dated the 17th February 1960, as subsequently amended. [*Laid on the Table of the House under Section* 28(1) *of the Mines and Minerals* (*Regulation and Development*) *Act*, 1957 (*Central Act* 67 *of* 1957)].

*132. Notification issued with G.O. Ms. No. 112, Home, dated the 18th January 1966, exempting from payment of tax leviable under the Madras Motor Vehicles Taxation Act, 1931, in respect of Vehicle MDR 4413 belonging to the Central Electro-chemical Research Institute, Karaikudi. [*Laid on the Table of the House under section* 11(2) *of the Madras Motor Vehicles Taxation Act*, 1931 (*Madras Act III of* 1931)].

*133. Notification issued with G.O. Ms. No. 132, Revenue, dated the 25th January 1966, appointing Sri V.V.S. Pandurangan, Proprietor, Panduranga Oil Mills, Virudhunagar, as a Member of the Area Committee for Ramanathapuram district. [*Laid on the Table of the House under section* 116(3) *of the Madras Hindu Religious and Charitable Endowments Act*, 1959 (*Madras Act* 22 *of* 1959)].

*134. Notification issued with G.O. Ms. No. 3551, Revenue, dated the 31st December 1965, appointing the 1st of February 1966 as the date on which the certain provisions of the Madras Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1963, shall come into force in the Inam Estates specified in the notification. [*Laid on the Table of the House under section* 73(5) *of the Madras Inam Estates* (*Abolition and Conversion into Ryotwari*) *Act*, 1963 (*Madras Act* 26 *of* 1963)].

135. Notification issued with G.O. Ms. No. 4108, Food and Agriculture, dated the 24th December 1965, relating to the notified market area to Markets at Kalugumalai and Tenkasi in Tirunelveli.

[28th February 1966

district for the purpose of the Madras Agricultural Produce Markets Act, 1959, in respect of Cotton and Chillies. [*Laid on the Table of the House under section* 29(4) *of the Madras Agricultural Produce Markets Act*, 1959 (*Madras Act* 23 *of* 1959).]

136. Notification issued with G.O. Ms. No. 3922, Food and Agriculture, dated the 8th December 1965, making certain amendments to the Food and Agriculture Department Notification S.R.O. No. 3012 of 1964, dated the 30th May 1964, published at page 1260 of Part II Section 1 of the Fort St. George Gazette dated the 15th July 1964. [*Laid on the Table of the House under section* 29 (4) *of the Madras Agricultural Produce Markets, Act*, 1959 (*Madras Act* 23 *of* 1959)].

137. Notification issued with G.O. Ms. No. 3193, Revenue, dated the 19th November 1965, appointing the 15th day of December 1965, as the date on which certain provisions of the Madras Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1963, shall come into force in the inam estates, specified in the schedule of the notification. [*Laid on the Table of the House under section* 73(5) *of the Madras Inam Estates* (*Abolition and Conversion into Ryotwari*) *Act*, 1963 (*Madras Act* 26 *of* 1963).]

**B. Reports, Notifications and other papers.**

*Budget Publications for* 1966–67.

* 21. Budget Speech (Tamil and English).

* 22. Appendices to the Budget Speech (Tamil and English).

* 23. Introduction to the Budget (Tamil and English).

* 24. Annual Financial Statement (Tamil and English).

* 25. Budget Memorandum (Tamil and English).

* 26. Detailed Budget Estimates of Revenue.

* 27. Demands for Grants and Detailed Budget Estimates (Volumes I and II).

* 28. Detailed Public Works Budget.

* 29. Detailed Industries Budget.

* 30. Detailed Irrigation Budget.

* 31. Detailed Agriculture, Fisheries, Animal Husbandry and Forests Budget.

* 32. Government Commercial Undertakings.

* 33. Statement of Posts and Scales of Pay.



28th February 1966]

* 34. Fourth Five-Year Plan, Programme for 1966–67 (English and Tamil).

* 35. Fourth Five-Year Plan (Madras State) Review of Progress during 1961–62 to 1965–66 and Programme for 1966–67 (English and Tamil).

* 36. Notice for Demands for Grants during the Year 1966–67 (English and Tamil).

* Laid on the table of the House on 26th February 1966.

# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

**Tuesday, 1st March 1966.**

The House met in the Assembly Chamber, Fort St. George, at half past eight of the clock, Mr. Speaker (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

## STARRED QUESTIONS

*Programme for clearance of slums*

137 *Q.*—SRI V. SANKARAN: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether there is any proposal to adopt a phased programme for clearance of slums in the various cities of the State; and

(*b*) if so, the details thereof?

THE HON. SRI R. VENKATARAMAN:

(*a*) Yes.

(*b*) The details regarding the number of slums taken up for improvement/clearance in the Madras City and in the moffusil are given below:—

*Madras City*—

Out of 491 slums in the Madras City the Madras Housing Unit of the State Housing Board has taken up for improvement/clearance about 99 slums.

*Madurai*—

In Madurai three slum improvement projects are being formulated by the Madurai Housing Unit of the State Housing Board for implementation.

*Coimbatore*—

In Coimbatore five slum improvement projects have been taken up for improvement/clearance by the Coimbatore Housing Unit of the State Housing Board.

*Salem*—

In Salem seven slum improvement projects have been taken up for improvement/clearance by the Coimbatore Housing Unit of the State Housing Board.

*Tiruchirappalli*—

In Tiruchirappalli two slum improvement projects have been taken up for improvement/clearance by the Tiruchirappalli Housing Unit of the State Housing Board.

**திரு. வை. சங்கரன் :** கடந்த இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன்பிருந்தே மதுரைக்கு ஸ்லம் க்ளியரன்சுக்காக நிதி ஒதுக்கப்பட்டதாக சர்க்கார் அறிக்கை இருக்கிறது. அப்படி இருந்தும் இவ்வளவு நாட்களாக அங்கே நடவடிக்கை எடுக்காமல் தள்ளிப்போடுவதற்குக் காரணம் என்ன?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** நில ஆர்ஜிதம் பண்ணுவது கஷ்டமாக இருக்கிறது. ஸ்லம் க்ளியரன்ஸ் என்று சொன்னால் அவர்களை அந்த இடத்தில் இருந்து வேறு இடத்திற்கு மாற்ற வேண்டியிருக்கிறது. அதற்காக டெனமெண்ட்ஸ் கட்டிய பிறகு தான் அவர்களை மாற்றவேண்டியிருக்கிறது.

**திரு. டி. எல். சசிவர்ணத் தேவர் :** அந்த வேலை எவ்வளவு சீக்கிரமாக எடுத்துக்கொள்ளப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** நடவடிக்கை நடந்துகொண்டிருக்கிறது.

**திரு. இராம. அரங்கண்ணல் :** சென்னை நகரத்தில் 99 குடிசை வாழ் பகுதிகளைத் திருத்தப்போவதாக அமைச்சர் அவர்கள் சொன்ன பதிலில் இருந்து தெரிகிறது. மயிலாப்பூர் பகுதியில் எத்தனை குடிசைவாழ் பகுதிகள் திருத்தப்படும் என்று அறியலாமா?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** இதற்குத் தனியாகத்தான் கேள்வி போடவேண்டும். பகுதி பகுதியாகச் சொல்வதற்கு என்னிடத்தில் இப்பொழுது விவரம் இல்லை.

**திரு. வை. சங்கரன்:** ஏற்கனவே நெருக்கமாக இருக்கின்ற இடங்களில் குடிசைகள் கட்டாமல் வேறு இடங்களில் தனித்தனியாகக் கட்டிக் கொடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** இந்த குடிசைவாழ் பகுதிகளைச் சீரமைப்பு செய்வதிலே இரண்டு திட்டங்கள் இருக்கின்றன. டெனமெண்ட் கட்டுவது என்பது ஒரு திட்டம். திறந்த பிளாட் கொடுப்பது ஒரு திட்டம். நெருக்கமான இடங்களில் டெனமெண்ட்ஸ் கட்டிக்கொடுப்பதற்கு வசதி செய்கிறோம். கொஞ்சம் இடவசதி இருந்தால் ஓபன் பிளாட்கள் கொடுக்க ஏற்பாடு செய்கிறோம்.

**திரு. மு. கருணாநிதி:** இப்போது அந்தப் பகுதிகளிலே வியாபாரத்திலும், தொழில் துறையிலும் ஈடுபட்டிருப்பவர்களுக்கு அந்தப் பகுதியிலேயே கட்டித் தருவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** இந்த முயற்சி தான் அரசாங்கம் செய்கிறது. ஆனால், சாத்தியம் ஆவதில்லை. காரணம் என்னவென்றால் ஸ்லம் என்பது ஜன நெருக்கத்தால் ஏற்படுவது. ஒரு ஏக்கரில் 50 பேர் இருந்தால் தான் சுகாதாரத்துடன் இருக்க முடியும். ஆனால் 100, 120 பேர் இப்போது இருக்கிறார்கள். ஆகவே, அதே இடத்தில் புனரமைப்பு செய்வது வசதியாக இருக்காது.

**திரு. டி. கார்ச்சா கவுடர் :** கனம் அமைச்சர் அவர்கள் கூறிய பதிலில் இருந்து சென்னையில் 491 சேரிகள் இருப்பதாகக் கூறினார்கள். இந்த எண்ணிக்கை ஒவ்வொரு வருஷமும் அதிகரித்துக்கொண்டே போவதாகத் தெரிகிறது. ஆகையால், அதை அறவே ஒழிப்பதற்குத் தீவிர முயற்சி எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன. அதிகமாக சேரிகள் ஏற்படுவதற்கு என்ன காரணம் என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** தொழில் வளரும்போது கூடவே சேரிகளும் வளருகின்றன. புதிது புதிதாகத் தொழில்கள் ஆரம்பித்தால் அங்கே வேலை செய்வதற்குப் பலர் வெளியிடங்களிலிருந்து வருகிறார்கள்.





வந்தவுடனே அவர்களுக்கு வீடுகள் கிடைப்பதில்லை. ஆகையால், அந்தந்த இடங்களிலே குடிசைகள் கட்டிக்கொள்கிறார்கள். ஏழைமை நாட்டிலே இருக்கிற வரையில் சேரிகளை ஒழிப்பது சாத்தியம் இல்லை என்று நினைக்கிறேன்.

**புலவர் கா. கோவிந்தன் :** மதுரை, சென்னை போன்ற தலைநகரங்களில் சேரிகள் அகற்றப்படுவதைப்போல், இதே மாதிரி நிலைமை உள்ள தாலுகா தலைநகரங்களிலும் அதை ஒழிப்பதற்கு சர்க்கார் வழிவகை செய்திருக்கிறதா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** இது மிகப் பெரிய ஒரு கடுமையான பிரச்னை ஆகும். முதலிலே எங்கெல்லாம் நெருக்கடி அதிகமாக இருக்கிறதோ, அந்த இடங்களை எடுத்துக்கொள்கிறோம். பின்பு தான் மற்ற இடங்களை எடுத்துக்கொள்ள வேண்டும்.

**திரு இராம. அரங்கண்ணல் :** இது ஒரு பெரிய திட்டமாக விளங்குகிறது. இந்த வேலையை ஹௌசிங் போர்டிடம் கொடுத்திருக்கிறோம். இதற்கு முன்னால் கார்ப்பொரேஷன் இதைச் செய்து வந்தது. மயிலாப்பூரில் ராமகிருஷ்ண நகர் நல்ல முறையில் சீர்திருத்தம் செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே சென்னை நகரத்தைப் பொறுத்தவரையிலாவது இந்த வேலையைக் கார்ப்பொரேஷன் எடுத்துக்கொள்ளலாம் அல்லவா?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** இந்த வேலைகள் பல பல பகுதிகளில் செய்தால் கோவார்டினேஷன் இருக்காது. சரியாக ஒன்றுக்கொன்று பொருத்தப்படாது என்ற காரணத்தினால் ஹௌசிங் போர்டிலே வைத்திருக்கிறோம். ஹௌசிங் போர்டிலே கார்ப்பொரேஷன் கமிஷனரும் ஒரு அங்கத்தினராக இருக்கிறார்கள். ஆகையால், இது சம்பந்தமாக அவர்களுடைய ஆலோசனையையும் ஏற்றுக்கொள்ளலாம்.

**திரு. எஸ். முருகையன் :** மத்திய சர்க்கார் ஹரிஜனங்கள் சம்பந்தமாக குழு அமைத்தார்களே, அதனிடமிருந்து வந்த அறிக்கையின் பேரில் என்ன நடவடிக்கை எடுத்தார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** என்னுடைய சக அமைச்சர் திரு. கக்கன் அவர்களுக்கு இந்தக் கேள்வியைப் போட்டால் விவரம் தெரியும்.

**திரு. இராம. அரங்கண்ணல் :** தங்களுக்கு ஒரு வேண்டுகோள் விடுக்க விரும்புகிறேன். சேரி என்று இருப்பதை மாற்றி............

**கனம் சபாநாயகர் :** கேள்வியாகப் போடவேண்டும். கனம் அங்கத்தினர் வேண்டுகோள் விடுக்கிறார். How can I allow: it as a question ?

(திரு. இராம. அரங்கண்ணல் எழுந்தார்....)

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** நானே சொல்லி விடுகிறேன். நம்முடைய ப்ரொசீடிங்ஸில் எந்த இடத்தில் 'சேரி' என்று வருகிறதோ, அந்த இடத்ததில் 'குடிசை வாழ் பகுதி' என்று மாற்றிக்கொள்வோம்.

**திரு. எம். எஸ். செல்வராஜன் :** பம்பாயில் குடிசை வாழ் பகுதியான தாராவி பகுதியில் வெளிநாட்டு உதவி பெற்று, உயரமான மாடிகள் கட்டப்பட்டு குடிசைவாழ் பகுதிப் பிரச்னையைத் தீர்க்கத் திட்டமிடப்பட்டிருக்கிறது. அந்த நவீன திட்டத்தைப் பற்றி விசாரித்து அதே போல் சென்னை நகரத்திற்கும் வெளிநாட்டு உதவி பெற்று ஒரே இடத்தில் பல மாளிகைகள் கட்டப்படுவதன் மூலமாக இப் பிரச்னைக்கு நிவாரணம் காண அரசாங்கம் ஆலோசிக்குமா?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** ஒரே இடத்தில் மூன்று மாடி வரை கட்டலாம். அதற்கு மேலும் கட்டினால் மக்கள் லிஃப்டிலே ஏறிச் செல்ல வேண்டியிருக்கும். லிப்ட் கிடைக்காத காரணத்தினால் நாம் மூன்று மாடிகள் தான் கட்டக்கூடிய நிலைமையில் இருக்கிறோம்.

[1st March 1966

SRI C. CHIRANJEEVULU NAIDU: In addition to these slum-dwellers, we see a number of pavement dwellers who are a menace to the public in several aspects. What is the view of the Government in this regard? Do they propose to rehabilitate the large number of these pavement dwellers also ?

THE HON. SRI R. VENKATARAMAN: We have an estimate of the number of these dwellers on the pathways. It comes to about 6,000. We have rehabilitated 1,300 to 1,400 in the Vyasarpadi Slum Clearance Scheme. They have all been accommodated and those areas which have been cleared have now been made unfit for any other habitation. That is, the roads have been widened so that nobody can occupy the pavements. So, all steps that are necessary are being taken in this regard. The problem is being tackled with a great deal of interest.

**திரு. வை. சங்கரன் :** உதாரணமாக, ஒரு வீட்டுக்கு ஒரு செண்ட் இரண்டு செண்ட் என்று கொடுப்பதாக வைத்துக்கொண்டாலும் மறுபடியும் அவர்கள் அதை உள் வாடகைக்குக் கொடுத்து வேறு ஆட்களை வைத்து விட்டு பழையபடியே ஸ்லம்களாக மாறி விடாமல் இருக்க என்ன பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன.?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** இதில் சர்க்கார் நடவடிக்கை ஒன்றும் எடுக்க முடியாது. அவரவர்கள் தாங்கள் சுகாதாரமான வாழ்க்கை நடத்தவேண்டுமென்று விரும்பினால் தான் ஸ்லம் க்ளியரன்ஸோ அல்லது இம்ப்ரூவ்மெண்டோ செய்யமுடியுமே தவிர, ஓப்பன் டெவலப்ட் ப்ளாட்ஸ் கொடுத்த பிறகும் அவர்கள் ஸ்லம்களாக மாற்றிக்கொள்வார்களேயானால் அதைத் தடுப்பதற்கு சர்க்காரால் ஒன்றும் செய்ய முடியாது.

**திரு. இராம. அரங்கண்ணல் :** மயிலாப்பூர் தொகுதியில் முன்பே சர்க்கார் அறிவித்து இருக்கிற தகவல்படி 7 இடங்கள் கோயிலாருக்கு உள்ளன. மேற்படி கோயிலுக்குச் சொந்தமான இடங்களில் குடிசை வாழ்பவர்களுக்குக் கோவில் நிதியைக் கொண்டே வீடுகள் கட்டிக்கொடுப்பதான யோசனை இருப்பதாக முன்பு முதல் அமைச்சர் அவர்கள் ஒரு கருத்து வெளியிட்டிருக்கிறார்கள். அந்த யோசனை இப்போது எந்த நிலையில் உள்ளது ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** அது பற்றித் தனியான ஒரு கேள்வி போட்டால் அற நிலைய பாதுகாப்பு இலாகாவில் இருந்து தகவல் வாங்கிச் சமர்ப்பிக்க முடியும்.

### *Rural electrification*

*138 *Q.*—SRI V. SANKARAN: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether there is any proposal to set up pilot projects for intensifying rural electrification works through rural electricity co-operatives; and

(*b*) if so, the details thereof ?

THE HON. SRI R. VENKATARAMAN: (*a*) & (*b*) At the conference of the Chairmen of the State Electricity Boards held recently, it has been formulated that one rural electricity co-operative in the area of each State Electricity Board should be formed as a pilot project. This is under consideration.



1st March 1966]

**திரு. வை. சங்கரன் :** இதற்கு முன்னால் வேறு எந்த இடங்களிலாவது இது போன்ற ப்ராஜக்ட் நடைமுறையில் இருந்து அதை ப்ரீஸிடன்டாக வைத்து இதை ஆரம்பிக்க ஏதாவது உத்தேசம் இருக்கிறதா?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** மஹாராஷ்டிராவில் 12, குஜராத்தில் 6, வங்காளத்தில் 2, அஸ்ஸாமில் 1, மத்திய பிரதேசத்தில் 1, மைசூரில் 1, உத்தர பிரதேசத்தில் 1.

**புலவர் கா. கோவிந்தன் :** மாநில மின்சாரக் கழகம் இப்போது நல்ல முறையில் கிராமங்களுக்கு மின்சார விஸ்தரிப்பு செய்து வருகிறது. அதைக் கூட்டுறவு இயக்கத்தின் மூலம் செய்வதில் அந்த அளவு நம்பிக்கை இல்லாத நிலை இருக்கிறது. ஆகவே, மாநில மின்சாரக் கழகத்திற்குள்ள பொறுப்பைக் கூட்டுறவு இயக்கத்திற்குக் கொடுக்காது இருப்பதற்கு அரசாங்கம் தக்க பாதுகாப்பு கொடுக்குமா?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** அங்கத்தினர் அவர்களுக்கு கூட்டுறவு இயக்கத்தில் நம்பிக்கை இல்லை என்று சொன்னால் அது அவர்களுடைய கருத்து. அதைப் பற்றி நான் ஒன்றும் குறை சொல்லவில்லை. இப்போது ஒரு யோசனை நடந்து கொண்டிருக்கிறது. சென்னை ராஜ்யத்தைப் பொறுத்தவரையிலே இதற்கு அவசியம் இருக்காது என்று தான் நான் நினைக்கிறேன். காரணம், நாம் 85 சத வீத அளவிற்கு இன்று நம் ராஜ்யத்தில் உள்ள பகுதிகள் எல்லாவற்றிற்கும் மின்சார விஸ்தரிப்பு செய்து விட்டோம். எந்த எந்த ராஜ்யங்களில் மின்சார விஸ்தரிப்பு சரியான முறையில் நடைபெறவில்லையோ, அதற்கு வேண்டிய வசதிகள் இல்லையோ அவர்கள் இந்தவிதமான உபாயங்களைக் கடைப்பிடிக்கலாம் என்பது தான் அபிப்பிராயம். ஆனால் இதைப் பற்றி முடிவு எடுக்கவில்லை. ஆகவே தான் பரிசீலனையில் இருக்கிறது என்று சொன்னேன்.

### நாசரெத்தில் பாலிடெக்னிக்

*139 கேள்வி.—**திரு. எம். எஸ். செல்வராஜன் :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், நாசரெத்தில் ஆரம்பிக்கப்பட்ட பாலிடெக்னிக் (Polytechnic) மூடப்பட்டது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதற்கான காரணம் என்ன ?

THE HON. SRI R. VENKATARAMAN: (*a*) Yes.

(*b*) The authorities of the Church of South India decided to close down the Polytechnic.

**திரு. எம். எஸ். செல்வராஜன் :** இந்த பாலிடெக்னிக்குக்குக் கொடுக்கப்பட்ட நிலம் எவ்வளவு ? அந்த நிலத்தை தற்போது அரசாங்கமே எடுத்துக்கொண்டிருக்கிறதா? அல்லது ஸவுத் இந்தியா சர்ச் கவுன்சிலுக்கு விட்டு விட்டார்களா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** ஒரு தனியார் பாலிடெக்னிக் வைக்கிறபோது அவர்கள் ஒரு ஒப்பந்தம் செய்து கொடுக்க வேண்டும். எந்தக் காரணத்திற்காக அவர்கள் இந்த பாலிடெக்னிக்கை மூடி விட்டாலும் அதனுடைய சொத்துக்கள் பூராவும் சர்க்காரையே சேர்ந்து விடும் என்ற நிபந்தனை இருக்கிறது. அந்த நிபந்தனை கடைப்பிடிக்கப்படுகிறது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. எம். எஸ். செல்வராஜன் :** நான் அறிந்த மட்டில், அந்த நிலத்தை எல்லாம் சர்க்காரே எடுத்துக்கொண்டதாகத் தெரிகிறது. அப்படியானால், அந்த நிலத்தைப் பயன்படுத்திக்கொண்டு சமீபத்தில் திருநெல்வேலி ஜில்லாவிற்கு என்று அனுமதிக்கப்பட்டிருக்கிற என்ஜினியரிங் கல்லூரியை அந்த இடத்திலேயே அமைக்க சர்க்கார் யோசிக்குமா?

[1st March 1966

THE HON. SRI R. VENKATARAMAN : It is a suggestion and I cannot give an answer to this.

**திரு. எம். எஸ். செல்வராஜன் :** சில மாதங்களுக்கு முன்பு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுகிறபோது அந்த இடத்தில் எவ்விதத்திலேனும் ஒரு ஜூனியர் பாலிடெக்னிக், பெண்களுக்கேனும் ஒரு பாலிடெக்னிக் இவற்றையாவது அங்கு அமைக்க யோசிக்கப்படும் என்று அரசாங்கத்தின் சார்பாக சொல்லப்பட்ட தகவல் அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ? அதை எந்த அளவிற்குப் பூர்த்தி செய்ய அரசாங்கம் முன் வந்திருக்கிறது?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** பல யோசனைகளில் இதுவும் ஒன்றாக இருக்கும்.

### பொறியியல் கல்லூரிக்குத் தேர்வு

*140—கேள்வி—**திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் :**
**திரு. சி. கோதண்டராம பாகவதர்:** } கனம் கைத் தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) 1965–66-ம் கல்வி ஆண்டில், பொறியியல் கல்லூரிகளுக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவ, மாணவியர்கள் எத்தனை பேர் ?

(இ) அவர்களுள், ஆதித் திராவிட வகுப்பைச் சேர்ந்தவர்கள் எத்தனை பேர், எத்தனை சத வீதம் ?

THE HON. SRI R. VENKATARAMAN :

(அ) & (இ) : A Statement [a] is placed on the table of the House.

**திரு. கே. ஏ. மதியழகன் :** இந்த எஞ்ஜினியரிங் கல்லூரிகளில் இனிமேல் தேர்வு நடக்கிற நேரத்தில் குறைந்த மார்க் அடிப்படையில் அமைப்பது பற்றி ஏதாவது திட்டம் இருக்கிறதா? அது பற்றிய விவரங்களைக் கூற முடியுமா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** இப்போது 45, 50 சதவிகிதம் வாங்கினால் அவர்களைக் கல்லூரிகளில் சேர்த்துக் கொள்ளலாம் என்ற விதி இருக்கிறது. இதை மாற்றி 55 சதவிகிதம் இருக்கிறவர்களைத்தான் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று ஒரு அபிப்பிராயம் இருக்கிறது. அது பற்றி முடிவு எடுக்கவில்லை. என்னுடைய கருத்தில்கூட அதிகமான மார்க்குகள் பெற்றவர்களை, தகுதி உள்ளவர்களை அட்மிட் செய்வதுதான் சரியாக இருக்கும் என்று நினைக்கிறேன். இது ஷெட்யூல்ட் காஸ்ட், ஷெட்யூல்ட் ட்ரைப்ஸ்-ஐச் சேர்ந்தவர்களுக்கு பொருந்தாது.

**திரு. வை. சங்கரன் :** பொதுவாக, இந்த அட்மிஷன் பட்டியலைப் பார்த்தால் ஆவரேஜாக ஒரு சதவிகிதத்துக்கு மேல் இல்லை. ஆகவே, ஷெட்யூல்ட் காஸ்ட், ஷெட்யூல்ட் ட்ரைப்ஸைச் சேர்ந்தவர்களை அதிகமாகச் சேர்க்க, அவர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்தி அவர்களை ஊக்குவிக்க வேறு என்னென்ன நடிவடிக்கைகளை எடுக்க சர்க்கார் உத்தேசித்திருக் கிறது ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** அப்ளிக்கேஷன் போடாவிட்டால் நாம் எப்படிச் சேர்ப்பது என்று தெரியவில்லை. ஐந்து ஆண்டு பி. ஈ. இண்டக்ரேட்டட் கோர்ஸுக்கு அவர்களில் இருந்து 98 பேர்களை இண்டர்வ்யூ செய்ததில், ஒருவருக்கு ஃபிஸிக்கல் ஃபிட்னஸ் இல்லை. மீதி 97 பேர்களை சேர்த்துக் கொண்டிருக்கிறார்கள். அதே போல் த்ரீ இயர் பி.ஈ.-க்கு நான்கு பேர்கள் அப்ளிக்கேஷன் போட்டு அந்த நான்கு பேர்களைச் சேர்த்துக்கொண் டிருக்கிறார்கள்.

[a] Printed as Appendix I no pages 303–304.



1st March 1966]

**திரு. சா. கணேசன் :** இந்த மாதிரி பொறியியல் போன்ற நுண்ணிய, தேசத்திற்கு மிக இன்றியமையாத பணியைச் செய்யக்கூடிய துறைகளுக்கு மாணாக்கர்களைப் பொறுக்கியெடுக்கும்போது அவர்களுடைய திறமை, அவர்கள் வாங்கியுள்ள மார்க்கின் அளவு இவற்றை மனத்தில் கொண்டு எடுப்பது தான் தேசத்திற்கும் நல்ல பலனைத் தருவதாக இருக்கும் என்பதை அரசாங்கம் ஏற்று—வகுப்பு வாரியாக ஒதுக்குவதை நான் மறுக்கவில்லை, எப்படியோ இருக்கட்டும்—அந்த நிலையில் கூட குறிப்பிட்ட சதவிகித மார்க் இன்றியமையாதது என்பதை வலியுறுத்தி சுமார் 60 அல்லது 65 சதவீதத்திற்குக் குறையாத மதிப்பெண் பெற்றவர்களைத்தான் ஏற்றுக் கொள்வது என்ற முறையைக் கடைப்பிடிக்க ஏற்பாடு ஏதாவது செய்யப் பட்டுவிட்டதா ? இல்லாவிட்டால் அதை உடனடியாகச் செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** திறமையின் அடிப்படையில்தான் 59 சதவிகிதம் சேர்த்திருக்கிறோம். 16 சதவிகிதம் ஷெட்யூல்ட் காஸ்ட், ஷெட்யூல்ட் ட்ரைப்ஸுக்கு, 25 சதவிகிதம் பின்தங்கியவர்களுக்கு என்று ஒதுக்கிய பிறகு, பாக்கி உள்ள சற்றேறக்குறைய 59 சதவிகிதம் திறமை அடிப்படையில் எடுக்கிறோம். ஆனால், திறமை பற்றி கவனிக்கிறபோது சிலர் இரண்டே இரண்டு சப்ஜக்ட்களில் டிஸ்டிங்ஷன் வாங்கும் திறமை, மார்க் வாங்கும் திறமை, எப்படியோ வந்து விடுகிறது. அதனால் பொதுவாக ஒரு ஃபஸ்ட் க்ளாஸ் வாங்கவேண்டுமென்றும் ஃபஸ்ட் க்ளாஸ் வாங்கி இரண்டு சப்ஜெக்ட்களில் டிஸ்டிங்ஷன் வாங்கியிருக்கவேண்டும் என்று சென்ற ஆண்டே போட்டு அதையே கடைப்பிடிக்கிறோம்.

**திரு. மு. கருணாநிதி :** மார்க்கை 45-ல் இருந்து 55 ஆக உயர்த்த யோசித்துக் கொண்டிருப்பது திறமையை உயர்த்துவதற்காகவா அல்லது மாணாக்கர்கள் அதிகமாக சேரவேண்டுமென்று வருகிற நெருக்கடியை ஒரு விதத்தில் தவிர்க்கலாம் என்ற காரணமா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** சென்ற ஆண்டு செலக்ஷனில் 45 மார்க் வாங்கிய ஷெட்யூல்ட் காஸ்ட், ஷெட்யூல்ட் ட்ரைப்பைச் சேர்ந்த வர்கள் தவிர ஒருவருக்கும் செலக்ஷன் ஆகவில்லை. செலக்ஷனுக்கு வருகிறவர்கள் 50, 55 என்று மார்க்குகள் இருப்பதால் கிடைக்காதவர்கள் அப்ளிக்கேஷன் போட்டு சுற்றிக்கொண்டு இருக்கவேண்டாம் என்பதினால் தான் மார்க்கை உயர்த்துவது.

**திரு. டி. கார்ச்சா கவுடர் :** பத்து பெண்களைத்தான் பொறியியல் கல்லூரியில் சேர்த்திருக்கிறார்கள். எத்தனை பேர்கள் விண்ணப்பம் போட்டார் கள் ? அவர்கள் எல்லோருக்கும் செலக்ஷன் கொடுத்தால் என்ன, பெண் கள் என்ற சலுகை காட்டி?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** கான்ஸ்டிட்யூஷனிலோ அல்லது நாம் வகுத்திருக்கும் கொள்கைகளிலோ பெண்களுக்குத் தனியாக சலுகை கொடுக்கவேண்டும் என்று இல்லை. சம உரிமை கொடுக்க வேண்டும் என்றுதான் இருக்கிறது.

**கனம் சபாநாயகர் :** அவர்களும் இப்படி மோசமான சலுகையை எதிர்பார்க்கவில்லை.

**திரு. கே. ஏ. மதியழகன் :** இந்த மாணவர்களைத் தேர்ந்தெடுக்கிற தேர்வுக்குழு எந்த அடிப்படையில் நியமிக்கப்படுகிறது ? ஒரு சட்டசபை உறுப் பினர் தேர்வுக் குழுவில் சேர்க்கப்படுவாரா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** டைரக்டர் ஆஃப் டெக்னிக்கல் எஜுகேஷன், ஒரு கவர்ன்மெண்டு காலேஜ் பிரின்ஸிபால், ஒரு பிரைவேட்டு காலேஜ் பிரின்ஸிபால் ஆகியோர்கொண்ட குழு கடந்த சில ஆண்டுகளாக மாணவர்களைத் தேர்ந்தெடுத்து வருகிறது. அதிலே எந்த விதமான புகாரும் இதுவரை வரவில்லை. நன்றாக நடக்கிறது.

**திருமதி ராஜாத்தி குஞ்சிதபாதம் :** ஆண்களுக்கும் பெண் களுக்கும் வித்தியாசம் இல்லை, சம உரிமை அடிப்படையில் கொடுக் கிறோம் என்று சொன்னார்கள். அப்படியானால், ஆண்களில் 50 பேரை எடுத்தால் பெண்களிலும் 50 பேரை எடுப்பார்களா?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** மார்க்கு வாங்கினால் 50 அல்ல, 60 பேர் வேண்டுமானாலும் எடுப்பதற்குத் தயாராக இருக்கிறோம்.

**திரு. எம். எஸ். செல்வராஜன் :** விண்ணப்பம் போடுகின்றவர்களுடைய தொகை தேர்ந்து எடுக்கப்படுகிறவர்களைவிட பல மடங்கு அதிகமாக இருக்கிறது. குறிப்பிட்ட இரண்டு சப்ஜக்டில் மாத்திரம் எப்படியோ அதிகம் மார்க் வந்து விடுகிறது என்று சொன்னார்கள். ஆகவே, பி. யு. சி. மார்க்கை மட்டும் அடிப்படையாக வைக்காமல் எஸ்.எஸ்.எல்.சி.-யில் பெற்ற மார்க்கையும் அடிப்படையாகக் கொண்டு மாணவர்களைத் தேர்ந்தெடுப்பார் களா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** அது அவசியம் இல்லை என்று நினைக்கிறேன். ஃபஸ்ட் கிளாஸ் வாங்க வேண்டுமென்று சொல்லிவிட்டால் பொதுவாக எல்லா சப்ஜக்ட்டுகளிலும் ஓரளவு திறமை இருந்தால்தான் முடியும். ஃபஸ்ட் கிளாஸ் வாங்க வேண்டுமென்று மனத்தில் விதியாக வைத்திருக்கிறோம். எக்ஸெப்ஷனல் கேஸஸ் இருக்குமாதலால் அதை விதி யாகவே போடவில்லை.

**திரு. ஜே. மாதா கவுடர் :** நம்முடைய மாநிலத்தில் பின் தங்கிய சமூகத்தினர் அதிகமாக இருக்கும் காரணத்தால் அவர்களுக்காக ஒது கப் பட்டிருக்கும் 25 சத விகிதத்தை அதிகமாக்குவதுபற்றி அரசாங்கம் பரி சீலிக்குமா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** கனம் உறுப்பினர் அவர் களுக்கு விவரம் தெரியாமல் இருக்கலாம் என்று நினைக்கிறேன். இன்றைக் குப் பின்தங்கிய மாணவர்கள் என்று சொல்லுகிற எல்லோரும் அவர் களுடைய "எபிலிட்டி"யினாலேயே தேர்ந்தெடுக்கப்பட்டு விடுகிறார்கள். ஆகவே அந்த சதவிகிதத்தை உயர்த்தவேண்டிய அவசியம் இல்லை.

### வேலூரில் தீ விபத்துகள்

*141 கேள்வி—**திரு. ர. ஜீவரத்னம் :** கனம் உணவு அமைச்சர் தயவு செய்து கீழ்க் கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வேலூர் நகரத்திலும், தாலுக்காவிலும் 1965 ஜனவரி முதல் அக்டோபர் 31 வரை எத்தனை தீ விபத்துகள் ஏற்பட்டன ?

(இ) மேற்படி விபத்துகள் ஏற்படக் காரணம் என்ன ?

(உ) அதைத் தடுக்க எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) Twenty-two fire accidents took place in Vellore town and taluk.

(*b*) The fires were accidental.

(*c*) The question does not arise.

**புலவர் கா. கோவிந்தன் :** இந்த மாதிரித் தீ விபத்து ஏற்படும் போது அரசாங்கம் கொடுக்கும் உதவித் தொகை ரூ. 30-ம், ரூ. 40-ம் ஆக இருக்கிறது. இந்தத் தொகையை உயர்த்த வேண்டுமென்று மக்கள் கேட்டு வருகிறார்கள். இதை அரசாங்கம் பரிசீலித்து தொகையை உயர்த்த முன் வருவார்களா ?

**கனம் திரு. வெ. ராமையா :** அது இப்போது பரிசீலனையில் இல்லை.



### *Complaint against village officer.*

* 142 *Q.*—SRI S. MADHAVAN : Will the Hon. the Minister for Food be pleased to state :—

(*a*) whether the Government have received any complaint from the public of R. S. Mangalam, Thiruvadanai taluk of Ramanathapuram district regarding the alleged misappropriation of kist collections and the loans sanctioned to the ryots by the village officer ; and

(*b*) if so, the action taken thereon ?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) Yes.

(*b*) The Superintendent of Police, Ramanathapuram has reported that, on a complaint made by the Tahsildar, Tiruvadanai regarding the misappropriation of Government loan collection, a case has been registered at R. S. Mangalam Police Station and a charge sheet has been filed against the ex-Village Munsif who is under suspension.

**திரு. செ. மாதவன் :** அவர் எப்போது மோசடியில் ஈடுபட்டார்? எவ்வளவு ரூபாய் மோசடி செய்தார்? காலதாமதத்திற்கு காரணம் என்ன?

THE HON. SRI V. RAMAIAH : The Superintendent of Police, Ramanathapuram, has reported that on 11th January 1965, the Tahsildar, Tiruvadanai, made a complaint against the village officer, regarding the temporary misappropriation of a sum of Rs. 1,154-12 representing Government loan collections and a sum of Rs. 210·30 representing Government loan sent to him for disbursement.

### மீமிசலில் பத்திரப் பதிவு அலுவலகம்

*143 கேள்வி—**திரு. ஆ. துரையரசன் :** கனம் செய்தி விளம்பரத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) அறந்தாங்கி வட்டம், மீமிசல் என்னுமிடத்தில் புதிய பத்திரப் பதிவு அலுவலகம் துவங்கும் உத்தேசம் ஏதேனும் உண்டா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

**கனம் திரு. கோ. பூவராகன் :** (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடம் இல்லை.

**திரு. ஆ. துரையரசன் :** மீமிசல் பகுதியிலிருந்து அறந்தாங்கி 30 மைல் இருக்கிறது. அங்கிருந்து ஏழை, நடுத்தர மக்கள் அறந்தாங்கிக்கு வந்து பத்திரப் பதிவு செய்யவேண்டிய நிலைமை இருக்கிறது. மீமிசலில்ஒரு பத்திரப் பதிவு அலுவலகம் வேண்டுமென்று மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத் திலும், பஞ்சாயத்துக் கூட்டு மன்றக் கூட்டத்திலும் தீர்மானங்கள் நிறைவேற் றப்பட்டு அனுப்பப்பட்டிருக்கின்றன. அது அரசாங்கத்திற்குக் கிடைத்ததா ? அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

**கனம் திரு. கோ. பூவராகன் :** கோரிக்கைகள் அரசாங்கத்திற்கு வந்தன. மீமிசலில் பத்திரப் பதிவு நிலையம் வைத்தால் போதுமான வருவாய் இருக்காது. குறைந்த வருவாய்தான் வரும். ஆகவே, தற்போது அங்கு திறப்பதில்லை என்று முடிவு செய்யப்பட்டது.

[1st March 1966

**திரு. கோ. சி. மணி :** பத்திரப் பதிவு அலுவலகங்களில் சில இடங்களில் வேலை அதிகம் இல்லை என்று சொல்லுகிறார்கள். அந்த அலுவலகங்களில் உள்ள அதிகாரி இரண்டு மூன்று நாள் காம்ப் போட்டுக் கொண்டு பக்கத்து ஊருக்குச் சென்று அங்கே பதிவு செய்யும் முறையை அரசாங்கம் கொண்டுவருமா ?

**கனம் திரு. கோ. பூவராகன் :** பத்திரப் பதிவு அலுவலகத்தில் வேலை இல்லை என்ற தகவல் என்னிடம் இல்லை. எங்கெங்கு சென்று பத்திரப் பதிவு செய்ய வேண்டுமென்பது அப்போதைக்கப்போது பரிசீலிக்கப்பட்டு முடிவெடுக்கப்படும்.

**திரு. ஜே. மாதா கவுடர் :** பத்திரப் பதிவு அலுவலகங்கள் என்று தனியாக இருப்பதற்குப் பதிலாக அந்த வேலையைப் பஞ்சாயத்து யூனியன்களுக்கே கொடுத்துவிட்டால் மக்களுக்குச் சிரமம் குறைவதோடு, சர்க்கார் பணமும் மிச்சமாகுமல்லவா ?

**கனம் திரு. கோ. பூவராகன் :** அதைப் போன்ற யோசனை ஒன்றும் இல்லை.

**திரு. ஆ. துரையரசன் :** அமைச்சர் அவர்கள் தந்த பதிலில் மீமிசலில் வருவாய் குறைவாக இருக்கும் என்று சொன்னார்கள். வருவாயை மட்டும் கணக்கிட்டுப் பார்ப்பது அவ்வளவு சரியாக இருக்காது. மக்களுக்குச் சௌகரியம் செய்து தருவதற்குத்தான் ஆட்சி இருக்கிறது. மக்களுடைய நன்மையை உத்தேசித்து மீண்டும் பரிசீலிக்க முன்வருவார்களா ?

**கனம் திரு. கோ. பூவராகன் :** சௌகரியம் ஓரளவு செய்து கொடுக்க வேண்டியதுதான். இருந்தாலும் மக்களுடைய பணத்தை எந்த அளவு நல்ல முறையில் செலவழிக்க வேண்டுமோ அதையும் அரசாங்கம் கவனிக்க வேண்டியிருக்கிறது.

**திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் :** வருவாய் குறைவாக இருக்கும் என்ற காரணத்தால் பத்திரப்பதிவு அலுவலகத்தை மீமிசலில் அமைக்கவில்லை என்று சொல்லுகிறார்கள். குறைந்த பட்சம் ஒரு சப்-ரிஜிஸ்ட்ரார் ஆபீசிலிருந்து எவ்வளவு ரூபாய் வரவேண்டும்?

**கனம் திரு. கோ. பூவராகன் :** பத்திரப் பதிவு இலாக்காவில் குறைந்த பட்சம் 3,000 பத்திரங்களாவது பதிவு செய்யப்பட வேண்டும். மீமிசல் பகுதியின் பக்கத்திலிருக்கும் அலுவலகத்தில்கூட இன்னும் மூவாயிரத்தை எட்டிப் பிடிக்கவில்லை.

## இந்திய பிரதமர் வருகை

***144 கேள்வி—திரு. மு. கருணாநிதி :** கனம் செய்தி விளம்பரத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கடந்த நவம்பர் திங்கள், தலைமை அமைச்சர் சாஸ்திரியின் தமிழக வருகையை ஒட்டி சென்னை நாளிதழ்களுக்கு விளம்பரங்கள் ஏதேனும் தரப்பட்டதா ?

(இ) ஆம் எனில், அவ் விளம்பரங்கள் எந்தெந்த நாளிதழ்களுக்குத் தரப்பட்டன ?

**கனம் திரு. கோ. பூவராகன் :** (அ) ஆம்.

(இ) அவ் விளம்பரங்கள் இந்து, மெயில், இந்தியன் எக்ஸ்பிரஸ், தினமணி, சுதேசமித்திரன், நவசக்தி முதலிய நாள் இதழ்களில் பிரசுரிக்கப்பட்டன.

**திரு. மு. கருணாநிதி :** அந்த விளம்பரங்கள் எதிர்க்கட்சி ஏடுகளான நம்நாடு, முரசொலி, ஜனசக்தி போன்ற பத்திரிகைகளில் **ஏன் வரவில்லை ?**



1st March 1966]

**கனம் திரு. கோ. பூவராகன் :** அரசாங்கம் குறிப்பிட்ட சில பத்திரிகைகளுக்கு மட்டும் கொடுத்தால் போதும் என்று நினைத்த காரணத்தால் இந்தப் பத்திரிகைகளுக்குக் கொடுக்கப்படவில்லை.

**திரு. மு. கருணாநிதி :** இது பாதுகாப்பு முயற்சிக்காக நடத்தப்பட்ட கூட்டம். பண்டித நேரு அவர்கள் "இந்தி திணிக்கப்பட மாட்டாது, ஆங்கிலம் நீடிக்கும்" என்று விடுத்த அறிக்கை நம்நாடு, முரசொலி, ஜனசக்தி போன்ற எதிர்க்கட்சிப் பத்திரிகைகளில் எல்லாம் வெளியிடப்பட்டன. அதேபோல் எல்லா கட்சிகளும் சேர்ந்து பாதுகாப்பு முயற்சியிலே ஈடுபட்டிருக்கும்போது அது சம்பந்தப்பட்ட கூட்டத்தைப் பற்றிய விளம்பரம் ஏன் எல்லாப் பத்திரிகைகளுக்கும் கொடுத்திருக்கக் கூடாது ?

**கனம் திரு. கோ. பூவராகன் :** எந்தெந்தப் பத்திரிகைகளுக்கு விளம்பரம் கொடுக்க வேண்டுமென்று முடிவு செய்திருந்தோமோ அவற்றுக்குக் கொடுக்கப்பட்டது.

**திரு. கே. ஏ. மதியழகன் :** இந்த மாதிரி விளம்பரங்கள் பத்திரிகைகளுக்குக் கொடுப்பதில் விதி முறைகள் இருக்கின்றனவா? அல்லது செய்தித் துறை அமைச்சர், முதலமைச்சர் அந்தராத்மா என்ன சொல்கிறதோ அதன்படி முடிவு செய்யப்படுகிறதா ?

**கனம் திரு. கோ. பூவராகன் :** அதற்கெல்லாம் விதிகள் இருக்கின்றன. 9-00 a.m.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** எல்லோருக்கும் அந்தராத்மா இருக்கிறது என்பதைக் கனம் அங்கத்தினர் ஏற்றுக் கொள்கிறார்களா ?

* * *

**Mr. SPEAKER :** Next question.

**திரு. இராம. அரங்கண்ணல்:** ஆன் எ பாயின்ட் ஆஃப் ஆர்டர் சார், இந்தப் பிரச்னை மிகவும் முக்கியமான பிரச்னை. அரசாங்கம் எந்தெந்தப் பத்திரிகைகளுக்கு விளம்பரம் கொடுத்து இருக்கிறது, அதற்கு, எவ்வளவு பணம் கொடுத்திருக்கிறது என்பதைப் பற்றி அறிந்துகொள்ள வேண்டியது அவசியமாகும். ஆகையால் இந்தப் பிரச்னைமீது அரைமணி நேர விவாதம் அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இதற்கு விவாதம் வேண்டியது இல்லை. பொதுவாக விவரங்கள் கேட்டால் தகவல்கள் கொடுக்கலாம்.

**Mr. SPEAKER :** The hon. Member should put questions for the purpose of eliciting information.

**Sri P. U. SHANMUGAM and Sri RAMA. ARANGANNAL** rose . . . .

**Mr. SPEAKER :** Let the hon. Member Sri Rama. Arangannal please resume his seat.

**Sri P. U. SHANMUGAM :** I request the hon. Minister not to provoke us.

**Mr. SPEAKER :** If an hon. Member provokes the Hon. Minister, the Hon. Minister provokes him.

**திரு. மு. கருணாநிதி:** தலைவரவர்களே, இந்தச் சபையிலே தரத்தைப் பற்றிய கேள்விகளையும், பதில்களையும் எடுத்துவிட வேண்டுமென்று கூறினீர்கள். அதேபோன்று கடந்த சில வாரங்களுக்கு முன்பு இங்கே எதிர்க்கட்சிப் பத்திரிகைகள் தரமற்றவை என்று பேசப்பட்டிருக்கிறது. ஆகவே, அவற்றையும் எடுத்துவிடுவதற்கு ஆணை பிறப்பிக்க வேண்டுமென்று நான் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

---

*** Expunged as ordered by the Chair.

MR. SPEAKER : If any Member had brought it to the notice of the Chair immediately, it would have been considered. We are here to see that the level of the debate does not go down.

SRI RAMA. ARANGANNAL rose.....

MR. SPEAKER : Is the hon. Member raising a point of order ?

**திரு. இராம. அரங்கண்ணல் :** No. என்னுடைய வேண்டுகோளின் மேல் தங்களுடைய தீர்ப்பு என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

MR. SPEAKER : If the hon. Member wants to talk about the Department of Information and Publicity, he can talk about it in the course of the budget discussion. I think there is no need for a half-hour debate.

**திரு. இராம. அரங்கண்ணல் :** அப்படியானால், ஒரு கேள்வியையாவது தாங்கள் அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கனம் சபாநாயகர் அவர்களே, தாங்கள் அனுமதி அளித்தால் இந்தக் கேள்விக்கு அளிக்கப்பட்ட விடையைப் பற்றிப் பொதுவாக அரசாங்கத்தின் கொள்கையைச் சுருக்கமாக விளக்க விரும்புகிறேன். இது பொதுக் கூட்டத்தைப் பற்றியது. பிரதம மந்திரி அவர்கள் பேசுகின்ற பொதுக் கூட்டத்தைப் பற்றியது. அதற்காகப் பத்திரிகைகளில் விளம்பரம் போடப்பட்டது. அம்மாதிரி விளம்பரங்களை எல்லாப் பத்திரிகைகளிலும் போடவேண்டியதில்லை. தொழில் துறையிலோ, வியாபாரத் துறையிலோ விளம்பரம் செய்வது என்றால், எல்லாப் பத்திரிகைகளுக்கும் கொடுப்பது இல்லை. ஒரு பேட்ரனேஜாகக் கொடுப்பது இல்லை. இந்தப் பொதுக்கூட்ட விளம்பரத்தைப் பொறுத்த மட்டில் பத்திரிகைகளுடைய தரமல்ல பிரச்னை. எந்தப் பத்திரிகையில் போட்டால் தெரிந்து கொள்ளவேண்டுமென்று விரும்புகிறவர்கள் தெரிந்து கொள்வார்களோ அந்தப் பத்திரிகைகளில் போடவேண்டுமென்று அரசாங்கம் கருதிற்று. அந்தக் கருத்தோடுதான் சில பத்திரிகைகளுக்குக் கொடுக்கப்பட்டது. இதை அடிப்படையாகக் கொண்டுதான் என்ன என்ன விளம்பரங்கள் கொடுக்க வேண்டுமோ அவை கொடுக்கப்படுகின்றன.

**திரு. இராம. அரங்கண்ணல் :** இதைப்பற்றி அரை மணி நேர விவாதம் வேண்டுமென்று கேட்டேன். அதற்கு தாங்கள் அனுமதிக்க வேண்டும் என்று மறுபடியும் கேட்டுக்கொள்கிறேன்.

MR. SPEAKER : We will be discussing the Demand relating to the Information and Publicity Department. On that day the hon. Member can put forward all his points and the hon. Minister will reply to them. If I allow a half-hour debate, I will have to cut short the time allotted for some other business.

**திரு. சா. கணேசன் :** தாங்கள் கட்டளையிடுகிறபொழுது கேள்விகள் ஒரு லெவலை விட்டு—தாங்கள் அந்த வார்த்தையைச் சொல்லக் கூடாது என்று சொல்லிவிட்டதால் நான் சொல்லவில்லை. மறுபடியும் குழப்பம் வரக்கூடாது என்பதற்காக—கீழே இறங்கக்கூடாது, ஒரு நிலையிலேயே இருக்கவேண்டுமென்று கூறினீர்கள். அப்படியானால் கேள்விகள் மட்டும் தான் லெவலுக்குக் கீழ இறங்கக் கூடாதா ? விடைகளுமா ?

MR. SPEAKER : I told about answers also. Perhaps the hon. Member did not hear it.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** பரஸ்பரம் என்பதை வற்புறுத்த விரும்புகிறேன். மரியாதை செலுத்துவது, தரமாகக் கேள்வி கேட்பது, விடை அளிப்பது எல்லாம் பரஸ்பர உணர்ச்சியோடு இருக்கவேண்டுமென் பதில் அங்கத்தினர்கள் கவனம் செலுத்தவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.





*Engineering Graduates.*

* 145 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Chief Minister be pleased to state the details of the concessions proposed to be extended to Engineering graduates opting for service in the armed forces ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Compulsory Liability for Army Service has been prescribed for Graduate Engineers recruited to Engineering posts under the State Government after 12th December 1964. All Graduate Engineers recruited under the Compulsory Liability Scheme are liable to serve for a minimum period of 4 years (including the period spent on training) in the Armed Forces or on work relating to Defence effort anywhere in India or abroad, if so required.

Prior to the introduction of Compulsory Liability for Army Service, certain special concessions were granted to the State Government Employees with a view to encourage them to take up Army Service. A list[a] of these concessions and the concessions recently sanctioned to the private Graduate Engineers who join the Armed Forces direct and who will be recruited against the reserved vacancies after their release from the Army, is placed on the Table of the House.

**திரு. வை. சங்கரன் :** கொடுக்கப்பட்டிருக்கிற அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிற 7-வது கன்செஷனில் நேஷனல் எமர்ஜென்ஸி பீரியடில் தான் அவர்களுக்கு 50 சதவீதம் ரிசர்வ் செய்து வைக்கக்கூடிய பிரிஃபரன்ஸ் கொடுக்கப்படும் என்று இருக்கிறது. நேஷனல் எமர்ஜென்ஸி இல்லாத காலத்திலும், பொதுவாக அவர்களுக்கு இநத பிரிஃபரன்ஸ் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இந்த நெருக்கடியை ஒட்டி இந்த விதிகள் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன. மற்றப்படி ராணுவத்திலே சேவை புரிகிறவர்களுக்குச் சாதாரணமாகச் சில சலுகைகள் அளிக்கப்படும்.

**திரு. டி. கார்ச்சா கவுடர்:** ஸார், சமீபத்தில் ராணுவத்தில் சேர்ந்து பணி புரிகின்ற டாக்டர்களுக்கு 250 ரூபாய் கூடுதலாகக் கொடுக்கப்படும் என்ற சலுகை தெரிவிக்கப்பட்டிருந்தது. அதே போன்று ராணுவத்தில் சேருகின்ற இஞ்சினீயர்களுக்கும் என் இந்தச் சலுகை அளிக்கக் கூடாது ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** எந்த எந்தத் துறையில் எத்தனை பேர்கள் வருகிறார்கள், என்பதையெல்லாம் பார்த்து, பரிசீலித்துச் சலுகை கொடுக்கலாம்.

**சென்னை நகரில் உள்ள வெள்ளையர்களின் சிலைகள்**

* 146 கேள்வி—**திரு. கரு. சீமைச்சாமி :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்னை நகரில் உள்ள வெள்ளையர்களின் சிலைகளை அகற்ற உத்தேசமுண்டா ?

(இ) ஆம் என்றால், எப்போது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes, Sir.

(*b*) It has been decided that till arrangements are made for substitutes, the statues may remain where they are.

---

a Printed as Appendix II on pages 305-306.

[1st March 1966

**திரு. கரு. சீமைச்சாமி :** ஸார், வெள்ளையர்களுடைய சிலைகளை அகற்றி விட்டு தேசீயத் தலைவர்களுடைய சிலைகளை வைப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இப்போது இருக்கின்ற சிலைகளை அப்புறப்படுத்திவிட்ட பிறகு ஆலோசிக்க வேண்டிய விஷயம் இது.

**திரு. கே. ஏ. மதியழகன் :** இது சம்பந்தமாக, அதாவது ஜார்ஜ் டவுன் என்றிருப்பதை மாற்றி வ. உ. சி. நகரம் என்ற பெயரை வைக்க வேண்டும் என்ற கோரிக்கை அரசாங்கத்திற்கு வந்திருக்கிறதா ? அப்படி யென்றால் அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கோரிக்கை வந்தது பற்றி என்னிடம் தகவல் இல்லை. இம்மாதிரி பெயர்களை மாற்றிக்கொண்டிருக்கவேண்டும் என்பது அவசியமில்லை. ஏதோ சில காரணங்களுக்காக பெயர் வைக்கிறார்கள். மற்ற நாடுகளில்கூட இப்படிப்பட்ட பெயர்களை எல்லாம் மாற்றாமல் அப்படியே வைத்திருக்கிறார்கள் என்பதை கனம் அங்கத்தினர் அவர்கள் உணர்வார்கள் என்று நம்புகிறேன்.

**திரு. எம். எஸ். செல்வராஜன் :** டாக்டர் அன்னி பெஸண்ட் அம்மை யாருடைய பெயரும் வெள்ளைக்காரர்களுடைய வரிசையில் சேர்க்கப் பட்டிருக்கிறதா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** வெள்ளையர்கள் வரிசை என்று ஒன்றுமில்லை. "ஃபாரினர் ஸ்டாச்யூ" என்று இருக்கிறது. அன்னி-பெஸண்ட் அம்மையார் ஃபாரினர் என்றிருந்தாலும் இந்திய நாட்டுக்காகப் பாடுபட்டிருக்கிறார். இந்தியா தம்முடைய நாடு என்று ஏற்றுக் கொண்டிருந்தார். இந்திய சுதந்திரப் போராட்டத்தில் பங்கு கொண்டிருந் தார்கள். ஆகவே, அவர்கள் சிலையை இந்த வரிசையில் சேர்ப்பது என்கின்ற விஷயம் எழவில்லை.

**திரு. இரா. நெடுஞ்செழியன் :** கனம் அவைத் தலைவர் அவர்களே, இவ்வாறு சிலைகளை அகற்றுவதற்கு அரசாங்கம் எப்படிப்பட்ட கொள்கையை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது என்பதை அறியலாமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அன்னியர்களுடைய சிலைகளை அகற்றி அதைப் பார்வைக்காக மியூசியத்தில் வைக்கலாம். மியூசியத்தில் வைப்பதுதான் பொருத்தமாக இருக்கும். அதுவும் சரித்திர பூர்வமான பொருட்கள் வைக்கப்படுகின்ற மியூசியத்தில் வைக்கவேண்டும். இங்கு கூட ஒரு மியூசியம் இருக்கிறது. அந்த வகையில் தான் அகற்றப்பட்ட சிலைகளை வைக்கவேண்டும் என்று சொல்லப்பட்டு வருகிறது. இதுதான் அரசாங்கத்தினுடைய பொதுவான கருத்து.

**திரு. சா. கணேசன் :** இந்த அந்நியர் சிலைகளை அகற்றுவது என்பதில் நம்முடைய உள்ளத்தைப் புண்படுத்துகின்றதும், நம்முடைய சுயமரியாதைக் குப் பங்கம் ஏற்படுத்தக்கூடியதுமான சிலைகளை அகற்றுவது என்பது வரவேற்கத்தக்கது. ஆனால், சரித்திர முக்கியத்துவத்தைக் கொண்டு, மனத்தையும் புண்படுத்தாமல், அழகுணர்ச்சியை வளர்க்கக்கூடியதுமான அன்னியர் சிலைகளை அகற்றுவது நம்முடைய கலைப் பண்புக்குப் பொருத்த மாக இராது என்பதை உணர்ந்து, அழகுணர்ச்சியை வளர்க்கக்கூடிய பல சிலைகளை அகற்றாமல் இருப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கனம் அங்கத்தினர் அவர்கள் சொல்வது நல்ல கருத்துத்தான். யோசிக்கப்படவேண்டிய கருத்துத் தான். இந்திய மக்களுடைய மனத்தைப் புண்படுத்தக்கூடிய சிலைகள் பல இருந்தன. "நீல்" சிலை இருந்தது. அதை அப்புறப்படுத்த வேண்டும் என்று காங்கிரஸ் தொண்டர்கள் போராட்டம்கூட நடத்தினார்கள். பொறுப்புள்ள ஆட்சி வந்த பின்னால் அந்தச் சிலை அகற்றப்பட்டது. ஆனால் இப்போது மன்றோ சிலை இருக்கிறது. அழகான சிலை. அதே போன்று ரிப்பன் சிலை இருக்கிறது. அன்னியர்கள் சிலையை அகற்ற



1st March 1966]

வேண்டும் என்ற கருத்துப்படி இதுவும் அகற்றப்படவேண்டும். ஆனால் இவை எல்லாம் நல்ல அழகான சிலைகள் என்கின்ற காரணத்தால் இவற்றை அகற்றுவது பற்றி யோசிக்க வேண்டியிருக்கிறது. பொதுவாக அன்னியர் களுடைய சிலைகளை அகற்றி மியூசியத்தில் வைத்துப் பாதுகாப்பது என்பது பொதுவான முடிவு. அதன்படி நிறைவேற்றும்பொழுது, என்னென்ன மாறுதல்கள் செய்யவேண்டும் என்பது பற்றி பின்னால் யோசிக்கக்கூடும்.

**திரு. பி. கே. மூக்கையாத் தேவர்:** மனதைப் புண்படுத்தக்கூடிய சிலைகளை மட்டும் தான் அப்புறப்படுத்த வேண்டுமா? அதுபோன்ற படங் களும் இருக்கின்றனவே. அவைகளும் அப்புறப்படுத்தப்படுமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** படங்களும் சிலைகளைப் போன்றவை தான். படங்களைப் பொறுத்த வரையில், நல்ல கலை உணர்ச்சியுடன் அழகாக இருக்கின்றன. ராஜாஜி மண்டபத்தில் இருக்கின்ற பல படங்கள் மிகுந்த கலைத் திறன் கொண்டதாக இருக்கின்றன என்று சொல்கிறார்கள். அன்னி யர் படங்கள் என்பதற்காக அவற்றின் மீது வெறுப்புக் கொள்ளவேண்டிய தில்லை. இருந்தாலும், நான் முன்பே தெரிவித்ததுபோல், இந்தப் படங்களையும் அகற்றி வேறு இடங்களில் வைத்துப் பாதுகாக்கவேண்டும். அப்படி இவற்றை அகற்றும்போது, இந்த இடங்களில் சரித்திரத்தில் சிறப்பு வாய்ந்த நல்ல படங்கள் வைக்கப்படவேண்டும். இவற்றை மட்டும் எடுத்துவிட்டு வெறும் சுவராக விட்டு வைக்க முடியாது. இதைப்பற்றியும் யோசிக்கவேண்டியிருக்கிறது.

**திரு. எம். எஸ். செல்வராஜன் :** பொதுப்பாதை ஓரமாக இருக்கும் சிலைகளை மட்டும் தான் அப்புறப்படுத்தவேண்டும் என்று யோசிக்கப்பட்டிருக் கிறதா அல்லது கார்ப்பொரேஷன் எல்லைக்குள், அதே போன்று யுனிவர் சிட்டி எல்லைக்குள் இருக்கும் அன்னியர் சிலைகளையும் அப்புறப்படுத்த வேண்டும் என்பது அரசாங்கத்தினுடைய முடிவா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** ஒவ்வொரு ஸ்தாபனத்தின் அதி காரத்திற்குள் இருக்கின்ற சிலைகளைப்பற்றி அரசாங்கம் முடிவு செய்ய முடியாது. அந்தந்த ஸ்தாபனங்கள் வைத்திருக்கின்றன. அதற் குள் பிரவேசிப்பதாக அரசாங்கத்திற்கு எண்ணம் இல்லை. பொதுப்பாதை களில் இருக்கின்ற சிலைகளை அப்புறப்படுத்த வேண்டும் என்பதைத்தான் அரசாங்கம் யோசித்துக்கொண்டிருக்கிறது.

**திரு. இரா. நெடுஞ்செழியன் :** கனம் அவைத் தலைவர் அவர்களே, இந்த நாட்டில் கவர்னர்கள், வைசிராய்கள் போன்ற பதவிகளில் வெள்ளைக் காரர்கள் இருந்தார்கள். அதிகாரத்தில் இருந்தார்கள் என்பதற்காகப் பலருடைய சிலைகளும் படங்களும் இருக்கின்றன. இவை தவிர கல்விப் பணி, ஆராய்ச்சிப் பணி போன்றவற்றில் ஈடுபட்டவர்களுடைய சிலைகள், படங்கள் இவையும் இருக்கின்றன. அதிகாரத்தை மட்டும் கொண்டிருந்தார்கள் என்பதற்காக இருக்கின்ற சிலைகளை அகற்றுவதற்கு முழு முயற்சி எடுப்பது வரவேற்கத்தக்கது. அதேநேரத்தில் சமூகப் பணி, கல்விப் பணி, ஆராய் ச்சிப் பணி இவற்றில் ஈடுபட்டவர்களுடைய சிலைகளுக்குக் கீழேயும் படங் களுக்குக் கீழேயும் இன்னார், இன்னின்ன பணியை மேற்கொண்டிருந்தார் என்ற விளக்கக் குறிப்பை வெளியிடுவதற்கு அரசாங்கம் முன் வருமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அதிகார வகையில் இருந்தார்கள் என்பதற்காக வைக்கப்பட்டிருக்கின்ற சிலைகளை எல்லாம் எடுக்கவேண்டும் என்பதை ஆட்சேபிப்பதற்கில்லை என்கின்ற கருத்தை நான் ஏற்றுக் கொள்ளவில்லை. அன்னியர்களுடைய சிலைகள், படங்கள் அகற்றப் படவேண்டும் என்பது பொதுவான கருத்து. ஆனால் சமூகப்பணி, கல்விப்பணி ஆராய்ச்சிப்பணி இவைகளில் பணிபுரிந்தவர்களின் சிலைகள், படங்கள் ஏதா வது இருந்தால் அவர்கள் செய்த அரும்பணியைக் குறிப்பிட்டு, இன்னின்ன பணியாற்றியிருக்கிறார்கள் என்பதை குறிப்பது நல்லது என்பதைக் ஆட்சேபிப் பதற்கு இடமில்லை. மற்றொன்று, ரஷ்யாவில்கூட நான் பார்த்தேன். "பீட்டர் தி கிரேட்" உருவம் இப்போதும் பெரிய அளவில் குதிரையின்மேல் இருக்கிற உருவம் இருந்து கொண்டிருக்கிறது. கம்யூனிஸ ஆட்சியில் இது

[1st March 1966

அகற்றப்படவில்லை. அதைப் பொது மக்கள் கூட்டம் கூட்டமாக வந்து சுற்றிச் சுற்றிப் பார்த்துக் கொண்டு போகிறார்கள். அந்த "பீட்டர் தி கிரேட்" என்கின்ற சிலை மிக அழகாக இருக்கிறது. "இந்த பீட்டர் தி கிரேட்" என்பவர் பழைய சாம்ராஜ்ஜியத்தைச் சேர்ந்தவர் என்பதற்காக இப்போதுள்ள ரஷ்ய அரசாங்கம் இந்தச் சிலை வேண்டாம் என்று கருதி எடுக்கவில்லை. அதைப்போல் பல சிலைகளை மியூசியத்தில் பார்த்தேன். பழமையை பாதுகாக்க வேண்டும் என்கிற உணர்ச்சி சோவியத் யூனியனில் பெரிதும் வளர்ந்திருப்பதை நான் கண்டேன்.

**திரு. மீ. கலியாணசுந்தரம் :** கனம் முதலமைச்சர் அவர்கள் ரஷ்யாவை எடுத்து மேற்கோள் காட்டினார்கள்........

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கனம் அங்கத்தினர் அவர்களுக்குத் தான் ரஷ்யா மோனப்பலி என்று கோருவாரானால் நான் மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன். (சிரிப்பு).

**திரு. மீ. கலியாணசுந்தரம் :** இதற்காக நான் முதலமைச்சர் அவர்களைப் பாராட்டக்கூடாதா என்ன ?

**கனம் சபாநாயகர் :** பாராட்டுவதிலே சந்தேகம் ஏற்பட்டு விடுகிறது....

**திரு. மீ. கலியாணசுந்தரம் :** இதில் சந்தேகம் ஏற்படுவதற்கு என்ன இருக்கிறது ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** பழக்கம் தான்.

**திரு. மீ. கலியாணசுந்தரம் :** ரஷ்யாவைப்பற்றிப் பாராட்டிப் பேசுவதற்கோ அல்லது குறை கூறிப் பேசுவதற்கோ முதலமைச்சர் அவர்களுக்கு உரிமை இருக்கிறது. இப்போதாவது பாராட்டிப் பேசுகின்ற பொறுப்பை அவர்கள் ஏற்று கொண்டதற்காக எனக்கு மகிழ்ச்சிதான். "பீட்டர் தி கிரேட்" சிலை எடுக்கப்படவில்லை என்பதைப்பற்றிச் சொன்னார்கள். ஆனால் "பீட்டர் பெர்க்" என்றிருந்ததை "லெனின் கிராட்" என்று மாற்றியிருப்பதைக் கனம் முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன். நம் ராஜ்யத்தில் ஆறும் ஜியார்ஜ், ஏழாம் ஜியார்ஜ் இவர்களுடைய சிலைகளெல்லாம் இருக்கின்றன. இவர்களுடைய சிலைகளின் கீழ்—"நாம் இவர்களுக்கு அடிமைகளாக இருந்தோம்" என்றுதான் எழுதி வைக்க வேண்டும். அந்த முறையிலாவது எழுதி வைத்தால் நமக்குத் தேசீய உணர்ச்சி ஏற்படும். அந்த வகையிலாவது எழுதி வைப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** பொதுப் பாதையிலுள்ள அன்னியர் சிலைகளை யெல்லாம் அகற்றிப் பொருத்தமுள்ள ஒரு மியூசியத்தில் வைப்பது தான் அரசாங்கத்தின் முடிவு என்று நான் முன்பே தெரிவித்திருக்கிறேன்.

**கனம் சபாநாயகர் :** கேள்விகள் முடிவடைந்தன.

**[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]**

## II.—ADJOURNMENT MOTION.

## DISPUTE BETWEEN THE TENANTS AND MIRASDAR OF A. K. R. FARM, KARUPPUR.

**திரு. கோ. சி. மணி :** கனம் தலைவர் அவர்களே, இன்றைய தினம் சட்ட மன்ற விதிகளின் 42-வது விதியின் பிரகாரம் நான் ஒரு ஒத்திவைப்புப் பிரேரணையை இங்கே கொண்டுவர விரும்புகிறேன்.



1st March 1966] [திரு. கோ. சி. மணி]

தஞ்சை மாவட்டத்தில், கும்பகோணம் வட்டத்தில், சீரங்கராசபுரம் கருப்பூரில் ஏ. கே. ஆர். பண்ணை என்ற ஒரு பண்ணை இருக்கிறது. அந்தப் பண்ணையில் சாகுபடி செய்திருக்கிற வாரதாரர்களுக்குக் குறுவை மகசூல் வாரம் பிரித்துக் கொடுக்கப்படவில்லை. அறுவடை செய்த பிறகு களத்து மேட்டில் பிரித்துக் கொள்ளலாம் என்று ஒரு வாரம் கட்டத்திவிட்டுப் பிரிக்காமல் இருக்கிறார்கள். தாளடி சம்பா மகசூல் அறுவடைக்குக் கடந்த இருபது நாட்களாகத் தயாராக இருந்தும், அறுவடை செய்து கண்டுமுதல் செய்யப் பலமுறை கூப்பிட்டும் வராததால் அறுவடையாகாமல் பாழாகும் தருவாயில் இருக்கிறது. இருபது 30 ஹரிஜனக் குடும்ப விவசாயிகள் சாகுபடி செய்திருக்கிறார்கள். அவர்கள் வழக்கு மன்றத்திற்குப் போக முடியாமல் இருக்கிறார்கள். அப்படி இருப்பதால் உணவு நெருக்கடி....

**கனம் சபாநாயகர் :** இந்தச் சபை அதிலே என்ன செய்ய முடியும் ?

**திரு. கோ. சி. மணி :** இதைப்பற்றி விவாதிக்க வேண்டுமென்று தான் நான் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன்.

**கனம் சபாநாயகர் :** ஒத்திவைத்துவிட்டால் அவர்கள் நெல்லை அளந்து விடுவார்களா ?

**திரு. கோ. சி. மணி :** இதைப்பற்றி விவாதிப்பதன் மூலமாக....

**MR. SPEAKER :** This is a very simple matter. If any particular landlord has not behaved properly, action should be taken according to law. How can this matter be discussed in the form of an adjournment motion here ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கனம் சபாநாயகர் அவர்களே, தாங்கள் குறிப்பட்டது போல இது குறிப்பிட்ட சில விவசாயிகளுக்கும் நிலச் சொந்தக்காரர்களுக்கும் இடையே உள்ள தகராறு. இதைத் தீர்ப்பதற்கு ஒரு ஏற்பாடு இருக்கிறது—யந்திரம் இருக்கிறது. ஆகவே, இது அவசரப் பிரேரணைக்கு உரியது அல்ல.

இருந்தாலும், இம்மாதிரிப் பிரச்னைகள் என்னுடைய அல்லது மற்ற அமைச்சர்களுடைய கவனத்திற்கு எப்போது கொண்டுவரப்பட்டாலும் அதன் மீது அரசாங்கமே கவனம் செலுத்தலாம். அதைப் பற்றி சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கொண்டு மேலும் கவனித்து, உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றால் நடவடிக்கை எடுத்துக் கொள்ளுவதற்கும், சுமுகமான ஏற்பாடுகளைச் செய்வதற்கும் கவனம் செலுத்த முடியும். இப்போது அவசரப் பிரேரணையாகக் குறிப்பிடப்பட்டிருக்கும் விஷயம் எனது கவனத்திற்கு வந்தது. இதைக் கலெக்டருக்கு அனுப்பி, அவரைக் கொண்டு நேராகப் பார்த்து, ஏதாவது பரிகாரம் செய்ய வேண்டுமென்றால் செய்யச் சொல்லுவேன். ஆகவே, இது அவசரப் பிரேரணைக்கு உரியது அல்ல என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

**MR. SPEAKER :** I withhold my Consent to the hon. Member to raise this subject as an adjournment motion. In this connection, I wish to add that the right of giving notice of an adjournment motion is often misused for discussing even individual matters and matters which are not of public importance. I might have rejected this in my Chamber. But then, the Speaker's action is likely to have been misconstrued. That is why I have brought this to the notice of the House.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கனம் சபாநாயகர் அவர்களே தங்களிடத்திலே இந்த மன்ற உறுப்பினர்களுக்கு, எந்தக் கட்சியானாலும், பரிபூர்ண நம்பிக்கை உண்டு. இந்த மாதிரி ஆப்வியஸாக அவசரப் பிரேரணைக்கு உரியது அல்ல என்ற பிரேரணைகளை இந்த மன்றத்திற்குக் கொண்டு வந்து மன்றத்தில் விவாதிப்பது என்பது இந்த மன்றத்தின் நேரத்தை வீணாக்குவது ஆகும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். மற்ற மன்றங்களில் கூட, தாங்கள் கூறிய முறை கையாளப்படுகிறது என்று நான் தங்களுக்குத் தெரிவிக்க வேண்டியதில்லை. சிறிதும் அவசரப் பிரேரணைக்கு உரியது அல்ல என்ற பிரச்னைகளைத் தாங்களே நோட்டீஸ் கொடுத்த அங்கத்தினர்களை தங்கள் சேம்பருக்கு அழைத்து அங்கேயே தெரிவித்துவிடுவது நலம் என்று நான் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன்,

MR. SPEAKER : But the hon. Member Sri K. A. Mathialagan does not agree.

### III.—GOVERNMENT MOTIONS.

#### (1) ELECTION TO THE HOUSE COMMITTEE.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, I move—

"That with reference to Rule 221 (1) of the Madras Legislative Assembly Rules, this Assembly do proceed on a date to be fixed by the Hon. the Speaker to elect eleven members to be members of the House Committee for the financial year 1966–67".

The motion was put and carried.

### IV.—ANNOUNCEMENTS.

#### (1) ELECTION TO THE HOUSE COMMITTEE

MR. SPEAKER : In accordance with the regulations framed by me for the holding of elections according to the principle of proportional representation by means of the single transferable vote, I fix 11 a.m. on 4th March 1966 as the time and date within which nomination papers of candidates for election to the House Committee should reach the Secretary. Nomination forms can be had on application to the Secretary.

The nomination papers will be taken up for scrutiny at 3 p.m. on the 4th March 1966. I also fix 3 p.m. on the 7th March 1966 as the last hour and date for the withdrawal of candidature.

If the number of candidates nominated exceeds the number of seats to be filled, namely, eleven, a poll will be taken on the 9th March 1966 between the hours of 10 a.m. and 1 p.m.

### III.—GOVERNMENT MOTIONS—cont.

#### (2) ELECTION TO THE COMMITTEE OF PRIVILEGES

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, I move—

"That with reference to Rule 183 of the Madras Legislative Assembly Rules, this Assembly do proceed, on a date to be fixed by the Hon. the Speaker, to elect fifteen members to be members of the Committee of Privileges for the financial year 1966–67.

The motion was put and carried.





### IV.—ANNOUNCEMENTS—cont.

#### (2) ELECTION TO THE COMMITTEE OF PRIVILEGES

MR. SPEAKER : In accordance with the regulations framed by me for the holding of elections according to the principle of proportional representation by means of the single transferable vote, I fix 11 a.m. on the 4th March 1966 as the time and date within which nomination papers of candidates for election to the Committee of Privileges should reach the Secretary. Nomination forms can be had on application to the Secretary.

The nomination papers will be taken up for scrutiny at 3 p.m. on 4th March 1966. I also fix 3 p.m. on the 7th March 1966 as the last hour and date for the withdrawal of candidature.

If the number of candidates nominated exceeds the number of seats to be filled, namely Fifteen a poll will be taken on the 9th March 1966 between the hours of 10 a.m. and 1 p.m.

### V.—GENERAL DISCUSSION ON THE BUDGET FOR 1966–67—cont.

MR. SPEAKER : Now, we will continue the general discussion on the Budget. The hon. Member Sri T. L. Sasivarna Thevar may now speak.

**திரு. டி. எல். சசிவர்ணத் தேவர் :** கனம் சபாநாயகர் அவர்களே, நமது மாநிலத்தின் முதல் அமைச்சரும் நிதி அமைச்சரும் ஆகிய கனம் திரு. பக்தவத்சலம் அவர்கள் சபை முன் வைத்திருக்கும் பட்ஜெட் மீது சில கருத்துக்களைச் சொல்ல இஷ்டப்படுகிறேன்.

புது வரி எதும் போடாத ஒரு பட்ஜெட் என்று பிரசாரம் செய்யப்படுகிறது. வரி போடக் கூடியதை சற்று ஏறக்குறைய 4, 5 மாதங்களுக்கு முன்பாகவே போட்டு விட்டார்கள். இனிமேலும் தேவையானால் இன்னும் சில வரிகளைப் பிற்காலத்திலும் போட்டுக் கொள்ளலாம். பட்ஜெட் சமர்ப்பிக்கும் சந்தர்ப்பத்தில் தான் வரி போடவில்லையே தவிர முன்னாலேயே போட்டாகிவிட்டது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**கனம் சபாநாயகர் :** இப்போது டிஸ்கஷன் பட்ஜெட்டைப்பற்றி தானே.

**திரு. டி. எல். சசிவர்ணத் தேவர் :** இரண்டாவது, சர்ப்ளஸ் பட்ஜெட் என்று சொல்லப்படுகிறது. சமீபத்தில் போடப்பட்ட வரிகளினால் வரக் கூடிய வருமானம், மத்திய சர்க்காரிடமிருந்து வரக்கூடிய உபரி வருமானம் இவைகள் இல்லாமல் இருந்திருந்தால் இந்த பட்ஜெட் டெஃபிஸிட் பட்ஜெட்டாகத்தான் இருந்திருக்க முடியும். ஆகவே, எந்த வகையிலும் நமது மாநிலத்தில் நிதி நிலைமை நல்ல முறையில் இருக்கிறது என்று ஒப்புக் கொள்ளுவதற்கில்லை.

இன்று நாட்டில் மக்களை எதிர்நோக்கி இருக்கிற பிரச்னை விலைவாசி ஏற்றம். இந்த பட்ஜெட் உரையில் 54 பக்கங்களைத் திருப்பித் திருப்பிப் பார்த்தாலும் அதிலே ஒருவித சால்ஜாப்பும் பரிகாரமும் சொல்லப்படவில்லை என்று தெரிவித்துக்கொள்ள இஷ்டப்படுகிறேன். நாட்டில் உள்ள நிலைமை பயங்கரமாக இருக்கிறது. விலைவாசி ஏற்றம் எந்த அளவுக்குச் செல்ல முடியும் என்று சொல்ல முடியாத அளவுக்கு அவ்வளவு பயங்கரமாக விலைவாசி ஏற்றம் இருந்துகொண்டிருக்கிறது. மக்கள் இதைப்பற்றி பல கோணங்களில் கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். இதைப்பற்றி அரசாங்கத்தின் தரப்பில் ஏதாவது சொல்லியிருக்கிறார்களா என்றால் இல்லை. காரணம் என்னவென்று கேட்டால் தங்களுக்குள்ள அதிகார 9-30 a.m.
பலம் தான். விலைவாசி ஏற்றத்தால் மக்கள் அவதிப்பட்டாலும் கூட, தங்களை ஒன்றும் செய்ய முடியாது என்று நினைக்கிறார்கள் என்றுதான்

சந்தேகிக்க வேண்டியிருக்கிறது. இதற்கு ஒரு பரிகாரம் கூறப்பட்டிருக்கிறது. நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்துவதன் மூலம் இதற்குப் பரிகாரம் தேடலாம் என்று சொல்வது மிகவும் ஒரு சிறிய ஏற்பாடு. அது மக்களுடைய கஷ்டத்தைப் பரிபூரணமாகப் போக்குவதற்கு உள்ள ஏற்பாடு என்று நிச்சயமாகச் சொல்ல முடியாது. ஒரு பகுதியில் மட்டுமல்ல, எல்லாப் பகுதியிலும் கூட விலைவாசி ஏற்றம் இருக்கிறது. அதனால் மக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். சமீபத்தில் உணவுப் பிரச்னை வேறு அத்துடன் சேர்ந்து கொண்டிருக்கிறது. ஏறக்குறைய 20 ஆண்டுகள் காலமாக காங்கிரஸ் ஆட்சி நமது மாநிலத்தில் நடைபெற்றுக்கொண்டு வருகிறது. கோடிக்கணக்கான ரூபாய்கள் விவசாய அபிவிருத்திக்காகச் செலவு செய்யப்பட்டிருக்கிறது. கடைசியில் பார்க்கப்போனால் உணவுப் பற்றாக்குறைதான் இருந்து வருகிறது. நமது மாநிலம் சம்பந்தப்பட்ட மட்டில், உணவு தானியங்கள் நல்ல விளைச்சல் இருப்பதாகக் கணக்குக் கொடுக்கிறார்கள். ஆனால், மக்களிடத்திலே பார்த்தோமானால், அம்மாதிரியான சமாதான அபிப்பிராயம் இல்லவே இல்லை. உணவு நிறைய இருக்கிறது. சாப்பிடுகிறோம், கஷ்டம் இல்லை என்ற உணர்ச்சி இருக்கிறதா என்று கேட்டால், இல்லை.

உணவுப் பற்றாக்குறைக்கு மூன்று அடிப்படை காரணங்கள் கூறப்படுகின்றன. நல்ல விதைகளைக் கொடுக்க முடியவில்லை என்பதை அரசாங்கமே ஒத்துக் கொண்டிருக்கிறது. விதைப் பண்ணைகளைப் பற்றிய சர்ச்சை அடிக்கடி அசெம்பளியில் ஏற்பட்டிருக்கிறது. விதைப் பண்ணைத் திட்டம் பரிபூரணமாகத் தோல்வி அடைந்த திட்டம் என்பதை எல்லோரும் ஒப்புக் கொண்டிருக்கிறோம். விதைப்பண்ணை சம்பந்தமாக சராசரி கணக்குப் போட்டு லாபம் காட்டுகிறார்கள். பல விதைப் பண்ணைகள் நஷ்டத்தில் இயங்குகின்றன. சில விதைப் பண்ணைகளில் லாபம் கிடைத்திருக்கிறது. ஆகவே, சராசரியாகப் பார்க்கும்பொழுது லாபம் இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. இது எப்படி இருக்கிறது என்றால், ஆற்றில் தண்ணீரில் இறங்குகிறவன், ஒரு கம்பை ஊன்றி சராசரி ஆழம் கணக்குப் பார்த்து ஆற்றில் இறங்கினால் அவன் கதி என்ன ஆகுமோ அந்த கதிதான் ஏற்படும். விதைகள் சம்பந்தப்பட்ட மட்டில் நல்லதோர் ஏற்பாட்டைச் செய்யாவிட்டால் ஒரு பெரிய ஆபத்து ஏற்படும் என்பதைக் கூறிக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, உரம் பற்றாக்குறை இருக்கிறது. பத்து, 15 வருஷங்கள் ஆகியும் இந்த மாநிலத்தில் உரப் பற்றாக்குறை நீடித்துக் கொண்டிருக்கிறது. இந்தப் பற்றாக்குறையை நீங்குவதற்கு எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்பட்டு; அதனால் பற்றாக்குறை நீங்கியதாகத் தெரியவில்லை. அதோடு கிடைக்கும் உரம் கூடக் காலாகாலத்தில் கிடைப்பதில்லை. உரம் வாங்கக் கூடிய இடத்தில் விவசாயிகள் போய்க் கேட்டால் உரம் வரவில்லை என்று சொல்லுவார்கள். 3, 4 நாட்கள் கழித்து கேட்டால் விலை வரவில்லை என்று சொல்லுவார்கள். அதாவது விலை இன்னும் நிர்ணயம் செய்யப்படவில்லை என்று கூறுவார்கள். அதற்குப் பிற்பாடு 5, 6 நாட்கள் கழித்துப் போய் கேட்டால், விலை வந்துவிடும், ஆனால் செல்வாக்குப் படைத்தவர்கள் உரத்தை வாங்கிக்கொண்டு போய்விடுவார்கள். உரம் இருந்தால், விலை வந்திருக்காது, விலை வந்தால் உரம் இருக்காது. இது சர்வசாதாரணமாக நிகழக் கூடிய சம்பவம். அரசாங்கத்தின் சார்பாக இதைக் கண்காணிக்கக் கூடியவர்களுக்கும் இதில் பங்கு இருப்பதால் தான் விவசாயிகளுக்கு இந்தக் கஷ்டம் இருக்கிறது என்பது என்னுடைய அபிப்பிராயம். தனியார் மூலம் விதைகள் முன்பெல்லாம் விவசாயிகளுக்குக் கிடைக்கவில்லையா? நாட்டில் காங்கிரஸ் கட்சி ஆட்சிக்கு வந்த பிறகு தான் விதை சம்பந்தமாக இந்தக் கஷ்டம். அதற்கு முன்னால் விவசாயிகளுக்கு நல்ல விதைகள் கிடைத்துக் கொண்டு தான் இருந்தன. இது சம்பந்தமாக அரசாங்கம் பணத்தைச் செலவிடுவது வீணாகப் போகிறதே தவிர, உண்மையிலேயே இதனால் நல்லகாரியங்கள் செய்யப்பட்டு நல்ல பலன் கிடைக்கவில்லை என்பதைத் தான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். பற்றாக்குறை இருந்து கொண்டிருக்கிறது. அது மட்டுமல்லாமல் போதுமான அளவு, தேவையான காலத்தில் கிடைப்பதில்லை. நேற்று முன்தினம் சட்டமன்ற உறுப்-





பினர் ஒருவர் பேசியபோது கிழக்கு இராமநாதபுர பகுதியில் நல்ல மழை பெய்திருக்கிறது, நல்ல விவசாயம் ஏற்பட்டிருக்கிறது. காலாகாலத்தில் போதுமான உரம் கொடுக்கப்பட்டால், விவசாயம் நல்ல முறையில் பலன் தரும் என்று சொன்னார். அதற்கு அமைச்சர் அவர்கள் அரசாங்கம் சம்பந்தப்பட்ட மட்டில் கூடிய சீக்கிரம் உரம் தருவதற்கு முயற்சிப்போம், இல்லாவிட்டால் என்ன செய்வது என்று கேட்டார்கள். அறுவடை முடிந்து விட்டது. உரக் கப்பல் வந்து சேரவில்லை. இம்மாதிரி எல்லாம் விவசாயிகளுக்குக் கஷ்டம் ஏற்படுகிறது.

தமிழ் நாடு சம்பந்தப்பட்ட மட்டில் கடலைப் பிண்ணாக்கு சிறந்த உரம். ஆனால், கடலைப் பிண்ணாக்கு இப்பொழுது ஏற்றுமதி செய்யப்படுகிறது. அதன் மூலம் அன்னியச் செலாவணி கிடைக்கிறது என்று சொல்லப்படுகிறது. கடலைப் பிண்ணாக்கு நல்ல உரம். மூட்டை ரூ. 35, 40-க்குக் கிடைக்கும். இந்த வருஷம் போட்டால் மழை இல்லாதுபோனாலும், அதனால் விவசாயத்தில் கோளாறு ஏற்பட்டாலும், அடுத்த வருஷத்திற்கு அது பிரயோசனப்படும். சல்பேட் உரம் அப்படியில்லை. ஆகவே, கடலைப் பிண்ணாக்கு ஏற்றுமதியை உடனடியாக தடுத்து நிறுத்த வேண்டும்.

உணவுப் பற்றாக்குறைக்கு மற்றொரு காரணம் விவசாயிகளுக்குப் போதுமான ஊக்கம் கொடுக்க முடியவில்லை என்பது. எந்த விதமான ஊக்கம் அவர்களுக்குக் கொடுக்க முடியும்? முடிந்த அளவுக்கு எவ்வளவு வரி போடுவது சாத்தியமோ அவ்வளவும் போட்டாகிவிட்டது. சமீபத்தில் வரி போட்ட பொழுது கூட சட்ட மன்றத்திலுள்ள எதிர்க்கட்சியினர் அதற்குக் கடுமையான ஆட்சேபணையைத் தெரிவித்தனர். காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த விவசாயிகள் கூட அதை மனமார ஆதரிக்கவில்லை. எனக்குத் தெரியும். இருந்தபோதிலும் சட்டம் நிறைவேற்றப்பட்டது. மேலும், மேலும் விவசாயிகள் மீது வரியை உயர்த்திக் கொண்டே போனால் அவர்களுக்கு எப்படி ஊக்கம் ஏற்பட முடியும். மத்திய உணவு இலாக்கா அமைச்சர் நேற்று முன்தினம் விவசாயப் பெருக்கம் இல்லாமல் போனதற்குக் காரணங்கள் கூறியிருக்கிறார். வெள்ளையர் காலத்தில் மரங்களை யெல்லாம் வெட்டி விட்டார்கள், மேகங்கள் குவிந்து மழை பெய்யவில்லை என்று முதல் திட்ட ஐந்தாண்டு காலத்தில் சொல்லி வன மகோத்சவம் என்ற உத்சவத்தை 4, 5 ஆண்டுகளாகக் கொண்டாடி, மரங்களை நட்டார்கள். அடுத்த ஐந்தாண்டுக் காலத்தில் போதுமான மழை இல்லை. ஆகவே, விவசாயம் இல்லை என்று சொல்லப்பட்டது. விவசாயப் பற்றாக்குறைக்கு இன்னொரு காரணமும் சொல்லப் படுகிறது. மக்கள் குழந்தைகளை ஜாஸ்தி பெற்று விட்டார்கள், ஜனத்தொகை ஜாஸ்தியாகிவிட்டது. ஆகவே குடும்பக் கட்டுப்பாடு அமல் நடத்தப்பட வேண்டும் என்று கூறினார்கள். நேற்று முன்தினம் மத்திய அரசு உணவு இலாக்கா அமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள், மக்கள் இப்பொழுது மூன்று வேளை சாப்பிடுகிறார்கள், அதனால் உணவுப் பற்றாக்குறை வந்திருக்கிறது என்று, இது ஒரு நியாயமற்ற காரணம் இல்லையா என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். வளர்ந்து வருகிற பொருளாதாரச் சமுதாயத்தில், திட்டங்கள் நிறைவேற்றப்படுகிற நிலையில், நிறைய வருமானம் வருகிற நிலையில் மூன்று வேளைகள் சாப்பிடுவது தவறா? சாப்பிடாமல் இருந்து விட்டால் நிச்சயம் பஞ்சம் இல்லை என்று கூறுவதா? அந்த நிலை நாட்டில் ஏற்பட வேண்டும் என்று அமைச்சர் அவர்கள் விரும்புகிறார்களா? இன்னொரு காரணம் சொல்லப்பட்டது. முன்பெல்லாம் கள்ளுக் கடைகள் இருந்தன, அதனால் இரண்டு வேளைகள் கள் சாப்பிட்டுவிட்டு, ஒரு வேளை தான் மக்கள் உணவு சாப்பிட்டார்கள், இப்பொழுது கள்ளுக்கடை இல்லாததினால் எல்லா வேளையிலும் உணவு சாப்பிட வேண்டிய அவசியம் இருக்கிறது என்ற கருத்தும் தெரிவிக்கப்பட்டது. நான் கள்ளுக்கடை வேண்டும் என்று சொல்லுபவன் அல்ல. நான் மதுவிலக்கை பரிபூரணமாக நிறைவேற்ற வேண்டும் என்றுதான் சொல்லுகிறேன். ஆனால் இந்த மாநிலத்தில் மது விலக்கு என்பது 100-க்கு 105 பங்கு தோல்வி அடைந்த ஒரு திட்டம். இது எல்லோருக்கும் தெரியும், அமைச்சருக்குத் தெரியும், உங்களுக்கும் தெரியும்.

[1st March 1966

**கனம் திரு. பூ. கக்கன் :** ஒருகாலும் மதுவிலக்குத் திட்டம் தோல்வி என்பதை ஒப்புக்கொள்ளமாட்டோம்.

**திரு. டி. எல். சசிவர்ணத் தேவர் :** அரசாங்கத்தின் சார்பில் வேண்டுமானால் ஒப்புக்கொள்ளாமல் இருக்கலாம். ஆனால் மனமார ஒப்புக் கொண்டுதான் ஆகவேண்டும். முன்பெல்லாம் 4, 5 இடங்களில்தான் கள்ளுக் கடைகள் இருக்கும். இப்பொழுது பார்த்தால் வீடெல்லாம், நாடெல்லாம், நகரெல்லாம் கள்ளுக்கடைகள்தான்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இது சட்டத்திற்கு விரோதம். மது விலக்கைத் தோற்கடிப்பதற்குச் செய்கின்ற பிரசாரம். இதில் ஒன்றும் உண்மை இல்லை. ஆனால், இது பிரச்சாரம்.

**திரு. டி. எல். சசிவர்ணத் தேவர் :** நான் சட்டமன்றத்திலிருந்து கொண்டு மதுவிலக்கை எடுத்துவிட வேண்டும் என்று பிரசாரம் செய்யவில்லை. மது விலக்குத் திட்டம் இருக்கவேண்டும் என்று நினைப்பவன் நான். ஆனால், இதை நிர்வாகம் செய்வது சரியான முறையில் இல்லாததினால், இந்தத் திட்டம் நிச்சயமாகத் தோல்வி அடைந்து விட்டது என்றுதான் சொல்ல இஷ்டப்படுகிறேன். முன்பெல்லாம் 5, 6 குறிப்பிட்ட இடங்களில்தான் கள்ளுக் கடைகள் இருந்தன. அதனால் தனிப்பட்ட ஆண்கள் மாத்திரம் அங்கு சென்று கள்ளுக்குடித்து வந்தார்கள். பெண்கள், குழந்தைகள் போவதில்லை. ஆனால், இப்பொழுது வீட்டிற்கு வீடு கள், சாராயம் காய்ச்சப்படுகிறது. அதனால் வீட்டிலுள்ள ஆண்கள், பெண்கள், குழந்தைகள் எல்லோருமே கள் சாப்படுகிறார்கள், வேண்டுமானால், அமைச்சர் அவர்கள் அரசாங்க ரீதியாகத் தோல்வியை ஒப்புக்கொள்ள முடியாது என்ற காரணத்திற்காக மறுத்தால் அதைப்பற்றி ஆட்சேபணை இல்லை. நான் மறுபடியும் வலியுறுத்திக் கூறுவேன், இந்த மதுவிலக்குத் திட்டம் நிச்சயமாகத் தோல்வி அடைந்துவிட்டது.

விவசாய அபிவிருத்திக்கு முக்கியமாக வேண்டியது பாசன அபிவிருத்தி. நீர்பாசனத்தை எவ்வளவு தூரம் அபிவிருத்தி செய்ய முடியுமோ அவ்வளவு தூரம் செய்யவேண்டும். நமது மாநிலம் சம்பந்தப்பட்டமட்டில் எவ்வளவோ தண்ணீர் வீணாகப்போகிறது. தண்ணீர் பூராவும் விவசாய உற்பத்திக்கு உபயோகப் படுத்தப்படுகிறதா என்று பார்த்தால், நிறைய வீணாகப் போகிறது, வீண் இல்லை என்று சொல்ல முடியாது. இதற்கு நல்ல முறையில் பரிகாரம் தேட வேண்டும். நீர்ப்பாசன வசதிகளை அதிகரிப்பதன் மூலம் அதிக நிலப் பரப்பை விவசாயத்திற்குக் கொண்டுவர முடியும். ஏகோபித்து நாடு, ஒருமைப்பாடு வேண்டும் என்றெல்லாம் சொல்லுகிறோம். ஆனால் தண்ணீர் தகராறு என்ற நிலை வருகிறபொழுது, மாநிலத்திற்கு சுயநலம் வந்து விடுகிறது. கேரளா சம்பந்தப்பட்டமட்டில், அங்கு உணவுப் பற்றாக்குறை ஏற்பட்டபொழுது, நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் எவ்வளவு உதவி செய்ய முடியுமோ அவ்வளவு உதவி செய்தார்கள். இங்குள்ள சிரமத்தையும் பாராமல் லட்சக்கணக்கான டன் அரிசியை கேரளாவுக்கு அனுப்பி வைத்தார்கள். அதுபற்றி நான் முதலமைச்சர் அவர்களைப் பாராட்டுகிறேன். கேரளாவில் உள்ள நதிகளின் தண்ணீர் சமுத்திரத்தில் போய் விழுந்து வீணாவதைத் தடுத்து, அந்தத் தண்ணீரை நமது மாநிலத்தில் உபயோகப்படுத்திக் கொள்ளலாம் என்ற நிலை வரும்பொழுது, அதற்கு மகாநாடு நடக்கிறது, கூட்டம் நடக்கிறது, அறிக்கைகள் விடப்படுகின்றன. ஆனால் உருப்படியாக ஒன்றும் செய்யப் படவில்லை. கனம் திரு. வெங்கட்டராமன் அவர்கள் நான்கு திட்டங்கள் பரிசீலனையில் இருக்கிறது என்று சொன்னார்கள். அந்தப் பரிசீலனை எப்பொழுது முடிவடையப்போகிறது ? அவசரமாகச் செய்யவேண்டிய காரியங்களைக் காலதாமதம் இல்லாமல் செய்ய வேண்டும். எவ்வளவு விரைவாக கேரளாவில் சமுத்திரத்தில் போய் விழுந்து வீணாகிற தண்ணீரை தமிழ் மாநிலத்திற்குக் கொண்டுவரமுடியுமோ அந்த அளவுக்கு முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும் என்று நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். கிழக்கு இராமநாதபுரம் சம்பந்தப்பட்டமட்டில், அந்தப் பகுதிக்கு அந்தத் திட்டம் வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



1st March 1966] [திரு. டி. எல். சசிவர்ணத் தேவர்

இரண்டாவதாக, நாடு சம்பந்தப்பட்ட வரையில், நதிகளையெல்லாம் தேசியமயமாக்கவேண்டும். ஒரு சர்க்காரிலிருந்து மற்றொரு சர்க்காரும், மத்திய சர்க்காரிலிருந்து மாநில சர்க்கார்களும் நதியால் பெறக்கூடிய வாய்ப்புகளையும் ஏற்படுத்த வேண்டும். அந்த ஏற்பாடுகள் இருந்தால் நதிகளை நல்ல முறையில் உபயோகிக்க வழி வகைகள் ஏற்பட முடியும்.

நாடு சம்பந்தப்பட்ட வரையில், எல்லா அணைகளையும் நாம் கட்டியாகிவிட்டது, இனி ஒன்றும் பாக்கியில்லை என்று சொல்லக்கூடிய நிலை இருக்கிறது. அதேசமயத்தில், முன்பு ஒரு திட்டம் இருந்தது ; கங்கைத் தண்ணீரை (கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : ஒரு பயங்கரமான திட்டம்,) ஆம், ஒரு பயங்கரமான ஆனால் சாத்தியம் என்று சொல்லப்பட்ட திட்டம் ஒன்று இருந்தது. கங்கைத் தண்ணீரைத் தென்னகத்திற்குக் கொண்டு வருவது பற்றியது. அதற்கான முயற்சிகளையும் சர்க்கார் எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அந்த முயற்சி வெற்றி பெற்றால் இந்த நாட்டில் தண்ணீர் பஞ்சம் இல்லாமல் விளைச்சல் நல்ல முறையில் ஏற்படமுடியும்.

நம் நிதி நிலை அறிக்கையில் நிர்வாகச் சிக்கனம் சம்பந்தமாக சொல்லப்பட்டிருக்கிறது. இன்றைக்கு இருக்கும் நிலைமை என்னவென்றால், எல்லா இலாக்காக்களும் திருவிழாக் கூட்டம் போல்தான் இருக்கிறது. வேலை எதுவும் செய்வதில்லை. சில சந்தர்ப்பங்களிலே கலெக்டர், தாசில்தார் இவர்களுடைய ஆபீஸ்களிலே போனால், நாம் தேடிச் செல்லும் ஆபீஸ் எங்கே இருக்கிறது என்றே கண்டுபிடிக்க முடிவதில்லை. 10 சேர்கள் இருந்த ஆபீஸ் இன்றைக்குக் கட்டுக்கு அடங்காமல் வளர்ந்து விட்டிருக்கிறது. அங்கே உள்ளவர்களைக் கேட்டால், "நீங்கள் தேடிவந்திருக்கும் ஆபீஸ் இருப்பதாகத் தெரியவில்லையே என்கிறார்கள். அதன் பிறகு விசாரித்தால், அந்த ஆபீஸ் இப்பொழுதுதான் இரண்டு நாட்களுக்கு முன்பு ஏற்பட்டது என்று தகவல் கிடைக்கிறது. அப்படி இலாக்காகளில் ஆபீஸர்களும், ஆபீஸுகளும் வளர்ந்துக் கொண்டே போகின்றன. அங்கே போய்க் கேட்டால், சம்பந்தப்பட்ட ஆபீஸர் டூர் போயிருக்கிறார் என்கிறார்கள். இப்படி நிர்வாகத்திலே யதேஷ்டமாக ஆட்களை போட்டுக் கொண்டு போகும் போது சிக்கனம் எங்கே வரும் ? ஏற்கனவே உள்ள ஆட்களை வெளியே அனுப்ப மாட்டோம் என்கிறார்கள். நல்லதுதான், அதேபோல வேலைவாய்ப்புக் கொடுப்பதில் அது பரிசீலனை செய்யப்படும் என்கிறார்கள். இது வேடிக்கையாக இருக்கிறது. எங்கேயிருந்து சிக்கனம் வரும் ? இது ஒரு கேலிக் கூத்தாகத்தான் இருக்கிறது.

சேது சமுத்திரத் திட்டம் பற்றிக் கவர்னர் உரையிலும் குறிப்பிடப் படவில்லை. இந்த பட்ஜட் உரையிலும் குறிப்பிடப் படவில்லை. அங்குள்ள மக்களுக்கு இந்தத் திட்டம் வருமா என்கிற சந்தேகமே எழுந்திருக்கிறது.

அடுத்து, கொள்முதல் சம்பந்தமாக, அமைச்சரவர்கள் முன்பு சொன்னார்கள் **Procurement without tears** என்று. சென்ற வருஷம் நிறைய விளைச்சல் இருந்தது. அப்பொழுது யாரும் இவ்வளவு நெல் கொடுக்கவேண்டும் என்று கேட்கவில்லை. என்னிடமே நிறைய இருந்தது. அப்பொழுது 4, 5 மூட்டைகள் தான் கேட்டார்கள். இப்பொழுது, விளைச்சலே இல்லை. தண்ணீர் இல்லாமல் போய்விட்டது. இப்பொழுது 10 மூட்டையைக் கொடு என்கிறார்கள். விளைச்சல் இல்லை என்பதும் சர்க்காருக்குத் தெரியும். இருந்தும் இப்படிக் கேட்டால் எங்கிருந்து கொடுப்பது,

மதுரை சம்பந்தமாக ஒரே ஒரு வார்த்தை சொல்ல விரும்புகிறேன். அங்கேயுள்ள பலரையும் 9 மூட்டை கொடுக்க வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள், ஆனால் அறுவடை செய்தால் 7 மூட்டைதான் கிடைக்கிறது. தாசில்தாரிடம் அறுவடையை ஆள் அனுப்பிப் பாருங்கள் என்றாலும் யாரும் வருவதில்லை.

வினியோக முறையும் வேடிக்கையாக இருக்கிறது. தாலூகாவிற்குத் தாலூகா கட்டுப்பாடு ; கிராமத்திற்குக் கிராமம் கட்டுப்பாடு, எங்கு பார்த்தாலும் சவுக்கிகள். அமைச்சருக்குச் சொந்தக்காரர்தான், மதுரையில்

இருக்கிறார். 28 மைலில் நெல் வீட்டில் இருக்கிறது. அவருக்கு மதுரையில் அரிசி கிடைக்கவில்லை என்றால், அங்கேயிருந்து நெல் கொண்டு வரமுடிவதில்லை. என்ன நியாயம் ? இது என்ன முறை ? பரிபூரண ரேஷன் என்றாலும் பரவாயில்லை. அதுவும் இல்லை. பாதிக் கிணறு தாண்டிய கதையாக, பல் தான் போகிறது. கொடுக்கும் அரிசியோ ஒரு வாரத்திற்குப் போதவில்லை. வீட்டில் இருக்கும் அரிசியையும் கிராமத்திலிருந்து கொண்டு வரக்கூடாது. முன்பெல்லாம் சைகக்கிளில் கொண்டு வந்து கொண்டிருந்தார்கள். இப்பொழுது அதுவும் முடிவதில்லை. சைக்கிளோடு அரிசியையும் பிடித்துக் கொண்டு போய்விடுகிறார்கள். ஒரு அன்பர் என்னிடம் வந்து முறையிட்டுக் கொண்டார் தான் படும் கஷ்டங்கள் பற்றி. சட்டசபையில் போய்ச் சொல்லுங்கள் என்று கேட்டுக்கொண்டார். எல்லோருக்கும் சொந்த நிலம் இருக்காது. மகள் வீட்டில் நெல் இருந்தால் அதைத் தந்தை கொண்டுவந்து சாப்பிட முடியாது. இது என்ன நியாயம் ? (மணி யடிக்கப்பட்டது).

அவசர காலச் சட்டத்தை எடுத்து விடவேண்டும் என்று வெகு காலமாகக் கேட்டுக்கொண்டு வருகிறோம். தேர்தல் வைத்தால் அவசரகாலச் சட்டம் இருக்கக் கூடாது. அவசரகாலச் சட்டம் இருக்க வேண்டும் என்றால், தேர்தல் வைக்கக் கூடாது. இப்பொழுது நிலைமை எப்படி இருக்கிறது என்றால், ஒருவனை இரண்டு கால்களையும் கட்டிப்போட்டுவிட்டு ஓட்டப் பந்தயம் வைப்பதுபோல இருக்கிறது. கவர்னர் உரைமீது விவாதம் நடந்தபோது சொன்னார்கள், அவசரகாலச் சட்டத்தைக் கூடுமான வரையில் நல்ல முறையிலே கண்காணிப்பதாகச் சொன்னார்கள். அது போதாது. நிச்சயமாக அவசரகாலச் சட்டத்தைச் நீக்கிவிடவேண்டும். அப்பொழுதுதான் தேர்தல் நல்ல முறையிலே நடக்க முடியும்.

அடுத்தபடியாக தேர்தலுக்கு முன்பாக மந்திரிகள் ராஜினாமாச் செய்ய வேண்டும் என்பது எங்களுடைய வெகுநாளையக் கோரிக்கை. மக்களிடம் இவர்களுக்கு நம்பிக்கை இருந்தால், அவர்கள் வோட்டுப் போடுவார்கள் என்கிற நிச்சயம் இருந்தால், இவர்கள் ராஜிநாமாச் செய்ய என் பயப்பட வேண்டும் ? மூன்று மாத காலத்திற்கு முன்பாக என்ன ஒரு வருஷத்திற்கு முன்பாகக் கூட ராஜினாமாச் செய்யலாமே. ஆகவே, மந்திரி சபைத் தேர்த்லுக்கு மூன்று மாதங்களுக்கு முன்பாக ராஜினாமாச் செய்ய வேண்டும்.

சென்ற தேர்தல் சமயத்தில் நடந்த ஒரு சம்பவத்தை மட்டும் குறிப்பிட்டு விட்டு என் வார்த்தையை முடிக்கிறேன். எங்கள் பகுதியில் அமைச்சர் ஒரு ஊருக்கு வந்தார்கள். அவ்வூர் மக்கள் வெகு காலமாக மின்சாரம் தங்கள் ஊருக்கு வரவேண்டுமென்று கேட்டுவந்தார்கள். அமைச்சர் வந்தபோதும் அவர்கள் ஒரு மனுவைக் கொடுத்தார்கள். அமைச்சர் வந்தது தேர்தலுக்கு நாலு நாட்களுக்கு முன்பாக. அமைச்சர் போனவுடனே, அந்த ஊருக்கு எலெக்ட்ரிக் போஸ்டுகள் வந்து இறங்கின. கிராமத்தாருக்குச் சந்தோஷம் தாங்கமுடியவில்லை. தேர்தலுக்கு மறுநாள் ஒரு லாரி வந்து எல்லா எலெக்ட்ரிக் சாமான்களையும் வாரிக் கொண்டு போய்விட்டது. (சிரிப்பு). தேர்தலில் அந்த ஊர் ஓட்டுகள் எங்களுக்கு வர வேண்டியதெல்லாம் அவர்களுக்குப் போய்விட்டது.

**கனம் சபாநாயகர் :** முன்கூட்டியே மக்களுக்கு அதைப் பற்றிச் சொல்லவில்லையா ?

**திரு. டி. எல். சசிவர்ணத் தேவர் :** சொல்ல முடியவில்லை. ஆகவே அமைச்சர்கள் ராஜினாமா செய்துஇருந்தால்தான், மக்களுக்குப் பயம் இல்லாமல், போலிசாருக்குப் பயப்படாமல், அதிகாரிகளுக்குப் பயப்படாமல், வோட்டு. . . . (மணியடிக்கப்பட்டது.

**திரு. மக. தண்டாயுதபாணி :** கனம் சபாநாயகர் அவர்களே, கனம் முதல் அமைச்சர் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிற இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையை ஆதரித்து, வரவேற்று என்னுடைய வார்த்தைகளைச் சொல்ல விரும்புகிறேன். தற்போதுள்ள சிரம நிலையை மனதில் கொண்டு,



அவசியமான நற்பணிகள் அனைத்தும் தடங்கல் இல்லாமல் வெற்றிபெறும் வகையில் இந்த நிதிநிலை அறிக்கையைத் தயாரித்து சமர்ப்பித்திருக்கிறார்கள். புது வரிகள் எதுவும் விதிக்காமல், வருவாய் 188·72 கோடியும், செலவு 188·41 கோடியும் போக, உபரி 31 லட்சம் ரூபாய் இருக்கும் வகையில் கொடுத்திருப்பது உண்மையிலேயே பாராட்டப் படவேண்டிய ஒன்று. இந்த நிதிநிலை அறிக்கையின் தனிச் சிறப்பு, முதலில் இதிலே புது வரி இல்லை. இரண்டாவது, ஓய்வு பெறும் ஆசிரியர்களுக்கு 20 ரூபாய் குறைந்தபட்சம் பென்ஷன் வழங்குவதாக இதிலே அறிவிக்கப்பட்டிருக்கிறது. மூன்றாவதாக, மூன்றாவது வரை படிக்கும் குழந்தைகளுக்கு இலவசப் பாடப் புத்தகம் வழங்குவதாக இதிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. நான்காவது, செலவைச் சிக்கனப்படுத்த வேண்டும் என்ற அடிப்படையிலே பல இலாக்காக்களை எடுத்துவிட நாம் முற்பட்டிருக்கிறோம். ஐந்தாவதாக, தற்போது ஏற்பட்டிருக்கும் இந்த உணவு நெருக்கடியைப் போக்குவதற்காக விவசாயத்திற்கு முதல் இடம் இதிலே கொடுத்திருக்கிறோம். கடந்த காலத்தில், மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட முடிவில் நாம் அதிகமாக 16 லட்சம் டன் உணவு உற்பத்தி செய்ய வேண்டும் என்று திட்டமிட்டிருந்தாலும், நமது உற்பத்தி அளவு 13½ லட்சம் டன் அளவுக்குத்தான் இருந்தது. அதற்குள்ள பல காரணங்களில், இயற்கை பொய்த்து விட்டது ஒரு காரணம். மற்றொரு காரணம், ரசாயன உரம் போதுமான அளவு நமக்குக் கிடைக்கவில்லை. தரமான விதை விவசாயிகளுக்குக் கிடைப்பதற்கு வேண்டிய வழிவகைகளை நாம் செய்ய முற்பட்டிருக்கிறோம்.

தண்ணீர் வசதியைப் பொறுத்த வரையில், தஞ்சை ஜில்லாவை எடுத்துக் கொண்டால், பாசன ஆதாரம் நல்ல முறையில் பெற்றுள்ள ஒரு மாவட்டம் இந்த மாநிலத்திலேயே தஞ்சை மாவட்டம் தான். அதிலே புதிதாகத் திட்டம் அமைப்பதற்கு இல்லை என்று கூறினாலும், பழைய காட்டாறுகளில் வீணாகப் போகும் தண்ணீரைத் தேக்க முடியும். பழைய புதாற்றுப் பாசனத்தின் கடை கோடிப் பகுதிகளுக்குத், தண்ணீர்த் தட்டுப்பாடு இருக்கும் பகுதிகளுக்கு, காட்டாற்றிலே அணை கட்டி, அந்தத் தண்ணீரைத் திருப்பிவிட்டால் அந்தப் பகுதிகளில் தண்ணீர்ப் பற்றாக்குறையைப் போக்க வாய்ப்பாக அமையும்.

கோடையிலே அதிகமாக உற்பத்தி செய்வதற்குக் கிணறு வெட்ட நாம் கடன் வழங்கி வருகிறோம். கிணறுகள் அதிகமாகத் தோண்டப்படுகின்றன. நிச்சயமாகக் கோடையிலே உற்பத்தியை அதிகமாகப் பெருக்க அது வாய்ப்பாக அமையும் என்பதில் ஐயம் இல்லை. குறிப்பாக், கிணற்றைப் பொறுத்த வரையில், நாம் சிந்திக்கும்போது, கோடையிலே சாகுபடி செய்வதற்கும், ஆற்றிலே தண்ணீர் வருவதற்கு முன்பாக விதையைப் பாவுவதற்கும்தான் கிணற்றுத் தண்ணீர் பயனுள்ளதாக அமைய முடியும். அதற்கு மாறாக, சென்ற சட்டசபைக் கூட்டத்தில், சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த கனம் அங்கத்தினர் ஒருவர் தஞ்சை ஜில்லாவிலே கிணறுகளை அதிகமாகத் தோண்டி, அதன் காரணமாகத் தற்போது அமைக்கப்பட்டிருக்கும் பாசன வசதியை மாற்றி, மற்ற மாவட்டங்களுக்குக் கொடுக்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தார். இதை நினைக்கும் போது வியப்பாக இருக்கிறது. கிணற்றிலிருந்து தண்ணீர் எடுத்து குறிப்பிட்ட அளவு தான் நாம் சாகுபடி செய்ய முடியும். ஏறத்தாழ, இந்தச் சென்னை மாநிலத்திலே 65 லட்சம் ஏக்கர் சாகுபடி செய்யப்படுகிற விஸ்தீரணத்திலே நாலில் ஒரு பங்காகிய 16 லட்சம் ஏக்கரில் தஞ்சை ஜில்லாவிலே சாகுபடி செய்து வருகிறோம். இந்த நிலையில் பழைய பாசன முறையை மாற்றுவதற்கு நாம் முயற்சி செய்ய வேண்டும் என்று எண்ணம் கொள்வதே தவறானது என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, உரத் தட்டுபாடு கடந்த மூன்று ஐந்தாண்டுத் திட்டங்கள் முழுவதுமே நம்மை விட்டபாடில்லை. ரசாயன உரம் போதுமான அளவு நமக்குக் கிடைக்கவில்லை. ஆனால், தற்போது மதிப்பிற்குரிய முதல் அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்திருக்கும் இந்த நிதி நிலை அறிக்கையில் இதற்காகப் பிரத்தியேகமாக அமெரிக்காவிடமிருந்து கடன் உதவி பெற்றி

ருப்பதாகவும், மத்திய அரசு அன்னியச் செலாவணி பெற்று, உரத்தை அதிகமாகப் பெற வழிவகை செய்வதாகவும் அதிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. உரத் தட்டுப்பாட்டைப் போக்க நிச்சயமாக நாம் முற்பட வேண்டும். அந்த நிலையை ஏற்படுத்தினால்தான் உற்பத்தியை நாம் அதிகமாகப் பெருக்க முடியும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

தரமான விதைகள் விவசாயிகளுக்குக் கிடைக்க வேண்டும். இதற்காக விதைப் பண்ணைகளை அமைத்து அரசாங்கம் நடத்தி வருகிறது. விதைப் பண்ணைகளைப் பொறுத்தவரை, மாறுபட்ட கருத்து சென்ற இரண்டு தினங்களாக இந்தச் சபையிலே வற்புறுத்தப்பட்டு வருகிறது. குறிப்பாக, விதைப் பண்ணை என்பதை லாப நஷ்ட நோக்கோடு நாம் நடத்தாவிட்டாலும், நல்ல தரமான விதையை உற்பத்தி செய்வதற்காக நடத்துகிறோம் என்பதை நாம் மறக்க முடியாது. அது மட்டும் காரணம் அல்ல அரசாங்கம் நடத்தி வரும் அந்த விதைப் பண்ணை தரமான விதை உற்பத்தி செய்வதோடு, சாகுபடி செய்வதற்கே ஒரு எடுத்துக்காட்டாக அமைய வேண்டும் என்பதை நாம் மனத்திலே கொள்ள வேண்டும். உற்பத்தி செய்வதை மட்டுமே நாம் கவனத்தில் கொண்டு, சீர்கேடான முறைகளை நாம் அதில் மேற்கொண்டால், அதைப் பார்க்கும் விவசாயிகளுக்கு அதிலே சற்று ஐயம் ஏற்படுகிறது. அந்த நிலையைப் போக்க நல்ல தரமான விதை உற்பத்தி செய்வதோடு, விவசாய முறைக்கும் ஒரு எடுத்துக்காட்டாக அது அமைய வேண்டும். இதற்கு அரசாங்கம் ஆவன செய்ய வேண்டும் என்பதையும் இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

உற்பத்தி செய்யப்படுகிற பொருள்கள் நியாயமான விலைக்கு விற்கப்பட வேண்டும். அப்படி நியாயமான விலை, உற்பத்தி செய்பவர்களுக்குக் கிடைத்தால் தான் உற்பத்தியிலேயே ஊக்கமும் ஆக்கமும் அதிகமாக ஏற்படும். அந்த அடிப்படையில் தான் நெல்லுக்கு நாம் விலை நிர்ணயம் செய்து, தற்போது கொள்முதல் செய்து வருகிறோம். தற்போது அரசாங்கத்தாரால் நிர்ணயிக்கப்பட்டிருக்கிற இந்த விலை நியாயமான விலை என்று விவசாயிகள் வரவேற்கின்றனர். இந்த நேரத்திலே அந்த நெல்லைக் கொள்முதல் செய்வதற்கு நாம் மில்காரர்களையும் நெல் வியாபாரிகளையும் ஏஜெண்டுகளாக நியமித்திருக்கிறோம். அவர்கள், அரசாங்கம் நிர்ணயித்திருக்கும் விலைக்கே வாங்கி அரசாங்க கோடௌன்களில் கொடுத்துவிடுகிறார்கள். அந்த இடத்திலேயே அவர்களுக்குப் பணம் கிடைப்பதில் கால தாமதம் ஆகிறது என்ற ஒரு குறை இருந்து வருகிறது. அவர்களுக்குப் பணம் காலதாமதமாகக் கிடைக்கிறது என்பதைக் குறித்து நாம் கவலை கொள்ளத் தேவையில்லை என்றாலும், அவர்களுக்குப் பணம் காலத்திற்குப் பிற்பாடு கிடைக்கும் காரணத்தால், நெல்லை மார்க்கெட்டில் அவர்கள் விரைவாக வாங்குவது இல்லை. வாங்கும் நெல்லுக்கும் உடனே பணம் கொடுப்பதும் இல்லை. இந்த நிலையை நல்ல முறையில் பரிசீலனை செய்து, உடனுக்குடன் பணம் கிடைக்க வேண்டிய வழிவகை காணவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கான வழி முறைகளில் ஈடுபட்டிருக்கும் இந்தச் சமயத்தில், உணவு உற்பத்தியில் ஈடுபட்டிருப்பவர்களின் வரிச் சுமையை நாம் குறைக்க வேண்டும். அப்பொழுதுதான் அவர்கள் அதிலே தீவிரமாக ஈடுபட வழி வகுத்தவர்களாக நாம் ஆக முடியும். குறிப்பாக, கடந்த நான்கு ஆண்டு காலமாக, நிலச் சீர்திருத்தம் வந்த பிறகு, விவசாய வருமான வரியானது பயனற்றதாக ஆகிவிட்டது. அதிலே வருவாய் மிக மிகக் குறைவு. அதற்காகச் செலவும் அதிகமாக ஆகிறது. அதன் செலவையும் வருவாயையும் நாம் ஒப்பிட்டுப் பார்த்தால், மிகச் சொற்பமான அளவுக்குத்தான் சர்க்காருக்குக் கிடைக்கிறது. அதனால் விவசாய வருமான வரி விதிப்பை எடுத்துவிட வேண்டும் என்று பலமுறை இந்தச் சட்ட சபையிலே வற்புறுத்தப்பட்டது. ஆனால், இந்த நிதிநிலை அறிக்கையில் விவசாய வருமான வரியை எடுப்பதற்குப் பதிலாக விவசாய வருமான வரி இலாக்காவை எடுத்துவிட்டார்கள். அந்த வரி அப்படியே இருக்கிறது. இதை மீண்டும் நல்ல



முறையில் பரிசீலனை செய்து, இந்த வரியிலிருந்து விவசாயிகளுக்கு விலக்கு அளிக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு விவசாய வருமான வரியையே எடுத்துவிட வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த ஆண்டு இயற்கை பொய்த்த காரணத்தினால் போதுமான அளவு தண்ணீர் வசதி விவசாயிகளுக்குச் செய்து கொடுக்க முடியவில்லை. குறிப்பாக, சென்னை மாநிலம் பூராவிலுமே இதுபோன்ற நிலை இருந்தாலும், தஞ்சை ஜில்லாவைப் பொறுத்த வரையில் அது பூராவும் பாதித்துள்ளது. குறிப்பாக அங்குள்ள உற்பத்தி நிலையைப் பார்த்த பல அதிகாரிகள் கூட, 60 சதவீதம் தான் உற்பத்தி கிடைத்திருக்கிறது என்று கூறுகிறார்கள். இந்த நிலையிலே நாம் கடந்த ஆண்டு 25 சதவீதம் அதிகமாக வரி விதித்திருக்கிறோம். மதிப்பிற்குரிய முதல் அமைச்சர் அவர்கள், கடந்த 18-ந் தேதி கும்பகோணம் வந்திருந்த நேரத்தில், விவசாயப் பெருமக்கள் பலர், ஏறத்தாழ, 500 பேர்கள் நேரில் அவரைச் சந்தித்து, 50 சதவீதம் இந்த மொத்த வரி விதிப்பிலிருந்து தள்ளுபடி செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். அதை அனுதாபத்துடன் கவனிப்பதாக அவர்கள் வாக்குறுதி கொடுத்தார். 50 சதவீதம் தள்ளிக் கொடுக்காவிட்டாலும் கூட, கடந்த ஆண்டு நாம் விதித்த 25 சதவீத வரியையாவது தள்ளுபடி செய்ய வேண்டும். இந்த நிலையை நாம் அவசியம் செய்வதற்கு வழிவகை செய்ய வேண்டும். ஏனென்றால், உற்பத்தி பாதிக்கப்பட்ட இந்த நிலையில், புதிதாக வரி விதித்து வசூல் செய்வது முறணாக இருக்கும் என்பதையும் மனத்திலே கொண்டு, 25 சதவீத வரியைத் தள்ளிவிட வேண்டும். அதுவும் முடியாது என்றால், இந்த ஆண்டு வசூல் செய்வதையாவது நிறுத்தி வைக்க வேண்டும். உணவு உற்பத்தி பாதித்திருக்கும் இந்த நேரத்தில் இதை அரசாங்கம் நல்ல முறையில் அனுதாபத்தோடு கவனித்து இதற்கு வழிவகை காண வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நிலத்திற்கு வரி விதிப்பதை நாம் ஒழுங்குபடுத்த வேண்டும் என்று பல முறையில் இந்தச் சபையிலே வற்புறுத்தி இருக்கிறேன். நிர்ணயமான ஒரு அளவிலே இது விதிக்கப்பட்டிருக்கிறதா என்றால், நிச்சயமாக இல்லை. குறிப்பாக ஒரு பகுதியை நாம் எடுத்துக் கொண்டால், தஞ்சையிலே; புதாறு பாயும் பகுதியிலே ஒரு போகம் சாகுபடி செய்தால் ஒரு ஏக்கருக்கு இத்தனை ரூபாய், இரண்டு போகம் செய்தால் ஒரு ஏக்கருக்கு இத்தனை ரூபாய் என்று நாம் நிர்ணயிக்க வேண்டும். தற்போது அமைக்கப்பட்டிருக்கும் நிலை என்ன என்பதை சாதாரண விவசாயி தெரிந்துகொள்ள முடியவில்லை. கணக்கப்பிள்ளையைக் கேட்டாலும் புரிந்துக்கொள்ளக்கூடிய நிலை இல்லை. குறிப்பாக, நில வரி என்று தனி வரி, தண்ணீர் வரி என்று அதற்குத் தனி வரி. ஸெஸ், ஸர்ஜார்ஜ், அடிஷனல் அஸெஸ்மெண்ட் இவையெல்லாம் தனித் தனி. [illegible]வை தவிர, புதிதாக நிர்ணயிக்கப்பட்டிருக்கிற 25 சதவீத வரி ஒரு [illegible] இனம். இதுபோன்ற ஏறத்தாழ ஆறு வகைப்பட்ட வரிகளை நிர்ணயித்து, விவசாயி ஏக்கர் ஒன்றுக்கு இத்தனை ரூபாய் கட்ட வேண்டும் என்று கூறுகிறார்கள். கணக்குப்பிள்ளையிடத்தில் கேட்டு ஒரு ஏக்கராவுக்கு எத்தனை வரி என்பதை ஒரு விவசாயினால் புரிந்துகொள்ள 10-00 a.m.
முடியாத நிலைதான் இருக்கிறது. ஆகவே, எல்லாவற்றையும் ஒருமுகமாகச் சேர்த்து ஒரு ஏக்கராவுக்கு இத்தனை வரி தான் கட்ட வேண்டும் என்பதை நிர்ணயித்துவிட வேண்டும், இப்படிச் செய்வது நாம் விவசாயிகளுக்குச் செய்கிற பேருதவியாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, இலாக்காக்களில் சிக்கன முறையை மேற்கொள்ள முற்பட்டிருக்கிறோம். அந்த அடிப்படையில் விவசாய வருமான வரி இலாகா, வெயிட்ஸ் அண்டு மெஷர்ஸ் இலாகா இந்த இலாக்காக்களை எடுத்துவிட இருக்கிறோம். இதுபோல இன்னும் பஞ்சாயத்து மன்றங்களில் பல தேவையில்லாத அதிகாரிகள் இருக்கிறார்கள். அவர்களுடைய வேலை இன்னதென்றே தெரியாத நிலை இருக்கின்றது. குறிப்பாகக் கூறப் போனால் பஞ்சாயத்துக்களில் கம்போஸ்ட் உரங்களைச் சேகரிக்கிற கிராம சேவக்குகள் இருக்கிறார்கள். மேலும் கம்போஸ்ட் இன்ஸ்பெக்டர் என்பதாக ஒரு

அதிகாரியையும் போட்டு வைத்திருக்கிறோம். அவர் ஒரு வேலையும் செய்வது கிடையாது. கிராம சேவக்குகளிடையே உத்யோக உயர்வு கொடுப்பதற்காக அப்படி ஒரு அதிகாரி போட்டிருக்கிறோம். இது போன்று உத்தியோகங்கள் அவசியம்தானா என்பதை நாம் சிந்திக்க வேண்டும். இன்னும், பஞ்சாயத்து யூனியன்களில் இண்டஸ்ட்ரியல் டெவலெப்மெண்டுகளுக்காக ஒரு அதிகாரியைப் போட்டிருக்கிறோம். இப்படி இருக்கக்கூடிய தேவையற்ற உத்தியோகங்களை எல்லாம் எடுத்து சீரான முறையில் சிக்கனத்தைக் கையாளவேண்டும் என்பதாகக் கேட்டுக் கொண்டு எனக்குப் பேசச் சந்தர்ப்பம் அளித்த தலைவருக்கு நன்றி தெரிவித்துக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

*திரு. து. ப. அழகமுத்து: கனம் தலைவர் அவர்களே, நாட்டில் ஏற்பட்டுள்ள உணவு நெருக்கடியைப்பற்றியும், பொருளாதார நெருக்கடியைப்பற்றியும் ஜெய்ப்பூரில் நடந்த விவாதத்தில் கலந்துகொண்டு வந்த பிற்பாடு நமது முதல் அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டு பட்ஜெட்டை நமக்குச் சமர்ப்பித்திருக்கிறார்கள். இந்த பட்ஜெட் 3 லட்சம் மிச்சம் உள்ள பட்ஜெட்டாக அமைக்கப்பட்டிருக்கிறது. இந்த மிச்சம் இனி எடுக்கப்பட இருக்கிற சிக்கன நடவடிக்கைகள் மூலம் அதிகப்படலாம் என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். சென்ற ஆண்டு பட்ஜெட் பற்றுக்குறை பட்ஜெட்டாக சமர்ப்பிக்கப்பட்டது. கிட்டத்தட்ட 7 கோடி என்று நினைக்கிறேன், பற்றுக்குறையாக சமர்ப்பிக்கப்பட்டது. அதற்கு முன்பும் 1964–65-ல் பற்றுக்குறை பட்ஜெட் தான் சமர்ப்பித்தார்கள். அந்த பற்றுக்குறை பட்ஜெட் இப்போது உபரி பட்ஜெட்டாக மாறியிருக்கிறது. 4 கோடி பற்றுக்குறையாக இருந்தது இன்றைக்கு 2 கோடி மிச்சம் வரக்கூடிய பட்ஜெட்டாக மாறியிருக்கிறது. எதிர்பாராத வகையில் சிலபல இனங்களில் கிடைத்த உபரித்தொகையின் காரணமாக இந்த மிச்சம் ஏற்பட்டிருப்பதாகக் கூறியிருக்கிறார்கள். 1965–66-ம் வருஷத்திய பட்ஜெட்டில் அதிகமான தொகை உபரியாக இருப்பின் ஆச்சரியப்படுவதற்கில்லை.

நம்முடைய மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் 291 கோடியாக உருவாக்கப்பட்டிருந்தது. ஆனால் அத்திட்டத்தை 341 கோடியில் முடித்திருக்கிறார்கள். போட்ட திட்டத்திற்கு மேல் 50 கோடி அதிகமாவே செலவழித்திருக்கிறார்கள். இந்த உபரிச் செலவை நம்முடைய நிதி ஆதாரத்தில் இருந்தே, மற்றவற்றில் சிக்கனத்தைக் கைக்கொண்டு ஈடுகட்டியிருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இப்படி பொதுவாக வரவு செலவுத் திட்டத்தைச் சமர்ப்பிக்கும்போது, வருமானத்தைக் குறைத்து மதிப்பிடுவதும் கடைசியில் உபரியாகக் காட்டுவதுமான முறையைக் கைக்கொண்டு வருகிறார்கள். இதை நமது முதல் அமைச்சர் செப்பிடு வித்தை போலக் கையாண்டு வருகிறார்கள் என்பதைத் தவிர வேறு விளக்கம் கூறத் தேவையில்லை என்று கருதுகிறேன்.

அவர்கள் சிக்கன நடவடிக்கை எடுத்திருப்பதாகக் கூறியிருக்கிறார்கள். ஒரு பக்கம் சிக்கன நடவடிக்கை எடுத்திருப்பதுபோலக் காட்டுகிறார்களே தவிர மற்றொரு பக்கம் டைரெக்டர் ஆப் ரூரல் டெவலெப்மெண்டு, ஸ்டேட் விஜிலன்ஸ் கமிஷன், டைரெக்டர் ஆப் விஜிலன்ஸ் ஆண்டு ஆண்டிகரெப்ஷன், பப்ளிக் (டமில் டெவலப்மெண்ட்டு) டிரான்ஸ்லேஷன் டிபார்ட்மெண்டு, என்பதாக இப்படி புதுப்புது இலாகாக்களை ஏற்படுத்திக்கொண்டு போகிறார்கள். முன்பு உணவு விவசாய இலாகா ஒன்றாக இருந்தது. இன்று உணவு இலாகா வேறு, விவசாய இலாகா வேறு என்பதாகப் பிரித்திருக்கிறார்கள். அதுமட்டும் அல்லாமல் டெல்லியில் இருக்கிற சென்னை ஹவுசுக்கு ஒரு இலாகா ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இப்படி பல இலாகாக்கள் தோற்றுவிக்கப்படுகின்றன. நிர்வாகச் செலவு எப்படி சிக்கனமாகும்? குறிப்பாக 1964–65-ம் வருஷத்திய நிர்வாகச் செலவை விட 1965–66-ம் வருஷத்தில் 3½ கோடிக்கு மேல் அதிகமாகத்தான் இருக்கிறது. நான் டி.ஏ.வை விலக்கிவிட்டுத்தான் சம்பளத்தை மட்டும் குறிப்பிட்டுச் சொல்கிறேன். 1966–67-ல் இந்த நிர்வாகச் செலவு 5 கோடி வரும் என்று புள்ளிவிவரம் காட்டுகிறது. நிர்வாகச் சிக்கனம் எங்கே ஏற்படுத்தப்பட்டிருக்கிறது]?



இங்கே இரண்டு இலாகாவுக்கு, இரண்டு மந்திரிகள் இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் இலாகாவுக்குரிய மானியத்தொகையை அவர்கள் இலாகா பேரில் பெறுவதற்குரிய நிலைமை இல்லை. உணவு மந்திரி இருக்கிறார், உணவு இலாகா இருக்கிறது. அந்த இலாகா பேரில் தொகையைக் கேட்டுப் பெற முடியவில்லை. ஹெட் ஆப் ஸ்டேட் என்ற தலைப்பில் பெறவேண்டி இருக்கிறது. இன்பர்மேஷன் அண்டு பப்ளிசிட்டிக்கு ஒரு அமைச்சர் இருக்கிறார். அந்த இலாகாவுக்குரிய மானியத்தை அவரால் இலாகாவின் பேரால் கேட்டுப் பெற முடியவில்லை. "ஹெட் ஆப் ஸ்டேட்" என்று வருகிற தலைப்பிலேயே பெற வேண்டிய விசித்திரமான நிலைமை இருக்கிறது. இந்த நிலையில் அடுத்த ஆண்டில் ஒரு கோடி சிக்கனப்படுத்தப்போவதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். நிர்வாகச் செலவை 5 கோடிக்கு சென்ற ஆண்டு உயர்த்திவிட்டு இனிக் குறைப்பது எந்த அளவுக்கு வெற்றி பெறும் என்பதை பொறுத்திருந்துதான் தெரிந்து கொள்ள வேண்டும்.

ஆண்டுக்கு ஆண்டு வரி அதிகமாகிக்கொண்டே போகிறது என்பதை நண்பர் மாதவன் அவர்கள் குறிப்பிட்டார்கள். 1947–48-ல் 58 கோடியாக இருந்தது. 1965–66-ல் 169 கோடிக்கு அதிகமாகி இருக்கிறது. 1966–67-ல் இது இன்னும் அதிகமாகக் கூடும். இதைக் கணக்குப் போட்டுப் பார்த்தால் மூன்றே முக்கால் பங்கு வரி அதிகமாகியிருக்கிறது, விலைவாசி 7 பங்கு அதிகமாகியிருக்கிறது. வரிச்சுமையைக் குறைக்கக்கூடாதா என்று கேட்டதற்கு பணப் புழக்கம் நாட்டில் அதிகமாக இருக்கிறது. ஆகவே வரி போடுவது தவறு இல்லை என்று தொழில் அமைச்சர் கூறினார்கள். வரி போடுவதற்குக் காரணம் வருமானம் உயர்ந்திருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். முதல் இரண்டு ஐந்தாண்டுத் திட்டத்தில் 42 சத விகிதம் தேசீய வருமானம் உயர்ந்திருக்கிறது. மூன்றாவது திட்டத்தில் 30 சத விகிதம் உயர்த்த வேண்டும் என்று நினைத்தோம், 16 சத விகிதம் தான் உயர்ந்திருக்கிறது என்பதை உள்துறை அமைச்சர் நந்தா அவர்களே ஜெய்பூரில் குறிப்பிட்டிருக்கிறார்கள், ஆக, வருமானம் 58 சத விகிதத்துக்கு மேல் உயரவில்லை. ஆனால் வரி மூன்றே முக்கால் பங்கு உயர்ந்திருக்கிறது. வாழ்க்கைச் செலவு ஏழு மடங்குக்கு உயர்ந்திருக்கிறது. இந்த ஏற்றத் தாழ்வில் இன்று நம்முடைய நாட்டுப் பொருளாதாரம் தடுமாறிக்கொண்டிருக்கிறது என்பதை வருத்தத்துடன், தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

வரி இனங்களைக் குறைத்து லாபம் வருகின்ற தொழில்களைச் செய்ய வேண்டுமென்று நாங்கள் குறிப்பிட்டு வருகிறோம். அதிக லாபம் தருகின்ற பஸ் தொழிலை சர்க்காரே மேற்கொள்ளலாம் என்று சொல்கிறபோது அமைச்சர் அவர்கள் மிகச் சாதாரணமாக ஒரு விஷயத்தைச் சொல்லி மழுப்பி வருகிறார்கள்: தொழில் மூலமாகக் கிடைக்கிற வருமான வரியைப்போலத்தான் என்கிறார்கள். வாதத்திற்கு ஏற்றுக்கொள்வோம். சர்க்கார் தொழில் நடத்தி அதன் மூலம் கிடைக்கும் லாபம் வரி என்றால் அதே தனியார் நடத்துகின்றபோது லாபமாகத்தான் கருதப்படுகிறது. தனியார் நடத்தி லாபம் சம்பாதிக்கும் போது அதற்கு மத்திய சர்க்கார் வருமான வரி வாங்குகிறது. அந்த வருமான வரியில் நாம் பங்கு வாங்குகின்றோம். அதுவும் மறைக்கப்பட்ட வருமானம் போக மீதமுள்ள பணத்திற்குத்தான் வரியைத் தனியார்கள் கொடுக்கிறார்கள். பின்னால் பதுக்கிய பணத்தை நாம் தேடிக்கொண்டிருக்கிறோம். அந்தத் தொழிலை நாமே நடத்தினால் வருமானவரியில் பங்கு கேட்கவும் பதுக்கிய பணத்தை தேடவும் வேண்டியதில்லை. இன்றைய தினம் நம்முடைய பட்ஜெட்டிலே வரியல்லாத வருமானம் 9 கோடி ரூபாய் தான் இருக்கிறது. எட்டுக் கோடி ரூபாய் மோட்டார் வருமானத்திலும், ஒரு கோடி ரூபாய் தொழில்கள் மூலமும் கிடைப்பதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்த வருமானம் போதாது இதை இன்னும் அதிகப்படுத்தவேண்டும். பட்ஜெட்டிலே வரி இல்லை என்று குறிப்பிடுவது மட்டும் சாதனை ஆகிவிடாது. வரியைக் குறைத்திருக்கிறோம் என்று கூறுவதுதான் சாதனையாகும். அந்த முறையில் மத்திய சர்க்கார் கூட சில சமயங்களில் அப்படிச் செய்திருக்கிறது. ஆனால் நம்முடைய மாநில சர்க்கார்

வரியைக் குறைத்திருக்கிறோம் என்று சொல்லக்கூடிய சந்தர்ப்பத்தை எடுத்துக்கொள்ளவே இல்லை, என்னவோ அந்தக் காரியத்தை அவர்கள் செய்யவே இல்லை. தற்போதைய வரிக் கொள்கையின் மூலமாக விலைவாசி உயர்ந்துகொண்டிருக்கிறது. அதன் காரணத்தால் சர்க்கார் ஊழியர்கள் பஞ்சப்படி வேண்டுமென்று கேட்கிறார்கள். பஞ்சப்படி அதிகமாக வேண்டுமென்று கேட்கின்ற நேரத்தில் மத்திய சர்க்கார் தங்கள் ஊழியர்களுக்குப் பஞ்சப்படி உயர்வு கொடுக்கிறது; ஆனால், மாநில சர்க்கார் வருமானம் இல்லாத காரணத்தாலே தங்கள் ஊழியர்களுக்கு பஞ்சப்படியை உயர்த்திக்கொடுப்பதற்கு முன் வரவில்லை. முதலமைச்சர் அவர்கள் வாங்குவோர் கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாக, விலைவாசியைக் கட்டுப்படுத்தி அவர்களுக்கு பொருட்கள் கொடுக்கலாம் என்ற கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். அவர்கள் இந்தக் கருத்தை என் மத்திய சர்க்காரிடத்திலே கூறியிருக்கக்கூடாது. மதுவிலக்கை மத்திய சர்க்கார் கைவிடாது என்று நேற்றைய தினம் முதலமைச்சர் அவர்கள் உறுதி கொடுத்தார்கள். அதேமாதிரி மாநில சர்க்கார், சர்க்கார் ஊழியர்களுக்கு அதிகமாக பஞ்சப்படி கொடுக்கக்கூடிய சங்கடம் ஏற்படும், ஆகையால் நீங்கள் கொடுக்கக் கூடாது என்று ஏன் சொல்லவில்லை. மத்திய சர்க்கார் தனது ஊழியர்களுக்கு டியர்னஸ் அலவன்ஸ் கொடுத்த பிறகு நம்முடைய சர்க்கார் இன்னும் கொடுக்காமல் இருக்கிறார்கள். கொடுத்தாலும் 6 மாதங்கள் கழித்துதான் கொடுக்கிறார்கள். அதற்குள் ஊழியர்கள் எவ்வளவு கஷ்டப்படுவார்கள்? அவர்கள் அந்தக் கஷ்டத்தைத் தாங்கிக்கொள்ளக் கூடிய அளவிலே இருக்கிறார்களா என்பதையும் ஆலோசித்துப் பார்க்க வேண்டும். ஜெனரல் பிராவிடண்ட் பண்ட் 6 சதவீதம் பிடிக்கப்படுகிறது. இதைத் தவிர யுத்தத்தின் காரணமாக ஜி. பி. எப் 5 சத விகிதம் அதிகமாகப் பிடிக்கிறார்கள். அந்த 5 சத விகிதத்தைப் பிடிப்பதை இப்பொழுது மத்திய சர்க்கார் நிறுத்தி விட்டது. ஆனால், மாநில சர்க்கார் விடாமல் இன்னும் பிடித்துக்கொண்டு இருக்கிறார்கள். சர்க்கார் பிடிக்கின்ற பணத்திற்கு ஒழுங்காக வட்டி கொடுக்கிறார்களா என்றால் அதுவும் இல்லை. சர்க்கார் ஊழியர்களிடமிருந்து பெற்றுக்கொள்கிற பணத்திற்கு வட்டி 4½ சத விகிதம் தான் கொடுக்கிறார்கள். ஆனால் அதே சமயத்திலே ஊழியர்களுக்குக் சர்க்கார் கொடுக்கிற கடன் பணத்திற்கு 6 சத விகிதம் வட்டி வாங்குகிறார்கள். இது மார்வாடியை விட மிகவும் மோசமாக அல்லவா இருக்கிறது? இப்பொழுது அவர்கள் எல்லோரும் பணத்திற்காகக் கஷ்டப்படுகிறபொழுது அவர்களுக்குக் கிராக்கிப்படியை உயர்த்திக்கொடுப்பதில் என்ன தவறு இருக்கிறது? அதேபோல் இன்னும் வீட்டு வாடகை அலவன்ஸ் உயர்த்திக் கொடுக்கப்படவில்லை. நாற்றம் அடிக்கிறது சென்னை நகர சபை என்று தெருத்தெருவாகப் பேசுகிறார்களே அந்த நகரசபை கூட அவர்களுடைய ஊழியர்களுக்கு 5 ரூபாய் உயர்த்திக் கொடுத்திருக்கிறது. ஆனால் சென்னை சர்க்கார் கொடுக்கவில்லை. சென்னை நகரத்தை "ஏ" நகரமாக்க வேண்டுமென்று நம்முடைய சர்க்கார் மத்திய சர்க்காரைக் கேட்டுக்கொண்டது. "ஏ" நகரமாக சென்னை நகரம் ஆக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இதுவரை சிட்டி காம்பன்ஸேட்டரி அலவன்ஸ் கொடுக்கப்படவில்லை. இதற்கு முதலமைச்சர் அவர்கள் சொல்லுகின்ற காரணம் விசித்திரமாக இருக்கிறது. மத்திய சர்க்கார் ஊழியர்கள் ஒரு ஊரிலே இருந்து மற்ற ஊர்களுக்கு மாற்றக்கூடிய நிலையிலே இருக்கின்றவர்கள். ஆகவே மத்திய சர்க்கார் கொடுக்கிறது நம்முடைய மாநில சர்க்கார் ஊழியர்களுக்கு அதைபோன்று கொடுக்கவேண்டுமென்ற அவசியமில்லை என்று கூறினார்கள். நம்முடைய சர்க்கார் ஊழியர்களும் திருச்சியிலே இருந்து சென்னைக்கும், சென்னையிலே இருந்து கோயம்புத்தூருக்கும் மாற்றப்படுவது இல்லையா? ஆகவே, முதலமைச்சர் கூறுவது விசித்திரமான வாதமாக இருக்கிறது. நாமே சென்னை நகரத்தை "ஏ" நகரமாக ஆக்கிவிட்டு, காம்பென்ஸேட்டரி அலவன்ஸ் இன்னும் கொடுக்காமல் இருப்பது எவ்வளவு தூரம் பொருத்தமாக இருக்குமென்பதைப் பரிசீலித்துப் பார்க்க வேண்டும். வாங்குவோர் கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாக உணவு தானியங்களை வழங்கப்போவதாகக் கூறியிருக்கிறார்கள். எந்த அளவுக்கு இப்பொழுது வழங்கியிருக்கிறார்கள் என்பதைப் பார்க்கும்போது, இனிமேல் நல்ல முறையில் வழங்குவார்கள் என்று எப்படிச் சொல்ல முடியும். சென்னையின் தேவைக்காக 1965 ஜனவரி முதல் ஜூன் வரையில் திருவாரூர், ஆடுதுறை, மாயவரம், பூதலூர், சிதம்பரம் போன்ற இடங்களில் நெல் கொள்முதல் செய்யப்பட்டு ஆவடிக்குக் கொண்டுபோய் கோடவுன்களில் கொண்டு வைக்கப்பட்டது. டிசம்பர் மாதத்தில் சென்னையில் அரிசி நெருக்கடி ஏற்பட்டது. அப்பொழுது திருச்சியிலே இருந்து அரிசியை ஏற்றிக்கொண்டு வந்தார்கள். அங்கேயிருந்து எடுத்துவரப்பட்ட அரிசிக்குப் பதிலாக இங்கேயிருந்து நெல்லை ஏற்றி அனுப்பினார்கள். அரிசி கொண்டுவருவதற்காக சென்னையிலிருந்து திருச்சி வந்த வேகன் காலியாக வந்திருக்கிறது. அதே போல் சென்னையிலிருந்து நெல் கொண்டு போன வேகன் திருச்சியிலிருந்து காலியாக வந்திருக்கிறது. அப்படியிருந்தும் அரிசி ஒழுங்காகக் கிடைக்கிறதா என்று பார்த்தால் கிடைப்பது இல்லை. சென்னையிலே ஹோட்டலில் சாப்பிடுகிறவர்கள் எல்லாம் கஷ்டப்படுகிறார்கள். ஒரே கல்லும் மண்ணும் ஆகத்தான் அரிசி இருக்கிறது. இதைப்பற்றி நான் உணவுத் துறை அமைச்சர் அவர்களிடம் தெரிவித்த பொழுது, அவர்கள் எந்த ஹோட்டல் என்று சொல்லுங்கள். லைசென்ஸைக் கான்ஸல் செய்துவிடுகிறேன் என்று சொன்னார்கள். லைசென்ஸைக் கான்ஸல் செய்துவிடுவது சுலபம்தான். ஆனால், ஹோட்டலை நம்பி வாழ்பவர்கள் கதி என்ன ஆகும் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஆகவே, ஒழுங்காக உணவு விநியோகம் நடைபெறும் என்பதற்கு என்ன உறுதி இருக்கிறது?



கடைசியாக, சமுதாயத் திட்டங்களின் பேரில் ஏழைப் பிள்ளைகளுக்குப் புத்தகங்கள் வழங்குவதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். பிள்ளைகளுக்கு, இலவச உடை, மதிய உணவு, ஹரிஜனங்களுக்கு வீட்டு மனை, முதியோர் பென்ஷன் ஆகியவை எல்லாம் கொடுத்திருக்கிறார்கள். அவற்றின் நிர்வாகம் எப்படி மோசமாக இருக்கிறது என்பதைப்பற்றிப் பல அங்கத்தினர்கள் பேசும்பொழுது தெரிவித்தார்கள். அதேபோல் தான் பத்தோடு பதினொன்றாக இந்தத் திட்டமும் ஆகப்போகிறது. பொதுவாக இந்தப் பட்ஜெட்டைப்பற்றிச் சொன்னால், இது எலக்ஷன் பிரச்சாரத்திற்காகப் போடப்பட்டதே தவிர, மக்களுடைய நன்மையைக் கருதிப் போடப்பட்டதல்ல என்பதைக் கூறிக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

**கனம் திரு. பூ. கக்கன் :** கனம் அங்கத்தினர் பேசியதும் எலக்ஷன் பிரச்சாரமாகத்தான் இருக்கிறதே ஒழிய வேறு ஒன்றும் இல்லை.

**திரு. கே. எஸ். சுப்பிரமணிய கவுண்டர் :** கனம் சபாநாயகர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள இந்த பட்ஜெட்டை ஆதரித்து சில வார்த்தைகள் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்த பட்ஜெட்டை நான் வரவேற்பது, வரிகள் போடவில்லை என்பதற்காக மாத்திரமல்லாமல், இந்த நெருக்கடியான காலத்தில் கூட இந்த பட்ஜெட்டிலே சில சலுகைகள் கொடுத்திருக்கிறார்கள் என்பதைப் பார்க்கும்போது உண்மையிலேயே இது வரவேற்கத்தக்க பட்ஜெட் என்று நிச்சயமாகச் சொல்ல முடியும். இந்த ஆண்டு பட்ஜெட்டிலே பல புதிய அம்சங்களைப் பற்றிச் சொல்லும்பொழுது, குறிப்பாக விவசாய அபிவிருத்திக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்திருக்கிறார்கள் என்பதைப் பார்க்கும்பொழுது உண்மையிலேயே தமிழ்நாடு வளர்ச்சி அடையும் என்பதிலும், இருக்கக் கூடிய கஷ்டங்களும் விரைவிலே போகும் என்பதிலும் ஐயமில்லை, தர்மபுரி ஜில்லாவிலே ஹோகனக்கல் ஹைட்ரோ எலக்டிரிக் ப்ராஜக்டை சீக்கிரமாக நிறைவேற்றுவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று நான் இந்த அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன். அதே சமயத்தில் மேட்டூருக்கும், பவானிக்கும் இடையே நெடுங்குளம் என்ற இடத்திலே காவேரியின் குறுக்கே ஒரு பாலம் கட்ட வேண்டும். அதற்காக ஆகும் செலவை முழுவதும் மத்திய அரசாங்கம் கொடுத்திருந்தும், அந்தப் பணம் வேறு இடத்திலே பாலம் கட்டுவதற்காக உபயோகப்படுத்தப்பட்டு இருக்கிறது. அப்படி உபயோகப்படுத்தவேண்டாமென்று நான் சொல்லவில்லை. அதோடு இந்த இடத்திலே மிக மிக அவசியமாக இந்தப் பாலம் தேவைப்படுகிறது. மேட்டூரிலிருந்து பூலாம்பட்டி வழியாகக் காவேரியைக் கடந்து கோவை ஜில்லாவிற்கு பவானித் தாலூகாவிற்குப் போய்ச் சேருவதற்கு

[திரு. கே. எஸ். சுப்பிரமணிய கவுண்டர்] [1st March 1966

இந்தப் பாலம் உதவியாக இருக்கும். அது மிகவும் அவசியமான, முக்கியத்துவம் வாய்ந்த பாலமாகும். அதை உடனடியாக எடுத்து நிறைவேற்றுவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தர்மபுரி ஜில்லாவிலே ஒரு கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவுவதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் முடிந்து மத்திய அரசாங்கத்தின் இறுதி அனுமதிக்காகக் காத்திருப்பதாகத் தெரிகிறது. அந்த அனுமதி வந்தவுடனே—சீக்கிரமாக ஆலையை நிறுவுவதற்கான ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கூட்டுறவு சர்க்கரை ஆலைகள், கூட்டுறவு நூற்பாலைகளுக்கு எல்லாம் ரிசர்வ் பாங்கு கிரெடிட் ஸ்கீமினால் மிகவும் கஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. இந்த நிலையை எப்படிப் போக்குவது என்பதைப் பற்றி அரசாங்கம் சீக்கிரத்தில் ஆராய்ந்து ஒரு முடிவு காணவேண்டும்.

ரசாயன உரம் போதிய அளவு இல்லாத காரணத்தால் இந்த ஆண்டு விவசாயிகளுக்கு எந்த அளவு ரசாயன உரம் தேவையோ அந்த அளவு கிடைக்காத நிலையில் இருக்கிறார்கள். ரசாயன உரம் போதிய அளவு இல்லாவிட்டால் நாம் உணவு உற்பத்தியில் போதிய அளவு வளர்ச்சியை எதிர்பார்க்க முடியாது. அதன் காரணமாக உணவு உற்பத்தி குறையுமானால், உணவுப் பொருளை வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்ய வேண்டிய நிலை ஏற்படும். அந்நியச் செலாவணிப் பற்றாக்குறை இருப்பினும் அதைப் பொருட்படுத்தாது ரசாயன உரத்தை அதிக அளவு இறக்குமதி செய்ய ஏற்பாடு செய்யவேண்டும். நம்முடைய தமிழ்நாட்டில் பெரிய அளவில் பெர்டிலைசர் பாக்டரி வர இருக்கிறது என்பதை பட்ஜெட்டில் காண உண்மையிலேயே மகிழ்ச்சியடைகிறேன்.

சேலம் ஜில்லாவுக்கு ஒரு மெடிகல் காலேஜ் அவசியம் தேவை என்று பல சமயங்களில் வற்புறுத்திச் சொல்லப்பட்டிருக்கிறது. கனம் சுகாதார மந்திரி அவர்களும் சேலத்திற்கு ஒரு மெடிகல் காலேஜ் அவசியம் என்பதை நன்றாக உணர்ந்திருக்கிறார்கள். அடுத்தாற்போல் வரக்கூடிய மெடிகல் காலேஜை சேலம் ஜில்லாவில் வைப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். அதற்காகப் பொது மக்கள் பணம் என்று தனியாக இல்லாவிட்டாலும், ரயில்வே ரிசர்வ் பண்டிலுள்ள 25 லட்சம் ரூபாயை அதற்காக எடுத்துக்கொள்ளலாம். அந்தப் பணத்தை எடுத்துக்கொள்ளலாம் என்ற அளவில் சேலம் ஜில்லா டிஸ்டிரிக்ட் டெவலப்மெண்ட் கவுன்சிலிலும், தர்மபுரி டிஸ்டிரிக்ட் டெவலப்மெண்ட் கவுன்சிலிலும் ஏகமனதாகத் தீர்மானித்திருக்கிறார்கள். அதைப் பயன்படுத்தி உடனடியாக சேலத்தில் ஒரு மெடிகல் காலேஜை ஏற்படுத்தவேண்டும். அதைத் தர்மபுரியில் ஏற்படுத்தினாலும் சரி, சேலத்தில் ஏற்படுத்தினாலும் சரி, எங்களுக்கு ஆட்சேபணை இல்லை. எங்களுக்குள் பூர்ண ஒற்றுமை இருக்கிறது. இதிலே அபிப்பிராயப் பேதம் ஒன்றுமில்லை. ஆகவே, எங்காவது ஒரு இடத்தில் மெடிகல் காலேஜை வைக்க ஏற்பாடு செய்யவேண்டும்.

சேலம் ஜில்லாவில் இந்த முறை மழை மிகவும் குறைவாக இருந்தது என்பதை ரெவின்யூ அமைச்சர் அவர்கள் சேலத்திற்கு வந்தபோதே நன்றாகப் பார்த்து வந்திருக்கிறார்கள். உணவு உற்பத்தி பெருமளவு பாதிக்கப்பட்டிருக்கிறது. சேலம் ஜில்லாவிலும், மற்ற ஜில்லாக்களில்—எப்படி டிஃபன்ஸ் ஃபண்டுக்கும், சிறு சேமிப்புத் திட்டத்திற்கும் பணம் கொடுத்தார்களோ அதே போல் அவர்களும் கொடுத்திருக்கிறார்கள். மழை இல்லாத இந்தச் சமயத்தில் கிஸ்தி கொடுப்பது சிரமமாக இருக்கிறது. எந்தத் தாலூகாவில் மழை குறைவு என்பதை அறிந்து அங்கு கிஸ்தி இல்லாது பண்ணாவிட்டாலும்கூட கிஸ்தி வசூலை ஒரு வருஷம் தள்ளி வைக்க ஏற்பாடு செய்தால் பயனுள்ளதாக இருக்கும். இது மிகவும் அவசியமானது என்று அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உணவு தானியத்தைப் பொறுத்தவரை கிராமப் பகுதிகளில் உணவு தானியப் பற்றாக் குறை நகரங்களில் இருப்பதை விட அதிகமாக இருக்கின்றது. குறிப்பாக, சேலம் ஜில்லாவில் அந்த நிலைமை இருக்கிறது. சமீபத்தில் கனம் உணவு அமைச்சர் அவர்கள் கூட சேலத்திற்கு வந்திருந்



1st March 1966] [திரு. கே. எஸ். சுப்பிரமணிய கவுண்டர்]

தார்கள். சர்ப்ளஸ் ஆக இருக்கும் தானியத்தைப் ப்ரொக்யூர் செய்துவிட்டால் கிராமத்தில் தானியமே இல்லாது போய்விடுகிறது. ஆகவே, கிராமங்களிலும் உணவுப் பொருள் விநியோகத்தை எந்த அளவுக்குச் செய்ய முடியுமோ அதற்கான ஒரு திட்டத்தை வகுக்கவேண்டும். சேலம் ஜில்லாவைப் பொறுத்தவரை எல்லாக் கிராமங்களுக்கும் கார்டு சிஸ்டத்தைக் கொண்டுவர வேண்டும். இல்லாவிட்டால் யார் யார் ரொம்ப அவசியமாக உணவு தானியத்தை வாங்கித்தான் சாப்பிடவேண்டும் என்ற நிலையில் இருக்கிறார்களோ அவர்களுக்குப் பூரணமாகக் கிடைக்குமளவில் ஏற்பாடு செய்யவேண்டும். இதை உடனடியாகச் செய்யாவிட்டால் விவசாயிகள் ரொம்பவும் கஷ்டமான நிலைமைக்கு உள்ளாவார்கள். அமைச்சர் அவர்களே நேரடியாகப் பார்த்து வந்திருப்பதால் சேலத்தைப் பொறுத்தவரை உடனடியாக ஒரு ஏற்பாடு செய்யவேண்டும். உணவு தானிய விநியோகத்தைப் பொறுத்தவரை, விவசாயிகள் வெளியில் விற்கிற விலையை விட, சர்க்கார் வாங்கும் விலை ரொம்பவும் குறைவாக இருக்கிறது என்று சொல்லுகிறார்கள். கன்ஸ்யூமர்ஸ் விலை அதே சமயத்தில் அதிகமாக இருக்கிறது என்று சொல்லுகிறார்கள். அரசாங்கத்தில் என்ன விலைக்கு வாங்குகிறார்கள்? என்ன விலைக்கு விற்கிறார்கள்? மத்தியில் என்ன மார்ஜின் இருக்கிறது? அட்மினிஸ்ட்ரேட்டிவ் சார்ஜஸ் எவ்வளவு எடுத்துக்கொள்ளுகிறார்கள் என்பதை அரசாங்கம் ஆராயவேண்டும். ஒரு குவிண்டாலுக்கு 10 ரூபாய் வரை அட்மினிஸ்ட்ரேட்டிவ் சார்ஜஸ் இருக்கிறது என்று சொன்னால் எவ்வளவு தூரம் அது சரியானது என்பதை ஆராய வேண்டும். 100 கிலோ கிராம் கொண்டது ஒரு குவிண்டால். அதற்கு 10 ரூபாய் சர்சார்ஜ் என்பது ரொம்ப அதிகமானது. அந்தத் தொகையை விவசாயிக்குச் சேர்த்துக்கொடுத்தால் தாராளமாக உணவு உற்பத்தியைப் பெருக்க உபயோககரமாக இருக்கும். அதை அவசியம் செய்யவேண்டும்.

நல்ல மாதிரியான தானியங்கள் ஃபேர் பிரைஸ் ஷாப்பில் போடப்படுவதில்லை என்பது பொதுவாக எல்லோரும் சொல்லக்கூடிய குறை. இப்போது என்ன குறை இருக்கிறது என்பதை ஆராயவேண்டும். ரியலிஸ்டிக்காக இருந்து அவுட்-டர்னைப் பார்த்து நல்ல அரிசியாகக் கொடுக்கலாம். எவ்வளவு அவுட்-டர்ன் இருக்க வேண்டுமென்று ரியலிஸ்டிக்காகப் பார்த்து அந்த அடிப்படையில், விலையில் ஒரு பைசா, இரண்டு பைசா அதிகமானாலும் நல்ல அரிசியாக கொடுத்தால் யாரும் ஆட்சேபிக்கப்போவதில்லை. தரமான அரிசி வேண்டுமென்று தான் மக்கள் விரும்புவார்கள். அதைச் செய்யவேண்டும். நெல்லைப் ப்ரொக்யூர் பண்ணும்போது விவசாயிகள் நன்றாகக் காயப்போட்டுத் தான் நெல்லைக் கொடுப்பார்கள் என்று எதிர்பார்க்க முடியாது. கொடுக்கக்கூடிய நெல்லை வாங்கி நன்றாகக் காயப்போட்டு வைத்தால் அதை அரைக்கும் சமயத்தில் கெட்டுப்போகும் நிலைமை ஏற்படாது. இதையும் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சாதாரணமாக கூட்டுறவுச் சங்கங்களில் நெல் அதிகமாகக் கொள்முதல் செய்து விநியோகிப்பதில் ரிசர்வ் பாங்கு க்ரெடிட் ஸ்கீம் இதற்கு ஒரு பெரிய முட்டுக்கட்டையாக நிற்கிறது. சர்க்கார் காரண்டியோடு 15 சத வீத மார்ஜின் மணி இருந்தால் தான் இப்போது ஸ்டேட் பாங்க் அக்கவுண்ட்டில் இருந்து பணம் பெற முடியும். 15 சத வீதம் வேண்டுமென்று சொல்லும்போது சங்கத்தின் பணம் போக சர்க்கார் அந்த 15 சத வீதத்தை அட்வான்ஸாகக் கொடுத்தால்தான் ஏற்பாடு செய்யமுடியும். நமது அரசாங்கத்தைப் பொறுத்தமட்டில் 15 சத வீத மார்ஜின் மணி கொடுப்பதாக ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். அதற்காக நான் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதே சமயத்தில் அப்போது போட்ட கணக்குப்படி 30 லட்சம் ரூபாய் தேவை என்று சொன்னார்கள். அதில் 15 லட்சம் ரூபாய் தான் இப்போது கொடுத்திருக்கிறார்கள். பாக்கி ஏப்ரல் மாதத்திற்கு மேல் என்று சொன்னதாகத் தெரிகிறது. ஆகவே, இந்த 30 லட்சம் ரூபாயை உடனடியாகக் கொடுப்பது என்று மட்டுமில்லாமல் மார்ச்சில் செய்யவில்லையென்றால் ப்ரொக்யூர் செய்வது குறைந்து விடும். மார்ச் மாதத்தில் அதை வாங்கவில்லை என்றால் ஏப்ரலில் அது எந்த அளவிற்கு 10-30 a.m.

சாத்தியமாக இருக்கும் என்று யோசிக்கவேண்டும். ஆகவே, இந்த 30 லட்சத்தை உடனடியாகக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். என்னைப் பொறுத்தவரையில் அப்போது போட்ட கணக்கு சரியாகப்—போட்டதாக ஒப்புக்கொள்ள முடியாது. ஒவ்வொரு ஜில்லாவிலிருந்தும் அலாட்மெண்ட் எவ்வளவிற்கு வரப்போகிறது என்று தெரியாமல் கணக்குக் கொடுத்து விட்டார்கள். மற்ற ஜில்லாக்களில் இருந்து இவ்வளவு அலாட்மெண்ட் வேண்டுமென்று வரும்போது இது போதாது என்று நினைக்கிறேன். ஆகவே, இதை அதிகப்படுத்தவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். சர்க்கார் அக்கவுண்டை விட, கோவாப்பரேட்டிவ் சொஸைட்டி அக்கவுண்ட்டில் அல்லது ஸ்டேட் பாங்க் அக்கவுண்டில் வாங்கினால் சர்க்கார் 100-க்கு பதில் 15 கொடுத்தால் போதும். ஆகவே இந்த 15 சத வீத மார்ஜின் மணியை தேவையான அளவிற்கு உடனடியாகக் கொடுத்து ஏற்பாடு செய்யவேண்டும்.

சேலம் ஸ்டீல் ப்ளாண்ட் பொறுத்த வரையில் அது அவசியம் இந்த ஆண்டே வந்து விடும் என்ற அளவில் எல்லோரும் மிக்க ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். நம் தொழில் அமைச்சர் திரு. வெங்கட்ராமன் அவர்கள் ஜப்பான் போய் வந்த உடன், வருகிற சமயத்திலேயே முடிவான ஒரு ஏற்பாட்டைக் கொண்டு வருவார்கள் என்று தான் பொது மக்கள் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். இது விஷயமாக, ஜப்பான் நாட்டு நிபுணர்களோடு பேசி வந்தது எல்லோருக்கும் மகிழ்ச்சியை அளிக்கக்கூடியதாக இருக்கிறது. சேலம் ஸ்டீல் பிளாண்டிற்கான பூர்வாங்க வேலைகள் எல்லாம் முடிந்து விட்டன. மத்திய அரசாங்கத்தின் க்ளியரன்ஸ் வந்தவுடன் ஆரம்பிக்கும் அளவில் ராஜ்ய சர்க்கார் எல்லா ஏற்பாடுகளையும் செய்து வைத்திருக்கிறார்கள். ஆகவே, இதை உடனடியாக ஆரம்பிக்க வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டும்.

உணவு உற்பத்தியைப் பொறுத்தவரையில் இந்த பட்ஜெட்டில் அதற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்திருக்கிறார்கள். உணவு உற்பத்தியைப் பெருக்குவதில் பல காரியங்கள் செய்யப்படுவதில் விவசாய இலாகாவை திருத்தியமைப்பதும் ஒரு வகையில் முக்கியத்துவம் வாய்ந்தது என்பது என் தாழ்மையான அபிப்பிராயம். விவசாய இலாகாவைத் திருத்தியமைப்பது என்று சொல்லும்போது இருக்கிற அதிகாரிகளைக் குறைக்க வேண்டும் என்று நான் சொல்லவில்லை. ஒவ்வொரு பயிருக்கும் ஒரு ஸ்பெஷலிஸ்ட் என்று இருக்கிறார்கள். டெப்டி டைரக்டர்கள் நிறையப் பேர்கள் இருக்கிறார்கள். ஜாயிண்ட் டைரக்டர்கள் அதிகமாக இருக்கிறார்கள். டெப்டி டைரக்டர் ஒவ்வொரு ஜில்லாவாகப் போவதும், ஜாயிண்ட் டைரக்டர்கள் ஒவ்வொரு ஜில்லாவாகப் போவதும் என்று இருக்கக் கூடிய நிலையில் விவசாய ஆபீசர்களுக்கு இவர்களோடு போகக் கூடிய நேரம் அதிகமாகப் போய் விடுகிறது என்பது தான் என் பயம். ஒவ்வொரு ஜில்லாவிற்கும் ஒரு விவசாய ஆபீசர் என்று எவ்வளவு பேர்கள் தேவையோ அவ்வளவு பேர்கள் இருப்பார்கள் என்று நினைக்கிறேன். குறைவாக இருந்தால் கொஞ்சமாகத் தான் இருக்கும். ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு ஸ்பெஷலிஸ்ட் இருக்கிறார். "பாடி" (Paddy) ஸ்பெஷலிஸ்ட், ஆயில் ஸ்பெஷலிஸ்ட், டுபாக்கோ ஸ்பெஷலிஸ்ட் என்று மொத்தமாக இருக்கிறார்கள். ஒவ்வொரு தாலூகாவிற்கும் ஒரு விவசாய ஆபீசரைப் போட்டு அவர்கள் எல்லாப் பொறுப்பையும் ஏற்றுக்கொள்ளவேண்டும். ஒரு ஜில்லாவிற்கு ஒரு டெப்டி டைரக்டர் என்று இருக்கவேண்டும். அப்படியிருந்தால் உற்பத்தியைப் பெருக்க உதவி செய்யுமா என்பதை உடனடியாக ஏற்படுத்தாவிட்டாலும் ஆராய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். எந்தெந்த ப்ளாக்குகளில் அதிகமாக விவசாய வேலை இருக்கிறதோ அங்கு எக்ஸ்டென்ஷன் ஆபீசர் ஃபார் அக்ரிகல்சரைப் போடுவதில் ஆட்சேபணை இல்லை. தாலூகாவிற்கு ஒரு விவசாய ஆபீசர், ஜில்லாவிற்கு ஒரு டெபுடி டைரக்டர், ஒரு ப்ளாக்குக்கு ஒன்றுக்கு மேற்பட்ட விஸ்தரிப்பு அதிகாரி போட்டு அங்கு உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கு அவர்களுக்கு நேரடியான பொறுப்பைப் கொடுத்து அவர்களுக்குப் ட்ரைவ் கொடுத்தால் போதுமான அளவில் காரியங்களைச் செய்ய முடியும்.



தமிழ்நாட்டைப் பொறுத்த மட்டில் அதிகப்படியான நிலத்தில் கிணற்றை வைத்துத் தான் விவசாயம் செய்கிறார்கள் என்பதை மறந்து விடக் கூடாது. இப்போது கிணறுகளுக்காக அதிகப்படியான மான்யம் கொடுத்திருக்கிறது அரசாங்கம். கிணறுகள் வெட்டுவதற்கு ஒரு டார்கட் பிக்ஸ் செய்து ட்ரைவ் கொடுத்திருக்கிறார்கள். அதற்காக விவசாயிகள் சார்பில் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். மார்ச் முடிய எவ்வளவு பணம் தேவையோ அந்த அளவிற்கு பணம் கொடுக்கவில்லை என்று ஜில்லாக்களில் பேசுகிறார்கள். அது எவ்வளவு தூரம் சரி என்று தெரியவில்லை. அது சரி என்றால் உடனடியாகக் கிணறுகள் வெட்டுவதற்காக உள்ள மான்யத்தை கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டும். இப்போது கொடுக்காவிட்டால் மழை பெய்த பின் கிணறுகள் வெட்டுவது என்பது முடியாது. ஆகவே, இந்தச் சமயத்தில் அதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தஞ்சாவூர் ஜில்லாவில் கிணறுகளை எல்லாம் அதிகமாக வெட்டி உசும்பலைத் தடுத்து விட முடியும் என்று நினைப்பது போல் மேட்டூர் வாய்க்கால் திட்டம் லோயர் பவானித் திட்டம் போன்ற திட்டங்களில் அங்கு அதிகப்படியான கிணறுகளை வெட்டுவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். அந்தக் கிணறுகள் ஒரு பர்லாங்குக்கு, இரண்டு பர்லாங்குக்கு உட்பட்டு இருக்கக்கூடாது என்ற கட்டுப்பாட்டைத் தளர்த்தி அங்குள்ள கிணறுகளுக்கு மின்சார சப்ளை கொடுப்பது போன்ற ஏற்பாட்டையும் செய்ய வேண்டும். அப்படிச் செய்தால் இப்போது உற்பத்தியாவதை விட இரண்டு மடங்கு அதிகமாக உற்பத்தி செய்ய முடியும். அங்குள்ள விவசாயிகள் மூன்று போகம் எடுக்கக்கூடிய அளவிற்குத் திறமை வாய்ந்தவர்கள். அவர்களால் அதை நிச்சயம் செய்து காண்பிக்க முடியும். ஆகவே அதற்கான ஏற்பாடுகளைச் செய்யவேண்டும்.

அரசாங்கம் மின்சாரம் கொடுப்பதில் பல நல்ல மாதிரியான ஏற்பாடுகளைச் செய்து வருகிறார்கள். துரிதமாகவும் கொடுத்து வருகிறார்கள். அதோடு, விவசாயிகளின் கஷ்டத்தையும் நாம் ஆராயவேண்டும். சாதாரணமாக ஓனர்ஷிப், சர்ட்டிபிகேட், நோ அப்ஜெக்ஷன் சர்ட்டிபிகேட் இவை வாங்குவது என்றால் செல்வாக்கு படைத்த விவசாயிகளுக்கும், வசதியுள்ளவர்களுக்குமே கஷ்டமாக இருக்கும்போது சாதாரண விவசாயிகளுக்கு அவற்றை வாங்குவது என்பது எவ்வளவு சிரமமான காரியம் என்பதை ஆராயவேண்டும். ஆகவே, இந்த ஓனர்ஷிப் சர்ட்டிபிகேட், நோ அப்ஜெக்ஷன் சர்ட்டிபிகேட் இவை வாங்கும் முறையில் அதை "ஸிம்ப்ளிஃபை" செய்து உடனடியாக விவசாயிகளுக்கு மின்சாரம் கொடுக்க ஏற்பாடு செய்ய முடியுமா என்பதை ஆராயவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பின்னர், பெஸ்ட் கன்ட்ரோல். இந்த பெஸ்ட்களை நல்ல முறையில் தடுத்தால் தான் உணவு உற்பத்தியை அதிகமாகச் செய்ய முடியும் என்பது என் அபிப்பிராயம். இந்த ஆண்டு நெல் நட்டதே குறைவு. அதே சமயத்தில் பூச்சிகளாலும் சேதம் ஏற்படுவதைப் பார்க்கும்போது மற்ற ஆண்டுகளை விட சேலம் ஜில்லாவைப் பொறுத்தவரை சேதம் அதிகமாக இருக்கிறது. எல்லா இடங்களிலும் ஏரியல் ஸ்ப்ரேயிங் செய்வது என்பது முடியாது. அதற்கு ஹெலிகாப்டர்கள் எல்லாம் வேண்டும். ஆகவே, பவர் ஸ்ப்ரேயர்ஸ் பெரும் அளவில் வைத்து கட்டாயமாக ஸ்ப்ரே செய்து அதனால் ஏற்படும் செலவிற்காக அரசாங்கம் குறைந்த பட்சமாக ஒரு சப்சிடி கொடுத்தால் அது உணவு உற்பத்தியைப் பெருக்கக்கூடிய நல்ல சப்சிடி என்று சொல்ல முடியும். ஆகவே, கட்டாயமாக ஸ்ப்ரே செய்து அதற்காகும் செலவை அடுத்த மகசூலில் கடைசியில் வாங்கும் அளவில் ஏற்பாடு செய்தால் உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கு அது நிச்சயமாக பிரயோஜனப்படும் என்று கூறிக்கொண்டு இந்த நிதி நிலை அறிக்கையை வரவேற்று என் வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

***திரு. இர. பொன்னப்ப நாடார்:** தலைவர் அவர்களே, இந்த நிதி நிலை அறிக்கையை வரவேற்று ஒரு சில கருத்துக்களை இந்த மன்றத்திலே சமர்ப்பிக்க முற்படுகிறேன். முதலாவதாக, நம் மூன்றும் ஐந்தாண்டுத் திட்டத்திற்கு 291 கோடி ரூபாய் என்று நாம் திட்டமிட்டபோதிலும்

இப்போது நம் அரசாங்கம் 341 கோடி ரூபாய் செலவழித்திருக்கிறது. மத்திய அரசாங்கமும் 1·46 கோடி ரூபாய் செலவழித்திருக்கிறது. இப்படிப் பார்க்கிறபோது இந்த மூன்ரும் ஐந்தாண்டுத் திட்டத்தில் நம் அரசாங்கம் கணிசமான முன்னேற்றத்தைச் சாதித்திருக்கிறது என்பதை நாம் பாராட்டாமல் இருக்கமுடியாது. குறிப்பாக 17 சதவிகிதம் அதிகமாக இந்த ஐந்தாண்டுத் திட்டத்திற்காக அரசாங்கம் செலவழித்திருக்கிறது என்று இந்த அறிக்கையிலேயே கூறியிருக்கிருர்கள். இந்த பட்ஜட்டில் விவசாயத்திற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருக்கிறது. அதைப் பார்க்கிறபோது விவசாயிகளுக்குள்ள ஒரு சில கஷ்டங்களைச் சுட்டிக் காட்டுவது நலமாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். குறிப்பாக இன்றைக்கு அரசாங்கம் விவசாயிகளுக்காக எத்தனையோ முறையில் ஊக்கமும் உதவியும் அளித்தாலும், காலா காலங்களில் விவசாயிகள் கடன்கள் பெற்றுக்கொள்வதில் பல கஷ்டங்கள் இருக்கின்றன என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்கிறேன். முக்கியமாக, நில அடைமான பாங்கியிலிருந்து பணம் பெறுவதற்கு விவசாயிகளுக்குப் பல கஷ்டங்கள் இருக்கின்றன. அவர்கள் வட்டி விகிதத்தை அதிகப்படுத்திக்கொண்டே போகிருர்கள். கழிந்த ஒன்றிரண்டு வருட காலமாக அரசாங்கத்திலிருந்து ரிசர்வ் பாங்கிலிருந்து உதவி கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டிருக்கிருர்கள் என்று தெரிகிறது. இதைப் பற்றிப் பலமுறை கேட்டும் இதுவரை தகுந்த பலன் கிடைக்காத நிலைமைதான் இருந்துகொண்டிருக்கிறது. இதனுல் விவசாயிகளுக்குப் பலவிதமான கஷ்டங்கள் ஏற்படுகின்றன. நில அடைமான பாங்கிலிருந்து கடன் வாங்கும்போது, அதிகப்படியான வட்டிபோட்டாலும் அதை கொடுக்கிறேம் என்று ஆரம்பத்திலேயே கையெழுத்து வாங்குவதால், வட்டி விகிதம் உயர்ந்த பின்னுல் அதிகப்படியான வட்டியைக் கொடுக்கவேண்டிய நிர்ப்பந்தத்திற்கு விவசாயிகள் ஆளாகிருர்கள் என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன். விவசாயிகள் சாதாரணமாக கடனிலே பிறந்து, கடனிலே வளர்ந்து, கடனிலே மாளவேண்டியவர்களாக இருக்கிருர்கள். இது நாட்டில் சர்வ சாதாரணமாக இருக்கிறது. விவசாயிகளுக்கு அதிகமாக ஊக்கம் அளிக்கின்ற சந்தர்ப்பத்தில், கூட்டுறவு இலாகாவிலிருந்து தாராளமாகப் பணம் கடன் கொடுக்கின்ருர்கள். கடன் கொடுக்கின்றபொழுது வட்டி விகிதம் என்ன இருக்கிறது என்று பார்த்தால் மிக அதிகமாக இருக்கிறது. முன்பெல்லாம் $7\frac{1}{4}$ சதவிகிதமாக இருந்தது, இப்போது அதிகமாயிருக்கிறது என்பதை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். இத்தகைய கஷ்டங்களைத் தீர்க்கவேண்டுமென்ருல் குறைந்த வட்டி விகிதத்தில், எப்போது பயிரிடுவதற்குப் பணம் தேவையோ, அப்போது உடனடியாகப் பணத்தைக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்தால் விவசாயிகளுக்கு ஊக்கம் ஏற்படும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இன்னும், முக்கியமாக கஷ்டம் இருப்பது லெவி முறையில். கட்டாய லெவியானது இப்போது எங்கள் மாவட்டத்தில் அமலில் இருந்துகொண்டிருக்கிறது. லெவி முறை எங்கள் மாவட்டத்தில் இருக்கின்ற முறையைப் பற்றி சில வார்த்தைகள் சொல்லலாம் என்று கருதுகிறேன். எங்கள் மாவட்டம் கேரள ராஜ்யத்தைத் தொட்டு இருக்கின்ற மாவட்டம். கம்மி பகுதி என்று அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்பட்டு நிர்ப்பந்த லெவி முறை இருந்து வருகின்ற ஒரு பகுதியாகும். அந்த ஜில்லாவில் முன்பு 4500 டன் ப்ரொக்யூர்மெண்ட் செய்யவேண்டும் என்று திட்டமிட்டிருந்தார்கள். இந்த வருடம் 10 ஆயிரம் டன் ப்ரொக்யூர்மெண்ட் செய்யவேண்டும் என்று அரசாங்கம் உத்தரவு பிறப்பித்திருக்கிருர்கள் என்று தெரிகிறது. இவ்வாறு டார்கெட் உயர்ந்ததின் காரணமாக அதிகாரிகள் விவசாயிகளுக்குப் பலவிதமான தொல்லைகளை அளித்துக்கொண்டேயிருக்கிருர்கள் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். சமீபத்தில் நடந்த ஒரு நிகழ்ச்சியை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நேற்றையதினம் கனம் சிதம்பரநாத நாடார் அவர்கள் இதைப்பற்றிச் சொன்னுர்கள். திரு. குஞ்சன் நாடார் அவர்களுடைய தொகுதியைச் சார்ந்த மணக்காவிளை என்ற கிராமத்தில் ஏதோ ஒரு ஸ்பெஷல் தாசில்தாரை ஒரு நபர் தாக்கினுர் என்கின்ற ஒரு புகார் வந்தது. அதன் காரணமாக அரசாங்க அதிகாரிகள் வேண்டுமென்றே பல கெடுபிடி நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிருர்கள்





இதன் காரணமாக அரசாங்கத்திற்கே களங்கம் ஏற்படுத்தக்கூடிய நிலைமை இருக்கிறது. இது மிகவும் வருந்தத்தக்கதாக இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஒருவேளை ஏதாவது தவறு நடந்திருந்தாலும் சட்டப்படி என்னென்ன நடவடிக்கை மேற்கொள்ளவேண்டுமோ அவைகளை மேற்கொள்ளலாம். அதில் விவசாயிகளுக்கோ அல்லது பொதுஜன பிரதிநிதிகளுக்கோ ஆட்சேபணையில்லை. ஆனுல் இந்தச் சம்பவம் நடந்ததற்கு பின்னுல் அதிகாரிகள் சரியான முறையில் நடந்துகொண்டார்களா என்பதைப்பற்றிப் பரிசீலனை செய்துபார்த்தால் நலமாக இருக்கும் என்பதை இந்த அரசாங்கத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன். நானும் இன்னொரு சட்டசபை உறுப்பினரும், வேறொரு பஞ்சாயத்து யூனியன் தலைவரும் இந்தச் சம்பவம் நடந்த இடத்திற்குச் சென்றிருந்தபோது, அங்கே நான்கு ஜீப் கார்களில் அரசாங்க அதிகாரிகள் அதாவது ஸ்பெஷல் தாசில்தார், சவுக்கியிலுள்ள நபர்கள், வேறு பல அரசாங்க உத்யோகஸ்தர்கள் இவர்கள் எல்லாம் ஜீப் காரில் ஏறிக்கொண்டு பவனி வருகிருர்கள். இதைப் பார்க்கும்போது நாங்கள் மிகவும் வெட்கப்படக்கூடிய நிலைமையில் இருந்தது என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ப்ரொக்யூர்மெண்ட் செய்வதற்காக ஜீப் காரில் அதிகாரிகள் போனுல் அதைப்பற்றி நாங்கள் ஒன்றும் கவலைப்படப்போவதில்லை. ஆனுல் யாரோ ஒருவர் தாக்கினுர் என்பதற்காக அந்த ஊர் மக்களைக் கஷ்டப்படுத்துவதற்காகவும் தொந்தரவு கொடுப்பதற்காக அரசாங்கப் பணத்தை விரயமாக்கக்கூடாது என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அவர்கள் போகின்ற ஜீப்பின் பெட்ரோல் பொதுமக்களுடைய பணத்தைக் கொண்டு வாங்கப்பட்டது என்பதை அவர்கள் உணரவேண்டும். உண்மையிலேயே, ஏதாவது குற்றம் நடந்தால் அதைப் போலீசாரிடம் தெரிவித்தால் போலீஸ் தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்வார்கள். அதற்கு உதவியாக வேண்டுமென்ருல் இன்னுர் என்று காட்டிக்கொடுப்பதற்காக ரெவின்யூ இலாகா அதிகாரிகள் போகட்டும். ஆனுல், வீணுக மக்கள் பணத்தை விரயமாக்குகின்ற முறையில் அதிகாரிகள் சென்று மக்களைக் கஷ்டப்படுத்துவது, அரசாங்கத்தின்பேரில் மக்களுக்கு அதிருப்தியை வளர்ப்பதற்கு ஏதுவாக இருக்கிறது. அப்படிப்பட்ட நிலைமை எழுந்து கொண்டிருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். ப்ரொக்யூர்மெண்ட் நல்ல முறையில் நடைபெறும் என்பதை நமது முதலமைச்சர் அவர்கள் இந்த மன்றத்தில் எடுத்துக்கூறியிருக்கின்ருர்கள். ஆகவே ப்ரொக்யூர்மெண்ட் செய்வதில் மக்களுக்குக் கஷ்டங்களைக் கொடுக்கக்கூடாது என்பதை மறுமுறையும் எடுத்துக் கூற விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, அங்கே ஏற்படுத்தியிருக்கின்ற லெவி முறை என்னவென்ருல், ஒரு ஏக்கருக்குக் குறைவாக இருப்பவர்களுக்கு லெவி அளப்பதில் இருந்து ஒழிவு கொடுத்திருக்கிருர்கள். அதற்கு மேல் படிப்படியாக (ஸ்லாப் முறையில்) நான்கு முதல் பன்னிரண்டு மூட்டை வரையிலும் கொடுக்கவேண்டும் என்று திட்டமிட்டிருக்கிருர்கள். இதிலும் பல கஷ்டங்கள் இருக்கின்றன. அதாவது கழிந்த வருடம் மழை பிந்திப் பெய்ததின் காரணமாகப் பயிர்கள் நல்லமுறையில் வரவில்லை என்பதை நாம் நன்ருக அறிவோம். குறிப்பாக விளைச்சலைப்பற்றி அதிகாரிகள் நிர்ணயித்திருப்பது மிகக் கூடுதலாக இருக்கிறது. அதிகாரிகள் தான் கணக்குப் போடுகிருர்கள். இந்தக் கணக்குகள் சரியாக இருப்பதில்லை. இதன் காரணமாகக் கெடுபிடி அதிகமாக இருக்கிறது. இதனுல் விவசாயிகளுக்கு பல விதத்திலும் அதிருப்தி வளர்ந்து கொண்டிருக்கிறது. இதைத் தவிர்ப்பது நலமாக இருக்கும் என்பதைச் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக, சர்வீஸ் இணைப்பைப் பற்றிப் பல முறை இந்த சபையில் நாங்கள் எடுத்துக் கூறியிருக்கிறேம். 1956-ம் ஆண்டு கன்னியாகுமரி ஜில்லாவானது தமிழ் நாட்டோடு இணைந்தது. சுமார் 10 வருட காலமாகியும் இன்னும் சர்வீஸ் இணைப்பு சரியாக நடைபெருமல் இருக்கிறது. இதன் காரணமாக உத்தியோக உயர்வு, சம்பளத்தில் வேறுபாடுகள் இவ்விதம் பல கஷ்டங்கள் இருந்துகொண்டிருக்கின்றன. இதைப்பற்றி எங்கள் பிரதிநிதிகள் இந்த மன்றத்தில் பலமுறை எடுத்துக் கூறியிருக்கிருர்கள். ஆனுல் இதுவரையிலும் இதற்குத் தகுந்த நடவடிக்கை எடுக்காமல் இருப்பது

மிகவும் வருந்தத்தக்க விஷயம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆசிரியர்களைப் பொறுத்தவரையில், 1958-ம் ஆண்டு வரையில் திருவிதாங்கூர்—கொச்சி பகுதியில், எஸ். எஸ். எல். சி. பரீட்சை நடைமுறையில் இருந்துவந்தது. இங்கிலீஷில் 35 மார்க்கும், பப்ளிக் சர்வீஸ் கமிஷன் தேர்வுக்கு 35 மார்க்கும் என்ற அடிப்படையில் ஆசிரியர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்தார்கள். அதன் பின்னால் சர்வீஸ் ரெகுலரைஸேஷன் ஆக்கும்போது, பல சிக்கல்களை உண்டுபண்ணியிருக்கிறார்கள். இத்தகைய சிக்கல்களை எல்லாம் தீர்ப்பதற்கு அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொரு விஷயத்தை நான் எடுத்துக்கூற விரும்புகிறேன். நாகர்கோவிலில் இருக்கின்ற முனிசிபல் நிர்வாகத்தைப்பற்றிச் சொல்ல விரும்புகிறேன். அதாவது நாகர்கோவில் முனிசிபாலிடியால் முன்பு தண்ணீர் சப்ளை சீரிய முறையில் நடத்தப்பட்டுவந்தது. இப்போது சரியாக வாட்டர் சப்ளை இயங்குவது கிடையாது. இதன் காரணமாகப் பொதுமக்களுக்குப் பல கஷ்டங்கள் ஏற்பட்டிருக்கின்றன. ஐம்பது ஆயிரம் மக்களுக்குத் தண்ணீர் சப்ளை செய்கின்ற முறையில் இந்தத் திட்டம் போடப்பட்டுள்ளது. ஆனால் இப்போது நகரில் ஒரு லட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் வசித்து வருகிறார்கள் இதன் காரணமாக வாட்டர் சப்ளை மிகவும் மோசமான நிலையில் இருக்கிறது. இதைப்பற்றி முனிசிபல் நிர்வாகம் பல முறை அரசாங்கத்தை அணுகியிருக்கிறார்கள். இப்போது இருக்கின்ற நிலைமை என்னவென்றால், காலை 7 மணிக்கு அப்புறம் தண்ணீர் வருவதில்லை. காலை 7 மணிக்குள்ளாக எழுந்து, குளித்து, சமையல் ஆக்கிக்கொள்ளவேண்டும். சிறிது தாமதமாகிவிட்டால் குளிப்பதற்கோ, அல்லது சமைப்பதற்கோ தண்ணீர் இல்லாமல் போய்விடும். இது தவிர அங்குள்ள மக்களுக்குத் தண்ணீர் எடுப்பதற்கு கிணறுகளும் கிடையாது. இப்படிப்பட்ட பரிதாபமான சூழ்நிலையில் நாகர்கோவில் நகரசபை இருக்கிறது என்பதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இதன் காரணமாகப் பொதுமக்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதையும் கூறிக்கொள்ள விரும்புகிறேன். ஆதலால் தண்ணீர் கிடைப்பதற்கு இந்தத் திட்டத்தை உடனடியாக மாற்றி அமைக்க ஏற்பாடு செய்யவேண்டும்.

இன்னொரு விஷயம், நாகர்கோவில் முனிசிபல் பஸ் நிலையத்திற்காக, நம் முன்னாள் முதலமைச்சர், இப்போது காங்கிரஸ் தலைவராக இருக்கும் உயர்திரு காமராஜ் அவர்கள் 1958-வது ஆண்டில் கல் நாட்டினார். இப்போது எட்டு வருடங்களாகிவிட்டது. இதற்கான நிலத்தை ஆர்ஜிதம் செய்வதற்காக அரசாங்க அதிகாரிகள் பல முறை வந்தார்கள். நில ஆர்ஜித சட்டத்தின்படி அதாவது செக்ஷன் 4, 5, 6 இவற்றின் கீழ் பல கோளாறுகள் இருந்து வருவதாகத் தெரிகிறது. எட்டு வருடங்களுக்கு முன்பு போடப்பட்ட அந்தக் கல் பொதுமக்கள் பார்த்து பரிகாசம் செய்யக்கூடிய நிலைமையில் இருந்து கொண்டிருக்கிறது என்பதை சுட்டிக் காட்ட ஆசைப்படுகிறேன். இனிமேலாவது காலதாமதம் ஏற்படாமல் காலாகாலத்தில் நில ஆர்ஜிதம் செய்து இந்தத் திட்டத்தை உடனடியாக அமல் நடத்தவேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, நான் இன்னொரு விஷயம் எடுத்துக் கூற வேண்டுமென்று நினைக்கிறேன். மைனர் இரிகேஷனுக்கு அதிகமாக அரசாங்கத்திலிருந்து பணம் செலவழிக்கிறார்கள். மைனர் இரிகேஷன் திட்டத்தின் கீழ் குளங்கள் தணிக்கப்படுகின்றன. ஆனால் எங்கள் ஜில்லாவில் குளத்தைத் தணித்த பல கண்ட்ராக்டர்களுக்குப் பணம் கொடுக்கப்படவில்லை என்ற புகார் பரவலாக இருந்துகொண்டிருக்கிறது. இந்தப் புகாரை அரசாங்கம் உடனடியாக நிவர்த்தி செய்ய வேண்டும். உணவு உற்பத்திக்குத் தீவிர நடவடிக்கை எடுக்கும் அரசாங்கம் இந்த மாதிரிக் காரியங்களில் அதிக அக்கறை செலுத்த வேண்டுமென்றும் தெரிவித்துக்கொள்கிறேன்.



இன்னொரு விஷயம் எடுத்துக் கூறுவது நலமாக இருக்கும் என்று நான் நினைக்கிறேன். கேரளத்தில் ஏற்பட்ட உணவுப் போராட்டத்தின் காரணமாக நமது டிரான்ஸ்போர்ட் இலாகாவுக்குப் பல கஷ்டங்களும் ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றன என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். கேரள அரசாங்க பஸ்கள் கன்னியாகுமரிக்கு வந்துகொண்டிருக்கின்றன. சுமுகமான முறையில் அவைகள் வந்து போய்க் கொண்டிருக்கின்றன. போராட்ட காலத்தில் நமது பஸ்கள் நமது எல்லையை விட்டு அந்தப் பக்கத்திற்குப் போகவில்லை. போராட்டம் முடிந்த பிறகும் அந்தப் பக்கத்திற்குச் செல்ல அனுமதி அளிக்கப்படவில்லை அந்த அரசாங்கத்தின் சார்பில் என்பதை நமது அரசாங்கத்தின் கவனத்திற்குச்சுட்டிக்காட்ட விரும்புகிறேன். தாராளமாக அரிசியை கேரளத்திற்குக் கொடுத்த போதிலும், அவர்களுக்குத் தமிழ் நாட்டைப் பொறுத்த அளவில் ஒரு புகார் இருந்ததன் காரணமாக இந்தக் கஷ்டமான நிலைமை ஏற்பட்டது. அதற்கு ஆவன செய்ய வேண்டுமென்றும் இந்தச் சந்தர்ப்பத்தில் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

கண்டக்டர்கள் தேர்ந்தெடுக்கும் முறையைப் பற்றியெல்லாம் கூறினார்கள். சென்னை யூனிட்டில் கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த கண்டக்டர்கள் அபேட்சை தாக்கல் செய்தால் அவைகள் மறுக்கப்படுகின்றன. ஏதோ போராட்டம் நடந்துவிட்டது, ஒரு சிலர் தவறு செய்துவிட்டார்கள் என்பதற்காக, அந்த ஜில்லாவில் பிறந்தான் என்ற காரணத்தினால் நீதி வழங்க மறுப்பது நல்லதல்ல. அரசியல் அமைப்புச் சட்டத்தின்படி இது ஒரு புறக்கணிப்பு ஆகும் என்பதையும் அரசாங்கத்திற்கு எடுத்துக் கூற விரும்புகிறேன்.

இன்னும் பல பிரச்னைகளெல்லாம் இருக்கின்றன. மதுரையிலே பல்கலைக் கழகம் உருவாகியது. அதை நாங்கள் வரவேற்கிறோம். ஆனால், கன்னியாகுமரி ஜில்லாவைப் பொறுத்த அளவில் அரசாங்க முறையிலே எந்த விதக் கல்லூரிகளும் நடக்கவில்லை. ஒரு மருத்துவக் கல்லூரியும் ஒரு விவசாய கல்லூரியும் அமையப்போதிய வசதிகளும் வாய்ப்புகளும் அந்த ஜில்லாவில் இருக்கின்றன. அரசாங்கத்திலிருந்து வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க அரசாங்கம் முன் வரவேண்டும் என்பதையும் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

கடைசியாக, எங்கள் ஜில்லாவில் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலேயே ரயில் இணைப்பு ஏற்படும் என்று எதிர்பார்த்தோம். நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலேயாவது ஏற்படுமா என்று காத்துக்கொண்டிருக்கிறோம். முன்னாள் நிதி அமைச்சர் திரு. டி. டி. கிருஷ்ணமாச்சாரி அவர்கள், நாகர்கோவில் ரயில் இணைப்பு வந்துவிடும் என்று நாகர்கோவில் முனிஸிபாலிட்டியில் பேசும் போது எடுத்துக் கூறினார்கள். இப்போதாவது நமது ராஜ்ய அரசாங்கம் மத்திய அரசாங்கத்தை அணுகி ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு எனது உரையை முடித்துக் கொள்ளுகிறேன்.

**திரு. ப. உ. சண்முகம் :** கனம் சட்ட மன்றத் தலைவர் அவர்களே, 1966–67-ம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையை இம் மன்றத்தின் ஒப்புதலுக்காகக் கனம் முதல் அமைச்சர் அவர்கள் தாக்கல் செய்திருக்கிறார்கள். இந்த நீண்ட அறிக்கையைப் பார்க்கும் போதும், படிக்கும் போதும், அதிலே கனம் முதல் அமைச்சர் அவர்களுடைய நீண்ட அனுபவம் எனக்குத் தெரிகிறது. ஆனால், அதிலே ஏராளமான புள்ளிவிவரங்களைக் கொடுத்திருப்பதைப் பார்க்கும்போது ஒரு உண்மை புலனாகிறது. அரசாங்கத் தரப்பில் ஏற்பட்டிருக்கிற தோல்வியை மறைக்க புள்ளி விவரங்களை ஏராளமாக அரசாங்கத்திலே உபயோகித்திருக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டை நான் துவக்கத்திலேயே சாட்ட விரும்புகிறேன். அரசாங்கத் தரப்பில் தோல்வி என்று நான் சொல்லியவுடன் சில பேருக்குக் கோபம் வரக்கூடும். உண்மையை மூடி மறைக்க....................

**கனம் திரு. பூ. கக்கன் :** கனம் அங்கத்தினர் பேசும்போது கோபம் இல்லாமல் பேசுவது நல்லது என்று கூறிக்கொள்ளுகிறேன்.

**திரு. ப. உ. சண்முகம் :** கோபப்படாமல் பேசுவதற்கு நான் முயற்சிக்கிறேன்.

**MR. SPEAKER :** The hon. member is not sure about himself.

**திரு. ப. உ. சண்முகம் :** Yes, Sir. அரசாங்கத் தரப்பில் ஏற்பட்டிருக்கிற தோல்விகளை மூடி மறைக்க, அரசாங்கத்தின் சார்பில் நிறையப் புள்ளிவிவரங்களைக் கொடுத்திருக்கிறார்கள். தோல்வி என்று சொன்னால், இலாகாவாரியாகத் தோல்வி ஏற்பட்டிருக்கிறது என்று நான் குற்றம் சாட்டும்போது, தவறுதலாகச் செய்கிறேன் என்று யாரும் மறுக்க முடியாது. உதாரணத்திற்கு நான் ஒன்று சொல்ல வேண்டுமென்றால், அரசாங்கத்தின் திட்டங்கள், அவைகளுக்கு இடப்பட்ட காலக் கெடுவுக்குள் நிறைவேறாமல் அத்தனையிலும் அரசாங்கம் தோல்வி கண்டிருக்கிறது என்பது கனம் முதல் அமைச்சர் அவர்களுடைய உரையிலிருந்து தெரிகிறது. திட்டம் போட்டிருக்கிற ஒவ்வொன்றும் காலக் கெடுவோடு முடிவடையவில்லை, நீண்டுகொண்டுபோகிறது என்று கனம் முதல் அமைச்சர் அவர்கள் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்.

துவக்கத்திலேயே இன்னொன்றும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். உணவுப் பிரச்னையில் அரசாங்கம் தோற்று விட்டது என்பதை அரசாங்கம் ஒப்புக்கொள்ளாவிட்டாலும், நாட்டிலே இன்று கண்கூடாக இருக்கிறது. நாட்டிலே சுற்றிப் பார்க்கிறவர்களுக்கு இது நன்றாகத் தெரியும். தமிழ் நாட்டிலே பல்வேறு இடங்களில் பாதைகளுக்குக் குறுக்கே கட்டப்பட்டிருக்கிற ஒவ்வொரு கழியும் அரசாங்கத்தின் தோல்வியையே காட்டுகிறது. உணவுப் பிரச்னையில் இந்த ஆட்சி தோற்று விட்டது என்று காட்டுகின்றன அந்தக் கம்புகள். அதே போல நேற்றுக் காலையில் மது விலக்கு தோல்வி அடைந்து விட்டது என்று சொன்னபோது கனம் உள்துறை அமைச்சருக்குக் கோபம் வந்தது. மது விலக்கு தோல்வி அடைந்து விட்டது என்று நான் சொல்வதுகூட வேண்டாம். சிறைச்சாலைகளுக்குப் போனால், அங்குள்ள கைதிகளைப் பார்த்தால், மது விலக்கு தோற்று விட்டது என்பதைக் காட்டுகிறது. கூட்டுறவுச் சங்கங்கள் வெற்றி பெற்றனவா என்றால், கூட்டுறவுச் சங்கங்கள் அத்தனையும் முழுக்க முழுக்கத் தோல்வி என்று நினைக்கும்போதே வேதனையாக இருக்கிறது. கூட்டுக் கொள்ளை அடிக்கிறவர்கள் உள்ளே புகுந்துவிட்டார்கள் என்று நாட்டிலே நடந்திருக்கிற மோசடிகள் காட்டுகின்றன. திறமைக் குறைவு, திறமைக்குத் தோல்வி ஏற்பட்டிருக்கிறது. மாவட்டத்திற்கு மாவட்டம் கள்ள நோட்டு அடிக்கும் கூட்டம் ஏற்பட்டிருக்கிறது. கிராமத்திற்குக் கிராமம் கள்ளச் சாராயம் காய்ச்சப்படுகிறது. பத்திரிகைகளைப் புரட்டினால் மாதம் ஒரு செய்தி "கள்ள நோட்டு அடித்தவர்கள் பிடிபட்டார்கள்" என்ற செய்தி வந்து கொண்டிருக்கிறது. இந்த நிலை அவமானமாக இருக்கிறது, வெட்கமாக இருக்கிறது. ஆட்சியாளர்கள் ஏன் இவ்வளவு கவனக் குறைவாக இருக்கிறார்கள் என்று தெரியவில்லை.

விலைவாசி ஏற்றத்தைப் பற்றிக் கனம் முதல் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். விலைவாசி ஏற்றம் திட்டமிட்ட பொருளாதாரத்தில் இருக்கும் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால், இதே மன்றத்தில் நிதி அமைச்சராக இருந்த திரு. சுப்பிரமணியம் அவர்கள் விலைவாசி ஏற்றத்தைப்பற்றி ஒன்று குறிப்பிட்டிருக்கிறார். நான் ஏன் திரு. சுப்பிரமணியம் அவர்களைக் குறிப்பிடுகிறேன் என்றால், காங்கிரஸ் கட்சியின் கொள்கையைப் பொறுத்தவரையில் கருத்து வேறுபாடு இருக்கக் காரணம் இல்லை என்ற காரணத்தினால் தான் குறிப்பிடுகிறேன். விலைவாசி ஏற்றத்திற்கும், பொருளாதாரத் திட்டத்திற்கும் முரண்பாடு இருக்கிறது என்று இதே மன்றத்தில் பேசினார்கள். கனம் முதல் அமைச்சர் அவர்கள் திட்டமிட்ட பொருளாதாரத்தில் விலைவாசி ஏற்றம் இருக்கத்தான் செய்யும் என்று சொல்லுகிறார்கள். ஆக இப்படி முரண்பட்ட கருத்துக்கள் எப்படி வந்தது காங்கிரஸ் கட்சிக்குள் ? விலைவாசியைக் கட்டுப்படுத்த ஆட்சியினால் முடியவில்லை. தோல்வியை ஒப்புக்கொள்ள ஏன் தயங்க வேண்டும், மயங்கவேண்டும் ?



புதிய தத்துவார்த்தமாக ஒன்று சொன்னார்கள். சர்க்கார் ஊழியர்களுக்கு பஞ்சப்படியை ஏற்றுவதுபற்றிக் குறிப்பிடும்போது கனம் முதல் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். 'விலைவாசி ஏற்றத்திற்காக பஞ்சப்படியை உயர்த்த வேண்டியிருக்கிறது; பஞ்சப்படியை உயர்த்தினால் விலைவாசி உயருகிறது விலைவாசி உயரும்போது மறுபடியும் பஞ்சப்படியை உயர்த்த வேண்டியிருக்கிறது; இப்படி ஒரு மாயச் சுழலில் சுற்றி விலைவாசி ஏறிக்கொண்டு போகிறது' என்று சொன்னார்கள். இது உண்மைதானா என்று கேட்க விரும்புகிறேன். நானும் கடந்த இரண்டு நாட்களாக மெத்த சிரமப்பட்டு, சர்க்கார் புள்ளி விவரங்களை வைத்துக் கொண்டு ஒன்று தயாரித்தேன். சர்க்கார் ஊழியர்களின் எண்ணிக்கை என்ன என்று பார்த்தேன். சர்க்கார் ஊழியர்களின் எண்ணிக்கை இந்த வருஷம் 2,78,327.—சென்னை ராஜ்யம் பூராவிலும் இந்த ஆண்டு, 1966–67-ல் ஊதியம் வாங்கப் போகிறவர்கள். இந்த 2,78,327 பேர்கள்; அதாவது $2\frac{3}{4}$ லட்சம் ஊழியர்களுக்கு பஞ்சப்படியை உயர்த்தினால் விலைவாசி ஏறும் என்று யார் சொன்னது ? அவர்களுக்குப் பஞ்சப்படியில் 5 ரூபாய், 10 ரூபாய் கூடுதல் செய்தால் விலைவாசி ஏறும் என்பதை நான் திடமாக மறுக்கிறேன். அது ஆதாரம் அற்ற கருத்து. வேறு காரணம் வேண்டுமென்றால், சர்க்காருடைய இயலாமையைச் சொல்லலாம், இல்லாமையைச் சொல்லலாம். ஆனால் அப்படியும் சொல்ல முடியுமா என்றால் முடியாது. முதன் முறையாக கனம் முதல் அமைச்சர் அவர்கள் உபரி பட்ஜெட்டைத் தாக்கல் செய்திருக்கிறார்கள். கடந்த மூன்று ஆண்டுகளாக டெஃபிஸிட் பட்ஜெட் தான். இப்போது மட்டும் தான் உபரி பட்ஜெட்டைத் தாக்கல் செய்திருக்கிறார். நஷ்ட பட்ஜெட்— டெஃபிஸிட் பட்ஜெட் தாக்கல் செய்தே கடைசியில் உபரி காட்டும் திறமைசாலி நமது முதல் அமைச்சர் அவர்கள். இப்போதே உபரி காட்டியிருக்கிறார். கடைசியில் எவ்வளவு உபரி காட்டப் போகிறாரோ ? இப்படி உபரி இருக்கும்போது பஞ்சப்படியை உயர்த்திக் கொடுப்பதில் என்ன தவறு ? இது பணம் இல்லை என்று காட்டவில்லை, மனம் இல்லை என்று தான் காட்டுகிறது. இந்தக் குற்றச் சாட்டை நான் சர்க்கார் மீது சாட்ட விரும்புகிறேன். விலைவாசி ஏற்றம் இதனால் நிச்சயமாக இல்லை. இதற்கு முன் காங்கிரஸ் ஆட்சியாளர்கள் இன்னொரு கருத்து சொன்னார்கள். விலைவாசி ஏன் உயருகிறது என்றால் திட்டமிட்டு நிறைய தொழில்களை ஏற்படுத்தி விட்டோம், அந்தத் தொழிற்சாலைகளில் ஊழியம் செய்கிறவர்களுக்கு 11-00 a.m.
ஏராளமான கூலி கொடுக்கிறோம், கூலி கிடைக்கும் மக்கள் மார்க்கெட்டில் பொருள்களை வாங்கப் போகிறார்கள், பொருள் வாங்கும் கூட்டம் அதிகமாக இருப்பதால்தான் விலைவாசி உயருகிறது என்று சொன்னார்கள், அப்பொழுது சொன்ன தத்துவம் அது. ஆனால், இப்பொழுது புது தத்துவம் கூறிக்கொண்டிருக்கிறார்கள். விலைவாசியைக் கட்டுப்படுத்துவதற்கு இந்த ஆட்சி ஏதாவது திட்டத்தைச் சொல்லியதா ? இந்தக் குற்றச்சாட்டிலிருந்து இந்த ஆட்சி தப்பித்துக் கொள்ள முடியாது. எப்படி விலைவாசியைக் கட்டுப்படுத்தப் போகிறார்கள் ? அதற்கு ஏதேனும் திட்டம் வைத்திருக்கிறார்களா ? ஒரு அபூர்வமான திட்டத்தைச் சொல்லியிருக்கிறார் முதல் அமைச்சர் அவர்கள். நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்தப் போகிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். 1963–64-ல் இந்த மாதிரி சங்கங்கள் அமைக்கப்பட்டன. அதனால் விலைவாசி குறைந்ததா ? விலைவாசியைக் கட்டுப்படுத்தினார்களா ? கிடையாது. அப்பொழுது இம்மாதிரி சங்கங்களை ஏற்படுத்தினார்கள்; விலைவாசி குறையவில்லை. இப்பொழுதும் ஏற்படுத்தப் போகிறார்கள். இது வேடிக்கையாக இருக்கிறது, கண் துடைப்பாக இருக்கிறது. கூட்டுறவுப் பண்டகசாலைகளை ஏற்படுத்தி என்ன பிரயோசனம் ? கூட்டுறவு பண்டக சாலைகள் கூட்டுக் கொள்ளைச் சாலைகளாக அமைந்து விடுகின்றன. மன்னிக்க வேண்டும், கூட்டுக் கொள்ளைச் சாலைகள் என்று சொல்லுவதின் காரணமாக அந்த இலாகா அமைச்சர் அவர்கள் என் மீது வருத்தப்பட்டுப் புண்ணியம் இல்லை. உள்ளே இருக்கிற நிலைமை அப்படி ஆகிவிட்டது. கள்ளக்குறிச்சி சர்க்கரை ஆலையைப் பற்றி முதல் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்த ஆலையில் உண்மையான நிலைமை என்ன ? பங்குப் பணத்தையே ஒழுங்காகக் கட்டவில்லை. இது அமைச்சருக்குத் தெரியாதா ? அந்த ஆலையிலே

இருக்கிற அத்தனை நிர்வாகிகளும் காங்கிரஸ்காரர்கள். பங்குப் பணத்தை ஒழுங்காகக் கட்டவில்லையே ? இதைவிட பகிரங்கமான குற்றச்சாட்டு வேறு என்ன இருக்க முடியும் ? இது ஆடிட் அப்ஜெக்ஷனில் வரவில்லையா ? சர்க்கார் கவனத்திற்கு வரவில்லையா ? ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை ? ஒரே ஒரு காரணம் தான். ஆட்சி காங்கிரஸ்காரர்களுடைய ஆட்சி. காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் தவறு செய்து விட்டார்கள் ; அவர்களைக் காட்டிக் கொடுப்பதற்கு விருப்பம் இல்லை. இந்தக் குற்றச்சாட்டிலிருந்து ஆட்சியாளர் தப்பித்துக்கொள்ள முடியாது. 1½ ஆண்டு காலமாக கள்ளக் குறிச்சி சர்க்கரை ஆலையில் மகாசபை கூட்டம் நடக்கவில்லை. டைரக்டர் கூட்டம் கூட்டினாலும், ஆட்கள் வருவதில்லை. இந்த நிலையில் கள்ளக் குறிச்சி சர்க்கரை ஆலை இயங்குகிறது. இந்தச் சர்க்கரை ஆலை நாட்டு மக்களுக்குப் பயன்படுமா என்றால், இல்லை ; உள்ளே இருக்கிற பெருச்சாளி களுக்குத் தான் பயன்படும். கூட்டுக் கொள்ளைச் சாலையாக அமைந்து விட்டது என்ற குற்றச்சாட்டைச் சாட்டுகிறேன்.

அடுத்து, தொழில்துறை அமைச்சர் இலாகாவைப் பற்றி கூற விரும்பு கிறேன். சென்ற ஆண்டு முதல் அமைச்சர் அவர்கள் படித்த பட்ஜெட் உரையிலே இளநிலை தொழிற் பயிற்சிப் பள்ளிகள் ஏற்கனவே 10 பள்ளிகள் இருக்கின்றன, 1965-66-ல் இன்னொரு பத்து பள்ளிகள் துவக்கப்போகிறோம், 10 ஊர்களிலே துவக்கப் போகிறோம், இன்னென்ன ஊரிலே துவக்கப் போகி றோம் என்று ஊர் பெயர்களையும் படித்தார்கள். ஆனால், இந்த ஆண்டு பட்ஜெட் உரையைப் படிக்கிறார்கள். இப்பொழுது 14 இருக்கிறது என்று படிக் கிறார்கள். பத்தும்—பத்தும் பதினாலா ? நான் அரசாங்கத்தைக் கேட் கிறேன். 1965-66-க்கு முன்பு இருந்தது 10, 1965-66-ல் துவக்கப்படப் போவதாகச் சொன்னது 10, ஆக பத்தும், பத்தும் பதினாலா ? இதை எப்படி ஒத்துக்கொள்ளுவது ? 6 பள்ளிகளைத் துவக்கவில்லையா ? ஏன் இப்படி ஊரை ஏமாற்றுகிறார்கள் ? ஏன் ஊர் பெயர்களைச் சொல்ல வேண்டும் ? முடிந்த அளவுக்குச் சொல்லுவதுதானே ? ஏன் முடி யாத அளவுக்குச் சொல்லவேண்டும் ? ஏன் முடியாததைத் திட்டம் போட்டு சொல்லவேண்டும். வரவு-செலவுத்திட்டத்தில் சொன்னபடி நடப்பதற்குச் சர்க்கார் தவறி விட்டது. வரவு-செலவுத் திட்டத்தில் சொல்லுவதிலிருந்து தவறலாமா ? நேர்மையாக உள்ள அரசாங்கத்திற்கு இது நியாயம் என்று படுகிறதா ?

அது போகட்டும், புதியதாகக் கொண்டுவரப்பட்டிருக்கிற 1966-67-ம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில் ஏதாவது புதியதாக ஒரு தொழிற் சாலை துவக்குவது பற்றி குறிப்பிடப்பட்டிருக்கிறதா என்றால், இல்லை. போன வருஷம் கூறிய, அதற்கு முந்திய வருஷம் கூறிய, தொழிற்சாலை களைப் பற்றித் தான் குறிப்பிடப்பட்டிருக்கிறதே தவிர, இந்த வருஷம் புதிய தாகத் துவக்கப்படும் தொழிற்சாலை எதுவுமில்லை. அப்படி ஒரு தொழில் இலாகா இருக்கிறது. நாட்டில் தொழில் வளத்தைப் பெருக்குகிறோம் என்று சொல்லுகிறார்கள். கேட்டால் உபரி பட்ஜெட் போட்டிருக்கிறோம், தெரியாதா என்று அமைச்சர் அவர்கள் சொல்லுவார்கள்.

உபரி பட்ஜெட் என்ற பெயரால், நாட்டிலே வரி கிடையாது என்று சொல்லுகிறார்கள். எனக்கு முன்பு பேசிய காங்கிரஸ் உறுப்பினர்கள் வரி இல்லை என்பதற்காக மெத்த மகிழ்ச்சியைக் கூட தெரிவித்தார்கள். நான் காங்கிரஸ் உறுப்பினர்களுக்குச் சொல்லிக்கொள்வேன், போடவேண் டிய வரிகளையெல்லாம் அரசாங்கம் போட்டுத் தீர்த்தாகிவிட்டது. இனிமேல் வரி போடுவதற்கு ஒன்றுமில்லை. காங்கிரஸ் காரியக் கமிட்டிக் கூட்டத்தில் இது பற்றி ஒரு விவாதம் நடைபெற்றது. ஆளும் கட்சியினர் " நாங்கள் காங்கிரஸ்காரர்கள், காங்கிரஸ் கட்சியின் கொள்கையைப் பிரதிபலிக்கிறோம் " என்று சொல்லுவதினால்தான் காங்கிரஸ் காரியக் கமிட்டிக் கூட்டத்தில் நடைபெற்றதைக் குறிப்பிட விரும்புகிறேன். அங்கு பேசியவர்கள் மாநிலங் களுக்கு வருவாய் தேடுவதற்கு கள்ளுக் கடைகளைத் திறக்கவேண்டும், மது விலக்கை ரத்து செய்யவேண்டும் என்று பேசினார்கள். இந்த மாநிலத்து முதல் அமைச்சர் ஒரு வேளை கோபித்துக் கொள்ளலாம். இந்த மாநிலம்



மட்டுமல்ல, அகில இந்தியாவிலும் மது விலக்குத் திட்டம் ரத்து செய்யப்பட மாட்டாது என்று கூறலாம். ஆனால், பத்திரிகையில் இந்த மாதிரி செய்தி வந்திருக்கிறது. பத்திரிகைக்காரர்கள் மோசடிக்காரர்களா, தெரியாது. பத்திரிகையில் அம்மாதிரி செய்தி வந்திருக்கிறது. இதிலே இன்னொரு வேடிக்கை. கள் குடிப்பதற்கு ஆதாரத்தைத் தேடி ஒரு முதல் அமைச்சர் பேசுகிறார். எங்கே ஆதாரம் இருக்கிறது என்றால், பழங் காலத்தில் இராமாயணத்தில், இராமர் சோமபானம் அருந்தவில்லையா என்று ஆதா ரம் காட்டி ஒரு காங்கிரஸ் முதல் அமைச்சர் பேசுகிறார். இதில் இருந்து என்ன தெரிகிறது ? காங்கிரஸ் ஆட்சி போடவேண்டிய வரிகளை யெல்லாம் போட்டுத் தீர்த்தாகிவிட்டது, வருவாயைப் பெருக்குவதற்கு கள்ளுக்கடையைத் திறக்கவேண்டும் என்ற நிலைமைக்கு வந்துவிட்டது. எனக்கு முன்னால் பேசிய கனம் உறுப்பினர் திரு. சசிவர்ணத் தேவர் அவர்கள் கூட எங்கு பார்த்தாலும் வீட்டிற்கு வீடு கள்ளுக் கடை நிறைய இருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். அதை யாரும் மறைக்க முடியாது, மறுக்க முடியாது. என்னைக் கேட்டால் நான் சொல்வேன். உள்துறை அமைச்சர் என்மீது வருத்தப்படக் கூடாது. அந்த இலாகாவில் உள்ள அத்தனை பேர்களும் அப்படியில்லை. ஆனால், சில பேர்கள் இருக்கிறார்கள். ஈச்ச மரத்தையும், பனை மரத்தையும் கள் இறக்குபவர்களுக்கு வாடகைக்கு விட்டிருக்கிறார்கள் சில போலீஸ்காரர்கள். உடனே உள்துறை அமைச்சர் அவர்கள் அவர்களுடைய லிஸ்டைக் கொடுங்கள் என்று கேட்பார்கள். எனக்குத் தெரியும்.

**கனம் திரு. பூ. கக்கன் :** தயவு செய்து அந்த போலீஸ்காரர்களின் லிஸ்டைக் கொடுக்கும்படியாக கனம் அங்கத்தினர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். இப்பொழுது கொடுத்தாலும் சரி, அல்லது சில வாரங்கள் கழித்து அல்லது ஒரு மாதம் கழித்துக் கொடுத்தாலும் கூட நல்லதாக இருக்கும் என்று நினைக்கிறேன்.

**திரு. ப. உ. சண்முகம் :** கனம் உள்துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். தகவல் தருகிறேன். ஆனால், ஒன்று. தகவல் கொடுத்தால் என்ன செய்கிறார்கள் என்றால், சம்பந்தப்பட்டவர் களை மாற்றுவதற்குப் பதிலாக அவர்களை அங்கேயே நிரந்தரமாக வைத்து, திராவிட முன்னேற்றக் கழகத்தினர் மீது வஞ்சம் தீர்த்துக்கொள்கிறார்கள். அப்படி நடக்காது என்று அமைச்சர் அவர்கள் உத்திரவாதம் கொடுப் பார்களா ?

**MR. SPEAKER : Is the hon. Member really afraid ?**

**திரு. ப. உ. சண்முகம் :** Not that. நான் ஒன்றும் பயப்படவில்லை. ஆனால், என் கட்சியைச் சார்ந்தவர்கள் கிராமத்திலுள்ளவர்கள் தான் தக வல் கொடுக்கிறார்கள். உதாரணத்திற்காக நான் சொல்லுகிறேன் ஊர் பெயரை. எனது தொகுதியில் ராயம்பேட்டை என்ற ஊர் இருக்கிறது. தகவல் தெரிந்தவுடன் சம்பந்தப்பட்ட ஏ.எஸ்.பி.-யுடன் தொலை பேசியில் தொடர்பு கொண்டு " இந்த கிராமத்தில் இந்த மாதிரி நடக்கிறது. ஆனால், போலீஸ் ஸ்டேஷனில் சொன்னால் முன்கூட்டியே மாமூல் வாங்கிக்கொண்டு வந்து விடுவார்கள், ஆகையினால் தாங்கள் உடனே நடவடிக்கை எடுக்கவேண் டும் " என்று கூறினேன். அவரும் " சரி, சண்முகம் ! உடனே கவனிக்கி றேன் " என்று சொன்னார். போலீஸ் ஸ்டேஷனைக் கூப்பிட்டு " உடனே கவ னியுங்கள் " என்று சொன்னார். ஆனால், தொலை பேசியில் சொன்னவுட னே, சப்-இன்ஸ்பெக்டர் வீட்டிற்குப் போயிருந்தவர் மறுபடியும் ஸ்டேஷனு க்கு வந்து ஒரு படையை அழைத்துக்கொண்டு போவதற்கு முன்பு, ஒரு போலீஸ்காரர் முன்னால் போய் செய்யவேண்டிய காரியத்தை எல்லாம் செய்துவிட்டு வந்து விட்டார். வெறும் பானை தான் அகப்பட்டது, ஆள் அகப்படவில்லை. தகவல் சொன்னவரை கள்ளச்சாராயம் காய்ச்சுபவர்கள் அடித்து விட்டார்கள். போலீஸ் இலாகாவிடம் சொன்னால், 'தவறாகக் குற்றம் சாட்டினார்கள், எனவே அடித்தார்கள்' என்று சொல்லி விடுகிறார் கள். இப்படித் தகவல் கொடுப்பவர்களுக்குப் பாதுகாப்பு இல்லாமல் போய்

[திரு. ப. உ. சண்முகம்] [1st March 1966

விடுகிறது. இதற்கு என்ன செய்வது என்று நான் அரசாங்கத்தைக் கேட்கிறேன். உள்துறை அமைச்சர் அவர்களை நான் குற்றம் சாட்டாவிட்டாலும், அவர்கள் கீழ் இருக்கிற இலாகாவில் இப்படி நடந்து கொண்டிருக்கிறது, இதைச் சுத்தம் செய்யவேண்டும், தடுக்கவேண்டும், இதைத் தடுக்கின்ற பொறுப்பு ஆட்சியாளர்களிடத்தில் இருக்கிறதே தவிர, மற்றவர்களுக்கு இல்லை என்று நான் அரசாங்கத்திற்கு நினைவு படுத்த விரும்புகிறேன்.

இந்த ஆட்சி முதலாளித்துவத்திற்கு பெரும் பங்கு உதவி செய்து கொண்டிருக்கிறது என்ற குற்றச்சாட்டை திராவிட முன்னேற்றக் கழகம் நீண்ட நெடுங்காலமாக சொல்லிக்கொண்டு வருகிறது. உதாரணத்திற்கு ஒன்று சொல்வேன். சர்க்கார் பஸ் கட்டணத்தை உயர்த்தினார்கள். சர்க்கார் பஸ் கட்டணத்தை உயர்த்தும்பொழுது "எங்களுக்குக் கட்டுபடியாகவில்லை, ஆகவே கட்டணத்தை உயர்த்துகிறோம்" என்று சொன்னார்கள். உள்ளபடியே சர்க்காருடைய தூய நோக்கத்தைச் சந்தேகிக்காமல் இருக்கிறேன். ஆனால், சர்க்கார் என்ன உத்தரவு போட்டிருக்கவேண்டும்? மற்றபடி பஸ்களில் கட்டணத்தை உயர்த்தக் கூடாது என்று உத்தரவு போட்டிருக்கவேண்டும். சர்க்கார் பஸ் கட்டணம் ஏறியவுடன், தனிப்பட்ட பஸ் முதலாளிகளும் பஸ் கட்டணத்தை ஏற்றுவதற்கு உத்தரவு போட்டு விட்டார்கள். இது கொள்ளை அடிப்பவர்களுக்குத் துணையாக வந்து விட்டது, பஸ் முதலாளிகள் அத்தனை பேர்களும் அதிக லாபம் சம்பாதிப்பதற்கு இந்த அரசாங்கம் ஆகவேண்டிய எல்லா வேலைகளையும் செய்து முடித்து விட்டது.

இதைப்போலத் தான் நெல் விலை நிர்ணயித்தார்கள், அரிசி விலை நிர்ணயித்தார்கள்; ஆனால் ஒன்றுக்கு ஒன்று ஒத்து வரவில்லை. எங்கள் ஊரில் நடப்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். உணவு அமைச்சர் கூட தகவல் கேட்கலாம். திருவண்ணாமலையில் இம்மாதிரி நடக்கிறது. மொத்த வியாபாரிகளைப் பொறுத்த மட்டில், நெல் மூட்டைக்கு ரூபாய் மூன்று அதிகம் கொடுத்து வாங்குகிறார்கள். கண்டிரோல் ரேட்டுக்கு மேல் ரூ. 3 அதிகம் கொடுத்து வாங்குகிறார்கள் என்று பகிரங்கமாகச் சொல்லுகிறேன். அரசாங்கம் நிர்ணயித்திருக்கிற நெல்விலை குறைவு. மூட்டைக்கு ரூ. 3 அதிகம் கொடுப்பதன் மூலம் நெல் மூட்டைகளை அதிகமாக வாங்குவதற்கு முயற்சிக்கிறார்கள். இப்படி வாங்கி அதை அரிசியாக்கி விற்கும்போது அவர்களுக்கு மூட்டை ஒன்றுக்கு ரூ. 5 லாபம் வருகிறது. நெல்லுக்கு ஒரு விலை நிர்ணயித்தார்கள். ஆனால், அரிசி விலையைத் தூக்கி அதிகமாக நிர்ணயித்திருக்கிறார்கள், இரண்டிற்கும் இடையிலே பெரிய முதலாளிகள் லாபம் சம்பாதிப்பதற்கு அரசாங்கம் வழிவகுத்து விட்டது என்ற குற்றச்சாட்டை சாட்டுகிறேன். இப்படி இந்த சர்க்கார் சொல்லுவதும் பேசுவதும் முரணாகவே இருக்கிறது. பேசுவது என்னவோ சமதர்மம்; ஆனால் கையாளும் கொள்கை முதலாளித்துவத்தை ஆதரிக்கும் முறையாகத்தான் இருக்கிறது.

இன்றைக்கு இண்டஸ்ட்ரியல் இன்வெஸ்ட்மெண்ட் கார்ப்பொரேஷனை எடுத்துக் கொண்டால், அதற்கென்று ரூ. 25 லட்சம் ஒதுக்கியிருக்கிறார்கள். ஆனாலும், சர்க்காராக ஒரு தொழிலையும் ஆரம்பிக்கவில்லை என்கிற குற்றச்சாட்டை சுமத்துகிறேன். ஆகவே தான் சொல்லுகிறேன், சோஷலிசம் என்று நீங்கள் பேசாதீர்கள், சமதர்மம் என்று நீங்கள் பேசாதீர்கள், ஜனநாயக சோஷலிசம் என்கிற வார்த்தையை நீங்கள் பயன் படுத்தாதீர்கள் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். அந்த வார்த்தைகளை உபயோகித்து அந்த வார்த்தைகளுக்கே களங்கம் ஏற்படுத்தாதீர்கள்.

* * * * *

கடைசியாக ஒன்று சொல்ல விரும்புகிறேன். இந்த அரசாங்கம், முதலாளித்துவத்தைத் தழைக்கவிட்டு, விலைவாசிகளைக் கட்டுப்படுத்தாவிட்டால், பேராபத்து இந்த ஆட்சிக்கு வரவிருக்கிறது, புரட்சி ஏற்படக்கூடும் என்பதை உணரவேண்டும். அந்த நிலைக்குப் போகவேண்டாம் என்று வற்புறுத்தி வேண்டிக் கேட்டுக்கொண்டு முடிக்கிறேன். வணக்கம்.

---

**Expunged as ordered by the Chair.**



1st March 1966 ]

**திரு. கே. டி. கோசல்ராம் :** மிஸ்டர் ஸ்பீக்கர், சார், இந்த ஆண்டு நிதி நிலை அறிக்கையை ஆதரித்து, அரசாங்கத்திற்கு ஒரு சில யோசனைகள் சொல்லுவதற்கு நான் எழுந்து நிற்கிறேன். இந்த பட்ஜெட்டில், அறியாமையைப் போக்குவதற்கு, கல்வி இலாகாவிற்கு, இந்த அரசாங்கத்தின் வருமானத்திலே 24 சதவிகிதம் ஒதுக்கியிருக்கிறது. அதே நேரத்திலே விவசாயம், உணவு உற்பத்தி என்பவை இந்த தேசத்தின் சுலோகங்களாக உண்மையிலேயே எல்லோராலும் ஒப்புக்கொள்ளப் பட்டிருக்கின்ற ஒரு கொள்கை. சென்ற வருஷம் எட்டு கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருந்தது. இந்த வருஷம் ஒன்பது கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். எதிர் கட்சி நண்பர்கள் பேசினார்கள். இண்டஸ்ட்ரீஸுக்காக சென்ற வருஷம் ஆறு கோடி ரூபாயும் இந்த வருஷ பட்ஜெட்டிலே இரண்டு கோடி ரூபாயும் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்த மாநிலத்தில் அதிகமாக தொழிற்சாலைகள் வந்திருக்கின்றன. மத்திய சர்க்காராலும் பல தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. இன்னும், ரிஃபைனரி வரவிருக்கிறது. உரத் தொழிற்சாலை வருகிறது. அவை காம்பென்சேட் ஆகிவிடுகிறது. ஆனால், விவசாயத்தை அதிகரிக்க வேண்டும் என்று சொல்லும்போது, ஒன்பது கோடிதானே ஒதுக்கியிருக்கிறோம்? அதுபோதுமா என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். இந்த அளவில் விவசாயத்தை எந்த அளவிற்கு அதிகப்படுத்த முடியும் என்றும் பார்க்க வேண்டும் இதிலேயே மீன் இலாகாவும் சேர்ந்திருக்கிறது என்று தெரிகிறது. இது எப்படி போதும் என்பதைச் சந்தேகிக்கிறேன்.

மராமத்து இலாகா சம்பந்தப்பட்ட வரையில், இனி கிரவுண்ட் வாட்டர் தான் நமக்கு கதிமோட்சம் என்று இருக்கிறது. பூமிக்கு அடியில் இருக்கும் தண்ணீரை எந்த விதத்தில் உபயோகிக்கலாம் என்பதற்கு என்ன செய்திருக்கிறோம் என்று பார்க்கவேண்டும். கிரவுண்ட் வாட்டர் சர்வே சில ஜில்லாக்களிலே செய்யப்பட்டிருப்பதை அமைச்சர் திரு. கக்கன் அவர்களே நேரிடையாகப் பார்த்திருக்கிறார்கள். 25,000, அல்லது 30,000 ரூபாய் செலவில் சில இடத்தில், நாங்குநேரிப் பகுதியில், 10 கிணறுகள் வரை பெரிய மனிதர்கள் போட்டிருக்கிறார்கள். 30,000 ரூபாய் வரை செலவுசெய்திருக்கிறார்கள். ஒரு கிணற்றிலிருந்து கிட்டதட்ட 75 ஏக்கர் வரை நஞ்சை விவசாயம் செய்யலாம் என்று திட்டம் போட்டிருக்கிறார்கள். பவர்ட்ரில்கள் கிடைக்கவில்லை, ட்ராக்டர்களுக்கு ஸ்பேர் பார்ட்ஸ் கிடைக்கவில்லை. அது சம்பந்தமாக இந்திய சர்க்காரிடம் நம் சர்க்கார் சண்டையோ பூசலோ போட்டு செய்ய வேண்டிய காரியங்களைச் செய்ய வேண்டும். விவசாயத்தைப் பெருக்க வேண்டும் என்று சொல்லும் போது, விவசாயிகளுக்கு வேண்டிய கருவிகளையும் கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டும். விவசாயிகளுக்கு உரம் மட்டும் கொடுத்தால் போதாது. விவசாயிக்கு வேண்டிய கருவிகளுக்கு எவ்வளவு அந்நியச் செலாவணி வேண்டுமோ அவ்வளவையும் அடைந்து அவர்களுக்கு வேண்டிய கருவிகளையும்கொடுக்க ஏற்பாடுகள் செய்ய வேண்டும். விவசாயி வைத்திருக்கும் ட்ராக்டர் இன்றைக்கு ஒரு ஸ்பேர் பார்ட் இல்லாமல் 7, 8 மாதகாலம் தூங்கிக்கொண்டு இருக்கிறது. அப்படிப்பட்ட கருவிகள் செகோஸ்லோவேகியா முதலிய அந்நிய நாடுகளிலிருந்து வரவேண்டியிருக்கிறது. 500, 1,000 பெருமானமுள்ள ஸ்பேர் பார்ட்ஸ் இல்லாமல் தூங்கிக் கொண்டிருக்கும் பரிதாபகரமான நிலைமை இருக்கிறது. ஆகவே, இந்த ஒன்பது கோடி மட்டும் செலவு செய்வதால், அதிகமான பலனைக் காண முடியுமா என்பதையும் எண்ணிப் பார்க்கவேண்டும். அதற்காகத்தான் சொல்லுகிறேன், ஒரு டோக்கனாக 100 ரூபாயைப் பெற்றுக்கொண்டால், பிறகு எவ்வளவு வேண்டுமானாலும் சர்க்கார் செலவழித்து வாங்கிக் கொள்ளலாம். ஆகவே, விவசாயத்திற்கு இன்னும் அதிகமான தொகையைச் செலவழிக்க வழி வகை செய்ய வேண்டும் என்று யோசனை கூற விரும்புகிறேன்.

இன்றைக்கு நாம் விவசாயத்தைப் பெருக்கியே ஆக வேண்டும். தன்மானத்தைக் காப்பாற்றியாக வேண்டும். உலகத்திலே பல நாடுகளிடமும் அடிமைகளாக வேண்டிய அவசியம் இல்லை. பட்டினி இருந்தாலும் இருக்கலாம். ஆகவே, விவசாயத்திற்கு எவ்வளவு வேண்டுமானாலும்

செலவு செய்வது மிக மிக அவசியமானது. இந்த அரசாங்கமும், இந்த அமைச்சர்களும், அத்தனைபேரும் விவசாயம்தான் குறிக்கோள், வேறு வேலை கிடையாது, வேறு திட்டம் இல்லை என்று சொன்னால் கூட, அதை நான் போற்றுவேன், பாராட்டுவேன்.

அடுத்தபடியாக, இந்த பிளாக்குகளிடம் விவசாய உற்பத்திப் பொறுப்பைக் கொடுத்திருக்கிறோம். ஜனநாயகத்தைப் பற்றி அரசியல் கட்சிகளுக்கிடையே பலவிதமான அபிப்பிராய பேதங்கள், அவரவர்களுடைய நினைப்புப் போல இருக்கிறது. முதலாளிகளை ஆதரிப்பவர்களும் சோஷலிசத்தைப் பற்றிச் சொல்வது என்பதெல்லாம் இருக்கிறது. அதைப்பற்றியெல்லாம் இப்பொழுது பேசவேண்டிய அவசியம் இல்லை. இன்றைக்கு நம் ஜனநாயகத்திலே, பிளாக்குகளிடம் விவசாய உற்பத்தியைப் பெருக்கும் பொறுப்பைக் கொடுத்திருக்கிறோம். பிளாக்கில் ஒரு அக்ரிகல்சர் டெமான்ஸ்ட்ரேடர் அக்ரிகல்சர் ஈ. ஓ.வாக இருக்கிறார். ஆனால், அவர் யாருடைய கண்ட்ரோலில் இருககிறார் என்பதைத் தெரிவிக்க வேண்டும் என்று அமைச்சரிடம் கேட்கிறேன். டி.ஏ.ஓ. வைக் கேட்டால், அவர் தன் கண்ட்ரோலில் ஒன்றும் இல்லை என்று சொல்லுகிறார். பிளாக்கிலே கேட்டால், அவர் அக்ரிகல்சர் டிபார்ட்மெண்ட் உத்யோகஸ்தர் எங்களுக்கு அவர்மேல் கண்ட்ரோல் இல்லை என்று கூறுகிறார்கள். இந்தக் கொள்கையில் அடிப்படை ஆணிவேர் யாருக்குத்தான் சொந்தம் என்று இல்லாமல் இருக்கிறது.

**கனம் திரு. பூ. கக்கன் :** அதிகாரம் யார் யாருக்கு இருக்கிறது என்பது திட்டவட்டமாக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

**திரு. கே. டி. கோசல்ராம் :** ஏற்பாடு செய்ய வேண்டும் என்று தான் சொல்லுகிறேன். அரசாங்கம் ஸ்பஷ்டமாக, அவர் யார் கண்ட்ரோலில் இருக்கிறார், யாருக்குக் கட்டுப்பட்டவர் என்று நிச்சயம் செய்து விட வேண்டும் என்று தான் சொல்லுகிறேன்.

விவசாய இலாகா டைரக்டராக இருந்தாலும் சரி, ஜாயிண்ட் டைரக்டர்களாக இருந்தாலும் சரி, மற்றும் எத்தனை அதிகாரிகள் இருந்தாலும் சரி, கிராமத்தில் போய் வேலை செய்கிற மனிதன் அந்த விவசாய விஸ்தரிப்பு அதிகாரியாகத்தான் இருக்கிறார். அந்த அதிகாரி யாருடைய மேற்பார்வையில் இருக்கிறார் என்று தெரியாமல் இருக்கிறது. அதைச் சர்க்கார் நல்ல முறையில் நிர்ணயம் செய்துவிட்டால் நன்றாக இருக்கும் என்பதற்காகத் தான் அந்த யோசனையைச் சொன்னேன்.

அடுத்தபடியாக, நில வரி (லாண்ட் டாக்ஸ்). அதிலிருந்து ஆறு கோடி ரூபாய் கிடைக்கிறது. ஆறு கோடி ரூபாய் தரக்கூடிய நில வரியையே என் நாம் "அபாலிஷ்" செய்யக்கூடாது ? என்று நான் கேட்கிறேன். நில வரியை "அபாலிஷ்" செய்துவிட்டால் பணம் போய் விடுமே என்று சொல்லலாம். ஏக்கர் ஒன்றுக்கு ஒரு ரூபாய் தீர்வை செலுத்தும் விவசாயி, கமர்ஷியல் க்ராப் போட்டு, ஏக்கருக்கு ஐயாயிரம் ரூபாய் வருமானம் அடைந்துகொண்டிருக்கிறார் என்பதை மறுக்கமுடியாது. ஆனால், டெல்டா ஏரியாவில் நெல் சாகுபடி செய்து கொண்டிருப்பவருக்கு ஏக்கர் ஒன்றுக்கு 200 ரூபாய்க்கு மேல் வருமானம் கிடைக்காது. கமர்ஷியல் க்ராப் போடுகிறவர் ஏக்கர் ஒன்றுக்கு ஒரு ரூபாய் வரி செலுத்தும் போது, நெல் சாகுபடி செய்கிறவர் ஏக்கர் ஒன்றுக்கு 20 ரூபாய் வரி செலுத்துகிறார். ஆகவே, நில வரியை "அபாலிஷ்" செய்து விட்டு, "ஈல்ட்" ஐக் கணக்கிட்டு, அதற்குத் தகுந்தாற்போல் வரி விதிக்கலாம். நிலத்திலிருந்து எவ்வளவு விளைச்சல் ஆகிறதோ, அதனுடைய மதிப்பைக் கணக்கிட்டு, அந்த வருமானத்தின் மீது வரி போடலாம். நில வரியை எடுத்துவிட்டு, வருமானத்தின் மீது வரி போடுவோமானால், தற்போது நிலவரி மூலம் கிடைப்பதைவிட அதிகமாகக் கூட நமக்கு வரி கிடைக்கக் கூடும். இப்பொழுது கிடைக்கும் ஆறு கோடி ரூபாயை விட அதிகமான வருமானம் வரக்கூடும். நிலத்திற்கு வரி போட வேண்டுமா, போட வேண்டாமா என்ற பிரச்னை நீண்டகாலமாக இருந்து வருகிறது. நான்





சொல்லக்கூடிய மாற்று யோசனையை இந்த அரசாங்கம் ஏற்றுக்கொண்டால் நல்ல நிலைமை ஏற்படும். அப்படிச் செய்யாவிட்டால், நெல் பயிரிடுகிறவர்கள் நெல்லையே போட்டுக்கொண்டிருப்பார்கள். கமர்ஷியல் க்ராப் பயிரிடுகிறவர்கள் கமர்ஷியல் க்ராப்பையே போட்டுக்கொண்டுதான் இருப்பார்கள். எந்தப் பயிர் சாகுபடி செய்தாலும், வருமானத்தின் அடிப்படையில் வரி போடுவது தான் நல்லது. உலகத்திலேயே நிலத்தின் மீது வரி போடக் கூடிய தேசம் நம்முடைய இந்தியா தேசம் தான். மற்ற தேசங்களில் எல்லாம் வருமானத்தின் பேரில் தான் வரி போடுகிறார்கள். நம்முடைய தேசமும் உலகத்தோடு ஒத்துத்தான் போக வேண்டும். உலகத்திற்குப் புறம்பாக எந்த தேசமும் இருக்க முடியாது.

அடுத்தபடியாக, விவசாயத்திற்காகக் கடன் வேண்டுமென்று நில அடைமான பாங்குக்குப் போக வேண்டியிருக்கிறது. கனம் முதல் அமைச்சர் அவர்கள் ஒரு சமயத்தில் தெரிவித்த கருத்து எனக்கு நினைவுக்கு வருகிறது. "கடன் வேண்டுமென்று நானே நில அடைமான பாங்கிற்கு மனுப் போட்டிருந்தேன். ஆறு மாதம் கழித்துக் கூடப் பணம் வரவில்லை. கடைசியில் கடனே வேண்டாம் என்று சொல்லிவிட்டேன்" என்று முதல் அமைச்சர் அவர்கள் ஒரு காலத்தில் பேசியதாக நான் படித்தேன். (குறுக்கீடு) பொன்னேரியில் ஒரு கூட்டத்தில் அவர் அவ்வாறு பேசினார். அந்தக் கூட்டத்தில் நானும் இருந்தேன் என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன். இம்மாதிரி சிக்கல்கள் இருக்கின்றன.

விவசாயிகளுக்குக் கடன் கிடைப்பதற்கு ஒரு ஏற்பாடு செய்ய வேண்டும். "எ.·.பெக்டிவ்" வாகச் செயல்படக்கூடிய அமைச்சர் ஒவ்வொரு ஊராகச் சென்று, சம்பந்தப்பட்ட எல்லா அதிகாரிகளையும் கூட்டி வைத்துக்கொண்டு, அங்கிருக்கும் ஜங்கம சொத்து ஒவ்வொன்றின் மதிப்பையும் நிர்ணயித்து, அதற்குரிய சர்ட்டிபிகேட்டைக் கொடுத்துவிட வேண்டும். அந்த சர்ட்டிபிகேட்டை எந்த பாங்கில் கொடுத்தாலும், குறிப்பிட்ட தொகை வரையில் கடன் கொடுக்கலாம் என்று சாசனம் செய்து விட்டால் நலமாக இருக்கும். அப்படிப்பட்ட ஒரு முறை இல்லாத இந்த நிலையில், ரூ. 500 கடன் ஸாங்ஷன் ஆனாலும், கையில் கிடைப்பது ரூ. 200 என்றால், பாக்கி ரூ. 300 எங்கே போகிறது என்பதைப்பற்றி அதிகம் சொல்ல வேண்டியதில்லை. கண்ணாலே பார்க்கிறோம்; மறைத்துப் பேசுகிறோம். மனத்திற்குத் தெரிகிறது. வெளியே தெரிவிக்க முடியாத சங்கடம் இருக்கிறது. இதை மாற்றியமைக்க எந்த "மெஷினரி"யைக் கையாளலாம், என்ன செய்வது என்பது பற்றிய எண்ணம் அமைச்சர்களுடைய மனத்தில் இல்லாமல் இல்லை. ஆனால், "அட் எ ஸ்ட்ரெட்ச்" சில், ஒரே சமயத்தில், ஒன்றும் செய்துவிட முடியாது என்பதையும் நான் ஒத்துக்கொள்ளுகிறேன். இந்த நிலைமைக்கு ஒரு பரிகாரமாகத்தான், ஒவ்வொரு விவசாயிக்கும் ஒரு சர்ட்டிபிகேட் கொடுத்துவிட வேண்டும். அந்த சர்ட்டிபிகேட்டை எந்த பாங்கில் கொடுத்தாலும் கடன் கிடைக்கும் என்ற நிலையை உருவாக்க வேண்டும். பாங்கிலே பணம் போட்டிருப்பவர்கள் செக் கொடுத்த உடனே பணம் பெற்றுக்கொள்வது போல, அந்த சர்ட்டிபிகேட்டில் கண்டுள்ள தொகை அளவு வரைக்கும் கடன் பெறுவதற்கான ஏற்பாட்டை விவசாயிக்குச் செய்து கொடுத்துவிட வேண்டும். செக் கொடுத்துப் பணம் வாங்குவது போன்ற வசதியை விவவசாயிக்குச் செய்துகொடுத்தால் இந்த நாட்டில் விவசாயம் மிகத் தீவிரமாக முன்னேறி வர முடியும் என்பதில் சந்தேகமே இல்லை. அப்படிச் செய்யாமல் இன்றைக்கிருக்கும் வெள்ளைக்கார ஸ்ட்ரக்சரையே வைத்துக்கொண்டு விவசாயத்தைப் பெருக்க முடியும் என்றால், அதிலே எனக்கு நம்பிக்கை இல்லை. இந்த சர்க்கார் தாராள மனத்தோடு, நல்ல எண்ணத்தோடு, கொள்கை ரீதியாகச் செய்ய வேண்டும் என்று நினைக்கிறது. கோடிக்கணக்கான பணத்தைக் கொடுக்க வேண்டும் என்று நினைக்கிறது. ஒரு கோடி ரூபாய் ஒதுக்குகிறது என்றாலும், அதிலே எத்தனை லட்சம் வீணாகப் போகிறது என்பதைக் கவனிக்க வேண்டும். நான் சொல்கிற முறைப்படி, அரசாங்கம் ஒதுக்கும் பணம் பூராவும் விவசாயிகளுடைய கையில் நேரடியாகப் போய்ச் சேருவதற்கான வாய்ப்பு ஏற்பட முடியும்; அதைச் சற்று அமைச்சர் அவர்கள் கவனித்துச் செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன். கிராமம் கிராமமாக

[திரு. கே. டி. கோசல்ராம்] [1st March 1966

அமைச்சர்கள் போய் உட்கார்ந்து கொண்டு இதைச் செய்ய வேண்டும். "மாடல்" ஆக முதலில் நான்கு கிராமத்தில் செய்து பார்க்கட்டும். பிறகு இதை ராஜ்யம் முழுவதும் செய்ய வேண்டும் என்று முயற்சி செய்ய வேண்டும். இப்படிச் செய்தால் இந்த நாட்டில் இருக்கும் கஷ்டத்தை ஒரு நொடிப் பொழுதில் போக்கிவிடலாம் என்று நான் யோசனை கூறுகிறேன்.

அடுத்தபடியாக, சர்க்கார் அதிகாரிகளுக்கு ஒன்றும் கொடுக்கவில்லை என்ற குறை தெரிவிக்கப்படுகிறது. வரி போட்டாலும் கஷ்டம்; போடா விட்டாலும் கஷ்டம். யாருக்கு வரி போடுவது என்பதிலும் கஷ்டம். இப்படிப்பட்ட நிலையில், சர்க்கார் அதிகாரிகளுக்கு ஓரளவு நன்மை கிடைக்கும் பொருட்டு, "காஃபெடேரியா" மாதிரி சர்க்கார் அலுவலகங்களில் எல்லாம் ஏற்படுத்தி, மத்தியான சாப்பாடு ஸப்ஸிடைஸ் செய்து கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டும். இப்படிச் செய்தால் அவர்களுக்கு செய்யக் கூடிய உதவி "ஸப்ஸ்டான்ஷியல்" ஆக இருக்கும். அதற்கு சர்க்கார் ஸப்ஸிடி கொடுக்க வேண்டும். செக்ரடேரியட், கலெக்டர் ஆபீஸ், தாலுக்கா ஆபீஸ், மற்றும் சர்க்கார்த் தலைமை அலுவலகங்கள் போன்ற இடங்களில் எல்லாம் "காஃபெடேரியா" க்கள் வைத்தால் ஓரளவு நலமாக இருக்கும். பகல் 12 மணியிலிருந்து பிற்பகல் 3 மணி வரையில் அந்த "காஃபெடேரியாக்"கள் திறந்து வைக்கப்பட்டிருக்கலாம். ஆறணாவுக்கு நல்ல சாப்பாடு போடக்கூடிய நிலையை உண்டாக்க வேண்டும். அம்மாதிரி காஃபெடேரியாக்கள் வைக்கக்கூடிய ஏற்பாட்டை இந்த ராஜ்யம் பூராவிலும் வைத்தால் ஓரளவு தான் தொகை செலவாகக் கூடும். (குறுக்கீடு) "மிஸ்யூஸ்" பண்ணிவிடக்கூடும் என்று கனம் உறுப்பினர் திரு. கலியாண சுந்தரம் சொல்கிறார். "மிஸ்யூஸ்" செய்யாமலிருக்கப் பார்த்துக்கொள்ளத் தான் சர்க்கார் இருக்கிறது. அதை அவர்கள் செய்ய வேண்டும். நாம் கொள்கையைச் சொல்லிவிடலாம். செய்ய வேண்டியது சர்க்காருடைய கடமை. "மிஸ்யூஸ்" இல்லாமல் நடைபெறக்கூடிய வகையில் "காஃபெடேரியா" அரேஞ்மெண்ட் செய்து விட்டால், சர்க்கார் ஊழியர்கள் இந்த அமைச்சரவையைப் பாராட்டுவார்கள். தற்போது, சர்க்கார் அதிகாரிகள் எவ்வளவுதான் வீட்டிலிருந்து உணவு கொண்டு வந்தாலும், அது அவர்களுக்குப் போதுமானதாக இருக்க முடியாது. அதற்குப் பதிலாக ராஜ்யத்தின் தலை நகரத்திலும், மற்ற எல்லா ஜில்லாக்களிலும் சர்க்கார் அலுவலகங்கள் இருக்கக்கூடிய இடங்களில் எல்லாம் காஃபெடேரியாக்களை ஆரம்பித்து நடத்தினால் அது அவர்களுக்குப் பலனுள்ளதாக இருக்க முடியும்; அவர்களும் நம்மைப் பாராட்டுவார்கள்.

யாரைப் பார்த்தாலும் இன்றைக்குக் காந்தீயத் தத்துவத்தைப்பற்றி பேச ஆரம்பித்து விட்டார்கள். கொலை செய்யப் போகிறவன் கூட கடவுளை வேண்டிக் கொள்கிறான். கொள்ளை அடிக்கப்போகிறவன் கூடக் கடவுள் பெயரைச் சொல்கிறான். அது போல காந்தீயத்தைச் சொல்வது பழக்கமாகப்போய் விட்டது. மகாத்மா காந்தியின் பெயரைச் சொல்வது சர்வ சாதாரணமாகப் போய்விட்டது. இது ஒருபுறம் இருக்கட்டும்.

திருநெல்வேலி ஜில்லாவில் ஒரு இன்ஜினீரிங் காலேஜ் அமைக்க வேண்டும் என்று நான்கு வருஷங்களுக்கு முன்பே ஏற்பாடெல்லாம் செய்யப்பட்டது. மத்திய அரசாங்கம் அதற்குரிய பர்மிஷன் எல்லாம் கொடுத்தது. ராஜ்ய சர்க்காரும் அனுமதித்தது. ஆனால், அது ஏன் இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை என்று தெரியவில்லை. 'இன்ஜினீரிங் காலேஜ், மெடிகல் காலேஜ் இதெல்லாம் வரும் என்று சொன்னீர்களே? எங்கே வந்தது?' என்று ஊரில் உள்ளவர்கள் கேட்கக்கூடிய நிலையிலேயே இருக்கக்கூடாது. அதற்கெல்லாம் இடம் அளிக்காமல், உடனடியாகத் துவக்க வேண்டும். மத்திய அரசாங்கம் பணம் ஒதுக்கியும், மாநில அரசாங்கம் அனுமதி அளித்தும், எதற்காக இன்ஜினீரிங் காலேஜ் நான்கு வருஷமாக வராமல் இருக்கிறது என்பதை அரசாங்கம் தெளிவு செய்தால் நல்லது. நில ஆர்ஜிதம் செய்து நான்கு வருஷங்கள் ஆகின்றன. நில ஆர்ஜிதத்திற்காக கலெக்டர் ஓடிக்கொண்டே இருந்தார். நான்கு வருஷங்களாக இன்ஜினீரிங் காலேஜ் திருநெல்வெலியில் துவக்கப்படாமல் இருக்கிறது என்பதற்கான காரணம் என்ன என்று தெரியவில்லை,



1st March 1966] [திரு. கே. டி. கோசல்ராம்]

ராம நதி கடானா நதித் திட்டங்களைப்பற்றி ஒவ்வொரு வருஷமும் சொல்லிக் கொண்டு வருகிறோம். அமைச்சர் திரு. ராமைய்யா அவர்களும் சொல்லிக் கொண்டு வந்திருக்கிறார். சென்ற வருஷ பட்ஜெட்டிலே கூட குறிப்பிடப் பட்டிருந்தது. நாற்பது லட்ச ரூபாய் டோக்கனைப் போட்டிருந்தார்கள். இருந்தும், திட்டக் கமிஷனுக்குப் போவதும், திரும்பி வருவதுமாக இருக்கிறது. இந்தத் திட்டங்களை எடுத்துக்கொள்ளாமல் இருப்பதற்குக் காரணம் என்ன என்பதை அமைச்சர் கனம் திரு. ராமைய்யா அவர்கள் கண்டுபிடிக்க வேண்டும். காரணத்தைத் துருவிப் பார்க்கக் கூடியவர் அமைச்சர் திரு. ராமைய்யா அவர்கள் என்பது என்னுடைய சொந்த அபிப்பிராயம். அவர் இந்தத் திட்டங்களிலே சற்றுக் கவனம் செலுத்த வேண்டும். இந்தத் திட்டம் மேலும் கீழும் போய் வந்து கொண்டிருப்பதில் அர்த்தமே இல்லை. ராம நதி, கடானா நதி, மணிமுத்தாறு திட்டம் என்று கம்ப ராமாயணம் சொல்வதுபோல் சொல்லிக்கொண்டே இருப்பதற்கு ஒரு முடிவு கட்ட வேண்டும். அடுத்த முறை அமைச்சர் திரு. ராமைய்யா அவர்கள் டெல்லிக்குப்போகும்போது, இதைக் கண்டிப்பாகக் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இப்பொழுதெல்லாம் ஒரு காரியம் நடக்கவேண்டுமென்றால், டேபிள் டேபிளாகப் போய் உட்கார்ந்தால்தான் காரியம் நடக்கிறது. சர்க்கார் அதிகாரிகளுக்குப் போதிய ஊதியம் கொடுக்க வேண்டும் என்று சொல்கிறவர்களில் நான் முதல் ஆள் தான். இருந்தாலும், டேபிள், டேபிளாகப் போய் உட்கார்ந்தாலொழிய பேப்பர் நகர மாட்டேன் என்கிறது என்பதையும் சொல்லத்தான் வேண்டியிருக்கிறது. 1947-ம் வருஷத்திலிருந்து தொழிலாளர் சம்பந்தமான எந்தச் சட்டங்கள் வந்தாலும், அத்தனை செலெக்ட் கமிட்டிகளிலும் மெம்பராக நானும் இருந்து வருகிறேன், நண்பர் திரு. கலியாணசுந்தரம் அவர்களும் இருந்திருக்கிறார். தொழிலாளர்களுடைய உரிமைக்காக நாம் பாடுபட்டிருந்தாலும், அந்தத் தொழிலாளர்களுடைய பொறுப்பைப்பற்றி நாம் ஒன்றும் சொல்லவில்லை. அதே போன்று சர்க்கார் ஊழியர்களுக்கும் ஏதாவது கொடுக்க வேண்டும் என்று பேசுகிறோம். அவர்களுக்கும் ஏதோ அவ்வப்போது கொடுக்கிறோம். என்றாலும், அவர்களுடைய பொறுப்பு என்ன என்பதையும் நிர்ணயிக்காமல் ரொம்ப சங்கடமான நிலை, இருக்கிறது. நேரடியாகப் போகாமல் எந்த சமாசாரமும் நடக்காது என்ற நிலை இருக்கிறது. அங்கங்கே போய் செக்கு தள்ளுவது மாதிரித் தள்ளினால் தான் காரியம் நடக்கிறதே தவிர, மற்றப்படி ஒன்றும் நடப்பதில்லை. ப்ரொக்யூர்மெண்ட் பற்றி எங்கள் ஊர் அங்கத்தினர்கள் திரு. செல்வராஜன், 11-30 a. m. திரு. வீரபாஹு எல்லோரும் பேசினார்கள். ஏற்கனவே நானும் பேசியிருக்கிறேன். ஒரு ஊரில் ஒரு ஏக்கராவுக்கு 20 மூட்டை, இன்னொரு ஊரில்—பத்து கலம் கூட விளைந்திருக்காது—அங்கே ஏக்கராவுக்கு 16 மூட்டை என்பதாக அதிகாரிகள் நடைமுறையிலேயே சாத்தியமில்லாத வகையில் உத்தரவு போடுகிறார்கள். இப்படிச் செய்வது சரியல்ல. அதுபோலவே ரேஷன் கடையில் ரூ. 1·38-க்கு படி அரிசி போடுகிறார்கள். வெளியில் தலைச்சுமையாக, சைக்கிளிலே, பெட்டியிலே கொண்டு வந்து ரூ. 1·10—க்குக் கொடுக்கிறார்கள் என்றால் இதைப் பிடித்துக் கொண்டுபோய் வழக்குப் போட்டாலும் பரவாயில்லை—போலீஸ் ஸ்டேஷனில் போடுகிறார்கள். நான் அமைச்சர் அவர்களை வேண்டிக் கேட்டுக்கொள்ளுகிறேன், உடனடியாக அதிகாரிகளுக்கு திட்டவட்டமாக இது போலச் செய்யக்கூடாது என்று உத்தரவிட வேண்டும். கள்ளக் கடத்தலில் பெரிய பெரிய திமிங்கிலங்கள் எல்லாம் ஈடுபடுகின்றன. பாவம், இந்த ஏழை எளியவர்களைப் போய்க் கொடுமைப்படுத்துவது சரியல்ல. திருட்டுத்தனமாகக் கொண்டு போகிறவர்களைச் சுட்டுத் தள்ளுங்கள், நாங்கள் சம்மதிக்கிறோம்.

**கனம் திரு. பூ. கக்கன்:** சுட்டுத்தள்ளுங்கள் என்று சொல்லி மேலும் எங்களுக்குத் தொந்தரவு கொடுக்க கனம் அங்கத்தினர் பார்க்கிறாரா என்று அறிய விரும்புகிறேன்.

**திரு. கே. டி. கோசல்ராம்:** ஆனால் இப்படி ஏழை எளியவர்கள் சைக்கிளிலும், பெட்டியிலும் எடுத்து வருவதைத் தடுப்பது, அரிசியை அள்ளிக்கொண்டுபோய் போலீஸ் ஸ்டேஷனில் போட்டுவிடுவது என்பது எல்லாம் மிகவும் வருந்த வேண்டிய செய்கைகளாகும். அமைச்சர் அவர்கள் உடனே இதைத் தடுக்க வேண்டும்.

[ திரு. கே. டி. கோசல்ராம் ] [ 1st March 1966

இன்றைக்கு கேரளாவை எடுத்துக்கொண்டால் பத்து லட்சம் ஏக்கராவுக்கு மேல் பாசனம் செய்யக்கூடிய தண்ணீரை, தங்களுக்குப் பயன்படாது கடலில் போய் விழுந்தாலும் சரி, நமக்குக் கொடுக்க மாட்டோம் என்று இருக்கிறார்கள். தண்ணீர் கொடுக்க சம்மதித்தால் எத்தனை வேண்டுமானாலும் நாம் அவர்களுக்கு அரிசி கொடுக்கலாம். தண்ணீரும் கொடுக்க மாட்டோம், அரிசி ரேஷனும் போதாது என்பதாக அராஜகச் செயல்கள் புரிய அவர்களை விட்டு வைப்பது நியாயம் தானா என்பதை யோசிக்க வேண்டும். ஒரு தேசம், ஒரு நாடு என்று பேசுகிறோம். இந்த தேசத்தில் உள்ள தண்ணீர் எல்லாம் பொதுவானது; ராமையா அவர்களுக்கோ கோசல்ராம் அவர்களுக்கோ சொந்தமானதல்ல என்பதை மத்திய அரசாங்கத்திலே எடுத்து வைத்து, தேசப் பொது நலனைக் கருதி தண்ணீர் எந்தப் பகுதியில் இருந்தாலும் பொதுவாகப் பயிர் செய்யக்கூடிய பகுதியில் அதைப் பயன்படுத்திக் கொள்ள வகை செய்தால், நாட்டில், தேசத்தில், கேரளாவில் பஞ்சமே இருக்காது. தேசம் ஒன்றாகவே இருக்கவேண்டும் என்கிற தேசபக்தர்களில் நானும் ஒருவன். கொஞ்சங்கூட அதில் சந்தேகம் கிடையாது.

கொள்முதல் செய்ய வேண்டும் என்கிறோம். அம்பாசமுத்திரம், ஸ்ரீவைகுண்டம் ஆகிய இடங்களை எடுத்துக்கொண்டால் களத்துமேட்டில் நெல் கொட்டிக்கிடக்கிறது. கொள் முதல் செய்ய ஆள் இல்லை. கொள் முதல் செய்வது என்றால் சர்க்கார் கஜானாக்களில் இருந்து பணத்தை எடுத்துக்கொடுத்து நல்ல முறையில் செய்ய வேண்டும். ஆனால் ஒரு பக்கம் ஏழை எளியவர்களைத் துன்பப் படுத்துகிறது. இதை அரசாங்கம் கவனிக்க வேண்டும்.

விவசாய அமைச்சர் அவர்களுக்கு மீண்டும் நான் சொல்கிறேன்—பெரிய ஸ்கீம் போட்டு அண்டர் க்ரவுண்டு வாட்டர் எல்லாவற்றையும் பயன்படுத்த வேண்டும். பவர் ட்ரில்கள் வாங்கப் பணம் ஒதுக்கிப் பயன் இல்லை. மத்திய அரசாங்கத்தினிடம் வற்புறுத்தி, போராடி அவசியம் போதுமான பவர் ட்ரில்கள் இறக்குமதி செய்ய ஏற்பாடு செய்தாக வேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்ளுகிறேன். வணக்கம்.

**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** கனம் சபாநாயகர் அவர்களே, இந்த ஆண்டு பட்ஜெட்டை நமது மன்றத்தில் கனம் முதல் அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்திருக்கிறார்கள். அந்த அறிக்கையில் இருக்கிற நல்ல அம்சங்களை எல்லாம் எடுத்து காங்கிரஸ் கட்சியில் இருக்கிற உறுப்பினர்கள்—திரு கோசல்ராம் அவர்கள் நீங்கலாக மற்றவர்கள்—பேசினார்கள். அதில் உள்ள குறைகளை எடுத்து எதிர்க்கட்சியில் உள்ள உறுப்பினர்கள் காட்டினார்கள். விவாதம் இரண்டு நாட்களாக நடைபெற்று வருகிறது. இதில் நானும் என் கருத்துக்களைக் கூறலாம் என்று வந்திருக்கிறேன். நமது முதல் அமைச்சர் அவர்கள் மிகவும் சிரமப்பட்டு ஒரு மணிக்கு மேலாக அந்த அறிக்கையைப் படித்தார்கள். அந்த அறிக்கையில் பாராட்டத்தக்க அம்சம் ஒன்றும் கிடையாது என்று நான் சொல்வேன். இந்த ஆண்டு வரி ஒன்றுமே கிடையாது என்று சொன்னார்கள். அதுசரியல்ல. இந்த ஆண்டு கணக்குக்கு அவர்கள் முன்கூட்டியே பலவகையான வரிகளைப் போட்டு விட்டார்கள். அடுத்து இந்த ஆண்டு எந்தவிதமான சலுகையும் கிடையாது என்றார்கள். சலுகைகள் இல்லை என்றால் இல்லைதாம்.

இன்றைய தினம் இந்த அறிக்கையில் ரெவின்யூக் கணக்கில் 30 லட்சம் உபரியாகக் காட்டப்படுகிறது. அது உண்மைக்குப் புறம்பானது என்று நான் கருதுகிறேன்.

கடந்த காலத்தில் 8 கோடிக்கு மேல் வரி போட்டிருக்கிறார்கள். 16 கோடிக்குக் கடன் வாங்கியிருக்கிறார்கள். கடனை வாங்குகிறார்கள் என்றால் என்ன அர்த்தம்? கடன் கொடுத்தவர்கள் கேட்கமாட்டார்கள் என்று அர்த்தமா? அரசாங்கம் கடன் சுமையை ஏற்றி வைக்க ஏற்றி வைக்க அது நமது வாரிசுகளின் தலையில் தான் சுமரப்போகிறது. 14 கோடி கடன், மின்சாரத்திற்கு அண்மையில் கடன், ஸ்மால் சேவிங்ஸ் கடன், இப்படிக் கடன் கடன் என்று போகிற இந்தச் சர்க்காரை



1st March 1966] [திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி]

கடன்காரச் சர்க்கார் என்றுதான் சொல்வேன். சுதந்திரம் வந்த காலத்தில் நமக்கு ஒருகோடியே பதினேழு லட்சம் ரூபாய் தான் கடன் இருந்தது. ஆனால் மார்ச் 31-ஆம் தேதி இந்த ஆண்டு முடிவில் நம் மாநிலத்தைப் பொறுத்த வரையில் கடன் ரூ. 246 கோடி. ஒரு கோடி எங்கே? 246 கோடி எங்கே? 246 கோடி ரூபாய் இதுவரை கடன் வாங்கியிருக்கிறார்கள். அந்தக் கடனைத் திருப்பிக்கொடுக்கவேண்டுமென்ற நிலைமை அரசாங்கத்திற்கு மட்டுமல்ல, வருங்கால சந்ததியார்களுக்கும் ஏற்பட்டிருக்கிறது. 25 கோடி ரூபாய் வரை கடனுக்கு வட்டியாகச் செலுத்துகிறார்கள். கேபிடல் ஃபார்மேஷன் 27 கோடி ரூபாய் என்றால், வாங்கிய கடனுக்கு வட்டியும், கடனுக்காகச் செலுத்தக்கூடிய பணமும் சேர்ந்து 25 கோடி ரூபாய் ஆகிறது. கடன் வாங்கிச் செலவு செய்துகொண்டே இருக்கிறார்கள். நான் இந்த சர்க்காரை கடன்கார சர்க்கார் என்றுதான் சொல்வேன். இந்த அரசாங்கம் வரி போடவில்லை, உபரி பட்ஜெட் என்று சொல்கிறார்கள். இந்த ஆண்டு என்ன என்ன கடன்கள் வாங்கியிருக்கிறார்கள்? கடன் வாங்கவேண்டுமென்றால் பஞ்சாயத்து யூனியன்கள் இருக்கின்றன, கலெக்டர்கள் இருக்கிறார்கள். ஒவ்வொரு டிஸ்ட்ரிக்ட்டுக்கும் ஒரு கோடி வசூலாகவேண்டுமென்று கலெக்டரிடம் சொன்னால், அவர் பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்களையும், ஆர். டி. ஓ.க்களையும் கூப்பிட்டு, ஒவ்வொருவரும் எவ்வளவு வசூல் செய்யவேண்டுமென்று உத்திரவு போட்டுவிடுகிறார். ஆகவே ஒவ்வொரு ஆண்டுக்கும் 15, 20, 25 கோடி என்று கடனை வாங்கிக்கொண்டே இருக்கிறார்கள். இவற்றையெல்லாம் வருகின்ற தலைமுறையினர்தான் கொடுக்கவேண்டியிருக்கும். ஆகவே வருகின்ற தலைமுறையினர் பேரில் வரியாகத் தான் இதைப் போடுகிறார்கள். நேற்றைய தினம் மத்திய சர்க்கார் பட்ஜெட்டை வெளியிட்டு இருக்கிறார்கள். அந்த பட்ஜெட்டிலே ரெவின்யூ கணக்கிலே 210 கோடி ரூபாய் ரெவின்யூ சர்ப்ளஸ் ஆகக் காட்டியிருக்கிறார்கள். ஆனால் மாநில சர்க்கார் ரெவின்யூ சர்ப்ளஸ் எவ்வளவு என்றால் 31 லட்சம் தான்; அதுவும் பார்க்கப்போனால் கடனை வாங்கிக் காட்டக்கூடிய சர்ப்ளஸ் ஆகத்தான் இருக்கிறது. இந்த பட்ஜெட் எலக்ஷனுக்கு முன்பாக இருக்கக்கூடிய பட்ஜெட். ஆகவே, இந்த பட்ஜெட்டில் வரி எப்படிப் போடுவார்கள்? தேர்தலில் காங்கிரஸ் வந்தால் பார்த்துக்கொள்ளலாம், இல்லாவிட்டால் வேறு யார் வருகிறார்களோ அவர்கள் பார்த்துக்கொள்ளட்டும் என்ற வகையிலே தான் இவர்கள் கடனை வாங்கிச் செலவு செய்து கொண்டிருக்கிறார்கள். ஒரு விவசாயி தன்னுடைய வருமானத்திற்கு மேல் செலவு செய்தான் என்றால் அவனை நாம் ஊதாரி என்று சொல்லுகிறோம். ஐந்து காணி நிலம் வைத்திருக்கக் கூடிய ஒரு விவசாயி 50 ஆயிரம் ரூபாய் கடன் வாங்கிச் செலவு செய்கிறான் என்றால் அவனை ஊதாரிச் செலவு செய்கிறான் என்று சொல்லலாம். ஆனால், அதே மாதிரி அரசாங்கத்தை நான் ஊதாரி என்று சொல்லமுடியுமா? சொல்லமுடியாது. ஆகவே, கடனை வாங்கி வாங்கி இன்றைய தினம் நாட்டிலே இருக்கக்கூடிய மக்களுடைய தலைமேலே சுமத்துகிறார்கள் என்று குற்றஞ்சாட்டுகிறேன்.

எல்லா மந்திரிகளும் உணவுப் பிரச்னை, உணவுப் பிரச்னை என்று பேசிக்கொண்டே இருக்கிறார்கள். காகிதத்திலே உணவு என்று எழுதி விட்டால் மட்டும் போதுமா? உற்பத்தியாகிறது என்றுதான் சொல்லுகிறார்கள்; ஆனால், விலைவாசி ஏறிக்கொண்டே போகிறது. 8 அவுன்ஸ் கொடுத்துக்கொண்டு வந்தது, 7 அவுன்ஸாக ஆகி, 6 அவுன்ஸாக ஆகிக் கொண்டிருக்கிறது. இது சம்பந்தமாகக் குறிப்பிடவேண்டுமென்றால் இந்த ஸ்டாட்டிஸ்டிக்ஸ் டிபார்ட்மெண்ட்டில் ஏதோ கோளாறு இருக்கிறது. அதை முதலில் உடைத்து வெளியே எறியவேண்டும். மந்திரிகள் கிராமங்களுக்கு வந்தால் விவசாய அபிவிருத்திக்காக என்ன செய்கிறார்கள்? பட்ஜெட்டிலே மைனர் இரிகேஷன்ஸ்தான் முடியும், மேஜர் இரிகேஷன்ஸ் எல்லாம் முடிந்துவிட்டது, இனிமேல் செய்யவேண்டியது ஒன்றுமில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். எத்தனை ஏரிகள் இருக்கின்றன? அவைகளில் எல்லாம் கொள்ளளவுக்குத் தண்ணீர் இருக்கிறதா? நிலத்தில் நெல் போட்டால் தொடர்ந்து ஐந்து மாதங்களுக்குத் தண்ணீர் கொடுக்கக் கூடிய கியாரண்டி கொடுக்கிறார்களா? நான் இந்தச் சட்ட

[திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி] [1st March 1966

சபையில் நான்கு வருஷங்களாக இருக்கிறேன். நான்கு வருஷங்களில் எட்டுத் தடவைகளாக இதைப்பற்றிச் சொல்லிக்கொண்டே இருக்கிறேன். ஒன்றும் நடைபெறுவதில்லை. உணவு மந்திரி கல்லுப் பிள்ளையார் மாதிரி உட்கார்ந்து கொண்டிருக்கிறார். வாய்க்கால்கள் வெட்டுங்கள், உற்பத்தி பெருகும் என்று சொன்னால் அவர்களுக்குக் காது கேட்காது. மந்திரிகள் சரியாகக் கவனிப்பது கிடையாது. நான் இதை விளையாட்டாகச் சொல்லவில்லை. எப்பொருள் யார் யார் வாய் கேட்பினும் மெய்ப்பொருள் காண்பார்கள் சான்றோர்கள் என்றுதான் சொல்வார்கள். ஆனால், சிலர் வேறுவிதமாகச் சொல்வதற்கு நான் பொறுப்பாளியல்ல. இந்த மந்திரிகள் தென் ஆற்காடுக்கு எத்தனை தடவைகள் வருகிறார்கள்? எங்கள் ஊரில் பிறந்து வளர்ந்த மந்திரி 30 நாட்களில் 28 நாட்கள் தென் ஆற்காடு ஜில்லாவில் தான் இருக்கிறார்கள். அவர்கள் சார்ந்திருக்கிற தொகுதி விருத்தாசலம் தொகுதி; வெல்லிங்டன் ரிசர்வாயர் என்று சொல்லப்படுகிற பகுதி. அந்த ரிசர்வாயரில் வெள்ளைக்காரன் காலத்தில் இருந்த கொள்ளளவு, ஆயக்கட்டு நிலப் பரப்பு எவ்வளவு? இப்பொழுது கொள்ளளவு—கெப்பாசிடி—எவ்வளவு? ஆயக்கட்டு நிலத்தின் பரப்பு எவ்வளவு? முன்பு ஒரு போகமாக இருந்ததை 2 போகமாக ஆக்கி இருக்கிறார்களா? இல்லை. முன்பு 22 ஆயிரம் ஏக்கராக இருந்த ஆயக்கட்டு பரப்பு இப்பொழுது 19 ஆயிரம் கூட இல்லை. அதற்குக்கூட இரண்டு மாதங்கள்தான் பாயும். தொழுதூரில் வாய்க்கால் வெட்டுங்கள் என்று சொன்னால், அதற்கு அமெரிக்காவிலிருந்து என்ஜினீயர் வந்து தான் வெட்டவேண்டும் போல் இருக்கிறது. அந்த அளவுக்குத்தான் திட்டங்கள் ஆமை வேகத்தில் செயலாகப்படுகின்றன. உணவு அமைச்சர் எப்படி நடக்கிறாரோ அதுபோல்தான் திட்டமும் நடக்கிறது. இப்படி நடந்தால் உணவு எப்படி பெருகும்? ஆளுக்கு 10 அவுன்ஸ், 8 அவுன்ஸ் என்று காகிதத்தில் எழுதிக்கொடுத்துவிட்டு, இதைச் சாப்பிட்டுவிட்டு தண்ணீர் சாப்பிடுங்கள் என்று சொல்லவேண்டும். அப்படிச் சொன்னாலும் குடிப்பதற்குத் தண்ணீர் கிடையாது. கடலிலே போய் தண்ணீர் சாப்பிடவேண்டும் என்று திரு. வெங்கட்டராமன் அவர்கள் சொன்னாலும் சொல்வார்கள். அந்த அளவுக்குக் குடிதண்ணீர் வசதி இல்லாமல் இருக்கிறது. சுதந்திரத்துற்குப் பிறகு, 18 ஆண்டுகளுக்குப் பிறகும் இவைகளைத் திருத்த முடியவில்லை. காரணம் என்னவென்றால் அதைத் திருத்த வேண்டுமென்றால் இவர்களைத் திருத்த வேண்டும், மாற்றியமைக்கவேண்டும். அதற்கு மக்கள் தயாராகத்தான் இருக்கிறார்கள். அவர்கள் மாற்றிவிடுவார்கள். (குறுக்கீடு) ஜோசியம் தான். ஜோசியத்தை உங்கள் நந்தாவே நம்புகிறார். நான் அப்படிச் சொல்வதில் தவறு கிடையாது. முதலமைச்சர் அவர்கள் பட்ஜெட்டில் கவர்ன்மெண்ட் செர்வன்ட்ஸ் பற்றிச் சொல்லும்பொழுது, விலைவாசியெல்லாம் ஏறிக் கொண்டே போகிறது என்று சொல்லியிருக்கிறார்கள். அதை எப்படிப் பிடித்து வைப்பது? காக்காய் பிடிக்கிற மாதிரி அதையும் பிடித்து வைத்துக்கொண்டால் நல்லது. இன்றைக்கு ஹோட்டலில் முன்பு 75 பைசாவாக இருந்த சாப்பாடு 1 ரூபாய் ஆகிறது. 15 பைசாவாக இருந்த காபி இப்பொழுது 22 பைசாவாக இருக்கிறது. இட்லி விலையும் கூடிக் கொண்டே போகிறது. முன்பெல்லாம் 4 இட்லி சாப்பிட்டால் போதும். ஆனால் இப்பொழுது 20 இட்லி சாப்பிட்டால்தான் முடியும் போலிருக்கிறது. அவ்வளவு இலேசாகக் கடுதாசி மாதிரி இட்லி இருக்கிறது. இது ஏன் இப்படி ஆகிவிட்டது என்று கண்டிப்பதற்கு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் என்ன முயற்சி செய்திருக்கிறார்கள்?

* * * *

நான் இதைச் சொல்வது விலைவாசி எவ்வாறு உயர்ந்துக் கொண்டிருக்கிறது எப்பதைப்பற்றித் தெரிவிப்பதற்காகத்தான். 100-க்கு 70 பேர்கள் வெளியிலிருந்து வந்துதான் வேலை செய்கிறார்கள். அவர்கள் எல்லாம் ஹோட்டலில்தான் சாப்பிடவேண்டியிருக்கிறது. இதைத் தவிர தரமும் மிகவும் குறைந்துவிட்டது. வடையென்றால் வட்டமாகவும் நடுவில் ஒரு பொத்தலும் இருக்கும். ஆனால் சைஸ் குறைந்துவிட்டது. விலைவாசி உயர்ந்தது மட்டுமல்லாமல் தரமும் குறைந்துவிட்டது என்று

* Expunged as ordered by the Chair.



1st March 1966] [திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி]

சொன்னால் இதையெல்லாம் மந்திரிகள் காதில் போட்டுக்கொள்வதில்லை. இதைப்பற்றியெல்லாம் விவரமாக ஒவ்வொரு இலாகாவைப் பற்றிப் பேசும் பொழுது பேசிக்கொள்ளலாம். இந்த பட்ஜெட்டைப் பற்றிச் சொன்னால் இது தேர்தல் நேரத்தில் ஸ்டன்ட் அடிக்கிற பட்ஜெட்தான். கடந்த டிசம்பர் மாதத்தில் 7, 8 கோடி ரூபாய்க்கு வரி போட்டார்கள். நான் அப்பொழுதே சொன்னேன்—இப்பொழுது போடாதீர்கள், மார்ச்சு மாதம் போடுங்கள், மக்கள் உங்களை மறக்கமாட்டார்கள் என்று சொன்னேன். இன்றைக்கு சர்ப்ளஸ் பட்ஜெட்போல் காட்டுகிறார்கள். ஆனால், உண்மையில் இது டெபிசிட் பட்ஜெட் தான். வரியை அக்டோபர்-நவம்பரில் போட்டால் என்ன அல்லது மார்ச்சில் போட்டால் என்ன? இதுவரை 253 கோடி ரூபாய் கடன் வாங்கியிருக்கிறார்கள். அந்தக் கடனைத் திருப்பிக் கொடுக்க என்ன மூலதனம் இருக்கிறது. அந்தப் பணத்தைத் திருப்பிக் கொடுக்கும் பொறுப்பு எதிர்கால இளஞ்சிறார்களின் தலையில் அல்லவா விழுந்திருக்கிறது. உள்ளபடியே இன்றைக்குப் பஞ்சாயத்து யூனியன்கள் உற்பத்தியைப் பெருக்கும் என்று நம்புகிறார்களா? உரக்குழிக்காகச் செலவு செய்கிற பணம் அவ்வளவும் வீண். ஒரு குழிக்கு ஆறு ரூபாய் தருகிறார்கள். விளைச்சல் பெருகவில்லை என்றால் இயற்கையைக் காட்டுகிறார்கள். தெருவில் இருக்கிறவர்கள் இயற்கையைக் காட்டினால் சரி; மந்திரிகள் காட்டுவது எப்படிப் பொருத்தமாகும்? உரம் கிடைக்கவில்லை என்று சொல்லுவதற்கு மந்திரிகளுக்கு எவ்வளவு உரம் இருக்கிறது? மணிலா இல்லை, பிண்ணாக்கு கிடைக்கவில்லை. மற்ற உரங்களையும் வெளியே இருந்து வரவழைப்பதற்கான முயற்சிகளை ஏன் எடுத்துக்கொள்ளவில்லை? பட்டினி கிடந்தால் போதுமா? அதைச் செய்யச் சொல்வதற்குத்தான் இந்த அரசாங்கம் செயல்பட்டுக்கொண்டிருக்கிறதா?

நம்முடைய தொழிலமைச்சர் அவர்களை இங்கே காணோம். அவர்கள் எப்போது பார்த்தாலும் ஏகராகம் போட்டுக் கொண்டிருக்கிறார்கள். நெய்வேலி–சேலம் ஸ்டீல் பிளான்ட் வருகிறது வருகிறது என்று சொல்லிக் கொண்டே இருக்கிறார்கள். ஒவ்வொரு சட்டசபைக் கூட்டத்திலும் பேசிக் கொண்டே வருகிறார்கள். இந்தச் சபையில் நானும் கடந்த நான்கு வருஷ காலமாக இருக்கிறேன். அவர் சேலம் ஸ்டீல் பிளாண்டைக் கொண்டுவந்து வைக்கப் போகிறாரோ அல்லது 1967 தேர்தலில் ஜனங்கள் தான் அவரை வெளியே கொண்டு வந்து வைக்கப் போகிறார்களோ தெரியாது. தஸ்தூர் கம்பெனி ரிப்போர்ட்டை மத்திய சர்க்கார் ஏன் நம்பவில்லை? ஜப்பானில் பார்த்தேன் என்று சொல்கிறார். ஏற்கனவே ஜெர்மனிக்குச் சென்று பார்த்தாயிற்று; செகோசுலேவியாவுக்குச் சென்று பார்த்தாயிற்று. இப்படி சேலம் ஸ்டீல் பிளாண்டை வைத்து உலகத்தை எல்லாம் சுற்றி வந்திருக்கிறாரே தவிர, சேலம் ஸ்டீல் பிளாண்ட் வந்ததா? தூத்துக்குடியில் தெர்மல் பிராஜெக்டை அமைக்கும் பொறுப்பை தர்ம தேஜா என்ற தனிப்பட்ட நபருக்குக் கொடுத்திருக்கிறார்கள். அவர் 1957-ல் பிலடெல்பியாவில் ஒரு புரொபசராக இருந்தவர். அவரை நம்பி 19, 20 கோடி ரூபாய் போட்டு பிளாண்டை வைக்கக் கூடிய அளவுக்கு இருக்கிறார்கள். மத்திய சர்க்கார் அவரை நம்பவில்லை. மாநில சர்க்கார் அவரை நம்பியிருக்கிறது. அந்த அளவுக்கு இந்த அரசாங்கம் தனிப்பட்டவர்களுடைய உதவியை நாடிக் கொண்டிருக்கிறது. இது ஜனநாயக சர்க்காரா அல்லது சர்வாதிகார மனப்பான்மை கொண்ட காபிடலிஸ்ட் சர்க்காரா? இந்த மந்திரிகளால் அவர்களுடைய தவறுகளைத் திருத்திக் கொள்ள முடியாவிட்டால் வேறு நபர்கள் அந்த இடத்திற்கு வரட்டும். எதிர்க்கட்சிக் காரர்களை அனுப்புங்கள் என்று சொல்லவில்லை; அந்த அளவுக்குக் கெஞ்சிக் கேட்டுக் கொள்ளவேண்டிய நிலைமை இல்லை. (மணி அடிக்கப்பட்டது) இந்த அரசாங்கம் உணவு உற்பத்தியைப் பெருக்கத் தவறி இருக்கிறது என்று குற்றம் சாட்டி விடைபெறுகிறேன். வணக்கம்.

* **திரு. கோ. நாராயணசாமி நாயுடு:** கனம் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சியில் இருக்கின்ற நண்பர்கள் அடுத்த தேர்தலில் என்னென்ன நேரும் என்பதைப் பற்றியெல்லாம் இப்போதே பயப்பட ஆரம்பித்து அதற்கு எதிர்ப் பிரசாரம் செய்து கொண்டிருக்கிறார்கள். சட்டசபையின்

வாயிலாகவும் இந்தப் பிரசாரத்திற்கு ஆதரவு தேடிக் கொண்டிருக்கிறார்கள் என்றுதான் நான் நினைக்கிறேன். எது எப்படி இருந்தாலும் செய்யப் போவதை மக்களுக்கு நாம்தரன்செய்யப் போகிறோம். அதிலே ஆட்சேபனை இல்லை. உணவு உற்பத்தி பெருகவில்லை என்று சொல்பவர்கள் கனவு கண்டு சொண்டிருக்கிறார்கள். இதை வைத்துக் கொண்டு தேர்தலில் ஓட்டு வாங்கலாமா என்று பார்க்கிறார்கள். இயற்கைக் கோளாறினால் பாதகம் ஏற்பட்டால் உலகத்தில் ஏற்பட்ட எந்தச் சர்க்காராவது ஏதாவது செய்ய முடிந்ததா என்று பார்த்தால் இல்லை. சந்திரனில் போய் இறங்குகிறவர்கள் கூட இயற்கைக் கோளாறைத் தடுக்க முடியவில்லை. அவர்களும் உணவுப் பொருளை இறக்குமதி செய்கிறார்கள். விஞ்ஞானம் வளர்ந்தாலும், அறிவு வளர்ந்தாலும், பேச்சுத் திறமை அதிகமானாலும் இயற்கை கோளாறைத் தடுக்க முடியவில்லை.

(திரு. மா. தண்டாயுதபாணி தலைமை.)

அதற்கு விஞ்ஞானம் வழி செய்வதாக இருந்தால் அதையும் செய்ய நாம் தயாராக இருக்கிறோம்.

இந்த மாகாணம் பூராவுக்கும் வளமாக இருக்க வேண்டிய தஞ்சை ஜில்லாவில் வளம் இவ்வாண்டு குறைந்து விட்டது. ஆனால் ஒவ்வொரு கட்டத்திலும் நம்முடைய மந்திரிகள், உணவு அமைச்சர் அவர்களும், விவசாய அமைச்சர் அவர்களும், மற்ற எல்லோரும், வந்து நிலைமையைப் பிரத்தியட்சமாகத் தெரிந்து என்ன பரிகாரம் செய்யவேண்டுமோ அதையெல்லாம் செய்தார்கள். ஆற்றிலே வராத தண்ணீரை யாரும் கொண்டு வந்து கொடுக்க முடியாது. அதற்காக பம்பு செட்டுகள் எல்லாம் கொடுத்து ஓரளவு நிலைமையைச் சமாளிக்க பரிகாரம் செய்தது இதுவரை எந்தச் சர்க்காரும் அனுஷ்டிக்காத ஒரு ஏற்பாடு. உணவு உற்பத்தி பெருகவில்லை என்று மட்டும் சொல்லிக் கொண்டிருப்பது அதற்குப் பரிகாரமாகாது. ஒரு பெரிய கோளாறைப் பற்றி யாரும் சுட்டிக்காட்டவில்லை. ஒரு தடவை கரும்பு போட்ட இடத்தில் மூன்று தடவை நெல்லை விளைவிக்கலாம். எங்கள் பகுதியில் நஞ்சை நிலங்கள் பூராவிலும் சமீப காலப் பொருளாதாரப் போட்டியின் காரணமாகக் கரும்பைச் சாகுபடி செய்து வருகிறார்கள். நல்ல வளமுள்ள நிலங்கள் எல்லாம் கரும்பு சாகுபடிக்கு மாற்றப்பட்டு வருகிற காரணத்தால் தஞ்சை ஜில்லாவிலிருந்து எதிர்பார்த்த அளவுக்கு உணவு தானியப் பெருக்கம் இல்லை என்பதும் ஒரு காரணம். இதையும் சர்க்கார் உணர வேண்டும். புஞ்சையில் கரும்பைப் போட்டு, நஞ்சையில் நெல்லைப் போட வேண்டுமென்ற முறையை வைத்துக் கொண்டாலொழிய இந்த நிலைமையைக் கட்டுப்படுத்த முடியாது. வசதியுள்ளவர்களுக்கு மட்டும் மோட்டார் கொடுப்பது, எஞ்சின் கொடுப்பது என்ற நிலைமையையெல்லாம் மறந்து விடவேண்டும். எப்படி கம்பங்களைப் போட்டு மின்சாரத்தைக் கொடுத்து அதற்கான கட்டணத்தை வசூலித்துக் கொள்ளுகிறோமோ அதே போன்று விவசாயிகளுக்கு, நிலம் யாருடையது என்று கருதாமல் சர்க்கார் செலவிலேயே மோட்டாரை அமைத்துக் கொடுத்து அதற்குரிய கட்டணத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும். குழாய்க் கிணறு தோண்டுவது என்றால் சில சமயங்களில் 100 அடி ஆழத்தில் தண்ணீர் இருக்கிறது. சில சமயங்களில் 300 அடி ஆழம் வரை கூடத் தண்ணீர் கிடைப்பதில்லை. இவ்வளவு பெரிய நஷ்டத்திற்குத் தயாராக இல்லாது சாதாரண விவசாயி அதை நிறுத்தி விடுகிறான். அதன் காரணமாக அந்த நிலத்தில் இறவை விவசாயம் செய்ய முடியாத நிலைமை ஏற்படுகிறது. ஆகவே, சர்க்கார் செலவிலேயே எல்லாவற்றையும் செய்து கொடுக்கவேண்டும். அப்போது விவசாயி மகிழ்ச்சியோடு வேலை செய்ய முடியும். விவசாயிகளுக்கு மாடு வாங்கக் கடன், பம்பு செட்டுக்குக் கடன், ட்ராக்டர்கள் வாங்கக் கடன், இன்னும் அதிகமாகக் கடன் கொடுக்க வேண்டும். எங்கள் ஜில்லாவில் நிலவரி நீண்ட காலத்திய பிரச்சினையாக இருக்கிறது. நில வரியின் மூலமாக நாம் பெறக்கூடிய ஐந்தாறு கோடி ரூபாய் அமெரிக்காவில் நாம் வாங்கிய பணத்திற்கு வட்டியை விட குறைவானது. மதிப்பிற்குரிய நண்பர் தண்டாயுதபாணி அவர்கள் வரியைக் குறையுங்கள், பாதியாக





வாவது குறையுங்கள், போன வருஷம் போட்ட வரியையாவது குறையுங்கள், இல்லையென்றால் அடுத்த வருஷமாவது சேர்த்து வாங்கிக் கொள்ளுங்கள் என்று இவ்வளவு பரிதாபமாகக் கேட்டுக் கொண்டார்.

'நந்து ஊரும் புனல் நாட்டின் திறம் வேண்டு ;
நாடு ஒன்றும் நல்கான் ஆகில்,
ஐந்து ஊர் வேண்டு: அவை இல் எனில், ஐந்து இலம்வேண்டு: '

என்று பாரதத்தில் சொன்னபடி நாலணாவாவது வரியைத் தள்ளி கொடு என்று பரிதாபமாகக் கேட்கும்படியான நிலைமையில் விவசாயிகளை வைத்தால் அவர்களுக்கு எப்படி உற்சாகமாக உணவு உற்பத்தியைப் பெருக்கும் நிலைமை ஏற்படும் என்பதை நமது அமைச்சர்கள் சிந்திக்கவேண்டும்.

இந்த வருஷம் விவசாயிகளிடத்தில் எதுவும் இல்லை. இந்த வருஷம் குறுவை 40 சதவிகிதம் விளையவில்லை. குளம் குட்டையில் எல்லாம் தண்ணீர் வற்றிய நிலையில் இறுதியில் பெய்த மழையால் ஓரளவு பயிரைக் காப்பாற்றி இருக்கிறார்கள். இந்த நிலைமையில் அதிகாரிகள் வசூலினால் தொந்தரவை உண்டாக்கிச் கொண்டிருக்கிறார்கள். எஞ்ஜின் கடன், சொஸைடி கடன் போன்ற கடன்களை எல்லாம் கொடு கொடு என்று வற்புறுத்துகிறார்கள். தாசில்தார்கள் எல்லாம் "உங்கள் சர்க்கார்தான் வசூலிக்கச் சொல்கிறது. அவர்களைப் போய்க் கேளுங்கள்" என்று சொல்லி எல்லாக் கடனையும் விளையாத இந்த வருஷத்தில் பிடிவாதமாக வசூல் செய்கிறார்கள்.

ஒரு கிஸ்தி வசூல் முடிந்துவிட்டது. அதிகாரிகள் இந்த நான்கணாவை 12-00 noon.
வசூல் செய்துவிட்டால் அவர்களுக்கு ராவ் பகதூர் பட்டம் கிடைத்துவிடும் என்று நினைக்கிறார்கள். இந்த நான்கணாவை வசூல் செய்துவிட்டால் மேல் பதவிக்கு போகமுடியும் என்று நினைக்கிறார்கள் அவர்கள். மந்திரி அவர்கள் சொல்லாவிட்டாலும் இந்த வருடம் வசூல் கடுமையாக இருக்கிறது. ஏன் இப்படி கடுமையாக வசூல் செய்கிறார்கள் என்று புரியவில்லை. ரெவின்யூ அமைச்சர் அவர்கள் ஒன்றுவிட்டு ஒருநாள் எங்கள் ஜில்லாவுக்கு வந்து நிலைமைக்கு ஏற்றபடி அதிகாரிகள் நடந்து கொள்ளவேண்டுமென்று சொன்னார்கள். ஆகவே, சென்ற ஆண்டு விதித்த இந்த நான்கணா வரியைத் தள்ளி வைத்து அடுத்த ஆண்டு வேண்டுமானால் வாங்கிக்கொள்ளலாம். ஆகவே இந்த 25 சதவிகித கூடுதல் வரி என்பதை நிறுத்தி வைக்கவேண்டும். "யானை சிந்திய பருக்கை போல்" என்பார்கள். யானை சாப்பிடுகிறபோது ஒரு கவளம் சிந்திவிட்டால் ஒரு கவளம்தான் அதற்குக் குறையும். ஆனால் அது சிந்திய உணவு ஒரு கோடி எறும்புகள் சாப்பிட உதவும். அதேபோன்று இந்த நான்கணாவை எடுத்துவிட்டால் அரசாங்கத்திற்கு ஒன்றும் பெரிய நஷ்டம் ஆகாது. ஆனால் அது விவசாயிகளுக்கு பெரும் ஊக்கத்தையும், உற்சாகத்தையும் கொடுக்கும். அதனால் உணவுப் பஞ்சமும் ஓரளவு சமாளிக்கப்படும். சோஷலிஸம், சோஷலிஸம் என்று பேசுகிறார்கள். சோஷலிஸம் என்பது மலிவான சரக்காகப் போய்விட்டது தேர்தல் காலத்தில். சோஷலிஸம் வேண்டாம் என்று சொல்கிறவர்களோடு கூட்டுக் கொள்கிறவர்கள் காங்கிரஸ் காரியக் கமிட்டியில் நடந்தது, தலைவர் பேச்சுக்கள் இவற்றிலிருந்து மேற்கோள் காட்டுவது என்பது எதிர்க் கட்சி நண்பர்களுக்கு சாதாரணமாகிவிட்டது. யாருக்காக சோஷலிஸம் கேட்கிறோம்? எங்கள் ஜில்லாவில் நிலம் இல்லாதிருப்பவர்களுக்கு, குத்தகைக்காக பாடுபட்டுக்கொண்டிருப்பவர்களான 85 சதவிகித விவசாயிகளுக்காகத் தான் சோஷலிஸம் கேட்கிறோம். அவர்களை எல்லாம் இந்த வருடம் நிலத்திலிருந்து அப்புறப்படுத்த என்னென்ன செய்யவேண்டுமோ, அவற்றை எல்லாம் செய்துகொண்டிருக்கிறார்கள், அவ்விடத்திய பெரியோர்கள். பல இடங்களில் ஜப்தி நடக்கின்றன. அறுவடை செய்து, நெல்லை களத்தில் ஜப்தி செய்து போட்டுவிட்டு தாவாக்கள் நடக்கின்றன. கும்பகோணம், மாயூரம் கோர்டுகளில் வழக்குகள் ஏராளம் இருக்கின்றன. விவசாயிகளை நிலத்தில் இருந்து வெளியேற்ற பல ரொம்ப ரொம்ப பெரியவர்கள் முயன்றுவருகிறார்கள். மனித சமுதாயத்தைத் தாண்டிய அவர்கள் இன்று கோர்ட்டுகளில்தான் இருக்கிறார்கள். இன்று 3,000 பேர்களை, ஒருசேர பார்க்கவேண்டுமானால் ரெண்ட் கோர்ட்டுக்குப் போனால் போதும்.

எதிர்கட்சி நண்பர் ஒருவர் காட்டூர் பண்ணையில் தவறு ஏற்பட்டிருக்கிறது என்றார். விவசாயிகள் கோர்ட்டுக்குப் போய் பரிகாரம் தேடுவது என்பது அசாத்தியமானது. ஆயிரக்கணக்கான விவசாயிகளைக் கோர்ட்டுக்கு அனுப்பி ஈரங்கி போட்டுக்கொண்டே போகிறார்கள். நாலைந்து வருடங்களில் அது நடக்குமா முடியுமா ? 25 மைலிலிருந்து வழக்கிற்கு வந்துவிட்டுப் போக வேண்டியிருக்கிறது. உழவர்கள் இதன் காரணமாக விவசாயத்தை விட்டு ஏதாவது ஒரு மில்லில் ஒரு கூலி வேலை கிடைத்தால் போதும் என்று நினைக்கிற அளவிற்கு கிட்டத்தட்ட அவர்கள் சந்நியாசிகள் ஆகும் நிலைக்கு விட்டுவிட்டது நமது சட்டங்கள். நெல் விளையவில்லை என்பதை பார்த்திருக்கிறார்கள் அமைச்சர்கள். பல பேர்கள் விளைச்சல் இல்லை என்று இங்கேயே கூறியிருக்கிறார்கள். அதனால் விவசாயிகளுக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய, சாகுபடிதாரர்களுக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய சங்கடங்களைச்சொல்லிச் சொல்லி அது சாதாரணமாகப் போய்விட்டது. சோஷலிஸம் மாதிரி மலிவாகப் போய்விட்டது. அதுவே பல்லவியாகி, அனுபல்லவியாகிவிட்டது. ஆகவே, முதலில் செய்யவேண்டியது சாகுபடிதாரர்களை நிலத்தில் இருந்து வெளியேற்றுவதைத் தடுக்கவேண்டும். அப்படி சாகுபடி செய்கிறவர்களை நிலத்தில் இருந்து வெளியேற்றுவதைத் தடுக்காமல் சோஷலிஸம் பற்றி பேசுவதிலோ அல்லது வரவு செலவுத் திட்டத்தை நடத்திக் கொண்டிருப்பதிலோ பலன் இல்லை. அது திருட்டுப்போன பிறகு கதவை தாழ்ப்பாள் போட்டு மூடுவதுபோல் இருக்கிறது. சோஷலிஸம் என்ற கதவிற்கு நல்ல தாழ்ப்பாள் எங்கள் பக்கத்திலுள்ள விவசாயிகள். ஆகவே விவசாயிகளை நிலத்தில் இருந்து அப்புறப்படுத்துவதைத் தடுப்பதற்கு உடனடியாக நடவடிக்கைகள் எடுக்கவேண்டும். இல்லாவிட்டால் யாருக்காக நாம் சோஷலிஸம் கேட்டுக்கொண்டிருக்கிறோமோ, அவர்கள் அதிருப்தி அடைந்து விடுவார்கள். காலம் கடத்தினால், கொஞ்சம் நிலத்தில் ஓட்டிக்கொண்டிருக்கிற அந்த விவசாயிகள் அப்புறப்படுத்தப்பட்டு விடுவார்கள். சாகுபடிதாரர்கள் பற்றிய ஹைகோர்ட் தீர்ப்பு பற்றி யாரும் கவலைப்படவில்லை. அது குடிபடைகளுக்கு பாதகமாகத்தான் வருகிறது. அது நீதியில் உள்ள கோளாறோ, லீகல் டிபார்ட்மெண்டில் உள்ள கோளாறோ, கச்சேரியில் உள்ள கோளாறோ தெரியவில்லை. நம் சட்டங்கள் 97 சதவிகிதம் நீதிமன்றத்திற்குப்போனால் அவை சரியாக விவசாயிகளுக்குச் சாதகமாக வருவதில்லை. கோளாறு எப்படி ஏற்படுகிறது என்பது புரிந்துகொள்ள முடியாத ஒரு விசித்திரமாக இருக்கிறது. நம் சட்டத்தின் நோக்கங்களுக்கு விரோதமான அபிப்பிராயத்தையே கொடுக்கிறார்கள். அப்படி தீர்ப்பு கொடுக்கும் நேரங்களில் எல்லாம் அவற்றை திருத்துவதற்கு நாம் முயற்சித்தால்தான் விவசாயிகளை நிலத்தில் இருந்து வெளியேற்றாமல் தடுக்க முடியும். சிறிய குத்தகைதாரர்கள் முதலாளிகளைப் பார்த்ததே இல்லை. பெரிய குத்தகைதாரர்கள் நிலக்காரர்களுடன் சேர்ந்து சிறிய குத்தகைதாரர்களை அப்புறப்படுத்தி விட்டார்கள். ஹைகோர்ட்டில் சிறிய குத்தகைதாரர்களை—பல ஆண்டு சாகுபடி செய்தவர்களை அப்புறப்படுத்த தீர்ப்பாகிவிட்டது. கிராமம் கிராமமாக விவசாயிகளை வெளியேற்றிக் கொண்டிருக்கிறார்கள். இதற்கு ஒரு பரிகாரம் தேடவேண்டும். இல்லாவிட்டால் தஞ்சை ஜில்லாவில் அடுத்த ஆண்டு அமைதியை பார்க்கமுடியாது. வெறுப்பைத்தான் சம்பாதிக்கும் நிலை ஏற்படும். இந்த ஆண்டு வரியைத் தள்ள முடியாவிட்டாலும் புதிதாக போட்ட வரியை ஒத்திவைத்து வாங்கிக்கொள்ளுங்கள். இந்த 25 சதவிகித வரியை தள்ளிக்கொடுத்து இந்தச் சபைக் கலைவதற்கு முன்னதாக சாகுபடிக்காரர்களை ஐந்து வருடங்களை நிலத்திலிருந்து வெளியேற்றக்கூடாது என்று சட்டம் செய்தால் என்ன ஆபத்து வந்துவிடும் ? பழையகால குத்தகைப் பத்திரத்தில், "அளக்கத் தவறினால்" என்று எழுதுவார்கள். ரெஜிஸ்ட்ரார் ஆபீசுக்குச் சென்று பழைய குத்தகைப் பத்திரத்தைப் பார்த்தால் தெரியும். "அளக்கத் தவறினால், வருடம் ஒன்றுக்கு இவ்வளவு வட்டி சேர்த்துக் கொடுப்பேன் ஆகவும்" என்று இருக்கும். நிலத்தைவிட்டு வெளியேற்றுவது என்பது பழைய குத்தகைப் பத்திரத்தில் இருக்காது. "என் மரக்காலைக் கொண்டும் என் அளவுக்காரனைக் கொண்டும் அளந்து உன் செலவில் என் வீட்டில் கொண்டு நெல்லை தரவேண்டும்." என்றுதான் குத்தகை பத்திரம் இருக்கும். அவர் மரக்காவில் இவர் செலவில் அவர் வீட்டுக்கு கொண்டுபோய் கொடுக்கிறேன் என்றுதான் இருக்கும். பத்திரத்தில் நிலத்தைவிட்டு வெளியேற்றுவது இருக்காது. விவசாயிகளை நீக்குவது





என்பது கண்டிஷன் குத்தகை. ஐந்து ஆண்டுகளுக்கு இவ்வளவு அளக்க வேண்டும். இல்லாவிட்டால் நிலத்தில் இருந்து அப்புறப்படுத்தப்படும் என்று இருக்கும். அப்படியும் வட்டிதான் கொடுக்கவேண்டியிருக்கும். பழைய வெள்ளத்தையும், புதிய வெள்ளம் வந்து அடித்துக்கொண்டு போய்விட்டது என்பதுபோல், நமது புதுச் சட்டம் ஒரு பக்கத்தில் உரிமை கொடுத்துவிட்டு இன்னொரு பக்கத்தில் உரிமையைப் பறிப்பதுபோல் இருக்கிறது. பெரிய மந்திரி, விவசாயிகள் அக்கிரமம், அநியாயம் செய்கிறார்கள், எல்லோரும் சொஸைட்டிக்கு நெல் அளக்கமாட்டேன் என்று சொல்கிறார்கள் என்று கருதுகிறார். ஸ்தபதி செய்த விக்ரகத்திற்கு ஐயர்மார் தர்ப்பை கொண்டு பூஜை போட்டால்தான் உயிர்வரும் என்று சொல்வார்கள். சோஷலிஸம் பேசுகிற மந்திரிகளுக்குக்கூட விவசாயிகள் மேல் கோபப் படும்படி செய்து விடுகிறார்கள் எங்கள் பகுதி பெரியோர்கள். இரண்டு ஏக்கர் நிலம் உள்ளவன் நெல் அளக்காததால் கூட்டுறவு சங்கமே போய் விடுமா ? சாமிக்கு பூஜை நடத்தமுடியவில்லை, கோவில் சொத்து, கோவில் சொத்து என்று கூக்குரல் இடுகிறார்கள். கோவில் சொத்துக்களை எவன் எவனோ கொள்ளை அடித்துக்கொண்டிருக்கிறான். கோவிலுக்கு நெல் கிடைக்காததினால் சொஸைட்டியே கெட்டுப்போய் விட்டதா ? முதல் மந்திரி அவர்களுக்கே நம்பிக்கை குறைந்துபோய்விட்டது குத்தகைதாரர் கூட்டுறவில். **Trial costs nothing** நமது தேச பாதுகாப்பு நிதியில் மூன்று கோடி எவனோ சாப்பிட்டு விட்டுப் போய்விட்டான் என்று சொல்கிறார்கள். யார் யாரோ கூட்டுறவு சங்கங்களிலும் சாப்பிட்டு விட்டுப் போய்விடுகிறார்கள். அதில் நஷ்டம் வருவதில்லையா ? சட்டசபை கூடுவதால் ஊருக்கு லாபமா, இங்கே, ஒருவருக்கொருவர் பேசிக் கொண்டிருக்கிறோம். ஐந்து நாட்களுக்குள் இந்த சபையை முடித்தால் லட்சக்கணக்கான ரூபாய் லாபமாகும். அதை எல்லாம் விட்டு விட்டு கோவிலுக்கு நெல் அளக்கவில்லை விவசாயிகளின் எங்கோ ஒரு இடத்தில் தவறிவிட்டால் விவசாயக் கூட்டுறவு சங்கங்களை ஏன் கலைக்கவேண்டும் ? கூட்டுறவு சங்கங்கள் பற்றி புகார் கொடுத்தால் லேசில் நடக்கிறதா ? ஒவ்வொரு அதிகாரியும் காலதாமதம் செய்து குற்றம் செய்தவர்கள் தப்பித்துக்கொள்ள அவகாசம் செய்துகொடுக்கிறார். அதிகாரிகளிடம் புகார் செய்தால் போதும் போதும் என்றாகிவிடுகிறது. போலீஸ்காரர்களாகட்டும், கூட்டுறவு அதிகாரிகளாகட்டும், ஒரு எம். எல். ஏ. சொன்னால் உடனடியாக எதையும் கேட்பது இல்லை. அவர்கள் நம்மைபற்றி நன்றாக ஆராய்ச்சி செய்து வைத்திருக்கிறார்கள். உடனே கீழேயிருக்கின்றவர்களை அழைத்து புகார்களில் இருந்து தப்ப இன்னின்ன செய்ய வேண்டும் என்று சொல்லிவிடுகிறார்கள். யார் யார் என்னென்ன செல்வாக்கில் இருக்கிறார்கள், நாயுடுவா இவர் உடனேயே மந்திரியிடம் போவார், அங்கிருந்து இன்னின்ன உத்தரவு வரும். அதற்கு இன்னின்ன செய்ய வேண்டும் என்பதை பிரமாதமான முறையில் அதிகாரிகள் அறிந்து வைத்திருக்கிறார்கள். எந்த முறையில் புகார்களை அட்ஜெஸ்ட் செய்வது என்பதையெல்லாம் நம்மைவிட நன்றாக தெரிந்து வைத்திருக்கிறார்கள். அதற்கு தகுந்த மாதிரி கொஞ்ச நாட்களுக்கு டிரான்ஸ்பரை நிறுத்திவை என்றாவது அங்கேயுள்ளவர்களுக்கு சொல்லி வைத்து விடுகிறார்கள். அது மட்டுமல்ல, நமது கட்சிக்குள்ளே இருக்கின்ற கோளாறுகள், மற்றபடி இருக்கின்ற தகவல்கள் எல்லாவற்றையும் அவர்கள் புரிந்துகொண்டிருக்கிறார்கள். இந்த முறையில் ஆராய்ச்சி செய்து தெரிந்து வைத்துக் கொண்டிருக்கிறார்கள். யாரைப்பிடித்தால் காரியம் நடக்கும், என்டதையும் தெரிந்து வைத்திருக்கிறார்கள். இந்த நிலையில் சில காரியங்களுக்காக யாரைப்போய் கெஞ்சினாலும், கூத்தாடினாலும் காரியம் நடக்காது, மந்திரிகள் யாரை ஆதரிக்கிறார்கள் என்பதையும் அவர்கள் தெரிந்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் பொதுமக்களுடைய காரியங்களை நாம் எங்காவது சொல்லி காரியங்களை நடத்தவேண்டியதாக இருக்கிறது. நாம் சொல்வதை மந்திரிகள் கேட்கவில்லையென்றாலும், எதிர்கட்சிக்காரர்கள் சொல்வதை அதிகமாக கேட்கிறார்கள். நான் உண்மையைத்தான் சொல்லுகிறேன். இந்த சபையில் உண்மையைத்தான் பேசவேண்டும் என்றிருக்கிறது. ஆதலால் உண்மையாக சொல்லுகிறேன். என்னைப் பொறுத்தவரையில், எனக்கு வியாபாரமோ, பெர்மிட்டோ, மாமனுக்கு மைத்துனனுக்கு உத்தியோகம், அல்லது மருமகனுக்கு உத்தியோகம் என்ற விஷயமோ எனக்கு

இடையாது. சாதாரண பண்டார சந்நதியைவிட கடுமையான பண்டார சந்நதியாகத்தான் இருக்கிறேன். இந்த நிலைமையினால் தான் இதையெல்லாம் சொல்லுகிறேன். நம்முடைய ஆட்சியை நல்லமுறையில் நடத்தவேண்டும். இதில் விருப்பு வெறுப்பு என்பது எல்லோருக்கும் இருக்கக்கூடியது. இவையொன்றுமில்லாத விதத்தில் யாரும் ஜனித்துவிடவில்லை. அப்படி யாரும் பிரம்மாவிடம் இண்டண்ட் போட்டு வரவில்லை. நாம் எல்லாம் சாதாரண ஆட்கள். வேண்டுமென்றால் எதிர்கட்சி நண்பர்கள் புதியதாக ஏதாவது புதிய படைப்புக்களை கொண்டுவந்தால் நல்லது. அது விசித்திரமாகவும் இருக்கும். ஆனால் நம்மைப் பொறுத்தவரை அப்படியொன்றும் விசித்திரமானதைக் கொண்டு வருவோம் என்று சொல்ல முடியாது. காரணம் நாம் ஆட்சி பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிறோம். அதனால் வசவு, வாழ்த்து எல்லாவற்றையும் நாம் சகித்துக்கொள்ளவேண்டியதுதான். எதிர்கட்சி நண்பர்களுக்கு அந்த வேலையில்லை. எதிரே உட்கார்ந்து கொண்டு எதைவேண்டுமானாலும் சொல்லிக்கொண்டிருக்கலாம். ஆகவே முக்கியமாக விவசாயிகளுக்கு ஊக்கம் அளிக்கக்கூடிய—நான் ஆரம்பத்தில் சொன்ன இரண்டு காரியங்களையும் செய்து கொடுக்கவேண்டியது மிகவும் முக்கியம். இதைச் செய்யாமல் நாம் உற்பத்தியை அதிகப்படுத்த முடியாது. பழைய காலத்தில் வட்டிக்கு வட்டி கொடுத்துக் கொண்டிருந்ததை பார்த்தோம். இப்போது நிலைமை என்னென்றால் எந்த வகைக் கடனை எடுத்துக்கொண்டாலும், இன்ஜின் கடனாக இருந்தாலும் சரி, மற்ற கடனாக இருந்தாலும் சரி, அவற்றுக்கெல்லாம், கெடு கடந்தால்—பீனல் டயட் கொடுத்துக்கொண்டிருந்தது மாதி—ரிபீனல் வட்டித் தான், தவறி பீனல் டயட் என்று சொல்லிவிட்டேன் பீனல் டயட் என்றால் இப்போதுள்ளவர்களுக்கு தெரியாது, 1924, 1925-ம் ஆண்டுகளில் சிறையில் இருந்தவர்களுக்குத் தெரியும், அதாவது ஏழு அவுன்ஸ் அரிசியை வறுத்து உப்பு போடாமல் கஞ்சி வைத்து ஒருவேளை கொடுப்பதுதான் பீனல் டயட். அப்போது அது பெருந்தண்டனையாகக் கருதப்பட்டு வந்தது. அந்த முறையில் விவசாயிகளுக்கோ, சாகுபடியாளர்களுக்கோ எந்தவிதமான அதிருப்தியும் ஏற்படக்கூடாது. பீனல் வட்டி இல்லாமல் விவசாயிக்கு செய்யுங்கள். அதற்கு தகுந்த முறையில் அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சென்றதடவை நான் வந்தபொழுது ரெவின்யூ மந்திரியிடம் தாளடிப் பயிரைக் காப்பாற்ற இன்ஜின் வேண்டுமென 3-ம் தேதி கேட்டேன், 6-ம் தேதி இன்ஜின் பட்டவர்த்தியில் இறைத்தது ரெவின்யூ மந்திரி அவர்கள் நேரிலும் பார்வையிட்டார்கள். இந்த உதவியை கொஞ்ச நாட்களுக்கு முன்னால் கொண்டு வந்திருந்தால் விவசாயிகளுக்கு இன்னும் அதிக உதவியாக இருந்திருக்கும். கொஞ்சம் இருந்த தண்ணீரை பம்பு வைத்து இறைத்து சாகுபடி செய்திருக்கிறார்கள். அதன் மூலம் சுமார் 1,000 குடும்பங்களுக்கு வேண்டிய நெல் கிடைக்கும் என்று தெரிகிறது. மோட்டாரை அமைத்துக் கொடுப்பதில் சர்க்கார் செலவிலேயே இதை அமைத்துக் கொடுக்கவேண்டும். நிலமுள்ளவர் சாகுபடிதாரர் யாராயினும் (மோட்டார் அமைக்கவேண்டும்.) இதன் மூலமாக கொள்ளிடக்கரையோரத்திலும், தண்ணீர் வசதியுள்ள இடங்களிலும் நாற்றை வளர்க்கவேண்டும். அங்கங்கே பல இடங்களில் சிறிதளவு தண்ணீர் வசதியிருக்கிறது. அந்த இடங்களில் நாற்றை முன்கூட்டி வளர்க்கவேண்டும். மோட்டார் அமைப்பது, கொடுப்பது சம்பந்தமாக செலவு ஏற்படுகிறதே என்று சர்க்கார் பார்க்க கூடாது. எத்தனையோ காரியங்களுக்குச் செலவு செய்கின்றோம். இதை ஒரு முக்கியமான காரியம் என்று எண்ணி சர்க்கார் செலவிலேயே மோட்டார் அமைத்துக்கொடுக்கவேண்டும். முக்கியமாக தண்ணீர் வசதியுள்ள இடங்களில் நாற்றை வளர்க்கவேண்டும். விவசாய அலுவலாளர்கள் விவசாயத்தில் நல்ல அனுபவமுடையவர்கள், இதில் நன்கு கவனம் செலுத்த வேண்டும். நான் புவனேஸ்வர காங்கிரஸுக்கு போய்விட்டு திரும்பும்போது ஆந்திர மாநிலத்தை அடுத்துள்ள பல இடங்களில் பார்த்தேன். தண்ணீர் வசதியில்லாத மணல் பிரதேசத்தில் கூட குடத்தை வைத்து தண்ணீர் இறைத்து நாற்றை வளர்க்கிறார்கள். அந்த நாற்றுகள் ஸ்டேட்டிலுள்ள மற்ற இடங்களுக்கு அனுப்பப்படுகிறது என்றும் கேள்விப்பட்டேன். கோதாவரி பக்கம் விவசாயம் செய்வதற்கு சாகுபடி செய்யமுடியாத நிலமுள்ளவர்கள்



இங்கிருந்து நாற்றை பயிர்செய்து அனுப்புகிறார்கள். அதைப்போன்று, நாம் தண்ணீர் வசதியுள்ள இடங்களில் எ.டி.டி. 27 நாற்றை முன்கூட்டியே வளர்ப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். தண்ணீர் காவேரியில் வந்தவுடன் எல்லா கிராமங்களிலும் நடவு செய்ய ஏற்பாடாகவேண்டும். இதைப் பற்றி சர்க்கார் கவனம் செலுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கரும்பு சாகுபடியைப் பொறுத்தளவில், கரும்பு சாகுபடியை நஞ்சையில் போடாமல் புஞ்சையில் மட்டும் போடுவதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்ய வேண்டும். நஞ்சையில் கரும்புப் போட்டுக்கொண்டிருப்பதின் காரணமாக நெல் விளைச்சல் ஆயிரக்கணக்கான மூட்டை குறைந்து கொண்டுவருகிறது. புன்செய் நிலமுள்ள இடங்களில் கரும்பு சாகுபடியை வைத்துக்கொள்ளலாம். தண்ணீர் தானாக பாயும் இடத்தில் கரும்பு சாகுபடி செய்யாமல் இருந்தால், மூன்று போகம் கூட நெல்லை உற்பத்தி செய்யலாம். இதை அரசாங்கம் சீர்தூக்கிப் பார்க்கவேண்டும். இப்படிப்பட்ட இரண்டு மூன்று காரியங்களில் கவனம் செலுத்தி உணவைப் பெருக்கவேண்டும். சர்க்காரில் இருப்பது யாராக இருந்தாலும் இப்படிப்பட்ட காரியங்கள் செய்யவேண்டியது மிகவும் முக்கியம். சர்க்கார் யாருடைய சர்க்கார் என்பது முக்கியமல்ல, எதிர்காலத்தில் வேண்டுமென்றால் யார் வேண்டுமென்றாலும் சர்க்கார் அமைக்கட்டும், அதைப்பற்றி நமக்குக் கவலையில்லை. அவர்கள் வந்தால் தான் என்ன நம்மைவிட அதிகம் செய்துவிடப்போகிறார்கள்? ஒன்றும் செய்துவிடப் போவதில்லை, இருக்கின்ற நிலைமை இது தானே, ஆண்டியும், ஆண்டியும் முட்டிக்கொண்டால் சாம்பலும் சாம்பலுந் தானே ஒட்டிக்கொள்ளும், தவிர வேறு சந்தனம் ஒன்றும் ஒட்டாது. இப்போது கார்ப்பரேஷனில் பார்க்கின்ற சாக்கடையைத்தான் திரும்பியும் பார்ப்போம். ஏதோ பொதுமக்களிடம் எதுவேண்டுமானாலும் சொல்லிக் கொண்டிருக்கலாம். நாங்கள் வைகுண்டத்தை காண்பிப்போம், கைலாசத்தை காண்பிப்போம் என்று சொல்லலாம். வேண்டுமென்றால் எதிர்கட்சி நண்பர்கள் ஒரு சினிமாவை எடுத்து அதில் வைகுண்டத்தையும், கைலாசத்தையும் காண்பித்துவிடுவார்கள். ஆனால் பொறுப்பில் இருக்கும் நாம் அப்படி மக்களை ஏமாற்ற முடியாது. ஆகவே நான் குறிப்பிட்ட ஒன்றிரண்டு திட்டங்களைச் செயலாற்றுவதற்கு ஏற்றுக்கொள்ளவேண்டும். இந்த எனது கருத்தை பரிசீலிக்கவேண்டும். இதை இன்றைக்கு நாளைக்கு என்று தள்ளி வைக்காமல் உடனடியாக பரிசீலிக்கவேண்டும். விவசாய மக்கள் ஒரே அதிருப்தியாக இப்பொழுது இருந்து கொண்டிருக்கிறார்கள். ப்ரொக்யூர்மெண்ட் செய்வதைப்பற்றி எங்கள் பகுதி மக்கள் ஆட்சேபனை செய்யவில்லை. நாட்டில் ஓரிடத்தில் பஞ்சம் அல்லது அங்குள்ள மக்களுக்கு உணவு இல்லை என்று வரும்போது, அதை நாம் சும்மா விட்டுவிட முடியாது. எல்லோருக்கும் இந்த நாட்டில் உண்ண உணவு இருக்க வேண்டும். "தனி ஒருவனுக்கு உணவு இல்லையெனில் இந்த ஜகத்தினை அழித்திடுவோம்" என்று பாடிக் காண்பித்திருக்கிறார் பாரதி. அந்த முறையில் இந்த நாட்டில் இன்னொரு பகுதியிலுள்ள மக்கள் உணவு இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள் என்றால் அவர்களுக்கு உணவு அனுப்ப வேண்டாம் என்று சொல்வது மனித தன்மையற்ற செயலாகும். அமெரிக்கா போன்ற பிற நாடுகளை எடுத்துக்கொண்டால் அவர்கள் பணம் வசூல் செய்து உணவுக்காக நமக்கு அனுப்புகிறார்கள். அப்படியிருக்கும் போது நம் நாட்டிலேயே இன்னொரு பகுதிக்கு உணவில்லை பற்றாக்குறை என்று சொல்வதை நாம் பொறுத்துக்கொண்டிருக்கமாட்டோம். வருகின்ற ஆட்களுக்கெல்லாம் உணவு கொடுப்பதற்காக சத்திரங்களைக் கட்டிவைத்த சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் நாம். அந்த அளவில் எந்தக்கட்சி ஆட்சியில் இருந்தாலும், மனிதன் என்கின்ற முறையில் உணவு இல்லை என்று சொல்லக்கூடியவர்களுக்கு உணவு கொடுத்து காப்பாற்றவேண்டியது நம்முடைய பொறுப்பு என்கிற முறையில், தஞ்சாவூர் ஜில்லாவில் இருக்கின்ற தசு கூலி விதை உணவு நீங்கி உபரி நெல்லை, வெளியில் தன்னிச்சையாக கொண்டுவருவதற்கு இந்த என் திட்டங்களை விட வேறு நல்ல திட்டங்கள் இருக்கமுடியாது. ஏனோ நமது முதலமைச்சர் அவர்களுக்குக் கூட்டுறவு விவசாய சங்கங்களிடம் கோபம் இருக்கிறது. ஏதோ அதிலுள்ள சில் அதிகாரிகள் மோசமாக இருந்திருக்கலாம். அதிகாரிகள் மோசம் என்பதற்காக அந்த கூட்டுறவு இயக்கத்தையே வேண்டாம் என்று

[திரு. கோ. நாராயணசாமி நாயுடு] [1st March 1966

சொல்லிவிட முடியுமா ? ஏதாவது தவறு இருந்தால் அதை சீர்திருத்துவதற்காகத்தானே நாம் இருக்கிறோம். உணவு உற்பத்தி சரியாக இல்லை என்று சொல்லி உணவு உற்பத்தித் திட்டங்களை நாம் விட்டுவிடுகிறோமா ? ரயிலில் எத்தனையோ விபத்துகள் நடக்கின்றன, அதற்காக ரயிலை உடனே நிறுத்திவிட முடியுமா ? ஆகாய விமான விபத்துக்கள் எத்தனையோ நடக்கின்றன, அதற்காக அதை நிறுத்திவிடுகிறோமா ? தவறுகள் நடந்தால் அதை நிவர்த்திப்பதற்கு திறமையான, பலமான, நல்ல அதிகாரிகளைப் போட்டு விசாரித்து அவற்றை திருத்தப் பார்க்கிறோம். விவசாய கூட்டுறவு சங்கங்கள் வேண்டாம் என்றால் எப்படி சோஷலிஸம் வரும் ? ஏதோ பஞ்சாயத்து யூனியன்களிடம் மட்டும் கருணை பிறந்து விவசாய உற்பத்திக்கு அவர்கள் தான் செயல்பட முடியும் என்கிறார்கள். இந்த பஞ்சாயத்து யூனியன்கள் வந்த பிறகு தான் ஊரில் இல்லாதிருந்த சண்டைகள் எல்லாம் வந்திருக்கின்றன. நல்ல முறையில் இருந்து வந்த கிராமங்களில் எல்லாம் தெருவுக்கு தெரு சண்டை, என்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. கட்டுக்கோப்பாக இருந்த கிராமங்களில், தெருவெல்லாம் சண்டை, திசையெல்லாம் சண்டை, ஊருக்கெல்லாம் நன்மைசெய்யவேண்டும் என்று ஆரம்பித்த பஞ்சாயத்துக்கள் எல்லாம் இன்றையதினம் அரசியல் போர்க்களமாக மாறிவிட்டது. நாம் எண்ணியதற்கு நேர் விரோதமாக இருக்கிறது. இந்த நிலையில் அவர்கள் கையில் பெரிய பொறுப்பை கொடுக்க வேண்டாம். உணவு உற்பத்தியைப் பெருக்கவேண்டும் என்பதற்காக நாமே அதிகாரிகள் பண்ணையைத்தான் பெருக்கிக்கொண்டிருக்கிறோம். இவர்களைத் திருப்தி செய்வதற்கே போதுமான காலம் இல்லை என்பது என்னுடைய அபிப்பிராயம். தேவைக்கதிகமாக பெருகியிருக்கும் உத்தியோக வர்க்கத்தை கொஞ்சம் கொஞ்சமாகக் குறைத்து வேறு வேறு வழிகளிலே ஈடு செய்தால் நமக்கும் க்ஷேமம், அவர்களுக்கும் நிம்மதி. அவர்களுடைய பிரச்னை சம்பள உயர்வு, விலைவாசி உயர்வு, விலைவாசிப் புள்ளிகள் இவ்வளவு ஏறி இருக்கிறதே வாழ்க்கை நிர்ப்பந்தம் அவர்களுக்கு. விலைவாசி உயர்வுக்காகப் பணமாகக் கொடுத்தால் ஒன்றும் நடக்காது. விலைவாசி மேலும் மேலும் உயர்ந்துகொண்டு தான் போகும். அதற்கு பதில் அவர்களுக்கு அரசாங்கத்திலிருந்து உணவுப் பண்டங்களை விலை குறைத்துக் கொடுப்பது நல்லது. சம்பளத்திற்கு பதில் இவ்வளவு அரிசி பருப்பு எண்ணெ, துணி என்ற முறையில் கொடுத்துவிடுவது நல்லது. அதுவும் கீழ்தரச் சிப்பந்திகளுக்கு அந்த முறையில் செய்துவிடலாம். தாலூகா ஆபீஸ் போன்ற ஆபீஸ்களில் உள்ள கீழ் நிலையில் உள்ள சிப்பந்திகள் உள்ளபடியே கஷ்டப்படுகிறார்கள். அவர்களுடைய கஷ்டத்தின் வேதனையினால், கதர் சட்டை போட்டவர் யாரைக் கண்டாலும் வேதனை அடைகிறார்கள். அவர்களுக்கு முதலில் திருப்தி ஏற்படுத்தவேண்டும். யுத்த காலத்தில் ரெயில்வேயில் அவர்களுடைய சிப்பந்திகளுக்கு அரிசி, பருப்பு போன்றவைகளையெல்லாம் விலை குறைவாகக் கொடுத்ததன் மூலமாக அவர்களுடைய அதிருப்தியைத் தடுத்தார்கள். அதே முறையை வைத்து, கீழ்தர சிப்பந்திகளுககு வேண்டிய அத்தியாவசியப் பொருள்களை குறைவான விலைக்குக் கொடுத்தால் உபயோகமாக இருக்கும். அவர்களுக்குத் திருப்தியை உண்டாக்க முடியும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

எங்கள் ஜில்லாவைப் பற்றி மாத்திரம் அல்லாமல், மாநிலத்தைப் பொறுத்த அளவில் எல்லாவற்றையும் கவனத்தில் கொண்டு, இந்த இரண்டு மூன்று திட்டங்களைச் செயலாற்றினால் நலமாக இருக்கும். இந்தச் சர்க்கார் வந்து இது வரையில் மாரடோரியம் கொடுக்கவே இல்லை. 1953-54-ல் ஒரு சட்டம் போட்டு கடனை ஒத்திவைக்கச் சொன்னோம். அந்த மாத நெல் அளக்க வேண்டியதை ஒத்தி வைத்தால் அவர்கள் நிம்மதியாக விவசாய உற்பத்தி வேலையில் ஈடுபட முடியும். விவசாயிகள் கடன் என்றால் கோடானுகோடி நாம் அமெரிக்காவிடம் பட்ட கடனா பட்டிருக்கிறார்கள் ? 4-5 லட்சம் ரூபாய் இருக்கும். எள்ளுப்போன இடத்தைப் பார்க்க பறங்கிக்காயை உருட்டி விட்ட மாதிரி இல்லாமல், உழவர்கள் நிலையை நிச்சயப்படுத்த, உழவில் ஈடுபட்டுள்ளவர்கள் நிலத்தைவிட்டு வெளியேற்றபடாமல் இருக்க வழிமுறைகளை ஏற்படுத்திக்கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.



1st March 1966]

**திரு. ஏ. சுவாமிதாஸ் :** கனம் தலைவர் அவர்களே, 1966-67-ம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையில் மீது எனது ஒரு சில கருத்துக்களைக் கூறலாம் என்று ஆசைப்படுகிறேன்.

இந்த நிதி நிலை அறிக்கையைக் குறித்து நடக்கிற விவாதத்திலே, முக்கியமாக இங்கு விவாதிக்கப்படுகிற விஷயம் வேளாண்மை பற்றியது. உணவு உற்பதத்தி பற்றித்தான் எல்லோரும் பேசிக்கொண்டிருக்கிறார்கள். அதிலிருந்து, விவசாயத் துறையைப் பொறுத்த அளவில், உணவு உற்பத்தியைப் பொறுத்த அளவில், என்னென்ன செய்தால் அது முன்னுக்கு வரும் என்று அரசு உணர்ந்திருக்கும் என்று நான் கருதுகிறேன். இன்று கிராமப் பகுதிகளிலே விவசாயத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறவர்கள் எப்படி வாழ்ந்து வருகிறார்கள் என்பதை நாம் சிந்தித்துப்பார்க்கக் கடமைப்பட்டிருக்கிறோம். விலைவாசி ஏறிக்கொண்டு இருக்கும்போது அரசாங்க ஊழியர்களுக்கு என்னென்ன தேவைப் படுகிறது என்று பேசுகிறோமோ, அதே போல விவசாயிகளுக்கும் விலைவாசி உயர்வு காலத்தின்போது, நாம் செய்ய வேண்டியவை பல உண்டு. அரசாங்க உத்தியோகஸ்தர்களுக்கு மத்திய அரசு போல ஐந்து அல்லது பத்து ரூபாய் கூடுதலாக படி கொடுத்தால், அதே அடிப்படையில் விவசாயிகளுக்கும் நாம் கொடுக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். விவசாயிகளுக்கு எப்படி கொடுக்க முடியும் என்று கேட்கலாம். விவசாயிகள் உற்பத்தி செய்யக்கூடிய நெல்லை விலைக்கு வாங்கும்போது நெல்லுக்கு விலை நிர்ணயித்திருக்கிறோம். அந்த விலை இன்றைய விலைவாசி உயர்வுக்குத் தக்கவாறு போதியதாக இல்லை. அவர்களுக்கு விவசாயத்தில் ஏற்படுகிற செலவு, விஞ்ஞான உரங்களை வாங்க அதிகமாக ஏற்படுகிற பொருள் விரயம் இவைகளை மனதில் வைத்துக்கொண்டு சிந்தித்துப் பார்த்தால், இன்று நிர்ணயித்திருக்கிற விலைபோதாது என்று திடமாகக் கூற முடியும்.

அவர்களுக்கு வேண்டிய அத்தியாவசியப் பொருள்களை எப்படிக் கொடுக்கிறோம், எந்தெந்த வேளைகளில் கொடுக்கிறோம் என்று சிந்தித்துப் பார்க்கவேண்டும். விவசாயிகளுக்கு உரம் கொடுக்கிறோம். ஆனால் காலாகாலத்தில் கொடுப்பதில்லை. நான் ஒரு விவசாயி எம். எல். ஏ. வாக இருந்து, அம்மோனியம் சல்.·.பேட் அல்லது யூரியா போட வேண்டுமென்றாலும், யாரைக் கேட்டாலும், வரவில்லை, கொஞ்சம் பொறுங்கள், என்று சொல்லுகிறார்கள். உரம் வரவில்லை என்று பயிரை கொஞ்சம் வளராமல் இரு என்றால் இருக்குமா? போட வேண்டியதை காலாகாலத்தில் போட்டால் தான் நல்ல பலன் கிடைக்கும். இந்தப் பயிர் நல்ல பயிராக இல்லை. காரணம் என்ன என்றால், காலாகாலத்தில் உரம் போட முடியவில்லை. இன்னொன்று நோய் ஏற்பட்டுவிட்டது. நோய் ஏற்பட்டு விட்டது பற்றி பல அதிகாரிகளைச் சந்தித்துச் சொன்னேன், ஒரு தொத்து நோய் ஏற்பட்டால் எப்படி அதைத் தடுக்க சுகாதார அதிகாரிகள் முற்பட்டு இலவசமாக மருந்து மற்ற உதவிகள் எல்லாம் கொடுத்துக் காப்பாற்றுகிறார்களோ, அதேமாதிரி பயிர்களுக்கு நோய் ஏற்பட்டால் தாங்களாகவே மருந்து அடித்து பயிர்களைக் காப்பாற்றவேண்டுமென்று சொன்னபோது, அதற்கு வேண்டிய பொருள் இல்லை, அதற்குச் சட்டம் இல்லை என்று சொல்லிவிட்டார்கள். எந்தச் சமயத்தில் நோய் ஏற்பட்டாலும், தொத்து நோயைத் தடுக்கும் முறையைக் கையாண்டு, அந்த நோயைத் தடுக்க அரசாங்கம் முற்பட்டு அவர்களாகவே மருந்து அடிக்க முற்படவேண்டும். இல்லை என்றால் விவசாயிடம் மருந்து அடிக்க ஸ்ப்ரேயர் இருக்காது, மருந்து இருக்காது. மருந்து வேண்டுமென்றால், 5 மைல், 10 மைல் போய் வாங்கவேண்டும். இப்போது சப்ஸிடி 25 சத வீதம் கொடுக்கிறார்கள். ஆனால் அவர்களுக்கு அடிக்கும் முறை தெரியாது. இப்படிப்பட்ட சிரமங்கள் இருக்கிற காரணத்தினால், உணவு உற்பத்தி அதிகமாகப் பெருக வேண்டுமென்று குறிப்பிடப்படுகிற நேரத்தில், பயிர்களுக்கு நோய் ஏற்படும்போது அரசாங்கமே முழுப் பொறுப்பையும் ஏற்று, பயிர்களைக் காப்பாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று இப்போது விஞ்ஞான முறையில் தயாரிக்கப்படும் உரத்தைப் பற்றிப்பேசிக்கொண்டிருக்கிறோம். இயற்கை உரத்தையும் அதிகமாகப் பெருக்க வேண்டும். பட்டணங்களில் மாட்டுச் சாணம் இருக்

கிறதே அதை உரத்திற்குப் பயன்படுத்த யாரும் முயற்சிப்பதாகத் தெரியவில்லை. சாணத்தைச் சேர்த்து சுவற்றில் தட்டி காய வைக்கிறார்கள். பட்டணங்களில்தான் இம்மாதிரிப் பழக்கம் இருக்கிறது. எங்கள் பக்கத்தில் இந்த மாதிரிப் பழக்கம் கிடையாது. இங்கு சாணத்தை எரி பொருளாகப் பயன் படுத்துகிறார்கள். இப்படிப் பயன்படுத்தினால் என்ன ஆகும்? உரம் இல்லாமல் போகும், ஆகவே, சாணத்தை எரி பொருளாகப் பயன்படுத்துவதை தடை செய்யச் சட்டம் கொண்டுவர வேண்டும். அப்படிச் செய்தால்தான் இயற்கை உரத்தைத் தயார் செய்ய முடியும் என்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதோடு லெவி முறை பற்றி இங்கு குறிப்பிட்டார்கள். எங்கள் மாவட்டத்தில் இப்போது நெருக்கடியான கட்டம். எம். எல். ஏ. மார்களுக்கு வெளியிலே தலைகாட்ட முடியவில்லை. ப்ரொக்யூர்மெண்ட் ஆரம்பித்திருக்கிறார்கள். சென்ற ஆண்டு கொள்முதல் செய்ததைவிட ஒரு மடங்கு அதிகமாக ப்ரொக்யூர்மெண்ட் செய்யவேண்டுமென்று கலெக்டருக்கு இங்கிருந்து உத்தரவு வந்திருக்கிற காரணத்தினால் விவசாயிகளிடமிருந்து லெவி முறையில் ப்ரொக்யூர் செய்கிறார்கள். அதனால் ஒரு பரபரப்பு ஏற்பட்டிருக்கிறது. அறுவடை செய்த நெல்லை வீட்டுக்குக் கொண்டுபோக முடியவில்லை. கதிர் கட்டுகளைக் கொண்டு போக முடியவில்லை. கதிர் கட்டுகளைத் கொண்டுபோகப் பர்மிட் கேட்கிறார்கள். அறுவடை ஆகி ஐந்து வண்டி கதிர்களாவது இருக்கும். பர்மிட் கேட்கும்போது விவசாயிக்கு இரண்டு வண்டிகளுக்கு பர்மிட் கொடுக்கிறார்கள். இரண்டு வண்டிக்கு பர்மிட் கொடுத்த காரணத்தினால் வைக்கோலை வயலில் போட்டு கதிரைக் கொண்டு சென்றிருக்கிறார்கள். அதிகாரிகள் நிலைமையைச் சரியாக கவனிப்பதில்லை. நேரடியாக விவசாயிகளுக்கு இருக்கிற சிக்கல்களை, கஷ்டங்களை உணரவில்லை, அவர்களுக்கு வேண்டியது நெல், எப்படியாவது கிடைக்க வேண்டும். காரணம் என்ன என்றால், அரசாங்கம் தாக்கீது கொடுத்திருக்கிறது. ஏறத்தாழ 10,000 டன் கன்னியாகுமரி ஜில்லாவில் கொள்முதல் செய்யவேண்டுமென்று தாக்கீது இருக்கிறது. அதை வைத்துக் கொண்டு விவாசயிகளைத் துன்பத்திற்கு ஆளாக்குகிறார்கள். கழிந்த ஆண்டில் எந்த அளவுக்குக் கொள்முதல் செய்தார்களோ, அந்த அளவுக்கு இந்த ஆண்டும் கொள்முதல் செய்யவேண்டுமென்று ஒரு அறிக்கை அனுப்பி வைத்தால் நெருக்கடி ஏற்படாது. இந்த மாதிரி நெருக்கடி ஏற்பட்டதால்தான் சென்ற மாதம் 18, 19 தேதிகளில் கல்குளம் தாலுகாவில் ஸ்ரீமான் குஞ்சன் நாடார் அவர்கள் தொகுதியில் தாலுகா பர்ச்சேஸிங் ஆ·.·பீஸருக்கும், ஊர் மக்கள் சிலருக்கும் தாவா ஏற்பட்டு கலவரம் ஏற்பட்டது. மதிப்புக்குரிய அங்கத்தினர் திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் போயிருந்தார்கள். நானும் சென்றிருந்தேன் என்ன நடக்கிறது என்று பார்க்க, நாங்கள் எல்லோரும் அங்கு நடந்ததைப் பார்த்து மனம் நொந்தோம். இரண்டு சட்டசபை அங்கத்தினர்கள் விசாரித்துக்கொண்டிருந்தோம் தெருவில் நின்றுகொண்டு, பக்கத்தில் யூனியன் தலைவர் நிற்கிறார். ஸ்பெஷல் தாசில்தார்கள் பலர், அதோடு டிஸ்ட்ரிக்ட் சப்ளை ஆபீஸர், இதுதான் 'மன வேதனைக் குரிய விஷயம் பல குண்டர்களைக் கொண்ட ஜீப்புகளோடு அங்கும் இங்குமாக டெமான்ஸ்ட்ரேஷன் நடத்தினார்கள். அது பார்க்கப் பரிதாபமாக இருந்தது. சில நாட்களுக்கு முன் ரோட்டில் சென்ற ஆண் பெண்களை இம்சித்திருக்கிறார்கள். அதை அறிந்துதான் நாங்கள் விசாரணை செய்யப்போயிருந்தோம். என்ன நடந்தது என்று நேரிடையாகக் கண்டு அறிவதற்காகப் போயிருந்தோம்.
12-30 p.m. நாங்கள் அங்கு நின்றுக்கொண்டிருப்பதைக் கண்டும் கூட, 4, 5 பேர்கள் அங்கும் இங்கும் காரில் போவதைப் பார்த்தோம். மிகவும் பயங்கரமாக இருந்தது. குண்டர்கள் பொது மக்களைத் தாக்கவேண்டும் என்ற எண்ணத்தில் வந்தார்கள். டிஸ்ட்ரிக்ட் சப்ளை ஆபீஸரே தலைமை தாங்கி வந்தார்கள். இப்படி நிலைமை இருந்தால் ஆட்சி நடத்துவானேன்? போலீஸ் இலாகாவே தேவையில்லை, நீதி இலாகாவே தேவையில்லை, சர்க்காரே தேவையில்லை. இந்த நிலைமையில் நாட்டில் நிகழ்ச்சிகள் நடந்துகொண்டிருக்கின்றன. அதனால்தான் வேதனையுடன்



இதைக் குறிப்பிட முற்பட்டேன். ஆகவே, இத்தகைய நிகழ்ச்சிகள் நடைபெறாத வண்ணம் நமது அரசாங்கம் கண்காணிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயிகளுக்கு 100 டிராக்டர்கள் வாங்குவதற்கு கடன் வழங்குவதற்கு அனுமதி அளித்திருக்கிறார்கள். நான் விசாரித்ததில் எனக்குத் தெரிய வந்தது. ஒரு நபருக்கு டிராக்டர் வாங்குவதற்கு கடன் கொடுத்திருந்தபோதிலும், அவர் கம்பெனியில் போய் டிராக்டர் கேட்டால், கிடைக்கவில்லை. இப்பொழுது கிடையாது, ஜூன், ஜூலை மாதத்தில் பார்த்துக்கொள்ளலாம் என்று கம்பெனிக்காரர்கள் சொல்லுகிறார்கள். காலாகாலத்தில் டிராக்டர்கள் கிடைத்து, காலத்திலே பயிர் செய்தால்தான் பலன் ஏற்படும். அரசாங்கம் கடன் கொடுக்கத் தயாராக இருக்கிறார்கள். ஆனால், டிராக்டர்கள் கிடைக்காத நிலைமை இருக்கிறது. இதில் சற்று கவனம் செலுத்தி டிராக்டர்கள் உடனடியாக விவசாயிகளுக்குக் கிடைப்பதற்கு வேண்டிய முயற்சிகளை விவசாய இலாகா எடுத்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இனி, நெல் விலையைப்பற்றி சொல்லுகிறேன். எங்கள் பக்கத்தில் ஒரு மூட்டைக்கு நெல் விலையைக் குறைத்து மதிப்பீட்டிருக்கிறார்கள். ரூபாய் 22 என்று நிர்ணயித்திருக்கிறார்கள். எங்கள் பகுதியில் ஒரு இடத்தில் ஒரு கான்வெண்ட் இருக்கிறது. அவர்கள் ஆர்·.·பனேஜ், போர்டிங் ஹவுஸ் எல்லாம் வைத்திருக்கிறார்கள். தங்களுக்கு அரிசி வேண்டாம், நெல்லாக வாங்கி பத்திரப்படுத்தி வைத்து கொள்கிறோம். பயன் படுத்திக் கொள்கிறோம் என்று சொல்லி நெல்லாக வாங்கினார்கள். கான்வெண்டுக்கு வெளியே விவசாயிகளிடத்தில் மூட்டை ஒன்றுக்கு ரூ. 22-க்கு வாங்கி, கான்வெண்டுக்கு ரூபாய் 28-க்கு விற்றிருக்கிறார்கள் அதிகாரிகள். இரண்டு பர்லாங்கு தூரம் கூட இருக்காது ரூ. 6 விலை வித்தியாசத்தில் விற்கிறார்கள். சிறிது தூரத்தில் விலை ரூபாய் 22-க்கு வாங்கி ரூபாய் 28-க்கு விற்கிறார்கள். இம்மாதிரி எந்த வியாபாரியும் வியாபாரம் செய்தது கிடையாது. அரசாங்கம்தான் செய்துகொண்டிருக்கிறது. இப்படி நாம் அதிகமான தொகைக்கு ஏன் விற்கவேண்டும்? ஏன் அம்மாதிரி நிலைமை ஏற்பட்டிருக்கிறது? இந்தத் தொகையைக் குறைக்க முடியாதா என்பதையும் பரிசிலனை செய்து பார்க்கவேண்டும்.

அடுத்தபடியாக, கல்வித் துறையைப் பொறுத்த அளவில், எங்கள் மாவட்டத்தில்தான் உயர்நிலைப் பள்ளிகள் அதிகம் இருக்கின்றன. வேறு எந்த மாவட்டத்திலும் இல்லாத அளவுக்கு அதிகமாக உயர்நிலைப் பள்ளிகள் இருக்கின்றன. அதற்கு அரசாங்கத்திற்கு நன்றி சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால், அரசாங்கக் கல்லூரி என்று சொல்லுவதற்கு ஒன்று கூட அங்கு கிடையாது. கிட்டத்தட்ட 70-க்கும் மேற்பட்ட உயர் நிலைப் பள்ளிகள், அரசாங்கப் பள்ளிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கிற மாவட்டம் அது. அப்படியிருந்தும் அரசாங்கக் கல்லூரி ஒன்றுகூட கிடையாது. பல முறை இந்த மன்றத்தில் இது பற்றி நாங்கள் கேட்டுக்கொண்டே வருகிறோம். ஒரு விவசாயக் கல்லூரி ஏற்படுத்தவேண்டுமென்று கோரிவருகிறோம். அதற்குறிய வாய்ப்பு அங்கு இருக்கிறது. தக்கலைக்குப் பக்கத்தில் புலியூர்குறிச்சியில் 500 ஏக்கர் நிலம் இருக்கிறது. நல்ல தண்ணீர் வசதியும் இருக்கிறது. அங்கு ஒரு விவசாயக் கல்லூரி ஏற்படுத்தினால், அந்த மாவட்டத்திலுள்ள மாணவர்களுக்கும், அண்டை மாவட்டத்திலுள்ள மாணவர்களுக்கும் படிப்பதற்கு வசதியாக இருக்கும். விவசாயம் முக்கியத்துவம் வாய்ந்த மாவட்டம் எங்கள் மாவட்டம். அங்கு ஒரு விவசாயக் கல்லூரி ஏற்படுத்தினால் விவசாயம் மிகவும் பயனுடையதாக இருக்கும் என்று நான் கூறிக்கொள்கிறேன்.

பல பள்ளிகளுக்கு போதுமான வசதியான கட்டிடங்கள் இல்லை. பல பள்ளிகள் ஓலை வேய்ந்த கூரைக் கட்டடங்களில் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அவற்றையெல்லாம் மாற்றி, கட்டடம் கட்டிக்கொடுக்க வேண்டும். சென்ற நிதிநிலை அறிக்கையில் எங்கள் பகுதியில் இரண்டு ஊர்களில் பள்ளிகளுக்கு கட்டடம் கட்டுவதற்காக ரூபாய் 2 லட்சம் பணம் ஒதுக்கப்பட்டது. ஆனால் இதுவரையிலும் அங்கே ஒரு வேலையும் ஆரம்

பிக்கப்படவில்லை. நான் இது சம்பந்தமாகப் பல அதிகாரிகளைக் கண்டு பேசியிருக்கிறேன். அங்கு பணியாற்றுகிறவர்கள் இதற்கு மராமத்து இலாகாதான் பொறுப்பு, அவர்கள்தான் காலாகாலத்தில் எஸ்டிமேட் தயார் செய்யவேண்டும், அப்படித் தயார் செய்யாத காரணத்தினால், அனுமதிக்கப்பட்ட பணம் கூட பிரயோசனப்படாமல் போய்விட்டது என்று சொன்னார்கள். ஆகவே மராமத்து இலாகா இதில் தீவிர கவனம் செலுத்தி மேலும் இவ்வாறு ஏற்படாதவாறு தடை செய்தால் நலமாக இருக்கும். குளச்சலில் ஒரு இடத்தில் ப்ரிபிரைமரி ஸ்கூல் அண்மையில் பெய்த மழையின் காரணமாக சுவர் இடிந்து தரை மட்டமாக இருக்கிறது. வெளியிலே பக்கத்தில் இருக்கிற மரத்து நிழலில் தான் இப்பொழுது பள்ளிக்கூடம் நடந்துக்கொண்டிருக்கிறது. நேற்றுப் பேசிய மதிப்பிற்குறிய அங்கத்தினர் டெவலப்மெண்டு கவுன்சிலில் நடந்ததுபற்றி பராதி சொன்னார். அவர் குறிப்பிட்டது போன்று சம்பவம் ஒன்றும் நிகழவில்லை. அவர் கூறியபடி கலெக்டர் ஒன்றும் தாறுமாறாகப் பேசவில்லை. கனம் உறுப்பினர் அங்கு இருந்த மெம்பரைக் கேட்டால் தெரியும் என்று என்னை சாட்சிக்கு அழைத்தார். கலெக்டரிடம் நானும் பராதி சொன்னேன். பள்ளிக்கூடம் இடிந்த நிலையில் இருக்கிறது, கவனிக்கவேண்டும் என்று சொன்னேன். உடனே கூட இருந்த எக்ஸக்யூடிவ் என்ஜினீயரை அழைத்து அதை கவனிக்கும்படி சொன்னார். தாறுமாறாக நடந்துகொண்டார் என்று சொல்லுவது உண்மை இல்லை என்பதை இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். ஆகவே, பள்ளிக் கட்டடங்களை சீக்கிரம் செம்மைப்படுத்துவதற்கு பி. டபிள்யூ. இலாகாவினர் சுறுசுறுப்பாக வேலை செய்யும்படி கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பின்தங்கியவர்கள் நலனைப் பற்றி குறிப்பிட விரும்புகிறேன். இது பற்றி எங்கள் மத்தியிலே ஒரு பெரிய குறை இருந்துகொண்டிருக்கிறது. இந்துக்களாக இருந்தால்தான், அரிஜனங்களுக்கு, சாம்பவர்களுக்கு, பறையர்களுக்கு, பள்ளர்களுக்கு, அளிக்கப்படும் சலுகைகள் வழங்கப்படும். ஆனால் ஒரு சாம்பவன் கிறுஸ்துவ மதத்தை தழுவிவிட்டால், அவன் கிருஸ்துவ மதத்தைத் தழுவிவிட்டான் என்ற ஒரு காரணத்திற்காக அந்தச் சலுகைகள் வழங்கப்படுவதில்லை. பொருளாதார அடிப்படையில் பார்த்தால் அவனும் தாழ்ந்த நிலையில்தான் இருக்கிறான். இந்துவாக இல்லை என்ற ஒரு காரணத்திற்காக மட்டும், கிறுஸ்துவ மதத்தை தழுவி மதம் மாறிவிட்டான் என்பதற்காக அந்தச் சலுகைகள் அவனுக்கு வழங்கப்படுவதில்லை. இந்துவாக இருந்தாலும் சரி, கிறிஸ்துவனாக இருந்தாலும் சரி, அவர்களுடைய நிலை ஒன்றுதான். இம்மாதிரி சலுகை கொடுக்கப்படவில்லை என்ற புகார் நீண்ட காலமாக இருந்துகொண்டிவருகிறது. மதம் மாறிவிட்டார்கள் என்ற ஒரே காரணத்திற்காக, ஒரு ஜாதிக்குக் கிடைக்கும் சலுகைகள் இவர்களுக்குக் கிடைக்காமல் போய்விடுகிறது. அதிலே சர்க்கார் கவனம் செலுத்தி, சட்டத்தைத் திருத்தவேண்டுமென்றால், சட்டத்தை திருத்தி, மதம் மாறிய கிறிஸ்துவர்களுக்கும் தாழ்த்தப்பட்டோர்களுக்குக் கிடைக்கும் எல்லா சலுகைகளும் கிடைக்கும்படி செய்யவேண்டும்.

எங்கள் மாவட்டத்தில் மீனவர்கள் பற்றிய நிலை மிகவும் பரிதாபகரமாக இருக்கிறது. ஒரு மாதத்திற்கு முன்பு அரசாங்கம் இவர்களுக்கு மரவள்ளிக்கிழங்கு, அரிசி இவைகளெல்லாம் இலவசமாக அளித்தார்கள். அடிக்கடி அவர்களுக்கு இந்தப் பஞ்ச நிலைமை ஏற்படுகிறது. காரணம், அவர்களுக்கு வருஷம் பூராவும் தொழில் இருப்பதில்லை. மீன்பிடித் தொழில் இல்லாத காலத்தில் அவர்கள் வேறு தொழிலில் ஈடுபடுவதற்கு வேண்டிய வாய்ப்புக்களையும், வசதிகளையும் செய்துகொடுக்க வேண்டும். கல்வியை எடுத்துக்கொண்டாலும் சரி, வாழ்க்கை தரத்தை எடுத்துக் கொண்டாலும் சரி, இவர்கள் இன்னும் பின்தங்கிய நிலையில் தான் இருக்கிறார்கள். மற்ற சமூகத்தினரைப் போல் இவர்கள் இன்னும் முன்னேறவில்லை. இவர்கள் குழந்தைகளைப் பார்த்தால், அவர்கள் அணிந்துகொண்டிருக்கிற ஆடைகளைப் பார்த்தால், பரிதாபகரமாக இருக்கிறது. தாழ்த்தப்பட்டவர்களுக்கு அளிப்பது போன்ற சலுகைகளை மீனவர் சமுதாயத்திற்கும் அளிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



சிக்கனத்தைப் பற்றி பட்ஜெட் உரையில் குறிப்பிட்டிருக்கிறார்கள் முதல் அமைச்சர் அவர்கள். சிக்கனத்தைக் கையாண்டு கொஞ்சம் தொகை மிச்சப்படுத்துகிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். சிக்கனத்தைப் பற்றி பேசும்பொழுது நான் பல விஷயங்களைச் சொல்ல வேண்டுமென்று நினைத்தேன். இருப்பினும் ஒரு சிலவற்றைக் குறிப்பிட விரும்புகிறேன். அதிகாரிகளை அதிகமாக நியமிக்கவேண்டும் கண்காணிப்பதற்கு என்று சொல்லப்பட்டிருக்கிறது. டிஸ்டிரிக்ட் லெவலில் இருக்கிற அலுவலகங்களில் இருக்கிற அதிகாரிகள், மாவட்ட தலைமை அதிகாரிகளாக இருப்பவர்கள் 10-30 மணிக்கு ஆபீஸ் திறக்கும் நேரமாக இருந்தாலும் கூட, அவர்கள் வருவது மாலை 3 மணிக்குத்தான். ஏதோ வீட்டில் பைல் பார்க்கிறார்கள், காம்பில் இருக்கிறார்கள் என்று சொல்லாம். மத்தியானம் சாப்பிட்டுவிட்டு அதற்கு மேல் ஆபீஸுக்கு வந்து உட்காருகிறார்கள். அங்கு இருக்கிற சிப்பந்திகள் ஏதாவது கேட்கவேண்டுமென்றால் அதிகாரிகளைக் காணவில்லை. அதிகாரிகள் வந்து பைல் பார்த்துத்தான் ஆர்டர் போட வேண்டியிருக்கிறது. பிறகு, மாலையில் ஆபீஸர் வீட்டிற்குப் போகும்வரையில். இரவு 7, 8 மணி வரையில் அந்த சிப்பந்திகள் காத்துக்கொண்டிருக்க வேண்டியிருக்கிறது. ஆபீஸர்கள் உட்கார்ந்திருக்கிற வரையில் அவர்களும் இருக்க வேண்டியிருக்கிறது. பைல்கள் உடனுக்குடன் டிஸ்போஸ் செய்யபடாமல் இருப்பதற்கு இது ஒரு காரணம், அதோடு கூட ஒவ்வொரு ஊரிலும் டிஸ்ட்ரிக்ட் கிளப்புகள் இருக்கின்றன. அவைகள் நல்ல நோக்கத்தோடு ஆரம்பிக்கப்பட்டவை என்றுதான் எண்ணுகிறேன். ஆனால், சாதாரணமாக ஒரு கிராமத்தில் நான்கு பேர்கள் உட்கார்ந்துகொண்டு சீட்டு ஆடிக்கொண்டிருந்தால் உடனே போலீஸ்காரர்கள் அவர்களைப் பிடித்துக் கொண்டு போய் விடுகிறார்கள். அவர்கள் பொழுது போக்காக விளையாடிக்கொண்டிருந்தால், கூட அவர்களை போலீஸார் பிடித்துவிடுகிறார்கள். ஆனால், டிஸ்ட்ரிக்ட் கிளப்பில் உறுப்பினர்களாக இருப்பவர்கள், 1,000 கணக்கில் ரூபாய் வைத்து சீட்டாடிக்கொண்டிருக்கிறார்கள். மணிக்கணக்கில் ஆடிக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் அம்மாதிரி சீட்டு ஆடுவதற்கு அனுமதிக்கப்படுகிறார்கள். இதையெல்லாம் தடைப்பண்ணினால் நன்றாக இருக்கும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொரு கருத்தையும் சொல்ல விரும்புகிறேன். விஞ்ஞானம் வளரவில்லை வளரவில்லை, நாம் முற்போக்கை அடையவில்லை என்று சொல்லுகிறோம். அதற்கு நான் ஒரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். விஞ்ஞானப் பட்ட படிப்புப் படித்தவர்களுக்கு கிளார்க் வேலை கொடுக்கக் கூடாது என்கிற திட்டத்தைச் செய்ய வேண்டும். அவர்கள் கற்ற கல்வி அறிவு விஞ்ஞான வளர்ச்சிக்கு பயன்படுத்தப் படவேண்டும், அவர்களை அப்பர் டிவிஷன் கிளார்க்காகவும், லோயர் டிவிஷன் கிளார்க்காகவும், மற்ற ஆபீசர்களாகவும் போடுவது நல்லதல்ல.

மற்றும் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். பப்ளிக் ஒர்க்ஸ் டிபார்ட்மெண்ட், ஹெல்த் டிபார்ட்மெண்ட் இவற்றில், செக்ரடரியாக இருப்பவர்கள் அந்தத் துறையில் படித்தவர்களாக இருக்க வேண்டும். ஒரு ஹெல்த் செக்ரடரி என்றால் அவர் ஒரு டாக்டர் படிப்புப் படித்தவராக இருக்க வேண்டும், அப்பொழுது தான் அவருக்கு டாக்டர்கள் தொழில் பற்றித் தெரியும். அதேபோல பப்ளிக் ஒர்க்ஸ் செக்ரடரி ஒரு எஞ்சினியராக இருக்க வேண்டும். அப்படி இருந்தால் அவர்கள் தங்கள் பணிகளை நல்ல முறையிலே செய்ய முடியும் என்று கூறி என் உரையை முடிக்கிறேன்.

* **திரு. ப. கா. முத்துவேலப்ப கவுண்டர் :** கனம் தலைவர் அவர்களே, இந்த நிதி நிலை அறிக்கையை ஆதரித்து சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு உணவு நிலைமை மிக்க நெருக்கடியாக இருக்கிறது. பஞ்சம் வந்துவிட்டது, மக்கள் எல்லாம் கஷ்டப்படுகிறார்கள் என்றெல்லாம் சொல்லிக்கொண்டே இருப்பதோடுகூட, நிலைமையும் மோசமாக இருக்கிறது என்பதைப் பார்க்கிறோம். அதற்குக் காரணம், மழை இன்மை ஒன்று, இயற்கை பொய்த்துவிட்டது, அணைகளில் தண்ணீர் இல்லை, வாய்க்கால்களில் தண்ணீர் இருந்து விவசாயத்திற்கு ஏதுவாக இல்லாததால், இந்த ஆண்டு அவ்வளவு கஷ்டங்கள் இருந்தாலும், இந்த

அரசு எடுத்த முயற்சிகளின் பலனாக, மக்கள் பட்டினியால் செத்து விட்டோம், என்று சொல்லும் நிலைமை வரவில்லை, வரவும் வராது என்று நினைக்கிறேன். அதோடுகூட, பெரிய திட்டங்களை வகுத்திருக்கிறோம். நீர்பாசனத் திட்டங்களை கண்காணிக்கும் நிலையில் இருக்கிறோம். இன்றைக்கு புஞ்சை நிலமெல்லாம், அணைகள் கட்டி தண்ணீர் விட்டதன் காரணமாக ஏக்கரா ஒன்றுக்கு ரூ. 10,000 வரை விலை போகும் அளவுக்கு நாம் பொருளாதாரத்தில் முன்னேறியிருக்கிறோம். அப்படியிருக்கும்போது, எதிர்க்கட்சி நண்பர்கள் சொல்லுகிறார்கள், சோஷலிசம் என்று சொல்லுகிறார்களே அது அழிந்து விட்டது; இவர்கள் எல்லா வகையிலும் தோற்று விட்டார்கள் என்று சொல்லுகிறார்கள். சோஷலிசம் என்பது, கராச்சி காங்கிரஸிலிருந்து, ஆவடி காங்கிரஸ் வரை, புவனேஸ்வர் காங்கிரஸ் வரை, காங்கிரஸ் தீர்மானங்கள் மூலம் ஏற்றுக்கொண்டிருக்கிற கொள்கை. அந்த சோஷலிசக் கொள்கையை கண்காணித்து வந்திருக்கிறது காங்கிரஸ் அரசாங்கம். அப்படியிருந்தும், எதிர்க்கட்சியாகிய திராவிட முன்னேற்றக் கழகம், சோஷலிசம் பேசிக்கொண்டு, முதலாளித்துவக் கொள்கை கொண்ட சுதந்திராக் கட்சியோடு கூட்டு சேர்ந்து கொண்டே, இந்த நாற்காலிகளைப் பிடிக்கத் திட்டம் தீட்டுகிறார்கள். உண்மை நிலை 1967-ல் தெரிந்துவிடும், கவலைப்பட வேண்டியதில்லை.

உணவு நிலை மோசமாக இருந்தாலும், ஓரளவு மக்களுக்கு உணவுப் பண்டங்களை நல்ல முறையில் விநியோகிக்க அரசாங்கம் ஏற்பாடு செய்திருக்கிறது, இன்றைக்கு உணவு உற்பத்திக்கு உரம் மிக முக்கியமானது. அதற்கு நமக்கு இன்றைக்கு 3·20 லட்சம் டன்தான் கிடைத்திருக்கிறது. அதை விநியோகிக்கும் முறையில் சில குறைபாடுகள் இருக்கின்றன. அதை மிக்ஸர் செய்து கொடுப்பதில் ஆராய்ச்சி தேவை. மிக்ஸர் செய்வதற்கு என்று ஒரு அளவு பிண்ணாக்கும், கலப்பு உப்பும் கொடுக்கிறோம். ஆனால் உப்பை வைத்துக் கொண்டு, எப்படிச் செய்ய வேண்டுமென்று சர்க்கார் பிரசுரம் கொடுத்திருக்கிறார்கள். அதிலே நைட்ரஜன் எவ்வளவு, பாஸ்பரஸ் எவ்வளவு, தழை சத்து எவ்வளவு என்றெல்லாம் கொடுத்திருக்கிறார்கள். அதிலே பார்க்கும் போது, உப்பு ஓரளவு, பிண்ணாக்கு ஓரளவு, எலும்பு தூள் ஓரளவு, சூப்பர் பாஸ்பேட், பொடாஷ் ஓரளவு என்றெல்லாம் கலந்து, அதோடு 5 சதவீதம் மண்ணைக் கலக்கும் திட்டத்தை வகுத்திருக்கிறார்கள். ஆனால் வியாபாரிகள் என்ன செய்கிறார்கள்? மண்ணை 45 சதவீதம் கலந்து விடுகிறார்கள். 90 ராத்தல் மூட்டையில் சரிபாதி மண்ணைக் கலந்து விடுகிறார்கள். அதன் விலை என்ன? ரூ. 18·50. ஆகவே, அதன் தரம் என்ன என்று பார்த்தால், ரூ. 9 அளவில் உப்பும், ரூ. 9 அளவு மண்ணும்தான் இருக்கிறது. அதை அரசாங்கம் கண்காணித்து ஆவன செய்ய வேண்டும். இந்த மாதிரி மண்ணை விவசாயிகள் நல்ல விலை கொடுத்து வாங்கி, ஏக்கராவிற்கு இவ்வளவு என்கிற கணக்குப்படி, உரம் போடும்போது, அதிகமாக மண்ணே கலந்திருப்பதால், விவசாயத்தில் கண்டு முதல் குன்றிவிடுகிறது. உற்பத்தி குறைந்து விடுகிறது. ஆகவேதான் நினைத்த அளவு பெருக்கம் இல்லை, இந்தப் பொருள்களை வாங்கி சொந்தமாக கலக்குவதாக இருந்தால், எலும்புத் தூள், உப்பு, பாஸ்பேட், மற்றும் பிண்ணாக்கு, பொடேஷ் இவற்றைக் கலக்கிப் பார்த்தால், 90 ராத்தல் மூட்டை ரூ. 15 தான் அடக்கம் ஆகிறது. அவர்கள் விற்பது ரூ. 18-க்கு என்பது மிகவும் மோசமாக இருக்கும் நிலைமை என்பதைக் கவனிக்கவேண்டும். அதனால் தான் விவசாயத்திற்கு பெரிய குந்தகம் ஏற்படுகிறது. விவசாயி வாங்கும்போது, இது நல்ல உப்பா என்று ஆராய்ந்து பார்க்க சந்தர்ப்பம் இல்லை. நல்லது என்றே நம்பி வாங்கிக் கொண்டு போகிறான். அதில் சத்து இருக்கிறதா என்று அவன் ஆராய்ச்சி செய்து கொண்டிருக்க முடியாது. பெரிய கம்பெனியில் கொடுக்கிறார்கள், பாரி கம்பெனியில் கொடுக்கிறார்கள் என்று வாங்குகிறார்கள். அதில் 45 சதவீதம் மண்ணைக் கலக்கிறார்கள் என்றால், அரசாங்கம் அதைக் கண்காணிக்க வேண்டிய அவசியமாகிறது.

அவர்கள் 100 மூட்டை தயாரிக்கிறார்கள் என்றால், அதற்கென்று ஒரு அதிகாரியைப் போட்டு, அவர்கள் செய்திருக்கும் கலப்படத்தை சோதித்துப் பார்த்து, அதனுடைய சக்தி எவ்வளவு என்று கண்டுபிடித்து, ஆராய்ந்த பிறகுதான் அந்த மூட்டைகளை விவசாயிகளுக்குக் கொடுக்கலாம் என்கின்ற





உத்தரவைப் போட்டால், ஓரளவு விவசாய உற்பத்தி பெருகும், அது விவசாயிகளுக்கு மிக்க வசதியாக இருக்கும். விவசாயத்திலும் நல்ல லாபம் கிடைக்கும். ஆகவே, நல்ல திறமையான அதிகாரிகளைப் போட்டு ஆவன செய்ய வேண்டும்.

இன்றைக்கு பஞ்சு சம்பந்தப் பட்டவரையில், பஞ்சின் "ஸ்டேபிளை" ஆராய்ந்து பார்க்க, ஒரு சிறு அளவு பஞ்சை எடுத்து அதன் ஸ்டேபிள் என்ன என்று நிர்ணயிக்கிறார்கள். அதன் நீளம் என்ன என்று கண்டுபிடிக்கிறார்கள். ஆனால், சோதனைக்குப் பஞ்சை எடுத்துக் கொடுக்கும் ஆளுக்கு ஒரு 25 ரூபாயைக் கொடுத்தால், நல்ல நீள்முள்ள பஞ்சைப் பார்த்து அவன் அனுப்பிவிடுகிறான். அந்த பஞ்சு பூராவும் உயர்ந்த பஞ்சு என்று ஆகிவிடுகிறது. ஆகவே அந்த சர்வே நியாயமான முறையில் நடக்காமல் போகிறது. அதே போல உரத்திலும் கலப்படம் செய்து, மண்ணை அதிகமாக கலந்து விட்டால், அது விவசாயத்தைப் பாதிக்கிறது உற்பத்திக்கு குந்தகம் ஏற்படுகிறது. அதைக் கண்காணித்து விவசாயிகளுக்கு உதவ வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

இப்பொழுது தண்ணீர் இல்லாததால் முறை போட்டு தண்ணீர் பாய்ந்ததால், பயிர்கள் கொடையும் பூவுமாக வந்து இருக்கிறது.

(கனம் உதவி சபாநாயகர் தலைமை.)

எங்கள் பகுதியில் கிட்டத்தட்ட 22,000 ஏக்கர் அப்படி முறைத் தண்ணீர் பாய்ச்சி பயிர் வளர்ந்திருக்கிறது. கொடையும் பூவுமாக இருக்கிறது. இந்தத் தறுவாயில் தண்ணீர் இல்லை. அவசியமாகத் தண்ணீர் கொடுக்க வேண்டும் என்று சொன்னோம். அதிகாரிகள் ஜில்லா விவசாய அதிகாரியிடம் சர்ட்டிபிகேட் வாங்கி வரவேண்டும் என்று சொன்னார்கள். அதையும் டி.ஏ.ஓ. இடம் சொன்னோம், அவரும், பயிர்கள் பூவும் கொடையுமாக இருக்கிறது, இந்தத் தருணத்திலே தண்ணீர் அவசியம் என்று லெட்டர் மூலம் தெரிவித்திருக்கிறார்கள். இருந்தும் இன்னும் தண்ணீர் விடவில்லை. இதனால் அந்த ஏரியாவில் குந்தகம் ஏற்பட்டிருக்கிறது. இந்த வருஷத்தில் மிகவும் குறைவான வருவாய் தான் ஏற்படும் நிலை இருக்கிறது. விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். முறைக்கட்டை அதே மாதிரியாக விட்டுவிடாமல், எந்த எந்த நேரத்தில் தண்ணீர் தேவை என்பதைக் கவனித்து, அந்த நேரத்தில் தண்ணீர் கொடுக்க வேண்டும் என்பதை விவசாய அதிகாரிகளே கவனித்து, அந்த சமயத்தில் கொடுத்தார்களானால், தண்ணீர் நஷ்டம் இல்லாமல் நல்ல முறையில் பாய்ந்து விவசாயிகளுக்கு நல்ல வருவாய் கிடைக்க வசதி ஏற்படும் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இருநூற்றைம்பது ட்ராக்டர்களுக்கு லோன் கொடுக்கலாம் என்று சொல்லுகிறார்கள். இது போதாது. ஒவ்வொரு யூனியனிலும் ஒவ்வொரு பஞ்சாயத்திலும் ஒரு ட்ராக்டர் வாங்கி வைத்து, வாடகைக்குக் கொடுக்கச் செய்யவேண்டும். உழவு செய்ய வேண்டிய நேரத்தில், குறைந்த வாடகைக்கு ட்ராக்டரை வாடகைக்கு விட்டால் விவசாயம் நல்ல முறையில் வளரும். கிராமப் புறங்களில் சாதாரணமாக விவசாய நேரங்களில் ஆட்கள் பற்றாக் குறை இருக்கிறது. ஆட்கள் கிடைத்தாலும் அதிகக் கூலி கொடுக்க வேண்டியிருக்கிறது. ஏராளமான பகுதியை உழுவதற்குப் போதுமான மாடுகளும் கிடைப்பதில்லை. இதையெல்லாம் கருத்திற்கொண்டு அந்தந்த பஞ்சாயத்தில் ட்ராக்டர் வைத்திருந்து குறைந்த வாடகைக்குக் கொடுத்தால், விவசாயம் வளர்ச்சியடைய முடியும் என்று சொல்லிக்கொண்டு, இத்துடன் உரையை முடிக்கின்றேன்.

***திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார்:** கனம் தலைவர் அவர்களே, 1966-67-ஆம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையின் பேரில் சில வார்த்தைகள் சொல்ல நான் விரும்புகிறேன். இன்று முக்கியமாக உணவு உற்பத்திக்காக அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இன்று எங்கே பார்த்தாலும் பருவ மழை தவறிப் போய்த் தண்ணீர் கஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. குறைந்த தண்ணீர் வைத்து விளைவிக்கக்கூடிய "ஸெமி-ட்ரை பாடி" உற்பத்தி செய்வதற்குத் திட்டம் வகுத்தால் நலம் என்று நான் நினைக்கிறேன்.

[திரு. எ. ஆர். சுப்பையா முதலியார்] [1st March 1966

உற்பத்திப் பெருக்கத்திற்காக ஹைப்ரிட் சோளம் ஆங்காங்கு கொடுக்கப்படுகிறது. ஆனால், உற்பத்தி செய்வது தனிக் கம்பெனியிடம் அல்லது தனி நபர்களிடம் கொடுக்கப்பட்டிருக்கிறது. சர்க்காருடைய மேற்பார்வையில் அதிகமாக ஹைப்ரிட் சோளம் உற்பத்தி செய்து விநியோகம் செய்யும் நிலைமை ஏற்பட்டால் உற்பத்தி அதிகமாக ஏற்படும். ஏனென்றால், சாதாரண சோளம் பயிரிடும் போது ஆயிரம் பவுண்டு ஏக்கருக்குக் கிடைத்தால், ஹைப்ரிட் சோளம் பயிரிட்டால் ஏக்கருக்கு நாலாயிரம், ஐயாயிரம் பவுண்டு கிடைப்பதாகச் சொல்லுகிறார்கள். ஹைப்ரிட் சோளம் எங்கும் விநியோகம் செய்யும் நிலைமை ஏற்பட்டால் தண்ணீர்க் குறைவாக இருக்கும் இடங்களுக்கு நன்மை ஏற்படும்; உற்பத்தியும் பெருகும்.

அக்ரிகல்சரல் இம்ப்ளிமெண்ட்ஸைப் பொறுத்தவரையில், தனிக் கம்பெனிகள்தான் வேலை செய்துகொண்டிருக்கின்றன: இப்பொழுது இண்டஸ்ட்ரியல் டிபார்ட்மெண்ட் மேலூர் கலப்பை கொடுக்கிறது. அது செவ்வனே செய்யப்படவில்லை. அநேகக் குறைகள் இருப்பதாகத் தெரிகிறது. சென்ற 20 வருஷ காலமாக அக்ரிகல்சரல் டிபார்ட்மெண்டில் இண்டஸ்ட்ரியல் விங் ஒன்று தனியாக இருந்துகொண்டிருக்கிறது. ஆனால், அதில் உற்பத்தி செய்யக்கூடிய அக்ரிகல்சரல் இம்ப்ளிமெண்ட்ஸை யாரிடம் கொடுப்பது, யாரால் கன்ஸ்யூம் செய்யப்படுவது என்ற நிலைமை தெரியாமல் உற்பத்தி செய்கிறார்கள். சில இம்ப்ளிமெண்ட்கள் ப்ளாக்குக்கு வருகின்றன. அவை சரியாக விநியோகம் செய்யப்படுகின்றனவா, சரியாக வேலை செய்கின்றனவா என்று பார்ப்பதற்கு ஒரு தொடர்பு இல்லை. அக்ரிகல்சரல் இன்ஜினீரிங் விங்குக்குப் பூராப் பொறுப்பும் கொடுக்க வேண்டும். அக்ரிகல்சரல் இன்ஜினீரிங் செக்ஷன், இண்டஸ்ட்ரீஸ் டிபார்ட்மெண்ட், பஞ்சாயத்து யூனியன் ஆகிய மூன்று துறைகளில் அக்ரிகல்சரல் இம்ப்ளிமெண்ட்ஸ் செய்கிறார்கள். அதனால் கருவிகள் செவ்வனே செய்யப்பட வழியில்லை. ஒரே துறையில் பொறுப்பை ஒப்படைத்து அக்ரிகல்சரல் இம்ப்ளிமெண்ட்ஸை நன்றாகத் தயாரித்து, அவை நல்ல முறையில் இயங்கச் செய்ய வேண்டும். தரமுள்ள கருவிகள் எல்லா இடங்களிலும் கிடைக்க வழி ஏற்படுத்த வேண்டும்.

டீஸல் எண்ணெய்க்கு வரி உயர்த்தப்படுகிறது என்பதைப் பத்திரிகையில் பார்க்கிறோம். ட்ராக்டருக்கு உபயோகப்படுத்தக்கூடிய டீஸல் எண்ணெய்க்கும் விலை ஏறிக்கொண்டே இருக்கிறது. ஆகையால், விவசாயம் சம்பந்தப்பட்ட வரையில், டீஸல் எண்ணெய்க்கான வரியைக் குறைக்க வழி செய்ய வேண்டும்.

விவசாய உற்பத்தி அதிகமாக வேண்டுமென்றால், ப்ளாக்கிடம் அந்தப் பொறுப்பு இருக்கவே கூடாது. உற்பத்திப் பெருக்கத்திற்கு யார் பொறுப்பாளியாக இருக்க வேண்டும் என்றால், விவசாய இலாகாதான். விவசாய விஸ்தரிப்பு அதிகாரிகள் ரெவின்யூ டிவிஷனல் ஆபீசரின் மேற்பார்வையில் இருக்கிறார்கள் விவசாயம் அபிவிருத்தி ஆகவேண்டும் என்றால், விவசாய உற்பத்தி அதிகமாக வேண்டுமென்றால், விவசாய இலாகா தனியாக வேலை செய்ய வேண்டும். ப்ளாக்கின் பொறுப்பில் தள்ளுகிறபோது, ஒருவிதமான அபிவிருத்தியும் ஏற்படுவதில்லை. கம்போஸ்ட் ஆபீசர், விவசாய விஸ்தரிப்பு அதிகாரி, இப்படிப்பட்டவர்களுடைய கான்ஃபிடென்ஷியல் ரிப்போர்ட்டை எழுத வேண்டியவர் ரெவின்யூ டிவிஷனல் ஆபீசராக இருப்பதால், டிஸ்ட்ரிக்ட் அக்ரிகல்சரல் ஆபீசருக்குக் கட்டுப்பட்டு அவர்கள் செயல்பட முடியாத நிலை இருக்கிறது. டிஸ்ட்ரிக்ட் அக்ரிகல்சரல் ஆபீசர் ஏதாவது வேலை சொன்னாலுங்கூட, "ஆர்.டி.ஓ. இன்ன இடத்திற்குப் போகச் சொல்லியிருக்கிறார்" என்று சொல்லிவிட்டு அந்த அக்ரிகல்சரல் எக்ஸ்டென்ஷன் ஆபீசர் போய்விடுகிறார். கான்ஃபிடென்ஷியல் ரிப்போர்ட் எழுதுகிறவர் ஆர். டி. ஓ. வாக இருக்கும் போது, டிஸ்ட்ரிக்ட் அக்ரிகல்சரல் ஆபீசர் எந்த வேலை சொன்னாலும் அதனால் ஒருவிதமான பிரயோசனமும் இல்லை. உற்பத்தி பெருக வேண்டும் என்றால், விவசாய இலாகாவைத் தனியாக இயங்கக்கூடிய நிலையில் வைக்கவேண்டும். அப்பொழுது தான் உற்பத்தி பெருக முடியும்,



1st March 1966] [திரு. எ. ஆர். சுப்பையா முதலியார்]

இந்த மூன்று ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் நாம் இந்தப் பொறுப்பை ப்ளாக்கிலே கொடுத்தோம். என்ன ஆயிற்று? ஒருவிதமான நன்மையும் ஏற்படவில்லை. ஆகவே, எக்ஸ்பெரிமெண்டாக சில ஜில்லாக்களுக்காவது இம்மாதிரி வழி செய்வது நலம் என்று நான் நினைக்கிறேன். இன்ஜினீரிங் டிபார்ட்மெண்டை எடுத்துக்கொள்ளுங்கள், கல்வி இலாகாவை எடுத்துக் கொள்ளுங்கள், அவையெல்லாம் தனித்தனியாக இயங்குகின்றன. நன்றாக இயங்கிக்கொண்டிருக்கின்றன. விவசாய இலாகாவை மட்டும் ஏன் இப்படிப் பிணைத்து வைக்கவேண்டும்?

உணவுத் தானியம் சேமித்து வைக்கப்பட்டதில் என்ன ஆயிற்று என்பதை இரண்டு தினங்களுக்கு முன் பத்திரிகையில் பார்த்தோம். பத்தாயிரம் டன் சேமித்து வைக்கப்பட்ட உணவுத் தானியம் கெட்டுவிட்டது. ஏலத்திற்கு விடப்போகிறோம் என்று விளம்பரம் செய்திருக்கிறார்கள் உணவுக் கார்ப்பரேஷன். பத்தாயிரம் டன், இரண்டு அல்லது மூன்று கிடங்குகளில் கெட்டிருக்கின்றன. நன்றாகச் சேமித்து வைக்காத காரணத்தினால் அவ்வளவு தானியம் கெட்டிருக்கிறது. உணவுப் பற்றாக்குறை ஏற்பட்டிருக்கும் இந்த நேரத்தில் பத்தாயிரம் டன் தானியம் கெட்டுப் போய் ஏலத்திற்கு வரக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறதென்றால், அந்த அளவிற்கு உணவுத் தானியங்களைச் சேமித்து வைப்பதில் குறை இருக்கிறது. ஆகவே, உணவுத் தானியங்களைச் சேமித்து வைக்கும் முறைகளைச் சீர்படுத்த வேண்டும்.

சோளம், கேப்பை ஆகிய புஞ்சைத் தானியங்களை மாவாகவும், ரவையாகவும் செய்யலாம். கோவையிலே கேப்பை ரவை தயார் செய்கிறார்கள். இதுபற்றி எல்லாம் ஆராய்ச்சி செய்ய வேண்டும். தானிய உற்பத்தியை ஒரு பக்கம் பெருக்கிக் கொண்டிருக்கும்போதே, அரிசி அல்லாத மற்றத் தானியங்களையும் நாம் சாப்பிட வழி செய்ய வேண்டுமென்றால், கேப்பை, சோளம் போன்றவற்றையெல்லாம் மாவாகவும், ரவையாகவும் மாற்றுவதற்கான ஆராய்ச்சி தேவைப்படுகிறது.

மேற்கு நோக்கிப் பாயும் ஆறுகளின் தண்ணீரைப் பயன்படுத்திக் கொள்வது பற்றி வருஷா வருஷம் ஒரு வரி எழுதப்படுகிறது. அது எந்த நிலைமையில் இருக்கிறது என்று தெரியவில்லை. இன்று நமக்கு நிறைய ப்ராஜெக்ட்கள் இருக்கின்றன. அண்டை மாநிலத்தவரோடு நல்ல தொடர்பு வைத்துக்கொண்டால் வழி ஏற்படும். அதற்குத் தொடர்பே இருப்பதாகத் தெரியவில்லை. அதிக உணவு உற்பத்தி செய்யவேண்டும் என்றால், நீர்ப்பாசன வசதி தேவைப்படுகிறது. அதற்கான மேற்கு நோக்கிப் பாயும் ஆறுகளின் தண்ணீரைப் பெருமளவிற்கு விவசாயத்திற்குப் பயன்படுத்தக்கூடிய வழிவகைகளைக் காணவேண்டும். நடுத்தர, சிறு பாசனத் திட்டங்கள் அநேகம் இருந்து கொண்டிருக்கின்றன. அவற்றை நடைமுறையில் கொண்டுவரக் காலதாமதம் ஏற்படுகிறது. ஆங்காங்கே என்ன என்ன திட்டங்கள் இருக்கின்றன என்பதை உடனடியாகக் கண்டுபிடித்து, சீக்கிரத்தில் அவற்றைச் செயல்படுத்த வழி செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

சிக்கனம் சம்பந்தமாகச் சில வார்த்தைகள் சொல்ல நான் பிரியப்படுகிறேன். அனிமல் ஹஸ்பண்டரி டிபார்ட்மெண்டுக்கும் மில்க் கமிஷனருக்கும் தொடர்பு இல்லாமல் இருப்பதால் பால் உற்பத்தியைப் பெருக்க முடியவில்லை. மில்க் கமிஷனர் ஒரு பக்கத்திலும், கூட்டுறவுச் சங்கங்கள் மற்றொரு பக்கத்திலும் பால் விநியோகம் செய்கிறார்கள். பால் உற்பத்தி, விநியோகம் ஆகியவற்றையெல்லாம் ஒரே வழியாகச் செய்யக்கூடிய நிலையை ஏற்படுத்திவிட்டால், அனிமல் ஹஸ்பண்டரி டிபார்ட்மெண்டோடு மில்க் கமிஷனர் அலுவலகத்தையும் இணைத்துவிடலாம். அதன் மூலமாகச் சிக்கனத்தை ஏற்படுத்திவிடலாம்.

அதே போன்று, டிஸ்ட்ரிக்ட் ரெவின்யூ ஆபீசர் என்ன வேலை செய்கிறார் என்று அவர்களுக்கே தெரியாது. எந்தப் பேப்பராக இருந்தாலும் கலெக்டர் கையெழுத்துப் போட்டால் தான் பிரயோசனம் உண்டு. டிஸ்ட்ரிக்ட் ரெவின்யூ ஆபீசருக்கு அவ்வளவாக வேலை இல்லாமல் இருந்து

கொண்டிருக்கிறது. அதைக் குறைக்கலாம். அத்துடன் தாலுக்கா ரீஆர்கனைசேஷனும் செய்யலாம். ஒவ்வொரு தாலுக்காவிலும், எஸ்டேட்ஸ் தாசில்தார் என்றும், நான்-எஸ்டேட்ஸ் தாசில்தார் என்றும், தனித்தனியாக தாசில்தார்கள் இருந்துகொண்டிருப்பதால் நிர்வாகச் செலவு அதிகமாக ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. ஆகவே, தாலுக்கா ரீஆர்கனைசேஷன் செய்தால் அதிலும் சிக்கனம் ஏற்படும்.

இன்ஜினியரிங் டிபார்ட்மென்டை எடுத்துக்கொண்டால், ஐந்து விதமான பெயரில் இயங்கிக் கொண்டிருக்கின்றது. பொதுவாக, இரிகேஷன், அதையடுத்து, எஸ்.எம்.ஐ.பி., அதற்குப் பிறகு எஸ்.எம்.ஐ.பீ. (இரிகேஷன்), அது தவிர, ஃபுட் ப்ரொடக்ஷன், மற்றும் இன்வெஸ்டிகேஷன் இப்படி ஐந்து பிரிவாக இருந்துகொண்டு அதிகச் செலவு ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. ஆகவே, அவற்றையெல்லாம் இரண்டே பிரிவாகப் பிரித்து விடலாம். மைனர் இரிகேஷன், மேஜர் இரிகேஷன் என்று இரண்டு பெரும் பிரிவாகப் பிரித்துவிட்டால் கணிசமாகச் சிக்கனம் ஏற்படும்.

விவசாயத்தை எடுத்துக்கொண்டால் சென்ட்ரல் கவர்ன்மெண்ட் ஆர்கனைசேஷன் ஸோன் வாரியாக இருக்கிறது. திருச்சியிலே ஒரு ஸ்தாபனம் இருக்கிறது. அதற்காக சென்ட்ரல் கவர்ன்மெண்ட் செலவழிக்கிறார்கள். அந்தத் தொகையை அவர்கள் நம்மிடம் போனஸாகவோ ஸப்ஸிடியாகவோ கொடுத்தால், நம்முடைய அதிகாரிகளைக் கூடுதலாக்கி நம்முடைய செலவைக் குறைக்கலாம். அவர்களிடமிருந்து வாங்கும் தொகையை வைத்துக்கொண்டு நம்முடைய நிர்வாகச் செலவைக் குறைத்துக்கொள்ளலாம்.

அலைய்டு இண்டஸ்ட்ரீஸ் சம்பந்தமாகச் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். தொழில் நன்றாக வளர்ந்திருக்கிறது. ஆனால், தொழில் யாரிடம் இருக்கிறது ? சில நபர்களிடம், இயற்கையாகத் தொழில் செய்யக்கூடிய பெரிய தொழில் அதிபர்களிடம் பல தொழில்கள் இருந்துகொண்டிருக்கின்றன. அவர்கள் அதன் பேரில் தன்னைச் சேர்ந்தவர்கள்
1-00 p.m. பெயரில் தொழில் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அலையட் இண்டஸ்ட்ரி என்றால் தான் புது ஆட்கள் வர முடியும். அதற்குத் தக்க ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஸ்மால் ஸ்கேல் இண்டஸ்ட்ரிஸ் கார்ப்பரேஷன் உருவாக்கப்பட்டிருக்கிறது. அதற்கு நம் தொழில் இலாகாவில் இருந்த அனுபவம் வாய்ந்த ஊழியர்கள் எல்லாம் சென்றிருக்கிறார்கள். இனிமேல் தொழில் இலாகாவில் போடுகிறவர்களுக்கு இத்துறையில் அனுபவம் கிடைக்கவேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டது. அதுவும் இதை பரீட்சார்த்தமாகக் கூட வைக்கவில்லை. பரீட்சார்த்தமாக வைத்து இதில் ஏற்படக்கூடிய அனுபவத்தைக்கொண்டு நல்ல முறையில் அதை உருவாக்குவது பற்றி எனக்கு ஆட்சேபனை இல்லை. ஃபுட் கார்ப்பரேஷன் போல அதை ஏற்படுத்தி அதில் நஷ்டம் ஏற்படுவது என்றால் அது நம்மைத்தான் பாதிக்கும். இதைப்பற்றி நன்கு ஆராய்ச்சி செய்ய ஒரு குழு ஏற்படுத்த வேண்டும்.

எங்கள் பகுதியைப் பொறுத்த வரையில் மழை பொய்த்து விட்டது. பட்ஜெட்டில் ஏதாவது சலுகை தரப்படும் என்று எதிர்பார்த்தேன். ஒன்றும் இல்லை. எங்கள் பகுதியைப்போலவே, இன்னும் சேலம் போன்ற பகுதியில் உள்ளவர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். இதற்கு ஏதாவது வழிவகை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

***திரு. ஆ. தங்கவேலு :** மதிப்பிற்குரிய சட்டமன்றத் துணைத்தலைவர் அவர்களே, 1966–67 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தின் மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். 1966–67-க்கான பட்ஜெட் பாராட்டக்கூடிய வகையிலோ, போற்றக்கூடிய வகையிலோ அமைந்திருக்கவில்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். நம்முடைய கனம் முதல் அமைச்சர் அவர்கள் ஒரு வார காலமாக உடல் நலம் சரியில்லாமல் இருந்தார். ஆனால் பட்ஜெட் சமர்ப்பிக்கிற அன்றைய தினம்



ஒரு மணி முப்பத்தெட்டு நிமிஷ நேரம் தன் தைரியத்தினாலும், உணர்ச்சியினாலும் பட்ஜெட்டில் ஏதோ இருக்கிறமாதிரி படித்தார்கள். உண்மையில் அவர்கள் தைரியத்தையும், உணர்ச்சியையும் பாராட்டவும், வரவேற்கவும் வேண்டுமே தவிர பட்ஜெட்டில் பாராட்டுவதற்கோ, வரவேற்பதற்கோ ஒன்றும் இல்லை.

அடுத்து இங்கே பேசி வருகிற உறுப்பினர்கள் அனைவரும் பட்ஜெட்டில் உள்ள குறைபாடுகளை எடுத்துச் சொன்னார்கள். எதிர்க்கட்சியில் உள்ளவர்களைக் காட்டிலும் ஆளும் கட்சியில் உள்ளவர்கள் இந்தத் தடவை அதிகமாகக் குற்றங்குறைகளை எடுத்துக்காட்டிப் பேசி வருகிறார்கள். இதைக் கவனிக்கிறபோது எப்படி முதல் அமைச்சர் அவர்கள் தேர்தல் கால பட்ஜெட் என்பதை நினைத்துத் தயாரித்திருக்கிறாரோ அதுபோலவே, தாங்களும் அசெம்பளியில், இருக்கக் கூடிய கஷ்டங்களை எடுத்துச் சொல்லியிருப்பதாகச் சொல்லிகொள்ள தேர்தலை நினைத்து ஆளும் கட்சியினர்களும் இப்படிப் பேசுகிறார்களோ என்று நினைக்கவேண்டியிருக்கிறது. இது கோழியையும் திருடிவிட்டு, கூடியும் குலாவினார்கள் என்று சொல்வதுபோல இருக்கிறது.

மூன்று ஐந்தாண்டுத் திட்டங்கள் முடிந்து, நான்காவது ஐந்தாண்டுத் திட்டமும் நகல் தயாரிக்கப்பட்டிருக்கிற நேரத்தில் யாருக்கு லாபம் என்பதைப் பற்றி அனைவரும் பேசினார்கள். பணக்காரர்கள் மேலும் பெரும் பணக்காரர்களாகியிருக்கிறார்கள். ஏழைகள் முன்னேற்றம் அடையவில்லை. விவசாயிகள் முன்னேற்றம் அடையவில்லை. கைத்தறி நெசவாளர்களுக்கு விமோசனம் இல்லை. வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்துக்கொண்டே போகிறது. எந்த வகையிலும் இந்த ஆட்சி நல்லதொரு முன்னேற்றத்தைக் காணவில்லை என்பதை அனைவரும் இங்கே குறிப்பிட்டுப் பேசினார்கள். ஏராளமான வரி போட்டும், கோடிக்கணக்கில் பணத்தைக் கடன் வாங்கியும் ஏழை எளியவர்களுக்கு வாழ்வளிக்க முடியாத நிலையில் இந்த அரசாங்கம் நடந்துகொண்டிருக்கிறது.

இந்த பட்ஜெட்டிலே என்.ஜி.ஓ.-க்களுக்கு ஏதாவது விமோசனம் இருக்கும் என்று எதிர்பார்த்தோம். வெளியே போகிற பெரியவர்களைப் பார்த்து, குழந்தைகள் மிட்டாய் வாங்கி வாருங்கள் என்று சொல்வதுபோல சட்டசபைக் கூட்டத்திற்கு நான் கிளம்பும்போது சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் சிலர் "எங்களுக்குச் சம்பள உயர்வு வாங்கி வாருங்கள்" என்று குறிப்பிட்டார்கள். நான் அப்பொழுதே சொன்னேன், "நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் சாமர்த்தியசாலி. கொடுப்பதை இப்போது கொடுக்க மாட்டார்கள். ஜூலை, ஆகஸ்டு மாதத்தில் தேர்தல் நெருங்குகிற நேரத்தில் கொடுப்பார்" என்றேன். அதே நிலைதான் இங்கும் ஏற்பட்டிருக்கிறது. தேர்தல் எப்படிப் போனாலும் பரவாயில்லை. விலைவாசி உயர்வு தாங்க முடியாது என்ற நிலை இருக்கிறது. சாகவும் மாட்டாது, வாழவும் முடியாத நிலையில் அவர்கள் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே தேர்தலை நினைவில் கொள்ளாமல் அவர்களுக்கு நிவாரணம் அளிக்கக் கூடிய நம் கடமையை நாம் நிறைவேற்றியாக வேண்டும்.

அடுத்து, நாம் ஆசிரியர் பயிற்சிப் பள்ளியில் படிக்கிறவர்களுக்கு ஸ்டைபண்டு கொடுத்து வந்தோம். பொதுவாக "எதும் கெட்டவனுக்கு எஜுகேஷன் டிபார்ட்மெண்டு" என்று சொல்வார்கள். வேறு தொழில் எதுவும் கிடைக்கப்பெறாதவர்கள் ஆசிரியர் பயிற்சிப் பள்ளியில் சேருவார்கள். மிகவும் ஏழைமையான குடும்பத்தைச் சேர்ந்தவர்களாகவும் இருப்பார்கள். அங்கே படிக்கிறவர்களுக்கு ஸ்டைபண்டு தொகை கொடுப்பது உண்டு. இந்த ஆண்டு ஜூனியர் பேசிக் பயிற்சிப் பள்ளியில் படிக்கிறவர்களுக்கு ஸ்டைபண்டு கிடையாது என்று ஜனவரியில் உத்தரவு போட்டிருக்கிறார்கள். ஆரம்பத்தில் அவர்களை அட்மிட் செய்துகொள்ளும்போதே சொல்லியிருந்தாலும் பரவாயில்லை. ஸ்டைபண்டு வரும் என்ற நம்பிக்கையில் அவர்கள் சேர்ந்து கடன் வாங்கி படித்துக்கொண்டு வந்துகொண்டிருந்த நிலையில், ஜனவரியில் கிடையாது என்ற காரணத்தினால் பலர் தங்கள் படிப்பை விட்டுவிடவேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. சென்ற திங்கள் கடலூருக்கு போயிருந்தபோது பல மாணவர்கள் பெட்டி படுக்கையை எடுத்துக்கொண்டு போவதைப் பார்த்து நான் கேட்டபோது அவர்கள் சொன்னார்கள். முன்பு

அவர்களிடம் அக்ரிமெண்ட் எழுதி வாங்கியிருக்கிறார்கள். விழுப்புரம் பள்ளியில் கொடுத்திருக்கிறார்கள். நான், ஸ்டைபண்டு கொடுக்கவேண்டும் என்று சொல்லாவிட்டாலும் இது போல வருஷ நடுவில் கொடுப்பதை நிறுத்தக்கூடாது, இந்த செட்டு மாணவர்களுக்காவது கொடுத்துவிட வேண்டும், அடுத்த ஆண்டு புதிதாகச் சேர்த்துக் கொள்பவர்களுக்கு ஸ்டைபண்டு கிடையாது என்று சொல்லி, சேர விரும்புகிறவர்களை வேண்டுமானால் சேர்த்துக் கொள்ளுங்கள் என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதுபோல நெசவு ஆசிரியர்கள் ஹைஸ்கூலிலும், ஆசிரியர் பயிற்சிப் பள்ளியிலும் வேலை செய்துகொண்டு வருகிறார்கள். அவர்கள் பத்துப் பதினைந்து ஆண்டுகளாக வேலை செய்து வந்தும் கூட அவர்கள் வேலை நிரந்தரமாக்கப்படவில்லை. இன்னும் தற்காலிகமாகவே இருந்துகொண்டிருக்கிறார்கள். அதனால் அவர்களுக்குக் கொடுக்க வேண்டிய இன்க்ரிமெண்ட் முதலிய சலுகைகள் கிடைக்க வழி இல்லை. நம்முடைய நாட்டிலே உழவுத் தொழிலுக்கு அடுத்தது நெசவுத் தொழில்தான். அவர்களுடைய நிலையும் ஒரு சீர்கேடான நிலையில் இருக்கிறது. நெசவு ஆசிரியர்களை எல்லாம் சீக்கிரத்தில் நிரந்தரமாக்கி அவர்களுக்கு வேண்டிய சலுகைகளை எல்லாம் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

போலீஸ் ஸ்டேஷன்களுக்குப் பொதுவாக யாராவது வழக்கிற்காகச் சென்றால் அப்பொழுது சாதாரண கான்ஸ்டேபிள் உட்பட எல்லாம் ஒரு குயர் பேப்பர் வாங்கிக்கொண்டு வா, ஒரு டஜன் கார்பன் பேப்பர் வாங்கிக்கொண்டு வா என்று சொல்லுகிறார்கள். அதற்குக் காரணம் என்னவென்றால் ஸ்டேஷனரி சப்ளை போதிய அளவு சரியாகக் கொடுப்பதில்லை. ஸ்டேஷனரி சப்ளையைக் கொஞ்சம் அதிகப்படுத்திக் கொடுக்கவேண்டும். அதைச் செய்யாத காரணத்தால்தான் அவர்கள் பொதுமக்களுக்குத் தொந்தரவு கொடுக்கிறார்கள். இது எல்லோருக்கும் தெரிந்ததுதான். அவர்களுக்கு ஸ்டேஷனரி சப்ளை, வேண்டிய கார்பன் பேப்பர், ஸ்டென்சில் பேப்பர், வெள்ளைப் பேப்பர் எல்லாம் அதிகப்படியாகக் கொடுத்தால்தான் அவர்கள் அங்கே வருகின்றவர்களைத் தொந்தரவு செய்யாமல் இருப்பதற்கு வழி ஏற்படும். அடுத்ததாக போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர்களுக்கு ஒவ்வொருவருக்கும் உடுப்பு அலவன்ஸ் என்று 2 வருஷங்களுக்கு 60 ரூபாய் கொடுக்கிறார்கள். ஒரு சப்-இன்ஸ்பெக்டர் போடுகிற சட்டை, கால் சட்டை, தொப்பி, பூட்ஸ் இவைகளுக்கே, ஒரு செட்டுக்கே ரூபாய் 100 ஆகும். ஆனால் இரண்டு வருஷங்களுக்கு ரூபாய் 60 தான் கொடுக்கிறார்கள். வெள்ளைக்காரன் இருந்த காலத்தில் மூன்று வருஷங்களுக்கு இதைக் கொடுத்து வந்தார்கள். இப்பொழுது அதை இரண்டு வருஷமாக ஆக்கியிருக்கிறார்கள். ஆனால் தொகையைக் கூட்டவில்லை. கனம் அமைச்சர்கள் எல்லாம் ஒரு மாதத்திற்குக் குறைந்தது 10 அல்லது 20 தடவையாவது ஒவ்வொரு பகுதியாகப் போய் வருகிறார்கள். சப்-இன்ஸ்பெக்டர்கள் எல்லாம் அந்த நேரத்திலே அங்கே பாதுகாப்புக்கு போய் நிற்பதற்கு 10 செட்டுகளாவது தேவைப்படும். (மணியடிக்கப்பட்டது). எனக்குக் கொடுத்த நேரத்தைக் குறைக்க வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது).

***திரு. பி. ஊர்க்காவலன் :** மதிப்பிற்குரிய உதவி சபாநாயகர் அவர்களே, கனம் முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற வரவு-செலவுத் திட்டத்தை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். வரவு-செலவுத் திட்டத்திலே வேளாண்மைக்கு முக்கியத்துவம் கொடுத்திருக்கிறார்கள். வேளாண்மைத் துறையானது நாட்டில் வாழும் எல்லா மக்களுக்கும் உணவு அளிக்கும் ஒரு பெரிய துறையாகும். இந்த நாட்டில் இருக்கும் உணவுப் பற்றுக்குறை, விலைவாசி உயர்வு எல்லாவற்றையுமே நாம் இந்த விவசாயத்திலிருந்து சரிக்கட்ட முடியும். நன்றாக விவசாயம் செய்து, உணவு உற்பத்தியைப் பெருக்கிவிடுவோமானால் விலைவாசி உயர்வு கூட வராது. ஆகவே, விவசாயத் துறைக்கு அதிகமான பணம் ஒதுக்குவதும், கிராமங்களில் வாழும் விவசாயிகளுக்கு நன்மையளிக்கக் கூடிய வகையில் முயற்சி எடுப்பதும் முக்கியமான அம்சங்கள் ஆகும். எங்கெல்லாம் தரிசு நிலங்கள் இருக்கிறதோ அங்கெல்லாம் உள்ள நிலங்களை விவசாயத்திற்குப் பயன்படுத்த வேண்டும். ஏற்கனவே ஆற்றுப் பாசனம் உள்ள இடங்கள், நஞ்சை நிலங்கள், இவற்றில் நாம் தீவிரச்



சாகுபடி செய்வதின் மூலம் எவ்வளவு உற்பத்தியை அதிகரிக்க முடியுமோ அவ்வளவு அதிகரிக்கச் செய்து வருகிறோம். மழையில்லாத, பெரும்பாலும் வறண்ட பிரதேசமாக இருக்கின்ற பகுதிகளுக்கு நாம் உதவக்கூடிய முறையில் கிணறுகளை வெட்டித்தான் விவசாயம் செய்யவேண்டிய நிலைமை இருக்கிறது. சில இடங்களில் ஆற்றுப் பாசனமும் கிடையாது, கிணறுகளை வெட்டுவதற்கு வசதியும் இருக்காது, அப்படிப்பட்ட இடங்களில், குறிப்பாக திருநெல்வேலி மாவட்டத்தில் சங்கரன்கோவில் தாலூகாவானது மிகவும் வறண்ட பகுதி, சென்ற வருடமும் மழையில்லை, இந்த வருடமும் மழையில்லை, நாம் பாசன வசதி செய்துதர வேண்டும். அங்கேயுள்ள கீரியாறு, பம்பையாறு இவைகளைப்பற்றிச் சொல்லிச் சொல்லி புளித்துவிட்டது. ஏற்கனவே ஒரு வருடமல்ல, இரண்டு வருடமல்ல, கடந்த 15 வருடங்களாக அதைப்பற்றிப் பேசிக்கொண்டே வருகிறோம். பேசி என்ன பலன் என்று சொல்ல முடியவில்லை. பெரிய அணைகளைக் கட்ட வழியில்லாவிட்டாலும்கூட, கீரியாறு போன்றவற்றில் சிறிய அணைகளையாவது கட்ட வேண்டும். கேரளாவிலே சமீபத்தில் உணவுத் தட்டுப்பாட்டின் காரணமாக போராட்டம் நடத்தினார்கள். அந்தப் போராட்டத்தை நாங்களும் நடத்த முடியும். அங்கேயுள்ள விவசாயிகள் போராட்டம் நடத்தவேண்டுமென்றால் நடத்தியிருப்பார்கள். கேரளாவிற்கு உணவு எங்கள் வழியாகத்தான் போகவேண்டும். அப்படியிருக்கும்பொழுது கேரளாவில் வீணாகப் போய்க்கொண்டு இருக்கிற தண்ணீரை அங்கே கொடுக்கவேண்டுமென்று சொன்னால் அவர்கள் மறுத்துக்கொண்டே வருகிறார்கள். அப்படிக் கொடுத்தால் உணவு உற்பத்தி செய்து, அந்த நெல்லை கேரளாவுக்கே அனுப்பக்கூடிய அளவுக்கு செய்ய முடியும். ஆகவே, அதற்குத் தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சங்கரன்கோவில் பகுதியில் 2 ஆயிரம், 3 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் தரிசாகக் கிடக்கின்றன. தரிசு நிலங்கள் என்றாலும் அவைகள் நல்ல நிலங்கள். கிணறு வெட்டித் தண்ணீர் எடுத்தால், தஞ்சாவூர் அல்ல, மற்ற இடங்களில் ஏக்கருக்கு என்ன உற்பத்தி ஆகிறதோ அதைப்போல் 10 மடங்கு அதிகமாக அங்கே உற்பத்தி செய்ய முடியும். ஆனால் அங்கே கிணறு வெட்டுவது கஷ்டமாக இருக்கிறது. ஒரு கிணறு வெட்டவேண்டுமென்றால் ரூ. 4,000, ரூ. 5,000 செலவழித்தால்தான் கிணறு வெட்ட முடியும். ஆகவே, அந்த இடங்களில் எல்லாம் சர்க்கார் கிணறுகள் வெட்டிக்கொடுத்தால் விவசாயிகளுக்கு நன்மையாக இருக்கும், உற்பத்தியும் பெருகும். விவசாயிகள் ஏதோ சட்டசபையிலே திட்டம் வகுக்கப்படுவதுபோல உற்பத்தியைப் பெருக்கமுடியாது. இயற்கையாகவே அவர்கள் நிலத்தை உழுது சாகுபடியை அதிகப்படுத்துகிறார்கள். ஆகவே, நாம் திட்டத்தை வகுத்து அதன் மூலம் உற்பத்தியைப் பெருக்கி வருகிறோம் என்று சொன்னாலும் கூட விவசாயிகளுக்குப் பாதுகாப்பு அளிக்கப்படுவதில்லை. அவர்களுக்குச் சரியான முறையில் பாதுகாப்பு அளித்தால்தான் அவர்கள் நல்ல முறையில் உற்பத்தியைப் பெருக்க முடியும், வாழ முடியும். ஆகவே, அதற்கு ஏற்பாடுகள் செய்ய வேண்டும். நிலச் சீர்திருத்தச் சட்டம் கொண்டு வந்தோம். அதன் மூலமாக எத்தனை விவசாயிகள் பலன் அடைந்தார்கள் என்று பார்க்க வேண்டும். நிலத்தை விட்டு வெளியேற்றக்கூடாது என்று பாதுகாப்புச் சட்டம் கொண்டு வந்தோம். ஆனால், குத்தகைதாரே விவசாயிகளாக ஆகிவிடுகிறார்கள். பிறகு ஏற்கனவே உழுதுகொண்டிருந்த விவசாயி எப்படி உழ முடியும்? இந்த அவல நிலை தொடர்ந்து இருந்து கொண்டு வருகிறது, அதையெல்லாம் மாற்றுவதற்குச் சட்டத்தில் திருத்தம் கொண்டுவந்தாவது மாற்றியமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். விவசாயியை நிலத்தைவிட்டு வெளியேற்றினால் அவன் எந்த நிலத்தை வைத்து விவசாயம் செய்ய முடியும்? நெடுநாட்களாக வைத்துக்கொண்டிருந்த நிலத்தில், குத்தகைதாரே விவசாயியாக மாறிக்கொண்டு, ஏற்கனவே இருந்த விவசாயியை வெளியேற்றி விடுகிறார்கள். இதற்காக ஒரு சட்டம் செய்தோம். ஆனால், அதில் ஓட்டை உடைசல் எல்லாம் இருக்கிறது. வகையான சட்டமாக இருந்தால் விவசாயிகளை வெளியேற்ற முடியாது. ஆகவே, இதையெல்லாம் சரியானபடி கவனித்து விவசாயிக்குப் பாதுகாப்பு அளிப்பதற்குத் தகுந்த முறையில் சட்டத்தைத் திருத்தியாவது ஒழுங்குமுறை செய்ய வேண்டுமென்று நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

ஒரு ஏக்கர் இரண்டு ஏக்கர் நிலம் வைத்திருக்கக் கூடிய விவசாயிகள் விவசாயம் செய்ய மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அவர்கள் நிலத்தீர்வை கட்டுவதற்குக் கூட கஷ்டமாக இருக்கிறது. ஆகவே, விவசாயிகளுக்குப் பாதுகாப்புக் கொடுக்கும் வகையில் ஒரு ஏக்கர், இரண்டு ஏக்கர் உள்ள விவசாயிகளுக்கு நிலத் தீர்வையை ரத்து செய்யவேண்டும். விவசாய வருமான வரி என்று போட்டிருக்கிறார்கள். அனாவசியமாக பல லட்சக் கணக்கான ரூபாய் ஒவ்வொரு வழியிலும் செலவாகிக் கொண்டிருக்கிறது. விவசாய வருமான வரியை ரத்து செய்ய வேண்டும். பல சொஸைடிகள் மூலமாக யூரியா, சல்பேட் போன்ற உரங்களைக் கொடுக்க ஏற்பாடு செய்திருக்கிறார்கள். ஆனால் ஒரு மூட்டை யூரியா 32 ரூபாய் ஆகிறது என்றால் விவசாயி வெளியே கொடுத்து வாங்கக்கூடிய விலை 45 ரூபாய். விலை நிர்ணயம் செய்திருக்கிறோமே தவிர, தாராளமாக உரம் கிடைக்காத காரணத்தால் அதிக விலை கொடுக்கவேண்டியிருக்கிறது. விவசாயிகளுக்குத் தேவையான அளவு உரம் கொடுக்க ஆவன செய்யவேண்டும்.

பஞ்சாயத்து யூனியனில் எல்லாம் கிராம சகாயக்குகள் என்று வைத்திருக்கிறார்கள். அவர்கள் நல்ல பொறுக்கு விதைகளை உற்பத்தி பண்ணிக் கொடுக்க வேண்டுமென்று வைத்திருக்கிறார்கள். மழை இல்லாத, தண்ணீர் இல்லாத பிரதேசத்தில் எல்லாம் எங்கிருந்து போய் உற்பத்தி பண்ணுவார்கள். அந்த மாதிரிப் பிரதேசங்களுக்கு மின்சார மோட்டார் போடுவதற்கு அந்தப் பணத்தைச் செலவழிக்க வேண்டும். சங்கரன் கோயில் தாலுகாவைப் பொறுத்தவரை 20,000 ரூபாய் அதற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பணத்தை மின்சார மோட்டார்கள் வைத்துக் கொடுப்பதற்காகப் பயன்படுத்த வேண்டும். தேவஸ்தான நிலங்கள் எல்லாம் நிறைய இருக்கின்றன. அதையெல்லாம் முன்பு குத்தகைக்கு எடுத்து யார் யார் குத்தகைதாரர்களாக இருந்தார்களோ அதே நபர்கள் தங்களை விவசாயிகளாக மாற்றிக் கொண்டு ஏற்கனவே உழுது கொண்டிருந்த விவசாயிகளை அப்புறப்படுத்தி விட்டார்கள். இந்த நிலையைப் போக்க சர்க்கார் தகுந்த நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

***திரு எம். வில்லியம் :** மதிப்புக்குரிய உதவி சபாநாயகர் அவர்களே, 1966–67-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின் மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். திட்டமிட்ட பொருளாதாரப்படி நம்முடைய நாடு முன்னேற்றம் அடைய வேண்டுமென்ற தத்துவதத்தின் அடிப்படையில் மூன்று ஐந்தாண்டுத் திட்டங்கள் இப்போது நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. முதல் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் 80 கோடி ரூபாய், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் 186 கோடி ரூபாய், மூன்றுவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் 347 கோடி ரூபாய் என்று இவ்வண்ணம் செலவு செய்யப்பட்டு பல திட்டங்கள் வகுக்கப்பட்டு நல்ல முறையில் செயலாற்றப்பட்டு வருகிறது என்பதில் சந்தேகம் இல்லை. இந்தத் திட்டங்களின் மூலம் நமது நாடு முன்னேற்றமடைந்து இருக்கிறது என்பதில் சந்தேகம் இல்லை. இந்தத் திட்டங்களினால் நிச்சயமாக நாடு முன்னேற்றம் அடைந்திருக்கிறது. கிராமப் பகுதிகள் முன்னேற்றம் அடைந்திருக்கின்றன. வேளாண்மை, சமூக வளர்ச்சித் திட்டங்கள் எல்லாம் நல்ல முறையில் செயல்பட்டு வருகின்றன. ஒவ்வொரு துறைக்கும் அவசியமான பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதைப் பார்க்கும்போது சமதர்மக் கொள்கையில் இன்னும் அதிகமாக வெற்றி பெறக் கூடிய நிலையில்தான் இந்தத் திட்டங்கள் வகுக்கப்பட்டிருக்கின்றன என்பதை நான் கூற விரும்புகிறேன். கல்விக்கும், மருத்துவத்திற்கும், சமூக காப்புத் திட்டங்களுக்கும் நல்ல முறையில் கவனம் செலுத்தப்பட்டு செயல்பட்டு வருகின்றன என்பதில் சந்தேகம் இல்லை. மருத்துவத் துறையில் இப்போது ஒருசில மாற்றங்கள் செய்யவேண்டுமென்று கூறியிருப்பது வரவேற்கத்தக்கது. பப்ளிக் ஹெல்த் டிப்பார்ட்மெண்ட், மெடிகல் டிப்பார்ட்மெண்ட் இரண்டையும் ஒன்று சேர்ப்பது அவசியம். பிரைமரி மருத்துவ நிலையங்களைப் பெரிய அளவில் ஏற்படுத்திவிட்டால் போதாது. அதனால் மக்களுக்கு அதிகமான வசதிகள், பிரயோசனம் இருக்க வேண்டும். போதிய அளவு டாக்டர்கள், குறைந்தது





132994.
600 008.

25 படுக்கைகள், போதுமான மருந்துகள் ஒவ்வொரு மருத்துவ நிலையத்திலும் இருக்க வேண்டும். அப்படிச் செய்தால்தான் பிரைமரி மருத்துவ நிலையங்கள் மூலமாக மக்களுக்குப் பிரயோசனம் ஏற்படும். வட்டார வளர்ச்சி எல்லையில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் இருக்கும் பகுதியில் உள்ள மக்கள் அனைவருக்கும் மருத்துவ வசதி செய்து கொடுக்கவேண்டும்.

கல்வித் துறையிலும் பலவிதமான மாற்றங்கள் செய்யப்பட்டு வருகின்றன. போஸ்ட் கிராஜுவேட் கோர்ஸ் ஆரம்பிக்க திட்டமிட்டிருக்கிறார்கள். வேளாண்மைத் துறையிலும் முக்கிய கவனம் செலுத்தி வருகிறோம். வானம் பொய்த்து விட்ட காரணத்தால் இந்த வருஷம் உற்பத்தி குறைந்து விட்டது என்று சொல்ல முடியும். உற்பத்தியைப் பெருக்குவதில் நல்ல திட்டங்களை அரசாங்கம் கொண்டு வந்திருக்கிறது. நல்ல ரக நெல் விதைகளைக் கண்டுபிடிக்கிறார்கள். ரசாயன உரம் அளிக்கிறார்கள். நல்ல ரக விதைகள் எல்லா இடத்திலும் ஒன்று போல் வருவதில்லை. சாயில் டெஸ்டிங் ரொம்ப அவசியம். ஒவ்வொரு ஜில்லாவிலும் பிரத்தியேகமான சூழ்நிலை இருக்கிறது. அதற்கேற்ற முறையில் விதைகளைக் கொடுத்தால் பிரயோசனம் கிடைக்கக்கூடும். உர விநியோகத்தில் அதிகமாகக் குற்றம் கூறப்படுகிறது. கூட்டுறவுச் சங்கங்களுக்கு உரம் போய்ச் சேருவது கூட விவசாயிகளுக்குத் தெரியாமல் போய் விடுகிறது. அதற்குள்ளாகவே அதை பிளாக் மார்க்கட்டில் விற்று விடுகிறார்கள். இதைத் தவிர்ப்பதற்காக நிதி நிலை அறிக்கையில் ஒரு யோசனை கூறப்பட்டிருக்கிறது. உரம் கொடுக்கும் 500 சங்கங்களைத் தேர்ந்தெடுத்து சர்க்காரால் நியமிக்கப்படும் ஒருவர் செயலாளராக இருந்து மேற்பார்வையிடுவார். இது ஒரு நல்ல முறை. 1-30
ஆனால் 500 சங்கங்களுக்கு மட்டும் அந்த ஏற்பாடு போதாது. எல்லாச் p.m.
சங்கங்களுக்கும் அந்தமாதிரி ஏற்பாட்டைச் செய்தால் நிச்சயமாக அந்த ஸ்தாபனங்கள் நல்ல முறையில் இயங்க முடியும். பஞ்சாயத்து யூனியன்களுக்கு வேளாண்மைக்காக 2 லட்சம் ரூபாய் அளித்திருக்கிறார்கள். பஞ்சாயத்தில் கட்சிப் பூசல் அதிகமாக இருக்கிறது. அதனால் திட்டங்கள் பல நல்ல முறையில் நிறைவேற்றப்பட முடியாமல் இருக்கின்றன. நமது ஆர்.டி.ஓ.-க்கள் பஞ்சாயத்து ஆட்சியிலும் சற்று அதிகமாக நெருங்கிப் பணி செய்வதன் மூலம், அவர்களுடைய அனுபவத்தின் மூலமாக நல்ல பலன் கிடைக்க வழி ஏற்படும்.

N211,31 N66
34

கன்னியாகுமரி டிஸ்ட்ரிக்ட் சம்பந்தமாக ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். அங்கு நெய்யார் லெஃப்ட் பாங்க் சானல் திட்டம் நிறைவேற்றப் பட்டு வருகிறது. அதன் கீழ் சுமார் 9,000 ஏக்கர் சாகுபடிக்குக் கொண்டு வரவேண்டும். பழைய நிலங்கள் 5,000 ஏக்கர்கள் இருக்கின்றன. 4,000 ஏக்கர் சாகுபடிக்குக் கொண்டு வரவில்லை. சுமார் 1,000 ஏக்கர்கள் தான் புதிதாகச் சாகுபடிக்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறது.

**MR. DEPUTY SPEAKER :** The hon. Member's time is up.

**SRI M. WILLIAM :** Sir I require five more minutes.

**MR. DEPUTY SPEAKER :** The hon. Member should finish his speech in three minutes.

**திரு. எம். வில்லியம்:** நெய்யார் இடது கரை சானல் இன்னும் சரியாப் பூர்த்தியாகவில்லை. கிளைச் சானல்கள் இன்னும் வெட்டி முடிக்கப் படவில்லை. அதில் பல தடங்கல்கள் ஏற்பட்டிருக்கின்றன. வேலை தீர்ந்த இடங்களில் மடைகள் இல்லை. மடைகள் உள்ள இடங்களிலும் சிறிய சிறிய மடைகள்தான் இருக்கின்றன. இதுபற்றி பல புகார்கள் வந்திருக்கின்றன. அவற்றைப் பூர்த்தி செய்ய பட்ஜெட்டிலும் பணம் ஒதுக்கப்படவில்லை. இந்த வேலைகளை இந்த வருடமே பூர்த்தி செய்யவேண்டும். இன்னும் 3,000 ஏக்கருக்கு மேல் சாகுபடிக்குக் கொண்டு வர வாய்ப்பிருக்கிறது. 25 ஏக்கர் சாகுபடி செய்யக் கூடிய இடங்களுக்கும் கிளைச் சானல்கள் வெட்டலாம் என்று மாற்றம் செய்திருப்பதை வரவேற்கிறேன். ஆகவே, இந்த கிளைச் சானல்கள், மடைகள்

வெட்டுவதற்கான செலவுகளைச் செய்யவேண்டும். அதற்காகப் பணம் ஒதுக்க வேண்டும். ஒரு வதந்தி இருக்கிறது. பெட்டர்மெண்ட் டாக்ஸ் போடப் போகிறார்கள் என்று. நெய்யார் சானல் ஏரியாவில் அதை இப்போது சுமத்துவது சரியல்ல. அங்கு வேலைகள் கூட இன்னும் பூர்த்தியாகவில்லை. அங்குள்ள நிலங்கள் சாகுபடிக்கு இன்னும் கொண்டு வரப்படவில்லை. ஆகவே இந்த வரியை அங்கு இப்போது கொண்டு வந்தால் சாகுபடி செய்ய யாரும் முன்வர மாட்டார்கள். ஆகவே, பெட்டர்மெண்டு டாக்ஸ் போடக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன். உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்று திட்டமிட்டுக் கொண்டிருக்கும்போது விளவங் கோடு தாலுகாவில் கலியல் என்ற இடத்தில் 1,500 எக்கரில் உள்ள 750 குடும்பங்களை வெளியேற்றத் திட்டமிட்டிருப்பதாகத் தெரிகிறது. அவர்கள் அங்கு கிருஷி செய்து கொண்டிருக்கிறார்கள். அங்கு அவர்கள் மரச்சீனிக் கிரிஷி, தென்னங்க்ரிஷி, கமுகு க்ரிஷி, வாழைக் க்ரிஷி போன்ற உணவுப் பொருள்களை க்ரிஷி செய்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே அந்த 1,500 எக்கரை அந்தக் குடும்பங்களுக்கு ஆளுக்கு இரண்டு அல்லது மூன்று எக்கர் வீதம் பகிர்ந்து கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டுமே தவிர அவர்களை அங்கிருந்து அகற்றக்கூடாது. அதனால் வருத்தம்தான் ஏற்படும். அதனால் உற்பத்திக்குப் பாதகம்தான் ஏற்படும். என் தொகுதியில் உள்ள கொல்லங்கோடு, கருங்கல் போன்ற பெரிய ஹைஸ்கூல்களுக்குக் கட்டடம் கட்டித் தர முன்வர வேண்டும். அங்கு ஆஸ்பத்திரிகள் நன்றாகச் செயல் படவில்லை. அங்கு போதிய மருந்து இல்லை. தாலுகா ஹெட் க்வார்ட்டர்ஸ் விளவங்கோடில் இருக்கிறது. ஆனால் அங்கு மருந்து இல்லை, சர்க்காரிலிருந்து மருந்துகளை அனுப்பித் தரவில்லை என்று அவர்கள் கூறுகிறார்கள். ஆகவே பராதி இல்லாமல் இருக்க அந்த ஆஸ்பத்திரிக்கு டாக்டர்களையும் நல்ல மருந்துகளையும் கொடுக்க வேண்டும். ஆஸ்பத்திரியையும் 50 படுக்கைகள் அதிகமாக இருக்கும்படி விஸ்தரிக்க வேண்டும். காங்கிரஸ் ஆட்சியினால் தீமை நடக்கிறது என்ற பழியை அதிகாரிகள் ஏற்படுத்தக் கூடாது. அதிகாரிகள் மக்களுக்குத் தொண்டு செய்ய இருக்கிறவர்கள் என்று நினைத்து அந்த மனப்பான்மையுடன் செயல்பட்டால் மட்டும் தான் திட்டங்களை நாம் நல்ல முறையில் நிறைவேற்ற முடியும். மக்களுக்கு நம்பிக்கையும் ஏற்படும். சோஷலிஸ சமுதாயத்தை ஏற்படுத்தவும் முடியும்.

அடுத்ததாக, லெவி ஸிஸ்டம். விளவங்கோடு தாலுகா பிற்போக்கான தாலுகா. அகஸ்தீஸ்வரம், தோவாளை இவ்விடங்களை நெல் களஞ்சியம் என்று சொல்வார்கள். அங்கு ஒரு எக்கருக்கு அளக்கும் லெவியில் பகுதி விளவங்கோட்டில் 1 எக்கருக்கு பாதி என்று நிச்சயித்தும் அங்குள்ள ஒரு எக்கருக்கு விளவங்கோட்டிலுள்ள 2 எக்கர் சமம் என்ற அடிப்படையில் லெவி நிச்சயித்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

1-36 p.m. **MR. DEPUTY SPEAKER**: The House will now adjourn and meet again at 8-30 a. m. tomorrow.

The House then adjourned.

## VI. PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE

Nil.



## APPENDIX I.

[*Vide* answer to starred question No. 140 on page 232.]

*Admissions to Engineering Colleges in Madras State during* 1965-66 (*wherever women students have been admitted information regarding the number of women students has been given*).

| Name of the College. | Description of course. | Under-graduate Courses. Number of students admitted. Scheduled Castes. | Scheduled Tribes. | Scheduled Castes and Scheduled Tribes. | Others. | Total. | Column (5) as per cent column (7). | Description of course. | Post-graduate Courses. Number of students admitted. Scheduled Castes. | Scheduled Tribes. | Scheduled Castes and Scheduled Tribes. | Others. | Total. | Column (12) as per cent column (14). |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) | (12) | (13) | (14) | (15) |
| Three Government Colleges and four Private Colleges under the control of the Director of Technical Education. | 5-year integrated B.E. | 92 | 5 | 97 | 1,153 (including 3 women). | 1,250 | 7·8 | M.Sc. (Engineering), College of Engineering, Guindy. | .. | .. | .. | 26 | 26 | 0 |
| | 3-year B.E. for Bachelors of Science. | 3 | 1 | 4 | 156 (including 1 woman). | 160 | 2·5 | P.S.G. College of Technology, Coimbatore. | 2 | .. | 2 | 34 | 36 | 5·6 |
| Regional Engineering College, Tiruchirappalli. | 5-year Integrated B.E. | 6 | 1 | 7 | 143 | 150 | 4·7 | Nil. | — | — | — | — | — | — |

| Name of the College. | Description of course. | Under-graduate Courses. Number of students admitted. Scheduled Castes. | Scheduled Tribes. | Scheduled Castes and Scheduled Tribes. | Others. | Total. | Column (5) as per cent column (7). | Description of course. | Post-graduate Courses. Number of students admitted. Scheduled Castes. | Scheduled Tribes. | Scheduled Castes and Scheduled Tribes. | Others. | Total. | Column (12) as per cent column (14). |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) | (12) | (13) | (14) | (15) |
| Madras Institute of Technology, Chromepet. | Diploma of M.I.T. | 0 | 1 | 1 | 99 | 100 | 1 | Nil. | .. | .. | .. | .. | .. | .. |
| Alagappa Chettiar College of Technology, Guindy. | B.Tech. and B.Arch. | .. | .. | .. | 131 (including 4 women). | 131 | 0 | M. Tech. etc. | .. | .. | .. | 33 | 33 | 0 |
| Annamalai University College of Engineering. | B.E. | 2 | .. | 2 | 178 | 180 | 1·1 | M.Sc. Engineering and M.E. Chem. | 1 | .. | 1 | 22 | 23 | 4·3 |
| | B.E. (Chemical) | .. | .. | .. | 60 | 60 | 0 | | | | | | | |
| Indian Institute of Technology, Guindy. | B.Tech. (5-year). | 1 | .. | 1 | 246 (including 1 woman). | 247 | 0·4 | M.Sc. and M. Tech. | .. | .. | .. | 58 (including 4 women). | 58 | 0 |
| | B.Tech. (3-year). | .. | .. | .. | 92 (including 1 woman). | 92 | 0 | .. | .. | .. | .. | .. | .. | .. |



## APPENDIX II.

[*Vide* answer to starred question No. 145 on page 239.]

*List of concessions granted to the Graduate Engineers who join the Armed Forces.*

1. Protection of Service rights, civil pay, leave, etc., during the period of army service as indicated below:—

(*a*) Absence from duty for interview or for attending medical examination will be treated as special casual leave.

(*b*) Those who are called for interview by the Services Selection Board, including the preliminary interview, medical test and pre-commission training will be entitled to travelling allowance and daily allowance according to the State Government rules.

(*c*) Full protection of service interests such as seniority, promotion, confirmation, pay in the higher post or posts to which they would have been appointed but for their military service, counting the military service for purposes of probation, seniority in the higher posts to which they would have been appointed but for their military service, age concession for those employed under the emergency provisions, counting the military service as duty for purposes of civil leave, pension and increments.

(*d*) Service under Emergency Commission, including the period of six months pre-commission training will be treated as Military Service.

(*e*) They will continue to be governed by civil leave rules.

(*f*) During the period of training, they will receive civil pay and allowances. The cost of training including accommodation, books, uniforms, boarding and medical treatment will be borne by the Army.

(*g*) On being granted Emergency Commission, they will receive military rates of pay and allowance according to the ranks assigned to them. Their civil pay will be protected wherever it is higher. The difference in pay in such cases and also the civil pay and allowances of the Government servants concerned during the period of pre-commission training, will be paid at the duty station or training centre as the case may be.

(*h*) The family of the Government servants concerned will continue to enjoy the medical concessions and medical facilities to which they will be eligible but for military service taken up by such personnel.

2. Treatment of the period of absence from duty occasioned by interview, medical examination, etc., in connection with joining military service, as special casual leave.

3. The orders issued by the Government of India in regard to regulation of pay, provident fund, lien, leave, etc., of the civil Government servants who are permitted to take up military service

during the Emergency have been made applicable to the State Government servants under the Government of Madras and the employees of local bodies who are deputed to take up military service during the Emergency.

4. Protection of pay, allowances and other service conditions of State Government servants who are Reservists in the Armed Forces.

5. One year of satisfactory field service rendered by the Engineers will count as two years civil service for probation and increment.

6. Preference in the matter of selection for post-graduate courses in Engineering.

7. Reservation of 50 per cent of the substantive vacancies in the posts of Engineers which have arisen or may arise during the period of National Emergency, for being filled up by Engineers who render satisfactory military service in preference to others who have not rendered such military service.

8. Concessions regarding fixation of pay, seniority, etc., of the Graduate Engineers who render military service in the present emergency and who will be appointed against the reserved vacancies after their release from the Army, as indicated below :—

(i) In respect of posts for which recruitment has been completely stopped after the declaration of the Emergency, the initial pay of the candidates joining civil service against reserved vacancies after their release from the Armed Forces, will be fixed taking into account the length of their entire military service after the declaration of the Emergency and treating each year of such military service as equivalent to one year of civil service. The military service will also count for purposes of pension. In respect of posts for which recruitment has been made after the declaration of emergency, the pay and seniority of the Engineer will be fixed treating him as belonging to the year in which he would have been appointed to that service/post at his first possible attempt after the date of joining military service/training.

(ii) Seniority *inter se* of such persons allotted to a particular year shall be determined according to merit, the merit list being prepared on the basis of their *academic and service records.*

(iii) All such persons shall rank below the successful competition candidates of the year to which they are allotted.

(iv) The particular date on which a candidate should be deemed to have been appointed to the service/post concerned, shall be decided by the Administrative Department concerned.

# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

**Wednesday, the 2nd March 1966.**

The House met in the Assembly Chamber, *Fort St. George*, at half past eight of the clock, Mr. Speaker (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

## I.—QUESTIONS AND ANSWERS.

## STARRED QUESTIONS.

*Oil, off Coromandal Coast.*

* 147 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Industries be pleased to state :—

(*a*) whether any investigation has been made to explore the possibilities of striking oil, off the Coromandal Coast ; and

(*b*) if so, the details thereof ?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) & (*b*) Yes, Sir. Seismic surveys off the Coromandal Coast were started by the Soviet Seismic Survey ship in the early part of September 1964 and the operations continued till the end of October 1964 by which time the weather conditions in the region became unfavourable for carrying out seismic survey operations on the east coast. The ship resumed the seismic surveys in the off-shore region in June 1965 and the work is expected to be completed by the end of August 1966. After the completion of the seismic survey, the data will have to be computed and interpreted and if any large indications of presence of oil are obtained, deep, off-shore drilling will be taken up by the Oil and Natural Gas Commission.

**திரு. வை. சங்கரன் :** இது தவிர காவேரி படுகையிலே எண்ணெய் வளத்தைப் பற்றி ஆராய்ந்து பரிசோதனை செய்வதற்காக தனி அமைப்பு அமைக்கப்பட்டிருக்கிறதா ? அப்படியிருந்தால் அந்த ஆராய்ச்சியின் பலன்கள், விளைவுகள் என்னென்ன ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** ஆயில் அண்டு காஸ் கமிஷன் மூலமாக நம்முடைய நாட்டிலே பட்டுக்கோட்டை திருத்துரைப்பூண்டி பகுதிகளிலே எண்ணெய் கண்டுபிடிப்பதற்கான ஆராய்ச்சிகள் நடத்திக்கொண்டிருக்கின்றன. அதேபோல் காரைக்கால் பகுதியிலே அவர்கள் சற்றேறக்குறைய 6,000 அடி ஆழத்திற்கு பூமிக்கு அடியில் குழாய்கள் இறக்கி அதிலிருந்து எண்ணெய் எடுப்பதற்கு முயற்சி செய்துகொண்டிருக்கிறார்கள்.

**திரு. சா. கணேசன் :** இதுவரை வெளிவந்த செய்திகளிலிருந்து 2,000 மீட்டர் ஆழம் வரை குழாய்கள் செலுத்தியிருக்கவேண்டும். சில இடங்களில் காஸ்மட்டும்தான் கிடைப்பதாகவும் இன்னும் தோண்டினால் எண்ணெய் கிடைக்கலாம் என்ற அபிப்பிராயங்கள் இருப்பதாகவும் தெரிகிறது. இதுவரை தோண்டிப்பார்த்ததிலே எண்ணெய் கிடைத்திருக்கிறதா ? அல்லது, வெகு விரைவிலே எண்ணெய் கிடைத்துவிடும் என்ற நம்பிக்கை ஏற்பட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. ஆர். வெங்கட்ராமன் :** காரைக்கால் பகுதியில் ஓரளவு எண்ணெய்ச் சத்து கிடைத்திருக்கிறது. ஆனால், அது போதுமான அளவிற்கு இருக்கிறதா, அதைப் பயன்படுத்தக்கூடிய அளவு வால்யூம், க்வாண்டிடி இருக்கிறதா என்று தெரியவில்லை. இது பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது.

**திரு. சா. கணேசன் :** இந்தப் பரிசோதனையில் ரஷ்ய நாட்டு நிபுணர்கள் தான் கருத்து தெரிவிக்கிறார்களா அல்லது பிற நாட்டு நிபுணர்களும் கலந்து முயற்சி செய்துகொண்டிருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. ஆர். வெங்கட்ராமன் :** கடல் ஆராய்ச்சி, ரஷ்ய நாட்டு நிபுணர்களால்தான் செய்யப்பட்டுவருகிறது. தஞ்சாவூர் காவேரிப் பகுதியில் நடந்துக்கொண்டிருக்கிற ஆராய்ச்சி நம்முடைய நிபுணர்களால் செய்யப்படுகிறது.

**திரு. வை. சங்கரன் :** ஆயில் அண்டு காஸ் கமிஷனுக்கு உதவியாக நம்முடைய ராஜ்யத்திலிருந்து தனியாக அமைப்பு அமைக்கப்பட்டிருக்கிறதா ? வேலை சீக்கிரமாக நடைபெறுவதற்கு நம்முடைய ராஜ்யத்திலிருந்து அமைப்பு அமைப்பதற்கு உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. ஆர். வெங்கட்ராமன் :** இது மத்திய சர்க்காரின் பொறுப்பில் இருக்கிறது. ஆகையால் இதற்குத் தனியாக அமைப்பு இல்லை.

**திரு. எஸ். ஜே. ராமசாமி :** காரைக்கால் பகுதியில் போரிங் போட்ட இடத்தில் இருந்து வேறு இடத்திற்கு ஷிப்ட் பண்ணுவதாகச் செய்தித் தாள்களிலே பார்த்தோம். அதற்கு முன்பு போட்ட இடத்தில் கிடைக்கவில்லையா அல்லது வேறு எதற்காக மாற்றப்பட்டது என்ற தகவலை அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. ஆர். வெங்கட்ராமன் :** எண்ணெய் ஆராய்ச்சியில் குழாய்களை ஆழமாகச் செலுத்தி பல இடங்களில் பரவலாகப் போட்டுப் பார்க்க வேண்டும். இதனால்தான் வேறு இடத்தில் போட்டு பார்த்திருப்பார்கள்.

**திரு. இராம. அரங்கண்ணல் :** தஞ்சாவூர் மாவட்டத்தில், காரைக்கால் பட்டுக்கோட்டைப் பகுதியில் எண்ணெய் கிடைக்கும் என்று தெரிகிறது. தஞ்சாவூர் மாவட்டத்தில் நெல்லைத் தவிர வேறு தொழிலே கிடையாது. ஆகவே, அங்கே இந்தத் தொழில் வந்தால் உபயோகமாக இருக்கும் என்ற காரணத்தினாலே விரைவிலே ஆராய்ச்சி நடத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்ராமன் :** ஆராய்ச்சிகளை ஆராய்ச்சி முறையில் தான் செய்ய வேண்டும். விரைவிலே செய்யவேண்டுமென்று கருதி ஆராய்ச்சிகளை முடித்துவிடமுடியுமா ? இப்பொழுது காலதாமதம் இல்லாமல் வேலை நடந்துகொண்டிருக்கிறது. தொடர்ந்து நடந்து கொண்டிருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜே. மாதா கவுடர் :** எண்ணெய் வளம் இருப்பதை ஆராய்ச்சி செய்து கண்டுபிடிப்பதற்கு நம்முடைய நாட்டு நிபுணர்கள் வெளி நாட்டிற்கு அனுப்பப்பட்டு வந்திருக்கிறார்களா ? அல்லது, நம்முடைய நாட்டிலே பயிற்சி பெற்று வந்திருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. ஆர். வெங்கட்ராமன் :** இதற்கு முன்பு ஒரு கேள்விக்கு பதில் சொன்னேன் கடல் பகுதியிலே இருக்கும் எண்ணெய் ஆராய்ச்சிகள் ரஷ்ய நிபுணர்களால் நடத்தப்படுகிறதென்று. காரைக்கால் பட்டுக்கோட்டை போன்ற பிற பகுதிகளிலே நம்முடைய நாட்டு நிபுணர்களால் ஆராய்ச்சி செய்யப்பட்டு வருகிறது. நம்முடைய நாட்டிலே அதற்குப் போதுமான நிபுணர்கள் இருக்கிறார்கள்.



புதிய பஸ் வழிகளுக்கு அனுமதி.

***148. கேள்வி—திரு. எஸ். ஜே. ராமசாமி :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா :—

(அ) வட ஆற்காடு, செங்கற்பட்டு ஆகிய இரு மாவட்டங்களில் முறையே 1964 ஏப்ரல் 1-ம் தேதி முதல் 1965 செப்டம்பர் முடிய எத்தனை புதிய பஸ் ரூட்டுகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது ?

(இ) எந்தெந்த ஊர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது ?

(உ) எத்தனை புதிய ரூட்டுகளின் மனுக்கள் பைசலாகாமல் pending-ஆக இருக்கின்றன ? அவை எந்தெந்த ரூட்டுகள் ?

**கனம் திரு. ஆர். வெங்கட்ராமன் :** (அ) முதல் (உ) வரை. சபைமுன் ஒரு விவரமான அறிக்கை [a] வைக்கப்பட்டுள்ளது.

**திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் :** வட ஆற்காடு மாவட்டத்தில் 30 பஸ் ரூட்டுகளும், செங்கற்பட்டு மாவட்டத்தில் 48 பஸ் ரூட்டுகளும் அனுமதிக்கப்பட்டிருக்கின்றன. இந்த பஸ் ரூட்டுகளிலே கூட்டுறவு மூலமாக ஹரிஜனங்களுக்கு பஸ் ரூட் உரிமை கொடுக்கப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. ஆர். வெங்கட்ராமன் :** கனம் சபாநாயகர் அவர்களே, இது சம்பந்தமாகத் தனியாக கேள்வி போட்டால் விவரம் சொல்ல முடியும். பஸ் ரூட் கொடுப்பதிலே நாம் புது விதி போட்டிருக்கிறோம் என்பது கனம் அங்கத்தினருக்குத் தெரியும் என்று நினைக்கிறேன். ஒரு ஜில்லாவிற்குள் இருக்கக்கூடிய ரூட்டுகளுக்கு அங்கே இருக்கிற ஆர். டி. ஏ. டிஸ்ட்ரிக்ட் டெவலப்மென்ட் கவுன்சிலைக் கலந்துகொண்டு கொடுக்கலாம். டிரான்ஸ் போர்ட் கமிஷனரையோ ராஜ்ய சர்க்காரையோ கேட்கவேண்டியதில்லை. ஒரு ஜில்லாவிலிருந்து மற்றொரு ஜில்லாவிற்கு ரூட்டு வேண்டுமென்றால் இரண்டு ஜில்லாக்களுடைய ஆர்.டி.ஏ.க்களும் ஒத்துக்கொண்டால் அவர்கள் கொடுத்துக்கொள்ளலாம். டிரான்ஸ்போர்ட் கமிஷனரையோ ராஜ்ய சர்க்காரையோ கேட்கவேண்டியதில்லை என்று விதி செய்திருக்கிறோம்.

**புலவர் கா. கோவிந்தன் :** தலைவர் அவர்களே, கொடுக்கப்பட்டிருக்கிற அறிக்கையிலே செங்கற்பட்டு மாவட்டத்தில் 13-வது எண்ணில் செங்கல்பட்டு—செய்யார் பஸ் ரூட் கொடுக்கப்பட்டிருப்பதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதுவரையில் வண்டி ஓடவில்லை என்பதை கனம் அமைச்சர் அவர்கள் கவனித்திருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. ஆர். வெங்கட்ராமன் :** ராஜ்ய சர்க்காருக்கு இது சம்பந்தமாக விவரங்கள் வராது. இது சம்பந்தமாக தனியாகக் கேள்வி போட்டால் கலெக்டரிடமிருந்து விவரம் அறிந்து சொல்லலாம்.

**திரு. கரு. சீமைச்சாமி :** ஸார், புதிய பஸ் ரூட்டுகள் கொடுப்பதைப் பற்றி அமைச்சர் அவர்கள் சொல்லுகின்ற போது, ஜில்லா லெவலில் சர்க்காருக்கு தெரிவிக்காமலேயே ஆர்.டி.ஏ. பெர்மிட் கொடுக்கலாம் என்று சொன்னார்கள். சில இடங்களில் பஸ் ரூட் தேவைப்படுகிறது. அதிகமாக பஸ் விட வேண்டும் என்று சில பஞ்சாயத்து யூனியன்கள் தீர்மானங்கள் போட்டு அனுப்பியிருந்தும் கூட, சில பஸ் அதிபர்கள் அதற்கு மாறாக ஹைகோர்ட்டில் போய் ஸ்டே வாங்கிவிடுகிறார்கள். இதைத் தடுப்பதற்கு அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை எடுக்குமா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்ராமன் :** ஜனநாயகத்தில் இதைத் தடுக்க முடியாது. பஸ் ஓட்டுகின்றவர்களுக்கு எங்கள் ரூட்டில் வேறு பஸ் ஓடக்கூடாது என்று கேட்பதற்கு உரிமை இருக்கிறது. அதே போன்று அதிகமாக பஸ் விட வேண்டும் என்று கேட்பதற்கு மற்றவர்களுக்கும் உரிமை இருக்கிறது. இதை சர்க்கார் தீர்க்க முடியாது, கோர்ட் தான் தீர்க்க வேண்டும்.

[a] Printed as Appendix on pages 76–79.

[2nd March 1966

**திரு. டி. கார்ச்சா கவுடர் :** புதிய பஸ் ரூட்கள் வழங்குவதில் ஜில்லாக் கலெக்டர்களுக்கு இருக்கின்ற அதிகாரம் செல்லாது என்று சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு சொல்லி சில கேஸ்களை தள்ளுபடி செய்திருக்கிறதே. அதற்கு மாற்று ஏற்பாடாக சர்க்கார் கலெக்டர்களுக்கு என்ன அதிகாரங்களை வழங்கியிருக்கிறது ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** கலெக்டர் ஒரு க்வாஸி ஜூடிஷியல் அத்தாரிட்டி தான் என்று சொல்லியிருக்கிறார்கள். இதற்காக கலெக்டர்களுக்கு தனியாக எந்தவிதமான அதிகாரமும் கொடுக்கப்படவில்லை. நியாயமாக இருப்பதைப்பார்த்து முடிவு செய்யவேண்டும் என்று சொல்லப் பட்டிருக்கிறது.

**திரு. ஜே. மாதா கவுடர் :** ஸார், தனியார்களுக்கு பஸ் ரூட்டுகள் வழங்குவதில் 75 மைல்கள் வரை இருக்கின்ற ரூட்டுகளை கொடுத்துவிட்டு, அதற்கு மேல் உள்ள ரூட்டுகளை எல்லாம் சர்க்கார் எடுத்துக்கொள்வது என்ற கொள்கையை சர்க்கார் ஏற்றுக்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** 120 மைல்களுக்கு மேல் இருக்கின்ற பஸ் ரூட்-களில் சர்க்கார் பஸ் விடுவது என்று சர்க்கார் முடிவு செய்திருக்கிறது. 75 மைல்களுக்கு மேல் இருக்கின்ற ரூட்-களில் சர்க்கா பஸ் விடுகிறதா என்று முதலில் நோட்டீஸ் கொடுக்க வேண்டும். அதன் பின் தான் தனியார்கள் பஸ் விட முடியுயும். இது தான் இப்போதுள்ள விதி.

**திரு. து. ப. அழகமுத்து :** அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கின்ற தகவலில் விண்ணப்பங்கள் போடப்பட்டு முடிவு செய்யப்படாமல் இருப்பது 11 என்று குறிப்பிட்டப்படிருக்கிறது. இதில் அப்பீல் செய்யப்பட்டிருக்கின்ற காரணத்தால் பைசல் செய்வதில் கால தாமதம் ஏற்பட்டிருக்கிறதா அல்லது நிர்வாக தாமதத்தின் காரணமாக பைசல் செய்யப் படாமல் இருக்கின்றனவா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** அப்பீல்கள் அதிகமாக இருப்பதின் காரணமாகத்தான் பல விண்ணப்பங்களும் பைசல் ஆகாமல் இருக்கின்றன என்று தெரிகிறது.

**திரு. செ. மாதவன் :** கனம் தலைவர் அவர்களே, பொது மக்களுக்கு வசதியாக இருக்கவேண்டும் என்று சொல்லப்படுகின்ற ரூட்டுகளில் தனியார் பஸ்கள் விட மறுத்தால், அந்த ரூட்டை தேசியமயமாக்கி சர்க்கார் பஸ்களை விடுவதற்கு சர்க்கார் முயற்சி எடுக்குமா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** அந்தவிதமான ஏற்பாடு அவசியமில்லை. தனிப்பட்ட முதலாளிகள் இஷ்டப்பிரகாரம் நாம் அனுமதி கொடுப்பதில்லை. அந்தந்த ஜில்லாக்களிலுள்ள ஆர்.டி.எ. என்னென்ன ரூட்-களில் ப்ஸ்கள் தேவை என்பதைப் பார்த்து, எந்தெந்த ரூட்களில் அதிகமாக பஸ்கள் விடவேண்டும் என்பதையெல்லாம் பார்த்துத்தான் அனுமதி கொடுக்கிறார்கள். அதற்கு மேல் அப்பீல் செய்து கொள்வதற்கு ஹைக்கோர்ட்டுக்குப் போகலாம். அதை நாம் தடுக்க முடியாது.

**திரு. அ. ராகவ ரெட்டி :** செங்கற்பட்டு-ஊத்துக்கோட்டை-காஞ்சீபுரம் ரூட் சாங்ஷன் ஆகி இரண்டு வருடங்கள் ஆகியும் இதுவரையிலும் யாருக்கும் பஸ் ரூட் கொடுக்கப்படாமல் இருக்கிறது. இதற்கு என்ன காரணம் ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** இதற்குத் தனியாகக் கேள்வி போட்டால் செங்கற்பட்டு கலெக்டர் அவர்களிடத்தில் விவரங்களைக் கேட்டு பதில் தெரிவிக்கலாம்.



2nd March 1966]

**திரு. ம. கமலநாதன் :** பெர்மிட்டுகளை தனிப்பட்ட பஸ் முதலாளிகள் விற்கக்கூடாது என்று இருந்தும், பல இடங்களில் விற்றுக்கொண்டிருக்கிறார்கள். அல்லது டிரான்ஸ்ஃபராக்கிக் கொண்டிருக்கிறார்கள். இவ்விதம் டிரான்ஸ்ஃபர் செய்யலாம் என்று ஏதாவது வழிமுறை இருக்கிறதா?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** டிரான்ஸ்பர் சம்பந்தமாக, சர்க்கார் சில விதிமுறைகளை வைத்திருக்கின்றது. அதாவது (1) ஏற்கனவே பஸ்களை ஓட்டிக்கொண்டிருப்பவர்கள், மற்றவர்களுக்கு ப்ரீமியம் எதுவும் கொடுக்க வில்லை, ரூட்-க்காக எதுவும் கொடுக்கவில்லை, நியாயமான முறையில் தான் வாங்கியிருக்கிறார்கள் என்று அதிகாரிகள் ரிப்போர்ட் செய்தால் அதை அனுமதிக்கிறோம். (2) 15 மைல்களுக்குக் குறைவாக இருக்கின்ற ரூட்டுகளில் ஏதாவது விண்ணப்பம் வந்து, அதில் ஓட்டிக் கொண்டிருக்கின்றவர்கள் தங்கள் பெர்மிட்டை புதியவர்களுக்கு டிரான்ஸ்ஃபர் செய்ய வேண்டும் என்று விரும்பினால் அப்போதும் அனுமதிக்கிறோம். மற்றபடி, தவறாக ரூட்டுகளை வாங்கி விற்கிறார்கள் என்ற சந்தேகம் ஏற்பட்டால் அனுமதி கொடுப்பதில்லை.

**திரு. ஜே. மாதா கவுடர் :** புதிதாக பஸ் ரூட்டுகள் கொடுக்கும்போது, வேறு பஸ் முதலாளிகள் ஹைகோர்ட்டில் போய் தடுத்துவிடுகிறார்கள். ஹைக்கோர்ட்டில் வழக்கு பைசல் ஆவதற்கு ஓராண்டு வரை ஆகிவிடுகிறது. இந்த நேரத்தில் அந்த ரூட்டில் யாரும் பஸ் விட முடிவதில்லை. ஆகவே, ஹைக்கோர்ட்டில் வழக்கு இருந்தாலும் பஸ்கள் போய்க்கொண்டிருப்பதற்கு வசதியாக சர்க்கார் ஏதாவது விதிகளை திருத்துவதற்கு முன் வருமா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** சட்டத்திற்கு உட்பட்ட சர்க்கார் நமது சர்க்கார். சட்டத்தில் என்னென்ன சொல்லப்பட்டிருக்கிறதோ அதைத்தான் இந்த சர்க்கார் செய்ய முடியும். ஹைக்கோர்ட்டில் போய் தங்கள் குறைகளை சொல்வதற்கு அவர்களுக்கு உரிமை இருக்கிறது. ஸ்டே வாங்கிக்கொள்வதற்கும் உரிமை இருக்கிறது. ஆகவே, இந்தமாதிரியான விஷயங்களில் ஹைக்கோர்ட்டில் தான் சொல்ல வேண்டும்.

**திரு. சா. கணேசன் :** பஸ் ரூட்-களை வாங்கி விற்பதில் தடை விதிக்கப் பட்டிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். பஸ் ரூட்டுகளை வாங்கிய பிறகு மிகத் தந்திரமாக,—ஒன்றிரண்டு பஸ்களை மட்டும் தான் சிலர் வைத்திருப்பார்கள்—அவர்கள் கம்பெனியையே விற்கிறோம் என்று சொல்லிக் கொண்டு, கம்பெனியை விற்கிற மாதிரி ரூட்களை விற்றுக்கொண்டிருப்பது சர்க்காருக்கு தெரியுமா ? இனிமேலாவது அப்படிச் செய்யாமல் இருப்பதற்கு ஏதாவது தடை விதிக்க முடியுமா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** தடை விதிக்க முடியுமா என்பது சந்தேகம். இதைப்பற்றி சட்ட இலாகா பரிசீலிக்கவேண்டும். பொதுவாக, நியாயமற்ற முறையில் ரூட்டுகளை வாங்கி விற்கிறார்கள் என்று சர்க்காருக்குத் தெரிந்தால் அனுமதி கொடுப்பதில்லை.

**திரு. முனு. ஆதி :** தலைவர் அவர்களே, கூடுவாஞ்சேரி வரைக்கும் பஸ் விடவேண்டும் என்று அங்குள்ள வெல்ஃபேர் அஸோஸியேஷன் கலெக்டர் அவர்களுக்குத் தெரிவித்தும் அதை நிராகரித்துவிட்டார்கள் என்று சர்க்காருக்கு ஏதாவது விண்ணப்பம் செய்திருக்கிறார்களா ? அப்படியென்றால் அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?

**கனம் சபாநாயகர் :** இப்படி ஒவ்வொன்றையும் பற்றி ஸ்பெஸிஃபிக்காக கேட்டால் எப்படி பதில் சொல்ல முடியும் ? தனியாக கேள்வி கேட்டால் தான் பதில் சொல்ல முடியும்.

**திரு. எஸ். முருகையன் :** கொஞ்ச நாட்களுக்கு முன்னால் சென்னைக்கும் வேலூருக்கும் பஸ் ஓடிக்கொண்டிருந்தது. கட்டணமும் குறைவாக இருந்தது, மக்கள் அதை பெரிதும் வரவேற்றார்கள். அதை திடீரென்று சர்க்கார் நிறுத்திவிட்டார்கள். அதற்கு என்ன காரணம் ? பஸ்

முதலாளிகள் தான் இதற்கு காரணமாக இருந்தார்களா ? அல்லது இதில் சர்க்காருக்கு லாபம் வரவில்லை என்பது தானு என்பதை அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** தனியாகக் கேள்வி வேண்டும்.

**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** மாவட்டங்களிலே ஜில்லாக் கலெக்டர்கள் பஸ் ரூட்டை கொடுக்கிறுர்கள். அரசாங்கத்தின் கீழ் வேலை செய்கின்ற கலெக்டர்கள் பஸ் ரூட்டுகள் கொடுப்பதில் பல விதமான ஊழல்கள், புகார்கள் வருகின்றன. ஆகவே, பஸ் ரூட் கொடுக்கின்ற அதிகாரத்தை மாவட்ட அளவில் அங்குள்ள டிஸ்ட்ரிக்ட் ஜட்ஜிடம் கொடுக்க அரசாங்கம் முயற்சி செய்யுமா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** பஸ் ரூட் கொடுப்பதில் ஜில்லாக் கலெக்டர்கள் தவறு செய்தால் யார் நினைத்தாலும் அதன் மீது அப்பீல் செய்து கொள்வதற்கு ஸ்டேட் அப்பலட் ட்ரிபுனல் இருக்கிறது. அதை ஒரு டிஸ்ட்ரிக்ட் ஜட்ஜ் தான் நடத்துகிறுர். ஆரம்பத்தில் இம்மாதிரி டிஸ்ட்ரிக்ட் ஜட்ஜிடம் கொடுக்கலாமா என்பதைப்பற்றி சர்க்காரும் ஆலோசித்தது. ஆனுல், கலெக்டர்களுக்குத்தான் எந்தெந்த ரூட்டுகளில் பஸ் விட வேண்டும், எந்தெந்த ரூட்டுகளில் அதிகமாக பஸ் விடவேண்டும், மக்களுடைய விருப்பம் என்ன, தேவை என்ன என்பதை அறிந்து கொள்ள வாய்ப்பு அதிகமாக இருக்கிறது. ஆகவேதான் கலெக்டர்களிடம் இந்த அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இது தான் சிறந்த முறை.

**திரு. க. தா. பெருமாள்ராஜூ :** கூட்டுறவு முறையில் பஸ் விடுவதற்கு முன் வந்தால் விதிகள் தளர்த்தப்படுமா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** அவ்விதம் தளர்த்த முடியுமா என்பது சந்தேகம் தான். இப்போது அதைப் பற்றி சர்க்கார் யோசிக்கவில்லை.

**திரு. செ. மாதவன் :** புதிய பஸ் ரூட்கள் கொடுக்கும்போது, பின்பற்ற வேண்டிய முறைகளை கையாளும் போது, எற்கனவே இருக்கின்ற பஸ் ரூட்கள் இருந்தாலும், அதனுல் புதிய பஸ்ரூட்டுகளும் இடையூறு வராத விதத்தில் பஸ் ரூட்கள் வழங்க ஏதாவது விதிகள் சேர்க்கப்பட்டிருக்கின்றனவா?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** இந்த மாதிரியாக விதிகள் எதுவும் செய்யப்படவில்லை. ஒரு கொள்கையை நாம் கழிந்த பத்து ஆண்டுகளாகக் கடைப் பிடித்து வருகிறேம். அதாவது, 120 மைல்களுக்கு மேல் இருக்கின்ற ரூட்களை எல்லாம் சர்க்கார் எடுத்து நடத்துவது என்பது. இப்படிப்பட்ட ரூட்களில் 120 மைல்களுக்கு மேல் இருந்தால் சர்க்காருக்கு அதாவது ஸ்டேட் ட்ரான்ஸ்போர்ட் டைரக்டருக்கு நோட்டீஸ் கொடுக்க வேண்டும். சர்க்கார் அந்த ரூட்டை எடுத்துக் கொள்வதாக இருந்தால் நோட்டிஃபிகேஷன் செய்யும் ; இல்லாவிட்டால், மற்றவர்கள் எடுத்துக்கொள்வதற்கு அனுமதி கொடுக்கக்கூடும்.

**திரு. ம. கமலநாதன் :** பஸ் பெர்மிட்டுகள் வழங்கும்போது, அதைப் பற்றி ஹைக்கோர்ட்டில் புகார் செய்யும் போது, அதன் மீது முடிவு எடுக்கப்படுவது வரையிலும் வேறு பஸ்கள் அந்த ரூட்டில் போக முடியாது. வேறு யாரும் அதில் பஸ் விட முடியாது. இவ்விதம் நீண்ட நாட்கள் வழக்குகள் பைசல் ஆகாமல் இருக்கிற காரணத்தால் இதற்கென்று தனியாக கோர்ட் ஏதாவது ஏற்படுத்த சர்க்கார் முயற்சி செய்யுமா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** ஹைக்கோர்ட் என்பது ஒன்று தான் இருக்க முடியும். இதற்கென்று தனியாக கோர்ட் எதுவும் வைக்க முடியாது.



**திரு. எஸ். முருகையன் :** ஸார், 120 மைல்களுக்கு அப்பாற்பட்ட இடங்களைப் பொறுத்த வரையில் சர்க்கார் எக்ஸ்பிரஸ் பஸ்களை நடத்துகிறது. சென்னையிலிருந்து புறப்படும் பஸ்களில், சில இடங்களுக்கு மட்டும் சாதாரண பஸ்களை ஒட்டுகிறது. வெளி இடங்களுக்குப் போவதிலும் சாதாரண பஸ்களை ஓட்டுவதற்கு சர்க்கார் முயற்சி எடுக்குமா ? அப்படி முயற்சி எடுப்பதில் வேறு ஏதாவது கோளாறு இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** நிர்வாகம் மிகக் கஷ்டமாக இருக்கும். ஆகையால் தான் எல்லாவற்றையும் சர்க்கார் எடுத்துக் கொள்ளவில்லை. ஆகவேதான் படிப்படியாக எடுத்துக் கொள்ள வேண்டும் என்று 120 மைல்களுக்கு மேல் உள்ள ரூட்களை எடுத்துக்கொள்ள வேண்டுமென்ற கொள்கையின் கீழ் ராஜ்யம் பூராவிலும் பஸ்களை ஓட்டும் நிலைமையை ஏற்படுத்தியிருக்கிறேம்.

**திரு. எஸ். ஜே. ராமசாமி :** ஸார், இந்த மாவட்ட கலெக்டரும், ஆர்.டி.ஏ வும் சேர்ந்து மீட்டிங் போட்டு பஸ் ரூட்டுகளை சாங்ஷன் செய்கிறுர்கள். அந்தந்தப் பகுதிக்குத் தேவையான ரூட்டுகளை சாங்ஷன் செய்யும் போது அந்தந்தப் பகுதி எம்.எல்.ஏ-க்களும் அழைக்கப்படுவார்களா ? அப்படி அழைக்க ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**MR. SPEAKER : The hon. Member is courting trouble.**

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** இது தொல்லையை விலைக்குக் கொடுத்து வாங்கியது போல ஆகி விடும். அதற்காகத் தான் இதைப் பற்றி டி.டி.ஸி-யில் விவாதிக்கவேண்டுமென்று ஏற்பாடு செய்திருக்கிறேம்.

**திரு. இரா. நாராயணன் :** தலைவர் அவர்களே, இந்த பஸ் ரூட்டுகளை விற்பதில், அந்தக் குறிப்பிட்ட கம்பெனியில் வேலை செய்கிற தொழிலாளர்களை பஸ் ரூட்டுகளை வாங்குகிறவர்கள் வேலைக்கு அமர்த்திக் கொள்ளுவதில் பல சங்கடங்கள் ஏற்படுகின்றன. தொழிலாளர்களுக்கு பஸ் ரூட்டுகளை விற்கும் கம்பெனியிலிருந்து அவர்களுக்கு வரவேண்டிய சகாயத் தொகை முதலியன வராது கஷ்டப்படுகிறுர்கள். அது சம்பந்தமாக கோர்ட்டில் வழக்கு தொடரப்பட்டிருக்கிறது. இதைப் பற்றி அரசாங்கம் என்ன கவனித்து வருகிறது ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** இதனை கவனிக்க சர்க்கார் தொழிலாளர் நல இலாகா இருக்கிறது. தொழிலாளர் நல இலாகாவிடம் இதைப் பற்றிப் புகார் செய்தால் அவர்கள் கவனிப்பார்கள்.

**திரு. ஏ. சுவாமிதாஸ் :** ஸார், கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்த அளவில் படிப்படியாக பஸ் ரூட்டுகளை தேசிய மயமாக்கிக் கொண்டிருக்கிறேம். அப்படி இருப்பதால் தனியார் துறையில் இருக்கிற கண்டக்டர்களையும், டிரைவர்களையும் பிரித்து விட்டுக்கொண்டிருக்கிறுர்கள். அவர்களை அரசாங்கத் துறையில் வேலைக்கு அமர்த்திக்கொள்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** அந்த நிலைமை எனக்குத் தெரியாது. அதைப் பற்றி கனம் உறுப்பினர் எழுதி அனுப்பினுல் இலாகாவைப் பரிசீலனை செய்யச் சொல்லுகிறேன்.

**திரு. து. ப. அழகமுத்து :** தலைவர் அவர்களே, புதிதாக பஸ் ரூட் ஆரம்பிக்கும்போது,, ஆர்.டி. ஏ-வும் ஏ.டி.ஸி.-யும் ஆக்குபேஷனல் ரேஷியோ கணக்கு எடுத்து ஆரம்பிக்கிறுர்கள். அப்ளிகேஷன் கோரிய பிறகு அப்பீலில் ஸ்டே வாங்கினுல் நிறுத்திவிடலாம் என்ற முறை இருக்கிறது. உரிமை இருக்கிறது. ஆனுல் ரூட்டை நோட்டிஃபையே செய்யாமல் செய்து விடுகிறுர்கள். அந்த மாதிரி நடக்காமல் இருக்க என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன ?

[2nd March 1966

**கனம் திரு. ஆர்: வெங்கட்டராமன் :** ஜில்லா அதிகாரிகளுக்கு ஒரு இடத்தில் பஸ் வேண்டுமா, வேண்டாமா என்று நிர்ணயம் செய்ய பல குறிக்கோள்கள் கொடுத்திருக்கிறோம். அந்த விதமாக அவர்கள் அந்த இண்டிகேஷன்ஸை வைத்து முடிவு செய்கிறார்கள். ஏதாவது தவறு ஏற்பட்டு, .வேண்டுமென்றே, சில இடங்களில் ஒப்பன் செய்யவில்லை என்ற புகார் வருமானால் அதைச் சர்க்கார் பரிசீலிக்கலாம்.

*Sudden check of stage carriages.*

* 149 *Q.*—SRI C. KOTHANDARAMA BAGAVATHAR : Will the Hon. the Minister for Industries be pleased to state :

(*a*) the number of cases of overloading in stage carriages in Madras State, registered during the sudden check from 27th June 1965 to 30th June 1965 ;

(*b*) the number of cases of non-payment of taxes on stage carriages detected during the period of check ;

(*c*) the number of cases of overspeeding during the period ; and

(*d*) the income and expenditure in connection with the detection of cases during the period ?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) 120.

(*b*) 2.

(*c*) 1,868.

(*d*) As regards the income derived as a result of the detection of these cases, it is not possible to assess it at this stage, as the cases initiated against the permit-holders concerned are not yet over. The extra expenditure is Rs. 9,925·90.

**திரு. வி. எஸ். எஸ். மணி :** ஸார், மதுரை மாவட்டத்தில் பஸ்களை ஓட்டும் ட்ரைவர்களுக்கு இரண்டு வேலைகள் கொடுக்கப்படுகின்றன. பஸ் ஓட்டும்போதே இன்வாய்ஸ் என்ற கணக்கு எழுத உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள். அவர்கள் இரண்டு வேலைகளைச் செய்ய வேண்டியிருப்பதால் அவர்கள் கவனம் முழுவதும் பஸ் ஓட்டுவதில் இருப்பதில்லை. கணக்கை எழுதுவதில் கவனம் செல்லுகிறது.. இது அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டதா / இந்த முறையைத் தடுக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** கனம் அங்கத்தினர் இது சம்பந்தமாக முன்பு ஒரு முறை என்னிடம் சொன்னார்கள். இது லேபர் டிப்பார்ட்மெண்டில் அவர்கள் விதிகளின் படி அப்படிச் செய்ய முடியுமா என்று பார்க்கவேண்டும். இதைப்பற்றி அவர்களுக்கு கனம் அங்கத்தினர் எழுதி அனுப்பலாம்.

**திரு. செ. மாதவன் :** ஸார், அதிக வேகமாக ஓட்டியதைக் கண்டு பிடிக்கப்பட்ட எண்ணிக்கையில் அதிக வேகமாக ஓட்டிய சர்க்கார் பஸ்களின் எண்ணிக்கையும் சேர்க்கப்பட்டிருக்கிறதா ? அண்மையில் சர்க்கார் பஸ்கள் அதிக வேகமாக ஓட்டப்படுவதாகப் பல பெரியவர்கள் குறிப்பிட்டுள்ளார்களே, அவைகள் சேர்க்கப்பட்டுள்ளனவா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** அதுவும் இதில் சேர்ந்திருக்கிறது.

**திரு. து. ப. அழகமுத்து :** தலைவர் அவர்களே, இந்த திடீர் சோதனை நடத்திய போது ஏகபோக உரிமையுள்ள ரூட்களில், டவுன் பஸ் ரூட்டுகளாக இருந்தால் பீக் அவர்ஸில் கொடுக்கப்பட்ட பர்மிட் அல்லாமல்



2nd March 1966]

வேறு ரூட் பஸ்கள் திருப்பி விடப்பட்டு ஓட்டப்பட்ட கேஸ்கள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றனவா ? அதே மாதிரி மொஃபஸல் ரூட்களில் அவர்களுடைய கம்பெனி பஸ்களையே குறிப்பிட்ட அளவுக்கு மேல் அதிகமாக ஓட்டிய கேஸ்கள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றனவா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** இதைப் பற்றித் தனியாகக் கேள்வி போட்டால் பார்த்துச் சொல்ல முடியும். இப்போது அந்தத் தகவல் இல்லை.

**திரு. ம. கமலநாதன் :** தலைவர் அவர்களே, பஸ்கள் மீது அதிகமாக வரி விதிக்கப்பட்டதால் 30 சதவிகிதம் அதிகமாக எல்லா முதலாளிகளும் வசூலிக்கிறார்கள். ஆனால் சேலம் மாவட்டத்தில் ஒரு முதலாளி பழைய கட்டணத்தையே வாங்கி வருகிறார். அவருக்கு ஆர். டீ. ஏ. குறைத்து வாங்குவது தவறு, குறிப்பிட்ட அளவு வாங்க வேண்டும் என்று நோட்டீஸ் கொடுத்துக் கேட்டார். நோட்டீஸ் கொடுத்தும் அதை மறுத்துப் பழைய கட்டணத்தையே வாங்கி வருவது அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டதா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** அந்தத் தகவல் என்னிடத்தில் இல்லை. ஆனால், சட்டத்தை விளக்க விரும்புகிறேன். இப்போது நோட்டிஃபை செய்திருப்பது மாக்ஸிமம் ரேட்டுதான். அதற்கு மேல் வாங்கக் கூடாது என்றுதான் சொல்லப்பட்டிருக்கிறது. அதற்குக் குறைவாக வாங்குவதற்குத் தடை இல்லை. அப்படி ஏதாவது தடுப்பதாக இருந்தால் அதைப்பற்றிப் புகார் எழுதி அனுப்பும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. டி. கார்ச்சா கவுடர்:** மலைப் பிராந்தியங்களில் ஓடும் எக்ஸ்பிரஸ் பஸ்களை ஓட்டும் வேகத்தை பார்த்தால், இன்ஷ்யூர் செய்துவிட்டுத்தான் ஏற வேண்டும் என்ற நிலைமை இருக்கிறது. அவ்வளவு வேகமாக ஓட்டுகிறார்கள். ஊட்டியிலிருந்து சேலம், திருச்சி செல்லும் வண்டிகளின் வேகத்தைக் குறைக்க சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** எக்ஸ் பிரஸ் பஸ் வேகமாக ஓட வேண்டுமென்ற கோரிக்கை வருகிறது. மறுபுறம் வேகமாக ஓடுகிறது என்ற குற்றச்சாட்டும் வருகிறது. இரண்டையும் பார்த்து எப்படியாவது முடிவு செய்ய வேண்டியதுதான்.

**திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் :** தலைவர் அவர்களே, இந்த திடீர் சோதனையின் போது சோதனையிட வருகிறவர்கள் வண்டியை நிறுத்தி விட்டுச் சோதனையிட வேண்டும் என்று அரசாங்கம் கருதுகிறதா ? அல்லது வண்டி ஓடும் போதே ஏறி சோதனை செய்ய வேண்டுமென்று அரசாங்கம் கருதுகிறதா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** இது எனக்குத் தெரியாது. சோதனை செய்ய வேண்டுமென்றுதான் போட்டிருக்கிறோம். அந்த டிஸ்க்ரீஷன் கூட கொடுக்காமல் ஓடும் வண்டியில் ஏறு, நிற்கும் வண்டியில் ஏறு என்று சொல்வது முறையல்ல.

**திரு. எஸ். ஜே. ராமசாமி :** தலைவர் அவர்களே, இப்போது இந்த எண்ணிக்கையில் வேகமாக ஓட்டிய சர்க்கார் பஸ்களின் எண்ணிக்கையும் அடங்கும் என்று கூறினார்கள். எத்தனை சர்க்கார் பஸ்கள் வேகமாக ஓட்டப்பட்ட எண்ணிக்கையில் அடங்கியிருக்கின்றன என்று அறியலாமா?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** அதைப்பற்றி இப்போது என்னிடத்தில் விவரம் இல்லை. முன்பு பார்த்தபோது 30 பஸ்கள் வரையிலும் ஜூலை மாதத்தில் இருக்கிறது என்ற கணக்கு வந்திருக்கிறது.

**திரு. ரெ. தங்கவேலு :** தலைவர் அவர்களே, ஓவர்லோடு ஏற்றிய பஸ்களுக்கு ஏற்கனவே ஸஸ்பென்ஷன் கொடுக்கப்பட்டு வந்தது. இப்போது அபராதம் கட்டினால் போதும் என்று ஏற்பாடு செய்திருப்பதால்

பெரிய முதலாளிகள் அதிகமாக ஓவர்லோடு ஏற்றுகிருர்கள். ஆகவே மீண்டும் ஸஸ்பென்ஷன் செய்வதே சரி என்று உத்தரவிட அரசாங்கம் யோசிக்குமா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** அந்த விதமான தவறுகள் அதிகமாக நடப்பதாக சர்க்கார் கவனத்திற்கு வந்தால் அப்போது சர்க்கார் பரிசீலனை செய்யும். அந்த மாதிரி புகார்கள் சர்க்காருக்கு வரவில்லை.

**திரு. ஏ. சுவாமிதாஸ் :** ஓவர்ஸ்பீடைப் பொறுத்த அளவில் இப்போது தனியார்கள் ஓட்டுகிற கார்களைப் பற்றிக் கவலைப் படுவதில்லை. பப்ளிக் காரியர்ஸ், டாக்ஸி போன்றவற்றின் மீதுதான் கண்டிப்பாக நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறேம். தனியார் கார்களும் அதிக வேகமாகப் போவதால் அவர்கள் மீதும் நடவடிக்கை எடுக்க அரசாங்கம் முயற்சி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** வேகமாக ஓட்டுகிறவர்களைத் தண்டிக்க எடுத்துக்கொண்ட நடவடிக்கை அல்ல இது. விபத்துக்களை உண்டாக்கக் கூடிய வெகிக்கிள்ஸ் வேகமாக ஓடுகிறதா என்று பார்க்கத் தான். விபத்துக்களை உண்டாக்குவது லாரிகளாக இருக்கிறது. அந்த லாரி களை செக் செய்ய இதைச் செய்தோம். பஸ்ஸஸ், டாக்ஸீஸ் எப்படி இருக் கின்றன. என்ற நிலைமையைப் புரிந்துகொள்ள எல்லாவற்றையும் பரிசீலனை செய்யப்பட்டது. குறிப்பாக லாரிஸ், டாக்ஸீஸ் இவைகளைத் தான் கட்டுப்படுத்தவேண்டும்.

9–00 a.m. **திரு. ம. கமலநாதன் :** தலைவர் அவர்களே, வேகமாகப் போக வேண்டும் என்று பிரயாணிகள் விரும்புகிற இந்தக் காலத்தில், காஸ் ப்ளாண்ட் இருந்த காலத்தில் கொடுத்த பர்மிட்டை வைத்துக்கொண்டு—70 மைலுக்கு $5\frac{1}{2}$ மணி—இன்னும் ஒட்டிக் கொண்டிருக்கிருர்களே, அதை இன்னும் வேகமாக்குவதற்கு அரசாங்கம் ஏதாவது முயற்சி எடுத்துக்கொள்ளுமா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** இது பஸ் ஓட்டுகிறவர்கள் செய்ய வேண்டிய முயற்சி.

**திரு. டி. கார்ச்சா கவுடர் :** பஸ்களில் ஓவர்லோடு ஏற்றுவது என்பது பரவலாகக் காணப்படுகிறது. ஓவர்லோடு ஏற்றும் பஸ்ஸுக்கு இனிமேற்கொண்டு புதிதாக பர்மிட் கொடுக்கக்கூடாது என்று நிரந்தர விதி ஏற்படுத்திஞல் என்ன ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** அந்தவிதி செல்லுபடியாகுமா என்பது சந்தேகம்.

*Motor car (Distribution and Sale) Control*

* 150 *Q.*—Sri RAMA. ARANGANNAL : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the number of cases of infringement of the provisions of the Motor Car (Distribution and Sale) Control Order, 1959, brought to the notice of this Government ;

(*b*) the Firms involved therein ; and

(*c*) the action taken to prevent such infringements ?

The Hon. Sri R. VENKATARAMAN : (*a*) One.

(*b*) No car dealer is involved.

(*c*) One Standard Herald Van was sold by an Electrical Company at Tiruchirappalli four days before the expiry of the prescribed period of two years ; and the details are awaited before addressing the Government of India in the matter.





**திரு. இராம. அரங்கண்ணல் :** என்னுடைய கேள்வியின் முதல் பிரிவுக்கு அமைச்சர் அவர்கள் பதில் அளித்த நேரத்தில், "ஒரே ஒரு புகார் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது" என்று சொன்ஞர்கள். "எந்தெந்த நிறுவனங்கள் அவ்வாறு ஆணையின் ஷரத்துக்களை மீறின ?" என்ற கேள்விக்கு, "ஒன்றும் இல்லை" என்று சொல்லுகிருர்கள். எப்படி இது பொருந்தும் என்று தெரியவில்லை. "எந்த நிறுவனத்தின் மீது புகார் வந்தது" என்பதுதான் என்னுடைய கேள்வியின் நோக்கம். ஒரு புகார் வந்தது என்ருல், எந்தக் கம்பெனியின் மீது அந்தப் புகார் வந்தது ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** கனம் அங்கத்தினர் அவர்கள் தம்முடைய கேள்வியில் " firms involved " என்று குறிப்பிட் டிருக்கிருர்கள். " **firm** " என்னும்போது " **Partnership firm** " ஐத்தான் குறிக்கும். அதஞல், சட்டப்படி பதில் தயாரித்திருக்கிருர்கள். " **firm** " என்று கேள்வியில் குறிப்பிட்டிருப்பதால், அதன்படி பதில் தயாரித்திருக்கிருர்கள். "யார் ?" என்று ஒரே கேள்வியாகக் கேட்டிருந் தால், நாம் அதற்குச் சரியானபடி கண்டுபிடித்துப் பதில் கொடுத் திருப்போம். ஆனல், என்னிடம் கனம் அங்கத்தினர் எதிர்பார்க்கும் விவரம் இருக்கிறது. அதை நான் சொல்லத் தயாராயிருக்கிறேன். பதில் ஏன் அப்படி வந்தது ?" என்று கனம் அங்கத்தினர் கேட்டதற் காகச் சொல்லுகிறேன். கேள்வியிலுள்ள வார்த்தைக்கு ஸ்ட்ரிக்டாக அர்த் தம் செய்து இலாகாவினர் பதில் தயாரிக்கிருர்கள். ஆகவே, கேள்வி கேட்கும்போதே, தெளிவாகவும், குறிப்பாகவும் கேட்டுவிட்டால் நலமாக இருக்கும்.

Mr. SPEAKER : The hon. Member may perhaps be having some ' firm ' in his mind.

**The Hon. Sri R. VENKATARAMAN : The Regional Transport Officer, Tiruchirappalli, has reported that Messrs. Aboorvam Electrical Stores, Tiruchirappalli, sold their Standard Herald Delivery Van (No. MDY 6598) registered on 4th November 1961 to to Messrs. Bell Tobacco Company, Pudukottai, on 30th October 1963.**

அதை இரண்டு மாதங்களுக்கு முன்பே விற்றுவிட்டார்கள். இன்னும் ஒரு கேஸ் விசாரணையில் இருக்கிறது. அதாவது, திருமதி கௌரி குட்டி அம்மாள் என்பவர் ஒரு அம்பாஸடர் காருக்குப் பர்மிட் வாங்கி ரொம்ப நாள் வரையிலும் ரிஜிஸ்டர் செய்யவில்லை. அதற்காகவும் ஒரு கேஸ் தயார் பண்ணியிருக்கிருர்கள். அடுத்து, மூன்ருவது—ஒரு ஹோட்டலுக்குக் கொடுக்கப்பட்டது பற்றியது. அதுதான் கனம் அங்கத் தினர் திரு. இராம. அரங்கண்ணல் அவர்களுடைய மனத்தில் வைத் திருப்பது என்று நினைக்கிறேன். இரண்டு அம்பாஸடர் கார்கள், ஸ்டேட் டாக்ஸி கோட்டாவிலிருந்து, டூரிஸ்ட் டாக்ஸி நடத்துவதற்காக ஒரு ஹோட்ட லுக்குக் கொடுக்கப்பட்டன. அவர்கள் அவற்றை ரிஜிஸ்டர் செய்யாமல் தாங்களே சொந்த உபயோகத்திற்காக வைத்துக் கொண்டிருக்கிருர்களோ என்ற சந்தேகம் இருக்கிறது. அந்த விதமான புகார் பரிசீலனையில் இருக்கிறது.

**திரு. இராம. அரங்கண்ணல் :** சென்னையில் அம்பாஸடர் கார் விற் பதற்கு மூன்று கம்பெனிகள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றன. அதிலே குறிப்பாக இரண்டு கம்பெனிகளைப்பற்றி எந்த புகாரும் வருவது இல்லை. ஒரே ஒரு கம்பெனியைப் பற்றி மட்டும். "இந்த அம்பாஸடர் கார்கள் குறித்த நேரத்தில் வழங்கப்படுவதில்லை? நம்பர் வரிசை மாற்றப்படு கிறது" என்று புகார் வருகிறது. அப்படி ஒரு கம்பெனியின் மீது ஏதாவது புகார் வந்ததா? அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** அந்த விதமான புகார் வர வில்லை. கனம் உறுப்பினர் தனியாக எழுதியனுப்பிஞல் அந்தக் கம்பெனி சம்பந்தமாக விசாரணை செய்ய முடியும்.

**திரு. இராம. அரங்கண்ணல் :** நான் குறிப்பிடுகிற கம்பெனி எது என்பதைக் கனம் தொழில் அமைச்சர் அவர்கள் அறிந்திருப்பார்கள் என்று நினைக்கிறேன்.

**கனம் சபாநாயகர் :** கனம் அமைச்சர், கனம் அங்கத்தினர் இவ்விருவருக்கு மட்டும் தெரிந்திருந்தால் இந்தச் சபையில் உள்ள மற்றவர்களுக்கு தெரிய வேண்டாமா ?

**திரு. இராம. அரங்கண்ணல் :** ஜீவராஜ் மோட்டார்ஸ் என்று ஒரு கம்பெனி இருக்கிறது. அந்தக் கம்பெனியின் மீது ஐம்பதுக்கும் மேற்பட்ட புகார்கள் அரசாங்கத்திற்கு அனுப்பப்பட்டிருக்கின்றன. 1964-ஆம் ஆண்டு, மார்ச் மாதம் 8-ந் தேதி ஒரு புகார் நம்முடைய உள் துறை இலாகாவிற்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அந்தப் புகாரின் மீது நம்முடைய அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்தது என்பதை அறியலாமா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** தயவு செய்து இந்தப் புகாரை எல்லாம் எனக்கு அனுப்பிவைக்கும்படியாகக் கேட்டுக்கொள்ளுகிறேன். அப்பொழுது தான் அதை உடனடியாகக் கவனிக்க முடியும். ஒரு இலாகாவிற்கு வரவேண்டியது வேறொரு இலாகாவிற்குத் தவறாகப் போய் விட்டால் மறுபடி அது அதற்குரிய இலாகாவிற்கு வந்து சேர்வதற்குக் காலதாமதமாகும்.

**திரு. இராம. அரங்கண்ணல் :** இனிமேல் அனுப்புகிற புகார்களை அமைச்சர் அவர்களுக்கு எழுதி அனுப்பலாம். ஆனால், நம்முடைய அரசாங்கத்தின் ஒரு இலாகாவிற்கு ஐம்பதுக்கும் மேற்பட்ட புகார்கள் அனுப்பப்பட்டிருக்கின்றனவே, அவற்றின்மீது என் நம்முடைய அரசாங்க இலாகா சரிவர நடவடிக்கை எடுக்கவில்லை என்பதை நம்முடைய அரசாங்கம் ஆராயுமா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** இது ட்ரான்ஸ்போர்ட் டிபார்ட்மெண்டைச் சேர்ந்தது. அந்த ட்ரான்ஸ்போர்ட் டிப்பார்ட்மெண்ட் ஹோம் செக்ரடரி கீழே இருக்கிறது. அதனால் பல கடிதங்கள் ஹோம் டிபார்ட்மெண்டுக்குப் போய்விடுகின்றன. அந்த இலாகாவிலிருந்து வரக் காலதாமதம் ஆகிறது. அதனால்தான் அந்தந்த இலாக்காவிற்கு எழுதி அனுப்ப வேண்டும். ட்ரான்ஸ்போர்ட் டிப்பார்ட்மெண்டுக்கு எழுதியனுப்பினால் சீக்கிரமாகக் கவனிக்கப்படும்.

**திரு. மீ. கல்யாணசுந்தரம்:** யார் யாருக்கு இந்தக் கார்கள் வழங்கப்படுகின்றனவோ அவர்களே அவற்றை உபயோகிக்கிறார்களா, அவர்கள் வசத்திலேயே அவை இருக்கின்றனவா என்பதை அரசாங்க அதிகாரிகள் அடிக்கடி கண்காணிப்பது உண்டா ? அப்படியானால், அதற்கு என்ன என்ன முறைகள் ஏற்பட்டிருக்கின்றன ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** மக்களை நம்பித்தான் நிர்வாகம் நடத்துவது. புகார் வந்தால் தான் கவனிப்பது. இதைக் கண்காணிப்பதற்காக வீண் செலவு செய்து அதிகாரிகள் போடுவதாக உத்தேசம் இல்லை.

**திரு. மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, தவறான முகவரிக்குக் கடிதம் வந்துவிட்டால் கூட, பக்கத்திலே இருப்பவர்கள் உரிய முகவரிக்கு அனுப்பிவிடுவது வழக்கமாகவும், விரைவு படுத்தக் கூடிய முயற்சியாகவும் இருக்கிறது. அப்படியிருக்க, 1964-ஆம் ஆண்டு தவறிப் போய் வேறொரு இலாகாவிற்குப் புகார் அனுப்பப்பட்டிருக்கிறது. இரண்டு ஆண்டுக் காலமாக அந்த இலாகாவிலிருந்து அந்தப் புகார்கள் இந்த இலாகாவிற்கு மாற்றப்படாததன் காரணம் என்ன ? இனிமேலாவது விரைவு படுத்த முயற்சி எடுக்கப்படுமா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** மாற்றப்பட்டிருக்கும். ஆனால், என்னுடைய கவனத்திற்கோ அல்லது செக்ரடேரியட் லெவலுக்கோ வந்திருக்காது. தவறாக ஒரு இலாகாவிற்கு ஒரு கடிதம் போய்விட்டால்



அது தங்களுடைய இலாகாவைச் சேர்ந்ததா, இல்லையா என்பதைப் பரிசீலனை செய்ய சில சமயங்களில் ஆறு மாதம் கூட எடுத்துக் கொள்வார்கள். அதன் பிறகு அதை யாருக்கு அனுப்பவேண்டுமோ அவர்களுக்கு அனுப்புவார்கள். இதெல்லாம் செக்ரடேரியட் ப்ரொஸீஜர். ஆகவே, அவரவர்கள் எந்த எந்த இலாகாவிற்குச் சம்பந்தமோ அந்தந்த இலாகாவிற்குக் கடிதங்களை எழுதி அனுப்பினால் சீக்கிரமாகக் கவனிக்க முடியும், வேறு இலாகாவிற்குப் போனால் காலதாமதம் ஆகும் என்று சொன்னேன்.

**திரு. இராம. அரங்கண்ணல் :** ஆன் எ பாயின்ட் ஆ∴ப் ஆர்டர், ஸார். நான் இந்தக் கேள்வியைக் கேட்டதனுடைய நோக்கம், "எந்த எந்தக் கம்பெனிகள் இந்த ஊழலில் ஈடுபட்டிருக்கின்றன" என்பதுதான். அதுதான் என்னுடைய கேள்வியின் நோக்கமாகும். ஆனால், இலாகா அனுப்பியிருக்கும் பதிலில், எங்கெங்கே யார், யார் கார் வாங்கி என்ன என்ன செய்தார்கள் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். நான் கேட்ட கேள்விக்கு இலாகாவினர் தயாரித்து அனுப்பியிருக்கும் பதில் பொருத்தமானதா என்பதைக் குறித்து கனம் சபாநாயகர் அவர்கள் தீர்ப்பு வழங்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

Mr. SPEAKER : First of all there is no point of order. But the hon. member can put a supplementary question if he wants.

**திரு. இராம. அரங்கண்ணல் :** எந்த எந்தக் கம்பெனிகள் இந்த ஊழல்களுக்கு இலக்காயிருக்கின்றன என்பது என்னுடைய கேள்வி. யார் யார் எங்கெங்கே விற்றார்கள் என்பது அல்ல. எந்த எந்தக் கம்பெனி என்ற தகவலாவது அரசாங்கத்திடம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** கேள்விக்குரிய பதிலைக் கொடுக்கிறேன். கேள்வி இன்னும் நன்றாகச் சாமர்த்தியமாகப் போடப்பட்டிருந்தால் பதிலும் நன்றாக, சாமர்த்தியமாக வந்திருக்கும்.

(*a*) The number of cases of infringement of the provisions of the Motor Cars (Distribution and Sale) Control Order, 1959, brought to the notice of this Government ?

*A.*—One.

(*b*) The firms involved therein ;

*A.*—No car dealer is involved.

(*c*) The action taken to prevent such infringements ?

*A.*—One Standard Herald Van was sold by an Electrical Company at Tiruchirappalli four days before the expiry of the prescribed period of two years ; and the details are awaited before addressing the Government of India in the matter.

அதனால் கனம் உறுப்பினர் அவர்கள் "எந்தக் கம்பெனி தவறாக கார் விற்றார்கள் ?" என்று கேள்விகேட்டு அதற்குப் பதில் வேண்டுமென்று கேட்டிருந்தால் பதில் கொடுத்திருக்கலாம். "குறிப்பாக ஏதாவது கம்பெனிகள் தவறாகக் கார்கள் விற்றிருக்கிறார்களா ? அவர்கள் மீது புகார்கள் வந்திருக்கின்றனவா ?" என்று கேட்டிருந்தாலும் அதற்கு வேண்டிய பதில் கொடுக்கப்பட்டிருக்கும்.

Mr. SPEAKER : The hon. Member's original question is like that. Therefore, no point of order arises.

The Hon. Sri R. VENKATARAMAN : Sir, I want to give as much information as possible but hon. Members also must assist me by putting proper questions.

## 'இரயில்வே' மேம்பாலங்கள்

*151 கேள்வி.—திரு. எஸ். ஜே. ராமசாமி : கனம் உணவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா :—

(அ) கோடம்பாக்கத்தில் கட்டி முடிக்கப்பட்ட ரயில்வே மேம்பாலத்திற்கான மொத்த மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு ?

(இ) அதில் சென்னை மாநகராட்சியின் பங்குத் தொகையும் ரயில்வே இலாகாவின் பங்குத் தொகையும் முறையே எவ்வளவு ?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) & (*b*) The total estimated cost of the work is Rs. 42·40 lakhs, of which a sum of Rs. 3·40 lakhs being the cost of the Railway portion of the work was met by the Southern Railway and the balance of Rs. 39·00 lakhs, the cost of the road portion, was shared equally by the State Housing Board and the Government.

**திரு. எஸ். ஜே. ராமசாமி :** இந்தப் போக்குவரத்து மேம்பாலத்திற்கு ஆகும் செலவை ரயில்வே நிர்வாகமே ஏற்றுக்கொள்ள இந்த அரசாங்கம் ஏன் முயற்சி செய்யக் கூடாது என்று அறியவிரும்புகிறேன்.

**கனம் திரு. வெ. ராமைய்யா :** இப்போதுள்ள ஏற்பாட்டின்படி லெவல் கிராசிங் பகுதியில் ஆகும் செலவை ரயில்வே இலாகா ஏற்றுக்கொள்ளும். அப்ரோச் ரோடு செலவை சம்பந்தப்பட்ட அதாரிடிகள் தாம் ஏற்றுக்கொள்ளவேண்டும்.

SRI M. S. SELVARAJAN : Is there any phased programme for having such overbridges throughout the States ?

**கனம் திரு. வெ. ராமைய்யா :** பலவிடங்களில் மேம்பாலம் கட்டவேண்டுமென்று திட்டம் இருக்கிறது. நிதி நிலைக்குத் தகுந்த வகையில் இவை அவ்வப்போது பரிசீலனை செய்து எடுத்துக்கொள்ளப்படுகின்றன.

*152 கேள்வி.—திரு. ர. ஜீவரத்தினம் : கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா :—

(அ) இராணிப்பேட்டை, கிருஷ்ணகிரி ரோடில் வேலூர் டவுன் ரயில்வே ஸ்டேஷன் அருகில் உள்ள ரயில் பாதையின் மீது மேம்பாலம் போடுவதற்காக சர்வே செய்யப்பட்டனவா ?

(இ) ஆம் எனில், வேலை எப்பொழுது மேற்கொள்ளப்படும் ?

**கனம் திரு. வெ. ராமைய்யா :** (அ)-வும் (இ)-வும்: வேலூர் நகராட்சியில் 46-ம் எண் தேசிய நெடுஞ்சாலையின் இராணிப்பேட்டை—கிருஷ்ணகிரி சாலையில் 87/1 மைலில் உள்ள இருப்புப்பாதை சாலை சந்திப்பிற்குப் பதிலாக, மேம்பாலம் கட்டும் வேலை நான்காவது ஐந்தாண்டுத் திட்ட வரைவில் சேர்க்கப்பட்டுள்ளது. நான்காவது திட்ட காலத்தில் நிறைவேற்ற வரிசைப்படுத்தியுள்ள முறைக்கேற்பவும், கிடைக்கும் நிதி வசதியைப் பொறுத்தும் அத்திட்ட காலத்தில் இதை நிறைவேற்றுவது பற்றி ஆலோசிக்கப்படும்.

**திரு. ர. ஜீவரத்தினம் :** வேலூர் நகரம் விரிவடைந்து கொண்டே வருகிறது. ஜனத்தொகையும் பெருகி வருகிறது. இங்கே மேம்பாலம் இல்லாத காரணத்தினால் போக்குவரத்து நெரிசல் அதிகமாக இருக்கிறது. நான்காவது திட்டத்தில் எடுத்துக்கொள்ளப்படும் என்றாலும் இதற்கு பிரையாரிடி கொடுத்து, நான்காவது திட்டத்தின் முதல் ஆண்டிலேயே இதை நிறைவேற்றிக்கொடுக்க அமைச்சர் ஆவன செய்வார்களா ?

**கனம் திரு. வெ. ராமைய்யா :** எந்த எந்த இடங்களில் மேம்பாலம் கட்டவேண்டும் என்பதை அந்த அந்த இடங்களில் உள்ள போக்குவரத்து நெரிசல், அவசியம், இவற்றைப் பார்த்து நிர்ணயிப்பார்கள். பிரையாரிடி கொடுப்பது என்பது ராஜ்ய மட்டத்தில்தான் பரிசீலனை செய்யப்பட்டு நிர்ணயிக்கப்படும்.



**புலவர் கா. கோவிந்தன் :** சென்னையில் இருந்து சேலம், கோவை, பங்களூர், பாம்பே முதலிய இடங்களுக்குச் செல்லும் ஒரே ஒரு ரோடு இதுதான். போக்குவரத்து அதிகமாக இருக்கிறது. நிதி வசதி இருந்தால் என்று சொல்லாமல் நிச்சயமாக இந்த மேம்பாலத்தை நிறைவேற்றித் தருவார்களா என்று அறியவிரும்புகிறேன்.

**கனம் திரு. வெ. ராமைய்யா :** நிச்சயமாக எப்படிச் சொல்ல முடியும் ? எல்லா மேம்பாலங்களையும் உடனடியாகக் கட்டித் தரவேண்டும் என்பது தான் என்னுடைய இலாகாவின் நோக்கம். நிதி ஆதாரங்களுக்கு ஏற்ப நாம் வகுத்துக்கொண்டுள்ள பிரையாரிடி லிஸ்ட் அடிப்படையில் ஒவ்வொன்றையும் நிறைவேற்றிக்கொண்டு வருகிறோம்.

**திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் :** நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் பல மேம்பாலங்கள் எடுத்துக்கொள்ளப்படும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், பல என்றால் என்ன என்ன என்று சொல்வார்களா ?

**கனம் திரு. வெ. ராமைய்யா :** மூலக்கேள்வி ஒரு குறிப்பிட்ட இடத்தின் மேம்பாலத்தைப் பொறுத்தது. கனம் அங்கத்தினர் தனியாகக் கேள்வி போட்டால் அவர் கேட்ட விவரங்களைத் தருகிறேன்.

## பாலாற்றுப் பாலம்

*153 கேள்வி.—திரு. ர. ஜீவரத்தினம் :<br>திரு. எஸ். ஜே. ராமசாமி : } கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வேலூருக்கும் காட்பாடிக்கும் இடையில் உள்ள பாலாற்றுப் பாலத்தை அகலப்படுத்தும் உத்தேசம் ஏதேனும் அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கின்றதா ?

(இ) ஆமெனில், அவ்வேலை எப்போது மேற்கொள்ளப்படும் ?

**கனம் திரு. வெ. ராமைய்யா :** (அ) அப்படிப்பட்ட செயற்குறிப்பு எதுவும் அரசாங்கத்தின் பரிசீலனையில் இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. எஸ். ஜே. ராமசாமி :** வேலூரில் உள்ள பாலம் முன்புகூட ஒரு தடவை வீறல் ஏற்பட்டு போக்குவரத்து தடைசெய்யப்பட்டிருந்தது. ஏன் இந்தப் பாலத்தை ரிப்பேர் செய்யக்கூடாது ? இல்லாவிடில் இதை அகலப்படுத்தவாவது இந்த அரசாங்கம் முன்வருமா ?

**கனம் திரு. வெ. ராமைய்யா :** இதுபற்றி சீஃப் என்ஜினியர் அனுப்பியுள்ள குறிப்பு—Though the structure is old, it has withstood the traffic so far-என்பதுதான். அபாயம் இருப்பதாக அவர் கருதவில்லை.

**திரு. ர. ஜீவரத்தினம் :** இந்தப் பாலம் விரிவுபடுத்தப்படாமல் இருப்பதனால் தினசரி விபத்துக்கள் ஏற்படுகின்றன. காட்பாடிக்குச் செல்லவேண்டுமென்றாலும், அங்கிருந்து வரவேண்டுமென்றாலும் ஒரே பாதை நெரிசலாக போக்குவரத்து ஸ்தம்பிக்கிறது. ஆகவே, உடனடியாக விரிவுபடுத்த ஆவன செய்வார்களா ?

**கனம் திரு. வெ. ராமைய்யா :** அரசாங்கத்தின் விருப்பமும் இதை உடனே மேற்கொள்ளவேண்டும் என்பதுதான். ஆனால், நிதி வசதியைப் பொறுத்தே செய்யவேண்டியிருக்கிறது.

## விவசாயிகளுக்குப் பயிற்சி அளிக்கும் திட்டம்

*154 கேள்வி.—திரு. மு. கருணாநிதி : கனம் தல நிர்வாக அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) விவசாயிகளுக்குத் தனிப்பயிற்சி அளிக்கும் திட்டத்தை ஏதேனும் மாநில அரசாங்கங்களுக்கு மத்திய அரசு அனுப்பியுள்ளதா ?

(இ) ஆம் எனில், அத்திட்டத்தின் விவரம் என்ன?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** (அ) ஆம்.

(இ) குடியானவர்களுக்கு விசேஷப் பயிற்சி அளிக்கும்பொருட்டு இந்திய அரசு கீழ்க்கண்ட திட்டங்கள் பற்றி செயற்குறிப்பு தெரிவித்துள்ளது—

(i) தேர்ந்தெடுக்கப்பட்ட குடியானவர்களுக்கு(கிராம சகாயக்குழுக்களுக்கு) கழனிகளில் விசேஷப் பயிற்சி அளித்தல் : குடியானவர்களுக்குச் சிறப்புப் பயிற்சி அளிக்கும் நோக்கத்துடன், தேர்ந்தெடுக்கப்பட்ட கிராம சேவக் பயிற்சி நிலையங்கள், வேளாண்மைக் கல்லூரிகள், அரசாங்கப் பண்ணைகள் முதலியவற்றில் குடியானவர் பயிற்சிப் பிரிவுகள் இத்திட்டத்தின் கீழ் அமைக்கப்படும். பயிற்சிக் காலஅளவு 10 முதல் 15 நாட்களாக இருக்கும். ஒவ்வொரு பயிற்சித் தொகுதியிலும் ஏறத்தாழ 40 குடியான வர்கள் இருப்பர். இதற்கு வேண்டிய கூடுதல் தொகை, வேளாண்மை வேலைத் திட்டங்களுக்கு ஒதுக்கப்படும் அதிகரித்த நிதி வசதியிலிருந்து பெறப்படும்.

(ii) இளங் குடியானவர்களுக்குப் பயிற்சி அளிக்கும் திட்டம் : 18 முதல் 35 வயது வரையுள்ள இளம் குடியானவர்களுக்குப் பயிற்சி முகாம்கள் இத் திட்டத்தின்கீழ் கிராம வளர்ச்சிப் பயிற்சி நிலையங்களில் அமைக்கப்படும். ஒவ்வொரு பயிற்சி முகாமும் 15 நாட்கள் நடைபெறும். அதில் ஒவ்வொன்றிலும் ஏறக்குறைய 40 பேர் இருப்பர். இதில் பயிற்சி பெறுவோர் பயிற்சிச் செலவைத் தாமே கொடுப்பர். எனவே இத்திட்டம் அரசாங்கத்துக்குச் செலவுப் பொறுப்பில்லாத திட்டமாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

**திரு. மு. கருணாநிதி :** இந்தத் திட்டம் மேற்கொள்ளப்பட்டு நடைமுறையில் இருக்கிறதா ? ஆம் என்றால், எத்தனை குடியானவர்களுக்கு இதுவரை பயிற்சி அளிக்கப்பட்டிருக்கிறது ?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** மாநில சர்க்கார் அதை ஏற்றுக் கொள்ளவில்லை. திட்டத்தின் முதல் பகுதியையாவது ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று வற்புறுத்தியதற்கு டைரக்டர் ஆ·ப் அக்ரிகல்சரின் பரிசீலனைக்கு அனுப்பியிருக்கிறோம். இரண்டாவதைப் பொறுத்தவரையில் —அவர்களே தங்கள் செலவை ஏற்றுக்கொள்ளச் செய்வது—நடைமுறையில் சாத்தியம் இல்லை, அப்படி யாரும் வரமாட்டார்கள் என்பதனால் ஏற்றுக் கொள்ளவில்லை.

**திரு. மு. கருணாநிதி :** இத்திட்டத்தை ஏற்றுக்கொள்ளாததற்குக் குடியானவர்களே செலவை ஏற்றுக்கொள்ளுவது சாத்தியமில்லை என்ற ஒரு காரணம் தானா ? அல்லது, அந்தத் திட்டமே அடிப்படையில் ஒழுங்காக நடைபெறும் என்ற நம்பிக்கை இல்லாததுதானா ?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** விவசாயக் கல்லூரி, விவசாயப் பண்ணை ஆகியவற்றில் இடவசதி இருக்காது, பதினைந்து நாட்கள் பயிற்சி என்பது திட்டவெற்றிக்கு சாத்தியம் இல்லாததும் ஆகும்.

**திரு. சா. கணேசன் :** இது செய்யப்படும்பொழுது பிளாக் வாரியாகவோ, தாலூகா வாரியாகவோ அல்லது ஜில்லா வாரியாகவோ பயிற்சிக்குரிய மாணாக்கர்களைத் தெரிந்தெடுப்பதில் வரையறைகள் செய்யப்படுமா, இல்லாவிட்டால் பரவலாக எல்லா பிளாக்குகளிலும் உள்ளவர்களுக்கும் இந்தப் பயிற்சி கிடைக்கும்படியான முறையிலே வரையறை செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** இன்னும் இந்தத் திட்டமே ஏற்றுக் கொள்ளப்படவில்லை என்று பதிலளித்தேன். நம்முடைய சர்க்காரிலிருந்து மத்திய சர்க்காருக்கு எழுதும்பொழுது கனம் அங்கத்தினருடைய ஆலோசனைகளையும் கலந்துகொள்ளலாம்.



**திரு. முனு ஆதி :** மத்திய சர்க்காருடைய திட்டத்தை மாநில சர்க்கார் ஏற்றுக்கொள்ளாத நிலையில் இருக்கிறது என்று சொன்னார்கள். அதற்கான காரண காரியங்களையும் மத்திய சர்க்காருக்கு, மாநில சர்க்கார் அறிவித்து இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** எல்லாக் காரணங்களும் அறிவிக்கப் பட்டிருக்கின்றன.

**திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, இந்தத் திட்டங்களை மாநில அரசு நிறைவேற்றுகின்ற அடிப்படையில் மத்திய அரசாங்கம் இதற்கு உதவி செய்ய முன்வந்திருக்கிறதா ? மத்திய அரசாங்கம் செய்யும் உதவி மாநில அரசு ஏற்றுக்கொள்ளக்கூடிய தன்மையில் இருக்கிறதா ?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** இன்கிரீஸ்டு அலக்கேஷன் ஆ·ப் ·பண்ட்ஸ்லிருந்து (1964–65) வேண்டுமானால் செலவு செய்துகொள்ளலாம் என்று மத்திய சர்க்கார் ஆலோசனை கூறியிருக்கிறார்கள். ஆனால், இதற்கு இட வசதி வேண்டுமென்பதையும், இதன்மூலம் தரப்படுகின்ற அறிவை விவசாயிகளால் பெற்றுக்கொள்ள முடியுமா என்பதையும் கனம் அங்கத்தினர் அறிவார்கள் என்று நினைக்கிறேன்.

**திரு. சா. கணேசன் :** இந்தத் திட்டத்தின் விவரங்களைச் சட்டசபை உறுப்பினர்களுக்குக் கொடுக்கும்படி ஆணையிடுவார்களா ? அல்லது வேறு எங்கே கிடைக்கும் என்ற விவரத்தையாவது தெரிவிப்பார்களா ?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** திட்டத்தைப்பற்றி விளக்கமாகக் கூறினேன்.

MR. SPEAKER: In his answer to the main question the Hon. Minister gave full information. If necessary, the Hon. Minister may see that something is done to publish the details for the benefit of the Members.

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** திட்டம் இன்னும் பூரணமாக ஏற்றுக்கொள்ளப்படவில்லை. இந்த நிலையில் சர்க்குலேஷன் செய்வது சரியல்ல என்று நினைக்கிறேன்.

MR. SPEAKER: If the hon. Member wants to study, the details may be published. People also may read and help the Government.

### *Financial aid for Tamil publications.*

* 155 *Q.*—SRI V. SANKARAN: Will the Hon. the Chief Minister be pleased to state :—

(*a*) whether the Government have proposed to launch any scheme for giving financial aid for publications in Tamil of permanent value ; and

(*b*) if so, the details thereof ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) & (*b*) Yes. The Government have taken a decision to grant financial assistance for publication of valuable books, translations, etc., in Tamil. The books should preferably be on topics not so far dealt with adequately or satisfactorily. Rules for the grant of financial assistance have not yet been finalised.

**திரு. வை. சங்கரன் :** இது குறிப்பாக என்ன என்ன பாடங்களுக்கு என்று வரையறுக்கப்பட்டிருக்கிறதா ? இந்த நிதி உதவி அளிக்கப்படும்

புத்தகங்களைக் கல்லூரிகளிலும், பள்ளிகளிலும் பாடப் புத்தகங்களாக வைத்துக்கொள்வதற்கு முயற்சி எடுக்கப்படுமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** விதிகள் தயாரிக்கப்படவில்லை என்று கூறினேன்.

Sri M. S. SELVARAJAN : Will the Government give this financial aid directly or will it be channelised through the Universities ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : There is no idea of channelising through Universities.

**திரு. கரு. சீமைச்சாமி :** சிறந்த தமிழ் நூல்கள் தேங்கிக் கிடக்கின்றன என்ற விவரம் அரசாங்கத்தினுடைய கவனத்திற்கு வந்ததா ? அப்படித் தேங்கிக் கிடப்பதற்குப் புத்தகங்களினுடைய விலை அதிகமாக இருக்கிறது என்பது காரணமா அல்லது வேறு என்ன காரணங்கள் என்பதை கனம் முதலமைச்சர் அவர்கள் சொல்வார்களா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அரசாங்கம் வெளியிட்டு இருக்கின்ற சில நூல்கள்கூட விற்கப்படாமல் இருக்கின்றன. ஆனால், விற்கப்படாமல் இருப்பதற்கு விலை அதிகம் என்பதல்ல காரணம். நூல்களை வாசிக்கக் கூடியவர்கள் அக்கறை எடுத்துக்கொள்ளவில்லை என்பதுதான்.

**திரு. இரா. நெடுஞ்செழியன் :** தனிப்பட்டவர்கள் எழுதியுள்ள புத்தகங்களைத் தேர்ந்தெடுத்து அவற்றிற்கு உதவி செய்கின்ற முறை கையாளப்பட்டு வருகிறதா ? அல்லது சிறந்த முறையில் எழுதக்கூடியவர்கள் யார் என்பதைக் கண்டறிந்து அவர்களுக்கு உதவி வழங்குவதன்மூலம் புத்தகங்கள் வெளியிடப்படுகின்றனவா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இதுவரை வெளிவராத விஷயங்கள் பற்றி நூல்கள் வெளிவரவேண்டும். அதை ஊக்குவிக்கவேண்டும் என்பது தான் அடிப்படையான கருத்து.

**திரு. மீ. கலியாணசுந்தரம் :** இந்த உதவிக்குரிய வெளியீடுகளின் தரத்தை நிர்ணயம்செய்து, இந்த மாதிரியான வெளியீடுகள்தான் வரவேண்டும் என்பதைத் தெரிவிப்பதற்கு என்ன வழிவகைகள் செய்யப்படும் ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இதற்கு ஒரு ஆலோசனைக் குழு அமைக்கப்படும். "டைரக்டர் ஆஃப் டமில் டெவலப்மெண்ட்" தான் அதற்கு "எக்ஸ்-அபீஷியோ சேர்மன்". டாக்டர் எம். ராஜமாணிக்கம், திரு. வேணுகோபால், திரு. சச்சிதானந்தம் பிள்ளை, திரு கே. வி. ஜெகந்நாதன், திரு. எம். பி. பெரியசாமித்தூரன் ஆகியோர் இதில் இருப்பார்கள்.

**திரு. இராம. அரங்கண்ணல் :** 1952-ல் கவியரசு பாரதியைப்பற்றி வெளிவந்த 25 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள 15 ஆயிரம் புத்தகங்கள் இன்னும் விற்காமல் இருக்கின்றன என்று பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டி எடுத்துச் சொல்லியிருந்ததே, அதைப்பற்றி ஏதாவது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அதைப்பற்றித் தனியாகக் கேள்வி வேண்டும். என்னிடம் இப்பொழுது தகவல் இல்லை.

**திரு. கரு. சீமைச்சாமி :** அரசாங்கம் அச்சு அடித்து வெளிவரும் புத்தகங்கள் நிறையத் தேங்கிக் கிடக்கின்றன என்று சொன்னார்கள். அவற்றைக் கல்லூரிகளுக்கும், பள்ளிகளுக்கும் கொடுத்து, அங்குள்ள மாணவர்கள் படிக்கிற முறையில் கட்டாயமாகக் கொடுப்பதற்கு அரசாங்கம் ஏதாவது ஏற்பாடு செய்திருக்கிறதா ?



**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** நூலகங்கள் எல்லாம் இந்த நூல்களை வாங்கிக்கொள்ள வேண்டுமென்று கூறியிருக்கிறோம். சில நூலகங்கள் நல்ல புத்தகங்களை வாங்கி வைப்பதில் அக்கறை காட்டுவதில்லை என்பது ஒரு குறை. அவர்கள் கமிஷன் கேட்கிறார்கள். 10 சதவீதம் அல்லது 25 சதவீதம் கொடுக்க வேண்டுமென்று கேட்கிறார்கள். ஆகவே, அவர்களும் இதில் எல்லாம் அக்கறை எடுத்துக்கொள்ள வேண்டும். இனி நூலகங்கள் அதிகமாக ஏற்படுத்திக்கொண்டிருக்கிற இந்த நேரத்தில் நல்ல முறையில் இதையெல்லாம் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்பதை வற்புறுத்திச்சொல்ல விரும்புகிறேன்.

### குழந்தைகளுக்கான சிறந்த நூல்களுக்கு மத்திய அரசாங்கப் பரிசு.

*156 கேள்வி.—**திரு. கரு. சீமைச்சாமி :** கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) குழந்தைகளுக்காக வெளியிடும் சிறந்த புத்தகங்களுக்கு டெல்லி அரசாங்கம் பரிசு கொடுக்கிறதா ?

(இ) ஆம் என்றால், விவரம் என்ன ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (*a*) Yes.

(*b*) Prize competitions for Children's literature are conducted by the Government of India from time to time after giving due publicity. Authors and Publishers, who desire to compete for the prize, should submit their books or manuscripts suitable for children to the officer notified for the purpose. Prizes are awarded by the Government of India to the authors of books, which in their opinion, are of outstanding merit. The amount of each prize is Rs. 1,000. The number of prizes to be awarded in each competition and other details of the scheme will be announced by the Government of India at the appropriate time. The competition is open to all citizens of India.

**திரு. கரு. சீமைச்சாமி :** தமிழகத்திலே உள்ள சிறந்த எழுத்தாளர்களுக்கு அரசாங்கம் ஏதாவது உதவி செய்கிறதா ? அவரவர்கள் தாங்களே கையால் எழுதிய புத்தகங்களை அரசாங்கமே அச்சடித்துக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யுமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அரசாங்கம் என்ன என்ன நூல்களைத் தாங்களே பிரசுரிக்கலாம் என்று கருதுகிறார்களோ அவற்றைப் பிரசுரிக்கிறார்கள். சிறந்த குழந்தை நூல்களுக்கு, பாராட்டுதல், பரிசு வழங்கப்படுகிறது. தமிழகத்திலே குழந்தைப் பாக்களைப் பொறுத்தவரையில், "புலவர் மகன்", "எங்கள் தோட்டம்" என்ற நூல்களுக்கு எல்லாம் பரிசுகள் வழங்கப்பட்டிருக்கின்றன.

**புலவர் கா. கோவிந்தன் :** தலைவரவர்களே, சிறு குழந்தைகள் விரும்பிப் படிக்கக்கூடிய முறையிலே, இளைஞர் கலைக் களஞ்சியம் ஒன்று வெளியிடுவதற்கு அரசாங்கம் வழிவகை செய்திருக்கிறதா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அதைப்பற்றி இப்பொழுது என்னிடம் தகவல் இல்லை.

**திரு. வை. சங்கரன் :** இதற்கு டில்லி அரசாங்கம் பரிசு கொடுக்கிறார்கள். நம்முடைய அரசாங்கமும் இதைப்போன்ற புத்தகங்களுக்கு ஊக்கம் அளிக்க நடவடிக்கை எடுக்குமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இந்திய அரசாங்கம் பரிசு கொடுக்கிறது. அதற்கு இந்த அரசாங்கத்தின் மூலமாகத்தான் நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டுவருகிறது.

[2nd March 1966

**திரு. சா. கணேசன் :** சிறுவர் கலைக் களஞ்சியம் (சில்ரன்ஸ் என் சைக்ளோப்பிடியா) தமிழ் வளர்ச்சிக் கழகத்தால் தயாரிக்கப்பட்டு வருகிறது என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ? அதற்கு அர்சாங்கம் எவ்வாறு உதவி செய்து வருகிறது ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அது அரசாங்கத்திற்குத் தெரியும். என்ன உதவி செய்யக்கூடும், என்ன உதவி செய்யமுடியும் என்பதெல்லாம் முடிவு செய்யப்பட்டிருக்கிறது. அதைப்பற்றிய விவரங்களுக்குத் தனியாகக் கேள்விபோட்டால் விவரங்கள் சொல்லலாம்.

MR. SPEAKER : Questions are over.

[*Note*.—**An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.**]

## II.—GENERAL DISCUSSION ON THE BUDGET FOR 1966-67—*cont.*

*** திரு. கேஆர். ஆர்எம். கரியமாணிக்கம் அம்பலம் :** மதிப்புக்குரிய சபாநாயகர் அவர்களே, இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையின் மீது என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

9-30 a.m. விவசாயத்திற்கு மிக மிக முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது என்று கூறப்படுகிறது. அமைச்சர்கள் பேசும்போதெல்லாம் விவசாயத்திற்காக ஏராளமாகச் செலவு செய்கிறோம் என்று கூறுகிறார்கள். ஆனால் எங்கள் பிராந்தியமான கிழக்கு இராமநாதபுரம் பகுதியில் ஒவ்வொரு வருஷமும் தண்ணீர்ப் பஞ்சம் ஏற்பட்டு பஞ்சத்தால் விவசாயிகள் வாடி வதங்கிக்கொண்டிருக்கிறார்கள். அங்கு ஒரு தண்ணீர் இரண்டு தண்ணீர்ப் பஞ்சந்தான் ஏற்படுகிறது. அதனால் அங்கே நெல் சாவியாகப் போகும் நிலைமையைப் பார்க்கிறோம். அதே நேரத்தில் பக்கத்தில் இருக்கிற மதுரை ஜில்லா போன்ற இடங்களில் இரண்டு போகம், மூன்றுபோகம் சாகுபடி செய்வதற்குத் தண்ணீர் கொடுப்பதையும் பார்க்கிறோம். எங்கள் பகுதியிலே ஒரு தண்ணீரே கிடைக்காமல் இருக்கும்போது அங்கு மூன்று போகம் விளைவிக்கத் தண்ணீர் கொடுக்கிறார்கள். அமைச்சர்கள் நினைத்தால் கிழக்கு இராமநாதபுரம் பகுதிக்குத் தண்ணீர் கொடுக்கலாம். அவர்களுக்கு, தண்ணீர் கொடுக்க மனம் இல்லையென்றுதான் தெரிகிறது.

**கனம் திரு. பூ. கக்கன் :** நல்ல மனது இல்லாமலா வைகை அணைக் கட்டைக் கட்டி தண்ணீர் கொடுத்துக் கொண்டிருக்கிறோம்.

**திரு. கேஆர். ஆர்எம். கரியமாணிக்கம் அம்பலம் :** வைகை அணைக் கட்டுத் தண்ணீர் திருமங்கலத்திற்கும் மதுரை ஜில்லாவுக்கும்தான் போகிறது. இராமநாதபுரம் ஜில்லா எங்கே பயன்படுகிறது ? மேலூர் பகுதிக்கு அதிகமாகத் தண்ணீர் போகிறது. அங்குதான் எக்ஸ்டன்ஷன் கிடைக்கிறது. அமைச்சர் அவர்கள் மேலூர் பகுதியைக் கவனிப்பது மாதிரி திருவாடானை, திருப்பத்தூரைக் கவனித்தால் நாங்கள் நல்ல நிலைக்கு வந்து விடுவோம். உடனடியாக ஒரு கால்வாயை வெட்டினால் தண்ணீர் கிடைக்கக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. மதுரை ஜில்லா கீழையூரிலிருந்து மலம்பட்டி வரை ஒரு கால்வாய் இரண்டேமுக்கால் மைல் தூரம் வெட்டினால், அந்தத் தண்ணீர் உப்பாற்றில் வந்து எரி கண்மாய்களுக்கு வந்து சேரும். அதன் சருக்கை வழியாக மணிமுத்து ஆற்றில்போய் திருவாடானை தாலூகா பூராவுக்கும் தண்ணீர் கிடைக்கும் அந்த ஏற்பாட்டைச் செய்யவேண்டும். விவசாயத்தைப் பெருக்கவேண்டுமென்று சொல்லி விட்டால்மட்டும் போதாது. நிச்சயமாகத் தண்ணீர் கொடுக்க முன் வரவேண்டும்.

நிலத்திற்கு உச்ச வரம்பு வைத்திருப்பதுபோல் தண்ணீருக்கும் உச்ச வரம்பு வேண்டும். தண்ணீரில் பாகுபாடு ஏன் ? மழை பெய்கிறது, ஆற்றிலிருந்து தண்ணீர் விடுகிறார்கள். எல்லா விவசாயிகளுக்கும் ஒரே மாதிரித் தண்ணீர் கொடுக்கவேண்டும். கிழக்கு இராமநாதபுரம் பகுதிக்கு ஒரு தண்ணீருக்காவது ஏற்பாடு செய்வதுபற்றி இந்த பட்ஜெட் விவாதத்திற்குப் பதில் சொல்லும்போது கூற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



2nd March 1966] [*திரு. கேஆர். ஆர்எம். கரியமாணிக்கம் அம்பலம்*]

கேரள, ஆந்திர, மைசூர் சர்க்காருடன் எல்லாம் தண்ணீர் பற்றிப் பேசிக்கொண்டே இருக்கிறார்கள். அங்கு இருப்பதும் காங்கிரஸ் அரசாங்கங்கள்தான், இங்கிருப்பதும் காங்கிரஸ் அரசாங்கந்தான். இரண்டு பேரும் சேர்ந்து தண்ணீரைப்பற்றி ஒரு முடிவு செய்து கொள்வதிலே என்ன கஷ்டம் இருக்கிறது. அப்படியே இருந்தாலும் சென்ட்ரல் கவர்ன்மெண்டில் எடுத்துச் சொல்லி, அவர்கள் இதிலே தலையிடுவதன் மூலமாக நிவாரணத்தைத் தேடலாம். ஏராளமான தண்ணீர் கடலில்போய் விழுந்தாலும் பரவாயில்லை என்று நிலைமை இருக்கிறதே தவிர, மற்ற மாகாணங்களுக்கு அந்தத் தண்ணீரைக் கொடுக்கக்கூடிய நிலை இல்லை. இந்த மாதிரி நிலைமையில் எப்படி விவசாயத்தைப் பெருக்கமுடியும். எல்லா நதிகளையும் தேசிய மயமாக்கவேண்டும். அந்த மாதிரிச் செய்தால்தான் தண்ணீர்ப் பஞ்சம் போகும். விவசாயம் உண்மையிலேயே பெருக வேண்டுமென்றால் தண்ணீர்க் கஷ்டம் நீங்கினால்தான் முடியும். அதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

விவசாயத்திற்கு ரசாயன உரம் ரொம்ப முக்கியமானது. கிழக்கு இராமநாதபுரத்தில் அதிர்ஷ்டவசமாக ஒரு மழை பெய்து இரண்டாம் போகம் சாகுபடி செய்கிறார்கள். இந்த நிலையில் உரம் கிடைக்கவில்லை. மந்திரியிடம் மூன்று முறைகள் சொல்லியாயிற்று. உரம் வரவில்லை என்று சொல்கிறார்கள். உரம் கிடைக்காததன் காரணமாகப் பயிர் மோசமாகி விடும் நிலை இருக்கிறது. முதலில் உரம் கிடைக்க ஏற்பாடு செய்யவேண்டும். உரத்தைக் கோவாப்பரேடிவ் சொஸைடிகள் மூலம் கொடுக்கிறார்கள். அவர்கள் ஒழுங்காகவே உரத்தைக் கொடுப்பதில்லை. கோவாப்பரேடிவ் சொஸைடிகள் எப்படி இருக்கின்றன என்பதைப் பற்றி இந்த மன்றத்தில் நிறையப் பேசியிருக்கிறார்கள். பெரும்பகுதி மோசடியாகவும், கொள்ளையடிப்பதாகவுந்தான் இருக்கின்றன. உரம் வருவதே போதாமல் இருக்கிறது, அதோடு வரக்கூடிய உரம் கூட விவசாயிகளுடைய கையில் சேரும் அளவுக்கு நிலைமை இல்லை. ரசாயன உரத்திற்கு வழி செய்யாது எவ்வாறு உற்பத்தியைப் பெருக்கமுடியும். உரத்தை அதிக விலைக்கு விற்பவர்களைக் கண்டுபிடித்துச் சரியான முறையில் கேஸ் போடுவதில்லை. போலீஸ் அதிகாரிகளைக் கேட்டால் இந்த மாதிரிக் கேஸ்கள் எல்லாம் போடுவது கஷ்டமாக இருக்கிறது என்று சொல்கிறார்கள். உரமானது விவசாயிகளுக்குப் போய்ச்சேர வழிசெய்தால்தான் விவசாயத்தை அபிவிருத்தி செய்யமுடியும்.

மண் தரம் குறைந்துகொண்டே வருகிறது. எந்தெந்த உரத்தை எந்தெந்த நிலத்தில் போட்டால் பயன் உள்ளதாக இருக்குமென்று கண்டுபிடிக்கவேண்டும். ஒவ்வொரு நிலத்தின் தரத்தையும் பார்க்கவேண்டும். பக்கத்தில் பக்கத்தில் உள்ள நிலம்கூட வித்தியாசமாக இருக்கிறது. மண் வளப் பரிசோதனையைத் தனித் தனியாக ஒவ்வொரு வருஷமும் செய்யவேண்டும். அதற்குத் தகுந்த யோசனைகளை விவசாயிகளுக்குக் கூறி விவசாயத்தைப் பெருக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயிகளுக்கு விவசாய இன்ஷூரன்ஸ் திட்டம் இன்னும் கொண்டு வரவில்லை. இதைப்பற்றி எத்தனையோ முறை சொல்லியாயிற்று. விவசாயத்தை அதிகமாகப் பெருக்கவேண்டுமென்று சொல்லுகிறபோது விவசாய இன்ஷூரன்ஸ் திட்டம் இல்லையென்று சொன்னால் என்ன பிரயோசனம் ? இந்த பட்ஜெட்டில் விவசாய இன்ஷூரன்ஸ் திட்டத்தைப்பற்றிக் கூறுவார்கள் என்று எதிர்பார்த்தோம். விவசாய இன்ஷூரன்ஸ் திட்டத்தை அவசியமாகக் கொண்டுவரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது எங்கு பார்த்தாலும் லஞ்சம் அதிகமாக இருக்கிறது. லஞ்சம் கொடுக்காமல் ஒன்றுமே செய்யமுடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. சட்டசபை மெம்பர்களாக இருந்தாலும்கூட வேலை நடக்கவேண்டுமென்றால் லஞ்சம் கொடுக்கவேண்டுமென்ற நிலைதான் இருக்கிறது. வாடிக்கையாக அவர்கள் வாங்கி வாங்கி அந்த மாதிரி நிலைமை ஏற்பட்டிருக்கிறது. முன்பு ஒரு பக்கம் லஞ்சம் வாங்கிக் கொண்டிருந்தார்கள். இப்போது ஒரு மனுதார், எதிர் மனுதார் இருவரிடமுமே பணம் வாங்குகிறார்கள். அதை வாங்காது எந்தப் பேப்பரையும் பரிசீலனை செய்வதில்லை. சுபீட்சமான நிலை வரவேண்டுமென்றால் லஞ்சப் பழக்கம் அறவே போகவேண்டும்.

பொதுப்படையாக போலீஸ் டிப்பார்ட்மெண்ட் இந்த விதத்தில் ரொம்ப மோசமாக இருக்கிறது. எந்த ஸ்டேஷனை எடுத்துக்கொண்டாலும் பெரும் பகுதிகளில் இரண்டு பக்கங்களில் இருந்தும் பணம் வாங்கும் ஸ்டேஷன்கள் தான் அதிகமாக இருக்கின்றன.

**கனம் திரு. பூ. கக்கன் :** அப்படி ஒரு ஸ்டேஷன் இரண்டு பக்கங்களிலும் பணம் வாங்குகிற ஸ்டேஷன் இருக்கிறது என்று சொன்னால் அது எது, யார் யார் வாங்கினார்கள் என்பதை அங்கத்தினர் விவரமாகச் சொன்னால் அதுபற்றி விசாரிக்கலாம். ஆனால் ஏதோ தேர்தல் பிரசாரத்திற்காக இங்கு சட்டசபைக்கு வந்து எதை வேண்டுமானாலும் பேசலாம் என்று பேசுவது நல்லதல்ல.

"சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க
சொல்லிற் பயனிலாச் சொல்".

என்று இங்கேயே எழுதிப் போட்டிருக்கிறது. விவரமாகச் சொன்னால் நாங்கள் ஆக்‌ஷன் எடுக்கமுடியும். அப்போதுதான் நடவடிக்கைகள் எடுக்க முடியும். ஏதாவது பேசிக்கொண்டுபோனால் என்ன அர்த்தம் ?

**திரு. கே.ஆர். ஆர்எம். கரியமாணிக்கம் அம்பலம் :** ஒன்றிரண்டு இடங்களில் இந்தமாதிரி இருந்தால் குறிப்பாகச் சொல்லலாம். எல்லா இடங்களிலும் இப்படியாகிவிட்டதே எங்கு லஞ்சம் வாங்காத நிலைமை இருக்கிறது? ஒன்றிரண்டு இடங்களை எடுத்துச் சொன்னால் அமைச்சர் அவர்கள். . . :

**MR. SPEAKER :** The hon. Member should mention specific cases. Otherwise there is no use in making such a general allegation.

**திரு. கே.ஆர். ஆர்எம். கரியமாணிக்கம் அம்பலம் :** ஒன்றிரண்டு இடங்களை நான் குறிப்பிட்டாலும் அமைச்சர் அவர்கள் தலையிட்டு அவர்களைத் திருப்பிப்போடு என்று சொல்கிறார்கள். இராமநாதபுரம் ஜில்லாவில் அந்த மாதிரி நடந்திருக்கிறது. வேண்டுமானால் சொல்கிறேன். என் தொகுதியில் தேவகோட்டையில் ஒரு சப் இன்ஸ்பெக்டர் பற்றி டி. எஸ். பி.யிடம் ரிப்போர்ட் செய்து மாற்றினால் அவரை திருப்பிப்போடு என்று அமைச்சர் அவர்கள் செய்திருக்கிறார்கள் என்று தெரிகிறது. மாற்றினால் அங்கு திருப்பிப்போடவேண்டுமென்று சொல்கிறார்கள். டி. எஸ். பி. பார்த்து, தப்பு செய்திருக்கிறார் என்று மாற்றினால் அங்கேயே அவரைப் போட வேண்டுமென்று அமைச்சர் அவர்கள் வற்புறுத்துகிறார்கள். (**மணியடிக்கப்பட்டது**).

* **திரு. எஸ். ராமசாமி நாயுடு :** கனம் சபாநாயகர் அவர்களே, அரசாங்கம் வரவு செலவுத் திட்டத்தைச் சமர்ப்பிக்கும்போது சிலர் பொதுவாக அரசாங்கத்தைக் குறை கூறுவதும், பலர் தங்கள் தொழில்களில் நடக்க வேண்டிய பல விஷயங்கள் பற்றிப் பேசுவதும் வழக்கமாக இருந்து வருகிறது.

"நாலாறும் ஆறுக நனிசிறிதாக—எப்புறனும்
மேலாறும் மேலுறை சோரும்—வீடு."

என்ற விதத்தில் காங்கிரஸ் மருமகள் குடித்தனம் வைக்கப்பட்டாள். தன்னுடைய திறமையால் நல் முறையில் நடத்தி வருவதைப் பார்க்கிறோம். ஊர் புகழ, உலகம் புகழ தன் வாழ்க்கையை நடத்தி வருகிறது காங்கிரஸ். இதைக் கண்டு பொறுக்கமாட்டாது வேறு அம்சங்களில் குறை சொல்வதற்கு இல்லாமல் பொதுவாக ஊர் புகழுகிறது என்று ஆத்திரப்பட்டு மாமியார் மருமகளை வைவதுபோல் இங்கு சில மாற்றுக் கட்சிக்காரர்கள் வைவதைப் பார்க்கிறோம். சோறு குழைந்து விட்டது, பதார்த்தம் வேகவில்லை. குழம்பிற்கு உப்பு, காரம் போட விட்டு விட்டது என்று சொல்வதற்கில்லை. நல்ல முறையில் இன்னார் இனியார் என்ற பாரபட்சமின்றி பரிமாறப்பட்ட விருந்தை நன்றாகப் புசித்து விட்டு மாமியார் மருமகளைக் குறை கூறுவதுபோல் குறிப்பாக எதுவும் சொல்ல முடியாது பொதுவாக பலபடியாகத் தோன்றியதுபோல் குறை கூறி வருவதைப் பார்க்கிறோம். வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் இந்த நேரத்தில் நாம் கவனிக்கவேண்டிய விஷயங்கள் என்ன என்பதை மறந்து





விட்டு சர்க்கார் செய்த சில காரியங்களையும், செய்யாமல் இருக்கும் சில காரியங்களையும் சொல்லிக்கொண்டு வருகிறார்கள். மிகக் கஷ்டமான நிலையில் ஆளும் கட்சி அரசாங்கத்தை ஏற்றுக்கொண்டு திறமையாக ஆட்சி புரிந்து வருகிறார்கள் என்பது எல்லா அங்கத்தினர்களுக்கும் உள்ளுக்குள்ளே நன்றாகப் புரிந்திருக்கும். ஒருவர் பேசும்போது 18 ஆண்டு காலமாக சர்க்கார் விவசாயிகளுக்கு என்ன செய்திருக்கிறார்கள் என்று ஒரு கேள்வியைக் கேட்டார். அவர் ஒரு விவசாயி என்பதை நான் அறிவேன். இந்த 18 ஆண்டு காலத்தில் விவசாயிகளுடைய நிலை எந்த அளவிற்கு உயர்ந்திருக்கிறது என்பது தெருவில் போகும் ஒரு சாதாரண மனிதனுக்குக் கூட தெரியும். விவசாயிகளின் நிலை நன்கு வளர்ந்திருக்கிறது. ஏக்கர் 200 ரூபாய் பெறுமானமுள்ள நிலங்கள் எல்லாம் இன்று ஆயிரம் ரூபாய்க்கு விற்கப்படுகிறது. அப்படியிருந்தும் விற்பார் இல்லை என்ற நிலை இருப்பதை அறிகிறோம். மக்களின் வாழ்க்கைத்தரம் உயர்ந்திருக்கிறது. ஊர் தோறும் ஆரம்பப்பள்ளிகள், பக்கத்தில் உயர்நிலைப் பள்ளிகள் கல்லூரிகள், தொழில் பள்ளிகள் என்று இப்படி எல்லாம் வைத்து மக்களை முன்னேற்றுவதற்காக பல காரியங்கள் செய்யப்பட்டு வருகின்றன என்பதை எல்லோரும் அறிவோம். பொதுவாக வருமானம் உயர்ந்து இருக்கிறது என்பதை நாம் புரிந்து கொண்டிருக்கிறோம். கிராமங்களில்கூட மக்களின் வருமானம் உயர்ந்திருப்பதை நாம் அறிவோம். சாதாரணமாக ஒரு கூலி ஆளுக்கு இரண்டு ரூபாய் கூலி கிடைக்கிறது. ஒரு குடும்பத்தில் கூலிக்காரர்களாக இருந்தால் கூட, 6 ரூபாய் 8 ரூபாய் என்ற அளவில் வருமானம் கிடைக்கிறது. வேண்டுமானால் போதாது என்று சொல்லலாமே தவிர வருகிற வருமானத்தை வரவில்லை என்று சொல்ல முடியாது. விவசாயிகளுடைய நிலைமை நல்ல முறையில் வளர்ந்திருக்கிறது. அவர்கள் நல்லமுறையில் முன்னேற்றம் அடைந்து வருகிறார்கள். மக்களின் நாகரீகம், பண்பாடு, வாழ்க்கைத்தரம் யாவும் உயர்ந்திருப்பதை நாம் அறிவோம். இதற்குப் பல உதாரணங்கள் கொடுக்கலாம். முன்பெல்லாம் கீழ் நிலையில் உள்ளவர்கள் குளிர்ந்த வேளையில் செருப்புப் போட்டுக்கொண்டுதிரிய மாட்டார்கள். செருப்புப்போட்டுக்கொண்டு நடந்தால் செருப்புத் தேய்கிறது என்று சொல்வார்கள். இரண்டு ரூபாய் செருப்புக்கே அப்படியிருந்தது. இப்போது என்றால் 12 ரூபாய்க்குச் செருப்பு வாங்கி வெளியே போக ஒரு செருப்பு, உட்கார்ந்திருக்க வேண்டிய இடத்திற்கு ஒரு செருப்பு, குளியல் அறைக்குச் செல்ல ஒரு செருப்பு என்று உபயோகிப்பதைப் பார்க்கிறோம். முன்பு ஒரு ஏழை விவசாயி ஒரு வேஷ்டியும் கௌவீனமும் வைத்திருந்தால் இப்போது ஐந்து துணிகள் போட்டுக்கொண்டிருக்கிறான். ஆகவே விவசாயிகள் பழைய குருடர்களாகவே இருக்கிறார்கள் என்று சொல்வதில் அர்த்தம் இல்லை. தெருவில் போகும்போது நினைவு எடுத்தவன்போல் கையை நீக்கிப்பார்க்கிறார்கள். கடிகாரத்தை விவசாயிகள் கட்டி இன்று அனுபவித்து வருகிறார்கள். அவர்களுக்குப் பல சாதனங்கள் வழங்கப்படுகின்றன. இவற்றை எல்லாம் உபயோகித்து அவர்கள் இன்று நல்ல முறையில் திகழ்கிறார்கள் என்பதை யாரும் மறந்து விடக்கூடாது. விவசாயிகளுக்கு இன்னும் சில வசதிகளைச் செய்து கொடுக்கவேண்டுமென்று சொன்னால் அதில் ஒருவிதமான குற்றமும் இருக்கமுடியாது. விவசாயிகள் இன்று தலைக்கு 50 ரூபாய் வரி கொடுக்கிறார்கள். ஆகவே அவர்களுக்கு வசதிகளைப் பெருக்க வேண்டும். இம்மாநிலத்தில் 370 சொச்சம் பஞ்சாயத்து யூனியன்கள் இருந்தும் 140 பஞ்சாயத்து யூனியன்களில்தான் வைத்திய வசதி செய்யப்பட்டிருக்கிறது. அங்கும் பலவிடங்களில் டாக்டர்கள் இல்லை. அங்கெல்லாம் நல்லமுறையில் டாக்டர்களைப் போட்டு வைத்திய வசதி செய்து கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 50 ரூபாய் வரி கொடுக்கும் விவசாயிகளுக்கு ஒவ்வொரு ஊரிலும் தக்க வைத்திய வசதிகள் செய்து கொடுக்கவேண்டுமென்று கேட்டுகொள்கிறேன். கிராமங்களில் குடி தண்ணீர் வசதி, சாலை அமைப்பு வசதி, பள்ளிக்கூட வசதி, போன்றவற்றிற்கு அங்குள்ள மக்கள் கேட்காமலேயே அவர்களுக்கு இத்தகைய வசதிகளைச் செய்து கொடுக்கவேண்டுமென்று கேட்டுகொள்கிறேன். இவற்றிற்காக அவர்கள் இவ்வளவு உதவித்தொகை வேண்டுமென்று கேட்காமலேயே சர்க்கார் செலவிலேயே அவற்றைச் செய்து கொடுக்கவேண்டும் என்று கேட்டுகொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன். தண்ணீர் வசதி குறைவாக உள்ள இடங்களில் எப்படியாவது தண்ணீர் வசதி செய்து

கொடுக்க வேண்டும். இராமநாதபுரம் ஜில்லாவில் மேற்கு மலையில் உள்ள தண்ணீரைக் கிழக்குப் பகுதிக்குக் கொண்டு வந்து வைப்பாறு, அர்ச்சுனா நதிகளில் பாய்ச்ச வசதி செய்து கொடுக்கவேண்டும். திரு. கரியமாணிக்கம் அம்பலம் அவர்கள் பேசும்போது கிழக்கு இராமநாதபுரம் பகுதிக்குத் தண்ணீர் விடவில்லை என்று சொன்னார்கள். வைகை தேக்கம் கட்டியதால் குறைந்த அளவில் தண்ணீர் வந்திருந்தும் இந்த ஆண்டு 30 நாட்களுக்கு வைகையில் தண்ணீர் விட்டு கிழக்கு இராமநாதபுரத்திற்கு வசதி செய்து கொடுத்தார்கள் என்பதை அவர் மறந்து விட்டுப் பேசுவது நியாயம் அல்ல.

**திரு. கரு. சீமைச்சாமி:** வைகையில் முப்பது நாட்கள் தண்ணீர் வந்தாலும் இப்போது பஞ்சமாகப் போய் விட்டது என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியும்.

**கனம் சபாநாயகர் :** அமைச்சர்தான் சாட்சியா?

**திரு. எஸ். ராமசாமி நாயுடு :** பஞ்சம் பொதுவாக நாட்டில் ஏற்பட்டது. இராமநாதபுரம் ஜில்லாவிற்கு மட்டுமல்ல, என்றும் வற்றாத காவேரி கூட வற்றி தஞ்சை, திருச்சி ஜில்லாக்களில் பஞ்சம் ஏற்பட்டது என்பதை மறந்து விடக்கூடாது. என்றும் பஞ்சத்தால் அடிபட்டிருக்கும் இராமநாதபுரத்தைப் பற்றி சீமைச்சாமி அவர்கள் இப்படிச் சொல்வது புதிதாக இருக்கிறது. முன்னால் வைகையில் தண்ணீர் வந்தால் வெள்ளம் கடலுக்குப் போகுமே தவிர திருப்பி விடப்பட்ட நாள் கிடையாது. ஆக எவ்வளவு நல்லது செய்தாலும் குறை சொல்லவேண்டுமென்றால் சொல்லலாம். கை பட்டால் குற்றம், கால் பட்டால் குற்றம் என்று இதுபோன்று சொல்லிக்கொண்டிருப்பதில் பலன் இல்லை. ஆகவே, விவசாய மக்களுக்கு வைத்திய வசதி அதிகமாக செய்து கொடுக்கவேண்டும் என்று தான் கோருகிறேன். எல்லாப் பஞ்சாயத்து யூனியன்களிலும் பிரைமரி ஹெல்த் சென்டர்கள் ஏற்படுத்தி அவற்றில் எல்லாம் டாக்டர்களைக் கட்டாயமாகப் போடும்படி செய்தால் ஒழிய கிராம மக்கள் வைத்திய வசதி பெற முடியாது. தற்போது கிராம மக்கள் போதிய வைத்திய வசதியில்லாமல் தவிக்கின்றார்கள் என்பதை நான் சர்க்காரின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். கிராமங்களில் சுகமில்லாத குழந்தையைத் தோளில் தூக்கிப்போட்டுக்கொண்டு பக்கத்திலுள்ள 6 மைல் தொலைவிலுள்ள இடங்களுக்கு வைத்தியத்திற்காகப் போய்விட்டுத் திரும்பவும் வெயிலில் வருகின்றார்கள். இவ்விதம் வெயிலில் வரும்போது அவர்கள் செய்து கொண்ட வைத்தியமும் வெயிலில் கெட்டுவிடுகிறது, அதை நாங்கள் கண்கூடாகக் கண்டுகொண்டு இருக்கிறோம். ஆகவே விவசாய மக்களுக்கு இந்த வைத்திய வசதியை அவசரமாகச் செய்து கொடுக்கவேண்டுமென்று கேட்டுகொள்கிறேன்.

விவசாயிகளுக்குக் கூட்டுறவு மூலமாகப் பல நன்மைகளைச் செய்துகொடுத்துக்கொண்டிருக்கிறோம். ஆனால், இவைகள் எல்லாம் அவர்களுக்குப் பயன்படும்படியாகச் செய்யவேண்டியிருக்கிறது. இன்று கிராமங்களில் நீண்ட காலக்கடன்கள் கொடுத்து உதவுகிறோம். முக்கியமாக நில அடமான வங்கி அமைத்து அதன் மூலமாகக் கடன் கொடுத்து வருகிறோம். ஆனால் சமீபத்தில் நில அடமான வங்கியார் செய்திருக்கும் பல நிர்ப்பந்தங்கள் காரணமாக கிராம மக்கள் கடன் பெற்றுக்கொள்ள முடியாத நிலை இருந்துகொண்டிருக்கிறது. 100-க்கு 20 முன் கடன் கொடுத்துத் தீர்ப்பதாகவும் 100-க்கு 80 நிலச் சீர்திருத்தத்திற்காகக் கொடுக்கவேண்டும் என்று விதிமுறைகள் வைத்திருக்கிறார்கள். விவசாயிகளுக்குக் கிணறுகள் வெட்டுவதற்கும், பம்புசெட் வைப்பதற்கும் பிளாக் மூலமாக லட்சக்கணக்கில் ரூபாய்களைக் கடனாகக் கொடுத்து வருகிறோம். அப்படியிருக்கும்போது நில அடமான வங்கியார் போட்டிருக்கிற நிபந்தனைகளின்படி போதிய அளவுக்குக் கடன் பெற முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. விவசாயிகளுக்கு எந்த விதமான கடனாக இருந்தாலும், அவற்றைத் தாராளமாக கொடுத்து, நீண்ட நாளில் திருப்பிச் செலுத்துவதற்குரிய வழிவகையும் செய்து கொடுக்க வேண்டியது மிகவும் அவசியமாகும். இதற்காக சர்க்கார் முயற்சி எடுத்து ரிசர்வ் பாங்கியில் சொல்லி தற்போது போடப்பட்டிருக்கின்ற நிபந்தனைகளை அகற்றவேண்டும் என்று கேட்டுகொள்கிறேன்.



இன்றைக்கு நாம் பல தொழில்களை கிராமங்களில் நிறைவேற்றி வருகிறோம். சிவகாசி, சாத்தூர் முதலிய இடங்களில் நெருப்புப் பெட்டி தொழிற்சாலை அதிகமாக இருக்கிறது. இந்தத் தொழிற்சாலைகள் மூலமாக கிராமங்களிலுள்ள ஏழைப் பெண்களுக்கு வேலை கிடைத்துக்கொண்டிருக்கிறது. உள்ளேயிருந்து வேலை செய்யும் சிலர் போக, வெளியேயும் இருந்து கொண்டு பலர் வேலை செய்வதற்கு வசதியாக இருக்கிறது. இப்போது முக்கியமாக இந்தத் தொழிலுக்கு வேண்டிய மருந்து போதிய அளவிற்குக் கிடைக்காத காரணத்தால் தொழிலில் தேக்கம் ஏற்பட்டிருக்கிறது என்பதை நாம் நன்றாக அறிவோம். அந்த மருந்து கிடைப்பதற்காக சில ஏற்பாடுகளை அரசாங்கம் செய்திருக்கிறது. இதைப்பற்றி தொழில் அமைச்சர் அவர்கள் முன்பே சொன்னார்கள். ஆனால் தனிப்பட்ட நபர்களிடம் இந்த மருந்தை தயாரிக்கின்ற உற்பத்தி தொழிற்சாலைகளை விட்டுவிட்டு, அவர்கள் இஷ்டம்போல் உற்பத்தி செய்வதும், நிறுத்துவதுமாக இருப்பதைவிட, சர்க்காரிலிருந்து ஒரு நிறுவனம் ஏற்படுத்தி அதன் மூலமாக மருந்தை உற்பத்தி செய்து இந்த தீப்பெட்டித் தொழிலுக்கு நிரந்தரமாக மருந்து கிடைக்க ஏதாவது வழிவகை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கிராம விவசாயிகளுக்கு முக்கியமாக தேவைப்படுகின்ற பாசனத்திட்டங்களில் கிணறு, சிறு குளங்கள் இவைகளைச் சரிப்படுத்திக் கொடுப்பதில் காட்டாறுகளில் அணை கட்டி அவற்றிலிருந்து கிணறுகள், சிறு குளங்கள் இவற்றுக்குப் பாசன வசதி செய்து கொடுத்தால் பெரும் உதவியாக இருக்கும். இதற்கான வேலைகளை உடனடியாக சாதரா செய்து கொடுத்தால் விவசாய மக்களுக்கு மிகவும் பயன்படும் என்பதைக் கூறிக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. இராம. அரங்கண்ணல் :** கனம் தலைவர் அவர்களே, எனக்கு முன் பேசிய கனம் அங்கத்தினர் அவர்கள் 18 ஆண்டு கால காங்கிரஸ் ஆட்சிக்குப் பிறகு விவசாயிகள் டார்ச் பிடித்துக்கொண்டு போகவில்லையா, லைட்டுகளை உபயோகித்துக்கொண்டிருக்கவில்லையா, கடிகாரம் கட்டிக்கொண்டு இருக்கவில்லையா ? இவையெல்லாம் மக்களின் பொருளாதார வளர்ச்சியைக் காட்டவில்லையா என்று கேட்டார்கள். நம்முடைய சர்க்கார் போட்ட சுப்பிரமணியம் கமிட்டியார் 3,600 கிராமங்களைச் சுற்றிப் பார்த்துவிட்டு, ஒவ்வொரு விவசாயிக்கும் 447 ஆக இருந்த வருமானம் இப்போது 437 ஆக குறைந்து இருக்கிறது என்று புள்ளிவிவரம் தந்திருக்கிறார்கள். அகில இந்திய ரீதியில் ஜயப்பிரகாஷ் அவர்கள் தலைமையில் நியமிக்கப்பட்ட கமிட்டி, இந்தியாவிலுள்ள விவசாயி ஒவ்வொருவனும் 34 ரூபாய் அளவிற்குக் கடன் பட்டிருக்கிறான் என்று புள்ளிவிவரம் தந்திருக்கிறது. எப்படி விவசாயிகளுடைய நிலைமை இருக்கிறது, அவர்களுடைய வருமானம் பெருகியிருக்கிறது என்பதைப் பார்ப்பதற்காக நாமே நியமிக்கப்பட்ட கமிட்டிகள் எல்லாம் கொடுக்கின்ற புள்ளிவிவரங்கள், தீர்ப்புக்கள் எல்லாம் நாம் கண்கூடாகக் காணக்கூடியவையாக இருக்கின்றன. இவைகள் எல்லாம் எனக்கு முன்னால் பேசியவரின் வாதங்களுக்கு மாறாகவே இருக்கிறது. இந்த விவாதத்தைத் துவக்கி வைத்துப்பேசிய கனம் உறுப்பினர் திரு. மாதவன் அவர்கள் வரி உயர்வைப்பற்றி எடுத்துச்சொன்ன நேரத்தில் மதிப்பிற்குரிய தொழில் அமைச்சர் அவர்கள் குறுக்கிட்டார்கள். ஜனநாயகத்தின் பேரில் அக்கறை கொண்ட தொழில் அமைச்சர் சட்டசபையில் அவர்கள் பதில் சொல்லி வருகின்ற முறைகளையும், அவர்கள் நடந்து கொள்ளும் தன்மையையும் நான் வெகுவாகப் பாராட்டுகிறேன். தனிப்பட்ட முறையில் அவர்களிடத்தில் எனக்கு நிறைய மதிப்புண்டு. அவர்கள் வரி உயர்வைப்பற்றிக் குறிப்பிட்ட நேரத்தில், இப்படிப்பட்ட வரிகள் அதிகரிப்பு நமது பொருளாதார வளர்ச்சியைத்தான் காட்டுகிறது என்று எடுத்துச்சொன்னார்கள். தொழிலமைச்சருக்கு மட்டுமல்ல, அவரைப்போன்று மேற்மட்டத்திலுள்ள பலருக்கும் இந்தக் கருத்துத்தான் இருந்து கொண்டிருக்கிறது. ஆனால் நம்முடைய நிதி இலாகா 1964-ம் ஆண்டில் நான்காவது பைனான்ஸ் கமிஷனுக்கு ஒரு மெமோராண்டத்தைச் சமர்ப்பித்தது. அதில் " இந்தியா முழுமையும் ஒரு தனி நபர் செலுத்துகின்ற வரியை விட இங்குள்ள ஒரு தனி நபர் செலுத்துகின்ற வரிச் சுமை அதிகம் "

என்று அந்த அறிக்கையில் சொல்லியிருக்கிறது. இப்போது விவாதிக்கப்படுகிற நமது நிதி நிலை அறிக்கையைத் தயார் செய்த இதே நிதி இலாகா, மேலும் சொல்லுகிறது. . . . . "சென்னையின் தனி நபர் வருமானம் தேசீய சராசரி வருமானத்தைவிடக் குறைவு. இந்தியா பூராவும் 1962-ல் ரூ. 295 என்றால் சென்னையில் ரூ. 267 தான்". அதாவது, 28 ரூபாய் இந்திய சராசரி வருமானத்தைவிட தமிழ்நாட்டிலுள்ளவர்களுக்குக் குறைவாகவே இருக்கிறது என்று நமது நிதி இலாகாவே குறிப்பிட்டிருந்தும் நமது அமைச்சர்களைப்போன்றவர்கள் நம்முடைய பொருளாதார வளர்ச்சி முன்னேற்றமடைந்திருக்கிறது என்று குறிப்பிடுகிறார்கள். வரிகளைப் பொறுத்தவரையில் உயர்ந்து கொண்டே இருக்கிறது என்பதற்கு நான் விளக்கங்கள் சொல்லவேண்டிய தேவையில்லை. இந்த நிதி நிலை அறிக்கையில் உபரி இருக்கிறது என்று சொல்லப்பட்டிருந்தாலும், அந்த உபரி ஏற்படுவதற்கு, எவ்வளவு வருமானம் வரிகளின் மூலம் வந்திருக்கின்றது என்பதை நாம் உணர முடிகிறது. கடந்த ஆண்டில் மட்டும் 24 கோடி ரூபாய் வரியாகப் பெறுவதற்கு வசதி ஏற்பட்டிருக்கிறது. அதற்குப் பிறகு தான் இந்த உபரி காட்டப்பட்டிருக்கிறது என்பதை நாம் உணருவோம். 1938-39-ல் நமது மாநிலம் ஒரு பெரிய மாநிலமாக இருந்த நேரத்தில் 16 கோடி ரூபாய் வரியாக வந்து கொண்டிருந்தது. 1946-47-ல் அதாவது சுதந்திரம் வந்த நேரத்தில் 57 கோடியாக இருந்தது. அவ்விதம் இருந்த வருமானம் இப்போது 188 கோடியாக உயர்ந்திருக்கிறது. இந்த உயர்வு எங்கேயிருந்து வந்திருக்கிறது? எவ்வாறு இந்த உயர்வு ஏற்பட்டது? அரசாங்கம் சம்பாதித்திருக்கிறது என்றால் எல்லோரும் மகிழ்ச்சி அடையலாம். நம் சர்க்காருக்குள்ள முக்கியமான சொத்துக்களில் ஒன்று டிரான்ஸ்போர்ட் இலாகா. அதுவும் நஷ்டத்தில் ஓடிக்கொண்டிருக்கிறது என்று சொல்லப்படுகிறது. ஆகவே வரியைப்போட்டு சர்க்காரை நடத்துவது என்கின்ற ஒரு கொள்கையைத்தான் இந்த ஆட்சியினர் வைத்திருக்கிறார்களே தவிர வரி போதாது என்றால் கடன் எழுப்பிக்கொள்வதும், அதன் மூலமாக சாதித்துக்கொள்வதுமாக இருக்கிறதே தவிர, 18 ஆண்டு காலமாக சோஷியலிஸம் பேசிவருகின்ற இந்த சர்க்கார் வருமானத்தை பெருக்கிக்கொள்வதற்கு ஏதாவது வழிவகை செய்திருக்கிறதா என்பதை நாம் யோசித்துப் பார்க்கவேண்டும். நேற்றையதினம் பேசிய கனம் கோசல்ராம் அவர்கள் சொன்னார்கள். "உலகத்திலேயே நிலத்திற்கு அதிகமாக வரி போடுகின்ற நாடு நம்முடைய நாடுதான்" என்று சொன்னார்கள். அவர்களுடைய கூற்றை ஆதரிப்பது போல், யூ. என். செக்ரட்டரி ஜெனரலுடைய பிரதம உதவியாளராக இருக்கக்கூடிய திரு. சி. வி. நரசிம்மன் அவர்கள் பம்பாயில் ஜனவரி 21-ம் தேதி பேசிய போது குறிப்பிட்டிருக்கிறார்கள். "**India is a tax laboratory and all the systems of taxation in the world you will find in India. I think it is high time to think about the tax system**" என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். வரிபோட்டு ஆளுகின்ற முறையைப்பற்றி யோசித்துப் பார்க்கவேண்டிய கட்டத்தில் நாம் இருந்து கொண்டிருக்கிறோம். என்னென்ன புது வரிகள் போடலாம் என்று ஆலோசித்துக் கொண்டிருக்கக்கூடிய டாக்ஸ் லாபரட்டரியாகவே இருந்து கொண்டிருக்கிறோம் என்று அவர்கள் எடுத்துச் சொல்லியிருப்பதை நமது அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். நமது மாநிலத்தைப் பொறுத்த அளவில் வரி இருக்கின்ற இனங்கள் எல்லாம் குறைந்து கொண்டே வருகின்றன. வரி முறைகளில் டைரக்ட் டாக்ஸ் என்றும் இன்டைரக்ட் டாக்ஸ் என்றும் இரு முறைகள் இருக்கின்றன. டைரக்ட் டாக்ஸேஷன் ஒரு சில தனிப்பட்டவர்களைப் பாதிக்கிற வரி முறை ஆகும். இன்டைரக்ட் டாக்ஸேஷன் பொதுமக்களைப் பாதிக்கிற மறைமுக வரிமுறை
10-00 ஆகும். டைரக்ட் டாக்ஸேஷன் மூலம் நேரடியாக வரியாக வரக்கூடிய இனமாக இருப்பது நிலவரி ஒன்று தான். மறைமுக வரியாக வரக்கூடிய இனமாக விற்பனை வரி, வாகன வரி போன்ற வரிகள் இருந்து கொண்டிருக்கின்றன. சோஷலிஸ அமைப்பில் இன்டைரக்ட் டாக்ஸை மட்டும் நம்பிக்கொண்டு இருப்பது அவ்வளவு நல்லதல்ல. டைரக்ட் டாக்ஸ் மூலமாக வரி வருகிற இனங்களில் மத்திய அரசுக்கு இருப்பது வருமான வரி. அந்த வருமான வரி மூலமாக ஏராளமான பணம் மத்திய அரசுக்குச் செல்லுகிறது. வரி மட்டுமல்லாமல் தொழில்கள் மூல





மாக வருமானம் வருகிற வாய்ப்பு மாநிலத்திற்கு இருக்கிறதா என்றால் இல்லை. நல்ல வருமானம் வரக் கூடிய ரயில் இலாகா மத்திய அரசுக்கு இருக்கிறது. நம் மாநிலத்தில் ஏற்படுத்தப்படுகிற கனரகத் தொழில்கள் அத்தனையும் மத்திய அரசுக்கு வருமானம் அளிக்கக் கூடிய இனமாக இருக்கின்றன. மாநில அரசுக்கு வருமானம் வரக்கூடிய இனங்களோ அல்லது தொழில் துறை வருவாயோ இல்லாத ஒரு நிலையைத்தான் நாம் காணவேண்டியிருக்கிறது. இப்படிப்பட்ட சமயத்தில், எதிர்காலத்தில், நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தைப் போட்டு ஏராளமான பணத்தைச் செலவழிக்க இருக்கிறோம். இதை எப்படிச் செய்யப் போகிறோம் என்பது சிக்கலான கேள்வி. இதற்கு எதிர்காலம்தான் பதில் சொல்லவேண்டும். இந்த நிலைமை இன்றைய தினம் உருவாகியிருப்பதற்குப் பொருளாதார வளர்ச்சி ஏற்பட்டிருப்பது தான் காரணம் என்று பல பேர்கள் பேசுகிறார்கள். வளர்ச்சி என்பது வேறு, வீக்கம் என்பது வேறு. உடம்பு உண்மையாகப் பருத்திருந்தால், அந்த உடம்பைப் பார்த்து "ஆள் உப்பியிருக்கிறான்" என்று சொல்ல முடியும். ஆனால் நோஞ்சானாக இருக்கிறவனுக்கு உடம்பு திடீரென்று பருத்திருந்தால் அது வீக்கம். வீக்கம் மரணத்திற்கு அறிகுறி என்று டாக்டர்கள் சொல்லுவார்கள். நாட்டிலே இன்றைய தினம் ஏற்பட்டிருப்பது உண்மை வளர்ச்சி அல்ல, வீக்கம் ஆகும்—இன்ஃப்ளேஷன் ஆகும். 1960-64-க்குள் பணப் புழக்கம் 2,400 கோடியிலிருந்து 3,752 கோடியாகியிருக்கிறது. அதாவது 43·7 சதவிகிதம் உயர்ந்திருக்கிறது—பணவீக்கம் அதிகரித்திருக்கிறது. ஆனால், தேசீய வருமானம் அந்த அளவுக்கு வளர்ந்திருக்கிறதா என்று பார்த்தால் இல்லை. 17·5 சதவிகிதம் தான் உயர்ந்திருக்கிறது. இந்த அளவுக்குப் பண வீக்கம் ஏற்பட்டிருக்கிறதே, என்ன காரணம்? ஒரு பெரியவர் சொல்லுகிறார்—"ஒரு சிலரிடத்தில் பணம் குவிந்திருப்பதே பண வீக்கத்துக்குக் காரணம். பணம் படைத்த ஒரு சில நபர்கள் ஆடம்பரமாகச் செலவழிப்பது மட்டுமின்றி பதுக்கி வைக்கவும் செய்கிறார்கள். அதனால் எந்தப் பணம் உற்பத்திப் பெருக்கத்துக்குக் காரணமோ, அந்தப் பணம் நாசவேலைகளைச் செய்கிறது. அதனால் தான் விலைவாசிகள் ஏறுகின்றன" என்று சொல்லியிருக்கிறார். யார் அந்தப் பெரியவர் என்றால், மத்திய உள் துறை அமைச்சர் திரு. நந்தா அவர்கள் தான். சொன்ன இடம், ஜெய்ப்பூர் காங்கிரஸ் கமிட்டிக் கூட்டம். ஆனால், நம் தொழில் அமைச்சர் அவர்கள் 1962, மே மாதத்தில், "விலைவாசி உயருகிறது, அதற்காக ஏதாவது செய்யவேண்டுமென்று திராவிட முன்னேற்றக் கழகம் போராட்டத்தை நடத்தவேண்டும்" என்று சொன்ன நேரத்தில், அவர்கள் ஒன்று குறிப்பிட்டார்கள். "அரசுக்குக் கெட்ட பெயர் உண்டுபண்ண வேண்டும் என்பதற்காகவே சில அரசியல் கட்சித் தலைவர்கள் விலைவாசிகள் ஏறிவிட்டதாகக் குரல் எழுப்புகின்றனர். இது அரசியல் பித்தலாட்டம்" என்று குறிப்பிட்டார்கள். நம் அரசுக்குப் பதில் சொல்லுகிற சந்தர்ப்பத்தை திரு. நந்தா அவர்களே எடுத்துக்கொண்டிருக்கிறார்கள்—அந்த சந்தர்ப்பத்தை எங்களுக்கு வைக்காமல். விலைவாசி உயர்ந்திருக்கிறது என்பதை எல்லோரும் நன்றாக உணர முடிகிறது. நாம் வீட்டுக்குச் சென்றால் பெண்டு-பிள்ளைகளைப் பார்த்தால், அவர்கள் சிரமங்களை அறிந்தால் விலைவாசி எந்த அளவுக்கு உயர்ந்திருக்கிறது என்பதை சாதாரணமாக அறிய முடியும். 1952 முதல் 1963 வரையில் விலைவாசிகள் 3·2 சதவிகிதம் உயர்ந்தன. 1963-லிருந்து 1965 ஜூலைக்குள், 1½ ஆண்டுகளுக்குள் விலைவாசிகள் திடீரென்று 25 சதவிதம் உயர்ந்திருக்கின்றன. இதற்கு என்ன காரணம் என்று எண்ணிப் பார்க்கவேண்டாமா? திரு. நந்தா அவர்கள் பணவீக்கத்திற்குக் காரணம் ஒரு சிலரிடம் பணம் குவிந்திருப்பது தான் என்று சொல்லுகிறார்கள். திட்டக் கமிஷன் உறுப்பினர் டாக்டர் வி.கே. ஆர்.வி. ராவ் அவர்கள் பிப்ரவரி மாதம் 7-ம் தேதி சொல்லியிருக்கிறார்—"இந்தியாவினுடைய பொருளாதாரம் சோஷலிஸப் பாதையை நோக்கிச் செல்லவில்லை. மாறாக, முதலாளித்துவத் திசையை நோக்கியே செல்லுகிறது. வருமான ஏற்றத் தாழ்வைச் சமன் செய்யும் தன்மை சர்க்காரின் வரி முறையால் பாழடிக்கப்பட்டுள்ளது. சர்க்காரால் வரி ஏய்ப்பைத் தடுக்க முடியவில்லை. பாப வழிகளில் பணக்காரர்கள் குவித்த பணத்தைவெளியே கொண்டுவரத் தீவிர நடவடிக்கைகள் எடுப்பதற்குப் பதில் தாஜா செய்யப்படுகிறது" என்று. தாஜா செய்கிறவர்கள் யார்? அரசாங்கம்தான்

தாஜா செய்கிறது. பணம் எங்கே போய்க் குவிந்திருக்கிறது ? மூன்று ஐந்தாண்டுத் திட்டங்கள் போட்டபிறகு, வரிகள் பல போட்டு வசூலித்தும் போதாமல் 3,500 கோடி ரூபாய் கடன் வாங்கிச் செலவழித்த பிறகு அதன் பலன் எங்கே போயிருக்கிறது என்றால், பணக்காரர்களிடம் தான் பலன் போய்ச் சேர்ந்திருக்கிறது என்று திரு. நந்தா அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். மறைந்த மாணிக்கம் பண்டித நேரு அவர்கள் கூட முன்பே எடுத்துச் சொன்னார்கள்—" திட்டங்களின் பயன் ஒரு சில பணக்காரர்களுக்குப் போய்ச்சேர்ந்திருக்கிறதேயொழிய, அந்தப்பலன் யாருக்குச் சேர வேண்டுமோ அந்த ஏழை மக்களுக்குச் சேரவில்லை " என்று. ஒருசிலர் இடத்தில் குவிந்திருக்கிற பணத்தை எடுக்க வேண்டிய சர்க்கார், ஆயுதத்தைக் கையில் வைத்துக்கொண்டிருக்கிற சர்க்கார், சோஷலிஸம் பேசுகிற சர்க்கார், பணத்தை எடுப்பதற்குப் பதில் அவர்களைத் தாஜா செய்கிறது என்று சொன்னால் நாம் என்ன கருத முடியும் ? அவர் மட்டுமல்ல. பிப்ரவரி 9-ம் தேதி, அதே ஜெய்ப்பூரில், காங்கிரஸ் ஃபோரம் ஆஃப் சோஷலிஸ்ட் ஆக்ஷன்—திரு. நந்தா அவர்கள் பெற்றெடுத்த ஒன்றுகும் இம்மன்றம்—சோஷலிஸத்தை எப்படி வளர்ப்பது என்று விவாதிக்கக் கூடிய மன்றம் அது—அதிலே முன்னாள் அமைச்சர் திரு. மாளவியா அவர்கள் பேசிய போது, ஒரு வாசகத்தைக் குறிப்பிட்டிருக்கிறார். அத்தனை பேரும் உணர வேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறார்—" பண்டித நேரு மறைந்த 18 மாதங்களில் ஜனநாயக சோஷலிஸத்தை அழிக்கும் வகையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன " என்று கூறியவர் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர் அல்ல. முன்னாள் அமைச்சர் திரு. கே. டி. மாளவியா அவர்கள் எல்லா அமைச்சர்களையும் வைத்துக் கொண்டு அந்த மன்றத்தின் கூட்டத்தில் சொல்லியிருக்கிறார். அதை மறுக்க முடியுமா ? எவ்வளவு வார்த்தைகள், எவ்வளவு செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன—பண மூட்டைகள் விவகாரத்தைப் பற்றி. நடந்து முடிந்த பிரதமர் தேர்தலில் பணமூட்டைகள் என்னென்ன செய்தார்கள் என்று பொறுப்பான பத்திரிகைகளில் நாம் பார்க்கவில்லையா ? திரு. டி.டி.கே. அவர்கள் நிதி அமைச்சர் பதவியிலிருந்து விலகியதற்குக் காரணம் பண மூட்டைகள் என்று பத்திரிகைகள் எழுதுவதைப் பார்க்கவில்லையா ? என்ன காரணம், பண மூட்டைகளின் செல்வாக்கு இந்த அளவுக்கு வளர்ந்திருப்பதற்கு ? பண மூட்டைகளை நம்பித்தான் அரசாங்கம் நடைபெற முடியும் என்ற நிலைமை வந்திருப்பதற்கு என்ன காரணம் ? பண மூட்டைகளை வைத்துக்கொண்டு தேர்தலை நடத்தலாம், கட்சியை வளர்க்கலாம் என்று இந்திய அரசியலில் மாற்றம் ஏற்பட என்ன காரணம் என்று பார்க்கவேண்டும். இவைகளை எடுத்துச் சொல்லும் நேரத்தில், காங்கிரஸ் அரசாங்கத்திற்கு நல்ல ஆசைகள் இருக்கின்றன என்பதை நான் மறுக்கவில்லை. திட்டமிட்ட பொருளாதாரம் ஏற்படவேண்டும் என்பதற்கும் என்னுடைய கட்சிக்கும் எந்தவித அபிப்பிராய பேதமும் கிடையாது. திட்டமிட்டு பொருளாதாரம் வளர வேண்டுமென்று 1938-ல் மாவீரர் சுபாஷ் சந்திர போஸ் தலைவராக இருந்த காலத்தில், மறைந்த மாணிக்கம் பண்டித நேரு அவர்கள் தலைமையில் கமிட்டி போடப்பட்டு அப்போது முதற்கொண்டே இந்தியப் பொருளாதாரம் பற்றி எண்ணி வந்திருக்கிறார்கள். அப்புறமும் கூட ஒவ்வொரு ஆண்டும் இந்தியப் பொருளாதாரத்தைப் பரிசீலிக்கும் தன்மை அகில இந்தியாவைக் கட்டி ஆளும் கட்சியாகிய காங்கிரஸ் கட்சிக்கு இருந்துவந்திருக்கிறது. இப்போது இந்தியப் பிரதமராக இருக்கிற திருமதி இந்திரா காந்தி காங்கிரஸ் தலைவராக இருந்த நேரத்தில், 1958-ல் காங்கிரஸ் ப்ளானிங் சப்-கமிட்டி ஒரு அறிக்கை சமர்ப்பித்தது. அந்த அறிக்கையில் 1958-ல் ஆண்டிலேயே, ஏழு ஆண்டுகளுக்கு முன்பாகவே எச்சரிக்கை விடுத்திருக்கிறார்கள். அது " வருமான உயர்வின் காரணமாகத் தனி நபர் தேவையும் உயரும். அதனால் விலை உயரும். ஆனால் வருமானம் அதே விகிதத்தில் எல்லா தரப்பட்ட மக்களுக்கும் உயராது என்பதால் விலை உயர்வின் காரணமாக பாதிக்கப்படும் மக்கள் திண்டாட நேரும். எனவே உணவின் விலை மிகமிகச் சிறந்த சிக்கலை உருவாக்கும். இதனால் பொருளாதாரத் திட்டத்தைச் சீர்குலைத்து சமுதாய நிலையைச் சாய்க்கும் " என்று 1958-ல் காங்கிரஸ் கமிட்டி, காங்கிரஸ் அரசாங்கத்திற்கு எச்சரிக்கை விடுத்தது.





ஏழு ஆண்டுகள் ஆன பிறகு இன்று இதைப் பார்க்கிறோம். காங்கிரஸ் தலைவர்கள் எச்சரிக்கை விடுக்கிறார்கள் ! அபாயச் சங்கு ஊதுகிறார்கள் ! ஆச்சரியம் என்ன என்றால் யார் நாட்டை கட்டிக் காக்கிறார்களோ அந்தப் பெரிய அமைச்சரும், கட்சியைக் கட்டிக் காக்கிற தலைவர்களும், அவர்களே அபாயச் சங்கு ஊதும் நிலைமை இருக்கிறது என்றால் இதை என்ன என்று சொல்லுவது ? மத்திய அரசு கடன் வாங்குகிறது. மாநில அரசு கடன் வாங்குகிறது. அரசாங்கம் மட்டும் தான் கடன் வாங்குகிறதா என்றால், என்.ஜீ.ஓ.-க்களாக இருக்கிறவர்களும், மத்திய தர மக்களும், " கடன் பட்டு அவுதியுறுவோர் சங்கம் " என்றே ஒரு சங்கம் வைத்திருக்கிறார்கள், இன்று சென்னையில் !! இதுவா, வளர்ச்சி ? இதுவா பொருளாதார வளர்ச்சி ? மத்திய அரசாங்கத்துக்கும், மாநில அரசுகளுக்கும் கடன், போதாததற்கு மக்களும் கடன்பட்டு அவதிப்படும் நிலைமைகள் வந்திருக்கின்றன. இவைகளையெல்லாம் சீர்தூக்கிப் பார்க்கவேண்டிய ஆபத்தான கட்டம் வந்திருக்கிறது என்று நான் எச்சரிக்க விரும்புகிறேன்.

நிதி நிலை அறிக்கையில் நமது முதலமைச்சர் அவர்கள், சிக்கனம் செய்யவேண்டியதன் அவசியத்தைப்பற்றி வலியுறுத்தியிருக்கிறார்கள். அதை மிக மிக நான் வரவேற்கிறேன். அதற்கான ஆலோசனைகளைக் கூறவேண்டும் என்றும் முதல் அமைச்சர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். அதற்காக நான் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். சிக்கனத்தைப் பற்றி ஆலோசனை செய்வதற்காகச் சிக்கனச் சீரமைப்புக் குழு என்று போட்டிருப்பதாக அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். என்னுடைய தாழ்மையான அபிப்பிராயத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். இந்தச் சிக்கனத்தை நாம் கடைப்பிடிக்க வேண்டுமானால் முதன் முதலில் செய்யவேண்டிய காரியம் ஒன்றுண்டு. இந்தச் சிக்கனச் சீரமைப்புக் குழுவே இல்லாமல் செய்வது தான் சிக்கனத்தைக் கடைப்பிடிப்பதற்கு உதாரணமாக இருக்கும் என்று நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். அப்படி நான் கூறியதற்குக் காரணம் சொல்லுகிறேன். இந்தச் சிக்கனச் சீரமைப்புக் குழு யாருடைய தலைமையில் போடப்பட்டிருக்கிறது ? நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். அதே போல் டைரக்டர் ஆஃப் விஜிலன்ஸ் என்ற ஒரு பதவியை நாம் சிருஷ்டித்து, அதற்கு ஒருவரை நியமித்திருக்கிறோம். இதே மன்றத்தில், இந்த விஜிலன்ஸ் துறையில் ஒரு நல்ல நீதிபதியைப் போடவேண்டும் என்ற விவாதம் வந்த நேரத்தில், " இப்பொழுது இருக்கிற போலீஸ் அதிகாரியே போதும், டைரக்டர் வேறு ஒருவரை நியமிக்க வேண்டிய அவசியம் இல்லை " என்று நம்முடைய முதலமைச்சர் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். ஆனால், இப்பொழுது எப்படி இந்த அவசியம் ஏற்பட்டது ? யாரை அந்த டைரக்டர் ஆஃப் விஜிலன்ஸாகப் போட்டிருக்கிறோம் ? ஓய்வு பெற்ற பிரதம காரியதரிசி அவருக்கு இந்த வேலைக்காக ரூ. 1,800 சம்பளம் வழங்கப் போகிறோம். அது மட்டும் அல்ல. அவருக்குக் கிடைக்கும் பென்ஷன் தொகையையும் அவர் எடுத்துக் கொள்ளலாம். இந்த அளவு சம்பளம் கொடுத்து, ஓய்வு பெற்ற பிரதம காரியதரிசியை, ஓராண்டு காலத்திற்கு அல்ல, ஈராண்டு காலத்திற்கு அல்ல, மூன்றாண்டு காலத்திற்கு அல்ல, " ஐந்தாண்டு காலத்திற்கு நீங்களே டைரக்டராக இருங்கள் " என்று சொல்லி, அவரை நியமிக்க வேண்டிய அவசியம் என்ன வந்தது ? சர்க்காரிலே சம்பளம் வாங்கிக் கொண்டிருக்கிற காரியதரிசிகள் இன்றைய தினம் இல்லையா ? திறமையானவர்கள் இல்லையா ? இன்றைய தினம் நிதி இலாகாவினுடைய செயலாளராகப் பணியாற்றுகிற வாலிபர் எந்த அளவு வன்மையுள்ளவராகத் திகழ்கிறார் என்பதை நாம் காண முடிகிறது. அப்படி, வேலையில் இருக்கும் அதிகாரிகளைப் பயன்படுத்துவதை விட்டு, ஓய்வு பெற்ற ஒருவரை அழைத்து வந்து உட்கார வைக்கவேண்டிய அவசியம் என்ன ஏற்பட்டிருக்கிறது ?

அது மட்டுமல்ல, நாஷனல் ஸ்மால் சேவிங்ஸ் என்பதற்கு ஒரு அமைப்பு இருக்கிறது. அந்த அமைப்புக்குத் துணைத் தலைவராக இருக்கிறவர் யார் ? மயிலாப்பூரில் காங்கிரஸ் கட்சியை எதிர்த்து, கடந்த பொதுத் தேர்தலில் போட்டியிட்டவர்கள் அந்த இடத்திலே வைஸ்-

சேர்மனாக உட்கார வைக்கப்பட்டிருக்கிறார்கள். அதற்கு அடுத்தபடியாக, அவருக்குத் துணையான இன்னொருவர், போன தேர்தலில் காங்கிரஸை எதிர்த்து வேலை செய்தார். அவர், ப்ரெஸ் ரிலேஷன் ஆபீசராக நியமிக்கப்பட்டிருக்கிறார். எதற்காக இதெல்லாம் ? அவர்களுடைய சேவையைப் பாராட்டுவதை நான் மறுக்கவில்லை. அவர்களுக்கு எதாவது செய்ய வேண்டும் என்ற தன்மை இருந்தால் அதையும் நான் வரவேற்கிறேன். பழைய தியாகிகள் அவர்கள். ஆனால், அவர்களுக்கெல்லாம், எதிர்க்கட்சிகளில் இருந்து காங்கிரஸ் கட்சியை வளர்ப்பதற்காக வந்தவர்கள் என்ற காரணத்திற்காக, இப்படியெல்லாம் வேலைகள் கொடுக்கலாமா ? என்னைக் கேட்டால் நான் சொல்வேன். சிக்கனத் துறையில் முதன் முதலாகச் செய்யவேண்டிய காரியம், இந்த "இன்ஃபர்மேஷன் டிபார்ட்மெண்ட்" என்கிற ஒன்று இருக்கிறதே, அந்த டிபார்ட்மெண்டையே எடுத்துவிடலாம் என்று சொல்லுவேன்.

இன்ஃபர்மேஷன் டிபார்ட்மெண்ட் எப்பொழுது ஏற்படுத்தப்பட்டது, ஏன் ஏற்படுத்தப்பட்டது என்பது நம்முடைய மதிப்பிற்குரிய முதல் அமைச்சர் அவர்கள் உணர்வார்கள். இன்றையதினம் அந்த இலாகாவிற்கு இருக்கின்ற வேலைகள் அதிகம் இல்லை. ஆனால், தமிழ் வளர்ச்சிக்காக நாம் ஒரு இலாக்காவை வைத்திருக்கிறோம். தமிழில் மொழிபெயர்ப்பதற்காக ஒரு இலாகாவை வைத்திருக்கிறோம். இன்ஃபர்மேஷன் டிபார்ட்மெண்ட் என்றும், தமிழ் மொழிபெயர்ப்பதற்காக இருக்கும் இலாக்கா என்றும், தமிழ் வளர்ச்சிக்காக இருக்கும் இலாக்கா என்றும் மூன்று இலாக்காக்கள் இருப்பதற்குப் பதிலாக மூன்று இலாக்காக்களையும் ஒரே இலாக்காவாக ஆக்கினால் வேலைகள் இன்னும் செம்மையாகச் செய்ய முடியும் என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம் ஆகும். இதைக் கவனிக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, அமைச்சர்களுடைய சுற்றுப்பயணம். இதிலே நாம் சிக்கனத்தை அதிகமாகக் கடைப்பிடித்தாகவேண்டும். வெள்ளைக்காரர்கள் காலத்தில், அட்வைசர்கள் இருந்தபோது, ஒரு அட்வைசர் ஒரு மாவட்டத்திற்கு செல்கிறார் என்றால், அந்த மாவட்டத்திலே போய் உட்கார்ந்துகொண்டு, சம்பந்தப்பட்ட எல்லா ஃபைல்களையும் கொண்டுவரச் சொல்லி அந்த பைல்களையெல்லாம் பார்த்து, எதாவது இடத்தைப் பார்க்க வேண்டுமென்றால் நேரடியாகப் பார்த்து, அங்கேயே டிஸ்போஸல் செய்யும் வழக்கம் இருந்தது. இன்றையதினம் சுற்றுப் பயணம் செய்யும் அமைச்சர்கள் இப்படிப்பட்ட குறைகளைக் கேட்கிறார்களா என்று பார்த்தால், யாரைப் பிடித்தால் எப்படி ஓட்டு வரும், எங்கெங்கே கூட்டங்கள் போடலாம் என்கிற இப்படிப்பட்ட காரியங்களில் மட்டுமே நம்முடைய முதல் அமைச்சர் அவர்களும் மற்றவர்களும் ஈடுபடுகிறார்களேயொழிய, கட்சியை வளர்க்கிற கண்ணோட்டம் பெருகுகிறதேயொழிய, உண்மையிலேயே மக்களுடைய குறைகளைத் தீர்க்க வேண்டும் என்பதற்காக இந்தச் சுற்றுப் பயணங்கள் மேற்கொள்ளப்படுவதில்லை. சுற்றுப் பயணங்கள் தேவை தான். மக்களைச் சந்திக்கவேண்டியது அவசியம்தான். ஆனால், நம்முடைய அமைச்சரவை, இன்றையதினம் இருக்கும் காங்கிரஸ் அமைச்சரவை, அந்தக் காரியத்தை—மக்களுடைய குறைகளைக் கேட்கிற காரியத்தை—சரிவரச் செய்கிறார்களா என்றால், செய்வது இல்லை. ஆகவே, அந்தப் போக்கை அவர்கள் மாற்றிக் கொள்ளவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

சிக்கனத்தைப்பற்றி யோசிக்கும் இந்த நேரத்தில் மிக மிக அவசியமானது, அரசாங்கத்தினுடைய முறைகளும் மாறவேண்டும் என்று. இந்தியப் பிரதமர் அவர்கள் நேற்றைய தினம் சொல்லியிருக்கிறார்கள். அது யோசிக்க வேண்டிய விஷயம். இன்றையதினம் சிக்கனத்தைப்பற்றி நம்முடைய மாநில அரசாங்கம் டெல்லி சர்க்காருக்கும் கொஞ்சம் சொல்ல வேண்டும் என்று நான் கருதுகிறேன். டெல்லியிலே இன்றையதினம் சுமார் 53 மந்திரிகள் அமர்ந்துக்கொண்டிருக்கிறார்கள். டெல்லி சர்க்காருக்கென்று ஒரு சில இலாக்காக்களை ஒதுக்கிவிட்டு, மாநில சர்க்கார் மற்ற இலாக்காக்களை வைத்துக்கொள்ளவேண்டும். டெல்லி சர்க்கார் வைத்திருக்கவேண்டிய அவசியம் இல்லாத இலாக்காக்களை எல்லாம் வைத்துக்





கொண்டு, அவற்றுக்கென்று தனித்தனியாக மந்திரிகளை வைத்துக் கொண்டிருப்பானேன் ? டெல்லியில் கல்விக்கென்று ஒரு அமைச்சர் இருக்கவேண்டிய அவசியம் இல்லை. டெல்லியிலே சுகாதாரத்திற்கென்று ஒரு அமைச்சர் இருக்க வேண்டிய அவசியம் இல்லை. டெல்லியிலே, பிற்பட்ட மக்களுடைய நலன்களைப் பாதுகாப்பதற்கென்று ஒரு அமைச்சர் இருக்கவேண்டியதில்லை. டெல்லியில் ஏழு அல்லது எட்டு அமைச்சர்கள் இருந்தால் போதும். மாநில விவகாரங்களையெல்லாம் நாம் பார்த்துக் கொள்ளலாம். இதனால் ஏராளமான பணம் மிச்சம் ஏற்படக் கூடும். மறைந்த பண்டித நேரு அவர்கள், "டெல்லியே ஃபைல் காடாக ஆய்விட்டது" என்று ஒரு சமயத்தில் குறிப்பிட்டிருக்கிறார்கள். இதற்கான யோசனைகளிலும் கவனம் செலுத்தி, டெல்லியில் செலவாகும் பணத்தையெல்லாம் மாநிலங்களுக்குத் திருப்புவதற்கான வழிவகைகள் என்ன என்று நம்முடைய அரசு யோசிக்கவேண்டும்.

கடைசியாக ஒரே ஒரு விஷயத்தைப்பற்றிச்சொல்லி என் உரையை முடிக்கின்றேன. நேற்றைய தினம் பேசிய காங்கிரஸ் உறுப்பினர்கள் கனம் திரு தண்டாயுதபாணி அவர்களும், கனம் திரு கோசல்ராம் அவர்களும் ஒரு விஷயத்தை மிக மிக வலியுறுத்திச் சொன்னார்கள். "விவசாயிகளுக்குப் போட்டப்பட்டிருக்கும் வரியை எடுத்துவிடக் கூடாதா ?" என்று அவர்கள் மிகவும் பணிவோடு கேட்டார்கள். அதையே நானும் மிக மிகப் பணிவோடு எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். விவசாயிகள் செலுத்துகிற வரியின் மூலமாக எட்டு கோடி ரூபாய்க்கு மேல் நமக்கு வருமானம் வந்து கொண்டிருக்கிறது. ஆனால், ஆண்டொன்றுக்கு நாம் பெற்றிருக்கும் கடன் தொகைக்குச் செலுத்தும் வட்டி மட்டும் எட்டு கோடி ரூபாய் ஆகிறது. எட்டு கோடி ரூபாய் என்பது பெரிய காரியம் அல்ல. எதிர்காலத்தில் சர்க்கார் சம்பாத்தியத்திலேயே அரசாங்கத்தை நடத்த முடியும் என்ற அறிகுறி தோன்றவேண்டியவகையில், விவசாயிகளுக்குப் போட்டப்பட்டிருக்கும் வரியை—அவர்கள் சொன்னதற்காகவாவது, அல்லது எங்கள் சார்பிலிருந்து விடுக்கிற வேண்டுகோளுக்காகவாவது ரத்து செய்யவேண்டும். அப்படியும் இல்லையென்றால், காங்கிரஸ் தலைவர் திரு. காமராஜ் அவர்கள் கோவையில் நவம்பர் 26-ந் தேதி பேசிய நேரத்தில் சொல்லியிருக்கிறார்கள். "விவசாய உற்பத்தியில் ஊக்கம் ஊட்டும் வகையில் வரி நிவாரணம் அளிக்கப்படவேண்டும்" என்று அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் மீது பெருத்த அபிமானத்தை, பெரும்பக்தியை வைத்திருக்கும் நம்முடைய சர்க்கார் அவருடைய வழியிலே நடைபெறுவதாகச் சொல்லுகிற நம்முடைய சர்க்கார், இங்கேயிருக்கிற உறுப்பினர்கள் கூறுகிற வார்த்தைகளைக் கேட்டு எதிர்க்கட்சியினர் விடுக்கிற இந்த வேண்டுகோளை மதித்து நடப்பதற்கு இஷ்டம் இல்லாவிட்டால், அவர்களுடைய தலைவர் சொல்லுகிற அந்த விருப்பத்தையாவது மதித்துச் செயல்படவேண்டும் என்று சொல்லி என்னுடைய உரையை முடிக்கின்றேன்.

* **திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :** கனம் சபாநாயகர் அவர்களே, நம்முடைய மதிப்பிற்குறிய முதல் அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கிற இந்தவரவு–செலவுத் திட்டத்தை ஆதரித்து ஒரு சில கருத்துக்களைச் சொல்லாம் என்று நான் நினைக்கிறேன்.

இங்கே பேசிய கனம் அங்கத்தினர்களில் சிலர், "சுதந்திரம் அடைந்து பதினெட்டு ஆண்டுகள் ஆகிவிட்டன, இந்தப் பதினெட்டு ஆண்டுக் காலமாக இந்த நாட்டிலே இருக்கக்கூடியதெல்லாம் எங்கே பார்த்தாலும் வரி, வரி என்று வரியை உயர்த்தியிருக்கிறார்கள். ஆனால், அதே சமயத்தில், ஏழை எளிய மக்கள், சாதாரண மக்கள் இன்னும் நிலைமை கெட்ட நிலைமையிலேயே இருந்துகொண்டிருக்கிறார்கள். ஆகையால், இந்த அரசாங்கம் தகுதியில்லாத அரசாங்கம், அவர்கள் ராஜினாமா செய்யவேண்டும்" என்று சொன்னார்கள். சொல்வதற்குத் தகுதி இருக்கிறதோ இல்லையோ, இந்தச் சபையில் அவ்வாறு ராஜிநாமாச் செய்யுங்கள் என்று சொல்வது நல்லது அல்ல என்று சொல்லிக் கொள்கிறேன். காலம் வருகின்றது. மன்னர்களாகிய மக்கள், நீதிபதிகளாகிய மக்கள் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள்.

யாரிடத்தில் பொறுப்பைக் கொடுத்தால் ஆட்சி நன்றாக நடக்கும் என்பது அவர்களுக்குத் தெரியும். வரி போடுவார்கள் அதை வைத்துக்கொண்டு பேசலாம் என்று எண்ணி ஏமாந்தவர்கள் பேசுவதற்கு வேறு ஒன்றும் இல்லையே என நினைத்து ராஜிநாமாச் செய்யுங்கள் என்று பேச முற்படுவது சரியாகாது. ராஜிநாமாச் செய்ய வேண்டுமா அல்லது மக்களுக்குச் செய்ய வேண்டிய சகல வசதிகளையும் செய்து கொடுத்து, பாதுகாப்பு அளிக்கவேண்டுமா என்பதைச் சிந்திக்கவேண்டும்.

அடுத்தபடியாக இந்த பட்ஜெட்டில் விவசாயத்திற்காக ஒன்பதுகோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது. விவசாயத்திற்கு இன்னும் அதிக அளவில் ஒதுக்கப்படவேண்டும் என்பது எங்கள் விருப்பம். இன்றைய தினம் நாட்டில் உள்ள பஞ்ச நிலையைப் போக்குவதற்கு விவசாயிகள் தாம் தீவிரமாக உழைத்தாக வேண்டும். கடந்த ஜூன் மாதத்திலிருந்து விவசாயிகளை அணுகித்தான் நாம் பல்வேறு உதவிகளையும் பெற்றோம். அவர்கள் நாட்டின் முதுகெலும்பாக இந்த அரசாங்கத்திற்கு வேண்டிய உதவிகளை எல்லாம் அளித்து வருகிறார்கள். மாற்றுக்கட்சியினர்கள் அவர்களிடத்தில் சென்று எத்தகைய . பிரசாரத்தைச் செய்தபோதிலும்கூட அவர்கள் இந்த அரசாங்கத்திற்குத் தக்க பாதுகாப்பாக இருந்து வருகிறார்கள். ஆகவே நாம் இன்னும் பல கோடி ரூபாய்களை ஒதுக்கி— இவர்களுக்கு என்ன என்ன வசதிகள் வேண்டுமோ அவை எல்லாவற்றையும் அளிக்கவேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். எந்த எந்த வகையில் கடன் கேட்கிறார்களோ அதைக் கொடுக்க வேண்டும். அவர்கள் தாம் நம்முடைய நாட்டுக்கும், இராணுவத்திற்கும் பக்க பலமா இருக்கிறார்கள். அவர்களுக்குச் செய்ய வேண்டிய காரியங்களைச் செய்யத் தவறிவிடுவோமேயானால் அது நல்லதாக இருக்காது என்று சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

மதுரை ஜில்லாவைச் பொறுத்த வரையில் பத்தாயிரம் கிணறுகள் எடுக்கச் சொல்லி சர்க்கார் உத்தரவு இருக்கிறது, அப்ளிகேஷன் கொடுங்கள் என்று சொன்னார்கள். விண்ணப்பங்கள் கொடுத்திருக்கிறோம். ஆனால் பணம் கேட்டால் ஜூன், ஜூலை மாதங்களில் தான் தருவோம் என்கிறார்கள். உடனடியாகக் கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டும். மேலும் சட்டசபையில் பலமுறை சொல்லி வந்திருக்கிறேன். 5 ஏக்கராவுக்குக் குறைவாக நிலம் உள்ளவர்கள் தனியாகக் கிணறு எடுப்பது என்பது முடியாத காரியமாக இருக்கிறது. ஆகவே, அரசாங்கமே பத்தாயிரம், பதினைந்தாயிரம் என்று செலவிட்டு சிறு நிலக்காரர்களுக்கென்று (காமன் வெல்) பொதுக் கிணறு எடுத்துக் கொடுக்க உடனடியாக ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் விவசாயிகளுக்குத் தேவையான ரசாயன உரங்களைக் காலாகாலத்தில் உடனுக்குடன் சப்ளை செய்ய வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டாகவேண்டும். அவர்களிடத்தில் ப்ரொக்யூர்மெண்டு செய்கிறோம். மேலும் கொள்முதல் செய்வதில் குறைந்த நிலக்காரர்களுக்கு விலக்கு அளித்துவிடவேண்டும். ஒரு ஏக்கர், இரண்டு ஏக்கர் வைத்திருப்பவர்களுக்கும் நாம் டார்ஜெட் வைப்பது குருவி தலையில் பெரிய சுமையை வைப்பது போலத்தான் இருக்கிறது. விலை நிர்ணயம் செய்திருக்கிறோம். மற்ற பொருள்களின் விலைவாசியோடு ஒப்பிடும்போது 23·19 ரூபாய் என்பது மிகவும் குறைவு. குறைந்தது 30 ரூபாய் என்று நிர்ணயம் செய்துவிட்டால் எந்த இடத்தில் கொண்டுவந்து கொடுக்கவேண்டுமென்று கட்டளையிட்டாலும் அவர்கள் கொண்டு வந்து கொடுப்பார்கள். ஆகவே, விலையை 30 ரூபாயாக உயர்த்தித் தரவேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். நாங்கள் மட்டும் அல்ல, பல அங்கத்தினர்கள் கோரியிருக்கிறார்கள். பயிர்களில் பூச்சி விழுந்தால் காலரா, ப்ளேக் போலக் கருதி—ப்ளாக்குகளில் நிறைய அதிகாரிகளை வைத்திருக்கிறோம். நம் செலவிலேயே அந்தப் பிராந்தியத்தில் பூச்சி மருந்து அடிக்கச் செய்து அதற்காகும் செலவைக்கூட நிலவரியோடு சேர்த்து வசூல் செய்துகொண்டு விடலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.



இன்னும் விதைகளை எடுத்துக்கொண்டால் ஏ.டி.டி. 27 என்றும், சோளத்தில் கலப்பு விதை என்றும் ஆராய்ச்சியின் மூலம் கிடைத்திருக்கிறது. அந்த விதைகளைக் கேட்டால் தஞ்சாவூரில் இருக்கிறது. இங்கு இருக்கிறது என்று சொல்வதில் பிரயோசனம் இல்லை. அந்த அந்த இடத்தில் கிடைக்க வழி செய்யப்படவேண்டும்.

**கனம் திரு. பூ. கக்கன் :** பரீட்சார்த்தமாக இப்போதுதான் அந்த விதையை தஞ்சை மாவட்டத்தில் உபயோகித்துப் பார்த்திருக்கிறோம். எல்லா இடங்களிலும் கொடுக்க விதை எங்கே இருக்கிறது ?

**கனம் திரு வெ. ராமைய்யா :** ஏ.டி.டி. 27 இப்போது மதுரையிலும் கிடைக்கிறது.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :** பாசனத்தை எடுத்துக் கொண்டால் குடவனாறு திட்டத்திற்காக ஒரு லட்சம் செலவிட்டிருக்கிறோம். இன்னும் ஒரு சொட்டுத் தண்ணீர் கூட வரவில்லை. மக்கள் மிகவும் ஏமாற்றம் அடைந்து இருக்கிறார்கள். உடனடியாக பாசனத்திற்குத் தண்ணீர் வரும்படியாகச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஒரு அங்கத்தினர் பேசும்போது இராமநாதபுரத்திற்கு தண்ணீர் விடாமல் மதுரைக்கு மட்டும் கொடுக்கின்றீர்களே என்று யாரோ வருந்துவதுபோலச் சொன்னார்கள். உண்மையில் அதை நினைத்தால் நெஞ்சம் வேதனைப்படுகிறது. எங்களுடைய நிலத்தை எல்லாம் நாங்கள் தியாகம் செய்திருக்கிறோம். படைத்தவனுக்கு இல்லாத பாகக்காய் நெய்யில் வறுத்துத் தின்றார்களாம் என்பது போல எங்களுக்குத் தண்ணீர் இல்லாது வைகை, பெரியாறு தண்ணீரை இன்றைக்கு இராமநாதபுரத்திற்கு எடுத்துப்போய்விடுகிறார்கள். பொறுமையில் அப்படி எடுத்துப் போகக்கூடாது என்று நான் சொல்ல வராவிட்டாலும் எங்கள் பகுதிக்கும் தண்ணீர் கொடுக்கப்பட வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

நிலக்கோட்டை வட்டாரம் மிகவும் வறண்ட பகுதி, கடந்த ஆண்டு வாங்கிய லோனைக் கூடத் திருப்பிக்கொடுக்க முடியாத நிலையில் இருக்கிறார்கள். அந்தப் பகுதியில் உள்ளவர்களுக்கு பேரணையிலிருந்து வைகையில் ஒரு கால்வாய் வெட்டி தண்ணீர் வசதி பாசனத்திற்கு அளிக்கவேண்டும். விவசாய மக்களுக்கு நிலப் பாதுகாப்பு அளிக்கவேண்டும் என்று வலியுறுத்துகிறேன்.

அடுத்து கல்விக்காக கோடிக்கணக்கான ரூபாய்களை ஒதுக்கியிருக்கிறோம். எம். ஏ., பி.ஏ., படிக்க உபகாரச் சம்பளம் கொடுக்கிறோம். மிகவும் பிற்போக்கான நிலையில் உள்ள பெண்கள், மேல் வகுப்பு படிக்கிற எல்லா மாணவிகளுக்கும் இலவசப் படிப்பு அளிக்க ஆவன செய்யவேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். ஆசிரியர்களுக்கு பரிசு அளிக்கும் திட்டத்தை வரவேற்கிறேன். அவர்களுக்கு 20 ரூபாய் குறையாமல் பென்ஷன் அளிக்க ஏற்பாடு செய்திருப்பதை வரவேற்கிறேன்.

இந்த ரூ. 20 இனிமேல் ஓய்வு பெறும் ஆசிரியர்களுக்கா ? அல்லது கடந்த 5 ஆண்டுகளுக்கு முன்பு ஓய்வு பெற்று, மாதம் ரூ. 3, ரூ. 4 என்று பென்ஷன் வாங்கிக் கொண்டிருக்கின்றார்களே அவர்களுக்கும் கொடுக்கப்படுமா என்பது தெளிவாக இல்லை. முன்னாள் ஓய்வு பெற்றவர்களுக்கும் 20 ரூபாய் அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோன்று இந்த உபகாரச் சம்பளத்தை எடுத்துக் கொண்டால் ஆண்டுக்கு ரூபாய் 1,500-க்கு மேலாக வருமானம் இருந்தால் உபகாரச் சம்பளம் கொடுக்கப்படுவதில்லை. ஒரு கணவனும், மனைவியும் சேர்ந்து சம்பாதித்தால் கூட 2,500 ரூபாய் வந்துவிடுகிறது. ஆனால், அவர்களுக்கு 7, 8 குழந்தைகள் இருக்கிறார்கள். அவர்கள் எல்லோருக்கும் அவர்களால் சம்பளம் கட்ட முடியாது. இரண்டுபேர்களும் வேலை

பார்த்துச் சம்பாதித்து 2,500 ரூபாய் வருமானம் வந்தாலும் கூட அந்தக் குழந்தைகளுக்கு சம்பளம் கொடுத்துப் படிக்க வைக்க முடியவில்லை. ஆகவே, 2,500 ரூபாய் வருமானம் வந்தாலும் கூட அவர்களுடைய பிள்ளைகளுக்கு எல்லாம் உபகாரச் சம்பளம் கொடுப்பதற்கு வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கி கிறேன்.

அடுத்தபடியாக, ஹரிஜன மக்களுக்கு இன்னும் பல கிராமங்களில் வீட்டடி மனை வாங்கிக் கொடுக்கவில்லை. சுடுகாட்டுக்கு இடம் கொடுக்கவில்லை. அவர்களுக்கு குடிதண்ணீர் வசதியும் கிராமங் களில் செய்துகொடுக்கப்படவில்லை. இதையெல்லாம் எதிர்கட்சிக்காரர் கள் பிரச்சாரம் செய்து அவர்களைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன் படுத்தப் பார்க்கிறார்கள். ஆனால் ஹரிஜன மக்கள் அவ்வளவு நன்றிகெட்ட சமுதாயம் அல்ல. அவர்கள் எப்பொழுதும் அரசாங்கத் திற்குப் பக்கபலமாகத்தான் இருப்பார்கள். ஐந்தாண்டுத் திட்டங்களைப் போட்டு நாம் நாட்டில் பல நல்ல காரியங்களைச் செய்துகொண்டு வருகிறோமே அதைப்போன்று மூன்று ஆண்டு திட்டங்களைப் போட்டு, இந்தக் குடி நீர் வசதி, வீட்டடி மனை, சுடுகாட்டிற்கு இடம் இவைகளை யெல்லாம் ஹரிஜனங்களுக்குச் செய்துகொடுத்து, இந்தப் பிரச்னைகளையெல்லாம் இல்லாமல் ஆக்கிவிட வேண்டுமென்று நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இந்த மெடிக்கல் டிப்பார்ட்மெண்டை எடுத்துக்கொண்டு பார்ப்போமானால், துரதிர்ஷ்டவசமாக நான் 1962-ம் ஆண்டுக்குப் பிறகு ஜெனரல் ஆஸ்பத்திரிக்கு அடிக்கடி போகக்கூடிய நிலைமை ஏற்பட்டுவிட்டது. ஜெனரல் வார்டைப் பார்த்தால் சகிக்கமுடியவில்லை. அவ்வளவு மோசமாக அந்த வார்டு இருக்கிறது. உறுப்பினர் திருமதி குழந்தையம்மாள் அவர்களுடைய வீட்டுக்காரருக்கு அடிபட்டு அவர்களை நாங்கள் ஜெனரல் ஆஸ்பத்திரிக்குத் தூக்கிக்கொண்டு போனால் அங்கே 12 மணிக்கு அவரை கவனிப்பதற்கு ஆள் கிடையாது. ஆகவே அங்கே ஃபிராக்சர் கேசுக்குத் தனியாக ஸ்பெஷலிஸ்டுகள் போட்டு 24 மணி நேரமும் இருந்து, வரக்கூடிய பேஷண்டுகளைக் கவனிக்கக் கூடிய நிலைமையை ஏற்படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த சந்தர்ப்பத்திலே நான் மற்றொன்றையும் கூறிக்கொள்ள விரும்புகிறேன். பஞ்சப்படி உயர்த்தவில்லையென்று என்.ஜி.ஓ.க்கள் எல்லாம் முறையிட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு பஞ்சப் படியை 5 ரூபாய் அல்லது 10 ரூபாய் உயர்த்தாவிட்டால் பரவாயில்லை. அவர்களுக்கு எல்லாச் சாமான்களும், குறைந்த விலைக்கு—இப்பொழுது எண்ணெய் விலை கூட உயர்ந்துவிட்டது—கொடுப்பதற்கும் அவர்களுக்கு வேண்டிய அத்தியாவசியப் பொருள்கள் எல்லாவற்றையும் குறைந்த விலைக்குக் கொடுக்கக்கூடிய அளவிலே, ஜில்லா அளவிலே, அல்லது பிளாக் அளவிலே, கூட்டுறவு முறையிலோ அல்லது வேறு முறையிலோ துணிமணி முதல்கொண்டு குறைந்த விலைக்குக் கிடைக்கச் செய்வதற்கு ஏற்பாடு செய்துகொடுக்கவேண்டும். அப்படி செய்தால் அவர்கள், பஞ்சப்படி கொடுங்கள், சம்பளத்தை உயர்த்திக் கொடுங்கள் என்று கேட்காமல் நிம்மதியாகத் தங்களுடைய வாழ்க்கையை நடத்த முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடைசியாக, நான் ஒன்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். கனம் ரெவின்யூ அமைச்சர் அவர்களுக்கு இன்னும் எங்கள் பகுதி மக்கள் மீது இரக்கம் வரவில்லை என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

**MR. SPEAKER**: A grave charge against the Minister!

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :** எங்கள் பகுதியிலே உள்ள திருமங்கலம் கால்வாய் மூலமாக 10 ஆயிரம் ஏக்கர் நிலம் சாகுபடி செய்யவேண்டுமென்பது அக்ரிமெண்ட். ஆனால், அங்கேயுள்ள விவசாயிகள் 15 ஆயிரம் ஏக்கர்கள் வரை விவசாயம் செய்ய வசதி





செய்து இருக்கிறார்கள். எங்கள் பகுதிகளிலே டிரை கிராப்பும் விவசாயம் செய்ய முடியவில்லை, வெட் கிராப்பும் விவசாயம் செய்ய முடியவில்லை, தண்ணீர் இல்லை ; ஆகவே, சர்ப்ளஸ் ஆக இருக்கக்கூடிய தண்ணீரை குருவத்துறை, காடுவெட்டி, மண்ணுடிமங்கலம் போன்ற கிராமங்களுக்கு (குறுக்கீடு) ஆயிரம் ஏக்கருக்குக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு நான் என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. கே. ஏ. மதியழகன் :** கனம் சபாநாயகர் அவர்களே, 1966-67-ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின் மீது நடைபெறும் இந்தப் பொது விவாதத்தில் நான் கலந்துகொண்டு சில வார்த்தைகள் கூறிக் கொள்வதற்கு எனக்கு இந்தச் சந்தர்ப்பத்தை அளித்ததற்காக நான் என்னுடைய நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த நிதி நிலை அறிக்கையின்மீது இந்த விவாதத்திலே நான் பேசு வதற்கு முன்பாக, முதன்முதலாக நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். வாழ்த்தைத் தெரிவிக்கிற வயது எனக்குக் கிடை யாது, அப்படிக்கூட சில வேளைகளிலே கேட்கக்கூடும். என்னுடைய வாஞ்சையைச் சொல்வதற்கு உரிமை இருக்கிறது என்ற கருத்தில் நிதிநிலை அறிக்கையைச் சமர்ப்பிப்பதற்கு முன்னால் முதலமைச்சர் உடல் நலக் குறைவாக இருந்த நேரத்தில், பணிகள் எல்லாம் எங்கே தடைபடுமோ என்று நாம் பயந்துகொண்டிருந்த நிலைமை மாறி இப்பொழுது நல்ல திடகாத்திரத்துடன் இருக்கிறார்கள். அவர்கள் இன்னும் பல ஆண்டுகள், இந்த மாநிலத்தின் முதலமைச்சராக அல்ல, பழம் பெரும் தேசபக்தர்களில் ஒருவராகவும், முன்னணித் தலைவராகவும், பல ஆண்டுகள் திடகாத்திரத்துடன் இருக்கவேண்டும் ; அவர்கள் இப்பொழுது இந்த நிதிநிலை அறிக்கையைச் சமர்ப்பிப்பதற் காக நான் என்னுடைய பெரும் மகிழ்ச்சியை தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த விவாதம் நடைபெற்றுக்கொண்டிருக்கிற இந்த நேரத்தில் நான், தமிழகத்திற்கு பல நன்மைகள் பயக்கக்கூடிய காரியங்கள் செய்யப்படும் என்று நம்பிக் கொண்டிருக்கிறேன். இந்த நிதி நிலை அறிக்கையைப் பொறுத்த வரையில் நண்பர்கள் பலர் கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். அவ்வளவும் பேசியாகிவிட்டது என்றுதான் நான் கருதுகிறேன். இன்னும் பேசித்தெரியவேண்டியது இருக்கிறதா என்று சிலவேளைகளில் நான் சந்தேகப்படுகிறேன். உணவுத் துறை யில் எவ்வளவு தோல்வியடைந்துவிட்டோம் ; இந்த அரசாங்கம் உணவுப் பிரச்னையைச் சமாளிக்க முடியவில்லை என்பது நிரூபிக்கப்பட்டு விட்டது. விலைவாசி ஆகாய விமான வேகத்தில் வேகமாகப் போய்க் கொண்டிருக்கிறது. வருமானம் ஆமை வேகத்தில்தான் போய்க் கொண்டிருக்கிறது. இதற்குக் காரணம் எவ்வளவோ சிரமங்கள் இருக்கின்றன என்ற வகையிலே பதில் சொல்லுகிறார்கள். பதினெட்டு வருஷங்களுக்குப் பிறகு, சுதந்திரத்திற்குப் பிறகு, இன்றைக்கு நாம் நாசத்தின் விளிம்பிலே, உச்சகட்டத்திலேதான் நின்று கொண்டிருக்கிறோம் என்று சொன்னால் முதலமைச்சர் தவறாகக் கருதமாட்டார்கள் என்று நினைக்கிறேன். அவர்மீது எனக்குக் கோபம் அல்லது வருத்தம் கிடையாது. அப்படிப்பட்ட நிலைமையெல்லாம் மாறிவிட்டது. ஐந்து நிதிநிலை அறிக்கைகள் முதலமைச்சர் அவர்கள் சமர்ப்பித்திருக்கிறார்கள். இன்னும் எத்தனை நிதி நிலை அறிக்கைகள் சமர்ப்பிக்கப்போகிறார்கள் ? இந்த உரையிலே கொடுக்கப்பட்டிருக்கின்ற விளக்கங்களைப் பார்த்தால் எதிர்காலத்தைப் பற்றி நினைக்க பயங்கரமாக இருக்கிறது. எதிர்காலத்தைப் பார்க்கிற நேரத்திலே இன்னும் ஒரு பயங்கரமான எதிர்காலம் தமிழகத்தை நோக்கிக்கொண்டிருக்கிறதோ என்றுதான் கவலைப்படுகிறேன். நான் அதிகமாகச் சொல்ல விரும்பவில்லை. இன்றைக்கு நம்முடைய நாட்டின் நிலையை விவரிக்க வேண்டியதில்லை. உணவு கிடைக்க வில்லை, உடை கிடைக்கவில்லை, வருமானம் அதிகப்படுத்தப்படவில்லை, விலைவாசியைக் கட்டுப்படுத்த முடியவில்லை, இவைகள் எல்லா வற்றிற்கும் மேலாக, ஒன்றை மட்டும் நான் சொல்ல விரும்பு

கிறேன். சென்ற வாரம் நான் பட்டகாரர் அவர்கள் இருக்கக்கூடிய கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள காங்கேயம் என்ற இடத்திற்குப் பக்கத்திலே உள்ள வெள்ளக்கோயில் என்ற ஊருக்குப் போயிருந்தேன். அங்கே தீத்தாம்பாளையம் என்ற ஒரு பகுதி இருக்கிறது. அங்கே குடிதண்ணீருக்கு ரேஷன் போடப்பட்டு இருக்கிறது. பஞ்சாயத்து போர்டு மூலமாக லாரிகளில் தண்ணீர் கொண்டுவந்து அங்கே இருக்கிற மக்களுக்கு , வள்ளியாத்தாளுக்கு 1 குடம், மயிலாத்தாளுக்கு 2 குடம், வேலம்மாளுக்கு 3 குடம் என்று கார்டு வைத்துக் கொடுக்கக்கூடிய நிலைமையைப் பார்த்தேன். இத்தனை ஐந்தாண்டுத் திட்டங்கள் போட்ட பிறகும், கோடிக்கணக்காக வரியாகப் பெற்ற ரூபாய்களை நாசமாக்கியதற்குப் பிறகும் கூட இந்த நிலைமைதான் இருந்து வருகிறது. இன்றைய அரசின் அவல நிலை அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, உறைவிடம் கொடுக்க முடியாதது மட்டுமல்ல, அதனினும் அடிப் படைத் தேவையான குடிதண்ணீரையே கூட கொடுக்க முடியாததாய் இருக்கிறது. அதற்குமேல் நான் அதிகமாகச் சொல்ல விரும்பவில்லை.

வரியே இல்லாத பட்ஜெட் என்று பத்திரிகையில் தலைப்பிடுகிறார்கள். வரியே இல்லையா ? கனம் முதலமைச்சர் அவர்கள் அப்படிச் சொல்வார்களா ? கனம் முதலமைச்சர் அவர்கள் நிதியமைச்சராக ஆனதிலிருந்து அவர்கள் போட்ட புது வரிகள் மட்டும் 19 வரிகள். கனம் பக்தவத்சலம் அவர்கள் நிதியமைச்சராக வந்து இந்தச் சட்டசபையிலே, சபையில் அனுமதிக்குக் கொண்டு வந்த வரிகள் 19 ஆகும். அதனால் இந்த மாநில ஏழை மக்களிடமிருந்து இந்த நான்கு ஆண்டுகளில் வசூலிக்கப் பட்ட பணம் 60 கோடி ரூபாய். அவர்களால் போடப்பட்ட புதுவரிகளின் வகையையும் வசூலான தொகையை மட்டும் உங்கள் அனுமதியின் பேரில் படிக்கிறேன்.

முதலாவது வரி—**Increase in the rate of assessment on wet lands and water-cess on dry lands**—நீர்த் தீர்வை, புன்செய் நில நீர்த் தீர்வை வரி மூலம் 3 கோடி 91 லட்சம். கடந்த நான்கு ஆண்டுகளிலே வசூலான தொகை இது. ஜூலை மாதம் 1962-ஆம் ஆண்டில் இது போடப்பட்டது.

இரண்டாவது வரி, மூன்றாவது வரி—**Increase in the rate of tax on Motor Vehicles and increase in the rate of tax on passengers and goods carried by Motor Vehicles**—பஸ் பிரயாண கட்டண வரி, மோட்டார் வாகன வரி இரண்டின் மூலம் வந்த பணம் 15 கோடி 7 லட்சம் ரூபாய்.

நான்காவது வரி—**Electricity Consumption Tax**—மின்சாரம் உபயோகிப்போர் கொடுக்கும் வரியினால் இந்த நான்கு வருஷத்தில் வந்த தொகை 9 கோடி 26 லட்சம்.

ஐந்தாவது வரி—**Increase in the rate of Sugarcane Cess**—கரும்பு தீர்வையை அதிகரித்ததினால் வந்த பணம் 1 கோடி 34 லட்சம்.

ஆறாவது வரி—**Increase in the rate of Stamp Duties**—பத்திரங்கள் கட்டண வரி மூலம் கிடைத்தது 4 கோடி 95 லட்சம் ரூபாய்.

ஏழாவது வரி—**Increase in the Betting Tax**—பந்தய வரியினால் வந்த தொகை 64 லட்சம் ரூபாய்.

எட்டாவது வரி—**Increase in the Registration Fees**—பதிவுக்கட்டண வரியினால் கிடைத்தது 1 கோடி 41 லட்சம் ரூபாய்.

ஒன்பதாவது வரி—**Doubling of the Central Sales Tax**—மத்திய விற்பனை வரியை இரட்டிப்பாக்கியதால் வந்த தொகை 5 கோடி 10 லட்சம் ரூபாய்.

பத்தாவது வரி—**Urban Land Tax**—நகரப் புற நில வரியின் மூலம் கிடைத்தது 90 லட்சம் ரூபாய்.





பதினொன்றாவது வரி—**Increase in the rate of Sales Tax on Luxury Articles from 7 to 10 per cent**—ஆடம்பரப் பொருள்களின் மீது உபரி விற்பனை வரி மூலம் கிடைத்தது 65 லட்சம் ரூபாய்.

பன்னிரண்டாவது வரி—**Surcharge on Electricity tariff on both High Tension and Low Tension Consumers**—மின்சாரக் கட்டண சர்சார்ஜ் மூலம் கிடைத்தது 6 கோடி 14 லட்சம் ரூபாய்.

பதின்மூன்றாவது வரி—**Increase in the rate of General Sales Tax on Cotton, Cotton Yarn, Cotton Waste, etc., from 1 per cent to 2 per cent**—பருத்தி, பருத்தி நூல், மற்ற பொருள்கள்மீது உள்ள வரியை இரண்டு சதவிகிதமாக ஆக்கிய காரணத்தால் கிடைத்த தொகை 1 கோடி 5 லட்சம் ரூபாய்.

பதினான்காவது வரி—**Increase in Central Sales Tax Revenue due to the revision of the General Sales Tax on Cotton, Cotton Yarn, Cotton Waste, etc.**—பருத்தி, பருத்திநூல், ஆகிய இனங்களின் மீதுள்ள பொது விற்பனை வரியை மாற்றியமைத்ததால் மத்திய விற்பனை வரி வருமானத்தில் அதிகரிப்பு ஒரு கோடி ரூபாய்.

பதினைந்தாவது வரி—**Increase of passenger fares in Madras State Transport Service**—அரசாங்க பஸ் பிரயாணிகள் கட்டணத்தை உயர்த்தியதால் வந்த வருமானம் 1 கோடி 10 லட்சம் ரூபாய்.

மேற்சொன்ன பதினைந்து வரிகளின் மூலமாக வந்த வருமானம் 52 கோடி 52 லட்சம் ரூபாய் ஆகும். கடந்த நவம்பரிலே போடப்பட்ட நான்கு வரிகளும்—விற்பனை வரி, நீர் வரி, நில வரி, மின்சார வரி—ஆகியவற்றில் போடப்பட்ட 8 கோடியையும் சேர்த்து 60 கோடி ரூபாய் அளவுக்கு மேல் வருமானம் வந்திருக்கிறது. நான் வரியே விதிக்க வேண்டாமென்று சொல்ல வரவில்லை. வரி கூடாது என்பது எங்கள் சித்தாந்தமுமல்ல. இவ்வளவு வரி விதிக்கப்பட்டதற்குப் பிறகும் நிலைமை என்ன ? நம்முடைய மாநிலத்தின் கடனைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். கடன்கார சர்க்கார், பிச்சைக்கார சர்க்கார் என்று சொல்லும்போது அமைச்சர்களுக்குக் கேட்பதற்கு கஷ்டமாக இருக்கிறது. ஆனால் இன்றைக்கு உண்மை நிலைமை என்ன ? நிலைமை மிகப் பயங்கரமாக இருக்கிறது. இந்தச் சர்க்கார் ஆட்சிபீடத்திற்கு வந்த பிறகு கடன் பளு கொஞ்சம் கூடக் குறையவில்லை. மத்திய சர்க்காரிடமிருந்து வாங்கிய கடன், நிதிக் கார்ப்பரேஷனிடம் வாங்கிய கடன், பொதுச் சந்தையில் வாங்கிய கடன் இவ்வளவும் சேர்ந்து 1962–63-ஆம் ஆண்டில் 264 கோடி ரூபாய், 1963–64-ல் 307 கோடி ரூபாய் பொதுக் கடன், 1964–65-ல் 339 கோடி ரூபாய் பொதுக் கடன், 1965-66-ல் 387 கோடி ரூபாய் பொதுக் கடன் என மதிப்பிடப்படுகிறது. இது இன்னும் அதிகமாகக் கூட ஆகலாம். நான்காண்டுகளுக்கு முன்பு 264 கோடி ரூபாயாக இருந்த பொதுக் கடன் இன்று 387 கோடி ரூபாய் அளவுக்கு உயர்ந்துவிட்டது. இது சிறு விவகாரம் அல்ல. இதை யார் கட்டப் போகிறார்கள் ? அதற்கு நிதி ஆதாரங்கள் என்ன ? எதிர்காலத் தலைமுறையினரின் மீது சுமையைத் தள்ளி விடுவது ஆகாதா ? அவர்களுக்கு நன்மை செய்யாவிட்டாலும் போகட்டும். 400 கோடி ரூபாய் கடன் என்றால் நமது செல்வ வளங்களின் நிலைமை என்ன என்றும் பார்க்க வேண்டும். இன்றைக்கு நம்மிடத்தில் இருக்கிற பெரிய நிறுவனம் எலக்ட்ரிசிட்டி போர்டு. அதில் 100 கோடி, 200 கோடி என்று முடக்கப்பட்டிருக்கிறது. வருகிற நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின்போது ஐந்து வருஷத்திற்கு அரசாங்கம் கொடுத்த கடனுக்கு வட்டி கொடுக்க முடியாத நிலை தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இதுதான் எலக்ட்ரிசிட்டி போர்டின் நிலவரம். ஸ்டேட் டிரான்ஸ்போர்ட்டின் நிலைமையைப்பற்றி திரு. அரங்கண்ணல் அவர்கள் சொன்னார்கள். தொழிலமைச்சர் அவர்களுடைய மேற்பார்வையில், பரிபாலனத்தில் இருக்கும் ஸ்டேட் டிரான்ஸ்போர்ட்டில் ஏறக்குறைய 10 கோடி ரூபாய் மூலதனம் போடப்பட்டுள்ளது. அதன் நிலைமையும் கூட இந்த வருடமும் அடுத்த வருடமும் வாங்கிய கடனுக்கு வட்டிக் கொடுக்கக் கூடிய நிலையில்

தான் உள்ளது. இந்த இரண்டு ஆண்டுகளிலும் எந்த நிலைமையில் அந்த வட்டியைக் கொடுக்க முடியும் என்றால், டீசல் ஆயில்மீது மத்திய சர்க்கார் வரி போடாமல் இருந்தால் வட்டியைக் கொடுக்க முடியும் என்று சொல்கிறார்கள். இப்படி ஓர் நிபந்தனை. ஆனால் அந்தக் கனவை நேற்றைய தினம் மத்திய நிதியமைச்சர் சசீந்திர சவுத்திரி அவர்கள் பாழ்படுத்தி விட்டார்கள். டீசல் ஆயிலுக்கு வரி விதிப்பு வந்துவிட்டது. பெரிய நீர்ப் பாசனத் திட்டங்களை நிறைவேற்றியுள்ளோம். அதனால் எல்லாம் வருமானம் வரும் என்று சொல்லலாம். பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டம் என்று இருக்கிறது. இதனுடைய மொத்த முதலீடு மின்சாரத் தைக் கழித்து, 24 கோடி 86 லட்சம் ரூபாய் ஆகும். அதிலே நமக்கு வரக்கூடிய வருமானத்தைப் பார்த்தால்—அந்தக் கணக்குபாணி எனக்குத் தெரியவில்லை ; நிதிக் காரியதரிசி அவர்கள்தான் எழுதியிருக்கிறார்கள்—·07 சதவிகிதம் லாபம் என்று இருக்கிறது. பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டத்தில் 24 கோடி 86 லட்சம் ரூபாய் செலவு செய்ததற்குப் பிறகு 100 ரூபாய்க்கு என்ன இலாபம் கிடைக்கிறது என்றால், 0·5 என்றால் அரைப் பைசாவாவது வரும்—·07 என்றால் அரைப் பைசாவுக்கும் அடுத்த கட்டத்தில் கூட அல்ல, 100 ரூபாய்க்கு இலாபம் ஒரு பைசாவில் 7-ல் ஒன்று—1/7பைசா இலாபம் என்று போய் நிற்கிறது. 100 ரூபாய்க்கு ஒரு பைசாகூட வருமானம் வரக் கூடிய நிலைமை இந்த நீர்ப்பாசனத் திட்டத்தில் இல்லை. மொத்தமாக பல நீர்ப்பாசனத் திட்டங்களை எடுத்துக் கொண்டு வருமானத்தைப் பார்த்தால் (—) 5·20 சதவிகிதம் என்ற நிலைமைதான் இருக்கிறது. நாம்தான் இப்படி என்றால் நமக்கு கடன் கொடுக்கிற இந்திய சர்க்காரின் கடன் விவரங்களின் நிலை நம்மைவிட படுமோசம். 1966 மார்ச் மாதம் 31-ம் தேதி வரை இந்திய அரசாங்கம் பட்ட கடன் 8,049 கோடி 80 லட்சம் ரூபாய். 1967-ம் வருஷத்தில் மார்ச் 31-ம் தேதி முடிய அது 8,920 கோடி 25 லட்சம் ரூபாயாக உயரும் என்று கூறப்படுகிறது. இந்திய அரசு வாங்கியுள்ள வெளிநாட்டு கடன் மட்டும் 2,629 கோடி 18 லட்சம் ரூபாய் இருக்கிறது. இந்த ஆண்டு இந்திய அரசின் நிதிநிலை அறிக்கையில் வரவு-செலவை ஈடுசெய்ய 270 கோடி ரூபாய் உள்ளூர் கடன், 785 கோடி ரூபாய் வெளிநாடுகளில் கடன், என்ற முறையில் திரு. சசீந்திர சவுத்திரி அவர்கள் நிதிநிலை அறிக்கையை சமர்ப்பித்திருக்கிறார்கள். ஏன் நமது கடன் வசூலை தள்ளிப் போடக் கூடாது ? இந்திய அரசு வெளிநாடுகளில் இருந்து குறைந்த வட்டியில் கடன் வாங்குகிறார்கள். உள்நாட்டுக் கடன் வேறு. அதற்கும் குறைந்த வெளி நாட்டுச் சலுகைகள் என்று இப்படியெல்லாம் இருக்கின்றன. இத்துடன் இந்திய அரசில், நாசிக்கில் கத்தை கத்தையாக காகிதம் எல்லாம் நோட்டாகி வருகிறது. வெளியே குறைந்த வட்டியில் பணம் வாங்கி நம்மை அழுத்துவானேன் ? இதற்கெல்லாம் இந்த சர்க்கார் என்ன செய்தது ? யோசித்துப் பார்க்க வேண்டும். இந்தச் சுமையெல்லாம் யார் மீது விழும் ? வரி வரி என்று சொல்கிறார்கள். வரி போடவில்லை என்று சொல்லிக்கொண்டு திரு. சசீந்திர சவுத்திரிக்குப் பின்னால் நமது நிதி மந்திரி ஒளிந்துகொண்டிருக்கிறார். இன்று புகையிலைக்கு வரி, சிகரெட்டுக்கு வரி, துணிக்கு வரி என்று வரி ஏற்றப்பட்டிருக்கிறது. இதில் நமக்கு என்ன கிடைக்கப் போகிறது ? அன்று முதலே நாங்கள் சொல்கிறோம். நம் மாநிலத்துக்குள்ள வரி இனங்கள் குறைந்துவிட்டன. இருக்கும் வரி இனங்களும் பறிக்கப்பட்டு வருகின்றன. மாநில அரசாங்கம் சரணாகதி அடைந்து விட்டார்கள். இதுதான் நான் சாட்டும் குற்றச்சாட்டு. பைனான்ஸ் கமிஷன் வந்தது. இதையெல்லாம் அவர்களிடம் சொன்னார் களா ? நம் மாநில அரசுக்கு ரெயில்வே கட்டண வரி என்று ஒரு வரி இருந்தது. ரெயில்வே ஃபாசஞ்சேர்ஸ் ஃபேர் ஆக்ட் (Railway Passengers Fare Act) என்பது. அது 1957-ல் டெல்லிக்கு ஒப்படைக்கப் பட்டுவிட்டது. தென் பிராந்திய ரெயில்வேயில் இப்போது வருமானம் 40 சதவிகிதம் அதிகமாகியிருக்கிறது. இந்தியா முழுவதற்கும் மொத்தம் 12 கோடியில் பங்கு போட்டுக் கொள்ளுங்கள் என்று சொல்கிறார்கள். இது நியாயமா, இதுபற்றி என்றாவது கேட்டார்களா. இந்த ரெயில்வே பாசஞ்சர் ஃபேர் ஆக்ட் மாநிலத்துக்குரியது. அதை ரிப்பீல் செய்தது தவறு. அதைத் திருப்பிக் கொடுங்கள் என்று என்றாவது கேட்டதுண்டா? இன்கம் டாக்ஸ் இருக்கிறது. இன்று இந்த வரியினத்தில் இருந்து நமக்கு





எவ்வளவு வந்து விட்டது ? வருமான வரியில் கிடைப்பதில் ஒரு பங்கு போட்டுக் கொடுக்கிறார்கள். ஆனால் கம்பெனிகளில், பெரும் வர்த்தக நிறுவனங்களில் இருந்து வரக்கூடிய வருமான வரி எல்லாம் டெல்லி கஜானாவிற்குத்தான் போகிறது. நமக்கு பங்கு வரும் இன்கம் டாக்ஸில் இந்த பதது ஆண்டுகளில் வருமானம் 50 சத விகிதம் தான் பெருகியிருக்கிறது. ஆனால் இந்த கம்பெனி, வர்த்தக நிறு வனங்கள் மூலம் கிடைக்கக் கூடிய வருமானம் 600 சதவிகிதம் பெருகி யிருக்கிறது. அந்த வரிப்பணம் எல்லாம் டெல்லிக்குத்தான் போகிறது. பொது வருமான வரியில் சேராது. நேற்று டில்லியில் போடப்பட்ட கம்பெனி வருமான வரியில் நமக்கு கால் காசுகூட கிடையாது. இது தான் நிலைமை. சுங்க வரி இருக்கிறது. பருத்தி, புகையிலை, சர்க்கரை போன்ற அன்றாடம் உபயோகிக்கக் கூடிய பொருள்களுக்குப் போடக்கூடிய விற்பனை வரி. இது மாநில அரசின் விற்பனை வரியினத்தில் இருந்தது. அவற்றையும் அவர்களுக்கே கொடுத்திருக்கிறோம். நமக்கு அவர்கள் இன்று என்ன கொடுத்திருக்கிறார்கள் ? சுங்க வரியும் அவர்களுக்கே போய்விட்டது. 20 சதவிகிதம் மொத்தத்தில் கொடுத்து விட்டு இந்தியா முழுவதற்கும் நீங்கள் பங்கு போட்டுக் கொள்ளுங்கள் என்று சொல் கிறார்கள். இது நியாயமா, இது முறைதானா ? சுங்க வரி மூலம் இன்று வருமானம் அதிகமாகக் கிடைக்க வரி உயர்த்தப்பட்டிருக்கிறது. பருத்தி நூலில் இருந்து கிடைக்கும் வரியிலும் நமக்கு பங்கு கிடையாது. போன ஆண்டு இந்த வரி மூலம், இந்த சுங்க வரி மூலம் 10 கோடி ரூபாய் கிடைத் திருக்கிறது. சுங்க வரிக்கு சர்சார்ஜ் என்று இவர்கள் போடலாம். ஆனால் அதை அவர்களே வைத்துக் கொள்வார்கள், அதில் நாம் பங்கு கேட்க முடியாது. இது விதிமுறை. இதுகுறித்தெல்லாம் ஃபைனான்ஸ் கமிஷ னிடம் சிபார்சு செய்யவில்லையா ? இதை மாற்ற வேண்டாமா ? அரசியல் சட்டத்தை மாற்ற வேண்டாமா ? சுங்க வரி மட்டுமே வந்தால் நம்முடைய வருமானம் பெருகிவிட வாய்ப்பிருக்கிறது. இவற்றையெல்லாம் செய்ய வில்லை. சேல்ஸ் டாக்ஸிலும் ஒரு உச்சவரம்பு நிர்ணயிக்க முயற்சி நடக் கிறது. இப்படி எல்லாவற்றையும் பறித்திருக்கிறார்கள். பல்லக்கு மானியம், விளக்கு மானியம், பூஜை மான்யம் என்று பழைய காலத் தில் கொடுப்பது போன்று டில்லி பேரரசால் நமக்கு மான்யங்கள் தரப்படு கிறது. மாநில அரசு மான்ய சர்க்காராகத்தான் நடக்கிறது. என்றாவது நம் அதிகாரங்களை நாம் கேட்டோமா ? மந்திரி அம்மையாரைக் காணோம். சுகாதார இலாகாவில் இருந்த ஒரு அதிகாரத்தையும் நாம் அவர்களுக்கு அனுப்பிவிட்டோம். அங்குள்ள அதிகாரங்கள் இங்கு வர வேண்டும். வரி இனங்களில் மட்டுமல்ல. ஆனால் நாமோ பல வரி இனங்களை அவர்களுக்கு நாம் விட்டுக்கொடுத்துக் கொண்டே போகிறோம். அந்நிலை குறித்து நாம் ஒரு தீர்வு காண வேண்டும். நான்காவது நிதிக் கமிஷன் தலைவராக திரு. ராஜமன்னார் அவர்கள் தலைவர் என்ற முறையில் ஒரு அறிக்கை எழுதினார். சில சமயங்களில் நாங்கள் டிஸெண்டிங் நோட் எழுதவில்லையா, அதுபோல் அவர்களும் டிஸெண்டிங் நோட் என்று போடாமல், சப்ளிமெண்டரி மினிட் ஒன்றை எழுதி இருக கிறார்கள். நாங்கள் சொல்வதையே அவர்கள் வற்புறுத்தியிருக்கிறார்கள். அதற்காக ராஜமன்னார் அவர்களுக்கு தமிழகம் நன்றி செலுத்துகிறது. திராவிட முன்னேற்றக் கழகத்தினர் எந்தக் கருத்தை பல்லாண்டுகளாக வற்புறுத்தி வருகிறார்களோ, எப்படி அதிகாரங்களை பரவலாக்க வேண்டு மென்று சொல்லி வருகிறார்களோ, எப்படி இந்திய அரசியல் சட்டம் முழுவதையும் மறு பரிசீலனை செய்ய வேண்டுமென்று சொல்லிக் கொண்டிருக்கிறோமோ அதே கருத்துக்களை அவர்கள் தெளிவாக சொல்லி யிருக்கிறார்கள். நான்காவது நிதிக் கமிஷன் அறிக்கையில் அவர்கள் கூறி யிருப்பதை உங்கள் அனுமதியோடு படிக்கிறேன்.

"After fifteen years of working the provisions of the Constitution, during which period four Finance Commissions have been appointed, I think the time is ripe to have a review of the Union-State financial relationship, particularly in view of the setting up of the Planning Commission. This review should be made by a special commission which can approach the several problems that have arisen in the

[திரு. கே. ஏ. மதியழகன்] [2nd March 1966

past and that are likely to arise in the future objectively and realistically. The scope and purpose of grants under articles 275 and 282 of the Constitution may be clarified and defined. A dual scheme of transfer of resources from the Centre to the States should completely avoid duplication and overlapping."

15 ஆண்டு காலம் அரசியல் சட்டத்தை அமுல்படுத்தியாகி விட்டது. அது விளைத்த பயங்கரக் கேடுகள் தெளிவாகத் தெரிகிறது. எனவேதான் இன்று அரசியல் சட்ட மறு பரிசீலனை தேவை. மாநிலங்கள் இன்று மிகச் சாதாரண இடங்களாக ஆகிவிட்டன. நம்மை டில்லி பேரரசில் கட்டியம் கூறுபவர்களாக வும், எஜமானர்களின் ஏவலுக்கு காத்திருப்பவர்களாகவும் ஆக்கியிருக்கிறார் கள் என்று நான் சொன்னால் அது கடுமையாக இருக்கும். நம் முதலமைச்சர் அவர்களின் திருவாய்மொழியில் சொல்கிறேன். நான்காவது பைனான்ஸ் கமிஷனுக்கு இந்த தமிழக அரசாங்கம் கொடுத்த அறிக்கையிலே உள்ள வாசகங்களைப் படிக்கிறேன்.

"When the Plan itself concedes certain fields of development as falling within the sphere of the States, it is incongruous to provide for the bulk of the resources needed on revenue account for the fulfilment of such plans by Central assistance. The present arrangement of providing for the States' needs for planned economic development by means of grants-in-aid administered by the various Central Ministries according to an elaborate pattern has tended to undermine the sense of financial responsibility of the States and to give the Central Ministries an opportunity to determine the course of action even in fields which under the Constitution are exclusively within the competence of the States. Even from the point of view of getting the best results for the moneys spent, the present cumbersome arrangements are undesirable, as quite often the States are tempted to take up schemes only because of the availability of grants for the purpose from the Centre."

11-00 a.m. இன்றைக்கு கனம் முதலமைச்சர் அனுபவித்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்குத் தெரியும், என்னென்ன சிக்கல்கள் இருக்கின்றன என்று. ஒவ்வொரு காரியத்தை நிறைவேற்றுவதற்கும், அந்த அளவுக்கு டில்லி சந்நிதானத்தில் காத்துக்கொண்டிருக்க வேண்டியுள்ளது. ஆளுக்குத் தகுந்த சட்டையாக அல்ல, சட்டைக்குத் தகுந்த ஆளாக நமது மாநிலத் திட்டங்கள் டில்லியால் உருமாற்றப்படுகின்றன. டில்லியிலிருக்கின்ற அமைச்சரகம் இந்த மானியம் வீட்டு வசதிக்கு, இந்த மானியம் ஹரி ஜனங்களுக்கு, இந்த மானியம் குடி தண்ணீருக்கு என்று எப்படி வகை செய்கிறதோ, அதற்குத்தகுந்தபடிதான் நாம் செலவிட வேண்டும். இப்படிப் பட்ட நிலைமையை, நமது பொருளாதார சுதந்திரத்தைப் பறிக்கும் கொடுமை யை மாற்றுவதற்கு அடிப்படையாக நாம் அரசியல் நிர்ணய சட்டத்தை பெரிய அளவில் மாற்றியாக வேண்டியிருக்கிறது. மாநிலங்களுக்கு என்று தனி யாக அதிகமாக அதிகாரங்கள் வந்தால்தான் இவற்றை எல்லாம் திறமை யாகவும், முழு அளவிலும் செய்ய முடியுமே தவிர இந்த நிதி நிலை அறிக்கை அல்ல, இதைப் போல பத்து நிதி நிலை அறிக்கைகள் வந்தா லும் நமக்கு விமோசனம் ஏற்படப்போவதில்லை. இந்த மாறுதலை செய்கின்றவர்கள், செய்கின்ற கட்சி ஆட்சி பீடத்திற்கு வர வேண்டும். அப்போதுதான் இப்படிப்பட்ட மாறுதல்களை நாம் எதிர்பார்க்க முடியும், வெற்றிகரமாய் நிறைவேற்ற முடியும் என்பதை உறுதியாக அறுதியிட்டுக் கூறுவேன்.

அடுத்து, முக்கியமாக, நிர்வாகத்தில் இருக்கின்ற அரசாங்க ஊழியர் களுக்கு நாம் என்ன செய்து கொடுத்திருக்கிறோம் என்பதைப் பார்க்கும் போது, அவர்களுடைய பெண்டு பிள்ளைகள், குழந்தை குட்டிகள் வாழ வேண்டாமா, அதற்குரிய வகையில் அரசாங்க ஊழியர்கள் $2\frac{3}{4}$ லட்சம்



2nd March 1966] [திரு. கே. ஏ. மதியழகன்]

பேர்களுக்கு நாம் என்ன வசதி செய்து கொடுத்திருக்கிறோம்? மத்திய சர்க்காருக்கும், மாநில சர்க்காருக்கும், அகவிலைப் படி கொடுப்பதில் இப்போதும் வித்தியாசம் இருந்துகொண்டிருக்கிறது. 90-லிருந்து 149 வரையிலும் சம்பளம் வாங்குகின்றவர்களுக்கு 8 ரூபாய் அகவிலைப் படியில் இப்போது வித்தியாசம் இருக்கிறது. அரிசிக் கடைக்காரன் இந்த வித்தியாசத்தைப் பார்ப்பானா? வாசுதேவனுக்கும் வடிவேலுக்கும், பரந்தாமனுக்கும் பாலுசாமிக்கும் இருக்கின்ற வித்தியாசத்தைக் கவனிப் பானா? 150 ரூபாய் முதல் 250 ரூபாய் வரையில் 11 ரூபாய் வித்தியாசம், 210 முதல் 399 ரூபாய் வரையில் 12 ரூபாய் வித்தியாசம், 400 முதல் 1,200 ரூபாய் வரையில் 10 ரூபாய் வித்தியாசம். இது மட்டுமல்ல, வீட்டு வாடகைப் படியில் பெரிய வித்தியாசம் இருந்துகொண்டிருக்கிறது. மத்திய சர்க்கார் கொடுக்கின்ற வீட்டு வாடகைப்படியை (ஹவுஸ் ரெண்ட் அலவன்ஸ்) எடுத்துக்கொண்டால் சம்பளம் ரூ. 100-க்கு மேலே இருந்தால் ரூ. 3,000 சம்ப ளம் வரை, சம்பளத்தில் 15 சதவீதம் வீட்டு வாடகைப் படி கொடுக்கப்படுகிறது. ஆனால் நமது மாநில அரசில் சம்பளம் 90 ரூபாய்க்குக் கீழேயிரு ந்தால் 10 ரூபாய் கொடுக்கப்படுகிறது. அடுத்தபடியாக இங்கே சம்பளம் ரூபாய் 90 முதல் 299 ரூபாய் வரையில் 15 ரூபாய் கொடுக்கப்படுகிறது. 300 ரூபாய் முதல் 500 ரூபாய் வரை சம்பளம் பெறுபவர்களுக்கு 20 ரூபாய் வீட்டு வாடகைப் படி. ஆனால் மத்திய சர்க்காரில் கொடுக்கப் படுவதை எடுத்துக்கொண்டால் 300 ரூபாய்க்கு 45, 400 ரூபாய்க்கு 60, 500 ரூபாய்க்கு 75 என்று மத்திய சர்க்காரிலுள்ள ஊழியர்கள் வீட்டு வாடைகைப்படி வாங்குகிறார்கள். இங்கு, 300 முதல் 500 ரூபாய் வரை 20 தான். ஆனால், மத்திய அரசில் 300-க்கு 45 ரூபாய், 400-க்கு 60 ரூபாய், 500-க்கு 75 ரூபாய். இந்த வித்தியாசம் ஏன் இருக்க வேண்டும் என்று தெரியவில்லை. வீட்டு சொந்தக்காரர்கள் மத்திய சர்க்காரில் வேலை பார்ப்ப வர் என்றோ அல்லது மாநில சர்க்காரில் வேலை பார்ப்பவர் என்றோ வித்தியாசம், கருணை பார்ப்பதில்லை. எல்லோரையும் ஒரேமாதிரியாகத் தான் பார்க்கிறான். இது எவ்வளவு மனிதாபிமான பிரச்னை என்பதைப் பார்க்க வேண்டும். அது மட்டுமல்ல, டெல்லி போன்ற நகரங்களில் ஸிட்டி காம்பன்ஸேடரி அலவன்ஸ், நகர ஈட்டுப் படி கொடுக்கப்படுகிறது. சென்னை "ஏ" நகரம் ஆக்கப்பட்டிருக்கிறது. ஆனால், நகர ஈட்டுப் படி இங்கே கொடுப்பதில்லை. இப்போதுள்ள விலைவாசியில் இவர்கள் எப்படி சமாளிப்பார்கள்? நகர வாழ்வில் நிம்மதி காண முடியுமா? இன்னொரு பரிதாபம் என்னவென்றால், ஜெனரல் ப்ராவிடண்ட் பண்டுக்கு பணம் வசூலிக்கும் விஷயத்தில்—எமர்ஜென்ஸி காலத்தில் சில உத்தரவுகள் போடப்பட்டன. இப்போது எமர்ஜென்ஸி கரைந்துகொண்டிருக்கிறது. ஏற்கனவே பிராவிடண்ட் நிதிக்காக 6 சத வீதம் கொடுத்துக்கொண்டிருந்த வர்கள் கூடுதலாக 5 சத வீதம் கொடுக்க வேண்டும் என்று நிர்ப்பந்திக்கப் பட்டது. இதை, இப்போதுள்ள நிலையில் உபரி 5 சத வீதத்தை எடுத்துவிட லாம். ஏழை, பணக்காரன் என்ற வித்தியாசத்தை ஒழிக்கப் போகிறோம் என்று சொல்லுகிறார்கள் ஆட்சியாளர்கள். ஆனால். அரசாங்க ஊழியர்களி லேயே பணக்காரர், ஏழை என பாரபட்சம் காட்டப்படுகிறது. சாதாரண என்.ஜி.ஓ.க்கள் 5 சத வீதம் அதிகமாக பிராவிடண்ட் நிதி கொடுக்க வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஏற்கனவே அவர்கள் 6 சத வீதம் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அதே நேரத்தில் இன்கம் டாக்ஸ் கொடுக்கக் கூடிய சர்க்கார் அதிகாரிகளுக்கு தாங்கள் ஏற்கனவே கொடுத்துக் கொண்டிருக்கக் கூடிய 6 சத வீதம் என்றிருப்பதோடு கூடுதலாக 2 சத வீதம் மட்டும் கொடுத்தால் போதும். ஏன் இந்த தாரதம்மியம் இருக்க வேண்டும்? முறையானதுதானா? சாதாரண என்.ஜி.ஓ. 11 சத வீதம் கொடுக்க வேண்டும். இன்கம் டாக்ஸ் செலுத்தக்கூடிய அதிகாரி கள் 8 சத வீதம் கொடுத்தால் போதும் என்று சொல்வது எந்த அள விற்கு நியாயம், அறநெறி என்று தெரியவில்லை. ஆகவே, இவர்களுக்கு இடையே இருக்கின்ற இந்த வித்தியாசத்தைப் போக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (மணி அடிக்கப்பட்டது). இந்தக் காரணங்களினால், அரசாங்க ஊழியர்களுக்கு வீட்டு வாடகைப் படி, நகர ஈட்டுப் படி கொடுக்க வேண்டும் என்பதை வலியுறுத்திக் கூறிக்கொள்கிறேன். மேலும், அரசாங்க ஊழியர்களுக்கு ராமுண்ணி மேனன் பே-கமிஷனுக்குப் பின்னால் எந்த

[திரு. கே. ஏ. மதியழகன்] [2nd March 1966

பே-கமிஷனும் நியமிக்கவில்லை. தற்போதுள்ள வாழ்க்கைச் செலவுப் புள்ளி, விலைவாசிகளின் ஏறுமுகம் ஆகியவற்றை சமாளிப்பதற்கும், தற்போது ஏற்பட்டிருக்கின்ற வித்தியாசங்களை எல்லாம் போக்குவதற்கும் அரசாங்க ஊழியர்களுக்கு ஒரு புதிய பே-கமிஷன் நியமிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்று நிதி அமைச்சர் சமர்ப்பித்திருக்கிற நிதி நிலை அறிக்கையால் நம்முடைய குறைகளைப் போக்கி பரிகாரங்கள் தேட முடியாது. இப்படிப் பட்ட நிதிநிலை அறிக்கைகள் எத்தனை வந்தாலும் நமக்கு விமோசனம் காண முடியாது. உணவுப் பிரச்னையைப் பொறுத்த வரையில், பழையக் கோட்டை அமைச்சரிடமிருந்து புதுக்கோட்டை அமைச்சரிடம் உணவு இலாகா மாறியதைத் தவிர புதிய மாறுதல் எதையும் பார்க்க முடியவில்லை. புரையோடியுள்ள புண்ணை கிறி ஆற்றுவதற்குப் பதிலாக புண்ணின் மேல் புனுகு பூசுவதால் எந்த பிரயோசனமும் இல்லை. அர்த்த சாஸ்திரியாக இருக்க வேண்டிய நிதியமைச்சர் அத்தர் வியாபாரி போல் இந்த நிதிநிலை அறிக்கையை அளித்திருக்கிறார்கள். இந்த மாநிலத்திலுள்ள ஏழை, எளியவர்களின் எதிர்காலம், நலன்கள், விமோசனம், வாழ்வு அத்தனையும், வேறு ஓர் புதிய கட்சி மக்களின் கட்டளையைப் பெற்று இந்த அரசை மாற்றி ஆட்சிப் பொறுப்பிலே அமர்வதில்தான் உள்ளது என்று கூறுவதோடு அந்த மாறுதலால்தான் மக்களின் நலன்கள் மட்டுமல்ல, ஜனநாயகமும் பாதுகாக்கப்படும் என்று கூறி முடிக்கிறேன்.

* **திரு. டி. என். வடிவேல்** : கனம் தலைவர் அவர்களே, 1966-67-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையை ஆதரித்து சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். இதற்கு முன்பு சென்ற 1965-66 நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்பட்டு பலமாக தர்மபுரியைப் பற்றி விவாதங்கள் நடந்திருக்கின்றன. ஒவ்வொரு ஆண்டும் எனக்கு முன்னால் இருந்த அங்கத்தினர்கள் அதில் கலந்துகொண்டு எங்கள் தொகுதி சம்பந்தமான கோரிக்கைகளைக் கூறியிருப்பார்கள் என்று நம்புகிறேன். இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையைப் பொறுத்த வரையில் நான் புதியவனாக இருக்கின்ற காரணத்தால் என் தொகுதியிலுள்ள சில கோரிக்கைகளைப் பற்றிச் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன். உணவு உற்பத்திக்காக 1966-67-ல் 9 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். இதில் சுமார் 25,000 பம்பு செட்டுகள் வைப்பதற்காக சுமார் 6 கோடி ரூபாய் வரை ஒதுக்கப்பட்டிருக்கிறது. என்னுடைய தொகுதியைப் பொறுத்த வரையில், மின்சாரம் இன்னும் பல கிராமங்களுக்கு விஸ்தரிக்கப்படாமல் இருக்கிறது. உணவு உற்பத்தியை எடுத்துக்கொண்டால், எங்கள் பகுதியைப் பொறுத்தவரையில், சுமார் 4,000 எக்கர்கள்தான் பயிர் செய்யப்பட்டிருக்கின்றன. இதிலிருந்து இந்த நெருக்கடி காலத்தில் 10 ஆயிரம் மூட்டைகள் கூட ப்ரொக்யூர்மெண்ட் செய்ய முடியவில்லை. காரணம் நல்ல அணைகள் கட்டவில்லை. சிறு பாசனங்கள் இருந்தும் அவையெல்லாம் சீர்படுத்தப்படாமல் இருப்பதுதான் பெருங் குறையாக இருந்துகொண்டிருக்கிறது. இதற்கு என்ன காரணம் என்று தெரியவில்லை. எங்கள் ஜில்லா பெரிய ஜில்லா. இந்த ஜில்லாவிலுள்ள வேலைகளை நிறைவேற்றுவதற்கு முதலிடம் கொடுப்பார்கள் என்று நம்புகிறேன்.

விலைவாசிகள் உயர்ந்துவிட்டது, அதன் காரணமாக அகவிலைகள் ஏறிவிட்டது என்று சொல்லியிருக்கிறார்கள். நகரத்திலே இந்த நிலைமை இருக்கும்போது, கிராமத்தில் இருக்கின்ற விவசாய குடிமக்களுக்கு நாம் பல உதவிகளை செய்து கொடுக்கவேண்டும். அதாவது விவசாய மக்களுக்குத் தேவையான கலப்பை, தோல், வடம், இரும்பு சாமான்கள் இவைகளின் விலை அதிகமாக இருக்கிறது. இதையெல்லாம் கட்டுப்படுத்த வேண்டும். பெரிய நகரங்களுக்கெல்லாம் எப்படி ரேஷன் முறையில் உணவுப் பொருட்களை கொடுக்கிறோமோ அதேபோன்று கிராமங்களிலுள்ளவர்களுக்கும் அவர்களுக்குத் தேவைப்படுகின்ற சர்க்கரை, ரவை, மைதா, சீமை எண்ணெய் போன்றவைகளைக் கூட்டுறவு முறையில் ரேஷன்



2nd March 1966] [திரு. டி. என். வடிவேல்]

கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். டவுனில் இருக்கின்றவர்களுக்கு கொடுக்கக் கூடிய பொருள்களை கிராமங்களிலுள்ளவர்களுக்கும் கொடுப்பதற்கு வழி செய்யவேண்டும். கிராமங்களிலுள்ளவர்கள்தான் உணவு உற்பத்தியைப் பெருக்கவேண்டும். விவசாயக் கருவிகள், பம்பு செட்டுக்கள் இவற்றுக்கெல்லாம் ஒன்றுக்கு நான்கு மடங்கு விலை அதிகமாகியிருக்கிறது. இதையெல்லாம் கட்டுப்படுத்தி குறைந்த விலையில் கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டுகிறேன்.

மேலும் பயன்படாமல் இருக்கும் நிலங்களை ஏழைகளுக்கு உணவு உற்பத்திப் பெருக்கத்திற்காகக் கொடுக்கவேண்டும். தர்மபுரி ஜில்லாவில் தொட்டம்பட்டி அருகில் 900 எக்கரும், அதரபாடி கிராமம் அருகில் சுமார் 1,000 எக்கரும், சாம்செட்டிப்பட்டி பக்கம் சுமார் 450 எக்கருமாக இந்த இடங்களில் எல்லாம் விவசாயத்துக்குரிய காலி இடங்கள் கிடக்கின்றன. இவைகளை விவசாயம் செய்யும்போது, அவர்களுக்கு 50 ரூபாய், 100 ரூபாய் தண்டத் தீர்வை போடுகிறோம். இப்படிப்பட்ட நிலங்களை எல்லாம் அவர்களுக்கே சொந்தமாக பட்டா செய்து கொடுத்துவிட்டால் விவசாய மக்கள் நல்ல முறையில் முன்னேறுவதற்கு வசதியாக இருக்கும்.

கூட்டுறவு முறையில் ஆறு மாதக் கடன் கொடுத்து வருகிறோம். முன்பெல்லாம் ஒரு வருடம் வரை திருப்பிச் செலுத்தக்கூடிய கடன் கொடுத்துக் கொண்டிருந்தோம். ஆறு மாதம் என்றிருப்பது விவசாயிகளுக்குக் கஷ்டமாக இருக்கிறது. ஆகவே, இதை மூன்று ஆண்டு காலக் கடனாகக் கொடுத்தால் விவசாயிகளுக்கு நல்ல வாய்ப்பும் வசதியும் இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். அடுத்தபடியாக, தர்மபுரி ஜில்லாவில் பஞ்சப்பட்டி அணைத் திட்டம் என்று ஒன்று இருக்கிறது. இதைப் பற்றி எனக்கு முன்னால் இருந்தவர்கள் பேசியிருப்பார்கள் என்று நினைக்கிறேன். நான் சென்ற மன்ற கூட்டத்தில் பேசி இருக்கிறேன். இதை நிறைவேற்றுவதன் மூலமாக ஆயிரக் கணக்கான எக்கர்களுக்குப் பயன்படும். இதன்மூலமாக உணவு உற்பத்தியைப் பெருக்கி மற்ற ஜில்லா மக்களுக்கும் மற்றவர்களுக்கும் உணவு அளிக்கமுடியும். ஆகவே இதற்கு அரசாங்கம் ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். தர்மபுரியிலே அரசாங்க பெண்கள் ஹைஸ்கூல் இருக்கிறது. அந்த ஹைஸ்கூலிலே சுமார் 978 மாணவிகள் படிக்கிறார்கள். அந்தக் காலத்திலே ஆரம்பிக்கப்பட்ட எலிமெண்ட்ரி ஸ்கூல் அது. அதை அப்படியே ஹைஸ்கூலாக, மாற்றி, குண்டுச் சட்டியில் குதிரை ஓட்டுவது என்று சொல்லுவார்களே அந்த மாதிரி அந்த பள்ளிக்கூடத்தில் இப்போது 978 மாணவிகள் படிக்கிறார்கள். அந்தப் பள்ளிக்கட்டடத்தின் இடம் சுமார் 125 அடி நீளம், 100 அடி அகலம்தான் இருக்கும். அந்தப் பள்ளிக்கூடம் ஒரே இடத்தில் நடக்கவில்லை. பக்கத்தில் வாடகைக் கட்டடம் ஒன்றிலும், 1, $1\frac{1}{2}$ பர்லாங் தூரத்தில் ஒரு கட்டடத்திலும் ஆக மூன்று இடங்களில் அந்தப் பள்ளிக்கூடம் நடக்கிறது. வெகு தூரத்திலும், பல இடங்களிலும் பள்ளி இருப்பதால் பெண்களை பள்ளிக்கு அனுப்ப முடியாத நிலையில் பலர் இருக்கிறார்கள். சுமார் $1\frac{1}{2}$ மைல் தூரத்தில் சர்க்காருக்குச் சொந்தமான 9 எக்கர் நிலம் இருக்கிறது. அதை பெண்கள் பள்ளிக்கூடத்திற்காக அக்வயர் செய்து கொடுக்கவேண்டும். இல்லையென்றால் கோவிலுக்குச் சொந்தமான நிலம் 3 எக்கர் இருக்கிறது தர்மபுரிக்குப் பக்கத்தில். கோவிலுக்கு அதற்குப் பதிலாக நிலத்தை வேறு இடத்தில் வாங்கித் தந்து விடுகிறோம். அந்த நிலத்திலாவது ஆண்களுக்கு அவர்களுடைய கல்விக்கு எப்படி முக்கியத்துவம் கொடுக்கிறோமோ அந்த முறையில் பெண்கள் கல்விக்கு முதலிடம் கொடுத்து இதற்கு கட்டடங்களை கட்டிக் கொடுத்து ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

தர்மபுரியில் இந்த ஆண்டுதான் கல்லூரி ஏற்பட்டது. 3—4 மாதங்கள் கழித்துதான் ஹாஸ்டல் வசதி செய்து தந்தோம். ஹாஸ்டல் இல்லாத காரணத்தினால் பல மாணவர்கள் வெளியிலிருந்து வந்து தங்கிப் படிக்க வசதி இல்லாது இருந்தது. நல்ல முறையில் ஹாஸ்டல் வசதிகளுக்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். புதிதாக ஆரம்

பிக்கப்பட்டதால் ஸ்காலர்ஷிப் குறைவாகத்தான் வந்திருக்கிறது. ஜில்லா புதிதாக இருப்பதால் அதிகமாகக் கொடுக்கவில்லை. ஸ்காலர்ஷிப்புகளையும் அதிக அளவில் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த ஆண்டு டிக்ரி கோர்ஸ் ஏற்படுத்த வசதியும் வாய்ப்பும் இருக்கிறது. ஆகவே பி.ஏ. கோர்ஸ் ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தர்மபுரியிலே எந்த விதத் தொழில் பேட்டையும் கிடையாது. தொழில் பேட்டை ஏற்படுத்தவேண்டும். ஜில்லாவிற்கு ஒரு நூற்பாலை வைக்கவேண்டுமென இருக்கும் கோரிக்கைக்கு ஏற்ப அங்கே நூற்பு ஆலை வைக்கவேண்டுமென்று திட்டம் இருக்கிறது. தர்மபுரிக்கு நூற்பு ஆலை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பிற்பட்ட ஜில்லா என்று சொல்லுவதை இரண்டு மூன்று ஆண்டுகளில் மாற்றி முன்னேற்றம் அடையச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தர்மபுரியிலே ஹொகனக்கல் திட்டம் என்ற திட்டம் இருக்கிறது. மைசூர் மாநிலமும், சென்னை மாநிலமும் சேர்ந்து பேசி அந்தத் திட்டத்தை முடித்தால் சுமார் 800 மெ.வா. மின்சாரம் கிடைக்கும். அது விவசாயிகளுக்கு நன்மையாக இருக்கும். அந்தத் திட்டத்தையும் முடிந்த அளவுக்குச் சீக்கிரமாக, சீரிய முறையில் இரண்டு மாநிலமும் உடன்பட்டு நல்ல முறையில் செய்து மின்சாரத்தை உற்பத்தி செய்யவேண்டும். அங்கே அணையும் கட்டித்தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எங்கள் ஜில்லாவிலே ஹரிஜனங்கள் ரொம்ப நாட்களாக வீட்டு வசதியும், குடி தண்ணீர் வசதியும், வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அந்த வசதிகள் இல்லாமல் இருக்கின்றன. அந்த ஹரிஜனங்களுக்கு வேண்டிய நிலத்தை அக்வயர் செய்து வீட்டுக்கு வேண்டிய வசதிகளைச் செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தர்மபுரி முனிஸிபாலிட்டியாக ஆகி விட்டது. பஞ்சாயத்தாக இருந்த நேரத்தில் மதிய உணவுத் திட்டம் நல்ல முறையில் நடந்து வந்தது. முனிஸிபாலிட்டியாக ஆனதால் இந்தத் திட்டம் சரிவர நடைபெறவில்லை. காரணம் ஆசிரியர்கள் ஆங்காங்கு மக்களிடத்திலே வசூல் செய்து, அந்தத் திட்டத்திற்கு நபருக்கு 4 பைசா வசூல் செய்து, சர்க்காரிடத்திலிருந்து 6 பைசா பெற்று வந்தார்கள். பிள்ளைகளுக்கு சீருடை வழங்க வசூல் செய்வதால் மதிய உணவுத் திட்டப்பணி நின்றுவிட்டது. தர்மபுரி பஞ்சாயத்தாக இருந்தபோது 2½ லட்சம் ரூபாய் வந்தது. முனிஸிபாலிட்டியாக ஆனவுடன் இப்போது 7 லட்சம் ரூபாய் வருகிறது. 4 பைசா போடாமல் சர்க்காரிடத்திலிருந்து 6 பைசா கொடுப்பதற்கில்லை என்று சொல்லுகிறார்கள். 2½ லட்சம் ரூபாய் வருமானம் இருந்தபோது பஞ்சாயத்திலிருந்து தொகை கொடுத்தோம். முனிஸிபாலிட்டியாக ஆன பிறகு பெற முடியாமல் இருக்கிறது. உடனடியாக இந்தத் திட்டம் நடப்பதற்கும் வழி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தர்மபுரி பஞ்சாயத்தாக இருந்த காலத்தில் குடி தண்ணீர் திட்டம் விஸ்தரிக்கப்படவேண்டும் என்று, அந்தத் திட்டத்தைப் பரிசீலனை செய்து முடித்துவிட வேண்டுமென்று இருந்தது. யுத்த நெருக்கடி காரணத்தினால் அந்த வேலைகளை நிறுத்தி வைத்து விட்டார்கள். யுத்தம் தீர்ந்து போனால் பரிசீலனை செய்வதற்கு முனிஸிபாலிட்டியிலிருந்து 16,000 ரூபாய் கட்டவேண்டுமென்று சொல்லி ஸ்பெஷல் ஆஃபீஸர் 16,000 ரூபாயைக் கட்டி விட்டார்கள். அந்தத் திட்டத்தை நிறைவேற்றினால் வரும் காலத்தில் இந்த ஜில்லா முன்னேற வழி இருக்கிறது. ஆகாரம் முக்கியம் என்பது போல குடி தண்ணீரும் முக்கியம். ஆகவே இதைச் செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த ஆண்டிலே 250 ட்ராக்டர்கள் வழங்கவேண்டுமென்று இருக்கிறது. 250 என்பது போதாது. ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனுக்கும் ஒரு ட்ராக்டர் கொடுத்தால் நலமாக இருக்கும். எங்கள் தாலூகாவில் மேட்டு நிலமாக இருக்கிறது. எந்தவிதமான வசதியும் இல்லாமல்





இருக்கிறது. ஒவ்வொரு யூனியனுக்கும் ஒரு ட்ராக்டர் கொடுத்தால் செவ்வையாக புன்செய் தானியங்கள் பயிரிட வழிவகையாக இருக்கும் என்று கூறிக்கொள்கிறேன்.

இப்போது கிணறு வெட்ட 5,000 ரூபாய் கொடுக்க சர்க்காரிலே திட்டம் தீட்டியிருக்கிறார்கள். எங்கள் ஜில்லாவிலே 5,000 கொடுப்பதாக இருக்கிறதா என்றால் இல்லை. மேல் உத்திரவை எதிர்நோக்கி இருக்கிறோம். அந்த உத்திரவை அனுப்பி, உடனடியாக விவசாயிகளுக்கு உதவியைக் கொடுத்து மக்கள் பயனடைந்து விவசாயம் பெருக வழி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு எங்கள் பகுதியில் சுகாதார நிலை மிகப் பின்தங்கிய நிலையில் இருக்கிறது. சுகாதார வசதிகளையும் தர்மபுரி மக்களுக்கும் நல்ல முறையில் செய்துதர ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எங்கள் ஜில்லாவில் ரோடு வசதி மிக மிகப் பிற்போக்காக இருக்கிறது. எங்கள் ஜில்லா எல்லா வகையிலேயும் பிற்போக்காக இருக்கிறது. ஆரம்பத்திலும், போன ஆண்டும் எங்கள் தொகுதியைப்பற்றி. தீவிரமாக விவாதங்கள் நடந்திருக்குமெனச் சொன்னேன் என்றால் மந்திரிகள் பார்வை எங்கள் பக்கம் திரும்பவேண்டும் என்றுதான். பிற்பட்ட பகுதியாக இருந்தாலும் முற்போக்கு அடைய வசதி இருக்கிறது. ரோடு வசதி பின்தங்கி இருக்கிறது. ரோடு போட பஞ்சாயத்தில் பணம் கிடையாது. நிலத்தை அக்வயர் செய்யவேண்டும். அக்வயர் செய்தால் தான் ரோடு போட முடியும். ஆகவே வேண்டிய நிலத்தை அக்வயர் செய்து அரசாங்கமே பணம் கொடுத்து நிலம் அக்வயர் செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முதல் மந்திரி அவர்கள் கொண்டு வந்துள்ள நிதிநிலை அறிக்கையை ஆதரித்து என் உரையை முடித்துக் கொள்ளுகிறேன். வணக்கம்.

* **திரு. ஆ. கு. சுப்பையா :** மதிப்புக்குரிய சபாநாயகர் அவர்களே, கனம் முதல் அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்திருக்கக் கூடிய வரவு-செலவு அறிக்கைமீது சில விஷயங்களை சொல்ல ஆசைப்படுகிறேன்.

இன்றையதினம் வேளாண்மை உற்பத்தியைப் பெருக்குவதன் மூலமாகத்தான் ஜனநாயக சோஷலிஸத்தின் லட்சியத்தை அடைய முடியும் என்பதை அதிகமாக வலியுறுத்திக் கூறியிருக்கிறார்கள். வேளாண்மை உற்பத்தியைப் பெருக்கவேண்டுமென்று சொன்னால், நம்முடைய ராஜ்ய அரசாங்கம் கொண்டு வந்துள்ள நில சம்பந்தப்பட்ட சட்டங்களை முறையாக அமல் நடத்த வேண்டிய ஒரு அவசியம் நமது மாநிலத்திலே இருந்து கொண்டிருக்கிறது. மதிப்புக்குரிய மத்திய உணவு அமைச்சர் அவர்கள் சில நாட்களுக்குமுன் சொல்லுகிற போது, எந்த நாட்டிலே நிலச் சட்டங்கள் கண்டிப்பாக அமல் நடத்தப்பட்டிருக்கிறதோ அந்த நாட்டிலேதான் உணவை அதிகமாக உற்பத்தி செய்து பற்றாக்குறையைப் போக்குவதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன என்று கூறியிருக்கிறார்கள். அதுபோல, நம்முடைய நாட்டிலும் கொண்டு வந்திருக்கக்கூடிய நிலச் சட்டங்களை முறையாக அமல் நடத்துவதற்கு வேண்டிய துரிதமான நடவடிக்கைகளை அரசாங்கம் எடுத்துக்கொள்ளவேண்டும் என்று இந்த சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நில உச்ச வரம்புச் சட்டம் மூலமாக நான்கு ஆண்டுகளுக்குப் பின்னும்கூட உபரியாக 4,031 ஏக்கர் நிலங்கள்தான் எடுக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னால், அதற்கான காரணங்கள் என்ன என்பதை அரசாங்கம் பரிசீலனை செய்வது சரியானதாக இருக்க முடியும். பல ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலம் கிடைக்கும் என்பதற்காக இந்த மாதிரியான ஒரு சட்டம் கொண்டுவரப்பட்டது. இந்த சட்டத்தினுடைய பலனை பார்க்கும்பொழுது விவசாயிகள் பெரிதும் ஏமாற்றம் அடைந்திருக்கிறார்கள் என்பதைத்தான் எடுத்துக்காட்டுகிறது. ஆகவே, நில உச்சவரம்புச் சட்டம் மோசடி செய்யப்பட்டிருக்கிறது என்பதை நான் இந்த சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இனாம் சட்டங்களும் அதே

[திரு. ஆ. கு. சுப்பையா] [2nd March 1966

கதியிலேதான் இருந்துகொண்டிருக்கிறது. சேலம் மாவட்டம், புதுக்கோட்டை பிரதேசம், செங்கற்பட்டு போன்ற இடங்களில் உள்ள கிராமங்களில் இனும்தார்கள் விவசாயிகள் அனுபவத்தில் இருக்கக்கூடிய மரங்கள், தானியங்களை எடுத்துக்கொண்டுபோகிறார்கள். அதைத் தடுப்பதற்கு எந்த விதமான நடவடிக்கையும் எடுத்துக்கொள்ளாத ஒரு நிலை ஏற்பட்டிருக்கிறது.

இந்த ஆண்டு தஞ்சை மாவட்டத்தை எடுத்துக்கொண்டால், அங்கு ஏற்பட்டிருக்கக்கூடிய தானிய விளைவு பற்றுக்குறை காரணமாக, குத்தகை வார விவசாயிகள் நூற்றுக் கணக்கானவர்கள் நிலத்திலிருந்து வெளியேற்றப்படக்கூடிய ஒரு நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இதற்கு முன்னால் பேசிய தஞ்சை மாவட்ட சட்ட மன்ற உறுப்பினர்கள் எதார்த்தமாக விளையாத பகுதிகளுக்கு நில வரி வஜா செய்யவேண்டும் என்று கூறியிருக்கிறார்கள். நிலவரி வஜா செய்வதோடு மாத்திரமல்ல, குத்தகையையும் குறைக்கவேண்டும் அல்லது தள்ளுபடி செய்யவேண்டும். இதற்கான ஒரு சட்டத்தை அரசாங்கம் கொண்டுவரவேண்டும். இன்றையதினம் அரசாங்கத்தினால் ஏற்படுத்தப்பட்டிருக்கிற ரெவின்யூ கோர்ட்டுகள் எல்லாம் நில வெளியேற்ற கோர்ட்டுகளாக இயங்கிக்கொண்டிருக்கின்றன. குத்தகை நெல் அளிக்கவில்லை என்பதற்காக விவசாயிகள் மீது வழக்கு தொடரப்பட்டு அவர்கள் நிலத்திலிருந்து வெளியேற்றப்படுகிறார்கள். ஆகவே, குத்தகை பாக்கியிருக்கிறது என்பதற்காக அல்லது குத்தகை நெல் அளக்கவில்லை என்பதற்காக எந்தக் காரணத்தைக் கொண்டும் அவர்களை நிலத்திலிருந்து வெளியேற்றக்கூடாது என்ற ஒரு சட்டத்தைக்கொண்டு வந்து, விவசாயிகள் தொடர்ந்து நிலத்தில் உழுவதற்கு வேண்டிய பாதுகாப்பு அளிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

அதிக உற்பத்தி செய்வதற்கு போட்டிருக்கக்கூடிய திட்டம் நிறைவேறவில்லை என்பதற்கான காரணங்களை கனம் முதல் அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். நைட்ரஜன் உரம் பற்றுக்குறைதான் காரணம் என்று சொல்லியிருக்கிறார்கள். இந்த ஆண்டு நமது ராஜ்யத்திற்கு 76,000 டன் உரம் தேவை. ஆனால் 64,000 டன் தான் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே, 12,000 டன் பற்றுக்குறை என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இம்மாதிரி 12,000 டன் உரம் போதவில்லை என்று சொன்னால், விவசாயிகளுக்குத் தேவையான காலத்தில் உரம் கொடுப்பதற்கு வேண்டிய நடவடிக்கை எடுத்துக்கொள்ள முடியாத ஒரு நிலை இருக்கிறது. மற்றொரு கஷ்டம் என்னவென்று சொன்னால், உர விநியோகம் கோவாபரேடீவ் சொசைடிகள் மூலமாகச் செய்யப்படுகிறது. தஞ்சை மாவட்டத்திலுள்ள கூட்டுறவு நாணய சங்கங்களை எடுத்துக்கொண்டால் ரூ. 1 கோடி 86 லட்சம் பாக்கி இருக்கிறது என்று சொல்லுகிறார்கள். அதனால் நூற்றுக் கணக்கான கிராம கூட்டுறவு நாணய சங்கங்கள் செயல்பட முடியாத அளவுக்கு இருந்து கொண்டிருக்கின்றன. இந்த வருஷம் எவ்வாறு அந்தத் தொகையை வசூல் செய்யப் போகிறார்கள் என்பது கேள்விக்குறியாக இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே, அம்மாதிரி பணத்தைத் திருப்பிக் கொடுப்பதற்கு சக்தியில்லாத ஒரு நிலை ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னால் கூட்டுறவு நாணய சங்கங்களின் கடன் வசூலை ஒத்திவைப்பதற்கு அரசாங்கம் முன்வரவேண்டும். இல்லை என்று சொன்னால் விவசாயிகளுக்கு காலாகாலத்தில் உரம் கிடைப்பது அரிதாகப் போய்விடும்.

தஞ்சை மாவட்டத்தை எடுத்துக்கொண்டால் போக்குவரத்து சாலைகளை அதிகமாக சீர் செய்யவேண்டிய ஒரு நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. இதுபற்றி பல தடவைகள் சொல்லியிருக்கிறோம். எங்கள் பிரதான கோரிக்கை என்னவென்றால், ரெயில்வே செஸ் பண்டிலிருந்து சாலை மான்யமாகவும், பாலங்கள் கட்டுவதற்கும் பணம் அதிகமாக ஒதுக்கி, அந்த வேலைகளை துரிதமாகச் செய்து கொடுக்க வேண்டுமென்று நாங்கள் கோரிக்கொண்டிருக்கிறோம். அந்தக் கோரிக்கையை அரசாங்கம் கவனித்து ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



2nd March 1966] [திரு. ஆ. கு. சுப்பையா]

தஞ்சை மாவட்டத்தில் சிறிய பாசன வேலைத் திட்டங்களின்கீழ் அந்த மாவட்டத்தில் இருக்கக்கூடிய நூற்றுக்கணக்கான குளங்களை ஆழப்படுத்தி மராமத்து செய்வதன் மூலம் தண்ணீர் பற்றுக்குறை ஏற்படக்கூடிய காலங்களில் பம்பு செட்டுகள் மூலம் விவசாயத்திற்கு தண்ணீர் இறைத்து பயிரை பாதுகாக்க முடியும். அம்மாதிரியான ஒரு திட்டத்தை சிறிய நீர்ப்பாசனத் திட்டத்தின்கீழ் கொண்டுவருவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யவேண்டும்.

தஞ்சை மாவட்டத்தில் கோவில்களுக்கும், மடங்களுக்கும் சொந்தமாக இருக்கும் நிலங்களிலுள்ள விவசாய குத்தகைதாரர்களுக்கு அந்த நிலங்களில் கிணறு வெட்டவோ அல்லது இதர பாசன வசதிகள் செய்து கொள்ளவோ முடியாத ஒரு நிலைமை ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. சொந்தமாக நிலம் இல்லாமல் இருக்கக்கூடிய ஒரு காரணத்தினால், கோவில், மடங்களுக்குச் சொந்தமான கிராமங்களில் பொது கிணறுகள் வெட்டி விவசாயிகளுக்கு பாசன வசதி செய்துகொடுக்கவேண்டும் என்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன். இல்லை என்று சொன்னால், குத்தகைதாரர்களுக்கு கிணறு வெட்டுவதற்கு வேண்டிய கடனைக்கொடுக்க நடவடிக்கை எடுத்தால் நலமாக இருக்கும். இந்த வருஷம் தாளடிப் பயிரை பாதுகாப்பதற்கு 177 பம்பு செட்டுகள் கொண்டுவந்திருப்பதாகச் சொல்லப்பட்டது. ஆனால், பம்பு செட்டுகள் வருவதற்கு முன்பாகவே பயிர்கள் காய்ந்து போய்விட்டது. காலாகாலத்தில் பம்பு செட்டுகள் வந்து சேரவில்லை. இம்மாதிரி நிர்வாகக் கோளாறுகளின் காரணமாக, பயிர்களை பாதுகாக்க முடியாத நிலையில் பெருத்த நஷ்டத்திற்கு ஆளாக வேண்டிய நிலைமையில் விவசாயிகள் இருந்து கொண்டிருக்கிறார்கள்.

நமது ராஜ்யத்தில் 17 லட்சத்திற்கு மேற்பட்ட ஏகர் நிலங்கள் சாகுபடிக்கு கொண்டுவரப்படாமல் தரிசு நிலங்களாக இருக்கின்றன என்று சொல்லப்படுகிறது. அந்த நிலங்களையெல்லாம் விவசாயத் தொழிலாளிகளுக்கு, நிலம் இல்லாதவர்களுக்கு குறிப்பாக ஹரிஜனங்களுக்கு விநியோகம் செய்தால், அந்த நிலங்களில் விவசாயம் செய்து அதிக உற்பத்தி செய்வதற்கு வாய்ப்பு ஏற்படும். ஆகவே, தரிசு நிலங்கள் இல்லாத அளவுக்கு இந்த ராஜ்யத்தில் எந்த பாகத்தில் தரிசு நிலம் இருந்தாலும், நஞ்சையாக இருந்தாலும் சரி, புஞ்சையாக இருந்தாலும் சரி, அந்த நிலங்களையெல்லாம் விவசாயத்திற்கு கொண்டுவருவதன் மூலம் உற்பத்தியை அதிகரிக்க முடியும். அதனால் நமக்கு ஏற்பட்டிருக்கக் கூடிய உணவுப் பற்றுக்குறையைப் போக்குவதற்கு முடியும் என்ற ஒரு நிலையில் தரிசு நில சாகுபடித் திட்டத்தை அரசாங்கம் கொண்டுவந்தாகவேண்டும் என்று நான் இந்த சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

விவசாயிகளுக்கு நியாயமான விலை கிடைப்பதற்கு சர்க்காரிலே விலை நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே, நியாயமான விலை பெற வேண்டுமென்று இன்றைய தினம் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கக் கூடிய சர்க்கார் தானியக் கிடங்குகளுக்கு விவசாயிகள் தானியங்களைக்கொண்டு சென்றால், ஒரு வாரம் அல்லது 10 தினங்களுக்கு மேலாகிறது அவர்களுக்கு பணம் கிடைப்பதற்கு. ஆகவே, அம்மாதிரி நிலைமை இல்லாமல், இன்னும் அதிகமான சிப்பந்திகளை நியமித்து உடனடியாக விவசாயிகளுக்கு தங்களுடைய தானியத்திற்கு பணம் கிடைப்பதற்கு வசதி செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நமது மாநிலத்தில் பல பிரதேசங்களில் தண்ணீர் தட்டுப்பாட்டினால் 11-30 a.m.
விவசாயம் நல்ல முறையில் இல்லாமல் பெரிய பஞ்சம் ஏற்படக்கூடிய ஒரு நிலைமை இருந்துகொண்டிருக்கிறது. திருநெல்வேலி, இராமநாதபுரம், புதுக்கோட்டை போன்ற இடங்களில் இம்மாதிரி நிலைமை ஏற்படும் போல் ஒரு அச்சம் இருந்துகொண்டிருக்கிறது. ஆகவே, இந்தப் பிரதேசங்களில் பஞ்ச நிவாரண வேலைகளைச் செய்வதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அரசாங்கம் எடுத்துக்கொள்ள வேண்டும். இந்த ஆண்டு தஞ்சாவூர் ஜில்லாவில் வரி வஜா 25 சத விகிதம் அல்லது 50 சத விகிதம் என்பதைக் கணக்கில் எடுத்துக்கொள்ளாமல், நில வரியை கெடுபிடியாக வசூலித்துக்கொண்டிருக்கிறார்கள். ஓரளவாவது வரிவஜா செய்வதற்கு நட-

[திரு. ஆ. கு. சுப்பையா] [2nd March 1966

வடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். குத்தகை தள்ளுபடி செய்வதற்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். அரசாங்கம் இதிலே தாமதமாக இருக்கக்கூடாது என்று சொல்லிக்கொண்டு, எனது உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* SRIMATHI B. LAKSHMINARASAMMA: Mr. Speaker, Sir, I welcome the Budget proposals for the coming year, for we see in it the Government's determination to consolidate the gains of the third plan and also its efforts to achieve as much as possible in the first year of the fourth plan and thus prepare itself for the difficulties and challenges of the remaining years of the fourth plan. I am glad to note that enough emphasis has been laid on the need to increase food production and that a good percentage of our plan outlay is to be spent on development of agriculture.

Food is the most difficult problem now facing us. As the monsoons have not been kind to us there may be food shortages in our State during the coming lean months. There is a feeling that our agriculture has not received the same kind of concentrated attention as some of our spectacular industrial schemes. There is urgent need for revision of our food production and agricultural policies based on our experiences so far. Steps have to be taken to increase production of fertilizers, pesticides and improved agricultural implements and machinery by extending all help and assistance to those who are in a position to manufacture them. Minor irrigation facilities have to be extended and lift irrigation of under water sources should be encouraged by increased supply of electric power to pumpsets and by sinking of filter points and tube wells. Quality seeds of high yielding varieties should be popularised and distributed at subsidised rates. Timely credit at cheaper rates of interest should be made available to the farmers. They should be advised to modernise and mechanise their agriculture and farm methods. The fact that our yield per acre is low, should give us confidence to increase our production and I am sure the required results can be achieved if we can utilise the best of our administrative talents and the expert knowledge gained in our research stations.

Sir, the social benefits conferred at present on Government employees and industrial labour are denied to village agriculturists who frequently suffer from the vagaries of the monsoons and other natural calamities. The cost of agricultural production has also gone up considerably. As the prosperity of our small agriculturists and agricultural labour is vital to our national prosperity all efforts should now be taken to improve their economy and standard of living. Necessary incentives should be given to farmers to adopt improved scientific methods of farming and concentrate on production of more food crops instead of cash crops. I also wish to stress here that some kind of insurance of crops is an urgent need to the ryots to give them greater confidence in their work for getting higher yields. An all risk or multi-risk crop insurance as adopted in some foreign countries should be introduced by the Government for the benefit of our agriculturists.



2nd March 1966] [Srimathi B. Lakshiminarasamma]

Sir, we have in the Madras Industrial Investment Corporation, an institution to look after the development of industries in our State and its achievements since its establishment are very impressive and commendable. It has secured for our State an honoured place in the industrial map of India. I wish to suggest that the establishment of a similar institution called the Madras Agricultural Investment and Development Corporation to look after the development of agriculture in our State will be a welcome addition. I am sure all these schemes for development of agriculture will be implemented fully and efficiently if such an institution is started and placed under the management of efficient and expert hands. This institution can be charged with the responsibility of not only increasing food production but also with the increasing of production of cereals, millets, oil seeds, fruits, milk, cattle and poultry by co-ordinating all the activities of different departments within a single organisation. This institution can have an office in each district and work for bringing a new approach to our agriculture based on local conditions, fertility of soil and availability of resources. It can also arrange to give facilities to mechanise and modernise agriculture on scientific methods and make farming highly remunerative and thereby stop people drifting away from agriculture and switching over to industries. It can also look after production and distribution of high quality seeds and control of pests by spraying of pesticides on a mass scale.

Next to agriculture, family planning schemes demand our full attention. If our family planning programmes do not get root within our State early, all our achievements in different fields will be neutralised by the rapid growth in our population. Hence our family planning movement should get the same priority as some other important schemes and more concentrated Statewide movement is needed to popularise the benefits of family planning particularly among our poorer sections of the people. Otherwise the object of increased productivity in all sectors might be frustrated by the increasing burden of population.

Sir, turning next to my own constituency, I have been during the last four years stressing for the immediate need of providing protected water supply to Tirukoilur Town Panchayat and the urgency of providing better clinical facilities and increased bed strength at Tirukoilur taluk headquarters hospital. I have also been requesting for the opening of a primary health centre at Mugaiyur. But so far my requests have not been favourably considered by the Government and I am still having the patience to hope that these requests will be more sympathetically considered and disposed of in the coming year.

Thank you, Sir.

***திரு. கோ. சி. மணி**: கனம் சட்ட மன்றத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் நிதி அமைச்சர் என்கிற முறையில் முதல் அமைச்சர் அவர்கள் 1966-67-க்கு ஆன நிதி நிலை அறிக்கையைச் சமர்ப்பித்திருக்கிறார்கள். அதைப்பற்றிப் பேசுகின்ற நாம், இந்த ஆண்டு புதிய வரி எதுவும் இல்லாமல் இந்த பட்ஜெட்டை வகுத்திருக்கிறார்கள் என்கின்ற அளவுக்கு,

பத்திரிகைகளில் வரையப்படுவதையும், பொதுவாக பொது மக்கள் பேசுகின்ற அளவுக்கு நிலைமைகள் இருக்கின்றதையும் காண்கின்ற அளவுக்கு இந்த நிதி நிலை அறிக்கை அமைந்திருக்கிறது. எந்தப் பத்திரிகையை பார்த்தாலும், புதிய வரியே இல்லாத ஒரு பட்ஜெட்டை இங்கே முதல் அமைச்சர் சமர்ப்பித்திருக்கிறார்கள் என்று கூறுவதைத்தான் பார்க்கிறோம். ஆண்டுக்காண்டு ஒவ்வொரு முறையும் நிதி நிலை அறிக்கை சமர்ப்பிக்கும் போதெல்லாம், எதாவதொரு புதிய வரி வந்துகொண்டிருப்பதான பழக்கத்தைத் தான் அது நினைவு படுத்துகிறது. இன்னொன்றையும் கூறவேண்டும். புதிய வரியே இல்லாவிட்டாலும் கூட, பழைய வரிகளில் எதாவதைக் குறைத்திருக்கிறார்களா அல்லது எதையாவது நீக்கி இருக்கிறார்களா என்றால் அதை மக்கள் எதிர்பார்க்கவில்லை என்று பொருள் அல்ல. அரசாங்கம் அப்படி எந்த வரிச் சுமையையும் குறைக்கவோ நீக்கவோ செய்துவிடவில்லை என்பதைக் காண்கிறோம். காலைச் சுற்றிய பாம்பு கடிக்காமல் விட்டால் போதும் என்பார்கள்; புதிதாக வரிகள் போடாமல் இருந்தாலே போதும் என்கிற அளவுக்கு, வரிகளைப் போட்டுக்கொண்டே இருக்கிற அரசாங்கத்தினிடம் பொது மக்கள் எதிர்பார்ப்பதெல்லாம் அவ்வளவு தான். ரூ. 188·72 கோடி வரவேண்டியது என்று திட்டம் இட்டு, 188·41 கோடி செலவாகும் என்று எதிர்பார்த்து, ரூ. 31 லட்சம் உபரி காட்டியிருக்கிறார்கள். ஆகவே இதை உன்னதமான உபரி பட்ஜெட் என்று ஆளுங் கட்சியைச் சேர்ந்த எல்லோரும் பாராட்டிப் பேசுகிறார்கள். செலவழிக்க வேண்டும் என்று ஒதுக்கிய தொகையை செலவு செய்த பிறகு, தேவைக்குப் போதவில்லை, சுயதேவையைப் பூர்த்தி செய்துகொள்ளும் அளவுக்கு உற்பத்தியில்லை. எதையோ எதிர்பார்த்தோம், கிடைக்கவில்லை என்கின்ற பல்லவியைத் தான் திரும்பத் திரும்பப் பாடிக்கொண்டிருக்கிற அவல நிலைமையைப் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

எந்த நிதி நிலை அறிக்கையானாலும் சரி, கவர்னர் உரையானாலும் சரி, எதை எடுத்துக்கொண்டாலும் வேளாண்மைக்கே முதலிடம் தரப்படுகிறது. ஆனால், வேளாண்மை எந்த அளவிற்கு வளர்க்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிந்துக்கொள்ள நாம் கடமைப்பட்டிருக்கிறோம். உணவுப் பண்டங்களை உற்பத்தி செய்வதிலும், வேளாண்மையை வளர்ப்பதிலும் மிக்க கவனம் செலுத்தி வருகிறோம் என்பதை எல்லோரும் ஒத்துக் கொள்ளுகிறோம். ஆனால் இரண்டு பிரச்சினைகள், நம் முன்னே வருகின்றன. உணவுப் பிரச்சினை சம்பந்தப்பட்டவரை ஓரளவுக்காவது,—உணவுப் பண்டங்களை கூடிய வரை சுயதேவைப் பூர்த்தி செய்யும் அளவுக்கு உற்பத்தி செய்து, தேவையான உணவைத் தந்திருக்கிறோமா என்பது முதல் பிரச்சினை. அப்படி தேவையான உணவுப் பண்டங்களைத் தர முடியாவிட்டாலும், விலையையாவது கட்டுப்படுத்தி இருக்கிறோமா, கட்டுப்படுத்துவார்கள் என்கின்ற நம்பிக்கையாவது இருக்கிறதா என்றால், அதுவும் ஏட்டில்தான் எழுதிக் காட்டப்பட்டிருக்கிறது. கவர்னர் அவர்களுடைய உரையிலேகூட சுட்டிக் காட்டினார்கள். 8 லட்சம் டன் கொள்முதல் செய்த காரணத்தால் உணவுப் பண்ட விலையை நிர்ணயம் செய்ய முடிந்தது என்று எழுதியிருக்கிறார்கள். நான் ஒத்துக்கொள்ளுகிறேன். எங்கே விலை நிர்ணயம் செய்தோம்? உற்பத்தி செய்கிறவர்களிடமிருந்து வாங்குவதற்கான விலையை நிர்ணயம் செய்திருக்கிறார்களே தவிர, வாங்கியதற்குப் பின்னால், மக்களுக்கு விற்கும் விலையை நிர்ணயம் செய்திருக்கிறோமா என்பதைக் கொஞ்சம் கவனிக்க வேண்டும். விவசாயி உற்பத்தி செய்கிறான். அவனுடைய பொருள்களுக்கு விலையை நிர்ணயம் செய்து, இந்த விலைக்கு நீ உன்னுடைய தானியத்தைத் தரவேண்டும் என்று கேட்டு கொள்முதல் செய்திருக்கிறோம். ஆனால், கடைசி நேரத்தில் யார் வாங்கிச் சாப்பிடுகிறார்களோ அவர்கள் வாங்கிச் சாப்பிடுகிற நேரத்தில், நிர்ணயித்த விலைக்கு அவர்கள் வாங்கிச் சாப்பிடுகிறார்களா என்பதைத் தயவு செய்து நாம் கவனிக்க வேண்டும். உதாரணத்திற்கு ஒன்று சொல்கிறேன். கோவை மாவட்டத்தில் ஒரு சிற்றூருக்கு நான் போயிருந்தேன். கணக்கம்பாளையம் என்ற ஊர் அது. அந்த ஊரில் 15 நாட்களுக்கு ஒரு முறை ஒரு லிட்டர் அரிசி அங்கேயிருக்கும் கூட்டுறவு சொஸைட்டியிலே விநியோகிக்கிறார்கள். ஒரு நபருக்கு ஒரு லிட்டர் அரிசி 15 நாட்களுக்கு





ஒரு முறை விநியோகிக்கிறார்கள். 8 லட்சம் டன் நாம் கொள்முதல் செய்திருக்கிறோம். ஏறத்தாழ 25 கோடி ரூபாய்க்கு 1966-வது ஆண்டு பிப்ரவரி மாத இறுதிக்குள் அந்த உணவுப் பண்டத்தை ஸ்டாக் செய்வதற்குப் பெரும் தொகை ஒதுக்கியிருக்கிறோம். 25 கோடி ரூபாய் ஒதுக்கி, எட்டு லட்சம் டன் உணவுப் பண்டங்களைக் கொள்முதல் செய்திருந்தும், கோவை மாவட்டத்திலுள்ள ஒரு சிற்றூரில் உள்ள மக்களுக்கு, 15 நாட்களுக்கு ஒரு முறை ஒரு லிட்டர் அரிசி வழங்கியிருக்கிறோம். கூட்டுறவு சொஸைட்டி மூலம் கொடுக்கப்படும் அந்த அரிசிக்கு நிர்ணயிக்கப்பட்ட விலை லிட்டர் ஒன்றுக்கு 73 காசு தான் ஒத்துக்கொள்கிறேன். ஆனால், 15 நாட்களுக்கு ஒரு முறை ஒருவருக்கு ஒரு லிட்டர் அரிசி என்றால், அந்த அளவு அரிசிதான் மனிதன் வாங்கிக்கொண்டு இருக்கமுடியுமா என்பதைத் தயவு செய்து கவனிக்கவேண்டும். அவனுக்கு மேலும் வேண்டிய அரிசியை அவன் எங்கிருந்து பெறுகிறான்? ஒரு லிட்டர் அரிசியைத் தான் 15 நாளைக்கும் அவனால் சாப்பிட முடியும் என்று இந்த அரசு நம்புகிறதா? பாக்கி அரிசி அவனுக்கு எப்படி கிடைக்கிறது? அவனுக்கு மேலும் தேவையான அரிசி லிட்டர் ஒன்று ரூ. 1·40 கொடுத்து வாங்கிச் சாப்பிடவேண்டியிருக்கிறது. நான் கேட்கிறேன். 8 லட்சம் டன் கொள்முதல் செய்து விலையை நிர்ணயித்திருக்கிறோம் என்றால், உற்பத்தி செய்கிறவர்கள் கொடுக்கிற தானியத்திற்கு விலையா, வாங்கிச் சாப்பிடுகிறவர்கள் கொடுக்கவேண்டிய விலையா என்பதைப் பார்க்கவேண்டும். இது முக்கியமான பிரச்சினை. 25 கோடி ரூபாய்—ஒரு கணிசமான தொகையை இதற்காக நாம் ஒதுக்கியிருக்கிறோம் என்றாலும், வாங்கிச் சாப்பிடுகிறவர்களுக்கு நியாயமான விலையில் அரிசி கிடைக்கச் செய்திருக்கிறோமா? இல்லையென்றால், 8 லட்சம் டன் கொள்முதல் செய்து தான் பயன் என்ன? விளைந்தாலும் விளையாவிட்டாலும் விவசாயிகள் அளக்கவேண்டியதை மிராசுதாரர்கள் வாங்கிவிடுகிறார்கள். ஆனால், வாங்கிய நெல்லை யாரிடம் கொடுக்கிறார்களோ அவர்களே கடைசியில் கொண்டு போகிற நேரத்தில் பனிக்கட்டி போல் உருகி, ஒரு லிட்டர் அரிசி ரூ. 1·40-க்கு விற்றுக்கொண்டிருக்கிறது. கண்ட்ரோல் விலையை விட அதிகமாக இந்த நாட்டில் அரிசி விற்கவில்லையா? அதைப் பகிரங்கமாகச் சொல்ல முடியுமா? அப்படி அரிசியைக் கண்ட்ரோல் விலைக்கு மேல் கூட்டுறவு சொஸைட்டி தவிர யாரும் விற்கலாம் என்றால், பிறகு விலை நிர்ணயம் ஏது? ஒரு லிட்டர் அரிசியைக் கொண்டு பதினைந்து நாள் பூராவும் ஒரு மனிதன் தின்றுகொண்டிருக்க முடியுமா? வேறு வகையிலே வருகிறது என்றால் அதைக் கட்டுப்படுத்த முடியுமா? கட்டுப்படுத்தினால் அந்த அரிசியைக் கொடுக்கமுடியுமா என்பதையெல்லாம் இதுவரை நாம் பரிசீலிக்க வில்லை. ஏட்டிலே எழுதுகிறோம். 8 லட்சம் டன் கொள்முதல் செய்கிறோம். விலையையும் நிர்ணயித்திருக்கிறோம். நாம் நிர்ணயித்த விலையில் சுலபமாகக் கிடைக்கிறது என்று நினைத்துக்கொண்டு கேரளாவிற்கும் அனுப்புகிறோம். கோயம்புத்தூர் மாவட்டம் பற்றாக்குறை மாவட்டம் என்று தெரிந்திருந்தும், அந்த மாவட்டத்தில் உள்ளவர்களுக்குத் தேவையான அரிசி கிடைக்க வகை செய்யவேண்டாமா? 1971-ம் ஆண்டில் நபர் ஒருவருக்கு 18 அவுன்ஸ் அரிசி கிடைக்கும் என்று சொல்லியிருக்கிறார்களே என்று கோவை மாவட்டம் மக்கள் காத்திருக்க முடியுமா? இப்பொழுது பத்து அவுன்சு அரிசியாவது அவர்களுக்குக் கிடைக்க வழி செய்யவேண்டாமா? எட்டு அவுன்ஸ் கொடுப்பதாகச் சொன்னதையாவது குறைக்காமல் இருக்கலாம் அல்லவா? 1971-ம் ஆண்டில் சராசரி 18 அவுன்ஸ் அரிசி கொடுக்கும் வரையில் நாம் காத்திருக்க முடியுமா? 61 லட்சம் மெட்ரிக் டன் உணவு உற்பத்தி செய்யவேண்டும் என்று சொல்லி, 58 லட்சம் மெட்ரிக் டன் அளவிற்கு வந்துவிட்டோம் என்னும்போது, 18 அவுன்சுக்குப் பதிலாக 14, 15 அவுன்சாவது கொடுக்கக்கூடாதா? ஒரு மனிதனுக்கு தினசரி இத்தனை லிட்டர்தான் கிடைக்க முடியும் என்ற நிலைமை இருக்கிறதா என்றால் இல்லை. ஆகவே, உணவுப் பிரச்னையில் முக்கியமான கவனம் செலுத்தவேண்டும்.

அடுத்து விவசாயப் பிரச்னையை எடுத்துக்கொள்வோம். கொள்முதல் செய்கிறோம். என்னுடைய மாவட்டத்தில் மன்னார்குடியில் பெரிய கோடௌன் கட்டியிருக்கிறார்கள். தஞ்சை மாவட்டத்தில் அது பெரிய

கோடௌனாக இருக்கிறது. அங்கே தானியங்களைச் சேமித்து வைப்பதற்காகக் கட்டியிருப்பதாகச் சொல்கிறார்கள். நெல் சேமித்து வைக்கவேண்டும் என்பதற்காகக் கட்டப்பட்ட கோடௌனை, கட்டிவிட்டோமே, என்ன செய்வது அதற்காகவாவது நெல்லைக் கொண்டு வைக்கவேண்டாமா என்ற அளவுக்கு நிலைமை மாறியிருக்கிறது. 200 மூட்டை, ஆயிரம் மூட்டை வாங்குகிறார்கள். வாங்கிக்கொண்டுபோய் கோடௌனில் இறக்குகிறார்கள். உடனே வண்டியில் ஏற்றி வேறொரு இடத்திற்குக் கொண்டு போகிறார்கள். கொண்டுவந்து இறக்குவதற்கு ஒரு செலவு பிறகு, அதை ஏற்றிக்கொண்டு போவதற்கு இன்னொரு செலவு. இதெல்லாம் யார் தலையில் போகிறது ? இந்தக் கோடௌனை மன்னார்குடியில் கட்டியிருக்கிறார்கள். அதற்காக அங்கே தானியங்களைக் கொண்டுபோக வேண்டியிருக்கிறது. தஞ்சைக்குப் பக்கத்தில் கொள்முதல் செய்ததை அப்படியே லாரியில் ஏற்றிக்கொண்டு கேரளாவிற்கு அனுப்பினால் போக மறுக்குமா ? ஏதாவது புதிய புதிய ரகங்களையா அனுப்புகிறார்கள் ? எல்லாம் ஒரே ரக தானியந்தான். அப்படி இருக்க, எதற்காக, ஏற்றுவதற்கு ஒரு செலவு, இறக்குவதற்கு ஒரு செலவு செய்யவேண்டும் ? கோடௌவுன் கட்டிவிட்டோம் என்பதற்காக அங்கே கொண்டு போவதாகத் தெரிகிறதே தவிர வேறொன்றும் இல்லை. ஆகவே, தயவு செய்து இனிமேலாவது இப்படியிருக்கக்கூடாது என்பதற்காகத்தான் நான் இங்கே இதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

விவசாயிகளுடைய நல் வாழ்விற்கான பல சட்டங்களை இந்த மன்றத்தில் நிறைவேற்றியிருக்கிறோம் என்று ஒவ்வொரு முறையும் கனம் அமைச்சர்களால் சொல்ல நான் கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால், ஒன்று நினைவுபடுத்துகிறேன். வரிப்பளுவைத் தாங்க முடியவில்லை, அதைக் குறைத்துக் கொடுங்கள் என்று கேட்டோம். ஆனால், நிதி நிலை அறிக்கையில் இந்த ஆண்டு தண்ணீர்த் தீர்வையும் நிலத் தீர்வையும் கொஞ்சம் குறைவாகத்தான் இருக்கிறது. எதிர்பார்த்த அளவு வராமல் கொஞ்சம் குறைந்து போயிருக்கிறது என்பதைச் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். அப்படிச் சுட்டிக்காட்டியிருப்பது சில லட்சம் ரூபாய் அல்ல, பல லட்ச ரூபாய். வரியைக் குறையுங்கள் என்று நாங்கள் மட்டுமல்ல, காங்கிரஸ் கட்சியில் உள்ளவர்களும் சொல்கிறார்கள். நிலத் தீர்வையைக் குறைத்திருப்பார்கள் என்று நான் இந்த உரையைத் துருவித் துருவிப் பார்த்தேன். ஆனால், காணவில்லை. இந்த மன்றத்தில் உள்ள ஆளும் கட்சி உறுப்பினர்களும் சொல்லியிருக்கிறார்கள். எதிர்த்தரப்பில் நாங்களும் சொல்லியிருக்கிறோம். எல்லோரும் ஏகமனதாக, தஞ்சை மாவட்ட விவசாயம் பாதிக்கப்பட்டிருக்கிறது, விளைவு குறைந்து போய் விட்டது என்பதைச் சொல்லியிருக்கிறோம். விவசாயிகள் மிராசுதார்களைப் பார்த்து " தள்ளிக்கொடுங்கள் " என்று கேட்டால், " எங்களுக்கு வரி வஜா செய்து கொடுக்கவில்லையே, நாங்கள் எப்படி உங்களுக்குத் தள்ளிக் கொடுக்க முடியும் ?" என்று கேட்கிறார்கள். அவர்களுக்கு ரெவின்யூ கோர்ட் இருக்கிறது. நண்பர் திரு. சுப்பையா அவர்கள் சொல்லியது போல ரெவின்யூ கோர்ட் என்பது எவிக்ஷன் கோர்ட்டாக மாறிவிட்டது. ரெவின்யூ கோர்ட் எதற்காக உருவாக்கப்பட்டதோ அந்த நிலை மாறி அது எவிக்ஷன் கோர்ட்டாக மாறியிருப்பதை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு நான் கொண்டு வருகின்றேன். எவிக்ஷன் பெடிஷன்கள் தான் உருவாகிக் கொண்டிருக்கின்றன. அதைச் சொன்னால், "சட்டம் இருக்கிறது, சிறிய பிரச்னை, அங்கே பார்த்துக்கொள்ளுங்கள்" என்று சொல்லலாம். ஆனால், இருக்கும் நிலைமையைக் கவனித்து விவசாயிகளுடைய குறைகளை நிவர்த்தி செய்யக்கூடிய அளவுக்குப் பலன் அளிக்கக்கூடிய நிலை இருக்கிறதா என்பதை யோசித்துப் பார்க்க வேண்டும். விவசாயி நெல் அளக்கவில்லை என்று சொல்லி விட்டு நிலத்தை விட்டு வெளியேற்றப்படுகிறான். வெளியேற்றப்படுவது எப்போது ? ஏப்ரல் 2-ம் தேதிக்குப் பிறகு கெடு கடந்த பாக்கியாக மாறுகிறது. ஏப்ரல் 1-ம் தேதி வரை நெல் அளக்கவில்லை என்று எவிக்ஷன் கோர்ட்டுக்கு நிலச் சுவான்தாரர்கள் எவிக்ஷனுக்காக மனு போடுகிறார்கள். அப்படியே ஏப்ரல் மாதத்திலேயே ஆரம்பித்து, நாலைந்து மாதம் கடந்து, குறுவை மகசூலைத் தயாரித்து வைத்திருக்கும்போது, அது ஜட்ஜ்மெண்ட் ஆகிறது. அப்பொழுது டிகிரி ஆகிறது. அப்பொழுது நிலத்திலிருந்து வெளியேற்றப்படும் உத்தரவு





பிறப்பிக்கப்படுகிறது. அந்த நேரத்தில் அவன் நெல் அளக்கத் தவறினால்; நட்டு வளர்த்திருக்கும் மகசூலையும் சேர்த்து, எவிக்ஷன் கோர்ட் என்ஃபோர்ஸ்மெண்ட் ரெவின்யூ ஆபீசர் மிராசுதாரிடம் அறுத்துக்கொடுத்து விடுகிறார். நிலத்திலே சாகுபடி செய்த நெல் பூராவையும் எடுத்துக் கொண்டு போகிறார்கள். இது நிலத்திற்கு மட்டும்தான் இருக்கவேண்டுமா? இப்படிப்பட்ட நிலைமை உருவாகிக் கொண்டிருந்தால், எத்தனைதான் சட்டங்கள் செய்தாலும் என்ன பயன் என்பதை யோசிக்க வேண்டும்.

உச்சவரம்புச் சட்டம் கொண்டு வந்தோம். மூன்று நான்கு ஆண்டு காலமாகப் படாத பாடு பட்டு, பேசாத பேச்சுப் பேசி, செலவழிக்கக்கூடாத ரூபாய் செலவு செய்து 4,370 ஏக்கர் மிச்சம் என்ற கணக்கு தற்போது வந்திருக்கிறது. அதற்கு ஆன செலவையும் பலனையும் கணக்கிட்டுப் பார்த்தால் மலைக்கும் மடுவுக்கும் உள்ள வித்தியாசம் இருக்கிறது. சட்டம் போடுகிறோம். இல்லையென்று சொல்லவில்லை. போடுகிற சட்டம் பலனைத் தருகிறதா என்றால் இல்லை. உணவுப் பண்டங்களை நிரந்தரமாக இன்ன விலைக்குத் தான் விநியோகிக்க வேண்டும், இப்படித்தான் விநியோகிக்க வேண்டும் என்ற நிரந்தரமான கொள்கையை இந்த சர்க்கார் கடைப் பிடிக்கவில்லை. 15 நாட்களுக்கு ஒரு லிட்டர் அரிசி ஒரு நபருக்கு 73 பைசா வீதம் கூட்டுறவு சொஸைட்டியில் கொடுக்கும்போது, பாக்கித் தேவைக்கு ரூ. 1·40 கொடுத்து வாங்கிச் சாப்பிடவேண்டிய நிலை இருப்பது நல்லதுதானா என்பதை யோசிக்கவேண்டும். 8 லட்சம் டன் கொள்முதல் செய்து கண்ட பலன் இது தானா ? 25 கோடி ரூபாய் செலவழித்தும் கண்ட பலன் இது தானா ? இதைத்தான் திருப்பித் திருப்பிச் சொல்லவேண்டிய நிலைமை இருக்கிறது. (மணியடிக்கப்பட்டது).

***திரு. டி. கார்ச்சா கவுடர் :** கனம் சபாநாயகர் அவர்களே, 1966-67-ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையை வரவேற்று சில வார்த்தைகள் பேச ஆசைப்படுகிறேன். நாடு நெருக்கடி நிலைமையில் இருந்தபோதிலும் முதல் அமைச்சர் அவர்கள் மக்களுக்கு சில சலுகைகள் அளித்திருப்பது பாராட்டத் தக்கதாகும்.

முதலாவதாக ஆசிரியர்களுக்கு பென்ஷன் கொடுப்பதில் குறைந்த பட்சம் 20 ரூபாயாக இவ்வாண்டு முதல் கொடுக்கச் சலுகை அளித்திருக்கிறார்கள். ஆசிரியர்கள் சார்பாக முதல் அமைச்சர் அவர்களுக்கு வணக்கத்தை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து பள்ளிக்கூட மாணவர்களுக்கு ஒன்றுமுதல் மூன்றாவது வகுப்பு வரை படிப்பவர்களுக்கு இலவசமாக சிலேட், புத்தகம் வழங்க இவ்வாண்டு முதல் வசதி செய்யப்பட்டிருக்கிறது. ஆரம்பப் பள்ளிகளில் முப்பது லட்சம் மாணவர்கள் படிக்கிறார்கள் என்றால் பத்துப் பதினைந்து லட்சம் மாணவர்களுக்கு வசதி அளிக்கக் கூடிய இந்தத் திட்டம் ஒரு வரப்பிரசாதமாகும். இந்த ஒரு நல்ல அம்சம் பட்ஜெட்டில் இவ்வாண்டு அமைந்திருக்கிறது.

மூன்றாவதாக என்.ஜி.ஓ.-க்களுக்கு நிவாரணம் அளிப்பது பற்றிப் பேசப்படுகிறது. அவர்களுடைய கஷ்டத்தை இந்த அரசாங்கம் அறியாதது அல்ல. சென்ற ஆண்டும், ஆண்டு நடுவிலும் அவர்களுக்கு இந்த அரசாங்கம் சில சலுகைகளை அளித்திருக்கிறது. அவர்கள் விஷயமாகவும் அரசாங்கம் பரிசீலனை செய்து கொண்டிருப்பதாக முதல் அமைச்சர்அவர்கள் சூசகமாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகவே இவ்வாண்டு இறுதிக்குள் அவர்களுக்கு ஏதாவது சலுகை அளிக்கப்படும் என்ற நம்பிக்கை இருப்பதால் என்.ஜி.ஓ.-க்களும் கவலைப்பட வேண்டிய அவசியம் இல்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இப்போது எதிர்க்கட்சிக்காரர்கள் பேசுவதைப் பார்த்தால் அவர்கள் வரி போடவில்லையே என்று குறைபடுவதாகத்தான் தெரிகிறது. இது பரிதாபப்படவேண்டிய நிலைமையாகத்தான் இருக்கிறது. இந்த அரசாங்கம் மக்களுக்காக, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு இருப்பதனால் மக்களுக்கு என்ன என்ன வகைகளில் எல்லாம் நன்மை செய்ய முடியும் என்பதைத் தீர ஆலோசித்து பல காரியங்களைச் செய்துகொண்டுதான் வருகிறார்கள்.

விவசாயத்தை முதலாவதாக எடுத்துக் கொண்டு பார்த்தால்—கடந்த காலத்தில் செய்துள்ளன யாவை, இனிச் செய்யவேண்டியவை யாவை என்பதைப்பற்றி அமைச்சர் அவர்கள் தம் உரையில் சொல்லியிருக்கிறார்கள். ஏற்கனவே பெரிய பாசன திட்டங்களை எல்லாம் போட்டு பெரிய பெரிய நதிகளை எல்லாம் தடுத்து அணைகட்டி, பாசன வசதியைப் பெருக்கிக்கொடுத்திருக்கிறது இந்தக் காங்கிரஸ் அரசாங்கம். அதை எதிர்க் கட்சிக்காரர்கள் மறந்து விடக் கூடாது. அதற்குப் பிறகு சாத்தியமான இடங்களில் எல்லாம் மானியமாகவும், கடனாகவும் பணம் கொடுத்து பல லட்சக்கணக்கான கிணறுகளைத் தோண்டச் செய்திருக்கிறார்கள். அந்தக் கிணறுகளுக்கு மின்சார பம்பு செட்டுகளை வைக்கவும் வசதி செய்து கொடுத்திருக்கிறார்கள். எதிர்க்கட்சிக்காரர்கள் மறந்தாலும் மக்கள் இவற்றை மறக்கமாட்டார்கள். அடுத்தாற்போல் எல்லா ஜில்லாக்களிலும் விதைப் பண்ணைகளை அரசாங்கம் ஏற்படுத்தி தரமான விதைகளை ஆங்காங்கே விநியோகம் செய்து வருவதைப் பார்க்கிறோம். இப்போது ஜப்பானிகா இண்டிகா போன்ற கலப்பு விதைகளை கண்டுபிடித்து பரவலாக அத்துறையில் முன்னேற்றம் காண வழிவகை செய்து கொண்டு வருகிற நிலைமையையும் அறிகிறோம்.

ரசாயன உரத்தைப் பொறுத்தவரையில் அந்நியச் செலாவணி நெருக்கடி இருந்தபோதிலும் நம் அரசாங்கம் போதிய அளவுக்கு வழங்கிக் கொண்டு வருகிறார்கள். ஆங்காங்கு சில குறைபாடுகள் இருந்தாலும் எல்லா மாவட்டங்களிலும் சீரான முறையில் ரசாயன உரம் வழங்கப்பட்டு வருகிறது.

அடுத்தபடியாக விவசாயிகள் தங்கள் உற்பத்திப்பொருளை மார்க்கெட்டுக்குக் கொண்டுபோக லிங்கிங் ரோடுகளை எல்லாம் அரசாங்கம் போட்டுக்கொடுத்து வருகிறது. அதற்குப் பிறகு நான்காவது திட்டகாலத்தில் ஒரு லட்சத்து பதினெட்டாயிரம் பம்பு செட்டுகளுக்கு மின்சாரம் வழங்க வகை செய்திருக்கிறோம். இன்னும் ஆயிரக்கணக்கான கிணறுகள் தோண்ட தீவிர முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறோம். அணை கட்டுவதற்கு இனி நம் ராஜ்யத்தில் பெரிய நதிகள் இல்லை என்றாலும், நீராறு, தேக்கடி ஆறு ஆகியவற்றில் நாம் போட்டுள்ள திட்டப்படி அணை கட்ட நமது ரெவினியூ அமைச்சர் அவர்கள் கேரள அரசாங்கத்தோடு பேச்சுவார்த்தை நடத்தி வெற்றி பெறுவார்கள். அதில் மக்களுக்கு மிகுந்த நம்பிக்கை இருக்கிறது. இந்த ஆண்டு 250 டிராக்டர்கள் விவசாயிகளுக்கு வழங்கியிருக்கிறோம்.

இப்போது நான் சொல்ல விரும்புவது விவசாய வருமான வரியைப் பற்றி. விவசாய வருமான வரியின் மூலமாக நமக்கு வருகிற வருமானம் மிகவும் குறைவு. அதற்காகத் தனியாக இருந்த சிப்பந்திகளைக் கூட இவ்வாண்டு முதல் அரசாங்கம் எடுத்து விட்டார்கள். அது நல்ல அறிகுறி. விவசாய வருமான வரியின் மூலம் நமக்கு ரூபாய் 140 லட்சம் கிடைக்கிறது என்றால் அந்தச் சிறிய தொகையை இழப்பதில் கேடு ஒன்றும் இராது. விவசாய வருமான வரியை இந்த ஆண்டு உடனடியாக எடுத்துவிட வேண்டும் என்று அரசாங்கத்திற்குத் தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்து, உணவைப் பற்றிப் பேசும்போது எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் தமிழ்நாட்டில் பஞ்சம் வந்துவிட்டதுபோலப் பயமுறுத்துகிறார்கள். அப்படி பஞ்சம் தமிழ் நாட்டில் கிடையாது.

** ** ** **

அடுத்தபடியாக, கல்வி வளர்ச்சியைப் பொறுத்தவரையில் நம்முடைய
12-00 noon. மாநிலம் மற்ற மாநிலங்களுக்கு எடுத்துக்காட்டாக விளங்குகிறது. சென்ற ஆண்டிலே உயர்தரப் பள்ளிக்கூடங்களில் படிக்கின்ற மாணவர்களுக்கு எல்லாம் இலவசமாக, பணம் வசூலிக்காமல், சொல்லிக்கொடுக்கும் சலுகையை ஏற்படுத்தியிருக்கிறோம். இதைத்தவிர, பல ஆயிரக்கணக்கான ஹைஸ்கூல்களைத் திறந்திருக்கிறோம். கல்லூரிகளையும் திறந்திருக்கிறோம்.

** Expunged as ordered by the Chair.





பெரிய சாதனையைக் கல்வித் துறையில் நாம் ஏற்படுத்தியிருக்கிறோம். இந்த ஆண்டு பட்ஜெட்டிலே கூட நாம் கல்வித் துறைக்காக 24 சதவீதம் ஒதுக்கியிருக்கிறோம். இது மாணவர்கள் அனைவருக்கும் ஒரு வரப்பிரசாதமாகும். கல்விப் பிரச்னையைப்பற்றி பேசுகிற சமயத்தில், கல்லூரிகளில் உள்ள மாணவர்களைச் சில அரசியல் தலைவர்கள் சமீபத்தில் கூட்டமாக கூட்டித் தூண்டிவிட்டிருக்கிறார்கள் என்ற நிலைமையை நான் கனம் சபாநாயகர் மூலமாக இந்தச் சபையின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். மாணவர்கள் அரசியலில் பங்கெடுத்துக்கொள்ளக் கூடாது. அரசியலில் கலக்கக்கூடாது என்று கருதித்தான் சுதந்திரப் போராட்டம் காலத்தில்கூட காங்கிரஸ் தலைவர்கள் மாணவர்களை அப்படி அறிவுறுத்தி வந்தார்கள்.

** ** ** **

தொழில் வளர்ச்சியில் தமிழ்நாடு அடைந்துள்ள முன்னேற்றம் மிகவும் பாராட்டத்தக்கது. நமது சாதனையை அண்மையில் சென்னை வந்த நார்மன் கிப்பிங், பிரசிடெண்ட் ஆப் தி கான்படரேஷன் ஆப் பிரிட்டிஷ் இண்டஸ்ட்ரீஸ், அவர்கள் தேசம் பூராவையும் சுற்றிப் பார்த்து விட்டு வந்து, நமது தமிழ் நாட்டில் தொழிற்சாலைகள் எவ்விதம் நல்ல விதமாக இயங்குகின்றன என்பதைப் பற்றிப் பாராட்டிக் கூறியிருப்பது ஒன்றே தொழில்துறையிலே நாம் அடைந்துள்ள முன்னேற்றத்திற்கு ஒரு அறிகுறியாகும். இந்த நிலையில் இந்த பட்ஜெட் தமிழ் நாட்டு மக்களுக்கு ஆறுதல் அளிக்கும் பட்ஜெட் என்று கூறிக் கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**திரு. நா. இராசாங்கம் :** சட்ட மன்றத் தலைவர் அவர்களே, 1966–67-ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின்மீது மூன்றாவது நாளாக நடந்து வரும் விவாதத்திலே நானும் என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

நான் இந்த நிதிநிலை அறிக்கையில் மிக முக்கியமாக எதிர்பார்த்த சில இனங்கள் விடுபட்டிருப்பதை காண மிகவும் வருந்துகிறேன். இதிலே, என்.ஜி.ஓ.-க்களுக்கு சம்பள உயர்வு இருக்குமென்று நாடே எதிர்பார்த்தது; அரசியல் கட்சித் தலைவர்கள் அவ்வளவு பேரும் கட்சி வேறுபாடின்றி எதிர் பார்த்தார்கள். ஆனால் அது இல்லை. இப்போது இருக்கிற பிரச்னையெல்லாம் சர்க்காரிலே இப்போது சரிவரக் காரியங்கள் நடப்பதில்லை. பேப்பர்கள் எல்லாம் கட்டி வைக்கப்படுகின்றன. இதற்கெல்லாம் என்ன காரணம் ? சர்க்கார் சிப்பந்திகளுக்கு மன நிறைவு இல்லை. மன நிறைவு எங்கு இருக்கிறதோ அங்குதான் வேலையும் நன்றாக நடக்கும். ஊதியத்தை உயர்த்தினால் விலையும் உயருகிறது என்று கூறினார்கள். இப்போது என்ன விலை உயராமல் அப்படியே இருக்கிறதா ? தை மாதத்தில் நெல் அறுவடையாகி களத்திற்குப் போகிறது : நெல் வீட்டிற்கு வந்து சேரவில்லை. அதற்குள்ளாகவே மார்க்கெட்டில் நெல் விலை ஒரு ரூபாய் ஆறணா, கடலூரைப் பொறுத்தவரை, குறிஞ்சிப்பாடியில் ஒரு ரூபாய் ஐந்தணா. நம்முடைய காலத்தில் நாம் பார்த்த அனுபவம் அறுவடை காலத்தில் இருக்கிற விலை நாள் ஆக ஆக மீண்டும் அறுவடை ஆரம்பிக்கக் கூடிய காலத்தில் விலை உயரும் என்பதுதான். ஆனால் இப்போதே இந்த விலை என்றால் சற்றுச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். ஆகவே, ஓரளவாவது சர்க்கார் சிப்பந்திகள் மன நிறைவு பெறும் வகையில் அவர்களுடைய சம்பளத்தை உயர்த்துவது பற்றி அரசாங்கம் பரிசீலனை செய்ய ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சென்னை நகரம் "ஏ" பிரிவு நகரமாக்கப்பட்டது. அரசாங்க சிப்பந்திகளுக்கு மற்ற நகரங்களில் உள்ளதுபோல் இங்கும் ஹிடி காம்பன்சேடரி அலவன்ஸ் கிடைக்கும் என்று எதிர்பார்த்தார்கள். "ஏ" பிரிவு நகரமாக மாற்றி உத்தரவு வருவதற்கு முன்னாலேயே இதைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தார்கள். ஆனால் அதுவும் இவர்களுக்குக் கொடுக்கப்படவில்லை. பம்பாய், கல்கத்தா, சென்னை என்று எடுத்துக்கொள்ளும்போது

** Expunged as ordered by the Chair.

சென்னை ஒன்றும் இளைத்தது அல்ல. உலகத்திலேயே பெரிய துறை முகங்களில் முக்கிய ஒரு துறைமுகமாக சென்னை இருக்கிறது. அப்படிப் பட்ட சென்னை நகரம் "எ" பிரிவாக ஆக்கப்பட்ட பிறகு அதனால் ஏற்பட்ட உரிமைகளை மாநில அரசு சிப்பந்திகளுக்கும் கொடுக்கவேண்டும்.

இந்த நாட்டிலே கல்வி சிறு வயதிலிருந்து எப்படிப் பரவி வந்திருக்கிறது என்றால், ஆரம்பப் பள்ளி ஆசிரியர்கள் இந்த நாட்டில அதிகமாக்கப்பட்ட பிறகுதான். ஐந்தாம் வகுப்புப் படித்து விட்டாலே பிள்ளைகளுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்கும் தகுதி ஏற்பட்டு விட்டது என்று சொல்லும் அளவுக்கு நிலைமை இருந்தது. பின்பு பயிற்சிப் பள்ளிகள் ஏற்பட்டன.

(திரு மா. தண்டாயுதபாணி தலைமை.)

பயிற்சி பெறும் காலத்திற்கு அவர்களுக்கு ஊதியம் கொடுக்கப்பட்டது. ஆனால் எல்லாப் பள்ளிகளிலும் உபகாரச் சம்பளம் கொடுக்கும் நிலை போன மாதத்தில் மாற்றப்பட்டு விட்டது. உபகாரச் சம்பளம் கொடுக்கும் அளவில் சில பள்ளிகள், சிலவற்றில் பில்லைத் தயாரித்து கடனாகக் கொடுக்கிற நிலை, சில பள்ளிகளில் கொடுத்து விட்டு திருப்பி வாங்குகிற நிலைமையில் உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. நான் இதைப்பற்றி ஒரு அவசரத் தீர்மானம் கொண்டு வந்தேன். கேள்வி மூலம் விவரம் கேளுங்கள் என்று சபாநாயகர் அவர்கள் தீர்ப்புக் கூறினார்கள். ஜூனியர் கிரேடு ஆசிரியர் பயிற்சிப் பள்ளியில் பயிற்சி பெறுகிறவர்களுக்கு கொடுக்கப்படும் உபகாரச் சம்பளம் நிறுத்தப்படுவதன் காரணமாக ஆயிரக்கணக்கானவர்கள் வீட்டுக்குப் போக வேண்டிய நிலைமை ஏற்படும். ஆகவே, அந்த உபகாரச் சம்பளத்தைக் கொடுப்பதற்கு அரசாங்கம் வழி செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வேளாண்மை உற்பத்தி, விதைப்பண்ணை, சிறிய நீர்ப்பாசனத் திட்டங்கள் கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவற்றைப் பொறுத்து ஒன்றை மட்டும் நான் சொல்ல விரும்புகிறேன். சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களாக இருந்தாலும் சரி, பெரிய நீர்ப்பாசனத் திட்டங்களாக இருந்தாலும் சரி, எந்த வகையிலும் விவசாயம் அபிவிருத்தி அடைய வேண்டும். அதற்காகப் பல யோசனைகள் பல தடவை இந்தச் சபையில் எடுத்துச் சொல்லப்பட்டன. என்னுடைய பகுதியைப் பொறுத்தவரை பெருமாள் ஏரி என்ற ஒரு ஏரி இருக்கிறது. அதனால் முன்பு 20,000 ஏக்கர் நிலம் சாகுபடி வசதியைப் பெற்றிருந்தன. ஆனால் தற்போது அந்த ஏரியின் மூலம் 6,000 ஏக்கர் நிலந்தான் சாகுபடி செய்ய முடிகிறது. அந்த ஏரி மிகவும் தூர்ந்து விட்டது. அந்த ஏரியை மராமத்துச் செய்யவேண்டுமென்று கடந்த பத்தாண்டுகாலமாக கோரி வந்தும் இன்னும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. போன தடவை கூட இதைப் பற்றிச் சொன்னேன். இந்த முறையும் சொல்லுகிறேன். கடலூரிலிருந்து கிழக்கே செஞ்சிவரை ஏரிகளை இணைக்கும் திட்டத்தைக் கொண்டு வந்தால், சிறிய நீர்ப்பாசன திட்டத்தின் கீழ் அதைச் செய்தால் தண்ணீர் கொடுக்க முடியும். ஏராளமான நிலங்கள் சாகுபடி செய்ய முடியும். இதையும் தீவிரமாக அமல் படுத்தவேண்டும்.

கூட்டுறவுச் சங்கங்களைப் பொறுத்தவரை 1920ம் ஆண்டு விதிகளே தான் இன்னும் அமலில் இருக்கிறது. அந்தச் சட்டத்தை வைத்துக் கொண்டு கூட்டுறவுச் சங்கங்கள் இயங்குகிற காரணத்தால், நல்லவர்கள் நாட்டுக்கு நன்மை செய்ய வேண்டுமென்று எண்ணமுள்ளவர்கள், நல்ல நெறியுள்ளவர்கள் சங்கங்களில் பங்கு பெற முடியவில்லை. ஒரு சங்கத்திலே தவறு ஏற்பட்டிருக்கிறது என்று தெரிந்தால் அதிலே அரசாங்கம் குறுக்கிட்டு அந்தச் சங்கத்தைக் கலைத்து விட்டு வேறு புதிதாக ஆட்களைப் போட முடியாது. சட்டத்தின் நிலை அப்படி இருக்கிறது. ஆகவே, அந்தச் சட்டத்தைத் தளர்த்த வேண்டும். உதாரணமாக, மணிலா தீவிர சாகுபடித் திட்டம் இருக்கிறது. அதன்கீழ் சென்ற ஆண்டு ஆறாயிரம் ஏக்கருக்கு உதவி செய்தார்கள். இந்த ஆண்டு அந்த உதவி 4,000 ஏக்கராகக் குறைந்திருக்கிறது. தீவிர சாகுபடித் திட்டங்கள் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக அமல்படுத்தப்பட வேண்டும். அந்தச் சங்கங்கள் சரியாக



வேலை செய்யாத காரணத்தால் வேளாண்மைப் பணியில் ஈடுபட்டிருக்கிற விவசாயிகளைப் பாதித்திருக்கிறது. அந்தச் சங்கங்களுக்குக் கொடுத்த கடனைத் திருப்பிக் கொடுக்க முடியாத காரணத்தால் இந்த நிலைமை ஏற்பட்டிருக்கிறது. சிறு பாசனத் திட்டங்களின் கீழ் அரசாங்க மூலதனம் போட்ட சில காரியங்கள் கூட கெட்டு விட்டிருக்கிறது. வடலூர் பார்வதி புரத்திலே "போர்-வெல்" ஒன்றையும் "ஆர்டீஷியன்வெல்" ஒன்றையும் எடுக்க சர்க்கார் செலவில் பணம் கொடுத்து அதை எடுத்து விவசாயத்திற்கு உரியதாகச் செய்தார்கள்.

அதிலே, அந்த "போர்" வெல்லை மேல் சபைத் தலைவர் திரு. மாணிக்கவேலு அவர்கள் திறந்து வைத்தார்கள். இந்த இரண்டு ஆர்டீஷியன் வெல்ஸ் திரு. பக்தவத்சலம் அவர்கள் பெயரால் திறக்கப்பட்டு; அதில் ஒன்று மட்டும்தான் இன்று வேலை செய்து வருகிறது. இந்த ஆர்டீஷியன் வெல்ஸ் கெட்டு விட்டன. அதுபற்றி ஆறு ஆண்டுகளாக அங்குள்ள விவசாயிகள் சொல்லியும், விவசாயிகள் நல்ல முறையில் பாடுபட வேண்டும், விவசாயம் வளர வேண்டுமென்று நினைக்கிறவர்கள் அதில் கவனமே செலுத்தவில்லை. அங்கு ஏக்கருக்கு 1,480 ரூபாய் இந்த வருடம் கண்டுமுதலாகி யிருக்கிறது. மணிலா சாகுபடியில், இந்த இரண்டு ஆர்டீஷியன் வெல்ஸும் பயன்படுத்தப்பட்டால் அந்த 60 ஏக்கர்களிலிருந்து குறைந்த பட்சம் மதிப்பு வைத்தாலும், கிடைக்கக் கூடியதில் பாதி என்று வைத்துக் கொண்டாலும் கூட சர்க்காருக்கு வரவேண்டிய வருமானம் எவ்வளவு போயிருக்கிறது, விவசாயிகளுக்கு கிடைக்க வேண்டிய பலன் எவ்வளவு கெட்டுப் போயிருக்கிறது என்பதை எல்லாம் கணக்கிட்டுப் பார்த்து பார்வதிபுரத்திலுள்ள இந்த இரண்டு ஆர்டீஷியன் வெல்ஸை போர் வெல்களாக ஆவது மாற்றி அமைக்க ஏற்பாடு செய்வதற்கு வேண்டிய வழிவகைகளைக் காண வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கைத்தறி நெசவாளர்கள் நிலைமை. பத்து, பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னால் கைத்தறி நெசவாளர்கள் என்ன பாடுபட்டார்கள் என்பதை நாடு அறியும். கைத்தறி நெசவாளர்கள் குடும்பங்கள் எங்கெங்கு திரிந்தன, பெண்கள் எங்கெங்கு அலைந்தார்கள்,

* * *

இது நாடறிந்த விஷயம். அந்தப் பஞ்ச நிலை இப்போதும் வரும் என்பது கைத்தறி நெசவாளர்கள் வாழும் பகுதிகளுக்குச் சென்று பார்த்தால் தெரியும். அமைச்சர்கள் ஊர்வலம் வரும்போது, பிரயாணம் வரும் போது இதுபற்றி விசாரிக்க வேண்டும். திட்டம் போட்டு அதிகாரிகளை பார்ப்பது மட்டும் போதாது. சுற்றுப்பிரயாணம் வந்தால் தொழில் நிறுவனங்களைப் பார்த்து தொழிலாளர்கள் நலன் எப்படி யிருக்கிறது, முதலீடுகள் சரியாக பயன்படுத்தப் படுகின்றனவா என்பதைப் பார்ப்பதற்காக ஒவ்வொரு நாளும் அமைச்சர்கள் வெளியே போனாலும் நான் அதை வரவேற்கத் தயாராக இருக்கிறேன். அந்தக் காலத்தில் அமைச்சர்கள், அரசர்கள் செய்து வந்ததைப் பற்றி படித்திருக்கிறோம். ஜனநாயக சர்க்காராக இருக்கட்டும், எந்த சர்க்காராக வேண்டுமானாலும் இருக்கட்டும். சர்க்கார் என்பது நாட்டுக்கு ஒன்றுதான். நாட்டு மக்களின் குறைகள் என்ன என்பதை அறிந்து கொள்ள வேண்டும். அதை அறிந்து அவற்றைத் தீர்ப்பதற்காக, சட்டசபையில் மந்திரிகள் இல்லாவிட்டால்கூட வரவேற்கிறேன். மந்திரிகள் வெளியே போக வேண்டும். விருத்தாசலத்தில் ஆண்டுதோறும் மாசி மகம் நடக்கிறது. அதற்கு மந்திரி போகிறார் என்றால் என்ன அர்த்தம்? அது ஏற்பட்டது புராதனக் காலத்தில். அந்தக் கோவில் வந்தது புராதனக் காலத்தில். அந்த விழாவில் மந்திரி கலந்துகொள்ளப் போகிறார். மாசிமகம் விழாவில் கலந்து கொள்கிறார் என்று போட்டிருக்கிறது பிரயாணத் தகவல் பட்டியலில். அதற்கெல்லாம் போவதை விட இப்படிப்பட்ட காரியங்கள் எவ்வளவோ கவனிக்கப்பட இருக்கின்றன. ஆறில் ஒரு பங்கு ஜனத்தொகை உள்ள கைத்தறி நெசவாளர்கள் இன்று அவல நிலையில் இருக்கிறார்கள். பல தீர்மானங்

* Expunged as ordered by the Chair.

[திரு. நா. இராசாங்கம்] [2nd March 1966

கள் மூலமும், பல சொஸைட்டிகள் மூலமும், இச்சபையிலும் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது அவர்கள் அவல நிலை பற்றி. மத்திய ஆட்சியிலும் இதுபற்றி சொல்லப்பட்டிருக்கிறது. கரை போட்ட வேட்டிகள், சேலைகள் இவற்றை கைத்தறி நெசவாளர்களுக்கு விட்டுவிட வேண்டும். மில்களுக்கு அந்த உரிமை கொடுக்கக் கூடாது. கரை போட்ட வேட்டிகள், சேலைகள் இவற்றை மில்கள் போடக்கூடாது என்று தடை செய்ய வேண்டுமென்ற கோரிக்கை சிறியவர்களிலிருந்து பெரிய இடத்தில் உள்ள அத்தனை பேர்களாலும் விடப்பட்டிருக்கிறது. அது ஒன்றைச் செய்தால் கூட கைத்தறி நெசவாளர்களின் அவல நிலை நீங்கும். அதையாவது அரசாங்கம் கவனித்து அவர்களுக்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மத்திய அரசாங்கத் திட்டத்தின்கீழ் உள்ள, நம் தமிழகத்தில் அமைந்துள்ள சிறந்த ஒரு தொழிற்சாலை நெய்வேலி. நெய்வேலி நிலக்கரிச் சுரங்கம் நாடு அறிந்தது, உலகம் அறிந்தது. அதுபற்றி நான் குறிப்பாக சில குறைகளை மட்டும் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். மற்ற குறைகள் சம்பந்தமாக டிமாண்ட் வரும்போது சொல்லிக் கொள்ளலாம் என்று நினைக்கிறேன். நெய்வேலியைச் சுற்றிலும் உள்ள மூன்று தாலூகாக்கள் விருத்தாசலம், கடலூர், சிதம்பரம். இந்த மூன்று தாலூகாக்களில் இருந்தும் வந்து வேலை செய்கிறவர்களுக்கு சைக்கிள் அலவன்ஸ் கிடையாது. அவர்களுக்கு வீட்டு அலவன்ஸும் கிடையாது. இப்படி ஒரு சட்டம். இதற்கு என்ன காரணம் சொல்கிறார்கள் என்றால் இவர்கள் நெய்வேலியைச் சேர்ந்தவர்கள் என்கிறார்கள். நெய்வேலியைச் சுற்றியுள்ள தாலூகாக்களில் இருப்பதால் இவர்களுக்கு இந்தச் சலுகைகள் இல்லை என்பது அரசாங்கக் கொள்கை. அது எப்படியிருக்க வேண்டுமென்று சொன்னால் மூன்று மைல்கள் அல்லது ஐந்து மைல்கள் என்று தூரத்தைக் குறிப்பிட வேண்டும். இப்படிப்பட்டவர்களுக்கு அதிக சிரமம் இருக்காது, வீட்டுக்குப் போய் விடலாம், ஆகவே, படும் சிரமத்திற்காக கொடுக்கப்படும் இந்த அலவன்ஸ் குறிப்பிட்ட தூரத்திற்குள் இருந்து வருகிறவர்களுக்கு இல்லை என்று தூரத்தை குறிப்பிட்டு வைத்து விடலாம். சிதம்பரம் தாலூகா என்றால் தஞ்சை ஜில்லாவில் உள்ள சீர்காழி தாலூகா வரை போய் நிற்கிறது. கொள்ளிடத்தில் இருந்து நெய்வேலிக்கு வருவதற்குள்ள தூரம் என்ன? ஆகவே தாலுகா பெயரை வைத்து தூரத்தை கணக்கில் எடுத்துக் கொள்ளாமல் சைக்கிள் அலவன்ஸ் இல்லை, வீட்டு அலவன்ஸ் இல்லை என்று சொன்னால் அது மனிதாபிமானத்திற்கு மாறுபட்ட விஷயம். மனிதாபிமானத்தை யொட்டியேதான் சட்டம் என்பது இதுவரையில் நாட்டில் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே இதுகுறித்து தொழில் அமைச்சர் அவர்களும், மற்ற அமைச்சர்களும் கூடி ஆலோசனை செய்து அங்குள்ள தொழிலாளர்களுக்கு நல்ல, நிரந்தரமான வாழ்க்கை வசதியை அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு அதிக நேரம் இல்லாததால் என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

*SRI S. NANJUNDA ROW: Mr. Chairman, Sir, while commending the Budget speech of the Hon. Chief Minister, I want to pay a tribute to him that even though he did not enjoy very good health, he read out a very lengthy Budget speech containing 51 paragraphs and it took more than 1½ hours. I really congratulate him for having such a strength and I pray that he gets more strength and better health. Sir, the 51 paragraphs contained in the Budget speech of the Hon. Chief Minister on 26th February 1966, deal with he state of affairs in our State and the ways in which each Department of the Government is functioning. Even though it is a *status quo* Budget—neither a deficit nor a clear surplus budget, the Hon. Chief Minister has taken all the Hon. Members of the House into his confidence by reviewing the state of affairs in each department



2nd March 1966] [Sri S. Nanjunda Row]

so that the working of each department could improve and that they could frame a reasonable Budget in line with the Government's policy of building up an egalitarian society. He wants to see that a democratic socialistic society is brought about in a very calmer and peaceful way. Of course, the House will remember the old adage, "Rome was not built in a day". Even though we may very anxiously feel that things are not taking shape very quickly, we should remember that Rome was never built in a day. In the same way the democratic and a socialistic society can never be built in a day. So, I commend all the 51 paragraphs of his speech for the consideration of the House.

Now, I want to refer to two or three important paragraphs in the Budget speech which pertain to my constituency. I represent a constituency which is a very backward area and in certain villages, there is no drinking water even. So, when I speak on the Budget, I must remember my constituency where 150,000 people live and where there is no drinking water. In this connection, I want to draw the attention of the Government to paragraph 35 of the Budget speech *re.* Welfare of Backward Classes and Harijans. It says—

"........Government will continue to ensure that the weaker sections of the society get their legitimate share of the benefits under such schemes."

So, the Government should promote the welfare of not only the weaker sections of the society but also improve the weaker and backward areas in the State like Vedasandur, Ottanchatram, Reddiarchatram and Guziliamparai, side by side with the development of areas like Sholavandan. Sir, I want to stress that backward areas in the State must be developed. Recently a great event has taken place in the southernmost part of our State. Two Panchayat Unions, Radhapuram and Nanguneri, have come forward to join the Gramdhan Movement even though they are a backward area. I congratulate the people of these two Panchayat Unions for their belief in the Gandhian methods. What does it show? It shows the desire of the people to improve the society on Gandhian lines. In the same way, the backward areas like Vedasandur, Ottanchatram, Reddiarchatram and Guziliamparai should be improved just like the Gramdhan areas. I want to say only one thing.
In paragraph 11 of his speech the Hon. Chief Minister has said that 12-30 p.m.
about Rs. 730 lakhs of rupees has been set apart for improvement of minor irrigation schemes. Schemes for supply of oil engines and electric motor pumpsets and new well subsidy schemes are very good schemes. Boring wells and deepening of wells with rock blaster units is another good scheme. I feel that such schemes are specially important for areas like Vedasandur and Guziliamparai. I request Government to sanction some schemes, at least for these areas. Vedasandur Union has been requesting Government for a rock blasting unit and Government should give permission to this Union for purchase of the equipment. I request Government to sanction a rural manpower development scheme for Guziliamparai. Areas like Vedasandur, which are backward, need such schemes for their development. Then only they could become self-sufficient.

While talking of self-sufficiency I want that the Food Minister should turn his eye to my area which is backward. I know that in the recent District Development Council meeting at Tiruchirappalli, Karur was given twenty relief shops. But in Vedasandur there is not even a single relief shop. Without a shop how can people buy rice and from where ? Panchayat Unions should concentrate on food production and if food production is concentrated in Panchayat Unions, they would be doing great service to the country. Government can also come forward to start some relief shops in backward areas like Vedasandur. I would once again request Government to give instructions for Panchayats to concentrate on food production.

There is the 'Kodavanar' river. Its surplus water should be properly harnessed. I request the Hon. Minister for Public Works to sanction a scheme to utilise the excess water of Kodavanar.

There is "Panrimalai' in Dindigul which is a plantation area. The people there require a road badly, since without that they could not look after the plantations. I request the Government to sanction a road to 'Panrimalai'.

There is another good scheme called the "Pond Scheme". One such scheme may be sanctioned by the Government for Vedasandur and Reddichatram which are backward areas.

Having told these problems for my constituency, I would like to say one or two things and I hope necessary permission to speak for one or two minutes more would be given by the Chair.

As regards "co-operation" it is said that assistance of the order of Rs. 6 lakhs is expected from Government of India for modernisation of all rice mills in the co-operative sector. This programme can be of great help in improving the recovery of rice from paddy. It should be pointed out that all the rice mills are polishing rice to the fullest extent with the result that nearly 10 per cent of rice is lost and a lot of nutrition is also lost. I request the Hon. Minister to see that all rice mills are also modernised. An order should be passed that all polishing of rice should be stopped. By stopping polishing nearly 2 to 3 lakhs of tons of rice can be saved and they could be distributed in backward areas. We believe in food production. In 1960-61 there was a production of 35 lakhs of tons of paddy in Madras State. In 1961-62 there was an increase of 3 lakhs of tons. At present our production is 38·46 lakhs of tons. By stopping of polishing of rice by mills, we can save a lot of rice.

There is another point which the Hon. Chief Minister has touched upon in his speech. There is the High Power Committee on economy. I would like to offer one or two suggestions in this regard. The department of agricultural income-tax, the department of weights and measures are proposed to be abolished and there is going to be integration of public health and medical departments. I welcome these suggestions. Integration is welcome. It is a commendable programme. We save a lot of money by that. Let me offer here





one or two suggestions. The panchayat Unions have now taken a definite shape in our national life. We believe in de-centralisation. Why not the Panchayat Unions be given the revenue powers and why not the B.D.Os be made to act as Tahsildars, with the help of regular Deputy Tahsildars? The present Tahsildars may be gazetted and be made to act as deputy-Collectors for each taluk. Thereby all the present deputy Collectors' and sub-Collectors' posts may be abolished and thereby we could effect considerable economy. I request Government to give their serious consideration to this suggestion of mine. By this arrangement, the Panchayat Unions could be made more effective and all the members of the society could have final access to the Panchayat Union for redressal of their grievances.

There is another suggestion also which I want to place before the Government. There are so many branches of engineering like S.M.I.P., D.C.R., Food Production, etc. All these engineering departments could be integrated and be put in-charge of the Executive Engineer of the district concerned. Thereby considerable savings could be effected. With these suggestions, I beg to resume my seat.

*திரு. இரா. நாராயணன்: கனம் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையை நமது கனம் முதலமைச்சர் அவர்கள் இந்த சட்ட மன்றத்திலே தாக்கல் செய்த கருத்துக்களின் பேரில் நானும் அதனை ஒட்டி என்னுடைய கருத்துக்களையும் சொல்லலாம் என்று நினைக்கிறேன். நம் நாட்டில் விவசாயம் முக்கியமானது. ஆனால், விவசாயம் செய்யக்கூடிய விவசாயிகள் இன்று நாட்டில் வதங்கிக் கொண்டிருக்கிறார்கள், வாடிக் கொண்டிருக்கிறார்கள். ஏனென்றால் விவசாயிகளுக்கு நமது ஜனநாயக சர்க்காரில் அதிக சலுகைகள் கொடுக்கப்பட்டு வருகிறது என்று இங்கேயிருக்கிற உறுப்பினர்கள் பலர் புகழ்ந்து பாடினார்கள். நானும் ஒரு விவசாயிதான். ஆனால் விவசாயம் செய்யக்கூடிய நாங்கள் எந்த நிலையில் இருக்கிறோம் என்பது எங்களுக்குத்தான் தெரியும். இங்கே கூறப்பட்டது, அவர்களுக்கு கட்டுவதற்கு மூன்று வேட்டிகள், காலில் போட்டுக்கொள்ள மூன்று செருப்புக்கள் இவைகள் எல்லாம் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டிருக்கிறது என்றெல்லாம் சொன்னார்கள். இதை ஒப்பிட்டு நான் சில கருத்துக்களை சொல்லுகிறேன். இந்த அரசாங்க ஊழியர்களைப்பற்றி சொல்லும்போது, நமது முதலமைச்சர் அவர்கள் விலைவாசி எல்லாம் ஏறிக்கொண்டேயிருக்கிறது, ஆகவே கெஜட் பதிவு பெறாத உத்தியோகஸ்தர்களுக்கு நியாயவிலைக் கடைகளை ஏற்படுத்தி அதன் மூலமாக பல அத்தியாவசியமான பண்டங்களை கொடுக்கப் போகிறோம் என்று கூறியிருக்கிறார்கள். நான் ஒன்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். எந்தவிதமான நியாயவிலைக் கடைகளை திறந்தாலும், விலைகளைக் கட்டுப்படுத்த முடியாவிட்டால் ஒன்றுமே செய்ய முடியாது. ஏதோ வீடுகளில் அழுகிற பிள்ளைகளுக்கு மிட்டாய்களை கொடுத்து விட்டால் அழாமல் இருப்பது, பதிவு பெறாத உத்தியோகஸ்தர்களுக்கு நியாயவிலைக் கடைகளை திறந்து அதன் மூலம் பண்டங்களை கொடுக்கப் போகிறோம் என்று முதலமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். நான் கேட்டுக் கொள்வது, தற்போது உடனடியாக பஞ்சப்படியை உயர்த்தாவிட்டாலும்; எந்தெந்த அறுவடை இல்லாத காலத்தில் அவர்கள் கடன்கள் கேட்கின்றார்களோ அப்பொழுது அவர்களுக்கு வேண்டிய கடனைக் கொடுத்து உதவி செய்யலாம். அதன்மூலமாக உரிய காலத்தில் நெல்லை வாங்கிக் கொள்ளலாம். புளி வாங்கிக் கொள்ளலாம், மிளகாய் வாங்கிக் கொள்ளலாம், இப்படிப்பட்ட பொருட்களை குறைந்த விலையில் வாங்குவதற்கு வசதியாக கடன் கொடுத்து உதவ வேண்டும் என்பதை சொல்லிக் கொள்கிறேன். இதற்கு

ஒப்பிட்டுச் சொல்லுகிறேன். இப்போது புளி ஒரு கிலோ ஒரு ரூபாய்க்கு விற்கிறது. பருப்பு $1\frac{1}{4}$ ரூபாய்க்கு விற்கிறது. இரண்டு மாதங்களுக்கு முன் பருப்பு விலை $2\frac{1}{2}$ ரூபாயாக இருந்தது. புளி விலை $2\frac{1}{2}$ ரூபாயாக இருந்தது. இப்போது புளியின் விலையும் பருப்பின் விலையும் இறங்கியிருக்கின்றது. காரணம் என்ன? இது அறுவடைக் காலம். இந்த மாதிரி அறுவடைக் காலத்தில் அரசாங்கம் கொள்முதல் செய்யவேண்டும். அந்த மாதரி நல்ல பண்ட்ங்களைச் சேகரித்து, பதிவு பெருத உத்தியோகஸ்தர்களுக்கு வழங்கினுல் நல்ல நிலை ஏற்படும். இதை எதற்காகச் சொல்லுகிறேன் என்ருல், இன்றைக்கு விவசாயி இருக்கிருன். பயிர் நட்டு விடுகிருன். கதிர் வருவதற்கு முன்பே கஷ்டத்தில் கடன் வாங்கவேண்டிய நிலைமை ஏற்படுகிறது. அப்படி என் பகுதியில் தென் ஆற்காடு ஜில்லாவிலும், திருச்சி ஜில்லாவிலும், அனுபவப்பட்ட காரணத்தினுல் சொல்லுகிறேன். விவசாயி பயிர் நட்டு, பூ வந்தவுடன் கடன் வாங்குகிருன். ஏனென்ருல் கையில் பணம் இல்லை. கடன் வாங்க வேண்டிய நிலைமை இருக்கிறது. அரசாங்கம் கடன் கொடுப்பதும், உரம் கொடுப்பதும் போதுமானதாக இல்லை. அரசாங்கத்தின் கொள்முதல் செய்கிருர்களே அந்தப் பணத்தைக் கொண்டு முதலிலேயே கடன் கொடுக்க வேண்டும். அறுவடைக்குமுன் கடன் கொடுத்தால் மூட்டைகளைச் சேமித்து வைக்க எதுவாக இருக்கும். இதை நான் ஏன் சொல்கிறேன் என்ருல், விவசாயி 100 ரூபாய் கடன் வாங்குகிருன் என்ருல், அந்த 100 ரூபாய்க்கு ஒரு மூட்டை நெல்லை வட்டியாகக் கொடுக்கிருன். அதேமாதிரி 1,000 ரூபாய் கடன் வாங்க வேண்டிய நிலைமை வருகிறது. 10 மூட்டை நெல்லை வட்டிக்காக பணக்காரர்களிடத்தில் கொடுத்து விடுகிருன். பணக்காரர்களிடத்திலே இதே மாதிரி கடன் வாங்கி களத்திலே அறுவடை செய்து அடிக்கும் போது அந்த நெல்லை அப்படியே வாங்கிக் கொண்டு போய்விடுகிருர்கள். அப்படி பணக்காரர்கள் வாங்கிக்கொண்டு சென்று சேமித்து, தன்னுடைய ரைஸ் மில்லிலே அறைத்து அரிசியாகச் செய்து கொள்கிருர்கள் அல்லது சிற்றூர் வியாபாரியிடத்தில் அதிக விலைக்கு விற்கிருர்கள். அறுவடைக்கு முன் மூட்டை 39 ரூபாயாக இருந்தது, இன்றைக்கு 29 ரூபாயாக இருக்கிறது. அறுவடை செய்வதற்கு முன்பே அரசாங்கத்தில் கடன் கொடுக்க வேண்டும். அப்படிக் கடன் கொடுத்து நெல்லை கொள்முதல் செய்தால் அதிக விலை ஏருமலும், பதிவு பெருத உத்தியோகஸ்தர்களுக்கு நல்ல முறையில் அரிசி வழங்குவதற்கும் ஏற்றதாக இருக்கும் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். மற்றபடி எந்த விலைக் கட்டுப்பாடு செய்தாலும் விவசாயிகளிடத்திலிருந்து குறைந்த விலையில் வாங்க முடியாது. அப்படி குறைந்த விலையில் கொடுத்தாலும் அவர்களுக்குக் கட்டுபடி ஆகாது.

பஞ்சாயத்து யூனியனில் இன்றைக்குக் கடன் கொடுக்கிருர்கள். கொடுத்த கடனை எந்த வழியில் செலவு செய்கிருர்கள்? உரம் கொடுக்கிறோம் என்று சொல்லுகிருர்கள். சீர்திருத்தத்திற்குக் கடன் கொடுக்கிறோம் என்று சொல்லுகிருர்கள். உழவு மாடு வாங்க பணம் கொடுக்கிறோம் என்று சொல்லுகிருர்கள். உழவு மாடு வாங்க எந்த பஞ்சாயத்து யூனியனிலாவது கொடுக்கப்பட்டிருக்கிறதா? உழவு மாடு வாங்கக் கடன் கொடுப்பதை நிறுத்திவிட உத்திரவு போட்டிருக்கிருர்கள். ஆகவே கடன் கிடையாது என்று சொல்லுகிருர்கள். உழவு மாடு இருந்தால் தான் நிலத்தைச் சீர்திருத்தம் செய்ய முடியும். நிலச் சீர்திருத்தத்திற்கும் கடன் கொடுக்க வேண்டும், உழவு மாட்டுக்கும் கடன் கொடுக்கவேண்டும். அந்த வசதியைச் செய்தால்தான் நல்ல முறையில் வாழ முடியும்.

மற்ருென்றும் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இன்றைக்கு அரசாங்கத்திலே, படிக்கக் கூடிய மாணவர்களுக்கு கொடுக்கக் கூடிய உதவித் தொகை எந்த அளவில் இருக்கிறது என்பதை நீங்களே எண்ணிப் பார்க்க வேண்டும். எங்களிடத்தில் வந்து எத்தனையோ மாணவர்கள் அரசாங்க உதவித் தொகை கிடைக்கவில்லை என்று சொல்லுகிருர்கள். நாங்கள் வந்து மந்திரிகளிடம் முறையிடுகிறோம். அவர்களுக்கெல்லாம் உதவித் தொகை கொடுக்க முயற்சிக்கப்பட வேண்டும். பிற்பட்ட வகுப்பினருக்கு அதிக உதவித் தொகை வேண்டுமென்று சொல்லிக் கொள்கிறேன். இதை முக்கியமாக கவனித்து ஆவன செய்ய வேண்டும் என்று..........





**கனம் திரு. பூ. கக்கன் :** கனம் சேர்மன் அவர்களே, இந்த அரசாங்கம் பிற்பட்ட மக்களுக்கு விசேஷமாக ஆதிவாசிகள், ஹரிஜன மக்களுக்கு செய்துவரும் உதவியையும், எடுத்து வரும் முயற்சிகளையும் எல்லோரும் அறிவார்கள். வருஷா வருஷம் அதிகமாகச் செய்து வருகிறோம். இந்த வருஷம்கூட பணம் போதாது என்று கனம் முதல் அமைச்சரிடம் சொல்லி 5 லட்சம் ரூபாய் அதிகமாக வாங்கிக் கொடுத்தோம். மேலும் 3 லட்சம் ரூபாய் வாங்கிக் கொடுத்து நல்ல முறையில் ஹரிஜன நல இலாகா பாடுபட்டு வருகிறது என்று சொல்லிக் கொள்கிறேன்.

**திரு. இரா. நாராயணன் :** தலைவர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் சொன்ன பதிலைக் கேட்டு அதிக மகிழ்ச்சி அடைகிறேன். அதோடு ஏழை மாணவர்களுக்குப் படிக்க இவ்வளவு நிதி ஒதுக்கி வாழ வழி செய்வதைப்பற்றி அவரை, வாயார, மனமார வாழ்த்துகிறேன்.

அதுவும் தவிர, இப்போது பள்ளிப் பிள்ளைகளுக்குப் பாடப் புத்தகங்கள், சிலேட்டுகள் முதலியன இனமாக வழங்கப்படும் என்று குறிப்பிட்டிருக்கிருர்கள். தொழில் கல்லூரிகள் அயல் நாடுகளைப் போல முன்னேற வேண்டுமென்று எண்ணி, அங்கு உள்ளது போலத் தொழில் கல்லூரிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ஆனுல் வேலை வாய்ப்பு, சம்பள நிர்ணயம் ஆகியவைகளுக்கு வழி செய்யும் முறைகள் அமைக்கப்படவில்லை என்று சொல்லுகிருர்கள். சில தொழில் கல்லூரிகளில் மூன்று ஆண்டுகள் படித்துவிட்ட பிறகு பலன் இல்லாமல் சிலர் இருக்கிருர்கள். குறிப்பாக தொழில் கல்லூரிகளில் படித்தவர்களுக்கு சம்பளம் நிர்ணயிக்க வேண்டும், வேலை வாய்ப்பும் கொடுக்க வழி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

தொழில் பயிற்சி பெற்ற பிறகு வேலை இல்லாமல் திண்டாடுகிருர்கள். நமது சென்னையிலேகூட, தோல் பதனிடும் தொழில் பயிற்சிக் கல்லூரி ஒன்று ஆரம்பித்திருக்கிருர்கள். அதிலே அதிகமான மாணவர்கள் படித்து வேலை வாய்ப்பு இல்லாமல் இருக்கிருர்கள். அவர்களுக்கு இந்த அரசாங்கம் உதவி செய்யவேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன்.

கிராமக் குடிதண்ணீர்த் திட்டத்தைப் பற்றி இந்த அறிக்கையிலே சரியாகப் புரிந்துகொள்ள முடியவில்லை. நானும் நிதி நிலை அறிக்கையிலே கனம் முதல் அமைச்சர் என்ன கூறியிருக்கிருர் என்று பார்த்தேன். செந்துறை, ஜெயங்கொண்டான் பகுதியில் குடிதண்ணீர்ப் பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது. கிணற்றில் நல்ல தண்ணீர் இல்லை. இப்போதுகூட சட்டசபையில் இருந்து குழுவினர்கள் ஊர் ஊராக வந்தார்கள். அப்போது கூட தண்ணீரைக் கொண்டு வந்து காட்டினேம். தேத்தாங்கொட்டை போட்டும், படிக்காரம் போட்டும் தண்ணீரை தெளிய வைத்துக் காட்டினேம். அந்த வட்டாரத்திற்குக் குடிதண்ணீர் வசதி செய்யப்படவில்லை. கிராம நீர்த் திட்டங்களுக்காக 120 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருப்பதாக நிதி நிலை அறிக்கையிலே காண்கிறேன். இதைத் கொண்டாவது செந்துறை, உடையார்பாளையம், ஜெயங்கொண்டான் பகுதிக்கு நான்காவது திட்ட காலத்திலாவது முதற் கடமையாக குடிநீர்வசதியை செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நிலச் சீர்திருத்தம் என்பதைப் பற்றி ஒரு சட்டம் இந்த அரசாங்கத்திலே கொண்டு வந்தார்கள். ஏழை எளியவர்கள் இந்த நிலச் சீர்திருத்தத்தினுல் பலன் அடைந்தார்களா என்பதை அரசாங்கம் கவனித்து மேலும் புனராலோசனை செய்து அந்தச் சட்டத்தைத் திருத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்தக் கூட்டத்திலே கூட சட்ட சபையில் விதண்டாவாதம் நடந்தது. கால்நடைப் பண்ணைகளை எந்த எந்த இடத்தில் அமைக்க வேண்டுமென்று கருத வேண்டும். இப்போது தண்ணீர் இல்லாத இடங்களில் விதைப் பண்ணைகளை அமைத்து விட்டோம், அதனால் தான் நஷ்டம் ஏற்படுகிறது என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். கால் நடைப் பண்ணைகள், பால் பண்ணைகள், இவைகளை காடுகள் நிறைய இருக்கக்கூடிய இடத்திலே, தண்ணீர் இருக்கக் கூடிய இடத்திலே அமைத்துக் கொடுத்தால் அங்குள்ள மக்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் என்று கூறிக்கொண்டு எனது சிற்றுரையை முடித்துக்கொள்கிறேன், வணக்கம்.

* **திரு. ரா. ராஜகோபாலசாமி :** கனம் தலைவர் அவர்களே, மதிப்பிற்குரிய கனம் முதல் அமைச்சர் இந்தச் சபையில் சமர்ப்பித்த நிதி நிலை அறிக்கையை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். நமது முதல் அமைச்சர் அவர்கள் உடல் நிலை சரியாக இல்லாமல் இருந்தும், இந்த மன்றத்தில் தன்னுடைய கடமையைச் செய்வதற்காக ஒரு மணி நேரத்திற்கு மேல் நின்றுகொண்டு நிதி நிலை அறிக்கையை படித்ததற்காக எனது மனமார்ந்த பாராட்டுதலை தெரிவித்துக்கொள்கிறேன். அவர் ஒரு நல்ல நிதி நிலை அறிக்கையை சமர்ப்பித்திருக்கிறார். இந்த அறிக்கையிலே புதியதாக வரி எதுவுமில்லை. அதற்காக நாம் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்ள கடமைப் பட்டிருக்கிறோம். அதுமட்டுமல்ல, அரசாங்கம் மூன்றாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் நிறைவேற்றியுள்ள திட்ட வேலைகளையெல்லாம் விளக்கியிருக்கிறார். பல நன்மைகளை அரசாங்கம் செய்துகொண்டிருந்தபோதிலும், எதிர்க்கட்சி நண்பர்கள் ஒரு சில குறைகள் இருந்தால் அதை மாத்திரம் மிகைப்படுத்தி கூறிக் கொண்டு அரசாங்கம் ஒரு நன்மை செய்யவில்லை, ஒன்றும் செய்ய வில்லை என்று சொல்லுகிறார்கள். அது சரியல்ல.

மது விலக்கைப்பற்றி ஒரு வார்த்தை கூற விரும்புகிறேன். ஏதோ ஒரு சில இடங்களில் ஆங்காங்கு கள்ளச் சாராயம் காய்ச்சுகிறார்கள் என்றால், அது மொத்தத்தில் எடுத்துக்கொண்டு பார்த்தால் ஒரு சிறிய பெர்ஸென்டேஜ் தான். அதனால் மதுவிலக்கை எடுத்து விடும்படி சொல்வது சரியல்ல. அதே மாதிரி அங்கு இங்கு ஏதோ ஒன்றிரண்டு கூட்டுறவு சங்கங்களில் மோசடி நடந்தால், அதை வைத்துக்கொண்டு கூட்டுறவு சங்கத்திலுள்ள எல்லோருமே கொள்ளை அடிக்கிறார்கள் என்று சொல்வது சரியல்ல என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

குறிப்பாக எனக்கு முன்பு பேசிய நண்பர் மதியழகன் அவர்கள் பரம்பிக்குளம், ஆளியாறு திட்டத்தைப்பற்றி இந்தச் சபையில் குறிப்பிட்டார்கள். அதற்குச் செலவு மிகவும் அதிகம். சர்க்காருக்கு அதனால் வருமானம் இல்லை, அதுமாதிரி திட்டங்கள் நிறைவேற்றுவது அவசியமில்லை என்று கூறினார்கள். நாம் ஆங்கிலேயர்களுக்கு அடிமையாக இருந்த காலத்தில் ஒரு திட்டத்தை நிறைவேற்றவேண்டுமென்றால் அவர்கள் எவ்வளவு வருமானம் வருகிறது, முதலீட்டுத் தொகைக்கு தகுந்த வருமானம் வருகிறதா என்று கணக்குப் பார்த்து நிறைவேற்றிக்கொண்டிருந்தார்கள். ஆனால், இப்பொழுது நாம் சோஷலிஸ க்ஷேமநல சர்க்காரை நடத்துகிறோம். அதிக செலவு செய்தாவது மக்கள் பயன் அடையும்படிச் செய்ய வேண்டும் என்று கருதி, அரசாங்கம் மத்திய சர்க்காரிடம் மிகவும் வாதாடி இந்தத் திட்டத்தை மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் நிறைவேற்றியிருக்கிறார்கள். அதே நேரத்தில் நண்பர் திரு. மதியழகன் பேசும்பொழுது மதிப்பிற்குரிய கனம் கூட்டுறவு அமைச்சர் ஸ்ரீமான் பட்டகார் அவர்களைக் குறிப்பிட்டு, அவர்கள் பகுதியில் ஒரு ஊருக்குச் சென்றிருந்தபோது மக்கள் தண்ணீர் இல்லாமல் கஷ்டப்படுவதைப் பார்த்ததாகச் சொன்னார்கள். அதுமாதிரி வரண்ட பகுதிகளுக்குத்தான் தண்ணீர் வேண்டுமென்று அதிகமாக





பணம் செலவழித்து இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. உடுமலைப்பேட்டை தாலூக்காவில் 65,000 ஏக்கர், தாராபுரம் தாலூக்காவில் 40,000 ஏக்கர், பல்லடம் தாலுக்காவில் 50,000 ஏக்கர் வரண்ட நிலங்களுக்கு தண்ணீர் பாய்வதற்கு இவ்வளவு அதிகப் பணம் செலவு செய்து, அங்குள்ள ஏழை மக்கள், விவசாயிகள் எல்லோரும் நன்மை அடைவதற்காக அரசாங்கம் இந்தத் திட்டத்தை நிறைவேற்றியிருக்கிறது. அரசாங்கம் வேண்டுமென்று ஒன்றும் செய்யவில்லை. இந்தத் திட்டத்தினால் மக்கள் நன்மை அடைய முடியும் என்பதற்காகத்தான் இதை நிறைவேற்றியிருக்கிறார்கள். நான் மதிப்பிற்குரிய உணவு அமைச்சர் அவர்களுக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நண்பர் மதியழகன் சொன்ன கருத்தை வைத்துக்கொண்டு திட்டங்களை நிறைவேற்ற முற்பட்டால், நமது மாநிலத்தில் எந்தத் திட்டமும் செயல்பட முடியாது என்று சொல்லிக்கொள்கிறேன். அவரை இந்தக் கருத்தை ஏற்றுக்கொள்ளவேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நிதி நிலை அறிக்கையில் விவசாயத்திற்கு முதல் இடம் அளித்திருக்கிறார்கள். நமது மாநிலத்தை எடுத்துக்கொண்டால், ஒரு சில குறைகள் இருந்தாலும் மற்ற மாநிலங்களைவிட நம் மாநிலம் விவசாயத்துறையில் நல்ல முன்னேற்றம் அடைந்திருக்கிறது. நமது மாநில விவசாய இலாகா பல நல்ல சேவைகளைச் செய்து வந்திருக்கிறார்கள். அதற்காக நான் அவர்களைப் பாராட்ட கடமைப்பட்டிருக்கிறேன். புதியதாக ஏ.டி..டி. 27 நெல்லைப்பற்றி முதல் அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். சி. எஸ். எச். 1 என்ற புதிய ரக சோளத்தைப் பற்றியும் சொல்லியிருக்கிறார்கள். "ஹைபிரிட்" கம்பைப் பற்றியும் சொல்லியிருக்கிறார்கள் . நான் நேரிடையாக இதையெல்லாம் பயிர் செய்து பார்த்திருக்கிறேன். நல்ல ஈல்டு (கண்டுமுதல்) கிடைக்கிறது. இந்த ரக விதைகளை நம் மாநிலம் பூராவும் எவ்வளவு சீக்கிரம் பரவச் செய்ய முடியுமோ அவ்வளவு சீக்கிரம் பரவச்செய்ய விதைகளைத் தயார் செய்து விவசாயிகளுக்குக் கொடுக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று இந்த சந்தர்ப்பத்தில் அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக விவசாயத் துறையிலே பயிர் பாதுகாப்பு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. பயிர் பாதுகாப்பில் நாம் மிகவும் அக்கரையுடன் நடந்துகொள்ளவேண்டும். குறிப்பாக நெல் பயிரை எடுத்துக்கொண்டால் பலவிதமான நோய்கள் ஏற்படுகின்றன. "ஜாஸிட்" ஸ்டேம் போரெர், பிளாஸ்டு" போன்ற பலவிதமான நோய்கள் பயிரைத் தாக்குகின்றன. திடீரென்று நோய் கண்டால் ஒரு சிறிய விவசாயி ஸ்ப்ரேயரையோ அல்லது டஸ்டரையோ கொண்டு வந்து விவசாய அதிகாரியால் ஆலோசனையும் பெற்று மருந்து தெளிப்பதற்குள், பயிர் பூராவையும் பூச்சிகள் அழித்து விடும். இரண்டு மூன்று நாட்களுக்குள் சில நோய்கள் மாசூலைக்கெடுத்து விடுகிறது. ஆகவே, எந்தப் பகுதியில் நெற் பயிருக்கு நோய் கண்டிருக்கிறதோ அந்தப் பகுதிகளில் சர்க்காரே பிளாண்டு ப்ரொடெக்ஷன் அதிகாரிகள், விவசாய இலாகா அதிகாரிகளை நியமித்து பவர் ஸ்ப்ரேயர், பவர் டஸ்ட்டரைக் கொண்டு வந்து மருந்து தெளித்து, பயிர்களைக் காப்பாற்றிவிட்டு, பின்னால் அறுவடை ஆனவுடன் சர்க்கார் செலவு செய்த பணத்தை வசூல் செய்துகொள்ளலாம் என்று இந்த சமயத்தில் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

விவசாய அதிகாரிகளைப் பற்றி என்னுடைய கருத்தைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். விவசாய விஸ்தரிப்பு அதிகாரிகளுக்கு பல வேலைகள் இருக்கின்றன. அவர்களுக்கு டெப்போவிலேயே வேலை சரியாக இருக்கிறது. வெளியிலே சென்று விஸ்தரிப்புவேலையை கவனிக்க முடியவில்லை. அவர்களுக்குப் பெரிய பொறுப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. அதனால் அவர்கள் விவசாய விஸ்தரிப்பு வேலையை கவனிக்க முடியாத குறை இருக்கிறது என்பதை பணிவன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன். ஒரு அக்கௌன்டென்டு அல்லது யு. டி. ஸி.யை நியமித்து டெப்போ கணக்குகளையெல்லாம் அவரை எழுதச்சொல்லிவிட்டு, டெப்போ

பொறுப்பை அவரிடம் கொடுத்துவிட்டு, விவசாய விஸ்தரிப்பு அதிகாரிகளை விவசாய விஸ்தரிப்பு வேலையில் ஈடுபடும்படிச் செய்யவேண்டும் என்று பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இப்பொழுது ஒவ்வொரு மாவட்டத்திலும் டிராக்டர்களும், புல்டோஸர்களும் ஒர்க்ஷாப்புகளும் இருக்கின்றன. இவை ஒரு உதவி விவசாய இஞ்சினியர் மேற்பார்வையில் இருக்கின்றன. "ஓவர் ஆல்" "அட்மினிஸ்டிரேடிவ் கண்டிரோல்" டெப்டி-டைரக்டரிடம் இருக்கின்றன. டெப்டி டைரக்டர் நான். டெக்னிகல் ஆபீசர் அவரிடம் இந்தப் பொறுப்பை விட்டிருப்பது சரியல்ல. அவருக்கு வேலை மிகவும் அதிகம். அவர் தன்னுடைய பகுதியிலுள்ள ஜில்லா விவசாய அதிகாரிகளை கண்காணிக்க வேண்டும், பல விவசாய விஸ்தரிப்பு வேலைகளை கவனிக்கவேண்டும். அவருக்கு இன்னும் பல வேலைகள் இருக்கின்றன. ஆங்காங்கு ஸாயில் கன்ஸர்வேஷன் டிவிஷனல் என்ஜினியர்கள் இருக்கிறார்கள். அவர்கள் டெக்னிகல் அதிகாரிகள், அவர்களிடம் இந்த டிராக்டர்கள் முதலியவைகளை அட்மினிஸ்ட்ரேடிவ் கண்ட்ரோல் நிர்வகிக்கும் பொறுப்பை ஒப்படைத்தால், மிகவும் நன்றாக அந்தத் திட்டம் செயல் படும் என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, ஐ.ஏ.ஏ.பி. தீவிர விவசாய உற்பத்தி திட்டம் செயல்படும் பகுதிகளில் தஞ்சையைத் தவிர மற்ற இடங்களில் இரண்டு விவசாய விஸ்தரிப்பு அதிகாரிகள் நியமிப்பதாக சர்க்கார் முடிவு செய்திருக்கிறார்கள். ஆனால், பல இடங்களில் ஒரு விவசாய விஸ்தரிப்பு அதிகாரி தான் இருக்கிறார். அதனால் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு குந்தகமாக இருக்கிறது. ஆகவே உடனே விஸ்தரிப்பு அதிகாரிகளை நியமிக்கவேண்டும். அப்படி விஸ்தரிப்பு அதிகாரிகள் டிகிரி பெற்றவர்கள் கிடைக்கவில்லை என்றால், பீல்டுமென் ஸர்வீஸில் உள்ளவர்களை, சர்வீஸ் உள்ளவர்களில், அனுபவம் உள்ளவர்களை விவசாய விஸ்தரிப்பு அதிகாரிகளாக பதவி உயர்வு கொடுத்து ஐ.ஏ.ஏ.பி. திட்டம் நிறைவேற்றப்படுகிற பகுதிகளில் இரண்டு விவசாய விஸ்தரிப்பு அதிகாரிகளை நியமிக்க வேண்டும் என்று நான் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கூட்டுறவு பற்றி ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். கூட்டுறவுத்துறையைப் பொறுத்த அளவிலே நமது மாநிலத்தில் அது நல்ல முறையில் தான் இயங்கிக்கொண்டிருக்கிறது. தீவிர விவசாய உற்பத்தி பகுதிகளிலே விவசாயிகளுக்கு காஷ், கைண்டு இரண்டு வகையிலும் விவசாயக் கடன் கொடுக்கப்படுகிறது. காஷ் (ரொக்கமாகவும்) கொடுக்கிறார்கள், கைண்டாகவும் (பொருளாகவும்) கொடுத்து உதவி செய்கிறார்கள். கைண்டில் உரம் பூச்சி மருந்து கொடுக்கிறார்கள். உரம் வேண்டுமானால் வாங்கி வைத்துக்கொள்ளலாம், விவசாயத்திற்கு தேவைப்படும் பொழுது உபயோகித்துக்கொள்ளலாம். ஆனால் பூச்சி மருந்தையும் முன் கூட்டியே வாங்கி வைத்துக்கொள்ளவேண்டும், அப்பொழுதுதான் பாக்கி காஷ் தொகை கொடுக்கப்படும் என்று சென்டிரல் பாங்கு, கூட்டுறவு அதிகாரிகள் வற்புறுத்துகிறார்கள். ஆனால், நோய் காண்பதற்கு முன்பு எந்தப் பயிருக்கு எந்த மருந்து தேவை என்று தெரியாது. ஒரே பயிரை பலவிதமான நோய்கள் தாக்கலாம். அப்பொழுது பலவிதமான மருந்துகள் தேவைப்படும். பயிருக்கு நோய் வந்த பிறகு எந்த மருந்து தேவையோ அதை வாங்கிக் கொண்டால் நலமாக இருக்கும். அப்படியில்லாமல் முன்கூட்டியே பூச்சி மருந்துகளை வாங்கி வைத்துக்கொண்டால், சில மருந்துகள் தேவைப்படாமல், விவசாயிகள் கையில் நின்றுபோய் விடும். ஆகவே அந்தப் பணத்தை பாங்கியிலேயே நிறுத்தி வைத்துக்கொண்டு நோய் வந்த பிற்பாடு, விவசாயிகளுக்குத் தேவையான மருந்தை வாங்குவதற்கு பணம் கொடுக்க வசதி செய்யுமாறும் பாக்கித்தொகைகளை உடனடியாகக் கொடுக்க ஏற்பாடுசெய்யுமாறும் நான் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.





கடைசியாக ஒன்று சொல்ல விரும்புகிறேன். விவசாயத்தைப் 1-00 p.m.
பொறுத்த வரையிலும், விவசாய வருமான வரி இருக்கிறது. இந்த வரி விதிப்பிலிருந்து சர்க்காருக்குக் கிடைக்கும் மொத்த வருமானம் மிகச் சிறிய அளவு கொண்டதுதான். ஆகவே அதை அடியோடு எடுத்து விட்டால், விவசாயிகள் மிகவும் சந்தோஷப்படுவார்கள். விவசாயிகளுக்குக் கஷ்டம் இல்லாமல் இருக்கும். அவர்கள் மேலும் ஊக்கத்தோடு விவசாயத்தைச் செய்ய உதவிகரமாக இருக்கும்.

அதோடு கூட விவசாயிகளின் நன்மையை உத்தேசித்து, பயிர் இன்ஷ்யூரன்ஸ், கால்நடை இன்ஷ்யூரன்ஸ் திட்டத்தைக் கொண்டுவந்து அதையும் அமல் படுத்த வேண்டும் என்று சொல்லிக்கொண்டு, இந்தச் சந்தர்ப்பத்தில் பேச அனுமதி கொடுத்த தலைவருக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொண்டு என் உரையை முடிக்கிறேன். வணக்கம்.

*** திரு. வி. ஆர். பெரியண்ணன் :** கனம் சட்டமன்றத்தலைவர் அவர்களே, இந்த நிதி நிலை அறிக்கை மீது ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இந்த நிதி நிலை அறிக்கையில் புதிய வரிகள் எதுவும் இல்லை என்று எதிர்க் கட்சிக்காரர்களெல்லாம் மிகவும் வேதனையோடு இருக்கிறார்கள் என்று ஆளும் கட்சி அங்கத்தினர்கள் பலர் நினைக்கிறார்கள். ஆனால், இந்த நிதி நிலை அறிக்கையிலே புதிய வரிகள் இல்லாவிட்டாலும், கடந்த நவம்பர் மாதத்திலேயே பாக்கி போடலாம் என்றிருந்த வரிகளையும் போட்டாகிவிட்டது. அதை மக்கள் மறந்துவிடவில்லை. அது மட்டுமல்லாமல், மத்திய சர்க்கார் நூறு கோடிக்கு மேல் புதிய வரிகள் போட்டிருக்கிறார்கள். அங்கேதானே போட்டிருக்கிறார்கள் என்று சொல்லலாம். அங்கே போட்டிருந்தாலும் கூட, தமிழ்நாட்டு மக்கள் அதனால் பாதிக்கப்படுகிறார்கள் என்பதைத் தமிழ் மக்கள் மறந்துவிட மாட்டார்கள்.

இந்த நிதி நிலை அறிக்கையைச் சமர்ப்பிப்பதற்கு முன்னதாக, பல கிராமப் பகுதி மக்களும் இந்த நில வரியைப் பூராவாகவும் ரத்து செய்துவிடுவார்கள் என்று எண்ணிக்கொண்டு இருந்தார்கள். கவர்னர் உரை மீது பேசும்போது சில ஆளும் கட்சிக்காரர்களும் கூட இந்த நில வரியைப் பூராவும் எடுத்துவிட வேண்டும் என்று பேசினார்கள். நான்கூட அப்படித் தான் நினைத்திருந்தேன். ஆனால், ஒன்றும் நடக்கவில்லை. அல்லது இந்த நெருக்கடியான நிலைமை என்பதற்காகச் சென்ற நவம்பர் மாதத்திலே கொண்டுவந்த வரியையாவது நீக்கிவிடுவார்கள் என்று பார்த்தோம். ஆனால், ஒன்றுமில்லை. ஆகவே, பல்வேறு வரிகளாலும் நாட்டு மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

அது மட்டுமல்லாமல், விவசாயிகளுக்கு நிறைய வசதிகள் செய்து கொடுக்கிறோம் என்று சொல்லுகிறோம். ஆனால், சிறு பாசன வசதிகளைச் செய்துகொடுப்பதில் ஏரிகளை ரிப்பேர் செய்வது என்கிற வகையில், எங்கள் மாவட்டத்தைப் பொறுத்த வரையில், ஏரிகளை ரிப்பேர் செய்ய என்று மதிப்பீடுகள் எல்லாம் அனுப்பப்பட்டிருக்கிறது. இருந்தாலும், ஏரிகளை ரிப்பேர் செய்வதில் உடனடியாகக் கவனம் செலுத்தப்படவில்லை. அதை ரெவின்யூ அமைச்சர் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், விவசாயிகள் உற்பத்தி செய்யும் நெல்லுக்கு விலை நிர்ணயம் செய்து இருக்கிறோம். ஆனால், விவசாயி உற்பத்திக்குத் தேவைப்படும் பொருள்களுக்கு விலை நிர்ணயம் செய்யவில்லை. நெல்லுக்குக் குறிப்பிட்ட விலை இருக்கும்போது, விவசாயிகளுக்குத் தேவைப்படும் மற்ற பொருள்களுக்கு விலை நிர்ணயம் இல்லாத காரணத்தினால், மொத்தத்தில் விவசாயிகளுக்கு நஷ்டம்தான் ஏற்படுகிறது. கொள்முதல் என்று சொல்லும் போது, விவசாயிகளிடம் தனிப்பட்டவர்களும் வாங்குகிறார்கள். அவர்கள் 40, 50 ரூபாய்க்கு வாங்குகிறார்கள். ஆனால், கொள்முதலுக்கு என்று சர்க்கார் நிர்ணயித்திருக்கும் விலை ரூ. 30 தான். என்றைக்குமே விவசாயிக்கு லாபம் வேண்டும் என்றுதான் ஆவல் இருக்கும். செலவு அதிகமாக ஆவதினால், விவசாயிகளுக்குத் தேவைப்படும் பொருள்களுக்கும் விலை நிர்ணயம் செய்ய வேண்டும்; அப்படிச் செய்தால் உற்பத்தியும் பெருகும், கொள்முதலும் நல்ல முறையில் அமையும்.

விவசாயத்திற்கு வேண்டிய புல்டோசர்கள், 6, 7 எங்கள் மாவட்டத்தில் இருக்கின்றன. ஆனால், ஒன்றுகூட வேலை செய்யவில்லை. ஒன்றுதான் வேலை செய்துகொண்டிருந்தது. ஆனால், அதுவும் அரை எக்கரில் வேலை செய்த பிறகு நின்றுவிட்டது. அது அப்படியே இன்னமும் நின்றுகொண்டிருக்கிறது. கேட்டால், அதை ஓட்ட வேண்டிய கருவிகள் கிடைக்கவில்லை என்று சொல்லுகிறார்கள். அதன் விவரம் கேட்டால், அது இரண்டாவது உலக யுத்தத்தின்போது ஏதோ வேலைக்கென்று பயன்படுத்தப்பட்டு, ஆங்கிலேயர்களால் இங்கே அப்படியே விட்டுவிட்டுப் போனவை. பழைய காலத்து மாடல் இயந்திரம் என்று தெரிகிறது. ஆகவே அதற்கு ஸ்பேர் பார்ட்ஸ் வேண்டுமென்றால், வருஷக்கணக்காக ஆனாலும், எழுதிக்கொண்டுதான் இருக்கிறோம். பார்ட்ஸ் கிடைக்கவில்லை என்று சொல்லுகிறார்கள். இன்றைக்கு நம்முடைய வேலைக்கு ஏற்ற முறையிலே, நம் நாட்டிலேயே உற்பத்தி செய்யும் புல்டோசரை வாங்கினால், அதற்கு வேண்டிய ஸ்பேர் பார்ட்ஸ் சுலபமாகக் கிடைக்கும். அதில் கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கொள்முதல் செய்வதில் சில தவறுகள் ஏற்பட்டிருக்கின்றன. கவர்னர் உரைமீது பேசும்போது அதைச் சுட்டிக் காட்டினேன். இப்பொழுது மீண்டும் அந்தத் தொல்லைகள் ஏற்பட்டுக்கொண்டுதான் இருக்கின்றன. உதாரணத்திற்கு ஒன்று சொல்ல விரும்புகிறேன், என்னுடைய பகுதியில் மூலை கருப்பு என்ற கிராமத்தில் ஒருவர் கொஞ்ச நிலத்தை வாரத்திற்கு விட்டிருக்கிறார். எழுபது செண்ட் நிலம் பயிர் செய்யப்படுகிறது. அங்கே வாரம் என்றால், பாதிதான் வரும். ஏழு மூட்டை விளைந்து, அவருக்கு 3½ மூட்டை கிடைத்தது. கொள்முதல் அதிகாரிகள் அவரிடம் வந்து, நீங்கள் 3½ மூட்டை எங்களுக்குக் கொடுக்க வேண்டும் என்று நோட்டீஸ் கொடுத்தார்கள். வாரத்தில் பாதி போய்விட்டது. மூன்றரை மூட்டைதான் சொந்தக்காரருக்கே கிடைத்திருக்கிறது என்றாலும் அவர்கள் விடுவதாக இல்லை. ஒரு எக்கருக்குக் குறைவாகத்தான் விவசாயம் செய்திருக்கிறது என்றாலும் விடவில்லை. அதிகாரிகள் அவருடைய வீட்டில் புகுந்து 3½ மூட்டை நெல்லையும் எடுத்துக்கொண்டு போய்விட்டார்கள். இங்கே சட்டமன்றத்திலே அமைச்சர்கள், ஒரு எக்கருக்குக் குறைந்தால், தேவைக்குப் போகக் கொடுக்க முடிந்தால், கொடுக்கலாம் என்று சொல்லிக்கொண்டு இருக்கிறார்கள். ஆனால், அதிகாரிகளுக்கு நீங்கள் இத்தனை மூட்டை வசூல் செய்ய வேண்டும் என்று சொன்னவுடனே, அவர்கள் நடவடிக்கையில் இறங்கிவிடுகிறார்கள். ஆகவே, இதையெல்லாம் கவனித்து ஆக வேண்டியதைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, சேந்தமங்கலத்தில் குடி தண்ணீர் பிரச்னை மிக தீவிரமாக இருக்கிறது. 1963–ம் ஆண்டே, கனம் காமராஜர் அவர்கள் முதல் அமைச்சராக இருந்தபோது, அந்தத் திட்டத்திற்கு அடிக்கல் நாட்டினார்கள். அப்படியிருந்தும் இன்னமும், அந்தத் திட்டம் செயல்படவில்லை. செயல்படும் என்கிற அறிகுறியும் இல்லை. குடி தண்ணீர் திட்டம் இது வரையில் நல்ல முறையில் நிறைவேற்றப்படவில்லை. நான்காவது திட்டத்திலும் அதை நிறைவேற்றத் திட்டம் இருக்கிறதா என்று பார்த்தால் ஒன்றையும் காணோம். சேந்தமங்கலம் ஒரு நகரப் பஞ்சாயத்தாக இருப்பதால், அங்கே குடி தண்ணீர் இல்லாமல் மக்கள் அவதிப்படுகிறார்கள். அதற்கு உடனடியாக ஆவன செய்ய வேண்டும் என்று கோட்டுக்கொள்கிறேன்.

கொள்ளிமலைப் பகுதி பின்தங்கிய பகுதியாக, ட்ரைபல் ப்ளாக்காக, எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். கீழே இருந்து சாமான்கள் போக பல லட்சக்கணக்கான ரூபாய்கள் செலவு செய்து ரோடு போட்டிருக்கிறோம். ஆனால், இப்பொழுது, அங்கே சாதாரணமாக கார்கள், லாரிகள் போக முடியாத வகையில் அந்த ரோடு அமைந்திருக்கிறது. பல வகையிலும் கொள்ளிமலைப் பகுதியை அபிவிருத்தி செய்துகொண்டிருக்கும் போது, பல கட்டடங்கள் வந்து கொண்டிருக்கின்றன. இன்னும் அபிவிருத்திக்கு வேண்டிய பல சாமான்களையும் கொண்டு போக, அந்த ரோடின்மீது லாரிகள் போக முடியவில்லை. அப்படிப்பட்ட நிலைமை இருப்பதால், கட்டடம்





முதலியவை கட்டத் தலைச் சுமையாகவே, செங்கல், ஓடு முதலியவற்றை எடுத்துப் போக வேண்டிய நிலைமை இருக்கிறது. அதனால் அதிகமாகச் செலவு ஆகிறது. லாரி போகக் கூடிய ரோடு வசதி இல்லாததன் காரணத்தினால், யாரும் காண்ட்ராக்ட் எடுக்க முன்வருவதில்லை. நல்ல ரோடு இருந்தால், கன்ட்ராக்ட்டர்கள் முன்வருவார்கள். பஞ்சாயத்து யூனியன் ஆபீஸ் கூட கட்ட முடியவில்லை. தலையிலே சாமான்களைக் கொண்டுபோக வேண்டிய நிர்ப்பந்தம் இருப்பதன் காரணமாக, அதிகப்படியாகவே செலவும் ஆகிறது. நல்ல ரோடு போட்டுவிட்டால், லாரிகள் போகக்கூடிய நிலைமை ஏற்பட்டால், அந்தப் பகுதியை நல்ல முறையில் அபிவிருத்தி செய்ய வசதியாக இருக்கும். இதைப் பற்றி ரெவின்யூ அமைச்சர் அவர்கள் உடனடியாகக் கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

எங்கள் பகுதியிலே நல்ல முறையிலேயே பஸ் போக்கு வரத்து இருக்கிறது. என்றாலும், எருமைப்பட்டிக்கு நாமக்கல்லில் இருந்து துறையூர் போக, வசதியாக வண்டிகளே கிடையாது. 40–ம் ஆண்டிலிருந்து தனிப்பட்டவர் ஒருவர்தான் ஒரு ரூட்டை வைத்திருக்கிறார்கள். அவர்கள் பெரியவர், அதனால் வேறு யாரும் போட்டிக்குப் போவதில்லை, பல முறைகள் இது பற்றிக் கேட்டும் ஒன்றும் நடக்கவில்லை. சமீபத்தில் பத்து பஞ்சாயத்துக்களும் சேர்ந்து கையெழுத்திட்டு, பஸ்கள் வேண்டும் என்று கோரிக்கை அனுப்பியிருக்கிறார்கள். ஆனால், இதுவரை கவனிக்கப்படவில்லை. அந்த ரோடிலே அதிக பஸ் வசதி செய்து கொடுக்க வேண்டும். அதே கம்பெனிக்காரர்களுக்கே பர்மிட் கொடுத்தாலும் பரவாயில்லை. எப்படியாவது மக்களுக்கு பஸ் வசதி ஏற்பட வேண்டும். எருமைப்பட்டி வரையிலும் பஸ் வசதி அதிகப்படுத்தப்பட வேண்டும். பஸ்களில் த்ரூ டிக்கட்டுகளைத்தான் ஏற்றிக்கொள்ளுகிறார்களே தவிர, பத்து பதினைந்து மைல்கள் பிரயாணம் செய்பவர்களை ஏற்றிக்கொள்வதில்லை. அவர்கள் சைக்கிளிலோ வண்டிகளிலோ தான் பிரயாணம் செய்ய வேண்டிய நிலை இருக்கிறது. இது நீண்டநாள் பிரச்னையாக இருக்கிறது. பல தடவை டெவலெப்மெண்ட் கவுன்சில் கூட்டத்தில் சொல்லிவருகிறேன். பரிசீலனையில் இருக்கிறது என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அதன் பிறகு மக்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் கையெழுத்துப் போட்டு, அமைச்சருக்கும் கலெக்டருக்கும் மகசர் அனுப்பியிருக்கிறார்கள். அதை அனுப்பி ஐந்தாறு மாதம் ஆகிவிட்டது. என்ன ஆயிற்று என்றே தெரியவில்லை. அதைப் பரிசீலனை செய்து அந்த ரோட்டுக்கு அதிக பஸ் வசதி செய்து கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

குடும்பக் கட்டுப்பாடு வாரம் கொண்டாடும்போது, ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியன் எல்லையில் எத்தனை பேர்களுக்கு அறுவை சிகிச்சை செய்யப்பட்டது என்று கணக்குக் காட்ட வேண்டியிருப்பதால், தரகர்களை வைத்து, ஆட்களை இழுத்துக்கொண்டு வந்து அறுவை சிகிச்சை செய்துகொள்ள வற்புறுத்தப்படுகிறார்கள் என்ற செய்திகள் வந்தன. கருத்தடை நிலையம் என்று போர்டு போட்டுக்கொண்டு பல இடங்களில் கருச் சிதைவு செய்துகொண்டிருக்கிறார்கள். இதனால் பெண்களின் உடல் நலம் பாதிக்கப்படுகிறது. கருத்தடை நிலையம் என்று போர்டு போட்டுக்கொண்டு இருப்பவர்கள் உள்ளபடியே என்ன செய்கிறார்கள் என்பதைக் கண்காணிக்க வேண்டும். அவர்களுக்கு அரசாங்கம் அனுமதி கொடுத்திருக்கிறார்களா என்றால், அப்படியொன்றும் இல்லை. ஆக, இதிலே கண்காணிப்பு இருக்க வேண்டும். உண்மையிலேயே கருத்தடை நிலையமாக செயல்பட வேண்டிய சூழ்நிலையை உண்டாக்க வேண்டுமேயொழிய, கருச் சிதைவு செய்யக் கூடிய இடமாக இருக்கக் கூடாது. இதிலே கண்காணிப்புச் செய்தால், பெண்களின் உடல் நலமும் பாதிக்கப்படாது, குடும்பக் கட்டுப்பாடு திட்டமும் வெற்றிகரமாக நிறைவேறும் என்று கூறி என்னுடைய உரையை முடிக்கிறேன்.

**திரு. கே. பொன்னையன் :** கனம் தலைவர் அவர்களே, 1966–67–ம் ஆண்டுக்கான இந்த பட்ஜெட்டை வரவேற்று ஒரு சில கருத்துக்களை நான் சொல்ல விரும்புகிறேன். இந்த பட்ஜெட் மிகவும் நல்ல பட்ஜெட். தேன்

ஒழுகும் பட்ஜெட் என்று சொன்னால் கூட மிகையாகாது. ஆனால், இதை நல்ல பட்ஜெட் என்று எதிர்க் கட்சியிலே உள்ளவர்கள் ஒருபோதும் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். அவர்கள் நம்மை ஏசத்தான் செய்வார்கள். காரணம், நல்ல பட்ஜெட் என்று அவர்கள் சொல்லிவிட்டால் அவர்களுக்கு இங்கே வேலையே கிடையாது. அடுத்தபடியாக, அவர்கள் என்ன கேட்கிறார்கள் ? "18 ஆண்டு ஆட்சியிலே என்ன செய்துவிட்டீர்கள் ?" என்று கேட்கிறார்கள். நாம் நிறையத்தான் செய்திருக்கிறோம். அது அவர்களுக்கே தெரியும் தெரிந்து கொண்டேதான் அவர்கள் இம்மாதிரி சொல்கிறார்கள். இந்தக் கட்டடத்திற்கு எவ்வளவு ஆயுள் என்று இன்ஜினியர்களைக் கேட்டால் "300 வருஷம், 400 வருஷம்" என்று சொல்வார்கள். ஒரு மனிதனுக்கு சராசரி ஆயுள் 100 வயது என்று சொல்வார்கள். ஒரு கழுதைக்கு ஆயுள் 15 வயது என்று சொல்வார்கள். பட்சி இனங்களை எடுத்துக்கொண்டால், ஐந்து, ஆறு, ஏழு வருஷங்கள் என்று இப்படியாகச் சொல்வார்கள். இப்படி ஒவ்வொன்றுக்கும் ஆயுள் கணக்கு இருக்கும் போது, இந்தத் தேசத்திற்கு எத்தனை ஆயுள் என்று பார்த்தால், எத்தனையோ கோடி வருஷங்கள் இருக்கும் என்பதை அவர்கள் தயவு செய்து உணர்ந்துகொள்ள வேண்டும். அத்தனை கோடி வருஷங்களில் இந்தப் பதினெட்டு வருஷ ஆட்சி என்பது மிக மிகத் தூசி. இவ்வளவு சிறிய காலத்தில் எவ்வளவோ பெரிய நன்மைகளையெல்லாம் நாம் செய்திருக்கிறோம். பரவலாக எடுத்துப் பார்க்க வேண்டும். கல்வி, விவசாயம், தொழில் இப்படி ஒவ்வொரு துறையிலும் நாம் எத்தனையோ காரியங்களைச் சாதித்திருந்தும் கூட, "18 வருஷ ஆட்சியிலே என்ன செய்துவிட்டீர்கள் ?" என்று எதிர்க் கட்சி நண்பர்கள் கேட்கிறார்கள். ஏதோ மக்கள் பிச்சை எடுக்கிறார்கள் என்றெல்லாம் அவர்கள் சொல்லுகிறார்கள். இன்றைக்குப் பற்றாக்குறை ஒரு சில இடங்களில் இருக்கிறதே தவிர, பஞ்சம் என்பது இல்லை. தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில், நாம் சுய தேவையைப் பூர்த்தி செய்துகொள்ளும் ராஜ்யமாகும். என்றாலும் நாம் பக்கத்து ராஜ்யத்திற்கும் உதவி செய்ய வேண்டும் என்பதையும் எதிர்க் கட்சி நண்பர்கள் உணர வேண்டும். "நாற்காலியைப் பிடிக்கப் போகிறோம்" என்றெல்லாம் எதிர்க் கட்சி நண்பர்கள் சொல்லுகிறார்கள். பிடித்துப் பார்த்தால் தெரியும் என்ன ஆகும் என்று. இந்த பட்ஜெட்டைப் படித்துப் பார்த்தால் இது ஒரு நல்ல பட்ஜெட் என்பதை அவசியம் உணர்வார்கள் என்றே நான் நினைக்கிறேன்.

நமக்கு அரிசிப் பற்றாக்குறை இருக்கிறது. நாம் ரேஷன் கொடுத்துக் கொண்டு வருகிறோம். ஏழு அவுன்சாக மாற்றிவிட்டோம். கோதுமையும் நாம் நிறையச் சாப்பிடப் பழகிவிட்டோம். இந்த சமயத்தில் நமக்கு கோதுமை வந்துகொண்டிருக்கிறது. விலை குறைவாக உள்ள கோதுமைப் பண்டங்களை மக்கள் வாங்கிப் பயன்படுத்த முன்வருகிறார்கள். ஆகையால், கோதுமையை அதிகமாகக் கொடுத்து அரிசி ரேஷனை ஓரளவுக்குக் குறைக்கலாம். அதையும் சர்க்கார் கவனிக்கும்படியாக நான் கேட்டுக்கொள்ளுகிறேன். ராகி, கம்பு, சோளம் இவைகளையும் பலர் சாப்பிட்டுப் பழக்கம் உண்டு. ஆனால், இந்தத் தானியங்களைக் கூட ஜில்லாவிலிருந்து ஜில்லாவிற்குக் கொண்டு போகக் கூடாது என்று கண்ட்ரோல் செய்துவிட்டார்கள். அதற்கும் விலை நிர்ணயம் செய்துவிட்டார்கள். அந்தத் தானியங்களையும் பற்றாக்குறை இடங்களுக்குக் கொண்டுபோக அனுமதித்து, குறைந்த விலையிலும் கொடுக்க ஏற்பாடு செய்தால், ஜனங்கள் கம்பு, கேழ்வரகு, சோளம் போன்ற தானியங்களையும் அதிக அளவு உட்கொள்வதற்கு முடியும். அதையும் செய்ய வேண்டும்.

இப்பொழுதெல்லாம் என்.ஜி.ஓ.க்களைப்பற்றி அதிகமாகப் பேசப்படுகிறது. அவர்களுக்காக கன்ஸ்யூமர்ஸ் கோவாபரேடிவ் ஸ்டோர்ஸ் எங்கெங்கே வைக்கவேண்டுமோ அங்கெல்லாம் வைத்துத்தான் ஆகவேண்டும். பங்குத் தொகையைத் தள்ளுபடி செய்யவேண்டும். அல்லது அதற்காகக் கடன் கொடுக்கவேண்டும். என்.ஜி.ஒக்களுக்காக கன்ஸ்யூமர்ஸ் கோவாபரேடிவ் சொசைட்டி வைக்கும்போது, கூட்டுறவு இலாகாவிலிருந்து இலவசமாக ஒரு மானேஜருடைய சேவையைத் தரவேண்டும். ஸீனியர் இன்ஸ்பெக்டர் சேவையை இலவசமாகக் கொடுக்கவேண்டும். சொசைட்டி வைத்துக்கொள்ள இடமும் இலவசமாகக் கொடுக்கவேண்டும். என்.ஜி.ஓ.க்கள்





பொருள்கள் வாங்கிக்கொள்ள நிறையக் கடன் கொடுத்து, அந்தத் தொகையை சம்பளம் பட்டுவாடா செய்யும்போது திரும்பப் பெற்றுக்கொள்ளலாம். என்.ஜி.ஓ.க்கள் எங்கிருந்தாலும், தாலூகா அளவிலும், ப்ளாக் அளவிலும், அவர்களுக்கு ஸப்ஸிடைஸ்டு ரேட்டில் சாமான்கள் கிடைக்கும்படியாகச் செய்யவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டம் பற்றி இரண்டொருவர் பேசினார்கள். 40 கோடி ரூபாய் செலவில் நிறைவேற்றப்படக்கூடிய பிரம்மாண்டமான திட்டம் அது. அந்த வேலை முடிவடையும் தறுவாயில் இருக்கிறது. அதற்குள்ளாக, மறுபடியும் அண்டை ராஜ்யத்துடன் பேசி நீராறு, ஆனைமலையாறு திட்டங்களையும் கொண்டுவந்தால் தாராபுரம், பல்லடம் தாலூகாக்களில் மேலும் 50,000 ஏக்கருக்குப் பாசன வசதி செய்து கொடுக்கலாம். அதற்காக நாலைந்து கோடி ரூபாய்தான் செலவாகக்கூடும். இப்பொழுதே தொடர்ந்தாற்போல் அந்தத் திட்டங்களையும் எடுத்துக்கொண்டு நிறைவேற்றினால் செலவு குறையும். ஆனால், பரம்பிக்குளம்-ஆளியாறு திட்ட வேலைபூர்த்தியாகும் இந்தத் தருணத்தில், அதை எடுத்துக்கொள்ளாமல், பிறகு இந்த ஆனைமலையாறு, நீராறு, இடமலையாறு திட்டங்களை எடுத்துக்கொள்வோமானால், செலவு ஜாஸ்தியாகப் போய்விடும். ஆகவே, வேலையோடு வேலையாகச் சேர்த்து எடுத்துக்கொண்டால் இந்த மூன்று திட்டங்களையும் நாலைந்து கோடி ரூபாயில் நிறைவேற்றிவிடலாம். அதன் மூலம் ஐம்பதாயிரம் ஏக்கருக்குத் தண்ணீர் வசதி கிடைக்கும். அதைச் செய்யவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன். ஆனைமலையாறு, இடமலையாறு மூவாயிரம், நாலாயிரம் அடிக்குமேலே உற்பத்தியாவதால், அங்கிருந்து தண்ணீரை எடுக்கும்போது, மின்சார உற்பத்தியும் நாம் செய்ய வாய்ப்பு இருக்கிறது என்பதையும் கனம் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புகிறேன்.

பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டத்திலே யெல்லாம் மெயின் கனால், பிராஞ்சு கனால்களுக்கு கான்க்ரீட் போட்டிருக்கிறோம். 1947-ம் ஆண்டில் கிணறுகள் வெட்டப் பல கோடிக் கணக்காகப் பணம் கொடுத்து, கிணறுகள் வெட்டியிருக்கிறார்கள். அந்தக் கிணற்று ஓரங்களில் வாய்க்கால்கள் வருவதால் பம்ப் செட் வைத்துக்கொள்ள உத்தரவு கொடுக்க முடியாது, க்ளியரன்ஸ் சர்ட்டிபிகேட் கொடுக்க முடியாது என்று சொல்கிறார்கள். இது அங்குள்ள விவசாயிகளுக்கு மிகவும் வேதனையாக இருக்கிறது. கான்க்ரீட் வாய்க்கால்களாக இருப்பதால், தண்ணீர்க் கசிவு இருக்கப் போவதில்லை. அதனால், கிணறுகளுக்குப் பம்ப் செட் வைத்துக்கொள்ள அவசியம் சந்தர்ப்பம் கொடுக்கவேண்டும், அப்படிச் செய்தால் உணவு உற்பத்தி பெருகமுடியும். கோவை விவசாயிகளைப்பற்றி நான் அதிகம் சொல்ல வேண்டியதில்லை. அவர்கள் மிக மிக உழைப்பாளிகள். பம்ப் செட் வைத்துக்கொள்ள அனுமதி கொடுத்தால், அவர்கள் நல்ல வகையில் விவசாயம் செய்து, உணவுப்பொருள்களை அதிகமாக உண்டு பண்ணுவார்கள். அதற்கு ஆவன செய்யவேண்டும்.

சிமெண்ட் கண்ட்ரோலை எடுத்த பிற்பாடு சிமெண்ட் கிடைப்பதில்லை என்றுதான் நான் சொல்வேன். கண்ட்ரோல் இருந்த காலத்தில் சிமெண்ட் தாராளமாகக் கிடைத்துக்கொண்டிருந்தது. தாலூகா ஆபீசிற்கு மனுப்போட்டால், நாலைந்து மூட்டைகளுக்குப் பர்மிட் கிடைத்துக் கொண்டிருந்தது. ஆனால், டிகண்ட்ரோல் செய்துவிட்டபிறகு சிமெண்ட் கிடைப்பதில்லை. என்னுடைய தொகுதியில், வருஷத்தில் நான்கு மாதங்கள்தான் வேலை நடக்கும். பாக்கி காலங்களில் பருவம் மோசமாக இருக்கும். ஜனவரி-ஏப்ரல் மாதங்களுக்குள் தான் வேலை பார்க்க வேண்டும். அந்தக் காலங்களில் சிமெண்ட் கிடைப்பதில்லை. நான் சோலையாறு அணைக்கட்டுப் பகுதிக்குப் போயிருந்தேன். அங்கே வாரத்தில் இரண்டு மூன்று நாட்கள் தான் வேலை நடக்கிறது. "எங்களுக்கு சிமெண்ட் பற்றாக்குறை" என்று இன்ஜினீயர்களே சொன்னார்கள். தொழிலாளர்களும் பொது மக்களும் சொன்னார்கள். ஆகவே, தயவுசெய்து இம்மாதிரி டெவலெப்மெண்ட் வேலைகளுக்காவது தாராளமாக சிமெண்ட் கிடைக்க உடனடியாக ஏற்பாடு செய்யவேண்டும் என்று நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

[திரு. கே. பொன்னையன்] [2nd March 1966

அடுத்தபடியாக, நான் ஏற்கனவே பலமுறை சொல்லி விட்டேன். கூட்டுறவு அமைச்சர் அவர்களும் இருக்கிறார்கள். ரெவின்யூ அமைச்சர் அவர்களும் இருக்கிறார்கள். சிங்கோனாப் பகுதியில் ஐந்தாயிரம், ஆறாயிரம் ஏக்கரா ஏற்கனவே ஆர்ஜிதம் செய்த நிலம் தரிசாகக் கிடைக்கிறது. அங்கே டீ பயிர் செய்தால் நன்றாக வரும். அதனால் நமக்குப் போதுமான அந்நியச் செலாவணியும் கிடைக்கும். சர்க்காரே அதற்கு ஏற்பாடு செய்யலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, காட்டிலாகா தரிசு நிலம் இருக்கிறது. காட்டு இலாகா அங்கே என்ன என்னவோ பயிர்களை எல்லாம் வைத்துப் பார்த்து விட்டார்கள். ஒன்றும் வரவில்லை. அந்தத் தரிசு பூமியை ஒரு குடும்பத்திற்கு நான்கு ஏக்கர், ஐந்து ஏக்கர் என்று பிரித்துக் கொடுத்தால் அவர்கள் கால்நடைகளைக் கட்டியும், சாம்பல் முதலியவற்றைப் போட்டும்—காய்கறிகளையாவது கொஞ்சம் கொஞ்சமாக உற்பத்தி செய்ய வழியேற்படும். இதுபோன்ற பகுதிகளையும் பொதுமக்களுக்குக் கொடுத்தால் நல்லதாக இருக்கும் என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம்.

அடுத்தபடியாக, வால்ப்பாறைப் பகுதியில் ஒரு சப் டிரஷரி ஏற்படுத்த வேண்டும். இன்றைக்கு அங்கிருந்து 40 மைல் அப்பால் இருக்கும் பொள்ளாச்சிக்குத்தான் போகவேண்டியதாக இருக்கிறது. பில்களை காஷ் பண்ண நான் ஒரு தடவை போனால் 25 ரூபாய் செலவாகிறது. அங்கே புதிதாக வந்துள்ள டி.வி. ஆபீஸ், சப்ரிஜிஸ்திரார் ஆபீஸ், போலீஸ் ஆபீஸ்—இவற்றுக்கு எல்லாம் க்வார்டர்ஸ் கிடையாது. வாடகை வீட்டில் தான் சிப்பந்திகள் இருக்கிறார்கள். அந்தப் பகுதியில் அவசியம் ஒரு சப் டிரஷரியையும் ஏற்படுத்தித் தரவேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. எஸ். முத்துலிங்கம்** : கனம் தலைவர் அவர்களே, 1966-67-ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின் மீது சில கருத்துக்கள் கூற விரும்புகிறேன். நமது முதல் அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்திருக்கும் அறிக்கையிலே புது வரிகள் எதுவும் விதிக்கப்படவில்லை என்றாலும் கூட ஏற்கனவே மக்களுக்குப் போடப்பட்டிருக்கும் வரியானது மக்கள் தாங்க முடியாத அளவுக்குத்தான் இருக்கிறது என்று சொல்வேன். விவசாயிகள் முன்னேறவேண்டுமென்றால் உணவு உற்பத்தி பெருகவேண்டுமென்றால் முதலில் விவசாயிகளின் மீது போடப்பட்டிருக்கும் வரியைக் குறைக்கவேண்டும். அதோடு கூட அவர்களுக்குக் கொடுக்கின்ற கடன், உரம், விதைகளைக் காலாகாலத்தில் கொடுத்துதவுவது அவசியம். அதோடு விவசாய மக்கள் பலர் டிராக்டர்கள் வைத்திருக்கிறார்கள். அவற்றுக்கு வேண்டிய ஸ்பேர் பார்ட்ஸ் கிடைக்கும்படி செய்தாகவேண்டும். இப்படி எல்லாம் செய்தால் தான் விவசாயத்தை நல்லமுறையில் முன்னேற்ற முடியும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, ஒரு ஜில்லாவில் இருந்து ஒரு ஜில்லாவுக்கு, ஒரு தாலுகாவில் இருந்து ஒரு தாலுகாவிற்கு நெல் எடுத்து கொண்டு போகக் கூடாது என்ற உத்தரவு இருக்கிறது. செக் போஸ்ட் வைத்திருக்கிறோம். இங்கெல்லாம் லாரிகளில் மூட்டைக்கணக்கில் பர்மிட் இல்லாமல் போகிற போது பணத்தை வாங்கிக்கொண்டுவிட்டுவிடுகிறார்கள். ஆனால் ஏழை எளியவர்கள் சொந்த உபயோகத்திற்குப் படிக்கணக்கில் கொண்டு வருவதைக் கூடத் தடுத்து, அவதூறான வழக்குப்போட்டு பாமர மக்களுக்கு மிக்க கஷ்டத்தை உண்டுபண்ணுகிறார்கள். இதுபற்றி அதிகாரிகளுக்கு எச்சரிக்கை விடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக எங்கள் தொகுதியில் கீழ்க்கொடுங்கலூர் கிராமம் இருக்கிறது. அந்த கிராமம் சாலவேடு பிர்க்காவைச் சேர்ந்தது. அந்த பிர்க்காவில் இருந்து வந்தவாசி 9 மைலில் இருக்கிறது. சப் ரிஜிஸ்திரார் ஆபீஸ் வந்தவாசியில்தான் இருக்கிறது. இங்கிருந்து பத்திரப் பதிவுக்குப்போக மக்கள் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே கீழ்க்கொடுங்கலூரில் ஒரு பத்திரப்பதிவு நிலையத்தை ஏற்படுத்தித்தரவேண்டும் என்பதாகக் கேட்டுக்கொள்கிறேன்.



2nd March 1966] [திரு. எஸ். முத்துலிங்கம்]

அடுத்து, வந்தவாசியில் ஒரு சர்க்கார் ஆஸ்பத்திரி இருக்கிறது. அது மிகவும் மோசமான நிலையில் உள்ளது. அங்கே போதுமான மருந்து கிடையாது. நோயாளிகள் சென்றால் வெளியில் இருந்து மருந்து வாங்கி வரச் சொல்கிறார்கள். மேலும் மழை பெய்தால் தண்ணீர் உள்ளே வந்துவிடும். காம்பவுண்டு வால் கிடையாது. டாக்டர்களும் சரி, மற்ற தொழிலாளர்களும் சரி அங்கே நடந்துகொள்கிற முறை சரியில்லை. உடனடியாக அங்குள்ள டாக்டர்களையும், மற்றவர்களையும் மாற்றி—அந்த இடத்தில் திறமையானவர்களைப் போட்டு அந்த ஆஸ்பத்திரியை நல்ல முறையில் நடக்க வழிவகை செய்யவேண்டும்.

அடுத்து, செய்யாற்றில் இருந்து வந்தவாசிக்கு குடிதண்ணீர் கொண்டு போவதற்கு 14 லட்சம் ரூபாய் செலவில் ஒரு திட்டம் சாங்ஷனாகியிருக்கிறது. அந்த ஸ்கீம் வேலை நடந்து வருகிறது. பல லட்சக்கணக்கான ரூபாய்களைப் போட்டு நிறைவேற்றியிருக்கிற அந்தத் திட்டத்தை மேற்பார்வை செய்ய இன்னமும் ஒரு ஏ.இ. யைப்போடவில்லை. உடனே ஒரு ஏ.இ.யைப்போடவேண்டும் என்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, சர்க்கார் பஸ்களில் முதலில் கட்டணத்தை உயர்த்தினார்கள். அதுபோலவே இப்போது தனியார் பஸ்களிலும் உயர்த்திவிட்டார்கள். இதனால் மக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே பஸ் கட்டணத்தை ஓரளவு குறைக்க வேண்டும் என்பதாகக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஹரிஜனங்களுக்கு வீட்டுமனை வழங்குவதற்காக 3 தாலுக்காக்களுக்கு ஒரு தாசில்தார் ஒரு ரெவின்யூ இன்ஸ்பெக்டர் வீதம் போட்டிருக்கிறார்கள். இதனால் மிகுந்த காலதாமதம் ஆகிறது. இது விஷயமாகவும் கடந்த கூட்டத்திலேயும் சொல்லியிருக்கிறேன். இந்த 1-30 p.m. ஏழை ஹரிஜன மக்களுக்கு வீட்டு மனைகள் நல்ல முறையில் வழங்க வேண்டுமென்றால், உடனடியாக ஒரு தாலுகாவிற்கு ஒரு தாசில்தார், ஒரு ரெவின்யூ இன்ஸ்பெக்டர் போட்டு பணியாற்றுவார்களானால் மனைகளை அவர்கள் சீக்கிரத்தில் அடையமுடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அடுத்தபடியாக குறிப்பாக முஸ்லீம் மதம் என்பது பொது மதமாக இருக்கிறது. அதில் ஃபார்வர்ட் கம்யூனிடியைச் சேர்ந்தவர்கள், சையத், ஷேக், பட்டான் ஆவார்கள். அதில் பேக்வார்ட் கம்யூனிட்டியைச் சேர்ந்தவர்கள் லப்பை, மரக்காயர், காயலார், ஜோனகர் ஆவார்கள். இரு தரத்தாருக்கும் ஒப்பிட்டுப் பார்க்கையில், பார்வார்ட் கம்யூனிட்டியைச் சேர்ந்தவர்கள் ஏழைகளாக இருந்தாலும்கூட அவர்களுக்கு ஸ்காலர்ஷிப் கிடைப்பதில்லை. ஆனால் அதேசமயத்தில் பணக்காரர்களாக இருந்து பேக்வார்டாக இருந்தால் அவர்களுக்கு ஸ்காலர்ஷிப் கிடைத்துவிடுகிறது. இதையெல்லாம் அரசாங்கம் பரிசீலனை செய்து ஏழைகள் எல்லோருக்கும் ஸ்காலர்ஷிப் கிடைப்பதற்கு முயற்சிகள் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக ஆதித் திராவிட கிறிஸ்தவர்கள் இருக்கிறார்கள். இவர்கள் ஆதித் திராவிடர்களாக இருந்து கிறிஸ்தவர்களாக ஆகியிருக்கிறார்கள். அவர்களுடைய வருமானம் 1,500 ரூபாய் என்றால் அதை வைத்துக்கொண்டு பிள்ளைகளைக் காப்பாற்றுவதற்கும், படிக்க வைப்பதற்கும் சிரமமாக இருக்கிறது. அவர்களுக்கு ஸ்காலர்ஷிப் கிடைப்பதில்லை. ஆகவே, அந்த 1,500 ரூபாய் என்பதை உயர்த்த வேண்டும். ஏழைகளாக இருக்கிற கிறிஸ்தவர்கள் எல்லோருக்கும் ஸ்காலர்ஷிப் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு இறுதியாக இந்த என்.ஜி.ஓ.க்களுக்கும் பஞ்சப்படியை உயர்த்திக்கொடுக்கவேண்டுமென்று சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறேன். கடைசியாக, இந்த ராணுவத்தில் பணிபுரியும் சிப்பாய்களுக்கும் ஏற்கனவே பணிபுரிந்து ஓய்வு பெற்றிருக்கிற சிப்பாய்களுக்கும், ஏழை ஹரிஜனங்களுக்கும் நில ஆர்ஜிதம் செய்யும் விஷயத்தில் காலதாமதம் ஏற்படுகிறது. ஆகவே இதை உடனடியாகக் கவனித்து அவர்களுக்கு நில ஆர்ஜிதம் செய்துகொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, எனக்கு இந்த வாய்ப்பை அளித்த உதவி சபாநாயகர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

## III.—ANNOUNCEMENTS.

### BUSINESS OF THE HOUSE.

MR. CHAIRMAN (SRI M. DHANDAYUTHAPANI): I have to announce to the House the following programme of voting on Demands for Grants for 1966-67 :—

| Date. March 1966. | | Demands. | |
|---|---|---|---|
| *Monday, the 7th* .. | XIII | Education. | |
| *Tuesday, the 8th* .. | IX | District Administration and Miscellaneous. | |
| | XXXII | Pensions. | |
| | XXXIII | Miscellaneous. | |
| | XXXVI | Other Miscellaneous Compensations and Assignments. | |
| | XLVI | Commuted Value of Pensions. | |
| | XLVIII | Loans and Advances by the State Government. | |
| *Wednesday, the 9th* .. | XXIV | Labour including Factories. | |
| *Thursday, the 10th* .. | VI | State Legislature. | |
| | VII | Elections. | |
| | VIII | Head of State, Ministers and Headquarters staff. | |
| *Friday, the 11th* .. | XII | Police. | |
| *Saturday, the 12th* .. | XIX | Co-operation. | |
| | XL | Capital Outlay on Consumer's Co-operatives. | |
| *Monday, the 14th* .. | II | Motor Vehicles Acts—Administration. | 2 Hours. |
| | XXX | Road Transport Schemes. | 2 Hours. |
| | XLIV | Capital Outlay on Road Transport Schemes. | |
| *Tuesday, the 15th* .. | XX | Industries. | |
| | XLI | Capital Outlay on Industrial Development. | |
| *Wednesday, the 16th* .. | XVI | Agriculture. | |
| | XVIII | Animal Husbandry. | |
| | XXXIX | Capital Outlay on Agriculture. | |
| | XLVII | Capital Outlay on Schemes of Government Trading. | |



| Date. March 1966. | | Demands. | |
|---|---|---|---|
| *Thursday, the 17th* .. | I | Land Revenue Department. | 2½ Hours. |
| | IV | Stamps—Administration. | |
| | XXXI | Famine Relief. | |
| | XXXVII | Compensation to Zamindars. | |
| | XXVII | Public Works—Works. | 1½ Hours. |
| | XXVIII | Public Works—Establishment and Tools and Plant. | |
| | XLIII | Capital Outlay on Public Works. | |
| *Friday, the 18th* .. | XXVI | Irrigation. | |
| | XLII | Capital Outlay on Irrigation. | |
| *Saturday, the 19th* .. | III | General Sales Tax and Other-Taxes and Duties—Administration. | |
| *Monday, the 21st* .. | XIV | Medical. | |
| | XV | Public Health | |
| | XXXVIII | Capital Outlay on Public Health. | |
| *Tuesday, the 22nd* .. | XXV | Welfare of Scheduled Tribes, Castes and Other Backward Classes. | |
| *Thursday, the 24th* .. | XXI | Cinchona. | 2 Hours. |
| | XXXV | Forest Department. | |
| | XLV | Capital Outlay on Forests. | |
| | XXII | Khadi. | 1 Hour. |
| | X | Administration of Justice. | 1 Hour. |
| *Friday, the 25th* .. | V | Registration Department. | |
| | XI | Jails. | |
| | XVII | Fisheries. | |
| | XXXIV | Stationery and Printing. | |
| *Saturday, the 26th* .. | XXIII | Community Development Projects, etc. | |
| | XXIX | Public Works—Grants-in-aid. | |

The House will now adjourn and meet again at 8-30 a.m to-morrow. 1-34 p.m.

The House then adjourned.

## IV—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

*'Nil'*

[2nd March 1966

## Appendix

[*Vide* answer to Starred Question No. 148, page 3]

at *Statement showing the details regarding new routes opened in North Arcot and Chingleput districts from 1st April* 1964 *to* 30*th September* 1965.

| Number and names of the new routes opened. (1) | Number and names of the new routes for which applications for grant of permits are pending disposal. (2) |
|---|---|
| **NORTH ARCOT.** | |
| *Nineteen routes.* | *Eleven routes.* |
| 1 Vellore to Mahadevamalai. | 1 Vaziyur to Vadakkumedu. |
| 2 Banavaram to Arkonam. | 2 Tirupathur to Odugathur. |
| 3 Tiruvannamalai to Tirukoilur. | 3 Arunkunram to Elluppai. |
| 4 Tiruvannamalai to Vettavalam. | 4 Tirumanai to Wallajah. |
| 5 Cheyyar to Vembakkam. | 5 Ulli R. S. to Pernambut. |
| 6 Cheyyar to Kuvalai. | 6 Punganur to Wallajah. |
| 7 Kancheepuram to Kilnethapakkam. | 7 Usoor to Perumugai. |
| 8 Tiruvannamalai to Pernamallur. | 8 Vazavachanur to Veeralur. |
| 9 Avalurpet to Kanji. | 9 Vellore to Kalavai. |
| 10 Valapandal to Padavedu. | 10 Tirupathur to Ambur. |
| 11 Vazhavachanur to Chengam. | 11 Jolarpet to Ambur. |
| 12 Vallimalai to Wallajah. | |
| 13 Kangayanallur to Kilarasampattu. | |
| 14 Kallapadi to Mahadevamalai. | |
| 15 Melalathur to Paradarami. | |
| 16 Vaniyambadi to Komutteri. | |
| 17 Tiruparkadal to Sholinghur. | |
| 18 Vellore to Ekambaranallur. | |
| 19 Mavallavadi to Nerkundram. | |
| **CHINGLEPUT.** | |
| *Twenty-four routes.* | *Twenty-four routes.* |
| 1 Chembarambakkam to Madras. | 1 Chingleput to Osur. |
| 2 Wallajabad to Poonamalle. | 2 Olimohamedpet to Kancheepuram. |
| 3 Chunampet to Kancheepuram. | 3 Madurantakam to Madurantakam. |
| 4 Padappai to Poonamallee. | 4 Madras to Kancheepuram (*via* Manimangalam and Sriperumbudur). |
| 5 Tozuppedu to Chunampet. | 5 Madras to Padirivedu. |



2nd March 1966]

| Number and names of the new routes opened. (1) | Number and names of the new routes for which applications for grant of permits are pending disposal. (2) |
|---|---|
| **CHINGLEPUT—*Cont.*** | |
| 6 Ponneri to Kancheepuram. | 6 Pudupatnam to Madras. |
| 7 Madras to Avadi Air Force Station. | 7 Annicut to Madurantakam. |
| 8 Madras (High Court) to Ambattur. | 8 Kancheepuram to Vayalakkavur. |
| 9 Madras (Mint) to Iguvarpalayam. | 9 Tiruttani to Tirupathi. |
| 10 Edayarpakkam to Sriperumbudur. | 10 Tiruttani to Kalahasti. |
| 11 Tiruvellore to Tambaram. | 11 Madras to Arumbuliyur. |
| 12 Tiruvellore to Ponneri. | 12 Uthukottai to Kancheepuram. |
| 13 Chingleput to Cheyyar. | 13 Tambaram to Kancheepuram. |
| 14 Tindivanam to Mahabalipuram. | 14 Chingleput to Uttiramerur. |
| 15 Wallajabad to Wallajabad. | 15 Chingleput to Tirukalikundram. |
| 16 Tiruvellore to Tiruttani. | 16 Madras to Wallajabad. |
| 17 Manellore to Elavur. | 17 Pallipet to Tiruttani. |
| 18 Pennalurpet to Sholavaram. | 18 Madras to Poondi. |
| 19 Madras (High Court) to Poochi Athipedu. | 19 Tirumudivakkam to Madras. |
| 20 Madras to Tiruvellore. | 20 Chingleput to Chingleput. |
| 21 Tiruvellore to Tiruvelangadu. | 21 Tambaram to Ambattur. |
| 22 Vanganur to Tiruttani. | 22 Madras to Mahabalipuram. |
| 23 Tiruttani to Nagalapuram. | 23 Pallipet to Chingleput. |
| 24 Prodathurpet to Tiruttani. | 24 Tambaram to Poonamallee. |

1—4—1964 முதல் 30—9—1965 வரை வட ஆற்காடு மாவட்டத்திலும் செங்கற்பட்டு மாவட்டத்திலும் அனுமதிக்கப்பட்டுள்ள புதிய வழிகளின் தகவல்களைக் காட்டும் விவர அறிக்கை:—

| புதிதாக அனுமதிக்கப்பட்ட வழிகளின் எண்ணிக்கையும், அவற்றின் பெயரும். (1) | புதிய வழிகளுக்கு அனுமதி வேண்டிச் செய்துள்ள விண்ணப்பங்கள் முடிவுறு நிலையில் இருப்பின் அந்த வழிகளின் எண்ணிக்கையும் அவற்றின் பெயரும். (2) |
|---|---|
| **வட ஆற்காடு மாவட்டம்.** | |
| **19 வழிகள்** | **11 வழிகள்** |
| 1 வேலூர்—மகாதேவமலை. | 1 வாழியூர்—வடக்குமேடு. |
| 2 பாணாவரம்—அரக்கோணம். | 2 திருப்பத்தூர்—ஒடுக்கத்தூர் |
| 3 திருவண்ணாமலை—திருக்கோயிலூர். | 3 அருங்குன்றம்—இலுப்பை. |
| 4 திருவண்ணாமலை—வேட்டவலம். | 4 திருமணி—வாலாஜா. |

[2nd March 1966

| புதிதாக அனுமதிக்கப்பட்ட வழிகளின் எண்ணிக்கையும் அவற்றின் பெயரும். (1) | புதிய வழிகளுக்கு அனுமதிவேண்டிச் செய்துள்ள விண்ணப்பங்கள் முடிவுரு நிலையில் இருப்பின் அந்த வழிகளின் எண்ணிக்கையும் அவற்றின் பெயரும். (2) |
|---|---|

**வடஆற்காடு மாவட்டம்—தொடர்ச்சி.**

| | |
|---|---|
| 5 செய்யாறு—வேம்பாக்கம். | 5 உள்ளி (இரயிலடி)—பேரணும்பட்டு. |
| 6 செய்யாறு—குவளை. | 6 புங்கானூர்—வாலாஜா. |
| 7 காஞ்சிபுரம்—கீழ்நத்தப்பாக்கம். | 7 ஊசூர்—பெருமுகை. |
| 8 திருவண்ணாமலை—பெரணமல்லூர். | 8 வாழவச்சானூர்—வீரலூர். |
| 9 ஆவலூர்பேட்டை—காஞ்சி. | 9 வேலூர்—கலவை. |
| 10 வாழப்பந்தல்—படவேடு. | 10 திருப்பத்தூர்—ஆம்பூர். |
| 11 வாழவச்சானூர்—செங்கம். | 11 ஜோலார்பேட்டை—ஆம்பூர். |
| 12 வள்ளிமலை—வாலாஜா. | |
| 13 காங்கேயநல்லூர்—கீழரசம்பட்டு. | |
| 14 கள்ளபாடி—மகாதேவமலை. | |
| 15 மேல் ஆலத்தூர்—பரதராமி. | |
| 16 வாணியம்பாடி—கோமுட்டேரி. | |
| 17 திருப்பாற்கடல்—சோழசிங்கபுரம். | |
| 18 வேலூர்—ஏகாம்பரநல்லூர். | |
| 19 மாவல்லவாடி—நெற்குன்றம். | |

**செங்கற்பட்டு மாவட்டம்.**

| 24 வழிகள் | 24 வழிகள் |
|---|---|
| 1 செம்பரம்பாக்கம்—சென்னை. | 1 செங்கற்பட்டு—ஓசூர். |
| 2 வாலாஜாபாத்—பூவிருந்தவல்லி. | 2 ஒலிமுகம்மதுபேட்டை—காஞ்சிபுரம். |
| 3 சுங்கும்பேட்டை—காஞ்சீபுரம். | 3 மதுராந்தகம்—மதுராந்தகம். |
| 4 படப்பை—பூவிருந்தவல்லி. | 4 சென்னை—காஞ்சீபுரம், (மணிமங்கலம் ஸ்ரீபெரும்புதூர் வழியாக). |
| 5 தொழுப்பேடு—சுங்கும்பேட்டை. | 5 சென்னை—பாதிரிவேடு. |
| 6 பொன்னேரி—காஞ்சீபுரம். | 6 புதுப்பட்டணம்—சென்னை. |
| 7 சென்னை—ஆவடி, (விமானப்படைத் தளம்).. | 7 அணைக்கட்டு—மதுராந்தகம். |
| 8 சென்னை ஹைகோர்ட்—அம்பத்தூர். | 8 காஞ்சீபுரம்—வயலக்காவூர். |
| 9 சென்னை (தங்கசாலை)—ஈகுவாரி பாளையம். | 9 திருத்தணி—திருப்பதி. |
| 10 இடையர்பாக்கம்—ஸ்ரீபெரும்புதூர். | 10 திருத்தணி—காளஹஸ்தி. |
| 11 திருவள்ளூர்—தாம்பரம். | 11 சென்னை—அரும்புலியூர். |
| 12 திருவள்ளூர்—பொன்னேரி. | 12 ஊத்துக்கோட்டை—காஞ்சிபுரம். |
| 13 செங்கற்பட்டு—செய்யாறு. | 13 தாம்பரம்—காஞ்சீபுரம். |
| 14 திண்டிவனம்—மாமல்லபுரம். | 14 செங்கற்பட்டு—உத்திரமேரூர். |



2nd March 1966]

| புதிதாக அனுமதிக்கப்பட்ட வழிகளின் எண்ணிக்கையும் அவற்றின் பெயரும். (1) | புதிய வழிகளுக்கு அனுமதி வேண்டிச் செய்துள்ள விண்ணப்பங்கள் முடிவுரு நிலையில் இருப்பின் அந்த வழிகளின் எண்ணிக்கையும் அவற்றின் பெயரும். (2) |
|---|---|

**செங்கற்பட்டு மாவட்டம்—தொடர்ச்சி.**

| | |
|---|---|
| 15 வாலாஜாபாத்—வாலாஜாபாத். | 15 செங்கற்பட்டு—திருக்கழுக்குன்றம். |
| 16 திருவள்ளூர்—திருத்தணி. | 16 சென்னை—வாலாஜாபாத். |
| 17 மாநல்லூர்—எளாவூர். | 17 பள்ளிப்பட்டு—திருத்தணி. |
| 18 பெண்ணலூர் பேட்டை—சோழவரம். | 18 சென்னை—பூண்டி. |
| 19 சென்னை (ஹைகோர்ட்)—பூச்சி அத்திப்பட்டு. | 19 திருமுடிவாக்கம்—சென்னை. |
| 20 சென்னை—திருவள்ளூர். | 20 செங்கற்பட்டு—செங்கற்பட்டு. |
| 21 திருவள்ளூர்—திருவேலங்காடு. | 21 தாம்பரம்—அம்பத்தூர். |
| 22 வங்கனூர்—திருத்தணி. | 22 சென்னை—மாமல்லபுரம். |
| 23 திருத்தணி—நாகலாபுரம். | 23 பள்ளிப்பட்டு—செங்கற்பட்டு. |
| 24 ப்ரொதத்தூர் பேட்டை—திருத்தணி. | 24 தாம்பரம்—பூவிருந்தவல்லி. |

# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

**Thursday, 3rd March 1966.**

The House met in the Assembly Chamber, Fort St. George, at half past eight of the clock, Mr. Speaker (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

## STARRED QUESTIONS.

### *Industrial Corporations*

*157 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether there is any proposal to set up a Corporation for setting up and administering small industries units sponsored by Government in the State ; and

(*b*) if so, the details thereof ?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) and (*b*) The answer [a] is placed on the Table of the House.

*158 கேள்வி —**திரு. து. ப. அழகமுத்து :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா:—

(அ) ஸ்மால்-ஸ்கேல் இண்டஸ்டிரீஸ் (small-scale industries) கார்ப்பரேஷன் ஒன்று ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றதா?

(இ) ஆமெனில் அதன் டைரக்டர்கள் யார் யார்?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) Yes.

(*b*) The following are the Directors of the Madras State Small Industries Corporation Limited :—

1. Sri T. N. Lakshminarayanan, I.A.S., Secretary to Government, Industries, Labour and Co-operation Department, (Chairman).

2. Sri G. Ramachandran, I.A.S., Secretary to Government, Finance Department.

3. Sri T. A. S. Balakrishnan, I.A.S., Director of Industries and Commerce, Madras-5.

4. Sri V. Vasudevan, M.A., Deputy Secretary to Government, Industries, Labour and Co-operation Department.

5. Sri T. R. Krishnaswamy, B.Sc. (Engg.), Managing Director.

---

[a] Printed as Appendix on page 71.

[3rd March 1966

**திரு. வை. சங்கரன் :** இந்தக் கார்ப்பரேஷனானது கவர்ன்மெண்ட் யூனிட்டுகளை நிர்வகிப்பதோடு மற்ற எஸ்டேட்டிலுள்ள பிரைவேட் யூனிட்டுகளுக்கும் தேவையான ரா மெட்டீரியல்ஸ், ஸ்பேர்க்ஸ் போன்றவைகளை அவ்வப்போது தேவைப்படும்போது அளிப்பதற்கு முன்வருமா?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** கார்ப்பரேஷனின் நோக்கம் இது வல்ல. சர்க்காரால் நிர்வகிக்கப்பட்டு வந்துள்ள, சர்க்கார் இலாக்காவாக இருந்து வந்தது; இப்பொது கார்ப்பரேஷனாக அமைக்கப்பட்டு நிர்வாகம் செய்யப்பட்டிருக்கிறது.

**திரு. மீ. கலியாணசுந்தரம் :** இதுவரையில் இலாகாவினரே நிர்வாகம் செய்து வந்த சிறு தொழில்களை எல்லாம் ஒன்றாகச் சேர்த்து அப்படி அமைப்பதிலே என்னென்ன நன்மை ஏற்படும் என்று சர்க்கார் எதிர்பார்க்கிறது?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** இந்தத் தொழில்களுக்கு பணம் வேண்டுமென்றால் நம்முடைய வேஸ் அண்டு மீன்ஸில் இருந்து வாங்க வேண்டும். ஆனால், கார்ப்பரேஷனாக இருந்தால் மற்ற பைனான்ஷியல் இன்ஸ்டிடூஷன்ஸ், பாங்க் முதலியவைகளில் இருந்து பணம் வாங்கிக் கொள்ளலாம். ஸ்டேட் பாங்கிலே பணம் வாங்க முடியும். இந்த இலாக்கா பெரிதாக வளர்ந்துவிட்ட காரணத்தாலும், நிதிகள் சாதாரண கார்ப்ரேஷன் போல் வாங்க முடியாது, பெற முடியாது என்ற காரணத்தினாலும் இவ்வாறு செய்யப்பட்டது.

**திரு. டி. கார்ச்சா கவுடர் :** இந்த நிர்வாகத்தின் மூலம் மற்ற தொழில் ஸ்தாபனங்களுக்கும் கடன் வழங்கப்படுகிறதா? அப்படியானால் என்ன வட்டி விகிதத்தின் பேரில் கடன் வழங்கப்படுகிறது?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** இது கடன் வழங்குகிற ஸ்தாபனம் அல்ல. தொழில் நடத்துகிற ஸ்தாபனம்.

**திரு. சா. கணேசன் :** சமர்ப்பிக்கப்பட்டிருக்கிற பட்ஜெட்டிலே இதற்கான செலவுத் தொகை கணிக்கப்பட்டிருக்கிறது. இது இனிமேல் தான் தொடங்கப்படுகிறது என்ற காரணத்தினாலே வருவாய் குறிக்கப்படவில்லை என்று தெரிகிறது. இதன் மூலமாக கார்ப்பரேஷன் தொடங்கி நடத்தும்போது எவ்வளவு தொழில் ஸ்தாபனங்கள் வரக்கூடும்? எவ்வளவு முதலீடு அமைக்கப்படும்? இதற்குச் சர்க்கார் எவ்வளவு தொகை விடுமுதலாக விட இருக்கிறது? என்ற விவரங்களை கனம் அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** இப்போது சர்க்கார் தொழில் இலாக்காவினுடைய 64 ஸ்தாபனங்களும் இந்தக் கார்ப்பரேஷனுக்கு மாற்றப்பட்டு இருக்கின்றன. இதைப்பற்றியெல்லாம் மெட்ராஸ் ஸ்டேட் ஸ்மால்-ஸ்கேல் இண்டஸ்ட்ரீஸ் கார்ப்பரேஷன் என்ற புஸ்தகத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அந்த புஸ்தகம் லைப்ரெரியில் வைக்கப்பட்டிருக்கிறது. ஆதரைஸ்ட் காபிடல் 10 கோடி ரூபாய், சப்ஸ்கிரைப்ட் காபிடல் 4 கோடி ரூபாய் சில்லரை. இந்த 4 கோடி ரூபாயும் ரூபாயாகக் கொடுக்கப்படுவதில்லை. இப்போது இருக்கிற மூலதனத்தை மாற்றி அஸ்ஸட்ஸ் ஆக கொடுக்கப்படும்.

**திரு. மீ. கலியாணசுந்தரம் :** இந்தக் கார்ப்பரேஷனிலிருந்து அரசாங்கம் போட்டிருக்கிற மூலதனத்திற்கு வட்டி கொடுக்கப்படுமா அல்லது, லாபம் ஏற்பட்டால் அரசாங்கத்திற்கு பங்கு கொடுக்கப்படுமா என்று அறிய ரும்புகிறேன்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** வட்டி ரெவின்யூ எக்ஸ்பெண்டிசர் ஆக கொடுக்கப்படும். லாபத்தில் பங்கு என்ற முறையில், ஷேர் ஹோல்டர் என்ற முறையில் சர்க்காருக்கு டிவிடன்ட் கொடுக்கப்படும்.



3rd March 1966]

**திரு. மீ. கலியாணசுந்தரம் :** இந்த நிர்வாகத்தை நிர்வகிப்பதில் ஒரே இலாக்காவில் இருந்து செக்ரடரி, டெபுடி செக்ரடரி, டைரக்டர், டெபுடி டைரக்டர் ஆக இருப்பவர்கள் எல்லோரையுமே இந்த போர்டின் மெம்பர்களாகப் போட்டிருப்பதன் காரணம் என்ன?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** இது பெயர் மாற்றம்தான். இது வரையிலும் இந்த இலாக்காவை யார் யார் கவனித்துக்கொண்டிருந்தார்களோ அவர்களைக் கொண்டே அதே இலாக்காவைக் கார்ப்பரேஷனாக மாற்றி இருக்கிறோம். எக்ஸ்-அபிஷியோ சேர்மேன் ஆக இன்றைக்கு திரு லக்ஷ்மிநாராயணன் இருக்கிறார்கள். நாளை அந்தப்பதவிக்கு அங்கே சுப்ரமணியம் வருவார்களானால் அவர்கள்தான் சேர்மனாக வருவார். இன்னொருவர் பைனான்ஸ் செக்ரடரியாக இருந்தால் அவர்கள்தான் வருவார். யார் சர்க்கார் இலாக்காவிலே இருக்கிறார்களோ அவர்களே அதைத் தொடர்ந்து செய்யவேண்டும், சர்க்காருடைய தொடர்பும் அதனுடைய கன்ட்ரோலும் பரிபூரணமாக இருக்கவேண்டுமென்று இப்படிச் செய்யப்பட்டது.

**திரு. சா. கணேசன் :** கனம் தொழில் அமைச்சர் அவர்கள் சபை முன் காண்பித்த கார்ப்பரேஷன் விவரங்கள் அடங்கிய புஸ்தகத்தின் பிரதிகளை அங்கத்தினர்களுக்கு கொடுப்பதற்கு ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** லைப்ரரியில் வைக்கப்பட்டிருக்கிறது என்று ஆரம்பத்திலேயே சொன்னேன். அங்கே வாங்கிப் படிக்கலாம்.

**திரு. சி. பொன்னுசாமி :** சபாநாயகர் அவர்களே, தொழில் துறையில் நிபுணர்களாகவுள்ள யாரையேனும் இந்த கார்ப்பரேஷனில் சேர்த்துக்கொள்ள உத்தேசம் உண்டா?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** இப்போது நிர்வாகம் செய்பவர்கள் நிபுணர்கள்தான். அவசியம் ஏற்பட்டால் நிபுணர்களைச் சேர்த்துக்கொள்ளலாம். இப்போது அந்த அவசியம் ஏற்படவில்லை.

**திரு. வை. சங்கரன் :** இந்த நிறுவனத்தினுடைய வரவு செலவு மற்ற நிர்வாகத்தின் குறிப்பு, அறிக்கை எல்லாம் சட்டசபை முன் வைக்கப்படும் அல்லவா? இது சம்பந்தமாக இங்கே விவாதிப்பதற்கு, வரவு செலவு முதலியவைகளை அங்கீகரிக்க சட்டசபைக்கு அதிகாரம் உண்டா?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** விதிகளின்படி சர்க்கார் நடத்துகின்ற நிறுவனம் சம்பந்தமான அறிக்கை சட்டசபை முன்னால் வைக்கப்படும்.

**திரு. மீ. கலியாணசுந்தரம் :** கனம் தொழில் அமைச்சர் அவர்கள் இந்த போர்டு அமைப்பதிலே அதே அதிகாரிகளைப் போட்டிருக்கிறோம் என்று குறிப்பிட்டார்கள். ஜாதி மத வேற்றுமை மனப்பான்மை இன்னும் நம் நாட்டிலே இருக்கிறது. இதிலே நிர்வாகத்தில் இருக்கக் கூடியவர்கள் ஒரே ஜாதியைச் சேர்ந்தவர்கள். அமைச்சர் அவர்களும் அதே ஜாதியைச் சேர்ந்தவராக இருக்கிறார் என்பதை அரசாங்கம் உணருகிறதா?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** நான் ஜாதி அடிப்படையில் எதையும் செய்வதில்லை. அவ்வாறு செய்யவேண்டுமென்று சொன்னால் நான் நிர்வாகத்தில் இருப்பதற்குத் தயாராயில்லை.

**திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் :** தலைவர் அவர்களே, இந்த இன்டஸ்ட்ரீஸ் கார்ப்பரேஷன் விவரங்கள் அடங்கிய புஸ்தகத்தை அங்கத்தினர்களுக்குக் கொடுக்கவேண்டுமென்று சுதந்திரா கட்சித் தலைவர் அவர்கள் கேட்டதற்கு அமைச்சர் அவர்கள் லைப்ரரியில் இருக்கிறது, எடுத்துக்கொள்ளலாம் என்று கூறினார்கள். எல்லோரும் ஒரே நேரத்தில் எப்படி எடுத்துப் படிக்க முடியும்? தனித்தனியாகப் படிப்பதற்கு ஒரு நகலை அங்கத்தினர்களுக்குக் கொடுக்க ஏன் முன் வரவில்லை. அப்படிச் செய்தால் சர்க்காருக்கு என்ன நஷ்டம் வந்துவிடும் என்று அறிய விரும்புகிறேன்.

[3rd March 1966

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** எந்த அங்கத்தினர் கேட்டாலும் கொடுக்கப்படும், இதில் அக்கறை இல்லாதவர்கள் கேட்கவேண்டாம் என்பதுதான் நோக்கம்.

### காட்பாடியிலுள்ள கைத்தொழில் பேட்டை

*159 கேள்வி—**திரு. ர. ஜீவரத்தினம் :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா:—

(அ) வட ஆற்காடு ஜில்லா, காட்பாடியிலுள்ள கைத்தொழில் பேட்டைக்கு ஷெட்டு வேண்டுமென்று மனுச் செய்து கொண்டவர்கள் எத்தனை நபர்கள்?

(இ) எத்தனை பேருக்கு ஷெட்டுகள் கொடுக்கப்பட்டன?

(உ) எத்தனை மனுக்கள் நிராகரிக்கப்பட்டன?

(எ) மனுக்களை நிராகரிக்கக் காரணம் தெரிவிக்கப்படுமா?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) 20.

(*b*) 14.

(*c*) 6.

(*d*) As there were 20 applicants for 14 units, six applicants had to be rejected. The allotment of units in the Industrial Colony was decided with reference to the broad principles followed by the Industries department for giving preference for allotment of units in Industrial Estates. The most deserving of the applicants with reference to the above principles have been allotted units in the Estate.

### *Baby Food*

*160 *Q.*—SRI V. SANKARAN, SRI T. P. ELUMALAI AND SRI A. KUNJAN NADAR : Will the Hon. the Minister for Food be pleased to state —

(*a*) whether the Government are aware of the hardships caused to the public in getting baby food at controlled prices, and

(*b*) if so, the action taken to ease the situation ?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) Yes, Sir.

(*b*) Baby food has been controlled and is issued on permits given by Civil Supplies authorities in the City of Madras. In other areas the Collectors have been authorised to take whatever action they deem proper to ensure equitable distribution.

*161 கேள்வி—**திரு. து. ப. அழகமுத்து :** கனம் உணவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா :—

குழந்தை உணவுப் பொருட்களின் பங்கீடு சென்னை நகரில் எப்படி செய்யப்படுகிறது?

THE HON. SRI V. RAMAIAH ; The distribution of baby food including Horlicks, in the Madras City, is being made through permits issued by the Rationing authorities.



3rd March 1966]

**திரு. வை. சங்கரன் :** குழந்தைகள் உணவுப் பொருள் நெருக்கடியைப் பூரணமாகத் தவிர்க்க நம்முடைய ராஜ்யத்திலேயே குழந்தைகள் உணவைத் தயாரிக்க ஒரு நல்ல தொழிற்சாலையை பப்ளிக் செக்டாரிலோ அல்லது பிரைவேட் செக்டாரிலோ அமைப்பதற்கு முன் வருவார்களா ?

**கனம் திரு. வெ. ராமையா :** இருக்கக் கூடிய குழந்தை உணவுப் பொருளை எந்த முறையில் பகிர்ந்து கொடுப்பது என்ற அளவில் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. தேவை பூராவும் கிடைக்கவில்லை என்றாலும் சென்னை நகரத்தைப் பொறுத்தவரையில் ஓரளவு இதற்கான ஏற்பாட்டைச் செய்திருக்கிறோம்.

SRI C. CHIRANJEEVULU NAIDU : Whenever a hardship is represented to the Government, immediately a scheme is formulated to distribute baby foods and other scarce necessaries of life in Madras City, neglecting the rural areas. What arrangements have been made to distribute baby foods equitably in the rural areas ?

THE HON. SRI V. RAMAIAH: Immediate action was taken as far as Madras City was concerned. If found necessary from experience we will extend the scheme to the rural parts also. But just now I am not receiving any such big complaints as to make it necessary for me to interfere.

**திரு. சா. கணேசன் :** குழந்தைகள் உணவைப் பெறுவதற்குக் குறைந்த பட்சம் தாசில்தார் நிலையிலே உள்ள ஒரு அதிகாரியிடம் சென்று ஒவ்வொரு முறையும் அதற்கு வேண்டிய அனுமதியோ அல்லது பர்மிட்டோ வாங்க வேண்டிய நிலை ஏற்பட்டிருப்பதால், ஏராளமான கல்வியறிவில்லாத, வசதிக் குறைவான தாய்மார்களுக்கு, பெற்றோர்களுக்கு ஏற்பட்டிருக்கிற சிரமத்தைத் தவிர்க்க என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்வதாக அரசாங்கத்திற்கு உத்தேசம் ? என்ன நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது ?

**கனம் திரு. வெ. ராமையா :** இதிலே ஒரு நெருக்கடி ஏற்பட்டு கன்ட்ரோல் அமலில் வர வேண்டுமென்று முடிவு எடுத்த நேரத்தில் யார் யாருக்குக் குழந்தை உணவு தேவையோ அவர்கள் எல்லாம் விண்ணப்பம் போடவேண்டுமென்று நகரத்தைப் பொறுத்தவரையில் கூறினோம். அந்த அடிப்படையில் 44,660 அப்ளிகேஷன்கள் வந்தன. அவை எல்லாம் பரிசீலனை செய்யப்பட்டு அவர்களுக்கு அந்த அடிப்படையில் குழந்தை உணவு கொடுப்பது இப்போது நடைமுறையில் இருக்கிறது. ஒவ்வொரு தடவையும் அதிகாரியிடம் போக வேண்டுமென்பதில்லை. முதல் தடவை போய் எழுதிக் கொடுத்துவிட்டால் பிறகு தொடர்ந்து வாங்கிக் கொள்ளலாம். நகரத்தைப் பொறுத்தவரை நம்முடைய கையில் போதுமான அளவை விட அதிகமாகவே ஸ்டாக் இருக்கிறது.

**திரு. மு. கருணாநிதி :** சென்னை நகரில் குழந்தை உணவுப் பங்கீட்டைப் பொறுத்தவரை திருவல்லிக்கேணியில் இருப்பவர்கள் சைதாப்பேட்டையில் இருக்கும் கடையில் வாங்கிக் கொள்ள வேண்டுமென்ற முறையில் கார்டுகள் தரப்பட்டிருக்கின்றன. இந்த நிலையைத் தவிர்க்க அரசாங்கம் முயற்சி எடுக்குமா ?

**கனம் திரு. வெ. ராமையா :** இதைத் தவிர்ப்பதிலே ஒன்றும் கஷ்டம் இருக்காது. இந்த மாதம் வரை டி.யு.சி.எஸ். மூலம் மட்டுந்தான் கொடுக்கவேண்டுமென்று கூறியிருந்தோம். இனிமேல் ஏற்கனவே இந்தக் குழந்தை உணவுப் பொருள்களை வியாபாரம் செய்து கொண்டிருந்தவர்களுக்கும் அனுமதி கொடுக்கலாம் என்று ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

[3rd March 1966

**திரு. ஜே. மாதா கவுடர் :** குழந்தை உணவைப் பங்கீட்டு முறையில் கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. இனியாவது, முன்பு ஊட்டியில் ஒரு குழந்தை பால் பவுடர் தொழிற்சாலையை ஆரம்பிப்பதாகக் கூறி நிறுத்திவிட்டதை, மறுபடியும் பரிசீலனை செய்து ஆரம்பிப்பதற்கு நமது உணவு அமைச்சர் அவர்கள் தம்முடைய ''இன்புளுவன்ஸை''ப் பயன்படுத்தி தொழில் அமைச்சர் அவர்களுக்குச் சிபாரிசு செய்வார்களா ?

**கனம் திரு. வெ. ராமையா :** கனம் அங்கத்தினர் அவர்கள் தொழிலமைச்சர் அவர்களுக்கு நேரடியாகவே ஒரு கேள்வி போட்டால் பதில் சொல்லுவார்கள்.

**திரு. எம். கொளந்தைசாமி கவுண்டர் :** எங்கள் ஊரில் பள்ளியில் படிக்கும் மாணவர்களுக்குக் கொடுக்கப்பட்டு வந்த சாப்பாடு, பால் பவுடர் எல்லாம் கடந்த ஒரு மாதமாகக் கொடுக்கப்படுவதில்லை. அதை மறுபடியும் கொடுப்பதற்கு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா ?

**கனம் திரு. வெ. ராமையா :** இதைப் பற்றி தனியாக ஒரு கேள்வி போடவும்.

**திரு. செ. மாதவன் :** மாவட்டங்களிலே இதை எப்படி எப்படி விநியோகிக்க வேண்டுமென்பதற்கான பொறுப்பைக் கலெக்டர்களுக்குக் கொடுத்திருக்கிறார்கள். ஒவ்வொரு கலெக்டரும் ஒவ்வொரு விதமான திட்டத்தை வகுத்திருப்பதால் மாவட்டத்திற்கு மாவட்டம் ஊழல் ஏற்பட வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, இதை மாற்ற அரசாங்கம் முன் வருமா ?

**கனம் திரு. வெ. ராமையா :** ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒவ்வொரு விதமான திட்டம் கிடையாது. அங்கெல்லாம் முன்பு இருந்தபடி தான் விநியோக முறை இருக்கிறது. சென்னை நகரத்திற்கு அருகாமையில் இருக்கும் இரண்டொரு ஜில்லாக்களில் நெருக்கடி இருப்பதாகவும், அங்கும் கன்ட்ரோல் முறை தேவை என்றும் கருதப்படுகிறது. அங்கும் '' எனேப்ளிங் ப்ரொவிஷன்ஸ் '' மாதிரி இந்த முறையைக் கொண்டு வரலாமா என்பது பற்றிப் பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** குழந்தை பால் உணவிற்காக விண்ணப்பம் செய்யும் போது நாலணா கோர்ட் ஃபீ ஸ்டாம்ப் ஒட்ட வேண்டுமென்று கூறுகிறார்கள். அமைச்சர் அவர்கள் 44,660 அப்ளிகேஷன்கள் வந்தன என்று சொன்னார்கள். அப்படியானால் 11,000 ரூபாய்க்கு மேல் அதிலிருந்து பணம் வந்திருக்கும், சிமெண்ட் அப்ளிகேஷன் போடும்போது கூட கோர்ட் ஃபீ ஸ்டாம்ப் ஒட்ட வேண்டிய அவசியம் இல்லை. எதற்காக குழந்தைகள் உணவுப் பொருளுக்கு விண்ணப்பம் செய்யும்போது மட்டும் கோர்ட் ஃபீ ஸ்டாம்ப் ஒட்ட வேண்டுமென்று கூற வேண்டும் ?

**கனம் திரு. வெ. ராமையா :** அப்ளிகேஷன் ஃபாரமே ஒரு ரூபாய்க்கு விற்கப்படுகிறது. இதெல்லாம் எதற்காக என்றால், தேவையற்றவர்கள் அனாவசியமாகக் கொடுக்கும் தொந்தரவைத் தவிர்ப்பதற்காகத்தான். இதனால் ஏதோ லாபம் காண வேண்டுமென்பதற்காக அல்ல. ஆயினும் இந்த ஏற்பாடுகளுக்கெல்லாம் ஆகும் செலவை ஓரளவு ஈடுகட்டவும் இது பயன்படும்.

**திரு. கரு. சீமைச்சாமி :** நகரத்தில் உள்ளவர்கள் குழந்தைகள் உணவுக்காக மனுச் செய்து வாங்கிக் கொள்ளுகிறார்கள். கிராமத்தில் உள்ளவர்களுடைய நிலை கஷ்டமாக இருக்கிறது. அதற்கு அமைச்சர் அவர்கள் என்ன ஏற்பாடு செய்திருக்கிறார்கள் என்பதற்குச் சரியான பதிலை எதிர்பார்க்கிறேன்.

**கனம் திரு. வெ. ராமையா :** இதைச் சரியாகச் செய்யவேண்டுமென்பது தான் தொடர்ந்து பரிசீலனையில் இருக்கிறது. நகரத்தில் கன்ட்ரோல் வந்த உடனே குறைபாடுகள் இருக்கின்றன என்று அதிகமாகப் புகார் வந்தன. நடுத்தர நிலையில் இருக்கிறவர்களுக்கு, 200, 300 சம்பாதிக்கக் கூடியவர்களுக்கு குழந்தை உணவு என்பதை நினைத்துக்கூடப் பார்க்க முடியாத



3rd March 1966]

நிலை இருந்தது. இப்போது அந்தக் கஷ்டம் இல்லை. கிராமங்களைப் பொறுத்தவரை இந்தக் கண்ட்ரோல் அவசியமில்லை. ஜில்லாக்களில் தாராளமாகக் கிடைப்பதாகச் சொல்கிறார்கள். ஆகவே, அதிலே தலையிட வேண்டிய அவசியமில்லை.

**திரு. இராம. அரங்கண்ணல் :** குழந்தைகள் உணவுக் கட்டுப்பாடு வந்ததற்குப் பிறகு ஏராளமாக இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்த மாதம் 16-ம் தேதியிலிருந்து மாதவரம் பால் பண்ணையிலிருந்து பசும்பால் சப்ளை நிறுத்தப்படும் என்று தெரிகிறது. குழந்தைகள் உணவுக்காக ரேஷன் கார்டு வாங்க வேண்டு மென்று சொன்னால் வட்டார ரேஷன் ஆபீசில் வாங்க முடியாமல் அந்த தொகுதி ரேஷன் ஆபீசுக்குச் சென்று வாங்க வேண்டுமென்று முறை இருக்கிறது. இதனால் உடனடியாகக் கார்டைப் பெற முடியவில்லை. அந்த விதியைத் தளர்த்துவதோடு எவ்வளவு கேட்கிறார்களோ அந்த அளவு கொடுக்க ஏற்பாடு செய்வார்களா? அதுவும் இந்த மாதம் 16-ம் தேதிக்குள் அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக் கொள்ளுமா ?

**கனம் திரு. வெ. ராமையா :** கனம் அங்கத்தினர் அவர்கள் சென்னையிலே பால் நெருக்கடி ஏற்படப் போவதையும், பால் உணவுப் பொருளையும் ஒன்றாகச் சேர்க்கும்போது இதிலுள்ள முழு நிலைமையைப் புரிந்து கொள்ள முடிகிறது. குழந்தை உணவுப் பொருளை நல்ல சத்துள்ள பொருள் என்ற காரணத்தால் சில பெரியவர்களே சாப்பிட ஆரம்பித்து விட்டார்கள். அதனால்தான் நெருக்கடி ஏற்பட்டு இப்போது உள்ள முறைப்படி விநியோகிக்க ஆரம்பித்தோம். தேவைப்படும் அளவு பூராவையும் கொடுக்க முடியாது. பங்கீட்டு முறையில் எல்லோருக்கும் கிடைக்க ஏற்பாடு செய்யவேண்டும்.

**திரு. சா. கணேசன் :** அமைச்சர் அவர்கள் முதலில் விடையிறுக்கிறபோது சென்னை நகரில்தான் இந்தமாதிரி கஷ்டங்கள் ஏற்பட்டதால் இதைத் தொடங்கினோம், மற்ற ஜில்லாக்களில் இப்படி இல்லை என்றும் சொன்னார்கள். பிறகும் சொல்லுகிறபோது ஜில்லாக்களில் இவ்வளவு கட்டுப்பாடு இல்லை என்று குறிப்பிட்டார்கள். நான் நிச்சயமாக அறிகிற ஒரு உதாரணத்தை சொல்ல விரும்புகிறேன். காரைக்குடி பகுதியில் உள்ள கிராமங்களில் சாதாரணமானவர்கள் வந்து நாலணா ஸ்டாம்ப் ஒட்டி அப்ளிகேஷன்ஸ் கொடுத்த பிறகு ஒவ்வொரு முறையும் ஒவ்வொரு டப்பாவிற்கும் பெர்மிட் அல்லது அனுமதி வாங்கினாலேதான் கடைக்காரர்கள் அவற்றைக் கொடுக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். இந்தமாதிரி நான்கு ரூபாய் சரக்கை இரண்டு மூன்று ரூபாய் செலவழித்து வாங்கக் கூடிய நிலை ஏற்பட்டிருக்கிறது. இதைத் தவிர்ப்பதற்கு அல்லது இதை நெறிப்படுத்துவதற்கு அரசாங்கம் என்ன வழிமுறைகளைக் கையாள இருக்கிறது ? அல்லது கையாண்டிருக்கிறது ?

**கனம் திரு. வெ. ராமையா :** எனக்கு வந்துள்ள தகவல்படி ஜில்லாக்கலில் இந்தக் கண்ட்ரோல் இல்லை என்ற நிலையைச் சொன்னேன். ஆனால் ஸ்பெஸிபிக்காக இதுபோன்ற ஒரு நிலை இருப்பதாக எனக்குத் தெரிவித்தால் கலெக்டரிடம் கேட்டு, இந்த உப கேள்வியிலிருந்து நானே நடவடிக்கைகள் எடுக்கிறேன்.

**திரு. கே. பொன்னையன் :** குழந்தைகள் உணவிற்கு ஜில்லாவாரியாக, தாலூகாவாரியாக கோட்டா நிர்ணயிக்கப்பட்டிருக்கிறதா ?

**கனம் திரு. வெ. ராமையா :** ஜில்லாவாரியாக கோட்டா நிர்ணயம் செய்யவில்லை. முன்பு டிஸ்ட்ரிப்யூட்டேர்ஸ் ஒரு ஜில்லாவிற்கு எவ்வளவு கொடுத்து வந்தார்களோ அதைத்தான் தொடர்ந்து கொடுத்து கொண்டிருக்கிறார்கள். மொத்தமாக ராஜ்யத்திற்கு எவ்வளவு கோட்டா என்று நிர்ணயம் செய்யும் முறையில் ஏற்படவில்லை. ஸிட்டிக்கு எவ்வளவு வந்ததோ அதைத்தான் இப்போது பங்கீடு முறையில் விநியோகம் செய்கிறோம்,

**திரு. வை. சங்கரன் :** சென்னை நகரில் இருப்பது போன்று மற்ற பெரிய நகரங்களிலும் குழந்தைகள் உணவு சம்பந்தமாக நெருக்கடி இருப்பதால் சென்னையில் இருப்பது போன்று பங்கீடு முறையை மற்ற முக்கியமான நகரங்களிலும் விஸ்தரிக்க அரசாங்கம் உத்தேசிக்குமா ?

**கனம் திரு. வெ. ராமைய்யா :** அவசியம் ஏற்பட்டால் மற்ற நகரங்களிலும் இவ்வாறு செய்யலாம். ஆனால் சென்னையில் இந்த விநியோகத்திற்கு ஏற்பாடு செய்தபோது ஏற்பட்ட நெருக்கடியை எல்லாம் ஞாபகத்தில் வைத்துக் கொண்டுதான் மற்ற பெரிய நகரங்களுக்கும் இதை விஸ்தரிக்க முடியும்.

**திரு. எஸ். ஜே. ராமசாமி :** ஹார்லிக்ஸ், பால் பவுடர் இவை முக்கியமான குழந்தைகள் உணவு. ஒரு ஆண்டுக்கு முன்பு நன்ருகக் கிடைத்துக் கொண்டிருந்தன இவை. இப்போது வாங்குவது என்ருல் அவை சுலபமாகக் கிடைப்பதில்லை. அதற்கு ஏன் கண்ட்ரோல் விதிக்கவேண்டும் ? சிமெண்ட் கண்ட்ரோலை எடுத்த பிறகு அது சுலபமாகக் கிடைக்கிறது. அந்தமாதிரி யோசனையை அரசாங்கம் ஏற்குமா ?

**கனம் திரு. வெ. ராமைய்யா :** எனக்குள்ள தகவல்படி குழந்தைகள் உணவு அல்லது ஹார்லிக்ஸ் இவை ஸிட்டியைப் பொறுத்தவரையில் பங்கீடு முறையில் ஏற்பாடு செய்திருப்பதால்—சாதாரணமாக இதற்கு முன்பு வாங்கும் சக்தியுள்ள சாதாரணமானவர்களுக்கு அவை கிடைக்கவில்லை—அவை இப்போது கிடைக்கின்றன. பங்கீடு முறையை எடுத்துவிட்டால் சமுதாயத்திலுள்ள பெரும்பகுதியினருக்கு கஷ்டம் ஏற்படும் என்று நினைக்கிறேன்.

**திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் :** பண்டைக் காலத்தையும் இந்தக் காலத்தையும் ஒப்பிட்டுப் பார்த்தால் நாளுக்குநாள் குழந்தைகள் உணவு அதிகமாகத் தேவைப்பட்டுக் கொண்டே வருகிறது. தாய்ப் பாலில் சத்தில்லை என்ற காரணமா அல்லது தாய்க்குப் பால் இல்லை என்ற காரணமா ?

**கனம் திரு. வெ. ராமைய்யா :** அதற்கெல்லாம் ஒன்றும் குறைவு ஏற்படவில்லை. எல்லாம் இருக்கிறது. குழந்தைகளை இன்னும் நன்ருக வளர்க்கவேண்டும் என்பதற்காகவும், வாங்கும் சக்தி இருப்பதாலும் குழந்தைகள் உணவின் தேவை அதிகமாகியிருக்கிறது.

**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** அமைச்சர் அவர்கள் ஒரு அப்ளிகேஷனுக்கு ஒரு ரூபாய் வாங்குகிருேம் என்று சொல்கிருர்கள். சாதாரணமாக வெளியே வாங்கும்போது டப்பாவிற்கு எட்டணு அல்லது 12 அணு கூடுதல் கொடுத்தால் கிடைக்கிறது. அந்த ப்ளாக்மார்க்கட்டை விட இரட்டிப்பு ப்ளாக்மார்க்கெட்டாக இந்த அப்ளிகேஷன் கட்டணம் வசூலிப்பது இருக்கிறது. ஒவ்வொரு டப்பா பால் பவுடருக்கும் எதற்காக இந்த கட்டணை விதியிருக்கவேண்டும் ? ஸிட்டிக்கு இரண்டு ஆபீசர்களைப் போட்டு ஸிட்டி பூராவும் விநியோகம் செய்ய முடியும். ஆகவே, எதற்காக இந்தக் கட்டணத்தை வசூலிக்கவேண்டும்.

**கனம் திரு. வெ. ராமைய்யா :** அங்கத்தினர் அவர்கள் சென்னையில் நடந்து வருகிற ஏற்பாட்டை சரியாக புரிந்துக்கொள்ளாமல் கொஞ்சம் ஆத்திரம் அடைகிருர் போல் இருக்கிறது. ஒவ்வொரு டப்பாவிற்கும் அப்ளிகேஷன் போட வேண்டியதில்லை. யார் யாருக்கு குழந்தைகள் உணவு தேவை என்று ரேஷனிங் ஆபீசுக்குச் சென்று சொல்லுகிருர்களோ அந்தக் கட்டத்தில் அப்ளிகேஷன் கொடுக்கவேண்டும். அதைப் பரிசீலனை செய்து அவர்களுக்கு கோட்டா நிர்ணயிக்கப்படுகிறது. அதைத் தொடர்ந்து வாங்கிக் கொண்டிருக்கலாம்.

### பால் பவுடர் உற்பத்தி செய்தல்

*162 கேள்வி—**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** கனம் உணவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரப :—

(அ) கோயம்புத்தூரில் பால் பவுடர் உற்பத்தி செய்யும் திட்டம் ஏதேனும் அரசாங்கத்தின் பரிசீலனையிலிருக்கிறதா ?

(இ) ஆமெனில், அதன் விவரமென்ன ?



THE HON. SRI V. RAMAIAH : (*a*) No.

(*b*) Does not arise.

**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** குழந்தைகள் பால் உணவு உற்பத்தி செய்கிற அமுல் ஸ்தாபனத்தார் கோயம்புத்தூர் பகுதியில் நீலகிரியில் கிடைக்கிற பாலையும், கோயம்புத்தூரில் கிடைக்கிற பாலையும் வைத்துக் கொண்டு அங்கு இதற்கு ஒரு சென்டர் ஏற்படுத்த பார்வையிட்டார்களா ? அது சம்பந்தமாக மாநில சர்க்கார் என்ன உதவி செய்தது ?

**கனம் திரு. வெ. ராமைய்யா :** அங்கத்திலா் அவர்கள் குறிப்பிட்ட நிபுணர்கள் கோவை, மற்ற இடங்களைப் பார்த்தார்கள். அங்கு உபரிப் பால் இருப்பதுபோலவும், ஆகவே மில்க் பவுடர் உற்பத்தி செய்யலாம் என்றும் ஆலோசனை சொன்னுர்கள். அவர்கள் இந்த உதவி பெற "யுனிஸெஃப்" இடம் அணுகலாம் என்று குறிப்பு கொடுத்தார்கள். ஆனால் "யுனிஸெஃப்" லிருந்து வந்து பார்த்தவர்கள் அங்கு உற்பத்தியாகும் பால் "லிக்விட் மில்க்" ஆக இருக்கவே போதுமானதாகயில்லை. ஆகவே, பால் பவுடர் செய்யும் முயற்சியில் இந்த நோத்தில் ஈடுபட வேண்டாம் என்று ஆலோசனை சொன்னுர்கள்.

**திரு. எஸ். ஜே. ராமசாமி :** பம்பாயில் ஒரு பால் பவுடர் தொழிற்சாலை வைத்திருக்கிருர்கள். அங்கு நிபுணர்களைப்போட்டுச் செய்தார்களோ என்னவோ தெரியாது. பற்ருக்குறை இருக்கிற இந்த நேரத்தில் எங்கேயாவது ஒரு இடத்தில் இப்படிப்பட்ட ஒரு தொழிற்சாலையை வைக்க ஏன் தயக்கம் காட்டுகிருர்கள்.?

**கனம் திரு. வெ. ராமைய்யா :** பால் பற்ருக்குறை இருக்கிறபோது பவுடர் எப்படிச் செய்வது என்பதுதான் பிரச்னை.

### தென்ஞற்காடு கூட்டுறவு மத்திய பாங்கு

*163. கேள்வி—**திரு. ஆ. தங்கவேலு :** கனம் கூட்டுறவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா :—

(அ) தென்ஞற்காடு மாவட்ட கூட்டுறவு மத்திய பாங்கு 1964–65-ல் ஆடிட் செய்யப்பட்டதா ?

(இ) ஆம் எனில், பணம் தவருன முறையில் வழங்கப்பட்டிருப்பதாக கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறதா ?

**கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார் :** (அ) ஆம்.

(இ) இல்லை.

### புதுக்கோட்டை மத்திய கூட்டுறவு விற்பனை சங்கம்

*164 கேள்வி—**திரு. பி. முருகையன் :** கனம் கூட்டுறவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா:—

(அ) புதுக்கோட்டையில் உள்ள மத்திய கூட்டுறவு விற்பனை சங்கத்தில் உர ஊழல் சம்பந்தமாக அதிகாரிகள் யாரேனும் 1965 டிசம்பரில் கைது செய்யப்பட்டார்களா ?

(இ) அதன்மேல் என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன ?

**கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார் :** (அ) ஆம்.

(இ) இது குறித்துப் போலீஸ் புலனுய்வு நடத்தி வருகிறது.

**திரு. பி. முருகையன் :** புதுக்கோட்டை சென்ட்ரல் பாங்க் தலைவர் அவர்கள் புதுக்கோட்டையில் உள்ள சென்ட்ரல் ஸ்டோரில் எந்தவிதமான அங்கமும் வகிக்க கூடாது என்று சர்க்கார் விதி இருந்தும் அவர் அந்த சென்ட்ரல் ஸ்டோரில் உதவித் தலைவராக இருப்பதினுல்தான் இந்த

ஊழல்கள் நடந்து இருக்கின்றன என்பதை சர்க்கார் சுட்டிக்காட்டியும் அவர் இதுவரையில் அங்கு இருப்பதால் இந்த நிலைமை ஏற்படுகிறது என்று கருதப்படுகிறது. இதைப் பற்றி அமைச்சர் அவர்கள் என்ன சொல்ல இருக்கிறார்கள் ?

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் :** என்னிடம் கனம் அங்கத்தினர் சொல்கிற தகவல் இல்லை. முக்கிய கேள்விக்கு பதில் சொல்லும்போது சொல்லியிருக்கிறேன். ஸி.எஸ்.ஆர்.—செக்ரட்டரியை ஸஸ்பெண்ட் செய்து வைத்திருக்கிறார்கள். விசாரணையில் இருந்து கொண்டிருக்கிறது.

### *Jain temples*

*165 *Q.*—Sri M. S. SELVARAJAN : Will the Hon. the Chief Minister be pleased to state :—

(*a*) the places where Jain temples are located in the State ;

(*b*) whether any representations have been received from the Jains on the preservation of these temples, architecture etc., and

(*c*) if so, the action taken thereon ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (*a*) No information is available with the Government or with the Hindu Religious and Charitable Endowments (Administration) Department, Madras.

(*b*) and (*c*) Yes. A printed mahajar has been received from Sri T. S. Sripal on behalf of the Tamilnad Jain public in March 1965 requesting Government assistance for the preservation, renovation and repairs of certain Jain temples. He has listed about 17 temples which require urgent repairs. Action can be taken by the Hindu Religious and Charitable Endowments (Administration) Department only in respect of the Jain temples to which the Hindu Religious and Charitable Endowments Act, 1959 are extended. Three such temples have been sanctioned Government grant for repairs and renovation for 1965–66.

**திரு. சா. கணேசன் :** இந்தமாதிரி சமணர் பள்ளிகள், பாழிகள் நூற்றுக்கணக்கானவை தமிழகத்தில் இருக்கின்றன என்பதும் அவை பராமரிப்பற்று சிதலமாகிக்கொண்டு வருகின்றன என்பதும் அமைச்சர் அவர்களுக்குத் தெரிந்திருக்கும். இந்த நிலையில் சமணர்களின் தொகை அருகிக் கொண்டு வருவதாலும், ஆலயங்கள் பலவாக இருப்பதினாலும், பராமரிக்கமுடியாத நிலை இருப்பதால் அந்த ஆலயங்களை ஓரளவிற்கு செப்பனிட்டும் அங்குள்ள பல விக்கிரகங்களை எல்லாம் தொகுத்துக்கொண்டுவந்து ஒரு இடத்தில் வைத்து ஒரு காட்சிசாலை மாதிரி அமைக்க ஏதாவது திட்டமிடப்பட்டிருக்கிறதா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இந்தச் சட்டத்தின்கீழ் நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்றால் இந்த ஆலயங்களை எல்லாம் நமது
9-00 a.m. சட்டத்தின் கீழ் கொண்டு வர வேண்டும். அதன் பின்னால் அதற்கான நோட்டிஃபிக்கேஷன் பிறப்பித்த பின்னால்தான் நடவடிக்கை எடுத்துக் கொள்ள முடியும். நான் குறிப்பிட்டது போன்று, இப்போது எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்ற மூன்று ஆலயங்களிலும், நல்ல சிற்ப வேலைகள் இருக்கின்றன. நல்ல விக்ரகங்கள் இருக்கின்றன. இவைகளை எல்லாம் பாதுகாக்க வேண்டும் என்ற முறையில் இதற்கான நோட்டிஃபிக்கேஷன் செய்யப்பட்டு இப்போது உதவி அளிக்கப்பட்டு வருகிறது. மேலும், ஒவ்வொன்றாக எடுத்துக்கொள்வதற்கும் அரசாங்கம் முயற்சி செய்யும்.



**திரு. சா. கணேசன் :** குறிப்பாக விஜயமங்கலம் என்னும் ஊரில் இருக்கின்ற ஆலயத்தில் பூஜை செய்து வருபவர் நான் இதை விட்டுவிட்டு போய்விடுகிறேன் என்று நோட்டீஸ் கொடுத்திருப்பதாகத் தெரிகிறது. இந்த இடத்தில் பெருங்கதை ஆக்கிய பெரும் புலவர், சிந்தாமணியை ஆக்கிய பெரும் புலவர் போன்ற இவர்களது சிலைகள் இருக்கின்றன. இந்தியாவிலேயே இந்த ஓரிடத்தில்தான் அவை இருப்பதாகத் தெரிகிறது. அவற்றையெல்லாம் எடுத்து, பாதுகாத்து, பழம்பொருள் காட்சியாக வைக்கலாம். அதுமட்டுமல்ல, அவற்றை வரலாற்று சிறப்புமிக்க பொருட்களாகவும் வைத்திருக்கலாம். ஆகையால் அதற்கான முயற்சிகளை மேற்கொள்ள அரசாங்கம் முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இப்போது மூன்று இடங்கள் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன. காஞ்சீபுரத்தில் திருப்பருத்திக்குன்றம், வந்தவாசியில் பேரடூர், வெங்குன்றத்தில் அரசூர். இந்த இடங்களிலுள்ள ஆலயங்கள் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன. மேலும் கனம் அங்கத்தினர் அவர்கள் குறிப்பிட்ட ஆலயங்களை எடுத்துக்கொள்வதற்கான நோட்டிஃபிக்கேஷன் பிறப்பிக்கவேண்டும். இவற்றையெல்லாம் அரசாங்கம் அவ்வப்போது கவனிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. மு. கருணாநிதி :** சமணர்கள் அனுப்பிய முறையீடுகளில் இந்த மூன்று இடங்களிலுள்ள ஆலயங்களை மட்டும் தான் குறிப்பிட்டிருந்தார்களா ? மேலும் குறிப்பிட்டிருந்தால் அவை எங்கெங்கு என்பதைத் தெரிவிக்கலாமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இப்போது அரசாங்கம் மூன்று இடங்களிலுள்ள ஆலயங்களை எடுத்துக் கொண்டிருக்கிறது என்று சொன்னேன். அவர்கள் குறிப்பிட்டிருப்பது 17 ஆலயங்களைப்பற்றியது. பின்னால், ஒவ்வொன்றாக பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

**திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் :** தலைவர் அவர்களே, இந்த 165–வது கேள்வியில் "சமணர் பள்ளிகள்" என்று தலைப்பு இருக்கிறது. நான் ஏதாவது ஸ்கூலைப்பற்றி இருக்குமோ என்று நினைத்து உள்ளே பார்த்தேன் ஆலயங்களைப்பற்றியதாக இருக்கிறது. ஏன் இதற்கு ஆலயங்கள் என்று தலைப்பு கொடுக்காமல் பள்ளிகள் என்று மாற்றிக் கொடுத்திருப்பானேன் ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** ஆலயத்தைப்பற்றித்தான் குறிப்பிடப் பட்டிருக்கிறது.

**கனம் சபாநாயகர் :** "டெம்பிள்ஸை" "பள்ளிகள்" என்றும் சொல்வதுண்டு என்று சொல்கிறார்கள்.

**திரு. சா. கணேசன் :** "சமணர் பள்ளிகள்" என்பது "சமணர் ஆலயங்கள்" தான். அங்கே ஸ்கூல் வைத்து நடத்தியதின் காரணமாகத்தான் "பள்ளி" என்ற பெயர் வந்தது. பள்ளி என்ற சொல் சமணர்—பௌத்தர் ஆலயங்களையே தான் குறிக்கும்.

**கனம் சபாநாயகர் :** தனித் தமிழை விரும்புகிறவர்கள் ஜாக்கிரதையாக கேள்வி கேட்கவேண்டும்.

### தேவிமங்கலம் கிராமத்தில் புதையல்

***166 கேள்வி—திரு. மு. கருணாநிதி :** கனம் முதலமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா :—

(அ) திருச்சி மாவட்டம், உடையார்பாளையம் வட்டத்தில் உள்ள 'தேவிமங்கலம்' என்ற கிராமத்தில் 'புதையல்' ஏதேனும் கிடைத்தது உண்மையா ?

(இ) ஆம் எனில், அந்த இடத்தில் விரிவான ஆராய்ச்சியை மேற்கொள்ளும் உத்தேசம் அரசாங்கத்திற்கு உண்டா ?

[3rd March 1966

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes. A Treasure trove consisting of about 106 Nos. of coins made of base gold was found by labourers engaged in digging a well in a private land in Devimangalam village of Udayarpalayam taluk in Tiruchirappalli district.

(*b*) No, the site is not a historic one.

MR. SPEAKER : Questions are over.

[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

## II.—GENERAL DISCUSSION ON THE BUDGET FOR 1966-67—*cont.*

* **திரு. சி. பொன்னுசாமி :** கனம் சபாநாயகர் அவர்களே, கனம் முதலமைச்சர் அவர்கள் சமர்ப்பித்திருக்கின்ற 1966–67-ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையை வரவேற்று ஒரு சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். நிதிநிலை அறிக்கையில் புதிய வரிகள் எதுவும் இல்லை. அதோடு 30 லட்சம் ரூபாய் அதிகமாக இருக்கிறது என்பதைப் பார்க்கும் போது நாம் மட்டுமல்ல, இந்த நாட்டிலுள்ள மக்கள் அனைவரும் இதை வரவேற்கிறார்கள். அதிலும் உணவுக்காக போடப்பட்டிருக்கும் திட்டங்களை பார்ப்போமானால் குறிப்பாக, விவசாயத்தை எடுத்துக் கொண்டால் விவசாயத்திற்கு முதலிடம் கொடுத்து, விவசாயத்திற்கு நடப்பு ஆண்டில் அதிகப்படியாக பாசன வசதிகள் நல்ல ரக, புது ரக விதைகள், நல்ல டிராக்டர்கள், நிறைய கிணறுகள், பம்ப் செட்கள் அதிக உரம் இது போன்ற பலவகை உதவிகள் விவசாயிகளுக்கு உற்சாக மூட்டக்கூடிய வகையில் அமைந்திருக்கிறது. ஆகையால்தான், 1966–67 நிதி ஆண்டில் 4½ லக்ஷம் டன் அதிகமாக உணவு உற்பத்தி செய்ய முடியும் என்று கண்டிருக்கிறது. இதுபோன்று உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்காக நாம் விளைச்சலை பெருக்கிக்கொண்டே வருகிறோம். அதற்கு எடுத்துக்காட்டாக ஆட்சி ஆங்கிலேயனுடைய கையில் இருந்த காலத்தில் 30 லட்சம் டன்னாக இருந்தது, இப்போது நம்முடைய உணவு உற்பத்தியை 65 லட்சம் டன்னாக பெருக்கியிருக்கிறோம். இதைக் கண்டு நாம் வரவேற்காமல் இருக்க முடியாது. இதுபோன்று உணவு உற்பத்தியைப் பெருக்கிவருவதால், ஆங்கிலேயன் காலத்தில் மக்கள் ஆயிரம் ஆயிரமாக காலரா, பிளேக் முதலிய நோய்களினால் இறந்து கொண்டிருந்த நிலைமை மாறிக்கொண்டிருக்கிறது என்பதை நாம் மறந்து விட முடியாது. வியாதியினால் மட்டுமல்ல, வங்காளத்தில் 20 லட்சம் மக்கள் பட்டினியால் மாண்டார்கள் என்பதை நாம் யாரும் மறக்க முடியாது. ஆகையினால் தான் விவசாயத்தில் அக்கரை எடுத்துக்கொண்டு வருகிறோம். அந்தக் காலத்தில் 2½ கோடி மக்கள் நமது மாநிலத்தில் இருந்தார்கள் என்றால் இன்றையதினம் 3½ கோடி மக்கள் இருக்கிறார்கள். ஒரு கோடிக்கு மேலாக மக்கள் தொகை அதிகமாகியிருக்கிறது. அதேநேரத்தில் உற்பத்தியையும் பெருக்குகிறோம் என்பதைப் பார்த்து நாம் மகிழ்ச்சி அடையாமல் இருக்க முடியாது. அதற்கு எடுத்துக்காட்டாக, அன்று மக்கள் எப்படியிருந்தார்கள் என்பதைப் பார்த்தால், காலையில் எழுந்தவுடன் கம்பு கூழ், கேழ்வரகு, அரிசிக் கஞ்சி போன்றவைகளை அருந்துவதைத்தான் நாம் பார்த்துக்கொண்டிருந்தோம். இன்றைக்கு நாம் பார்க்கிறோம், மக்கள் காலையில் எழுந்தவுடன், பெட் காப்பி அதற்கு மேல் ஸ்நானம் செய்துவிட்ட பின்னால் வீட்டில் அருமை மனைவியாரோ அல்லது தாயாரோ செய்து வைத்திருக்கின்ற பண்டங்கள் பிடிக்காமல் ஹோட்டலில் போய் நான்கு இட்டிலி, சட்னி, சாம்பார், மிளகாய்ப்பொடி, அதோடு நெய் கேட்கிறார்கள், அது இல்லையென்றால் எண்ணெய்யாவது போடச் சொல்லுகிறார்கள், இந்த நிலைமையை நாம் பார்க்கின்றோம் ஆகவே, உணவு உற்பத்திப் பெருக்கத்தின் மூலமாக மக்கள் நல்ல முறையில் உணவு உண்டு வருகிறார்கள் என்பதை நாம் மறுக்க முடியாது.



3rd March 1966] [திரு. சி. பொன்னுசாமி]

அதேபோன்று பள்ளிச் சிறுவர்கள் ஒரு காலத்தில் இரண்டு முழம் துண்டை உடுத்திக்கொண்டு, கையில் ஏடுகளையும், எழுத்தாணியும் எடுத்துக் கொண்டு போவதை பார்த்தோம், ஆனால், இன்றையதினம் நல்ல கால் சட்டை, நல்ல அழகான மேல் சட்டையும் போட்டுக்கொண்டு ஆனந்தமாக நடந்து செல்கிறார்கள். கிராமப்புறங்களில் பார்த்தால், நாம் காரில் போகும்போது, ஆங்கிலம் தெரிகிறதோ இல்லையோ, அவர்களாகவே கையைக்காட்டி, "ப்ளீஸ் ஹோல்டான்" என்று நிறுத்துகிறார்கள். அவர்களை ஏற்றி பள்ளிக்கு அருகில் இறக்கி விட்டதும், "தாங்க் யு வெரி மச்" என்று சொல்லிவிட்டுப் போகக்கூடிய காட்சியையும் நாம் பார்க்கிறோம். ஆடை அலங்காரங்களைப் பார்த்தால் சாதாரணமாக இருக்கின்ற மனிதர்கள்கூட, அண்டர் வேர் போட்டு, 8 முழ நைஸ் வேட்டி கட்டி, அதற்கு மேல் ஒரு பனியன், அதற்கு மேல் ஒரு ஜிப்பா, அதற்கு மேலாக ஆனந்தமாக ஒரு மேல் துண்டு போட்டுக்கொண்டு, ஸ்பெக்ட்ஸ்-ம் போட்டு, காலில் "ப்ளக்ஸ்" செருப்புக்களையும் அணிந்து, டி.ஐ. சைக்கிளில் போய்க்கொண்டிருக்கிறார்கள். அது மட்டுமல்ல, கையிலே சிகரெட்டும் வைத்துக்கொண்டு சினிமாவுக்குப் போய்க்கொண்டிருக்கின்ற காட்சியையும் நம்மால் பார்க்க முடிகிறது. இதையெல்லாம் பார்த்துவிட்டு நமக்கு எந்த விதமான வளர்ச்சியும் ஏற்படவில்லை என்று சொன்னால் அதை மக்கள் ஒருக்காலும் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள் என்று நம்புகிறேன். இது வசதியுள்ளவர்களுக்கு மட்டும்தான் இருக்கிறதா என்று பார்த்தால் அப்படி யில்லை. முன்னால் மக்கள் பட்டினியாலும், நோயினாலும் ஆயிரம் ஆயிரமாக இறந்து கொண்டிருந்ததை நாம் பார்த்தோம். இன்றைக்கு சாதாரணமாக பிளாட்பாரத்தில் வசித்துக் கொண்டிருக்கின்ற மக்களை எடுத்துக் கொண்டாலும், மாலை வேளையில் பார்த்தால் அவர்களுடைய மனைவிமார்கள் தலையில் பூ வைத்துக் கொள்கிறார்கள், கணவன்மார் கையிலே சிகரட்டு அல்லது பீடி ஊதிக்கொண்டு சினிமாவுக்குப் போக கிளம்பி விடுகிறார்கள். மக்கள் தரைக்கு டிக்கட் இல்லை என்றால் பெஞ்சுக்கு கொடு என்கிறார்கள். அதிலும் இல்லையென்றால் சேருக்குக் கொடு என்று டிக்கட் வாங்கிக்கொண்டு இரண்டு, மூன்று டீயையும் குடித்து, இரண்டு மூன்று சிகரட் பாக்கட்களை வாங்கி அதையும் ஊதிவிட்டு ஆனந்தமாக சினிமா பார்த்து விட்டு வரக் கூடிய காட்சியையும் நாம் பார்க்கிறோம். இதையெல்லாம் பார்த்துவிட்டு யாரும் இந்த நாடு வளர்ச்சி பெறவில்லை என்று சொல்லமுடியாது. இது மட்டுமல்ல, எதிர்க்கட்சி நண்பர்கள் இங்கு வருகிற காட்சியை நாம் பார்க்கின்றோம். அவர்கள் வரும்போது அங்க வஸ்திரங்களைப் போர்த்திக்கொண்டு வருகிறார்கள். இவர் நாவலரா? பாவலரா? புலவரா? அல்லது மதியழகனா? அல்லது அன்பழகனா? அல்லது பொன் மொழியாரா? மணிமொழியாரா அல்லது கருணை மிகுந்த கருணாநிதியாரா? யார் அது? என்று கூடத் தெரியாத முறையில் அழகாக வரும் காட்சியைப் பார்க்கிறோம். இவைகளைப் பார்க்கும்போது நாடு வளர்ச்சி அடையவில்லை என்று யாரும் சொல்ல முடியாது என்று நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

பதினெட்டு ஆண்டுகளுக்குள் இந்த அளவுக்கு வளர்ச்சி அடைந்திருக்கிறோம். இதேசந்தர்ப்பத்தில் பிறநாடுகள் வளர்ச்சி அடைந்திருப்பதைப் பார்த்தால் கூட, நியூ யார்க் சிட்டியில் 17 லட்சத்துக்கும் மேல் மக்கள் வேலையில்லாமல் இருப்பதாகச் சொல்லுகிறார்கள், ரஷ்யாவில் சதுப்பு நிலத்தில் நடக்க இரும்பு பூட்ஸ் போடும் நிலைமை இருக்கிறது, இன்னும் வீடு கட்டிக் கொண்டிருக்கிறார்கள் என்றெல்லாம் கேள்விப்படுகிறோம். இந்த 18 ஆண்டுகளுக்குள் 25 ஆண்டுகளில் ஏற்படக் கூடிய அளவுக்கு சாதனைகளை நமது சர்க்கார் செய்திருக்கிறது என்று கூறாமல் இருக்க முடியாது. நான் இதை வரவேற்கிறேன்.

மேலும் இந்த நிதிநிலை அறிக்கை நமது கனம் முதல் அமைச்சர் அவர்களுடைய திறமையைக் காட்டுகிறது. வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம் என்று கூறுவார்கள். வல்லவன் பம்பரம் மணலிலும் ஆடும் என்றும் சொல்லுவார்கள். அவர்களுடைய திறமையால் நல்ல முறையில் இந்த நிதிநிலை அறிக்கையைச் சமர்ப்பித்திருக்கிறார்கள் என்று பார்க்கும் போது மிகவும் மகிழ்ச்சி ஏற்படுகிறது.

தூத்துக்குடியை எடுத்துக்கொண்டால் எனது தொகுதியில் புதிதா ஹார்பர் திட்டம் நடந்து கொண்டிருக்கிறது. ஏதோ திடீரென்று நாட்டில் ஏற்பட்ட அசம்பாவிதத்தினுல் மத்திய சர்க்காரிலிருந்து வரும் பணம் கொஞ்சம் தடைபட்டுக் கொண்டிருக்கிறது. நான்கு கோடி ரூபாய் செல வழித்திருக்கிற திட்டத்திற்கு மேற்கொண்டும் முதலிடம் கொடுத்து நடத்த வேண்டிய முயற்சிகளை மத்திய சர்க்கார் செய்யவேண்டுமென்று மாநில சர்க்கார் கேட்டுக்கொள்ள வேண்டுமென்று சொல்லிக்கொள்ள ஆசைப்படு கிறேன்.

அதே சந்தர்ப்பத்தில் சேதுசமுத்திரம் திட்டத்திற்கும் முக்கியத்துவம் கொடுக்கவேண்டும். இந்தத் திட்டம் முடிவடைந்தால் கப்பல்காரர்களுக்கு சுற்றிச் செல்லுவதற்குப் பதில் நேரடியாக வருவதால் 400 மைல் அளவுக்கு சுற்றுமல் வர முடிகிறது. ஒரு கப்பல் 400 மைல்கள் போக ஏறத்தாழ மூன்று நாட்கள் ஆகும். ஒரு கப்பலுக்கு ஒரு நாளுக்கு மெயின்டெனன்ஸ் காஸ்ட் 10,000 ரூபாயிலிருந்து 15,000 ரூபாய் ஆகும். ஒரு கப்பலுக்கு குறைந்தது 30,000—40,000 ரூபாய் மிச்சம் ஆகும். சூயஸ் கெனுல் போன்று ஸெஸ் திட்டம் வகுத்தால் சர்க்காருக்கு இதன் மூலம் கோடிக் கணக்கான ரூபாய் கிடைக்கும். அந்நியச் செலாவணியும் மிச்சம் ஆகும். ஆகவே இது போன்ற திட்டங்களுக்கு முதலிடம் தந்து விரைவாக எடுத்து முடிக்க வேண்டுமென்று நமது சர்க்கார் மத்திய சர்க்காரைத் தூண்ட வேண்டுமென்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

நம் நாடு வேகமாக முன்னேற சேதுசமுத்திரம் திட்டம், தூத்துக்குடி ஆழ்கடல் திட்டம், சேலம் உருக்காலைத் திட்டம் போன்ற திட்டங்களை விரை வில் நிறைவேற்ற வேண்டும். இவைகளால் லட்சக்கணக்கான மக்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைக்க வசதி ஏற்படும் என்று சொல்லிக்கொள்கிறேன். இந்த மூன்று திட்டங்களும் உருவாகி, தூத்துக்குடி எரி மின்சாரத் திட்ட மும் வந்து விட்டால் அநேக பெரிய பெரிய தொழிற்சாலைகள் வர வாய்ப்பு இருக்கும். திட்டங்கள் வேகமாக நடந்து முடிந்தால்தான் தொழில் அதிபர்கள் பெரிய பெரிய தொழிற்சாலைகளைத் துவக்க முன்வருவார்கள், லடசக்கணக்கான மக்களுக்கு வேலை கிடைக்கும் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

குறிப்பாக மீனளத்தை எடுத்துக்கொண்டால் வாரம் ஒன்றுக்கு சராசரி ஒருவர் ½ ராத்தல் மீன் சாப்பிடுவதாகச் சொல்லுகிறுர்கள். கடலில் உள்ள வஸ்துக்களை எடுப்பதற்கு நமக்கு 620 மைல் நீளக் கடற்கரை அமைந்திருக் கிறது. ஜப்பானில் உள்ளவர்கள் நம் கடலில் வந்து மீன் பிடிக்கிறுர்கள். நாம் கூட மீன் பிடிக்க அநேக வசதிகளைச் செய்து கொடுத்திருக்கிறேம். இன்னும் வசதிகள் செய்து கொடுக்க வாய்ப்புகள் இருக்கின்றன. இருந் தாலும் ஜப்பானியர் அல்லது ரஷ்யருடன் சேர்ந்து ஆழ்கடல் மீன் பிடிக்கும் திட்டத்தைக் கொண்டு வந்தால் லட்சக்கணக்கான டன் அளவுக்கு மீன் பிடிக்க வாய்ப்பு ஏற்படும் என்ற என் யோசனையைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். சமீபத்தில் ரஷ்யாவிலிருந்து நான்கு நிபுணர்கள் தூத் துக்குடி வந்தார்கள். தூத்துக்குடி துறைமுகத்தைப் பார்த்துவிட்டு, மீனளத்தைப் பெருக்க இந்தியாவிலேயே சிறந்த துறைமுகமாக தூத்துக் குடி இருக்கிறது என்று மத்திய சர்க்காருக்குத் தெரிவித்திருப்பதாகத் தெரிகிறது. அப்படி இருந்தால் அதையும் நன்றுகக் கவனித்துச் செய்ய வேண்டுமென்று நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

என் தொகுதியில் விவசாயிகளுக்கு மனதில் சில அதிருப்திகள் இருக் கின்றன. அந்த அதிருப்திகளையெல்லாம் நிவர்த்திக்க வேண்டுமென்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்: விவசாயிகள் தங்கள் நன்செய் நிலங்களில் பயிரிடும்போது, அதன் மத்தியில் திரடாக உள்ள நிலத்தை புன்செய்யாகக் கருதி, நன்செய்க்கு நன்செய் தீர்வையும், திரடுக்கு புன்செய் தீர்வையும் ஒரு காலத்தில் செலுத்தி வந்தார்கள். காலப்போக்கில், திரடை எடுத்து விட்டார்கள். ஆகியும் புன்செய் நிலத்தில் நன்செய் பயிர் வைத்திருக்கிறுர்கள் என்று பெனல்ட்டி போடுகிறுர்கள். இவைகளை சாதாரணமாகவே எடுத்து விடலாம். எடுத்து விடுவார்கள் என்ற பரி பூர்ண நம்பிக்கையும் எனக்கு இருக்கிறது.





அடுத்தபடியாக, தூத்துக்குடியில் கோரம்பளம் என்ற கிராமம் இருக் கிறது. அந்தக் கிராமத்தில் ஒரு குளம் இருக்கிறது. அதன் மூலமாக 4,000 ஏக்கருக்கும் அதிகமாகச் சாகுபடி ஆகிக்கொண்டிருக்கிறது. அவை கள் ஒரு போக நன்செய்யாக சர்க்கார் ரெக்கார்டில் இருக்கின்றன. ஆனுல் இரண்டு போகத்திற்கு தண்ணீர் கொடுக்கிறுர்கள். இரண்டாவது போகத் திற்கு தண்டத் தீர்வை போடுகிறுர்கள். நமது மதிப்புக்குரிய கனம் அமைச்சர் ராமையா அவர்கள் சென்ற ஆண்டு இந்தமாதிரி நிலை மையைப் பார்த்து விட்டு குலையங்கரிசல் பொட்டக்குளம் பாசனத்தை இரு போகமாக மாற்றித் தந்தார்கள். அதேமாதிரி கோரம்பளம் கிராமத் திற்கும் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று நன்செய் நிலம் வைத்திருக்கிற பலரைச் சேர்த்து ஒரே பட்டாவாக இருக்கிறது. அதனுல் சில கஷ்டங்கள் ஏற்படுகின்றன. உத்தி யோகஸ்தர்கள் நினைத்தால் இந்தக் குறையை நிவர்த்திக்க முடியும். பட்டாக்களைப் பிரித்துக் கொடுக்க வேண்டுமென்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

தூத்துக்குடி நகரத்தை எடுத்துக்கொண்டால், அதன் சுற்றுப்புறங் களில் மக்கள்—குறிப்பாக ஹரிஜன மக்கள்—ஏராளமாக சர்க்காருடைய புறம்போக்கு நிலங்களில் பல ஆண்டுகளாக் குடிசை போட்டு வாழ்ந்து வருகிறுர்கள். அவர்களுக்கும் பட்டாக்கள் கொடுக்கவில்லை. பட்டாக்கள் கொடுத்தால் விற்று விடுவார்கள் என்று நினைக்கிறுர்கள். கண்டிஷனல் பட்டாவாகவாவது கொடுக்கலாம் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படு கிறேன்.

விவசாயிகளுக்கு நல்ல முறையில் பல நன்மைகள் செய்து வருகிறேம். மூன்று மாதங்களுக்கு அல்லது ஆறு மாதங்களுக்கு ஒரு தடவை அதிகாரிகள் மாவட்ட ரீதியில் தொடர்பு வைத்துக்கொள்ள வேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன். லோன் கொடுப்பதில் கஷ்டம் இருக்கிறது. ஒரு மாதத்திற்கு முன் ரெக்கார்டுகளைத் தயாராக வைத் திருக்கவேண்டுமென்று கட்டளையிட்டு, ஜமாபந்தி போன்று அதிகாரிகள் கேம்ப் போட்டு, குறைபாடுகளையெல்லாம் அறிந்து, ரெக்கார்டுகளையெல்லாம் சரி பார்த்து, அங்கேயே கூப்பன் மாதிரி கொடுத்து விட்டால் அவர்கள் அதைக் கொண்டு போய் பாங்குகளில் பணத்தைப் பெற்றுக் கொள்ள லாம் என்ற முறையில் செய்தால் வசதியாக இருக்கும். ஆகவே இது போன்றவைகளை கவனிக்கலாம் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படு கிறேன்.

தூத்துக்குடி நகர சபை சம்பந்தப்பட்ட மட்டில் 30 ஆண்டுகளுக்கு முன்னுலேயே அண்டர்கிரவுண்ட் டிரைனேஜ் வேண்டுமென்று தீர்மானம் பாஸாகி இருக்கிறது. அதை நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் எடுக்கப் போகிறுர்கள். அதை முதலில் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். குடி தண்ணீர் வசதியை எடுத்துக் கொண்டாலும், கிராம மக்களுக்கு மத்திய சர்க்கார் உதவியைக் கொண்டு சப்ளை செய்யும் திட்டம் இருக்கிறது. ஒரு கிராமத்திற்குச் சாதாரணமாக 80,000 ரூபாய் செலவு ஆகிறது என்றுல் 40,000 ரூபாய் மத்திய சர்க்கார் கொடுக்கிறுர்கள். 40,000 ரூபாய் கிராம மக்கள் கொடுக்க வேண்டுமென்று சொல்லுகிறுர்கள். 40,000 ரூபாய் கொடுக்க கிராம மக்கள் சக்தியற்றவர் களாக இருக்கிறுர்கள். மாநில சர்க்காரும் ஒரு பங்கு எடுத்துக் கொண்டாவது, குடி தண்ணீரின் முக்கியத்துவத்தை உணர்ந்து, முதலிடம் கொடுத்து அதற்கு வேண்டுவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தூத்துக்குடித் துறைமுகத்தின் மூலமாகப் பல ஆண்டுகளாக ஈர்க்கு, தும்பு, செந்நாயிலை போன்ற பொருள்கள் ஏராளமாக அன்னிய நாடு களுக்கு சென்று கொண்டிருக்கின்றன. செந்நாயிலை உலகத்திலேயே இராமனுதபுரம், திருநெல்வேலி மாவட்டங்களில் தான் உண்டாகிறது. உலகத்திலேயே வேறு எங்கும் கிடையாது. இதை மேல் நாடுகளில் எல்லா மருந்துகளுக்கும் உபயோகித்துத்தான் ஆக வேண்டும் என்ற நிலையிலே இருக்கிறுர்கள். ஏறக்குறைய மூன்று கோடிக்கும் அதிகப்படி

யாக ஏற்றுமதியாகும் இந்தப் பொருள் ஐம்பது லட்சம், அறுபது லட்சத்திற்குக்கூட ஏற்றுமதியாகாத நிலை இப்பொழுது இருக்கிறது. இதுபோன்றுதான் தும்பு, ஈர்க்கு முதலியவைகளும். இதை நம்முடைய மத்திய சர்க்காரால் ஏற்படுத்தப்பட்டிருக்கும் எக்ஸ்போர்ட் ப்ரமோஷன் கவுன்சில் என்கிற ஸ்தாபனத்தார் வந்து பார்ப்பதும் போவதுமாக இருக்கிறார்களே யொழிய, தகுந்த திட்டம் தீட்ட முடியவில்லை. ஏன் என்று புலப்படவில்லை. ஆகவே, மாநில சர்க்கார் ஒரு குழு அமைத்து, இரண்டு மூன்று தினங்களுக்கு அந்தக் குழு தூத்துக்குடியில் தங்கி,—அங்கு ஐம்பது அல்லது அறுபது வியாபாரிகள்தான் ஏற்றுமதித் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள்—அவர்களைக் கலந்து ஆலோசனை செய்து, அதற்கு ஒரு வகை கண்டுபிடித்தால் இரண்டு கோடி ரூபாய், மூன்று கோடி ரூபாய் பெறுமானம் உள்ள பொருள்களை அதிகப்படியாக ஏற்றுமதி செய்ய முடியும். அப்படி ஏற்றுமதி செய்யும்போது அன்னியச் செலாவணி மிச்சப்படும். அதுபோன்று அன்னியச் செலாவணி மிச்சப்படுமானால் நம்முடைய மாநிலத்தில் ஸ்டாண்டர்டு மோட்டார் கம்பெனியார், அன்னியச் செலாவணிப் பற்றாக்குறை கஷ்டத்தினால் நிறுத்தியிருக்கிறார்களே அது போன்ற கார்கள் செய்யும் தொழிலைக் கூட நிறுத்தாமல் தொடர்ந்து செய்யும் வாய்ப்புகள் எல்லாம் ஏற்படும் என்று நான் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

ஆகவே, இதுபோன்ற காரியங்களிலே நமது மாநில சர்க்கார் முயற்சி செய்ய வேண்டும் என்று நான் மறுமுறையும் கேட்டுக்கொண்டு, இந்த நிதிநிலை அறிக்கை யாராலும் வரவேற்கப்படக் கூடியது என்பதையும் நான் சொல்லிக் கொண்டு உரையை முடிக்கின்றேன். வணக்கம்.

**திரு. அ. பெ. தர்மலிங்கம் :** மதிப்பிற்குரிய சட்டமன்றத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு நம்முடைய மதிப்பிற்குரிய முதல் அமைச்சர் அவர்களால் இந்தச் சபையின் அங்கீகாரத்திற்காக இங்கே வைக்கப்பட்டிருக்கிற இந்த நிதிநிலை அறிக்கையின் மீதான விவாதத்தில், மூன்று நாட்களாக இரு தரப்பிலும் உள்ளவர்கள் தங்கள் தங்களுடைய கருத்துக்களை இங்கே எடுத்துத் தெரிவித்து இருக்கிறார்கள். பொதுவாக, இந்த வரவு-செலவுத் திட்டத்தில் பேசியவர்கள் அத்தனை பேரும் ஆரம்பத்தில் எதிர்கட்சியில் உள்ள எங்கள் பேரில் பழியைச் சுமத்திவிட்டு, அதற்குப் பிறகு தங்கள் தங்கள் தொகுதிகளில் உள்ள குறைகளை இங்கே எடுத்துச் சொல்லி வந்ததை நான் நினைவூட்ட விரும்புகிறேன். " நாங்கள் என்ன செய்தோம் ? " என்று கேட்கின்ற நண்பர்களுக்கு இந்த நிகழ்ச்சியே நல்ல பதிலாக அமையும் என்று கருதுகிறேன். எங்கள் பக்கத்தில் உட்கார்ந்திருக்கும் காரணத்தினாலோ என்னவோ, எதிர் கட்சிகளின் வரிசையிலே இருக்கும் காரணத்தினால் எதிர்க்கட்சியிலே இருப்பதாக எண்ணிக்கொண்டு, மதிப்பிற்குரிய திரு. கோசல்ராம் அவர்கள் நேற்று பேசும்போது, " மத்திய சர்க்காரோடு போராட்டத்தைத் துவக்குங்கள் " என்று நம்முடைய அமைச்சர்களுக்கு வேண்டுகோள் விடுத்தார்கள். அதைப் போலவே, மதிப்பிற்குரிய திரு. வீரபாகு அவர்கள் பேசியபோது " இரண்டு ஏக்கருக்கு உட்பட்டு நிலங்கள் வைத்திருப்பவர்களுக்கு வரியிலிருந்து விலக்கு அளியுங்கள் " என்று கேட்டுக்கொண்டார். இந்த மன்றத்தில் ஏற்கனவே திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில், " இரண்டு ஏக்கருக்குக் குறைவாக நிலம் வைத்திருப்பவர்களுக்கு வரியிலிருந்து விலக்கு அளிக்க வேண்டும் " என்று திருத்தம் கொண்டு வந்த நேரத்தில், மற்றவர்கள் எல்லோரும் சேர்ந்து அதை தோற்கடித்தது ஞாபகம் இருக்கும் என்று நினைக்கிறேன்.

இந்த வரவு-செலவுத் திட்டத்தில் பேசிய எங்கள் அருமை நண்பர் திரு. அழகமுத்து அவர்கள், உரையை முடிக்கும் நேரத்தில், "தேர்தல் காலத் திட்டம்" என்று குறிப்பிட்டதை நம்முடைய உணவுத் துறை அமைச்சர் அவர்கள், " எல்லாம் தேர்தல் திட்டம் தான் " என்று குறிப்பிட்டார்கள். உண்மையிலேயே இப்பொழுது இந்தத் திட்டங்கள் பற்றிப் பேசுவதும் செயல்படுவதும் வருகிற தேர்தலுக்காக இருக்குமோ என்னவோ என்று நான் கருதுகிறேன். ஏனென்றால், ஏற்கனவே 1965-ம் ஆண்டிலேயே ஏழரை கோடி ரூபாய்க்கு விவசாயிகள் மீது புது வரி போட்டு



விட்டு, அதற்குப் பிறகு " வரியே போடாத வரவு செலவுத் திட்டம் " என்று இதைப் பாராட்டி இருக்கிறார்கள். உண்மையிலேயே இந்த வரவு செலவுத் திட்டம் எந்த வரியும் இல்லாத திட்டமாக இருந்தாலும், 1967-ம் ஆண்டின் தேர்தலை மனத்தில் வைத்து, தேர்தலின்போது எப்படி இதைக் குறிப்பிடலாம் என்கிற கருத்தைக் கொண்டு, " உபரி வரவு செலவுத் திட்டம் " என்று இதைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். மற்றொன்று, இனி போடுவதற்கு தமிழ் நாட்டில் எந்த வரியினமும் கிடையாது. எல்லா வரியும் போட்டாய்விட்டது. புதிய வரி போடுவதற்கு பாக்கி எதுவுமே கிடையாது. (கனம் திரு. எம். பக்தவத்சலம் : சென்ற ஆண்டும் இப்படித்தான் சொன்னார்கள்).

விவசாயத் துறையைப் பொறுத்த வரையில், இந்த இந்தத் திட்டத்தைத் நிறைவேற்றிவிட்டோம், இனி இந்த இந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்று எல்லாம் சொல்வது நிச்சயமாக வரி போட வேண்டியிருக்கும் என்ற காரணத்தினாலோ என்னவோ தெரியவில்லை. ஆனால் திட்டங்கள் நிறைவேற்றப்படவேண்டும் என்பதற்காக எல்லா வகைகளிலும் பொதுமக்களிடமிருந்து கடன்கள் வசூலித்தாய்விட்டது. இனி எந்த வரியும் வசூல் செய்யமுடியாத அளவிற்கு கடன்கள் மூலம் வசூல் செய்தாகி விட்டது. இங்கே போடப்படுகிற திட்டங்களைப் பற்றி எதிர்த் தரப்பில் உள்ள நாங்கள் குறிப்பிடுகிற நேரத்தில், திட்டங்களே தேவை இல்லை என்று நாங்கள் சொல்வதாக ஆளும் கட்சியில் உள்ள பலர் குறை சொல்லக்கூடும். திட்டம் அவசியம் தேவை தான். ஆனால்,போடப்படும் திட்டங்கள் அத்தனையும் நிறைவேற்றப்படுகின்றனவா என்று பார்த்தால், பல திட்டங்கள் நிறைவேற்றப்படாமலேயே போய்விடுகின்றன. போடப்படுகிற திட்டங்கள் யாருடைய நன்மைக்காகப் போடப்படுகின்றனவோ அவர்களுக்கு அவற்றினுடைய பயன் போய்ச் சேரவில்லை. இதை நான் சொல்லவில்லை. காலஞ்சென்ற பிரதமர் பண்டித நேரு அவர்கள், சமுதாய வளர்ச்சி மன்ற துவக்க விழாவில் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதைப் போலவே, இப்பொழுது அந்தத் திட்டத்தினால் பயன் பெறுகிறார்களா என்று பார்க்கும்போது, யாருடைய நல்வாழ்விற்காகத் திட்டங்கள் தீட்டப்படுகின்றனவோ அவர்களுடைய நல்வாழ்வை விட அவை மற்றவர்களுடைய நல்வாழ்வுக்காகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. காரணம் என்ன ? இங்கே விவசாயத்திற்கு முதல் முக்கியத்துவம் கொடுத்திருப்பதாக சமீப காலமாக பேசப்பட்டு வருகிறது. இதற்கு முன்பெல்லாம் இல்லாத ஒரு புதுமை என்னவென்றால், காலஞ்சென்ற பாரதப் பிரதமர் லால் பகதூர் சாஸ்திரி அவர்கள். " ஜவான்கள் வாழ வேண்டும், விவசாயிகள் வாழ வேண்டும் " என்ற புது கோஷத்தைக் கிளப்பினார்கள். விவசாயிகளினுடைய நல்வாழ்வுக்கு வித்திட்டார்கள் என்று எண்ணிக் கொண்டிருக்கும் நேரத்தில், விவசாயிகளுக்கு முக்கியத்துவம் கொடுக்க ஆரம்பித்து விட்டார்கள் என்று எண்ணிக்கொண்டிருக்கும் நேரத்தில், அந்த நல்லவர் மறைந்து விட்டார்கள். உண்மையிலேயே பார்க்கும்போது, விவசாயிகள் இனி எதைப் பற்றிப் பேசுவது என்று பார்த்தால், இப்பொழுது பேசுகிறவர்கள் சிலவற்றைப் பேசிவருகிறார்கள். போடப்படும் திட்டங்களினால் விவசாயம் முன்னேறியிருக்கிறதா என்று பார்ப்பதைவிட, அந்த விவசாயத்தையே தொழிலாகக் கொண்டு, உற்பத்திப் பெருக்கத்தையே முக்கியமாகக் கொண்டிருக்கிற விவசாயிகள் முன்னேற்றம் அடைந்திருக்கிறார்களா என்று பார்த்தால், நிச்சயமாக விவசாயிகள் முன்னேற்றம் அடையவில்லை. இதை நான் சொல்வதை விட, காலஞ்சென்ற பாரதப் பிரதமர் அவர்கள், தம்முடைய " பஞ்சாயத்து ஆட்சி, சமுதாய வளர்ச்சி " என்ற புத்தகத்தில் தம் கருத்துக்களைத் தெரிவிக்கும் நேரத்தில், " கடந்துபோன காலங்களில் பெரும் சுமையைக் குடியானவர்கள் சுமந்து வந்திருக்கிறார்கள் " என்று குறிப்பிட்டது மாத்திரமல்லாமல், " அந்தக் குடியானவர்களின் கூட்டம் செழிக்கும் என்று இனியாவது எதிர்பார்க்கலாம் " என்று குறிப்பிட்டிருக்கிறார். எனவே, விவசாய உற்பத்தியைப் பெருக்கும் விவசாயிகள் உண்மையிலேயே முன்னேற்றம் அடைந்திருக்கிறார்களா என்றால், இல்லை. அதைப்போல, விவசாயிகளுக்காகப் பல சட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. இந்த சட்டமன்றத்தில் விவசாயிகளுக்காகச் சட்டங்கள் நிறைவேற்றப்படும்

நேரத்தில் எல்லாம், நாங்கள் அனுபவ ரீதியாக, அதிலே ஏற்படும் இடர்பாடுகளை உணர்ந்த காரணத்தால், சில திருத்தங்கள் கொடுக்கும்போதெல்லாம் அவை எதிர்த்துத் தோற்கடிக்கப்பட்டிருக்கின்றன. இங்கே எங்களுடைய திருத்தங்களைத் தோற்கடித்து விட்டு, அதிகாரத்தோடு, நல்ல மெஜாரிடியோடு சட்டங்களை நிறைவேற்றி இங்கே அவர்கள் எங்களைத் தோற்கடிக்கிறார்கள். ஆனால், அவர்களுடைய சட்டங்களைக் கோர்ட்டிலே அத்தனை பேரும் சேர்ந்து தோற்கடிக்கிறார்கள். எங்களுடைய திருத்தங்களை இங்கே அவர்கள் தோற்கடித்து இவர்கள் கொண்டுவரும் சட்டங்களை தோற்கடிக்க அங்கே நீதிபதிகள் காத்துக்கொண்டிருக்கிறார்கள். விவசாயிகளுக்காகச் சட்டங்கள் போடும் நேரத்தில் ஆற அமர யோசித்துப் போட வேண்டும் என்று சொன்ன நேரத்தில் எல்லாம், ''இவர்களுக்கு அதைப் பற்றித் தெரியாது'' என்று குறிப்பிட்டார்கள். நான் உங்கள் மூலமாக அவர்களுக்கு பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். இந்த ஆட்சி வந்ததற்குப்பின்னால், பல சட்டங்கள் விவசாயிகளுக்காகப்போடப்பட்டிருக்கின்றன. அத்தனை சட்டங்கள் போடப்பட்டாலும் கூட, அவற்றில் இருக்கும் ஓட்டை உடைசல்களைப் பயன்படுத்திக்கொண்டு ஆளும் கட்சியில் உள்ள பெரு நிலச்சுவான்தார்கள் அவர்களுக்கு இருக்கும் பல சலுகைகள் காரணமாக விவசாயிகளைத் தோற்கடிக்கத்தான் பார்க்கிறார்கள். விவசாயம் பெருகவில்லை, பெருகவில்லை என்று நாம் சொல்வதற்கு நிச்சயமாக அதுவும் ஒரு காரணமாக இருக்க முடியும். 1956-ம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட சட்டத்தில், விவசாயி தன்னுடைய நிலத்தில் நல்ல முறையில் விளையாவிட்டால் அதை ரெவினியூ கோர்ட் மூலமாகத் தீர்த்துக் கொள்ள வேண்டும் என்று அப்பொழுது ரெண்ட் கோர்ட்டுக்கு அனுப்பப்படுவதற்கு முன்பு, விவசாயம் செய்த நிலத்தைக் குறித்து கோர்ட்டுக்குத் தெரிவித்துவிட்டு, அதற்குப் பிறகு, அறுவடையை நிர்ணயம் செய்ய வேண்டும் என்று 1956-ம் ஆண்டு நியாய வாரச் சட்டத்தின் விதி 5 (2)இல்
9-30 a.m. சந்தர்ப்பம் அளிக்கப்பட்டிருக்கிறது. அதன்படி இப்போது நடைமுறையில் இருந்து வருகிறதா என்று பார்த்தால் இல்லை. நான் இந்த ஆண்டே குறிப்பிட விரும்புகிறேன். இந்த ஆண்டு நல்ல முறையில் பயிர் விளைந்திருப்பதாகக் கருதி ஒரு சில இடங்களில் அறுவடை செய்தார்கள். அறுவடை செய்த பிறகு பார்த்தால் பூச்சி அடித்தும், பதிராகவும் போய் விளைச்சல் பாதிக்கப்பட்டிருக்கிறது. அந்த விவசாயி எப்படி குத்தகை அளக்க முடியும் ? இந்தச் சட்டத்தால் இன்றையதினம் பலர் நிலத்தில் இருந்து இந்த ஆண்டு வெளியேற்றப்படுகிற நிலைதான் இருக்கிறது. நிச்சயமாக அரசாங்கம்தான் தலையிட்டு அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்பதாகக் கேட்டுக்கொள்கிறேன். உணவு அமைச்சர் அவர்கள் எங்கள் பகுதிக்கு வந்திருந்தபோது பலரும் இதை எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள். விளைச்சல் இல்லாத காரணத்தினால் மகசூல் சரியாக இல்லாத காரணத்தினால்—சட்டப்படி வெளியேற்றிவிடச் சந்தர்ப்பம் இருக்கிறது. ஆகவே, உடனடியாக அமைச்சர் அவர்கள் ஏதாவது செய்ய வேண்டும் என்பதாகக் கேட்டுக்கொள்கிறேன். அரசாங்கத்திலிருந்து வரி வஜா செய்து கொடுத்தால் விவசாயிகள் தர வேண்டிய பாக்கியைத் தள்ளுபடி செய்து கொடுப்பதாக நிலச்சுவான்தார்கள் சொல்கிறார்கள். அதனால், அரசாங்கம் எப்படியாவது விவசாயிகளுக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்பதாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதுபோல, நிலத்திலிருந்து உழுபவனை வெளியேற்றக் கூடாது என்று நாம் சட்டம் நிறைவேற்றியிருக்கிறோம். அதில் பல தவறுகள் இருக்கின்றன. குத்தகைதாரர்கள் உள் குத்தகைக்கு விட்டிருந்தால், உள் குத்தகைதாரர்களை குத்தகைதாரர்கள் என்று கருதுவதா இல்லையா என்பது பற்றி இந்தச் சபையில் விவாதம் எழும்பியிருக்கிறது. இடைக் குத்தகைதாரர்களை ஒழிக்கவேண்டுமென்று சட்டம் வந்தாலும் கூட அதிகாரிகள் ஒருவிதமான விளக்கம் சொல்கிறார்கள். அவர்களைச் சந்தித்துக் கேட்டபோது உள் குத்தகை எடுத்தவர்கள் மூலக் குத்தகைதாரர்களை மோசம் செய்துவிட்டால் நிலக்காரர்களும் சரி, உழுபவனும் சரி பாதிக்கப்படக் கூடும். ஆகவே, இரண்டு பேர்களையும் குத்தகைதாரர்களாகத்தான் கருதவேண்டியிருக்கிறது என்று சொன்னார்கள்.



அதுபோல தர்ம சொத்துக்கள், மட சொத்துக்கள் சம்பந்தமாக வார்சு விவகாரம் காரணமாக கோர்ட்டில் வழக்கிருந்தால்—இரண்டு பாத்தியக்காரர்களும் தலையிடாதவகையில் கோர்ட் ரிசீவரை நியமனம் செய்கிறது. வார்சுதாரர்களைப் பற்றித் தகராறு ஏற்பட்டிருக்கலாம். ஆனால் ஆண்டுதோறும் அந்த நிலத்தில் பயிரிட்டு வந்தவர்களைப் பற்றி தகராறு ஒன்றும் இல்லை. உழுபவர்களை மாற்ற வேண்டிய அவசியம் இல்லை. ஆனால் இன்றையதினம் கோர்ட்டினால் நியமிக்கப்படுகிற ரிசீவர்கள் வருடாவருடம் ஏலம் விடவேண்டுமென்று சொல்லி இன்றையதினம் பலவிடங்களிலும் பரம்பரையாக நாற்பது ஐம்பது வருடங்களாக நிலத்தில் உழுதுகொண்டிருந்தவர்களை எல்லாம் மாற்றி வருகிறார்கள். உணவு அமைச்சர் அவர்கள் இப்போது இந்த மன்றத்தில் இருந்திருப்பார் என்றால் நான் சொல்கிற இந்த விஷயம் அவருக்கு நன்றாகத் தெரியும். பலமுறை நானே இதைப்பற்றி அவரிடம் சொல்லியிருக்கிறேன். தம்மால் ஒன்றும் செய்ய முடியாது இருப்பதற்கு அஞ்சித்தானோ என்னவோ நான் இதைப் பற்றிக் குறிப்பிடுவேன் என்றே சபையில் இருந்து வெளியில் போய் விட்டார் போலிருக்கிறது. உங்கள் மூலமாக நான் இந்தச் சபைக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். என் தொகுதியில் மணக்கால் கிராமத்தில் முப்பது ஆண்டுகளாக ஏழை ஹரிஜனங்கள்—கிட்டத்தட்ட 400 விவசாயக் குடும்பங்கள் ரங்கூன் ரெட்டியாருக்கு சொந்தமான 300 ஏக்கரா நிலத்தைச் சாகுபடி செய்து வந்தார்கள். பரம்பரையாக அந்த நிலங்களை உழுது பயிரிட்டு வந்தவர்கள் அவர்கள். ஆனால் ரங்கூன் ரெட்டியார் வம்சத்தில் பரம்பரை பாத்யதை பற்றி வழக்கு ஏற்பட்டு கோர்ட்டுக்குப் போய் இருக்கிறது. கோர்ட்டால் ரிசீவர் நியமனம் செய்யப்பட்டிருக்கிறார். நாங்கள் ரிசீவரைச் சந்தித்து '' நீங்கள் வரும்படியை வசூல் செய்துகொள்ளலாம், ஆனால், பரம்பரையாக விவசாயம் செய்து வருகிறவர்களை மாற்றாதீர்கள் '' என்று கேட்டுக்கொண்டோம். அவர்களும் ஊருக்கு வந்து மொத்தமாக ஏலம் எடுத்து—மொத்தமாக ஏலம் எடுத்தவர் — முன்பு உழுதுகொண்டிருந்தவர்களுக்கே உள் குத்தகை விடும்படியாகச் செய்தார்கள். கொடுக்கல் வாங்கலுக்கு ரசீதும் இருக்கிறது. ஆனால், சமீபத்தில் டிரஸ்ட் ப்ராபர்டி ஆக்ட் பிரகாரம் ஹைகோர்ட்டில் ஒரு தீர்ப்பு கொடுத்திருக்கிறார்கள். ஜட்ஜ் ராமச்சந்திர ஐயர் கொடுத்த தீர்ப்பு என்று நினைக்கிறேன். அதன்படி ஆண்டுதோறும் அதிகத் தொகைக்கு ஏலம் எடுப்பவர்களுக்கே விடவேண்டும் என்று — பரம்பரை பாத்யதையை மறுத்துவிட்டார்கள். இதனால் 400 குடும்பங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. இதனால் பழைய குத்தகைதாரர்களுக்கும், புதியவர்களுக்கும் இடையே கலகம் ஏற்பட்டு வழக்கு கோர்ட்டுக்கு போக இருந்து ஒரு வகையில் மத்தியஸ்தம் செய்யப்பட்டிருக்கிறது. இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால், நமது ரெவின்யூ அமைச்சர் அவர்கள் நிலச் சீர்திருத்தச் சட்டம் ஒன்று வரப்போவதாகச் சொன்னார்கள். அப்படி வருவது என்றால் அதில் இத்தகைய நிலைமையிலும் பரம்பரையாக உழுது பயிரிட்டு வருகிறவர்களுக்கு பாதுகாப்பு அளிக்க வகை செய்யவேண்டும். ரிசீவர் மாறலாம். ஆனால், உழுபவர்கள் மாறக் கூடாது. இதற்கு ஓர் வகை செய்யப்பட வேண்டும்.

அதுபோலவே, விவசாயத்திற்காக நாம் பல கோடி ரூபாய்களைச் செலவிட்டு வருகிறோம். பாராட்டத்தக்கதுதான். இருந்தாலும் இதில் சீர்திருத்தம் செய்யப்பட வேண்டியதாக இருக்கிறது. உண்மையில் இன்றையதினம் கொடுக்கப்படுகிற கடன், அதை வாங்குகிற முறை இவற்றைப் பார்த்தால் வேதனைப்பட வேண்டியதாகவே இருக்கிறது. என் பகுதியில் ஒரு விவசாயி வண்டி, மாடு வாங்க அவனுக்கு ரூ. 1,000 லோன் கொடுக்கிறார்கள். இந்தக் கடனை வருடா வருடம் மார்ச் 31 ஆம் தேதிக்குள் 10 தவணையில் கொடுக்க வேண்டும். பத்துத் தவணையில் அசலுக்காக 100 ரூபாய், வட்டிக்கு 33 ரூபாய் ஆக 133 ரூபாய் கட்ட வேண்டும். இதைப்போல பத்து ஆண்டுகள் கட்ட வேண்டும். உண்மையில் முறைப்படி வட்டி வாங்க வேண்டுமென்றால் முதல் வருஷம் ஆயிரத்துக்கு வட்டி வாங்கலாம். அடுத்த ஆண்டு 900 ரூபாய்க்குத்தான் வட்டி வாங்க வேண்டும். அதற்கடுத்த ஆண்டு ரூ. 800 க்குத்தான் வட்டி வாங்க வேண்டும். இப்படி ஆண்டுதோறும் 100 ரூபாயைக்

குறைத்துக்கொண்டே வந்தால் — 1961-இல் ஒரு விவசாயி வண்டி மாடு வாங்க 1,000 ரூபாய் கடன் வாங்கியிருக்கிறான். அவனிடம் 1961 மார்ச்சில் 133 ரூபாயும், 1962 மார்ச்சில் 129·70 ரூபாயும், 1963 மார்ச்சில் 126·40 ரூபாயும், 1964 மார்ச்சில் 123·10 ரூபாயும், 1965 மார்ச்சில் 119·80 ரூபாயும், 1966 மார்ச்சில் 116·50 ரூபாயும், 1967 மார்ச்சில் 113·20 ரூபாயும், 1968 மர்ச்சில் 109·90 ரூபாயும், 1969 மார்ச்சில் 106·60 ரூபாயும், 1970 மார்ச்சில் 103·30 ரூபாயும்தான் வாங்க வேண்டும். ஆனால் அரசாங்கம் மார்வாடிகளையும் தோற்கடிக்கிற முறையில் ஆண்டுதோறும் 33 ரூபாய் வீதம் வட்டி வாங்குகிறது.

இப்படிக் கட்ட வேண்டிய தொகை குறைந்து கொண்டே வரவேண்டுமே தவிர, ஒரே ஃப்ளாட் ரேட்டாக இருக்கக்கூடாது. 1,000 ரூபாய்க்கு 330 ரூபாய் வரையில் வட்டி கொடுக்க வேண்டி யிருக்கிறது. இந்த 330 ரூபாயில் உண்மையாக, முறையாகக் கொடுக்க வேண்டிய வட்டி 181 ரூபாய் 50 காசு தான். ஆகவே, 148 ரூபாய் 50 காசு அதிகமாக வட்டி கொடுக்க வேண்டிய நிலைமை இருந்து வருகிறது. இந்த வட்டி விகிதாச் சாரத்தை சரியான முறையில் பார்த்து நிர்ணயிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போலவே விவசாயத்திற்காக வென்று நம்முடைய முதலமைச்சர் அவர்கள் 1966–67 ஆம் ஆண்டில் 250 டிராக்டர்கள் வழங்குவதற்கான நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும் என்று அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். நான் தங்கள் மூலமாக முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். இந்த 250 டிராக்டர்கள் போதவே போதாது. இதைவிட அதிகமாகத் தேவை என்றாலும்கூட, தற்காலிகமாவது ஒவ்வொரு பஞ்சாயத்து கூட்டு மன்றத்திற்கும் ஒரு டிராக்டர் வீதம் 374 டிராக்டர்கள் — மொத்தம் 374 பஞ்சாயத்துக் கூட்டு மன்றங்கள் இருக்கின்றன — கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். அவர்கள் சொல்லலாம், பஞ்சாயத்து கூட்டு மன்றங்களே வேண்டுமானால் வாங்கிக் கொள்ளலாம் என்று. ஆனால் அது போதாது. ஆகவே, 374 டிராக்டர்கள் வழங்குவதற்கு வழிவகை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், வானத்தை நம்பியே நாம் விவசாயம் செய்துகொண்டிருக்க முடியாது. அதனால், பூமிக்கடியில் இருக்கின்ற தண்ணீரைக் கொண்டு வருவதற்குப் பல திட்டங்கள் கொண்டு நிறைவேற்றப்படுவதற்கு இருந்தாலும் கூட, என்னுடைய பகுதியைப் பொறுத்த வரையில் மூன்று நான்கு பவர் டிரில்கள்தான், துளை போடும் கருவிகள் தான் இருக்கின்றன. அவற்றில் ஒன்றிரண்டு பழுதடைந்து விடுகின்றன. அவை போனால் திரும்பி வருவது கிடையாது. ஆகவே பவர் டிரில்கள் பஞ்சாயத்து யூனியனுக்கு ஒன்று என்ற முறையிலாவது வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதை வாங்குவதற்கு பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்து யூனியன் தலைவருக்கு அனுப்பி அவர் அங்கிருந்து அரசாங்கத்திற்கு அனுப்பவேண்டுமென்ற ஒரு திட்டம் இருக்கிறது. அந்தத் திட்டம் வரவேற்கத் தக்கது தான் என்றாலும் அதைப்பற்றி விவரமாக அடுத்த சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ளலாம் என்று நினைக்கிறேன். கனம் முதலமைச்சர் அவர்கள் இங்கே இருக்கின்ற உறுப்பினர்களுடைய ஒத்துழைப்பைக்கோரி அறிக்கையில் "இந்தத் திட்டங்கள் வெற்றியடையவேண்டுமானால், உள்ளூர் பற்றிய விவர அறிவும் ஆர்வ முயற்சியும் பெரிதும் தேவைப்படும். பஞ்சாயத்து யூனியன் மன்றங்களில், பதவி காரணமாக உறுப்பினர்களாக உள்ள இம் மன்ற உறுப்பினர்கள் அனைவரும் இந்தத் திட்டங்களை வகுப்பதிலும், பின்னர் அவற்றைச் செயல்படுத்துவதிலும் செவ்விய முறையில் அக்கறை காட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்" என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இப்பொழுது நான் இதை வரவேற்கிறேன். முன்பொருதடவை சட்டசபை உறுப்பினர்களுக்கு பஞ்சாயத்து கூட்டு மன்றங்களில் தங்களுடைய ஒத்துழைப்பைத் தருவதற்கு வாய்ப்பைக் கொடுக்கவேண்டுமென்று சொன்ன நேரத்தில் நம்முடைய முதலமைச்சர்



அவர்கள் குறிப்பிட்டார்கள்,—அவர்களுக்கு கவனம் இருக்குமென்று நினைக்கிறேன்—நீங்கள் போகவேண்டுமென்ற அவசியமில்லை, போனால் போகலாம் என்று.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அந்தஸ்து, அதிகாரம் வேறு விஷயம், ஒத்துழைப்பு வேறு விஷயம்.

**திரு. அ. பெ. தர்மலிங்கம் :** மற்றவர்களைவிட உயர்ந்த அந்தஸ்து வேண்டுமென்று சொல்லவில்லை. சட்டசபை உறுப்பினர்களுக்குரிய அந்தஸ்து வழங்கவேண்டுமென்றுதான் குறிப்பிடுகிறேன். பஞ்சாயத்துக் கூட்டு மன்றத் தலைவர்கள், "எம்.எல்.ஏ.க்களிடம் என்ன அதிகாரம் இருக்கிறது, எதைச் சாதிக்கமுடியும், அமைச்சர் அவர்களிடத்திலே போய்ச் சொல்லமுடியும் அவ்வளவுதான், ஆனால் உண்மையான அதிகாரம் எங்கள் கையில்தான் இருக்கிறது. உத்தரவு போடும் அதிகாரம் எங்களுக்குத் தான் இருக்கிறது" என்று சொல்லுகிறார்கள். இப்படி அவர்கள் நினைக்கிறபொழுது நம்முடைய நிலைமை எப்படியிருக்கிறது என்பதை யோசித்துப் பார்க்கவேண்டும்.

அடுத்ததாக, இந்தக் கூட்டுறவு இயக்கத்தைப்பற்றிச் சொல்லவேண்டுமென்றால், இந்தியாவிலேயே ராஜஸ்தானுக்கு அடுத்தபடியாக தமிழ் நாட்டில்தான் நல்லமுறையில் கூட்டுறவு இயக்கம் செயலாற்றுகிறது என்று பாராட்டப்பட்டாலும் கூட இப்பொழுது நடக்கின்ற கூட்டுறவு மோசடிகளைப் பார்க்கும்பொழுது இந்த இயக்கம் கூட்டுக் கொள்ளைக்காரர்கள் நிறைந்த இயக்கமாக இருக்குமோ என்று எண்ணவேண்டியிருக்கிறது.

**கனம் சபாநாயகர் :** கொள்ளை அடிக்கிற ஆட்கள் என்று சொல்லி இதுவரை 10, 15 தடவைகள் சொல்லியாகிவிட்டது. திரும்பத் திரும்பச் சொல்லி அது "ஸ்டேலாக" ஆகிவிட்டது.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கூட்டுறவு ஸ்தாபனங்களின் மேல் கனம் அங்கத்தினர்களுக்கு அதிருப்தி இருக்கலாம். நான்கூட அதிருப்தி தெரிவித்ததாகச் சொன்னார்கள். நான் மறுக்கவில்லை. ஆனால் ஒரு இயக்கத்தைக் கொள்ளைக்கூட்டம் என்று சொல்வது முறையல்ல. அந்த ஸ்தாபனங்களின்மேல் பலமான கருத்துக்கள், அதிருப்தி இருக்கலாம், அதற்காக இந்த இயக்கத்திற்குப் பாதகம் விளைவிக்கக் கூடிய முறையில் சொற்களை வழங்கவேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**கனம் சபாநாயகர் :** அதற்குள்ளே நாம் எல்லாம் அங்கே போய் உட்கார்ந்துகொண்டால் சரியாகிவிடும். நாம் கொள்ளையடிக்க விடமாட்டோமல்லவா ?

**திரு. அ. பெ. தர்மலிங்கம் :** தமிழ்நாட்டில் கூட்டுறவு இயக்கம் நல்லமுறையில் நடந்து வந்தது. கூட்டுறவுத் துறை அமைச்சராக இருக்கிறவர்கள் முன்பு கோவை கூட்டுறவு மத்திய பாங்கின் தலைவராக இருந்து பணியாற்றியவர்கள். அவர்கள் அமைச்சராக வந்ததற்குப் பிறகு அவர்கள் கருணை காட்டுவார் என்ற காரணத்திற்காகவோ என்னவோ இப்பொழுது அதிகமாக ஊழல்கள் ஏற்பட ஆரம்பிக்கின்றன. முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதுபோல் நல்ல இயக்கம்தான். நானும் மத்தியக் கூட்டுறவு பாங்கில் அங்கத்தினராக இருக்கிறேன். அங்கே பரம்பரையாக நடந்துவந்த காரியங்களைக் கவனிக்கின்றபொழுது, இரண்டு லட்சம் ரூபாய் கையாடல் கண்டுபிடிக்கப்பட்டு வழக்குத் தொடரப்பட்டு இருக்கிறது. வழக்குத் தொடரப்பட்டவுடனே, அங்கேயிருந்து இங்கே யாரோ வந்து எதிர்க் கட்சியினர் சொல்லிவிட்டார்கள், வழக்கை நிறுத்திவையுங்கள் என்று சொல்லி நிறுத்தி வைத்துவிட்டார்கள்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** வழக்கு கோர்ட்டிலே நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள், அதற்கு அரசாங்கம் என்ன செய்யமுடியும்?

[3rd March 1966

**திரு. அ. பெ. தர்மலிங்கம்:** : அதைக் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமென்று கருதினால் சொல்லிவிடுகிறேன்.

**கனம் சபாநாயகர்** : ஒரு கேஸ் ஸப்ஜூடிஸ் ஆக இருந்தால் அதைப் பற்றிச் சொல்லக் கூடாது.

**திரு. அ. பெ. தர்மலிங்கம் :** கனம் சபாநாயகர் அவர்கள் பலமுறை இதைத் திருப்பித் திருப்பிச் சொல்லியாகிவிட்டது என்று சொன்னார்கள். அடிக்க அடிக்க அம்மியும் நகரும் என்பது மாதிரி, இதைத் திருப்பித் திருப்பிச் சொல்வதால் கவனிப்பார்கள் என்பதற்காகத்தான் சொல்கிறேன். வெறும் ரெப்படிஷன் அல்ல. சென்ற கூட்டத்திலே நம்முடைய அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிற நேரத்தில் புதுக்கோட்டைக்கருகில் இருக்கிற பரம்பூர் கூட்டுறவு ஸ்தாபனம் இன்னும் கலைக்கப்படவில்லை, ஒரு கோவாப்ரேடிவ் சப்-ரிஜிஸ்திரார் போட்டு இன்வெஸ்டிகேஷன் செய்துகொண்டிருக்கிறோம் என்று குறிப்பிட்டார்கள். இப்பொழுது நான் அமைச்சர் அவர்களுக்குத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன். பரம்பூர் கூட்டுறவு சங்கத்தில் கையாடல் சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கப்பட்டு இப்பொழுது அது கலைக்கப்பட்டுவிட்டது. அந்த சங்கத்தின் தலைவர் திரு. நல்லையா சுப்புராம் என்பவர், அமைச்சர் திரு. ராமையா அவர்களின் சொந்தக்காரர். காரியதரிசி திரு. சங்கர நாராயண சாஸ்திரி, கிளார்க் ரத்தினம் என்பவர் அவருடைய அண்ணா, திரு. அண்ணாமலை, பரம்பூர் கர்ணமாக இருந்து வருகிறார். . .

**கனம் சபாநாயகர் :** சொந்தக்காரர்கள், சொந்தக்காரர்கள் என்று சொல்கிறார்கள். சபையிலேயே, இங்கேயும் சொந்தக்காரர்கள் இருக்கிறார்கள். அங்கேயும் சொந்தக்காரர்கள் இருக்கிறார்கள்.

**திரு. அ. பெ. தர்மலிங்கம் :** எப்படிக் கெட்டுப்போகிறது என்பதற்காகத்தான் சொன்னேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அமைச்சருடைய சொந்தக்காரர் என்று சொல்லிவிட்டால் மண்ணைத் தூத்துவது மாதிரி என்று நினைத்துக்கொள்கிறார்கள். எப்படிச் சொந்தக்காரர் என்று சொல்வது இல்லை. சொந்தக்காரர் என்ற காரணத்தினால் அமைச்சர் தலையிட்டார் என்ற தகவல் இருந்தால் தெரிவிக்கலாம். சொந்தக்காரர் என்று மட்டும் சொன்னால் தொக்கி நிற்கிறது. உண்மையிலேயே அமைச்சருக்கு அதில் சம்பந்தம் இல்லாமல் இருக்கலாம்.

**திரு. அ. பெ. தர்மலிங்கம் :** சொந்தம் இல்லாதவர்கள்கூட "நாங்கள் மந்திரிக்குச் சொந்தம், சொந்தம்" என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

**கனம் சபாநாயகர் :** அவர் மந்திரிக்குச் சொந்தக்காரராக இருந்தால் அதற்கு மந்திரி என்ன பண்ண முடியும் ?

**திரு. அ. பெ. தர்மலிங்கம் :** அந்தச் சங்கம் கலைக்கப்பட்ட பிறகும் கூட அது கூட்டுறவு அமைச்சர் அவர்களுக்குத் தெரியவில்லை என்றால் அதற்குக் காரணம், அமைச்சருக்குச் சொந்தக்காரர் என்ற காரணத்தால் தானோ என்று . . . .

**கனம் சபாநாயகர் :** அதற்கு என்ன பண்ண முடியும் ? மந்திரிக்குச் சொந்தக்காரராக இருக்கலாம், சபாநாயருக்குச் சொந்தக்காரராக இருக்கலாம். யாருக்கும் சொந்தக்காரராக இருக்கலாம். யாராவது நியாயமற்ற முறையில் தலையிட்டார்களா என்பதுதான் பிரச்னை.

**திரு. அ. பெ. தர்மலிங்கம் :** காக்காய் உட்காரப் பனம் பழம் விழுந்த கதையாகக் கூட இருக்கலாம். மற்றவர்கள் சந்தேகப்படக்கூடிய நிலை ஏற்படுகிறது.



3rd March 1966] [திரு. அ. பெ. தர்மலிங்கம்]

என்னுடைய தொகுதியில் லேபர் காண்டிராக்ட் ஊழலைப்பொறுத்து கூட்டுறவுச் சங்கக் காரியதரிசியும் மற்றவர்களும் கைது செய்யப்பட்டு, பிறகு அமைச்சரைப் பார்த்த காரணத்தினால் அவர்கள் இப்போது வெளியிலே இருக்கிறார்கள். அவர்கள் வெளியே இருக்கக் கூடாது என்று சொல்லவில்லை. ஆனால், இன்னும் கேஸ் முடியாமலே இருக்கிறது. பழைய ஃபைல்களைப் புரட்டிப் பார்க்கவேண்டும் என்று கூறிக்கொண்டே இருக்கிறார்கள். இதனால் அவர்கள் தப்பித்துக் கொள்ள வழிவகைகள் ஏற்படுகின்றன. நிச்சயமாக, அந்த "பை-லாக்களைத்" திருத்த வேண்டும். அந்த சொஸைட்டியில் நடந்துள்ள கையாடல் 58,000 ரூபாய் ஆகும்.

மணப்பாறையில் ஒரு கூட்டுறவுச் சங்கத்தில் இரண்டு லட்சம் ரூபாய் மோசடி செய்யப்பட்டது. அதில் பொறுப்புள்ளவர் கைது செய்யப்பட்டு ஜெயிலுக்குப் போய்விட்டு வந்து விட்டார். ஆனால் அந்தப் பணம் அவரிடமிருந்து வசூலிக்கப்படவில்லை. அவரிடம் பணம் இல்லையா என்றால் இருக்கிறது. கூட்டுறவு இயக்கத்தில் எப்படி மோசடி நடக்கிறது என்பதைப் பற்றி என்னுடைய அறிவுக்கு எட்டிய வரையில் நான் பார்த்திருக்கிறேன். ஒருவன் 5,000 ரூபாய் கடன் வாங்கி விட்டான் என்று சொன்னால், கட்டமுடியவில்லை என்று சொல்லும் போது, வெளியாட்கள் கையெழுத்துப் போட்டு, ஐந்து பேருக்கு ஆயிரம் ரூபாய் வீதம் கடன் கொடுத்ததாகக் காட்டி விடுகிறார்கள். அடுத்த தடவை வரும்போது அவன் லோன் போட்டு அந்தப் பணத்தை அவர்களுக்குக் கொடுத்து விடுகிறான். ஏதோ ஓரளவு நியாயமானவர்கள் செய்கிற காரியம் இது. சிலர் சும்மா குப்பன், சுப்பன் என்று கையெழுத்துப் போட்டு பணத்தை வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். அதையெல்லாம் "வெரிஃபை" பண்ணுவதே இல்லை. கூட்டுறவு இயக்கக் கணக்கு சரியாக இருக்கிறதா என்று ஆடிட் பண்ணுகிறவர்கள் சும்மா "டிக்" அடித்துவிட்டுப் போகிறார்களே தவிர, சரியான முறையில் பரிசீலிப்பதில்லை. என்னுடைய தொகுதியில் ஒரு கூட்டுறவு சொஸைடியில் செத்து எட்டு வருஷம் ஆன ஒருவனுடைய கையெழுத்தைப் போட்டுப் பணம் வாங்கிக் கொண்டிருக்கக் கூடிய நிலைமை இருக்கிறது. தானியத்திற்காக கடன் கொடுக்கும் போது கோடவுனில் தானியத்தை வைத்துக் கணக்குக் காட்டவேண்டும். 3,000 மூட்டை வைத்தால் 15,000 ரூபாய் கடன் வாங்கலாம். ஆனால் ஆறு மாதம் கழித்துப் பார்த்தால் அந்த மூட்டைகள் பின்புற வழியாக எப்படியோ வெளியே போய்விடுகிறது. வெளியே பார்த்தால் சீல் போடப்பட்டிருக்கும். நாகலாபுரம் சொஸைடியில் இதுமாதிரி நடந்து அவர்கள் பதவியில் இருந்து விலக்கப்பட்டிருக்கிறார்கள்.

கடையநல்லூர் நல்லொழுக்கக் கமிட்டி கன்வீனர் கு. சிந்தாமணி அவர்கள் ஒரு அறிக்கையைச் சமர்ப்பித்திருக்கிறார்கள். அது எல்லா உறுப்பினர்களுக்கும் அனுப்பப்பட்டிருக்கிறது. அதிலே அவர்கள் கூட்டுறவு சொஸைட்டியில் உள்ள பல ஊழல்களைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். நேரம் இல்லாத காரணத்தால் அதிலே ஒன்றே ஒன்றை மட்டும் படித்துக் காட்டுகிறேன்.

"மார்க்கெட்டிங் சொஸைட்டிக்கு 3 லட்சம் ரூபாய் தானியக் கடன் வழங்கியதில் அமைச்சர் தவிர அவர் சகோதரர்கள், குழந்தைகள், பையன்கள் பேரில் நெல் வைத்ததாகக் கடன் எடுத்தது ரூ. 50,000 (ஐம்பதாயிரம்). அன்றைய நிலவரப்படியும் சட்டப்படிக்கும் ஐம்பது ஆயிரத்துக்கு ஈடு வைக்க வேண்டிய நெல் கோட்டை (1,470) மூட்டையாக, 2,940 மூட்டை நெல் ஈடு வைக்கவேண்டும். அப்படியானால் 2,940 மூட்டை நெல் விளைந்ததா ? விவசாயக் கணக்கில் விளைச்சல் காட்டப்பட்டிருக்கிறதா? இதிலும் அமைச்சர் அவர்களின் அதிகாரத்தைக் காட்டி விவசாய வருமான வரி விதிக்கப்படாமலிருக்கிறதா ?"

இது ஒன்றே ஒன்று. இவ்வாறு பல குற்றச்சாட்டுகள் இருக்கின்றன. இதை நான் அமைச்சர் அவர்களிடம் கொடுக்கிறேன். இது எல்லோருக்கும் வந்திருக்கும் என்று நினைக்கிறேன். அமைச்சர் அவர்கள் இந்தக் குற்றச்சாட்டுக்களைப் பற்றியெல்லாம் பரிசீலனை செய்து நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

*திருமதி பி. கே. ஆர். லட்சுமிகாந்தம்: கனம் சட்டமன்றத் தலைவர் அவர்களே, மதிப்புக்குரிய முதலமைச்சர் அவர்களால் சபையில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிற பட்ஜட்டைப் பற்றி ஒரு சில வார்த்தைகள் கூற ஆசைப்படுகிறேன். நேற்று கனம் அங்கத்தினர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் பேசும் போது "வெளிநாடுகளில் இருந்து உணவுப் பொருள் இறக்குமதி செய்யப்படுகிறது; இறக்குமதி செய்யப்படுகிற உணவுப் பொருளைப் பெற்றுக் கொள்ளும்போது கனம் முதலமைச்சர் அவர்கள் போட்டோ எடுத்துக் கொள்கிறார்கள்; இதெல்லாம் அவமானமில்லையா?" என்று பேசினார்கள். உண்மையிலேயே நமது நாட்டிலே உணவுப் பற்றாக்குறை இருக்கும்போது எங்கோ இருந்து உணவு தானியங்களைக் கொண்டுவந்து மக்களுக்குக் கொடுத்து அதனால் மக்கள் மடியாமல் இருக்கச் செய்கிற ஒரு முயற்சியைப் போற்றாமல், அவமானமாக இல்லையா என்று கேட்பது என்றால், இந்த நாட்டிலே உண்மையிலேயே மக்கள் உணவு இல்லாமல் மடிய வேண்டும்; பஞ்சம் வரவேண்டும் என்றுதான் விரும்புகிறார்களா எதிர்கட்சிக்காரர்கள் என்று நான் கேட்க ஆசைப் படுகிறேன்.

(திரு மா. தண்டாயுதபாணி தலைமை)

பஞ்சம் பஞ்சம் என்று பலர் சட்டசபையில் பேசுகிறார்கள். எங்கே பஞ்சம் இருக்கிறது என்று உண்மையிலேயே நினைத்துப் பார்க்கவேண்டும். எங்கள் வீட்டில் பெரியோர்கள் சொல்லக் கேட்டிருக்கிறேன். தாது வருஷப் பஞ்சம் என்று. அதற்குப் பிறகு இரண்டாவது யுத்தம் முடிந்த பிறகு வங்காளத்திலே பஞ்சத்தினால் ஆயிரக்கணக்கான பேர்கள் செத்து மடிந்தார்கள் என்பதை நானும் பத்திரிகை வாயிலாகப் படித்திருக் கிறேன். இப்போது அந்த மாதிரி எங்காவது பட்டினியால் சாவு ஏற் பட்டிருக்கிறதா? பஞ்சத்தினால் மக்கள் மடிகிறார்கள் என்று சொல்ல முடியுமா? இப்போது நாட்டிலே பற்றாக்குறைதான் இருக்கிறதே தவிர, பஞ்சம் இல்லை. பற்றாக்குறை காரணமாக நாட்டிலே ஒருசில இடத்திலே உணவுப் பொருள் கிடைக்காமல் இருக்கலாம். ஆகவே, உணவுப் பொருளை முறையாக விநியோகிக்கவேண்டும். அந்த முறையில் நமது சர்க்கார் விநியோகப் பொறுப்பை நல்ல முறையில் செய்து வருகிறார்கள். எங்கு பற்றாக்குறை ஏற்பட்டாலும், அந்தப் பகுதிகளுக்கு எல்லாம் உணவுப் பொருளைக் கொண்டு சென்று உணவு அளித்துக் கொண்டிருப்பதைப் பார்க்கும்போது, உண்மையிலேயே இந்த சர்க்கார் இவ்வளவு திறமையாக நடவடிக்கை எடுத்துக் கொண்டு வருவதை நாம் பாராட்டாமல் இருக்க முடியாது.

இந்த சர்க்கார் ராஜினாமா செய்ய வேண்டுமென்று கனம் அங்கத்தினர் ஒருவர் கூறினார். தேர்தல் வருகிற வரைக்கும் உங்களுக்கு பொறுமை இல்லையா என்று கேட்க விரும்புகிறேன். இன்னும் ஒரு வருஷத்தில் தேர்தல் வர இருக்கிறது. அதற்குள்ளாகவே ராஜினாமா செய்யவேண்டு மென்று சொல்கிற அங்கத்தினர்களுடைய நிலைமை எப்படி இருக்கிறது என்று சொன்னால், தன்னந் தனியாக எலக்ஷனில் நின்று வெற்றி பெற்று நாற்காலியைப் பிடிக்க முடியாது என்பதை உணர்ந்து மற்றக் கட்சிகளோடு கூட்டுச் சேர்ந்து தேர்தலிலே நிற்க வேண்டுமென்பதற்காகப் பேசிக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட ஒரு கட்சி இந்த மந்திரி சபையை ராஜினாமா செய்யவேண்டும் என்று கூறுவதைப் பார்க்கும்போது சிரிப்பதா அல்லது பரிகசிப்பதா என்று தான் தோன்றுகிறது. 
10-00 a.m. ஆகவே, தன்னந்தனியாக நின்று வோட்டு பெற முடியாது என்று நினைக்கிறவர்கள் நாற்காலியைப் பிடிக்கவேண்டுமென்று ஆசைப்பட்டால் இம்மாதிரியான வார்த்தைகள் தான் அவர்கள் வாயிலிருந்து வெளி வரும் என்று நினைக்கிறேன்.

கொள்முதல் சம்பந்தமாக ஒன்றிரண்டு வார்த்தைகள் சொல்ல விரும்பு கிறேன். கொள்முதல் திட்டம் நல்ல திட்டம் தான். எங்கு நல்ல முறையில் விவசாயம் செய்யப்பட்டு இருக்கிறதோ, எங்கு அதிகமாக உணவு உற்பத்தியாகியிருக்கிறதோ அங்கெல்லாம் கொள்முதல் செய்தால் தான் நாம் பற்றாக்குறை உள்ள பிரதேசங்களுக்கு உணவு அளிக்க





முடியும். இருந்தாலும் இந்தக் கொள்முதல் திட்டம் செயல் முறையில் எப்படி நடக்கிறது, எப்படி அதிகாரிகள் செயல் முறையில் நடக்கிறார்கள் என்றால் ஒரே மாதிரியான நிலை இல்லாமல் அந்தந்த இடத்தில் ஆளுக்குத் தகுந்தபடி கொள்முதல் செய்வதைப் பார்த்தால் வருத்தமாயிருக்கிறது. கொள்முதல் என்று சொன்னால் ஒரு எக்கரில் இவ்வளவு விளைந்திருக்கிறது என்றால் அதில் இவ்வளவு விவசாயிகளுக்கு தேற வேண்டும், நிலச் சுவாந்தாருக்கு இவ்வளவு சேரவேண்டும், கூலி கொடுப்பதற்கு இவ்வளவு நெல் வேண்டியிருக்கும், பின்னால் விதைக்காக இவ்வளவு நெல் வேண்டியிருக்கும் என்பதையெல்லாம் கணக்குப்போட்டு அதற்கு அதற்கு என்று ஒதுக்கி வைத்துவிட்டு கொள்முதல் செய்வதுதான் ஒரு முறை என்று நான் கருதுகிறேன். இந்த ஆண்டு மழை பொய்த்து விட்டது. மதுரை ஜில்லாவில் பல பகுதிகளில் சரியான விளைச்சல் இல்லாமல் இருக்கிறது. அந்தமாதிரியான பகுதிகளில் எல்லாம் சென்று ஒரு எக்கருக்கு இவ்வளவு விளைந்திருக்கவேண்டும், அந்த அளவிற்கு லெவி கொடுக்கவேண்டுமென்று வற்புறுத்தி கட்டாயப்படுத்தி அங்கு விளைந்துள்ள நெல்லையெல்லாம் கொள்முதல் செய்வது என்றால் அது விவசாயிகளுக்கு ஊக்கம் அளிக்கக்கூடியதாக இருக்காது. அடுத்த ஆண்டு அவர்கள் ஊக்கமான முறையில் விவசாயம் செய்வதற்கு ஊக்கம் மிக குன்றிப் போய்விடும் என்று இந்த இடத்தில் எடுத்துக்கூற விரும்புகிறேன். ஆகவே ஒரு சீரான முறையை வகுத்து, இந்தளவு உற்பத்தியாகிற இடத்தில் விளைவதை அனுசரித்து இவ்வளவுதான் லெவி கொடுக்கவேண்டும் என்ற ஒரு முறையை வகுக்க உத்தரவு இடவேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன். மதுரையில் ஒரு சம்பவம் நடந்ததைப்பற்றி எடுத்துக் கூற விரும்புகிறேன். நான்கு எக்கர் நிலமுள்ள ஒரு நிலச்சுவாந்தாருக்கு 55 மூட்டைகள் விளைந்திருந்தது. அந்த இடத்திற்குச் சென்று லெவி அளக்க வேண்டுமென்று அதிகாரிகள் கேட்டனர். நாளைக்கு லெவி அளக்கிறேன் என்று அவர் சொன்னார். அப்படி அவர்கள் சொன்னதை விட்டு விட்டு அன்று இரவே 55 மூட்டைகளை லாரியில் எடுத்துக்கொண்டு சென்றுவிட்டார்கள். லெவி முறைப்படி அவர்கள் எவ்வளவு கொடுக்க வேண்டுமோ அதை அனுசரித்துத்தான் எடுக்க வேண்டுமே தவிர, விளைந்த மூட்டைகளை எல்லாம் எடுத்துக்கொண்டு செல்வது நீதியாகுமா, அல்லது தர்மமாகுமா என்று கேட்க விரும்பு கிறேன். அதைப் பற்றிக் கலெக்டர் அவர்களிடம் புகார் செய்யப்பட்டது. பல நாட்கள் அது கவனிக்கப்படாமல் இருந்தது. நான் நேரில் சென்று சொன்ன பிறகு அதைக் கவனித்து 20 மூட்டைகள்தான் திருப்பிக் கொடுக்கப்பட்டன. நான்கு எக்கரில் 35 மூட்டைகள் லெவிக்காக எடுத்துக் கொண்டார்கள் என்று தெரிவித்துகொள்கிறேன். இம்மாதிரி தவறு கள் எல்லாம் கையாளப்படுவது நிறுத்தப்பட வேண்டும்.

அடுத்தபடியாக, சாப்பாட்டுக்கு நெல் கொண்டுவருவது ஒரு பெரிய பிரச்னையாக இருக்கிறது மதுரை நகரில். மதுரை நகரில் உள்ளவர்கள் பலர் நிலம் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். குத்தகைக்கு அவர்கள் நிலத்தை விவசாயத்திற்கு விட்டுவிடுகிறார்கள். அவர்களுக்கு வருகிற மூட்டையின் எண்ணிக்கை ஒரு பெரிய ஆளுக்கு ஆண்டு ஒன்றுக்கு 54 படி கொண்ட இரண்டு மூட்டைகள்தான் கொண்டுவரலாம் என்று அதிகாரி களால் வற்புறுத்தப்படுகிறது. அந்தக் கணக்குப்படிப் பார்த்தால் 7 அவுன்ஸ் கணக்குத்தான் வருகிறதென்று நினைக்கிறேன். ஆகவே ஆண்டு ஒன்றுக்கு 54 படி கொண்ட மூன்று மூட்டைகள் சாப்பாட்டிற்காக கொண்டுவர அனுமதி கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கார்டில் கொடுக்கப்பட்டிருப்பது போன்று ஒரு ஆளுக்கு இரண்டு மூட்டை கள் தவிர மிச்சத்தை எல்லாம் சர்க்காருக்குக்காகக் கொடுக்க வேண்டு மென்று வற்புறுத்தப்படுகிறது. அவர்களுக்கு விதைக்கு நெல் வேண் டாமா, கூலி கொடுக்க நெல் வேண்டாமா, என்பதை எல்லாம் சிந்தித்துப் பார்த்து சாப்பாட்டிற்கு ஒரு ஆளுக்கு வருடத்திற்கு மூன்று மூட்டைகள் கொடுப்பதற்கும் வேண்டிய உத்தரவுகளைப் பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். குத்தகைக்காரர்கள்தான் லெவிக்கு நெல் அளக்க வேண்டுமென்று சர்க்காரால் இப்போது வற்புறுத்தப்பட்டு வருகிறது. அப்படியில்லாமல், விவசாயிகளும், குத்தகைக்காரர்களும் இரண்டுபேரும்

சேர்ந்து லெவி போடுவதற்கான ஏற்பாட்டைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நகரத்தில் உள்ளவர்களுக்கு சாப்பாட்டிற்கு நெல் கொண்டுவருவதில் குறைந்தது 12 அவுன்ஸ் கணக்கிலாவது அவர்கள் கொண்டுவருவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** நிலச் சொந்தக்காரர்கள் நகரங்களில் இருக்கிறவர்கள் கொண்டுவர 12 அவுன்ஸ் அல்ல அதற்கு மேலே அனுமதிக்கப்படுகிறது.

**திருமதி பி. கே. ஆர். லட்சுமிகாந்தம் :** மதுரை பற்றிச் சொல்கிறேன், 54 படி கொண்ட இரண்டு மூட்டைகள்தான் அனுமதிக்கப்படுகிறது என்பதை கனம் முதல் அமைச்சர் அவர்களிடம் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன். சென்ற கவர்னர் அவர்கள் உரையில் அதிகமாக நெல் கொடுப்பவர்களுக்கு போனஸ் கொடுக்கப்படும் என்று போடப்பட்டிருந்தது. ஆனால் லெவி போக, அவர்கள் கார்ட் அளவில் நெல் கொடுத்ததுபோக அதிகமாக நெல் லெவியாக எடுத்து கொள்ளப்பட்டவர்களுக்கு இதுவரை போனஸ் கொடுத்ததாகத் தெரியவில்லை. ஆகவே, நாம் போடுகிற திட்டத்தை நடைமுறையில் கொண்டுவருவதற்கான முயற்சியில் நாம் ஈடுபட வேண்டும்.

அடுத்து, தொழில் துறையைப் பார்க்கும்போது மூலப் பொருள்கள் பற்றுக்குறை இருக்கிறது. மின்சாரக் குறைவு இருக்கிறது, அன்னியச் செலாவணி கட்டுப்பாடு இருக்கிறது. இம்மாதிரியான நிலையில் தொழில்கள் எல்லாம் பாதிக்கப்பட்டு விடுமோ, தொழில்கள் மேன்மேலும் ஓங்காமல் இருந்துவிடுமோ என்ற அஞ்ச வேண்டிய ஒரு சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே, எந்த அளவிற்கு மூலப் பொருள்களை நாம் பெற முடியுமோ அந்த அளவிற்கு மூலப் பொருள்களை உற்பத்தி செய்வதற்குரிய பெரிய பெரிய தொழிற்சாலைகளை எல்லாம் நாம் இங்கு ஏற்படுத்தவேண்டும்.

கல்வி சம்பந்தமாகச் சொல்லும்போது, பிற்பட்ட வகுப்பினருக்கு நாம் ஸ்காலர்ஷிப் கொடுக்கிற முறை, இப்போது மத்திய அரசாங்க முறை மாறியிருக்கிறது. ஏற்கனவே மார்க் அடிப்படையில் கொடுக்கப்பட்டு வந்த ஸ்காலர்ஷிப் அடிக்கப்பட்டு எக்கனுமிக் பேஸிஸில் இப்போது கொடுக்கப்பட்டு வருகிறது. ஆகவே, அவர்கள் கொடுக்கக்கூடிய ஸ்காலர்ஷிப் இப்போது பலருக்குக் கிடைக்காமலிருக்கிறது. ஆகவே, எக்கனுமிக் பேஸிஸில் ஓரளவிற்குக் கொடுத்தாலும் கூட மார்க் பேஸிஸிலும் ஒரு 25 சத வீதமாவது கொடுக்க வேண்டுமென்று நம் சர்க்கார் மத்திய சர்க்காருக்கு சிபார்சு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். கல்லூரியில் படிக்கிறவர்களுக்கு, அவர்கள் பிற்பட்ட வகுப்பினராக இருந்தால் 1,500 ரூபாய்க்கு உட்பட்டு வருமானம் இருந்தால்தான் அவர்களுக்கு நம் சர்க்கார் ஸ்காலர்ஷிப் கிடைக்கிறது. இப்போது பணத்தின் மதிப்பு மிகவும் குறைந்திருக்கிற காரணத்தினால் 1,500 ரூபாய் என்பதை 2,500 ரூபாயாக உயர்த்த வேண்டும் என்றும் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக, முதியோர் பென்ஷன். முதியோர் பென்ஷன் திட்டம் சில ஆண்டுகளுக்கு முன் கொண்டுவரப்பட்டது. அப்போது அது பலருக்குக் கிடைக்க ஒரு வாய்ப்பு இருந்தது. ஆனால் இப்போது பலருக்கு அந்த வாய்ப்புக் கிடைப்பதில்லை. இந்தத் திட்டம் உண்மையிலே நடைமுறையில் இருக்கிறதா இல்லையா என்பது தெரியவில்லை. பல முதியோர்கள், யாருமே துணை இல்லாதவர்கள் பலர் இன்று முதியோர் பென்ஷனுக்காக அப்ளை செய்திருக்கிறார்கள். ஆனால், அவர்களுக்கு எந்த விதமான பதிலும் வரவில்லை. அவர்கள் எப்படி இருக்கிறார்கள், அவர்கள் நிலை என்ன என்பது பற்றி விசாரணை எதுவுமே நடக்காமல் இருக்கிறது. அதையும் கவனிக்க வேண்டுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மதுரை ஜில்லாவில் விவசாயத்திற்காக மார்ச் மாதத்திற்குள்ளாகவே 10,000 கிணறுகள் வெட்ட வேண்டுமென்று அவரச அவசரமாக கூட்டங்கள் எல்லாம் போட்டு அதற்கு வேண்டிய ஏற்பாடுகள் எல்லாம் செய்ய வேண்டுமென்று கலெக்டர் அவர்கள் கூறினார்கள். அதைக் கேட்டு கிணறு



வெட்ட வேண்டுமென்று எவ்வளவோ பேர்கள் அப்ளிகேஷன் போட்டிருந்தும் கூட இன்றுவரை அதற்குரிய பணம் வரவில்லை என்ற நிலை இருக்கிறதே தவிர, அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை இன்னும் எடுத்ததாகத் தெரியவில்லை என்று இந்த இடத்தில் எடுத்துக் கூற விரும்புகிறேன்.

அடுத்து, சேலம் உருக்காலையை ஏற்படுத்த வேண்டும் என்று பல ஆண்டுகளாக சொல்லிக்கொண்டேயிருக்கிறோம். மூன்றாவது திட்டத்தில் ஆரம்பித்துவிடுவார்கள் என்று எதிர்பார்த்தோம். இதுவரையிலும் ஆரம்பித்ததாகத் தெரியவில்லை. நான்காவது ஐந்தாண்டுத் திட்டத் தொடக்கத்திலாவது ஆரம்பித்தால்தான் நம்முடைய மாநிலத்தில் மற்ற சிறு சிறு தொழில்கள் ஏற்படுவதற்கு ஏதுவாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

ரயில்வே கிராஸிங் பாலங்களைக் கட்ட வேண்டும் என்று கேட்டுக்கொண்டிருந்தேன். அதாவது, மதுரையில், திருப்பரங்குன்றத்திற்குச் செல்லும் பாதையில் இரண்டு கிராஸிங்குகளில் பாலம் போட வேண்டும் என்று நான் பல ஆண்டுகளாகச் சொல்லிக்கொண்டு வருகிறேன். அது மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் போடப்படும் என்று எதிர்பார்த்தோம். அமைச்சர் அவர்கள் ஒரு கேள்விக்குப் பதில் அளிக்கும்போது, இந்தப் பாலங்களை நான்காவது திட்டத்தில் சேர்த்துவிடுவதாகச் சொன்னார்கள். ஆனால், இதுவரை சேர்க்கப்பட்டிருக்கிறதா இல்லையா என்பது தெரியவில்லை. ஆகவே, இந்த ரயில்வே கிராஸிங் மேல் பாலங்களை உடனடியாகப் போட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக மதிய உணவுத் திட்டத்தின்கீழ் தனியார் பள்ளி ஒன்றில் மதிய உணவுக்காக அரிசி பெர்மிட் வாங்குவதற்காக நானே கலெக்டர் ஆபீஸுக்கு பத்து தினங்கள் அலைந்தேன். அங்குள்ள அதிகாரிகள் ஏதாவது சால்ஜாப்பு சொல்லி பெர்மிட் கொடுப்பதைத் தடுக்க வேண்டும் என்று முயற்சி செய்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, இந்த நிலைமையை மாற்றி மதிய உணவுத் திட்டத்தின்கீழ் குழந்தைகளுக்காகக் பெர்மிட் கொடுப்பதை எல்லாம் தாமதமில்லாமல் கொடுப்பதற்கு வழிவகை செய்ய வேண்டும் என்றுகேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் ஒரே ஒரு விஷயத்தை மட்டும் கூறி முடித்துக்கொள்கிறேன். அதாவது குடும்பக் கட்டுப்பாடுத் திட்டத்தின்கீழ் ஆண்களுக்கு அறுவை சிகிச்சை அதிகமாக நடைபெறுகிறது. இரண்டு நிமிடத்திற்கு ஒரு அறுவை சிகிச்சை செய்துவிடுகிறோம் என்றெல்லாம் பெருமையாகச் சொல்லிக்கொள்கிறார்கள். ஆனால் இவ்விதம் அவசரம் அவசரமாக அறுவை சிகிச்சைகள் நடைபெறுவதால் பின்னால் பலருக்கு பல கோளாறுகள் ஏற்பட்டுக் கஷ்டப்பட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. முப்பது ரூபாய்க்கு ஆசைப்பட்டு அவசரம் அவசரமாக அறுவை சிகிச்சை செய்து கொள்ள முன்வருகிறவர்கள் பின்னால் 60, 70 ரூபாய் செலவு செய்து வைத்தியம் பார்த்துக்கொள்ளுகின்ற ஒரு சூழ்நிலை ஏற்படுகிறது. இந்த நிலைமை மதுரை ஜில்லாவில் அதிகமாக ஏற்பட்டிருக்கிறது. ஆகவே கனம் ஹெல்த் மினிஸ்டர் அவர்கள் கவனித்து இதை மாற்றி அறுவை சிகிச்சையில் சிறிது காலதாமதம் ஆனாலும், அவசரம் அவசரமாக அறுவை சிகிச்சை செய்கிற போக்கை மாற்ற வேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன். பொதுவாக இந்த பட்ஜெட் நல்ல முறையில் அமைந்திருக்கிறது. மக்களுக்குப் பயன்தரக்கூடிய முறையில் அமைந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. டி. பி. ஏழுமலை :** கனம் சபைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு நிதி நிலை அறிக்கையை வரவேற்று, என்னுடைய சில கருத்துக்களைச் சொல்ல பிரியப்படுகிறேன். சட்டசபையில் பேசும்போது, ஆளும் கட்சியில் இருக்கின்றவர்கள் தங்களுடைய தொகுதியில் இருக்கின்ற குறைகளை எடுத்துச் சொன்னால் எதிர்க் கட்சியில் இருக்கின்றவர்கள் ஏதோ இந்த சர்க்காரில் நிறைய குறைகள் இருப்பதாகவும், ஆளும் கட்சியி

லுள்ளவர்களே இதைப் பற்றிச் சொல்லுகிறார்கள் என்று இதில் பெரிய ஆர்வம் காட்டி ஆளும் கட்சியினரையும், குறிப்பாக சர்க்காரையும் எதிர்த்து பேசுகின்ற நிலையைப் பார்க்கிறோம். ஆளுகின்ற சர்க்கார் ஜனநாயக முறையில் ஆளுகிறார்கள். எதிர்க் கட்சியில் இருக்கின்ற அங்கத்தினர்கள் தங்கள் தொகுதியில் என்னென்ன குறைகள் இருக்கின்றன என்று கருதுகிறார்களோ அதே குறைகள் ஆளும் கட்சியில் இருக்கின்றவர்களின் தொகுதிகளிலும் இருக்கின்றன என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். அதிலும் எதிர்க் கட்சி அங்கத்தினர் தொகுதியில்தான் குறைகள் ஓரளவு குறைந்து இருக்கும் என்று எண்ணுகிறேன். ஏனென்று சொன்னால், அங்கு இருக்கின்ற அதிகாரிகளும் மற்றவர்களும் ஆளுகின்ற கட்சிக்கு எதிர்க் கட்சியில் இருக்கின்றவர்கள், எதை வேண்டுமானாலும் சட்டசபையில் சொல்வார்கள், நம்மைப் பற்றியும் பேசுவார்கள், ஆகவே அவர்களுக்கு கூடுமானவரை உதவி செய்ய வேண்டும் என்ற எண்ணத்துடன் குறைகளை தீர்த்துவருவதை நாம் பார்க்கின்றோம். குறிப்பாக சட்டசபையில் சொல்லுகின்றவைகளுக்கு பதில் சொல்லும்போதுகூட, நாங்கள் சொன்னவற்றிற்கெல்லாம் பதில் சொல்வதற்கு இடமில்லாமல் போய்விடுகிறது என்பதை கனம் அங்கத்தினர்கள் அறிவார்கள். ஆகவே, எதிர்க் கட்சியிலுள்ளவர்கள் ஆளும் கட்சியிலுள்ளவர்கள் குறைகளைச் சொல்லும்போது, அவர்கள் வேறு விதமாக எடுத்துக்கொள்ள வேண்டாம் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

குறிப்பாக சென்னை மாநிலத்தில் மதுவிலக்குச் சட்டம் நல்ல முறையில் நிறைவேறி வருகிறது. இந்தியாவில் பல இடங்களிலும் இதை மாற்றலாமா என்ற உத்தேசம் இருந்து வருகிறது. இருந்தாலும் சென்னை மாநிலத்தைப் பொறுத்தவரை மதுவிலக்குச் சட்டத்தின் காரணமாக, ஏழை மக்கள், அதிலும் குறிப்பாக அரிஜன மக்கள் ஓரளவு தங்கள் வாழ்க்கையில் மேம்பாடு அடைந்திருக்கிறார்கள் என்று சொன்னால் நான் ஏதோ அதிகப்படியாகச் சொல்லுகிறேன் என்று யாரும் எண்ண முடியாது. ஆகவே இந்தச் சட்டத்தை சென்னை மாநிலத்தில் இன்னும் சிறந்த முறையில் அமல் நடத்துவதற்கு மேலும் இதற்கு தகுந்த அதிகாரிகளைப் போட்டு நல்லமுறையில் நிறைவேற்றி ஏழை மக்களை பாதுகாக்கவேண்டும் என்று மிகப் பணிவோடு முதலமைச்சர் அவர்களையும் இந்த அமைச்சரவையையும் கேட்டுக் கொள்கிறேன். அது மட்டுமல்ல, எதிர்கட்சியில் இருக்கின்றவர்கள் சட்டத்தைப் பற்றி பேசும்போது, போடுகின்ற சட்டங்கள் எல்லாம் சரியான முறையில் நிறைவேற்றப்படுவதில்லை என்று சொல்லுகிறார்கள். நாம் எத்தனையோ சட்டங்களைப் போடுகிறோம். முக்கியமாக, பல சட்டங்களின் மூலமாக இன்றையதினம் ஏழை மக்களின் வாழ்வை முன்னேற்றியிருக்கிறோம். இன்னும் எத்தனையோ சட்டங்கள் சட்டசபையில் நிறைவேறிய உடனேயே பலன் கொடுத்துவிடும் என்று எதிர்பார்க்க முடியாது. நாட்டில் இருக்கின்ற மக்கள் எல்லாம் அதை நல்லமுறையில் புரிந்து கொண்டு ஒப்புக் கொள்ளவேண்டும். குறிப்பாக எதிர்க்கட்சியிலிருக்கின்றவர்கள் அதற்குப் போதுமான ஒத்துழைப்பு கொடுக்கவேண்டும். அப்போதுதான் சட்டங்கள் நல்ல முறையில் நடைபெற முடியும். அந்த முறையில் இன்றையதினம் ஜனநாயகத்தின் பேரால் நாட்டில் செயல்கள் நடைபெறவில்லை. எல்லோருக்கும் ஜனநாயகத்தில் உரிமை இருக்கிறது என்று சொல்லி பல காரியங்கள் சரியாக நடைபெறாமல் இருக்கின்றன. குறிப்பாக, மதுவிலக்குச் சட்ட அமலில் ஜனநாயகத்தைச் சேர்த்துக்கொண்டு பேசி, இந்தச் சட்டத்தை பலகீனப்படுத்தக் கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன். திருட்டினால் தண்டிக்க சட்டங்கள் இருக்கின்றன. இதனால் திருட்டுகள் நடக்காமல் இல்லை. ஒரு சில இடங்களில் திருட்டு நடைபெறத்தான் செய்கின்றன. அதனால் திருடுகின்றவர்களை தண்டிக்க சட்டம் வேண்டாம் என்று சொன்னால் எப்படியிருக்கும் ? அந்த முறையில்தான் இந்த மதுவிலக்குச் சட்டத்தையும் பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக, என்னுடைய தொகுதியைப் பொறுத்தமட்டில், வரி போட்டு, அதனால் கிடைக்கின்ற பணத்தைக்கொண்டு, பல நல்ல காரியங்களை செய்திருக்கின்றார்கள். இதை நான் பெருமையோடு சொல்லிக்கொள்





கிறேன். என்னுடைய தொகுதியில் எத்தனையோ காரியங்கள் செய்ய வேண்டும் என்று சொன்னதில் பாதி பங்குக்கு மேல் நிறைவேற்றியிருக்கிறார்கள். வரி போட்டு, அதனால் கிடைக்கின்ற பணத்தைக்கொண்டு, வரி கொடுக்காத ஏழை மக்கள் வசிக்கின்ற என் தொகுதியில் பல இடங்களில் பல காரியங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. அதனால் குறைகளே இல்லையா என்றால் இன்னும் சில குறைகள் இருந்து கொண்டுதான் இருக்கின்றன. அவற்றையெல்லாம் நான் சட்டசபையிலும் சொல்லி வந்திருக்கிறேன். மனுக்கள் மூலமாகவும் சர்க்காருக்குத் தெரிவித்திருக்கிறேன். என்னுடைய தொகுதியில் மீனவ மக்கள் அதிகமாக வசிக்கிறார்கள். அவர்களுக்கு அதிகமான சலுகைகளை நாம் கொடுத்திருக்கிறோம். கடன்கள் கொடுத்திருக்கிறோம். மற்றும் பல வசதிகளை எல்லாம் செய்து கொடுப்பதற்கு சர்க்கார் முயற்சித்துக் கொண்டிருக்கிறார்கள். இவ்வளவு முயற்சிகள் எடுத்தும், மீனவ மக்கள் தாங்கள் கடலில் சென்று பிடிக்கின்ற மீனை துரிதமாக மார்க்கெட்டில் சென்று விற்பனை செய்வதற்கு வசதியாக ரோடுகள் இல்லை. பஞ்சாயத்தை கேட்டால் எங்களிடம் ரோடு போடுவதற்கான பணம் இல்லை என்று சொல்கிறார்கள். பஞ்சாயத்து யூனியனைக் கேட்டால், இதில் பல பஞ்சாயத்துக்கள் சேர்ந்திருக்கின்றன, நாங்கள் எப்படி ரோடு போடுவது என்று கேட்கிறார்கள். இப்படிப்பட்ட இடங்களில் எல்லாம் பஞ்சாயத்து மூலமாக ரோடு போட முடியவில்லை என்றால், சர்க்காரே அந்த ரோடுகளை போட்டுக்கொடுத்தால், அதன் மூலமாக அந்த மீனவ மக்கள் தங்கள் வாழ்க்கையை மேம்படுத்த உதவியாக இருக்கும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். என்னுடைய தொகுதியில் திருப்பாலைவனத்திலிருந்து கள்ளூர் என்கிற கிராமத்திற்கு 22 மைல் இருக்கிறது. இந்தப் பாதையில் போக்குவரத்துக்கு எந்த விதமான வசதியும் இல்லாமல் இருக்கிறது. அதே போன்று மெதூரிலிருந்து தேவம்பட்டு வரையிலும் ஒரு ரோடு போட வேண்டும். இந்த இடங்களில் எல்லாம் ரோடு வசதி செய்து கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். பஸ் போக்குவரத்தைப் பொறுத்தவரையில் என்னுடைய தொகுதியில் வசதிகள் மிகவும் குறைந்து இருக்கின்றன. இதில் பஸ் விட வேண்டும் என்று சொன்னால், முன்னால் பஸ் விட்டுக் கொண்டிருக்கின்றவர்கள் ஹைகோர்ட்டுக்கு போய் ரிட் போட்டு விடுகின்றார்கள். ஆகவே, பஸ் வசதியில்லாத இடங்களில் எல்லாம் பஸ் போவதற்கு வசதியில்லாத நிலைமை இருக்கிறது. இந்த விஷயத்தில் சர்க்கார் தக்கதொரு நடவடிக்கை எடுக்கவேண்டும். ஏதோ ஒரு பகுதியிலே பஸ் ஓடிக் கொண்டிருந்தாலும், மற்ற பகுதிகளில் பஸ் போடவேண்டுமென்று சொன்னால், பஸ் ஓடிக்கொண்டிருக்கிறது என்று பஸ் முதலாளிகள் நிறுத்தி விடுகிற நிலை இல்லாமல் குறுகிய—அதாவது ஷார்ட் ரூட்டாக, பஸ் வசதி இல்லாத இடங்களில் பஸ் வசதி செய்து கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது நாட்டிலே ஜனநாயக முறையில் நடந்தாலும், எங்கு பார்த்தாலும் குடிசைகள் போடுவது திருவிழா மாதிரி நடக்கிறது. எங்காவது காலி மனை இருந்தால் 10 குடிசைகள் வந்து விடுகின்றன. அதெற்கென்று ஒரு ஏஜெண்ட் வந்து விடுகிறார். அந்த மாதிரி குடிசைகளைப்போட்டு விடுகிறார்கள். ஹைவேஸாக இருந்தாலும், வேறு எந்த இடமாக இருந்தாலும் காலியாக இருந்தால் உடனே குடிசைகளைப் போட்டு விடுகிறார்கள். குடிசைகளைப் போட்ட பிறகு அவர்களை வெளியேற்றவேண்டுமென்று சொன்னால் ஜனநாயக அமைப்பிலே மாற்றுக் கட்சி, எதிர்க் கட்சி நண்பர்கள் இருக்கவே இருக்கிறார்கள். 'பார்த்துக் கொள்ளுங்கள், உங்கள் சர்க்கார் இப்படி இருக்கிறது' என்று சொல்லுகிறார்கள். அவர்கள் வந்து ஆளும் கட்சி அங்கத்தினர்களிடம் வந்து கோபப்படுகிறார்கள். இந்த மாதிரி நிலைமை இருக்கிறது. ஆர்.டி.ஓ.-க்களுக்கு சர்க்காரிலே உத்தரவு போட வேண்டும். புறம்போக்கு நிலமாக இருந்தால் அந்த நிலங்களிலே குடிசைகளை திடீரென்று போட்டுக்கொள்ளாது, ஆர்.டி.ஓ-க்களுடைய உத்தரவைப் பெற்றுத் தான் போட்டுக்கொள்ளவேண்டுமென்றும் அப்படி உத்தரவைப் பெற்றுக்கொள்ளாமல் போட்டு விட்டால் உடனடியாக அந்த இடத்திலிருந்து அவர்களை அகற்ற ஆர்.டி.ஓ.-க்களுக்கு அதிகாரம்

உண்டு என்றும் உத்தரவு போடவேண்டும். இதன் மூலம் ஆளும் கட்சிக்கு விரோத சக்திகளை உண்டு பண்ணுகிறார்கள். குடிசைகள் போடுவது அவர்கள்தான், வேறு யாரும் கிடையாது.

ஹரிஜன மக்களைப் பொறுத்த வரையில் இந்த சர்க்கார் அவர்களுடைய நல்வாழ்வுக்காக பல நன்மைகளைச் செய்திருக்கிறார்கள். இருந்தாலும் ஒரு குறை அவர்களுக்கு இருந்துகொண்டே இருக்கின்றது. அதுதான் குடிமனை விஷயம். இதற்கு, சென்ற ஆண்டிலே நம் மாஜி மந்திரி திரு. பரமேஸ்வரன் தலைமையில் ஒரு கமிட்டி மாகாணம் பூராவும் சுற்றி, ஒரு அறிக்கையைச் சர்க்காருக்குக் கொடுத்திருக்கிறார்கள். அறிக்கை விஷயத்தில் பரிசீலனை எப்படி இருக்கும், மேற்கொண்டு எப்படி நடவடிக்கை எடுப்பார்கள் என்று யாருக்கும் அதிகமாகத் தெரியாமல் இருக்கிறது. உடனடியாக, ஹரிஜன மக்களுக்கு குடிமனை விஷயத்தில் துரிதமாக நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். நில ஆர்ஜித விஷயத்தில், ஹரிஜன மக்களுக்காக ஆர்ஜிதம் செய்யும் விஷயத்தில்தான் நீண்டு போகிறது. சாதாரணமாக ஒரு தொழிற்சாலை கட்டவேண்டுமென்றால், ஆர்ஜித வேலை 10 நாட்களில் முடிகின்றது. ஆனால் ஒருவனுக்கு ஒரு மனை நிலம் ஆர்ஜிதம் செய்ய வேண்டுமென்றால் 5 ஆண்டுகள் ஆகின்றன. இந்த விஷயத்தில், தொழிற்சாலைகளுக்கு எப்படி ஆர்ஜிதம் செய்கிறார்களோ எந்தச் சட்டத்தை உபயோகிக்கிறார்களோ அதே முறையில் ஹரிஜன மக்களுக்கும் குடிமனைகளை ஆர்ஜிதம் செய்து வழங்குவதற்கு நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

வரி, வரி என்று சொல்லுகிறார்கள். வரிகளைப் போட்டால் தான் ஏழை மக்களுடைய வறுமையைப் போக்க முடியும். வரியே வேண்டாமென்று சொல்ல முடியாது. வரியை தாங்கக் கூடியவர்களுக்கு, கொடுக்க கூடியவர்களுக்குப் போடவேண்டும். அப்படித்தான் கனம் முதல் அமைச்சர் அவர்களும் போட்டு வருகிறார்கள். வரியே இல்லாமல் இருக்க முடியாது. மாற்றுக் கட்சி நண்பர்கள் சொன்னாலும் கூட, எங்கங்கே வரி போட முடியுமோ போட்டு ஏழை மக்களுக்கு உதவி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பேசுவது சுலபம், நிறைவேற்றுவது கடினம். 1952-வது ஆண்டிலே நமது மதிப்பிற்குரிய ராஜாஜி அவர்கள் முதல் அமைச்சராக இருந்தார். பதவியில் இருப்பது கொல்லைப்புறமாக என்று திராவிட முன்னேற்றக் கழகத் தலைவரிலிருந்து சாதாரணத் தொண்டர் வரை சொன்னார்கள். கொல்லைப்புறம், கொல்லைப்புறம் என்று சொல்லுவார்கள். என்னைப் பார்த்தால் கூட, கொல்லைப்புறம் என்று சொல்லுவார்கள். இப்போது அவர்களைப் பார்த்தால் பூராவும் கொல்லைப்புறம். வருகிற தேர்தலில் கூட தலைவர்களெல்லாம் கொல்லைப்புறமாகப் போக நிச்சயித்திருப்பதாக ஒரு சிலர் சொல்லுகிறார்கள். கொல்லைப்புறமாகப்போவது குற்றம் என்று சொல்ல வில்லை. ஆகவே இதையெல்லாம் யோசனை செய்து பார்க்கவேண்டும். பேசும்போது யோசனை செய்து பேசவேண்டும். நாற்காலி பிடிக்கவேண்டுமென்று நினைக்கிறார்கள். இந்தத் தொந்தரவு பின்னால் வந்தால் எப்படிச் சமாளிப்பது என்று திட்டம் போட்டு பேசவேண்டும். மாற்றுக் கட்சியில் இருக்கிறவர்கள் நன்றாக ஆலோசனை செய்து பேசவேண்டும். ஏனென்றால் எனக்குக் கூட தொகுதியில் இருக்கிற குறைகளை ஆவேசமாகச் சொன்னால் தான் மக்களுக்கு ஆதரவாக இருக்கும் என்று நினைக்கும்போது, அவர்கள் அதையே நம் பக்கம் திருப்பி விடுகிறார்கள். ஆளும் கட்சியில் இருக்கிறவர்களே சொல்லுகிறார்கள் என்று சொல்லும்போது எனக்குக் கூட சொல்லலாமா, கூடாதா என்ற சந்தேகம் ஏற்படுகிறது. இதையெல்லாம் சிந்தித்துப் பார்த்து மக்கள் முன்னேற்றத்தைப் பார்த்துக்கொள்ளவேண்டுமென்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

விவசாய அபிவிருத்தியில் இந்த சர்க்கார் காரியங்களைச் செவ்வனே செய்து வருகின்றது. என் தொகுதியை எடுத்துக்கொண்டால் பெரிய அணைக்கட்டோ அல்லது மற்றதோ கிடையாது. பொன்னேரி சப்





தாலூக்கில் லட்சுமிபுரம் கிராமத்தில் ஒரு அணைக்கட்டு கட்டிக்கொண்டிருக்கிறார்கள். அதனால் 3,000 ஏக்கர் நிலத்திற்குப் தண்ணீர் பாயும்.— கொற்றலையாறு என்ற ஒரு ஆறு ஓடுகிறது. வல்லூறு அணை என்று ஒரு அணை கட்டி விவசாயிகளுக்குத் தண்ணீர் விட்டு வந்தார்கள். இப்போது அது சரியாக இல்லை. பக்கத்தில் இருக்கிற நாகபாளையம் கிராமத்தில் அணை கட்டவேண்டுமென்று திரு கக்கன்ஜி அவர்கள் மந்திரியாக இருந்த போது சொன்னார்கள். பரிசீலனை செய்தார்கள். பின்னால் எந்த வித நடவடிக்கையும் எடுத்ததாகத் தெரியவில்லை. நாகபாளையத்தில் அணை கட்டினால் 5,000 ஏக்கர் நிலத்திற்குப் பாய வசதி இருப்பதாக என்ஜினீயர்களும் மற்றவர்களும் சொல்லுகிறார்கள். ஆகவே, இது விஷயத்தில் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்ளுகிறேன்.

பஞ்சாயத்துக்களை எடுத்துக்கொண்டால் ஏழையாக இருக்கிற பஞ்சாயத்துக்களில் மக்களுக்கு எந்த வித நன்மையும் செய்ய முடியவில்லை. நான்கு நாட்களுக்கு முன் ஒரு பஞ்சாயத்துக் கூட்டத்திற்கு நானும், கலெக்டர் அவர்களும், திரு. திரவியமும், டைரக்டர் அவர்களும் சென்றோம். அங்கே ஒவ்வொரு வார்டுக்கும் ஒரு வாசகசாலை, ஒரு ஓவர்ஹெட் டாங்க், மன மகிழ் மன்றம் என்று ஏற்பாடு செய்து 2 லட்சம் ரூபாய்க்கு வேலை செய்திருக்கிறார்கள். வரி வருவாய் அதிகமாக வருகிறது. பல கம்பெனிகள் அங்கே இருக்கின்றன. அதன் மூலம் வரி வருகிறது. ஒரு சில பஞ்சாயத்தில் குடி தண்ணீர் வசதி கூட இல்லாத பஞ்சாயத்துக்கள் இருக்கின்றன. இதையெல்லாம் ஆராய்ந்து பார்க்கவேண்டும். வசதியுள்ள — பஞ்சாயத்து சரியாக வேலை செய்கிறது. வசதி இல்லாத பஞ்சாயத்து எந்த வேலையும் செய்வதே கிடையாது. கூட்டம் கூடுவதைத் தவிர வேறு வேலை இல்லாமல் இருக்கிறது. இதையெல்லாம் பார்த்து, பஞ்சாயத்துக்கு கடனாவது கொடுத்து, பஞ்சாயத்து யூனியனுக்கு உத்திரவாவது கொடுத்து, குடி தண்ணீர் வசதி, மற்ற வசதிகள் எல்லாம் செய்ய நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஏதோ பஞ்சாயத்து ராஜ்யம் நாட்டிலே நடக்கிறது. ஒன்றும் கவலைப் படவேண்டாம். பஞ்சாயத்தும், பஞ்சாயத்து யூனியனும் பார்த்துக்கொள்ளும் என்று சொன்னால், ரோடு வசதியோ, குடி தண்ணீர் வசதியோ மற்ற எந்த வசதியோ இல்லாமல் சில பஞ்சாயத்துக்கள் இருக்கின்றன. அவைகளையும் பாதுகாக்கவேண்டுமென்று சர்க்காரைப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் விவசாயிகளாக இருக்கிறவர்கள் எந்த வித லாபத்திலும் விவசாயம் செய்ய முடியாத நிலையில் இருக்கிறார்கள். அங்கே நெல் தான் போடலாம். அதைப் போட்டாலும் சரியான முறையில் பலன் கிடைக்காது இருக்கிறது. அந்தப் பகுதி விவசாயிகள் அங்கே ஒரு சர்க்கரை ஆலை போடவேண்டுமென்று நான்கு ஆண்டுகாளாக முயற்சித்து, பங்குதாரர்களைச் சேர்க்க முயற்சித்து வருகிறார்கள். ஆகவே, பொன்னேரிப் பகுதியில் ஒரு ஆலையை ஏற்படுத்தினால் விவசாயிகளுக்கு ஊக்கம் இருக்கும். அவர்கள் நன்றாக விவசாயத்தில் ஈடுபட்டு வேலை செய்வார்கள். ஆகவே, அதையும் சர்க்கார் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதியில் நெசவாளர்கள் நிறைய இருக்கிறார்கள். ஏழு கிராமங்கள் நெசவாளர்கள் அதிகமாக நிறைந்த இடங்களாக இருக்கின்றன. அங்கு கூட்டுறவு முறையில் ஒரு நூற்பு ஆலை ஆரம்பிக்க வேண்டும் என்று அதற்கான ஏற்பாடுகளைச் செய்துகொண்டிருக்கிறார்கள். அதற்கும் சர்க்கார் சலுகை கொடுத்து, பின்தங்கிய கிராமங்களாக இருக்கிற அந்தப் பகுதியிலே ஒரு நூற்பு ஆலை, குறிப்பாக ஆரணியிலே ஒரு நூற்பு ஆலை ஆரம்பித்தால் மிகவும் வசதியாக இருக்கும் என்பதை பணிவன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன். எனக்குப் பேசுவதற்குப் வாய்ப்புத் தந்த தலைவர் அவர்களுக்கு நன்றி செலுத்திக்கொண்டு, எனது உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம். 10–30 a.m.

**திரு. ம. கமலநாதன் :** மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, 1966-67-ம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையை நமது முதல் அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்திருக்கிறார்கள். இதை வரவேற்கும் முறையிலே அந்தப் பகுதியிலே இருக்கும் ஆளும் கட்சி உறுப்பினர்கள் வரவேற்றுவிட்டு, பிறகு எங்கள் பக்கம் வந்து, நாங்கள் பேசுவதைப் போல பேசக்கூடிய ஒரு சூழ்நிலை இந்த வரவு செலவு திட்ட விவாதத்தில் இருந்துகொண்டிருப்பதை நாம் பார்த்துக்கொண்டிருக்கிறோம். குறிப்பாக, இன்றையதினம் நாட்டில் உணவுப் பிரச்னையைப் பற்றி எல்லோரும் பேசுகிறார்கள். மத்திய சர்க்கார் அமைச்சரிலிருந்து சாதாரணமாக எல்லோருமே உணவுப் பஞ்சத்தைப் பற்றி சொல்லாத வார்த்தை இல்லை, பேசாத நாள் இல்லை என்ற நிலையிலே இந்த பஞ்சத்தைப் பற்றி நாம் பேசுகிறோம். உதாரணமாக நான் ஒன்று கூறுவேன். அரசாங்கத்தினால் நடத்தப்படும் விதைப் பண்ணைகள் 55 லாபகரமாகவும், 22 பண்ணைகள் நஷ்டத்திலும் நடைபெற்று வருகின்றன என்று கனம் முதல் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். கிராமத்திலே சொல்லுவார்கள் "ஐந்தும் மூன்றும் அடுக்காக இருந்தால், அறியாத பெண்ணும் அழகாக சமைப்பாள்" என்று. அந்த அளவுக்கு விதைப் பண்ணைகளில் தரமான விதைகளைக் கொடுத்து, உரம் கொடுத்து, விஞ்ஞான முறையிலே பயிரிட்டு, பயிர் பாதுகாப்பு கொடுத்து, இப்படி வசதிகளெல்லாம் செய்துகொடுத்தும் ஒரு விதைப் பண்ணை நஷ்டத்தில் வேலை செய்கிறது என்றால், விவசாயி மட்டும் தங்களுக்கு ஒன்று இருந்தால் ஒன்று இல்லை என்ற நிலையிலே எப்படி விவசாயம் செய்து அதிக லாபம் காண முடியும் என்ற நிலை இருக்கிறது என்பதை நாம் எண்ணிப் பார்க்கவேண்டும். விதைப் பண்ணைகள் நஷ்டத்தில் நடந்துகொண்டிருக்கின்றன என்பதை நாம் ஒத்துக்கொள்ளத்தான் வேண்டும். விவசாயிகள் எத்தனையோ இடையூறுகளுக்குப் பிறகு தங்களுடைய விளைச்சலைப் பார்க்கும்பொழுது நஷ்டம் ஏற்படுவது எல்லோருக்கும் தெரியும். இப்படிப்பட்ட நிலையிலே, ஒரு குவிண்டால் உற்பத்தி செய்வதற்கு ரூ. 60—65 செலவாகிற நிலையிலே, அதை ரூ. 40 அல்லது ரூ. 45-க்கு விற்றால் எப்படி உணவுப் பஞ்சம் தீரும் என்பதை நாம் எல்லோரும் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

நாம் பல திட்டங்களைப் போடுகிறோம். உதாரணத்திற்கு நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன். கூட்டுறவு முறையிலே முழுக் கடன் உதவித் திட்டம் என்ற ஒரு திட்டத்தை நாம் சில பஞ்சாயத்துக்களிலே புகுத்தியிருக்கிறோம். அந்தத் திட்டத்தினால் அரசாங்கத்திலிருந்து கிடைக்கும் தக்காவிக் கடன்கள், மற்றவகையான கடன்கள் பெற முடியாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. எல்லாவிதமான கடன்களையும் கூட்டுறவுத் துறை—மூலமாகத் தான் கொடுக்க வேண்டும் என்ற ஒரு நிலை இருப்பதால், விவசாயிகள் தங்களுக்குத் தேவையான கடன்களைப் பெற முடியாத சூழ்நிலை இருக்கிறது. சமீபத்தில் நில அடமான பாங்குகள் பழைய கடன்களைத் திருப்பித் தருவதற்காக கடன்கள் கொடுக்கக்கூடாது என்ற நிலையும் உருவாக்கப்பட்டிருக்கிறது. கனம் உறுப்பினர் அன்பில் தர்மலிங்கம் அவர்கள் பேசும்பொழுது குறிப்பிட்டார்கள். மார்வாடி வாங்குவதைவிட அதிகமான வட்டி வாங்குகிறார்கள் என்று சொன்னார்கள். நில அடமான பாங்குகள் தான் அத்தகைய கூட்டு வட்டி கணக்கிட்டு 10 ஆண்டுகளுக்கான வட்டியையும் சேர்த்து முதலிலேயே வசூலிக்கும் துர்ப்பாக்கிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இப்பொழுது நில அடமான பாங்குகளிலிருந்து எல்லோருமே பணத்தை வாங்க முடியாத ஒரு நிலை இருப்பதினால், விவசாயிகள் தாங்கள் பட்ட கடன்களை எந்த வகையிலும் தீர்க்க முடியாத ஒரு சூழ்நிலையில் அவதிப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, உணவுப் பஞ்சத்தைத் தீர்ப்பதற்கு நாம் வேறு வழி வகைகள் காணவேண்டும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

என்னைப் பொறுத்தவரையில் இப்பொழுது புதியதாக பிரிக்கப்பட்ட தர்மபுரி பிரதிநிதி என்ற முறையில் நான் பொதுவாக பேச விரும்புகிறேன். தர்மபுரி மாவட்டம் மிகவும் பின் தங்கிய மாவட்டம் என்பது எல்லோருக்கும் நன்கு தெரியும். பின்தங்கிய மாவட்டம் எப்படி புறக்கணிக்கப்பட்டிருக்கிறது என்பதை நாம் எண்ணிப் பார்க்கவேண்டும்.





ஹோசூர் வட்டம் மிகப்பெரிய வட்டம். நல்ல வளமான நிலம் உள்ள வட்டம். அந்த வட்டத்தைப் பயன்படுத்திக்கொண்டால் எந்த அளவுக்கு உற்பத்தி உயரும் என்பதற்காக ஒரு ஜெனரல் சர்வே செய்யவேண்டும். ஒரு ஏரி கட்டவேண்டும் என்றால் அங்கு இருக்கும் மக்கள் எந்த இடத்தில் ஏரி கட்டினால் எவ்வளவு ஆயக்கட்டுகளுக்கு தண்ணீர் கிடைக்கும் என்று சொன்ன பிறகுதான் அதிகாரிகள் சென்று பரிசீலனை செய்து, முடியுமா முடியாதா என்று பார்த்து ஒரு புதிய ஏரியை உருவாக்குகிற ஒரு சூழ்நிலை 4, 5 ஆண்டுகளுக்குப் பிறகு ஏற்படுகிறது. ஆகவே, நாம் ஸோர்ஸ்களை எப்படி பயன்படுத்திக்கொள்ளவேண்டும் என்பதற்கான ஒரு ஜெனரல் சர்வே நடத்தி, இன்னும் முடிந்த அளவுக்கு அதிகமான பாசன வசதிகள் செய்துகொடுப்பதற்கு நாம் பாடுபட ஹோசூர் ஒரு நல்ல இடமாக இருக்கும். ஹோசூர் தமிழ்நாட்டு ராகி களஞ்சியம் என்று பெயர் பெற்ற இடம். மிகப் பஞ்ச நிலை இருக்கிற சூழ் நிலை இருப்பதைப் பயன்படுத்திக்கொண்டு, அதை அபிவிருத்தி செய்வதற்கான ஒரு தனித் திட்டத்தைப் போட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

எந்த சமயத்தில் நாங்கள் பிரிந்தோமோ தெரியவில்லை. கிருஷ்ணகிரியைப் பற்றி கனம் முதல் அமைச்சர் அவர்கள் தனி கவனம் செலுத்துவதில்லை. சென்ற சப்ளிமென்டரி பட்ஜெட்டில் சுமார் ரூ. 7 லட்சம் தர்மபுரியில் கலெக்டரேட் கட்டுவதற்கும், ரூ. 81,000 கலெக்டர் பங்களா கட்டுவதற்கும, ரூ. 51,000 டி.எஸ்.பி. பங்களா கட்டுவதற்கும், அதே தொகை டி.எம்.ஓ. பங்களா கட்டுவதற்கும் ஒதுக்கப்பட்டது. ஆனால், கிருஷ்ணகிரியில் ஒரு சிறிய கட்டடம் கட்டுவதற்கு நில ஆர்ஜிதமோ அல்லது கட்டடம் கட்டுவதற்கான எஸ்டிமேட்டோ இது வரையில் தயாரிக்கப்படவில்லை—கிருஷ்ணகிரியில் ஜுடிஷியல் ஹெட் குவார்ட்டர்ஸ். அங்கே இருப்பது ஒரு டி. பி. அதையும் கோர்ட்டாக கன்வெட் செய்யப்போகிறார்கள். கலெக்டர் எங்கு சுற்றுப் பிரயாணம் செய்து வந்தாலும் கிருஷ்ணகிரியில் தங்கவேண்டும். மற்ற அதிகாரிகளும் கிருஷ்ணகிரியில் தான் தங்கவேண்டும். இந்த சூழ்நிலையில் டி. பி.யை கோர்ட்டாக கன்வர்ட் செய்தால், காம்பிங் ஆபீஸர்ஸ் எங்கு போய்த் தங்குவது ? அங்கு ஜட்ஜுக்குக்கூட இப்பொழுது பங்களா இல்லை. இப்பொழுது இருக்கிற சப்-ஜட்ஜ் வீடு இல்லாத ஒரு நிலையிலே மிகவும் அவதிப்பட்டுக்கொண்டு, கோர்ட்டை தர்மபுரிக்குக் கூட மாற்றிவிடலாமா என்ற அளவுக்கு சிபார்சு செய்கிற நிலையிலே கிருஷ்ணகிரி புறக்கணிக்கப்பட்டிருக்கிறது.

ரெயில்வே செஸ் பண்டு பற்றி திரு. கே. எஸ். சுப்பிரமணிய கவுண்டர் அவர்கள் இரண்டு தினங்களுக்கு முன்பு குறிப்பிட்டார்கள். கனம் முதல் அமைச்சர் அவர்கள் துணைக் கேள்விக்கு பதில் சொல்லும்பொழுது கடைத் தேங்காயை எடுத்து வழிபிள்ளையாருக்கு உடைப்பதா, சிறிய கட்டடங்களுக்காக ஒதுக்கப்பட்ட அந்த நிதியைக் கொண்டு மருத்துவக் கல்லூரி கட்டுவதா, அந்தத் தொகை எதற்காக ஒதுக்கப்பட்டதோ அதற்காகத் தான் செலவு செய்யவேண்டும் என்று பதில் சொன்னார்கள். மாவட்ட அபிவிருத்தி மன்றத்தில் அந்த பணத்தைக் கொண்டுதான் மருத்துவ கல்லூரி அமைக்கவேண்டும் என்ற ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. முதல் அமைச்சர் அவர்கள் தகுந்த பதில் அனுப்பியிருந்தால் அப்படிப்பட்ட ஒரு தீர்மானம் நிறைவேற்றவேண்டிய அவசியமே வந்திருக்காது. சேலத்தில் இருந்து தர்மபுரி பிரிந்தும்கூட இன்னும் ரூபாய் 25 லட்சம் பிரித்துக்கொடுக்கப்படாமல் இருப்பது மிகவும் வருந்தத்தக்க ஒரு விஷயம். தர்மபுரியில் ஒரு கல்லூரி அமைப்பதற்கான சாத்தியக் கூறுகள் இப்பொழுது இல்லை. ஆகவே, அந்தப் பணத்தைக் கொண்டு சிறிய கட்டடங்கள் கட்டுவதற்கு வேண்டிய உத்தரவைப் பிறப்பிக்கவேண்டும் என்று பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

ஜில்லா பிரிந்த பிறகு செண்டிரல் பாங்கு பிரித்துக் கொடுக்கப்படும் என்று 5 ஆண்டுகளுக்கு முன்பே தீர்மானிக்கப்பட்டது. ஆனால், ஜில்லா பிரிந்தும்கூட செண்டிரல் பாங்கு இன்னும் பிரிக்கப்படாமல் இருக்கிறது. சர்வாதிகாரம் அந்த அளவுக்கு வேர் ஊன்றியிருக்கிறது. .'.பைனான்ஷியல் இயர் ஜூலையில், அப்பொழுது பிரிக்கலாம் என்று சொன்னார்கள். ஆனால் இப்பொழுது எலெக்ஷனுக்குப் பிறகுதான் என்று சொல்லுகிறார்கள்.

செண்டிரல் பாங்கு பிரசிடெண்டு யார் என்பதனுல்தான் இந்தத் தகராறு ஏற்பட்டிருக்கிறது. செண்டிரல் பாங்கு பிரசிடெண்டாக ரொம்ப நாட்களாக இருக்கிறுர் எதிர்க் கட்சியைச் சேர்ந்தவர். அவர் காங்கிரஸ்ஸில் சேர்ந்துவிட்டால் அவரை நாமிநேட் செய்வதாக அந்த அளவுக்கு எல்லோரும் பிரஷர் கொடுத்தார்கள். இத்துணை நாட்களாக எதிர்க் கட்சியில் இருந்துவிட்டு இப்பொழுது காங்கிரஸ் கட்சியில் சேருவதற்கில்லை என்று சொல்லிவிட்டார். இன்னெரு காம்ப்ளிகேஷன் என்னவென்றுல், வேறு யாரை நாமிநேட் செய்வது என்பதில் தகராறு. வேறு யாரையாவது செய்தால், பக்கத்தில் மற்ற தொகுதிகளில் தேர்தலில் தோற்கடிக்கக்கூடிய ஒரு சூழ்நிலை உருவாகக்கூடிய ஒரு காரணத்தினுல், எலெக்ஷனுக்குப் பின்னுல் செண்டிரல் பாங்கைப் பிரிக்கலாம் என்று இப்பொழுது சொல்லுகிருர்கள். அதே மாதிரிதான் சென்டிரல் ஸ்டோர்ஸூம் பிரிக்கப்படாமல் இருக்கிறது. உரம் வாங்கவேண்டும் என்றுல் 110, 115 மைல் போக வேண்டியிருக்கிறது. ஜில்லா பிரிந்தும்கூட அந்த அளவுக்கு இன்னும் சர்வாதிகாரம் இருந்துகொண்டிருக்கிறது. செண்டிரல் பாங்கும், ஸ்டோர்ஸூம் பிரிக்கப்படாத ஒரு சூழ்நிலை இருந்துகொண்டிருக்கிறது. அது நல்லது அல்ல. கூட்டுறவு அமைச்சர் அவர்கள் அவைகளைப் பிரிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்து தரவேண்டும்.

காலேஜ்கள் பொறுத்தவரையில், மிகமிகப் பின்தங்கிய பகுதியாகிய எங்கள் பகுதியில் ஒரு எட்டணு அல்லது ஒரு ரூபாய் கூட வசூல் செய்வது கடினம். அப்படிப்பட்ட நிலையில் மிக்க கஷ்டப்பட்டு $1\frac{1}{2}$ லட்ச ரூபாய் வசூல் செய்து கட்டியும் கூட, மேலும் ரூபாய் 3 லட்சம் கட்டினுல்தான் கட்டடம் கொடுக்க முடியும் என்று சொல்லுகிருர்கள். அதே நேரத்திலே, வட சென்னையிலே அவர்கள் ஒரு பைசா கூடக் கட்டவில்லை. தங்கள் கட்சிக்காரர் தொகுதி என்பதாலோ என்னவோ அங்கே எல்லாம் செய்துவிட்டார்கள். ஆனுல் எங்கள் பகுதி காலேஜ் சம்பந்தப்பட்டவரை கடைக்கண் பார்வைகூட இல்லை. அந்த அளவுக்கு முதல் அமைச்சர் ஆளும் கட்சிக்காரர் தொகுதி என்றுல் சலுகை காட்டுவதும், எதிர்க் கட்சிக்காரர் தொகுதி என்றுல் அப்படிப்பட்ட சலுகைகள் கொடுக்காமல் இருப்பதும், முதல் அமைச்சருக்கு அவ்வளவு நல்லதல்ல என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஆகவே, உடனடியாக, மிகப் பின்தங்கிய மாவட்டத்திற்கு காலேஜ் கட்டடம் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

கிருஷ்ணகிரி ஹாஸ்பிடலை இம்ப்ரூவ் பண்ணுகிறேம் என்று பெரிதாகச் சொன்னுர்கள் முதல் அமைச்சர். ஆனுல் நிலம் அக்வயர் செய்யக் கூட அரசாங்கம் எந்த ஏற்பாடும் செய்யவில்லை. இவர்கள் நிலம் எதுவும் பெரிய கஷ்டப்பட்டு அக்வயர் செய்யவேண்டிய அவசியம் இல்லை. நிறைய சென்ட்ரல் கவர்ன்மெண்ட் லாண்டுகள் இருக்கின்றன. இதை மாநில சர்க்கார் ட்ரான்ஸ்பர் செய்து கொண்டால் போதுமானது. அது சம்பந்தமாக ப்ரபோசல் அனுப்பியிருப்பதாகக் கூடத் தெரிகிறது. ஆனுல் தாமதம் இருக்கிறது. இந்த நிலைமைகள் இருப்பதால் கிருஷ்ணகிரியை அபிவிருத்தி செய்ய முடியாத நிலைமைதான் இருக்கிறது.

மேலும் பஞ்சாயத்து யூனியன்களுக்கு இரண்டு லட்சம் ஒதுக்கியிருக்கிறேம் இந்த நிதிநிலை அறிக்கையில் என்று கூறப்படுகிறது. சென்ற முறையே குறிப்பிட்டேன், எல்லா யூனியன்களுக்கும் ஒன்றுக ஒதுக்குவது அவ்வளவு சரியாக இருக்காது. மாவட்டங்கள் தோறும், வட்டங்கள் தோறும், யூனியன்கள் மாறுபடுகின்றன. பலதரப்பட்டவையாக இருப்பதால், எல்லாவற்றிற்கும் ஒரே வகையாக செய்வதால் பயன் கிடைப்பதில்லை. அதுதான் உற்பத்திக் குறைவுக்கும் காரணம். அந்த அந்த யூனியனுக்கு ஏற்ப திட்டங்களைத் தீட்டி, ஒவ்வொரு ஆண்டும் அவரவர்கள் திட்டங்கள் என்னென்ன என்று அறிந்து பணத்தை செலவழித்தால் பலனுள்ளதாக இருக்கும்.

சென்ற ஆண்டு வரையில் 100 ட்ராக்டர்கள் இருந்தன. அதை இப்பொழுது 250 ஆக உயர்த்தியிருக்கிறேம் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. 250 ஆனுலும், 500 ஆனுலும், எல்லாம் அநேகமாக திருச்சி, தஞ்சாவூர், முதலிய ஒரு சில மாவட்டங்களுக்கே போய்விடுகின்றன, சீனியாரிடி





பேஸிஸில். ஹயர் பர்ச்சேஸ் என்றுலும் அப்படித்தான் நடக்கிறது. ஆகவே, மாவட்டவாரியாக கோட்டா கொடுத்து வழங்கினுல், ஓரளவுக்குப் பின்தங்கிய மாவட்டங்களுக்கும் பயன் ஏற்படக்கூடும்.

புதிய உயர்நிலைப் பள்ளிகள் சம்பந்தமாக, எத்தனை அதிகமாக ஓபன் செய்யப்போகிருர்கள் என்று குறிப்பிட்டிருந்தால் நலமாக இருக்கும். இருக்கிற உயர்நிலைப் பள்ளிகளின் அபிவிருத்திக்காக கொஞ்சம் நிதி ஒதுக்கியிருக்கிருர்கள். ஆனுல் புதியதாக உயர்நிலைப் பள்ளிகள் ஏற்படுவது பற்றி இதிலே ஒன்றும் காணப்படவில்லை. ஏதாவது திட்டம் இருக்கிறதோ என்னவோ தெரியவில்லை.

பல கிராமங்களுக்கு மின்சாரம் கொடுத்திருக்கிறேம் என்கிற சூழ்நிலை இருக்கிறது. மின்சார போர்டு ஒரு டார்கெட்டு வைத்துக்கொண்டு இருக்கிறது. ஒரு சர்வீஸ் ஒரு கிராமத்திற்குக் கொடுத்தால், எனர்ஜைஸ் செய்து விட்டோம் என்று சொல்லிவிடுகிருர்கள். ஆகவே, அவர்கள் போடும் கணக்கை, எத்தனை பம்பு செட்டுகளுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்கிற இலக்கை வைத்துக்கொண்டால் நன்றுக இருக்கும்.

எங்கள் பகுதி மேட்டூர் லிஸ்டத்திலிருந்து மாறிவிட்டதால், 1963-ல் சாங்ஷன் செய்யப்பட்ட 150 ஸ்கீம்கள் இன்னும் நடைமுறையில் வேலை செய்யவில்லை. அவற்றை நிறைவேற்றுவதற்கான ஆயத்தங்களைச் செய்ய வேண்டும் என்று வேண்டிக் கேட்டுக்கொண்டு என் உரையை முடிக்கிறேன்.

* **திரு. செ. சீனிவாசன் :** கனம் சபைத் தலைவர் அவர்களே, 1966-67-க்கு ஆன நிதி நிலை அறிக்கையை ஆதரித்து என்னுடைய ஒரு சில கருத்துக்களைச் சொல்லி என் உரையை முடிக்கிறேன். ரொம்ப நெருக்கடியான நேரத்திலே இருந்து ஒரு நல்ல சுமுகமான சூழ்நிலைக்கு வரக்கூடிய அளவில் இந்த ஆண்டு பட்ஜட் அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கிறது என்றுல் அதிலே நெருக்கடி நிலையை மனதிலே வைத்துக்கொண்டு, வருங்கால வளர்ச்சியையும் குறிக்கோள்களையும் மனதில் கொண்டு, இந்த அறிக்கை நல்ல முறையிலே தயாரிக்கப்பட்டிருக்கிறது. இப்படிச் செய்வது ஒரு திறமையான முதல் அமைச்சரால்தான் செய்ய முடியும் என்பதை சாதாரணமாக பட்ஜட்டுகளைப் பார்த்தவர்களுக்குத் தெரியும். விவசாயத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதிலெல்லாம் எவ்வளவு தூரம் சிரமத்தோடு தயாரித்திருக்கிருர்கள் என்பதை நாம் புரிந்துகொள்ள முடியும். முக்கியமாக பல விவசாயத் திட்டங்களை நிறைவேற்ற வேண்டும் என்கும்போது, வைகை கால்வாய் புனரமைப்புத் திட்டத்தை நிறைவேற்ற என்று 40 லட்சம் ரூபாய் ஒதுக்கி வழிவகை செய்யப்பட்டிருப்பதைப் பார்க்கும்போது, உண்மையிலேயே இராமநாதபுரம், மதுரை இரண்டையும் இணைக்கும் இந்தப் பெரிய திட்டத்திற்காக, அந்த மக்கள் சார்பாக முதல் அமைச்சரைப் பாராட்டாமல் இருக்க முடியாது. இன்றைக்கு இருக்கும் நிலையைப் பார்த்தால் மதுரை, இராமநாதபுரம் இரு பகுதிகளுக்கும் இந்த திட்டத்தினுல் எவ்வளவு நன்மை என்பதைப் புரிந்து கொள்ளமுடியும். இன்றைக்கு அனுபவ ரீதியாக பார்க்கும் போது, வைகையில் தண்ணீர் விடும்போது, சர்க்கார் 30,000 ரூபாய் செலவழிக்கிருர்கள் என்று மாவட்ட மேலதிகாரிகள் சொல்லும்போது, வைகைக் கால்வாய் சீரமைப்புத் திட்டம் எவ்வளவு முக்கியத்துவம் உள்ளது என்பதைக் கண்கூடாகப் புரிந்து கொள்ளலாம். இருந்துவந்த அந்தக் குறையை நிவர்த்தி செய்ய இந்த ஆண்டில், அதோடு இணைந்த மூன்று திட்டங்களுக்குமாகச் சேர்ந்து 40 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருப்பதற்கு முதல் அமைச்சருக்கு மனப்பூர்வமாக கிழக்கு இராமநாதபுரம் விவசாயிகள் சார்பாக பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

கிராமங்களுக்கு மின்சார வசதி செய்து கொடுக்க ஆறு கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று தெரிகிறது. அதற்காகவும் விவசாயிகளின் சார்பாக நாம் அரசாங்கத்தை பாராட்டவேண்டிய நிலையில் இருக்கிறேம்.

அடுத்து, பல வட்டங்களை இணைக்கும் சாலைகளுக்கு ஒரு முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். பல அபிவிருத்தி வேலைகள் நிறைவேற, கிராம மக்களுடைய நல்வாழ்வு பெருக, மகாத்மா

காந்தி கனவு கண்ட கிராம ராஜ்யம் ஏற்பட, கிராமத்திலிருக்கும் பொருள்கள் நகரங்களுக்கு வர வாய்ப்பு ஏற்பட, பின்தங்கிய பகுதிகளில் வாழும் மக்கள் வளர்ச்சி அடைய, இப்படிப்பட்ட சாலைகளுக்கு இனிமேலாவது முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டுமென்று வேண்டிக்கொள்ளுகிறேன்.

முக்கியமாக இப்பொழுது எந்தத் துறையிலாவது பணம் அவசியமாகத் தேவைப்பட்டு, அங்கே போதிய நிதி ஒதுக்கப்படாமல் இருந்தால், அதையெல்லாம் இந்தப் பொதுத் துறையிலிருந்து குறைத்து விடுவதாக ஒரு புகார் கூறப்படுகிறது. அது எவ்வளவு தூரம் உண்மை என்பது சம்பந்தப்பட்ட இலாகாவைச் சேர்ந்தவர்களுக்குத்தான் தெரியும். ஆனால், பொதுவாக, ஏதாவது ஒரு துறையிலே பணம் வேண்டுமென்றால், பி.டபிள்யூ.டி. அல்லது ஹைவேஸ் அண்டு ரூரல் ஒர்க்ஸுக்குகாக ஒதுக்கப்பட்டிருக்கும் பணத்தைக் குறைத்து, மற்ற டிபார்ட்மெண்டுக்குக் கொண்டு போகிறார்கள் என்ற குறைபாடு சொல்லப்படுகிறது. அப்படி ஏதாவது செய்யப்படுமானால், அது இந்த நாட்டு மக்களுக்குச் செய்யக்கூடிய ஒரு இடைஞ்சல் என்றுதான் சொல்லவேண்டியதாக இருக்கிறது.

**கனம் திரு. பூ. கக்கன் :** கனம் அங்கத்தினர் அவர்கள் பேசும்போது, பி.டபிள்யூ.டி., அல்லது ரோடு சம்பந்தப்பட்ட வேலைகளுக்கெல்லாம் ஒதுக்கப்பட்ட பணத்தை இதர டிபார்ட்மெண்ட் வேலைகளுக்குச் செலவிட்டு விடுகிறார்கள் என்று சொல்லுகிறார்கள். உண்மை அது அல்ல. ரோடு வேலைகளுக்காக வருஷா வருஷம் அதிகமாகவே கொடுத்து உதவி செய்திருப்பதுதான் நடந்து கொண்டிருக்கிறது என்பதைக் கனம் அங்கத்தினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. செ. சீனிவாசன் :** அமைச்சர் அவர்கள் அளித்த பதிலினாலே சந்தோஷப்படுகிறேன். ஆனால், பொதுவாக, எந்த டிபார்ட்மென்டிலே பணம் தேவைப்பட்டாலும், அது ஹைவேஸிலிருந்துதான் எடுக்கப்படுகிறது என்ற குறைபாடு சொல்லுகிறார்கள் என்றுதான் சொன்னேன். அம்மாதிரி செய்யப்படவில்லை என்றால், உண்மையிலேயே அதை வரவேற்கிறேன்.

இராமநாதபுரம், தஞ்சை, திருநெல்வேலி மாவட்டங்களைப் பொறுத்த வரையில், அவற்றுக்கு முக்கியத்துவம் அளிக்கவேண்டும். காரணம், அவை நீண்ட காலமாக கவனிக்கப்படாமல் இருக்கின்றன. ஏதாவது காரணம் சொன்னால் " 6 லட்சம் ரூபாய்தானே ? 8 லட்சம் ரூபாய்தானே ? பஞ்சாயத்து யூனியன் நிதியிலிருந்தே செய்துகொள்ளலாமே" என்று சொல்லுகிறார்கள். பஞ்சாயத்து யூனியனைப் பொறுத்த வரையில் ஐந்து வருஷங்களுக்குமாகச் சேர்ந்து நான்கைந்து லட்சம் ரூபாய் இவற்றுக்காக ஒதுக்கும்போது, பஞ்சாயத்து யூனியன் மூலமாக எப்படி இந்த சாலை வேலைகளை எடுத்துக்கொள்வது என்று தெரியவில்லை. பிற்பட்ட பகுதிகளுக்கு, பிற்பட்ட மக்கள் பெரும்பான்மையாக வசிக்கும் பகுதிகளில் ரோடுகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டும் என்று நான் இந்த அமைச்சரவையைப் பணிவோடு கேட்டுக் கொள்ளுகிறேன்.

பல நண்பர்கள் சொன்னார்கள், " வரி இல்லாமல் இந்த பட்ஜெட் இருக்கிறது என்று காங்கிரஸ் அங்கத்தினர்கள் எல்லோரும் பெருமைப்படுகிறார்கள். ஆனால், உண்மையில் இந்த நாட்டிலே போடவேண்டிய வரி ஒன்றுமே பாக்கி இல்லை " என்று சொன்னார்கள். சில தினங்களுக்கு முன்னால் பார்த்தோம். நமது மதிப்பிற்குரிய எதிர்க் கட்சி அங்கத்தினர்களைக் கொண்ட கட்சி இந்த சென்னை மாநகராட்சி மன்ற நிர்வாகத்தில் இருக்கிறது. அந்தக் கட்சி அங்கே நிர்வாகத்தில் இருக்கிறபோது, சென்னை நகரத்தில் உள்ள குடிசைகளுக்குக்கூட வரி போட்டிருக்கிறார்கள். அதை எதிர்த்துக் கண்டன வாரம் சென்னை நகரிலே நடந்துகொண்டிருக்கிறது. ஆக, வரி போடுவது என்பது பொதுவாக வளர்ச்சி அடைந்து வரும் ஒரு நாட்டில் இன்றியமையாத சாதனமாகும். வளர்ச்சி அடையவேண்டும் என்றால், அதற்காக வரி போட்டுத்தான் ஆகவேண்டும். ஆனால், யாருக்கு வரி போடவேண்டும் என்பதுதான் முக்கியம். பணக்காரர்களுக்கு வரி



போட்டு ஏழைகளுக்குச் சௌகரியம் செய்யவேண்டும் என்ற அளவிலே அந்த வரி அமைந்தால் அதைப்பற்றிக் குறை சொல்ல முடியாத அளவில்தான் இருக்கும்.

இராமநாதபுரம் ஜில்லாவை மிகவும் ஒரு பிற்பட்ட ஜில்லா என்றே சொல்லலாம். மற்ற ஜில்லாக்களைப்பற்றியும் பிற்பட்ட ஜில்லாக்கள் என்று சொல்லிக்கொள்ளக்கூடும் என்றாலும், இராமநாதபுரம் ஜில்லாவைப் பொறுத்தவரையில், அங்கே நீர்ப்பாசன வசதிகள் குறைவாக இருப்பதன் காரணமாகவும், பிற்பட்ட மக்களே அதிகமாக அங்கே வசித்து வருகிறார்கள் என்ற காரணத்திற்காகவும் அந்த மாவட்டத்திற்கு வைகைக் கால்வாய் நல்ல முறையில் அமைக்கப்படுவதன் மூலம் புனர்வாழ்வு அளிக்க அமைச்சரவை முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடிக்கிறேன்.

***திரு. ஆ. துரையரசன் :** கனம் தலைவர் அவர்களே, நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் இந்த மன்றத்திலே 1966–67-ம் ஆண்டுக்குச் சமர்ப்பித்திருக்கும் நிதி நிலை அறிக்கை மீது தொடர்ந்து மூன்று தினங்களாக நடைபெற்றுக்கொண்டிருக்கிற இந்த விவாதத்திலே என்னுடைய கருத்துக்களையும், தங்கள் மூலமாக, இந்த மன்றத்தினுடைய கவனத்திற்குக் கொண்டுவர நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த சட்ட மன்றத்திலே எங்களைப் போன்றவர்கள் உள்ளே வந்ததற்குப் பிறகு, இந்த நான்கு ஆண்டுகளிலே, ஒவ்வொரு ஆண்டு நிதி நிலை அறிக்கையிலும் வரி போடாத நிலை இல்லை. இந்த ஆண்டு நாட்டு மக்களும் எதிர்க்கட்சியைச் சார்ந்த நாங்களும் ஏற்கனவே எதிர்பார்த்தோம்—1967-ம் ஆண்டுத் தேர்தல் நெருங்கிக் கொண்டிருக்கும் காரணத்தால், இந்த ஆண்டு நிதி நிலை அறிக்கை பக்கங்கள் ஒன்றுக்கு மூன்று மடங்காக இருக்கும் ; அதே நேரத்தில் வரி நிச்சயமாக இருக்காது என்று நாங்களெல்லோரும் எதிர்பார்த்ததைப் போலவே நம்முடைய அனுபவம் பெற்ற முதல் அமைச்சர் அவர்கள் இந்த மன்றத்திலே வரியே இல்லாத ஒரு பட்ஜெட்டை தாக்கல் செய்திருக்கிறார்கள். ஆளுங் கட்சித் தரப்பிலே பேசிய அங்கத்தினர்கள் பலர், " வரி போடாமல் எப்படி இருக்க முடியும் ?" என்று கேட்டார்கள். "வரியே கூடாது" என்ற கொள்கை உடையவர்கள் அல்ல முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள். வரி இல்லாமல் எந்த ஆட்சியும் நடைபெறாது, நடத்த முடியாது என்ற அந்த நம்பிக்கை எங்களுக்கு இருந்தாலும், தாங்கக் கூடியவர்கள் மீது தரம் பார்த்து, போட வேண்டிய நேரத்திலே வரியைப் போடவேண்டும் என்பது தான் எங்களுடைய லட்சியமாகும்.

ஆளும் தரப்பிலே பேசிய அங்கத்தினர்கள் பலர், சுதந்திரம் பெற்றதற்குப் பிறகு போடப்பட்ட பல திட்டங்களைச் சொன்னார்கள். போடப்பட்ட பல திட்டங்களைச் சொல்லி, எல்லாவற்றையும் எதிர்க்கட்சித் தரப்பினர்கள் குறைபாடு காண்கிறார்களே என்று வேதனைப்பட்டுக் கொண்டார்கள். முன்னேற்றக் கழகம் சட்ட மன்றத்திற்குள்ளே வந்ததற்குப் பிறகு, 1957-ம் ஆண்டுக்குப் பிறகு, தொடர்ந்து ஒன்பதாண்டுக் காலத்தில் பார்த்தால், நல்ல சட்டங்கள் இங்கே போடப்பட்ட நேரத்தில் அவற்றை நாங்கள் அழுத்தந்திருத்தமாக வரவேற்றிருக்கிறோம். நாட்டு மக்களுக்குத் தீமை பயக்கக்கூடிய சட்டம் என்று எதை எதை நாங்கள் கருதினோமோ அந்தச் சட்டங்களையெல்லாம் நாங்கள் இங்கே, நாட்டு மக்களின்சார்பாக, எதிர்த்திருக்கிறோம். குறிப்பாக, இந்த நாட்டிலே ஜமீன்கள் ஒழிக்கப்படுவதற்கான ஒரு சட்டம் இயற்றப்பட்டு, அது 1951-ம் ஆண்டு நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது. ஜமீன் ஒழிப்புச் சட்டம் வேண்டாம் என்று நாங்கள் சொல்லவில்லை. ஜமீன்கள் ஒழிக்கப்பட வேண்டும் என்பதிலே ஆளும் கட்சியிலே உள்ளவர்களைவிட எதிர்க்கட்சி வரிசையில் இருக்கும் நாங்கள் அழுத்தந்திருத்தமாக ஒரு படி மேலே நிற்கிறோம் என்றாலும், அந்தச் சட்டம் நடைமுறையில் எப்படி விவசாயிகளுக்கு ஊக்கம் அளிக்கிறது என்பதைத்தான் நாம் கூர்ந்து பார்க்க வேண்டும்.

வெள்ளையர்கள் இந்த நாட்டை ஆண்டு கொண்டிருந்த நேரத்தில், ஜமீன்தார்களின் கீழே பல ஆயிரக்கணக்கான குடிகள் மிதிக்கப்பட்டிருக்கிறார்கள் அடிமைப்படுத்தப்பட்டிருக்கிறார்கள் என்ற காரணத்தினால், சுதந்திரம் வந்தபிறகு ஜமீன் ஒழிப்புச் சட்டம் கொண்டுவரப்பட்டது. அப்பொழுது மாவட்டத்திற்கு ஐந்து முதல் பத்து ஜமீன்தார்கள் இருந்தார்கள் என்றால், சுதந்திரம்பெற்றதற்குப் பிறகு, சுதந்திரத்தின் பேரால் வட்டத்திற்கு பத்து ஜமீன்தார்களை ஏற்படுத்திகொண்டிருக்கிற நிலையை ஆட்சி இப்பொழுது ஏற்படுத்தியிருக்கிறது என்பதை நான் அழுத்தந்திருத்தமாக எடுத்துச் சொல்லி இந்த ஆட்சி மீது குற்றம் சாட்டுகிறேன்.

மது விலக்குக் கொள்கை இந்த நாட்டுக்குக் கொண்டுவரப்பட்டபோது, மது விலக்குக் கொள்கையை வேண்டாம் என்று சொல்லவில்லை. மது ஒழிக்கப்பட வேண்டும் என்பதிலே நாங்களும் அழுத்தந்திருத்தமாகத்தான் இருந்தோம். ஆனால், அந்தத் திட்டம் நடைமுறையில் எந்த அளவுக்கு செயல்படுகிறது என்ற நிலைமையை நாம் எண்ணிப் பார்த்து, அதிலே உள்ள குறைகளை நாம் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறோம். நம்முடைய உள்துறை அமைச்சர் அவர்களுக்கு அந்தச் சட்டத்தை உண்மையிலேயே நேர்மையாகச் செயல் படுத்தவேண்டும் என்ற ஆர்வத்துடிப்பு இருக்கிறது என்பதை நாங்கள் நன்றாக அறிகிறோம். ஆனால், நாட்டிலே ஆண்டுக்காண்டு நடைபெறுகிற வழக்குகளையும் இன்னபிற நிகழ்ச்சிகளையும் நாம் பார்க்கும் நேரத்தில், உண்மையிலேயே அந்தச் சட்டம் தோல்வி அடைந்திருக்கிறது. அந்தச் சட்டத்தை எப்படித் தீவிரப்படுத்தவேண்டும் என்பதிலே, நம்முடைய அமைச்சரவைக்குக் கீழே பணிபுரிகிறவர்கள் தீவிரமாகச் செயல்படவேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் தங்கள் மூலமாகக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

நாட்டு மக்களுடைய வாழ்க்கைத்தரம் உயர்த்தப்பட்டிருக்கிறது என்று ஆளும் தரப்பிலிருந்து பேசிய தூத்துக்குடி கனம் உறுப்பினர் ஒருவர் சொன்னார்கள். சாதாரணமாக ஒரு வேட்டி, துண்டோடு இருந்தவர்கள் இன்றைக்கு எதிர்க்கட்சித் தலைவரைப்போல் நான்கு முழ அங்கவஸ்திரம் போடுகிறார்கள் என்று பெருமைப்பட்டார்கள். அந்த நிலை நாட்டில் வர வேண்டும் என்பதுதான் எங்களுடைய பேரவா என்று சொன்னாலும், தலையிலே தேய்த்துக்கொள்ள எண்ணெயில்லாது தலையை பரட்டையாக வைத்துக்கொண்டு, மேலே அணிந்துகொள்ள சட்டையில்லாது முண்டா பனியனைப் போட்டுக் கொண்டிருக்கிறவர்களை—இன்றைய தினம் அவர்கள் எவ்வளவு நல்ல குடும்பத்தில் வந்தவர்களாக இருந்தாலும் செக்ஷன் 54-ன் கீழ் கைது செய்யப்பட்டு உள்ளே தள்ளப்படுவதை நாம் ஒருகணம் இந்த நேரத்தில் சிந்தித்துப் பார்க்கவேண்டும். ஓரிரண்டு திங்களுக்கு முன்பாக என்னுடைய வட்டாரத்தைச் சேர்ந்த ஒருவர் சென்னைக்கு வந்து இரண்டு மூன்று நாட்கள் தங்கிவிட்டு பஸ்ஸில் புறப்பட்டு அறந்தாங்கி வந்து ஊருக்கு செல்லும்பொழுது சந்தேகத்தின் பேரால் கைது செய்யப்பட்டதும், அவருக்கு விடுதலை அளிக்க ஜாமீன் கொடுக்க வந்தவர்கள் இரண்டுபேர் ஒரு லட்சம் மதிப்பு சொத்துடையவர் என்பதில் இருந்தும் கைது செய்யப்பட்டவர் உண்மையில் சந்தேகத்திற்குரியவரா என்பதைச் சிந்திக்கத் தூண்டுகிறது. இதைப்போல பல மாவட்டங்களில் பல நிகழ்ச்சிகள் நடைபெறுவதை நாம் அன்றாடம் பார்க்கிறோம்.

உணவுத் துறையை எடுத்துக்கொண்டால் மூன்று திட்டங்களைப் போட்டு நாம் பல லட்சக்கணக்கான எக்கராக்களைச் சாகுபடிக்குக் கொண்டு வந்திருக்கிறோம், உணவுக் கஷ்டத்தை திறமையாகச் சமாளித்து விட்டோம் என்று பேசப்படுகிறது. இரண்டாவது உலக யுத்தம் நடந்து கொண்டிருந்தபோது அந்நியர் காலத்தில் கூட 18 அவுன்ஸ் அரிசி தரப்பட்டது. நம்முடைய ஆட்சியிலே சுதந்திரம் பெற்று 18 ஆண்டுகளுக்குப் பிறகு, மூன்று திட்டங்களைப் போட்டும், கோடிக்கணக்கில் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்தும் எட்டு அவுன்சு தர முடியவில்லை என்றால் இதைவிடப் பரிதாபகரமான நிலை வேறு வேண்டாம். தயவு செய்து சிந்தித்துப் பார்க்குமாறு கேட்டுக்கொள்கிறேன். கோடி கோடி என்று நாம் திட்டங்களைப்





போடுகிறோமே தவிர கிராமங்களில் வாழ்கிறவர்களுக்கு—ஊர்க்கோடி தெரியும், தெருக்கோடி தெரியும், அடுத்து கடைசிக்கோடி என்ற அடிப்படையில்தான் நிலைமை போய்க்கொண்டிருக்கிறது.

இன்றைய தினம் உணவு அமைச்சர் அவர்களே ரெவின்யூ இலாகாவையும் வைத்திருக்கிறார்கள். உணவுப் பிரச்சினையைத் தீர்க்க அவர் நல்ல முறையில் திறம்பட நடவடிக்கை எடுத்து வருகிறார்கள் என்பதாகப் பல அங்கத்தினர்கள் இங்கே பேசியதைப் பார்த்தோம். உண்மையில் தங்கள் மூலமாகத் தெரிவித்துக் கொள்வேன், உணவுக் கொள்கை வெற்றி பெறவில்லை, தோல்வி அடைந்திருக்கிறது என்று நான் சொல்வேன். வேண்டுமானால் இல்லை என்பதற்கு—அவர் ராஜிநாமாச் செய்துவிட்டு என்னுடைய தொகுதியில்—உணவுப் பிரச்சினையை மட்டும் அடிப்படையாக வைத்து என்னுடன் தேர்தலில் போட்டிக்கு நிற்க முன் வருவாரா என்று அறிய விரும்புகிறேன்.

உர உற்பத்தியைப் பொறுத்தும், விநியோக முறையைப் பற்றியும் வருந்த வேண்டியதாக இருக்கிறது. இந்த ஆண்டு தஞ்சை ஜில்லாவுக்கு அதிகமான உர விநியோகம் செய்யப்பட்டதாக இலாகா அதிகாரிகள் சொல்கிறார்கள். ஆயிரக்கணக்கான டன்கள் விநியோகிக்கப்பட்டன என்று சொன்னாலும் சாதாரண விவசாயிக்கு ஒரு மூட்டை, இரண்டு மூட்டையாவது கிடைத்ததா என்றால் இல்லை என்றுதான் குற்றஞ்சாட்ட வேண்டியிருக்கிறது. இன்றைக்கு கூட்டுறவு சங்கங்களின்மூலம் அவர்களுக்குத் தர ஏற்பாடு செய்திருப்பதாகச் சொன்னாலும் ஒழுங்காக கொடுக்கப்படவில்லை. ஒரு படி உரம் 2 ரூபாய்க்கு விற்கப்படுகிறது என்பதையும் நாம் சிந்திக்கவேண்டியிருக்கிறது. நகர்ப்புறங்களில் வாழ்பவர்களுக்கு மட்டும் அவர்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருள்களை நியாயமான விலைக்குக் கிடைக்கச் செய்தால் போதாது. கிராமங்களில் வாழ்பவர்களுக்கும் அவர்களுக்குத் தேவையான பொருள்கள் நியாய விலையில் கிடைக்க வழி செய்யவேண்டும் என்பதாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

விவசாயிகளுக்கு ஊக்கம் அளிக்க இவ்வாண்டு 250 டிராக்டர்கள் வழங்கப்பட இருக்கிறது என்று சொன்னார்கள். உண்மையில் விவசாயிகளுக்கு நன்மை செய்யவேண்டும் என்ற எண்ணம் இருந்தால் ஒவ்வொரு கூட்டு மன்றத்திற்கும் ஒரு டிராக்டர் வழங்க நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தஞ்சை மாவட்டத்தில் இவ்வாண்டு பருவ மழை தவறிவிட்டது. மேட்டூர் அணையிலும் தண்ணீர் தட்டு ஏற்பட்டுவிட்டது. குறிப்பாக மேலத்தஞ்சை, திருத்துறைப்பூண்டி, பட்டுக்கோட்டை, அறந்தாங்கி பகுதிகள் இதனால் எவ்வளவு பாதிக்கப்பட்டிருக்கின்றன என்பதை அமைச்சர் அவர்கள் நன்கு அறிவார்கள். இந்த ஆண்டு கடன் வசூலை அந்த மாவட்டத்தில் நிறுத்தி வைக்கவேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் சர்சார்ஜை ரத்து செய்ய வேண்டுமென்று ஆளும் தரப்பில் உள்ளவர்களும் பலர் எடுத்துச் சொன்னார்கள். தேர்தலையும் நினைத்து கூர்ந்து பார்க்கிறபோது அமைச்சர் அவர்கள் உபரி வரி 25 காசை நிச்சயமாக எடுக்க முன் வருவார்கள் என்று நினைக்கிறேன். நிச்சயமாக அதை ரத்து செய்ய வேண்டும் என்பதாக ஏழை விவசாயிகளின் சார்பில் கேட்டுக்கொள்கிறேன்.

தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்த வரையில் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஒரு விவசாயக் கல்லூரியை நிறுவித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கால்நடை மருத்துவ மனையைப் பொறுத்தும் நாம் கவனம் செலுத்த வேண்டும். கால்நடைச் செல்வங்கள் நாட்டில் சிறப்பாக இருந்தால்தான் விவசாயத்தை ஊக்குவிக்க முடியும். எனவே தஞ்சைத் தரணியில் ஒரு கால்நடை மருத்துவ மனையையும் ஏற்படுத்தித் தரவேண்டும்.

மேலும் நான் முன்பு சொன்னதுபோல அத்யாவசியப் பொருள்களை விவசாயப் பெருமக்களுக்கு நியாயமான விலையில் கிடைக்க வழி செய்ய வேண்டும் என்று, மீண்டும் கேட்டுக்கொள்கிறேன்.

இங்கே நாம் வரி போடவில்லை என்று சொன்னாலும் மத்திய நிர்வாகத்தினர் 100 கோடிக்கு மேல் போட்டிருக்கிறார்கள். அது இந்தத் தமிழ் நாட்டு மக்களையும் பாதிக்கத்தான் செய்யும்.

மதுரையைச் சேர்ந்த அம்மையார் அவர்கள் பேசும்போது எடுத்துச் சொன்னார்கள். நாட்டில் பஞ்சம் இல்லை, யார் பட்டினியால் செத்தார்கள் ? ஏதோ கொஞ்சம் பற்றாக்குறை இருக்கிறது என்றார்கள். பற்றாக்குறை என்றால் என்ன பொருள் ? பட்டினி என்றுதான் பொருள். ஒவ்வொரு நாளும் வேதனைப்படும் அளவில் பட்டினியால் சாகின்ற செய்தி பத்திரிகைகளில் வந்தாலும் அம்மையார் அவர்கள் தம் மனச்சாட்சியை ஒளித்துத்தான் பேசவேண்டியிருக்கிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் ஏழை மக்களுக்காக வாதாட இங்கே இருக்கிற திராவிட முன்னேற்றக் கழகத்தினர் அவற்றை எடுத்துச் சொல்லாமல் இருக்க முடியாது.

மீண்டும் மீண்டும் நான் இந்த மன்றத்திலே கேட்டுக்கொள்வது, விவசாயிகளை வாழவிடுங்கள், அவர்கள் வாழ்ந்தால்தான் இந்த நாடு வாழமுடியும். பேச்சளவிலே 100-க்கு 80 பேர்கள் விவசாயிகளாக இருக்கிறார்கள், அவர்களைக் காப்பதற்குத் திட்டங்கள் போடுகிறோம், அவர்களைக் காப்பாற்றுவதற்காகவே இருக்கிறோம், என்று சொல்லிவிட்டு, திட்டத்தின் பலன்கள் எல்லாம் பணக்காரர்களுக்குப் போகிற அளவில் நிலைமை நீடித்தால் 1967-ம் ஆண்டு தீர்ப்பளிக்கக்கூடிய வகையிலே பாடம் கற்பிக்க மக்கள் தயாராக இருக்கிறார்கள். குமுறும் உள்ளங்கள் எத்தனை நாட்களுக்குத்தான் அமைதிகாக்கும் ? குமுறும் எரிமலை ஒருநாள் வெடித்தே தீரும் என்று சொல்லி என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

**கனம் திரு பூ. கக்கன் :** கனம் அங்கத்தினர் திரு. துரையரசன் அவர்கள் பேச்சுக்கு நான் குறுக்கே நிற்க தயாராக இல்லை. ஜமீன்தார்களை எடுத்துவிட்டார்கள். ஆனால் இப்பொழுது பல ஜமீன்தார்களை உண்டாக்கியிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். கனம் அங்கத்தினர் பழைய பாளையக்காரர். அந்த பட்டத்திலே இருந்து வெளியேற்றப்பட்டிருக்கிறார் என்ற கருத்தினால்தான் அப்படிச் சொல்லியிருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். அவர்கள் தொகுதியில் மந்திரி வரவேண்டுமென்று சொன்னார்கள். இது எப்படியிருக்கிறது என்றால் உமியை வைத்துக்கொண்டு அவலைக் கொண்டு வா, இரண்டையும் கலந்து ஊதி ஊதி சாப்பிடலாம் என்று சொல்வது மாதிரி இருக்கிறது. அப்படிச் செய்வதற்கும் தயாராகவும் இருக்கிறோம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஆ. துரையரசன் :** நான் பேசியது, பழைய பாளையக்காரர் என்ற முறையில்தான் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஜமீன்தார்களை ஒழிக்கவேண்டுமென்று சொல்வதற்கு முன்பாகவே நான் என்னுடைய குடும்பத்தைவிட்டு வெளியேறி, ஜமீன்தார்கள் ஒழியவேண்டும், சரிகைக் குல்லாய்கள் ஒழியவேண்டும் என்று ஆளும்கட்சிக்குச் சொல்வதற்கு அறிஞர் அண்ணா அவர்கள் ஆரம்பித்த இயக்கத்திலே சேர்ந்தவன் என்பதைச் சொல்லிக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

**கனம் திரு. பூ. கக்கன் :** அந்த எண்ணம் இருந்தால் இப்பொழுது ஜமீன்தார்கள் என்று சொல்லவேண்டிய தேவையில்லை.

***திரு. பி. ஜெயராஜ் :** மதிப்பிற்குரிய தலைவரவர்களே, 1966-67-ம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையை வரவேற்று நான் என்னுடைய கருத்துக்களையும் சொல்ல விரும்புகிறேன். நம்முடைய 1966-67-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் விவசாயத்திற்கு பெரும் பகுதி நிதி ஒதுக்கியிருக்கிறார்கள். விவசாயம் எந்த அளவுக்கு வளம் பெறுகிறதோ, அந்த அளவுக்கு நாட்டு மக்களுக்கு வளமும் வாழ்வும் கிடைக்க வாய்ப்பு இருக்கிறது. 1966-ம் ஆண்டில் விவசாய மக்கள் எந்த அளவுக்குப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதையும், கவர்னர் உரையின்மீது நடந்த விவாதத்தின்போது, தஞ்சாவூரிலிருந்து வந்திருக்கிற அங்கத்தினர்கள் அனைவரும் எடுத்துக்கூறியிருக்கிறார்கள். இந்த ஆண்டு தஞ்சை ஜில்லாவிலே மகசூல் பாதிக்கப்பட்டிருக்கிறது. பருவ மழை இல்லாததன் காரணமாகவும், தண்ணீர் கிடைக்காததன் காரணமாகவும் விவசாயிகள் மிகவும்



பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். விவசாயிகளுக்கு எந்த அளவுக்கு சர்க்கார் நன்மை பயக்கவேண்டும் என்பதையும் கூர்ந்து கவனிக்கவேண்டும். பெரும் பகுதி விவசாயிகள் வரி வஜா செய்யவேண்டுமென்று மகஜர்கள் மூலமாகவும், இயக்கங்கள் மூலமாகவும் தெரிவித்திருக்கிறார்கள் என்று சொன்னால் அதனைக் கவனித்து அரசாங்கம் ஆவன செய்வார்கள் என்ற நம்பிக்கையும் எங்களுக்கு இருக்கிறது. தஞ்சாவூரில் ஒரு ஏக்கருக்கு ஆறு கலம் வீதம் தான் கண்டிருக்கிறது. தஞ்சாவூர் பூராவும் இந்த நிலைமைதான் ஏற்பட்டிருக்கிறது. இதனை அரசாங்கம் கவனித்திருந்தாலும்கூட, அங்கேயுள்ள விவசாய மக்களுக்குப் பாதகம் இல்லாத முறையிலே வரிவஜா செய்வதற்கு முயற்சி செய்யவேண்டும். விவசாயிகளுக்கும் நிலச்சுவான்தார்களுக்கும் தகராறு வருகிறது. நிலத்திலிருந்து வெளியேற்றுகின்ற நிலைமையை நிலச்சுவான்தார்கள் ஏற்படுத்திக்கொண்டிருக்கிறார்கள் என்பதைக் கவனிக்கவேண்டும். சரியாக விளையாத காரணத்தால், நிலச்சுவான்தார்கள் விவசாயிகளிடம், "முதலில் அறுவடை செய்யுங்கள், பிறகு பார்த்துக்கொள்ளலாம்" என்று சொல்லுகிறார்கள். அவர்கள் ரெவின்யூ கோர்ட்டுக்குப் போகக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, இதை உடனடியாகக் கவனிக்காவிட்டால், நிலத்திலிருந்து விவசாயிகளை வெளியேற்றிவிடுகின்ற நிலைமை ஏற்பட்டுவிடும். ரெவின்யூ கோர்ட்டு வெளியேற்றுவதை ஒரு குறிக்கோளாக வைத்துக்கொண்டிருக்கிறதே தவிர, நன்மை புரியக்கூடிய முறையிலே இல்லை என்பதைப் பார்க்கவேண்டும். விவசாய உற்பத்தி அதிகமாக வேண்டுமென்றால் அவர்களுக்கு சரியான காலத்தில் உரத்தைக் கொடுக்கவேண்டும். மார்க்கெட்டிங் சொசைட்டிகள் உரத்தைச் சரியான காலத்தில் கொடுப்பதில்லை. அவர்களைக் கேட்டால் அரசாங்கத்திலிருந்து சரியான காலத்தில் வரவில்லை என்று சொல்கிறார்கள். ஆகவே, மார்க்கெட்டிங் சொசைட்டிகள் எல்லாம் விவசாயிகளுக்குத் துரிதமாக காலாகாலத்தில் உரத்தைக் கொடுப்பதற்கு முயற்சி செய்யவேண்டும். குறிப்பாக 1967-ம் ஆண்டில் நான்காவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திலே மாவட்ட ரீதியாகவும், வட்டார ரீதியாகவும் வேளாண்மை நுணுக்கத் திட்டத்தைக் கொண்டுவரப் போவதாகப் பார்க்கிறோம். இப்பொழுது பஞ்சாயத்து யூனியன்களிலே எந்த அளவுக்கு விவசாய உற்பத்தியைக் கவனிக்கிறார்கள் என்பதை கவனிக்கவேண்டும். அங்கே கமிஷனரும், எக்ஸ்டன்ஷன் ஆபீசரும் ஒன்றாகச் சேர்ந்து விவசாயத்தைக் கவனிக்கிறார்கள் என்று சொல்லமுடியாது. டிஸ்ட்ரிக்ட் அக்ரிகல்சரல் ஆபீசர் அவர்கள் சொல்வதைத்தான் நாங்கள் செய்வோம் என்று எக்ஸ்டன்ஷன் ஆபீஸர்கள் சொல்கிறார்கள். கமிஷனர் நாங்கள் அவர்களுக்குக் கட்டுப்பட்டவர்கள் அல்ல என்று சொல்லுகிறார்கள். பஞ்சாயத்து யூனியனிலே விவசாய விஸ்தரிப்பு நல்ல முறையிலே நடைபெற வேண்டுமென்றால் இவர்கள் ஒருங்கிணைந்து செயலாற்றினால்தான் முடியும். உர வினியோகம் சம்பந்தமாக ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒவ்வொரு கூட்டுறவு சங்கம் அமைத்து, உர விற்பனை நிலையம் அமைத்து கொடுத்து, அதன் மூலம் காலத்தில் விவசாயிகளுக்கு உர விநியோகம் செய்வதற்கும் வாய்ப்பு உண்டாக்கவேண்டும்.

அடுத்தபடியாக, ஒரு பஞ்சாயத்தில் எவ்வளவு நிலம் இருக்கிறது, நன்சை, புஞ்சை எவ்வளவு, ஒருபோக சாகுபடி எவ்வளவு, ஏகர் இரண்டுபோக சாகுபடி எவ்வளவு, ஏகர் எவ்வளவு லோன் கொடுக்கப்படுகிறது என்பதையெல்லாம் தெளிவாக ஒரு அட்டவணையில் போட்டு அங்கேயே போட்டுவிடவேண்டும். எத்தனை ஏக்கருக்கு உரவினியோகம் செய்யப்பட்டது, எவ்வளவு லோன் கொடுக்கப்பயட்டது, எத்தனை பேர்களுக்கு லோன் கிடைக்கவில்லை, என்ன சாகுபடி செய்தார்கள் என்பதையெல்லாம் ஒரு அட்டவணையின் மூலம் போட்டுவிட்டால் இங்கே தப்புச் சொல்லக்கூடிய வாய்ப்பு இருக்காது. அதன் மூலமாக அங்கேயுள்ள மக்களே அங்கே நடைபெறுகின்ற நிலைமைகளைப் பற்றித் தெரிவிப்பதற்கு வாய்ப்பு ஏற்படும். வேளாண்மை நுணுக்கத் திட்டங்கள் சம்பந்தமாக ஒரு பஞ்சாயத்து யூனியனுக்கு 2 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதை பஞ்சாயத்துகள் எப்படி செலவு செய்யவேண்டுமென்பதைப்பற்றி விளம்பரம் மூலமாகவோ அல்லது பஞ்சாயத்து யூனியன்கள் மூலமாகவோ தெரிவிக்கவேண்டும். தஞ்சை ஜில்லாவைப்

[திரு. பி. ஜெயராஜ்] [3rd March 1966

பொறுத்தவரையில் இன்னும் கூலிகள் கொடுக்கப்படுவது நிர்ணயிக்கப்படாத காரணத்தால், விவசாயக் கூலிகளுக்கும், நிலச் சுவான்தார்களுக்கும் அடிக்கடி தகராறு ஏற்பட்டுக்கொண்டே இருக்கிறது. அரசாங்கம் பண்ணையாள் பாதுகாப்புச் சட்டம் எப்படிக் கொண்டு வந்ததோ, அதைப் போல் தஞ்சாவூர் மாவட்டத்தில் எத்தனை விவசாயக் கூலிகள் இருக்கிறார்கள், அவர்களுக்கு எவ்வளவுகூலி கொடுக்கவேண்டுமென்பதையும் ஆராய்ந்து ஜில்லா அடிப்படையிலே ஒரு கூலி நிர்ணயம் செய்து கொடுத்தால் நன்றாக இருக்கும். விவசாயிகள் ஒரு ஒழுங்கான முறையில் தங்களுடைய கூலியைப் பெற்றுக்கொள்வதற்கு அரசாங்கம் திட்டம் செய்ய வேண்டும்.

அடுத்தபடியாக, ஹரிஜனங்களுடைய நலனுக்காக ஒதுக்கப்படுகிற தொகை அதிகமாக இருந்தாலும்கூட அவர்களுக்கு வீட்டுமனை வழங்குவதற்காக இந்த ஆண்டு மாநிலம் பூராவுக்கும் சேர்த்து ஒதுக்கப்பட்டிருக்கிற தொகை 44 லட்சம் ரூபாய்தான். ஜில்லாவாரியாகக் கணக்கு பார்த்தால் 2 லட்சம் ரூபாய்க்கும் குறைவாக வருகிறது. ஒவ்வொரு ஜில்லாவுக்கும் ஆண்டு ஒன்றுக்கு ஆறு லட்சம் ரூபாய் வரை கொடுத்தால்தான் ஹரிஜனங்களுக்கு மனை கொடுக்கும் காரியத்தை நல்ல முறையில் செய்ய முடியும். கோரிக்கைகள் அதிகமாக இருக்கின்றன, ஒதுக்கப்பட்ட தொகை குறைவாக இருக்கிறது. எவ்வளவுதூரம் ஏழைகளுக்கு மனை வசதி செய்துகொடுத்துக் கொண்டிருந்தாலும் கோரிக்கைகள் அதிகமாக இருப்பதால் தொகையை அதிகமாக ஒதுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எதிர்கட்சிகள் மட்டும்தான் குறை சொல்லவேண்டும், நாங்கள் எங்கள் குறைகளைச் சொல்லக்கூடாது என்றில்லை. நாங்களும் எங்கள் தொகுதியிலுள்ள குறைகளைச் சொல்லுகிறோம். அவர்களும் பல குறைகளைச் சொல்கிறார்கள். அவர்கள் சொல்லுகிற குறைகளை எல்லாம் அரசாங்கம் கவனிக்காமல் இருக்கிறது என்று சொல்லமுடியாது. எல்லாவற்றையும் பார்த்துக் குறைகளைப் போக்குவதற்கான எல்லா ஏற்பாடுகளையும் அரசாங்கம் செய்துக் கொண்டுதான் இருக்கிறது. எனக்கு முன்பு பேசிய, மதிப்புக்குரிய துரையரசன் அவர்கள் தஞ்சை மாவட்டத்தில் பெரும்பகுதி விவசாயம் நடக்கிறபடியால், ஒரு விவசாயக் கல்லூரியை அமைத்துக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள். நானும் அதே போன்று கேட்டுக் கொள்கிறேன். அங்கு விவசாயக் கல்லூரியை வைப்பதன் மூலம் புதிய முறையில் விவசாயத்தைச் சீர்படுத்தவும் மற்றும் விவசாயத்தைப் பெருக்கவும் வழி ஏற்படும். ஆகவே, அரசாங்கம் இதைப்பற்றிக் கவனிக்க வேண்டும். விவசாயத்தைக் கவனிப்பதற்காக, விவசாயிகளுக்கு உதவி செய்வதற்காக விஸ்தரிப்பு அதிகாரிகளையும், கிராம சேவக்குகளையும் போட்டிருக்கிறார்கள். அவர்கள் இரண்டுபேரும் சேர்ந்து செயல்படுகிறார்களா என்றால் இல்லை. அதைப்பற்றிக் கவனிக்கவேண்டும். தஞ்சை ஜில்லாவில் தற்போது விவசாயிகளை நிலத்திலிருந்து வெளியேற்றி வருவதை தடுக்க அவசரச் சட்டம் ஒன்றை நிறைவேற்றவேண்டும். இல்லையென்றால் தஞ்சை ஜில்லா விவசாயிகளில் பெரும்பாலோர் நிலத்திலிருந்து வெளியேற்றப்பட்டு அவர்கள் கோரிக்கைகளுடன் அரசாங்கத்திடம் வரவேண்டிய நிலைமை ஏற்படும். இதை அரசாங்கம் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொண்டு விடைபெறுகிறேன்.

**திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் :** ஆன் எ பாயின்ட் ஃப் ஆர்டர், சார். சட்டமன்றத்திலே பத்திரிகை படிக்கலாமா ?

**திருமதி டி. என். அனந்தநாயகி :** நான் பத்திரிகை படிக்கவில்லை. பத்திரிகையிலே வந்த பட்ஜெட்டைப் பற்றித்தான் பார்த்துக்கொண்டிருந்தேன்.

**Sri K. S. G. HAJA SHERIFF :** Mr Chairman, Sir, I rise to support the speech delivered by the Hon. Chief Minister on the budget and also congratulate him on presenting a surplus budget. He has exhaustively dealt with the development and improvement effected by the various departments, particularly in the power and agricultural industries. But owing to the failure of monsoon



3rd March 1966] [Sri K. S. G. Haja Sheriff]

this year, production in agriculture has come down. Monsoon has failed not in our State only ; it has failed in most of the States in our country with the result that there is an overall shortage of food. To meet this shortage and relieve the difficulty of the people, the Government have resorted to import of foodgrains from foreign countries. There is nothing wrong in it. Any responsible Government, any Government wedded to the democratic method of governing, will have to see that they do not cause any difficulty to the people I have been listening to the speeches of my esteemed friends from the opposition criticising that even after seventeen years of Independence to the Government are resorting to import of foodgrains. I do not think that that is a fair criticism. If only they think in a dispassionate manner and come to a very sincere conclusion, they will certainly agree that we have improved our agricultural production to a very tremendous extent from what we were about ten or fifteen years ago. Fifteen years ago the total production in our State was only 2·7 million tons. But owing to bringing millions of acres of land under cultivation, various facilities given to the producer and various other methods adopted by the Government to-day the food production is more than 5·5 million tons. But if still we are not surplus, it is because of the increased demand from the people. In a developing economy, more and more money is pumped into the hands of the people. The first charge on that money is food. People who were not having one square meal a day previously are now taking three full meals a day. In addition to that, there are more people in our State to-day with the result that we are not able to meet the demand. In these circumstances, there is no alternative for the Government except to import foodgrains from wherever they can possibly import. I think it is not very fair to criticise the Government without helping them to evolve ways and means for increasing food production. I welcome the various measures that the Government have proposed to step up food production. At the same time I must express my disappointment that the Government have not come forward to promote joint stock companies to tackle agriculture on an industrial basis. I am one of those who believe that we should not go against our own ideals in land legislation. Millions of acres of land are available which are still undeveloped and uncultivated. The Government should have no objection to give these lands to joint stock companies. Each company can taked up a large area and do farming by mechanised method of cultivation. If we refer to the history of the United States of America, which is the biggest agricultural country in the world, we will find that, immediately after the World War II, they were in the same condition as the one in which we are at present. By the adoption of mechanised methods, by research to arrest the spread of any disease at a very early stage and by giving various facilities to the farmers, they have tremendously increased their output. We should also try to follow the same method, in addition to the provision of various facilities to the small agriculturists. We should give facilities to those people who can organise a joint stock company to tackle agricultural production on an industrial basis. Until then I do not think we will be able to

[Sri K. S. G. Haja Sheriff] [3rd March 1966

solve this difficult problem. Unless we make food available in plenty and at a very reasonable price. it will be very difficult to keep peace, and the various other problems connected with it can never be solved.

11-30 a.m.

It is not enough if we produce only agricultural products. We should also produce industrial products and consumer goods. Unless these goods are produced in an abundant measure, we will not be able to arrest these high prices and we will not be able to tackle this inflation. When we are pumping into the hands of the people about Rs. 2,000 to 3,000 crores and when the production does not keep pace with it, naturally there will be perpetual shortage, with the result that there will be high prices and the value of the rupee also will very much come down.

First of all, what are the conditions precedent to making the production go up. We should give the necessary facilities to the entrepreneurs and also to the industrialists. But are we giving them to-day ? Are the industrialists quite happy or has the production been stepped up ? I must say that conditions are not normal. The capital market, as the Government are aware, is very, very difficult. In a developing economy, if we are not going to make the necessary finances available at a reasonable rate of interest, there will be stagnation in the growth of industries and in their production with the result that the people of the country will be put to a lot of difficulties. If money is required for various social amenities, it is not only by taxation that that money could be obtained. The people at the helm of affairs must also think of aiming at higher production by creating the necessary conditions and offering facilities to the industrialists. Then only they could increase production, create more wealth and ease the economic condition so that the people would be more happy. But if we are going to levy more and more taxes, that will only be crippling the industries with the result that the production will be affected and the things will be working in a very vicious circle. So, I would suggest that not only the tax structure should be revised to a lower level but at the same time the Government should also give the necessary facilities for the natural capital formation for industries which are going to be promoted. To-day whatever may be the advantages offered by the industries or the entrepreneurs through the Board of Management, there will not be capital formation even to the extent of a few thousands of rupees. That is because of the high rate of interest being charged for the money advanced to them and money is not easily given by the banks to the people who are already in the industrial and business fields and the banks which had been giving them credits apply the credit squeeze very often. Where will they go for money ? Naturally they will be forced to go to the Multanees or private banks, with the result that they will have to pay more and more interest. Consequently, it will have its impact on the goods coming out of the factory and they will be coming out with added and increased cost. So, if any new enterprise is to be promoted, it would be very difficult for that enterprise to get the



3rd March 1966] [Sri K. S. G. Haja Sheriff]

capital formation. I am perfectly aware that apart from the Governmental agencies, financial institutions are prepared to advance crores and crores of rupees but these institutions are doing so only from the money taken from the Government money. After all, the Government money is public money. I would like to know which of the two alternatives are good—whether the Government want the public to invest their amount on the industries started by the industrialists or whether they would like these industrialists to depend upon the Government for their capital formation ? I submit, Mr. Chairman, that natural climatic conditions should be created for the capital formation and the industrialists should not depend upon the various financial institutions.

Sir, I am also disappointed to find that nothing has been mentioned in the Budget speech, about this Metropolitan City. This City is devoid of many important facilities. This City has become an international city and we find that thousands of foreigners visit this city day-in and day-out. First and foremost, we should tackle the beggar problem. The begger problem is becoming more and more increasing and it has assumed a menacing proportion. We will find in churches, mosques and temples thousands of beggars with highly infectious diseases flocking around those places and naturally they will be carrying these diseases to the people who visit those sacred places. I would suggest that this problem requires to be attended to immediately.

Sir, I remember last year when I was speaking on the Budget, I requested the Government to examine the proposal regarding beach in North Madras. There is a strip of land adjoining the sea running from Royapuram to Ennore to a distance of nearly 1½ to 2 miles and it is as long as the Marina beach. I suggest that this strip of land should be made into a beach for the convenience of the people who are residing in North Madras. I do not know whether the Government have taken up this matter and given earnest consideration to it. If they have not done so, I would request the Government very earnestly to take up the matter and do the needful.

Sir, the Tuticorin harbour is being developed into a major harbour and the facilities that a major harbour should possess; are being provided for that harbour. But what will be the use of that harbour, if that harbour does not divert the trade of neighbouring districts like Tirunelveli, Ramanathapuram, Madurai, Kanyakumari and a part of the Tiruchirappalli district ? Sir, unless industries are spread over the interior parts and not confined only to metropolitan cities or round about them, I am afraid that the development of the Tuticorin harbour will not be a very successful one. So, I suggest that the Government should adopt a policy of diverting trade to the interior parts of the districts so that the districts will become popular. For instance, when we locate a big industry in a particular place, at least 20 to 25 miles of area around that place will become very active and a lot of activities can be carried on there. So, from that angle, I would request the Government to see that more and more industries are diverted particularly around these districts.

[Sri K. S. G. Haja Sheriff] [3rd March 1966

Sir, I do not know whether the Government are still fighting with the Ministry of Transport in charge of Railways regarding the proposal to introduce the broad-guage railway system in the far South. After having developed a major port, if we do not still have a broad-guage railway system we will not be able to carry the large quantity of goods through the metre-guage system to the port. As the port will be handling a large volume of traffic, it is very vital that the entire Southern Railway should be converted from metre-guage into broad-guage system. It is also very vital for the development of industries to have a broad guage system. So, I would request the Government to take up this matter and see that this is done.

In conclusion, Mr. Chairman, I would like to point out that there is nothing wrong in our economy. Our economy is very stable and it is firmly rooted and things are going on very smoothly except in a few cases where there are little difficulties. If these difficulties are solved, I can assure my esteemed friends in the Opposition that our economy will be going up very rapidly and much more to the admiration of foreigners. The foreign people who are coming to our place to examine our economy have all certified that our economy is the soundest one ; otherwise we would not have got billions and billions of dollars of foreign exchange and other facilities from the foreigners. If these small difficulties towards promotion of the various industries are being removed and if the banks are advised that they should give financial help to the entrepreneurs and to those managing big industries and to those who want to start small industries also, I think Government would have done the highest service for inducing more and more industries to come.

Thank you, Sir.

* **திரு. இரா. நல்லமுத்து :** மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, இந்த ஆண்டு நிதி நிலை அறிக்கையில் விவசாயத்திற்கு முக்கியத்துவம் அளித்து, சிறிய நீர்ப் பாசனத் திட்டங்களுக்கும், நடுத்தர பாசனத் திட்டங்களுக்கும், முக்கியத்துவம் கொடுத்து, இந்த நிதி நிலை அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், சேலம் மாவட்டத்தில் மேட்டூர் நீர்த் தேக்கம் இருந்தும் சேலம் மாவட்டத்திலுள்ள விவசாயிகளுக்கு, அந்த நீர்த் தேக்கத்தின் மூலமாக எந்த விதமான பயனும் ஏற்படுவதில்லை. அப்போதே இதன் மூலமாக சேலம் மாவட்டத்திலுள்ள விவசாயிகளுக்கு எவ்விதம் பாசன வசதி அளிப்பது என்பது பற்றி ஆராய்ச்சி செய்யப்படவில்லை என்று சொல்லப்படுகிறது. சுதந்திரம் வந்த பிறகு இது பற்றி பரிசீலனை செய்யப்பட்டதாகவும் தெரிகிறது. ஆனால் பத்து ஆண்டுகளாக இது பரிசீலனையில் இருந்தும் இதுவரையிலும் அந்தப் பகுதியிலுள்ள விவசாயிகள் இது சம்பந்தமாக பல மகாநாடுகள் கூட்டியிருந்தும், அவற்றில் அமைச்சர்களை அழைத்து வந்து தங்கள் குறைகளை தெரிவித்தும், பல விண்ணப்பங்கள், மகஜர்கள் அனுப்பியும் இதுவரை பத்து ஆண்டுகளாக எந்த விதமான நடவடிக்கையும் எடுத்திருப்பதாகத் தெரியவில்லை. அந்தப் பகுதிக்கு மிகவும் தேவையாக இருக்கின்ற திருமணிமுத்தாறு திட்டத்தைப் பற்றிப் பல தடவை கூறியாய்விட்டது. இப்போதாவது நான்காவது திட்டத்தில் இந்த திருமணிமுத்தாறுத் திட்டத்தை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மேட்டூர் அணையிலிருந்து கிழக்குகரையோரமாக திருச்செங்கோடு தாலுகாவில் பள்ளிப்பாளையம் வரையில் நீடிக்கப்பட்டிருக்கிறது. பத்து மைல் நீளம் ஜேடர்பாளையம் வரையில் ஒரு வாய்க்காலை



3rd March 1966] [திரு. இரா. நல்லமுத்து]

எடுத்துக்கொண்டால் சுமார் 10 ஆயிரம் ஏக்கர்களுக்குப் பாசன வசதி கிடைக்கும். இதையும் அரசாங்கம் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் சேலம் மாவட்டத்தில் கொள்முதல் செய்கின்ற விஷயத்தில் ஒரு விஷயத்தை மிக நன்றாகக் கவனிக்கவேண்டும். அதாவது திருச்செங்கோடு தாலுகாவில், கொள்முதல் செய்கின்ற விஷயத்தில் சாதாரணமாக இரண்டு ஏக்கர் நிலங்களை வைத்துக்கொண்டு கிணற்றுப் பாசனத்தையே நம்பிக்கொண்டு இருக்கக்கூடியவர்கள் அதிகம் பேர் இருக்கிறார்கள். அதிலும் இந்த வருடம் சரியான முறையில் விவசாயம் செய்ய முடியவில்லை. அந்த நிலங்கள் எல்லாம் கரம்பாகவே கிடக்கின்றன. இப்படிப்பட்ட நிலங்களை எல்லாம் கொள்முதல் செய்கின்ற அதிகாரிகள் பார்வையிடாமல் ஒரேயடியாக இவ்வளவு நெல் நீங்கள் தர வேண்டும் என்று சொல்லிவிடுகிறார்கள். அது மட்டுமல்ல, தண்ணீர் இல்லாமல் எப்படி விவசாயம் செய்வது என்பதைப் பற்றி அவர்கள் கவலைப்படாமல், விலைக்கு வாங்கியாவது கொடுங்கள் என்று அதிகாரிகள் விவசாயிகளை வற்புறுத்துகிறார்கள். இந்த விதத்தில் அதிகாரிகள் கொள்முதல் செய்கிறார்கள். விநியோகம் செய்கின்ற விஷயத்திலும் சில கோளாறுகள் நடைபெறுகின்றன. நகரப் புறங்களில் கார்டுகள் மூலமாக உணவுப் பொருட்களை விநியோகம் செய்து வருகிறார்கள். ஆனால், கிராமப் புறங்களில், சொந்தமாக நிலம் இல்லாத மக்கள் பட்டா நிலம் இல்லாத மக்கள், ஏழை அரிஜன மக்கள் இருக்கிறார்கள். இவர்களுக்கு சர்க்கார் கொடுக்கின்ற உணவுப் பொருட்கள் கிடைப்பதில்லை. அவர்கள் வெளியில் அதிக விலை கொடுத்து வாங்கிச் சாப்பிடுகிறார்கள். வாரத்திற்கு ஒரு முறை சந்தைக்கு சென்று உணவுப் பொருட்களை வாங்கிக்கொண்டு போகிறார்கள். சந்தையில் உணவுப் பொருட்களை விற்பதற்கு அனுமதிப்பதில்லை. இதனால் ஏழை மக்களுக்கு பல விதமான கஷ்டங்கள் ஏற்படுகின்றன. ஆகவே, கிராமங்களிலுள்ள ஏழை மக்களுக்கும் சரியான முறையில், அதாவது கார்டு முறையிலேயே உணவுப் பொருட்களைக் கொடுப்பதற்கு சர்க்கார் வழிவகை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கிணற்றுப் பாசனத்தை நம்பி விவசாயம் செய்துகொண்டிருக்கும் ஏழை மக்களுக்குப் போதுமான அளவில் காலாகாலத்தில் ரசாயன உரம் கிடைப்பதில்லை. கிணற்றுப் பாசனத்தின் மூலம் ஏதாவது பலன் கிடைக்குமா என்று அவர்கள் விவசாயம் செய்து பார்க்கும்போது, அவர்களுக்கு வேண்டிய உரம் கிடைப்பதில்லை. பிற்பாடு பல இன்னல்களுக்கிடையே விவசாயம் செய்தாலும், பூச்சிகள் காரணமாக, விவசாயம் மிகவும் பாதிக்கப்படுகிறது. ஆகவே, விவசாயிகளுக்கு விவசாய வருமான வரியை ரத்து செய்ய வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

சேலம் மாவட்டத்தில், விவசாயம் செய்வதற்கு வசதியாக ஏராளமான தரிசு நிலங்கள் இருக்கின்றன. இவற்றை நிலமில்லாத ஏழை மக்களுக்குக் கொடுத்து அதற்கான வசதிகளை எல்லாம் செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் அரிஜன மக்களுக்கு மனைக்கட்டுக்காக நிலம் கொடுக்கிற விஷயத்தில் மிகுந்த காலதாமதம் ஏற்படுகிறது. இதை எப்படி தவிர்ப்பது என்பதைப் பற்றி ஆராய்வதற்காக மதிப்பிற்குரிய பரமேஸ்வரன் அவர்கள் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டது. அந்தக் குழு சுமார் இரண்டு ஆண்டு காலமாக ஒவ்வொரு மாவட்டத்திற்கும் சென்று பரிசீலனை செய்து ஒரு அறிக்கையை அரசாங்கத்திறகு சமர்ப்பித்திருக்கிறது. அதன் மீது இரண்டு ஆண்டு காலமாக எந்த விதமான நடவடிக்கையும் எடுத்துக்கொள்ளவில்லை. பன்னிரண்டு கோடி ரூபாய் செலவு செய்தால் மூன்று ஆண்டுகளுக்குள் அரிஜனங்கள் அனைவருக்கும் வீட்டு மனை அளிக்க முடியும் என்று எடுத்துக் கூறப்பட்டிருந்தது. அதன்மீது அரசாங்கம் எந்த விதமான நடவடிக்கையும் எடுத்திருப்பதாகத் தெரியவில்லை. இதற்குத் தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(கனம் உதவி சபாநாயகர் தலைமை)

சேலம் மாவட்டத்தில் பறி தைக்கும் தொழிலாளர்கள் சுமார் 25 ஆயிரம் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். மின்சார விஸ்தரிப்பு ஏற்பட்டதின் காரணமாக பம்பு செட்கள், மற்றும் இதர காரியங்கள் இவற்றுக்கெல்லாம் மின்சாரம் உபயோகிக்கிற காரணத்தால் பறி தைக்கும் தொழிலாளர்கள் சேலம் மாவட்டத்திலும், கோயம்புத்தூர் மாவட்டத்தில் ஒரு சில பகுதிகளிலும்—சுமார் 25 குடும்பங்கள்—பாதிக்கக்கூடிய நிலைமையில் இருக்கின்றன. இவர்களுக்கு மாற்றுத் தொழில் ஏதாவது கொடுத்து அவர்களுக்கு வாழ வழிவகை செய்து கொடுக்க வேண்டும் என்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.

அரசாங்க அதிகாரிகளைப் பொறுத்த வரை, மத்திய அரசாங்க அதிகாரிகளுக்குத் தற்போது சம்பளத்தை அதிகரித்திருக்கிறார்கள். அதே போன்று மாநில அரசாங்க அதிகாரிகளுக்கும் சம்பள உயர்வு கிடைக்கும் என்று மாநில அரசாங்க அதிகாரிகள் எதிர்பார்த்தார்கள். ஆனால், இந்த நிதி நிலை அறிக்கையில் அதைப் பற்றி ஒன்றும் குறிப்பிடாததைப் பார்த்து அவர்கள் ஏமாற்றம் அடைந்திருக்கிறார்கள். அவர்களுக்கும் நல்ல முறையில் வாழ அவர்களுடைய சம்பளத்தை ஓரளவுக்கு உயர்த்த வேண்டும் என்று கூறிக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. ஏ. எஸ். தக்ஷிணாமூர்த்தி கவுண்டர் :** சட்ட மன்ற உதவித் தலைவர் அவர்களே, போற்றினும் போற்றுவர், அல்லது தூற்றினும் தூற்றுவர் என்று கூறப்படுகின்ற புலவர் பெருமக்களாலும் குறை சொல்லவொலாத நல்ல, தெளிவான தமிழ் உரை நடையைக்கொண்டு திகழ்வதும் புதிய வரிகள் எதுவுமற்றதும், 31 லட்சம் மிகுதி காண்பதும் ஆண்டு சென்றார்க்கும், ஆளிய வருவார்க்கும் இடை நின்ற காலம் எனக் கூறுவதுபோல, தமிழ் நாட்டில் வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கத் தக்க செயலாக்கம் நிறைந்த மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கடைசி ஆண்டுக்கு உபசாரம் சொல்லுகின்ற நிலையிலும், 'யானை வரும் பின்னே, மணி ஓசை வரும் முன்னே' என்று கூறுவது போல, நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு வருகை கூறுகின்ற நிலையிலும், அமைத்திருக்கின்ற, இந்த ஆண்டின் நிதி நிலை அறிக்கையை நான் மனநிறைவோடு, நன்றிப் பெருக்கோடு, வரவேற்கின்றேன். உலகியலை பல்லாற்றானும் நுணுக்கமாகத் துருவிப்பார்த்த வள்ளுவர் ஒரு நிலையை அறுதியிட்டுக் கூறுகின்ற நிலையில், 'பொருளிலார்க்கு இவ்வுலகில்லை' என்று கூறிய அவர், அதன் நிமித்தம் எடுக்க வேண்டிய ஒரு நிலை பற்றியும் கூறுமிடத்து, "முயற்சி திருவினையாக்கும்" என்றும்,

"ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்
தாழா உஞற்று பவர்" . . . . . என்றும்,

"இலமென்று அசைஇ இருப்பாரைக் காணின்
நிலமென்னும் நல்லாள் நகும்" . . . . . என்றும்

கூறியதற்கேற்ப, யாதும் இல்லை. அதற்கேற்ற சூழ்நிலை ஒன்றுமில்லை என்ற இழிதகைமையான நிலைமையிலும், பலவகையாலும் முயன்று, மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களைத் தீட்டி, ஏழைமையற்றதும், படிப்பு அறிவுள்ளதுமான ஒரு நிலையை தோற்றுவிக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு, மிகவும் முயன்று அவல நிலைமைகளை மாற்றி, நாட்டை முன்னேற்றுவதற்கான நிலைமையில் அமைந்திருக்கின்ற இந்த நிதிநிலை அறிக்கையை வரவேற்காமல் இருக்க முடியாது. சாதாரணமாக, தமிழகத்திலே ஒரு பழமொழி கூறுவது உண்டு. "குடிப் போனவனுக்கு ஒன்பதாம் இடத்தில் குரு ; சிக்கினவனுக்கு ஜன்மத்திலே சனி" என்று கூறுவது உண்டு. அதனுடைய கருத்து என்னவென்றால், வள்ளுவன் சொன்னதுபோல, குடியோம்பல் என்ற தலைப்பின்படி குடும்பத்தைக் கட்டிக்காக்கும் தலைவனாக இருந்து ஓம்புவதற்குப் பல முயற்சிகளைச் செய்து கொண்டிருக்கின்ற ஒருவனுக்குப் பல இடையூறுகள் வருவது பல துன்பங்கள் நிகழ்வது உலகத்திலே நாம் காண்கின்ற நிலை. துன்பங்களைப் பொருட்படுத்தாது பணி செய்வதையொத்து இந்தப் பெரிய பரந்த நாடாகிய இந்தக் குடும்பத்தை முன்னணிக்குக் கொண்டுவர





வேண்டுமென்று இந்தக் குடும்பத்தினுடைய தலைவனாகிய காங்கிரஸ் சபையும் பல வகையிலேயும் முயற்சி எடுத்துக்கொண்டு, அந்த வகையிலே பல இடையூறுகள், பல துன்பங்கள், பல இடுக்கண்கள் வந்தாலும் கூட, அதைச் சமாளித்து, எதிர்த்து நின்று, மக்களை ஓம்பி வளப்படுத்துகின்ற நிலையிலே இருக்கின்ற பணிக்கு ஈடாக அமைந்திருக்கிறது இந்த நிதிநிலை அறிக்கை என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

வரி விதிப்பு முறையைப் பற்றி நூல்களிலே பரவலான கருத்துக்கள் காணப்படுகின்றன. கம்பன் சொல்லுகிறான்—

"முறையறிந்து அவாவை நீக்கி முனிவுழிமுனிந்து வெஃகும்
இறை அறிந்து உயிர்க்கு நல்கும் இசைகெழு வேந்தன் காக்க"

என்று கூறுகின்றான். பக்குவம் தெரிந்து, சூழ்நிலையை ஏற்படுத்தி, அதிக ஆசைப்படாமல், குடிமக்களிடத்தில் திரையைப் பண்போடு, அளவோடு, காலத்தோடு, வாங்குகின்ற நிலையை வரவேற்கிறான் கம்பன். இது தான் அரசன் கடமை என்று கூறுகின்றான். "ஆறில் ஒன்று கொற்றவர் கடமை கொள்ள" என்று கூறுகின்றார் சேக்கிழார். "கொள்ள" என்ற வார்த்தையைப் போட்டிருக்கிறார். அதைக் கவனிக்க வேண்டும். வரி வாங்குவது கடமை என்பது அதன் பொருள். எந்த ஒரு ஆட்சியோ, அரசாங்கமோ வரியே வாங்காது இருந்தது என்பது இந்த நாட்டிலேயோ வேறு எந்த நாட்டிலேயோ கிடையாது. புறநானூறிலே இன்னொன்று வருகிறது. சிறிய நிலப்பரப்பு ஆனாலும்கூட நெல் விளைந்தால், அதை அறுத்து, மணியாக்கி, கவளம் கவளமாகக் கொடுக்கும்போது யானைக்கு பல நாட்களுக்கு தீனியாக உதவும் என்றும், யானையையே, பெரிய நிலப் பரப்பாக இருந்தாலும், அதிலேயே மேயவிட்டால் தின்னுவது குறைவாகவும் மிதித்துக் கெடுப்பது அதிகம் என்றும் கூறப்பட்டிருக்கிறது. வரி வாங்குவதிலே, சிறிய சிறிய அளவாக பல வழிகளில் வரி வாங்குவது அரசின் கடமை, பண்பு என்று கூறப்படுகிறது. குடிமக்களை வருத்தி, வன்மையாக, இயலாத வகையிலே, நல்ல சூழ்நிலையை உண்டாக்காத நிலையிலே வரி கொள்ளுவது, வாங்குவது தவறே தவிர, குடி மக்களுக்குக் கொடுக்கும் சூழ்நிலையை உற்பத்தி செய்து சிறிது சிறிதாகப் பல வகைகளில் வரி வாங்குவது என்றைக்கும் வரவேற்கத் தக்க ஒன்று என்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அந்த ஒரு வகையிலேதான் தமிழக ஆட்சியானது நம் தமிழக மக்களிடத்திலே திரை வாங்குகிறது, வரி வாங்குகிறது. இதை மிகைப்படுத்திக் கூற இயலாது என்று அறுதியிட்டுக் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். பல வகைகளிலே மக்கள் விருப்பம், மக்கள் வருவாய், அதிகரித்துக் கொண்டு இருக்கின்ற இந்த நாளிலே, சூழ்நிலையை ஏற்படுத்தி, அதற்குப் பிறகு திரை வாங்குவதில் எந்தவிதத் தவறும் இல்லை. சொன்னார்கள் போன நான்கு மாதங்களுக்கு முன் தான் நிலவரி, நான்கில் ஒன்று அதிகப்பட்டது என்று. விவசாயிகள் மரபில் வந்தவன் நான். நான் சொல்லுகிறேன். எந்த விவசாயியும் வரி கொடுக்க முடியாது அல்லது கொடுக்கக் கூடாது என்று எண்ணுவது கிடையாது. நிச்சயம் அந்தமாதிரி எண்ணுவது கிடையாது. வரி நிலத்திற்காகக் கொடுப்பது என்பது கடமை, குருக்களுக்குக் கொடுப்பது போல. வரி கொடுப்பது என்பது அவர்களுக்கு உரிமை, வரி கொடுக்கவில்லை யென்றால் அவர்களுக்கு ஆட்சியில் இருக்கின்ற உரிமை போகிறது, பொறுப்பு போகிறது. அதனால் சமுதாயத்திற்குச் செலுத்தும் உரிமை போகிறது என்று அறுதியிட்டுக் கூற ஆசைப்படுகிறேன். விவசாயப் பெருங்குடி மக்களுக்கு வரியே கூடாது என்று சொல்லுவதை, அந்தக் கோட்பாட்டை நான் வலிமையோடு மறுக்கின்றேன் என்று நான் தாழ்ந்த வணக்கத்துடன் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகின்றேன்.

அதற்குமேலே, கீழ் பவானி வாய்க்காலைப்பற்றி இந்த நிதிநிலை அறிக்கையிலே இரண்டு இடங்களிலே குறிக்கப்பட்டிருக்கின்றது. சாதாரணமாக இந்த நிதிநிலை அறிக்கையைப் பற்றியோ, அல்லது சென்ற ஆண்டு நடப்பைப் பற்றியோ, பெரும் குறை கூறவேண்டுமென்றால், அது இயற்கையால் வந்த ஒரு கேடு, மழையின்மைதான். திருக்குறளில். சொன்னார்—

"விண்ணின்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்து
உள்நின் றுடற்றும் பசி"

என்று தெளிவாகக் கூறியிருக்கிறார் வள்ளுவர். எந்த ஒரு நாட்டிலே பருவ மழை தவறி விடுகிறதோ அந்த நாட்டிலே பசிப் பிணி நிச்சயமாக வரும். மக்களுக்கு உணவுப் பஞ்சம் வரும் என்று கூறுகின்றார். அதனால் தான் இன்னும் சிலப்பதிகாரத்தில் கூட கடவுள் வாழ்த்தாக மழையைப் பற்றி வாழ்த்துகிறார் இளங்கோவடிகள்.

" மாமழை போற்றுதும் மாமழை போற்றுதும்
வீங்கு நீர்வேலி உலகிற்கு அவன்
அளி போல் மேல் நின்று
தான் சுரத்தலான் "

என்று மாமழையைப் போற்றுகிறார் இளங்கோவடிகள். என்னதான் விஞ்ஞான உலகத்தில் வாழ்கிறோம் என்றாலும், சந்திர மண்டலத்தைத் தாவிப் பிடித்தாலும் இயற்கையின் ஒத்துழைப்போடுதான் இந்த உலகத்திலே இருக்க முடியும். சென்ற ஆண்டிலே நமக்கு ஏற்பட்டிருக்கிற குறையெல்லாம் மழையின்மை ஒன்றுதான். அதனால்தான் பெரிய குறை. அரசைச் சொல்லலாம். புறநானூறில் சொல்லுகிறார்—

" மாரி பொய்ப்பினும் காவலன் பழிக்கும்
கண்ணகன் ஞாலம் "

என்று. இந்த அரசின் ஆட்சியில் மழையே இல்லை என்று சொல்லுவது மரபு. இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன்பு பாடிய பாட்டு இது. புலவர்களுக்கெல்லாம் தெரியும்.............

**புலவர் கா. கோவிந்தன் :** அதே பாட்டில் மழையின்மைக்கு அரசு காரணம் என்று சொல்லப்பட்டிருக்கிறது—

" கோள் நிலை திரிந்திடின் கோள் நிலை திரியும்,
கோள் நிலை திரிந்திடின் மாரிவறங் கூரும் "

என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆக அந்தத் தொடர் இருக்கிறது. அதையும் சொல்லிவிட்டால் நன்றாக இருக்கும்.

**திரு. ஏ. எஸ். தக்ஷிணாமூர்த்தி கவுண்டர் :** சட்ட மன்றத் துணைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டுதானே மழையில்லை. 17—18 ஆண்டுகளாகவா மழையில்லை ? இந்த ஆண்டுதானே பருவம் மாறி மழை பெய்தது ? சேலம் மாவட்டம், கோவை மாவட்டம், தவிர எல்லா இடத்திலும் மழை பெய்தது. அரசை மக்கள் குறை சொல்லுவது இயற்கை. " மாரி பொய்ப்பினும் காவலர் பழிக்கும் கண்ணகன் ஞாலம் " என்று அழகாகக் கூறப்பட்டிருக்கிறது. அரசனைச் சொல்லுவதுதான் பழக்கம். பழமொழி நானூறில் கூட சொல்லுவது உண்டு. பசுக்களுக்காக கோவர்த்தனத்தைக் குடையாகப் பிடித்த கண்ணனைக்கூட மாட்டு இடையன் என்று சொல்லுவார்கள்—பழமொழி நானூறில் உள்ள பாடல் இப்போது ஞாபகத்திற்கு வர மறுக்கிறது. அந்த மாதிரி குறை என்று சொல்லக்கூடிய ஒன்று, அரசாங்கத்திலே, நிர்வாகத்திலே, எங்குமே குறை இல்லை என்று யாருமே சொல்லவில்லை. குறை என்பது இயற்கையிலேயேகூட இருக்கின்றது. இயற்கையை நுண்ணியதாக ஆராய்ந்த புத்தர் பெருமான் கூட இயற்கையிலேயே மோசமாக நடவடிக்கைகள் இருக்கின்றன. இயற்கையை ஆட்டுவிக்கும் ஆண்டவன் உண்டு என்றால் அந்தக் கடவுளைக் கருணையுள்ளவன், அருள் கொண்டவன், அன்பு கொண்டவன் என்று எப்படிச் சொல்ல முடியும் ? பிரத்தியட்சமாகப் பார்க்கும்போது கடவுளே கிடையாது என்ற முடிவுக்கு அவர் வந்தார். அதுபோல குறை என்று சொல்லக்கூடிய ஒன்று எங்கும் இருக்கிறது. எப்பொழுதும் இருக்கிறது. குறை என்பது அரசாங்கத்தினிடமும் உண்டு. நிர்வாகத்தினிடமும் உண்டு, மக்களிடமும் உண்டு, எல்லோரிடத்திலும் உண்டு. அதைத் திருத்திக் கொள்ள வேண்டுவதே—

" செவிகைப்ப சொல் பொறுக்கும் வேந்தன்
கவிகைக்கீழ் தங்கும் உலகு "

என்று அறுதியிட்டுக் கூறப்பட்டிருக்கிறது. எதிர்க்கட்சியினர் சொல்லக்கூடிய





குறையாக இருந்தாலும், மக்கள் சொல்லக்கூடிய குறையாக இருந்தாலும், யார் சொல்லக்கூடிய குறையாக இருந்தாலும், அதை அலட்சியப்படுத்தாமல் கேட்டுக்கொண்டு எவன் ஒருவன் பொறுமையாக இருக்கிறானோ அந்த ஆட்சியின் கீழ் உலகம் பூராவும் வரும் என்று அறுதியிட்டுக் கூறுகின்றார். ஆகையினால் குறை இருக்கிறது என்ற காரணத்தால் அடிப்படையையே மாற்றிவிட்டால் மக்களுடைய பாடு என்ன ஆகும் என்று கேட்கிறேன். மக்களுடைய வாழ்வு நன்கு அமைய வேண்டும். எதிர்காலத்தில் பள்ளிகளில் படித்துக்கொண்டிருக்கும் சிற்றெறும்பு போல் ஊர்ந்து சென்று கொண்டிருக்கும் அவ்வளவு இளைய மக்கள் தொகையும் என்ன ஆகும் ? குறை இருக்கிறது என்று, அடிப்படையையே தகர்த்து விடக்கூடாது என்பது தான் என்னுடைய தாழ்மையான வேண்டுகோள்.

நான் கூட ஒன்றிரண்டு குறைகள் சொல்லப் போகிறேன். கீழ் பவானிப் பகுதியிலே இந்த ஆண்டில் தண்ணீர் கிடையாது. அதற்கு மூல காரணம் மழை கிடையாது. அணையில் தண்ணீர் இல்லை. அதனால் தண்ணீர் வரவில்லை. ஏதோ தஞ்சாவூருக்குத் தண்ணீர் விட்டுவிட்டார்கள். அதனால் தண்ணீர் விடவில்லை என்று நான் சொல்லுவதற்குத் தயார் இல்லை. அங்கும் கூட விளைச்சல் இல்லை. தாளடிப் பயிரும் வரண்டு போய்விட்டது என்று நேற்றுக் கூட ரெவின்யூ போர்டு மெம்பர் திரு. விசுவநாதன் அவர்கள் குறிப்பிட்டார்கள். தமிழ்நாட்டு நெற்களஞ்சியம் என்று சொல்லக்கூடிய தஞ்சையிலேயே தானியம் விளைச்சல் இல்லை என்றால் நமக்கு வேதனையாக இருக்கின்றது. கீழ்பவானிப் பகுதியிலே ஒரு குறைபாடு என்னவென்றால், அங்கு புதுக் கிணறுகள் வெட்டக்கூடாது என்று ஒரு நிபந்தனை இருக்கின்றது. நிதிநிலை அறிக்கையைப் பார்த்தால் கிணறுகள் வெட்டுவதற்கு ஊக்கமும், ஆக்கமும் கொடுக்கிறோம், கடன் வசதிகள் செய்து கொடுக்கிறோம் என்று கூடச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், கீழ் பவானிப் பகுதியில் மட்டும் இந்த ஜமாபந்தியில் புதுக் கிணறுகள் தோண்டியதற்காக எக்கச்சக்கமாக தண்டத் தீர்வை போட்டிருக்கிறார்கள். இங்கு அமர்ந்திருக்கிற அமைச்சர்கள் கூடியவிரைவிலே இதைக் கவனித்து அந்த ஆயக்கட்டு பகுதியிலே நிறைய கிணறுகள் வெட்டுவதற்கு உடனே அனுமதி வழங்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

அது அன்னியில் இன்னொன்றும் சொல்ல விரும்புகிறேன். இப்பொழுது இருக்கிற என்னுடைய தொகுதியில் சூரங்கம்பள்ளம், பெரும்பள்ளம் என்ற இரண்டு அணைக்கட்டு வேலைகள் நடந்துக்கொண்டிருக்கின்றன. அந்த அணைக்கட்டு முடிந்தால் நல்ல லாபகரமாக இருக்கும். அதை இன்னும் கொஞ்சம் விரைவாக நடத்திக்கொடுத்தால், அதாவது இன்னொரு மூன்று மாதங்களுக்குள் தண்ணீர் விடும்படி உத்தரவு போட்டால், உடனே அந்தப் பிரதேசங்களுக்கு நல்ல பலன் கிடைக்கும். மேலும் சிறிய சிறிய பள்ளங்களில் உரம்புத் தண்ணீர் ஓடுகிறது. அதுவும் ஒரு விவசாயிக்குச் சொந்தமான இடத்தில் அதைப் பயன்படுத்திக்கொண்டால் 10, 20 ஏக்கர் நிலங்களுக்குத் தண்ணீர் பாயும். இதுபற்றி தாலுகா ஆபீஸிலும், ஆர். டி. ஓ.விடமும் விண்ணப்பங்கள் போட்டிருந்தாலும் அனுமதி கிடைப்பதில்லை. அந்த நீர் ஓட்டப் பகுதியிலே இருந்து ஒரு சிறிய வாய்க்கால் வெட்டி அந்தத் தண்ணீரை மேடான பகுதிக்குக் கொண்டுபோய், அங்கே கிணறு தோண்டி அதில் தண்ணீரை நிரப்பி பம்பு செட்டுகள் வைத்து தண்ணீர் இறைப்பதற்குக் கூட தடங்கல் ஏற்பட்டிருக்கிறது. சென்ற ஆண்டு 10, 15 பேர்களுக்குத் தண்டத் தீர்வை விதித்தார்கள். அது பற்றி ரிட் மனுக்கள் போடப்பட்டு, இப்பொழுது விஷயம் அப்படியே தடங்கலாக இருந்துகொண்டிருக்கிறது. அந்த நீர் எந்தவிதமான பாசன ஆதாரத்தின் கீழும் சட்டபூர்வமாக வரவில்லை. அது வீணாகப்போகின்ற நீர். அதை பம்புசெட்டுகள் வைத்து இறைக்க அனுமதி கேட்டாலும், மறுக்கப்படுகிறது. முன்பு கூட அமைச்சர் கக்கன் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். " ஆண்டவன் கொடுக்கிறார், தண்ணீர் போகிறது, ஏன் இப்படியெல்லாம் நடக்கவேண்டும் " என்று சொல்லியிருக்கிறார். இப்படிச் சொன்னது 7, 8 வருஷங்களுக்கு முன்பு திரு. சுப்பிரமணியம் இருந்தபொழுது. அது பற்றி எந்தவிதமான

உத்தரவும் இதுவரையில் போடப்படவில்லை. அது சம்பந்தமாகத் தண்டத் தீர்வை விதித்திருக்கிருர்கள். அதைக் கொஞ்சம் பார்த்து, பரிசீலனை செய்து உடனடியாக ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். பல நாட்களாகக் கேட்டுக்கொண்டிருக்கிறேன். மொசுக்காடு பகுதியில் சித்தோடு பக்கம் 300 ஏகராவுக்குத் தண்ணீர் பாய்ச்ச முடியும். அது பற்றி விண்ணப்பம் கூடக் கொடுத்திருக்கிறேன். பரிசீலனையில் இருக்கிறது என்று எனக்கு ஒரு பதிலும் வந்திருக்கிறது. ஒரு சிறிய கால்வாய் வெட்டினுல் போதும். அதைக் கொஞ்சம் விரைவாக நடத்திக்கொடுக்க வேண்டும் என்று இரண்டு அமைச்சர்களையும் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த ஆண்டில் காலிங்கராயன் கால்வாய் பகுதியிலே மழை இல்லையாதலால் மூன்ரும் போகம் நெல் சாகுபடி செய்யவேண்டாம் என்று விவசாயிகளுக்குச் சொல்லப்பட்டிருக்கிறது. அந்த நீர்ப்பிடிப்பு பகுதியிலே கொஞ்சம் மழை பெய்து, அணைக்கு தண்ணீர் வந்திருக்கிறது என்று நான் கேள்விப்படுகிறேன். பெரும்பாலான இடங்களில் நடவு நட்டாகிவிட்டது. மூன்ரும் போகம் நெல் வேளாண்மை செய்தாகிவிட்டது. ஆகவே, அதற்கு வசதி செய்துகொடுப்பதற்கு கூடியமட்டும் ஏப்ரல் 20-ம் தேதி வரை தண்ணீர் விடவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக, விவசாயம் பற்றி ஒரு செய்தி. விவசாயத்தைப் பொறுத்த மட்டில் மூன்று நிலைமைகள் இருக்கின்றன என்பதை நாம் அறிவோம். ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக விவசாயத் தொழிலில் ஈடுபட்டு, பரம்பரையாக அந்தத் தொழிலில் ஏற்பட்ட அனுபவத்தைக்கொண்டு விவசாயம் செய்துகொண்டிருக்கின்ற விவசாயப் பெருங்குடி மக்கள் ஒரு துறை. அடுத்தது சர்க்கார் சார்பிலே இயங்கக்கூடிய விவசாயத்துறை இலாகா. அது ஒரு துறை. மூன்ருவது விவசாயத்தைப்பற்றி அவ்வப்பொழுது நுணுக்கமாக ஆராய்ந்து அந்த நுணுக்கங்களை வெளியிடுகின்ற நிபுணர்கள் துறை என்பது ஒன்று. இப்படி மூன்று துறைகள் அல்லது நிலைகள் இருந்தாலும் நாம் கண்கூடாகக் காண்பது என்னவென்ருல், இப்பொழுது நடைமுறையில் இருக்கக்கூடிய எனக்குத் தெரிந்த பெருங்குறை என்னவென்ருல், இந்த மூன்று துறைகளும் இணக்கமாக ஒன்றுக்கொன்று தொடர்பு கொண்டு செயல்படுவதில்லை. இது நான் கண்ட உண்மை. ஒரு பக்கத்தில் அனுபவம் வாயிலாக பரம்பரையாக விவசாயம் செய்துகொண்டிருக்கிருர்கள் பெருங்குடி மக்கள். இன்னொரு பக்கத்தில் விவசாய இலாகா செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. மற்றொரு பக்கத்தில் நிபுணர்கள் எதைஎதையோ கண்டுபிடித்துக்கொண்டிருக்கிருர்கள். இந்த மூன்று துறைகளும் ஒட்டி இணக்கமாக வரவில்லை. விவசாய இலாகா துறையில் இருப்பவர்கள் ஏதோ சமயத்தில் விதை, பூச்சி மருந்துகள் கொடுத்துக்கொண்டிருக்கிருர்கள். இன்னொரு பக்கத்தில் நிபுணர்கள் என்று சொல்லக்கூடியவர்கள் என்ன கண்டு பிடித்திருக்கிருர்கள். விஞ்ஞான முறை என்று சொல்லக்கூடிய மாற்று வழிகளைப் பின்பற்றி அதிகப்படியாக சாகுபடி செய்யக்கூடிய அளவில் நிபுணர்கள் எந்த வழிகளையெல்லாம் கண்டுபிடித்திருக்கிருர்கள், அதை எப்படி சூழ்நிலைக்கு ஏற்ப, மண்வளத்திற்கேற்ப, சீதோஷ்ண ஸ்திதிக்கு ஏற்ப எந்த விதத்தில் நடைமுறையில் செய்யவேண்டும் என்பதெல்லாம் விவசாயிகளுக்கு இன்னும் கண்டிப்பாக தெரியவில்லை. சர்க்கார் கொண்டிருக்கிற லட்சியத்திலோ அல்லது கொள்கையிலோ எந்தக் குறையும் கிடையாது. அதை அமல் நடத்துகிற பொழுது ஏற்படுகிற ஒரு குழப்பம் தான் இதற்கெல்லாம் காரணம். யாருக்காக நன்மைகளைச் செய்துகொண்டிருக்கின்ருேமோ அவர்களுக்கு அந்த நன்மை போய் அடையாமல், விவசாயிகளிடத்திலே பெருங்குறையான ஒரு நிலைமை இருந்துகொண்டிருக்கிறது. இப்படியே போய்க்கொண்டிருந்தால் முன்னேற்றமே இருக்காது. இந்த மூன்று துறைகளும் எப்பொழுது ஒன்ருகச்சேர்ந்து செயல்பட ஆரம்பிக்கிறதோ, அன்று முதல் தான் விவசாயம் வளப்பம் பெறும். விவசாயிகளுக்குக் கடன் கொடுக்கிருேம். அதில் சரி பாதியை உரமாகவும், பாதியை ரூபாயாகவும் கொடுக்கிருேம். அதன் நோக்கம் என்ன? விவசாயிகளிடத்தில் அவ்வளவு அவநம்பிக்கை ஏற்படுவதற்குக் காரணம் என்ன ?





**கனம் திரு. பூ. கக்கன் :** விவசாயிகளிடத்தில் அவநம்பிக்கை ஒன்றும் கிடையாது. விவசாயிகளுக்கு உதவியாக இருக்கவேண்டுமென்பதற்காகத் தான் உரங்கள் கொடுக்கிருேம், விதைகள் கொடுக்கிருேம். இல்லாவிட்டால் அவர்கள் அதற்காக ரூபாயைச் செலவழித்துக்கொண்டு வெகு தூரம் அலையவேண்டியிருக்கும், காலதாமதம் ஆகும். ஆகவே, சீக்கிரமாகவும், சுலபமாகவும் அவர்களுக்கு உரம் கிடைக்கவேண்டும், அதைப் பெற்றுக்கொண்டு அவர்கள் விவசாயம் செய்து உற்பத்தியைப் பெருக்கவேண்டும் என்ற நோக்கத்தோடுதான் பாதி உரமாகவும் பாதி பணமாகவும் கொடுக்கிருேம்.

**திரு. ஏ. எஸ். தக்ஷிணுமூர்த்தி கவுண்டர் :** அமைச்சர் அவர்கள் சொல்லிய பதில் எனக்குத் திருப்தி அளிக்கிறது. இருந்தாலும், தமிழகத்து விவசாயிகளின் உள்ளப்போக்கைத் தெரிந்துகொள்ள வேண்டும். இந்த நாட்டு விவசாயிகளுடைய மனப்போக்கு எப்படியென்ருல், முதலில் அவர்களுடைய நிலம், அதிலே விளைவிக்கின்ற விளைச்சல், அதிலே இருக்கின்ற வெள்ளாண்மை, அதற்கு மேலே அவர்கள் வைத்திருக்கின்ற கன்றுகாலிகள், இவைகளின் பேரில் தான் அவர்கள் நல் உணர்ச்சியுடன் கூடிய மனது செல்லும். அதற்குப் பிறகு தான் குடும்பம், வாழ்க்கை] நெறி எல்லாம். ஒரு விவசாயி என்று சொன்னுல், அவனுடைய நிலம், அவன் செய்கின்ற வெள்ளாண்மை, அவனுடைய கன்றுகாலி இவைகளில்தான் முதலில் அவன் மனம் நாடும். முதலில் கன்றுகாலிகளுக்குத் தண்ணீர் காட்டிவிட்டுத் தான் சோறு சாப்பிட உட்காருவான். முதலில் மாட்டுக்குத் தண்ணீர் காட்டாமல் கையை நனைக்கமாட்டான். அந்த நிலையில் அவனுக்கு உதவித் தொகையில் ஒரு பாதி பணமாகவும், இன்னொரு பாதி உரமாகவும் ஏன் கொடுக்கவேண்டும்? எனக்கு என்னவோ சுரீர் என்று எரிகிறது. கோயம்புத்தூரில் சென்ற வருடம் நடந்த அக்ரிகல்சரல் ஸெமினுரில் நான் இதைப்பற்றி அமைச்சர் கக்கன் அவர்களிடம் சொல்லியிருக்கிறேன். கொடுக்கிற கடனை முழுவதும் பணமாகக் கொடுங்கள் என்று சொல்லியிருக்கிறேன். அப்படிக்கொடுத்தால், அவன் உப்பு வாங்காமல் வேறு செலவு செய்யமாட்டான். நிலத்திற்கு வேண்டியதைச் செய்து விட்டுத்தான் வேறு செலவைக் கவனிக்கப் புகுவான். அதற்கு முன்பாக ஊதாரிச் செலவைச் செய்துவிடமாட்டான். சரி, உப்பே கொடுக்கிருேம். உப்பையே அவன் விற்று விட்டால்? விற்று விட்டுப் போகலாம் அல்லவா? ஆகவே, இப்படிச் செய்வது எனக்கென்னமோ ரோஷமாக வருகிற மாதிரி இருக்கிறது. (சிரிப்பு) விவசாயிகளைப் பொருத்த மட்டில், அவனுடைய உள்ளப் பாங்கு எப்படி யிருக்கிறது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். எப்பவும் அவன் பழக்கம் எப்படி என்று தெரிந்து செயல்படவேண்டும். எந்த விவசாயியும் பணத்தை, காட்டை, மாட்டை, வளம் செய்யாமல் பயிர் செய்யாமல், தீவனம் போடாமல், ஊதாரிச் செலவு செய்ய மாட்டான். பெண்டு பிள்ளைகளுக்குக் கலியாணம் கூடச் செய்ய மாட்டான்; தாலி, தண்டையை வைத்து கடன் வாங்கி விவசாயம் செய்யப் புகுவான். இப்பொழுது சர்க்கார் செய்வது விவசாயிகளுக்கு மிக்க இடஞ்சலாக இருக்கிறது. மூன்று மாதம் அலைந்த பிறகு, சும்மாக் கொடுக்கவில்லை—அவனுடைய நிலத்தை அடமானம் எழுதி வாங்கிக் கொண்டு கடன் கொடுக்கிருேம். வட்டியில்லாமல் கொடுக்க வில்லை. ஆகவே, இவ்வளவு தூரம் அவர்களுக்கு அவமானம் கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை. அவர்களுக்கு மிக்க சங்கடமாக இருக்கிறது.

**கனம் திரு. பூ. கக்கன் :** அப்படிக் கொடுத்து உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்கிற உள் நோக்கத்தோடுதான் கொடுக்கிருேம். கனம் அங்கத்தினர் சொல்லும் வகையில், உரமின்றி ரூபாயாகக் கொடுத்தால், "பணம் மட்டும் கொடுத்தால் போதுமா, எங்கே போய் உரம் வாங்குவது, உரத்தையும் சேர்த்துக் கொடுங்கள்" என்று சொல்வதையும் பார்க்கிருேம்.

**திரு. ஏ. எஸ். தக்ஷிணுமூர்த்தி கவுண்டர் :** தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுடைய விளக்கம் எனக்கு நன்ருகப்புரிந்து இருக்கிறது. இருந்தாலும் (சிரிப்பு) இதிலே சற்று சீர்திருத்தம் தேவை என்பதைத் தாழ்மையோடு வேண்டிக்கொள்ளுகின்றேன்.

கீழ் பவானி திட்டத்தை நல்ல முறையில் பரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, என் உரையை முடிக்கிறேன்.

***திரு. கி. நாராயணசாமி பிள்ளை :** கனம் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு தகுதியும், திறமையும் வாய்ந்த நமது முதல் அமைச்சரால் இந்த உபரி பட்ஜெட், மாடல் பட்ஜெட்டாக, சமர்ப்பிக்கப் பட்டிருப்பது பற்றி நாம் நன்றியோடு பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறோம். நம்முடைய நாட்டிலே இருக்கும் ஒவ்வொரு நபரும், உண்ண உணவும், உடுக்க உடையும், இருக்க இடமும், அறிவு பெற கல்வியும், தொழில்களும், பெருகி சுகமாக வாழ, சுகாதார வாழ்க்கை இவற்றிற்கெல்லாம் வழி வகை செய்ய வேண்டும் என்று நம்முடைய அரசாங்கம் நல்ல பல திட்டங்களைத் தீட்டி, கோடிக்கணக்கான பணத்தைச் செலவழித்து வேண்டிய சாதனைகளைப் புரிந்து வருகிறது. நம்முடைய நாடு ஒரு விவசாய நாடு. விவசாயிகளே நாட்டின் முதுகெலும்பு. ஆகவே, அந்த விவசாயம் பெருக வேண்டும் என்று கோடிக்கணக்கான ரூபாய்களை செலவழித்து பல திட்டங்களையும் நிறைவேற்றி வருகிறது நம்முடைய சர்க்கார். மழைத் தண்ணீரையும், மற்ற வெள்ளத்தால் வரும் தண்ணீரையும், கடலில் போய் வீணாகாமல் தடுத்து, அணைகளைக் கட்டி, வாய்க்கால்களை வெட்டி, பாலைவனங்களையும், காடு கரம்புகளையும் நல்ல விவசாய நிலங்களாகச் செய்ய அரும்பெரும் சாதனைகள் புரிந்து வருகிறார்கள். இருந்தாலும் கூட, கொடுக்கின்ற உதவிகளை விவசாயிகளுக்கு குறித்த நேரத்திலே போய்ச்சேர வேண்டிய வசதிகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

விவசாய உற்பத்திக்கு என்று பெரிய பாசனத் திட்டங்கள், நடுத்தர பாசனத் திட்டங்கள், சிறிய பாசனத் திட்டங்கள் எல்லாம் நிறைவேற்றி இருக்கிறோம். பெரிய திட்டங்கள் மூலம், நம்முடைய மாநிலத்தில் நதிகளில் வரும் நீரைக் கொஞ்சம் கூட வீணாகாமல் விவசாயத்திற்கு உபயோகப்படுத்த வழிவகைகளைச் செய்திருக்கிறோம். அதே போல நடுத்தர திட்டங்களின் கீழே ஏரிகள் இருக்கின்றன. ஆனாலும், ஏரிகளெல்லாம் தூர் வாராமல், தூர்ந்து போய்விட்டு இருக்கின்றன. அவற்றைச் சீர்திருத்தம் செய்தால், இன்னும் பல ஏக்கரா நிலங்கள் பாசன வசதி பெற்று நல்ல முறையிலே பயன் படுத்த வாய்ப்பு இருக்கும்.

எங்கள் பகுதியிலே திட்டக்குடியிலே வெல்லிங்டன் நீர்த் தேக்கம் இருக்கிறது. அது அமைத்து 40, 45 வருஷங்கள் ஆகிறது. அது ஏற்பட்ட காலம் முதலாக, இரண்டே முறைதான் கரைபுரண்டு தண்ணீர் வந்திருக்கிறது என்கிறார்கள். வெள்ள காலத்தில் வரும் தண்ணீர் தேங்குவதன் மூலம் அதிலிருந்து 28,000 ஏக்கரா நிலத்திற்குப் பாசனம் கொடுக்கக் கூடிய தேக்கம் அது. ஆனால், அந்த நீர்த் தேக்கத்தில் சரிவர நீர்ப்பிடிப்பு இல்லாததால், அதன் அடியில் வரும் அந்த 28,000 ஏகராவும் சாகுபடி செய்யமுடியாத கஷ்டம் இருக்கிறது. அதோடு அல்லாமல் ஜேடர்பாளையத்திலிருந்து வாய்க்கால் மூலம், தண்ணீரை இந்தத் தேக்கத்தில் நிரப்ப வேண்டும். அதற்கான வசதிகளைச் செய்து கொடுத்தால் இப்பொழுது அதிகச் செலவு ஆனாலும் கூட, பின்னால் போகப் போக விவசாயத்திற்கு நல்ல பலன் கொடுக்கக் கூடியதான வாய்ப்பு இருக்கும். அதேபோல, சென்ற ஆண்டிலே விருத்தாச்சலம் தாலூகா, கீவனூரிலே கனம் விவசாய அமைச்சரும், கனம் செய்தித் துறை அமைச்சரும் அடிக்கல் நாட்டினார்கள். ஆனால் அதன் பிறகு வேலைகள் ஒன்றும் நடக்கவில்லை. ஆகவே, அதையும் கூடிய சீக்கிரத்திலே முடித்துக் கொடுக்க வேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்ளுகிறேன்.

புஞ்சை நிலங்களில் கம்பளிப் பூச்சி அதிகமாக விழுந்து சேதம் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. ஏற்கெனவே சென்ற இரண்டு ஆண்டுகளில் செய்தது போல, ஹெலிகாப்டரைக் கொண்டு, பூச்சி நாசினி மருந்துகளைத் தெளித்தால் நலமாக இருக்கும்.

எங்களுடைய பகுதியில் விவசாயத்திற்கு அநேகமாக ஆட்கள் கிடைப்பதில்லை. ஆகவே, நிலச் சொந்தக்காரர்கள், சவுக்கு, வாழை போன்றவற்றையும், தென்னை, கரும்பு போன்றவற்றையும் பயிரிட்டுவிடுகிறார்கள்.





சர்க்கரையும் நமக்கு வேண்டும் என்றாலும், இதனாலெல்லாம் உணவுப் பொருள் உற்பத்தி குறைந்து விடுகிறது. இவ்வளவு நிலங்கள் உணவுப் பயிர்களுக்கு என்று வகுத்துக் கொள்ளும், ஒரு முறையை வைத்துக் கொண்டால் நலமாக இருக்கும் என்று சொல்ல விரும்புகிறேன்.

விவசாயத்திற்கு மின்சார சப்ளை கொடுக்கிறோம். மின்சார சப்ளை மின் வேகத்தில் செல்லுகிறது என்றாலும், பற்றாக் குறையும் அதிகமாக இருக்கிறது. குறிப்பாக தென் ஆர்க்காடு மாவட்டதில், அது ஆமை வேகத்தில் தான் போய்க் கொண்டிருக்கிறது. அது ஏன் என்றால், மின்சாரம் போதவில்லை. இன்றைக்கு எண்ணூர் அனல் மின்சார நிலையம், தூத்துக்குடி மின்சார நிலையம், இன்னும், கல்பாக்கத்தில் வரவிருக்கும் அணு மின்சார நிலையம் இவற்றோடு கூட, ஹொக்கனகல் நீர் மின்சாரத் திட்டத்தையும் அமல் படுத்தினால், மின்சார பற்றாக்குறை பெரும் அளவிற்குக் குறையும் என்று நினைக்கிறேன். நெய்வேலியில் இன்னும் ஏழாவது யூனிட் வேலை செய்ய ஆரம்பித்தாலும், மின்சாரம் அதிகமாகக் கிடைக்கும். அந்த நிலையில் அதிகமாகத் தொழில் வளர்ச்சியும் அடையும். நெய்வேலியிலே 144 கோடி ரூபாய் செலவிலே நிலக்கரிச் சுரங்க வேலை செய்துகொண்டிருக்கிறார்கள். அங்கே வேண்டிய மின்சாரம் கிடைக்கிறது. அதோடு கூட அங்கே நிறைய நிலங்கள் இருக்கின்றன. அவற்றை மத்திய சர்க்காரிலேயும் பயன் படுத்த வில்லை. ஆகவே, அந்த நிலங்களை' ஏழை உழவர்களுக்குக் கொடுத்தால், அவர்கள் விவசாயம் செய்வார்கள், உணவு உற்பத்தியும் பெருகும்.

அதேபோல சேலம் உருக்காலைத் திட்டத்தைக்கொண்டு வந்திருக்கிறார்கள். அதேபோல, கூடிய சீக்கிரத்திலே, சேலம் இரும்பைக் கொண்டு, நெய்வேலியிலும் ஒரு உருக்காலையை அமைக்கலாம். நான் சொல்வதைக் கண்டு ஆச்சரியப்படவேண்டாம். சேலத்தில் இருப்பது போலவே நெய்வேலியிலும் வேண்டிய அளவிற்கு மேல் தண்ணீர் இருக்கிறது. நில வசதி இருக்கிறது. மின்சாரம் இருக்கிறது. பக்கத்திலேயே கடலூர் துறைமுகம் வசதியாக இருக்கிறது. நிலக்கரி இருக்கிறது. ஆகவே, சேலத்து இரும்பைக் கொண்டு நெய்வேலியிலே கூட ஒரு உருக்காலையை நிறுவலாம் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே சொல்ல விரும்புகிறேன்.

அதோடுகூட, நெய்வேலியிலே தண்ணீர் நிறைய இருந்தாலும் கூட, அதைப் பயன் படுத்தவில்லை. உபரித் தண்ணீரை விவசாயிகளுக்குக் கொடுக்க, மத்திய சர்க்காருக்கு நமது மாநில சர்க்கார் சிபாரிசு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

நெய்வேலியில் அநேக பொறியாளர்கள் வேலை செய்துகொண்டிருக்கிறார்கள். இப்பொழுது ஆட்குறைப்புச் செய்யப்படுவதால், ஏராளமானவர்கள் வெளியேற்றப்படுவார்கள் போலிருக்கிறது. அவர்களுக்கு ஏற்கெனவே நம்முடைய சர்க்காரிலே "லீன்" இருக்கிறது. அவர்களுக்கெல்லாம் அங்கே தொடர்ந்து வேலை இருக்காது என்ற நிலை ஏற்பட்டால் வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்படும். அப்படிப்பட்டவர்களுக்கு சர்க்காரிலே வேலை கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

நெய்வேலியில் பெரிய ஆஸ்பத்திரி இருக்கிறது. அந்த ஆஸ்பத்திரியைப் பொறுத்தவரையில், நெய்வேலித் திட்டத்தில் வேலை செய்கிறவர்களுக்கு மாத்திரம் அங்கே சிகிச்சை அளிக்கிறார்கள். வேலை செய்கிறவர்களுடைய தங்கை, தமக்கை, தாயார், தகப்பனார் போன்றவர்களுக்குச் சிகிச்சை அளிக்கப்படவில்லை. இது ஒரு பெரிய குறை. நம்முடைய நாட்டில் பொதுவாக பிரசவத்திற்காக பெண் மக்கள் தங்களுடைய தாய் வீட்டுக்கோ, சகோதரர் வீட்டுக்கோதான் சென்று மருத்துவ வசதி செய்துகொள்கிறார்கள். சகோதரன் வேலை செய்யக்கூடிய இடத்தில் சென்றிருக்கும் போது, அங்கே மருத்துவ வசதி இல்லையென்றால், அது மிகவும் கஷ்டமாக இருக்கிறது. இதையும் மனதிற்கொண்டு அங்கே உத்தியோகத்

தில் இருக்கிறவர்களுடைய சகோதரிகளுக்கும் சிகிச்சை செய்வதற்கான ஏற்பாட்டைச் சிபார்சு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தப்படியாக, நம்முடைய தமிழ்நாட்டில் ஒன்பது நூற்பு ஆலைகளும் ஆறு கூட்டுறவு சர்க்கரை ஆலைகளும் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். கள்ளக்குறிச்சியில் கூட்டுறவு சர்க்கரை ஆலை மிக விரைவிலே செயல்பட்டு, சர்க்கரை உற்பத்தி செய்ய ஆரம்பிக்கும். திருக்கோயிலூர் தாலூகாவில் திருவெண்ணெய் நல்லூரில் ஏற்கனவே ஒரு சர்க்கரை ஆலை பாரி கம்பெனியாரின் நிர்வாகத்தில் இருந்தது. அது இப்பொழுது இல்லை. ஆகையால் சர்க்கார் மனமுவந்து அந்த இடத்திலே அதிகமாகக் கரும்பு விளைச்சல் இருப்பதை உத்தேசித்து ஒரு சர்க்கரை ஆலை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

கள்ளக்குறிச்சிக்கு அருகாமையில் மாமண்டூர் கிராமத்தில் ஜிப்ஸம் படிவங்கள் இருக்கின்றன. அவைகளைப் பற்றியும் பரிசோதனை செய்வதற்கு ஆவன செய்யவேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, கிராமங்கள்தோறும் பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன. சிறு பிள்ளைகள் ஏராளமானவர்கள் படிக்கிறார்கள். மதிய உணவும் சீருடையும் கொடுக்கிறார்கள். அதற்கேற்ப உயர்நிலைப் பள்ளிகளையும் அதிகமாக நம்முடைய சர்க்கார் ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறார்கள். உயர்நிலைப் பள்ளிகளிலிருந்து படித்துவரக்கூடிய பிள்ளைகள் மேல்படிப்பு படிப்பதற்காகக் கல்லூரிகளையும் பற்பல இடங்களில் ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறார்கள். கிராமப் புறங்களிலே கல்லூரிகளை அதிகமாகக் கட்டவேண்டும் என்ற முறையில் சர்க்கார் ஆவன செய்து வருகிறார்கள். விருத்தாசலம் தாலூகாவில் கொளிஞ்சியப்பர் கோயில் இருக்கிறது. அந்தக் கோயில் நிதியிலிருந்து மூன்று லட்ச ரூபாய் கொடுத்துக் கல்லூரி ஏற்படுத்த வேண்டும் என்று மந்திரி அவர்களைக் கேட்டுக்கொண்டோம். இப்பொழுது பொதுமக்கள் இரண்டு லட்சம் ரூபாய் கொடுக்க முன் வந்திருக்கிறார்கள். ஆகையால், சர்க்கார் இந்தக் கல்வியாண்டிலேயே அங்கு ஒரு கல்லூரியைத் துவக்க ஆவன செய்ய வேண்டுமாய்ப் பணிவுடன் முதல் அமைச்சர் அவர்களை உங்கள் மூலமாகக் கேட்டுக் கொள்ளுகிறேன். தாலூகாதோறும் கல்லூரிகளும், மாவட்டம்தோறும் மருத்துவக் கல்லூரியும், பொறியியற் கல்லூரியும் ஏற்படுத்தவேண்டும் என்றும் கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்து, குடி தண்ணீர் வசதியைப்பற்றிச் சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். பொது சுகாதார வளர்ச்சிக்காக நம்முடைய அரசாங்கம் கிராமப் புறங்களிலும் நகர்ப்புறங்களில் கிடைக்கக்கூடிய வைத்திய வசதி செய்து கொடுக்க வேண்டுமென்றுதான் பப்ளிக் ஹெல்த் சென்டர்கள் அமைத்திருக்கிறார்கள். ஆனால், அதற்கேற்ப டாக்டர் கிடைப்பதில்லை. உதாரணமாக, எங்களுடைய தொகுதியிலே கூட, மங்கலூர் ப்ரைமரி ஹெல்த் சென்டர் நான்கைந்து மாதங்களாக டாக்டர் இல்லாமல் இருக்கிறது. இது போன்ற பிற்பட்ட இடங்களில் மருத்துவ வசதி அளிக்க வேண்டியதன் முக்கியத்துவத்தை உணர்ந்து, டாக்டர்கள் பற்றாக்குறையைப் போக்க, மருத்துவக் கல்லூரிகளில் 709 இடங்கள் என்று இருப்பதை இரண்டாயிரம் இடங்களாக உயர்த்தித்தர வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்ளுகிறேன்.

பாதுகாக்கப்பட்ட குடி தண்ணீர் வசதி இல்லாததன் காரணமாகத் தொத்து நோய் பரவுகிறது. தென்னாற்காடு ஜில்லாவில் விருத்தாசலம் தாலூகாவிலும், திருச்சி ஜில்லாவில் ஜெயங்கொண்டம் பகுதியிலும் குடி தண்ணீர் வசதி இல்லாத காரணத்தால் நரம்புச் சிலந்தி என்கிற தொத்து நோய் ஏற்பட்டு, அதனால் மக்கள் மிகவும் சங்கடப்படுகிறார்கள். காவிரித் தண்ணீரை வீராணம் ஏரியில் விட்டு, அங்கிருந்து விருத்தாசலம் தாலூகாவிற்கும், திருச்சி ஜில்லாவில் ஆண்டிமடம், ஜெயங்கொண்டம் பகுதிகளுக்கும் பாதுகாக்கப்பட்ட குடி தண்ணீர் வசதி செய்து கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன். சென்னை நகரத்திற்குக்





காவிரித் தண்ணீரைக் கொண்டு வந்து குடி தண்ணீர் வசதி செய்ய வேண்டும் என்று ஒரு திட்டம் ஏற்படுத்தினார்கள். அது இல்லாவிட்டாலும் கூட, குடி தண்ணீர் முக்கியமாக வேண்டியிருப்பதனால், அந்தப் பகுதிகளுக்கு அவசியமாக இந்த வசதியைச் செய்து கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அமைச்சர்கள் எங்கள் வட்டத்திற்கு வந்தாலும், பல ஊர்களில் அவர்கள் தண்ணீர் அருந்துவதே முடியாது. ஒரு சமயம் கனம் திரு. மாணிக்கவேலு அவர்கள் வந்திருந்தார்கள். குடிக்கத் தண்ணீர் கேட்டார். ஒரு க்ளாஸில் தண்ணீர் கொண்டு வந்து மேசை மேல் வைத்தோம். ஐந்து நிமிஷம் கழித்துப் பார்த்ததில், பாதிக் கிளாஸில் மட்டித் தண்ணீராகப் போய் விட்டது. மேற்பகுதியில் இருந்த தண்ணீர் தான் தெளிவாக இருந்தது. அப்படிப்பட்ட நிலையில் சில ஊர்களில் குடி தண்ணீர் வசதி சரியாக இல்லை. அதனால் தொத்து நோய் உண்டாகிறது. ஆகவே, சர்க்கார் நல்ல முறையில் குடி தண்ணீர் வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

எங்கள் மாவட்டத்தில் மருத்துவ இல்லங்கள் குறைவாக இருக்கின்றன. நோயாளிகளுக்கு மருந்துகளும் சரிவர கிடைப்பதில்லை. ஜனத்தொகை ஏற ஏற நோய் அதிகரிக்கிறது. படுக்கை வசதிகளும் குறைவாக இருக்கிறது. தாலூக்கா தலைநகர ஆஸ்பத்திரிகளிலும் மற்றும் சர்க்கார் ஆஸ்பத்திரிகள் இருக்கும் இடங்களில் எல்லாம் படுக்கைகளின் எண்ணிக்கையை அதிகரிக்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன். சென்ற ஆண்டில் இருபதாயிரம் ரூபாய் வசூல் செய்து கொடுத்து திட்டக்குடி ஆஸ்பத்திரிக்கு எக்ஸ்ரே ப்ளாண்ட் வைப்பதற்கும் அத்துடன் பத்து படுக்கைகளை அதிகரிக்கவேண்டும் என்றும் சுகாதார அமைச்சரிடம் கேட்டுக்கொண்டோம். நாளதுவரை நடவடிக்கை எடுத்ததாகத் தெரியவில்லை.

நான் மேலே குறிப்பிட்ட குறைகளையெல்லாம் கருத்திற்கொண்டு அமைச்சர் அவை ஆவன செய்யவேண்டும் என்று கேட்டு, எனக்குச் சந்தர்ப்பம் அளித்த உங்களுக்கு நன்றி தெரிவித்து என்னுடைய உரையை முடிக்கிறேன்.

*திருமதி டி. என். அனந்தநாயகி : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த வரவு செலவுத் திட்டம் மிகத் திறமையான திட்டம் என்பதிலே சந்தேகமே இருக்க முடியாது. காரணம், இவ்வளவு செலவுகளும் நெருக்கடியும் இருந்த நேரத்திலே கூட, மக்களுக்குப் புது வரி போடாமல், வரவு செலவைச் சரிக்கட்டியதொரு உபரி பட்ஜெட்டாகக் கொடுக்கக் கூடிய திறமையை நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் பெற்றது உண்மையிலேயே போற்றத்தக்கது தான். ஆகையால் தான், எதிர்க்கட்சியினருக்கு இதைப்பற்றி எப்படிக் குறை சொல்வது என்று தெரியாமல் இல்லாத பொல்லாத குறைகளை ஏதோ சொல்ல வேண்டுமே என்று சொன்னார்கள். இவ்வளவு திறமையாக இந்த பட்ஜெட்டைப் போட்டதற்குக் காரணம், நம்முடைய ராஜ்யத்திலே அந்த அளவிற்கு வருமான வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. இதற்கு முன்பு இருந்த நிதி அமைச்சர் திரு. சுப்பிரமணியம் அவர்கள், "நான் இந்த சட்டசபையை விட்டுப் போவதற்குள்ளாவது 100 கோடி ரூபாய் வருமானம் இந்த ராஜ்யத்தில் வருமா என்று நான் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறேன்" என்று சொன்னார். ஆனால், இப்பொழுது நாம் 188 கோடி ரூபாய்க்கும் மேலாக வருமானத்தை எதிர்பார்க்கிறோம் என்றால் உண்மையிலே தமிழ்நாடு பொருளாதாரத் துறையில் கட்டாயமாக வளர்ந்திருக்கிறது என்பதை யாரும் மறுக்க இயலாது. அது மாத்திரமல்ல, 1964–65-ம் ஆண்டில் 4 கோடி 76 லட்ச ரூபாய் துண்டு விழும் என்று எதிர்பார்த்திருந்தோம். ஆனால், அதற்கு மாறாக, துண்டு விழாதது மட்டுமல்ல, அதற்கு மேலே இரண்டு கோடி ரூபாய் உபரியாகவும் வருமானத்தைப் பெற்றிருக்கிறோம் என்றால், நம்முடைய இலாக்காக்கள் மிகத் திறமையாகப் பாடுபட்டு வரிப் பணத்தைச் சேர்த்திருக்கிறார்கள் என்பது போற்றத்தக்கது ஆகும். குறிப்பாக பொது விற்பனை வரியிலிருந்து மூன்று கோடி ரூபாய் அதிகமாக வந்திருக்கிறது.

மோட்டார் வாகன வரியிலும் அதிகமாக வந்திருக்கிறது. அதேபோன்று, எல்லாத் துறைகளிலும் வரி பாக்கி இல்லாமல் வந்திருக்கிறது. முடிந்தவரை நல்ல முறையிலே வரி கொடுக்கக்கூடிய மக்களைக் கஷ்டப்படுத்துவது சரியல்ல என்ற கருத்தில்—சரியான முறையில் வரியை வசூலிப்போமானால், இன்னும் சில வரிகளிலிருந்து மக்களுக்கு விலக்குக் கூடக் கொடுக்கலாம் என்று யோசிக்கிறோம். ஏன் இதைக் கூறுகிறேன் என்றால், குறிப்பாக, அக்ரிகல்சரல் இன்கம்டாக்ஸ் என்கிற வேளாண்மை வருமான வரி போட்டுக்கொண்டிருக்கிறோம். தோட்ட நிலங்களையும் சாதாரண நிலங்களையும் சேர்த்து 140 லட்சம் ரூபாய் வருமானம் வருகிறது என்று சொன்னார்கள். தோட்ட நிலங்களை நாம் விலக்கிவிட்டால் சாதாரண நிலங்களுக்கு வரும் வரி 50 லட்சம் தான். உச்ச வரம்புச் சட்டம் வந்தபின் $12\frac{1}{2}$ ஸ்டான்டர்டு ஏக்கருக்கு மேல் இருந்தால்தான் அந்த வரியைப் போட முடியும், சாதாரண விவசாயிக்கு. இப்படிப்பட்ட நிலையிலே இருப்பதால், 50 லட்சம் ரூபாய்தான் வரி வருகிறது. இந்த வரியை வசூலிப்பதற்கு நிர்வாகச் செலவு 12 லட்ச ரூபாய் ஆகும் என்று இந்த வரவு செலவுத் திட்டத்திலே குறிக்கப்பட்டிருக்கிறது. நான் பல ஆண்டுகளாகச் சொல்லி வருகிறேன். விவசாயிகளுக்கு
12-30 p.m. இந்த வரியில் இருந்து விலக்குக் கொடுப்பது சாலச் சிறந்ததாக இருக்கும். இதன் மூலம் 50 லட்ச ரூபாய் வருமானம் வருகிறது என்றால் 12 லட்சம் ரூபாய் செலவாகிறது. " பீஸ்மில் " Taxation மாதிரி இருக்கிறது. இதிலிருந்து விவசாயிகளுக்கு விலக்குக் கொடுப்பது பாராட்டத்தக்கதாக இருக்கும். மத்திய அரசாங்க நிதி அமைச்சர் கூட இது போன்ற வரிகளை எடுத்திருக்கிறார். குறிப்பாகச் செலவு வரியை எடுத்துக் கொண்டால் 65 லட்சம் வருகிறது. செலவு அதிகமாக இருக்கிறது என்று அதை எடுத்திருப்பதைப் போல நாமும் செய்யலாம். குறுகிய அளவில் பணம் வரக்கூடிய இனம் இது. எலாஸ்டிஸிடி உள்ள வரி இனம் அல்ல இது. இதில் இருந்து வரக்கூடிய வருமானம் ஓரளவுக்கு நிலையானது. ஆகவே இந்த விவசாய வரியிலிருந்து விவசாயிகளுக்கு விலக்களிப்பது சாலச் சிறந்ததாக இருக்கும்.

அது மாத்திரம் இல்லாமல் நம்முடைய வரவுத் செலவு திட்டத்தைப் பார்க்கும்போது மிகச் சிறந்த முறையில் எந்த எந்த இனத்திற்கு எவ்வளவு செலவு செய்வது என்பதாகப் பிரித்திருக்கிறார்கள். இது பாராட்டத்தக்கதாகும் என்பது தெரியும். ஆயினும், நாம் இன்னும் சற்றுத் தீவிரமாக நிர்வாக அதிகாரிகளிடத்தில் கண்காணிப்பாக இருக்கவேண்டும். நாம் எந்த எந்த இனத்திற்காக ஒதுக்குகிறோமோ அதை அந்த அந்த இனத்திற்கு ஒழுங்கான முறையில் செலவிடுகிறார்களா என்பதையும் பார்க்க வேண்டும். " தி வில் ஆஃப் தி லெஜிஸ்லேசர் " என்பதாக இந்தச் சபையின் கருத்து. அந்தப் பணத்தை ஒதுக்கும் போது என்னவாக இருந்ததோ அது நிறைவேற்றப்படுகிறதா என்று பார்க்க வேண்டும். நாம் ஒதுக்கிய இனத்தில் செலவிட முடியவில்லை. ஆகவே, வேறு இனத்தில் செலவிட்டிருக்கிறோம் என்பதாக—உப்பு இருக்கா என்றால் பப்பு உந்தி என்பது போல அதிகாரிகள் நடந்து கொள்ள நாம் இடமளிக்கக் கூடாது. அந்த நிலையில்தான் இன்றைக்கு நிர்வாகம் போய்க் கொண்டிருக்கிறது என்பதை நான் தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். நாம் எந்த எந்த இனத்திற்காக ஒதுக்குகிறோமோ அந்த அந்த இனத்தில் பணம் செலவழிக்கப்படுவதில்லை. வேறு இனத்தில் செலவிட்டுக்கொண்டிருக்கிறோம் என்றாலும், செலவழிக்கப்படாமல் மிச்சமாக்கப்பட்டது என்றாலும் அது நிர்வாகத் திறமைக்கு எடுத்துக் காட்டாக இருக்காது. முனிசிபாலிட்டிகளில் கடைகள் கட்டுவதற்கும், பஸ் ஸ்டாண்டுகள் கட்டுவதற்கு நாம் பணம் ஒதுக்கியிருந்தோம். அந்தக் கடன் தொகை பூராவையும் பல முனிசிபாலிட்டிகள் பயன்படுத்திக் கொள்ளவில்லை. அவற்றை வேறு இனத்தில் செலவிட்டிருக்கிறார்கள். இப்படி இந்த மன்றம் எந்தக் கருத்தில் பணத்தை ஒதுக்க ஓட்டளித்து நிறைவேற்றியிருக்கிறதோ அந்தக் கருத்தை அதிகாரிகள் நிறைவேற்றவில்லை என்றால் அவர்கள் இந்த மன்றத்தை மதிக்கவில்லை என்பதாகத்தான் ஆகும். நாம் ஒதுக்குவது பெரிதல்ல. ஒதுக்குகின்ற தொகையை அந்த அந்த இலாக்கா அதிகாரிகள் அந்த அந்த இனத்தில் செலவிட நாம்





கண்காணிப்பாக இருக்க வேண்டும். அது போன்று ரூரல் வாடர் சப்ளை ஸ்கீம், நாஷனல் வாடர் சப்ளை (Sanitation) ஸ்கீம் அடிப்படையில் நாம் செலவழித்திருக்கிற பணம் ஒன்றுக்குக் கூட உருப்படியாகச் செலவழிக்கப்படவில்லை.

**கனம் திரு. பூ. கக்கன் :** கனம் அங்கத்தினர் எங்காவது ஓரிடத்தில் பார்த்திருப்பார். எல்லாவிடங்களிலும் பயன் அற்றுப் போய்விட்டது என்பது சரியல்ல.

**திருமதி டி. என். அனந்தநாயகி :** உண்மையில் நானும் வருத்தப்படுகிறேன். ஐம்பத்தொன்பது கிராமங்களைச் சோதனைக்கு எடுத்து அதில் 39 கிராமங்களில் இத் திட்டங்கள் பயனில்லாமல் போய்விட்டன. கக்கூஸ்களை மக்கள் விரும்பவில்லை என்கிறார்கள். குழாய்களில் ரிப்பேர் வந்துவிட்டால் பஞ்சாயத்துக்கள் கவனித்துக் கொள்ள வேண்டும். பஞ்சாயத்துத் தலைவர்களுக்கு எத்தனையோ வேலைகள்—ரிப்பேர் செய்ய ஆள் இல்லை, சாமான் இல்லை—இப்படிக் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த நாம் மக்களுக்கு நன்மை செய்ய வேண்டும் என்பதாக எத்தனை உணர்ச்சியோடு, துடிப்போடு, அன்போடு நல்ல காரியங்களைச் செய்துகொண்டு வருகிறோமோ, அப்படி அதிகாரிகள் உணர்ச்சியோடு, துடிப்போடு, அன்போடு அவை மக்களுக்குப் பயன்படும்படியாகப் பார்த்துக் கொள்ளவில்லை என்று நான் சொல்ல விரும்புகிறேன். அதிகாரிகளை நல்லமுறையில் வேலை செய்யும்படியாகப் பார்த்துக் கொள்ள வேண்டும் என்பதாக அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

அதற்கு அடிப்படைக் காரணம் ஒரு காரியதரிசியிடம் பல இலாக்காப் பொறுப்புக்கள் ஒப்படைக்கப்பட்டிருக்கலாம். எஜுகேஷன் அண்டு பப்ளிக் ஹெல்த், இண்டஸ்ட்ரீஸ், லேபர் அண்டு கோவாப்பரேஷன் என்பதாக ஒரு காரியதரிசியிடம் ஒன்றுக்கு மேற்பட்ட இலாக்காக்கள் ஒப்படைக்கப்படும்போது அவர்களுக்கே எந்த எந்த இனத்திற்குப் பணம் ஒதுக்கப்பட்டுள்ளது என்பது தடுமாறிப் போகிறது. என்னைக் கேட்டால் ஒவ்வொரு இலாகாவுக்கும் ஒவ்வொரு காரியதரிசி என்று நியமித்துவிடலாம். இதனால் செலவு ஒன்றும் அதிகமாகப் போவதில்லை. பிறநாட்டு மக்களைப் போன்று பெரிய வாழ்க்கைத் தரத்தை விரும்புகிறவர்கள் அல்ல நம் மக்கள். அடிப்படைத் தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டாலே மிக்க மன நிறைவு கொள்ளக் கூடியவர்கள். ஆகவே நாம் போடுகின்ற திட்டப்படி அடிப்படைக் காரியங்களை நல்ல முறையில் செய்து கொடுத்தாலே போதும்.

அடுத்தபடியாக, பிற்பட்ட இனத்தவர்களுக்குக் கல்விச் சலுகை அளிப்பதற்காக 148 லட்சம் ஒதுக்கியிருக்கிறோம். இது கடலில் கரைத்த பெருங்காயம் என்று சொல்லிக் கொண்டு வருகிறேன். 188 கோடி ரூபாய் பட்ஜெட்டில் 148 லட்சம் தானா ஒதுக்க வேண்டும் ? இந்த இனத்தில் ஐந்து கோடி, பத்து கோடி என்று ஒதுக்க வேண்டியது மிகவும் இன்றியமையாததாகும். அதுவும் நாம் 1,500 ரூபாய்க்குக் கீழ் உள்ள பிற்பட்ட இனத்தவர்கள் குழந்தைகளின் மேல் படிப்புக்காக என்று வரம்பு வைக்கிறோம். 1,500 ரூபாய் என்றால் மாதம் 130 ரூபாய்க்கு மேல் சம்பளம் வாங்குகிறவர்களுக்குக் கீழ்தான் கிடைக்கும். ரூ. 150, 180 என்று மாதச் சம்பளம் வாங்குகிறவர்கள் நிலைமை இந்தக் காலத்தில் ஒன்றும் உயர்வாக இல்லை. அதுவும் அவனுக்கு எட்டு குழந்தைகள் என்றால் சட்டை துணி வாங்கிக் கொடுக்கக்கூடக் கட்டாது. அவர்கள் தங்கள் குழந்தைகளின் மேல் படிப்புக்கு என்ன செய்வார்கள் ? நல்ல வேளையாக பத்தாவது வரை எல்லோருக்கும் இலவசக் கல்வி என்று கொண்டு வந்தோம். இதை எல்லா மக்களும் வரவேற்கிறார்கள். உண்மையில் பிற்பட்ட இனத்தவர்களின் குழந்தைகளுக்கு மேற்படிப்புக்காக ஒதுக்கப்படுகிற பணத்தை ஐந்து, பத்து கோடி என்று அடுத்த ஆண்டில் இருந்தாவது உயர்த்தி, வருமான வரம்பையும் உயர்த்த வேண்டும். ஒரு குழந்தை படித்து முன்னுக்கு வந்தால் அதனால் ஒரு குடும்பமே உயர்வு பெறும். நாம் பலபல திட்டங்களைப் போடுவதை விட இந்த இனத்தில் பத்து கோடி ஒதுக்கினால் பத்து மடங்கு முன்னேற முடியும் என்று

தெரிவித்துக் கொள்கிறேன். மத்திய சர்க்காரில் இருந்து வழங்குகின்ற மானியத்தையும் கூட அவர்கள் பொருளாதார அடிப்படையில் பின் தங்கிய வகுப்பார்களுக்கு என்ற அடிப்படையில் இல்லாமல் வழங்கு கிறார்கள். அவ்வாறு கொடுக்கக் கூடாது என்று நான் சொல்லவில்லை. ஆனால் அங்கும் வருஷ வருமானம் ரூ. 420-க்கு உட்பட்டவர்கள் குழந்தை களுக்கு என்றால் மாதம் இருபது முப்பது ரூபாய் சம்பாதிக்கிறவர்கள் தான் வர முடியும். இந்தக் காலத்தில் அப்படிப் பார்க்கிறபோது அதைவிட உயர்வாக—நூறு ரூபாய்க்குள் வாங்குகிறவர்களுடைய குழந்தைகள் நிலைமை எல்லாம் என்ன ஆகும்? இதை யெல்லாம் பார்க்கும் போது நாம் செய்யும் உதவியினுடைய பலன் அவர்களுக்குப் போய்ச் சேருகிறதா என்பதைப் பார்த்து, நாம் மத்திய அரசாங்கத்திடம் அதிகமான அளவுக்குக் கேட்டு வாங்கி, அவர்களுக்குப் பையனாக இருந்தாலும், பெண்ணாக இருந்தாலும் பயனளிக்கக்கூடிய வகையிலே வாய்ப்பு ஏற்படுத்த வேண்டும்.

அடுத்தபடியாக 1,500 ரூபாய்க்கு மேலே வருமானம் இருந்து, 8, 10 குழந்தைகளும் இருந்து அவர்கள் படிக்க முடியாத நிலை இருக்கிறது என்ற காரணத்தால்தான் நாம் அவர்களுக்குக் கடனைத் தருகிறோம் என்று சொன்னோம். ஆனால் அந்த உதவி எல்லோருக்கும் கிடைக்கிறதா என்றால் இல்லை. சாமி வரம் கொடுத்தாலும், பூசாரி கொடுக்காது என்று சொல் வார்கள். அதைப்போல் தான் இதில் 100 பேர்களுக்கு 10 பேர்களுக்குத்தான் கொடுத்திருக்கிறார்கள். 90 அப்ளிகேஷன்களுக்குப் பதிலே கிடையாது. அவர்களும் இதற்காகக் கடன், கடன் என்று அலைந்து அசந்து போய் விட்டார்கள். இந்த அதிகாரிகள் அவர்களைக் கம்பர்சம் ரூல்ஸ் போட்டு, சட்டதிட்டங்களைப் போட்டு, செக்யூரிட்டி வாங்கிக் கொண்டு வா, அது கொண்டு வா, இது கொண்டு வா என்று சொன்னால் பையன் படிப்பானா, அல்லது செக்யூரிட்டி தேடிக் கொண்டிருப்பானா? நாம் நல்ல எண்ணத்தோடு தான் இதைச் செய்கிறோம். ஆனால் 100-க்கு 10 பேர்களுக்குத்தான் பலன் கிடைத்திருக்கிறது. ஆகவே இதில் எங்கே கோளாறு இருக்கிறது, எதில் சிக்கல் இருக்கிறது என்பதை யெல்லாம் பார்த்து அவர்கள் எல்லோருக்கும் பலன் கிடைக்கக்கூடிய அளவில் வசதி செய்து கொடுக்க வேண்டும்.

அடுத்தப்படியாக, இந்த ஹெல்த் அண்ட் மெடிக்கல் சர்வீஸ்ஸை எடுத்துக் கொண்டால், இரண்டு இலாக்காக்களையும் இணைத்திருக்கிறார்கள். இணைப்பது தேவையில்லை என்றுதான் நினைக்கிறேன். நிர்வாக வசதிக் காக இணைத்து இருக்கிறார்களோ என்னவோ இப்படி இணைப்பதால் ஒரு நல்ல டாக்டர் இருந்து. அவரை அதிகாரிக்குப் பிடிக்காவிட்டால் அவர் வேறு எந்த ஊருக்காவது சுண்ணாம்பு தெளிப்பதற்கு அனுப்பி விடலாம். யாரையாவது எந்தக் காரணத்திற்காகவாவது பிடிக்கவில்லை யென்றால் அப்படிச் செய்வதற்கு இடமிருக்கும். ஆகவே, இந்தக் கோளா றுகள் ஏற்படலாம், இந்தக் கோளாறுகள் ஏற்படாத அளவுக்குப் பாது காப்பு இருக்கவேண்டும். ஹெல்த்தைப்பற்றிப் பார்க்கும்பொழுது, 1965-66-ஆம் ஆண்டிலே 394 லட்சம் ரூபாய் கொடுத்திருக்கிறோம். ஆனால், அதில் அவர்கள் செலவழிக்க முடிந்தது 375 லட்சம் ரூபாய்தான். இப் பொழுது இந்த பட்ஜெட்டிலே அவர்களுக்கு 504 லட்ச ரூபாய் கொடுத்து இருக்கிறோம். ஏற்கனவே போன வருடம் ஒதுக்கிய பணத்தையே அவர் களால் செலவழிக்க முடியவில்லை. அப்படியிருக்கும்பொழுது நாம் என் இன்னும் அதிகமாக ஒதுக்கவேண்டும். அதையும் செல வழிப்பார்களா என்ற சந்தேகம் தோன்றத்தான் செய்கிறது. ஆகவே ஹெல்த் மெடிக்கல் சர்வீஸிலே அதிகமாகக் கொடுத்திருக்கக்கூடிய பண த்தை நல்ல முறையில் செலவழிக்கக்கூடிய அளவுக்குத் திட்டங்களைத் தயார் செய்யவேண்டும்.

அடுத்தபடியாக, பெண்களுக்கென்று விமன் பாலிடெக்னிக்ஸ் போடு வதாகச் சொல்லியிருக்கிறார்கள். இதற்காக பெண்கள் நன்றி தெரிவிக்கி றோம். அதோடு இண்டஸ்ட்ரியல் டிரெயினிங் ஸ்கூல்ஸ் பர் பாய்ஸ் என்று வைத்திருக்கிறார்கள். அதைப்போலவே இண்டஸ்ட்ரியல் டிரெயி னிங் ஸ்கூல்ஸ் ஃபார் கேர்ல்ஸ் என்று வைத்தால் பெண்கள் 8 வயது





வகுப்புக்கு மேல் படிக்க முடியாதவர்கள், இந்தச் சிறு தொழில்களைக் கற்றுக்கொண்டு, ரேடியோ எஞ்ஜினியரிங் போன்ற தொழில்களைக் கற்றுக் கொண்டு பிழைப்பு நடத்துவதற்கு வாய்ப்பு ஏற்படும். ஆகவே ஆண் களுக்கு இண்டஸ்ட்ரியல் டிரெயினிங் ஸ்கூல்ஸ் ஏற்படுத்திய மாதிரி பெண் களுக்கும் ஏற்படுத்த வேண்டும்.

அடுத்தபடியாக, மெயின்டனன்ஸ் அண்ட் நான்-பிளானிங் எக்ஸ்பெண் டிச்சரைக் குறைத்தால்தான் சிக்கனத்தை ஏற்படுத்த முடியும் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் 70,80 ரூபாய் சம்பளம் வாங்கும் தொழிலாள ர்களை வீட்டுக்கு அனுப்பாமல் இருப்பதற்கு வழிசெய்ய வேண்டும். ஏனென் றால் அப்படிப்பட்டவர்களுடைய குடும்பத்தில் எல்லாம் அவர் ஒருவருக்கு வேலையில்லாமல் போகுமானால் அந்தக் குடும்பமே செத்து விடும். வேலை யில்லாத வேதனைக்கு எல்லையே இருக்காது. குறிப்பாக, பி. டபிள்யூ. டி. டிபார்ட்மெண்டை எடுத்துக் கொண்டால், 8 வருஷம் 10 வருஷம் மேஸ்திரி வேலை பார்த்தவர்கள் எல்லாம் வீட்டுக்கு அனுப்பப்பட்டால் அவர்கள் 10 வருஷங்களுக்குப் பிறகு என்ன வேலை தேடமுடியும், எப்படிக் குடும்பத் தைக் காப்பாற்ற முடியும் என்பதைப் பார்க்க வேண்டும். இது ஒரு ஹ்யூமன் பிராப்ளம் என்ற முறையிலே இதைக் கவனித்துச் செய்ய வேண்டுமென்று வற்புறுத்திக் கூற விரும்புகிறேன். இன்னும் பல துறைகளிலே வேலை செய்கிறவர்களைக் காயப்படுத்தாமல் இருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் டெம்ப்ரரியாகவே வேலை செய்துகொண்டிருக்கி றார்கள். இது சம்பந்தமாக ஃபைனான்ஸ் கமிஷனின் ரெக்மெண்டேஷன் இருந்தும் கூட அவர்களை யெல்லாம் இன்னும் காயப்படுத்தாமல் இருக்கி றார்கள். குறிப்பாக பி. டபிள்யூ. டியில் இப்படி டெம்ப்ரரியாக இருப்ப வர்களை அரசாங்கம் சற்றுக் கருணைக் கண் கொண்டு பார்த்துக் காயப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியைப் பொறுத்த வரையில், பேஸின் பிரிட்ஜை அகலப்படுத்த வேண்டும். காரணம் அதனுடைய அகலம் 17 அடிதான் இருக்கிறது. அந்தப் பிரிட்ஜில் ஒரு டிரான்ஸ்போர்ட் பஸ் போனால், அங்கிருந்து மறுபக்கம் வர முடியாது. நமது அமைச்சர் அவர்கள்கூட வந்து கண்காணித்து விட்டு வந்தார்கள். அவர்களே நேரில் கண்டுவந்ததால் இதில் இடம் கொடுத்திருப்பார்கள் என்று நினைக்கிறேன். இல்லாவிட்டால் கூட இப்பொழுது அதை ஆரம்பித்துவிட்டால் பின்னால் சப்ளிமெண்டரி கிராண்ட் டோக்கன் வாங்கிக் கொள்ளலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தப்படியாக, சென்னை நகரத்தை எடுத்துக்கொண்டால் நல்ல தரமான அரிசியைக் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அதற்கு நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். சிறு சிறு நிர்வாகக் குறை கள்தான் இருக்கின்றன என்பதை அமைச்சர் அவர்களுடைய கவனத் திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இண்டண்ட் போடுவதற்கு ஒரு ஆபீசர் என்றும் டெலிவரி கொடுப்பதற்கு ஒரு ஆபீசர் என்றும் வைத்திருக்கி றார்கள். ஒரு கடைக்காரர் உணவுப் பொருள்களை வாங்கிக்கொள்வதற்கு இரண்டு நாட்கள் ஆகின்றன. அவர் அந்த ஆபீசுக்குப் போனால் உட்கார வதற்கு இடம் இல்லை. அவர் அங்கேயுள்ள மரத்தடியில் அல்லது காம் பவுண்ட் சுவரின்மேல்தான் உட்கார வேண்டியிருக்கிறது. ஆகவே அவர் களுக்கு உட்காருவதற்கு வசதி செய்து கொடுப்பதுடன், இண்டண்ட் சீக்கிர மாகப் போட்டுக் கொடுக்கவும் ஏற்பாடு செய்ய வேண்டும். கடைக்காரரிடம் போய் அரிசி கேட்டால் நாளைக்கு வா, நாளைக்குத்தான் வரும் என்று சொல்கிறார். இண்டண்ட் சீக்கிரமே போட்டுக் கொடுத்துவிட்டால் நாளை க்கு வா என்று சொல்லாமல் இன்றைக்கே வாங்கிக்கொள் என்று சொல்லக் கூடிய நிலைமையை ஏற்படுத்திக் குறைகளைத் தீர்க்கவேண்டும்.

கடைசியாக ஒன்றே ஒன்றை மட்டும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். மெயில் செய்தித் தாளிலே டாக்டர் பா. நடராஜன் அவர்கள் ஒரு கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள். போலண்டிலும், ஈஜிப்டிலும் இருப்பது மாதிரி நடுத்தர மக்களுக்கு அரிசியை வாங்கிக் கொடுத்துவிடுவது. 2,000 ரூபாய்

அல்லது 3,000 ரூபாய்க்கு மேல் வருமானம் உள்ளவர்களுக்கு அது தேவையில்லை. ஏனென்றால் அவர்கள் அதிகமாகக் கொடுத்து வாங்கிக் கொள்ள முடியும். ஆனால் அடித்தளத்திலே உள்ளவர்கள் 500 ரூபாய் 700 ரூபாய் என்று வருமானம் உடையவர்கள்தான் வாங்கிக்கொள்ள முடியாது. ஆகவே, அப்படிப்பட்ட அடித்தளத்திலே இருக்கக்கூடியவர்களுடைய கணக்கை எடுத்து அவர்களுக்கு அரிசியைக் கொடுப்பதன் மூலம், மற்றவர்களுக்கு வேறு ஏதாவது வழியில் கிடைப்பதற்கும் வழி செய்தால் ஃபிரி மார்க்கெட் ஏற்பட்டு கன்ட்ரோலினால் இருக்கக்கூடிய பல ஊழல்கள் இல்லாமல் போவதற்கு வாய்ப்பு ஏற்படும். அவர்கள் இந்த நல்ல யோசனையைக் கொடுத்திருக்கிறார்கள். நான் அதற்காகத்தான் பேப்பரைப் படித்தேன். அதற்குள் ஒரு அங்கத்தினர் படிக்கக் கூடாது என்ற முறையில் சொன்னார்கள். இதுமாதிரி 1939–லே சபையிலே படிக்கலாம் என்று சபாநாயகர் தீர்ப்புச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே படிப்பதில் தவறில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது) மக்களுக்கு நன்மை செய்ய வேண்டுமென்ற அடிப்படையில் நாம் இந்த வரவுசெலவுத் திட்டத்தைப் போட்டிருக்கிறோம், இதை எல்லோரும் வாழ்த்துவார்கள், வாழ்த்துகின்றனர். இதன் மூலம் எல்லோரும் நன்மையடைய முடியும் என்பதைக் கூறிக் கொண்டு நான் என்னுடைய வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. பி. முருகையன் :** மதிப்பிற்குரிய சட்ட மன்றத் துணைத் தலைவர் அவர்களே, இன்று நடைபெறுகிற இந்த 1966–67-ம் ஆண்டு வரவு செலவுத் திட்ட விவாதத்தில் என்னுடைய கருத்துக்களையும் கூறலாம் என்று கருதுகிறேன். நாம் மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களைப் போட்டு கோடிக்கணக்கான ரூபாய்களைச் செலவிட்ட பிறகு நான்காவது ஐந்தாண்டுத் திட்ட ஆரம்பத்திலே நின்று கொண்டிருக்கிறபோது விவசாயத்தைப் பற்றி இந்த உரையிலே அதிகமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களிலே விவசாயத்திற்கு முக்கியத்துவம் தரப்பட்டு, நான்காவது ஐந்தாண்டுத் திட்ட ஆரம்பத்திலே நிற்கும்போது உற்பத்தி எதிர்பார்த்த அளவு பெருகவில்லை என்று சொன்னால் இதைவிடக் கேவலமான முறையிலே திட்டங்கள் வேறு எங்கு இருக்க முடியும் என்றுதான் எங்களால் கேட்க முடியும்.

**கனம் திரு. பூ. கக்கன் :** " கேவலம் " என்ற வார்த்தையைச் சொல்லக் கூடாது என்று கூறப்பட்டிருக்கிறது. அந்த நிலையில் கனம் அங்கத்தினர் அவர்கள் அந்த வார்த்தையைச் சொல்லுவது அவ்வளவு நல்லதல்ல.

**திரு. பி. முருகையன் :** அதற்குத் தலைவர் அவர்கள் தீர்ப்புக் கொடுத்தால் திரும்பப் பெறத் தயாராக இருக்கிறேன்.

**கனம் உதவி சபாநாயகர் :** கனம் அங்கத்தினர் " கேவலம் " என்று சொல்லாமல் சந்தர்ப்பத்திற்கு தகுந்த வேறு ஒரு வார்த்தையைப் பயன்படுத்தலாம்.

**திரு. பி. முருகையன் :** மோசமான ஒரு ஆட்சி நடந்து கொண்டிருப்பதை எங்களால் சுட்டிக்காட்டாமல் இருக்க முடியாது. மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களிலும் இந்த விவசாய உற்பத்தி பெருகாமல் இருப்பதற்குக் காரணம் என்ன என்பதைப் பற்றி இந்த அரசு ஏதாவது குழு அமைத்தோ இந்த அரசை நடத்தி செல்பவர்கள் கூடியோ அலசிப் பார்த்தார்களா என்றால் உள்ளபடியே அப்படிச் செய்ததாகத் தெரியவில்லை. இன்று உணவுப் பற்றாக்குறையின் காரணமாக, ஒருவேளை பட்டினி இருங்கள், இரண்டு நாளைக்கு ஒரு வேளை பட்டினி இருங்கள் என்றெல்லாம் தியாகம் செய்ய வேண்டுமென்று கூறுவது எந்த அளவுக்குப் பொருத்தமாக இருக்கும் என்று கேட்க விரும்புகிறேன். விவசாய உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்று சொல்லுகிற நேரத்தில் உண்மையான ஜனநாயக ஆட்சி நடைபெறுகிறது என்று சொன்னால், விவசாயிகளுக்கு உரிய நேரத்தில் கடன்கள், உரம், விதைகள் ஆகியவை கொடுக்கப்பட வேண்டும். ஆனால்





அவை எல்லாம் விவசாயிகளுக்குப் போய்ச் சேருகிறதா என்றால் உள்ளபடியே இல்லையென்றுதான் சொல்ல வேண்டும். எங்கள் பகுதியிலே கடந்த ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் உரம் நல்ல முறையிலே விவசாயிகளுக்குப் பகிர்ந்து கொடுக்கப்படவில்லை. கடந்த ஆண்டு கொடுக்கப்பட்ட உரம் என்னைப் போன்ற சட்ட மன்ற உறுப்பினர்களுக்கும், சிறு நிலச் சுவான்தார்களுக்கும் கிடைக்கவில்லை. அந்த உரம் எப்படிப் போய் விட்டது என்று புரியவில்லை. கேள்வி நேரத்தில் அதைப் பற்றி ஒரு கேள்வி கேட்ட நேரத்தில், அமைச்சர் அவர்கள், அது வழக்கு மன்றத்தில் இருக்கிறது என்று சொன்னார்கள். வழக்கு மன்றத்திற்குச் செல்ல வேண்டிய அளவுக்கு அப்பாவியாக இருக்கும் அதிகாரிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். கேள்வி நேரத்தில் "அமைச்சர் அவர்களுக்குச் சொந்தக்காரர்கள் என்று சுட்டிக் காட்டாதீர்கள் " என்று சொன்னார்கள்.

**கனம் திரு. வெ. ராமைய்யா :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இங்கே பேசக்கூடிய கனம் அங்கத்தினர் அவர்களுக்கு ஏதேனும் நியாயமான குற்றத்தை என் மீது சொல்வதாக இருந்தால், எப்போதும் நான் அதைக் கேட்கத் தயாராக இருக்கிறேன். ஆனால், இந்தச் சபையைப் பயன் படுத்திக் கொண்டு பேச்சைத் தொடங்குகிற போதெல்லாம் ஊரில் இல்லாததையும், நடக்காததையும், வைத்துக் கொண்டு என்னை இழுத்துப் பேசுவது வழக்கமாக இருக்கிறது. நீங்களே ஒரு விசாரணை செய்தால் கூட நல்லது. இந்த மாதிரிப் பொறுப்பில்லாமல் பேசுவதைப் பற்றி நானும் மூன்று வருஷ காலமாக வாயை அடைத்துக் கொண்டிருந்தேன். அதனால் மேலும் பொறுப்பில்லாமல் பேசிக் கொண்டே போவது சரியல்ல.

**கனம் உதவி சபாநாயகர் :** கனம் அங்கத்தினர் அவர்கள், அந்தப் பிரச்சினை வழக்கு மன்றத்தில் இருப்பதாகச் சொன்னார்கள். வழக்கு மன்றத்தில் இருப்பதைப் பற்றி மேலும் இங்கு பேச வேண்டாம்.

**திரு. பி. முருகையன் :** அமைச்சர் அவர்கள் குறுக்கிடுகிறபோது, நான் பொறுப்பில்லாமல் பேசுவதாகக் கூறினார்கள். நான் இந்த நேரத்தில் தங்கள் மூலமாகச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்—பொறுப்போடுதான், ஆதாரங்களோடுதான் பேசுகிறேன். எங்களுடைய பகுதியிலே கூட்டுறவுச் சங்கத்திலே உர ஊழலால் பல ஆயிரக்கணக்கான ரூபாய்கள் கையாடல் செய்யப்பட்டிருக்கிறது. இந்த நிலைமை எதனால் ஏற்படுகிறது என்றால், அங்கு பொறுப்பில் இருக்கிறவர்களுக்கு அமைச்சர்களுடைய தயவு இருக்கிறது என்ற பரவலான கருத்து இருக்கிறது. அமைச்சர்கள் அந்த பகுதிக்கு வரும்போது, எங்களைக் காரணமாக இதற்கெல்லாம் காட்ட வேண்டாமென்று சொல்லிக் கொண்டால் நலமாக இருக்குமென்று கூறிக் கொள்கிறேன்.

**கனம் திரு. பூ. கக்கன் :** கனம் அங்கத்தினர் கூட அங்கு அதிகாரிகளிடம் கூறித் தக்க ஏற்பாடு செய்துகொள்ளலாம்.

**கனம் உதவி சபாநாயகர் :** கனம் அங்கத்தினர் அவர்கள், "பரவலான அபிப்பிராயம் எங்கோ இருக்கிறது" என்று சொல்வது சரியல்ல. அதற்குத் தானே பொறுப்பேற்றுக்கொள்வதாக இருந்தால் இங்கே எடுத்துச் சொல்லலாம். "பரவலாக கருத்து அங்கே இருக்கிறது" என்று சொல்வது நல்லதும் அல்ல, பொறுப்புமல்ல.

**திரு. பி. முருகையன் :** அதை நானே ஏற்று நிரூபிக்கவும் தயாராக இருக்கிறேன். உள்துறை அமைச்சர் அவர்கள் என்னுடைய பேச்சிலே இடைமறித்தார்கள். நான் அவருடைய நிர்வாகத்தில் உள்ள சில, பல, ஊழல்களை எடுத்து வைக்க ஆசைப்படுகிறேன். ஹரிஜன நலமுன்னேற்றத்திற்காக அதிகமான நிதியை ஒதுக்கியிருக்கிறார்கள். வீடுகள், மனைகள், நில ஆர்ஜிதம் ஆகியவற்றுக்காகப் பல லட்சக்கணக்கான ரூபாயைக் கேட்டிருக்கிருக்கிறார்கள். "அதிகாரிகளிடத்தில் கூறுங்கள்" என்று அமைச்சர் அவர்கள் கூறிய காரணத்தால் ஒரு விஷயத்தை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். என்னுடைய தொகுதியைச் சேர்ந்த ஒரு ஹரிஜன மகன் சியால்

கோட்டிலே ராணுவத்திலே பணி புரிந்து வருகிறான். அந்நியருடைய படையெடுப்பை எதிர்க்க வேண்டுமென்பதற்காக அவன் தன்னுடைய அன்பு மனைவியையும், ஆசை மகனையும், குழந்தைகளையும் பெற்றோர்களையும் ஊரிலே விட்டுவிட்டு ராணுவத்திலே பணி புரிந்து கொண்டிருக்கிறான். அவன் மனைவியும், மக்களும் குடியிருப்பதற்காக ஆதனக்கோட்டை கிராமத்தில் கருப்படையான்பட்டி என்ற கிராமத்தில் சர்வே நம்பர் 706-ல் உள்ள 2 எக்கர் 18 செண்ட் அளவுள்ள நிலத்தில் ஐந்து செண்ட் நிலம் வீடு கட்டிக்கொள்வதற்காகக் கேட்கப்பட்டது மறுக்கப்பட்டிருக்கிறது. அவருடைய குடும்பத்தை அழைத்துக்கொண்டு சென்று மாவட்டக் கலெக்டரிடத்திலும், உதவி கலெக்டரிடத்திலும், வட்டாட்சித் தலைவரிடத்திலும் நிலைமையை எடுத்துச் சொன்னேன். இதைப் பற்றிப் பல முறை கூறியும் இன்றையத் தேதிவரை அவர்களுக்கு மனைக்கட்டு வழங்கப்படவில்லை. அங்கு ஒரு பெரிய மிராசுதார் இருக்கிறார். அவர் அந்த இரண்டு எக்கர் 18 செண்ட் நிலத்தை அறுவடைக் காலத்தில் போரடிக்கும் களமாகப் பயன்படுத்தி வருகிறார். பல எக்கருக்குச் சொந்தமாக இருக்கும் அந்த முதலாளி அதற்கு இடையூருக இருக்கிறார். அவரைக் கண்டு அங்கிருக்கும் அதிகாரிகள் எல்லாம் அஞ்சுகிறார்கள். அப்படிப்பட்ட நிலைமைகளை இங்கே எடுத்துச் சொல்ல வேண்டிய துர்ப்பாக்கிய நிலைமை ஏற்படுகிறதே தவிர, இல்லாததைக் கூறுவதாக எங்கள் பேரில் குற்றம் சொல்ல முடியாது. ஆதாரத்தோடுதான் நாங்கள் பேசுகிறோம்.

**கனம் திரு. பூ. கக்கன் :** நெல் அடிப்பதற்காக இருக்கின்ற அந்த நிலத்தைக் கேட்ட காரணத்தால்தான் மறுத்திருக்கக் கூடும். வேறு இடத்தைக் கேட்டால் கொடுத்திருப்பார்கள். களத்தைத்தான் கொடுக்க வேண்டுமென்று சொன்னால் ஆட்சேபணை இருக்க முடியும். எப்படி இருந்தாலும் இதைப் பற்றி எழுத்து மூலம் எழுதி அனுப்பினால் விசாரிக்கலாம்.

1-00 p.m **திரு. பி. முருகையன் :** தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் குறுக்கிடுகிற நேரத்தில் களத்திற்குக் கேட்கிறார்கள் என்று சொன்னார்கள். நூற்றுக்கணக்கான எக்கர்களுக்குச் சொந்தக்காரராக இருக்கிறார் அவர். அங்கு முன்னுடி களம் இருந்ததே இல்லை. இந்த ஆண்டு வேண்டுமென்றே அந்த ஹரிஜனை அங்கு வீடுகட்ட விடுவதா என்ற ஒரே காரணத்திற்காக அது மறுக்கப்படுகிறது. நான் பச்சையாகச் சொல்லத் தயாராயில்லை. அதிகாரிகளிடத்திலே துவரையாகவும் மற்ற தான்யங்களாகவும் கொடுத்து பணமும் லஞ்சம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதை ஆதாரத்தோடு கூட நான் நிரூபிக்கத் தயாராயிருக்கிறேன். அமைச்சர் அவர்கள் அங்கு வருவார்களானால் இந்த நாட்டில் ஹரிஜன மக்கள் அந்த நிலைக்குப் பின் தள்ளப்பட்டிருக்கிறார்கள்.

**கனம் திரு. பூ. கக்கன் :** துவரை போன்ற பொருள்களைக் கொடுத்ததாகவும் அதை நிரூபிக்கத் தயாராக இருக்கிறார்கள் என்று சொன்னார்கள். தயவு செய்து அதை எழுதி அனுப்பி அதை ப்ரூவ் பண்ணுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. பி. முருகையன் :** அமைச்சர் அவர்கள் என் தொகுதிக்கு இது சம்பந்தமாக விசாரணைக்கு வருகிற தேதியை அறிவித்தால் அதை ப்ரூவ் செய்ய நான் தயாராயிருக்கிறேன்.

**Sri V. KRISHNAMOORTHY: Let the Hon. Minister give an undertaking that he will not be prosecuted.**

**கனம் உதவி சபாநாயகர் :** கனம் அங்கத்தினர் அவர்கள் அதை எழுத்து மூலம் அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்தால் அவர்கள் அதன் பேரில் நடவடிக்கைகள் எடுக்கச் சாத்தியமாக இருக்கும் என்று சொல்கிறார்கள்.

**திரு. பி. முருகையன் :** தலைவர் அவர்கள் என்மீது நடவடிக்கை எடுப்பதில்லை என்ற உறுதி கொடுத்தால் தங்கள் ஆணையை ஏற்றுக் கொள்கிறேன். அடுத்து, இன்னும் ஒரு உதாரணத்தை எடுத்துக் கூற



தயாராயிருக்கிறேன். லால்குடி வட்டத்தில் பூவளூர் பஞ்சாயத்தில் நான்கு வார்ட்களுக்கு, ஹரிஜனத் தெருக்களையும் சேர்த்து உயர்நிலை மட்ட தொட்டி கட்டி தண்ணீர் வழங்குவதற்கு பஞ்சாயத்து தீர்மானம் போட்டும் இந்த ஹரிஜனத் தெருக்களுக்கு மட்டும் இந்த ஆதிவாசிகளுக்கு மட்டும் தண்ணீர் வழங்குவதற்கு நம் ஜனநாயக ஆட்சியில் இப்போது தடைப் படுத்தப்பட்டிருக்கிறது. அதுபற்றி மாவட்டக் கலெக்டருக்குத் தெரிவித்தும் தடை வேண்டியதில்லை என்ற உத்தரவு பிறப்பித்தும் இப்போது செகரட்டேரியேட்டிலிருந்து கூட தடை உத்தரவு போயிருக்கிறது. இந்தமாதிரி நிலைதான் கிராமப்புறங்களில் இருக்கிறது. இப்படிப்பட்ட குறைகளை எடுத்துக் கூறும்போது அமைச்சர்கள் வருத்தப்படுவதில் எந்தவித உள்நோக்கமும் இருக்க முடியாது என்று கூறிக் கொள்கிறேன். அடுத்து பஞ்சாயத்துப் பள்ளிகளில் பணியாற்றிய ஆசிரியர்களுக்கு ஏறத்தாழ ஐந்தாறு ஆண்டுகளுக்கு முன்பாக ஓய்வு பெற்றவர்களுக்கு இதுவரையில் பென்ஷன், கிராஜுவிடி இவைபோன்ற தொகைகள் வழங்கப்படவில்லை. இந்த நிலை எங்கள் வட்டத்தில் அதிகமாக இருக்கிறது. இந்த நிலையைப் போக்க வேண்டுமென்று தங்கள் மூலம் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். அடுத்து, பர்மாவிலிருந்து வந்துள்ள அகதிகள், சென்ற மாதம் 20-ம் தேதிக்கு முன்பு என்று கருதுகிறேன், எங்கள் மாவட்டத்தில் பரவலாகக் குடியமர்த்தப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்குக் கொடுக்கப்படுகிற கடன் தொகைகள் சரியானபடி, இதற்கு முன்பு இருந்த அதிகாரிகள் வழங்கியதுபோல் இப்போது இருக்கிற அதிகாரிகள் வழங்குவதில்லை. காரணம் என்னவென்று எங்களால் புரிந்துகொள்ள முடியவில்லை. நாங்கள் பல முறைகள் எடுத்துச் சொல்லி பாதித் தொகை வாங்கியவர்களுக்கு மீதி பாதித் தொகையையும் கொடுங்கள் என்று சொன்னால் கொடுக்கிறோம், கொடுக்கிறோம் என்று ஏறத்தாழ ஒரு ஆண்டுக் காலமாக அவர்கள் காலம் கடத்தி வருகிறார்கள். பலருக்குக் கிடைக்கக் கூட இல்லை. இந்த நிலையைப் போக்க வேண்டுமென்று தங்கள் மூலம் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். அடுத்து லெவி கொள்முதல் இருக்கிறது. இன்று எனக்கு இரண்டு எக்கர் ஐம்பது செண்ட் நன்செய் நிலம் இருக்கிறது. அந்த இரண்டு எக்கர் ஐம்பது செண்டில் இருந்து பத்து மூட்டை நெல் கொடுக்க வேண்டுமென்று அதிகாரி அவர்கள் எங்களுக்குத் தகவல் அனுப்பியிருக்கிறார்கள். இந்த இரண்டு எக்கர் ஐம்பது செண்டில் எங்களுக்கு 20 மூட்டை நெல் விளையுமா என்பதுகூட அச்சமாக இருக்கிறது. காரணம், ஒரு எக்கருக்கு ஏழு மூட்டை நெல்தான் அறுவடையாகி யிருக்கிறது. அந்த நிலை அங்கு ஏற்பட்டிருப்பதற்குக் காரணம் காலம் கடந்து மழை பெய்ததும், உரங்கள் சரியான காலத்தில் கொடுக்காததும் தான். ஆகவே இந்த லெவி கொள்முதல் விஷயத்தில் புதுக்கோட்டைப் பகுதிக்கு சற்றுப் பிரத்யேகச் சலுகை காட்டி உணவு அமைச்சர் அவர்கள் விதியைச் சற்று தளர்த்திக் கொடுக்க வேண்டுமென்று பணிவுடன் தங்கள் மூலம் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். உணவு அமைச்சர் அவர்களுக்கு நன்கு தெரியும். என் தொகுதியில் ஒரு நாலைந்து கிராமங்கள் தஞ்சை ஜில்லாவிற்கு அப்பாற்பட்டிருக்கின்றன, அங்கு காவேரி தண்ணீர் பாய்கிற காரணத்தினால் அங்கு ஓரளவு நல்ல முறையில் விவசாயம் நடந்திருக்கிறது. அங்குள்ள விவசாயிகள் தங்களுடைய நெல்லை எடுத்துக் கொண்டு தலைநகரத்திற்கோ, அதிகாரிகளிடமோ அல்லது ப்ரொக்யூர்மெண்ட் ஏஜண்டினிடமோ கொண்டு போவது என்றால், அல்லது லெவி கொள்முதல் ஏஜண்டுகள் வாங்கிய நெல்லை சர்க்கார் கோடவுன்களுக்கு எடுத்துச் செல்ல முடியவில்லை. தஞ்சை மாவட்டத்திற்கு இடையில் இரண்டு எக்கர் புன்செய் நிலம் இருக்கிறது. அங்கு ஒரு செக் போஸ்டை போட்டு சர்க்கார் அதிகாரிகள் கொடுக்கிற பர்மிட்டை கூட அவர்கள் அலட்சியமாக நினைத்து அங்கேயே நிறுத்தி வைத்து அதைக் கொண்டு வர விடாமல் தடுத்து நிறுத்துவதினால் அதிகமாக நெல் தேக்கம் ஏற்பட்டிருக்கிறது. இதனால் ஏழை விவசாயிகள் பாதிக்கப்படுகின்றார்கள். இதுகுறித்து சென்ற ஆண்டும் பேசினேன். கவர்னர் பெருமான் அவர்கள் உரைமீது பேசும்போதும் கூறினேன், இப்போதும் கூறுகிறேன் அமைச்சர் அவர்களிடம். அந்தப் பகுதி மக்களின் குறைகளைக் கவனிக்க, உடனடியாகக் கவனிக்கிறேன் என்று வார்த்தைக்காகவாவது உடனடியாக தஞ்சாவூர் கலெக்டர் அவர்களுக்கு உத்தரவு பிறப்

பித்து அந்தப் பகுதியிலிருந்து வரக் கூடிய சர்க்கார் பெர்மிட் உள்ள நெல்லை விடும்படி ஒரு உத்தரவு பிறப்பிக்கவேண்டுமென்று தங்கள் மூலம் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். அடுத்து பஞ்சாயத்து யூனியனில் மைனர் இரிகேஷன் மேஸ்திரிகள் என்று ஒரு பிரிவினர் இருக்கிறார்கள். அவர்களை ரெகுலரைஸ் செய்தும் அவர்களுக்கு இதுவரை சம்பளம் ஒழுங்காகக் கிடைக்கவில்லை. இப்படிப்பட்ட நிலைமைகள் இருக்கின்றன. பஞ்சாயத்து யூனியனில் ஜீப் கார்கள் ஓட்டும் ட்ரைவர்களுக்கு நாள் ஒன்றுக்கு ரூபாய், ஒன்றே கால் ரூபாய்தான் படி கொடுக்கப்படுகிறது. ஒரு நாள் முழுவதும் வெளியூர் சுற்றுப்பிரயாணத்திற்கு இந்தப் படி எப்படிப் போதும் என்பதை நன்றாகச் சிந்தித்துப் பார்த்து அவர்களுக்குள்ள இந்த நாள் படியைச் சற்று உயர்த்திக் கொடுக்கவேண்டுமென்றும் ஸ்தல ஸ்தாபன அமைச்சர் அவர்களைத் தங்கள் மூலம் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகின்றேன். அடுத்து இந்த ஆண்டு வரவு செலவுத் திட்டத்திலே உயர்நிலைப் பள்ளிகள் எவ்வளவு ஆரம்பிக்கப் போகிறோம் என்ற ஒரு திட்டத்தை இங்கு தரவில்லை. எங்கள் பகுதியான புதுக்கோட்டை கல்வியில் மிகவும் பின்தங்கிய பகுதியாகும். ஆகவே அங்கு அதிகப்படியான உயர்நிலைப்பள்ளிகளை ஏற்படுத்த வேண்டுமென்று தங்கள் மூலம் கேட்டுக்கொள்கிறேன். அடுத்து, பஞ்சாயத்து யூனியனில் உள்ள மாதர் சங்கம் எப்படி வேலை செய்கிறது என்பதை எங்களால் புரிந்து கொள்ள முடியவில்லை. மாதர் சங்கம் என்று ஒன்று இருக்கிறதே தவிர அந்தச் சங்கம் எப்படிச் செயல்படுகிறது, அந்தச் சங்கத்தின் தலைவர் யார், அது என்ன முறையில் நடைபெறுகிறது என்பதையெல்லாம் எங்களால் புரிந்து கொள்ள முடியவில்லை. மாதர் சங்கங்களைக் கூட்டுகிறோம் என்று பஞ்சாயத்து யூனியன்கள் கூட்டங்களில் வைக்கிற அஜெண்டாவில் குறிப்பிடுகிறார்களே தவிர அந்தக் கிராமங்களுக்குச் சென்று பார்த்தால் அங்கு அந்தக் கூட்டங்கள் நடக்கவில்லை என்று அங்குள்ள மக்கள் கூறுகிறார்கள். இந்த நிலைமையையும் போக்க வேண்டுமென்று தங்கள் மூலம் கேட்டுக்கொள்கிறேன். அடுத்து எங்கள் பகுதிக்கு காவேரித் தண்ணீரைக் கொண்டு வரவேண்டுமென்று பல ஆண்டுகளாகப் பலர் அபிப்பிராயப்பட்டும் இதுவரை ஏனோ அந்தத் திட்டம் கைவிடப்பட்டு இப்போது அமராவதித் தண்ணீரை புதுக்கோட்டைப் பகுதிக்கு அளிக்கிறோம் என்று குறிப்பில் கலெக்டர் கூறியுள்ளார்கள். அந்தத் திட்டத்தையாவது உடனடியாக அமைச்சர் அவர்கள் தலையிட்டு நல்லமுறையில் பரிசீலனை செய்து புதுக்கோட்டை பகுதிக்கு விஸ்தரித்துக் கொடுக்கவேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**திரு. ஆதி. அப. சவுந்தரவேல் சேர்வை :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த 1966–67-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையை ஆதரித்து நான் என் அபிப்பிராயங்களைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்த அறிக்கையிலே விவசாயத்திற்கு முதல் இடம் அளிக்கப்பட்டிருக்கிறது. விவசாயத்திற்கு முதல் இடம் அளிக்கப்பட்டு அரசாங்கம் மிகக் கவனத்தோடு ஐந்துகோடி ரூபாய் செலவழித்து கிணறுகள் தோண்டுவதற்கும், தூர் எடுப்பதற்கும், குழாய்க் கிணறுகள் போடுவதற்கும், விவசாயத்தைப் பெருக்குவதற்குமாக ஒதுக்கியிருக்கிறது. திட்டங்களைப்போட்டு விடுவது எளிதாக இருந்தாலும் இந்த ஆண்டு இந்த நிதி விவசாயிகளுக்கு காலாகாலத்தில் போய்ச் சேருவதற்கு அதிகாரிகளை உற்சாகப்படுத்தி, விவசாயிகள் இந்த உதவிகளை அடைய வேண்டிய வழிவகைகளைச் செய்யவேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இந்த நிதிநிலை அறிக்கையில் புதிய வரியில்லாமல் இருந்த போதிலும், இப்போதுள்ள முக்கியமான பிரச்னை இந்த விவாதத்தில் தங்கள் தங்கள் தொகுதியில் இருக்கின்ற குறைகளைப் பற்றிச் சொல்வது தான். அந்த முறையில் எமது தொகுதியில் இருக்கின்ற சில பிரச்னைகளையும் சொல்ல விரும்புகிறேன். எங்கள் தொகுதி விவசாயத்திற்கு முக்கியமாக இருக்கின்ற தொகுதி. வளம் பொருந்திய ஒரு தொகுதி. எங்கள் போடிநாய்க்கனூர் ஒரு கோடியில் இருக்கிறது. திருவிதாங்கூர் மலைப் பக்கத்தில் ஒரு மூலையில் அடிவாரத்தில் அமைந்திருக்கிறது. அங்கு வருகின்ற தண்ணீரை அரசாங்கம் கவனித்து, சிறு சிறு





அணைகளைக் கட்டினால் விவசாயிகளுக்கு நல்ல பயன் ஏற்படும். இதைப் பற்றி கழிந்த காலத்தில், அதாவது சுதந்திரம் அடைந்து 16, 17 ஆண்டுகள் ஆகியும், எந்தவிதமான நடவடிக்கையும் எடுத்துக் கொள்ளவில்லை. இதைப் பற்றி சர்க்காருக்குப் பல முறைகள் எழுதியிருக்கிறோம். இப்போதும் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இதன் மீது விவசாய இலாகாவோ அல்லது பொதுப்பணித் துறை இலாகாவோ கவனம் செலுத்தி அங்கே வருகின்ற தண்ணீரைத் தடுத்து சிறு அணைகளைக் கட்டினால் மிகவும் பயனுள்ளதாக இருக்கும். இதைப் பற்றி முன்பும் அரசாங்கத்திற்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, இதன் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக, பொட்டாங்குடி என்ற ஆறு போடியில் ஓடிக்கொண்டிருக்கிறது. அது 7,000 அடிக்கு மேலிருந்து உற்பத்தியாகி வைகை அணையில் வந்து விழுகிறது. இந்த ஆற்றில் ஒரு அணை கட்டினால் சுமார் 20 குளங்களுக்குத் தண்ணீரைப் பெருக்குவதற்கும், அங்கிருக்கும் ஆயக்கட்டு நிலங்களுக்கு வேண்டிய தண்ணீரைக் கொடுப்பதற்கும் வசதி ஏற்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

1953-வது ஆண்டு எங்கள் ஊர் ஜமீனாக இருக்கும்போது, அரசாங்கம் ஜமீனை எடுத்துக்கொண்டது. அங்கு ஜமீனை ஒட்டிய மலைகள் நிறைய இருப்பதால், ஜமீன் அபாலிஷன் ஆனவுடனேயே செட்டில்மெண்ட் இலாகாவிடம் அந்த மலைகளை விவசாய நிலங்களோடு சேர்ந்து ஒப்படைக்கவேண்டும் என்று சொல்லப்பட்டது. இதைப் பற்றிப் பல முறைகள் ரெவின்யூ அமைச்சர் அவர்களிடமும், காட்டு இலாகா அமைச்சர் அவர்களிடமும் சொல்லியிருக்கிறோம். அவர்களும் இந்தக் காடுகளை பார்த்திருக்கிறார்கள். ஆனால், இதுவரை செட்டில்மெண்ட் நடவடிக்கை எதுவும் எடுத்திருப்பதாக தெரியவில்லை. ஒன்று, காட்டு இலாகாவோடு எடுத்துக்கொள்ளவேண்டும், இல்லையென்றால் ரெவின்யூ இலாகாவுக்குத்தான் அதிகமான வருமானம் வரும் என்று எண்ணினால் ரெவின்யூ இலாகா எடுத்துக்கொள்ளவேண்டும். 1953-லிருந்து 13 வருடங்கள் ஆகியும் எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. இப்போது அவற்றைக் கணக்கிட்டுப் பார்க்கும்போது, இந்த மலைகள் காட்டு இலாகாவிடம் இருப்பதைக் காட்டிலும் ரெவின்யூ இலாகாவிடமே வரும் என்று தோன்றுகிறது. இதை ரெவின்யூ அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்து பார்த்து தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதைப் பரிசீலனை செய்வார்களேயானால் ரெவின்யூ இலாகாவுக்கு இன்னும் அதிக வருமானத்தை எதிர்பார்க்கலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எனது பிராந்தியத்தில், பூனிப்புரம் என்ற ஒரு இடம் இருக்கிறது. இந்த இடத்திற்கு தேனியிலிருந்து செல்லவேண்டுமென்றால், அங்கேயுள்ள ஒரு ஆற்றின் குறுக்கே ஒரு பாலம் அமைக்கவேண்டும். இதைப்பற்றி எனக்கு முன்னால் இருந்த சட்டசபை அங்கத்தினர் அவர்களும் சொல்லியிருக்கிறார்கள் என்று எண்ணுகிறேன். இதைத் தாண்டி மறுபக்கத்திற்குச் செல்லவேண்டிய பள்ளி மாணவர்கள் இங்கே ஒரு பாலம் இல்லாததால் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். இந்த நாகரீகமான காலத்தில் ஒரு சிறிய பாலத்தை அமைக்காததின் காரணமாக இத்தனை கஷ்டங்கள் இருக்கின்றன என்பதைப் பார்த்து நான் மிகவும் வருந்துகிறேன். இதைக் கவனித்து இந்தப் பாலத்தை அமைத்துக்கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, எங்கள் தொகுதியில் 3 பஞ்சாயத்து யூனியன்கள் இருக்கின்றன. மூன்று யூனியன்களிலும் பல ரோடுகளை பஞ்சாயத்து யூனியன்கள் நிர்வகித்து வருகின்றன. இவற்றில் பஸ்களும் ஓடிக்கொண்டிருக்கின்றன. சில ரோடுகளை பஞ்சாயத்து யூனியன்களால் நிர்வகிக்க முடியவில்லை. அவற்றையெல்லாம் ஹைவேஸ் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கழிந்த நான்கு ஆண்டுகளாகத் தெரிவித்தும் அதை இன்னும் எடுத்துக்கொள்ளவில்லை. இதைப்பற்றி ஜில்லா டெவலெப்

மெண்ட் கவுன்ஸிலில் கூட்டத்திலும் தெரிவித்திருக்கிறேன். எங்கள் பிராந்தியத்தில் வசதியில்லாத ரோடுகளை எல்லாம் அரசாங்கம் எடுத்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், எங்கள் ஊரில் ஒரு கல்லூரி மிகத் தேவையாக இருக்கிறது. அங்கே சுற்றிலும் 15 ஹைஸ்கூல்கள் இருக்கின்றன. கல்லூரிக்குப்போக வேண்டுமென்றால் உத்தமபாளையத்திற்குத்தான் போகவேண்டும். அங்குதான் கல்லூரி இருக்கிறது. போடியின் 40, 50 மைல் சுற்றளவுக்கு எந்தவிதமான கல்லூரியும் இல்லை. ஆகவே, போடியில் அரசாங்கத்திலிருந்தே ஒரு கலைக்கல்லூரியை அமைத்துத்தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு, சென்னை மாநிலத்திலேயே முதல் தரமான வாட்டர் சப்ளை போடிநாயக்கனூரில் தான் இருக்கிறது. 24 மணி நேரமும் சப்ளை இருக்கிறது. சர்ப்ளஸ் வாட்டர் சப்ளையாகவும் இருக்கிறது. இப்படிப்பட்ட இடத்தில் பாதாள சாக்கடைத் திட்டம் அமைக்கவேண்டும் என்று பல ஆண்டுகளாகத் தெரிவித்துக்கொண்டிருக்கிறோம். இதையும் அரசாங்கம் நிறைவேற்றித்தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அங்கே பல இடங்களில் தண்ணீர் இல்லாத நிலைமையும் இருக்கிறது. அந்த இடங்களை இந்த சர்ப்ளஸ் வாட்டர் இருக்கின்ற இடத்தில் சேர்த்து இருக்கிறோம். ஆகவே, இவ்விதம் சர்ப்ளஸ் வாட்டர் சப்ளை இருக்கும் இந்த போடி முனிசிபாலிட்டியை ஸ்பெஷல் கேஸாக எடுத்து பாதாள சாக்கடைத் திட்டத்தை எடுத்துக்கொண்டு நிறைவேற்றித்தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, போடிநாயக்கனூரில் 8 லட்ச ரூபாய் செலவில் ஒரு ஆஸ்பத்திரி கட்டிக்கொண்டிருக்கிறோம். அது 32 படுக்கைகள் கொண்டதாக இருக்கும். இப்போது வேலை முடியக்கூடிய தருவாயில் இருக்கிறது. இன்னும் துரிதமாக இந்த வேலைகளை நடத்தி முடிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். எங்கள் ஊர் 100 கிராமங்களைக்கொண்ட நகரமாக இருக்கிறது. இதை ஒரு சப்-தாலூகாவாக ஆக்கவேண்டுமென்று, கேட்டுக்கொள்கிறேன். அதற்கான எல்லாவிதமான வாய்ப்பும் வசதியும், வருமானமும் இருக்கிறது. இதை கனம் ரெவன்யூ அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்து போடிநாயக்கனூர் நகரத்தை ஒரு சப்-தாலூகாவாக அமைத்துக்கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

* **திரு சி. கு. சின்னராஜி** : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, 66-67ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கை மீது ஒரு சில கருத்துக்களை நானும் சமர்ப் பிக்கிறேன். பொதுவாக விவசாய அபிவிருத்தி செய்யவேண்டும் என்று அரசாங்கம் விவசாயிகளுக்குப் பல லட்சக்கணக்கான ரூபாய்களை நிதிநிலை அறிக்கையில் ஒதுக்கியிருக்கிறார்கள். விவசாயிகளுக்குப் பணம் ஒதுக்குவதில் பெருமளவுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது. பம்ப்செட்கள் வைப்பதற்கும், கிணறுகள் வெட்டுவதற்கும், பழைய கிணறுகளைச் சீர்படுத்துவதற்கும் நிறைய பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இந்தப் பணம் எல்லாம் விவசாயிகளுக்கு தக்க காலத்தில் கிடைப்பதில்லை. விவசாயிகளுக்குக் கிணறு வெட்ட வேண்டுமானால், அதற்கு வேண்டிய மனுக்களைப் போட்டால் பஞ்சாயத்து யூனியன் ஆபீஸில் பணம் இல்லை என்று தகவல் கொடுத்துவிடுகிறார்கள். ஆனால் இந்த நிதி நிலை அறிக்கையில் லட்சக்கணக்கில் ரூபாய்களை ஒதுக்கி, பம்புசெட் அமைத்தல் கிணறு, வெட்டுதல், கிணறுகளை ரிப்பேர் செய்தல் இவைகளுக்கெல்லாம் லட்சக்கணக்கில் பணம் ஒதுக்கியிருக்கிறோம். இந்தப் பணம் எல்லாம் கடன் கேட்டு மனுப்போட்டிருக்கின்றவர்களுக்கு உடனடியாகக் கிடைப்பதற்கு வசதியாக விவசாயக் கடனைக் கொடுக்கவேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக விவசாயிகளுக்கு நில அடமான பாங்குகளில் பழைய கடனைத் தீர்க்க இதற்கு முன்பெல்லாம் கடன் கொடுத்து வந்தார்கள். ஆனால் இப்போது விவசாய அபிவிருத்திக்குத்தான் கடன் கொடுக்கிறோம்.



பழைய கடன்களைத் தீர்க்க கடன் கொடுப்பதில்லை என்று சொல்கிறார்கள். விவசாயிகளுக்குப் பழைய கடனைத் தீர்க்க நில அடமான பாங்குகளில் கடன் கொடுக்கவேண்டும். அவர்கள் கடன் தொல்லைப்பட்டுத் தீர்க்க முடியாமல் இருக்கிறார்கள். ஆகையால் இதற்குமுன் கடன் கொடுத்தது போலக் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக வட ஆற்காடு ஜில்லாவிலே உணவு உற்பத்தி நன்றாக இருக்கிறது. போளூர், செய்யாறு, செங்கம், திருவண்ணாமலை போன்ற இடங்களில் நெல் நன்றாக விளைந்திருக்கிறது. திருப்பத்தூர், வாணியம்பாடி, ஆம்பூர் முதலிய இடங்களிலெல்லாம் விளையவில்லை. விளைந்த இடத்திலிருந்து நெல், அரிசி எடுத்துச் செல்லவேண்டுமென்றால் மாவட்ட கலெக்டருடைய பர்மிட் இல்லாமல் எடுத்துச் செல்லக்கூடாது என்று தடை விதித்திருக்கிறார்கள். இந்தத் தடையை நீக்க அரசாங்கம் முதலில் கவனம் செலுத்தவேண்டும். பர்மிட் இருக்கிறவர்கள் ஒருவர் இருவர் அதிக விலைக்கு விற்க முடிகிறது. கண்ட்ரோலை நீக்காததால் விலை ஏறிக்கொண்டிருக்கிறது. 'ஜே' லைசென்ஸ் உள்ள வியாபாரிகள் தாராளமாக நெல், அரிசி முதலியவைகளை எடுத்துக்கொண்டு வரலாம் என்று உத்திரவிடவேண்டும். உடனடியாக அந்த உத்திரவை அளிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இந்தச் சபையிலே பலமுறைக சொல்லியிருக்கிறேன், திருப்பத்தூர் நகரத்திற்கு குடிதண்ணீர் வேண்டும் என்று. இன்வெஸ்ட்மெண்ட் மூன்று ஆண்டுகளுக்கு முன் 25,000 ரூபாய் நகர மன்றம் கட்டியிருக்கிறது. குடிதண்ணீர் வேலைக்குக் கடன் அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். குடிதண்ணீர் மிக முக்கியமானது. இந்த ஆண்டிலேயே திருப்பத்தூர் நகரத்திற்குத் தண்ணீர் வர வழிவகை செய்யவேண்டுமென்று இந்த நேரத்தில் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, திருப்பத்தூர் நகர மன்றத்தில் ஒரு உயர்நிலைப்பள்ளி நடந்து வருகிறது. அதற்கு சுமார் 50,000 ரூபாய்க்கு மேல் பணம் செலவழிக்கப்படுகிறது. நகர மன்றத்திலே வரியின் மூலம் மக்களிடமிருந்து வசூல் செய்து நடத்தப்படுகிறது. அரசாங்கத்திலேயே எடுத்து நடத்தவேண்டுமென்று நகர மன்றத்திலே தீர்மானம் போடப்பட்டிருக்கிறது. மற்றும் கனம் முதலமைச்சர் அவர்களிடம் மனுக்களும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இந்த ஆண்டு நகரமன்றம் நடத்தும் உயர் நிலைப்பள்ளியை அரசாங்கம் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என் தொகுதியாகிய செங்கத்தில் செய்யாறு என்ற ஆறு போய்க்கொண்டிருக்கிறது. அதன் மீது மேம்பாலம் கட்ட அரசாங்கத்தில் எஸ்டிமேட் போட்டு பணம் சாங்ஷன் ஆகியிருக்கிறது. வேலை இன்னும் துவங்காமல் இருக்கிறது. காரணம் தெரியவில்லை. வேலையை உடனடியாகத் துவங்க் அமைச்சர் அவர்கள் உத்தரவு அளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். திருவண்ணாமலை போகவேண்டுமென்றால் மேம்பாலம் இருந்தால் 15—17 மைல் சுற்றாமல் குறுக்கே போய்விடலாம். அரசாங்க பஸ்களும் இரண்டு போய்க்கொண்டிருக்கின்றன. ஆகையால் அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். செய்யாறு மேம்பாலம் கட்டவில்லை என்றால் மழைகாலத்தில் பிள்ளைகள் பள்ளி செல்லக் கடினமாக இருக்கிறது. சீக்கிரமாக வேலை துவங்க அமைச்சர் அவர்கள் உத்திரவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் செங்கத்திலே ஆஸ்பத்திரி கட்ட இடம் ஆர்ஜிதம் செய்ய மனு போயிருக்கிறது. கலெக்டர் பார்த்துக்கொண்டிருக்கிறார். செங்கத்தில் ஆஸ்பத்திரிக் கட்டடத்தை விரிவாகக் கட்டவேண்டும். செங்கம் தாலூகா தலைநகரம். சுற்றுப்புறத்திலிருந்து 500-க்கு மேற்பட்ட மக்கள் வருகிறார்கள். வசதிக் குறைவாக இருக்கிறது. எழு பெட்டுகள் தான் இருக்கின்றன. ஒரு டாக்டர்தான் இருக்கிறார். ஒரு பெண் டாக்டர் நியமிக்க வேண்டுமென்று நான் சொல்லியிருக்கிறேன். டாக்டருக்கு அப்

[திரு. சி. கு. சின்னராஜ்] [3rd March 1966

பாயின்ட்மென்ட் கொடுத்தும் டாக்டர் வரவில்லை, காரணம் அங்கே குடியிருக்க வசதியில்லை. உடனடியாக கட்டடத்தைக் கட்ட அரசாங்கம் முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இவைகளையெல்லாம் நான் ஏற்கெனவே பலமுறைகள் சட்ட மன்றத்தில் சொல்லியிருக்கிறேன். எந்த விதமான தீர்வும் ஏற்படவில்லை. முக்கியமாக குடி தண்ணீர் வசதியும், செய்து கொடுத்து ஆஸ்பத்திரி கட்டுவதையும் மேம்பாலம் கட்டுவதையும், முடித்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன் வணக்கம்.

MR. DEPUTY SPEAKER: The House will now adjourn and meet again at 8·30 a.m. tomorrow.

The House then adjourned.

## III.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

### A. Statutory Rules and Orders.

*138. *Notification issued with G.O. Ms. No. 2, Agriculture, dated the 3rd January 1966, declaring the market area to the Erode and Gopichettipalayam markets for the purpose of the Madras Agricultural Produce Markets Act,* 1959 *in respect of turmeric. (Laid on the Table of the House under section* 29 (4) *of the Madras Agriculture Produce Markets Act,* 1959 (*Madras Act,* 23 *of* 1959).

### B. Reports, Notifications and other papers.

*37. *Notification issued with G.O. Ms. No.* 2788, *Revenue, dated the 27th September* 1965 *making an amendment to rule 8-D of the Travancore-Cochin Agricultural Income Tax Rules,* 1951 *the same having beon previonaip published as required by the Travancore-Cochin Agricultural Income Tax Act,* 1950 (*Travancore-Cochin Act XXII of* 1950).

* Laid on the Table of the House on 2nd March 1966,



## APPENDIX

[*Vide* answer to starred question No. 157 on page 1]

*A.*—(*a*) & (*b*) The Madras State Small Industries Corporation, Limited, has been incorporated as a private, limited company under the Companies Act, 1956, for taking over from the Government and running the small-scale industries units, entirely on commercial lines. To start with, 64 small-scale industries units have been transferred to the Corporation with their assets and liabilities. The Corporation has started on its work with effect from 1st December 1965. The Corporation is a fully Government-owned company with an authorized share capital of Rs. 10 crores divided into one lakh equity shares of Rs. 1,000 each and is managed by a Board nominated by Government. The initial subscribed share capital is Rs. 4 crores paid by the Government in the form of a part of the existing assets of the units transferred to the Corporation. The value of the net assets of the units taken over by the Corporation, after adjusting the initial subscribed share capital, has been treated as temporary loan from the Government to the Corporation.

**பதில்.**—(அ) & (இ) தமிழ்நாடு சிறு தொழில்கள் கார்ப்பொரேஷன், லிமிடெட், 1956-ம் ஆண்டு கம்பெனிகள் சட்டத்தின்கீழ் தனிப்பட்ட லிமிடெட் கம்பெனியாகச் சட்டப்படி நிறுவப்பட்டுள்ளது. இக் கார்ப்பொ-ரேஷன், இம் மாநிலத்தில் உள்ள சிறு அளவுத் தொழில்கள் அனைத்தையும் அரசாங்கத்திடமிருந்து மேற்கொண்டு, வணிக முறையில் நடத்தும். துவக்கத்தில், 64 சிறு அளவு தொழில் யூனிட்டுகள், அவற்றின் இருப்புக்களுடனும் பொறுப்புக்களுடனும் கார்ப்பொரேஷனுக்கு மாற்றப்பட்டுள்ளன. கார்ப்பொரேஷன் 1965-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 1-ம் தேதி முதல் தனது வேலையைத் துவங்கியுள்ளது. ஷை கார்ப்பொரேஷன் 10 கோடி ரூபாய் கொண்ட அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனத்தை உடைய ஒரு கம்பெனியாகும். இக் கம்பெனி முழுதும் அரசாங்கத்துக்குச் சொந்தமானதாகும். இந்த மூலதனம் ரூ. 1,000 கொண்ட ஒரு லட்சம் பங்குகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இது அரசாங்கத்தால் நியமனம் செய்யப்பட்ட நெறியாளர் போர்டு ஒன்றால் நிர்வகிக்கப்படுகிறது. துவக்கத்தில் வழங்கப்பட்ட பங்கு மூலதனமாகிய ரூ. 4 கோடி அரசாங்கத்தால் அளிக்கப்பட்டது. கார்ப்பொரேஷனுக்கு மாற்றப்பட்ட யூனிட்டுகளின் தற்போதைய இருப்புகளின் ஒரு பகுதியாக ஷை மூலதனம் அளிக்கப்பட்டது. முதலில் செலுத்திய பங்கு மூலதனத்தைச் சரிக்கட்டிய பிறகு கார்ப்பொரேஷனால் எடுத்துக்கொள்ளப்பட்ட யூனிட்டுகளின் நிகர இருப்புகள் அரசாங்கத்திடமிருந்து கார்ப்பொரேஷனுக்குக் கொடுக்கப்பட்ட தற்காலிகக் கடனாகக் கருதப்பட்டுள்ளது.

# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

**Friday, 4th March 1966.**

The House met in the Assembly Chamber, Fort St. George, at half-past eight of the clock Mr. Speaker (The Hon. Sri S. CHELLAPANDIAN) in the Chair.

## I.—QUESTIONS AND ANSWERS.

## STARRED QUESTIONS.

### *பரம்பூர் கூட்டுறவு நாணய சங்கம்*

** குறுகிய கால கேள்வி எண் 2.—திரு. பி. முருகையன் : கனம் கூட்டுறவு அமைச்சர் 26—2—1966-ல் கேள்வி எண் 124-க்கு அளிக்கப்பட்ட பதிலையொட்டி, தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—*

*(அ) புதுக்கோட்டை பகுதியில் உள்ள பரம்பூர் கூட்டுறவு நாணய சங்கத்தில் நடந்த மோசடி சம்பந்தமான குற்றச்சாட்டுகள் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டனவா ?*

*(இ) அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன ?*

The Hon. Sri N. NALLASENAPATHI SARKARAI MANRADIAR : (*a*) Yes.

(*b*) Enquiry under section 65 of the Madras Co-operative Societies Act has been ordered and the enquiry is in progress.

*திரு. பி. முருகையன் : தலைவர் அவர்களே, இந்த நிர்வாகத்தில் கையாடப்பட்ட தொகை எவ்வளவு? இதற்குக் காரணமாக இருந்தவர்கள் யார், யார் என்பதை கனம் அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா ?*

*கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார் :* According to the preliminary report, the enquiry officer has enquired into 161 loans amounting to Rs. 60,829, *இப்பொழுது வந்திருக்கிற தகவல் பிரகாரம் ரூ. 41,482.*

*திரு. மு. கருணாநிதி : இந்த மோசடிப் புகாரின் காரணமாக அந்த நிர்வாக சபை கலைக்கப்பட்டதா என்று அறிய விரும்புகிறேன்.*

*கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார் : நிர்வாக சபை சூபர்செஷன் என்ற முறையில் செய்யப்படவில்லை. சென்ட்ரல் பாங்க் எக்சிகூடிவ் ஆபீசர் ஜெனரல் பாடி மீட்டிங் போட ஏற்பாடு செய்து, அதிலே இருந்த பிரெசிடென்ட், டைரக்டர்கள் வேண்டாம் என்று சொல்லி சூபர்வைசர்-மானேஜர் போட்டிருக்கிறார்கள்.*

[4th March 1966

திரு. எஸ். முருகையன்: சொசைடியில் கையாடல் செய்யப்பட்டது நபர்களே இல்லாமல் ப்ரோம்நோட் எழுதி வைத்து கையாடல் செய்யப்பட்டதா? அல்லது மெம்பர்களாக இருப்பவர்கள்போல் கையெழுத்து போட்டு மோசடி செய்யப்பட்டதா?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார்: இதிலே மூன்று நான்கு விதமான மோசடிகள் நடந்திருக்கக்கூடும் என்று தகவல் கிடைத்திருக்கிறது. பணம் குறைவாக இருக்கிற நபர்களின் பேரிலே அதிகமாகப் பணம் கொடுக்கப்படுகிறது, பட்டுவாடா செய்யாமலேயே பட்டுவாடா செய்ததாகக் காட்டியது போன்ற கோளாறுகள்தான் இருக்கின்றன.

திரு. மு. கருணாநிதி: இறந்தவர்களின் பேரிலே கடன் கொடுக்கப்பட்டிருப்பதாகப் புகார் வந்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார்: இறந்தவர்களின் பேரிலும் பணம் கொடுக்கப்பட்டதாகப் புகார் வந்திருக்கிறது.

திரு. கோ. சி. மணி: இந்த மோசடி சம்பந்தமாக எத்தனை நபர்கள் இதில் ஈடுபட்டிருக்கிறார்கள்? அவர்கள் மீது எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன? அவர்கள் அதிகாரிகளா, மற்றவர்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார்: அந்தத் தகவல் என்னிடமில்லை.

புலவர் கா. கோவிந்தன்: கையாடல் எத்தனை ஆண்டுகாலமாக நடந்து வருகிறது? அந்தத் தலைவர் எத்தனை ஆண்டுகாலமாக சொசைடியில் தலைவராக இருக்கிறார்?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார்: எத்தனை ஆண்டுகள் என்பதல்ல. ஆடிட்டர் ஆடிட் செய்கிறார். குறை இருக்கிறது என்று தகவல் வரும்போது நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

திரு. மு. கருணாநிதி: விசாரணையின் முடிவு எப்பொழுது தெரியும் என்று கூற முடியுமா?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார்: விசாரணை இருந்துகொண்டிருக்கிறது. சூபர்வைசர்-மானேஜர் மானேஜ் செய்துகொண்டிருக்கிறார். டெபுடி ரிஜிஸ்ட்ரார் பொறுப்பிலே சி.எஸ்.ஆர். ஒருவரைப் போட்டு விசாரணை நடந்துகொண்டிருக்கிறது. ரிப்போர்ட்டுகள் வந்துகொண்டிருக்கின்றன. அவர்களுடைய சொத்துகள் எல்லாம் அட்டாச்மென்ட் செய்யப்பட்டு பராதீனம் செய்யாதபடி பார்த்துக்கொள்ளப்பட்டு வருகிறது.



4th March 1966]

திரு. து. ப. அழகமுத்து: இம்மாதிரி மோசடி கேஸ்களை ஆரம்பித்து முடிவு பெறுவதற்கு நீண்ட காலதாமதம் ஆகிற காரணத்தினால் குற்றங்களை மறைப்பதற்கு ஏதுவாக இருக்கிறது. ஆகையால், இந்தக் கால தாமதம் ஏற்படாமல் இருப்பதற்கு முயற்சி எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார்: இதற்காகத்தான் நிலம், இம்மூவபல் ப்ராபர்டீஸ் எல்லாம் அட்டாச்மென்ட் செய்கிறோம். வேறு ஒன்றும் செய்ய முடியாது.

கனம் சபாநாயகர்: ரூல்ஸ்படித்தானே செய்வார்கள்.

திரு. செ. மாதவன்: இருபது ஆண்டுகளுக்கு முன்பு இருந்தவர்கள் பேரிலே இந்தக் கையாடல் குற்றம் இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டதா? அப்படியிருந்தால் ஊழல்கள் எத்தனை? அவை மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார்: நவம்பர் 27-ம் தேதியிட்ட பெட்டிஷன் ஒன்று ஹோம் மினிஸ்டருக்கு வந்தது. அதன் பிறகு டிசம்பர் 14-ம் தேதியிட்ட பெட்டிஷன் ஒன்று எனக்கு வந்தது.

திரு. எஸ். முருகையன்: இரண்டு நாட்களுக்கு முன்பு ஒரு கேள்விக்கு பதில் அளிக்கும்போது அமைச்சர் அவர்கள் இந்த நிர்வாகம் கலைக்கப்படவில்லை என்று சொன்னார்கள். ஆனால், இப்பொழுது கலைக்கப்பட்டதாகச் சொல்கிறார்கள் . . .

கனம் சபாநாயகர்: கலைக்கப்படவில்லை என்றுதான் சொன்னார்கள்.

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார்: இன்றும் நான் சொல்கிறேன் கலைக்கப்படவில்லை என்று. கலைக்கப்படுகிறதென்றால் ரிஜிஸ்ட்ரார் அவர்கள் சூபர்சீட் செய்தாக வேண்டும். அப்போதுதான் அது கலைக்கப்பட்டதாக அர்த்தம். ஆனால், அவர்கள் ஜெனரல் பாடி மீட்டிங் போட்டு சூபர்வைசர்-மானேஜரைப் போட்டிருக்கிறார்கள்.

திரு. மு. கருணாநிதி: பொதுவாக விசாரணை முடிந்த பிறகு கலைக்கப்படுமா? அல்லது கலைக்கப்பட்ட பிறகு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார்: இரண்டு விதமாகவும் செய்யலாம். என்கொயரி செய்து சூபர்செஷன் செய்வதா இல்லையா என்பது கவனிக்கப்படும். என்கொயரிக்குப் பிறகுதான் சூபர்ஸீட் செய்வதா இல்லையா என்பது பற்றி யோசனை செய்யவேண்டும்.

கனம் சபாநாயகர்: சூபர்ஸீட் பண்ணுவதற்கு போதிய காரணங்கள் வேண்டும்.

திரு. மு. கருணாநிதி: இரண்டு விதமாகச் செய்யலாம் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். முதலிலே கலைக்காததற்கு என்ன காரணங்கள் இடையூறாக இருக்கின்றன என்பதைத் தெரிவிப்பார்களா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: கனம் அமைச்சர் அவர்கள் கூறியதை கனம் அங்கத்தினர் கேட்டிருப்பார்கள் என்று நினைக்கிறேன். நோட்டீஸ் கொடுப்பதுதான் என்கொயரி. நோட்டீஸ் கூட கொடுக்காமல் கலைக்க முடியாது. இரண்டுவிதம் ஒன்றும் இல்லை. நீண்டகால என்கொயரியாகவும் இருக்கலாம் அல்லது குறுகிய கால என்கொயரியாகவும் இருக்கலாம்.

## மதுரையில் நூற்பாலை

* 167 கேள்வி.—திரு. பி. கே. மூக்கையா தேவர்: கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சமீபத்தில் மதுரை நகரில் ஏதேனும் நூற்பு ஆலைகள் மூடப்பட்டனவா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: (அ) ஆம்.

(இ) நூல் தேக்கம் காரணமாக ஏற்பட்ட பண நெருக்கடியினால் மதுரை ராஜா மில் 15—10—1965-ல் மூடப்பட்டது. தொழிலாளர் துணைக் கமிஷனர், மதுரை, அவர்களது சமரச முயற்சியினால் மீண்டும் மில் 25—10—1965-ல் திறக்கப்பட்டு, இயங்கி வருகிறது.

திரு. டி. கார்ச்சா கவுடர்: இப்போது ரெயான் டெர்லினை மக்கள் அதிகமாக அணிந்துகொள்ளுகிற காரணத்தால் மில்கள் எல்லாம் மூடப்படும் என்ற அச்சம் ஏற்படுகிறது. இந்த டெர்லின் அயல்நாட்டிலிருந்து வருகிறதா? அல்லது, நம் நாட்டில் தயாரிக்கப்படுகிறதா? அயல் நாட்டிலிருந்து வந்தால், வராமல் தடை செய்வதற்கு அரசாங்கம் உத்தேசிக்குமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: ராஜா மில் மூடப்பட்டதா என்பதுதான் மூலக் கேள்வி. இதற்குத் தனியாகக் கேள்வி போட்டால் பதில் அளிக்கப்படும்.

திரு. மீ. கலியாணசுந்தரம்: ஜவுளித் தேக்கமும் நூல் தேக்கமும் நிறைய இருப்பதாகச் சொல்லப்படுகிறது. இந்த மில் மூடியிருந்த சமயத்தில் உண்மையாகவே தேக்கம் இருந்ததா என்பதை அரசாங்கம் பரிசீலனை செய்ததா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: சர்க்காருக்கு இருக்கும் தகவல் மில்களில் நூல் தேக்கம் இருக்கிறது என்பதுதான்.



திரு. வி. எஸ். எஸ். மணி: மில் மூடப்பட்டிருந்த சமயத்தில் அந்த மில்லில் வேலை செய்த தொழிலாளர்களிடமிருந்து அந்த மில்லைத் தாங்களே நடத்துவதாகக் கோரிக்கை ஏதேனும் வந்ததா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: அந்தத் தகவல் இல்லை. ஆனால், அவ்வாறு நடத்த முடியுமா என்பதிலே பல சந்தேகங்கள் இருக்கின்றன.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்: மில் மூடப்பட்டு, பிறகு திறக்கப்பட்டது என்று சொன்னார்கள். மூடப்பட்டிருந்த சமயத்தில் பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்குச் சர்க்கார் என்ன உதவி செய்தார்கள்?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: சர்க்கார் உதவி இல்லாமலேயே முதலாளிகளும் தொழிலாளிகளும் தங்களுக்குள்ளே ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டார்கள். அந்த ஒப்பந்தத்தின்படி மில் திறக்கப்பட்டது.

திரு. இரா. நெடுஞ்செழியன்: கனம் அவைத் தலைவர் அவர்களே, நூல் தேக்கம் ஏற்பட்டதன் காரணமாக ஆலை மூடப்பட்டதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். நூல் தேக்கம் பொதுவாக எல்லா ஆலைகளிலும் இருப்பதாகவும் தெரிவித்தார்கள். இந்த ஆலை மூடப்பட்டதற்குக் காரணம் நூல் தேக்கமா அல்லது வேறு ஏதேனும் காரணம் இருந்ததா என்று அரசாங்கம் பரிசீலனை செய்ததா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: சிலருக்குப் பண நெருக்கடியைச் சமாளிக்க சக்தி இருக்கிறது. சிலருக்கு அந்தச் சக்தி இல்லை. சில மில்களைப் பொறுத்த வரையில், இப்பொழுது நூல் தேக்கம் இருந்தாலும் அந்த நெருக்கடியைச் சமாளித்து, கடன் வாங்கி அவர்கள் ஓட்டிக்கொண்டு வருகிறார்கள். சிறிய மில்களாக வைத்திருக்கிறவர்கள், ரிசர்வ் பண்டில் அதிகம் வைத்திருக்காதவர்களாதலால் அந்த மில்களை ஓட்ட முடியவில்லை. இது அந்த விதமான ஒரு சிறிய மில் ஆகும்.

திரு. மு. கருணாநிதி: கோவை போன்ற வேறு இடங்களிலும் இப்படி ஆலைகள் மூடப்படுகின்றன என்ற செய்தி வந்துகொண்டிருக்கிறது. இந்த நிலையைத் தவிர்க்க அரசாங்கம் இக்கட்டான நேரத்தில் அவற்றை எடுத்து நடத்த முன்வருமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: கோவையிலே ஒரு மில் மூடப்பட்டிருக்கிறது. அது நூல் தேக்கத்தினால் அல்ல. மானேஜ்மென்டாருக்குள்ளே இருக்கும் சண்டையின் காரணமாக அது மூடப்பட்டிருக்கிறது. சாதாரணமாக, தேசீயமயமாக்குவது என்று சொன்னால், ஓட்டை உடைசல் மில்களையெல்லாம் சர்க்கார் எடுத்து நடத்துவது என்பது தேசீயமயமாக்குவது அல்ல. புது

மில்கள். நல்ல மில்களை நடத்துவதுதான் தேசியமயமாக்கும் கொள்கையாகும். அன்-இக்கனமிக் யூனிட்டுகள், எல்லா நாடுகளிலும், தாங்களாகவே போகக்கூடிய நிலையில்தான் இருக்கும். அதை நாம் தவிர்க்க முடியாது.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : நூல் தேக்கமாய்விட்டது. பணப் பற்றாக்குறை காரணமாக ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலையில்லாமல் இருக்கும் நிலை இருக்கிறது என்று சொன்னார்கள். நூல் ஸ்டாக் இருக்கும் சமயத்தில் அரசாங்கம் தலையிட்டு, ரிசர்வ் பாங்கி மூலமோ அல்லது ஸ்டேட் பாங்க் மூலமோ அவர்களுக்குக் கடன் ஏற்பாடுசெய்து, அந்த மில்லை உடனடியாக நடத்த அரசாங்கம் ஏதாவது முயற்சி செய்ததா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : தனியார்த் துறையில் உள்ளவர்கள் பெருமையாகச் சொல்லிக் கொள்வது என்ன என்று பார்த்தால், "எங்களுடைய தேவைகளையெல்லாம் நாங்களே பூர்த்தி செய்துகொள்ளுகிறோம். நாங்கள் எங்களுக்கு வேண்டிய கடன் வசதிகள் எல்லாவற்றையும் ஏற்படுத்திக் கொள்ளுகிறோம்" என்பதுதான். ஆகவே, தனியார்த் துறையிலே இயங்கும் மில்களைப் பொறுத்த வரையில் எந்த விதமான வசதிகளையும் அவர்களேதான் ஏற்படுத்திக்கொள்ளவேண்டும்.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : தனியார்கள் அவர்களாகவே செய்து கொள்ள வேண்டும் என்பது சாதாரண காலத்தில் நடக்கக் கூடியது. ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலையில்லாமல், அவர்களுடைய குடும்பங்கள் கஷ்டப்படுகிற நிலையில் அரசாங்கம் ஏன் தலையிடவில்லை? அப்படி அரசாங்கம் தலையிட முடியவில்லையென்றால், பண உதவி பெறுவதற்கு ஏற்பாடு செய்து நடத்துவோம் என்றாவது சொன்னார்களா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அம்மாதிரி சொல்வது கிடையாது. சொல்கிற உத்தேசமும் கிடையாது. ஒவ்வொரு முதலாளிக்கும் பண நெருக்கடி ஏற்படுகிறபோது, சர்க்காரே போய் அவர்களுக்கு உதவி செய்யவேண்டும் என்று சொல்வது புதிய கொள்கையாக இருக்கிறது. இந்தக் கொள்கையை நாங்கள் எந்த நாளிலும் ஏற்றுக்கொண்டதில்லை. தொழிலாளர்கள் பாதிக்கப்படுவார்கள் என்று சொன்னால், அதற்காகச் சட்டங்கள் இருக்கின்றன. அந்தச் சட்டங்களின்படி அவர்களுக்கு லே-ஆஃப் காம்பென்சேஷன், ரிட்ரென்ச்மென்ட் காம்பென்சேஷன் முதலியவற்றைக் கொடுத்திருக்கிறார்கள். அவற்றைத்தான் அவர்களுக்கு வாங்கிக் கொடுக்க முடியும்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : கனம் அமைச்சர் அவர்கள் கோயம்பத்தூரில் மூடப்பட்டிருக்கும் சி.எஸ். அண்ட் டபிள்யூ. மில்லைப் பொறுத்தமட்டில் காரணம் சொல்லும்போது, நிர்வாகத்திற்குள்ளே இருக்கும் சண்டை தான் காரணமேயொழிய தேக்கம் காரணம் அல்ல என்று சொன்னார்கள். சண்டையின் காரணமாக



இருந்தாலும்கூட, நம்முடைய தேசத்திற்கு அதனால் நஷ்டம் உண்டாகிறது. கனம் அங்கத்தினர் திரு. கருணாநிதி அவர்கள் தேசியமயமாக்கவேண்டும் என்று சொல்லவில்லை என்று நினைக்கிறேன். இம்மாதிரி அவர்களுக்குள்ளே இருக்கும் கோளாறினால் ஒரு மில் ஓடாமல் இருப்பதால், அவர்களுடைய பொறுப்பிலேயே அரசாங்கம் நடத்தி வைத்து லாப நஷ்டக் கணக்கையும் அவர்களுடைய பொறுப்பிலேயே எழுத சட்டம் இருக்கிறதா இல்லையா ? அதன்படி நடவடிக்கை எடுக்க அரசாங்கம் ஏதாவது முயற்சி செய்ததா ? அல்லது வேறு வழியில் ஏதாவது முயற்சி செய்ததா, அந்த மில்லை ஓட்டுவதற்கு ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : மில் நிர்வாகஸ்தர்களுக்குள்ளே சண்டை இருக்குமானால், கோர்ட்டிலே வழக்குப் போட்டு, அவர்கள் அதற்கு ரிசீவர் நியமித்து, அதன் மூலமாக அந்த மில்லை நடத்தலாம். ஆனால், சர்க்காருக்கு இருக்கும் பண நெருக்கடியில், தனியார்களுக்கு இருக்கும் சண்டைகளை தீர்க்கக்கூடிய அளவுக்குச் சர்க்கார் வரவேண்டுமென்றால், அதை ஏற்றுக்கொள்ள முடியாது.

திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் அவைத் தலைவர் அவர்களே, குறிப்பிட்ட ஆலையைச் சேர்ந்த நிர்வாகிகள் அரசாங்கத்தினிடத்தில் ஏதேனும் உதவி வேண்டும் என்று கோரி விண்ணப்பம் செய்திருக்கிறார்களா ? அதன் மீது அரசாங்கம் ஏதாவது செய்ததா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அரசாங்கத்தினிடத்தில் வந்து இதைப்பற்றி விவாதம் செய்தார்கள். விவாதம் செய்கின்ற போது நான் இதைத்தான் அவர்களிடம் சொன்னேன். மில் நிர்வாகிகளுக்குள்ளே தகராறு இருக்குமானால் சிவில் கோர்ட்டுக்குப் போய் வழக்குப் போட்டு, ரிசீவர் நியமித்து, அதன் மூலமாக மில்லை நடத்திக்கொண்டிருக்கலாம், லாப நஷ்டத்தையும் அவர்கள் ஏற்றுக்கொள்ளலாம் என்று ஆலோசனை சொன்னேன். அவர்கள் ஐம்பது லட்ச ரூபாய் கடன் வேண்டும் என்று சொன்னார்கள். அதைக் கொடுக்க சர்க்காரிடத்தில் பணம் இல்லை.

திரு. மு. கருணாநிதி : மகாராஷ்டிரா போன்ற வேறு மாநிலங்களில் இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் அந்த ஆலைகளை அரசாங்கம் எடுத்து நடத்துவதாகச் செய்திகள் வந்திருக்கின்றன. அதுபற்றி விவரம் அறிய முடியுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : நல்ல மில்கள், லாபகரமாக இருக்கக்கூடிய மில்கள் என்றால், என்கொயரி செய்து, அந்த என்கொயரியில் அதை நடத்தலாம் என்று தெரிந்து சில இடங்களில் மகாராஷ்டிர ராஜ்ய சர்க்கார் ஓரிரண்டு மில்களை எடுத்து நடத்திக்கொண்டிருக்கிறார்கள். ஆனால், இவ்விதம் செய்வதானது அந்தந்த ராஜ்யத்தினுடைய நிதி நிலை அந்தந்த ராஜ்யத்தில் இருக்கும் சூழ்நிலை இவற்றைப் பொருத்தது.

### பத்திரிகைக் காகித ஆலை

*168 கேள்வி.—திரு. எம். எஸ். மணி : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

தமிழகத்தில் பத்திரிகைக் காகித ஆலை துவக்க அரசு ஏதேனும் திட்டமிட்டுள்ளதா ?

THE HON. SRI R. VENKATARAMAN : A private company which is already engaged in the manufacture of paper is taking steps to set up a Newsprint plant in this State.

திரு. எம். எஸ். மணி : அரசாங்கத்தின் சார்பில் இத்தகைய ஒரு காகித ஆலை துவக்க ஏதாவது உத்தேசம் இருக்கிறதா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : உத்தேசம் இல்லை.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : பேப்பர் மில் ஆரம்பிக்க இருக்கும் தனியார் ஸ்தாபனம் எது? எந்த இடத்தில் அதை ஆரம்பிக்க உத்தேசித்திருக்கிறார்கள் என்று சொல்ல முடியுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : சேஷசாயி கம்பெனியார் இதை ஆரம்பிப்பதற்கு முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். இன்னும் லெட்டர் ஆஃப் இன்டென்ட் கூடக் கிடைக்கவில்லை. அதனால், எங்கே ஆரம்பிப்பார்கள் என்று சொல்ல முடியவில்லை.

திரு. கே. ஏ. மதியழகன் : சில தொழிற்சாலைகளை மாநில சர்க்காரே ஏற்று நடத்தவேண்டும் என்று காங்கிரஸ் தலைவர் திரு. காமராஜ் அவர்கள் வற்புறுத்தியதற்கிணங்க, இந்தக் காகிதத் தொழிற்சாலையைப் பொதுத் துறையில் அமைக்க இந்த சர்க்கார் திட்டம் வகுக்குமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : 'கன்ஸ்யூமர் குட்ஸ்' என்ற வகையில், உணவுப் பண்டங்கள், அத்தியாவசியமாக உபயோகமாகக்கூடிய பண்டங்கள் இவற்றைப் பொறுத்த வரையில் சர்க்கார் எடுத்து நடத்த வேண்டும் என்பது யோசனை. இதிலே சர்க்கரை ஆலைகள், நூற்பு ஆலைகள் போன்றிருக்கக்கூடியவை வரும். காகிதத் தொழிலை சர்க்கார் எடுத்து நடத்த வேண்டிய அவசியம் இல்லை என்று நினைக்கிறேன்.

திரு. எம். எஸ். மணி : தமிழகத்தில் காகித ஆலை ஒன்றே ஒன்றைத் துவக்கும் இந்த நேரத்தில் அது தனியார்த் துறைக்குப் போகிறது. அப்படித் துவக்கப்படுகிற அந்தத் தனியார்த் துறைக்கு அரசாங்கம் ஏதாவது முதலீடு செய்கிறதா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : நம்முடைய ராஜ்யத்தில் இருக்கும் நிதிக் கார்ப்பரேஷன், அவர்களிடத்தில் இருக்கும் நிதி வசதிக்கேற்ப, அந்தந்தத் தொழிலுக்கு வேண்டிய தேவையைப் பார்த்து உதவி செய்வார்கள்.





திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன் : சர்க்கரை ஆலைகளில் ஆறு மாதம் தான் வேலை இருக்கிறது. பாக்கி ஆறு மாதம் வேலை இல்லாமல் இருக்கிறது என்று சொல்கிறார்கள். கரும்புச் சக்கை வீணாகத்தான் போகிறது. அதைக் காகிதம் செய்வதற்காகப் பயன்படுத்தலாம் என்ற கருத்துச் சொல்லப்படுகிறது. தனியார்த் துறையா, பொதுத் துறையா என்று பார்க்காமல், சர்க்கரை ஆலைகள் எங்கெங்கு இருக்கின்றனவோ, அங்கே கரும்புச் சக்கையை வீணாக்காமல், அவற்றைக் காகிதம் செய்வதற்கு உபயோகப்படுத்தும் வகையில் காகிதத் தொழிற்சாலை துவக்க அரசாங்கம் முன்வருமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அரசாங்கத்தினால் முடியாது ; தனியார் முன்வந்தால் அதற்கு உதவி கொடுக்கும்.

திரு. கே. ஏ. மதியழகன் : காகிதமும் அத்தியாவசியப் பொருள்களில் ஒன்றாக ஆகிவிட்ட காரணத்தாலும், அரசாங்கமும் மூலதனம் போடுகிற காரணத்தாலும், தனிப்பட்டவர்களை அனுமதிக்காமல் அரசாங்கமே அந்த மூலதனங்களைக் கொண்டு இத் தொழிலை நடத்துவது நம்முடைய முற்போக்குக்குச் சிறந்ததாக இருக்கும் அல்லவா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : சர்க்கார் இந்தத் தொழில்களில் ஈடுபடவேண்டுமென்றால், ஏராளமான மூலதனம் போட வேண்டும். சர்க்காருக்கு கடன் வாங்கக்கூடிய சக்தியும் நிர்ணயிக்கப்பட்ட ஓரளவுக்குத்தான் இருக்கிறது. அதிகமாக இல்லை. அதனால், அவர்களிடமிருக்கும் மூலதனத்தை ஒரு பெரிய தொழிலிலே முடக்கிவிட்டால் இதர தொழில்களை ஆரம்பிக்க வசதிகள் கொடுக்க இயலாது. ஆகவேதான், பெரிய தொழிலிலே நாம் அதிக மூலதனம் போடுவதில்லை என்று முடிவு செய்திருக்கிறோம்.

திரு. பி. முருகையன் : தலைவர் அவர்களே, பட்டுக்கோட்டை அருகில் உள்ள நம்பிவயலுக்கு அருகாமையில் ஒரு பேப்பர் மில் ஆரம்பிக்கப்படுவதற்கு போர்டுகள் எல்லாம் போட்டு இரண்டு மூன்று வருஷம் ஆகியும், இன்னும் முன்னோடி வேலைகள் கூட ஆரம்பிக்கப்படவில்லையே, இது எப்போது துவக்கப்படும் ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : மூன்று நான்கு வருடங்களுக்கு முன்பு மூன்றாயிரம் டன் பேப்பர் உற்பத்தி செய்யக்கூடிய தொழிற்சாலையை ஏற்படுத்துவது கட்டுப்படியாகக் கூடியதாக இருக்கும் என்று கருதி நம் ராஜ்யத்தில் ஐந்தாறு லைசென்சுகள் கொடுத்தார்கள். ஆனால், அப்படி மூவாயிரம் டன் பேப்பர் உற்பத்தி செய்யக்கூடிய தொழிற்சாலையை ஏற்படுத்துவது கட்டுப்படியாகாது என்ற நிலைமை இருக்கிறது. ஆகையால், ஒருவரும் தொடங்கவில்லை.

திரு. ம. கமலநாதன் : தர்மபுரி மாவட்டத்தில் காடுகள் நிறைய இருக்கின்றனவே, அங்கே மூங்கில்களும் இருக்கின்றனவே, அங்கே ஒரு பேப்பர் தொழிற்சாலை ஏற்படுத்தப்படுமா என்று சென்ற ஆண்டு கேட்டதற்கு ஒரு மில்லுக்குக்கூட அவை

[4th March 1966

போதாது என்று குறிப்பிட்டார்கள். இன்னும் ஒரு ஆலை ஏற்படுத்தக் கூடிய சூழ்நிலை நம் ராஜ்யத்தில் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்** : நம் ராஜ்யத்தில் கிடைக்கக் கூடிய மூங்கில் ஒரு தொழிற்சாலைக்குக் கூடப் போதவில்லை. மூங்கிலைக் கொண்டு பேப்பர் தொழிற்சாலை ஆரம்பிக்க முடியாது. இதர மூலப் பொருள்களை வைத்துத்தான் ஆரம்பிக்கவேண்டும். கரும்புச் சக்கை, இட்டா ரீப் வைத்து ஆரம்பிக்க முடியுமா என்பதுதான் பரிசீலனையில் இருக்கிறது. அப்படிச் செய்ய யாராவது முன் வருவார்களானால் அதை மத்திய சர்க்கார் பரிசீலனை செய்து லைசென்சு வழங்கும். நாம் உதவி செய்யலாம்.

**திரு. டி. கார்ச்சா கவுடர்** : சமீபத்தில் பத்திரிகைக் காகிதத்தின் விலை உயர்ந்துவிட்டது என்று பத்திரிகைகளின் விலையை உயர்த்தி விட்டார்கள். அதனால் ஏழை மக்கள் வாங்கிப் படிக்க முடியாமல் இருக்கிறது. ஆகவே, உடனடியாக இங்கே பேப்பர் மில் ஆரம்பிக்க வழி செய்ய முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்** : இதற்கு என்ன மூலப் பொருள் உபயோகப்படுத்துவது என்பதுதான் பிரச்னை. கரும்புச் சக்கையை வைத்து ந்யூஸ்ப்ரினட் ஆரம்பிக்க முடிந்தால் இதைச் செய்ய முடியும். உலகத்தின் எந்த பாகத்திலும் அப்படிப்பட்ட தொழிற்சாலை இல்லை. ஆனால், நிறையப் பரிசோதனை செய்திருக்கிறார்கள். அதை வைத்துத்தான் இங்கும் ஆரம்பிக்க வாய்ப்பு இருக்கிறதா என்பது பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது.

**திரு. கே. ஏ. மதியழகன்** : தொழில் துறையில் முதலாளிகளின் ஏகபோகம் பொதுத்துறையை சாப்பிடும் அளவிற்கு வளர்ந்து இருக்கிறது, என்று காங்கிரஸ் அக்கிராசனரே கூறியிருக்கிறார். அதைத் தடுக்க பொதுத்துறையில் பேப்பர் ஆலையை ஏற்படுத்துவது நல்லதாக இருக்காதா ?

**கனம் திரு ஆர். வெங்கட்டராமன்** : நிச்சயமாக இருக்கும். அதற்கு வேண்டிய நிதி வசதி நம் ராஜ்யத்தில் இல்லை என்பது தான் பிரச்னை.

**திரு. எம். எஸ். செல்வராஜன்** : உடை மர பட்டை, அடிமரம் ஆகியவற்றைப் பயன்படுத்திக்கொண்டு ந்யூஸ்ப்ரின்ட் தயாரிக்க வசதி இருக்கிறதா ? இதுபோன்ற நிலையில் பேப்பர் மில் நடக்க லைசென்சு கொடுக்கப்பட்டிருக்கிறதா ?

**கனம் திரு. ஆர்: வெங்கட்டராமன்** : உடை மரத்தைப் பயன் படுத்த முடியும் என்று ஆதித்யன் அவர்கள் அப்ளிகேஷன் போட்டு லைசென்சு பெற்றிருக்கிறார்கள். ஓரளவு அவர்கள் இப்போது பயன்படுத்துகிறார்கள். அந்த ஆலையை நான் நேரில் போய்ப் பார்த்தேன். இன்னும் தீவிரமாக ஆராய்ச்சிகள் செய்து உடை மரத்தை முழுவதும் பயன்படுத்த முடியும் என்று



4th March 1966]

ஆராய்ச்சியின் மூலமாக நிர்ணயம் செய்தால் மேற்கொண்டு விஸ்தரிக்க நம் ராஜ்யத்தில் வசதி இருக்கிறது. அந்த ஆராய்ச்சிகளை மேற்கொண்டு நடத்துவது நல்லது என்றுதான் அரசாங்கம் நினைக்கிறது.

**புலவர் கா. கோவிந்தன்** : சேஷசாயி ப்ரதர்ஸ் என்ற கம்பெனியார் தம் சொந்த முதலை நம்பி இறங்குகிறார்களா ? அல்லது வெளி நாட்டு முதலை நம்பி இறங்குகிறார்களா ? வெளிநாட்டு முதலை நம்பி இறங்குகிறார்கள் என்றால் எந்த நாட்டு உதவியுடன் இறங்கு கிறார்கள் ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்** : அமெரிக்க நாட்டின் உதவி அவர்களுக்கு ஏற்கனவே இருக்கிற கம்பெனி ஒன்றுக்கு, கிடைத் திருக்கிறது. மேலும் கிடைக்கலாம் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

**திரு. வி. எஸ். எஸ். மணி** : ஃபாரின் கொலாபரேஷனுடு கூட வேறு எந்த எந்தத் தனி நபர்களுக்கு லைசென்சு வழங்கப் பட்டிருக்கிறது ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்** : நான் லைசென்சு கொடுக்கப் பட்டவர்களின் பெயர்களைப் படிக்கிறேன். யார் யாருக்கு ஃபாரின் கொலாபரேஷன் இருக்கிறது என்கிற விவரம் என்னிடம் இல்லை.

(1) Seshasayee Paper and Boards, Limited.
(2) Sun Paper Mills, Limited.
(3) Amaravathi Sri Venkatesa Paper Mills, Limited.
(4) Papanasam Paper Mills, Limited.
(5) The Somasundaram Paper Mills, Limited.
(6) Sri S. Rajagopalan (Paper and Paper Board).
(7) Sivanmalai Raw Products, Limited.

இது இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை.

(8) Messrs. Kumudam.
(9) Sri K. P. Kandaswamy.

**திரு. எம். எஸ். மணி** : கரும்புச் சக்கையில் இருந்து பேப்பர் தயாரிக்க ஒரு திட்டம் இருக்கிறது என்று சொன்னார்கள். ஆனால் இன்றையதினம் கரும்புச் சக்கைகளை எல்லாம் பாய்லருக்குப் போட்டு எரிக்கிறார்கள். அவர்களுக்கே போதவில்லை. உயர்ந்த ரகப் பேப்பர் தயாரிக்க கரும்புச் சக்கை கிடைக்காத காரணத் தினால் மூங்கிலில் இருந்து தயாரிக்க முடியுமா என்பது ஆராயப் பட்டது. இந்த ஆராய்ச்சி வெளிநாட்டு உதவியுடன் நடத்தப் படுகிறதா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்** : கனம் அங்கத்தினர் சொன்ன விவரம் சரியல்ல. மூங்கிலில் இருந்துதான் உயர்ந்த ரகப் பேப்பர் தயாரிக்க முடியும். அது கிடைக்காத

காரணத்தினுல் கரும்புச் சக்கையில் இருந்து தயாரிக்க முடியுமா என்பது பரிசீலிக்கப்படுகிறது. கரும்புச் சக்கையைக்கொண்டு பேப்பர் தயாரிக்க முடியும் என்ருல் அதை பாய்லருக்குப் போட்டு எரிப்பது, ரூபாய் நோட்டை சிகரெட் பத்தவைக்க கொளுத்திக் கொள்வதுபோலத்தான் இருக்கும். பாய்லர் பத்தவைக்க நாம் வேறு ஆயில் பொருள்களைக் கொடுத்துவிட்டால் இதைப் பேப்பருக்குப் பயன்படுத்திக்கொள்ளலாம்.

### கண்டவராயன்பட்டி அணைக்கட்டு

*.169 கேள்வி.—திரு. செ. மாதவன் : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், திருப்பத்தூர் வட்டத்தில் கண்டவராயன்பட்டி அணைக்கட்டுத் திட்டம் ஏதேனும் அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கின்றதா ?

(இ) ஆமெனில், அதன் விவரமென்ன ?

THE HON. SRI P. KAKKAN : (a) and (b) Yes, details are being finalised by the Chief Engineer (Irrigation) and the Board of Revenue (Food Production).

திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, இந்தப் பரிசீலனை தொடங்கி பத்து ஆண்டுகள் ஆகிவிட்டன என்பது உண்மையா ? இவ்வளவு நீண்டகாலம் பரிசீலிக்கக் காரணம் என்ன ?

கனம் திரு. பூ. கக்கன் : அந்தத் தகவல் என்னிடத்தில் இல்லை.

### போலீஸ் நிலையம்

* 170 கேள்வி.—திரு. ஆ. துரையரசன் : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

அறந்தாங்கி வட்டத்திலுள்ள திருப்புனவாசலில் புதிதாக போலீஸ் நிலையம் ஒன்று அமைக்கும் திட்டம் ஏதேனும் அரசாங்கத்தின் பரிசீலனையிலிருக்கின்றதா ?

கனம் திரு. பூ. கக்கன் : இல்லை.

### சென்னைத் துறைமுகத்தில் வெடி விபத்து

* 171 கேள்வி.—திரு. இராம. அரங்கண்ணல் : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) அண்மையில் சென்னை துறைமுகத்தில் வெடி விபத்து ஏற்பட்டது உண்மையா ?

(இ) ஆமெனில், அதற்கான காரணமென்ன ?



கனம் திரு. பூ. கக்கன் : (அ) ஆம்.

(இ) இந்திய வெடிப் பொருள்கள் சட்டத்தின் 9 (1) பிரிவின் கீழ் ஓர் அறிக்கை வந்துள்ளது. இது நீதிமன்ற விசாரணையின் கீழ் வரக்கூடும். எனவே, இந்த நிலையில் இப்பகுதிக்கு பதிலளிப்பது பொது நலனுக்கு உகந்ததல்ல.

திரு. எஸ். ஜே. ராமசாமி : அப்போது ஏற்பட்ட பயங்கரமான சத்தமே நடுங்க வைத்தது. இந்தத் தவறு யாரால் ஏற்பட்டது ?

கனம் சபாநாயகர் : அதுபற்றி விசாரணை கோர்ட்டில் இருப்பதால் ஏதும் விவரம் கொடுக்க முடியாது என்று கனம் அமைச்சர் சொல்கிருர்கள்.

திரு. மு. கருணுநிதி : அதனுல் ஏற்பட்ட சேதம் எவ்வளவு என்று அறிய முடியுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : அந்த விவரம் என்னிடத்தில் இல்லை.

### *Primary Health Centres*

*172. *Q.*—SRI S. NANJUNDA ROW : Will the Hon. the Minister for Public Health be pleased to state :—

(*a*) whether there is any proposal to open Primary Health Centres in Eriyodu and R. Vellodu in Dindigul taluk, Madurai district ; and

(*b*) if not, whether there is any proposal to open Government Dispensaries in Eriyodu and R. Vellodu in Dindigul taluk ?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : (*a*) and (*b*) The Government have sanctioned a Primary Health Centre for Vedasandur Panchayat Union in Dindigul taluk and have ordered that the Centre may be located at Vedasandur. There is no proposal to open a Primary Health Centre either at Eriyodu or R. Vellodu. However, a proposal to open a Government dispensary at Eriyodu, is under examination.

SRI S. NANJUNDA ROW : Sir, in view of the longstanding needs of the backward areas in my constituency, will the Government be pleased to open a Government dispensary there at an early date ? 9-00 a.m.

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : Yes, Sir, the proposal regarding opening of a Government dispensary at Eriyodu is under the examination of the Government.

* 173 கேள்வி.—திரு. சி. கோதண்டராம பாகவதர் : கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

வடார்க்காடு மாவட்டத்தில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் (Sanitary Health Centres) இல்லாத பஞ்சாயத்து யூனியன்கள் எவை எவை, அவைகள் எப்பொழுது அமைக்கப்படும் ?

[4th March 1966

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** இது குறித்து விவர அறிக்கை* ஒன்று சபையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

**புலவர் கா. கோவிந்தன் :** வட ஆற்காடு மாவட்டத்தில் 36 பஞ்சாயத்து யூனியன்கள் இருக்கின்றன. அவற்றில் 25 யூனியன்களில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் இல்லை. ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனுக்கும் ஒவ்வொரு ஆரம்ப சுகாதார நிலையம் ஆரம்பிக்க வேண்டுமென்பது அரசாங்கத்தின் கொள்கையாக இருக்கிறது. ஆனால், இப்பொழுது 11 பஞ்சாயத்து யூனியன்களில்தான் ஆரம்ப சுகாதார நிலையங்கள் இருக்கின்றன. மற்ற 25 பஞ்சாயத்து யூனியன்களில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் எப்பொழுது எடுத்துக்கொள்ளப்படும்? அதற்கு ஒரு காலவரையறை வைத்து நடவடிக்கை எடுத்துக்கொள்வார்களா ?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனுக்கும் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் ஆரம்பிக்கவேண்டுமென்பது அரசாங்கத்தின் கொள்கையாக இருந்தாலும், அவசர நிலைமையையொட்டி புதிய கட்டடங்கள் எல்லாம் கட்ட இயலாது என்ற காரணத்தால் ஒத்தி வைக்கப்பட்டிருக்கிறது.

**திரு. சா. கணேசன் :** ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குக் கட்டடங்கள் வேண்டியதுதான். ஆனால் கட்டடங்களைவிட மிக இன்றியமையாதது டாக்டர். ஆகவே, இருக்கிற கட்டடங்களோடு கூட இப்பொழுது இருக்கிற ஆரம்ப சுகாதார நிலையங்கள் பலவற்றில் அல்லது சிலவற்றிலாவது டாக்டர்கள் இல்லாத காரணத்தால் அவை மூடப்படுகிற நிலைமையை எண்ணி இப்பொழுது உள்ள எல்லா ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் உடனடியாக டாக்டர்கள் நியமிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறதா—இல்லாவிட்டால், உடனடியாக நடவடிக்கை எடுத்துக்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** சார், எந்த எந்த ஆரம்ப சுகாதார நிலையங்களில் டாக்டர்கள் இல்லையோ அங்கங்கே டாக்டர்கள் போடவேண்டுமென்று, ஏப்ரல் மாதத்திற்குள் போட வேண்டும் என்று, அரசாங்கம் உத்தரவு போட்டிருக்கிறார்கள். ஆகையால், அதற்குமேல் இந்தக் குறைபாடு இருக்காது.

SRI C. CHIRANJEEVULU NAIDU : It is stated that Primary Health Centres in the above Panchayat Unions would be established when these areas enter into the maintenance of National Malaria Eradication Programme. May I know what is the scope of assistance from the UNICEF ?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : Some Panchayat Unions have entered into the maintenance phase Even in rented buildings they have started Primary Health Centres, for which the UNICEF aid is for 'equipment and medicine'.

* Printed as Appendix I on page 156.



4th March 1966]

**திரு. சா. கணேசன் :** இந்த ஆரம்ப சுகாதார நிலையங்களைக் கண்காணிக்கின்ற, அல்லது நிர்வகிக்கின்ற துறை வேறு, டாக்டர்களை நியமிக்கின்ற துறை வேறு என்ற நிலைமையினால்தான் எல்லா ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் டாக்டர்களை நியமிக்க முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்பது உண்மையா? அப்படியானால் அதைச் செம்மைப்படுத்த, சீர்திருத்த என்ன நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொண்டிருக்கிறது?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** டாக்டர்களை அங்கே நியமிக்க வேண்டுமென்று சொன்னால் எம்.பி.பி.எஸ். டாக்டர்கள் நியமிக்கவேண்டும். எம்.பி.பி.எஸ். டாக்டர்கள் கிடைப்பது கொஞ்சம் கஷ்டமாக இருப்பதால்தான் அப்படி நியமிக்க முடியவில்லையே ஒழிய வேறு ஒன்றுமில்லை.

**திரு. முனு. ஆதி :** இந்த ஆரம்ப சுகாதார நிலையங்கள் கிராமப் பகுதிகளில் இல்லாமல் பஞ்சாயத்து யூனியனுக்கு ஒன்றாக இருப்பதால் போதிய வசதி எல்லோருக்கும் கிடைப்பதில்லை. ஆகவே, ஒரு பஞ்சாயத்து யூனியனுக்கு ஒன்று என்று இருப்பதை இரண்டு ஆக்கவும், டாக்டர்களை அங்கே நியமிக்கின்ற அதிகாரத்தைப் பஞ்சாயத்து யூனியனுக்கே கொடுப்பதற்கும் உத்தேசம் உண்டா ?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** டாக்டர்களை நியமிப்பது, யார் ஆரம்ப சுகாதார நிலையங்களை ஆரம்பிக்கிறார்களோ அவர்களுடைய பொறுப்புத்தான். அந்த அதிகாரத்தை பஞ்சாயத்து யூனியனுக்குக் கொடுக்கமுடியாது.

**திரு. பு. பொ. வடிவேல் :** பஞ்சாயத்து யூனியன்களே கட்டட வசதிகள் செய்துகொடுக்கிறோம் என்று வாக்குறுதி அளித்தால் அங்கே ஆரம்பிப்பதற்கு முன்வருவார்களா ?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** அங்கங்கே கட்டட வசதிகள் செய்து கொடுத்தால், ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைப்பதற்குத் தகுதியான இடங்கள் இருந்தால் ஆரம்பிப்பதில் ஆட்சேபணையில்லை.

SRI V. S. S. MANI : Is there any poposal to integrate the two departments now working separately under the control of the Director of Medical Services and the Director of Public Health ?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : That is a matter which is under the consideration of Government.

**திரு. எஸ். முருகையன் :** 1965-66 ஆம் ஆண்டு எத்தனை ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஆரம்பிக்கவேண்டுமென்று திட்டமிடப்பட்டது ? இதுவரையில் எத்தனை ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது ?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** 1965-66-இல் 160 ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஆரம்பிக்கவேண்டுமென்று இருந்தது. நான் முன்பே சொன்னமாதிரி எமர்ஜென்சி காரணமாக எடுத்துக் கொள்

[4th March 1966

வதற்கு இல்லாத நிலைமை ஏற்பட்டது. இருந்தபோதிலும் முன்பை விட இப்பொழுது அதிகமாக்கப்பட்டிருக்கிறது. 130 ஆக முன்பு இருந்தது 1964-65-இல் 180 ஆக ஆக்கப்பட்டிருக்கிறது.

### தேசியப் பாதுகாப்பு நிதி

*174 கேள்வி:—திரு. எஸ். ஜே. ராமசாமி :
திரு. கரு. சீமைச்சாமி :
} கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தேசியப் பாதுகாப்பு நிதிக்காக தமிழகத்தில் 1965-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 5-ந் தேதி முடிய வசூலான தொகை எவ்வளவு—மாவட்ட வாரியாக ?

(இ) வசூலான தொகை யாருக்கு அனுப்பப்படுகிறது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) The National Defence Fund was constituted in 1962 in the wake of Chinese Aggression. The details of the collections in each district of the State towards the National Defence Fund since October 1962 up to 5th October 1965 are set out in the statement placed on the Table of the House.

(*b*) The amount collected is remitted to the National Defence Fund, New Delhi.

திரு. மு. கருணாநிதி : இந்தப் பாதுகாப்பு நிதி வசூலிக்கப்பட்ட வகையில் நீலகிரி மாவட்டத்தில் 4 லட்ச ரூபாயும், கன்னியாகுமரி மாவட்டத்தில் 2 லட்சத்துச் சொச்சம் ரூபாயும் என்ற அளவுக்குக் குறைவாக இருக்கிறது. ஆனால், மற்ற மாவட்டங்களில் எல்லாம் 20 லட்சம், 29 லட்சம், 56 லட்சம் என்ற அளவில் அதிகமாக வசூலிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் முதலமைச்சர் அவர்களுடைய மாவட்டத்திலே குறைவாக 5 லட்சம் தான் வசூலிக்கப்பட்டிருக்கிறதே அதற்குக் காரணம் என்ன ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதிலிருந்தே தெரிந்து கொள்ளலாம், முதலமைச்சர் பிரத்தியேகமாக அக்கறை எடுத்துக் கொண்டு கொடுக்கவேண்டுமென்று சொல்லாமல், கொடுத்தவர்கள் கொடுக்கட்டும் என்று தான் இருக்கிறார்கள்.

திரு. கே. ஏ. மதியழகன் : கோயம்பத்தூர் மாவட்டத்தில் 56 லட்சம் ரூபாய்தான் வசூலாகியிருக்கிறது. அந்த மாவட்டத்தைப் பொறுத்தவரையில் வருமான வரிமட்டும் 10 கோடி ரூபாய் கொடுக்கிறார்கள். அப்படி இருக்கும்பொழுது ஏன் இவ்வளவு குறைவாக வசூல் செய்யப்பட்டது என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : யுத்த நிதி வசூலாக இருந்தாலும், அரசாங்கக் கடனாக இருந்தாலும், நடுத்தர வகுப்பினர், குறைந்த வருமானம் உள்ளவர்கள்தான் அதிகமாகக் கொடுக்கிறார்கள், அதிகமாக வருமானம் உள்ளவர்கள் கொடுக்கவில்லை என்று நான் முன்பே தெரிவித்திருக்கிறேன். இதிலே கட்டாயம் இல்லை.

* Printed as Appendix II on page 557



4th March 1966]

திரு. ஜே. மாதா கவுடர் : நம்முடைய மாநிலத்தில் நீலகிரியில் தான் அதிகமாக வசூலாகியிருக்கிறது என்பது முதல் அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ? ஜனத்தொகை அடிப்படையில் பார்த்தால் 4 கோடி மக்கள் சேர்ந்து 3 கோடி தான் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் நீலகிரியில் 3½ லட்சம் மக்கள் 4 லட்சம் கொடுத்திருக்கிறார்கள் அல்லவா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இந்தப் புள்ளி விவரம் அக்டோபர் 5-ம் தேதி வரையில் என்று கொடுக்கப்பட்டிருக்கிறது. அக்டோபர் 5-ம் தேதிக்குப் பிறகு நீலகிரியிலிருந்து கணிசமான அளவுக்கு வசூலாயிருக்கிறது என்பது தெரியும். அதை நான் பாராட்டுகிறேன்.

திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் அவைத் தலைவர் அவர்களே, இந்தப் பாதுகாப்பு நிதி தொடர்ந்து வசூலிக்கப்படுகிறதா ? அல்லது நிறுத்தப்பட்டிருக்கிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : வசூலிப்பது என்பது அல்ல,— கொடுப்பதுதான் ; அது பெற்றுக்கொள்ளப்படுகிறது. பாகிஸ்தான் ஆக்கிரமித்திருந்த காலத்திலே மக்கள் எல்லோரிடமும் பரபரப்பு இருந்தது, அதிகமாகக் கொடுத்தார்கள். இப்பொழுதும் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். கொடுப்பது வாங்கப்படுகிறது.

திரு. கே. ஏ. மதியழகன் : கலெக்டர்களையெல்லாம் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் இலக்கு நிர்ணயித்து வசூல் செய்யவேண்டும் என்றும் பள்ளிக்கூடங்களில் படிக்கின்ற பிள்ளைகள் பஸ் ஸ்டாண்டு போன்ற இடங்களில் எல்லாம் உண்டியல் தூக்கி வசூல் செய்ய வேண்டுமென்றும் சுற்றறிக்கை அனுப்பப்பட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அவ்வாறு சுற்றறிக்கை அனுப்பவில்லை. ஒவ்வொரு மாவட்டத்திலும் எவ்வளவு வசூல் செய்யவேண்டுமென்று நிர்ணயிக்கப்படவில்லை. உற்சாகம் உள்ளவர்கள் உண்டியெடுத்து வசூல் செய்யலாம். உண்டி எடுத்து வசூல் செய்தால் கணக்குப் பார்க்க முடியாது என்ற காரணத்தால் சர்க்கார் உண்டியல் மூலம் வசூலிக்கப்பட்டது. மாணவர்கள் நாங்கள் வசூலிக்கிறோம் என்று சொன்னார்கள்; அதற்காக பிரத்தியேகமாக உண்டியல் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டு அவர்கள் கணிசமான அளவுக்கு வசூலித்துக் கொடுத்தார்கள்.

திரு. இரா. நெடுஞ்செழியன் : திரட்டப்படுகின்ற பாதுகாப்பு நிதி முழுவதும் மத்திய அரசின் பொறுப்பிலே விடப்படுகிறதா அல்லது மாநில அரசின் மூலம் செலவழிக்கப்படுகிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : பாதுகாப்பு நிதி திரட்டப்படுவதெல்லாம் நேராக மத்திய பாதுகாப்பு நிதிக்கு அனுப்பப்படுகிறது.

[4th March 1966

திரு. சா. கணேசன் : இந்த பாதுகாப்பு நிதி பற்றிக் கண்டிருக்கிற புள்ளி விவரங்களிலே ரொக்கமாகக் கொடுத்ததுமட்டும்தான் வந்து இருக்கிறதா ? தங்கக் கடன் அல்லாமல், தங்கப் பண்டங்கள் இனுமாகக் கொடுக்கப்பட்டதும் நாணயமாக மாற்றப்பட்டு ரூபாய்க் கணக்கில் சேர்க்கப்பட்டுக் கொடுக்கப்பட்டிருக்கிறதா ? அல்லது தனியாக இருக்கிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ரொக்கமாகக் கொடுத்தது தான் இதிலே கணக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. தங்கத்தை நன்கொடையாகக் கொடுத்த கணக்குகள் எப்படி இருக்கிறது என்பதற்குத் தனிக் கேள்வி கேட்டால தெரிவிக்கலாம்.

திரு. ஆ. கு. சுப்பையா : ஒவ்வொரு மாவட்டத்திலும் இவ்வளவு தொகை வசூலிக்க வேண்டுமென்று கோட்டா நிர்ணயிக்கப்பட்டிருக்கிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அப்படி ஒன்றும் இல்லை என்று முன்பே தெரிவித்தேன்.

திரு. எம். எஸ். மணி : அக்டோபர் மாதம் 5-ம் தேதி வரையில் கணக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதற்குப் பிறகு வசூலான தொகை இன்னும் எந்தெந்த மாவட்டத்திலிருந்து எவ்வளவு வந்திருக்கிறது ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : வரவேண்டியதுமில்லை, கொடுத்து வைத்ததுமில்லை. வசூல் எல்லாம் பெறப்பட்டு இங்கே வந்ததும் மத்திய நிதிக்கு அனுப்பப்பட்டு விடுகிறது.

திரு. து. ப. அழகமுத்து : பாதுகாப்பு நிதி வசூல் செய்ததில் ஒவ்வொரு மாவட்டமும் என்ன வரிசையில் இருக்கிறது எனபதை அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அதிலே, நம்முடைய மாநிலம் இந்தியத் துணைக்கண்டத்திலே எந்த வரிசையில் இருக்கிறது ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அவ்வாறு இதுவரை நாம் ஒப்பிட்டுப் பார்க்கவில்லை.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு ஏற்பட்டதற்குப் பிறகு நம்முடைய அமைச்சர்கள் ஒன்றும பாதுகாப்பு நிதிக்குக் கொடுத்ததாகத் தெரியவில்லை. மந்திரிகள் யாராவது பாதுகாப்பு நிதிக்குக் கொடுத்தார்களா ? அந்த விவரம் என்ன ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அமைச்சர்கள் பாதுகாப்பு நிதிக்குக் கொடுத்ததாகத் தெரியவில்லை என்று சொல்வது சரியல்ல.

திரு. கே. ஏ. மதியழகன் : இந்த மூன்று கோடி ரூபாயிலே, மாணவர்கள், தொழிலாளர்கள் எல்லாம் கொடுத்தது எவ்வளவு ? பணக்காரர்கள் கொடுத்தது, வரி வசூலிக்கும் அதிகாரிகள், தாசில்தார்கள் மூலம் வசூலான தொகை, எவ்வளவு ? விகிதாசாரம் என்ன ?



4th March 1966]

கனம் திரு. எம். பக்தவத்சலம் : தாசில்தாரோ மற்ற அதிகாரிகளோ வசூலிக்கவில்லை. வருவதைப் பெற்றுக் கொள்கிறார்கள். குறிப்பிட்ட அதிகாரிகளிடம் கொடுக்கவேண்டும். மாணவர்கள் வசூலித்தது எவ்வளவு, தொழிலாளர்கள் வசூலித்தது எவ்வளவு என்பன போன்ற விவரங்கள் என்னிடம் இல்லை.

திரு. டி. கார்ச்சா கவுடர் : இந்த மாநிலத்திலே இவ்வளவு பெரிய தொகையைக் காங்கிரஸ்காரர்கள்தான் மாவட்ட வாரியாக முயற்சி எடுத்து வசூலித்திருக்கிறார்கள்; எதிர்க்கட்சியினர் அவ்வளவாக அக்கறை காட்டவில்லை என்பது உண்மையா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அந்த மாதிரி விஷயங்களை எல்லாம் கனம் அங்கத்தினர் அவர்கள் மன்றத்திற்கு வெளியே பிரசாரத்திற்கு உபயோகித்துக் கொள்ளலாம்.

* 175 கேள்வி.—திரு. செ. மாதவன் : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) விவசாயிகளிடமிருந்து ஏக்கர் ஒன்றுக்கு இவ்வளவு ரூபாய் என்று பாதுகாப்பு நிதி அரசாங்க அலுவலர்களால் வசூலிக்கப்பட்டதா ?

(இ) அதன் மூலம் வசூலான தொகை மாவட்டவாரியாக எவ்வளவு ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) No.

(b) Does not arise.

திரு. செ. மாதவன் : பாதுகாப்பு நிதியைக் குறிப்பிட்ட அதிகாரிகள்தான் வாங்கவேண்டும்; அமைச்சர்களோ, தலைப்பட்டவர்களோ பாதுகாப்பு நிதி வசூலிக்கும்போது அந்தந்த மாவட்ட கலெக்டரின் அனுமதி பெற்றுத்தான் வசூலிக்கவேண்டுமென்று கூறப்பட்டது. காங்கிரஸ் தலைவர் அவர்கள் முன்னிலையிலே நிதி வசூலிக்கப்பட்டிருக்கிறது. அதற்கு முன்பாகவே அரசாங்கம் அனுமதி கொடுத்ததா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : பணம் கொடுக்கிறவர்கள் யாரிடத்தில் வேண்டுமானாலும் கொடுக்கலாம். ஆனால் அவர்கள் ரசீது கொடுக்க முடியாது. யார் பெற்றாலும் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரிகளிடம் கொடுத்து ரசீது வாங்கி அனுப்ப வேண்டும் என்பதுதான் முறை.

* 176 கேள்வி:—திரு. எஸ். ஜே. ராமசாமி : கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தேசீய பாதுகாப்பு நிதி என்ற பெயரால் பல்வேறு நபர்களாலும் வசூலிக்கப்படும் தொகையைச் சரிவரக் கணக்கில் கொண்டு வர அரசாங்கம் எடுத்துக்கொண்டுள்ள நடவடிக்கைகள் என்ன ?

(இ) அவ்வாறு கணக்கில் வராத தொகைகள் சம்பந்தமாகக் கைது செய்யப்பட்டவர்கள் எத்தனை பேர், மாவட்டவாரியாக ?

[4th March 1966

THE HON. SRI. M. BHAKTAVATSALAM: (a) The Director of Treasuries and Accounts has been appointed as the Administrator, National Defence Fund in this State for accounting all contributions made towards the National Defence Fund. The Administrator, all District Collectors, Revenue Divisional Officers, Tahsildars, Independent Deputy Tahsildars, Panchayat Union Commissioners, and Municipal Commissioners have been authorised to receive the contributions made by the members of the public.

In respect of contributions tendered by the public to the Governor, Chief Minister and Ministers, arrangements are made for the transmission of contributions to the Administrator who will account for them. The contributions in cash are remitted by the receiving authorities to the Administrator through Government drafts. Acknowledgment receipts are being given for every contribution received by the authorities who have been authorised to receive contributions. The Government have also ordered that hundi collections should be made only through authorised hundis distributed by the Collectors.

(b) No person was arrested in this State for not bringing to account the collections towards National Defence Fund.

திரு. எஸ். ஜே. ராமசாமி : ஒரு சமயம் ஒரு செய்தி வந்தது. திருவல்லிக்கேணியில் யாரோ ஒருவர் வசூலிக்கப்பட்ட நிதிக்குச் சரியான கணக்குக் காட்டாததால் கைது செய்யப்பட்டதாகக் கூறப்படுகிறது. அதைப் பற்றிய தகவல் அரசாங்கத்திடம் இருக்கிறதா? இருந்தால் சொல்ல முடியுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அது பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது.

திரு. கே. ஏ. மதியழகன் : பணம் வசூலிப்பதில் தவறு நேர்ந்ததின் காரணமாகக் கைது செய்யப்படவில்லை என்பதைப் பற்றி மட்டும் சொன்னார்கள். பணத்தை வசூலித்து பல பேர் தாங்களே வைத்துக் கொண்டார்கள் என்று ஏதேனும் புகார்கள் வந்தனவா? அவற்றைப் பற்றிய விவரம் என்ன?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : என்னிடம் தகவல் ஒன்றுமில்லை.

கனம் சபாநாயகர் : கேள்விகள் முடிவடைந்தன.

[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

## II.—GENERAL DISCUSSION ON THE BUDGET FOR 1966-67—(*cont*).

* திரு. மு. கருணாநிதி : கனம் தலைவர் அவர்களே, 1966-67-ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இந்த மன்றத்திலே வைத்து அதற்காக நடைபெறுகின்ற இந்த விவாதத்திலே நானும் என்னுடைய கருத்துக்கள் சிலவற்றை எடுத்துக் கூற விரும்புகிறேன். இந்த வரவு செலவுத் திட்டம் ஆளுங்கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்களால் 'இது வரி இல்லாத



4th March 1966] [திரு. மு. கருணாநிதி]

நிதிநிலை அறிக்கை' என்று தொடக்கத்திலே புகழப்பட்டு, அவர்களுடைய உரையின் முடிவில் அவரவர்களுக்கு இருக்கின்ற குறைபாடுகள் எடுத்துக் கூறப்பட்டு, அவரவர்களுடைய தொகுதியிலே உள்ள குறைகளைப் பற்றி எத்தனையோ முறை எடுத்துச் சொல்லியும் நிறைவேற்றப்படாமல் கிடப்பிலே போடப்பட்டிருக்கிற பல்வேறு திட்டங்களை எல்லாம் எடுத்துக் காட்டி தங்களது உரைகளை நிகழ்த்தியிருக்கிறார்கள். வரி இல்லாத வரவு செலவுத் திட்டம் என்று மகிழ்ச்சியடைவதற்கு ஒன்றுமில்லை. காரணம் நம்முடைய முதலமைச்சர் அவர்கள், வரவு செலவுத் திட்ட அறிக்கையிலே வரி போட்டால் அது பெரும் பிரச்சினையாகும் என எண்ணி, மிகத் தந்திரமாக, கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்பே போட வேண்டிய வரியையெல்லாம் போட்டு, இந்த மன்றத்தினுடைய பெரும்பான்மையான ஒப்புதலையும் பெற்று அந்த வரிகள் இன்றையதினம் நடமாடிக் கொண்டிருக்கிற நேரத்தில் வரி இல்லாத ஒரு வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டிருப்பதாக ஒரு வாதத்தை ஆளுங் கட்சி உறுப்பினர்கள் எழுப்பிக் கொண்டிருப்பது உள்ளபடியே விந்தையாக இருக்கிறது.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : மேலும் வரி இல்லை என்பது தான் வாதம்.

திரு. மு. கருணாநிதி : மேலும் வரி இல்லையென்று முதலமைச்சர் அவர்கள் குறிப்பிடுகிறார்கள். தோட்டா இல்லாத துப்பாக்கி என்று கூறுவதைப் போல்தான் 'மேலும் வரி இல்லை' என்று கூறுவது இருக்கிறது. தோட்டா இல்லாத துப்பாக்கி என்றால் தோட்டாவே போடப்படாத துப்பாக்கி என்று பொருளும் அல்ல. இருந்த தோட்டாக்கள் ஏழை எளியவர்கள் என்ற புள்ளிமான்களை வேட்டையாடப் பயன்படுத்தப்பட்டு இப்போது தோட்டா இல்லாத காலித் துப்பாக்கியாகக் காட்டப்படுகிறது. மேலும் வரி இல்லை என்று கூறப்படுகிறது. இரண்டு திங்களுக்கு முன்பாக ஏறத்தாழ எட்டு கோடி ரூபாய்க்கு வரிகளைப் போட்டு விட்டு 'மேலும் வரி இல்லை' என்று தோட்டா இல்லாத துப்பாக்கி காட்டப்படுகிறது. அதே சமயத்தில், வடக்கே, மத்திய சர்க்காரில் பீரங்கிகள் வெடிக்கின்றன. பருத்தித் துணியின் மீது வரி, புகையிலை வரி, டீசல் எண்ணெய் மீது வரி, சர்க்கரை வரி என்று இன்னோரன்ன பல வரிகள் நாட்டு மக்களுடைய தலையிலே சுமத்தி வைக்கப்படுகிற நேரத்தில், இந்த வரவு செலவுத் திட்டத்திலே வரி இல்லையென்று கூறி மகிழ்ச்சி அடைவதற்கு எந்தவிதமான முகாந்திரமும் கிடையாது. சென்னை அரசாங்கத்தினுடைய வருவாய் இந்த ஆண்டு ஏறத்தாழ 24 கோடி ரூபாய் அதிகமாக ஆகியிருக்கிறது. இதை வரவு செலவுத் திட்டம் நமக்குக் குறிப்பிடுகிறது. ஆனால் இந்த 24 கோடி ரூபாய் வருமானம் சோஷலிசம் செயல்பட்ட காரணத்தால் ஏற்பட்டதா? அல்லது தனியார் வசம் இருந்த தொழிற்சாலைகள் எல்லாம் பொதுத் துறைக்கு மாற்றப்பட்டு, அந்த ஜனநாயக சோஷலிச எழுச்சியின் காரணமாகக் கிடைத்த வருமானமா? பெரும் பஸ் முதலாளிகளுடைய தொழில்கள்

எல்லாம் தேசியமயமாக்கப்பட்டு அதன் காரணமாக சோஷலிச ரீதியில் உருவாக்கப்பட்டுள்ள வருமானமா? என்றால் இல்லை. எட்டு கோடி ரூபாய்க்கு முன்பே கூடுதலாக வரி போட்டதன் காரணமாக—அந்த வரியில் நில வரி உயர்வு, நீர் வரி உயர்வு அடங்கும்—அவற்றை ரத்து செய்யவேண்டுமென்று மன்றத்திலுள்ள காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் எடுத்துக் காட்டியிருப்பதையும், அகில இந்திய காங்கிரஸ் கட்சித் தலைவர் அவர்கள் கூட குடந்தையில் பேசிய கூட்டத்தில் விவசாயிகளுக்கு வரிச் சலுகை செய்யப்படவேண்டுமென்று சுட்டிக்காட்டியிருப்பதையும் நான் இந்த அமைச்சரவைக்கு கவனமூட்ட விரும்புகிறேன். இந்த எட்டு கோடி ரூபாய் அல்லாமல் மத்திய அரசிடமிருந்து ஒதுக்கப்பட்டிருக்கிற 7 கோடி ரூபாயும், விற்பனை வரி மூலம் மேலும் கிடைக்கிற ஆறு கோடியும், மோட்டார் வாகன வரிமூலம் மேலும் கிடைக்கிற ஒரு கோடியும் இப்படி தொடர்ந்து பல வரிகளைச் சுமக்க வேண்டிய கட்டத்தில் நாம் இருக்கிறோம். ஆளும் கட்சி அங்கத்தினர்கள், வரி இல்லை என்ற காரணத்தினால் எதிர்கட்சியில் உள்ளவர்கள் எல்லாம் ஏமாந்து விட்டார்கள், வரி இருந்தால் என்னென்னவோ எல்லாம் பேசியிருப்பார்கள், ஆகவே, அவர்களுக்கு இதனால் பெரிய ஏமாற்றம் ஏற்பட்டு விட்டது என்றெல்லாம் குறிப்பிட்டார்கள். வரி போட்டாலும் ஆளுங்கட்சி உறுப்பினர்கள் வரவேற்பார்கள், வாழ்த்துவார்கள் இந்த வரவு செலவுத் திட்டத்தை வரி போடாவிட்டாலும் வரி போடாத பட்ஜெட் ஆகவே வாழ்த்துகிறோம் என்று குறிப்பிடுவார்கள். ஆகவே அதைப் பொருத்து இதில் ஏமாற்றம் எதுவும் இல்லை. எங்களுக்குள்ள ஏமாற்றம் எல்லாம் போடப்பட்டிருக்கிற இவ்வளவு வரிகளில் ஒன்றிரண்டு வரிகளையாவது விலக்கியிருக்கிறோம் என்ற மகிழ்ச்சிகரமான செய்தியைத் தாங்கி இந்த நிதி நிலை அறிக்கை வரும் என்று எதிர்பார்த்தோம். உண்மையோ அல்லது உண்மை அல்லவா எனக்குத் தெரியாது; ஒரு ஒட்டகத்தின் மீது, மேலும், மேலும் ஏற்றப்படுகிற பளுவைத் தாங்கிக் கொண்டு நடக்கமுடியவில்லை என்ற நிலை ஏற்பட்டால் ஒன்றிரண்டு சாமான்களை கீழே இறக்கிவிட்டு அதை நடக்கச் செய்வதற்கு முயற்சி செய்வார்கள். அந்த முயற்சி கூட இந்த வரவு செலவுத் திட்டத்தில் இடம் பெறாதது உள்ளபடியே வருந்தத்தக்கது. (கனம் திரு. எம். பக்தவத்சலம்: நாங்கள் ஏமாற்ற மாட்டோம்.) ஏமாற்ற மாட்டோம் என்று முதல் அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகிறார்கள். ஒட்டகம் கூட அந்தப் பளு குறைக்கப்படுகிற காரணத்தினால் நடக்கிறது. அது ஏமாற்றப்படுகிறதா இல்லையா என்ற அடிப்படையில் ஆராயாவிட்டாலும் அதை எடுத்தால் அது நடக்கும் என்ற சிந்தனை காரணமாக அது எடுக்கப்படுகிறது. ஆனால், இந்த மாநிலத்தில் போடப்பட்டிருக்கிற நில வரி உயர்வு, நீர் வரி உயர்வு கொடுமையானது, அநியாயமானது, விவசாயிகளை வாட்டக் கூடியது, உழவர்களின் வாழ்வில் மண்ணை அள்ளிப்போடக் கூடியது என்று எதிர்க்கட்சித் தரப்பிலிருந்து மாத்திரமல்ல, ஆளும் கட்சித் தரப்பிலுள்ள முற்போக்காளர்கள் எல்லாம் எடுத்துச் சொன்ன பிறகும் பிடிவாதமாக இருக்கிறார்கள் என்றால்





முதல் அமைச்சர் அவர்களுடைய பிடிவாத குணத்தைப் பாராட்டலாமே தவிர இரக்க குணம் இருக்கிறதா என்று தேடித் தேடிப் பார்க்க வேண்டிய அவசியத்திற்கு இன்றையதினம் ஆளாக்கிவிடப்பட்டிருக்கிறோம். பொதுவாக இந்த வரவு செலவுத் திட்டத்தைப் பற்றி எதிர்க்கட்சிக்காரர்கள் என்ன அபிப்பிராயத்தைத் தெரிவிக்கிறார்கள் என்பதற்கு முன்பு, ஆளும் கட்சியில் உள்ள மதிப்பிற்குரிய டாக்டர் நடராஜன் அவர்கள் எழுதிய கட்டுரை ஒன்றில் அவர்கள் கூறியிருக்கிற அபிப்பிராயத்தை இந்த மன்றத்தில் எடுத்துச் சொல்வது பொருத்தமாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். அந்த ஏட்டில் 'டாக்டர் பி. நடராஜன்' என்ற அளவில்தான் அவர் பெயர் பொறிக்கப்பட்டு அந்தக் கட்டுரை வந்திருக்கிறது. 'எம்.எல்.ஏ.' என்ற தொடர்பு கூட அதில் சேர்க்கப்படவில்லை. ஒருவேளை ஆளும் கட்சி எம்.எல்.ஏ.-ஆக இருந்து கொண்டு அதைச் சொல்வது சரியா என்ற எண்ணத்திலேயோ என்னவோ 'டாக்டர் பி. நடராஜன்' என்ற பெயரில் அந்தக் கட்டுரை வந்திருக்கிறது.

**MR. SPEAKER:** He is so well known.

**திரு. மு. கருணாநிதி:** "நாட்டில் மிக முக்கியப் பிரச்னையான உணவுப் பிரச்னைக்கு இந்த பட்ஜெட் முக்கியத்துவம் தரவில்லை" என்று எழுதுகிறார். மேலும் அவர் குறிப்பிடும்போது "நமது பொருளாதாரத்தின் நெருக்கடியான கட்டமான இந்த நேரத்தில் முதல் முக்கியத்துவம் உணவு உற்பத்தி அதிகப்படுத்தலுக்குத் தரவேண்டும். அது, உணவு தான்யங்களுக்கு மட்டுமல்லாது மீன், கோழி, காய்கறிகள் போன்றவற்றுக்கும் தரப்படுதல் வேண்டும். இந்தக் கோணத்திலிருந்து தற்போதைய நிதி ஒதுக்கீட்டை நோக்கும்போது, விவசாயம் ஒரு கோடி ரூபாய் கூடுதலாக ஒதுக்கீட்டைப் பெற்றுள்ளது. 162 கோடி ரூபாய் வருவாயுள்ள நிதி நிலை அறிக்கையில் இதற்காக ஒதுக்கப்பட்ட மொத்தத் தொகை 9 கோடி ரூபாய்தான். 5½ சதவிகிதம்தான். மூலதனச் செலவின் கீழ்ப் பார்க்கப்பட வேண்டிய முக்கியமான இனம் நீர்ப்பாசனம். ஆனால் அதில் கூட நிதி ஒதுக்கீடு குறைவுதான். விவசாயச் சீர்திருத்தம், விவசாய ஆராய்ச்சி ஆகியவற்றுக்கான மூலதனச் செலவும் வெகுவாக குறைக்கப்பட்டுள்ளது.

உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்காக எல்லா சக்திகளையும் ஆதாரங்களையும் அதன்பால் திருப்பவேண்டிய ஒரு கால கட்டத்தில் உணவு உற்பத்திக்கு முக்கியத்துவம் குறைவாகச் செலுத்தப்பட்டுள்ளது. காலத்தையும் தேவையையும் பரிசீலிக்கும்போது பட்ஜெட் போட்ட நிலை திருப்திகரமாக இல்லை" என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்த நிலையில் ஆளும் கட்சித் தரப்பிலிருந்து பலர் பேசுகிறார்கள். நாட்டில் விலைவாசி ஏறியிருக்கிறது, நாட்டு மக்கள் வறுமையால் வாடுகிறார்கள் என்று எதிர்க்கட்சித் தரப்பில் இருந்து கூறும்போது, ஆளும் கட்சித் தரப்பிலிருந்து சொல்லப்படுவது என்னவென்றால், மக்களுக்கு வாங்கும் சக்தி அதிகரித்

திருக்கிறது, தமிழக மக்கள் ஆடம்பரமாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள், கடிகாரம் கட்டாதவர்களைக் காண முடியவில்லை, சட்டை போடாதவர்களைக் காண முடியவில்லை என்றெல்லாம் பேசப்படுகிறது. ஆனால் உணவுப் பொருள்களை வாங்கக் கூடிய அளவிற்கு சக்தி படைக்காதவர்கள் ஏராளமான பேர்கள் இந்த நாட்டில் இருக்கிறார்கள் என்ற கருத்தை—நான் அல்ல—போஷாக்கு ஆராய்ச்சி நிலைய டைரக்டர் டாக்டர் கோபாலன் அவர்கள் எவ்வளவு உருககமாக எடுத்துக் காட்டியிருக்கிறார்கள் என்பதை இங்கு நான் எடுத்துக் கூற விரும்புகிறேன்.

"இப்போதுள்ள நமது விவசாயப் பொருளாதார நிலைமையில் நமது நாட்டில் போஷாக்கின்மை ஏற்பட்டிருப்பதற்கு, போதிய உணவு சப்ளை இன்மையும், நமது மக்களின் கணிசமான பகுதியினர் நமக்குத் தேவையான உணவுப் பொருள்களை வாங்கிக் கொள்ள பண வசதியில்லாதிருப்பதுமே காரணம்" என்று அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் நம் மதிப்பிற்குரிய முதல் அமைச்சர் அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்றால் வியாழக்கிழமை இரவில் அரிசி, கோதுமைக்குப் பதிலாக வேறு உணவை உட்கொள்ள சிபார்சு செய்கிறார்கள். எந்த நிலையில்? உணவுப் பொருள்களை வாங்குவதற்குள்ள பொருளாதார வசதி கணிசமான அளவு மக்களுக்கு இல்லை என்று டாக்டர் கோபாலன் அவர்கள் உருக்கமாகச் சொல்கிறார்கள். ஆனால் அதே நேரத்தில் நம் மதிப்பிற்குரிய முதல் அமைச்சர் அவர்கள் வியாழக்கிழமை இரவு அரிசி, கோதுமைக்குப் பதில் வேறு உணவை சிபார்சு செய்கிறார்கள். ஜவ்வரிசி பகாளபாத், கடலைச் சுண்டல், கீரை வகைகள் இவைகளை எல்லாம் நம் முதல் அமைச்சர் அவர்கள் சிபார்சு செய்கிறார்கள். உணவுப் பொருள்களை வாங்குவதற்குள்ள பொருளாதார வசதியே கணிசமான அளவு மக்களுக்கு இல்லை என்று டாக்டர் கோபாலன் அவர்கள் கூறுகிறார்கள்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** டாக்டர் கோபாலன் அவர்களை மேற்கோள் காட்டியிருக்கிறார்கள். அவர்கள் கருத்துக்கு இணங்கத்தான் என் கருத்தைத் தெரிவித்தேன்.

**திரு. மு. கருணாநிதி :** அவைகளை வாங்குவதற்குள்ள சக்தி கணிசமான அளவு மக்களுக்கு இல்லை என்ற அந்த அடிப்படையின் காரணத்தினால்தான் இதைக் குறிப்பிடுகிறேனே தவிர, வேறு இல்லை. வாழ்க்கைத்தரம் உயர்ந்திருப்பதாக ஆளும் கட்சியினர் பேசுவது, ஆற்றிலே நடந்து செல்கிறவன், நீந்திச் செல்ல முடியாதவன், கழுத்தளவு தண்ணீரையும் கடந்து பிணமாக மிதந்து செல்வதைப் பார்த்து, அவனுக்கு மிதக்கும் சக்தி எவ்வளவு இருக்கிறது என்று கரையில் இருந்துகொண்டு கை கொட்டிச் சிரிப்பதுபோல் இருக்கிறது. கரையில் இருந்து கை கொட்டிச் சிரிப்பதுபோன்று—இன்று ஏழை மக்கள், பாட்டாளி மக்கள், சாமான்ய மக்கள் உணவுப் பொருள்களை வாங்குவதற்குத் திண்டாடிக்கொண்டிருக்கிற நேரத்தில் இப்படிப் பேசப்படுகிறது.



ஆளும் கட்சித் தரப்பிலிருந்து. இந்த வரவு செலவுத் திட்டத்தின் 6-வது பக்கத்தில், "விலைவாசி ஏற்றத்தை ஓரளவுக்குக் கட்டுப்படுத்தி, பொதுவாக நகர்ப்புற மக்களுக்கும் குறிப்பாக நிலையான வருவாயுடையவர்களுக்கும் சற்று ஆதரவு அளித்துள்ளோம்" என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். "வெள்ளைக் காக்காய் மல்லாக்காகப் பறக்கிறது" என்று கூறுவதுபோல் இருக்கிறது விலை வாசி கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது என்று கூறுகிற வாதம். இது எவ்வளவு உண்மைக்குப் புறம்பானது, உண்மைக்கு மாறானது என்பதை ஒன்றிரண்டு உதாரணங்கள் மூலம் இங்கு குறிப்பிட விரும்புகிறேன். வீட்டில் சமையலுக்கு வாங்கும் ஒன்றுடப் பொருள்களின் விலை எந்த அளவிற்கு ஏறியிருக்கிறது இந்த ஒரு வருட காலத்தில் என்பதைப் பார்ப்போம். 1965 மார்ச் மாதத்திற்கும் 1966 மார்ச் இன்றைய நாளுக்கும் இடையில் எந்த அளவிற்கு விலைவாசி ஏறியிருக்கிறது என்பதை சாதாரண உதாரணங்கள் மூலம் குறிப்பிட விரும்புகிறேன். துவரம் பருப்பின் விலை 1965 மார்ச் மாதத்தில் ஒரு லிட்டருக்கு விலை 1 ரூபாய், இன்றையதினம் அதன் விலை 1 ரூபாய் 20 காசு. உளுத்தம்பருப்பு 1965 மார்ச்சில் லிட்டருக்கு 90 காசு, இன்றையதினம் அதன் விலை ஒரு ரூபாய் ஐந்து காசு. பயத்தம்பருப்பு லிட்டருக்கு 1965 மார்ச்சில் விலை 90 காசு, இன்றையதினம் அதன் விலை ரூ. 1-20. 1965 மார்ச்சில் மிளகாய் கிலோ ரூ. 2-32. இன்றையதினம் ரூ. 3-75. தனியா கிலோ ரூ. 2-40, இன்றைய தினம் அதன் விலை 3 ரூபாய். சீயக்காய் 1965 மார்ச்சில் கிலோ ரூ. 1-50 என்றிருந்தது. இன்று ரூ. 1-80 ஆக இருக்கிறது. 1965 மார்ச்சில் புளி கிலோ ரூ. 1-52 ஆக இருந்தது, இன்றையதினம் அதன் விலை ரூ. 2-70. புலி கூட வாங்கி விடலாம் போல் இருக்கிறது. புளி வாங்குவது அவ்வளவு கஷ்டமாகியிருக்கிறது. நல்லெண்ணெய் ஒரு கிலோ ரூ. 2-95 ஆக இருந்தது. இன்றையதினம் ரூ. 3-90 ஆக இருக்கிறது. கடலையெண்ணெய் ரூ. 2-87 ஆக இருந்தது இன்று ரூ. 3-80 ஆக இருக்கிறது. தேங்காய் எண்ணெய் 1965 மார்ச்சில் ஒரு கிலோ 4 ரூபாய் ; இன்றைக்கு 6 ரூபாய் 20 காசு. இது தவிர இறைச்சியின் 9-30 a.m. விலையை எடுத்துக்கொண்டால், மாமிசம் சாப்பிடுகின்றவர்கள் கொடுக்கின்ற விலையை எடுத்துக்கொண்டால், 1965 மார்ச்சில் ஒரு கிலோவுக்கு 3 ரூபாய், இன்றைக்கு 4 ரூபாய். முட்டை மார்ச் 1965-ல் 20 காசாக இருந்தது. இப்போது 25 காசு. இந்த அளவில் 20 ரூபாய் 56 காசு எடுத்துக்கொண்டு 1965 மார்ச் திங்களில் ஒருவன் கடைக்குப் போனால் நான் குறிப்பிட்ட இத்தனை சாமான்களையும் வாங்குவதற்கு 28 ரூபாய் 60 காசு கொண்டு போனால் தான் வாங்கி வர முடியும். ஒரு சாதாரண குடும்பத்தை, ஆண்டவன் அருளால் அதிகமாகப் பிள்ளைகள் இல்லாத குடும்பத்தை, எடுத்துக் கொண்டால், ஒரு ஆணும் பெண்ணும் இருக்கின்ற குடும்பத்தை எடுத்துக்கொண்டால், நான் குறிப்பிட்ட இத்தனை சாமான்கள் வாங்குவதற்கு 28 ரூபாய் ஆகும். இது தவிர, அரிசி வாங்க வேண்டும். வீட்டு வாடகை கொடுக்கவேண்டும். மருத்துவச் செலவு பார்க்க வேண்டும். சலவைச் செலவு வேறு, பொழுதுபோக்கு செலவு வேறு, நன்மை தீமைகள், இவைகள் அத்தனையையும் கணக்

கிட்டால் ஒரு சாதாரண குடும்பம் இன்றைய தினம் நிம்மதியாக வாழ முடியுமா? ஏட்டில் இருக்கின்ற புள்ளிவிவரங்களை மட்டும் ஆட்சியாளர்கள் காட்டுகிறார்கள். இந்தப் புள்ளிவிவரங்கள் எல்லாம் நாட்டு மக்களுடைய பிரதிபலிப்பாகத் தோன்றுகின்றனவா? ஏட்டைப்பாருங்கள் என்று நீங்கள் கூறுகின்றீர்கள். ஆனால் நாட்டில் இருக்கின்ற நிலைமையைப் பாருங்கள் என்று நாங்கள் கேட்கிறோம். நாட்டில் இருக்கின்ற பெருவாரியான சாதாரண குடும்பங்களை எடுத்துக்கொண்டுப் பார்த்தால், எங்காவது நிம்மதியான நிலைமை இருக்கிறதா? எங்காவது பெருமூச்சு இல்லாத இடம் இருக்கிறதா? 100-க்கும் குறைவாக 75 ரூபாய், 60 ரூபாய் என்று சம்பாதிக்கின்ற ஒருவருடைய குடும்பத்தை எடுத்துக் கொண்டால், அவர் குடும்பத்தில் குழந்தை குட்டிகளே இல்லை என்று வைத்துக்கொண்டாலும், ஒரு ஆணும் பெண்ணும் சிக்கனமாகச் செலவு செய்தால்—நம்முடைய சர்க்காரைப்போல் செலவு செய்தால் ஒழுங்காக வாழ்க்கை நடத்த முடியாது—ஓரளவுக்காவது வாழ்க்கை நடத்த முடியுமா என்று பார்த்தால் அதுவே கேள்விக் குரிய விஷயம் தான். இந்த நிலையில் சாதாரண குடும்பம் இந்த நாட்டில் எப்படி நிம்மதியாக வாழ முடியும்? உணவுக் கஷ்டம். விலைவாசிகள் எல்லாம் விஷம் போல் ஏறிக்கொண்டே போகின்றன.

உணவு இல்லாமல்கூட வாழ்க்கையை நடத்த முடியும் என்று வைத்துக்கொண்டாலும், தாகத்திற்குத் தண்ணீராவது தாராளமாகக் கிடைக்கின்றதா இந்த தர்மவான்களுடைய ஆட்சியில் என்று தான் கேட்கத்தோன்றுகிறது. குடிதண்ணீர்ப் பிரச்னை வெகு பயங்கரமாகக் கொடிக் கட்டி பறந்து கொண்டிருக்கின்றது. சென்னை மாநகரத்திற்கு 200 மைல்களுக்கு மேல் தொலைவில் இருக்கின்ற காவேரியிலிருந்து சென்னைக்குக் குடிதண்ணீர் திட்டம் ஏன் வரவில்லை? இதற்கான முழுப் பொறுப்பையும் ஏற்றெடுக்க வேண்டியது அரசாங்கம் தான் என்றிருந்தும், சென்னை மாநகராட்சியின் நிர்வாகத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் உட்கார்ந்திருக்கின்ற காரணத்தால் அவர்கள் தான் பொறுப்பாளி என்பதைப் போல் கற்பனைக் காரணங்களை எல்லாம் காட்டிப் பேசுகின்ற இந்த நேரத்தில், மற்றவர்களும் நகராட்சியைப் பார்த்து, 'ஏன் இந்த காவேரித் திட்டம் கொண்டு வரப்படவில்லை' என்று கேட்கிறார்கள். இந்தக் கேள்வி நியாயமான கேள்வி தான். ஆனால் கேட்கப்படுகின்ற இடம் தான் தவறியிருக்கின்றது. இன்றைய தினம் நாங்களும் அவர்களும் சேர்ந்து அரசாங்கத்தைக் கேட்கின்றோம். வற்புறுத்துகின்றோம். 200 மைல் தொலைவில் இருக்கின்ற காவேரித் தண்ணீரைக் கொண்டு வரக்கூடிய திட்டத்தை நிறைவேற்றுவதன் மூலமாக நிச்சயமாக குடிதண்ணீர்ப் பிரச்னையை வெகுவாக சமாளிக்க முடியும். இது சென்னை மாநகரத்தைப் பொறுத்த அளவில் இருக்கின்ற பிரச்னை. ஆனால் திருச்சியில் காவேரியும் கொள்ளிடமும் வலம் வந்து கொண்டிருக்கின்றன. அப்படியிருந்தும் திருச்சி நகரத்தில் குடிதண்ணீருக்குத் தட்டுப்பாடு. நல்லவேளையாக அங்கே திராவிட முன்னேற்றக்





கழகத்தவர் நிர்வாகத்தில் இல்லை. காங்கிரஸ் கட்சிதான் நிர்வாகம் நடத்துகின்றது. பக்கத்தில் ஆறு போய்க்கொண்டிருக்கிறது. இருந்தும் திருச்சியில் தண்ணீர்த் தட்டுப்பாடு இருந்து கொண்டிருக்கிறது. திருச்சிக்கு அடுத்தாற்போல் இருக்கின்ற தஞ்சையில் 1961-ல் ஜனத்தொகை 1 லட்சத்து 10 ஆயிரம்; இன்றைய தினம் ஜனத்தொகை ஏறக்குறைய 1 லட்சத்து 25 ஆயிரம். இந்த அளவுக்குப் பெருகுகின்ற மக்கள் தொகைக்கு ஏற்ப தண்ணீர்த்திட்டம் எதுவும் இல்லை. அங்கேயுள்ள மக்களுக்குத் தேவையான தண்ணீர் என்று கணக்கிடப்படுவது தினம் ஒன்றுக்கு 15 காலன்; ஆனால் முந்தின காலத்தில் 10 காலன் தரப்பட்டது. இன்றையதினம் 6 காலன் கூட சரியாகத் தரப்படுவதில்லை. இந்த அளவில் குறைந்து கொண்டேயிருக்கின்ற நிலைமையில் அங்குள்ளவர்களுக்குப் போதுமான காலன் (தண்ணீர்) தான் கொடுக்கப்படுமா அல்லது அவர்களுக்கு காலன் தான் வந்துவிடுவானோ என்ற நிலையில் தஞ்சை நகரத்து மக்கள் ஆளாகிக் கொண்டிருக்கிறார்கள். வெண்ணாற்றுத் திட்டம் ஒன்று போடப்பட்டது. இப்போதுள்ள பள்ளி அக்ரகார வடிநிலை அருகில் 'பேவாரி' யின் வண்டலால் அடைக்கப்படுகிறது. இதுவும் கவனிக்கப்படவில்லை, குடிதண்ணீருக்காக இங்கே 30 லட்சம் ரூபாய்க்குப் போடப்பட்ட திட்டம் பெட்டியில் வைத்துப் பாதுகாக்கப்பட்டு பூஜை செய்யப்பட்டு வருகிறது. இந்தத் திட்டம் உடனடியாக ஏற்றுக்கொள்ளப்படவேண்டும் என்று கோரியும், வேண்டுகோள் விடுத்தும்—அதுவும் அங்கே நடப்பது காங்கிரஸ் கட்சியினுடைய நகர சபை தான்—அவர்களே அரசாங்கத்திற்கு எடுத்துச்சொல்லியும் இன்றையதினம் வரையில் அது நிறைவேற்றப்படவில்லை. தஞ்சை என்று சொல்லும்போது, நீர் வளம், நிலவளம் உள்ள நாடு, சோழ வள நாடு என்று கதை எழுதுபவர்கள் தஞ்சையைப்பற்றி எழுதும்போது ஆரம்பிப்பார்கள். அத்தகைய தஞ்சை மாவட்டத்தின் தலைநகரத்தில் குடிதண்ணீருக்கு மக்கள் தவித்துக்கொண்டிருக்கிறார்கள். இந்த மன்றத்தில் கேள்வி மூலமாக—கோவை நகரத்தில் எந்த அளவிற்கு குடிநீர்ப்பிரச்னை பயங்கரமாக இருக்கிறது என்பதை எடுத்துச்சொன்னேன். அதற்கு சிறுவாணித்திட்டம் நடைபெறாத காரணத்தால் இப்பிரச்னை இருந்து கொண்டிருக்கிறது என்று சொல்லப்பட்டது. இந்த சிறுவாணித்திட்டம் என்பது தமிழ்நாட்டின் எல்லையிலிருந்து இரண்டு ஃபர்லாங் தூரத்தில் இருக்கிறது. கோவை நகரத்திலிருந்து 22 மைல் தூரத்தில் இருக்கிறது. இந்தப் பகுதி இருக்குமிடம் கேரளாவோடு சேர்ந்திருக்கிறது. கேரளாவின் உதவியைப்பெற்று இந்த சிறுவாணித் திட்டத்தை கோவை நகரத்திற்கு நிறைவேற்றிக்கொடுக்கவேண்டும். இதை நமக்கு சாதகமாக ஆக்கிக்கொள்ள முடியாத காரணத்தால், கோவை நகரத்து மக்கள் இன்றையதினம் குடிதண்ணீருக்காக தவித்துக் கொண்டிருக்கிறார்கள். கோவை நகரத்திற்கு முன்பு 50 லட்சம் காலன் தண்ணீர் வழங்கப்பட்டது. இப்போது 35 லட்சம் காலன் தண்ணீர்தான் வழங்கப்படுகிறது. இந்தத் திட்டத்தை நிறைவேற்றினால் ஒன்றரைக் கோடி காலன் தண்ணீர் கிடைக்கும் என்று

அறுதியிட்டுக் கூறியிருக்கிறார்கள். இந்த சிறுவாணி அணையிலிருந்து கேரளாவுக்கு தண்ணீர் பயன்படவும் இல்லை. ஆகவே, இதை நாம் பயன்படுத்த முழு முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டும்.

இப்போதுள்ள தண்ணீர் கஷ்டத்தைப்போக்குவதற்காக துளைக் கிணறுகள் போடுவதாக சொல்லப்பட்டது. பல்வேறு இடங்களிலும் துளைக்கிணறுகள் போடப் படுவதாக சொல்கிறார்கள் அதிலும் கட்சி வேறுபாடுகள் வருகின்றன. போடப்படுகின்ற இடங்களில் சிலவற்றில் கட்சி மாச்சரியங்கள் காரணமாக நிறுத்தப்படுகின்றன. சில இடங்களில் போடப்படுகின்ற துளைக் கிணறுகளில் தண்ணீர் இல்லை. தண்ணீர் கிடைக்கின்ற இடத்தில் நீர்த் தொட்டிகள் இல்லை. நீர்த்தொட்டிகள் இருக்கின்ற இடத்தில் பம்ப்செட் வைப்பதற்கு மின்சாரம் கொடுக்க போர்டு முன் வருவதில்லை. அங்கே ஒரு என்சினியரும் கிடையாது. மூன்று மாத காலமாக யாரும் இதுவரை நியமிக்கப்படவில்லை என்றும் அதற்குக் கட்சி அரசியல்தான் காரணம் என்றும், சில பெரியவர்களுடைய தலையீடு இருப்பதாகவும் கூறுகிறார்கள். அது உண்மையாக இருந்தால் அதற்குத் தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்—இந்த நிலையில், கோவை நகரத்தில் லாரிகள் மூலமாகக் கொடுக்கப்படுகின்ற தண்ணீருக்கு—அந்தந்த வட்டாரத்தில் இருக்கின்ற கவுன்ஸிலர் ரேஷன் கார்டு முறை வைத்து அதிகார பூர்வமாகக் கையெழுத்திட்டு, ஒரு குடம், இரண்டு குடம் என்கிற அளவுக்கு இன்றையதினம் கோவை நகரத்தில் குடி தண்ணீர் வழங்கப்படுகிறது.

உணவில்லை, உடையில்லை, குடிக்கத் தண்ணீர் இல்லை. இத்தனையும் இல்லையென்றால் இந்த வரவு செலவுத் திட்டத்தில் என்னதான் இருக்கிறது? இதைப் பார்க்கின்ற நேரத்தில் எனக்கு தெனாலிராமன் கதை தான் ஞாபகத்திற்கு வருகிறது. தெனாலிராமனிடத்தில் மன்னர் ஒரு வீட்டைக் கொடுத்து, அதில் சித்திரம் தீட்டி வைக்கவேண்டும் என்று அதற்காகும் பொருளையும் கொடுத்தார். அவர் கொடுத்த பொற்கிழியையும் பெற்றுக் கொண்டு, வீட்டில் வந்து நன்றாகத் தூங்கிவிட்டு, மன்னர் ஓவியங்களைப் பார்க்க வருகின்ற ஒரு மணி நேரத்திற்கு முன்னால் எழுந்திருந்து—என்ன செய்வது, மன்னர் வந்துவிடுவாரோ—என்ன பதில் சொல்வது—என்ற பயத்தின் காரணமாக—ஒரு துடைப்பத்தை எடுத்து, சாணத்திலே துவைத்து, அந்த வீட்டின் சுவரிலே அங்கும் இங்குமாக நாலைந்து கோடுகளைப் போட்டு வைத்தான். மன்னர் குறிப்பிட்டபடி வந்து, எங்கே ஓவியம் என்று கேட்டபோது, அங்கேயுள்ள கோடுகளைக் காட்டினான் தெனாலிராமன். இது என்ன என்று மன்னர் கேட்டதற்கு 'இது குதிரையின் வால்' என்று கூறினான். "வால் இருக்கிறதே, குதிரை எங்கே?" என்று மன்னர் கேட்டதற்கு, "குதிரை சுவருக்கு பின்னால் இருக்கிறது" என்று குறிப்பிட்டானாம். அதைப்போல், வரவு செலவு திட்டத்தில் மக்களுக்காகப் போடப்பட்டிருக்கும் திட்டம் எங்கேயிருக்கிறது என்று கேட்டால் வாலைத்தான் காட்டுகிறார்கள். இது தான் திட்டம் என்கிறார்கள். திட்டத்தின்





மூலமாகக் கிடைக்கும் வாழ்வு எங்கேயிருக்கிறது என்று கேட்டால் மறுபக்கத்தில் இருக்கிறது என்று சொல்கிறார்கள். இந்த முறையில் தான் வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது. திட்டம் திட்டம் என்று பேசப்படுகிறதே ஒழிய. திட்டமிட்ட பொருளாதாரம் என்று வலியுறுத்தப்பட்டு பேசப்படுகிறதே தவிர, தமிழ்நாட்டுக்காக உருப்படியாக எந்தத் திட்டத்தைப் போராடிப் பெற்றிருக்கிறீர்கள்? நேற்றுத்தான் முதன் முதலாக நம்முடைய அமைச்சர் அவர்கள் நமது போர்க் குரலை சென்னை மாநிலத்தில் கிளப்பியிருக்கிறார்கள். வெகு வேடிக்கையாகவும் உலக அதிசயங்களில் ஒன்றாகவும் இருக்கிறது. நமது தொழில் அமைச்சர் திரு. வெங்கட்டராமன் அவர்கள் 'மத்திய சர்க்காரின் குறுகிய புத்தி' என்ற சொற்களைக் கூட குறிப்பிட்டிருக்கிறார்கள். எப்போதும் கனிவான வார்த்தைகளையே பேசுகின்றவர், அவருக்குக் கோபம் என்பதே வராது. அப்படிப்பட்ட நமது தொழில் அமைச்சர் அவர்கள் அதிலும் நமது முதலமைச்சர் அவர்கள் அருகாமையில் இருக்கக் கூடிய சூழ்நிலையில், நமக்குப் பயன்படுகிற திட்டங்கள் நமக்குத் தரப்படவில்லை என்று கோபமாகச் சொல்லியிருக்கிறார்கள் என்றால் அதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

தூத்துக்குடி அனல் மின்சாரத் திட்டம் ஏறத்தாழ 1¾ ஆண்டு காலத்திற்கு முன்பு ஏற்கப்பட்டு விட்டதாக அமைச்சர் அவர்கள் பத்திரிக்கையாளர்களிடத்தில் கூறி ஆனந்தப்பட்டுக் கொண்டார். 1¾ ஆண்டு காலத்திற்கு முன் ஏற்றுக்கொள்ளப்பட்ட தூத்துக்குடித் திட்டத்தை இன்னும் மத்திய சர்க்கார் அங்கீகரித்து உடனடியாக நடவடிக்கை எடுக்கத் தயாராக இல்லாமல் இருப்பது வருந்தத் தக்கது என்று குறிப்பிட்டார்கள். அதற்கு அடுத்த கிழமை என்று கருதுகிறேன், அமைச்சர் கே. எல். ராவ் அவர்கள், பாராளுமன்றத்தில் கேட்கப்பட்ட கேள்வி ஒன்றுக்கு, "தூத்துக்குடியாவது, ஒன்றாவது? எப்போது அதற்கு அங்கீகாரம் அளித்தோம்? அதெல்லாம் கிடையாது" என்று கை விரித்தார்கள். அப்படிக் கை விரித்த செய்தி அறிந்ததும் அமைச்சர் வெங்கட்டராமன் அவர்கள் பத்திரிகையாளர்களை அழைத்தோ அல்லது அவர்களே வந்தோ—எப்படி இருந்தாலும் தவறு இல்லை—அவர்களிடத்தில் குறிப்பிட்டார்கள். "இதோ இருக்கிறது கே. எல். ராவ் அவர்களின் கடிதம்; இந்தத் திட்டத்திற்கு அமைச்சர் திரு. டி. டி. கே. யும். திட்டக் கமிஷன் தலைவர் திரு. அசோக் மேத்தா அவர்களும், இதே திரு. கே. எல். ராவ் அவர்களும், அனைவரும் ஒன்றாக உட்கார்ந்து, தூத்துக்குடி அனல் மின்சாரத் திட்டம் அங்கீகரிக்கப்பட்டு, நிறைவேற்றுவது என்பது முடிவு எடுக்கப்பட்டு, அதிகார பூர்வமாகத் தமிழக அமைச்சர் அவைக்கு, குறிப்பாக அவருக்கு, கடிதம் மூலம் தெரிவித்திருக்கிறார்கள்" என்று கடிதத்தையும் பத்திரிக்கையாளர்களிடத்தில் எடுத்துக் காட்டினார்கள். இதற்குப் பிறகும், இவ்வளவு நடந்த பிறகும், தூத்துக்குடி அனல் மின்சாரத் திட்டம் சந்தேகத்தில் இருக்கிறது என்றால். என்ன காரணம்? தமிழ் நாட்டு அரசாங்கம் தட்டிக் கேட்பதில்லை. தமிழ்நாட்டு அரசாங்கம்

[திரு. மு. கருணாநிதி] [4th March 1966

தயவை எதிர்பார்ப்பது போல் போகிறது. நாமும் அவர்களுக்கு வரி கொடுக்கிறோம். ஆகவே அவர்களிடத்தில் அதிகாரமாகக் கேட்கக் கூடிய குரலைப் பெறுவதில் தவறு இல்லை என்ற உணர்ச்சி தமிழக அரசாங்கத்திற்கு இல்லாமல் போய் விட்டது. அவர்கள் எள் என்று கேட்டால் எண்ணெய் கொடுக்க மாட்டார்கள். எண்ணெய் என்று கேட்டால் தான் எள்ளாவது கொடுப்பார்கள். நீங்கள் கேட்கப் போகும் போதே 'எள்ளாவது கொடுங்கள்' என்று கேட்கிறீர்கள். 'எள் இல்லை' என்று சொன்னால், 'இல்லாவிட்டால் பரவாயில்லை' என்று கூறுகிறீர்கள். எள் கேட்டு கொள் கூடப் பெற முடியாமல் மாநில அரசு சங்கடத்தில் சிக்கிக்கொண்டு, எப்போதாவது இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் கோப தாபங்களை வெளியிடும் நிலைக்குத் தங்களை ஆக்கிக் கொண்டிருக்கிறார்கள்.

சேலம் இரும்புத் தொழிற்சாலைக்கு 10 ஆண்டு கால வரலாறு உண்டு. 1956-57-ம் ஆண்டிலிருந்து சேலம் இரும்புத் தொழிற்சாலை பற்றிப் பேசப்படுகிறது. ஆனால் இது வரையில் என்ன உருவான பலன் ஏற்பட்டிருக்கிறது? ஆராய்ச்சிகள், ஆராய்ச்சிகள், ஆராய்ச்சிகள்; சுற்றுப்பயணங்கள், சுற்றுப்பயணங்கள்; அங்கிருந்து வருகிறார்கள், இங்கிருந்து செல்லுகிறார்கள். இதைத் தவிர என்ன உருவான பலன் கிடைத்திருக்கிறது? இதன் வரலாற்றுச் சுருக்கத்தை இந்தச் சபையிலே ஒரு முறை ஞாபகப் படுத்துகிறேன்.

1957-ம் ஆண்டு, ஜூன் திங்கள், 29-ம் நாள். இங்கு நிதி அமைச்சராக வீற்றிருந்த திரு. சுப்பிரமணியம் அவர்கள் ஒன்றைக் குறிப்பிடுகிறார். "தேசீயத் தொழில் அபிவிருத்திக் கார்ப்பரேஷன், சேலம் மூலக் கனிப்பொருள்களைக் கொண்டு இரும்பு உருக்கும் ஒரு தொழிற்சாலையை நிறுவும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஜம்ஷெட்பூரில் இதற்கு வேண்டிய பரிசீலனைகள் நடைபெற்று வருகின்றன."—இது 1957-ம் ஆண்டு, ஜூன் மாதம் திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் இங்கே குறிப்பிட்டது. ஜூலை, 1957-ல் அவர் குறிப்பிடுகிறார்—"நமது ராஜ்யத்தில் நிறைய இரும்பு உற்பத்தி செய்தால்தான் பெரும் தொழில்களை ஆரம்பிக்க முடியும். சேலத்தில் இரும்புக் கனி இருக்கிறது. நிலக்கரி இல்லாததால், அந்த இரும்புக் கனியைக் கொண்டு ஆரம்பிக்க இயலாது என்று பிரிட்டிஷ் அரசின் காலத்தில் கூறப்பட்டது. இப்போது நெய்வேலியில் பழுப்பு நிலக்கரி கிடைக்கிறது. அடுத்த படியாக இரும்புத் தொழிற்சாலை வரும். வந்தே தீரும். சேலத்திலே இரும்புத் தொழிற்சாலை ஏற்படுத்தும் விஷயத்திலே, 'வடக்கு தடையாக இருப்பதால் நாங்கள் வடக்கிற்கு 'ஆமாம்' போடுகிறோம்' என்பதில்லை. சேலத்தில் கிடைக்கும் இரும்பு எப்படிப் பட்டது? அதைக் கொண்டு எவ்வகைத் தொழில் தொடங்கலாம்? என்று ஜம்ஷெட்பூரில் ஆராய்ச்சிகள் நடக்கின்றன."—இதையும் திரு. சுப்பிரமணியம் சொல்கிறார். அடுத்து, 17—3—1960-ல் இங்கு வீற்றிருந்த எங்கள் தலைவர் அண்ணா அவர்கள், நிதி அமைச்சரைப் பார்த்து ஒரு கேள்வி கேட்கிறார்—"சேலம் இரும்புத் தொழிற்சாலை மூன்றாவது திட்டத்தில் வந்து விடுமா?" என்று. அதற்கு திரு. சுப்பிரமணியம் பதில் சொல்லு



4th March 1966] [திரு. மு. கருணாநிதி]

கிறார்—"நெய்வேலி நிலக்கரியைக் கொண்டு இந்த இரும்பைப் பயன்படுத்த முடியுமா என்ற சோதனை வெற்றி பெற்றால், இரும்புத் தொழிற்சாலை மூன்றாவது திட்டத்தில் வந்து விடும்." என்று. பிறகு "புள்ளிவிவரங்களை வைத்துப் பார்க்கும்போது, ஓரளவு குறைவான விலையில் இரும்பு உற்பத்தி செய்ய முடியும் என்ற நம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது, லாபரட்டரி டெஸ்ட் சாதகமாக முடிந்திருக்கிறது, பைலட் டெஸ்டுக்கு—முன்னோடிச் சோதனைக்கு 2,000 டன் நிலக்கரி வேண்டியிருக்கிறது" என்ற அளவோடு 1961-ம் ஆண்டு நிதி அமைச்சராக இருந்த திரு. சுப்பிரமணியம் தன் பதிலை நிறுத்திக் கொண்டார். 7—7—1962-ல் அமைச்சர் திரு. வெங்கட்டராமனிடத்தில் நான் எழுப்பிய கேள்வி—"சேலத்தில் இரும்புத் தொழிற்சாலை எந்த நிலையில் உள்ளது? இதுபற்றி நிபுணர்கள் ஆராய்ச்சி முடிவு என்ன?" என்பதாகும். "நெய்வேலி லிக்னைட், சேலம் இரும்புக் கனி இரண்டுக்குமான முன்னோடிச் சோதனை (பைலட் டெஸ்ட்) கிழக்கு ஜெர்மனியில் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. லாபரட்டரி டைரக்டர் அவர்கள் அது பற்றிய அபிப்பிராயத்தைக் கூறும்போது, அவை வெற்றிகரமாக அமையும் என்று நம்பிக்கை தெரிவித்திருக்கிறார்" என்று இங்கு எல்லோரும் நம்பிக்கை பெறுகிற அளவுக்கு அந்தச் செய்தியை மகிழ்ச்சியோடு அமைச்சர் வெங்கட்டராமன் சொன்னார்கள். 22—1—1964-ல் முதல் அமைச்சர் பக்தவத்சலம் அவர்கள் ஒரு கேள்விக்குப் பதில் சொல்லும் நேரத்தில் "இந்தத் தொழிற்சாலைக்கு எவ்வளவு தூரம் நெய்வேலி நிலக்கரியைப் பயன்படுத்துவது, எவ்வாறு தொடங்குவது, என்றெல்லாம் இப்போது அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது. இது சாத்தியப்படும் என்று நன்றாகப் புலப்படுகிறது" என்று தெரிவித்தார்கள். 1965-ம் ஆண்டு, ஜனவரித் திங்கள் 23-ம் நாள், அமைச்சர் வெங்கட்டராமன் அவர்கள் ஒரு கேள்விக்குப் பதில் அளிக்கும் போது, "மத்திய அரசு சேலம் உருக்காலையை ஏற்று நடத்தத் தவறினால், ராஜ்ய சர்க்காரே ஏற்று நடத்தும்." என்று கூறியிருக்கிறார். கனம் அங்கத்தினர் திரு. கிருஷ்ணமூர்த்தி கேட்ட கேள்விக்கு, வடக்கே இருக்கிற ஆளும் கட்சி அனுகூலமாக இருந்து இதை நிறைவேற்றுவிட்டாலும், அதற்கு வேண்டிய முதலை நாங்களே உற்பத்தி செய்து கொள்வோம் என்று நம்பிக்கையோடு அமைச்சர் அளித்த பதில் பசுமையாக இன்னும் ஞாபகத்தில் இருக்கிறது. "அப்படியானால் நில ஆர்ஜிதம் செய்வதற்காக ஒதுக்கப்பட்ட நிதி எல்லாம் செலவழிக்கப்பட்டு வருகிறதா? நில ஆர்ஜிதம் செய்வதற்காக என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன?" என்று கேட்கப்பட்ட கேள்விக்கு, அமைச்சர் அவர்கள் "நில ஆர்ஜிதம் செய்வதற்கான எல்லாவிதமான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன; நில ஆர்ஜிதம் செய்வது என்றால் குறைந்தது 9, 10 மாதங்கள் ஆகும்" என்று கூறினார்கள். கவர்னர் உரையிலே சேலம் உருக்காலை வரவில்லை என்று வருத்தப்பட்டபோது, முதல் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள்; "கவர்னர் உரையில் சேலம் உருக்காலை பற்றிக் கூறப்படவில்லை என்று கருத்தறிவித்தார்கள். ஏன் மறுபடியும் கூறவில்லை என்றால், ஒரு முறை

[திரு. மு. கருணாநிதி] [4th March 1966

கருத்து தெரிவித்தால், அதில் ஏதாவது மாறுதல் இருந்தால்தான் வருகிற ஆண்டில் நிகழ்த்தப்படுகிற உரையில் குறிப்பிடவேண்டும். எப்படியும் சேலம் உருக்குத் தொழிற்சாலை வந்தே தீரும். நாம் முன்பு தெரிவித்தது போல இது சிறிய திட்டமாக இருக்கும். இது நிறைவேறக்கூடிய திட்டமென்று ஜப்பான் நிபுணர்கள் பூர்வாங்கமாக ஒத்துக்கொண்டு போயிருக்கிறார்கள். இன்னும் அவர்களது அறிக்கை வரவில்லை" என்று, கடந்த 5—2—1966-ல் கனம் முதல் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஏதாவது மாற்றம் இருந்தால் தான் அதை நாங்கள் இந்த அறிக்கைகளிலே குறிப்பிடவேண்டும் என்று சொல்லியிருக்கிறார். இப்போது வரவு-செலவுத் திட்டத்தில் குறிப்பிட்டிருக்கிறார். இப்போது எங்களுக்கெல்லாம் பயம் வந்து விட்டது. 'மாற்றம் இருந்தால்தான் குறிப்பிடவேண்டும்' என்று சொன்னார்களே, இப்போது குறிப்பிட்டிருக்கிறார்களே, திட்டம் என்ன ஆகுமோ? என்ன நிலைமையோ? என்ற பயம் ஏற்பட்டு விட்டது. அதைக் குறிப்பிட்டு, என்ன முடிக்கிறார்கள்? "நெய்வேலி-சேலம் உருக்காலைத் திட்டம். தொழில் நுட்ப முறையிலும் பொருளாதார வகையிலும், நடைமுறைக்கு ஏற்ற ஒன்றே என்பதை மெஸர்ஸ் தஸ்தூர் கம்பெனி தயாரித்த விரிவான திட்ட அறிக்கை ஏற்கனவே உறுதிப்படுத்தியுள்ளது. ஜப்பானிய ஆலோசனை நிலையை ஆய்வுக் குழுவினரின் அறிக்கை விரைவில் இறுதி செய்யப்படுமென எதிர்பார்க்கிறோம். அதன் பின்னர் கூடிய விரைவில் இத்திட்டம் மேற்கொள்ளப்படும்" என்று பட்ஜெட் உரையிலே, வரவு-செலவுத் திட்ட உரையிலே அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்தப் பத்து ஆண்டு காலம்—பெரு மூச்சே கூட வருகிறது—இந்தச் சேலம் உருக்காலைக்கான ஆராய்ச்சி முடிவதற்குள்ளாக, ரஷ்யர்களும், அமெரிக்கர்களும் வான வெளியில் ஆராய்ச்சி நடத்தி, 'விண்வெளியில் செல்லலாம்; விண்வெளியில் சென்று ஒருவனோடு ஒருவன் சந்தித்துப் பேசலாம்' என்று உலகுக்குக் காட்டி, விண்வெளி ஆராய்ச்சியே வெற்றி பெற்று விட்டது; ஆனால், சேலம் உருக்குத் தொழிற்சாலை ஆராய்ச்சி இன்னும் முற்றுப் பெறவில்லை. இப்போது அமைச்சர் அவர்கள் ஜப்பான் சென்று வந்திருக்கிறார்—சென்ற உலக யுத்தமும் ஜப்பானில்தான் முடிவு அடைந்தது—அதே போல சேலத்தில் இரும்பு உருக்குத் தொழிற்சாலை போராட்டமும் ஜப்பானுடன் முடிவுறவேண்டுமென்று என்னுடைய வாழ்த்துக்களை அமைச்சருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். திறமை உள்ள அமைச்சர் திரு. வெங்கட்டராமன் இருக்கும்போது இந்த நிலை. அவரும் வடக்கே போவதாகக் கேள்விப்படுகிறோம். அவரும் போய் விட்டால் சேலம் தடை படாதா என்ற கேள்வி எழுகிறது. நம்மை விட அக்கறை உள்ள திராவிட முன்னேற்றக் கழகத்தினர் அடுத்த தடவை வந்து விடுவார்கள், அவர்கள் பார்த்துக்கொள்வார்கள் என்ற நம்பிக்கையில் போகலாம். ஒருவேளை நீங்களே பெரும்பான்மை வருவது என்றால், நீங்களே இருந்து முடித்துக் கொடுத்து விட்டு, வடக்கோ, தெற்கோ, கிழக்கோ, மேற்கோ எங்கே வேண்டுமானாலும் செல்லுங்கள்: நீங்களே பெரும்பான்மையாக வருவதாக இருந்தால், நீங்கள் இருந்து முடிக்கவேண்டுமென்று குறிப்பிட விரும்புகிறேன். இதற்காகப் போராடவில்லை. இதை அக்



4th March 1966] [திரு. மு. கருணாநிதி]

கறையோடு எடுத்துச் சொல்லவில்லை; நம் திறமைகள் இதற்காகப் பயன்படுத்தப்படவில்லை; நான் நிலைமைகளைச் சுட்டிக் காட்டியது போல, 10 ஆண்டு காலமாக இருக்கிற பரிதாபச் சரித்திரத்தை மத்திய சர்க்காருக்கு எடுத்துச் சொல்லித் தமிழகம் கொதிப்பு அடைந்திருக்கிறது என்று குறிப்பிட்டுக் கூறவேண்டும். மறைந்த லால் பகதூரிடம் முதலமைச்சர் அவர்கள் இதுபற்றி அழுத்தம் திருத்தமாகச் சொன்னார்கள் என்ற செய்தி பார்த்தேன். அந்த அழுத்தந்திருத்தம் மேலும் மேலும் தொடர்ந்து, சேலம் உருக்காலை தமிழகத்தில் வர வேண்டும் என்ற அளவிற்கு அமைய வேண்டும். அது கூட; ஐந்து லட்சம் டன்னா? இரண்டரை லட்சம் டன்னா? என்ற இந்த விவகாரங்கள் எல்லாம் இருப்பதாகத் தொழில் அமைச்சர் திரு. வெங்கட்டராமன் அவர்கள் பேசி இருப்பதாகப் பத்திரிகையிலே படித்துப் பார்த்தோம். இந்த விவகாரங்களெல்லாம் விரைவிலே தீர்க்கப்பட்டு; சேலம் இரும்புத் தொழிற்சாலை வருவதற்கான அந்தக் காரியத்திலே ஈடுபட வேண்டும். தமிழ் நாட்டின் குரலை அங்கே சரிவர எடுத்து ஒலிக்கவில்லை என்பதற்கு ஓரே ஒரு உதாரணம் கூறி விரைவிலே என்னுடைய உரையை முடித்து விடலாம் என்று கருதுகிறேன், கனம் சபாநாயகர் அவர்களுடைய கண்களைப் பார்த்த அளவில்.

விவசாயம், பாசனம், தொழில், போக்குவரத்து, கல்வி இவைகளில் தனிச் சலுகை பெறவேண்டும்; தனித் திட்டம் வகுக்க வேண்டும் என்ற அளவில் சில பகுதிகளைப் பின் தங்கிய பிரதேசங்களாகப் பிரகடனப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கை பொதுவாக இந்தியத் துணைக் கண்டத்தில் பல மாநிலங்களிலிருந்து வருகின்றன. அப்படிப்பட்ட கோரிக்கை, தமிழகத்தைப் பொறுத்த வரையில், புதுக்கோட்டை, கிழக்கு இராமநாதபுரம், அறந்தாங்கி இப்படிப்பட்ட பகுதிகளைப் பின்தங்கிய பிரதேசமாக அறிவிக்க வேண்டும் என்ற கோரிக்கை, இருந்து வருகிறது. இந்தக் கோரிக்கையை வைத்து, இடதுசாரிக் கம்யூனிஸ்டு கட்சித் தலைவர்களில் ஒருவராக இருக்கிற, பாராளுமன்ற உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் பாராளுமன்றத்தில் ஒரு கேள்வி கேட்டிருக்கிறார். "தமிழ்நாட்டில் பின்தங்கிய பிரதேசங்கள் என்று புதுக்கோட்டை, கிழகு இராமநாதபுரம், அறந்தாங்கி ஆகிய இந்தப் பகுதிகள் நிர்ணயிக்கப்படுமா?" என்று கேட்டிருக்கிறார். அதற்கு அப்பொழுது பதில் சொன்ன திட்ட மந்திரி திரு. பகத் அவர்கள், "உத்தரப் பிரதேசத்தைப் பொறுத்த வரையில், இதுபோன்று சில இடங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றன. நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் அந்தப் பகுதிகளுக்குத் தனிச் சலுகை அளிக்கவேண்டும் என்பதற்காகத் தனியாக பத்து கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது" என்று அறிவித்தார்கள். அதைத் தொடர்ந்து 4—11—1965 அன்று,—கடந்த இரண்டு மூன்று மாதங்களுக்கு முன்பு—அதே உறுப்பினர் ஒரு கேள்வி கேட்டார்கள். ஒருக்கால் அவர் சிறையிலிருந்து அனுப்பினாரோ என்னவோ தெரியாது. அந்தக் கேள்வியில், "ஏன் தமிழ்நாட்டுப் பகுதிகள் அதில் காணப்படவில்லை?" என்று கேட்டிருக்கிறார். அதற்குப் பதிலளித்த திரு. பகத் அவர்கள், "உத்தரப் பிரதேச சர்க்கார், அங்குள்ள பின்

[திரு. மு. கருணாநிதி] [4th March 1966

தங்கிய பகுதிகளைக் குறித்து எனக்குக் கடிதம் எழுதினார்கள், ஆகவே, அதுபற்றி யோசிக்கப்பட்டு, அவைகளுக்காகப் பத்து கோடி ரூபாய் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஒதுக்கியிருக்கிறோம்; ஆனால், தமிழ்நாட்டு சர்க்கார் அது குறித்து எங்களுக்கு எந்தவிதமான தகவலும் தரவில்லை, தந்தால் கவனிப்போம்" என்று குறிப்பிட்டிருக்கிறார். ஆகவே, சொல்லவேண்டிய விஷயங்கள் ஒழுங்காக, உரிய நேரத்தில், மத்திய சர்க்காருக்குச் சொல்லப்படவில்லை என்பதற்கு இது ஒரு தக்க உதாரணமாகும். அல்லது, சொல்லியிருந்து, இந்த இடைக்காலத்தில், இரண்டு திங்களுக்குள் ஏதாவது நடந்திருந்தால் மகிழ்ச்சி அடைகிறேன். சொல்லப்படாமலிருந்தால் சொல்லவேண்டும் என்று நான் நம்முடைய முதல் அமைச்சர் அவர்களையும் மற்ற அமைச்சர்களையும் இந்த மன்றத்தின் சார்பாகக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

இந்த நிதி நிலை அறிக்கையில் பல இடங்களில் இழைந்தோடியிருக்கும் ஒன்று, சிக்கனம். சிக்கனத்தைக் கடைப்பிடிக்க வேண்டும், திறமையைக் கடைப்பிடிக்க வேண்டும் என்றெல்லாம் குறிப்பிட்டிருக்கிறார்கள். நான் அதைப்பற்றி விளக்கமாக எடுத்துச் சொல்லவேண்டும் என்று பல குறிப்புகளை வைத்திருந்தாலும், நேரம் இல்லாத காரணத்தால் சுருக்கமாகச் சொல்கிறேன். நம்முடைய தணிக்கைக் குழுவின் அறிக்கையைப் படித்துப் பார்த்தால் எந்த அளவிற்குச் சிக்கனம் பாழ்பட்டிருக்கிறது என்று நன்றாகத் தெரியும். நான் அவைகளில் சிலவற்றை மாத்திரம் சொல்ல விரும்புகிறேன். குறைந்த சம்பளம் வாங்கும் அரசாங்க ஊழியர்களுக்காக வாடகை வீடு கட்டித் தரும் திட்டம், 1960-61-ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது. ஆகும் செலவைத் தருவதாக ஒப்புக்கொண்டு வீட்டு வசதி போர்டிடம் இந்த அரசு பொறுப்பை ஒப்படைத்தது. தேவையான தொகையை லைஃப் இன்ஷ்யூரன்ஸ் கார்ப்பரேஷனிடத்தில் கடன் வாங்கி, வீட்டு வசதி போர்டுக்குக் கொடுத்தது. அதன் மூலம் அந்தத் தொகை உடனடியாகச் செலவழிக்கப்படாமல், அதிலே பாதிப் பணம் தான் செலவழிக்கப்பட்டது, 1964-ம் ஆண்டு வரையில் அந்த வேலை நடக்காமலிருந்து, அந்த வீட்டு வசதி போர்டு காரியமாற்றாமல் இருந்து இருக்கிறது. காரியம் ஆற்றுகிற சமயத்தில் பணத்தைப் பெற்றுத் தருகிற அந்த நோக்கம் அரசியலில் உள்ள இலாக்காக்களுக்கு இல்லாததால், வட்டியாக மாத்திரம் 8 லட்சத்து 24 ஆயிரம் ரூபாயைத் தந்திருக்கிறது. எட்டு லட்ச ரூபாய் என்பது சாதாரணத் தொகை அல்ல; நான் சொன்ன தஞ்சாவூர் குடி தண்ணீர்த் திட்டத்திற்குத் தேவையான முப்பது லட்ச ரூபாயில் ஒரு பகுதியை அடைக்கக்கூடிய தொகையாகும். ஆகவே, இப்படியெல்லாம் பணம் வீண் விரயம் செய்யப்பட்ட பிறகு சிக்கனத்தைப்பற்றிப் பேசுவதில் அர்த்தம் இல்லை.

விழுப்புரம் பகுதியில் விமானம் மூலமாகப் பூச்சிநாசினி தெளிப்பதற்காக ஒரு ஏற்பாடு செய்யப்பட்டு, பூர்வாங்க வேலைகளுக்காகப் பத்தாயிரம் ரூபாய் செலவிட்டுவிட்டார்கள். பூர்வாங்க வேலைக்காகப் பத்தாயிரம் ரூபாய் செலவு செய்துவிட்டபிறகு, திட்டம் கைவிடப்பட்டது என்று அறிவித்தார்கள். ஏனென்றால், அதற்கான விமானத்தை இந்திய சர்க்கார் அனுப்பத் தயாராக இல்லை, விமானம் வருமா, வாராதா என்று தெரிந்துகொண்டு அந்தப் பூர்வாங்க வேலைகளுக்குப் பத்தாயிரம் ரூபாயைச் செலவிடக் கூடாதா?



4th March 1966] [திரு. மு. கருணாநிதி]

அடுத்து, கேந்திர கிராமத் திட்டத்தைப் பொறுத்த வரையில், 1961 முதல் 1964 வரை இந்தத் தமிழக அரசு 15 கேந்திர கிராமங்களைத் திறந்தது. கேந்திர கிராம ஊழியர் படி, பொலிக்காளை பராமரிப்பு, அதற்கான செலவு 1964 முடிய, 18 லட்சத்து 38 ஆயிரம் ரூபாய். கால்நடைகளைச் செயற்கை கருத்தரித்தல் முறையில் அபிவிருத்தி செய்வது அந்தக் கேந்திர கிராமத் திட்டத்தின் நோக்கமாகும். 1961-62-ல் தொடங்கிய 6 கேந்திர கிராமங்களில் விருத்திக்கு ஏற்றதாக இருந்த கால்நடைகளின் எண்ணிக்கை 202,686. அவை மூலம் எதிர்பார்க்கப்பட்ட கன்றுகள் எண்ணிக்கை 81,074. ஆனால், கிடைத்த கன்றுகள்—பாவம்!—6,888. 1962-63-ல் ஆறு கேந்திர கிராமங்களில் கால்நடைகளின் எண்ணிக்கை 116,969. எதிர்பார்க்கப்பட்ட கன்றுகள் 46,787. கிடைத்த கன்றுகள் 784 தான். இந்தத் தோல்விக்கு இலாக்கா சொல்லும் காரணம் என்ன? "சில பசுக்கள் மலடு. சில வயதானவை." இது முதலில் தெரியவில்லையா? "பால் தராத காலங்களில் பல பசுக்கள் விவசாய வேலைக்குப் பயன்பட்டன. தீவனம் பற்றாக்குறை. புல் தரை கிடைக்கவில்லை. கேந்திர கிராம வட்டாரங்கள் இன விருத்தியற்ற பிரதேசங்களில் அமைந்தன" என்று காரணம் சொல்லப்படுகிறது. இவைகளை முதலில் யோசிக்காததால் விரயம் 18 லட்சத்து 38 ஆயிரம் ரூபாகய், இப்படி அநியாய விரயம் செய்துவிட்டு, சிக்கனம் சிக்கனம் என்று பேசுவதிலே அர்த்தம் இல்லை என்று நான் குறிப்பிட விரும்புகிறேன். சிக்கனம் ஒழுங்காகப் பயன்படுவதாக இருந்தால், நம்முடைய அமைச்சர்கள் தங்களுடைய சம்பளத்தை ஓரளவிற்குக் குறைத்துக்கொள்ள முன்வரவேண்டும். அது மற்றவர்களும் சிக்கனத்தைக் கடைப்பிடிப்பதற்கு நல்ல வழிகாட்டக்கூடிய நடவடிக்கையாக அமையக் கூடும். எவ்வளவு குறைத்துக் கொள்ளவேண்டும் என்று நான் கூற வரவில்லை. காரணம், இன்றைக்கிருக்கும் விலைவாசித் தொல்லை அவர்களுக்கும் உண்டு. உள்துறை அமைச்சர் கனம் திரு. கக்கன் அவர்களுடைய துணைவியார் அவர்களே ஒரு சமயம் ஒரு மாநாட்டில் குறிப்பிட்டிருக்கிறார்கள். "1,500 ரூபாய் வாங்கியும் எங்கள் குடும்பம் பல கடன்களுக்கிடையே தான் இருக்கிறது" என்று குறிப்பிட்டார்கள். ஆகவே, அவர்களே யோசித்து, ஓரளவுக்கு சம்பளத்தைக் குறைத்துக்கொள்ளுவார்களானால் அது மற்றவர்களுக்கு வழி காட்டுவதாக அமையக்கூடும்.

கவர்னர் பதவி என்று இருப்பதன் காரணமாகப் பல லட்ச ரூபாய் செலவிடப்படுகிறது. அதையும் மீதப்படுத்தலாம். அந்தப் பதவி இல்லை என்று ஆகிவிட்டால், அதுவும் சிக்கனத்திற்கு நல்ல எடுத்துக்காட்டாக அமையும்.

[திரு. மு. கருணாநிதி] [4th March 1966

மந்திரிகளும் தங்களுடைய சுற்றுப் பயணத்தை ஓரளவிற்குக் குறைத்துக் கொள்ளலாம். "மக்களைச் சந்திக்கிறோம்" என்று சொல்வது சரியான வாதம் அல்ல. அதை நான் சொல்லவில்லை. காமராஜ் திட்டம் கொண்டு வந்த திரு. காமராஜ் அவர்களே கூறியிருக்கிறார்கள். "அமைச்சராக இருந்து மக்களைச் சந்திக்க முடியவில்லை. மக்களைச் சந்திக்கவேண்டும் என்று போகிற நேரத்தில் கிராமத்தில் பெரிய பெரிய நந்திகள் குறுக்கே நிற்கின்றன ; ஆகவே தான் ராஜீனமா செய்கிறேன்" என்று கூறியிருக்கிறார். மந்திரிகளுடைய சுற்றுப் பயணங்கள் குறைக்கப்படுவதன் மூலமாகவும் இந்தச் சிக்கனத் திட்டம் நிறைவேறலாம்.

கடைசியாக, 1967 பொதுத் தேர்தலுக்கு முன்பு, ஒரு மூன்று மாதங்களுக்கு முன்பு, மந்திரிகள் தங்களுடைய பதவிகளை ராஜீனமா செய்துவிடுவார்களானால், அதன் மூலம் மந்திரிகளுக்காகத் தரப்படுகிற சம்பளம் சிக்கனப்படுத்தப்படும் ; ஜனநாயகமும் காப்பாற்றப்படும். மூன்றே மூன்று மாத காலம்தான். அதிகம்கூட வேண்டாம். அவர்களுக்கும் ஆசை இருக்கலாம். அடுத்த தடவை வருகிறோமோ, இல்லையோ, மூன்று மாதமும் இருந்துவிட்டுப் போகலாமே என்ற ஆசை இருக்கலாம். ஆனாலும், ஒரு மூன்று மாத காலம் அவர்கள் ராஜீனமாச் செய்துவிட்டுப் பொதுத் தேர்தலில் ஈடுபடுவதன் காரணமாக, இந்தியத் துணைக் கண்டத்தில் ஜனநாயகத்தை மலரச் செய்வதற்கு, பல காரியங்களுக்கு இந்தத் தமிழ்நாடு சர்க்கார் காரணமாக இருந்தது, ஆரம்பமாக இருந்தது என்று பெருமை அடித்துக்கொள்ளுகிற நம்முடைய மதிப்பிற்குரிய அமைச்சர் பெருமக்கள் இந்தக் காரியத்தையும் செய்து நல்ல முன்னோடியாக விளங்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

நான் இங்கே எடுத்துச்சொன்ன இவ்வளவு காரியங்களுக்கும் இந்த வரவு-செலவுத் திட்டத்திலே நல்ல பரிகாரங்கள் இதுவரை அளிக்கப்படாத காரணத்தால் தான், அவைகளையெல்லாம் நான் சுட்டிக்காட்ட நேர்ந்தது. இந்தப் பரிகாரத்தைத் தேடுவதற்கு இந்த அமைச்சரவையினர் மிச்சம் இருக்கும் ஓராண்டுக் காலத்திலாவது முனைந்து முயற்சியிலே ஈடுபடவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன். இல்லாவிட்டால், 18 ஆண்டு கால ஆட்சியிலே அனுபவித்திருக்கும் கொடுமைகளுக்கு, ஏழைகளுடைய துயரத்திற்கு, வாட்டத்திற்கு ; வறுமைக்கு வடித்த கண்ணீருக்கு, விடுத்த பெருமூச்சுக்கு 1967-ம் ஆண்டு பதில் சொல்லித் தீரவேண்டிய கட்டத்திலே இந்த அமைச்சரவை இருக்கிறது என்பதை எடுத்துக்கூறி, இடைக்கால நேரத்தில் இதையாவது செய்தார்கள் என்ற பெயரைப் பெரும் அளவிலே இந்தக் காரியத்தில் ஈடுபடவேண்டும் என்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடிக்கிறேன். வணக்கம்.

**திருமதி சி. குழந்தையம்மாள் :** கனம் சபாநாயகர் அவர்களே, நமது முதல் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற வரவு செலவுத் திட்டத்தை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். எனக்கு முன் பேசிய கனம் அங்கத்தினர்



4th March 1966] [திருமதி சி. குழந்தையம்மாள்]

திரு. கருணாநிதி அவர்கள் நம் நாட்டில் இருக்கக் கூடிய மக்கள் உணவின்றி, உடையின்றி, பொழுது போக்க வசதியின்றி பரிதபிக்கின்ற நிலையில் இந்த அமைச்சரவை ஆட்சியை நடத்திக்கொண்டு போகிறது என்று மிக விரிவாகக் குறிப்பிட்டுப் பேசினார்கள். அந்தப் பேச்சைக் கேட்டுக்கொண்டிருந்தபோது நான் பல கருத்துக்களை மறுக்க வேண்டும் என்று கருதினேன். நான் கிராமப் புறத்தில் இருந்து வந்திருக்கக் கூடிய உறுப்பினர். நான் படித்த காலத்தில் ஒவ்வொரு நாளும் எங்கள் கிராமத்தில் இருந்து 6 மைல் நடந்து போய், 6 மைல் நடந்து வந்து படிக்கக் கூடிய சூழ்நிலை இருந்தது. ஆனால் இன்றைக்குக் கிராமத்தில் உள்ள ஆண், பெண், குழந்தைகள் பஸ்களில் போய்ப் படித்து வரக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னால் 18 ஆண்டு சுதந்திர ஆட்சியிலே மாணவ மாணவிகள் வாழ்க்கைத்தரம் உயரவில்லையா என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, அன்றைக்கு எங்கள் பகுதியில் உயர்நிலைப் பள்ளிகள் இல்லை என்று கோவை நகரத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்தோம். ஆனால், இன்றைக்குப் போதுமான மாணவர்கள் இல்லை என்று ஸயன்ஸ் வகுப்பை ஆரம்பிக்க முடியவில்லை என்பதாக அரசாங்கம் சொல்லும் அளவிற்கு ஆங்காங்கே உயர்நிலைப் பள்ளிகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. ஐந்து மைல் சுற்றளவுக்குப் பள்ளிகள் இல்லாத இடமே கிடையாது என்ற முறையில் அரசாங்கம் செயல்பட்டு வருகிறது என்றால் இது பாராட்டத்தக்கதாகும்.

அடுத்து, உணவு இல்லை என்று குறிப்பிட்டார்கள், உடை இல்லை என்று குறிப்பிட்டார்கள். சிறு வயதிலே சாதாரணமாக கிராமப் புறங்களில் ஐந்தாறு வயது வரைக்கும் அரைஞாண் என்கிற ஆபரணத்தை மட்டும் போட்டுச் சும்மாவிடுவார்கள், ஆனால் இன்றைய தினம் குழந்தை பிறந்த இரண்டு மூன்று நாட்களுக்குள்ளே லேசான உடையைப் போடும் வழக்கம் கிராமவாசிகளிடையேயும் ஏற்பட்டிருக்கிறது என்றால் முன்னேற்றம் ஏற்படவில்லை என்று சொல்ல முடியுமா? பதினெட்டு ஆண்டுகளுக்கு முன்பு மண்ணெண்ணெய் விளக்கு, வேப்பெண்ணெய் விளக்கை வைத்துக்கொண்டு கிராமங்களில் படிப்பார்கள். ஆனால் இன்றைக்கு அநேகமாக எல்லாக் கிராமங்களுக்கும் மின்சார வசதி செய்து கொடுத்திருக்கிறோம் என்று சொன்னால் இந்த அமைச்சரவை ஒன்றுமே செய்யவில்லை என்று சொல்ல முடியுமா?

அதற்குமேலே, கவலை போட்டு விவசாயம் செய்து வந்த மக்களுக்கு இன்றைக்கு மின்சார மோட்டார் பம்பு செட்டுகள் போட வசதி செய்யப்பட்டு இருக்கிறது. இப்படி பலபல காரியங்களைச் செய்து வந்திருக்கிற இந்த அமைச்சரவைக்கு தெனாலிராமன் கதையை ஒப்பிட்டு திரு. கருணாநிதி பேசியது அறிவாளிக்கு உகந்த செயல் அல்ல. அதுவும் தம்முடைய பிரசங்கத்தின் தொடக்கத்திலே தெனாலிராமன் கதையோடு ஒப்பிட்டுப் பேசிவிட்டு, முடிவிலே திரு. வெங்கட்டராமன் அவர்கள் மிகவும் திறமையுள்ளவர்கள், சேலம் உருக்காலையைச் செய்துவிடுங்கள் என்று

[திருமதி சி. குழந்தையம்மாள்] [4th March 1966

சொல்லிக்கொள்வதானது எவ்வளவு முரண்பாடுடையதாக இருக்கிறது என்பதை அவர்களே சிந்தித்துப் பார்க்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு, குறிப்பாக எல்லாத் துறையிலும் இந்தச் சர்க்கார் நல்ல முன்னேற்றமான பல காரியங்களைச் செய்து கொடுத்திருக்கிறது. எங்கள் ஊர்ப் பகுதியில் மாட்டுக்குத் தீவனமின்றி பனை ஓலையை அறுத்துப்போடுவார்கள், அந்த நிலையை மாற்றி—11 கோடிக்கு செலவு செய்து கீழ் பவானித் திட்டத்தை உருவாக்கி இரண்டு ஏக்கர், மூன்று ஏக்கர் வைத்திருப்பவர்கள் கூட சுலபமாக நெல் பயிரிடக்கூடிய சூழ்நிலையை உருவாக்கித் தந்திருக்கிறார்கள் என்றால் நான் விவசாய மக்களின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்னும் பரம்பிக் குளம், ஆளியாறு திட்டம், குந்தா மின்சாரத் திட்டம் ஆகிய பல திட்டங்களை நிறைவேற்றியிருக்கிற இந்த அமைச்சரவையைப் பார்த்து திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த திரு. கருணாநிதி அவர்கள் தெனாலிராமன் கதையோடு ஒப்பிடுகிறார்கள் என்றால் முழுப் பூசணிக்காயைச் சோற்றில் மறைக்கும் வெட்கப்படவேண்டிய செயலாகும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். தமிழ்நாட்டு அமைச்சரவையை மற்ற மாநிலங்கள் எல்லாம் பாராட்டுகின்றன. உலகமே பார்த்து வியக்கிறது. அப்படி இருக்கும்போது திரு. கருணாநிதி தெனாலிராமன் கதையோடு பேசியது அறிவாளிக்குப் பொருத்தமாக இராது என்று இந்த இடத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

(திரு. மா. தண்டாயுதபாணி தலைமை)

அடுத்தபடியாக, பட்ஜெட்டில் இருக்கக் கூடிய சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். நேற்று பேசிய கனம் அங்கத்தினர் திரு. தர்மலிங்கம் அவர்கள் விவசாயிகளுக்கு வழங்கப்படுகிற கடனைப் பற்றிக் குறிப்பிட்டார்கள், எனக்கு மிகவும் ஆத்திரமாக இருந்தது. கொடுக்கப்பட்ட ஆயிரம் ரூபாய் கடனுக்கு பத்து ஆண்டுகளுக்குப் பிறகு ஒரு விவசாயி 330 ரூபாய் வட்டி கொடுக்கிறான் என்றால் அப்படி வாங்குவது அநியாயம் இல்லையா என்று சொல்வதை ஒரு பாங்கரோ, பாங்கோ கேட்டிருந்தால் ஓடி ஒளிந்து கொள்வார்கள். விவசாயிகள் யாரிடத்தில் போனாலும் கடன் கிடைக்காது. இன்றைக்கு அதிகமான கடன் வசதிகளைத் தங்களுக்கு ஏற்படுத்தித்தரவேண்டும் என்பதாக விவசாயிகள் கோரிக்கொண்டிருக்கிறார்கள். ஏற்கனவே கடன் வாங்கப்போனால் பாங்கர்கள் நீங்கள் விவசாயிகளா, வியாபாரிகளா என்று கேட்கிறார்கள். வியாபாரிகள் என்றால் நூற்றுக்கு 1¼ வட்டிக்கு ஆறு மாதங்களில் வட்டியோடு அவர்கள் பணத்தைத் திருப்பிக் கொடுக்கிறார்கள். ஆனால், விவசாயிகளோ முதலும் இன்றி, வட்டியும் இன்றிப் பல ஆண்டுகள் பணத்தை முடக்கிவிடுகிறார்கள் என்று அஞ்சும் நிலையில் அவர் அவ்வாறு குறிப்பிட்டது விவசாயிகளுக்கு அனுகூலத்தை அளிக்காது, அவர்கள் தலையில் பெரிய பாறாங்கல்லைத் தூக்கிப்போடாதீர்கள் என்று கேட்டுக்கொள்கிறேன். ஒரு சோம்பேறி விவசாயியின் நிலையை எடுத்துச்



4th March 1966] [திருமதி சி. குழந்தையம்மாள்]

சொல்லப்போய்—பல உழைப்பாளிகளான விவசாயிகளுக்குக் கூட மூலதனம் கிடைக்க முடியாத சூழ்நிலையைத்தான் அது உண்டாக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தினர் இவ்வாறு சொல்கிற தங்கள் கட்சிக் கொள்கையையே மாற்றி அமைக்க வேண்டும். மீண்டும் மீண்டும் வற்புறுத்துவது விவசாயிகள் தலையில் கல்லைப் போடுவது போலத்தான் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இவ்வாண்டு பட்ஜெட்டில் 20 ரூபாய் குறைந்த பட்ச பென்ஷன் கொடுக்க முதல் அமைச்சர் வகை செய்திருப்பதற்கு நான் அவரைப் பாராட்டுகிறேன். எங்கள் பகுதியில் 1 ரூபாய் பென்ஷன் வாங்கக் கூடியவர் 123 பேர்கள் இருக்கிறார்கள். ஒரு ரூபாயில் இருந்து 9 ரூபாய் வரை வாங்கக் கூடியவர்கள் நூற்றுக்கணக்காக இருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் இன்றைய தினம் இந்த அமைச்சரவைக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இலவச சிலேட், புத்தகம், உணவு அளிக்கக் கூடிய திட்டம் பாராட்டத்தக்கதாகும். அதிலே ஒரு திருத்தம் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சென்ற காலங்களில் மதிய உணவுத் திட்டத்திற்கு அரிசி கொடுப்பதில் கஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. மாணவர்களுக்கு மதிய உணவு கொடுத்திருந்தால்தான் புத்தகம் என்று சொன்னால், 6 மாதங்களாக மதிய உணவு கொடுக்கப்படாதவர்களுக்கு எல்லாம், மதிய உணவு இல்லையே, புத்தகமும் இல்லை என்று ஜூன் மாதத்தில் சொல்லிவிடுவார்கள். ஆகையால், இப்பொழுதே மாணவர்களுக்கு மதிய உணவு கொடுக்க வேண்டும், இல்லாவிட்டால் ஆரம்பத்திலே மதிய உணவு உண்டவர்கள் எல்லோருக்கும் புத்தகங்கள் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். உத்தரவைத் திருத்தி கலெக்டர்கள் மூலமாக உடனடியாக புது உத்தரவு போடவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நம்முடைய அரசாங்கம் விவசாயத்திற்குத் தாராளமாக உதவி செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதைப் பாராட்டாமலே சிலர் கருத்துக்களைத் தெரிவித்தார்கள். விவசாய முன்னேற்றத்திற்கு, நிலவரி போட்டு அதற்குமேலே போடப்பட்டிருக்கிற பாசன வசதி வரியைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். பாசன வசதி கொடுக்கக்கூடிய நிலங்களுக்கு ஒரு போகத்திற்கு 20 ரூபாய் வரி போடுகிறார்கள். ஏற்கனவே இருக்கக்கூடிய 15 ரூபாயுடன் இந்த 20 ரூபாயும் சேர்ந்து 35 ரூபாய் வரியைக் கொடுத்து 5 மாதத்திற்குத் தண்ணீர் எடுத்துக்கொண்டு லாபகரமாக விவசாயம் செய்வது கஷ்டமாக இருக்கிறது என்று சொன்னால் நான் வறண்ட பகுதியிலே இருந்து வருகின்ற ஒரு பிரதிநிதி—என்னுடைய வட்டத்திலே 4 ஏக்கர் பருத்தி சாகுபடி செய்வதற்குள் மாதம் 88 ரூபாய் வீதம் மின்சாரக் கட்டணம் செலுத்தி, ஆறு மாதங்கள் கழித்து, ஒரு மாதத்திற்கு 88 ரூபாய் வீதம் 6 மாதத்திற்கு 500 ரூபாய்க்கு மேலே வரும்—இந்த 500 ரூபாய்க்கு மேலே மின்சாரக் கட்டணம் செலுத்தி

[திருமதி சி. குழந்தையம்மாள்] [4th March 1966

எங்கள் பகுதியிலே இருக்கக்கூடிய விவசாய மக்கள் லாபகரமாக விவசாயம் செய்யமுடிகிறது என்று சொன்னால் 20 ரூபாயுடன் 15 ரூபாய் சேர்த்து 35 ரூபாய் கொடுத்து விவசாயம் செய்ய ஏன் முடியாது? அதையும் கொடுக்க முடியாது என்று சொன்னால் எப்படி கோடிக்கணக்கான ரூபாய்களுக்குப் பல திட்டங்களை நிறைவேற்றமுடியும்? 15 ரூபாய் அதிகமாகக் கொடுக்கக் கஷ்டப் பட்டால், 80 ரூபாய்க்கு மேலே ஒரு மாதத்தில் மின்சாரக் கட்டணம் கட்டி, 150 அடி ஆழத்திலிருந்து தண்ணீர் எடுத்து லாப கரமாக அங்கேயுள்ளவர்கள் எப்படி விவசாயம் செய்கிறார்கள்? திட்டமும் வேண்டும், வரியும் வேண்டாம என்று சொன்னால் எப்படி முன்னேற்றம் அடைய முடியும்? கூழுக்கும் ஆசை மீசைக்கும் ஆசை என்றால் எப்படி முடியும்? கூழ் வேண்டா மென்று ஒப்பனைகச் சொல்லவேண்டும், அதை விட்டுவிட்டு 15 ரூபாய் அதிகமாக வரி போட்டு விட்டார்கள் என்று சொல்லிச் சொல்லி, இங்கே இருப்பவர்கள் பயந்துபோய் அந்த 15 ரூபாயை ரத்து செய்துவிட்டால், பிறகு திட்டங்கள் வேண்டுமென்று மக்கள் கேட்டால், பணம் இல்லை என்று சொல்லிக் கையை விரித்து விட்டால் என்ன செய்யமுடியும்? வறுமையைப் போக்கவேண்டு மென்று சொன்னால் திட்டங்கள் நிறைவேறவேண்டும், ஆகவே, போட்டு இருக்கிற வரியை நியாயமாகக் கொடுப்பதற்குப் பிரச்சாரம் செய்யுங்கள். அப்படியில்லாமல் வரியைக் கொடுக்க மாட்டோம் என்று சொன்னால் நாட்டிலே ஒரு பக்கத்திலே இருப்ப வர்கள் சுபீட்சமாக வாழ்வார்கள், மற்றொரு பக்கத்திலே இருப்ப வர்கள் வறுமையினால் சாவார்கள் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, பிணி இருக்கிறது, பிணி இருக்கிறது என்று எதிர்க்கட்சிக்காரர்கள் சொன்னார்கள், எனக்குத் தெரிய கோயம் பத்தூரில் பிளேக் நோயால் 3 பேர் இறந்தார்கள், காலராவால் ஒன்றிரண்டு பேர்கள் இறந்தார்கள், மலேரியாவால் பல பேர் படுத்தார்கள். அதற்கு மேலே பெண்கள் பிள்ளையை பெறுவதற்கு முன்பு மடிந்தனர், பிள்ளை பெற்ற பிறகு மாண்டார்கள், பெறும். பொழுது மடிந்தார்கள். ஆனால், இப்பொழுது தமிழ்நாட்டிலே இப்படிப்பட்ட கொடுமைகள் வராமல் இந்த அரசாங்கம் பாது காப்பு கொடுத்திருக்கிறதே அதற்குப் பாராட்டாமல் இந்தச் சபையிலே உண்மைக்கு மாறான கருத்துக்களைப் பிரச்சாரம் செய் கிறார்கள் என்பதைப் பார்க்கும்பொழுது அவர்கள் வெளியிலே போய் என்ன பிரச்சாரம் செய்வார்கள் என்பதை நினைத்துப் பார்ப்பதற்கு ஆச்சரியமாக இருக்கிறது. தி.மு.கவினர் இப்படிப் பயங்கரமான முறையிலே உண்மைக்குப் புறம்பான விஷயங்களை, வதந்திகளை வெளியே போய்ச் சொல்வார்களானால் . . .

திரு. கே. ஏ. மதியழகன்: ஆன் எ பாயின்ட் ஆஃப் ஆர்டர் சார், வதந்தியைச் சொல்கிறார்கள் என்று சொன்னார்கள். என்ன வதந்தியைச் சொல்கிறார்கள் என்று சொல்லாமல் வதந்தியைச் சொல்கிறார்கள் என்று சொல்வதால் நான் ஒழுங்குப் பிரச்னையை எழுப்புகிறேன். It is an insiruation



4th March 1966]

கனம் தலைவர் (திரு. மா. தண்டாயுதபாணி): காரணத்தைச் சொல்லித்தான் சொன்னார்கள்,

(திரு. கே. ஏ. மதியழகன் எழுந்தார்.)

கனம் தலைவர் (திரு. மா. தண்டாயுதபாணி): கனம் அங்கத் தினர் உட்காரவேண்டும்.

SRI K. A. MATHIALAGAN: The hon. Lady Member should substantiate her statement.

கனம் திரு. பூ. கக்கன்: அவர்கள் வதந்தியைப்பற்றித்தான் பேசிக்கொண்டிருக்கிறார்கள்.

திரு. கே. ஏ. மதியழகன்: பேசிக்கொள்கிறார்கள் என்பது வேறு. எதிர்க்கட்சிக்காரர்கள் வதந்தியைக் கிளப்புகிறார்கள் என்று சொன்னார்கள். என்ன வதந்தி என்று சப்ஸ்டான்ஷியேட் செய்யவேண்டும்.

திருமதி சி. குழந்தையம்மாள்: தலைவர் அவர்களே, உண்மைக்கு மாறாக பிணி, பிணி என்று பேசிக்கொண்டே இருந்தால் . . . .

திரு. மு. கருணாநிதி: ஆன் எ பாயின்ட் ஆஃப் பெர்ஸனல் எக்ஸ்ப்ளனேஷன் சார், என்னுடைய பேச்சில் பிணி என்ற வார்த்தை எந்த இடத்திலும் வந்தது கிடையாது.

திரு. கே. ஏ. மதியழகன்: காலரா என்று சொல்லி நூற்றுக் கணக்கான பேர்கள் செத்தார்கள் என்று சுகாதார அமைச்சர் அவர்கள் சொல்லிக்கொண்டு இருக்கிறார்கள். இது வதந்தி என்று சொல்ல முடியாது. என்ன வதந்தி என்பதைச் சொல்லவேண்டும்.

கனம் திரு. பூ. கக்கன்: நூற்றுக்கணக்கான பேர்கள் செத் தார்கள் என்பதே உண்மைக்குப் புறம்பானது ஆகும்.

திருமதி சி. குழந்தையம்மாள்: அரசாங்கம் செய்திருக்கிற நன்மைகளைப் பாராட்டாது எதிர்க் கட்சித் துணைத் தலைவர் அவர்கள் கடைசியில் அமைச்சர்களைத் தெனாலிராமன் கதை சொல்லி ஒப்பிட்டார்கள். அப்படியானால் அமைச்சர்கள் எல்லாம் விவேகம் அற்றவர்களா?

(திரு. மு. கருணாநிதியும், திரு. கே. ஏ. மதியழகனும் எழுந்தனர்.)

கனம் தலைவர் (திரு. மா. தண்டாயுதபாணி): யாராவது ஒருவர் பேசுங்கள்.

திரு. மு. கருணாநிதி: ஆன் எ பாயிண்ட் ஆஃப் பெர்சனல் எக்ஸ்ப்ளனேஷன் சார், நான் தெனாலிராமனை ஒப்பிட்டதற்குக் காரணம் எந்த மந்திரியையும் தெனாலிராமன் என்று சொல்ல வேண்டுமென்பதற்காக அல்ல. அவ்வளவு தரக்குறைவாகப் பேசு பவன் நான் அல்ல என்பது எல்லோருக்கும் தெரியும். நிதி நிலை

அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிற வாதங்களும் கருத்துக்களும் தெனாலிராமன் கதையைப் போல் தந்திரங்களும் ஏமாற்றங்களும் நிறைந்ததாக இருக்கிறது என்பதைச் சொல்வதற்காகச் சொன்னேன். அப்படியே இருந்தாலும் தெனாலிராமன் முட்டாள் அல்ல. தந்திரக்காரன், ஏமாற்றுகிறவன் என்பதை அம்மையார் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**கனம் திரு. பூ. கக்கன்** : எதிர்க்கட்சித் துணைத்தலைவர் அவர்கள் அப்பொழுது சொன்னது ஒரு பதில்; இப்பொழுது சொல்வது வேறு.

**திரு. மு. கருணாநிதி** : அப்பொழுது என்ன சொன்னேன் என்பதைத் தெரிவிக்கவேண்டும்.

**கனம் திரு. பூ. கக்கன்** : அது அங்கத்தினருக்கே தெரியும்.

• • • •

**திருமதி சி. குழந்தையம்மாள்** : இந்தமாதிரியாக நாட்டிலே முன்னேற்றம் வளர்ந்து வருவதைப் பொறுக்கமாட்டாமல் இருக்கிறவர்கள் நம்முடைய நாட்டினுடைய முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டை போடத்தக்க அளவிற்கு அவ்வப்போது பேசிவருவதைத் தடுப்பதற்குப் பாதுகாப்பு விதி இருக்கவேண்டுமென்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அடுத்தபடியாக இந்தச் சிறிய நீர்ப்பாசனத்திற்காக நாம் ஏராளமான பணத்தை ஒதுக்கியிருக்கிறோம். ஆனால், அந்தப் பணத்தைச் செலவழிக்காமல் இருக்கிறார்கள். நம்முடைய சர்க்கார் சிறிய நீர்ப்பாசனத்திற்காக ஒதுக்கப்பட்டிருக்கிற பணம் செலவழிக்கமுடியாமல் இருப்பதற்குக் காரணம் போதுமான என்ஜினியர்கள் இல்லாததுதான். போடப்பட்டிருக்கிற எஞ்சினியர்கள் கூட ஆறு மாதம் அல்லது ஒரு வருஷத்திற்குள் மாற்றப்பட்டுவிடுகிற காரணத்தால் ஒரு என்ஜினியர் இன்வெஸ்டிகேஷன் செய்த திட்டம், வேறு என்ஜினியர் வந்து அதைத் தொடர்ந்து செய்ய முடியாத நிலைமை ஏற்பட்டுவிடுகிறது.

கோயம்பத்தூர் ஜில்லாவைப் பொருத்தவரை சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களுக்காகப் பணத்தைப் போடும்போது, லாப நஷ்டக் கணக்குப் பார்த்து திட்டத்தை ஒத்தி வைக்கக் கூடிய நிலைமை இருக்கின்றன. இதிலே லாப நஷ்டக் கணக்கைப் பார்க்காமல், உணவு உற்பத்திக்காகச் செய்கிற காரியம் என்று கருதி, சிறிய குளங்குட்டைகளை ஆழப்படுத்துவதற்கும், புதிதாக ஏற்படுத்துவதற்கும் வழி செய்து விவசாயிகளுக்கு நீர்ப்பாசன வசதியைப் பெருக்கும் காரியங்களைத் தீவிரப்படுத்தவேண்டுமென்று இந்தச் சபையில் வற்புறுத்திச் சொல்லிக் கொள்கிறேன்.

**கனம் திரு. பூ. கக்கன்** : மதிப்பிற்குரிய அங்கத்தினர் அவர்கள் இப்போது சொல்வதைப் பல முறை சொல்லியிருக்கிறார்கள். கோயம்பத்தூரைப் பொருத்தவரை 'பாண்ட் ஸ்கீம்'—குளங்குட்டைகளைச் சீர்படுத்துவது பற்றி விசேஷ நடவடிக்கைகள்

*** Expunged as ordered by the Chair.





எடுத்துக் கொள்ளப்படுகின்றன. புதிதாகக் குளங்கள் வெட்டுவதும் மற்றும் சிறு பாசனத் திட்டங்களுக்கும் அரசாங்க முக்கியத்துவம் கொடுத்து அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளவேண்டுமென்பதற்காக தனியாக ஒரு எக்சிக்யூட்டிவ் எஞ்சினியரே போடப்பட்டிருக்கிறார்.

**திருமதி சி. குழந்தையம்மாள்** : அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு நன்றி. எங்களுக்கு இருக்கிற வறுமையின் காரணமாக இதை வலியுறுத்திச் சொல்லுகிறேன்.

கோயம்பத்தூர் நகரத்தில் இருக்கக் கூடிய தண்ணீர்க் கஷ்டத்தைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். கோயம்பத்தூரில் தொழிற்சாலைகள் மிகுந்து வருகிற காரணத்தால் பெரும்பகுதி கிராமங்களிலிருந்து மக்கள் நகரத்திற்கு வருவதன் காரணமாக கோயம்பத்தூர் நகரம் நெருக்கமாகி வருகிறது. அதனால் இந்தக் குடிதண்ணீர்க் கஷ்டமும் ஏற்பட்டுக் கொண்டே இருக்கிறது. அங்கு குடிதண்ணீர்க் கஷ்டம் அவர்கள் சொல்லுகின்ற அளவுக்கு மிகுதியாக இல்லை. சாதாரணமாகக் கஷ்டம் இருக்கிறது. அந்தக் கஷ்டத்தை நீக்கவேண்டும். அந்தக் கஷ்டத்தை நீக்க வேண்டுமென்றால் பொதுவாக மழை பெய்யவேண்டும். மழை இல்லையென்றால் என்ன பெரும் திட்டங்களைப் போட்டாலும் வெற்றிகரமாக இருக்காது. அங்கு குடிதண்ணீர்க் கஷ்டத்தைச் சீர்படுத்த சிறுவாணித் திட்டத்தைச் சீக்கிரம் அமல்படுத்தவேண்டும். அதற்கு வழிவகைகளைக் காணவேண்டும்.

அவனாசி திட்டம் என்று மேல்பவானி திட்டத்தைக் குறிப்பிட்டார்கள். அவனாசி தாலூகா, கோயம்பத்தூர் தாலூகா, பல்லடம் தாலுகா ஆகிய மூன்று தாலூகாக்களும் ஓரளவு நீர்ப்பாசன வசதியைப் பெறுகின்ற அளவுக்கு இந்தத் திட்டம் போடப்பட்டிருக்கிறது. அமைச்சர் அவர்கள் இந்தத் திட்டத்தின் கீழ் எங்கள் பல்லடம் தாலூகாவுக்கு எத்தனை ஏக்கருக்குத் தண்ணீர் கொடுக்க முடியுமோ அந்த அளவுக்குத் தண்ணீர் கொடுக்க வேண்டுமென்று வற்புறுத்தி, எங்களுடைய கஷ்ட நஷ்டங்கள் கொஞ்சநஞ்சமல்ல, பல ஆண்டுகளாக அனுபவித்துக் கொண்டு வருகிறோம் அவற்றையெல்லாம் நீக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, இந்த வரவு செலவுத் திட்டத்தை ஆதரித்து, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

* **Sri C. CHIRANJEEVULU NAIDU**: Mr. Chairman, Sir, I would like to say a few words on the budget which is before the House for discussion. The budget which was presented in this House is a surplus budget. State after State in the country has been presenting a surplus budget and the common man's impression is that the Central Government might have directed the State Governments to present a surplus budget. Taking into consideration the position regarding Loans and Advances and several other factors, how far this is a surplus budget is a matter for serious consideration.

[Sri C. Chiranjeevulu Naidu] [4th March 1966

We have successfully implemented the Third Five-Year Plan. The people of the State cannot shut their eyes to the progress made and the various developmental activities undertaken by the State. The common man has sufficiently appreciated the developmental activities successfully implemented under the Third Five-Year Plan wherever the development achieved has been to the utmost satisfaction of the people. As far as developmental activities are concerned, I request the Government to devote careful thought in arriving at the target before fixing the target. Several departments have been spending indiscriminately in their zeal to reach the target. They have been spending enormous amounts indiscriminately and there has been a certain amount of wastage. In such cases, the Government must not insist on the achievement of the target. While reviewing the achievements under the various heads, it should be made clear either at the State level or at the district level that the Government do not attach much importance to these targets. Targets may kindly be fixed in consultation with the departments concerned and after ascertaining the needs of the people and the extent to which the targets could be achieved.

As far as the State's budget is concerned, much stress has been laid on agriculture. We have been trying to step up agricultural production. It is a fact that we have brought a large extent of land under cultivation either by providing lift irrigation or by providing electric power for pumpsets. We have been noticing a general retard and a reduction in the yield in agricultural production. The Indian Council of Agricultural Research may be asked to examine the effect of fertilisers on the soil and the effect of pests on the crops. It will be very difficult to achieve the additional target of 4·5 lakh tons fixed for the next year. The actual yield is deteriorating day by day and necessary measures should be taken to arrest this deterioration in the fertility of the soil.

Regarding minor irrigation and medium irrigation, many departments have been entrusted with the schemes. There has been overlapping, repetition, and investigation by several departments for the same work. I would suggest that Special Minor Irrigation Programme, Desilting-*cum*-reclamation Scheme and other departments working may be pooled and entrusted to one Department like the Public Works Department and that a Board of Irrigation, on the lines of the Electricity Board; may be constituted to look after irrigation.

In regard to the New Well Subsidy Scheme, much work has not been done, though the Government thought that they could do much. In actual implementation, there has been some difficulty. Some of the obstacles may be overcome by giving proper instructions to the officers at the lower level and sufficient incentive for sinking wells may be given to the ryots.

10-30 a.m. Regarding fertilisers, we have been entrusting this work to the Co-operatives. The Hon. Chief Minister has stated that co-operatives, in addition to panchayats, have to play prominent part in



4th March 1966] [Sri C. Chiranjeevulu Naidu]

that respect. There has been much criticism in this House that co-operatives are not managing their affairs properly. But we have to accept the fact that panchayats and Co-operatives have to play an important part in the villages. There may be certain shortcomings here and there but that does not mean that we have to give up this co-operative movement. Basically, the co-operative movement which has been started in our country can never fail but we must give an impetus to the movement by integrating the credit market also with it. We should entrust the market business to the co-operative movement and then only with the credit and market facilities, they could successfully function. To-day there are a large number of co-operative societies which are functioning well and are distributing fertilisers in an appreciable manner but there may be one or two societies which may not function well. In this connection, I would suggest that non-officials should not be entrusted with the work of distributing or handling money. Certain executive officers or supervising secretaries may be posted and entrusted with this work. By doing so, they can prevent defalcation cases occurring here and there.

Sir, mention has been made about the formation of viable units for co-operatives and the amalgamation of certain societies into one viable unit. In my opinion, such a step would create several problems. But I would suggest that such of the societies which have become defunct, could be amalgamated and formed into viable units.

Regarding education, I would like to point out that the Government have been enthusiastic in opening high schools. But there is no accommodation for these high schools. Also, many teachers who are employed in the rural areas find it very difficult to find residential accommodation for them. So, to provide accommodation for both schools and teachers, the Government should sanction grants liberally and see that more school buildings and houses are constructed.

Then, the Hon. Chief Minister, in his Budget speech, stressed the need for effecting economies in the running of the administration. We have been seeing that a certain expenditure is being incurred in a reckless manner by certain departments. In this connection, I suggest that the Agricultural Income-tax Department may kindly be disbanded and, as has been suggested, their work could be entrusted to the Tahsildars of the Revenue Department. We have also been seeing that in several cases, certain posts have been created without examining the nature and scope of the work. In that way, posts of temporary lower division clerks and temporary Deputy Collectors have been created. Also the duplication of the work may be avoided at the district level. In the case of the Panchayat Union, I would suggest that posts like Extension Officer (Industries,) Extension Officer (Education) and the Compost Development Inspector could be abolished and their work could be entrusted to other persons working in the block

[Sri C. Chiranjeevalu Naidu] [4th March 1966

areas. Several Extension Officers are without any work. Recently under the Intensive Agricultural Work Scheme, we have appointed a number of Extension Officers (Agriculture), Agricultural Demonstrators and District Agricultural Officers and I do not think that they have got sufficient work. So, this aspect of the matter also may be looked into.

Coming to my constituency, for the last so many years I have been pointing out that the work *re* integration of the service personnel transferred from the Andhra Pradesh Government to the Madras Government and the fixation of the revised scales of pay and the arrears of pay, has not been completed. Even the Government Order issued in that respect, has not been implemented. I request the Government to complete the work before March 1966.

(MR. Speaker in the Chair.)

There is a proposal to construct a Headquarters Hospital at Tirutani and there is a drinking water supply scheme and I request the Government to complete the schemes at an early date.

As regards sub-taluk headquarters at Pallipat, a river passing nearby disrupts the transport facilities. An estimate for the construction of a bridge across it has been prepared and I request the Government to construct the river bridge as early as possible.

With regard to Primary Health Centre, incomplete buildings which have been transferred from the Andhra Pradesh Government, have still to be completed. They are in the Punimangadu village, Tiruvelangadu Panchayat Union, Chingleput district. I request the Government to complete the work as expeditiously as possible.

Regarding irrigation sources in the Tiruttani taluk, I have been representing to the Madras Government for a long time that they should address the Andhra Pradesh Government to get their concurrence for implementing certain schemes there. I request the Government to take the necessary steps in the matter.

As regards the Surutipalli and Araniar projects, I request the Government to take up the matter with the Andhra Pradesh Government and formulate a scheme whereby there could be joint control as these schemes benefit purely the people of the Madras State. With these words, I conclude my speech.

Thank you, Sir.

*திரு. கே. பி. பழனி :* கனம் சபாநாயகர் அவர்களே, மதிப்பிற்குரிய கனம் முதல் அமைச்சர் அவர்களால் சபை முன் வைக்கப்பட்டுள்ள இந்த நிதிநிலை அறிக்கையை வரவேற்று, ஆதரித்து என் கருத்துக்களை எடுத்துக் கூற ஆசைப்
10-30 a.m. படுகிறேன். ஒரு நாட்டின் நிதி அமைச்சரின் பொறுப்பைப் பற்றி பேசுகிற மேலை நாட்டு பொருளாதார மேதை ஒருவர்,



4th March 1966] *[திரு. கே. பி. பழனி]*

'The Finance Minister should take into consideration not only the prosperity of the country but also the posterity.'

என்று எழுதியிருக்கிறார். நாட்டின் நிதி அமைச்சர் நாட்டின் வளத்தைப் பெருக்குவதோடு திருப்தி அடைந்து விடுதல் கூடாது. வருங்கால சந்ததியினரைப் பற்றி சிந்தித்து திட்டத்தை உருவாக்க வேண்டுமென்று கூறியிருக்கிறார்கள். அந்த வகையில் நம் நாட்டின் வளத்தைப் பெருக்குவதோடு வருங்கால சமுதாயம் வளமாக வாழவேண்டுமென்ற நோக்கத்தோடு உருவாக்கப்பட்ட சிறந்ததொரு திட்டமாகும் இந்த நிதிநிலை அறிக்கை. குறிப்பாக எதிர்க்கட்சி அன்பர்கள் திட்டத்தில், அறிக்கையில் இருக்கிற தவறுகளைச் சுட்டிக்காட்டுவதற்குப் பதிலாக தனித்த முறையில் அமைச்சர்களைத் தாக்கிப் பேசிய பேச்சுக்களை கடந்த சில தினங்களாகக் கவனித்துப் பார்த்தோம். இன்று பேசிய எதிர்க்கட்சி உப தலைவர் அவர்கள் அவர்களது உரையிலே குறிப்பிட்டார்கள், தேர்தலுக்கு முன்பு குறைந்தபட்சம் மூன்று மாதங்களுக்கு முன்பாக அமைச்சர்கள் ஆட்சிப் பொறுப்பிலிருந்து ராஜிநாமா செய்யவேண்டுமென்று. நான் படித்தவரையில் எந்த ஜனநாயக நாட்டிலும், அமெரிக்காவிலானாலும் சரி அல்லது ஜனநாயகத்தின் தாயகம் என்று சொல்லப்படுகிற இங்கிலாந்து நாட்டிலானாலும் சரி அத்தகைய ஒரு முறை இருப்பதாகத் தெரியவில்லை, பார்க்கமுடியவில்லை.

அடுத்து, அவர்கள் உரையில்—ஏறத்தாழ 50 நிமிடங்கள் பேசினார்கள்—உணவுப் பிரச்னையில் இருக்கிற பலவகையான குறைகளை அவர்கள் எதிர்க்கட்சியில் இருக்கிற காரணத்தினால் சுட்டிக் காட்டினார்கள்; வரவேற்கிறோம், ஏற்றுக்கொள்கிறோம். அதே நேரத்தில் உணவு உற்பத்திக்கான உருப்படியான ஒரு யோசனையை அவர்கள் 50 நிமிட உரையில் குறிப்பிட்டார்களா என்றால் நிச்சயமாக இல்லை. அவர்கள் உரையில் அவர்கள் உற்பத்தியைப் பெருக்குவதற்கான ஆலோசனையைக் குறிப்பிட்டிருப்பார்களேயானால் உண்மையில் பொறுப்புள்ள எதிர்க்கட்சிகள் என்று நான் ஏற்றுக்கொள்ளமுடியும் என்று இந்த சந்தர்ப்பத்தில் எடுத்துக் கூற ஆசைப்படுகிறேன்.

அடுத்து, கடந்த மூன்று நான்கு தினங்களாக பல அங்கத்தினர்கள் பேசிய நேரத்தில் எல்லோரும் ஒரு செய்தியை வலியுறுத்திச் சொன்னார்கள். அதாவது இந்த அரசாங்கம் அதிகமான வரிகளை விதித்திருக்கிறது என்று சொல்லப்பட்டது. குறிப்பாக எதிர்க்கட்சி அங்கத்தினர் ஒருவர், நம்முடைய மதிப்பிற்குரிய முதலமைச்சர் அவர்கள் நிதி இலாகாவின் பொறுப்பை ஏற்றுக்கொண்ட பிறகு 19 வரிகளை விதித்திருக்கிறார்கள் என்கிற பட்டியலை கொடுத்திருக்கிறார்கள். உண்மையிலேயே திட்டமிட்ட பொருளாதாரத்தில் வரிகளினுடைய இடம் முக்கியத்துவம் வகிக்கிறது என்பதை நான் சொல்லத் தேவையில்லை. அவருடைய உள்ளக் கிடக்கையை பார்க்கின்ற நேரத்தில் வரி தேவையில்லை, வளர்ச்சி எதுவும் தேவையில்லை என்பது தான் பொருளாகும். இப்போது இருக்கக்கூடிய சமுதாய அமைப்பு இப்படியே இருக்க வேண்டும்,

புதிய வரிகள் எதுவும் போடவேண்டிய அவசியமில்லை. புதுத் திட்டங்கள் எதுவும் தேவையில்லை என்று அவர்கள் கூறுகிறார்களா என்று நான் கேட்க ஆசைப்படுகின்றேன். அவர்கள் சொல்வதற்கும்—வளர்ச்சிக்கு திட்டங்களே தேவையில்லை, இப்பொழுது இருப்பது போலவே இருந்தால் போதும், என்று சொல்லுகின்ற அரசியல்வாதிகளுக்கும் இருக்கின்ற வேறுபாட்டை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை என்பதை சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். இப்போது இருக்கக் கூடிய அமைப்பு அப்படியே இருக்கவேண்டும், எந்தவிதமான புதிய திட்டங்களும் தேவையில்லை, வரிகள் எதுவும் தேவையில்லை என்கின்ற வாதத்தை ஏற்றுக்கொண்டால், கவர்னரின் தலைமையில் ஒரு அதிகாரியே இருந்து எல்லாவற்றையும் நடத்தலாம், சட்ட மன்ற விவாதங்கள் எல்லாம் தேவையில்லை என்றுதான் அவர்கள் சொல்லுகிறார்கள் என்று ஊகிக்கவேண்டியிருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், சில எதிர்க்கட்சி அன்பர்கள், மதுவிலக்குத் திட்டம் தோல்வியடைந்து விட்டது என்றும் அதை ரத்துசெய்துவிட வேண்டும் என்றும் சொன்னார்கள். இன்றைய சமுதாயத்தின் அடித்தளத்தில் இருக்கின்ற ஏழை எளிய மக்கள் ஓரளவுக்கு வசதியாகவும் நிம்மதியாகவும் வாழ்கின்றார்கள் என்றால் அதற்குக் காரணம் இன்னும் இந்த மதுவிலக்குத்திட்டம் இருந்து கொண்டிருப்பது தான். சுருக்கமாக சொல்ல வேண்டுமென்றால், மனிதனை மனிதனாக வாழவைக்கக்கூடிய திட்டம் மதுவிலக்குத் திட்டம். மதுவிலக்குத் திட்டத்தில் தோல்வி, தோல்வி என்று பேசுவதைக்காட்டிலும் இந்தத் திட்டத்தின் அவசியத்தை பாமர மக்கள் அறியும்படியாக அவர்களிடத்தில் எடுத்துச் சொல்லி இந்தத் திட்டம் நல்ல முறையில் வெற்றிகரமாக நடைபெறுவதற்கு உழைப்பார்களேயானால் அவர்கள் இந்த சமுதாயத்தின் அடித் தளத்தில் வாழ்கின்ற மக்களின் வாழ்விலும் வளர்ச்சியிலும் அக்கறை கொண்டவர்கள் என்பதை உலகம் அறியும் என்பதை அவர்களுக்குச் சொல்லிக் கொள்கிறேன்.

மற்றொன்று எதிர்கட்சியைச் சார்ந்த பல அங்கத்தினர்கள் பேசுகின்ற நேரத்தில் சரியான முறையில் சமதர்மக் கொள்கை நிறைவேற்றப்படவில்லை என்று சொன்னார்கள். ஆனால் அவர்களுடைய தலைவர்கள் எல்லாம் இன்றைக்கு சமதர்மக் கொள்கையை விட்டுவிடுங்கள் என்று சொல்லக்கூடிய அளவிற்கு வந்திருக்கிறார்கள். அன்றைக்கு—அதாவது தேர்தல் காலத்தில், காகிதப் பூ மணக்காது, காங்கிரஸ் சோஷலிஸம் இனிக்காது என்று சொல்லி வந்தவர்கள், கம்யூனிஸ்ட்களைவிட சோஷலிசம் வேண்டும் என்று சொல்லிக்கொண்டு வந்தவர்கள் இன்றையதினம் சமதர்மத்தை விட்டுவிடுங்கள் என்று சொல்ல முன்வந்திருக்கிறார்கள் என்றால், அவர்களுடைய வழிகாட்டி, நல்லவர், வல்லவர், சக்ரவர்த்தி திருமகனார் கொடுத்த உபதேசம்தான் இந்த அளவிற்கு வேலை செய்திருக்கிறது என்று தான் நாம் ஊகிக்கவேண்டியிருக்கிறது. ஆனால், உண்மையில் ஏழை எளிய மக்களுடைய





முன்னேற்றத்தில் ஆர்வமும் அக்கரையும் இவர்களுக்கு இருக்குமானால், சமதர்மக்கொள்கையை விட்டு விடுஙகள் என்று சொல்ல மாட்டார்கள் என்பதை இந்தச் சர்ந்தர்ப்பத்தில் எடுத்துச் சொல்லிக்கொள்ளவிரும்புகிறேன். '1967-ல் நாங்கள்' என்று சொல்லக்கூடிய அன்பர்களும், எதிர்கட்சித் துணைத் தலைவர் அவர்களும் எந்த அளவிற்கு ஏழை எளிய மக்களுக்காக என்னென்ன செய்யவேண்டும் என்று சொல்லுகிறார்களோ அந்தக் கருத்துக்களை எல்லாம் ஏற்றுக்கொள்கின்ற வகையில் அகில இந்திய காங்கிரஸ் தலைவர் திரு. காமராஜ் அவர்கள், இதற்காக பல திட்டங்களை போடுகின்ற இந்த நேரத்தில் தயவுசெய்து முதலாளிகளுக்கு ஆதரவாக இருக்கக்கூடிய நிலையில் நின்று, சமதர்மக் கொள்கையை விட்டுவிடுங்கள் என்று சொல்லாதீர்கள், அதன் மூலமாக ஏழை எளிய மக்களுடைய விரோதத்தை சம்பாதித்துக் கொள்ளாதீர்கள் என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையில் நெருக்கடியான ஒரு நிலையில் இப்படி ஒரு திட்டம் உருவாக்கப்பட்டிருக்கிறது என்பதை பொறுப்புணர்ச்சியுள்ள அங்கத்தினர் அனைவரும் ஒத்துக் கொள்வார்கள். இந்த அறிக்கையானது, வெளிநாடுகள் எல்லாம் நமக்கு வழக்கமாகக் கொடுத்து உதவுகின்ற உதவிகள் எல்லாம் கிடைக்குமா என்ற உறுதியற்ற நிலையில், இந்தத் திட்டம் உருவாக்கப்பட்டிருக்கிறது. எந்தெந்த நாடுகள் எல்லாம் அந்நிய செலாவணியை எதிர்பார்த்து நின்றனவோ அவை எல்லாம் எந்த அளவில் உதவப்போகிறது என்பது தெரியாத நிலைமை இருந்து வருகிறது. இந்த நேரத்தில், உருவாக்கியிருக்கின்ற இந்தத் திட்டத்திற்கு நாட்டு மக்களிடமிருந்து நல்ல ஆதரவு கிடைக்கும் என்ற நம்பிக்கையோடு இந்த அறிக்கையை நமது முதலமைச்சர் அவர்கள் இங்கு சமர்ப்பித்திருக்கிறார்கள். சமுதாயத்தின் அடிப்படை தேவையாக இருக்கின்ற உணவு, மருத்துவம், சமூக பாதுகாப்பு இவை போன்ற துறைகளில் தொடர்ந்து சிறப்பாக கவனம் செலுத்தப்படும் என்ற உறுதியையும் உத்திரவாதத்தையும் நமது முதல் அமைச்சர் அவர்கள் தமது உரையில் தந்திருக்கிறார்கள், அது மிகவும் வரவேற்கத்தக்க ஒன்றாகும் என்பதை எடுத்துக் கூற விரும்புகிறேன்.

அடுத்து வேளாண்மை வளர்ச்சி நாட்டின் விடுதலைக்குப் பிறகு இரண்டு, மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களிலும், நமது நாடு விவசாயத்தையே நம்பியிருக்கின்ற காரணத்தால் விவசாய உற்பத்தியை—உற்பத்திப் பெருக்கத்தின் அடிப்படையை வைத்துக்கொண்டு நமது அரசாங்கம் திட்டங்களை தீட்டிக்கொண்டு வருகின்றது. இப்போது ஏற்பட்டிருக்கின்ற உணவுப் பிரச்னை உண்மையில் தமிழகத்தில் மட்டும் ஏற்பட்டிருக்கின்ற பிரச்னை அல்ல. அகில இந்திய ரீதியில் இருக்கக்கூடிய பிரச்னை என்பதை எதிர்க்கட்சி அன்பர்கள் மறுக்க மாட்டார்கள் என்று நம்புகிறேன். நேற்றுப் பேசிய அங்கத்தினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். நாற்பது, நாற்பத்தைந்து ஆண்டுகளாக முன்னேறி வருகின்ற ரஷ்யாவில்கூட இந்த உணவுப்பற்றாக்குறை எழவில்லையா என்ற

கருத்தைச் சொன்னார்கள். இது அகில இந்திய ரீதியில் இருக்கின்ற உணவுப் பிரச்னை, மற்ற மற்ற மாநிலங்களில் பல நெருக்கடியான சிக்கல்கள் ஏற்பட்டிருக்கின்றன. நம்முடைய மாநிலத்தைப் பொறுத்த வரையில் எந்த அளவுக்கு இந்த விஷயத்தில் வெற்றி கண்டிருக்கிறோம் என்பதைப் பார்க்கின்ற நேரத்தில் உண்மையில் இந்த அமைச்சரவை பாராட்டுதலுக்குரியதாகும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, கனம் எதிர்கட்சித் துணைத் தலைவர் அவர்கள், டாக்டர் நடராஜன் அவர்கள் ஆங்கிலத்தில் எழுதிய கட்டுரையில் உணவுப் பிரச்னையைப்பற்றி எழுதியிருப்பதைக் குறிப்பிட்டார்கள். அவர் டாக்டர் நடராஜன் அவர்கள் எம்.எல்.ஏ. என்று போட்டுத் தான் எழுதியிருக்கிறார். அவர் ஒரு ஆண்டு மலரில் கட்டுரை எழுதியிருக்கிறார்—'தொழில் உற்பத்திக்கும், தொழில் வளர்ச்சிக்கும் இன்னும் தனி மனிதனுடை மூலதனம், இயந்திரம் இந்த இரண்டு சக்திகளும் தேவையாகும். ஆனால், விவசாயத்தைப் பொறுத்த மட்டில் இயற்கை பெரும் பங்கு வகிக்கிறது. இயற்கையின் உதவியைப் பெற்றால்தான் விவசாயத்தில் வளர்ச்சி காண முடியும், இதைப் பலர் உணருவதில்லை' என்று அந்த உரையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். இன்று இயற்கையின் உதவியில் சில கோளாறுகள் ஏற்பட்டதின் காரணமாக ஓரளவுக்கு உற்பத்தி குறைந்திருக்கிறது. அதே நேரத்தில் உற்பத்திப் பெருக்கத்திற்காக அரசாங்கம் பல வகை முயற்சிகளை எடுத்துவருகின்ற இந்த சந்தர்ப்பத்தில் ஒரு சில செய்திகளை மட்டும் சொல்ல ஆசைப்படுகிறேன்.

தஞ்சை மாவட்டத்தில் விதைப்பண்ணைகள் மிகவும் சிறந்த முறையில் பணியாற்றி வருகின்றன. அங்குள்ள எல்லாப் பண்ணைகளும் நல்ல லாபத்தில் பணியாற்றிவருவதையும் நாம் பார்க்கின்றோம். உற்பத்திப் பெருக்கத்திற்காக ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியன் எல்லைக்குள்ளும் ஒவ்வொரு விதைப்பண்ணை ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, என்னுடைய தொகுதியில், செங்குபட்டி பகுதியில்—குறிப்பாக புதுக்கோட்டைக்கும் தஞ்சாவூர் மாவட்டத்திற்கும் இடையில் உள்ள பகுதி—15, 16 கிராமங்களில் நீர்ப்பாசன புதிய மிகவும் குறைவாக இருக்கும் காரணத்தால்—பக்கத்திலுள்ள புதிய கட்டளை கால்வாயிலிருந்து நீர்ப்பாசனவசதி செய்து கொடுக்க வேண்டும் என்ற கருத்தைத் தெரிவித்துக்கொள்வதோடு அதற்கு அரசாங்கம் ஆவன செய்யவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பல அங்கத்தினர்கள் இங்கே குறிப்பிட்டது போல் அரசாங்கம் நிர்ணயம் செய்திருக்கின்ற நெல் விலை உற்பத்தியாளர்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய நிலையில் இருந்தாலும், இன்றைய தினம் இருக்கக்கூடிய உற்பத்திச்செலவு, அதாவது 'காஸ்ட் ஆஃப் கல்டிவேஷன்' அதிகமாக இருக்கிறது, அதோடு விவசாயிகளுக்குத் தேவைப்படுகிற அத்தியாவசிய பொருட்களின் விலையைப்பற்றியும், விவசாயிகளைப்பற்றியும் அரசாங்கம் சிந்திக்கவேண்டும் என்று





கேட்டுக்கொள்கிறேன். இப்போது தஞ்சை மாவட்டத்திலும் மற்றும் ஒரு சில மாவட்டங்களிலும் வடி முனைக் குழாய் பாசனத் திட்டத்தை அரசாங்கம் செயல்படுத்திக்கொண்டு வருகிறது. அரசாங்கமானது மின்சாரம் கொடுக்கிற பகுதிகளில் ஆண்டு ஒன்றுக்குக் குறைந்த பட்சக் கட்டணமாக ரூ. 87.50 வசூலிக்கப் படுகிறது. அதே நேரத்தில் தனியார் துறையைச் சார்ந்தவர்கள் மின்சாரம் கொடுக்கின்ற இடங்களில் ஆண்டு ஒன்றுக்குக் குறைந்த கட்டணம் ரூ. 225 வசூலிக்கப்படுகிறது. இந்த அவல நிலையை மாற்றி அமைத்து இரண்டையும் ஒன்றாக்கி, எவ்வளவு குறைந்த அளவுக்கு மின்சாரக் கட்டணத்திற்கான தொகையை வசூலிக்கலாமோ அதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, தஞ்சை மாவட்டத்திலிருந்து வந்திருக்கிற பல அங்கத்தினர்கள் இந்த மன்றத்தில் வலியுறுத்திக் கூறியது போல, இந்த ஆண்டில் தஞ்சை மாவட்டத்தில் விளைவு குறைச்சலாக இருக்கிற காரணத்தினால் 50 சத வீதம் கிஸ்தி தள்ளுபடி செய்து கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கனம் முதல் அமைச்சர் அவர்கள் தஞ்சை மாவட்டத்திற்கு வந்தபோது அங்குள்ள விவசாய மக்கள் அமைச்சர் அவர்களிடத்திலே விண்ணப்பங்களைக் கொடுத்திருக்கிறார்கள், இந்த மன்றத்திலேயும் அங்கத்தினர்கள் குறிப்பிட்டார்கள். இதையும் இந்தச் சந்தர்ப்பத்தில் வலியுறுத்திக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

தஞ்சையில் விளாங்குடியையும், திருச்சியில் திருமானூர் என்ற இடத்தையும் இணைத்து கொள்ளிடத்தில் பாலம் கட்டவேண்டுமென்ற கோரிக்கை பல ஆண்டுகளாக இருக்கின்றது. அரசாங்கம் எஸ்டிமேட் கணக்கைப் பார்க்கிற நேரத்தில் 36 லட்சம் ரூபாய் . . . . (மணி அடிக்கப்பட்டது).

* திரு. ர. ஜீவரத்தினம்: மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, நம் முதல் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற 1966-67-ம் ஆண்டு நிதி நிலை அறிக்கையை வரவேற்றுச் சில வார்த்தைகளைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த மன்றத்திலே கடந்த நான்கு, ஐந்து நாட்களாக நிதி நிலை அறிக்கையைப் பற்றி விவாதங்கள் நடந்துகொண்டிருக்கின்றன. நாம் எல்லோருமே மக்கள் பிரதிநிதிகளாக இங்கு வந்திருக்கிறோம். "பதவி பூர்வ புண்ணியானாம்" என்று ஒரு சுலோகம் இருக்கிறது. அதே போன்று எல்லோரும் பதவி நிமித்தமாகத் தான் இங்கு வந்திருக்கிறோம். முதல் அமைச்சர் அவர்களும் பதவி நிமித்தமாகத்தான் இங்கே வந்திருக்கிறார். நாம் எல்லோரும் பூர்வ ஜென்மத்தில் ஏதோ நல்ல காரியங்கள் செய்ததன் நிமித்தமாக இப்போது இங்கு வந்திருக்கிறோம். இந்த ஜென்மத்திலேகூட பூர்வ ஜென்ம பலனைக் காப்பாற்றிக் கொண்டால் நல்லதாக இருக்கும் என்பது என்னுடைய கோரிக்கை. கனம் முதல் அமைச்சர் அவர்களும் நம்மைப் போன்ற பிறவி தான். அவர்கள், திருவரங்கத்தில் எம்பெருமான் எப்படித் துயிலாற்றி மக்கள்

[திரு. ர. ஜீவரத்தினம்] [4th March 1966

செய்யக் கூடிய அநேக நல்ல காரியங்களையும், அநேக தீமையான காரியங்களையும் பார்த்துச் சகித்துக் கொண்டு இருக்கிறார்களோ, அதே போன்று நம் முதல் அமைச்சர் அவர்களும் பக்த ரட்சகனாக அமர்ந்து எல்லோரும் கூறக்கூடிய வாழ்த்துக்களையும், வசைமொழிகளையும் கேட்டுக்கொண்டு, பார்த்துக்கொண்டு இருக்கிறார். அவர்களைப் பற்றி எனது சொந்த அபிப்பிராயம் என்ன என்றால், பகவான்கூட பக்தனுக்குத்தான் காட்சி அளித்தார். பக்தனுக்குத் தான் தன் அருளைப் பொழிந்தார் என்று புராணங்களிலும், இதிகாசங்களிலும் பார்க்கிறோம். ஆனால் நம் பக்தவத்சலம் அவர்கள் யார் யார் வசைமொழி பாடுகிறார்களோ, யார் யார் ஏசுகிறார்களோ அவர்களுக்கு அனுக்கிரகம் புரிந்து வருகிறார்கள் என்பது எனது அபிப்பிராயம். அந்த அளவில், அவருடைய பெருந்தன்மையை நாம் மிக மிகப் பாராட்ட வேண்டும். இந்தச் சபைக்குக்கூட அவர்கள் எந்த அளவிலே மரியாதை கொடுத்திருக்கிறார்கள் என்பதை ஒரு உதாரணத்தின் மூலமாகச் சொல்லிக் கொள்கிறேன். ஆரம்பத்தில் நான் சொன்னது போல "பதவி பூர்வ புண்ணியானாம்" என்ற முறையில் பதவி நிமித்தமாகத் தான் நாம் எல்லாம் இங்கு வந்தோம், அப்படித் தான் மக்கள் பிரதிநிதிகளாக வந்தோம். பிரதிநிதிகள் எல்லோரும், 206 பேர்களும் அமர்ந்துகொண்டு இருக்கும்போது, அவர் ஒருவர் தன்னுடைய உடல் நிலை காரணமாகக் கூட நிதி நிலை அறிக்கையை உட்கார்ந்து படிக்கக் கூடாது, அல்லது படிக்காமல் இருப்பது கூடாது என்று, டாக்டர்கள் வற்புறுத்தியும் அவர்கள் தடுத்தும் கேட்காமல், மக்கள் சேவையே மகேஸ்வரன் சேவை என்று குறிக்கோளாகக் கொண்டு, ஒரு மணி 40 நிமிடம்—அதாவது 100 நிமிடம்—நின்று கொண்டே, சொட்டு ஜலம்கூட அருந்தாமல் வாசித்தார் என்றால், மக்களுக்கும், மக்கள் பிரதிநிதிகளுக்கும், பதவிக்கும் எவ்வளவு உயர்ந்த அந்தஸ்து கொடுத்திருக்கிறார்கள் என்று சீர்தூக்கிப் பார்த்து நடந்துகொள்ளவேண்டுமென்று நான் தங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, எங்கள் ஜில்லாவை பொறுத்த வரையிலே இந்த நிதி நிலை அறிக்கையிலே ஏதாகிலும் இருக்கிறதா என்றால், ஏதோ இரண்டொரு அம்சங்கள் இருக்கின்றன. ஒன்று, அரக்கோணம் தாலுகாவில் ஒரு வார்ப்படத் தொழிற்சாலை ஆரம்பிக்கப் போகிறோம்; இன்னொன்று ஆம்பூர் நகரத்தில் ஒரு ஆஸ்பத்திரி கட்டப் போகிறோம். இன்னும் சில விஷயங்கள் இருக்கின்றன. இந்த விஷயத்திலே நான் ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். வட ஆற்காடு ஜில்லாவைப் பற்றி தினசரி இங்கு மந்திரிகளாலும், மற்றவர்களாலும் புகழ்ந்து, பாராட்டிப் பேசப்படுகிறது. இந்த வட ஆற்காடு ஜில்லா மக்கள் எப்போதும் உழைத்து உண்பவர்கள் தான். இன்னொருவர் இடத்தில் எதற்கும் அணுகுவது கிடையாது. சரித்திரத்தைப் பார்த்தாலும், அந்தக் காலம்தொட்டு தன் உழைப்பு உண்டு, தான் உண்டு என்று இருந்தார்களே தவிர எந்த அரசின் மீதும் படையெடுத்தது கிடையாது. இன்னொரு



4th March 1966] [திரு. ர. ஜீவரத்தினம்]

வருக்கு வேண்டுமென்றால் உதவியாக இருந்திருப்பார்கள். அவர்கள் அடங்கி இருந்தவர்கள். அவர்களுக்குப் பல நன்மைகள் செய்யவேண்டும் என்பது என்னுடைய அவா. என்ன காரணத்தினாலோ என்னவோ தெரியவில்லை, வட ஆற்காடு என்றால், தொழில் துறையிலும் இதரத் துறைகளிலும் சரி சற்று ஒதுக்கப்பட்டிருக்கிறது. நானும் ஆராய்ச்சி செய்து செய்து பார்க்கிறேன். சர்க்கார் இலாகாவில் இருக்கிறவர்கள், ஐ.ஏ.எஸ்.-ல் இருக்கிறவர்கள். வட ஆற்காடு ஜில்லாவைச் சேர்ந்தவர்கள் இல்லாமல் இருக்கிறார்களோ என்பது ஐயங்களுள் ஒன்று. அல்லது குறிப்பிட்ட டைரக்டர் பதவிகளில் வட ஆற்காடு ஜில்லாவைச் சேர்ந்தவர்கள் இல்லாமல் இருக்கிறார்களோ ? அல்லது காரியதரிசியாக இருப்பவர்களில் யாரும் வட ஆற்காடு ஜில்லாவைச் சேர்ந்தவர்கள் இல்லாமல் இருக்கிறார்களோ? என்று பார்த்தால், இல்லாமல் தான் இருக்கிறார்கள். அந்த நிலைமையினாலோ என்னவோ வட ஆற்காடு ஜில்லாவிலே எந்தத் தொழிலும் ஏற்படாத நிலையில் இருக்கிறது. இதற்குக் காரணம் என்ன என்பதை கனம் முதல் அமைச்சர் அவர்களும், தொழில் அமைச்சர் அவர்களும் ஆராயவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வட ஆற்காடு ஜில்லாவில், வேலூரில் தொழில் கருத்தரங்கு நடத்தினோம். தொழில் அமைச்சரும், முதல் அமைச்சரும் வந்திருந்தார்கள். பல இலாகா காரியதரிசிகள் கலந்து கொண்டார்கள். தொழில் இலாகா காரியதரிசி திரு. லட்சுமிநாராயணன் அவர்கள் ஒரு இலாகாவுக்குத் தலைமை வகித்து ஒரு நிர்வாக அறிக்கையை வாசித்திருக்கிறார். அந்த அறிக்கையில், வட ஆற்காடு ஜில்லா மக்கள் 3 சதவிகிதம் கூட தொழிலில் இல்லாமல் இருக்கிறார்கள், உடனடியாக 50 கோடி ரூபாயை முதலீடு செய்து அந்த ஜில்லாவைத் தொழில் மயமாக்க வேண்டும் என்று கூறியிருக்கிறார். அந்த அறிக்கையையாகிலும் அமலுக்குக் கொண்டுவரவேண்டுமென்று சர்க்காரை வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

அதே போன்று இன்னும் பல குறைகள் வட ஆற்காடு ஜில்லாவைப் பற்றிச் சொல்லிக்கொள்ளவேண்டும். இப்போது நான் பேசுவது 30 லட்சம் வட ஆற்காடு மக்கள் சார்பாகவும், 20 சட்டசபை அங்கத்தினர்கள் சார்பாகவும் தான். எங்கள் ஜில்லாவில் தொழில் தான் வளரவேண்டும். இப்போது எங்கள் ஜில்லா பிற்போக்காக இருக்கிறது. இந்த மாநிலத்திலே இதர ஜில்லாக்கள் ஏராளமாக தொழில் துறையில் வளர்ந்திருக்கின்றன. சென்னை நகரத்தில் மக்கள் வாழ்வதற்குக் கூட இடம் இல்லாமல் அவ்வளவு நெரிச்சமாகத் தொழில்கள் வளர்ந்திருக்கின்றன. தொழில் துறையும் வளர்ந்திருக்கிறது. ஆனால் 80 மைல்களுக்கு அப்பால் உள்ள வட ஆற்காடு ஜில்லாவிலே தொழிலே இல்லாத நிலை இருக்கிறது. சர்க்காரானது சோஷலிஸத்தைக் குறிக்கோளாகக் கொண்ட சர்க்கார். அண்மையில் நடந்த புவனேஸ்வரம் காங்கிரசிலே கூட ஜனநாயக சோஷலிசம் வளருவது பரவலாக வளர வேண்டும், குவியலாக வளரக் கூடாது என்று கூறியிருக்கிறார்கள். அதே நிலையை அனுசரித்து, மாநிலத் தலைநகரில் மட்டும்

[திரு. ர. ஜீவரத்தினம்] [4th March 1966

தொழில்கள் வளருவதை நிறுத்தி விட்டு, ஜில்லாத் தலைநகரிலெல்லாம் தொழில்களை வளர்க்கவேண்டும். ஜில்லாத் தலைநகரங்களை எடுத்து, வளர்ச்சி அடைந்தது எது, வளர்ச்சி அடையாதது எது என்று பார்த்து, வளர்ச்சி அடையாத தலைநகரங்கள் விஷயத்தில் முதல் ஸ்தானம் அளித்து அவைகளை வளர்க்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தினசரி அமைச்சர்கள் வட ஆற்காடு ஜில்லா விவசாய உற்பத்தியில் ஏராளமாக உற்பத்தி செய்துகொண்டிருக்கிறது என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அமைச்சர்களைப் பார்க்கும்போது இதைச் சொன்னவுடன் நாங்களும் கொஞ்சம் பெருமை அடைந்து, அவர்களிடத்திலே சென்ற காரியத்தை மறந்து சிரித்து விட்டு வந்து விடுகிறோம். தஞ்சை ஜில்லாவை எடுத்துக்கொண்டால் அங்கு
11-00 a.m. இயற்கை ஏராளமாக உதவி செய்கிறது. வட ஆற்காடு ஜில்லாவை எடுத்துக்கொண்டால் இயற்கை விரோதமாக இருக்கிறது. இருப்பினும், நாங்கள் நன்றாக கிணறுகள் வெட்டி மின்சாரத்தின் உதவி கொண்டு கிணற்றுப் பாசனத்தின் மூலம் விவசாய உற்பத்தி செய்கிறோம். ஒரு விவசாயிக்கு நான்கு குழந்தைகள் என்றால், அந்த நான்கு குமாரர்களும் வேறு தொழில்கள் இல்லாத நிலைமையில் விவசாயத்திலேயே ஈடுபடவேண்டிய நிலைமை இருப்பதினால், அவர்களுடைய வாழ்க்கை சுபீட்சமாக இல்லை. விவசாயிகள் வாழ்க்கை வளம் பெறவேண்டுமென்று சொன்னால் ஒரு விவசாயிக்கு நான்கு குமாரர்கள் இருந்தால், இரண்டு குழந்தைகள் விவசாயத்தைக் கவனிப்பது, இரண்டு குழந்தைகள் தொழிலைக் கவனிப்பது என்ற ஒரு நிலைமை இருந்தால் இன்னும் அதிக உற்சாகத்துடன் விவசாயத்தில் ஈடுபட்டு உற்பத்தியை அதிகரிக்க முடியும். எங்களுக்கு உணவு இருக்கிறதோ, இல்லையோ நாங்கள் ஏறத்தாழ ஒரு லட்சம் டன் உணவு தான்யத்தை இதர ஜில்லாக்களுக்குக் கொடுக்கிறோம். 1964-ம் ஆண்டில் எங்கள் பகுதியில் பஞ்சம் வந்தபொழுது 5,000 டன் உணவு தான்யம் கொடுப்பதற்குக்கூட எல்லா ஜில்லாக்களும் தயாராக இல்லை. எங்கள் ஜில்லாவில் 5 சதவிகிதம் தான் இந்த ஆண்டு உணவு உற்பத்தி செய்திருக்கிறோம். அப்படியிருந்தும் கேட்பவர்களுக்குத் தாராளமாகக் கொடுக்கிறோம். எங்களுக்கு இருக்கிறதோ, இல்லையோ என்ற நிலையிலும் கூட நாங்கள் தாராளமான மனப்பான்மையுடன் பிற ஜில்லாக்களுக்குக் கொடுத்து உதவுகிறோம். ஆகவே, சர்க்காரும் எங்கள் ஜில்லா மக்களின் மீது தாராளமான மனப்பான்மை காட்டி பல தொழில்கள் ஏற்படுத்தி அவர்களுக்கு உதவி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நாம் உணவு உற்பத்தி பற்றி பேசும்பொழுது விவசாயிகளுக்கு உரம் கொடுக்கிறோம், மாடுகள் வாங்குவதற்குக் கடன் கொடுக்கிறோம், விவசாயிகளுக்கு எல்லா விதமான வசதிகளையும் செய்து கொடுக்கிறோம் என்று சொல்லிக் கொள்கிறோம். ஆனால், இவை எல்லாவற்றையும் செய்தால் போதாது. விவசாயத்திற்கு ஆற்றுப் பாசனம் மிகவும் அவசியம். எங்கள் பகுதியில் பாலாறு பாசன விதிகள் என்ற விதிகள் அமலில் இருக்கின்றன. சுமார் 10



4th March 1966] [திரு. ர. ஜீவரத்தினம்]

ஆண்டுகள் காலமாக பாலாறு பாசன விதிகளை ரத்து செய்துவிட வேண்டும் என்று வற்புறுத்திக்கொண்டு வருகிறோம். இதுவரையில் அந்த விஷயமாக கவனம் செலுத்தப்படவில்லை. உண்மையிலேயே உணவு உற்பத்தியை அதிகமாகப் பெருக்கவேண்டுமென்றால், இந்தப் பாலாறு பாசன விதிகளை கண்டிப்பாக ரத்து செய்துவிடவேண்டும். அப்படி அந்த விதிகள் ரத்து செய்யப்பட்டால், நாங்கள் இன்னும் 20 சதவிகிதம் அதிகமாக உணவு உற்பத்தி செய்ய முடியும். ஆகவே, பாலாறு பாசன விதிகளை ரத்து செய்துவிடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று பெரிய விவசாயிகள் அதிகமாக உற்பத்தி செய்யவேண்டுமென்றால் விவசாய வருமான வரியை ரத்து செய்துவிட வேண்டும். அது சற்று அதிகமாக தொல்லை கொடுக்கக்கூடிய ஒரு வரி. விவசாய வருமான வரியின் மூலம் சர்க்காருக்கும் அதிகமான வருமானம் அல்லது லாபம் இருப்பதாகத் தெரியவில்லை. விவசாய வருமான வரியை ரத்து செய்வது நன்மை இல்லையா என்பதை கனம் முதல் அமைச்சர் அவர்கள் ஆராய்ந்து பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

எங்கள் ஜில்லாவுக்கு தொழில்கள் வேண்டும் என்று கேட்டுக்கொண்டிருக்கிறோம், சர்க்காரைக் கேட்டுக்கொண்டிருக்கிறோம், தொழில் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொண்டிருக்கிறோம். எங்கள் ஜில்லாவில் மூலப் பொருள்கள் இல்லை, போதுமான நிதி வசதி இல்லை என்று கூறப்படுகிறது. ஒரு தாலுகாவிற்கு ஒரு நூற்பு ஆலையாகிலும் ஏற்படுத்த வேண்டும். நூற்பு ஆலை கூட்டுறவுத் துறையில் ஏற்படுத்தினாலும் சரி, அல்லது தனியார் துறையில் ஏற்படுத்தினாலும் சரி, இப்பொழுது 3, 4 நூற்பு ஆலைகள் இருக்கின்றன. ஏழு தாலுக்காக்கள் நூற்பு ஆலைகள் இல்லாமல் இருக்கின்றன. ஏழு நூற்பு ஆலைகளுக்கும் சேர்த்து ரூ. 4 கோடி தேவைப்படும். அப்படி நூற்பு ஆலைகளை ஏற்படுத்தினால் தன்னுடைய குழந்தைகளை நூற்பு ஆலைகளில் சேர்த்திருக்கிறோம் என்ற பெருமையோடு விவசாயிகள் உணவு உற்பத்தியில் மேலும் உற்சாகத்தோடு ஈடுபடுவார்கள், விவசாயம் பெருகுவதற்கு சந்தர்ப்பம் ஏற்படும். ஆகவே நூற்பு ஆலைகள் ஏற்படுத்தவேண்டும் என்று கனம் தொழில் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அதே போன்று தொழில் பேட்டைகளை எடுத்துக்கொண்டால், அம்பத்தூர் தொழில் பேட்டை, கிண்டி தொழில் பேட்டை என்று தான் செய்திகள் வருகின்றனவே தவிர, வட ஆற்காடு ஜில்லாவில் தொழில் பேட்டையைப்பற்றி ஒன்றும் காணோம். நடுத்தரத் தொழில் பேட்டை ஒவ்வொரு தாலுகாவிற்கும் ஒன்று ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இதற்கு முதன்மை ஸ்தானம் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கல்வித் துறையை எடுத்துக்கொண்டாலும், வட ஆற்காடு ஜில்லாவில் என்ஜினியரிங் கல்லூரி கிடையாது. வைத்தியக் கல்லூரி கிடையாது. வட ஆற்காடு விவசாயிகள் உண்மையாக உழைக்கிறார்கள் என்று நாம் பிரமாதமாகச் சொல்லி கொண்

டிருக்கிறோம். இருந்தும், அங்கு விவசாயக் கல்லூரி கிடையாது. கஷ்டப்பட்டு ஏராளமாக உணவு உற்பத்தியைப் பெருக்கும் எங்களுக்கு அல்லவா 'சபாஷ்' என்று சொல்லி தட்டிக்கொடுத்து, 'இன்னும் அதிகமாகப் பாடுபடுங்கள்' என்று சொல்லி விவசாயக் கல்லூரி அமைத்துக்கொடுக்கவேண்டும்.

**கனம் திரு. பூ. கக்கன் :** வட ஆற்காடு ஜில்லா மக்களுக்கு அரசாங்கமே பல உதவிகளைச் செய்துகொண்டு வருகிறது. குறிப்பாக அங்கு இரவு நேரங்களில் பார்த்தால் எத்தனை பம்பு செட்டுகள் வேலை செய்கின்றன என்பது தெரியவரும். எவ்வளவோ உதவி செய்திருக்கிறோம் என்பது கனம் அங்கத்தினர் அவர்களுக்குத் தெரியும். இருந்தாலும் சொல்லி வைப்பதைச் சொல்லிவைக்கலாம் என்று தான் சொல்லுகிறார் என்று நினைக்கிறேன்.

**திரு. ர. ஜீவரத்தினம் :** கனம் சபாநாயகர் அவர்களே, மின்சார உதவி எங்களுக்கு செய்து கொடுத்தால் தான் நாங்கள் உணவு தான்யங்களை ஏராளமாக உற்பத்தி செய்து கொடுத்துக்கொண்டிருக்கிறோம். மின்சார உதவி கொண்டு உணவு உற்பத்தியை அதிகமாகப் பெருக்கவேண்டுமென்றால் கூட, விவசாயக் கல்லூரி அவசியம் தேவைப்படுகிறது. நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் எங்கள் ஜில்லாவில் ஒரு விவசாயக் கல்லூரி ஏற்படுத்துவதற்கு முதல் இடம் அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். தொழில் அமைச்சர் அவர்களைக் கேட்டதற்கு நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் எங்கள் ஜில்லாவில் ஒரு என்ஜினியரிங் கல்லூரி திறப்பதுபற்றி ஆலோசிக்கலாம் என்று சொன்னார்கள் . . . (மணி அடிக்கப்பட்டது).

**திரு. மு. பொ. வடிவேல் :** மதிப்பிற்குரிய சட்டமன்றத் தலைவர் அவர்களே, 1966-67-ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின் மீது என்னுடைய கருத்தை எடுத்துச் சொல்லுவதற்கு நான் ஆசைப்படுகிறேன். எனக்கு முன்பு பேசிய ஆளும் கட்சி உறுப்பினர்கள் எதிர்க்கட்சியிலே உள்ளவர்கள் அளவுக்கு மீறி குறைகள் சொல்லுகிறோம், சபையில் இம்மாதிரி குறைகளை எடுத்துச் சொல்லுகிறோம், வெளியிலேயும் இம்மாதிரி சொல்லுவோம் என்று அச்சப்பட்டு பேசினார்கள். வறுமையால் யாரும் சாகவில்லை, பிளேக், காலரா ஆகிய நோய்களின் மூலம் தான் செத்தார்கள. அப்படியிருக்கும்பொழுது எதிர்க்கட்சி துணைத் தலைவர் அந்த மாதிரி சொல்லலாமா என்று கூறி அங்கலாய்த்துக் கொண்டார்கள். கடந்த 13 ஆண்டு காலமாக நடந்துவருகிற காங்கிரஸ் ஆட்சியில் தான் "பிள்ளையோ பிள்ளை" என்று விற்ற செய்தி பத்திரிகையில் வெளி வந்திருக்கிறது. மழலை மொழி பேசும் பிள்ளையோ பிள்ளை என்று விற்றபொழுது, பத்திரிகை நிருபர்கள் ஏன் குழந்தையை விற்கிறீர்கள் என்று கேட்டபொழுது, வறுமையின் காரணமாக விற்கப்பட்டது என்ற செய்தி பத்திரிகையில் வெளி வந்திருக்கிறது. இதை யாராவது மறுக்க முடியுமா ? எட்டு குழந்தைகளை நல்லதங்காள் போல் பிடித்துக்கொண்டு கிணற்றிலே விழ, அது பற்றி விசாரித்த பஞ்சாயத்தார் வறுமையின் காரணமாக தற்கொலை செய்துகொண்டார்கள் என்ற முடிவுக்கு வந்தார்கள் என்று பத்திரிகையில் செய்தி வரவில்லையா ? ஆகவே நாங்கள்



இந்தக் குறைகளைப் பற்றி எடுத்துச் சொன்னால், ஏன் இப்படி எதிர்க் கட்சிக்காரர்கள் குறை கூறுகிறார்கள் என்று சொல்ல வேண்டும் என்று தங்கள் மூலமாக அவர்களைக் கேட்கிறேன்.

அடுத்து, ஆளும் கட்சி கனம் உறுப்பினர் திரு. பழனி அவர்கள் எங்களுடைய தலைவர் அறிஞர் அண்ணா அவர்கள் சமதர்மம் என்ற வார்த்தையை விட்டு விடும்படி சொன்னதாகக் கூறினார்கள். அறிஞர் அண்ணா அவர்கள் டெல்லியில் பேசும்பொழுது ஜனாதிபதி அவர்கள் உரையிலே சமதர்மம் என்ற வார்த்தை இல்லை, அப்படி சமதர்மம் என்ற வார்த்தை இல்லாத காரணத்தினால், காங்கிரஸ் சர்க்கார் சமதர்மம் என்று பேசிக்கொண்டு சமதர்மத்தைப் பின் பற்றவில்லை என்ற காரணத்திற்காக ஜனாதிபதி அவர்கள் தன்னுடைய உரையில் சமதர்மம் என்ற வார்த்தையை விட்டுவிட்டாரோ என்று சொன்னாரே ஒழிய, எங்களுக்கோ நாட்டு மக்களுக்கோ சமதர்மத்தை விட்டுவிடவேண்டும் என்று சொன்னதாக எங்கே இருக்கிறது என்று அவர்கள் காட்டமுடியுமா என்று நான் தங்கள் மூலமாக அவர்களைக் கேட்கிறேன்.

ஆளும் கட்சியைச் சேர்ந்த ஒரு அம்மையார் பேசும்பொழுது எங்கள் கட்சி உறுப்பினர் பேசியது பற்றி குறிப்பிட்டார்கள். நேற்றையதினம் எங்கள் கட்சி உறுப்பினர் திரு. அன்பில் தர்மலிங்கம் அவர்கள் பேசும்பொழுது 10 ஆண்டு காலமாக கடனுக்கு அதிகமாக வட்டி வசூலிக்கிறார்கள் என்பதாகத்தான் குறிப்பிட்டார்கள். கடன் கொடுக்கக்கூடாது என்று குறிப்பிடவில்லை. 10 ஆண்டு காலத்தில் முதல் ஆண்டுக்கு ரூ. 1,000-க்கு வட்டி வசூலிக்க வேண்டும், அடுத்த ஆண்டில் ரூ. 9,000-க்கு வட்டி வசூலிக்க வேண்டும். அப்படியில்லாமல் ரூ. 10,000-க்கும் 10 ஆண்டுகளுக்கு விவசாயிகளிடத்தில் வட்டி வசூலித்தால் அந்த வட்டிச் சுமையை, பாரத்தை விவசாயிகளால் தாங்கமுடியாது என்றுதான் குறிப்பிட்டார்கள். ஒரு விவசாயி இந்த ஆண்டு மார்ச்சு 20-ம் தேதி கடன் வாங்கினால், அடுத்த வருஷம் ஜனவரி மாதத்திலேயே டிமாண்டு கொடுத்துவிடுகிறார்கள். அடுத்த ஆண்டு மார்ச்சு மாதம் கடனைத் திருப்பிச் செலுத்தவேண்டுமென்றால், ஜனவரி மாதமே டிமாண்டு நோட்டீஸ் கொடுத்துவிடுகிறார்கள். எங்கள் தொகுதியில் இம்மாதிரி குறைகள் இருக்கின்றன. மார்ச்சு மாதம் டிமாண்டு கொடுத்தால் ஏப்ரல் மாதம் வசூலாகும். ஜனவரி மாதத்தில் வசூல் செய்தாலும், இரண்டு மாதங்களுக்கு வட்டியையும் சேர்த்து வசூல் செய்கிறார்கள். இப்படி நிலைமை இருந்தால் ஏழை விவசாயிகள் எப்படி முன்னேறுவது ? விவசாயிகள் நாட்டின் முதுகெலும்பு என்று சொல்லுவார்கள். இப்பொழுது அவர்களுடைய முதுகெலும்பு 'பெண்டு' ஆகியிருக்கிறது.

உதாரணத்திற்கு நான் ஒன்று சொல்லுகிறேன். இப்பொழுதெல்லாம் புதிய கிணறுகள் வெட்டுவதற்கு ரூ. 25,000 பண உதவி செய்து கொடுக்க அரசாங்கம் முன்வந்திருக்கிறது. அது பாராட்டத் தக்கது. பழைய கிணறுகளை செப்பனிடுவதற்கு ஏன் கடன் உதவி அளிக்கக்கூடாது ? புதிய கிணறுகளில் எங்கு தண்ணீர் வருகிறதோ அதே இடத்தில் பழைய கிணறுகளிலும் தண்ணீர்

வரும். இருந்தாலும் பழைய கிணறுகளை செப்பனிடுவதற்கு விவசாயிகளால் இயலவில்லை. புதிய கிணறுகள் வெட்டுவதற்குத் தான் பண உதவி செய்யப்படுகிறது. பழைய கிணறுகளை அபிவிருத்தி செய்வதற்கு உதவி செய்யலாம் என்று அபிவிருத்தி கவுன்சிலில் சிபார்சு செய்தாலும், கலெக்டர் அவர்கள் பழைய கிணறுகளை செப்பனிடுவதற்கு கடன் கொடுக்க முடியாது. ஆழம், அகலத்தை கணக்கு எடுத்துக் கூறுவதில் தவறு ஏற்படும். ஆகவே தேவையில்லை என்று கூறுகிறார்கள். உதாரணமாக 25 அடி ஆழம் இருக்கிறது என்று முன்கூட்டியே ஆழத்தை அளந்து கணக்கு எடுத்து வைத்துக் கொண்டு, அந்தக் கிணற்றை மராமத்து செய்வதற்கு கடன் கொடுப்பதில் தவறு ஒன்றும் இருக்க முடியாது. ஆகவே, வட ஆற்காடு மாவட்டத்தில் இந்த ஆண்டு பழைய கிணறுகளை மராமத்து செய்வதற்கு கடன் கொடுக்க வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆளும் கட்சி உறுப்பினர் திரு. ஜீவரத்தினம் அவர்கள் பம்பு செட்டுகள் போடுவதற்கு எவ்வளவு கஷ்டம் இருக்கிறது என்பதைப்பற்றி சொன்னார்கள். பாலாறு பேஸின் ரூல்ஸை ரத்து செய்துவிடவேண்டுமென்று கூறினார்கள். நாங்களும் கூட அது பற்றி வற்புறுத்தி பல முறை பேசியாகிவிட்டது. பம்பு செட்டுகள் போடுவதில் எவ்வளவோ கஷ்டம், குழப்பம் ஏற்படுகிறது. உதாரணத்திற்கு ஒன்று சொல்லுகிறேன். பாலாறு பேஸின் விதிகளின் கீழ் பம்பு செட்டு வைத்துக்கொள்ள அனுமதி வேண்டும் என்று மனுக் கொடுத்து ஒரு ஆண்டு காலம் ஆகிறது. இரண்டு முறைகள் நினைவுபடுத்தியாகிவிட்டது, இன்னும் உத்தரவு கிடைக்கவில்லை. இப்படி நிலைமை இருந்தால் விவசாயிகள் எப்படி வெற்றிகரமாக விவசாயம் செய்ய முடியும்? அதிக நெல் விளைச்சலுக்காக எங்கள் ஜில்லா முதல் பரிசு பெற்றிருக்கிறது. அப்படியிருக்கும்பொழுது சாதாரண விஷயங்களில் இவ்வளவு தூரம் விவசாயிகளுக்கு கஷ்டம் இருக்கிறது என்பதை உணர்ந்து, பாலாறு பேஸின் ரூல்ஸை ரத்து செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஒரு விவசாயி கடன் வாங்குவதற்கு அடிப்படை பிரச்னை என்னவென்றால், அவன் பெயரில் பட்டா மாற்றப்பட்டிருக்க வேண்டும். ஏழை விவசாயிகள் பட்டா மாறுதல் செய்துகொள்ள வேண்டுமென்றால், ரூ. 200, 300 செலவு செய்தால்தான் முடியும் என்ற நிலைமை இருந்தால் எப்படி விவசாயிகள் கடன் உதவி பெற முடியும்? சுதந்திரம் கிடைத்து 19 ஆண்டு காலமாகியும் இந்த நிலைமை இருக்கிறது. நாம் யாரை வேண்டுமானாலும் எதையும் செய்துவிடலாம். ஆனால் கிராமத்திலுள்ள கர்ணம், பட்டாமணியக்காரர்களை ஒன்றுமே செய்ய முடியாத நிலைமை இருக்கிறது. பட்டா மாறுதல் செய்துகொள்ள **சுலபமான வழி**வகைகளை அரசாங்கந் வகுத்துக்கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். அறுபது வருஷம், 80 வருஷம் ஆகியும் பட்டா மாறுதல் செய்யப்படாத காரணத்தினால், ஏழை எளிய விவசாயிகள் கடன் வாங்குவதற்கு மிகுந்த சிரமப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள்.



முன்பெல்லாம் பஞ்சாயத்து யூனியன் மூலமாக கடன்வசதிகள் செய்து தரப்பட்டன. இப்பொழுது ஃபுல் பினான்ஸ் ஸ்கீம் வந்துவிட்ட காரணத்தினால், அவர்கள் அங்கு கடன் கொடுப்பதில்லை. முன்பெல்லாம் சர்க்கரை ஆலையில் முன்பணம், அட்வான்ஸ் பெற்று வந்தார்கள். இப்பொழுது ஃபுல் பினான்ஸ் ஸ்கீம் அமுலுக்கு வந்தபிற்பாடு கிராமத்திலேயே கடன் வாங்கிக்கொள்ளலாம் என்று சொல்லிவிடுகிறார்கள். கிராமத்தில் பல நோக்கு கூட்டுறவு சங்கங்கள் இருக்கின்றன. முழுக் கடன் உதவித் திட்டத்தின் கீழ் அவர்களிடமிருந்து கடன் பெற்றுக்கொள்ளலாம் என்று சொல்லுகிறார்கள். ஆனால் 100 பேர்கள் பலநோக்கு கூட்டுறவு சங்கத்தில் கடன் வாங்கியிருந்தால் 10 பேர்கள்தான் கடனைத் திருப்பிக் கட்டுகிறார்கள். 'ஓவர்ட்யூ' நிறைய இருக்கிறது. அதனால் பெரும்பாலானவர்கள் அந்த சங்கத்திலிருந்து கடன் பெற முடியவில்லை. சர்க்கரை ஆலை மூலம் கடன் கொடுப்பதையும் நிறுத்திவிட்டார்கள் ஃபுல் பினான்ஸ் ஸ்கீம் அமலுக்கு வந்ததினால். கூட்டுறவு சங்கங்களிலும் கடன் வாங்க முடியவில்லை. இந்த மாதிரி இரண்டும் கெட்டான் நிலைமையில் விவசாயிகள் இருந்துகொண்டு அவதிப்படுகிறார்கள். இந்த ஃபுல் பினான்ஸ் ஸ்கீமினால் ஒன்றும் லாபம் இருப்பதாகத் தெரியவில்லை. அதனால் ஏராளமான சங்கடம் இருக்கிறது. ஆகவே, முன்பு போல தக்காவிக் கடன் பஞ்சாயத்து யூனியன் மூலமாகக் கிடைக்கும்படி செய்யுமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக பயிர் பாதுகாப்பு, இன்ஷூரன்ஸ் அவசியமாகச் செய்யவேண்டும். பயிர்களை இன்ஷூர் செய்தால் விவசாயிகளுக்கு நலமாக இருக்கும். அவர்களுக்கு அது ஒரு பாதுகாப்பாக இருக்கும். ஆகவே அதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். (மணியடிக்கப்பட்டது) பஞ்சாயத்து யூனியன் மூலமாக இந்த மாதிரியான ஏற்பாடுகளைச் செய்வதோடு கூட, நான்கு யூனியன்களுக்கு ஒரு ட்ராக்டர் வீதம் கொடுத்து, விவசாயிகளை ஊக்குவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் உரையை முடிக்கிறேன்.

*திரு. ஆர். கோவிந்தராஜுலு நாயுடு: கனம் சபாநாயகர் அவர்களே, இந்த வரவு செலவுத் திட்டத்தை ஆதரித்து என்னுடைய சில கருத்துக்களை சொல்ல ஆசைப்படுகிறேன். 1966-67-க்கான இந்த பட்ஜெட்டு புதிவரிகள் எதுவும் இல்லாமல், சர்ப்ளஸ் பட்ஜெட்டாக வகுத்திருப்பது வரவேற்கத்தக்க விஷயம். **எனக்கு** முன்பு பேசிய கனம் அங்கத்தினர்கள், சிலர் முன்னேற்**றம்** ஏற்பட்டிருக்கிறது என்றும், பலர் முன்னேற்றம் ஏற்படவில்லை என்றும் குறிப்பிட்டார்கள். உண்மையிலேயே ஆண்டுதோறும் பல அபிவிருத்திகள் ஏற்பட்டு வருவதை நாம் பார்க்கிறோம். பலர் இந்த ஆண்டு உணவு உற்பத்தி குறைவாக இருக்கிறது என்று சொன்னார்கள். நான் அறிந்தவரையில் உணவு போதுமான அளவு இருக்கிறது என்றுதான் தோன்றுகிறது. ஆனாலும், நாம் மற்ற மாநிலங்களுக்கு அனுப்பும் அளவுக்கு விளையவில்லை என்று வேண்டுமானால் சொல்லலாம். இன்னும் அதிகமாக விளைவிக்க வேண்டும் பல முயற்சிகளைச் செய்து வருகிறோம். பல நீர்ப்

பாசனத் திட்டங்களை நிறைவேற்றியிருக்கிறோம். இனி நீர்ப் பாசன வசதிக்கு நம் மாகாணத்தில் வாய்ப்பு இல்லாத அளவுக்குச் செய்திருக்கிறோம். இனிமேல் அதிகம் தண்ணீரை பெற வேண்டும் என்றால், அண்டை மாகாணங்களிலுள்ள ஜீவ நதிகளைப் பயன் படுத்தித்தான் தக்க ஏற்பாடுகளைச் செய்தாக வேண்டும். அதைப் பற்றி யோசித்து வருகிறார்கள். மத்திய சர்க்காரும், சம்பந்தப் பட்ட மாகாண சர்க்கார்களும் தக்க நடவடிக்கை எடுப்பார்கள் என்று நம்புகிறோம். ஆனால், உடனடியாக அதிகமாக வேண்டிய தண்ணீருக்கு பூமிக்கடியில் இருக்கும் ஜலத்தைத்தான் எடுத்து, விவசாயத்திற்குக் கொடுத்து, விவசாயிகள் உபயோகிக்கும் அளவுக்கு ஏற்பாடுகள் செய்யப்படவேண்டும். பூமிக்கடியில் இருக்கும் தண்ணீரை எடுக்க போரிங் செட்டுகள் உபயோகிக்க வேண்டும் என்றால், பழைய செட்டுகள்தான் இருக்கின்றன. ஹான்ட் போரிங் செட்டு என்று சொல்லுவார்களே அவைதான் இருக்கின்றன. பெரிய அளவுக்கு போரிங் போடவேண்டும் என்றால் குறைந்தது ஒரு மாத காலத்திற்கு மேல் ஆகிறது. அதைவிட்டு மெஷின் போரிங் செட்டுகளைப் போட்டால் நலமாக இருக்கும். பவர் செட்டு என்றால், அது 10 ஹான்ட் செட்டின் வேலையை ஒரே மூச்சில் செய்து விடும். அதோடு இந்தச் சிறிய ஹான்ட் செட்டுகளை வேலைசெய்ய ஆட்கள் வரமாட்டேன் என்கிறார்கள். கஷ்டப்பட்டு கம்பிகளை இழுக்க மட்டேன் என்கிறார்கள். பெரிய பெரிய பவர் செட்டுகள் இல்லாவிட்டாலும் கூட, 200 அடி, 250 அடி வேலை செய்யக் கூடிய மெஷின் செட்டுகளை வாங்கி விநியோகம் செய்தால், இன்னும் அதிகமாக உற்பத்தி செய்ய சந்தர்ப்பம் இருக்கிறது என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன். விவசாயிகளுக்கு, எவ்வளவு ஹார்ஸ் பவர் மெஷின் வேண்டும் என்று முன்னதாகவே பரிசீலனை செய்து, அவரவர்களுக்கு வேண்டிய அளவுக்கு ஏற்பாடு செய்ய வேண்டும், அவர்களுக்கு அதற்கான யோசனைகள் கொடுக்க வேண்டும்.

இதற்கு முன்பெல்லாம் ஆயில் என்ஜின்கள் வைத்திருந்தார்கள். ஏரிகளில் ஜலம் குறைந்தால், அந்த என்ஜின்களை ஹயருக்கு வாங்கி உபயோகித்து வந்தார்கள். இப்பொழுது அந்த ஆயில் என்ஜின்களை எடுத்து விட்டார்கள். அதை மறு பரிசீலனை செய்து, விவசாயிகளுக்கு அப்படிப்பட்ட ஆயில் என்ஜின்களை வழங்க ஏற்பாடு செய்தால் நலமாக இருக்கும்.

விவசாயிகள் அடிக்கடி சொல்லும் கஷ்டம் என்னவென்றால், இப்பொழுது கொடுக்கப்படும் ஹார்ஸ் பவர், பவர் ஸ்டேஷனை விட்டு தூரமாக இருப்பதால், வோல்டேஜ் டராப் ஆகிவிடுகிறது. அதனால் மோட்டார் எரிந்து விடுகின்றது. அதனால் விவசாயிகளுக்கு நஷ்டங்கள் ஏற்படுகின்றன. அப்படி நஷ்டம் ஏற்படாமல், வோல்டேஜ் ட்ராப் ஆகாமல் பாதுகாப்பு அளித்தால், நலமாக இருக்கும்.

இதற்கு முன்பெல்லாம் விவசாயிகள் ஏதோ விவசாயம் செய்து கொண்டிருந்தார்கள். ஆனால் இப்பொழுது, அதிக உற்பத்தி செய்து கொண்டிருக்கிறோம். ஏக்கருக்கு 20, 30 மூட்டைகள்



வீதம் பயிர் செய்து கொண்டிருக்கிறோம். அதெல்லாம் ஆராய்ச்சி மூலமும், புது விதைகள் விநியோகம் செய்வதன் மூலமும், அதிகமான உற்பத்திக்கு வழிவகைகள் செய்யப்பட்டிருக்கின்றன.

பெர்டிலைசர்கள் கிடைக்கவில்லை என்று ஒரு சிலர் புகார்கள் செய்து கொண்டிருக்கிறார்கள். கொடுப்பதையும் காலத்தில் அவர்களுக்குத் தருவதில்லை என்றும் சொல்லுகிறார்கள். விவசாயத்திற்குத் தேவையான காலத்தில் இந்த பெர்ட்டிலைசர்களை விநியோகம் செய்ய தக்க ஏற்பாடுகள் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். அந்த ஏற்பாடு செய்தோமானால் இன்னும் அதிகமாக உற்பத்தி செய்வதற்கு நல்ல சந்தர்ப்பம் இருக்கும். ஒரு ஜில்லாவிற்குப் பத்தாயிரம் டன் வேண்டுமென்றால், அது சென்னை ஹார்பருக்கு வந்திருப்பதாகத் தெரிவிக்கிறார்கள். ஆனால், ஹார்பரிலிருந்து யார்டுக்கு வருவதற்கும், யார்டிலிருந்து வாகனுக்கு வருவதற்கும் கிட்டத்தட்ட ஒரு மாதம் இரண்டு மாதம் கூடக் கால தாமதம் ஆகிறது. விவசாயப் பொருள்கள் தாமதம் இல்லாமல் உடனடியாகக் கொடுப்பதற்கு என்ன என்ன வழி உண்டோ அதைக் கடைப்பிடித்தால் விவசாயிகளுக்கு நல்ல சந்தர்ப்பம் கிடைக்கும். அதைச் செய்யவேண்டுமாய்க் கேட்டுக் கொள்ளுகிறேன்.

பல இடங்களில் விவசாயிகள் ட்ராக்டர்கள் வெகு நாளாக வாங்கி வைத்துக்கொண்டிருக்கிறார்கள். ட்ராக்டர்களுக்கு ஸ்பேர் பார்ட்ஸ் கிடைக்கவில்லை என்று அடிக்கடி புகார் சொல்கிறார்கள். ட்ராக்டர்களுக்கு வேண்டிய ஸ்பேர்பார்ட்ஸை அரசாங்கம் வரவழைத்துக் கொடுக்க உடனடியாக ஏற்பாடு செய்யவேண்டும். இருபது ஆயிரம் முதல் ஐம்பதாயிரம் ரூபாய் வரை செலவு செய்து ட்ராக்டர் வாங்கி வைத்திருப்பவர்கள் 100, 150 ரூபாய் பெறுமானமுள்ள சாமான்கள் கிடைக்காமல் மாதக் கணக்கில் காத்துக் கொண்டிருக்கிறார்கள். இது முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டிய விஷயமாகும். மேலும், அரசாங்கமே பல ட்ராக்டர்களை வாங்கி வைத்துக்கொண்டிருந்து, விவசாயிகளுக்குத் தேவையான சமயத்தில் அவற்றை வாடகைக்குக் கொடுத்தால், விவசாயம் முன்னேற்றம் அடைந்து நல்ல வளர்ச்சி அடைவதற்கு சந்தர்ப்பம் கிடைக்கும் என்றும் தெரிவித்துக் கொள்ளுகிறேன். இப்படிப்பட்ட கருத்துக்களையெல்லாம் அரசாங்கத்திற்குத் தெரிவிக்கவேண்டும் என்பது என்னுடைய ஆசை. அதை அரசாங்கம் நிறைவேற்றித் தரவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக, என்னுடைய தொகுதியைப் பொறுத்த வரையில் ஒருசில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். நான் சென்னை அருகாமையில் இருக்கும் சட்டசபை அங்கத்தினர். இதற்கு முன்பும் என்னுடைய தொகுதியிலிருந்து சென்னைக்குக் குடிதண்ணீர் கொடுத்துக்கொண்டிருந்தோம். குடி தண்ணீர் பற்றாக்குறைவினால் விவசாயத்திற்கு தண்ணீர் கொடுக்காமல் இப்பொழுது பூராத் தண்ணீரையும் சென்னை நகரத்திற்குக் கொடுத்துக்கொண்டு வருகிறார்கள், நாங்களும் அதை வரவேற்கிறோம்.

[திரு. ஆர். கோவிந்தராஜு நாயுடு] [4th March 1966

அங்கிருக்கும்படியான ஆடு, மாடுகளுக்கு இதற்கு முன்பு சிறிய குட்டைகள், தாங்கல்கள் இருந்தன. இப்பொழுது விவசாயத்திற்கு விடாமல் போனாலும், அந்த ஜலத்தை மாதத்திற்கு ஒரு முறையோ இரண்டு மாதங்களுக்கு ஒரு முறையோ அங்கிருக்கும்படியான குட்டைகளில் விட்டால், அங்கிருக்கும் மாடு கன்றுகள் குடிக்க வசதியாக இருக்கும். அதற்கு உத்தரவிடும்படியாக அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

சில மாடுகள் தவறிப்போய் வயல்களில் மேய்ந்துகொண்டிருக்கும் நேரத்தில், அவற்றைப் பிடித்து அடைப்பதற்கு கிராமங்களில் பவுண்டுகள் இருந்துவந்தன. அவையெல்லாம் தற்போது இடிந்து விழுந்துவிட்ட காரணத்தால் கால்நடைகளை அடைக்க முடியவில்லை. மாடுகள் பயிர்களில் மேய்ந்தால், அவற்றை எங்கே கொண்டுபோய் அடைப்பது என்ற பிரச்னை இருக்கிறது. அதைப்பற்றிக் கலெக்டருக்கும் ரெவின்யூ அதிகாரிக்கும் சொன்னால் "இதற்குப் பணம் வரவில்லை" என்று சொல்கிறார்கள். பஞ்சாயத்து யூனியன்களும் ஒரு விதமான சலுகையும் தரவில்லை என்று சொல்கிறார்கள். ஆகவே, அதற்கு வேண்டிய வசதி செய்து கொடுக்கவேண்டும்.

தாலுக்கா அக்ரிகல்சரல் டெமன்ஸ்ட்ரேட்டரோ அல்லது யூனியனில் இருக்கும்படியான விவசாய விஸ்தரிப்பு அதிகாரியோ விவசாயத்திற்கு வேண்டிய வசதி செய்யாமல்; ஏதோ பூச்சி மருந்துகள், விதை போன்றவற்றை வியாபார முறையில் விற்பதைத்தான் கண்ணோட்டமாகக் கொண்டிருக்கிறார்கள். விவசாய அபிவிருத்திக்கு என்ன என்ன வசதிகள் எல்லாம் செய்யவேண்டும் என்று சொல்வதற்கு இல்லாமல் அவர்கள் இருந்து கொண்டிருக்கிறார்கள். வியாபாரம் செய்வது போன்ற காரியங்களை மற்றவர்களுக்குக் கொடுத்துவிட்டு, விவசாய இலாகா அதிகாரிகள் விவசாய அபிவிருத்தி சம்பந்தமான ஆலோசனைகளைக் கொடுக்கும்படியான ஏற்பாட்டை அரசாங்கம் செய்யவேண்டும், அதற்குத் தகுந்த உத்தரவுகளை இடவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, எனக்கு இந்த வாய்ப்பு தந்த கனம் சபாநாயகருக்கு நன்றி தெரிவித்து என்னுடைய உரையை முடிக்கின்றேன். வணக்கம்.

*Sri N. RAMACHANDRA REDDY: Mr. Speaker, Sir, I wish to say a few words in welcoming the budget presented by the Hon. the Chief Minister. It is a surplus budget. It clearly indicates the various plans of our Government in the coming years for the attainment of social and economic equality and stability. It clearly relates the various plans and programmes which our Government have taken during the three Plan periods and one can see at a glance the progress which our State has made in several fields. It is no exaggeration when I say that our State stands first and second to none in industrial progress, in irrigation and in electricity. This is the view expressed by even foreign experts who toured our country.

During the three Plan periods, the State Government have spent lakhs of rupees on improving agriculture and electricity and have brought lakhs of acres of land under the plough. Still



4th March 1966] [Sri N. Ramachandra Reddy]

we are deficient in food production. Though our country is mainly an agricultural country, we are going with a begging bowl to other countries, some of which are smaller in area than Madras State. Shortfall in food production in our State is due to bad weather. It is said in the budget speech that the margin between a good harvest and a bad harvest is 10 lakh tons of foodgrains. Even in our State, agriculture is nothing but a gamble against nature. Unfortunately nature also has been unfavourable to us and we have no control over it. Non-supply of fertilisers is the main reason for the shortfall in agricultural production. It is an admitted fact that the supply of fertilisers is not adequate to meet the demand. Ever since 1951 the consumption of fertilisers has been increasing year by year and even ryots owning small extents of land have come to realise the benefits of the application of fertilisers. The Government have not taken serious steps to increase the production of fertilisers. Compared to Japan and some other countries, the consumption of fertilisers in our country is very low. The input per acre in our country is 2·4 grams whereas in Japan it is 270 grams. The difference is really big. I request the Government to take all possible steps to increase the supply of fertilisers. It is also an admitted fact that whatever little quantity of fertilisers is available is not supplied to the ryots in time. It is well known to each and everybody that agricultural operations should be undertaken in particular times and during particular seasons, and they cannot be postponed like other items of work. Application of fertilisers after the season is over will not produce a good harvest. I request that proper instructions may be issued to the Panchayat Unions and the Gramsevaks who are mainly responsible for explaining to the ryots the proper time for the application of fertilisers.

Plant protection plays a very important part in agriculture. It is admitted that about ten to twenty per cent of the total production is affected by pests and insects. Even though the Government may supply adequate fertilisers, better seeds and agricultural loans, all these alone will not yield good results unless proper steps are taken for the eradication of pests and insects. Just as there is a scheme for the eradication of malaria, cholera and other diseases, there should be a scheme for the eradication of pests and insects which are causing great havoc to the crops.

Minor irrigation works should be stepped up to minimise the adverse effects of the vagaries of the monsoon. They can be implemented quickly so that they may yield quick results. Almost all the tanks have got completely silted up. I request the Government to take proper steps to remove the silt in the existing tanks, to construct small tanks and to provide for the construction of wells.

In this connection, I would like to bring to the notice of the Government that this is the proper season for the digging of wells but loans from the Government are not forthcoming now. If loans are forthcoming after two or three months, it will be of no 11-30 a.m.

use as the rainy season would set in and it would not be possible for the ryots to dig wells. So, I request the Government to sanction loans to the ryots immediately.

Then, the Package Programme has been introduced in a few selected areas only. If the programme is introduced in the entire State, the food problem in our State would be completely solved. So, I request the Government to introduce the programme in the entire State. At the same time, the Government should also take very serious steps to prevent the growth of population.

Coming to my district, the Dharmapuri district is a newly-born baby. When it was part of the Salem district, the Government neglected North Salem and industries were started in South Salem only Last year, it was proposed to open a Co-operative Spinning Mill in North Salem and I also made representations to the Hon. Minister in that regard. But one fine morning it has been shifted from Hosur for reasons best known to the Government. Sir, I request the Government to open a Co-operative Spinning Mill at Hosur at least during the Fourth Plan period. In this connection I also request the Government that since the Dharmapuri district is a very backward area, they may conduct an Industrial survey of the district so that they could explore the possibilities of starting more industries in that district.

Regarding medical college, the hon. Member, Sri Subramania Gounder requested the Government to open a Medical College at Salem by utilising the Railway Cess Fund to the tune of Rs. 25 lakhs. As the Dharmapuri district is a very backward area and as there is already an Engineering College at Salem, I request the Government to open a Medical College at Dharmapuri by utilising the Railway Cess Fund.

With regard to the Hogenekkal Project, no agreement has been reached with the Mysore Government.

* * *

I am sure that the Hon. Minister for Industries will be intelligent enough and capable enough to deal with the Mysore Government and see that the Hogenekkal Project is implemented at an early date.

Sir, one redeeming feature in the Budget speech is that the Government have been kind enough to establish an Industrial Estate at Hosur. . . .

MR. SPEAKER: The Hon. Member, Sri Thiagaraja Pillai, will now speak.

**திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை :** கனம் சபாநாயகர் அவர்களே மதிப்பிற்குரிய முதல் அமைச்சர் அவர்கள் சமர்பித்திருக்கும் வரவு செலவுத் திட்டத்தை ஆதரித்து ஒருசில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். முக்கியமாக உணவுப் பிரச்னையைத் தீர்ப்

*** Expunged as ordered by the Chair.



பதற்கு தஞ்சை ஜில்லாவில் பல வசதிகள் இருந்தும் அங்கு போதுமான அளவு அவை பயன்படுத்தப்படவில்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன். ஏனென்றால் நெருக்கடியான நிலைமையில் உணவுப் பிரச்சினையை நாம் தீர்ப்பதற்கு வேண்டிய நஞ்சை நில வசதிகள் அங்கே ஏராளமாக இருக்கின்றன. உணவு உற்பத்தியை அதிகப் படுத்துவதற்கு வேண்டிய சௌகர்யங்களை இந்த அரசாங்கம் செய்து கொடுக்கக் கடமைப்பட்டிருக்கிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன். கூட்டுறவு இலாகா மூலமாகக் கடன் கொடுக்க வசதி செய்யப்படுகிறது. ஃபோர்டு ஸ்தாபன உதவி கோடிக் கணக்கான ரூபாய்கள் இருக்கின்றன. போதுமான கூட்டுறவு ஸ்தாபனங்கள் அந்த ஜில்லாவில் இல்லாத காரணத்தினால் அந்தக் கடன் வசதிகளை அந்த மாவட்ட விவசாயிகள் பெற முடியாத நிலை இருக்கிறது. ஆகவே, நேரிடையாகவே அரசாங்கம் பண உதவி செய்து கொடுத்து அந்த மாவட்ட விவசாயிகளுக்கு உதவவேண்டும்.

மேலும் இந்தச் சபையில் நடக்கும் விஷயங்களை எல்லாம் மக்கள் தெரிந்துகொள்ள ஆவலுடையவர்களாக இருக்கிறார்கள். பேப்பர்களில் இடம் இல்லாத காரணத்தினால் கொஞ்சம் தான் போட முடிகிறது. கனம் சபாநாயகர் அவர்கள் இங்கு நடக்கும் நடவடிக்கைகளை—கொஞ்சம் செலவானாலும் கூட கெஜட்டில் பிரசுரிக்க ஏற்பாடு செய்தால் மிகவும் உதவியாக இருக்கும். மேலும் அங்கத்தினர்கள் குறிப்பிடுகிற விஷயங்கள் என்ன, அவற்றின் மீது அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துக் கொண்டது என்பதைப்பற்றி—மின்சார போர்டார் கொடுக்கிற குறிப்புகளைப்போல அச்சிட்டுக் கொடுக்கவும் வகை செய்ய வேண்டும்.

மேலும் இவ்வாண்டு பருவ மழை தவறி, காவேரியிலும் போதுமான தண்ணீர் வராத காரணத்தினால் எங்கள் மாவட்டத்தில் பயிர் மிகவும் பாதிக்கப்பட்டுவிட்டது. ரெவின்யூ அமைச்சர் அவர்கள் சுற்றுப்பயணம் வந்தபோது வரிவஜா செய்வதாகச் சொன்னார்கள். அதை மக்கள் மிக்க ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். ரெவின்யூ போர்டார் செய்வார்கள் என்று சொல்லி—அவர்கள் வெள்ளைக்காரர் காலத்தில் இருந்த ஸ்டாண்டிங் ஆர்டரை வைத்துப்பார்க்கிறபோது வரிவஜா என்பதே வராது என்று சொன்னால் மக்கள் மிகவும் ஏமாற்றமடைவார்கள். தண்ணீர் பாசனம் இல்லாத காரணத்தினால் பல இடங்களில் நிலங்களைத் தரிசாகப் போட்டிருக்கிறார்கள்.

**கனம் திரு. பூ. கக்கன் :** தரிசாகக் கிடந்த பூமிகளுக்கு நிச்சயமாக வரி வாங்கமாட்டார்கள்.

**திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை :** அந்த ஸ்டாண்டிங் ஆர்டர் படி ஒருவருக்குச் சொந்தமான நான்கு வயல்களில் ஒன்றைப் பயிரிட்டு மற்றவற்றைத் தரிசாகப் போட்டிருந்தால் எல்லாவற்றுக்குமே வரி கட்டவேண்டும் என்றுதான் இருக்கிறது. தண்ணீர் பாயாத பல இடங்கள் இவ்வாண்டு அங்கே இருக்கின்றன. ஆகவே, அரசாங்கம் இதைக் கொஞ்சம் பரிவோடு பரிசீலனை

[திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை] [4th March 1966

செய்து அந்த மாவட்ட விவசாயிகளுக்கு வரிவஜா அளிக்க வேண்டும் என்பதாகக் கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

**திரு. முனு ஆதி :** மதிப்பிற்குரிய சட்டமன்றத் தலைவரவர்களே, 1966-67-ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையை முதலமைச்சர் அவர்கள் இங்கே சமர்ப்பித்திருக்கிறார்கள். அதனை நான் வன்மையாகக் கண்டித்து என்னுடைய கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன். . . .

**கனம் திரு. பூ. கக்கன் :** முதலமைச்சர் சமர்ப்பிப்பதை கனம் அங்கத்தினர் கண்டிக்கிறாரா?

**திரு. முனு ஆதி :** அதிலே உள்ள கருத்துக்கள் எல்லாம் ஒன்றுக்கும் பயனில்லாமல் இருப்பதைக் கண்டித்து என்னுடைய கருத்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். நிதி நிலை அறிக்கையைக் கொண்டுவருவதையே ஒரு சட்டமன்ற அங்கத்தினர் கண்டிப் பார் என்று சொல்லமுடியாது. நீண்டநேரமாக களைப்பு ஏற்படுகிற வரையிலே இந்த அறிக்கையை முதலமைச்சர் அவர்கள் அவ்வளவு நேரம் படித்தும் அது பயன்படத்தக்க அறிக்கையாக இருந்ததா என்பதைப் பார்க்கவேண்டும். ஆளுங்கட்சி உறுப்பினர்களும் சில நேரங்களில் இதில் உள்ள குறைகளைப்பற்றிச் சொன்னார்கள். அறிக்கையைச் சுட்டிக்காட்டி அவர்கள் குறைகளைச் சொல்லா விட்டாலும், உணவுப் பிரச்னையைப் பற்றிச் சொல்லும்பொழுது எல்லா அங்கத்தினர்களும் குறைகளைப்பற்றி சொல்லியிருக்கிறார் கள். இதைத் தவிர அறிக்கையிலே உள்ள குறைகளைப் பற்றியும் தவறுகளைப் பற்றியும் எங்கள் கட்சியைச் சேர்ந்த தலைவர்களும் எடுத்துத் தெரிவித்திருக்கிறார்கள். இந்த அறிக்கையிலே விவசாயிகள் பலன் பெறக்கூடிய திட்டங்கள் ஏதாவது இருக்கிறதா என்றால் நிச்சயமாக இல்லை. இதையெல்லாம் எடுத்துக்காட்டி எங்களுடைய கட்சிக்காரர்கள் பேசினால், எதிர்க்கட்சிக்காரர்களுக்குக் கண்டிக்கத்தான் தெரிகிறதே தவிர, அதைப்பற்றிய காரண காரியங்களை எடுத்துச் சொல்வதற்கு அவர்கள் முன்வரவில்லை என்று சொன்னார்கள். ஜனநாயக நாடுகளில் எதிர்க் கட்சியில் இருப்பவர்கள் ஆளுங்கட்சி செய்திருக்கும் தவறுகளையும் அவர்கள் ஆட்சியிலுள்ள குறைகளையும் சுட்டிக்காட்டி நல்ல விளக்கங்களைத் தெரிவிப்பதுதான் கடமையாக இருக்கமுடியும். உணவுப் பிரச்னையைப் பொறுத்தவரையில் சமீபத்தில் இந்த நாட்டின் பிரதம மந்திரி திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் தம்முடைய பேச்சில் இந்த நாடு சுதந்திரம் அடைந்ததற்குப் பின்னால் வராத பஞ்சம், வரப்போகிறது என்று எச்சரிக்கை விடுத்திருக்கிறார்கள். அதைத் தெரிந்திருந்தும்கூட இந்த நிதி நிலை அறிக்கையில் விவசாயிகளுக்கு உள்ள குறைபாடுகளைப் போக்கக் கூடிய வழிகளைச் செய்யவில்லை. சர்ப்ளஸ் பட்ஜெட், மிச்சப் படுத்துகிற பட்ஜெட் என்றெல்லாம் சொல்கிறார்கள். கடந்த ஆண்டு நிதி நிலை அறிக்கைக்கும், இந்த ஆண்டு நிதி நிலை அறிக்கைக்கும் இடையே பார்க்கப்போனால் 24 கோடி ரூபாய்க்கு வரி போடப் பட்டு இருப்பதையும் கடன்கள் அதிகமாகி இருப்பதையும்தான்



4th March 1966] [திரு. முனு ஆதி]

காணமுடியும். மக்களுக்கு ஏதாவது முறையாக நன்மைகள் செய்திருக்கிறார்களா என்பதைப் பார்க்கும்பொழுது, இவர்கள் மக்களுடைய நன்மையைக் கருதாது, 1967-ல் வரப்போகும் தேர்தலையொட்டித்தான் இந்த நிதி நிலை அறிக்கை அமைந்திருக்கிறது என்பதைப் புரிந்துகொள்ளலாம். ஒரு வழக்கு நல்ல வழக்காக இருந்தால் வழக்கறிஞர் நாலு வார்த்தைகளில் அந்த வழக்கை எடுத்துக் கூறிவிடுவார். ஆனால், வழக்குச் சிக்கலான வழக்கு ஆக இருந்தால் எவ்வளவு திறமையானவராக வழக்கறிஞர் இருந்தாலும் அந்த வழக்கைச் சொல்வதற்கு நான்கு நாட்கள் இழுத்துக்கொண்டுதான் போக்வேண்டியிருக்கிறது. அதைப்போல்தான் நிதிநிலை அறிக்கை நீண்டதாக இருப்பது எதற்காக என்றால் நம்மை எல்லாம் திருப்திப்படுத்துவதற்காக முயற்சி செய்திருக்கிறார்கள். இந்த அறிக்கையிலே நாலாந்தர சிப்பந்திகளை வேலையிலிருந்து நீக்குவதன்மூலம் அதிகமாக 20 லட்சம் ரூபாய் மிச்சப்படுகிறது என்று சொல்லியிருக்கிறார்கள். அவர்களை வேலையிலிருந்து நீக்கிவிட்டால், அவர்கள் நிலைமை என்ன ஆகும், அவர்கள் வேறு எந்த வேலைக்குப் போக முடியும், அவர்கள் மறுபடியும் வாழ்வதற்கு என்ன மாற்று யோசனைகள் என்பதைப்பற்றி எல்லாம் இந்த அறிக்கையிலே தரப் படவில்லை. இவைபோன்ற குறைகளை எடுத்துச் சொல்வதற்கு உதாரணமாக தெனாலிராமன் கதையைச் சொன்னால் ஆயாசப் படுகிறார்கள். ஆயாசப்படுகிறவர்களுக்கு நான் ஒன்றைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இந்த அரசாங்கம் மக்களுக்கு எத்தனை உத்தரவுகளை போட்டு இருக்கிறார்கள்.? எத்தனை கோரிக்கைகளை விடுத்திருக்கிறார்கள்? ஜனத்தொகை அதிகமாகின்ற காரணத்தாலே குழந்தைகள் பெறுவதைக் கட்டுப்படுத்துங்கள் என்று உத்தரவு போட்டார்கள், அதை ஏற்றுக் கொண்டோம். 20 காரட் தங்கத்தை 14 காரட் ஆக ஏற்றுக் கொள்ளவேண்டும் என்று சொன்னார்கள், அதையும் ஏற்றுக் கொண்டோம். உணவுப்பஞ்சம் இருப்பதாலே வாரத்திற்கு ஒரு வேளை சாப்பிடுவதைக் குறைத்துக் கொள்ளுங்கள் என்று சொன்னார்கள், அதையும் ஏற்றுக் கொண்டோம். இவ்வளவும் செய்ததற்குப் பிறகுகூட இன்றைக்கு நிதி நிலை அறிக்கையிலே இருக்கக்கூடிய குறைகளை எங்களுடைய கட்சித் துணைத் தலைவர் அவர்கள் விளக்கமுற்பட்டு தெனாலிராமனை ஒப்பிட்டுக் கூறினார்கள் என்பதற்காக ஆயாசப்பட்டார்கள். நான் அப்படிச் சொல்லாமல், இந்த ஆட்சி வந்து 18 ஆண்டுகள் ஆகின்றன, எனவே துரியோதனர்களுடைய ஆட்சியை நாம் ஞாபகப்படுத்திக் கொள்ளவேண்டும். எல்லோரும் மகாபாரதம் படித்திருப்பார்கள் என்று நினைக்கிறேன். அதில் துரியோதனர்களுடைய ஆட்சி 18-ஆம் நாள் போரில்தான் முடிந்தது. அதைப் போல் இந்த ஆட்சியும் 18-ஆம் ஆண்டில், 1967-ல் துரியோதனர்களுடைய ஆட்சியைப் போல் முடியப்போகிறது என்பதில் சிறிதும் ஐயமில்லை.

**கனம் திரு. பூ. கக்கன் :** துரியோதனர்களாக இருப்பவர்கள் தான் துரியோதனர்கள் என்று சொல்லிக்கொண்டிருப்பார்கள். இது நல்லதல்ல. உண்மைக்குப் புறம்பானது.

[4th March 1966

**திரு. முனு ஆதி** : நம்முடைய தொழில் அமைச்சர் அவர்கள் கடந்த ஆண்டு சொல்கிறபொழுது மோட்டார் வெகிகிள்ஸ் டாக்ஸ் போடப்படுகிறபோது, பஸ் கட்டணம் உயர்த்தப்படுமா என்று கேட்டபொழுது, பஸ் கட்டணம் உயர்த்தப்படமாட்டாது என்று சொன்னார்கள். ஆனால் இன்று நடைமுறையில் பார்த்தால் ஒரு ஸ்டேஜுக்கே 30 காசு வீதம் வாங்குகிறார்கள். 15 காசு ஆக இருந்தது 30 காசுகளாக ஆகியிருக்கிறது. ஏழை எளிய மக்கள், பொருளாதார வீழ்ச்சியிலும், வறுமையிலும் இருக்கிற மக்கள் எப்படி இதைத் தாங்கமுடியும். அரை மைல் போவதற்கே 30 காசுகள் வசூலிக்கப்படுகிறது. ஆகவே, தொழில் அமைச்சர் அவர்களுடைய உறுதி காப்பாற்றப்படாமல் சாதாரண குடி மக்களைப் பாதிக்கக்கூடிய அளவிலே தொல்லை தரக்கூடிய வகையிலே பஸ் கட்டணம் உயர்த்தப்பட்டிருக்கிறது, இதைக் குறைக்க வேண்டுமென்று நான் இந்த சந்தர்ப்பத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

இந்த உணவுப் பிரச்னையைப்பற்றி எனக்கு முன்பு பலபேர்கள் கருத்துக்களை எடுத்துத் தெரிவித்தார்கள். நவரை பயிரைப்பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். அதற்காகப் போடப்பட்ட உரமெல்லாம் முதல் விளைச்சலோடு போய்விட்டது. இப்பொழுது மறுபடி நவரைப் பயிர் செய்வதற்கு உரம் தேவைப்படுகிறது. விவசாய அதிகாரிகள் பஞ்சாயத்து யூனியன்களில் வைத்து இருக்கிறோம். அவர்களிடம் விதை கேட்டால், அவர்கள் பொறுக்கு விதைகளையும் பூச்சிப்பட்ட விதைகளையும்தான் கொடுக்கிறார்கள். ஒரு ஏரியாவை எடுத்துக்கொண்டு இந்த ஏரியாவிற்கு நிலப்பரப்பிற்குத் தகுந்த முறையில் விதைகள், உரம் கொடுப்பதற்கு வழி செய்தால் தான் மக்களுக்கு அவை கிடைப்பதற்கு தடையிருக்காது. விவசாய மக்களுக்கு, விதை கிடைப்பதிலே, உரம் கிடைப்பதிலே, கிணறுகள் வெட்டுவதிலே, பம்புசெட்டுகள் கொடுப்பதிலே காலணா அதிகமாகச் செலவழிக்காமல் சுலபமாகப் பெறமுடிகிறதா என்றால் இல்லை. எல்லோருக்கும் கொடுக்கமுடியுமா என்று கேட்கலாம். எல்லோருக்கும் கொடுக்கவேண்டுமென்று சொல்லவில்லை. நிலம் வைத்திருப்பவர்கள் அதற்கு ஆதாரம்காட்டிக் கேட்டால்கூட சீக்கிரமாகக் கிடைப்பதில்லை. உணவுப் பஞ்சம் வந்தாலும் வரலாம் என்று நினைத்துக்கொண்டிருக்கக்கூடியவர்கள், விவசாயிகளுக்கு நடைமுறையில் உரம், விதை, இன்னும் கருவிகள் எல்லாவற்றையும் விநியோகம் செய்வதிலே அக்கறை எடுத்துக்கொண்டால்தான் அவர்கள் உற்சாகத்தோடு உழைப்பதற்கு வாய்ப்பு ஏற்படும். இந்த ஆண்டு நிலவரியை வசூல் செய்யப்போகும்போது விவசாயிகளுக்கு ஆத்திரமும், கொந்தளிப்பும் எந்த அளவுக்கு வரும் என்று சொல்ல முடியாது. நவரைப் பயிருக்கு உரம் கிடைக்கவில்லை. யூரியா 81 பைசா என்றால் ரூ. 1.30 அல்லது ரூ. 1.40 கொடுத்தால் எல்லா இடங்களிலும் கிடைக்கக்கூடிய நிலைமை இருக்கிறது. ஆட்சியாளர்கள் முறையாகக் கவனிக்காத காரணத்தால் கள்ள மார்க்கட்டுகளில் விற்கப்படுகிற அளவுக்கு நிலைமை மோசமாகி இருக்கிறது. உடனடியாக விவசாயிகளுடைய பிரச்னையைத் தீர்க்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



4th March 1966]

* **திரு. நா. சௌந்தரபாண்டியன்** : மதிப்பிற்குரிய சட்ட மன்றத் தலைவர் அவர்களே, கனம் முதலமைச்சர் அவர்களால் இந்த மன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட 1966-67-ம் ஆண்டு நிதி நிலை அறிக்கையை ஆதரித்து ஒருசில வார்த்தைகள் பேச விரும்புகிறேன். நமது நிதி நிலை அறிக்கையிலே வேளாண்மை அபிவிருத்திக்காக அதிகமான தொகை ஒதுக்கப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கது. வேளாண்மை அபிவிருத்தியில் நமது குறிக்கோளை எட்டி இருக்கிறோமா என்று பரிசீலிக்க வேண்டியது நமது தலையாய கடமை. விவசாயிகளுக்கு அரசாங்கம் கொடுக்கும் கடன்கள் காலாகாலத்தில் கிடைக்க வழிவகை இல்லை. இப்போது 'முழுக் கடன் திட்டம்' என்று பஞ்சாயத்து யூனியனிலே ஆரம்பித்த காரணத்தால் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் கிடைக்கக்கூடிய கடன்கள் சரியாகக் கிடைப்பதே இல்லை. கிராமங்களில், குறுகிய காலக் கடன், நீண்ட காலக் கடன் ஆகியவை கிடைக்காமல் விவசாயிகள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அதையும் பரிசீலிக்க வேண்டும். ரசாயன உரம் தாராளமாகக் கிடைப்பதில்லை. இதனால் விவசாயிகள் பெரும் தொல்லைகளுக்கு ஆளாகிறார்கள். விவசாயிகளின் நன்மையைக் கருதி, பயிர்ப் பாதுகாப்புத் திட்டத்தையும், கால்நடைப் பாதுகாப்புத் திட்டத்தையும் அமலுக்குக் கொண்டுவரவேண்டும். வேளாண்மைப் பல்கலைக் கழகம் அமைய இருப்பது பாராட்டத் தக்கது. திருநெல்வேலி மாவட்டத்தில் வேளாண்மைக் கல்லூரி ஒன்று நிறுவ வேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். திருநெல்வேலி மாவட்டத்தில் கடந்த இரண்டு ஆண்டு காலமாக பஞ்ச நிலைமை ஏற்பட்டதன் காரணமாக, இப்போதுதான் விவசாயத்தில் பலன் அடையக்கூடிய நிலையில் இருக்கிறார்கள். ஆகவே, நிலத் தீர்வையை விவசாயிகள் கொடுக்க வேண்டிய காலவரையை ஆறு மாத காலம் தள்ளி வைத்தால் நலமாக இருக்கும்.

நான்குநேரி தாலூகாவில் மூலைக்கரைப்பட்டியில் ஒரு ஆட்டுப் பண்ணை நிறுவப்பட்டிருக்கிறது. 240 ஏக்கரில் 600 ஆடுகள் இருக்கின்றன. அந்த ஆடுகள் எல்லாம் இராமநாதபுரம் ஆடுகளாக இருப்பதால் அவற்றுக்கு நான்குநேரி தாலுகாவின் சீதோஷ்ண நிலையும் மண்ணும் சரியாகப் பொருந்தவில்லை என்பதை சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் சொல்லியிருக்கிறேன். ஆகவே, இராமநாதபுரம் ஆடுகளுக்குப் பதிலாக, அந்தப் பகுதியில் உள்ள செம்மறியாடுகளை அபிவிருத்தி செய்யவேண்டும். இடவசதி போதாமல் இருந்தால் நிலங்களை ஆர்ஜிதம் செய்து கொடுக்க வேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

தொழில் அபிவிருத்தியைப் பொருத்தமட்டில் நமது மாநிலம் நல்லதொரு முன்னேற்றத்தை அடைந்திருப்பது பாராட்டத் தக்கது. ஆனால் கிராமங்களில் வளர்ச்சி இல்லை. கிராமங்கள் முன்னுக்கு வரவேண்டுமென்றும் சிறு சிறு கைத்தொழில்கள் அங்கு பரவ வேண்டுமென்பது குறிக்கோளாக இருக்க வேண்டும். விவசாயக் கருவிகளைத் தயாரிப்பதற்கான தொழிற்சாலை ஒன்றை அதி விரைவிலே அமைக்கவேண்டும். பவர் டில்லர்ஸ், பவர்

[திரு. நா. சௌந்தரபாண்டியன்] [4th March 1966

ப்ளோவ்ஸ் ஆகியவற்றை விவசாயிகளுக்கு அதிகமான அளவில் கிடைக்கச் செய்ய அதற்காக ஓர் தொழிற்சாலையை அமைத்தால் நல்லது.

திருநெல்வேலி மாவட்டத்தில் ஒரு பொறி இயல் கல்லூரி வருவதாக இருக்கிறது. அது பாராட்டத்தக்கது. அதை, கிராமப்புரமும் பின் தங்கிய பிரதேசமுமான 'திசையன்விளையில்' அமைத்தால் நல்லது. திருநெல்வேலி மாவட்டத்திற்குப் புதியதொரு பாலிடெக்னிக் அமைக்க இருப்பதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதைத் தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய பிரதேசமான இராதாபுரத்தில் நிறுவுவது சாலச் சிறந்ததாக இருக்கும். அதற்கு அரசாங்கம் தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வைத்திய-சுகாதாரப் பிரிவுகளை இணைப்பது வரவேற்கத்தக்கது. இது முன்பு ஒன்றாக இருந்து பின்னர் இரண்டாகப் பிரிக்கப்பட்டது. மறுபடியும் அதை ஒன்றாகச் சேர்க்கும்போது நல்ல முறையில் மேலும் குழப்பம் வராமல் சரியாகப் பார்த்து ஒன்று சேர்க்கவேண்டும். கிராமப்புறங்களில் சுகாதார அபிவிருத்திக்காக எந்த வழியில் திட்டங்கள் தீட்ட முடியுமோ அந்த அளவுக்கு திட்டங்களைத் தீட்டி கிராம மக்களுக்கு வைத்திய வசதி கிடைக்கச் செய்யவேண்டும். நிதிநிலை அறிக்கையில் புதிய மருத்துவ மனைகளைத் திறப்பது பற்றி அரசாங்கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் வரவேற்கத்தக்கவை. பஞ்சாயத்து யூனியன்கள் இப்போது நடத்தி வரும் மருத்துவ மனைகளையெல்லாம் படிப்படியாக அரசாங்கம் எடுத்து அபிவிருத்தி செய்யவேண்டும். அதிகமான சுகாதார நிலையங்களில் டாக்டர்கள் இல்லையென்ற குறை இருக்கிறது. என்னுடைய தொகுதியான வடக்கன் குளத்தில் கடந்த ஐந்து மாதங்களாக டாக்டர் இல்லை. அந்தப் பகுதி மக்கள் மருத்துவ வசதி பெற வேண்டுமென்றால் 45 மைலுக்கு அப்பாலுள்ள பாளையங்கோட்டை ஆஸ்பத்திரிக்குப் போக வேண்டிய நிலைமை இருக்கிறது. ஆகையால் அங்கு உடனடியாக டாக்டர் நியமிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பின் தங்கிய பிரதேசங்களுக்கு சுகாதார வசதியை எவ்வளவு தூரம் செய்ய வேண்டுமோ அந்த அளவு செய்வதற்கு உடனடியாக நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ் நாட்டிலே கல்வியைப் பொருத்தவரை நல்லதொரு முன்னேற்றம் அடைந்திருந்தாலும் கூட, கிராமங்களில் இன்னும் உயர்நிலைப்பள்ளிகள் தேவை என்று தெரிவித்துக்கொள்கிறேன். அடுத்து வரும் ஆண்டில் 8,000 ஆசிரியர்களை நியமிக்கப் போவதாக இந்த நிதிநிலை அறிக்கையிலே கூறப்பட்டிருக்கிறது. பஞ்சாயத்து யூனியன் பள்ளிகளில் ஜூன் மாதத்தில் ஆசிரியர் தேவை என்று சொன்னால், ஜனவரி கடைசியில் அல்லது பிப்ரவரி மாதத்தில் அதற்கு அனுமதி கொடுக்கிறார்கள். இதனால் பள்ளிகளிலே ஆசிரியர்களை நியமிக்க கஷ்டமாக இருக்கிறது. இனி வரும் ஆண்டுகளிலாவது, ஜூன் மாதம் ஆசிரியர்கள் வேண்டுமென்று



[திரு. நா. சௌந்தரபாண்டியன்]

பஞ்சாயத்து யூனியனில் கேட்டுக் கொண்டால் ஜூலை மாதத்தில் ஆசிரியர்களை நியமிக்கும் வகையில் உத்தரவு பிறப்பிக்க வேண்டிய நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்க வேண்டும.

ஏழை மாணவர்களுக்கு இலவச சீருடை வழங்குதல், இலவச புஸ்தகங்கள் வழங்குதல் பாராட்டத்தக்கது. அது ஏழை மாணவர்களுக்குப் பயன்படும் வகையில் நல்ல முறையிலே கண்காணிக்க வேண்டும். மதிய உணவுத் திட்டத்திலே கோளாறுகள் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அதையும் சீர்திருத்தவேண்டும்.

ஹரிஜன் மாணவர்களுக்காக கூடன்குளத்தில் ஹரிஜன ஹாஸ்டல் அமைக்கவேண்டும். அந்தப் பகுதியில் இருபதினாயிரம் ஜனத்தொகை இருக்கிறது. அங்கு உயர்நிலைப் பள்ளியும் இருக்கிறது. ஆகவே, அங்கு ஒரு ஹரிஜன ஹாஸ்டலை ஏற்படுத்த நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும.

கடற்கரைப் பகுதி ஓரங்களில் நல்ல குடிதண்ணீர் வசதி இல்லை. அங்கு நல்ல குடிதண்ணீர் கிடைக்க வழி செய்யும்படி கேட்டுக் கொள்கிறேன். கன்னியாகுமரி ஜில்லாவிலுள்ள முக்கூடல் நீர்த்தேக்கத்தை விரிவுபடுத்தி அதன் மூலம் நாகர்கோயிலுக்கும், நான்குநேரி தாலுகாவிலுள்ள கடற்கரை பகுதிகளுக்கும் நல்ல குடிதண்ணீர் கிடைக்க வசதி செய்து கொடுத்தால் நலமாக இருக்கும். இடிந்தகரையில் மீன் இலாகா குளிர்ச் சாதனக் கருவிகள் வைக்கக் கட்டடம் கட்டப்பட்டிருக்கிறது. ஐஸ் ப்ளாண்ட் இன்னும் அமைக்கப்படவில்லை. சென்னை-கன்னியாகுமரி கடற்கரை ரோட்டை அமைப்பதன் மூலம் ஏழை மீனவர் சமுதாயத்திற்கு நன்மை ஏற்படுமாதலால் நல்ல முறையில் செப்பனிட அதற்கான ஏற்பாட்டைச் செய்யவேண்டும். திருநெல்வேலி-கன்னியாகுமரி ரயில்பாதை இன்னும் ஏற்படாமல் இருப்பது வருந்தத்தக்கது. நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலாவது அதைக் கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். திருநெல்வேலி-கன்னியாகுமரி ரோடானது மிகவும் மோசமாக இருக்கிறது. (மணியடிக்கப்பட்டது).

*** திரு. எம். பி. முத்துக் கருப்பண்ணசாமி கவுண்டர்:** கனம் சபாநாயகர் அவர்களே, முதலமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கிற 1966-67-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையை ஆதரித்து ஒருசில வார்த்தைகள் பேச விரும்புகிறேன். நமது முதலமைச்சர் அவர்கள் இந்த ஆண்டு வரி இல்லாத அறிக்கையைச் சமர்ப்பித்திருக்கிறார்கள். அதற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். வேளாண்மைத் துறையில் பெருத்த வளர்ச்சியடைவது நமது தலையாய கடமை என்று கூறப்பட்டிருக்கிறது. கடந்த மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களிலேயே வேளாண்மைக்கு முக்கியத்துவம் கொடுத்து வந்துள்ளோம். கடந்த 15 ஆண்டுகளில் பெரிய அணைக்கட்டுகள், சிறிய நீர்ப்பாசனத் திட்டங்கள் ஆகியவற்றை நிறைவேற்றி குளம் குட்டைகள் சீர்படுத்துதல், கிணறு

[4th March 1966

[திரு. எம். பி. முத்துக் கருப்பண்ணசாமி கவுண்டர்]

வெட்டுவதற்குக் கடன்போன்றவற்றை கொடுப்பது எல்லாம் சிறந்த முறையில செய்திருக்கிறோம். தரிசு நிலங்கள் எல்லாம் விவசாயத்திற்குப் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன.

அதனால் எவ்வளவு உணவு உற்பத்தியை அதிகரித்தாலும் பல இடையூறுகள் இருப்பதால் தட்டுப்பாடுகள் வரத்தான் செய்யும். 12-00 noon மழை இல்லாத காரணம், ஜனப்பெருக்கம் அதிகமாகி வருவது இவற்றினால் கஷ்டங்கள் வந்து கொண்டேயிருக்கும். ஆனால் எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் இந்த உணவுப் பிரச்னை தோற்று விட்டது என்று சொல்கிறார்கள். துரியோதனர்கள் மாதிரி என்று சொல்லுகிறார்கள். அவர்களுக்கு எப்போதும் குறை சொல்வது தான் வழக்கம். ஆனால் இந்தத் தடவை குறை சொல்வதற்கு இந்த பட்ஜெட்டில் ஒன்றுமே கிடையாது. ஓநாய் ஆட்டுக்குட்டி கதைதான் எனக்கு நினைவிற்கு வருகிறது. ஓநாய் ஆட்டுக்குட்டியை பார்த்து நீ ஒரு வருடத்திற்கு முன்னே என்னைத் திட்டினாயே என்றது. அதற்கு அந்த ஆட்டுக்குட்டி நான் பிறந்த ஆறு மாதங்கள்தானே ஆகிறது என்றது. அதற்கு அந்த ஓநாய் நீ திட்டா விட்டால் உன் தகப்பனாவதுதிட்டித்தான் இருப்பான் என்று சொல்லியதாம். அதேபோன்று எதிர்க்கட்சியில் உள்ளவர்கள், இந்த ஆண்டு வரி போடாவிட்டாலும் ஆறு மாதங்களுக்கு முன்பு வரி போட்டீர்கள் என்று சொல்கிறார்கள். அப்போது அவர்கள் எங்கே போய்விட்டார்கள்? அப்போதும் இந்த சபையில்தான் இருந்தார்கள். அப்போதும் விவாதம் நடக்கத்தான் செய்தது. அப்போது போடப்பட்ட வரியை வைத்துக் கொண்டு இப்போது போட்டு விட்டீர்களே, போட்டு விட்டீர்களே என்று சொல்கிறார்கள். வரி இல்லாமல் என்ன செய்யமுடியும்? வரி போட்டு விட்டீர்கள் என்ற பல்லவியைச் சொல்லிக் கொண்டு என் தொகுதிக்கு இன்னது இன்னது செய்யவேண்டுமென்று சொல்கிறார்கள். அப்படி கேட்கும்போது வரி இல்லாமல் எப்படி அவற்றைச் சமாளிக்க முடியும்? அமைச்சர்கள் தங்கள் கையிலிருந்து கொண்டு வந்து கொடுப்பார்களா? அது முடியாத காரியம். அவர்கள் சொல்வதைச் சொல்லி விட்டார்கள், நாங்களும் சொல்லிவிட்டோம்.

வேளாண்மை பற்றி ஒரு சில குறைகளை சொல்லவேண்டிய நிலைமையில் இருக்கிறேன். வேளாண்மைக்கு உரத்திற்காக லோன் போட்டால் அது காலாகாலத்தில் கிடைப்பதில்லை. அது விவசாயிகளுக்கு அறுவடை காலத்தில்தான் கிடைக்கிறது. உரமும் ரூபாயும் கொடுக்கிறார்கள். அவை அறுவடை காலத்தில் கிடைத்தால் என்ன பிரயோஜனம்? ஆகவே அவை காலாகாலத்தில் கிடைப்பதற்கு வழி செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். முன்கூட்டியே மூன்று நான்கு மாதங்களுக்கு முன்பே அந்தந்த பஞ்சாயத்து யூனியன்களிலிருந்து விண்ணப்பங்கள் வாங்கி உரம் போன்றவை விவசாயிகளுக்கு காலாகாலத்தில் கிடைப்பதற்கு வழி செய்ய வேண்டும். பம்ப் செட்ஸுக்குள்ள லோன் மூன்று ஆண்டுகளில் திருப்பிக் கொடுக்கப்பட வேண்டும். முன்கூட்டியே 200 ரூபாய் எக்ரிமென்ட் தொகையாகக் கட்டி விடுகிறார்கள். மூன்றாம் வருடக் கடைசியில் பம்ப் செட்டுக்குள்ள லோன் பூராவையும்



4th March 1966]

[திரு. எம். பி. முத்துக் கருப்பணசாமி கவுண்டர்]

கட்டிவிடு என்று சொல்கிறார்கள். முன்கூட்டி கொடுத்த தொகையை பின்னர் வாங்கிக் கொள்ளுங்கள் என்று சொல்கிறார்கள். அந்தத் தொகையைக் கழித்துக் கொடுத்தால் என்ன? முன்பு வாங்கிய எக்ரிமென்ட் தொகையை கழித்துக் கொடுத்தால் விவசாயிகளுக்கு தொந்தரவு இல்லாமல் போய் விடும். ஆனால், தொகை பூராவும் வசூல் செய்யுங்கள் பிறகு பார்க்கலாம் என்று அதிகாரிகள் சொல்லுகிறார்கள். எவ்வளவு வருடங்களுக்குப் பிறகு அந்த பம்ப் செட்டுக்காக கட்டிய தொகையை திரும்ப வாங்குவது? ஆகவே, அதற்கும் வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அடிக்கிணறுகள் வெட்ட இப்போது லோன் கொடுப்பதாகத் தெரிவித்துள்ளார்கள். இந்த வருடம் மழை இல்லை. ஆகவே, அதை முன்கூட்டியே கொடுத்திருந்தால் கிணறுகள் வெட்டுவதற்கு சௌகரியமாக இருந்திருக்கும். இனி மேல் இரண்டு மாதங்கள் கழிந்த பிற்பாடு அடிக்கிணறுகள் வெட்ட வேண்டுமென்றால் கிணற்றில் தண்ணீர் வந்துவிடுகிறது. லோன் வாங்கியும் பிரயோஜனம் இல்லாமல் போய்விடும். ஆகவே அதுவும் கூடிய விரைவில் கிடைக்க ஏற்பாடு செய்யவேண்டும். பாறைக்கு வெடி வைக்க வெடி மருந்து கிடைப்பதில்லை. எப்படி பாறைகளை உடைப்பது? எப்படி வெடி வைப்பது? பாறைகள் உடைக்கும் கருவிகள் மட்டும் இருந்து பிரயோஜனமில்லை. அந்த மருந்து உடனடியாகக் கிடைப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இரும்புக் கலப்பைகள் கொடுக்கிறார்கள் பஞ்சாயத்து யூனியன்களில். சில இடங்களுக்குத்தான் அவை தேவைப்படும். என் தொகுதியில் அது தேவையே இல்லை. ஆனால் அரசாங்கத்திலிருந்து பாதி மான்யமாகவும் கொடுக்கிறார்கள் இரும்புக் கலப்பைகளுக்கு, என்று சொல்கிறார்கள். அவற்றை யாரும் வாங்குவது கிடையாது. அதை எந்த சந்தர்ப்பத்தில் தள்ளுகிறார்கள் என்றால் பாதி விலைக்கு மருந்து வாங்கச் செல்லும்போது கலப்பை ஒன்றையும் கொண்டு போகும்படிச் சொல்கிறார்கள். செடிகள் வாங்கச் செல்லும்போதும் அதைக் கொண்டு போகும்படிச் சொல்கிறார்கள். இப்படி ஒவ்வொன்றுக்காகப் போகும்போதும் வாங்கும்படிச் சொல்கிறார்கள். ஆனால், அதனால் விவசாயிகளுக்கு ஒரு உதவியும் கிடையாது. இன்று ட்ராக்டர்கள்தான் மிக முக்கியமானது. இந்த வருடம் 250 ட்ராக்டர்கள் கொடுப்பதாகச் சொல்கிறார்கள். அந்த ட்ராக்டர்களை அதிகப்படுத்த வேண்டும். இரும்புக்கலப்பையே வேண்டாம் என்று சொல்கிறேன். ஜனங்கள் விரும்பாதது வேண்டியதில்லை. அதை விட்டு விட்டு ட்ராக்டர்கள் அதிகப்படியாக கிடைக்க விண்ணப்பம் கொடுத்த மூன்று நான்கு மாதங்களுக்குள்ளாகவே அவை கிடைப்பதற்கு வழி செய்யவேண்டும். மூன்று வருடங்கள் கழித்து அவை கிடைப்பதில் பிரயோஜனமில்லை. நவீன முறையில் சாகுபடி செய்யவேண்டிய நிலையில் இருக்கிறார்கள் விவசாயிகள். இன்று ஆளே கிடைப்பதில்லை. நம் அரசாங்கம் நல்ல முறையில்தான் எல்லாம் செய்கிறார்கள். எல்லோருக்கும் கல்வி வசதி அளிக்கவேண்டும், எல்லோரும் படித்து முன்னுக்கு வர வேண்டுமென்றுதான் எல்லாம் செய்கிறார்கள். ஆனால் பத்தாவது

[4th March 1966

[திரு. எம். பி. முத்துக் கருப்பணசாமி கவுண்டர்]

படித்தவுடனே அவன் விவசாயத்திற்கு வருவது கிடையாது. ஆளே கிடைக்கமாட்டேன் என்கிறார்கள் எங்கள் பக்கத்தில். அறுவடை மகசூல் காலத்தில் கூட ஆளே கிடைப்பதில்லை. பருத்தி எடுப்பதற்குக் கூட ஆள் கிடைப்பதில்லை. எல்லோரும் பத்தாவது படித்தவுடன் ஏதாவது உத்தியோகத்திற்குத்தான் போக விரும்புகிறார்கள். அதற்கு அரசாங்கம் ஏதாவது செய்து கொடுக்க வேண்டும். அவர்கள் விவசாயத்திற்கு வருவது பற்றி என்று ஏதாவது சீர்திருத்தம் செய்தால்தான் விவசாயம் முன்னேற்றம் அடைய முடியும். பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டங்கள் எங்கள் பகுதிக்கு வந்தாலும் சில இடங்களில் பயனில்லாமல் இருக்கிறது. அங்கு குளம் குட்டைகளை எல்லாம் சீர்திருத்தம் செய்யவேண்டும். கிணறுகள் வெட்ட லோன் கொடுக்கப்பட்டாலும் விண்ணப்பம் போட்டு மூன்று நான்கு மாதங்கள் ஆகிறது அது கிடைப்பதற்கு. அதுபற்றி கவனிப்பதே கிடையாது. ஆகவே அந்தப் பேப்பர்கள் அந்த அந்த ஆபீஸ்களிலிருந்து சீக்கிரம் சென்று விவசாயிகளுக்கு அந்த லோன் சீக்கிரத்தில் கிடைப்பதற்கு வழி செய்யவேண்டும்.

அடுத்தபடியாக, முக்கியமான ஒரு விஷயம். விவசாய வருமான வரி ஆபீஸ் என்று ஒன்று இருக்கிறது. இரண்டு வருடங்களுக்கு முன்பும் நான் சொல்லியிருக்கிறேன். லாண்ட் சீலிங் வராத காலத்தில் ஒருவனுக்கு 1,000, 1,500 என்று வரி போட்டிருந்தால் லான்ட் சீலிங் வந்த பிறகு பாகப்பிரிவினை ஏற்பட்டதின் பலனாக 50, 100, 150 ரூபாய் என்றுதான் அவனுக்கு வருகிறது. வருமானம் குறைவாக இருக்கிறது. விவசாய வருமான வரிக்கும் தாலுகா ஆபீஸ்க்கும் சம்பந்தம் இருப்பதால், ஏப்ரல் 15-ம் தேதிக்குள்ளாக நீங்கள் கணக்குகள் அனுப்பாததால் 100 ரூபாய்க்கு 500 ரூபாய் கட்ட வேண்டுமென்று போட்டு விடுகிறார்கள். ஃபைன் போட்டாலும் கூட ஐந்து ரூபாய்தான் போடுவார்கள். தாலுகா ஆபீஸ்க்குச் சென்றால் பூராவையும் கட்டி விடு, பின்பு திரும்பி வாங்கிக் கொள்ளலாம் என்று சொல்கிறார்கள். அந்த ரூபாயை வாங்க 200 தடவை நடக்க வேண்டியிருக்கிறது. ஆகவே, ஒன்று அந்த ஆபீசில் இருந்து வசூல் செய்யவேண்டும், அல்லது தாசில்தார், கணக்கு பிள்ளையாவது வசூல் செய்யவேண்டும். விவசாய வருமான வரி ஆபீசில், உள்ள தொகையை கட்டி ரசீது வாங்கியிருந்தாலும் 1961-62-க்கு வாங்கின தொகையை கட்டவில்லை திரும்ப கட்டவேண்டும் என்று சொல்கிறார்கள். ரசீதை எல்லாம் தேட வேண்டியிருக்கிறது. அந்த ஆபீசையே எடுத்து விட்டு, அதாவது விவசாய வருமான வரி ஆபீசையே எடுத்து விட்டு தாலுகா ஆபீசிலிருந்தே, கணக்குப்பிள்ளை, மணியக்காரர் இவர்களை வைத்தே செய்தால் நல்லது. விவசாய வருமான வரி ஆபீசில் கணக்குகளை தாறுமாறாகக் காட்டுகிறார்கள். விவசாய வருமான வரி ஆபீசில் இருந்து வரியை உடனடியாக அனுப்பவேண்டுமென்று எழுதி அனுப்பிவிடுகிறார்கள், ஆனால் அதைப்பற்றி அந்த மக்களுக்கு ஒன்றும் தெரியவில்லை. அவர்களுக்கு ஒன்றுமே தெரியாது. ஏப்ரல் 15-ம் தேதி எப்போது வருகிறது என்பதே அவர்களுக்குத்



4th March 1966]

[திரு. எம். பி. முத்துக் கருப்பணசாமி கவுண்டர்]

தெரியாது. விவசாய வருமான ஆபீசில் இருந்து ஒரே பட்டா பூமிக்கு இரண்டு தடவை கணக்கு போட்டிருக்கிறார்கள். கேட்டால், நாங்கள் என்ன செய்வது இரண்டு தடவையாக கணக்கு போட்டு விட்டோம், கட்டிவிட்டு பிறகு வாங்கிக்கொள்ளுங்கள் என்று சொல்கிறார்கள். அரசாங்கம் எவ்வளவோ காரியங்களை நல்லமுறையில்தான் செய்கிறார்கள். வரி போடத்தான் வேண்டும். ஆனால் அது பிரயோஜனம் இல்லாமல் சில வகைகளில் போய்க் கொண்டிருக்கிறது. அதையும் சீர்படுத்த அமைச்சர்கள் உதவி புரிய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

* திரு. கி. இரா. சம்பந்தம்: கனம் சபாநாயகர் அவர்களே, இந்த வரவு-செலவு திட்டத்தை இதை பூர்வாங்கமாக வரவேற்கு முடியாத நிலையில் ஒரு சில கருத்துக்களை சொல்ல ஆசைப்படுகிறேன். இன்றைக்கு சென்னை மாநிலத்தில் உணவு உற்பத்தியைப் பற்றியும், உணவு, உணவு என்று மக்கள் படும் கஷ்டத்தைப்பற்றியும், அவற்றைத் தீர்ப்பதற்கான பிரச்னைகளைப்பற்றியும் வரவு-செலவுத் திட்டத்தில் ஒன்றும் காணாததைக் கண்டு எல்லோரும் வேதனைப்படக்கூடிய அளவில் இருக்கிறது. குறிப்பாக மூன்று ஐந்தாண்டுத் திட்டங்கள் முடிந்தும்கூட 'வைத்த விளக்கு மாடத்திலே இருக்கின்ற' நிலைமையும், ஏடுகளையும் புள்ளிவிவரங்களையும் காட்டக் கூடிய வகையில், நடைமுறையில் எந்தவித பயனும் இல்லாத நிலையில், கீழ்த்தரமாக முறையில்தான் இருந்து கொண்டிருக்கிறது. இதற்கிடையில் வரட்டுப் பிடிவாதமாக சில கொள்கைகளை மட்டும் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக மதுவிலக்குப் பிரச்னையைப் பொறுத்தளவில், அதை சரிவர அமல் நடத்தமுடியவில்லை. இதன் காரணமாக இந்தத் திட்டத்தின் கீழ் இருக்கக்கூடிய அதிகாரிகளிடத்தில் லஞ்சம் தாண்டவம் ஆடக் கூடிய நிலை இருந்து கொண்டிருக்கிறது. படித்தவர்கள் இருக்கக்கூடிய அமெரிக்காவில் கூட இந்தத் திட்டத்தை சரி வர அமல் நடத்த முடியவில்லை என்பதற்காக அதை கைவிட்டு விட்டார்கள். இப்போது அங்கு இந்தத் திட்டம் அமலில் இல்லை. இந்த நிலையில் இருக்கின்ற மதுவிலக்குத் திட்டத்தை வைத்துக் கொண்டு வரக்கூடிய வருமானத்தையும் விட்டுக்கொண்டிருக்கிறோம். சாதாரண ஏழை மக்கள் சாப்பிடுவதற்கு சரியான உணவு கிடைக்கவில்லையென்றால், ஒரு நேரத்திற்கு இதையாவது சாப்பிட்டு தங்கள் பசியை தீர்த்துக்கொள்வார்கள். ஒரு நாட்டில் இருக்கின்ற அரசாங்கம், அந்த நாட்டில் வாழ்கின்ற மக்கள் அனைவருக்கும் உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க இடம், படித்தவர்களுக்கு உத்தியோக வாய்ப்பு வசதி இவைகள் எல்லாம் செய்து கொடுக்க வேண்டியது கடமையாகும். அந்த வகையில் சென்னை மாநிலத்தில் தமிழர்களுக்கு சர்க்காராக இருக்கின்ற இந்த சர்க்காருக்கு—அது யாருடைய சர்க்காராக இருந்தாலும் சரி—தமிழர்களை பாதுகாக்க வேண்டிய பொறுப்பு இருக்கிறது. உணவு இல்லை என்பதைச் சொல்லி வாரத்திற்கு ஒரு நாள் பட்டினி இருந்துவிடுங்கள், விரதம் இருந்து விடுங்கள்; ஜனத்தொகை அதிகமாகிவிட்டது, அதற்காக குடும்பக்

கட்டுப்பாட்டை கொண்டு வாருங்கள் என்று சொல்லி வருகிறார்கள். இன்று இருக்கக்கூடிய பிரச்னையை தீர்ப்பதற்கு அடிப்படையாக இருக்கின்ற குறைகள் என்ன, ஊழல்கள் எங்கே நிறைந்திருக்கிறது என்பதைப்பற்றி சீர்தூக்கிப் பார்க்க வேண்டும். அப்படி பார்க்காமல் மேலெழுந்தவாரியாக எதையாவது சொல்லிவிடுவதினால் மட்டும் பிரச்னை தீர்ந்துவிடாது. உலகத்தில் எங்கு பார்த்தாலும் ஜனத்தொகை பெருகிக்கொண்டுதான் இருக்கின்றது. அதனால் உணவு உற்பத்தியைப் பெருக்க பாடுபடுகிறார்கள். இந்துக்கள் இருக்கக்கூடிய இடத்தில்தான் குடும்பக் கட்டுப்பாடு பற்றி சொல்லப்படுகிறது, கிருஸ்தவர்கள் இருக்கக்கூடிய இடத்தில் இதைப்பற்றி சொல்ல முடியாது, மதம் குறுக்கிடுகிறது. முகமதியர் இருக்கின்ற இடத்தில் சொல்ல முடியாது. ஒரு ஊராக இருந்த முஸ்லிம் கிராமம் பத்து ஊர்களாக பெருகி வருகிறது. இப்படி கிருஸ்தவர்கள், முஸ்லிம்கள் ஜனத்தொகை பெருகிக் கொண்டே வருகிறது. வளர்ந்து வளர்ந்து தனியாக இங்கேயே பாகிஸ்தான் கேட்கக்கூடிய அளவிற்கு நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்பதை சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். அதே நேரத்தில் பிரச்னையில் இருக்கின்ற உண்மையான கஷ்டம் என்ன என்பதை கவனிப்பதில்லை. விவசாய தொழிலாளர்களை எடுத்துக்கொள்ளும்போது, இன்றைக்கு தஞ்சை ஜில்லாவில் எத்தனையோ பேர்கள் சாகுபடி செய்துவிட்டு சோற்றுக்கு வழியில்லாமல் இருந்து கொண்டிருக்கிறார்கள். அதிலும் இப்போது ஏற்கனவே இருந்ததைவிட இன்னும் கூடுதலாக கால் ரூபாய் வரி கொடுக்கவேண்டியவர்களாக இருக்கிறார்கள். இதைப் பற்றி நான் மட்டும் சொல்லவில்லை, ஆளுங்கட்சி பக்கம் இருக்கின்றவர்களும் சொன்னார்கள், எதிர் கட்சியில் இருக்கின்றவர்களும் சொன்னார்கள். இதையெல்லாம் எண்ணிப் பார்க்காமல், ஈவும் இரக்கமும் இல்லாத நிலைமையில் இருக்கிறது இந்த அரசாங்கம். வருகிற சீசனில் இப்போது இருக்கின்ற தண்ணீரைக் கொண்டு எப்படி குறுவை சாகுபடி செய்வது என்பது பெரிய பிரச்னையாக இருக்கிறது. என்ன செய்யப் போகிறார்கள் என்று தெரியவில்லை. விவசாயி தெம்பாக இருந்தால்தான் நாடும் தெம்பாக இருக்க முடியும். 'வரப்புயர நீர் உயரும், நீர் உயர நெல் உயரும், நெல் உயர குடி உயரும், குடி உயர கோன் உயரும்' என்று சொல்வார்கள். அந்த அளவில் கோன் யார் என்று எடுத்துக்கொண்டால் இந்த சர்க்கார்தான். அதற்கு முதுகெலும்பாக இருக்கக்கூடியவர்கள் விவசாயிகள். அவர்கள் நல்லமுறையில் சாகுபடி செய்யக் கூடிய முறையில் இருக்க வேண்டும், சாகக்கூடிய நிலையில் இருக்கக் கூடாது. அவர்கள் சாகக் கூடிய நிலை ஏற்பட்டால் சர்க்காருக்கும் சாகக் கூடிய நிலைமைதான் ஏற்படும். ஆகவே, இப்படிப்பட்ட கஷ்டங்களிலிருந்து விவசாயிகள் எப்படி மீள முடியும் என்று தெரியவில்லை. விவசாய மக்களுக்கு இப்போது எந்தவிதமான சலுகையும் கொடுக்கப்பட்டிருப்பதாகத் தெரியவில்லை. கடன்கள் கொடுக்கப்படுவதாக சொல்கிறார்கள். ஆனால் கொடுக்கின்ற சில கடன்கள் திருப்பிக் கொடுக்கப்படவில்லை என்ற காரணத்தினால் எத்தனையோ செசைட்டிகள் "டிபாங்க்ட்" டாகியிருக்கக்கூடிய



நிலைமைதான் ஏற்பட்டிருக்கிறது. நமது முதலமைச்சர் அவர்கள் கூட அப்பகுதியில் கூட்டுறவு சங்கங்கள் நல்ல முறையில் செயல்படவில்லை என்று சொல்லியிருப்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். வெள்ளைக்காரன் காலத்தில் தக்காவிக்கடன் என்று கொடுத்து, அதை மூன்று வருடங்களில் வாங்கிக்கொண்டிருந்தார்கள். அந்த முறையில் இப்போதும் கடன்கள் கொடுக்க வேண்டும். அதல்லாமல் கூட்டுறவு என்று சொல்லிக்கொண்டேயிருந்தால் எப்படி விவசாயிகள் முன்னேற முடியும்? இவற்றையெல்லாம் சிந்தித்துப் பார்த்து அடிப்படையில் இருக்கின்ற கோளாறுகளை அகற்றுவதற்கு வேலை செய்தால்தான் நாட்டில் சுபீட்சம் ஏற்பட முடியுமே தவிர வேறு வழியில் ஒன்றும் ஏற்படாது.

இன்றைக்கு அரசாங்கத்திற்கு வருகின்ற வருமானத்தை எடுத்துக்கொண்டால் பல விதங்களில் வந்து கொண்டிருக்கின்றது. முக்கியமாக பஸ் ரூட்டுகள் பெற்றுக் கொள்வதற்கு கள்ளுக்கடையில் கூட்டம் போடுவது போல் போட்டிபோட்டுக் கொண்டு வருகிறார்கள். அப்படிப்பட்ட தொழில்களில் எல்லாம் நல்ல முன்னேற்றம் இருக்கிறது. ஆனால் விவசாயத்தில் மட்டும் தான் எந்த விதமான முன்னேற்றமும் ஏற்படவில்லை. மற்ற தொழில்களில் ஈடுபட்டிருக்கக்கூடியவர்கள் தங்கள் கோரிக்கைகளுக்காக போராட்டம் நடத்துகிறார்கள். ஆனால் விவசாயிகளால் அவ்விதம் நடத்த முடியாது, காரணம் அவர்களிடத்தில் ஒற்றுமை கிடையாது. கட்சி அரசியலும் அவர்களிடத்தில் புகுந்து கொள்கிறது. அதனால் விவசாயிகளை மட்டும் ஏமாந்தவர்கள் என்று பார்த்துக்கொள்கிறார்கள். "ஏமாந்தவன் தொடையில் கயிறு திரிப்பது" போல் விவசாயிகள் தான் ஏமாந்தவர்கள் என்று எண்ணி விவசாயிகள் தலை மீது எத்தனை வரிகள் வேண்டுமானாலும் போடலாம் என்று பல வரிகளைப்போட்டு திமிர முடியாமல் ஆக்கி விடுகிறார்கள். இதன் காரணமாக போடுகின்ற திட்டங்கள் ஒன்றும் பயனில்லாமல் ஆகி விடுகிறது. தஞ்சை ஜில்லாவில் வடிகால்களை எடுத்துக்கொண்டால் இன்னும் ஒன்றும் அங்கே நடத்தவில்லை. இங்கு 1952-லிருந்து நான் எம்.எல்.ஏ.-வாக இருந்திருக்கிறேன். அப்போதிருந்து இன்று வரையிலும் அதாவது 1952 லிருந்து 1966 வரையிலும் இத்தனை வருடங்களாக சொல்லி வந்திருக்கிறேன். ஒரு வடிகால் கூட இன்னும் சீர்திருத்தப்பட்டதாக இல்லை. சீர்காழி தாலுகாவிலும் சரி, திருத்துறைப்பூண்டி தாலுகாவிலும் சரி, அதே நிலைமைதான் இருந்து கொண்டிருக்கிறது. அதேபோன்றுதான் தலைஞாயிறு பகுதி இருந்து கொண்டிருக்கின்றது. இந்தப் பகுதிகளை எல்லாம் கனம் கக்கன் அவர்களும், கனம்.ரெவின்யூ அமைச்சர் அவர்களும் வந்து பார்த்திருக்கிறார்கள். ஆனாலும் நிலைமை இன்னும் மாறவில்லை. இப்படியிருந்தால் எப்படி விவசாயிகள் முன்னேற முடியும்? இயற்கையின் கோளாறு அப்படியிருந்திருக்கிறது, நாங்கள் என்ன செய்வது என்று சொல்வார்கள். இயற்கையின் கோளாறாக இருந்தாலும் இவற்றை தவிர்க்க சர்க்காரினாலேயே முடியவில்லை என்றால் சாதாரண விவசாயி என்ன செய் முடியும். தலையில் கையை வைத்துவிட்டு சும்மா உட்கார்ந்து இருக்கவேண்டியதுதான், வேறு

ஒன்றும் செய்வதற்கில்லை. அந்த முறையில்தான் இந்த வரவு செலவுத் திட்டத்தைப் பார்த்து விவசாயிகள் பெரிதும் ஏமாற்ற மடைந்திருக்கிறார்கள். அதோடு விவசாயிகளுக்கு பெரும் அனுகூலமாக இருக்கிற விவசாய இன்சூரன்ஸ் திட்டத்தை கொண்டு வரவேண்டும் என்று நாங்கள் மட்டுமல்ல, இந்த சபையிலுள்ள எல்லாக் கட்சி அங்கத்தினர்களும் வலியுறுத்தினார்கள். அது வந்தால் விவசாயிகளுக்கு மிகுந்த பலனை கொடுக்கும். ஒரு வருடம் சாகுபடி மோசமடைந்து விட்டாலும் அடுத்த வருடமாவது நல்ல முறையில் சாகுபடி செய்வதற்கு வாய்ப்பும் வசதியும் இருக்கும். அதல்லாமல் இருந்தால் விவசாயம் போய் விட்டது, போய் விட்டது என்றுதான் சொல்லிக் கொண்டு இருக்க வேண்டும். தஞ்சை மாவட்டத்தில் கலெக்டர் அவர்கள் இரண்டாவது போகம் சாகுபடி செய்யாதீர்கள் என்று தண்டோரா மூலமாக தெரிவித்தார்கள். நாங்கள் இரண்டாவது போகத்தில் ஏதாவது கிடைக்காதா என்று எண்ணி சாகுபடி செய்தோம். (மணியடிக்கப்பட்டது).

* **திரு. எம். கொளந்தைசாமி கவுண்டர்:** கனம் சபாநாயகர் அவர்களே, நமது முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற நிதிநிலை அறிக்கையை ஆதரித்து சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். தாய் தந்தையர் எப்படி குழந்தைகளை பெற்று காப்பாற்றி வருகிறார்களோ அதைப்போலவே நமது முதலமைச்சர் அவர்களும் சென்னை மாநிலத்தில் இருக்கக்கூடிய பொது மக்களுக்கு வேண்டிய எல்லா சலுகைகளையும் வரி போடாமலேயே செய்து கொடுப்பதற்கு வழி செய்திருப்பதைப் பார்த்து நன்றியையும் பாராட்டுதலையும் தெரிவித்துக்கொள்கிறேன். மக்களுக்கு வேண்டிய எல்லா வசதிகளையும்—பள்ளிக்கூட வசதி, ரோடு வசதி, பஸ் வசதி, மின்சார வசதி, இவைகளை எல்லாம் 17, 18 வருட காலமாக செய்து கொடுத்துக்கொண்டு வருவதை நாம் எல்லோரும் அறிவோம். முன்னாள் முதலமைச்சராக இருந்த காமராஜ் அவர்கள் காலத்திலிருந்தே நமக்கு இந்த வசதிகள் எல்லாம் கிடைத்து வருகிறது. இப்போது முதலமைச்சராக இருக்கிற பக்தவத்சலம் அவர்களும் பல முயற்சி எடுத்து பொது மக்களுக்கு வேண்டிய எல்லா வசதிகளையும் செய்து கொடுக்க முன் வந்திருக்கிறார்கள். அதற்காக என் நன்றியையும், வணக்கத்தையும், பாராட்டையும் தெரிவித்துக்கொள்கிறேன். இப்போது ஏதோ என் தொகுதியில் உள்ள குறைபாடுகள் சிலவற்றைப் பற்றிச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

சேலம் ஜில்லாவிலே, ஏர்க்காட்டிலே, டவுன் பக்கத்தில் இருக்கிற மலை ஜாதி மக்களுக்குக் கொஞ்சம் வசதி ஏற்பட்டிருக்கிறது. 25 மைல்கள்வரை இருக்கிறது, ஏர்க்காடு, சேர்வராயன் மலை. அங்கே ரோடு வசதி இல்லை. கொட்டச்சேரியிலிருந்து பிளாக்காடு வரையில் ரோடு போடவேண்டுமென்று முதன் முதல் நான் சட்ட சபைக்கு வந்தபோதே பேசினேன். ஆனால் இன்னும் அந்த ரோடு போடப்படவில்லை. பிளாக்காடு பகுதியில் 15 கிராமங்கள் இருக்கின்றன. டவுனுக்கு வரவேண்டுமென்றால் 20 மைல்கள் நடந்து வரவேண்டும். ஏர்க்காட்டிலே ஞாயிற்றுக்கிழமை சந்தை





நடக்கிறது. அதற்கு அந்த மக்கள் வரவேண்டும். அந்த மக்கள் இருக்கும் இடத்தில் நெல் முதலிய தேவையான பொருள்கள் இல்லை. அவைகளை வாங்குவதற்காக அங்கிருந்து நடந்து வரவேண்டும். வாங்கிக்கொண்டு தலையில் சுமந்துகொண்டு 20 மைல் நடந்து செல்லவேண்டும். போக 20 மைல், வர 20 மைல் நடப்பது மிகவும் கஷ்டம். ஆகவே இரவில் ஏர்க்காட்டிலேயே தங்கி விட்டு மறு நாள் போவார்கள் ரோடு வசதி இருந்தால், பஸ் வசதி இருந்தால் பொருள்களை வாங்கிக்கொண்டு அன்றைக்கே போவார்கள் என்று அமைச்சர் அவர்களுக்கு கூறிக்கொள்ளுகிறேன். இதைப்பற்றி பஞ்சாயத்தாக இருந்தபோதுகூட சொல்லியிருக்கிறேன். பஞ்சாயத்திலும் கவனிக்கவில்லை, யூனியனிலும் கவனிக்கவில்லை. டவுன்ஷிப்பாகி ஒரு வருஷம் ஆகிறது. டவுன்ஷிப்பான பிறகு மீட்டிங்கே நடக்கவில்லை. கலெக்டர் சேர்மனாக வரப் போவதாகக் கேள்விப்படுகிறேன். அதே நேரத்தில் பஞ்சாயத்து சேர்மனே மறுபடியும் தலைவராக வர முயற்சிப்பதாகத் தெரிகிறது. பஞ்சாயத்தாக இருந்தபோது வசதி இல்லை என்றுதான் டவுன்ஷிப்பாக ஆக்கியிருக்கிறார்கள். மறுபடியும் அவரைப் போட்டால் பழைய பிரகாரம்தான் இருக்கும். மலைஜாதியினர் சங்கத்திற்கு தலைவராக திரு. சின்னமணி கவுண்டர் இருக்கிறார். மலை ஜாதி மக்களில் ஒழுக்கமான நபர் அவர். அவரை மெம்பராகப் போட்டு, கலெக்டரைத் தலைவராகப் போட்டால் வசதி ஏற்படும் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

மலைஜாதி மக்களுக்கு பள்ளிக்கூடம், காலனி, ஆஸ்பத்திரி எல்லாம் கட்ட பணம் ஒதுக்கியது, சேலம் ஜில்லாவிலே எங்கு தான் இதெல்லாம் செய்கிறார்கள் என்று தெரியவில்லை. மலையில் இருக்கும் குன்னூர், ஆத்தூர் கிராமங்களுக்கு 1961-ல் போனேன். அங்கே இருக்கிற 35 கிராமங்களுக்கும் ஒரே ஒரு பள்ளிக்கூடம் தான் இருக்கிறது. அங்கு இருக்கிறவர்கள் அத்தனை பேரும் ஒரே ஒரு மலை ஜாதியைச் சேர்ந்தவர்கள். அங்கே ஹாஸ்டல் கட்டி, வெல்ஃபேர் ஆஃபீஸ் மூலமாகத் திறந்து வைத்தபோது என்னையும் கூட்டிக் கொண்டு போனார்கள். பாபநாசத்திலிருந்து நடந்தே போனேன். அங்கெல்லாம் பள்ளி வசதி, ரோடு வசதி, ஆஸ்பத்திரி வசதி ஒன்றும் கிடையாது. பதினேழு பதினெட்டு வருஷங்கள் ஆகியும் கவனிக்காமல் இருக்கிறார்கள். அரசாங்கம் உடனடியாக எல்லா வசதிகளையும் செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பெரிய கள்ராயன் மலை, சிறியகள்ராயன் மலை, அறுநூற்று மலை என்று மூன்று மலைகள் இருக்கின்றன. பத்து—பதினைந்து மைல் தூரத்தில் புழுதிக்குட்டை என்ற கிராமம் இருக்கிறது. அந்த இடத்திற்கு சந்தைக்கு வரவேண்டும். புழுதிக்குட்டையிலிருந்து பேளூருக்கு 6 மைல் மண் ரோடாக இருக்கிறது. சல்லி போட்டு பஸ் விட்டால் மலையில் இருக்கிற மக்களுக்கு வசதியாக இருக்கும் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

வாளப்பாடி பகுதியில் மக்களுக்கு 10—12 பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன. சம்பூத்துமலை, கெடமலை, போதமலை சர்கமலை, வரகப்பாழி, கவுண்டராம், சல்லூத்து, அடிமலைப்பட்டி,

[திரு. எம். கொளந்தசாமி கவுண்டர்] [4th March 1966

தும்பல்பட்டி, நொச்சிலிப்பட்டி, கோணமடுவு போன்ற இடங்களில் சிறிய சிறிய பள்ளிகள் இருக்கின்றன. பஞ்சாயத்திலோ, பஞ்சாயத்து யூனியனிலோ, சர்க்காரிலோ பள்ளிகளைக் கட்டிக் கொடுக்காமல் இருக்கிறார்கள். கனம் அமைச்சர் ராமைய்யா அவர்கள் வந்திருந்தார். அவருக்கு முக்கியமாக இது தெரியும். தும்பல்பட்டி பள்ளிக்கூடம் இடிந்திருந்தபோது வந்தார்கள். இன்னும் அது அப்படியே இருக்கிறது. பள்ளிக்கூடங்களையெல்லா கட்டிக்கொடுக்கவேண்டும். பஞ்சாயத்து ஆஃபீஸ் கட்ட புறம்போக்கு நிலம் 3 ஏக்கர் கேட்டுக் கொண்டிருக்கிறேன். அழுகிற பிள்ளைக்கு மாம்பழத்தைக் காட்டுகிற மாதிரி என்று சொல்லுவார்கள். அந்தமாதிரி அமைச்சர் அவர்கள் சேலத்திலிருந்து போனாராம், பார்த்தாராம், காட்டில் இளநீர் சாப்பிட்டு விட்டு போனாராம். நல்லமுறையில் கலெக்டர் அல்லது ஆர்.டி.ஓ. அல்லது தாசில்தாரை அழைத்து வந்து அந்த புறம்போக்கு நிலத்தைக் கொடுக்கவேண்டுமென்று உத்திரவு போடாவிட்டால் எப்படி முன்னுக்கு வர முடியும்? இதை உடனடியாக கவனிக்கவேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன்.

கோணமடுவு பள்ளிக்கூடம், ஹாஸ்டல் எல்லாம் மூன்று மாதங்களாக நடந்து வருகின்றன. கொள்ளிமலை, முள்ளுக்குச்சி இந்த இடங்களில் இரண்டு மாதங்களாக நடந்து வருகின்றன. மூன்று மாதங்களாக சாப்பாடு போட்டு வருகிறார்கள். சாமான்களை வாத்தியார் இருக்கிற வீட்டிலேயே வைத்து விட்டால் எப்படி எப்படியோ செலவு செய்து விடுகிறார்கள். அவரவர் வீட்டுக்கே போய்விட்டது. இப்போது பள்ளிக்கூடம் காலியாகப் போய் விட்டது.

ஹாஸ்டல் கட்டி, கிணறு வெட்டி வைத்திருக்கிறார்கள் சர்க்காரிலே. கிணறு வெட்டி மூன்று வருஷங்கள் ஆகின்றன. அதிலே தண்ணீர் இல்லாமல் இருக்கிறது. அடிக்கிணறு வெட்டி குடி தண்ணீர் கொடுக்கவேண்டும். அந்த இடத்திலே ஆஸ்பத்திரி இருந்தால் மக்களுக்கு நோய் ஏற்பட்டால் அதற்கு சிகிச்சை செய்து கொள்வதற்கு வசதியாக இருக்கும். இப்போது சேலம் போகவேண்டுமானால் பஸ்காரர்கள் என்ன செய்கிறார்கள் என்றால், அவர்களுக்கு உதவுகிறவர்கள், முகப் பழக்கம் உள்ளவர்களுக்குத் தான் டக்கெட் கொடுக்கிறார்கள். மற்ற ஏழை மக்களுக்கு கையைக் காட்டி விட்டுப் போய் விடுகிறார்கள். ஒரு வருஷம் ஆனவுடன் டிரைவரையும், கண்டக்டரையும் வேறு இடத்திற்கு மாற்றி விடவேண்டும். அப்போதுதான் எல்லா மக்களுக்கும் டிக்கட் கொடுப்பார்கள்.

அதோடுகூட மலை ஜாதி மக்களுக்கு தண்ணீர் பிரச்னை அப்படியே இருக்கிறது. பனைமரத்துப்பட்டி ஏரி 1911-ல் கட்டியது, 2,500 ஏக்கர்களுக்குத் தண்ணீர் பாயவேண்டியது. இப்போது 500 ஏக்கர்களுக்குத்தான் தண்ணீர் இருக்கிறது. 2,000 ஏக்கருக்குப் பாயாமல் சும்மா இருக்கிறது. மலை ஜாதி மக்கள் கஷ்டப்படுகிறார்கள். அமைச்சர் கக்கன் அவர்களுக்குக் கூட மலை ஜாதி மக்கள் மகாநாட்டில் மனு கொடுத்திருக்கிறேன். வந்து பார்த்துச் சொல்லுகிறேன் என்று சொல்லியிருக்கிறார்.



4th March 1966] [திரு. எம். கொளந்தைசாமி கவுண்டர்]

நீலகிரியில் கூட தீர்மானம் கொடுத்தேன். டேனிஷ்பேட்டை பற்றியும் குறிப்பிட்டிருக்கிறேன். 500 ஏக்கர் ஜாகீர்தாருக்குப் போவது போக 500 ஏக்கர் இருக்கிறது. அங்கே முள்ளுச் செடியாக இருக்கிறது. 50 வீட்டுக்காரர்கள் நிலம் இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள். அந்த நிலத்தை 2 ஏக்கர் 3 ஏக்கர் என்று கொடுத்தால் கூட நலமாக இருக்கும் என்று கூறிக்கொண்டு, எனக்குப் பேச சந்தர்ப்பம் கொடுத்த கனம் சபாநாயகர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* **திருமதி அ. கிருஷ்ணவேணி:** மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, கனம் முதல் அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கும் 1966-67-ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையை வரவேற்று ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். நமது நாடு சுதந்திரம் அடைந்து 18 ஆண்டுகளுக்கு மேல் ஆகிறது. எதிர்க்கட்சி உறுப்பினர்கள், சுதந்திரம் அடைந்து 18 ஆண்டு காலம் ஆகியும் எந்தவிதமான திட்டமும் முன்னேற்றம் அடையவில்லை என்று குறை கூறுகிறார்கள். ஒவ்வொருவரும் நன்றாக சிந்தித்துப் பார்க்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மதிப்பிற்குரிய தந்தை திரு. காமராஜ் அவர்கள் காலத்தில் இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு, தொழில் துறையிலும், விவசாயத் துறையிலும் நாட்டில் அதிகப்படியான முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. அதற்குப் பிற்பாடு நமது மதிப்பிற்குரிய கனம் முதல் அமைச்சர் அவர்கள், தந்தை காமராஜ் அவர்கள் விட்டுப்போன திட்டங்களையெல்லாம் மிகத் திறமையுடன் நிறைவேற்றி வருகிறார்கள் என்பதும் எதிர்க்கட்சி நண்பர்களுக்கு நன்றாகத் தெரியும். மேலும் நமது முதலமைச்சர் திரு. பக்தவத்சலம் அவர்கள் ஒன்று, இரண்டு, மூன்று வகுப்புகளில் படிக்கக் கூடிய மாணவ மாணவிகளுக்கு இலவசமாக உணவு, உடை, புத்தகங்கள் அளித்து வருவதை நாட்டு மக்கள் அத்தனை பேர்களும் பாராட்டாமல் இருக்க முடியாது. 12-30 p.m.

ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்று சொல்லுவார்கள். எதற்காக இந்த உதாரணத்தைக் கூறுகிறேன் என்றால், சுதந்திரம் அடைந்து 18 ஆண்டு காலமாகியும் எந்தவிதமான திட்டமும் முன்னேறவில்லை என்று எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் அத்தனை பேர்களும் கூறிவருகிறார்கள். உதாரணமாக நம் நாட்டில் ஒரு கிராமத்தை எடுத்துக்கொள்ளவேண்டும். எதிர்க்கட்சி உறுப்பினர்களில் சில பேர்கள் நகரத்திலிருந்து வந்திருப்பார்கள், சில பேர்கள் என்னைப் போன்று கிராமவாசிகளாக கிராமத்திலிருந்து வந்திருக்கலாம். அந்தக் கிராமத்தில் எவ்வளவு முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது என்பது கிராமத்திலிருந்து வந்திருக்கிற எதிர்க்கட்சி அங்கத்தினர்களுக்கு நன்றாகப் புரியும். சிறு சிறு குக்கிராமங்களை எடுத்துக்கொண்டாலும், 10, 15 வீடுகள் இருக்கிற கிராமங்களை எடுத்துக் கொண்டாலும், ரோடு வசதி, பள்ளி வசதி, பெண்களுக்கு குளிக்கும் அறை, குடி தண்ணீர் வசதி, ஊராட்சி மன்றம் போன்ற எல்லாவிதமான வசதிகளும் செய்து கொடுத்திருக்கிறார்கள். முன்பெல்லாம் கிராமங்களில் கிராமப் பஞ்சாயத்து பண்ண

[திருமதி அ. கிருஷ்ணவேணி] [4th March 1966

வேண்டுமென்றால் தெருக்கோடியில் ஒரு சிறிய மண்ணெண்ணெய் விளக்கை வைத்துக்கொண்டு பஞ்சாயத்து பேசுவார்கள். நான் சிறுமியாக இருக்கும்பொழுது பார்த்திருக்கிறேன். இப்பொழுது கிராமங்களில் ஒரு அழகான மேடை அமைத்து மின்சார விளக்கு அமைத்து, இரவு 8 மணிக்கு பஞ்சாயத்து கூடினாலும் கூட, விடியற் காலை 3 மணி வரையிலும் கூட, மின்சார விளக்கு வெளிச்சத்தில் மேடையில் உட்கார்ந்துகொண்டு பஞ்சாயத்து செய்கிறார்கள். எதிர் கட்சி அங்கத்தினர்கள் அத்தனை பேர்களும் இதை நன்றாக அறிந்து கொள்ளவேண்டும். பதினெட்டு ஆண்டுகளுக்கு முன்பு வெள்ளையர் ஆட்சி புரிந்த காலத்திலே இந்தத்திட்டங்களெல்லாம் முன்னேறி இருந்ததா என்பதை நன்றாக சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

அடுத்தபடியாக, ஒரு ஏக்கர், 2 ஏக்கர் வைத்துக்கொண்டு விவசாயம் செய்யக்கூடிய விவசாயிகளிடமிருந்து கட்டாயக் கொள்முதல் செய்யப்படுகிறது. ஒரு ஏக்கருக்கு 4 மூட்டை 6 மூட்டை கொடுக்கவேண்டும் என்ற ஒரு விதி இருக்கிறது. குறிப்பாக எங்கள் மாவட்டத்தில் ஒரு ஏக்கருக்கு 15 மூட்டை கூட விளையவில்லை. யானைக்கொம்பன் நெல்லுக்கு ஒரு மூட்டைக்கு ரூபாய் 24-ம், தங்க மணி ஒரு மூட்டை நெல்லுக்கு ரூபாய் 23-ம் கொடுத்து வருகிறார்கள். யானைக்கொம்பனுக்கு ரூபாய் 30-ம் தங்கமணிக்கு ரூபாய் 25-ம் என்று ஒரு மூட்டை விலையை உயர்த்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதோடுகூட ஒரு ஏக்கர், இரண்டு ஏக்கர் வைத்திருக்கக்கூடிய சிறு விவசாயிகளிடமிருந்து கட்டாயக் கொள்முதல் செய்யவேண்டாம் என்று சிறிய விவசாயிகள் சார்பாக நான் அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக என்னுடைய தொகுதி, ஆண்டிப்பட்டித் தொகுதி மிக வறண்ட தொகுதி என்பது அரசாங்கத்திற்குத் தெரியும். அங்கே மானவாரி நிலத்திற்கு சரியாகக் கண்மாய் கிடையாது. அரசாங்கம் அப்பகுதிக்கு விசேஷச் சலுகைகள் கொடுத்து உதவ வேண்டும் என்று கேட்டுக் கொண்டு வருகிறேன். மறுபடியும் என் தொகுதி பற்றி சில முக்கியமானவற்றை அரசாங் கத்தின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

என்னுடைய தொகுதியான வரிசநாட்டு ஏரியாவில் ஓட்டு அணையை கட்டினால், ஏராளமான கண்மாய்களுக்கு பாசன வசதி கொடுக்கக் கூடிய வாய்ப்பு இருக்கிறது. அங்குள்ள பூமிகளை நஞ்சைகளாக மாற்றிய பெருமை கிடைக்கும். அதோடு கூட வைகை அணைக்குத் தென்கிழக்கே ஒரு கால்வாய் வெட்டினால் வசதியாக இருக்கும். இந்த வரிச நாட்டு ஏரியாவில் சில விவசாயிகள் கரடுமுரடான நிலங்களை செப்பனிட்டு சீர்திருத்தம் செய்து அவர்கள் தாங்கள் பயிர் செய்துக்கொண்டு வரும் நிலங்களை தங்களுக்கு பட்டா செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று அரசாங்கத்தைத் தாழ்மையுடன் கேட்டுக் கொள்ளுகிறேன். கண்டமனூர் மார்க்கமாய் தெற்கே போக்குவரத்து மிகவும் மோச மான நிலையில் இருக்கிறது. சில பஸ்கள் ஓடிக் கொண்டிருக்



4th March 1966] [திருமதி அ. கிருஷ்ணவேணி]

கின்றன என்றாலும், போக்கு வரத்துக்கு மிகச் சிரமமாக இருக் கிறது. வண்டிவாகனங்களில் போவதும் சிரமம். கால்நடையாகப் போகிறவர்களுக்கும் சிரமம் இருக்கிறது. இந்த ரஸ்தாவை ஹைவேஸ் இலாகாவில் எடுத்துக் கொள்ளப் போவதாகச் சொல்லப் படுவதால், விரைவில் அந்த ரஸ்தாவைச் சீராக்க வேண்டும் என்று சர்க்காரைக் கேட்டுக் கொள்கிறேன்.

அதே மாதிரி உசிலம்பட்டி-பேரையூர்-எழுமலை-சாப்டூர் ரஸ்தாக்கள் என்னுடைய தேர்தல் காலம் முதல் இதுவரையிலும் மிக மோசமாக இருக்கின்றன. அங்கே என்னைத் தலை காட்ட விடுவதில்லை அந்த மக்கள். கேலி செய்கிறார்கள். ஏனென்றால் அந்த ரோடுகள் அவ்வளவு மோசமாக இருக்கின்றன. அடுத்த பொதுத்தேர்தல் வருவதற்குள்ளாகவாவது அந்த ரோடுகளை, நெடுஞ்சாலை இலாகாவினர் மராமத்துச் செய்ய ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

என்னுடைய கிராமத்தைச் சுற்றி பல கிராமங்கள் இருக்கின்றன. என்னுடைய ஊருக்கும் ஐயனார்புரத்திற்கும் இடையில் வைகை யாறு ஓடுகிறது. இந்த கிராமவாசிகள் உணவுப் பயிர் உற்பத்தி செய்ய ஆற்றைக் கடக்க முடியாமல் கஷ்டப்படுகிறார்கள். அவர்களுக்கு இரு கரைகளிலும் நிலங்கள் இருக்கின்றன. ஆகவே, அங்கே ஒரு பாலம் கட்டிக் கொடுத்தால் மிக்க நலமாக இருக்கும். சுப்பலாபுரம் ரோடிலிருந்து, தேனிக்கு ஐந்து மைல் தூரத்தில் சென்றுவிடலாம். தற்போது 15 மைல் சுற்றிப் போக வேண்டி யிருக்கிறது. அதே போல கம்பம், சின்னமன்னூரிலிருந்தும் சுற்றுவழி தூரம் குறைந்துவிடும். (மணியடிக்கப்பட்டது.) கனம் சபாநாயகர் அவர்களே, இன்னும் இரண்டு நிமிஷங்கள் தயவுசெய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். வைகையாற்றில் ஒரு பாலம் கட்டிக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

என்னுடைய தொகுதியில் சாப்டூர்-சந்தையூர் ரோடு போட்டுக் கொடுக்க வேண்டும் என்று கனம் உணவு அமைச்சரைக் கேட்டுக் கொள்கிறேன். அங்கே வைகை அணையால் பாதிக்கப்பட்ட குன்னூர் கிராமத்தில் செத்த பிணங்களைக் கூட சுடுகாட்டுக்கு எடுத்துக்கொண்டுபோக வசதியில்லாமல் இருக்கிறது. சுகாதாரம் அற்ற சூழ்நிலையும் இருக்கிறது. ஆகவே, இந்த குன்னூர் கிராமத் திற்கு வேண்டிய வசதியைச் செய்துகொடுக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, என்னுடைய பகுதியாகிய வரிசநாடு, பருத்திக் களஞ்சியமாக இருப்பதாலும், கண்டமனூர் ரஸ்தா இருபுறங் களிலும் தரிசு நிலங்கள் இருப்பதாலும், அங்கே ஒரு கூட்டுறவு பஞ்சாலையை அமைக்க வேண்டும் என்று கனம் தொழில் அமைச் சரைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

மேலும், ஹைவேஸ் டிபார்ட்மெண்டில் ரோடு செப்பனிடுவதற் காக சில மைல் கூலிகள் இருக்கிறார்கள். அவர்கள் நான் சிறிய வளாக இருந்த காலத்திலிருந்து, இன்று வரையில் டெம்பரரி

கூலிகளாகவே இருக்கிறார்கள். நிரந்தரமாக்கப் படாமலே இருக்கிறார்கள். அவர்களை நிரந்தரமாக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

கடைசியாக, பின்தங்கிய ஏரியாவாக இருக்கும், ஆண்டவனால் கைவிடப்பட்ட ஆண்டிப்பட்டி பகுதியை பின்தங்கிய (Backward) ஏரியாவாக நிர்ணயித்து வேண்டிய உதவிகளைச் செய்ய வேண்டும் என்று அமைச்சரைக் கேட்டுக் கொண்டு, எனக்குப் பேச வாய்ப்பு அளித்த தலைவருக்கு வணக்கம் தெரிவித்துக் கொண்டு என் வார்த்தைகளை முடிக்கிறேன்.

* திரு. பி. வி. சீராமுலு : கனம் சபைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு நிதி நிலை அறிக்கையைப் பற்றி என்னுடைய கருத்துக்களைச் சொல்ல முற்படுகிறேன். இந்த ஆண்டு, இந்த அறிக்கையில் வரியில்லை என்று சொல்லுவது, ஏமாற்றுவதற்காகச் சொல்லும் வார்த்தையே அன்றி வேறொன்றும் இல்லை. ஏனென்றால், கடந்த ஆண்டு, இதே நாளிலே ரூபாய் 155 கோடிக்கே திட்டமிட்டு, இந்த ஆண்டு கிட்டத்தட்ட ரூபாய் 188 கோடிக்கு வரிவசூல் செய்ய திட்டம் வகுத்திருக்கிறார்கள். அதில் ரூபாய் 31 லட்சம் உபரி என்று சொல்லியிருக்கிறார்கள். ரூபாய் 33 கோடி அதிகமாக வரிவசூல் செய்யவும் திட்டமிட்டிருக்கிறார்கள். மாநில சர்க்கார் வரிபோடவில்லை என்றாலும் கூட, மத்திய சர்க்கார் 108 கோடி ரூபாய்க்கு இன்றைக்கு வரி விதித்து இருக்கிறார்கள். அந்த வரியிலே நம் மாநில சர்க்காருக்குப் பங்கு கிட்டத் தட்ட ரூபாய் 6 கோடி கிடைக்கிறது என்றால், இருவரும் சேர்ந்தே முன்னதாகவே திட்டமிட்டு, செயல் படுத்தப்பட்ட திட்டமேயன்றி வேறொன்றுமில்லை.

அடுத்து, உணவு உற்பத்தியில் தோல்வியடைந்ததற்குக் காரணம், விவசாயத் துறையில் புரட்சி இல்லை என்பதுதான். கவர்னர் உரையில் கிட்டத்தட்ட 10,000 கிணறுகளுக்கு, 55 ல்ட்சம் ரூபாய் அதிகமாக ஒதுக்கியிருக்கிறது என்றார்கள். அதே நேரத்திலே, நமது மாநிலத்தில் 6,00,000 கிணறுகள் இருக்கின்றன. அதில் 2,50,000 கிணறுகளுக்கு மின்சாரத்தினாலும், ஆயில் என்ஜின் உதவியாலும் பம்பு செட்டுகள் வைத்து தண்ணீர் இறைக்கிறார்கள். மீதி கிணறுகளில் பம்பு செட்டு வைக்க வசதி இன்மையின் காரணமாக உணவு உற்பத்தியைப் பெருக்க இயலாமல் இருப்பதால் அதை அரசாங்கம் கவனித்து புதிதாக வெட்டும் கிணறுகளுக்கு கொடுக்கும் ரூபாய் 55 லட்சத்தை பழைய கிணறுகளுக்கே பம்ப் செட்டு வைக்க கடன் கொடுப்பார்களேயானால் இன்று அதிகமாக உணவு உற்பத்தி பெருகும். அப்படி ஒரு கிணறுக்கு ரூபாய் 1,500 என்று பம்பு செட்டுக்கு கொடுக்க முற்பட்டால், இன்னும் 5,000 பம்பு செட்டுகள் வைக்க ஏதுவாக இருக்கும். குறைந்த காலத்தில் உணவு உற்பத்தி அதிகரிக்கும் என்பதனைக் கூறுகிறேன். அதோடு மட்டுமல்லாமல், விவசாய உற்பத்திக்காகவென்று போட்ட திட்டங்களில் எல்லா அமைச்சர்களும், முதல் அமைச்சர் முதல், கடைசி அமைச்சர் வரை, எல்லா அமைச்சர்களும், சம்பந்தப்பட்ட எல்லா அதிகாரி





களும் என்னென்ன நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று தீவிரக் கவனம் செலுத்த வேண்டும், அப்பொழுதுதான் உணவு உற்பத்தி பெருக முடியும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இன்றைக்கு ஃபார்மோஸா நாட்டை எடுத்துக்கொண்டால், அதன் நீளம் 250 மைல், அகலம் 120 மைல். அதன் கடலோரச் சுற்றளவு 1,200 மைல். ஆனால், அந்த ஃபார்மோஸா நாட்டிலே மீன் இலாகாவைப் பார்க்கும் போது—அமைச்சர் சற்று உன்னிப்பாகக் கவனிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்—அவர்கள் அங்கே 9 லட்சம் மெட்ரிக் டன் உற்பத்தி செய்கிறார்கள். அது அவர்களுக்குச் சிறந்த உணவாக அமைகிறது. அவர்களுக்கு அதன் மூலம் இரண்டு கோடி டாலர் அந்நியச் செலாவணி கிடைக்கிறது. ஆனால், இந்தியாவின் கடற்கரையை எடுத்துக்கொண்டால், நமக்கு 4,000 மைல்கள் இருக்கின்றன. அதில் கிட்டத் தட்ட 1½ லட்சம் மெட்ரிக் டன்கள் தான் மீன்கள் பிடிக்கப்படுகின்றன. அது போதாது ஆகவே, அதில் சிறந்த கவனம் செலுத்த அமைச்சரும், அதிகாரிகளும் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த நிதி நிலை அறிக்கையிலே, தொழிற்சாலைகளுக்கு மிகுந்த சலுகைகள் கொடுக்கப்படுவதாக இருக்கிறது. இந்தத் தமிழகத்திலே தொழிற்சாலைகள் வளர்ந்திருக்கின்றன என்று கூறப்படுகிறது. ஆனால், அது மிக்க மந்த நிலையில்தான் இருக்கிறது. கடந்த ஐந்தாண்டுக்காலத்தில், இந்தத் தமிழகத்தில் ஏதாவது புதுத் தொழிற்சாலை டிவிடெண்ட் கொடுக்கும் சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறதா என்று உங்களைக் கேட்கிறேன். அல்லது எந்தத் தொழிற்சாலையாவது டிவிடெண்ட் கொடுத்திருக்கிறதா என்று கேட்கிறேன் ; ஏதாவது ஒன்று கொடுத்திருக்கிறதா என்று விரல் விட்டுச் சொல்லுங்கள். அந்த அளவில்தான் தொழிற்சாலைகள் இருக்கின்றன என்பதைப் பார்க்கிறோம். இன்றைக்கு மெட்ராஸ் இண்டஸ்ட்ரியல் இன்வெஸ்ட்மென்ட் கார்ப்பொரேஷன், ஸ்டேட் எய்ட் கார்ப்பொரேஷன், பைனான்ஸ் கார்ப்பொரேஷன் என்றெல்லாம் இருக்கின்றன. இன்னும் பல கார்ப்பொரேஷன்களும் இருக்கின்றன. இவைகளெல்லாம் தொழில் அதிபர்களுக்கு பணம் கொடுக்கின்றன. இவர்கள் ஷேர்களை எடுத்துக்கொண்டு சேருகிறார்கள். எதையும் கடனாகக் கொடுப்பதில்லை. தொழில் அதிபர்கள், ப்ரைவேட் செக்டாரில், ஏதாவது வட்டி கொடுத்திருக்கிறார்களா என்று கேட்டால், இல்லை. ஆனால் அவர்கள் எக்ஸ்பான்ஷன் புரோகிராம்தான் போடுகிறார்கள். ஆகவே, இந்தப் பணத்திற்கு அவர்கள் மேலும் ஐந்தாண்டு, பத்தாண்டுகளுக்கு வட்டி கொடுக்காத நிலைமைதான் ஏற்படுகிறது. இந்த நிலையில் எப்படி தொழில் உயர்ந்திருக்கிறது என்று கருதுகிறார்கள் என்று கேட்கிறேன். தனியார் துறையில் இப்படி என்றால், சர்க்கார்துறையில் 9 சர்க்கரை ஆலைகளைத் துவக்கியிருக்கிறார்கள். அதில் ஏதாவது ஒரு மில் 3 சதவிகிதம் டிவிடெண்டாவது கொடுத்திருக்கிறதா என்று பார்த்தால், இல்லை. சர்க்கரை

வேண்டியதுதான். ஆனால், 3 சதவிகிதம் டிவிடெண்ட் கூட கொடுக்க முடியவில்லை. இந்த நேரத்தில், கண்டசாரி சுகர் உற்பத்திக்கு என்று ஆறு மில்களை வைத்திருக்கிறார்கள். கண்டசாரி உற்பத்திக்கு 1.80 ஆகிறது. சாதாரணச் சர்க்கரைக்கு 1.50 தான். அதோடு கூட, இதனால் உணவுப் பிரச்சினை தீர்ந்துவிடுமா என்றும் பார்க்க வேண்டும். இதிலே, சாதாரணச் சர்க்கரையில் ஒரு வீசைக்கு 15 மைசூர் பாக் செய்யலாம் என்று வைத்துக் கொண்டால், இந்த கண்டசாரியில் 7 மைசூர் பாக் கூட வருவதில்லை. இந்த அளவில் கண்டசாரி மில்களுக்கு லைசென்ஸ் கொடுத்திருக்கிறார்கள். பொருளாதார உயர்வு எங்கே இருக்கிறது? பின் தங்கிய நாட்டையும், பின் தங்கிய தொழில்களையும் இன்னும் பின்னுக்குத்தான் தள்ளுகிறார்கள்.

குடிநீர்ப் பிரச்சினை முக்கியமானதாக இருக்கிறது. சேலம் மாவட்டத்தில், தர்மபுரி மிக மிக பின்தங்கிய பகுதி. இன்றைக்கு தர்மபுரி மாவட்டத்திற்கு அது தலைநகராக இருப்பதால், அந்த நகரத்திற்கு குடி நீர் திட்டம் அவசியமாக, அவசரமாகச் செய்து கொடுக்க வேண்டும். அந்த இடத்திற்கு குடிநீர் கொடுப்பதோடு, இணைந்ததாக, பாதாள சாக்கடைத் திட்டமும் அமுலாக்கப்படவேண்டும். குடிநீர் திட்டம் மட்டும் கொடுத்தால் போதாது.

இன்னும் ஒன்றே ஒன்றைச் சொல்லி முடித்துக் கொள்ளுகிறேன். மின்சாரத்தைப் பற்றிச் சொல்ல வேண்டும். ஒவ்வொரு ஆண்டும், மின்சாரத்தின் விலை ஏறிக்கொண்டே போகிறது. 1950-ம் ஆண்டிலிருந்து, 1965 வரை கிட்டத்தட்ட 500 சதவிகிதம் ஏற்றியிருக்கிறது இந்த அரசாங்கம். ஏற்கனவே, 1950-ல் ஒருவர் 30 யூனிட் தன் வீட்டிக்கு உபயோகித்தார் என்றால், அந்த 30 யூனிட்டுக்கு கட்ட வேண்டிய டெபாசிட் ரூபாய் 50. அது இன்றைக்கு $5 \times 50 = 250$ ரூபாய் டெபாசிட் கட்டும் சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆனால், அதே 50 யூனிட் தான் உபயோகிக்கிறார். ஆகவே அரசாங்கம் தன் கொள்கையை திட்டவட்டமாக தெளிவு படுத்த வேண்டும். மின்சார இலாகாவை அவர்களுடைய கண்ட்ரோலில் கொண்டு வந்து இன்னும் நல்ல பணிகளைச்செய்ய வேண்டும் என்று கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

**திரு. ஜே. மாதா கவுடர்:** கனம் சபாநாயகர் அவர்களே, இந்த ஆண்டினுடைய நிதி நிலை அறிக்கையை வரவேற்று எனது கருத்துக்களைச் சொல்ல நான் விரும்புகிறேன். நிதி நிலை அறிக்கையை இந்த மன்றத்திலே வாசிப்பதற்கு முன்பாக, இந்த நிதி நிலை அறிக்கையை வைத்து, அடுத்த ஆண்டு வரக்கூடிய பொதுத் தேர்தலிலே நாம் என்ன செய்யலாம் என்று யோசித்து வந்த எதிர்க்கட்சி நண்பர்களுக்கு இந்த நிதி நிலை அறிக்கை ஒரு ஏமாற்றத்தை அளித்துவிட்டது. வரிகள் நிச்சயமாக இந்த ஆண்டு இருக்கும், அந்த வரிகளை வைத்து மக்களிடத்தில் சொல்லி, பொதுத் தேர்தலிலே ஓட்டு வாங்க முடியும் என்று நினைத்திருந்தவர்களுக்கு, வரியே இல்லாத ஒரு பட்ஜெட்டாக மதிப்பிற்குரிய முதல் அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்ததைப் பார்த்து ஏமாற்றம் ஏற்பட்டிருக்கிறது.



அதே நேரத்தில், மதிப்பிற்குரிய முதல் அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டு நிதி நிலை அறிக்கையில் உணவைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். உணவு நமக்குப் பற்றாக்குறை ஏற்பட்டதனுடைய கருத்துக்களையும் அவர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அவருடைய அறிக்கையிலே, வேளாண்மை உற்பத்தித் துறையில் நாம் எதிர்பார்த்த அளவுக்கு விளைச்சல் கிட்டாததற்கு உரப் பற்றாக்குறை தான் பெரும் காரணமாயிருக்கிறதென்று அவர்கள் திட்டவட்டமாக எடுத்துக் கூறியிருக்கிறார்கள். உற்பத்தியை அதிகரிப்பதற்கு நமக்கு உரம் வேண்டும். உரம் வாங்குவதற்கு அன்னியச் செலாவணி வேண்டும். அன்னியச் செலாவணி வேண்டுமானால், நம்முடைய நாட்டிலிருந்து பொருள்களை நாம் அன்னிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதில் அக்கறை காட்ட வேண்டும். அந்த வகையில், ஏற்றுமதியைப் பெருக்குவதற்கு நாம் தீவிரமாகக் கவனத்தைச் செலுத்தியிருக்கிறோமா என்பதைத்தான் நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். உணவு உற்பத்திக்கு அத்தியாவசியமான உரம் வேண்டுமானால், அதற்கு அன்னிய நாட்டு செலாவணி அதிகரிக்கவேண்டும். உரத்தை அதிகமாகப் போட்டால்தான் உணவுத் தானிய உற்பத்தி அதிகரிக்க முடியும் என்று சொல்லும் இந்த நேரத்தில், அந்த உரத்தை வரவழைப்பதற்கு வேண்டிய அன்னிய செலாவணியை அதிகரிப்பதற்காக என்ன என்ன வழிவகைகளை நம்முடைய மாநிலத்தில் நாம் செய்திருக்கிறோம் என்பதை யோசித்துப் பார்க்கவேண்டும்.

நம்முடைய மாநிலத்தைப் பொறுத்த வரையில், அதிகமாக அன்னியச் செலாவணியைத் தேடித் தரக்கூடிய ஒரு பொருள் தேயிலைதான். அதைத்தான் நாம் அதிகமாக ஏற்றுமதி செய்கிறோம். நம்முடைய மாநிலத்தில் மாத்திரம் தான் தேயிலைத் தோட்டங்கள் இருக்கின்றன. வட நாட்டிலே ஏதோ ஒரு சில இடங்களைத் தவிர, அகில இந்தியாவிலேயே நம்முடைய மாநிலத்தில்தான் சிறிய தேயிலைத் தோட்டங்கள் இருக்கின்றன. இந்தச் சிறிய தோட்டங்களிலே உற்பத்தியாகும் சிறிய தேயிலையை நாம் ஏற்றுமதி செய்கிறோமா என்றால், ஒரு கிலோகிராம் கூட நாம் ஏற்றுமதி செய்வதில்லை. இதற்கு நாம் சொல்லக்கூடிய காரணம் என்னவென்றால், சிறிய தேயிலைத் தோட்டங்களில் உற்பத்தியாகும் சிறிய தேயிலை தரமான தேயிலையாக இல்லை, அதை அன்னிய நாட்டுக்கு அனுப்ப முடியாது என்பதாகும். அதை ஒரு காரணமாக நாம் வைத்துக்கொண்டிருக்கிறோம். தரமான தேயிலை உற்பத்தி செய்து அன்னிய நாடுகளுக்கு அனுப்பி, அன்னியச் செலாவணியைச் சேமிப்பதற்கு நம்முடைய சர்க்கார் முயற்சி எடுத்து இருக்கிறதா என்றால், இல்லை. இந்த ஆண்டு தான் கூட்டுறவுத் துறையில் ஆறு பாக்டரிகள் நடத்த ஏற்பாடு செய்திருக்கிறார்கள். எனது மாவட்டத்தில் 110 தேயிலைத் தொழிற்சாலைகள் இருக்கின்றன. அவை தனியார் நடத்தக் கூடிய சிறிய தாழிற்சாலைகளாகும். அந்த தொழிற்சாலைகள் கிட்டத் தட்ட ஐந்து கோடி மூலதனத்தில் இயங்கிக் கொண்டிருக்கின்றன. இந்தத் தேயிலை அன்னிய நாட்டுக்குச் செல்கிறதா என்றால்,

இல்லை. அந்தத் தொழிற்சாலைகளுக்குத் தரமான மெஷினரிகள் வாங்கிக் கொடுக்கவேண்டிய அவசியம் இருக்கிறது. நம்முடைய மாநிலத்தில் பல இன்டஸ்ட்ரிகளை நாம் ஏற்படுத்துகிறோம். அவைகளுக்குப் பல சலுகைகள் கொடுக்கிறோம் ஆனால், ஏற்கனவே இருக்கும் இந்தத் தேயிலைத் தொழிற்சாலைகளில், தேயிலையைப் பக்குவப்படுத்த நல்ல இயந்திரங்கள் வாங்கிக் கொடுக்கப்படவில்லை. பெரிய தோட்டங்களுக்கு உதவி செய்கிறார்களே தவிர, ஏற்கனவே இருக்கும் இந்த 110 சிறிய தேயிலைத் தொழிற்சாலைகளுக்கு ஏதாவது உதவி செய்ய முன்வந்திருக்கிறார்களா என்றால் இல்லை. தயவுசெய்து மிக மிக முக்கியமாக இதில் கவனம் செலுத்த வேண்டும் என்று நான் இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்ளுகிறேன்.

உணவு தானியங்களை அதிகமாக உற்பத்தி செய்வதற்கு உரம் போதிய அளவு கிடைக்கவில்லை என்று சொல்லப்படுகிறது. இருப்புப் பாதைகளின் இரு பக்கங்களிலும் உள்ள காலி நிலங்களிலும் நாம் உணவு தானியங்களை உற்பத்தி செய்யலாம் என்று மத்திய சர்க்கார் சொல்கிறது. ஆனால், நம்முடைய மாநில சர்க்காரில் நாம் என்ன செய்திருக்கிறோம்? நம் மாநிலத்தில் காலியாக இருக்கும் நிலங்களில் எல்லாம் நாம் உணவு உற்பத்தியைச் செய்கிறோமா என்றால், இல்லை. நீர் வளம் இருக்கும் இடங்களையெல்லாம் நாம் பயன்படுத்தியிருந்தாலும் கூட, தரிசாகக் கிடக்கும் நிலங்களைச் சர்வே செய்தோமா? நம்முடைய மாநிலத்தைப் பொறுத்த வரையில், எத்தனை ஆயிரம் ஏக்கர் தரிசு நிலங்கள் சாகுபடிக்கு வராமல் வெறுமனே கிடக்கின்றன என்று பரிசீலிக்கவில்லை. ஒவ்வொரு மாவட்டத்திலும் எத்தனை ஆயிரம் ஏக்கர் தரிசு நிலங்கள் இருக்கின்றன, மேய்கால் பூமி எவ்வளவு, நத்தம் பூமி எவ்வளவு என்ற கணக்கு நம்மிடம் இல்லை. ஏதோ பழங்காலத்தில், எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்பு எடுத்த கணக்கை கிராமக் கர்ணம் வைத்திருக்கிறாரே தவிர, சமீபத்திய நிலவரத்தைத் தெரிந்துகொள்ளும் அளவிற்கு ரிகார்டு இல்லை. இந்த ஆண்டிலே நமக்கு எவ்வளவு பூமி தரிசாக இருக்கிறது என்று பார்த்து, தரிசு நிலங்களில் எல்லாம் உடனடியாகப் பயிர் செய்வதற்கு முயற்சி செய்தால் என்ன? நஞ்சைப் பயிர் செய்யாவிட்டாலும், புஞ்சைப் பயிராவது உற்பத்தி செய்யலாம். அதற்காவது நிலத்தைக் கொடுக்கலாம். ஒருக்கால் நம்முடைய விவசாய அமைச்சர் அவர்கள் அதற்குத் தாராளமாக மனமுவந்து சம்மதித்தாலும், ரெவின்யூ அமைச்சர் அதிலே தயக்கம் காட்டுகிறாரோ என்று நினைக்கிறேன். ரெவின்யூ அமைச்சர் கொடுக்கலாம் என்றாலும், சில இடங்களில் தரிசு நிலங்களை ரிசர்வ் பாரஸ்டுக்காக ஒதுக்கிவைத்திருக்கிறார்கள். அது பாரஸ்டுக்காக ஒதுக்கக்கூடிய நிலமே அல்ல. பாரஸ்ட் நிலம் எது, பயிரிடக்கூடிய நிலம் எது என்று ஏதாவது பிரித்திருக்கிறார்களா என்றால், இல்லை. மரமே இல்லாத பூமியை பாரஸ்டாக வைத்துக் கொண்டிருக்கும் காட்சியைப் பார்க்கிறோம். அந்த இடங்களையெல்லாம் விவசாயத்திற்காக ஒதுக்கக்கூடாதா? தீவிர விவசாயம் செய்ய ஏன் முன்வரவில்லை? யுத்த காலத்தில் ஒன்று செய்தோம். திடீரென்று உணவுப் பற்றாக்குறை ஏற்படும்போது, அந்தந்த மாவட்டக் கலெக்டர்களுக்கு உத்தரவு பிறப்பித்து, யார் வேண்டுமானாலும் தரிசு நிலங்களை லீஸுக்கு எடுத்து உணவு உற்பத்தி செய்யலாம் என்று சொல்லி ஜி.எம்.எஃப். திட்டம் ஆரம்பித்தோம். அதை ஏன் இப்பொழுது ஆரம்பிக்கவில்லை? நமக்கு உணவு நெருக்கடி ஏற்பட்டிருக்கும்போது ஏன் ஜி.எம்.எஃப். திட்டத்தை ஒவ்வொரு மாவட்டத்திற்கும் நாம் கொண்டுவரவில்லை என்பதைப்பற்றி உடனடியாகப் பரிசீலனை செய்து அந்தந்த ஜில்லாக் கலெக்டர்களுக்கு உத்தரவு போடவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.





எப்படியாவது இன்றைக்கு நாம் கஷ்டத்தைச் சமாளித்தாக வேண்டியிருக்கிறது. நம்முடைய மாநிலத்தில் இப்பொழுது உணவுப் பற்றாக்குறை அவ்வளவாக இல்லையென்றாலும், அண்டை மாநிலத்திற்கும் நாம் உணவுத் தானியங்கள் கொடுக்கும் காரணத்தினால் பற்றாக்குறை ஏற்பட்டுவிடுமோ என்ற பயம் இருப்பதால், அதையும் முன்கூட்டியே எதிர்பார்த்து, நிலைமையை சமாளித்தாகவேண்டும். எப்படி சமாளிப்பது? எதிர்க் கட்சிகளிலே இருப்பவர்கள், சர்க்கார் என்ன என்ன தவறுகள் செய்கிறார்கள் என்று குறை சொல்லுகிறார்களே தவிர, அந்தக் குறைகளை நிவர்த்திக்க என்ன என்ன செய்யவேண்டும் என்று பொதுவான கருத்தைச் சொல்வதில்லை. உணவு உற்பத்தியை அதிகரிக்க வேண்டும் என்பது பொதுவான ஒரு கருத்தாகும். இந்த ஒரு விஷயத்தில் நாட்டில் உள்ள யாருக்கும் கருத்து வேறுபாடே இருப்பதற்கில்லை. ஆகவே, அதற்கான பொதுவான கருத்தை எதிர்க் கட்சியில் இருப்பவர்களும் சொல்லலாம். ஆனால், எதிர்க் கட்சியினர் அதற்கான யோசனைகளைச் சொல்ல மாட்டார்கள். சொல்வதற்கு அவர்களுக்கு முடியாது. ஏன்? உணவு உற்பத்தி நாட்டில் அதிகரித்துவிட்டால் பிறகு என்ன செய்வது என்று இருக்கிறார்களேயொழிய, பொதுவான நல்ல எண்ணத்துடன் மக்களுக்காக எதை எதைச் செய்யவேண்டும் என்ற யோசனைகளைச் சர்க்காருக்குச் சொல்லக்கூடிய அளவில் இல்லை. நாடு இருக்கும் நிலை என்ன? இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன்பு நம் நாடு இருந்த நிலை என்ன? சென்ற ஆண்டில் இருந்த நிலை என்ன? இதையெல்லாம் பரிசீலித்துப் பார்க்கவேண்டும். நம்முடைய நாட்டின் நிதியில் ஓரளவு சென்ற ஆண்டில் யுத்தத்திற்காக ஒதுக்கப்பட்டுவிட்ட காரணத்தால் நமக்கு இப்பொழுது உணவுப் பற்றாக்குறை போன்ற இடைஞ்சல் ஏற்பட்டிருக்கிறது என்பதை யாராவது சிந்தித்துப் பார்த்தோமா என்றால், சிந்திப்பது இல்லை. யுத்த நெருக்கடி நேரத்தில், நம்மிடம் இருக்கும் பணத்தையெல்லாம் பாதுகாப்புத் துறைக்காக நாம் ஒதுக்கிவிட்ட காரணத்தால், சென்ற ஆண்டில் உணவுப் பற்றாக்குறை ஏற்பட்டுவிட்டது; அது தொடர்ந்து கொண்டிருக்கிறது. இன்று ஒருக்கால் நாம் நிம்மதியாக இருக்கிறோம் என்றாலும் சென்ற ஆண்டு நடந்ததையெல்லாம் நாம் மனத்திலே கொள்ள வேண்டும். எந்த நேரத்தில் பார்த்தாலும், நாடு இருக்கும் நிலையை எடுத்துச் சொல்லாமல் எப்பொழுதும் 'சோறு', 'சோறு' என்று மக்களைப் பார்க்கும்போதெல்லாம் சொல்லிக்கொண்டிருந்தால் நாடு எப்படி முன்னேற்றம் அடைய முடியும்? சோறு ஒன்றினால்தான் எல்லாம் இருக்கிறதா?

[திரு. ஜே. மாதா கவுடர்] [4th March 1966

சோறு கொடுக்க வேண்டியது தான். எப்பொழுது கொடுக்க வேண்டும்? அதற்கு என்ன செய்யவேண்டும்? அதற்கு என்ன வழிவகையை எப்படிச் செய்யவேண்டும்? என்பதையெல்லாம் மக்களுக்கு எடுத்துச் சொல்லாமல் மக்களைப் பார்க்கும்போதெல்லாம், "சோறு கொடுக்கவில்லை", "சோறு கொடுக்கவில்லை" என்று எதிர்க்கட்சியினர் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். ஏன் அவர்கள் அப்படிச் சொல்கிறார்கள்? 1967-க்கு அது ஒன்றுதான் அவர்களுக்கு மிச்சம் இருக்கிறது. இதை வைத்துத்தான் மக்களிடம் செல்லவேண்டும் என்று சொல்லிக்கொண்டிருந்தாலும், நம்முடைய உணவு அமைச்சர் திரு. ராமையா அவர்கள் மாவட்டந்தோறும் சென்று, என்ன என்ன செய்யவேண்டும் என்று நன்றாகப் பார்த்து எப்படி எப்படி நிலைமையைச் சமாளிக்கவேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். சென்ற 1960-வது ஆண்டிலே இந்த மன்றத்

1·00 p.m. தில் புன்னப்புழா நதியைப்பற்றிச் சொன்னேன். 1962-இலே சீஃப் என்ஜினியர் அவர்கள் அதைச் சர்வே நடத்தி கேரள அரசாங்கத்துடன் பேச்சு வார்த்தை நடத்தச் சொல்லியிருக்கிறார்கள். இன்றைக்கும் கூட இரண்டொரு ஆறுகளைப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். எங்கள் பகுதியில் சென்காதரின் வாடர் பாலீஸ் இருக்கிறது, செம்மையாறு இருக்கிறது, அவற்றுக்கு அணை கட்டினால் பல்லாயிரக்கணக்கான எக்கரா உற்பத்தி செய்ய முடியும்; மின்சாரமும் ஜெனரேட் செய்ய முடியும். இதையும் அரசாங்கம் பரிசீலனை செய்யவேண்டும். இந்த நதி கேரளாவுக்குப் போகவில்லை. நமது மாநிலத்திற்குள்ளேயே இருப்பதால் இவை பற்றியும் நாம் சர்வே செய்யவேண்டும் என்பதாகச் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, இந்த ராஜ்யத்தில் உணவுப் பொருள் உற்பத்தி செய்யாத மாவட்டம் எங்கள் மாவட்டம் ஒன்றுதான். எங்களுக்கு உணவு தானியங்கள் கோவையில் இருந்துதான் வர வேண்டியதாக இருக்கிறது. ஆகவே, கோவை, நீலகிரிக்கு இடையில் உள்ள செக்போஸ்டுகளை எல்லாம் எடுத்துவிட்டு கோவையில் இருந்து நீலகிரிக்கு தடங்கலின்றி உணவு தானியம் போக வழிவகை செய்யப்படவேண்டும் என்று தெரிவித்துக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

* திரு. சி. வே. வேலப்பன்: மதிப்பிற்குரிய மாமன்றத் தலைவர் அவர்களே, 1966-67-ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை ஆதரிக்கின்ற அளவில் அமையவில்லை என்று குறிப்பிட்டு, அதற்கு என் ஆட்சேபத்தைத் தெரிவிக்கின்ற முறையில் ஒருசில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

அந்த அறிக்கையில் விவசாயத்திற்கு முதலிடம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று பேசப்படுகிறது. அதைத் தொடர்ந்து பேசுகிறபோது ஆளும் கட்சியைச் சார்ந்தவர்கள் எதிர்க்கட்சிக்காரர்களைக் குறைகூற, எதிர்க்கட்சிக்காரர்கள் ஆளும் கட்சிக்காரர்களை குறை கூறுவதைத்தான் பார்க்கிறோம். நாங்கள் பசி என்றால் அவர்கள் பசி இல்லை, பட்டினி தான் என்கிறார்கள். குறிப்பாகச் சொன்னால் மாமியார், நாட்டுப்பெண் கதையாகத்தான் இருக்கிறது



4th March 1966] [திரு. சி. வே. வேலப்பன்]

—எதிர்க்கட்சிக்காரர்கள் என்ன சொல்வது, நாங்களே சொல்கிறோம் என ஆளும் கட்சியினர் குறிப்பிடுவது. பதினெட்டு வருஷங்களாக நடைபெறுகிற இந்த ஆட்சி உண்மையில் மக்களுடைய அடிப்படைத் தேவையான உணவுப் பிரச்சினையைச் சமாளிக்கக் கூட தக்கமுறையில் நடந்துகொள்ளவில்லை. ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவுமா என்பது போல—பட்ஜெட்டிலே பல திட்டங்களைப் போட்டுவிடுவதனால் மட்டும் பிரச்சினையை சமாளிக்க முடியாது. அவை படிப்பதற்குத்தான் அழகாக இருக்கும். அறிஞர் அண்ணா அவர்கள் "காகிதப் பூ மணக்காது; காங்கிரஸ் ஆட்சி இனிக்காது" என்பதாக ஐந்தாறு ஆண்டுகளுக்கு முன்பே சொன்னார்கள். அதுதான் உண்மையாயிற்று. "தாய்மார்களே தாலி பத்திரம்" என்று அறைகூவல் விடுத்தார்கள். அந்த நிலைதான் வந்துவிட்டது.

இந்த ஆட்சி எந்த எந்தத் திட்டங்களைக் கொண்டுவந்தாலும் எதிர்க்கட்சிக்காரர்களாகிய நாங்கள் எங்கள் ஒத்துழைப்பைக் கொடுத்துவருகிறோம். சர்க்கார் கடன்களை எழுப்புகிறது. வேண்டிய நிதி முதலீடு செய்ய எங்களாலான ஒத்துழைப்பை எல்லாம் அளிக்கிறோம். சமீபத்தில் மின்சார போர்டு கடன் பத்திரம் எழுப்பிற்று. என்னுடைய சர்க்கிளை எடுத்துக்கொண்டால் மாநிலத்திலேயே அதிகமாகப் பண உதவி அளிக்கப்பட்டிருக்கிறது. அதைப் புள்ளிவிவரம் காட்டும். நானும் உதவி இருக்கிறேன் என்பதோடு பலரிடம் உதவியைப் பெற எவ்வளவு ஒத்துழைத்திருக்கிறேன் என்பது அதிகாரிகளுக்குத் தெரியும். இதை எதற்காகக் குறிப்பிடுகிறேன் என்றால் எந்த எந்த வகையில் அரசாங்கத்துடன் ஒத்துழைக்கவேண்டுமோ அந்த அந்த வகையில் ஒத்துழைத்து வருகிறோம், இருந்தும் அரசாங்கம் நாங்கள் சொல்கிற குறைபாடுகளைக் கவனிப்பது இல்லை. திரு. பக்தவத்சலம் அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்டிருக்கிற மந்திரி சபையில் எட்டு துவாரபாலகர்கள் எட்டு அமைச்சர்களாக இருக்கிறார்கள். இருந்தும் என்ன சொல்லியும் கவனிப்பதில்லை. பரமேசுவரன் கழுத்தில் நாகப்பாம்பு இருந்தபோது, அது மகாவிஷ்ணுவின் வாகனமாகிய கருடனைப் பார்த்து "சௌக்கியமா?" என்று கேட்டதாம். அதற்கு கருடன், "இருக்கிற இடத்தில் இருந்தால் சௌக்கியம்" எனச் சொன்னதுபோல நாங்கள் சொல்கிறோம். தங்களுக்கு மெஜாரிடி இருக்கிறது என்ற காரணத்தினால் அவர்கள் நாங்கள் சொல்கிற குறைகளைக் கவனிப்பது இல்லை. குறிப்பாக ஒன்றை எடுத்துக்காட்ட விரும்புகிறேன். 1951-ஆம் ஆண்டு வெளியிட்ட புத்தகத்தில் ஒரு குறிப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. நாமக்கல் தாலுகாவில் காவேரிக்கு அடுத்து . . . . (மணியடிக்கப்பட்டது.)

* திரு. சீ. சிவசுப்பிரமணியன்: கனம் சபாநாயகர் அவர்களே, 1966-67-ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையை ஆதரித்து ஒருசில கருத்துக்கள் சொல்ல முன்வந்துள்ளேன். நமது அமைச்சர் அவர்கள் நல்லமுறையில் அதைத் தயாரித்திருக்கிறார்கள். அதை நான் வரவேற்கின்றேன். எதிர்க்கட்சி உறுப்பினர்கள் 1967-யே மன

தில் வைத்துக்கொண்டு பேசுகிறார்கள். 1967 என்று சொல்லும்போது நிச்சயமாக நாங்கள் பயப்படத் தேவையில்லை. பயப்பட மாட்டோம். இந்த நாட்டை வெள்ளைக்காரன் 200 ஆண்டுகாலம் ஆண்டிருக்கிறான். இந்த நாட்டிலேயே பிறந்து, இந்த நாட்டிலேயே வளர்ந்து, இந்த நாட்டின் சுதந்திரத்திற்காகப் போராடி, இந்த நாட்டில் நிலையானதொரு ஜனநாயக சர்க்காரை நிலை நிறுத்தச் செய்யப் பாடுபடுகிற நாம் நிச்சயமாக 200 ஆண்டுகளுக்கு மேலேயே ஆட்சிசெய்வோம் என்று தெரிவித்துக்கொள்கிறேன். 1967-லும் காங்கிரஸ் கட்சி சர்க்கார் தான் அமையும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, நமது முதல் அமைச்சர் அவர்கள் பட்ஜெட்டைப் படிக்கிறபோது ஏதாவது வரி இருக்குமோ என்றுகூட யோசித்தேன். வரியில்லாத பட்ஜெட்டைச் சமர்ப்பித்திருக்கிறார்கள். அதை நான் மனப்பூர்வமாகப் பாராட்டுகிறேன். தென்னாற்காடு ஜில்லாவில் நெய்வேலித் திட்டம் 140 கோடி ரூபாயில் அமைந்திருக்கிறது. அது நம் மாநிலத்திற்கு மட்டும் அல்ல, பாரதத்திற்கே ஒரு முக்கியமான திட்டமாக அமைந்திருக்கிறது. அந்த நெய்வேலித் திட்டத்திற்காக 10 மைல் விஸ்தீரணம் நிலம் ஆர்ஜிதம் செய்திருக்கிறார்கள். அந்தப் பத்து மைலுக்குள்ளே ஏழை விவசாய மக்களும், பாட்டாளி வர்க்கமும், உழைப்பாளி வர்க்கமும் குடியிருந்துகொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு எந்த விதமான வசதியும் கிடைப்பதில்லை. பஞ்சாயத்து யூனியனிடம் அவர்கள் சென்றால் அவர்களிடத்தில் வசதி கிடைப்பதில்லை, பஞ்சாயத்திடம் சென்றாலும் கவனிக்கமுடியாது என்று சொல்லிவிடுகிறார்கள். ஆஸ்பத்திரிக்குப் போனால் அவர்களுக்கு இடம் இல்லை என்று சொல்லுகிறார்கள். பள்ளிக்கூடங்களுக்குப் போனால் உங்களுக்கு இடம் கிடையாது, உங்களைச் சேர்த்துக்கொள்ள முடியாது என்று சொல்லிவிடுகிறார்கள். நிலத்தைக் கொடுத்துவிட்டு வந்தவர்களுக்கு இப்படிப்பட்ட கஷ்டங்கள் இருக்கின்றன. ஆகவே, நம்முடைய அரசாங்கம் இதில் தலையிட்டு அங்கே வாழக்கூடிய ஏழைகள், பாட்டாளிகளுக்கு வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டுமென்று கனம் சபாநாயகர் அவர்கள் மூலமாக நான் கேட்டுக்கொள்கிறேன். அங்கே உத்தியோகத்தில் இருக்கக்கூடிய அதிகாரிகள் எல்லாம் ஆஸ்பத்திரிக்குச் சென்றால், அவருக்கும் அவருடைய மனைவிக்கும் தான் வியாதியைக் கவனிக்கிறார்கள். அவர்களுடைய முதல் குழந்தை பெண் குழந்தையாக இருந்து, அந்தப் பெண்ணைக் கல்யாணம் செய்துகொடுத்து, அந்தப் பெண் பிரசவத்திற்காக தகப்பன் வீட்டுக்கு வரும்பொழுது—தாய் வீட்டுக்குத்தானே பிரசவத்திற்காக வருவாள்—அந்தப் பெண்ணுக்குப் பிரசவம் பார்ப்பதற்கு அங்கே ஹாஸ்பிட்டலில் உள்ளவர்கள் மறுக்கிறார்கள். இடம் இருந்தாலும் கூட இடம் இல்லை என்று சொல்கிறார்கள். அப்படி இடம் கொடுத்தாலும் 150 ரூபாய் 200 ரூபாய் என்று பணம் கேட்கிறார்கள். ஆகவே, நான் இதையும் கனம் சபாநாயகர் மூலமாக அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.





உணவுப் பிரச்னையைப்பற்றி எல்லாம் பேசிவிட்டார்கள் என்று நினைக்கிறேன். ஆனால் விவசாயிகளுடைய முன்னேற்றம் இன்னும் தடைபட்டுக்கொண்டுதான் இருக்கிறது. இன்னும் அவர்களைக் கண்காணிக்கவில்லை, இன்னும் போட்ட திட்டங்களை அமல் நடத்தவில்லை. சிதம்பரம் தாலுகாவிலே உள்ள விவசாயிகள் உணவு உற்பத்தியைப் பெருக்கவேண்டுமென்று எண்ணுகிற நேரத்திலே அவர்களுக்கு வசதி கிடையாது. பண்ணையாளுக்கு வேலையில்லை என்று சொல்கிறார்கள். பயிர் செய்பவர்களிடம் அடுத்த வருஷம் உங்களுக்கு நிலம் இல்லை என்று சொல்கிறார்கள். கூலிகளுக்குக் கூலியில்லை என்று சொல்கிறார்கள். அவர்கள் இதையெல்லாம் பார்த்துவிட்டு, விவசாயத் தொழிலை விட்டுவிட்டு வேறு தொழிலுக்குச் செல்லலாம் என்று எண்ணக்கூடிய அளவுக்கு ‘சேற்று முகத்திலே சிரிப்பு, நெல்லு முகத்திலே நெருப்பு’ என்று இல்லாமல் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள் என்பதை கனம் சபாநாயகர் மூலமாக நான் அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அது மாத்திரமல்ல, ஏராளமான நடுத்தரக் குத்தகைதாரர்கள் எல்லாம் 100 ஏக்கர் 50 ஏக்கர் என்ற அளவிலே நிலத்தை மிராஸ்தார்களிடமிருந்து வாங்கிவிடுகிறார்கள். ஆகவே சாதாரண விவசாயிகளுக்கு எல்லாம் விவசாயம் செய்வதற்கு நிலம் கிடையாது. ஆகவே ஒரு குறிப்பிட்ட குத்தகைதாரர் இவ்வளவுதான் நிலம் வைத்துக்கொள்ள வேண்டுமென்று வரையறுத்து மற்ற விவசாயிகளுக்கு நிலம் கொடுத்து விவசாயம் செய்ய ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நெய்வேலியிலே வேலை பார்க்கிற 200 சிவில் என்ஜினியர்களுக்கு வேலையைவிட்டு நீக்கம் செய்யப்போவதாக நோட்டீஸ் கொடுத்திருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் அங்கே இதுவரை வேலை பார்த்தவர்கள், அவர்களுக்குத் திடீரென்று ஒரு மாத நோட்டீஸ் மட்டும் கொடுத்தால் அவர்கள் வேறு எங்கே போய் வேலை பார்க்க முடியும். ஆகவே இந்த நோட்டீஸை ஒரு வருஷ நோட்டீசாக மாற்றிக்கொடுத்துக் கொஞ்சம் காலதாமதமாக அவர்களை நீக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

விருத்தாசலத்தில் ஒரு ஆர்ட்ஸ் காலேஜ் ஏற்படுத்த பொது மக்கள் 2 லட்ச ரூபாய் கொடுக்கத் தயாராக இருக்கிறார்கள். அதைப்பெற்றுக் கொண்டு அமைச்சர் அவர்கள் அங்கே ஒரு ஆர்ட்ஸ் காலேஜ் ஆரம்பிப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நான் ஒன்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நான் இதைப்பற்றிப் பல தடவைகள் சொல்லியிருக்கிறேன். இந்தத் தடவையும் சொல்லிக்கொள்கிறேன், எங்கள் மாவட்டத்தில் எந்தத் தாலுகாவிலாவது செஞ்சியானாலும் சரி, கடலூர் ஆனாலும் சரி, திண்டிவனம் ஆனாலும் சரி, கள்ளக்குறிச்சி ஆனாலும் சரி, விருத்தாசலம் ஆனாலும் சரி எங்கேயாவது ஒரு மெடிக்கல் காலேஜ் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பட்ஜெட்டில் ஒரு முக்கியமான விஷயம் குறிப்பிட்டு இருக்கிறார்கள். அதாவது 100 பெட்டுகள் கொண்ட ஒரு ஆஸ்பத்திரியை அமைக்கவேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். இது நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலே வரும் என்று சொன்னார்கள். ஆனால் நெருக்கடி நிலைமை இருந்தபோதிலும்கூட இந்தத் திட்டத்தைக் கொடுத்ததால் எங்கள் பகுதி மக்கள், சிதம்பரத்திலே உள்ளவர்களுக்கு இது ஒரு பெருமையாகும், அதோடு நல்ல வசதிகளைத் தருவதற்கும் இது உதவியாக இருக்கும் (மணியடிக்கப்பட்டது).

* **திரு. என். சின்ன முனுசாமி செட்டி :** கனம் சபாநாயகர் அவர்களே, 1966-67-ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையை ஒட்டி என்னுடைய சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். என்னுடைய தொகுதியாகிய ஹோசூர் தாலூகாவில் சுமார் 1½ ஆண்டுக்காலமாகப் பருவ மழை தவறியிருக்கிறது. அங்கேயுள்ள மக்கள் பட்டினியாலும், பசியாலும் வாடுகிறார்கள். அந்த மக்களுக்கு இது வரைக்கும் அரசாங்கம் உருப்படியாக ஒன்றும் செய்யவில்லை. நஞ்சை, புஞ்சைப் பயிர்கள் அறவே பாதிக்கப்பட்டு அங்குள்ள மக்களுக்கு உணவு இல்லை. கால்நடைகளுக்குத் தீவனம் இல்லை. சர்க்கார் தீவனத்திற்குக் கொடுக்கும் கடன் எல்லோருக்கும் கிடைப்பதில்லை. தீவனத்திற்குக் கொடுக்கும் கடன் எல்லோருக்கும் கிடைப்பதற்கு வழிசெய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பஞ்சத்தால் பாதிக்கப்பட்டுள்ள ஏழை எளிய விவசாயிகள் ஹோசூர் தாலூகாவை விட்டு, அக்கம்பக்கத்திலுள்ள, கிருஷ்ணகிரி, அரூர், தர்மபுரி தாலுகாக்களுக்குச் சென்று கூலிவேலை செய்தும், பிச்சையெடுத்தும் வாழ்கிற நிலைமை இருக்கிறது. அரசாங்கம் இதுவரைக்கும் பஞ்ச நிவாரண நிதியிலிருந்து ஒன்றும் செய்யவில்லை. உடனடியாக அங்கே நிலைமையைச் சமாளிப்பதற்கு முன் வரவேண்டும். தவறினால் அங்கே பஞ்சசாவுகள் ஏற்படும் என்பதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். ஏழை எளிய விவசாய மக்களுக்கு உடனடியாகப் பஞ்ச நிவாரண நிதியிலிருந்து வசதி செய்து கொடுக்க வேண்டும். அடுத்தபடியாக இந்த மராமத்து வேலைகளுக்காகவும், ரோடுகள் வேலைகளுக்காகவும் 5 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருப்பதாக அறிகிறேன். அந்தப் பகுதியில் ஜனத்தொகையை எடுத்துக் கொண்டால் 3 லட்சம் அல்லது 3½ லட்சம் பேர்கள் இருக்கிறார்கள். அவர்களில் ஏழை எளியவர்கள் ஒரு லட்சம் பேர் இருக்கிறார்கள். ஒதுக்கப்பட்டிருக்கிற 5 லட்சத்தில் கன்ட்ராக்டருக்கு, வேண்டிய பொருள்களுக்கு எல்லாம் 4 லட்சம் போக மீதியிருக்கக்கூடிய 1 லட்சத்தில் அங்கே இருக்கக்கூடியவர்களுக்கு ஒருவருக்கு 1 ரூபாய் வீதம் கொடுத்தால் அது போதுமானதாக இருக்குமா என்பதைக் கவனிக்கவேண்டும். இது யானைக்கு ஒரு கவளம் சோறு கொடுப்பதுபோல்தான் இருக்கும். கனம் உணவுத்துறை அமைச்சர் திரு. ராமைய்யா அவர்கள் டிசம்பர் மாதம் 20 தேதியன்று எங்கள் பகுதியில் சுற்றுப்பிரயாணம் செய்யப் போவதாகத்





தெரிந்து எங்கள் பகுதியில் உள்ள ஏழை எளிய மக்கள் தங்களுடைய குறைகளைக் கூறுவதற்காக 2 மணியிலிருந்து 7 மணிவரை காத்துக் கொண்டிருந்தார்கள். அவர் என்னுடைய தொகுதியான சூளகிரிக்கு 4 மணிக்கு வருவதாகப் போட்டு 7 மணிக்கு வந்தார். இரண்டு மணியிலிருந்து ஏழு மணிவரை காத்திருந்த மக்கள் அவர்களுடைய கஷ்டத்தை அமைச்சரிடம் சொல்ல முடியாமல் எல்லோரும் மனுக்களைக் கொடுத்தார்கள். 'உங்களுடைய குறைகளை எல்லாம் மாவட்ட ஆட்சியாளர்கள் கவனித்துத் தீர்த்து விடுவார்கள்' என்று அவர்கள் அப்போது சொன்னார்கள் 'நீங்கள் பயப்பட வேண்டியதில்லை' என்று அந்த மக்களிடம் சொன்னார்கள். மாதம் மூன்று ஓடிவிட்டது. எதையும் கவனித்ததாகத் தெரியவில்லை. இந்த நிலையிலே அந்த மக்களுடைய நிலை இருந்தால் அவர்களுடைய கதி என்னவது? அந்தப் பகுதியில் இருக்கும் மக்கள் உணவுப் பஞ்சத்தால் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, அங்கு பஞ்சாயத்துக்கு ஒரு ரேஷன் ஷாப் வீதம் திறந்து மக்களுக்கு உணவுப் பொருள் கிடைக்க வழி செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. ஏ. பெருமாள் :** கனம் சபாநாயகர் அவர்களே, 1966-67-ம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தின் மீது ஒருசில கருத்துக்களைக் கூற முன்வந்துள்ளேன். அதிலே விவசாய முன்னேற்றத்தைப் பொறுத்து அதிக நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. விவசாயிகளுக்குக் காலாலாகாலத்தில் கடன் கிடைக்கிறதா என்றால் இல்லை. கடன் வேண்டுமென்று மனுக் கொடுத்தால் அங்குள்ள சர்க்கார் அதிகாரிகள் மூன்று நான்கு மாதங்கள் கழித்துத்தான் மனுவைப் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளும்படியான நிலைமை இருக்கிறது. விவசாயத்திற்கு வேண்டிய உரம் வாங்குதல், மருந்து வாங்குதல் எல்லாம், காலத்தில் கடன் கிடைக்காததன் காரணமாகப் பாதிக்கப்பட்டு விவசாயமே பாதிக்கப்படும் நிலைமை உண்டாகிறது. ஆகவே, இந்தக் கடன்கள், காலத்தில் கிடைப்பதற்கு வழி செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த மாநிலத்தில் மிகவும் பிற்போக்கான ஜில்லா இராமநாதபுரம் ஆகும். அதிலும் கிழக்கு இராமநாதபுரம் முதுகுளத்தூர் தாலுகாவில் பருவ மழை இல்லாத காரணத்தால் பயிரெல்லாம் சாவியாகி அந்தப் பகுதி மக்கள் வெளி ஜில்லாவுக்குப் போய்க் கொண்டிருக்கும் நிலைமை இந்த ஆண்டில் இருக்கிறது. அந்தப் பகுதியில் இருக்கக்கூடிய பொது மக்கள் வாழ வழிசெய்ய வேண்டுமென்றால் குடிசைத் தொழில்களை ஏற்படுத்திக் கொடுப்பதன் மூலந்தான் முடியும். அதற்கு ஒரு வாய்ப்பை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

இந்தப் பஞ்ச நிலைமையில் அங்கு கொள்முதல் செய்வதில் தீவிரம் காட்டும் நிலைமை இருப்பதாக எழுதி அனுப்பியிருக்கிறார்கள். அங்கு பூராவும் புஞ்சை மகசூல்தான். இந்த ஆண்டு பருவ மழையும் இல்லை; நீர்ப்பாசன வசதிகளும் கிடையாது. புஞ்சை மகசூல் கூட ஒரு ஏக்கருக்கு மூன்று நான்கு மூட்டைதான்

வந்திருக்கிறது. அதைச் சர்க்கார் கொள்முதல் செய்து விட்டால் விவசாயிகள் பின்னால் என்னசெய்வது என்று கேட்டால் பின்னால் சர்க்கார் கொடுக்கும் என்று பதில் கூறுகிறார்கள். பின்னால் சர்க்காரிடம் கேட்டு மண்டியிடும்போது . . . (மணியடிக்கப்பட்டது).

MR. SPEAKER : Three more hon. members Sri Sengottuvelu, Sri Perumal Raju and Sri Chellayya are yet to speak. They will be called upon to speak tomorrow morning before leaders of parties. But they should each take only five minutes.

திரு. வி. அருணாசலம்: கனம் சபைத் தலைவர் அவர்களே, 1966-67-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின் மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இது உபரி நிதிநிலை அறிக்கை என்ற அளவிலே அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்திருக்கிறார்கள். இதிலே, என்.ஜி-ஓக்களுக்கு பஞ்சப்படி உயர்வு கொடுக்கப்படாது, அது பரிசீலனையில் இருப்பதாகக் கூறியிருக்கிறார்கள். இதிலே உபரியாக இருக்கிற 31 லட்சத்தோடு சர்க்காரில் வீணாக விரயமாகிக் கொண்டிருக்கும் பணத்தையும் சேர்த்து என்.ஜி.ஓ.-க்களின் வாழ்க்கைத் தரத்திற்கு ஈடுகட்டும் வகையில் பஞ்சப்படி உயர்வு கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இதிலே புதிய வரி இல்லையென்று சொன்னாலும் நான்கு மாதங்களுக்கு முன்னால் இந்த மன்றத்திலே 160 லட்சம் ரூபாய்க்கு வரி போடப்பட்டு ஏழை எளிய விவசாய மக்கள் பாதிக்கப்படுகிற அளவுக்கு நீர்வரி, நில வரி உயர்த்தப்பட்டிருக்கிறது. விவசாயத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கிறோம் என்று சொல்லும் அதே சமயத்தில் பல திட்டங்கள் தோல்வி அடைந்திருக்கின்றன. மழை பெய்தால்தான் பாசனத்திற்குத் தண்ணீர் கிடைக்கும் என்ற நிலைமை இருப்பது மிகவும் வருந்தத் தக்கது. பதினெட்டு வருஷ காங்கிரஸ் ஆட்சியிலே மூன்று திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு இன்னும் அந்த நிலை இருக்கிறது. இந்த ஆண்டு நமது உணவு அமைச்சர் அவர்கள் தஞ்சை மாவட்டத்திலே சுற்றுப் பிரயாணம் செய்தார்கள். அவர்கள், சாலையோரங்களைச் சுற்றிவிட்டு இந்த ஆண்டு அதிகமாக தஞ்சை மாவட்டத்தில் விளைந்திருக்கிறது என்று சொல்லி விட்டார்கள். அவர்கள் நல்லமுறையில் உள்ளே வந்து பார்த்திருந்தால் 50 சதவிகிதம் கூட இந்த ஆண்டு விளையவில்லை என்பதை உணர்ந்திருக்க முடியும். மேட்டூர் நீர்த் தேக்கத்தில் தண்ணீர் இல்லையென்றாலும் விவசாயம் செய்ய முடியும் என்பதற்கான நல்ல நம்பிக்கையை அரசாங்கம் உண்டாக்கவேண்டும்.

பட்டுக்கோட்டை வட்டத்தில் அதிகாரிகளுடைய கெடுபிடி அதிகமாக இருக்கிறது. வரி வசூல் ரொம்பவும் கடுமையான முறையில் இருக்கிறது. ஆகவே, அதை ஓரளவு நிறுத்தி வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

MR. SPEAKER : The House will now adjourn and meet again
-30 .m. at 8–30 a.m. tomorrow.

The House then adjourned.





## III.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

### A. Statutory Rules and Orders.

* 139. Notification issued with G.O.P. No. 106, Revenue, dated the 21st January 1966, making certain amendments to the Madras General Sales Tax Rules, 1959, published with Revenue Department Notification S.R.O. No. A-1941 of 1959, dated the 28th March 1959, at pages 232—280 of the Rules Supplement to Part I of the *Fort St. George Gazette*, dated the 1st April 1959, as subsequently amended. [*Laid on the Table of the House under section* 53 (5) *of the Madras General Sales Tax Act*, 1959 (*Madras Act I of* 1959].

* 140. Notification issued with G. O. Ms. No. 2293, Public (Services-A), dated the 29th November 1965, amending the Madras Public Service Commission Regulations, 1954, in so far as it relates to the post of Deputy Librarian, Connemara Public Library in the Madras General Subordinate Service published with Public (Services) Department Notification No. 50, dated the 5th May 1954 at pages 759–768 of Part I of the *Fort St. Gorge Gazette*, dated the 9th June 1954, as subsequently amended. [*Laid on the Table of the House under Article* 320 (5) *of the Constitution of India*].

### B. Reports, Notifications and other papers.

† 38. Resume (Part I) for the Twenty-seventh Session of the Madras Legislative Council.

* Laid on the Table of the House on 3rd March 1966.
† Despatched to Members on 2nd March 1966.

## APPENDIX I.

[*Vide* Answer to Starred Question No. 173 at page 471.]

*The following Panchayat Unions have no Primary Health Centres* :—

| | |
|---|---|
| 1 Chengam | 14 Timiri |
| 2 Sholinghur | 15 Pudupalayam |
| 3 Arcot | 16 Thellar |
| 4 Nimili | 17 Katpadi |
| 5 Kaveripakkam | 18 Tiruvannamalai |
| 6 Arkonam | 19 Natrampalli |
| 7 Madanur | 20 Tandarampattu |
| 8 Kaniambadi | 21 Gudiyatham |
| 9 Pernambut | 22 Anaicut |
| 10 Kandili | 23 Vellore |
| 11 Wandiwash | 24 Alangayam |
| 12 Anakkavur | 25 Cheyyar |
| 13 Kasthambadi | |

Primary Health Centres will be established in the above Panchayat Unions when these areas enter into the maintenance phase of National Malaria Eradication Programme.

மேற்கண்ட பஞ்சாயத்து யூனியன்களில் ஆரம்பச் சுகாதார நிலையங்கள் இல்லை :—

| | |
|---|---|
| 1 செங்கம் | 14 திமிரி |
| 2 சோழ சிங்கபுரம் | 15 புதுப்பாளையம் |
| 3 ஆர்க்காடு | 16 தெள்ளாறு |
| 4 நெமிலி | 17 காட்பாடி |
| 5 காவேரிப்பாக்கம் | 18 திருவண்ணாமலை |
| 6 அரக்கோணம் | 19 நாட்ராம்பல்லி |
| 7 மாதனூர் | 20 தண்டராம்பட்டு |
| 8 கணியம்பாடி | 21 குடியாத்தம் |
| 9 பேரணாம்பட்டு | 22 அணைக்கட்டு |
| 10 கந்திலி | 23 வேலூர் |
| 11 வந்தவாசி | 24 ஆலங்காயம் |
| 12 அனக்காவூர் | 25 செய்யாறு |
| 13 கஸ்தாம்பாடி | |

மேற்கூறிய பஞ்சாயத்து யூனியன் பகுதிகளில் மலேரியா ஒழிப்பு தேசியத் திட்டத்தின் பேணுதல் நிலை அமுலுக்கு வரும்பொழுது அந்த யூனியன்களில் ஆரம்பச் சுகாதார நிலையங்கள் நிறுவப்படும்.



## APPENEIX II.

[*Vide* answer to Starred Question No. 174 at page 474.]

STATEMENT OF DISTRICT-WISE COLLECTION TOWARDS THE NATIONAL DEFENCE FUND UP TO 5TH OCTOBER 1965.

| *Name of the district.* (1) | *Amount.* (2) RS. |
|---|---|
| Chingleput .. .. .. .. .. | 5,64,060 |
| South Arcot .. .. .. .. .. | 13,36,642 |
| Thanjavur .. .. .. .. .. | 29,67,826 |
| Tiruchirappalli .. .. .. .. .. | 22,31,920 |
| Ramanathapuram .. .. .. .. | 26,28,199 |
| Madurai .. .. .. .. .. | 27,76,335 |
| Kanyakumari .. .. .. .. .. | 2,33,896 |
| Tirunelveli .. .. .. .. .. | 23,42,600 |
| North Arcot .. .. .. .. .. | 11,28,757 |
| Coimbatore .. .. .. .. .. | 56,18,865 |
| The Nilgiris .. .. .. .. .. | 4,58,140 |
| Salem .. .. .. .. .. .. | 14,30,348 |
| Madras and Administrator, National Defence Fund including Ministers .. | 81,79,410 |
| Total .. | 3,18,96,998 |

ஒவ்வொரு மாவட்டத்திலும் தேசியப்பாதுகாப்பு நிதிக்காக 1965 அக்டோபர் 5-ம் தேதி வரை வசூலான தொகையின் விவர அறிக்கை.

| மாவட்டத்தின் பெயர். (1) | தொகை. (2) ரூ. |
|---|---|
| செங்கற்பட்டு .. .. .. .. .. | 5,64,060 |
| தென் ஆர்க்காடு .. .. .. .. .. | 13,36,642 |
| தஞ்சாவூர் .. .. .. .. .. | 29,67,826 |
| திருச்சிராப்பள்ளி .. .. .. .. | 22,31,920 |
| ராமநாதபுரம் .. .. .. .. .. | 26,28,199 |
| மதுரை ... .. .. .. .. .. | 27,76,335 |
| கன்னியாகுமரி .. .. .. .. .. | 2,33,896 |
| திருநெல்வேலி .. .. .. .. .. | 23,42,600 |
| வட ஆர்க்காடு .. .. .. .. .. | 11,28,757 |
| கோயம்புத்தூர் .. .. .. .. .. | 56,18,865 |
| நீலகிரி .. .. .. .. .. .. | 4,58,140 |
| சேலம் .. .. .. .. .. .. | 14,30,348 |
| சென்னையில் அமைச்சர்கள் உட்பட தேசீய பாதுகாப்பு நிதி நிர்வாகி வசூலித்த தொகை .. | 81,79,40 |
| மொததம் .. | 3,18,96,998 |

# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

**Saturday, 5th March 1966.**

The House met in the Assembly Chamber, Fort St. George, at half-past eight of the clock, Mr. Speaker (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

### I.—QUESTIONS AND ANSWERS.

## STARRED QUESTIONS.

MR. SPEAKER: I wish to bring to the notice of the House that there is something wrong in question No. 177. Clause (*a*) of the question reads as follows :—

"(*a*) the number of Trainees undergoing training at the Training Centre belonging to the Bharath Heavy Electricals, Tiruvarumbur on or about 20th August 1965."

Clause (*b*) reads as follows :—

"(*b*) the reasons for their arrest."

There seems to be no connection between the two clauses. The first clause deals with the number of trainees undergoing training and the second clause refers to their arrest. There is no connection between the two.

*திரு. மீ. கலியாணசுந்தரம் : பதிலும் மேஜையின் மீது வைத்தாகிவிட்டது.*

*கனம் சபாநாயகர் : இரண்டுக்கும் சம்பந்தம் இல்லையே.*

*திரு. மீ. கலியாணசுந்தரம் : சம்பந்தமில்லாத விபரீதமான காரியங்கள் நடந்தால், விபரீதமான கேள்விதான் கேட்க வேண்டியிருக்கிறது.*

THE HON. SRI R. VENKATARAMAN: Sir, I also noticed it. But, I thought it is the duty of the Minister to answer any question that is put to him.

MR. SPEAKER: It is not the duty of the Office to admit *any* question that is given notice of.

### *Bharath Heavy Electricals*

* 177 *Q.*—SRI M. KALYANASUNDARAM: Will the Hon. the Minister for Industries be pleased to state :—

(*a*) the number of Trainees undergoing training at the Training Centre belonging to the Bharath Heavy Electricals, Tiruvarumbur on or about 20th August 1965; and

(*b*) the reasons for their arrest ?

THE HON. SRI R. VENKATARAMAN: A statement[a] is placed on the table of the House.

---

[a] Printed as Appendix I on page 662 infra.

[5th March 1966

*178 Q.—SRI M. KALYANASUNDARAM: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether the Government received any representation on behalf of the Trainees discharged from service in the Training Centre run by the Bharat Heavy Electricals' High Pressure Boiler Plant, Tiruvarumbur, during August 1965; and

(b) if so, the details of action taken on the representation?

THE HON. SRI R. VENKATARAMAN: (a) No.

(b) Does not arise.

**திரு. மீ. கலியாணசுந்தரம்:** இப்பொழுது மேஜையின்மீது வைத்திருக்கிற பதிலில் கண்டிருக்கிற விவரப்படி போலீசார் பயிற்சி பெற்றவர்களைக் கைது செய்வதற்கான காரணம் என்ன? அவர்கள் எந்தப் பிரிவின்கீழ் கைது செய்யப்பட்டார்கள்? அதோடு நல்ல நடத்தை உறுதிமொழி கொடுக்கப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். நானும் கூட இருந்தேன். அதைக் கொடுத்த பிறகு விடுதலை செய்யப்பட்டதாகச் சொல்லுகிறார்கள். ஆகையால், போலீசார் தவறாகக் கைது செய்துவிட்டார்கள் என்பதை உணர்ந்து அவர்களை விடுதலை செய்தார்களா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN: Mr. Speaker, this is a contradiction of the information given by the Government. So, I have nothing to answer.

**திரு. எம். எஸ். மணி:** சட்டப்படி பயிற்சியாளர்கள் குட் காண்டக்ட் சர்ட்டிபிகேட் கொடுத்திருக்கிறார்களே, அப்படியிருந்தும் அவர்கள் என்ன தவறு செய்தார்கள் என்று நிர்வாகம் கருதுகிறது என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** மூன்று பேர் டிஸ்மிஸ் செய்யப்பட்டார்கள். குட் காண்டக்ட் சர்ட்டிபிகேட் கொடுக்கப்பட்டிருக்கிறதா என்பது தெரியாது. அவ்வாறு கொடுக்கப்பட்டிருக்கிறதா என்ற விவரத்தைப் பற்றிச் சொல்ல வேண்டுமென்றால் தனியாகக் கேள்வி போடவேண்டும்.

**திரு. மீ. கலியாணசுந்தரம்:** இரண்டாவதாகக் கேட்டிருக்கக் கூடிய கேள்வியிலே வெளியேற்றப்பட்ட பயிற்சி பெற்றவர்கள் சார்பிலே மெமோராண்டம் கொடுக்கப்பட்டிருக்கிறதா என்று கேட்டேன். இல்லை என்று பதில் சொன்னார்கள். முதல் அமைச்சர் அவர்களிடத்தில் கொடுத்தால் அரசாங்கத்திற்குக் கொடுத்ததாகத் தானே அர்த்தம்?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** என்னுடைய தகவல்படி எந்த கம்ப்ளெயின்டோ, ரெப்ரசென்டேஷனோ கொடுத்ததாகத் தெரியவில்லை. கனம் உறுப்பினர் அது சம்பந்தமாகக் கடிதம் எழுதினால் பரிசீலனை செய்யப்படும்.



5th March 1966]

**திரு. மீ. கலியாணசுந்தரம்:** மூன்று மாணவர்களை வெளியேற்றுவதற்குக் காரணம் அவர்கள் பயிற்சி பெறக்கூடிய காலத்தில் சேவை சரியாக இல்லை என்று சொல்லப்பட்டதா? நம்முடைய ராஜ்ய சர்க்காரால் நடத்தப்படுகின்ற ஐ.டி.ஐ.-யில் 18 மாதம் பயிற்சி பெற்றிருக்கிறார்கள். அங்கேயும் 5 க்வார்ட்டரில் அவர்கள் ப்ரோக்ரஸ் காட்டியிருக்கிறார்கள். ஆறாவது க்வார்ட்டரிலேதான் தக்கபடி இல்லை என்று வெளியேற்றியிருக்கிறார்கள் என்ற தகவல் அரசாங்கத்திற்கு வந்ததா? அமைச்சர் அவர்கள் அதைப் பரிசீலனை செய்தார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** கனம் சபாநாயகர் அவர்களே, இது ஒரு கார்ப்பரேஷன். அவர்களுடைய டிரெயினீஸ்களை வைத்துக்கொள்வதோ, எடுத்துவிடுவதோ அவர்கள் பொறுப்பில்தான் இருக்கிறது. சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டுமானால் இன்டஸ்ட்ரியல் டிஸ்ப்யூட்ஸ் ஆக்ட் பிரகாரம் தான் எடுக்கலாம் ராஜ்ய சர்க்கார் அவர்களுடைய நிர்வாகத்திற்குள்ளே போய் 'டே-டு-டே அட்மினிஸ்டிரேஷனி' லே தலையிட முடியாது என்று கனம் அங்கத்தினர் அவர்களுக்குத் தெரியும் என்று நினைக்கிறேன்.

**திரு. மீ. கலியாணசுந்தரம்:** இது தனிக் கார்ப்பரேஷன் என்றாலும் தனிப்பட்ட முதலாளிகள் நடத்தக் கூடிய கார்ப்பரேஷன் அல்ல. அரசாங்கத்தின் பணம். நம் நாட்டிலுள்ள நல்லெண்ணம் இருக்கக் கூடியவர்கள் ஒத்துழைப்பு, உதவி இவை இரண்டும் சேர்ந்து தயாரித்துள்ள இந்த ப்ராஜக்டில் சில அதிகாரிகளை தங்கள் விருப்பு வெறுப்புகளோடு, அவர்கள் இஷ்டம் போல் நடத்தவிடுவது சரியா? அதில் தலையிட்டு, நம் அரசாங்கம் மத்திய சர்க்காருக்கு இதைப் பற்றித் தெரிவிப்பார்களா?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** இது மத்திய அரசாங்க கார்ப்பரேஷன். இது. சம்பந்தமான கேள்விகளை மத்திய அரசாங்கத்திற்குத்தான். போடவேண்டும்.

**திரு. எஸ். முருகையன்:** இவர்கள் பயிற்சி பெறவேண்டிய காலம் எவ்வளவு? அதிலே அவர்கள் குறுகிய காலத்தில் நீக்கப்பட்டிருப்பதற்குக் காரணம் என்ன?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** அந்த விவரம் இந்த ராஜ்ய அரசாங்கத்திடம் இருக்காது. இது மத்திய அரசாங்க கார்ப்பரேஷன். இது சம்பந்தமான கேள்விகளை எல்லாம் மத்திய அரசாங்கத்தினிடம் போட வேண்டும். லா அண்ட் ஆர்டர் மெயின்டினன்ஸ் விஷயம் சம்பந்தப்பட்டிருப்பதால் அதுபற்றிய கேள்விக்கு இந்த ராஜ்ய சர்க்கார் பதில் கொடுக்கும்.

**திரு. எம். எஸ். மணி:** அங்கு பயிற்சி பெற்றவர்கள் ஒரு வேலை நிறுத்தத்தின்போது சிலர் தலைமை வகித்தார்கள் என்ற காரணத்திற்காக அவர்களைக் கொண்டு போய் போலீசார் மிரட்டி அதற்குப்

[5th March 1966

பிறகு மற்றவர்களை எல்லாம் உள்ளே அனுப்பியது அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்ததா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** அந்தவிதமாக போலீசார் மிரட்டவில்லை என்ற தகவல் என்னிடம் இருக்கிறது.

கள்ளக்குறிச்சியில் தொழிற்பயிற்சிப் பள்ளி

* 179 கேள்வி—திரு. எல். ஆனந்தன் : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா:—

(அ) கள்ளக்குறிச்சியில் ஒரு தொழிற்பயிற்சிப் பள்ளியை (Industrial Training Institute) ஏற்படுத்தும் உத்தேசம் உண்டா ?

(இ) ஆம் எனில், அது எப்போது துவக்கப்படும் ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

வேலூர்-காஞ்சீபுரம் புதிய இருப்புப்பாதை

* 180 கேள்வி—திரு. ர. ஜீவரத்தினம் : கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா:—

(அ) வேலூரிலிருந்து ஆர்க்காடு, செய்யாறு வழியாக காஞ்சிபுரம் வரை புதிய இருப்புப்பாதை போட ரயில்வே இலாகாவில் சர்வே செய்யப்பட்டது உண்மையா ?

(இ) ஆமெனில், அந்த வேலையை நான்காவது திட்ட காலத்தில் மேற்கொள்ள வேண்டுமென்று மத்திய அரசுக்கு ராஜ்ய சர்க்கார் சிபாரிசு செய்துள்ளதா ?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) Yes. The information available with the Government is that a traffic survey was conducted in the year 1956 by the Southern Railway for the construction of a new railway line from Vellore to Kancheepuram but the route was found to be unremunerative.

(*b*) No.

**திரு. து. ப. அழகமுத்து :** நான்காவது திட்டத்தில் எந்தெந்த ரெயில்வே பாதைகள் சிபார்சு செய்யப்பட்டிருக்கின்றன ? எதற்கு முன் சலுகை கொடுக்கப்பட்டிருக்கிறது ?

**கனம் சபாநாயகர் :** இது பொதுவான பிரச்சினை.

**புலவர் கா. கோவிந்தன் :** வட ஆற்காடு மாவட்டத்தில் மேற்கு நோக்கிச் செல்லுகிற ரெயில் பாதையையும் கிழக்குக் கரையோரமாகச் செல்லுகிற ரெயில் பாதையையும் இணைக்கும் வகையில் திண்டிவனம், வந்தவாசி, திருவந்தியபுரம், ஆற்காடு ராணிப்பேட்டை, அம்பூர் இவ்விடங்கள் வழியாக ஒரு புதிய ரெயில்வே



5th March 1966]

பாதை அமைக்க வேண்டுமென்று சர்வே நடைபெற்றிருக்கிறது. அதை வலியுறுத்தி அப்பாதையை அமைப்பதற்கு வழிவகை செய்யப்படுமா ?

**கனம் திரு. வெ. ராமைய்யா :** வேலூர்-காஞ்சீபுரம் இருப்புப் பாதை சம்பந்தமாகப் பதில் சொன்னேன். அது கட்டுபடியாகாத ஸ்கீம் என்று எடுத்துக்கொள்ளவில்லை. அங்கத்தினர் அவர்கள் குறிப்பிடுகிற ரெயில் பாதை அல்லது அந்தத் தொடர்பு பரிசீலனையில் இருந்ததாக விவரம் இல்லை.

நில உச்சவரம்புச் சட்டம்

* 181 கேள்வி—திரு. கோ. சி. மணி :<br>
திரு. கரு. சீமைச்சாமி :<br>
திரு. எஸ். ஆறுமுகம் :<br>
திரு. இராம. அரங்கண்ணல் : } கனம் உணவு

அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா:—

(அ) தமிழ்நாடு நில உச்ச வரம்புச் சட்டத்தின்கீழ் [The Madras Land Reforms (fixation of Ceiling on Land) Act, 1961] தமிழ் நாட்டில் உபரியாக உள்ள நஞ்சை, புஞ்சை நிலங்களை எடுப்பதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

(இ) மாவட்டவாரியாக உள்ள உபரி நிலங்கள் எத்தனை ஏக்கர் ?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) The Government are closely watching the progress of implementation of the Land Ceiling Act. The field work is being done by ten Authorised Officers now who are of the rank of Revenue Divisional Officers recruited from the Revenue Department. The Authorised Officers have been given adequate office and field staff to assist them. They are now engaged in the preparation of draft statements of surplus land of persons holding land in excess of the ceiling area. The progress is being reviewed by the Board of Revenue once a fortnight and by the Government periodically and sufficient impetus is given to the work. Special efforts are made to take possession of substantial extent and the work is expected to be completed by the end of March 1966.

(*b*) The total extent of surplus land so far notified by the Government under section 18 (1) of the Act is 5,445'96 acres. The district-war figures are as follows :—

| Name of the district. | Wet A. | Wet C. | Dry A. | Dry C. | Total A. | Total C. |
|---|---|---|---|---|---|---|
| Chingleput .. .. | 87 | 89 | 269 | 89 | 357 | 78 |
| South Arcot .. .. | 337 | 63 | 348 | 63 | 686 | 26 |
| Thanjavur .. .. | 711 | 95 | 68 | 69 | 780 | 64 |
| Tiruchirappalli .. | 184 | 65 | 283 | 88 | 468 | 53 |
| Salem .. .. | 12 | 28 | 217 | 90 | 230 | 18 |

[5th March 1966

| Name of the district. | | Wet A. C. | | Dry A. C. | | Total A. C. | |
|---|---|---|---|---|---|---|---|
| Dharmapuri .. | .. | 73 | 03 | 344 | 72 | 417 | 75 |
| Madurai .. | .. | 59 | 23 | 1,135 | 33 | 1,194 | 56 |
| Coimbatore .. | .. | 4 | 47 | 334 | 88 | 339 | 35 |
| Ramanathapuram | .. | 91 | 93 | 30 | 92 | 122 | 85 |
| Tirunelveli | .. | 18 | 29 | 484 | 38 | 502 | 67 |
| North Arcot .. | .. | 146 | 43 | 198 | 96 | 345 | 39 |
| | | 1,727 | 78 | 3,718 | 18 | 5,445 | 96 |

திரு. கோ. சி. மணி: இந்த உபரியாகக் கிடைத்த நிலத்தில் தஞ்சை மாவட்டத்தில் இருந்து எவ்வளவு பேர்களிடமிருந்து ஆதரைஸ்ட் ஆபீசர் எடுத்த நடவடிக்கைகளின் பேரில் இந்த நிலம் கொடுக்கப்பட்டிருக்கிறது?

கனம் திரு. வெ. ராமையா: அந்த விவரம் இப்போது என்னிடம் இல்லை.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி: இந்த நில உச்சவரம்புச் சட்டம் பற்றி முன்பு ஒரு முறை இந்த சட்டமன்றத்தில் கேட்கிற சமயத்தில் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், புலி வேட்டைக்குச் சென்றால் புலியைப் பிடித்துத்தான் வருவோம் என்று. இந்தப் பரந்த மாநிலத்தில் பல லட்சக்கணக்கான ஏக்கர்கள் இருக்கிற இடத்தில், சட்டம் செய்யப்பட்டு நான்கைந்து ஆண்டுகள் ஆகியும் 5,445 ஏக்கர்கள் சம்பந்தமாகத்தான் இது வரையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. செக்ஷன் 18 (1) பிரகாரம் எடுத்திருக்கிறோம் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். எவ்வளவு கோர்ட்டில் இருக்கின்றனவோ, அவை கடைசியில் என்ன ஆக இருக்கின்றனவோ தெரியவில்லை. இந்த நிலச் சட்டத்தின் மூலமாக இவர்களால் செயல்படுத்த முடியவில்லை என்பதை அமைச்சர் அவர்கள் ஒப்புக்கொள்கிறார்களா?

கனம் திரு. வெ. ராமையா: இப்போது எடுத்திருக்கும் நடவடிக்கைகள் பூராவும் இப்போதுள்ள சட்டத்தின் அடிப்படையில்தான் இந்தச் சட்ட அடிப்படையில் நம் கைக்கு இப்போது வந்திருப்பது பற்றிக் குறிப்பிட்டேன். மீதி கேஸ்கள் கோர்ட்டில் பரிசீலனையில் இருக்கின்றன. சில தாவாக்கள் லாண்ட் ட்ரிப்யூனல் முன் இருக்கின்றன. சில ஹைக்கோர்ட் முன்னால் இருக்கின்றன.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இந்த மன்றம் செய்த சட்டம் அது. அந்தச் சட்டப்படி ரிட்ராஸ்பெக்டிவ் எஃபெக்ட் கிடையாது. அந்த வகையில் எவ்வளவு மிச்சப்படுகிறதோ அவை எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன. மிச்சம் குறைவாகத்தான் இருக்கிறது, அதுதான் எதிர்பார்க்கப்பட்டது. பெரும்பாலும் விவசாயிகள் குறைந்த நிலம் உள்ளவர்களாகத்தான் இருக்கிறார்கள்.



5th March 1966]

திரு. செ. மாதவன்: சட்டம் வருவதற்கு முன்பு மசோதா ஸ்டேஜில் இதுபற்றிப் பரிசீலிக்கப்பட்டது. அப்போது எவ்வளவு ஏக்கர் இந்த மாநிலத்தில் உச்சவரம்புச் சட்டத்தின் கீழ் எடுக்கப்படும் என்று கணக்கிடப்பட்டது?

கனம் திரு. வெ. ராமையா: அந்த விவரம் என்னிடம் இல்லை. கனம் முதல் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டபடி இந்த சபையில் நிறைவேற்றிய அந்தச் சட்ட அடிப்படையில் உபரியான நிலங்களை எடுத்துக் கொண்டிருக்கிறோம்.

திரு. மீ. கலியாணசுந்தரம்: அமைச்சர் அவர்கள் இவ்வளவு விவரங்கள் கொடுத்ததற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். மலையைக் கெல்லி எலி பிடித்தது என்று சொல்வார்கள். அதேபோல் இந்தச் சட்டத்தை இவ்வளவு சிரமப்பட்டு அமல் படுத்திக் கூட ஐயாயிரத்துச் சொச்சம் ஏக்கர்கள்தான் எடுக்கப்பட்டிருக்கின்றன. அதிலும் தஞ்சை ஜில்லாவில் 780 ஏக்கர்கள்தான் உபரியாகக் கிடைத்திருக்கின்றன என்று அமைச்சர் அவர்கள் கூறுகிறார்கள். இதற்கான நிர்வாகச் செலவு என்னவாயிற்று என்பதையாவது அறியலாமா?

கனம் திரு. வெ. ராமையா: நிர்வாகச் செலவு எவ்வளவு ஏற்பட்டது என்று அது நடைமுறையில் இருக்கிறபோது சொல்லி விட முடியாது. சட்டம் அமலில் இருக்கிறது. இன்னும் முடிவாக வேண்டிய பல மனுக்கள், வழக்குகள் எல்லாம் ஏராளமாக இருக்கின்றன.

திரு. ஆ. கு சுப்பையா: சார், நிலச்சட்டங்களை எல்லாம் இணைத்து, ஒரே சட்டமாகக் கொண்டு வருவதற்கு அரசாங்கத்தினிடத்தில் ஏதாவது உத்தேசம் இருக்கிறதா?

கனம் திரு. வெ. ராமையா: அதற்காக ஒரு தனிச் சட்டம் கொண்டு வருவதைப்பற்றி முதலமைச்சர் அவர்கள் முன்பே குறிப்பிட்டிருக்கிறார்கள்.

## தேசிய நீர்வழங்கு திட்டம்

* 182 கேள்வி—திரு. சீ. சிவசுப்பிரமணியன்: கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா:—

(அ) தென்னார்க்காடு ஜில்லா, சிதம்பரம் தாலுகாவிற்கு நேஷனல் வாட்டர் ஸ்கீமை (National Water Scheme) திரும்பவும் ஆரம்பிக்க உத்தேசம் உண்டா?

(இ) ஆம் எனில், எப்போது?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: (அ) இல்லை.

(இ) இந்தக் கேள்விக்கு இடமில்லை.

[5th March 1966

### ஆறுமுகனேரி இந்து உயர் தொடக்கப்பள்ளி

*183 கேள்வி—திரு. எம். எஸ். செல்வராஜன் : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா:—

(அ) ஆறுமுகனேரி இந்து உயர்தர ஆரம்பப் பாடசாலை, இந்து உயர்தர சீனியர் ஆதாரப்பள்ளியாக எப்பொழுது மாற்றப் பட்டது ?

(இ) அதன் காரணமாக ஆசிரியர்களைக் குறைக்க வேண்டுமென்று கல்வி இலாகா அதிகாரிகள் உத்தரவு பிறப்பித்திருப்பது உண்மையா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) The Standards I to V of the Hindu Higher Elementary School, Arumuganeri were ordered to be converted into Basic pattern, during 1961–62.

(*b*) No.

திரு. எம். எஸ். செல்வராஜன் : சார், உயர்தர ஆரம்பப் பள்ளிக் கூடங்களுக்கும் சீனியர் பேஸிக் பள்ளிக்கூடங்களுக்கும், ஆசிரியர்கள் மாணவர்கள் விகிதாச்சாரத்தில் வித்தியாசம் ஏதாவது இருக்கிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : தனிக் கேள்வி வேண்டும்.

### உயர்நிலைப்பள்ளிகளிலுள்ள தமிழாசிரியர்கள்

*184 கேள்வி—திரு. மு. கருணாநிதி : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா:—

(அ) தமிழகத்திலுள்ள உயர்நிலைப் பள்ளிகளில் மொத்தம் உள்ள இரண்டாம் நிலைத் (Second grade) தமிழாசிரியர்கள் பதவிகள் எத்தனை ?

(இ) அவற்றுள் பணியாற்றும் தமிழாசிரியர்கள் எத்தனை பேர் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) & (*b*) : The time and labour involved in collecting the particulars will not be commensurate with the purpose served in answering the question.

திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, அரசினர் அங்கீகாரம் பெற்ற உயர்நிலைப் பள்ளிகளில் 6 முதல் 11 வரையுள்ள வகுப்புக்களில் தனியாக தமிழாசிரியர்கள் நியமிக்கப்படவேண்டும் என்று அரசாங்கம் ஆணை பிறப்பித்து இருக்கிறது. அப்படியிருந்தும் பல இடங்களில் தலைமை ஆசிரியர்கள், அல்லது நிர்வாகிகள், அந்தந்தப் பள்ளிகளில் தமிழ் ஆசிரியர்களை நியமிக்காமல் இருக்கிறார்கள், இதனால் தாய்மொழிப் பயிற்சி பெறுவதற்குரிய வாய்ப்பு குறைகிறது. ஆகவே, இது குறித்து அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுக்குமா ?



5th March 1966]

கனம் திரு. எம். பக்தவத்சலம் : எங்கெங்கு பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் தேவைப்படுகிறார்களோ, அங்கெல்லாம் பயிற்சி பெற்ற தமிழ் ஆசிரியர்களைப் போட வேண்டும் என்று அரசாங்கம் உத்தரவிட்டிருக்கிறது. ஆனால், பயிற்சி பெற்றவர்கள் கிடைக்கவில்லையென்றால் வேறு ஆசிரியர்களைக் கொண்டு தமிழ்ப் பாடங்களைச் சொல்லிக் கொடுக்கின்றார்கள்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : சார், இந்தக் கேள்விக்கான விபரங்களைச் சேகரிப்பதில் நேரமும், பணமும், காலமும் விரயமாகும் என்று அமைச்சர் அவர்கள் பதில் சொல்லியிருக்கிறார்கள். நமது நாட்டில் ஆட்சி மொழி தமிழ் மொழி என்று ஒப்புக்கொண்டிருக்கிறோம். உயர்நிலைப் படிப்பு எல்லாம் தமிழில் சொல்லிக் கொடுக்க ஏற்பாடு செய்திருக்கிறோம். கல்லூரிப் படிப்பையும் தமிழ் மொழியிலேயே சொல்லிக் கொடுக்கப்போவதாகவும் சொல்லப்படுகிறது. அப்படியிருக்கிறபொழுது, தமிழ் மொழிக்கு மட்டும், தமிழ் சொல்லிக்கொடுப்பதற்கு என்று தனியாக தமிழ்ப் பண்டிதர்களை வைத்துக் கொண்டிருப்பானேன் ? எல்லா ஆசிரியர்களுக்குமே தமிழ்ப் பயிற்சி கொடுத்து, தமிழைச் சொல்லிக் கொடுக்கலாமே ? ஆங்கிலப் பள்ளிகளில் ஆங்கிலத்தைச் சொல்லிக் கொடுப்பதற்கு என்று தனியாக பண்டிதர்கள் நியமிக்கப்படுவதில்லை. ஆகவே மற்றவர்களைப் போன்றே தமிழ்ப் பண்டிதர்களையும் நியமித்துக்கொள்ளுவதற்கு ஏதாவது உத்தேசிக்கப்படுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : தமிழ் இலக்கியங்கள் முதலியன சொல்லிக் கொடுப்பதற்கு விசேஷமாகப் பயிற்சி பெற்றவர்கள் தேவையாக இருக்கிறார்கள். மேலும் இதில் தனியான பயிற்சி பெற்று பட்டம் பெற்றிருக்கின்றவர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கவேண்டும். இம்மாதிரி பயிற்சி பெற்றவர்களை நியமித்தால் தான் விசேஷமான பயிற்சி அளிக்க முடியும்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : கனம் முதலமைச்சர் அவர்கள் இதில் பட்டம் பெற்றவர்களுக்கு வேலை கிடைக்கவேண்டும் என்று சொன்னார்கள். நான் கூறுவது இன்னும் அதிகமான அளவில், அவர்கள் வாய்ப்பு பெறக்கூடிய அளவில் மற்றவர்களோடு சேர்த்து —செக்கண்டரி கிரேட், பி.டி. இவர்களுக்குக் கிடைக்கின்ற சலுகைகள் தமிழ்ப் பண்டிதர்களுக்குக் கிடைப்பதில்லை. அந்த சலுகைகளும் இவர்களுக்குக் கிடைக்கக்கூடிய வகையில், எல்லா ஆசிரியர்களும் தமிழைச் சொல்லிக்கொடுக்கின்ற முறையைக் கொண்டுவர முடியாதா என்பதுதான் என் கேள்வி.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : தமிழ் ஆசிரியர்கள் என்று தனியாகப் பயிற்சி பெற்றிருப்பவர்கள் தங்கள் பணியைச் செய்த பின்னால் கனம் அங்கத்தினர் அவர்கள் கூறுகின்றபடி செய்யலாம். மற்ற ஆசிரியர்களும் தமிழைக் கற்றுக் கொடுக்கலாம் என்று சொல்வதில் முக்கியத்துவம் இருந்தாலும், இதற்கென்று தனியாக

[5th March 1966

பயிற்சி பெற்றுப் பட்டம் பெற்றிருக்கின்ற பண்டிதர்களுக்கு எல்லாம் வேலை கொடுத்துவிட்டுத்தான் மற்றவர்களும் சொல்லிக் கொடுக்கலாம் என்பதைப் பற்றி ஆலோசிக்க முடியும்.

### தமிழ்நாட்டிலுள்ள தொடக்கப் பள்ளிகள்

** 185 கேள்வி—திரு. கரு. சீமைச்சாமி : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—*

*(அ) தமிழ் நாட்டில் உள்ள ஆரம்பப் பள்ளிகள் எத்தனை ?*

*(இ) அவற்றுள் அரசாங்கம், பஞ்சாயத்து, தனியார்களால் நடத்தப்பட்டு வருபவை முறையே எத்தனை ?*

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) 30,493 Elementary Schools upto 1965-66.

| | |
|---|---|
| (*b*) Government .. .. .. .. .. | 1,545 |
| Panchayat Union Council .. .. .. | 20,222 |
| Municipalities .. .. .. .. .. | 1,112 |
| Private .. .. .. .. .. .. | 7,614 |

SRI C. CHIRANJEEVULU NAIDU : Sir, is there any proposal under the consideration of the Government to change the present set-up of elementary education which is maintained by the Panchayat Unions?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : There is no such proposal under the consideration of the Government.

**திரு. ஆ. கு. சுப்பையா :** ஸார், தனியார் நடத்தும் பள்ளிகளை பஞ்சாயத்துக்களோ அல்லது அரசாங்கமோ எடுத்து நடத்துவதற்கு உத்தேசம் உண்டா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அவ்வாறு உத்தேசமில்லை.

### மாநிலத்தில் புதிய உயர்நிலைப் பள்ளிகள்

** 186 கேள்வி—திரு. பி. முருகையன் : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—*

*1965-66-ம் ஆண்டில் நமது மாநிலத்தில் எத்தனை உயர்நிலைப் பள்ளிகள் புதிதாகத் துவங்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டது, மாவட்டவாரியாக ?*

THE HON. SRI M. BHAKTAVATSALAM :

| | |
|---|---|
| Chingleput .. .. .. .. .. | 13 |
| North Arcot .. .. .. .. .. | 22 |
| Salem .. .. .. .. .. | 25 |
| The Nilgiris .. .. .. .. .. | 1 |
| Tirunelveli .. .. .. .. .. | 4 |
| Coimbatore .. .. .. .. .. | 9 |
| Madurai .. .. .. .. .. | 12 |
| Tiruchirappalli .. .. .. .. .. | 14 |
| Thanjavur .. .. .. .. .. | 9 |
| South Arcot .. .. .. .. .. | 16 |
| Madras City .. .. .. .. .. | 2 |
| Ramanathapuram .. .. .. .. | 5 |
| Total .. | 132 |



5th March 1966]

| | |
|---|---|
| செங்கற்பட்டு .. .. .. .. .. | 13 |
| வட ஆர்க்காடு .. .. .. .. .. | 22 |
| சேலம் .. .. .. .. .. | 25 |
| நீலகிரி .. .. .. .. .. | 1 |
| திருநெல்வேலி .. .. .. .. | 4 |
| கோயம்புத்தூர் .. .. .. .. | 9 |
| மதுரை .. .. .. .. .. | 12 |
| திருச்சிராப்பள்ளி .. .. .. .. | 14 |
| தஞ்சாவூர் .. .. .. .. .. | 9 |
| தென் ஆர்க்காடு .. .. .. .. | 16 |
| சென்னை .. .. .. .. .. | 2 |
| இராமநாதபுரம் .. .. .. .. | 5 |
| மொத்தம் .. | 132 |

MR. SPEAKER : Questions are over.

[*Note.*—**An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.**]

## II.—ADJOURNMENT MOTION.

### LOCK-OUT IN SOMASUNDARAM MILLS, COIMBATORE.

**திரு. மீ. கலியாணசுந்தரம் :** ஸார், கோவையில் சோமசுந்தரம் மில்லின் அதிபர்கள் திடீரென்று லாக் அவுட் செய்திருக்கிறார்கள். இதன் காரணமாக ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலையில்லாமல் திண்டாடிக்கொண்டிருக்கக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இன்டஸ்ட்ரியல் டிஸ்ப்யூட்ஸ் ஆக்ட் படி இவ்விதம் லாக் அவுட் செய்திருப்பது சட்ட விரோதமானதாகும். இதில் அரசாங்கம் தலையிட்டு இவ்விதம் லாக் அவுட் செய்வது கூடாது என்று உத்தரவிட வேண்டும். இதனால் உற்பத்திக்கும் பாதகம் ஏற்படுகிறது. அரசாங்கம் முன்பே ஒரு கொள்கையை ஒத்துக் கொண்டிருக்கிறது. நம்முடைய பொருளாதார பலம் பெருகுவதற்குரிய எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவேண்டும் என்று சொல்லியிருக்கிறது. அந்த முறையில் பார்த்தாலும் இன்றைய தினம் இம்மாதிரி லாக் அவுட் செய்திருப்பது கூடாது என்று சொல்லுகிறோம். ஆனால் முதலாளிகள் இம்மாதிரி லாக் அவுட்

நடத்திக்கொண்டு இருக்கிறார்கள். இதன்மீது கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதைச் சபையின் கவனத்திற்குக் கொண்டு வரவேண்டும் என்பதற்காகத்தான் இத்தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** இதைப்பற்றி என்னிடம் இப்போது தகவல் இல்லை. இன்டஸ்ட்ரியல் டிஸ்ப்யூட்ஸ் ஆக்ட் படிதான் இதன் மீது நடவடிக்கை எடுக்க முடியும். அரசாங்கம் இதைப்பற்றி எப்போதும் கவனித்துக்கொண்டிருக்கிறது. அந்த வகையில் இங்கு எந்த முறையில் லாக் அவுட் நடைபெற்றிருக்கிறது என்பதைப்பற்றிப் பரிசீலனை செய்யவேண்டும். இதைப்பற்றி ஏதாவது கேள்வி கேட்டால் பதில் தெரிவிக்கலாம். அதோடு இன்னும் சில தினங்களில் லேபர் டிமாண்டு வருகிறது. அதில் கனம் அங்கத்தினர் அவர்கள் இதைப்பற்றிக் குறிப்பிட்டால் அப்போது என்னிடம் இருக்கின்ற தகவல்களை வைத்துக்கொண்டு சில விளக்கங்களை கொடுக்க முடியும். ஆகவே, இது 42-வது விதிக்குரிய மோஷன் அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

MR. SPEAKER: I withhold consent to the hon. Member to raise an adjournment motion to discuss this matter.

### III.—GENERAL DISCUSSION ON THE BUDGET FOR 1966-67—*cont.*

* திரு. நா. ப. செங்கோட்டுவேலு: கனம் சட்டமன்றத் தலைவர் அவர்களே, 1966-67-ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின் மீது என்னுடைய சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இந்த வரவு செலவுத் திட்டத்தில் வேளாண்மை வளர்ச்சிக்கு முதலிடம் கொடுத்திருக்கிறார்கள் முதலமைச்சர் அவர்கள். இதந் வேளாண்மை வளர்ச்சிக்கு இன்றைக்கு நாம் அதிகமாகப் பணம் ஒதுக்கியிருந்த போதிலும் விவசாயிகளுக்கு நன்மை தரக்கூடிய வகையில் இதில் எந்தவிதமான திட்டமும் இல்லை என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இன்றைக்கு அரசாங்கம் நெல்லுக்கு நிர்ணயித்திருக்கின்ற விலைக்கும், விவசாயிகளுக்குக் கிடைக்கின்ற பொருட்களுக்கு இருக்கின்ற விலைக்கும் மிகுந்த வேறுபாடு இருக்கிறது. உதாரணமாகச் சொல்லவேண்டுமானால், விவசாயிகளுக்குத் தேவையான உரம், பிண்ணாக்கு, இவைகளின் விலை அதிகமாக இருக்கிறது. ஒரு மூட்டை நெல்லுக்கு அரசாங்கம் நிர்ணயித்துள்ள விலை 31 ரூபாய் என்றால் பிண்ணாக்கின் விலை 40 ரூபாய் ஆக இருக்கிறது. இந்த நிலையில் விவசாயிகளுக்கு சாகுபடிக்கு ஆகின்ற செலவுக்கும் நெல்லின் விலையிலிருந்து கிடைக்கின்ற விலைக்கும் மிகுந்த வேறுபாடு இருக்கின்ற காரணத்தால் அவர்களுக்கு இன்றைய தினம் ஊக்கம் குறைந்து வருகிறது. எனவே, இந்த நிலைமையைப்பற்றி அரசாங்கம் தக்க விதத்தில் பரிசீலனை செய்யவேண்டும், அவ்விதம் பரிசீலனை செய்து விவசாயிகளுக்குக் கொடுக்கவேண்டிய உரம், பிண்ணாக்கு, போன்றவைகளுக்கும் ஒரு விலை நிர்ணயித்துக்கொடுத்தால் விவசாயிகளுக்கு ஆகின்ற சாகுபடி செலவு ஓரளவுக்குக் குறையும். இந்த வகையில் கவனம் செலுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு அவர்களுக்குத் தேவையான பாசன வசதியையும்





நல்ல முறையில் செய்து கொடுக்க வேண்டும். குறிப்பாக, சேலத்தை எடுத்துக்கொண்டால் பாசன வசதி மிக மிக குறைவாக இருக்கிறது. 150 அடி ஆழம் வரைக்கும் கிணறுகளைத் தோண்டி தண்ணீர் எடுத்து வருகிறார்கள். அங்குள்ள விவசாயிகளுக்கு 'போர் வெல்' அமைத்துக் கொடுப்பதற்கான வழிவகை செய்ய வேண்டும். அந்த முறையில் அங்குள்ள விவசாயிகளுக்கு இருக்கின்ற தண்ணீர்ப் பஞ்சத்தைப் போக்குவதற்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். 9-00 a.m.
மேலும், பல ஏரிகள், குளங்கள் எல்லாம் மராமத்து செய்யப்படாமல் இருக்கின்றன. இவையெல்லாம் தூர் எடுப்பதற்கு பஞ்சாயத்து யூனியன்களிடத்தில் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், அவர்களிடம் சொற்ப தொகை இருப்பதால் சரியானபடி சீர்திருத்த முடியவில்லை. இதனால், விவசாயிகளுக்கு அதிகமான அளவில் பயன் கிடைக்காமல் இருக்கிறது. எனவே, ஏரி, குளங்களை மராமத்து செய்வதிலே, நல்ல முறையிலே மைனர் இர்ரிகேஷன் ப்ரோக்ராமில் அதிகப் பணத்தை ஒதுக்கி, அதிகமான, அளவிலே, ஏரி, குளம், குட்டைகளை தூர் வாரி, செம்மைப்படுத்த அரசாங்கம் முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பாக்கேஜ் ப்ரோக்ராமை சேலம் மாவட்டத்திற்கும் விஸ்தரிப்பு செய்தால் நல்ல முறையில் உற்பத்தி ஆகும் என்று சொல்லிக்கொள்ளுகிறேன். சேலம் விவசாயிகளுக்கு இப்போது எ.டி.டி. 27 நல்ல முறையில் பரவவில்லை. அந்த விதையை சேலம் மாவட்டத்திலும் அதிகமாக விநியோகித்து நல்ல முறையில் விஸ்தரிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சேலம் மாவட்டத்திலே புன்செய் தானியங்கள் அதிகமாக சாகுபடி செய்யப்படுகின்றன, தண்ணீர் இல்லாத காரணத்தினால், எனவே புன்செய் தானியங்களுக்கும் தீவிரச் சாகுபடித் திட்டத்தை அமல்படுத்தவேண்டும். சேலம் மாவட்டத்தில் கிட்டத்தட்ட எல்லாப் பகுதிகளிலும் விவசாயிகள் பரவி விட்டார்கள். அதிகப்படி விவசாயம் செய்ய நிலம் கிடையாது. வேறு மாவட்டங்களை எடுத்துக்கொண்டால் அதிகமான நிலங்கள் தரிசாகக் கிடக்கின்றன. எனவே, சேலம் மாவட்ட விவசாயிகளுக்குப் பிற மாவட்டங்களில் குடியேற வசதி செய்தால் அங்குள்ள தரிசு நிலங்களில் பயிரிட வாய்ப்பாக இருக்கும். தண்ணீர் இல்லாத பகுதிகளில் உள்ள விவசாயிகளுக்குத் தண்ணீர் இருக்கக் கூடிய மற்ற மாவட்டங்களில் குடியேற வசதி செய்து கொடுத்தால் விவசாயம் நல்ல முறையில் நடைபெறும் என்று கூறிக்கொள்ளுகிறேன்.

தண்ணீர் இருக்கும் இடங்களில் கூட கமர்ஷியல் க்ராப்ஸ் பயிர் செய்து நெல் போன்றவைகளை விட்டு விட்டிருக்கிறார்கள். காரணம், நெல் சாகுபடிக்கு அதிகமாகச் செலவு ஆகின்றது, கமர்ஷியல் க்ராப்ஸ் போட்டால் அவர்களுக்குச் செலவு குறைகிறது, லாபமும் அதிகமாக வருகிறது. ஆகையினால் நெல்

[திரு. நா. ப. செங்கோட்டுவேலு] [5th March 1966

போன்றவைகளைப் பயிரிடுவதை விட்டு, கரும்பு, கடலை போன்ற பயிர்களை விரும்பிப் போட்டுக் கொண்டிருக்கிறார்கள். மற்ற மாவட்டங்களில் உள்ள தரிசு நிலங்களில், சேலம் மாவட்டத்தில் தண்ணீர் இல்லாத பகுதிகளில் இருக்கும் விவசாயிகளைக் குடியேற்றி, அந்த நிலங்களை அவர்களுக்கு வழங்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயத்திற்குப் பஞ்சாயத்து யூனியனை நம்பியிருப்பது மிகவும் வருந்தத்தக்கது. பஞ்சாயத்து யூனியனில் இருப்பதை விட்டு விட்டு, விவசாய வளர்ச்சிக்குத் தனியாக அக்ரிகல்சுரல் டிபார்மெண்ட் செயல்பட்டால் இன்னும் நல்ல முறையில் இருக்கும் என்று சொல்லிக்கொள்கிறேன். பஞ்சாயத்து யூனியனில் இப்போது இருக்கிற அலுவலெல்லாம் அரசாங்கம் எழுப்புகிற கடன்களை வசூலிப்பதாக இருக்கிறதே தவிர, விவசாய விஸ்தரிப்பு அதிகாரி விவசாய வேலையைக் கவனிப்பது கிடையாது. அரசாங்கப் புள்ளி விவரங்களைக் கொடுக்கவும், கடன் வசூல் செய்யவும் நேரம் இருக்கிறதே தவிர, திருந்திய முறையில் விவசாயம் செய்தால் லாபம் கிடைக்கும், இன்னின்ன முறையில் விவசாயம் செய்தால் நல்ல முறையாக இருக்கும், திருந்திய முறையைப் பின்பற்றுங்கள், உங்கள் பயிர்களுக்கு இருக்கிற நோய்களைத் தீர்க்க எப்படி எப்படி மருந்து தெளிக்கவேண்டும், இன்னின்ன பூச்சிகளுக்கு இன்னின்ன மருந்துகள் தெளிக்கவேண்டும் என்று அறிவுரை வழங்கும் சந்தர்ப்பம் மிக மிகக் குறைவாக இருக்கிறது. எனவே அக்ரிகல்சுரல் டிப்பார்ட்மென்ட் பஞ்சாயத்து யூனியனிலிருந்து தனியாக இயங்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அப்போதுதான் விவசாயிகளை நேரடியாக அணுக வசதியாக இருக்கும்.

இப்போது வரவு-செலவுத் திட்டத்திலே குடிதண்ணீருக்கு அதிகமாகப் பணம் ஒதுக்கவில்லை என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன். 5,000 ஜனத்தொகைக்கு மேற்பட்ட இடங்களுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர் வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று கொள்கை வகுத்திருந்தாலும் கூட, முனிசிபல் நகரங்களுக்குக் கூட குடிதண்ணீர் வசதி இல்லாமல் இருக்கின்றது. 5,000-க்கு மேற்பட்ட ஜனத்தொகை இருக்கிற இடங்களுக்குக் குடிதண்ணீர் வசதி செய்ய அரசாங்கம் அதிக அளவில் நடவடிக்கை எடுக்கவேண்டும். சேலம் போன்ற பெரிய முனிசிபாலிட்டி இருக்கும் இடங்களில் கூட தண்ணீர்த் தட்டுப்பாடு இருக்கிறது. பாதாளச் சாக்கடை இல்லை. ஆங்காங்கு சாக்கடை நீர் தேங்கி, கொசுக்கள் உற்பத்தியாகி, சுகாதாரக் குறைவு ஏற்படுகிற காரணத்தினால் நல்ல முறையில் கவனித்து . . . . (மணி அடிக்கப்பட்டது).

* திருமதி பார்வதி அர்ஜுனன் : கனம் சபாநாயகர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற நிதி நிலை அறிக்கையை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் கூற ஆசைப்படுகிறேன்.



5th March 1966] [திருமதி பார்வதி அர்ஜுனன்]

விவசாயத் துறைக்குப் பல கோடி ரூபாய் ஒதுக்கி விவசாயிகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து அவர்களுக்குப் பல வழிகளில் உதவி செய்யும் வகையில் திட்டங்களைக் கொடுத்திருக்கிறார்கள். அந்த முறையில் இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்திருப்பதானது பாராட்டத்தக்கது.

அதே போல, பல துறைக்கும் பல இலட்சக்கணக்கான ரூபாய் ஒதுக்கியிருப்பது அந்தத் துறைகள் எல்லாம் நல்ல முறையில் வளர்ச்சி பெறுவதற்கு ஒரு வாய்ப்பைக் கொடுக்கிறது.

இப்போது நமது வளர்ந்து வரும் சோஷலிச சமுதாயத்திலே நாம் முடிந்த அளவுக்கு ஒவ்வொரு துறையையும் விரிவு படுத்தி, மிகக் குறைந்த ஊதியம் பெறும் ஏழை எளியவர்களுக்கு நல்ல முறையிலே, கடந்த 18-19 ஆண்டுகளாக, அவர்களை வாழ்வில் முன்னேற்றம் அடையச் செய்து வந்திருப்பதைக் கண்கூடாகக் கண்டு வந்திருக்கிறோம். அதை யாரும் மறுக்க முடியாது. அதற்காக அரசாங்கத்தை நாம் பாராட்டியாகவேண்டும். அதே சமயம் நாம் புதிய வேகத்தையும், புதிய ஊக்கத்தையும் கொண்டுள்ளோம். அதனால்தான் நாம் அதிகமாக எதிர்பார்க்கிறோம். இது சகஜமும்கூட.

இந்தச் சந்தர்ப்பத்திலே எனது தொகுதியைப் பற்றி ஒரு சில வார்த்தைகள் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அதாவது, இன்றைய நிலையிலே, இந்த ஆண்டில் அமராவதி, எல்.பி.பி. பழைய நன்செய் நிலச் சாகுபடியானது தண்ணீர்ப் பற்றாக்குறையினாலும், இதர இயற்கை கோளாறினாலும் கெட்டுவிட்டபடியால் இந்த ஆண்டுத் தீர்வையை வஜா செய்ய வேண்டுமாய் எனது தொகுதி மக்களின் சார்பில் சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறேன். நேற்றைய தினம் என் ஜில்லாவைச் சேர்ந்த எனது சகோதரி அவர்கள் அப்பர் பவானி பற்றிப் பேசினார்கள். அவர்களுக்கு அப்பர் பவானியில் எவ்வளவு ஏக்கர் ஒதுக்கியிருக்கிறது என்று தெரிந்து கொள்ள ஆவல் கொண்டார்கள். நான் அதைப்பற்றி மகிழ்ச்சி அடைகிறேன். அதே சமயத்தில் லோயர் பவானி ஆகிய எங்கள் பகுதியில் இதுவரையில் கொடுத்து வந்த அளவுக்குத் தண்ணீர் கொடுத்து வரவேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

அதே போல, எனது தொகுதியிலே மூலனூர் பகுதி மிகவும் வறண்ட பிரதேசமாக இருக்கிறது. அந்தப் பகுதிக்கு அமராவதித் தண்ணீரைக் கொண்டு செல்ல வேண்டுமென்ற திட்டத்தைக் கொடுத்தேன். அதற்கு மிகுந்த பணம் செலவு ஆகிறது, அவ்வளவு பணம் இருக்காது என்று சொன்னார்கள். அதே சமயத்தில் அமராவதித் தண்ணீரைப் புதுக்கோட்டைப் பகுதிக்குக் கொண்டு செல்லப் போவதாகப் பேப்பரில் பார்த்தேன். அது வாஸ்தவமா என்பதைக் கனம் உணவு அமைச்சரிடமிருந்து தெரிந்து கொள்ள விரும்புகிறேன். அது உண்மையானால், மூலனூர் பகுதி பக்கத்தில் இருக்கிறது, அதற்கே அதிகமாகச் செலவு ஆகும் என்று சொன்னார்கள். புதுக்கோட்டை அதைவிடத்

தொலைவில் இருக்கிறது. இது எப்படி சாத்தியம் என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக தாராபுரம் தாலூகாவிலே நல்ல மருத்துவ மனை இல்லாத குறை இருக்கிறது. இருக்கக்கூடிய மருத்துவ மனை மிகவும் சிறியதாக இருக்கிறது. மற்ற தாலூகாக்களில் இருப்பதைப் போல பெரிய அளவில் நல்ல முறையில் ஆஸ்பத்திரியை இந்த ஆண்டாவது எங்கள் தொகுதிக்குக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல ஃபுட் கார்ப்பரேஷன் ஏற்படுத்தி, விவசாயிகள் உற்பத்தி செய்கிற தானியங்களுக்கு நியாயமான விலை எப்போதும் கிடைக்கச் செய்ய வேண்டும். அப்படியே அவர்கள் வாங்கக்கூடிய பொருள்களும் நியாயமான விலையில் அவர்களுக்குக் கிடைக்கச் செய்யவேண்டும். இன்றையதினம் அறுவடை காலங்களில் விவசாயிகள் எல்லோரிடமும் தானியம் இருப்பதால், அவற்றை உடனடியாக விற்று விவசாயிகள் மற்ற பொருள்கள் வாங்கிக்கொள்ளவேண்டியிருப்பதால் வியாபாரிகள் கேட்ட விலைக்குத் தான் கொடுத்துவிடவேண்டியிருக்கிறது. அப்படியின்றி ஃபுட் கார்ப்பரேஷன் ஏற்படுத்தி குறைந்தபட்ச விலை நிர்ணயித்து அந்த விலைக்குக் குறையாமல் விவசாயிகளிடம் இருந்து வாங்கிக்கொண்டால் அவர்கள் இன்னும் ஊக்கமாகக் கூட வேளாண்மைத்துறையில் ஈடுபடுவார்கள். அதுபோல அவர்கள் வாங்கக் கூடிய பிண்ணாக்கு, பருத்திக்கொட்டை, டீசல் ஆயில் இதுபோன்ற பொருள்களை அவர்கள் அதிக விலை கொடுத்து வாங்காமல் சர்க்கார் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு எனக்குப் பேச சந்தர்ப்பம் அளித்த சபாநாயகர் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

*திரு. க. தா. பெருமாள் ராஜு: கனம் சபாநாயகர் அவர்களே, 1966-67-ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையின் மீது பேசுவதற்கு எனக்கு வாய்ப்பு அளித்தமைக்காக நான் எனது நன்றியைத் தெரிவித்துக்கொண்டு சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். இந்த பட்ஜெட்டில் புது வரிகள் ஒன்றும் இல்லை, அதற்கு மிகவும் நன்றி. அதுபோக உபரியாக 30 லட்சமும் காட்டியிருக்கிறார்கள். இது மிகவும் வரவேற்கத்தக்கது.

மேலும் கோவை ஜில்லாவில் பவானி வாய்க்கால் பகுதி--இந்த வருஷம் மழையின்மை காரணமாக டாமில் தண்ணீர் வராது வறட்சியுற்ற நிலையை அடைந்துவிட்டது. அதுபோக எல்.பி.பி. ஆயக்கட்டுக்கள் அதுபோன்ற நிலைமைதான். இதுபோன்ற காரணங்களினால் அந்தப் பகுதியில் மகசூல் குறைந்துவிட்டது. ஏக்கருக்கு 12 மூட்டை கூட விளையவில்லை. மேலும் கொடிவேரி அணையில் பாசன வசதி பெறும் அந்த வாய்க்கால்கள் அடிக்கடி ரிப்பேர் செய்யப்படாத காரணத்தினால் அடியோடு பாசனம் கெட்டுவிட்டது. ஆகவே ப்ரொக்யூர்மெண்டிலே உள்ள அதிக மூட்டை அளவைக் குறைக்கவேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.





மேலும் இந்த பட்ஜெட்டிலே சிறுபாசனத் திட்டம், தூர் அகற்றுதல், புதுக்கிணறுகள் வெட்டுதல், துளைக் கிணறுகள் எடுத்தல், ஆகியவை பற்றி பட்ஜெட் உரையில் நல்ல முறையில் சொல்லியிருக்கிறார்கள். இதுபோன்ற திட்டங்களைப் பாசன வசதி அற்ற பிரதேசங்களில் விஸ்தரிப்பு செய்தால் நன்றாக இருக்கும். மக்கள் சுபிட்சமாக வாழ முடியும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இவ்வாண்டு அந்தியூர் யூனியனில் இருக்கிற பஞ்சாயத்துப் பிரதேசங்களில் மழையின்மை காரணமாக விளைச்சல் இல்லாமல் போய்விட்டது. அங்கு இருக்கின்ற தாளவாடி பிர்க்கா மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறது. அவற்றுக்கு எல்லாம் லாண்ட் ரெவின்யூ ரெமிஷன் கொடுக்கவேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். தாளவாடி பிர்க்கா யூனியன் சேர்மன் அவர்களே மிகவும் வேதனைப்படும் அளவுக்குச் சொன்னார்கள். அங்கே எந்தவிதமான அபிவிருத்தி வேலைகளும் செய்யப்படவில்லை. சட்டசபைக்கு முன், "இப்படியே போய்க் கொண்டிருந்தால் உண்ணாவிரதம் இருக்கப் போகிறேன்" என்றார்கள். ஆகவே உடனடியாக அந்தப் பகுதியில் அபிவிருத்தி வேலைகளை மேற்கொள்ளவேண்டும் என்பதாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் பொள்ளாச்சி, சிதம்பரம், ஆம்பூர், தாம்பரம் ஆகிய இடங்களில் சுகாதார விஷயத்திலே கட்டடம் கட்டப்போவதாக பட்ஜெட் உரையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். பவானியைப் பற்றி ஒன்றும் சொல்லவில்லை. வெகுகாலமாக நிலம் வாங்கப்பட்டு கட்டடம் கட்டாமல் அப்படியே விடப்பட்டு இருக்கிறது. ஆகவே அந்த இடத்திலும் கட்டடம் கட்ட ஏற்பாடு செய்யவேண்டும் என்பதாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களை எடுத்துக் கொண்டால் அந்தியூர் பிர்க்காவில் வரப்பள்ளம், காக்காமனூர் பள்ளம், சாத்தனூர் பள்ளம் ஆகியவற்றின் குறுக்கே அணை கட்டினால் வேம்பத்தி ஏரி, பிரமதேசம் ஏரி, அந்தியூர் ஏரி போன்ற ஏரிகளில் தண்ணீர் தேங்கி அந்தப் பள்ளங்களின் மூலம் பாசன வசதி செய்தால் நன்றாக இருக்கும் . . . .

திரு. க. ர. நல்லசிவம்: மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, இந்த வரவு செலவுத் திட்டத்திலே வரி போடப்பட்டு இருக்கிறதா, போடப்படவில்லையா என்பதை நான் இரண்டாம் பட்சமாகத் தான் கருதுகிறேன். ஆனால், இந்த வரவுசெலவுத் திட்டமானது விலைவாசியைக் கட்டுப்படுத்துவதற்கு, குறைப்பதற்கு எந்த அளவுக்கு உதவி செய்கிறது என்பதைப் பார்க்கும்போது நாம் ஏமாற்றம் அடைவதைத் தவிர வேறு ஒன்றும் இல்லை. விலைகள் கண் தலை தெரியாமல் உயர்ந்து கொண்டே போகின்றன. மாதச் சம்பளக்காரர்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். விலைவாசிகளைக் குறைக்கவேண்டுமென்று சொன்னால், பணவீக்கத்தைக் குறைக்க வேண்டுமென்று சொன்னால் நிச்சயமாக நாம் உற்பத்தியைப் பெருக்கியாக வேண்டும். உற்பத்தியைப் பெருக்கவேண்டு

[திரு. க. ர. நல்லசிவம்] [5th March 1966

மென்று சொன்னால் இரண்டு மூன்று ஆயில் என்ஜின்களைக் கொடுத்தோம் என்றோ, கிணறுகளை எடுத்தோம் என்றோ, டிராக்டர்களை அளித்தோம் என்றோ சொல்லிக்கொண்டிருந்தால் மட்டும் முடியாது. உணவு உற்பத்தியைப் பெருக்க அடிப்படையான காரியத்தைச் செய்தாக வேண்டும். அதுதான் நிலச் சீர்திருத்தச் சட்டம். இன்றைக்கு நிலச் சீர்திருத்தச் சட்டத்தை நாம் துண்டு துண்டாகச் செய்திருப்பது போதுமானதாக இல்லை. பெரிய அளவில் நம்முடைய லட்சியத்தை நிரந்தரமாக ஏற்படுத்தப் பயன் படவில்லை. உண்மையிலேயே அதற்குச் செய்யவேண்டிய காரியங்கள் என்ன? நிலச் சீர்த்திருத்தச் சட்டத்தைப் பற்றி மத்திய உணவு அமைச்சர் அவர்கள் சென்னையிலே தென்னிந்திய வர்த்தக சபைக் கூட்டத்தில் குறிப்பிடும்போது ஒரு நல்ல அம்சத்தைக் குறிப்பிட்டுள்ளார்கள். அது பற்றிய பத்திரிகைக் குறிப்பை வாசிக்க விரும்புறேன்.

> "இதர நாடுகளில் கடைப்பிடிக்கப்பட்டுப் பலனளித்துள்ள விஞ்ஞான வழிகளை ஆதாரமாகக் கொண்டே தாம் நம்பிக்கை தெரிவிப்பதாகக் கூறிய உணவு மந்திரி—விஞ்ஞான வழிகளைக் கடைபிடித்து ஜப்பானிலும் தாய்வானிலும் சிறு பண்ணைகளில் அதிக உற்பத்தி செய்திருப்பதைச் சுட்டிக்காட்டினார்.".

இது நம் நாட்டில் விரிவான நல்லதொரு நிலச்சீர்திருத்தச் சட்டத்தைக் கொண்டுவருவதன் மூலமாகத்தான் சாத்தியமாகும். உச்ச வரம்பு 30 ஸ்டாண்டர்ட் ஏக்கர் அல்ல, ஜப்பானில் உள்ளதுபோல 10 ஸ்டாண்டர்ட் ஏக்கருக்குமேல் கிடையாது என்று வைக்க வேண்டும்.

அடுத்தபடியாக, உணவுப் பொருட்கள் விநியோகத்தைப் பொறுத்தும் வரவு செலவுத் திட்ட அறிக்கையிலே குறிப்பிடப் பட்டிருக்கிறது. எங்கே அதிகமாக ஜனங்கள் குடியிருக்கிறார்களோ அங்கே குடும்பக் கார்டுகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இப்பொழுது ஏற்பட்டிருக்கும் பஞ்ச நிலையைக் கருத்திற்கொண்டு, கிராமங்களிலும், சாத்தியப்படக்கூடிய அளவில், நியாய விலைக் கடைகளைத் திறக்க வேண்டும். ரெவின்யூ அமைச்சரைக் கேட்டால், கலெக்டரைக் கேட்கும்படியும், கலெக்டரைக் கேட்டால் அவருக்குக் கீழுள்ள அதிகாரியைக் கேட்கும்படியும் சொல்லப் படுகிறது. பிரச்னையைத் தட்டிக்கழிக்கும் முறை இருக்கிறது. உணவுப் பொருள் விநியோக முறை மிகவும் மோசமான நிலையில் இருக்கிறது. உணவுக் கிளர்ச்சியை ஏற்படுத்தக்கூடிய நிலையிலே செய்யக்கூடாது. பக்கத்து ராஜ்யத்தில் என்ன நடந்து கொண்டிருக்கிறது என்பதை நாம் பார்க்க வேண்டும்.

கொள்முதலைப் பொறுத்த வரையில், 50 சென்ட் நிலக்காரர்களிடமிருந்து வசூலிக்கப்படுகிறது. அவர்கள் ஏதோ பத்து மூட்டை உற்பத்தி செய்வார்கள். அது குடும்பத்திற்குத்தான் போதுமானதாக இருக்கும். அவர்களிடம் ஏதோ மிச்சம் இருப்ப



5th March 1966] [திரு. க. ர. நல்லசிவம்]

தாக நினைத்துக்கொண்டு அதைக் கொடுத்துவிடவேண்டும் என்று சொல்லப்படுகிறது. ஆனால், இந்த ஐம்பது சென்ட் நிலம் வைத்திருப்பவர்களிடமிருந்து இந்த அளவு கஷ்டப்படுத்தி வசூலிக்கப்படுகிறது என்றால், அந்த அளவு ஐந்து ஏக்கர் நிலத்திற்கு மேல் வைத்திருப்பவர்களிடமிருந்து வசூல் செய்ய முடிவதில்லை. பஞ்சாயத்துத் தலைவராகவோ, சட்டமன்ற உறுப்பினர்களாகவோ, மற்றும் செல்வாக்குள்ளவர்களாகவோ, இருப்பார்கள். இப்படி ஏதோ பல காரணங்கள் இருக்கும். கிராமங்களிலே செல்வாக்கும் வசதியும் உள்ளவர்களாக இருப்பவர்களிடம் அதிகாரிகள் ஒன்றும் செய்ய முடியாது. கொள்முதல் என்று சொன்னால், யார் அதிக நிலம் வைத்திருக்கிறார்களோ அவர்களிடமிருந்து கொள்முதல் செய்ய முதலில் ஏற்பாடு செய்யவேண்டும். கடைசியாகத்தான் ஒரு ஏக்கர், இரண்டு ஏக்கர், மூன்று ஏக்கர் வைத்திருப்பவர்களிடம் போகக்கூடிய மாதிரி அதிகாரிகளுக்கு உத்தரவு இடவேண்டுமே தவிர, முதலில் சிறிய விவசாயிகளை நசுக்கிக் கசக்கிப் பிழிந்து தானியங்களை எடுத்துவிட்டு, நிலச்சுவாந்தார்களுக்குச் சலுகை செய்து கொடுக்கப்படுகிற நிலை மாற வேண்டும்.

எங்கெல்லாம் தண்ணீர் பாயாமல், விவசாயம் கெட்டிருக்கிறதோ அங்கெல்லாம் வரி வஜா செய்யவேண்டும் என்று கனம் அமைச்சர் அவர்களை நான் மிகவும் மன்றாடிக் கேட்டுக் கொள்ளுகிறேன். ஓரளவு நன்றாக வாழ்ந்தவர்கள்கூட, கையில் காசில்லாமல் திண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். நிலைமை நேரில் போய்ப் பார்த்தால்தான் தெரியும். இதை நல்ல முறையில் பரிசிலனை செய்து மழை இல்லாத பிரதேசங்கள், தண்ணீர் பாய வேண்டிய பிரதேசங்களில் பாயாத பிரதேசங்கள் இவற்றைக் கணக்கில் எடுத்துக்கொண்டு உடனடியாக வரி வஜா செய்ய வேண்டும். நான்கு தடவைகளில் வசூலிக்கக்கூடிய வரியை ஒரே தடவையில் வசூல் செய்யக்கூடிய துர்ப்பாக்கியமான நிலைமை ஏற்பட்டிருக்கிறது, இந்தப் பஞ்ச காலத்தில், இதையும் கருத்தில் கொள்ளவேண்டும்.

சோஷலிசம் என்ற பெயரில், 19 ஆண்டுகளாக நம்முடைய சர்க்கார் எடுத்துக்கொண்டிருக்கும் முயற்சிகள் எல்லாம் வெறும் காகித சோஷலிசமாக இருக்கிறதே தவிர, நாட்டிலுள்ள ஏற்றத் தாழ்வை ஒழிக்கக்கூடியவைகளை இதுவரை செய்யவில்லை. ஏதோ செய்ததாகச் சொல்லப்படுகிறது. இருந்தாலும், எல்லாத் துறைகளிலும் பெரிய மாறுதல் ஒன்றும் வரவில்லை. ஒரு மாறுதலை உண்டுபண்ண ஆட்சியாளர்களுடைய மனம் திறக்க வேண்டும். முக்கியமாக, ஒன்றைப்பற்றி சபையினுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். மொழியின் பெயரால் உணர்ச்சியை உண்டுபண்ணுவது மிகவும் சுலபமான காரியம். தினப் பத்திரிகைகளை வைத்துக்கொண்டு பார்த்தால், ஒரு பக்கத்திலே மிஸோ கலகம்; மற்றொரு பக்கத்தில், நாகாலாந்து பிரச்னை; இன்னொரு பக்கத்தில் பஞ்சாபி சுபா பற்றிய செய்தி; இப்படிப்பட்ட

நிகழ்ச்சிகளைத்தான் நாடு பூராவும் நடப்பதாகப் பத்திரிகையிலிருந்து பார்க்கிறோம். இதைப் பார்க்கும்போது, இந்த நாட்டை நாம் எப்படிக் காப்பாற்றப் போகிறோம் என்று உண்மையிலேயே தேச பக்தி வாய்ந்த ஒவ்வொருவரும் எண்ணிப் பார்க்க வேண்டியதாக இருக்கிறது. மொழி உணர்ச்சியைப் பொறுத்த வரையில், மொழிப் பிரச்னையை யாரோ தூண்டிவிடுகிறார்கள் என்று சொன்னாலும் அறிவாளிகள் தான் தூண்டிவிடுகிறார்கள். நான் தயவு செய்து கேட்டுக்கொள்ளுகிறேன்—மொழிப் பிரச்னையில் மிகவும் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். மொழி உணர்ச்சி வேண்டியது தான். மொழி உணர்ச்சி தேவைதான். மொழி உணர்ச்சிக்குக் கொஞ்சம் தூண்டுகோல் கொடுத்தாலுங்கூட, பெரிய அளவில் அது பரவுகிறது என்பதைக் கடந்த ஆண்டு தமிழ்நாட்டில் நடந்த சம்பவங்கள் நிரூபிக்கின்றன. ஆகையால், மொழி உணர்ச்சியை நாம் அதிகப்படுத்தக் கூடாது. அதற்கான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். மற்றொரு பக்கம்—மொழி உணர்ச்சியின் பெயரால் கடந்த ஆண்டு இந்த ராஜ்யத்தில் நாமெல்லாரும் விரும்பத்தகாத அளவிற்கு பெரிய போலீஸ்காரர்கள் கூட அடித்துக் கொல்லப் பட்டார்கள். சர்க்கார் சொத்து நாசமாயிற்று. பொதுமக்கள் தொல்லைக்குள்ளானார்கள். மற்றொரு தரப்பில், பொது மக்களும் அவதிப்பட்டார்கள். துப்பாக்கிச் சூட்டுக்கும் ஆளானார்கள். அதற்குப் பின்னால் இந்த தேசத்திலே ஒரு பெரிய தேசீய எழுச்சி உண்டாயிற்று. பெரியதொரு தேசிய எழுச்சியின் காரணமாக, அந்நியனை எதிர்த்துப் போராடவேண்டும் என்ற ஒரு முகமான கருத்து, தேசம் பூராவும், கன்யாகுமரியிலிருந்து காஷ்மீரம் வரையில், உண்டாயிற்று, அத்தகைய பேரெழுச்சியில் மக்கள் பங்கு கொண்டார்கள். தமிழக அரசாங்கத்தை நான் மிக மிகப் பணிவோடு ஒன்று வேண்டிக் கேட்டுக் கொள்ளுகிறேன். ஒரு பக்கத்தில் மொழி உணர்ச்சியைத் தூண்டக்கூடாது என்றாலும், மற்றொரு புறம் சர்க்காரும் அந்த உணர்ச்சியை வளர்க்காத முறையில், நடந்து போன நிகழ்ச்சியை மறந்துவிடவேண்டும்—யார் மீது குற்றம் இருந்தாலும், பாவாயில்லை. சர்க்கார்த் தரப்பிலும் குற்றம் இருக்கிறது, கிளர்ச்சி செய்தவர்கள் தரப்பிலும் குற்றம் இருக்கிறது என்று ஒப்புக் கொள்கிறேன். ஆனாலும் கூட, தேசீய எழுச்சி ஏற்பட்டதன் காரணமாக, ஜனங்கள் மனத்தில் இருந்த பல்வேறு உணர்ச்சிகளும் மறைந்து இருக்கும் இந்த நேரத்தில், ஹிந்தி எதிர்ப்புக் கலவர வழக்குகளையெல்லாம் மாநில சர்க்கார் தயவு செய்து வாபஸ் பெற்றுக்கொள்ளவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன். ஆயிரம் ஆயிரம் பேர்கள் இதிலே சிக்கிக்கொண்டிருக்கிறார்கள். குற்றவாளிகளா இல்லையா என்ற பிரச்னைக்கே நான் போக விரும்பவில்லை. வழக்குகளை வாபஸ் வாங்கவேண்டும் இந்த சர்க்கார். அடுத்த வருஷம் தேர்தல் வர இருக்கிறது. தேர்தல் நேரத்தில் மொழி உணர்ச்சியைக் கிளப்பிவிடக்கூடிய சூழ்நிலை இல்லாமல் இருக்கவேண்டுமென்றால் இத்தகைய ஒரு சூழ்நிலையை உண்டாக்க வேண்டும். குறிப்பிட்ட கட்சிக்காரர்கள் தான் மாட்டிக்கொண்டிருக்கிறார்கள் என்று சொல்ல முடியாது. பொது





மக்களிலே கூடப் பலர் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். வேறு ஜில்லாக்களை விட என் ஜில்லா தான் மிகவும் பாதிக்கப்பட்ட ஜில்லாவாகும். ஆகவே, அரசாங்கம் இதையெல்லாம் கருத்திலே கொண்டு, ஹிந்தி எதிர்ப்புக் கலவர வழக்குகளை உடனடியாக வாபஸ் வாங்கவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன். அதன் பெயரால் பத்திரிகை மீது போடப்பட்ட வழக்குகளைக் கூட வாபஸ் வாங்கவேண்டுமென்று கேட்டு என்னுடைய உரையை முடிக்கின்றேன்.

*திரு. மீ. கலியாணசுந்தரம் :* கனம் சபாநாயகர் அவர்களே, இந்த சட்டசபைக் காலத்தின் (டெர்ம்) கடைசி வருஷமாகிய 1966-67-ம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையை கனம் முதல் அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ளார்கள். அவர்கள் இந்த நீண்ட பிரசங்கத்தைக் கிட்டத்தட்ட இரண்டு மணி நேரத்திற்கு—அவர்கள் உடல் நலம் நலிந்திருந்தும் கூட—நின்றுகொண்டே வாசித்து அவர்கள் இந்தச் சபையை உற்சாகப்படுத்தியது அவர்களுடைய மனோபலத்திற்கு எடுத்துக்காட்டு ஆகும். ஆனால், அதே சமயத்தில், அவர்கள் தயாரித்துள்ள இந்த பட்ஜெட்டிலே அவர்களுக்கிருக்கும் நம்பிக்கைக்கும் அது எடுத்துக்காட்டு என்று நான் நினைக்கிறேன். ஆனால், 'பட்ஜெட்' என்பது ஏதோ ஒரு லிமிடெட் கம்பெனியினுடைய வரவு செலவுக் கணக்கு போன்றதல்ல; லாப நஷ்டக் கணக்கு போன்றதல்ல. எவ்வளவு வருமானம் வந்தது, எவ்வளவு செலவு செய்யப்பட்டது, மிச்சம் எவ்வளவு, உபரி பட்ஜெட்டா, அல்லது துண்டு விழும் பட்ஜெட்டா என்று இப்படிக் கணக்குப் பார்த்து பட்ஜெட்டைப் பற்றி அபிப்பிராயம் கூறுவதென்பது பழைய காலத்து நிபுணர்களுடைய கருத்தாக இருக்கலாம். இப்பொழுது பட்ஜெட் என்பது என்ன? மத்திய சர்க்காருடைய நிதி அமைச்சராக இருக்கட்டும். ராஜ்ய சர்க்காருடைய நிதியமைச்சராக இருக்கட்டும். ராஜ்ய சர்க்காருடைய நிதி அமைச்சரைக்கூட ஊக்குவிக்கக்கூடிய அல்லது ஆட்டி வைக்கக்கூடிய கயிறு எங்கேயிருக்கிறது என்றால் மத்திய சர்க்காரினுடைய நிதி அமைச்சரிடத்திலேதான் இருக்கிறது. அவர் ஆட்டிவைத்தபடி ராஜ்யங்களும் ஆடவேண்டும். அவர் ஆட்டிவைத்தபடி மத்திய அரசாங்கத்தினுடைய இலாக்காக்களும் ஆடவேண்டியிருக்கும். மத்திய சர்க்காருடைய நிதி அமைச்சரும் நிதி இலாக்காவும் இந்த நாட்டு மக்களுடைய ஓராண்டு வாழ்க்கையை உருவாக்க அல்லது பாழாக்க முடியும். பழைய காலத்தில் பட்ஜெட் என்றால், போலீசுக்கும், கோர்ட்டுக்கும் எவ்வளவு செலவாயிற்று என்ற கணக்கைப் பார்ப்பதாக இருக்கும். இப்பொழுது மத்திய நிதி அமைச்சர் பட்ஜெட்டைச் சமர்ப்பித்தார் என்றால், யார் யாருடைய பையிலே எவ்வளவு கை வைத்திருக்கிறது என்பதை நாம் பார்க்க முடிகிறது. ஓரடி பிரம்பால் அடித்தவுடனே எல்லோருடைய முதுகிலும் விழுந்த மாதிரி. டெல்லியிலே ஐந்து மணிக்கு பட்ஜெட் சமர்ப்பித்தார் என்றால், தேசம் பூராவும் எல்லோருடைய பையிலும் கை விழுந்து விடுகிறது. அம்மாதிரி, வரியை உயர்த்தக்கூடியதாக இருக்கிறது.

ஆகவே, பட்ஜெட்டினுடைய லாப நஷ்டக் கணக்கைப் பார்ப்பதை விட, மக்களுக்கு அடுத்த ஓராண்டுக்கு மூன்று வேளையும் உண்பதற்கு உணவு, உடுப்பதற்கு உடை, குடியிருப்பதற்கு வீடு இந்த வசதிகள் எந்த அளவுக்குப் பெருகும், வைத்திய வசதிகள் எந்த அளவுக்குப் பெருகும், மற்ற போக்குவரத்து வசதிகள் எந்த அளவுக்குப் பெருகும், என்ன என்ன சலுகைகள் சாதாரண மக்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்று தான் பார்க்க வேண்டும். அப்படிப் பார்த்துத்தான் பட்ஜெட்டிலே நன்மை என்ன, தீமை என்ன என்பதை அறிய முடியுமே தவிர, வெறும் உபரியா, குறைவா என்பதைப்பற்றி அறிய முடியாது. உபரி பட்ஜெட் தயாரிப்பது என்பது பெரிய கெட்டிக்காரத்தனம் அல்ல. நிதி இலாக்காக் காரியதரிசியிடம் சொன்னால், அவர்கள் சரியாக, திறமையாகத் தயாரித்துக் கொடுத்துவிடுவார்கள் என்பதை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். இந்த பட்ஜெட்டிலே வரியினுடைய பளு இருக்கிறதா இல்லையா என்பதுதான் கேள்வி. கனம் முதல் அமைச்சர் அவர்கள் இந்தப் பிரசங்கத்திலே குறிப்
9-30 a.m. பிட்டிருக்கிறாரா இல்லையா என்பதைப் பற்றிப் பிரச்னை அல்ல. போனவருஷம் திட்டம் போட்ட சமயத்தில் 76 கோடிக்கு ராஜ்ய சர்க்காருடைய வரி வருமானம் இருக்கும் என்று மதிப்பிட்டார்கள், ஆனால், வருஷ இறுதியில் புதிய வரிகள் கொண்டு வந்ததின் மூலம் 81 கோடி ரூபாய்க்கு அதிகமாக வரி வருமானம் இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இப்பொழுது 1966-67-ம் ஆண்டுக்கு ராஜ்ய சர்க்காருக்கு 92 கோடி ரூபாய் வருமானம் கிடைக்கும் என்று எதிர்பார்க்கிறார்கள். 92 கோடி ரூபாய் கிடைக்குமென்று சொன்னால் இது போன வருஷ மதிப்பை விட 16 கோடி ரூபாய் அதிகமாக இருக்கும். 12 மாதத்திற்குள் 16 கோடி ரூபாய் அதிகமாக எதிர்பார்க்கப்படுகிறது. நிதி இலாகா காரியதரிசிகள் எப்பொழுதுமே வருமானத்தைக் குறைத்துத்தான் காட்டுவார்கள். நிதி இலாகா காரியதரிசியாக இருக்கக்கூடியவர்களுக்கு இருக்கவேண்டிய திறமை என்னவென்றால் வருமானத்தைக் கொஞ்சம் குறைத்துக் காட்டவேண்டுமென்பதுதான். பிறகு டிமாண்டு அதிகமாகப் போனாலும் போய் விடும், அப்பொழுது சப்ளிமெண்டரி டிமாண்ட்ஸ் போட்டுக் கொள்ளலாம். ஆக்வே, அவர்கள் எதிர்பார்ப்பதைவிடக் குறைவாகத்தான் காண்பிப்பார்கள். இந்த வருஷம் 92 கோடி ரூபாய் வரும் என்று போட்டிருந்தாலும்கூட இன்னும் அதிகமாகத்தான் அது வரும். இது ராஜ்ய சர்க்காருடைய பட்ஜெட்டினுடைய நிலைமை. இனி மத்திய சர்க்காருடைய நிதியிலிருந்து நமக்குக் கிடைக்கக்கூடிய பங்கில் அபிவிருத்தி என்ன ஏற்பட்டிருக்கிறது என்பதைப் பார்க்கவேண்டும். நாலாவது நிதிக் கமிஷன் சிபாரிசு ராஜ்யங்களுக்கு நிதி வசதி கொடுப்பதை அதிகப்படுத்தவேண்டும் என்பதற்கு சாதகமாகத்தான் இருக்கிறது. மத்திய அரசாங்கத்திலிருந்து ராஜ்யங்களுக்குக் கிடைக்கக்கூடிய பங்குகளில் முக்கியமானது வருமான வரியும் ஒன்று. வருமான வரியிலே நான்காவது நிதிக் கமிஷனின் சிபாரிசுக்குப் பிறகும்கூட கிடைக்கக்கூடியது





1966-67-ஆம் ஆண்டு 10 கோடியே 88 லட்சம் என்று எதிர்பார்க்கிறார்கள். 1965-66-ஆம் ஆண்டுக்கு 10 கோடியே ஒரு லட்சம் தான் நிதி கிடைத்து இருக்கிறது என்றால் மத்திய அரசாங்கத்திடமிருந்து நமக்குக் கிடைக்கின்றன பங்கில் என்ன அபிவிருத்தி ஏற்பட்டிருக்கிறது என்பதைப் பார்க்கவேண்டும். அதேபோல் 1964-65-ஆம் ஆண்டுக்கு 10 கோடியே 5 லட்சம் கிடைத்திருக்கிறது. முதலில் கிடைத்ததற்கும் இப்பொழுது எதிர்பார்ப்பதற்கும் என்ன வித்தியாசமாக இருக்கிறது, எவ்வளவு நிதானமாகப் போகிறது என்பதை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தேசத்திலே பொருளாதார வேகம் வெகுவாக இருக்கிறது, அதை ஏன் வருமான வரி பிரதிபலிக்கக்கூடிய வகையில் காட்டவில்லை, ஏன் ஒரே மாதிரியாகக் காட்டப்படுகிறது? 1964-65-ஆம் ஆண்டு 10 கோடியே 5 லட்சமாக இருந்து 1965-66-ஆம் ஆண்டு 10 கோடியே 1 லட்சமாகக் குறைந்து இப்பொழுது இந்த ஆண்டு 10 கோடியே 88 லட்சமாக இருக்கப்போகிறது என்று சொன்னால் இதுதானா அதிகமாகக் கிடைக்கக்கூடியது? இதில் என் போன்றவர்களுக்கு என்ன சந்தேகம் வருகிறது என்றால், போடப்பட்ட வரி கறார் ஆக வசூலிக்கப்படவில்லை. போடப்பட்ட வரியைக் கறாராக வசூல் பண்ணமுடியாமல் இன்னும் புதிய வரிகளைப் போடவேண்டியதன் அவசியம் என்ன? பொருளாதார நிபுணர்கள் இதைப்பற்றி என்ன சொல்லுகிறார்கள் என்றால், ஏற்கனவே போடப்பட்டிருக்கிற வரியைக் கறாராக வசூல் செய்தால் புது வரிகள் இல்லாமல் செய்து விடமுடியும் என்றுதானே சொல்கிறார்கள். அதிலே மத்திய அரசாங்க நிதியமைச்சர் அவர்களும், ராஜ்ய அரசாங்க நிதி அமைச்சர் அவர்களும் தங்களுடைய திறமையைக் காட்டியிருந்தார்களேயானால் நான் பாராட்டியிருக்கலாம். ஆகவே, இது வரியில்லாத பட்ஜெட் ஆகாது. போட்ட வரியை ஒழுங்காக வசூல் பண்ணவேண்டும். அப்படி வசூல் பண்ணமுடியாததால்தான் இப்பொழுது அவர்கள் சர்க்கரை, பீடி முதலிய சாதாரண மக்கள் உபயோகிக்கக்கூடிய பொருள்கள்மீது அதிக வரியைப் போட்டிருக்கிறார்கள். சர்க்கரை உபயோகிக்கக்கூடியவர்கள் அதிகமாக இருக்கிறார்கள். விரும்பியோ விரும்பாமலோ அதிகமாக வேலை செய்யக்கூடியவர்கள், தத்துவ ஞானிகள் முதற்கொண்டு புகையிலையை உபயோகப்படுத்துகின்றார்கள். ஆகவே, இப்படிப்பட்ட அவசியமான பண்டங்களின்மேல் வரியைப்போட்டு ஜனங்கள் மீது வரிப்பளுவை அதிகமாக்கியிருக்கிறார்களே ஒழிய வரிப்போடவில்லை என்று சொல்வது நியாயமல்ல. இங்கே கொடுக்கப்பட்டிருக்கிற புள்ளிவிவரங்களுக்குள்ளே எல்லாம் நான் நேரம் அதிகமாக இல்லாதநால் போக விரும்பவில்லை. விதித்திருக்கிற வரியை ஏய்க்காமல் வசூல் செய்வதற்கான நடவடிக்கையைக் கடுமையாக எடுக்கவேண்டும். நம்முடைய ராஜ்யத்திலே விற்பனை வரி நிலைத்துப்போன வரி. அமைச்சர் அவர்கள் 3 சத விகிதம் ஆக உயர்த்தியிருக்கிறார்கள். (குறுக்கீடு.) 2 சதவிகிதத்திலிருந்து 2½ சதவிகிதமாக உயர்த்தியிருக்கிறார்கள், 2½ சதவிகிதமாக இருந்தாலும், ரூபாய்க்கு 2½ காசு என்று வரும்பொழுது 3 காசு

தான் வசூல் செய்வார்கள். அதற்காகத்தான் நான் 3 சதவிகிதம் என்று சொன்னேன். இருந்தாலும் நான் அதைத் திருத்திக் கொள்கிறேன். இதைத்தவிர சென்ட்ரல் சேல்ஸ் டாக்ஸ், விற்பனை வரியையும் அதிகப்படுத்தியிருக்கிறார்கள். இவையும் மக்கள் மீது விழக்கூடிய வரிகள்தான். வரிகளைப் போட்டு அவைகளை ஏய்க்காமல் இருக்கிறார்களா என்பதையும் பார்க்கவேண்டும். கடந்த இரண்டு வருஷங்களாக பரபரப்பு ஏற்பட்டது, சோதனைகள் கடுமையாக இருந்தன. ஆனால் இப்பொழுது சோதனைகள் எல்லாம் கிடையாது, கடுமையாக நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று சொல்லக்கூடிய சட்டமும் வாபஸ் பெறப்பட்டுவிட்டது. அதற்குப் பதிலாக இப்பொழுது ½ சதவிகிதம் உயர்த்தி 5, 6 கோடி ரூபாய் அதிகமாக வரும் என்று சொல்லுகிறார்கள். ஆனால் வருமான வரி வசூல் செய்வது அதே டெம்போவில்தான் இருக்கப் போகிறது, வசூல் செய்யாமல் வரி உயர்வும் அதே டெம்போவில் தான் செல்லப்போகிறது. ஆகவே வரியை ஏய்க்கிறவர்களிடமிருந்து கடுமையாக அல்ல, கறாராக வசூல் செய்யவேண்டும். வசூல் செய்யப்படுவது அரசாங்கத்தினுடைய கஜானாவில் செலுத்தப்படுவதற்கு முறை செய்யவேண்டும். அப்படிச் செய்யாவிட்டால் நம்முடைய நாட்டில் வியாபாரமே அக்கிரமத்தின் அடிப்படையில்தான் நடப்பதாகிவிடும். எவ்வளவு உற்பத்தி பெருகியிருக்கிறது என்று சொல்லப்படுகிறது, அந்தப் பெருக்கத்தினுடைய பலன் யாருக்குக் கிடைக்கிறது என்பதைக் கனம் முதலமைச்சர் அவர்கள் சிந்தித்துப் பார்த்து இந்த ஆண்டாவது இதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தேர்தலுக்குப் போவதற்கு முன்பு இப்படிப்பட்ட காரியங்களைச் செய்துவிட்டுப் போனால்தான் அவர்களுக்கு இது சிறப்பாக இருக்கும், கௌரவமாகவும் இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இப்பொழுது எப்படிப் பிரச்சாரம் நடைபெறுகிறது என்பதையும் பார்க்கவேண்டும். இன்று முக்கியமாக உணவுப் பிரச்னை பற்றிப் பேசப்படுகிறது. இந்த 6, 7 மாதங்களில் விலைவாசிகள் உயர்ந்திருக்கின்றன. இதற்கு என்ன, என்ன பதில்கள் சொல்லப்படுகின்றன? மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களிலே விவசாயத்திற்கு அதிகமான கவனம் செலுத்தத் தவறிவிட்டோம். இனிமேல் அதிகமாகக் கவனம் செலுத்தப் போகிறோம். இனிமேல் பாசனத் திட்டங்கள் போடவேண்டும். விரைவுத் திட்டங்கள் போடப் போகிறோம் என்று பிரச்சாரம் செய்கிறார்கள் ஒரு பக்கம். ஆனால், நாட்டிலே பற்றாக்குறை இருக்கிறது, நாடு பெரும் நெருக்கடியை நோக்கி இருக்கிறது, அபாயம் ஏற்பட்டிருக்கிறது என்று மற்றொரு பக்கம் சொல்கிறார்கள். இவையிரண்டையுமே மிகைப்படுத்திச் சொல்கிறார்கள் என்பதுதான் என்னுடைய அபிப்பிராயம். தாங்கள் செய்த சாதனைகளையெல்லாம் மறந்துவிட்டு, நாங்கள் செய்ததாகக்கூடச் சொல்லவில்லை, அவர்கள் செய்த சாதனைகளையெல்லாம் மறந்துவிட்டு, அவர்கள் செய்த காரியங்களிலேயே உள்ள குறைகளைச் சொல்லிக்கொண்டு உண்மையை



மறைக்கச் செய்யக்கூடிய ஒரு பிரச்சாரமோ என்று நான் நினைக்க வேண்டியிருக்கிறது. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலும், மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலும் விவசாயத்திற்கு என்ன செலவு செய்திருக்கிறார்கள். இரண்டாவது திட்டத்திலே 36 கோடியே 98 லட்சம் ரூபாய் செலவு செய்திருக்கிறார்கள். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே 50 கோடியே 63 லட்சம் செலவு செய்திருக்கிறார்கள். இவ்வளவு செலவு செய்தும் ஏதாவது ஒரு காரியம் கூடவா நடக்காமல் இருந்திருக்கப்போகிறது. அவ்வளவு பணத்தையும் பே ஆஃப் பெங்காலிலா கொட்டிவிட்டார்கள்? அல்லது அவ்வளவு காகிதப் பணத்தையும் நெருப்பு வைத்துக் கொளுத்திவிட்டார்களா? முதல் திட்டத்திலே பெரும் தொழில்களுக்குக் கவனம் கொடுக்கவில்லை. நம்முடைய ராஜ்யத்திலே மூன்று திட்டங்களிலும் பாசன வசதிக்காக 100 கோடியே 80 லட்சம் ரூபாய் செலவழிக்கப்பட்டு 14 திட்டங்களை நிறைவேற்றி 4 லட்சம் ஏக்கர் விவசாயம் செய்யப்பட்டு முன்பு 861 பவுண்டாக இருந்தது இப்பொழுது 1,700 பவுண்டாகக் கொண்டுவரப்பட்டிருக்கிறது என்ற அளவுக்கு விளைச்சலை உயர்த்திவிட்டோம் என்று சொல்கிறார்கள். அதே சமயத்தில் விலைவாசி ஏறியிருக்கிறதே என்று சொன்னால் விவசாயத்தில் அதிகக் கவனம் செலுத்தவில்லை. இனிமேல்தான் அதிக கவனம் செலுத்தவேண்டுமென்று சொல்கிறார்கள். பாசன வசதிகள் மட்டுமல்ல, உர வசதி, இன்னும் பம்புசெட்டுகள் ஏற்படுத்துவதற்காக எவ்வளவு அதிகமாகப் பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இவையெல்லாம் இருந்தும் விலைவாசி ஏன் கூடுகிறது என்று கேட்டால் நாங்கள் விவசாயத்திற்குக் கவனம் செலுத்தத் தவறிவிட்டோம். இனிமேல்தான் செலுத்தப் போகிறோம் என்று சொன்னால் இரண்டு திட்டங்களையும் நாங்கள் உங்களிடம் ஒப்படைத்தது வியர்த்தமா என்றுதான் கேட்க வேண்டியிருக்கிறது. மக்கள் கேட்பார்களா கேட்கமாட்டார்களா? ஆனால் உண்மை என்ன? ஏன் இப்படிச் சொல்கிறார்கள்? மின்சாரத்திற்காகச் செலவு செய்திருப்பது நம்முடைய ராஜ்யத்தில் மட்டும் 80 கோடி 25 லட்சம் ரூபாய். அவர்கள் கொடுத்த புள்ளிவிவரந்தான்; மிகைப்படுத்திக் கொடுத்திருக்கமாட்டார்கள். இதிலே வீண் விரயத்திற்கெல்லாம் 10 சதவிகிதம் அல்லது 25 சதவிகிதமே கழித்து விட்டாலும் முக்கால் பங்கு பலன் கிடைத்திருக்கவேண்டும். நம்முடைய நாட்டின் உற்பத்தித் திறன் என்ன? ஸ்டாக் எவ்வளவு இருக்கிறது என்பதைப் பற்றி மத்திய அரசாங்க நிதியமைச்சர் அவர்கள் சமர்ப்பித்த அறிக்கையில் இருந்தே சில விவரங்களைக் கொடுக்க விரும்புகிறேன்.

1959-ல் இருந்து 1965 வரை 'பர் காபிடா அவைலபிலிடி ஆஃப் ஃபுட் கிரெயின்ஸ்' எவ்வளவு என்ற புள்ளி விவரத்தைக் கொடுத்திருக்கிறார்கள். நம்முடைய நாட்டில் இருக்கக் கூடிய ஜனத்தொகை 48 கோடி என்று கணக்கிட்டு அந்தப் புள்ளி விவரத்தைக் கொடுத்திருக்கிறார்கள். உணவு தானியங்கள் பருப்பு வகை அல்லாது பர்காபிடா அவைலபிலிடி 1959-ல் 16.4; 1960-ல் 15.8; 1961-ல் 16.4; 1962-ல் 16.3; 1963-ல் 15.2; 1964-ல் 15.8, 1965-ல் 16.6,

[திரு. மீ. கலியாணசுந்தரம்] [5th March 1966

1965-ல் 'பீக் புரொடக்ஷன்'. அந்த ஆண்டில் 8 கோடி 80 லட்சம் டன் உற்பத்தியாகியிருப்பதாகச் சொன்னார்கள். ஆனால், அந்த ஆண்டுதான் இறக்குமதி அதிகமாகியிருக்கிறது. பருப்பு வகையில் இரண்டு அவுன்சுக்குக் குறையாமல் தலை ஒன்றுக்குக் கொடுக்கும் அளவுக்கு உற்பத்தித் திறன் இருக்கிறது என்று கூறுகிறார்கள். தலைக்கு 18 அவுன்ஸ் கொடுக்கக்கூடிய அளவுக்கு உணவுப் பண்டம் இருக்கிறது என்று சொல்லும்போது அதைக் கொடுக்க என்ன ஏற்பாடு? எவ்வளவு பேர் 18 அவுன்ஸ் வாங்க முடிகிறது? எவ்வளவு பேர் அந்த அளவுக்குச் சாப்பிடுகிறார்கள்? இப்போதே திங்கட்கிழமை இரவு சாப்பிட வேண்டாம். வாரம் ஒரு நாள் பூராவுமே சாப்பிட வேண்டாம். வியாழக் கிழமை அன்று அரிசி, கோதுமை அல்லாத மற்ற தானியப் பண்டங்களைச் சாப்பிட வேண்டுமென்றெல்லாம் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். கனம் முதலமைச்சர் அவர்கள் சொல்லாமலே பலர் இது மாதிரி செய்து கொண்டிருக்கிறார்கள். விளம்பரம் கிடைப்பதில்லை. அரிசிப் பண்டம் முதலமைச்சர் அவர்கள் சாப்பிடவில்லை என்று சொன்னால் அது வெளியே வருகிறது. நானும் அரிசியைத் தவிர்த்து ராகி போன்றவற்றைத்தான் எப்போதும் சாப்பிட்டு வருகிறேன். **(கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** சட்டசபையிலே சொல்லி விட்டதால் இப்போது அது வெளியே வந்துவிடும்.) ஆனால் அதனாலே மிச்சம் ஆகாது. கனம் முதலமைச்சர் அவர்கள் எவ்வளவு சாப்பிடப் போகிறார்கள்? முதலமைச்சர் அவர்கள் சாப்பிட்டுத்தான் பஞ்சம் வந்து விடுகிறதா? கனம் முதலமைச்சர் அவர்கள் சாப்பிடாததினால் மிச்சம் ஏற்பட்டு விலை குறைந்து போகிறது என்றால் அவர்கள் சாப்பாட்டைக் குறைத்துக் கொள்ளலாம். அவர்கள் சாப்பாட்டைக் குறைத்துக் கொள்வதாலே மிச்சம்வந்து விடாது. விலைவாசி ஏறிக்கொண்டே இருப்பதால் ஜனங்கள் உபயோகப்படுத்தக்கூடிய அளவு குறைந்து கொண்டே வருகிறது. படி அரிசி இரண்டு ரூபாய்க்கு விற்கிறது; எண்ணெய் விலை ஏறியிருக்கிறது. மற்றப் பொருள்களின் விலையும் ஏறிக் கொண்டே இருக்கிறது. இந்த நிலையில் உபயோகப்படுத்தக் கூடியவர்களுக்கு நீங்கள் 18 அவுன்ஸ் கொடுத்தால்கூட 100-க்கு 90 பேர் அதை வாங்குவதற்குக் கூடச் சக்தி இல்லாத நிலையிலே இருக்கிறார்கள். உற்பத்தி பெருகினால் விலை குறையும் என்று சொன்னார்கள். ஏன் விலை குறையவில்லை? திட்ட இலக்குப்படி பெருகவில்லை என்று வேண்டுமானால் சொல்லலாம். 70 லட்சம் டன் வேண்டுமென்று போட்டோம்; பருவமழை தவறி விட்டால் அதற்காக 10 லட்சம் மார்ஜின் கொடுத்தோம். நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரை தேவை 56 லட்சம் டன்தான்; கேரளா போன்ற பகுதிகளுக்கு அனுப்புவதற்காக 4 லட்சம் டன். நம்முடைய நாட்டில் 58 லட்சம் டன் உணவு உற்பத்தியாகி இருக்கிறது என்று கவர்னர் உரையில் கூறப்பட்டிருக்கிறது. அவர்கள் சொல்லுகின்ற 18 அவுன்ஸ் வீதப் படி நம்முடைய ராஜ்யத்திற்குத் தேவை 56 லட்சம் டன்தான் இலக்கு 60 லட்சம் டன் என்றால் தாண்டு விழுவது அதிகமல்ல. இந்த நிலையில் நாட்டிலே உணவுப்



5th March 1966] [திரு. மீ. கலியாணசுந்தரம்]

பிரச்சினை ரொம்ப சீரியசாக இருக்கிறது, அபாயமான நிலை இருக்கிறது, விவசாயத் துறையைக் கவனிக்காமல் விட்டு விட்டோம் என்றெல்லாம் சொல்வதற்கு என்ன அர்த்தம்? இப்படிப் படிப் படியாக, திட்டத்திலே நம்பிக்கை இல்லை, கூட்டுறவிலே நம்பிக்கை இல்லை, பஞ்சாயத்து ஆட்சியிலே நம்பிக்கை இல்லை என்று சொல்லி கடைசியிலே ஜனநாயகத்திலேயே நம்பிக்கை இல்லை என்று சொல்லக்கூடிய நிலைமைக்கு நம்முடைய அமைச்சர்கள் வந்து விடுவார்களோ என்ற எண்ணம் ஏற்படுகிறது.

காலையில் ஒரு கேள்விக்கு ருசிகரமான பதிலைக் கனம் உணவு அமைச்சர் அவர்கள் கொடுத்தார்கள். (கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: ருசிகரமான உணவு கொடுத்தார்களா?) ருசிகரமான உணவெல்லாம் 20 வருஷத்திற்கு முன்னால் இருந்தது. இந்தத் தலைமுறையில் ருசிகரமான உணவையெல்லாம் பார்க்க முடியாது. இரண்டாவது உலக யுத்தத்திற்குப் பிறகே ருசியெல்லாம் கெட்டு விட்டது. ருசியான உணவு சாப்பிட்ட காலம் போய்விட்டது. ஐம்பது, ஐம்பத்தைந்து வயது ஆனவர்கள், இரண்டு உலக யுத்தத்தைப் பார்த்தவர்கள் இதை உணர முடியும். கனம் தொழிலமைச்சர் அவர்கள் உள்ளூர சிரிக்கிறார்கள். அந்த உண்மையை அவர்கள் அரசியல் காரணங்களுக்காக மறுத்தாலும் அவர்களுடைய வாழ்க்கையிலேயே அதையெல்லாம் உணருவார்கள். காப்பியை எடுத்துக் கொள்வோம். காப்பி போர்டிலேயே வாங்கினால் கூட பீப்பரி தனியாக எங்கே கிடைக்கிறது? ஸ்டாண்டர்டைஸ்டு பண்ணுகிறோம் என்று கலக்கிறார்கள் ஏற்றுமதி செய்ய வேண்டுமென்பதற்காக இங்கிருப்பதை எல்லாம் ஒரேயடியாக மட்டமாக்க ஆரம்பித்து விடுகிறோம். எதிலும் கலப்படந்தான் இன்றைய நிலை.

கனம் உணவு அமைச்சர் அவர்கள் 5,000 ஏக்கர் உபரி நிலம் இருப்பதாகக் கண்டு பிடித்துச் சொல்கிறார்கள். 1963-ல் சட்டம் இயற்றிஅமலுக்கு வந்த பிறகு, கிட்டத்தட்ட மூன்று வருஷத்திற்குப் பிறகு இவ்வளவு அதிகாரிகளை வைத்துக் கண்டு பிடித்து 5,000 ஏக்கர் உபரியாக இருக்கிறது என்று கூறுகிறார்கள். இந்தச் சட்டம் எதற்காக? இன்று உச்சவரம்பு சட்டத்தின் பெயரால் ஆயிரக்கணக்கான விவசாயிகள் இன்று தஞ்சை ஜில்லாவில் நிலத்திலிருந்து அப்புறப்படுத்தப்படுகிறார்கள். இது என்ன உச்சவரம்பு? உற்பத்தி பெருகவில்லை என்றால் எப்படிப் பெருகும்? இந்தச் சபை நிறைவேற்றிய சட்டம் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்தச் சபையில் காங்கிரஸ் கட்சிக்கு உள்ள மெஜாரிடியை வைத்து நிறைவேற்றிக் கொண்டார்களே தவிர, எதிர்க்கட்சிகள் எல்லாம் 30 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்பதற்கு ஒத்துக் கொள்ளவில்லையே, திரு. சா. கணேசன் அவர்களுடைய கட்சி நீங்கலாக மற்ற எதிர்க்கட்சிகள் எல்லாம் 15 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று குறைக்க வேண்டுமென்றுதானே திருத்தம் கொடுத்தோம். திராவிட முன்னேற்றக் கழகத்தோடு எனக்கு மற்ற விஷயங்களில் அபிப்பிராயபேதங்கள் இருந்தாலும் 15

*[திரு. மீ. கலியாணசுந்தரம்]* [5th March 1966

ஸ்டாண்டர்டு ஏக்கர் என்றுதான் இருக்கவேண்டுமென்பதை அவர்களும் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். ஒருவருக்கு 30 ஸ்டாண்டர்டு ஏக்கர், அவருக்குள்ள நிலத்தைப் பத்துப் பேருக்கு எழுதி வைக்கலாம் என்றெல்லாம் செய்தது யாருடைய சட்டம்? அன்றைக்கே இதையெல்லாம் சுட்டிக் காட்டினோம். அப்போது கனம் ராமையா அவர்கள் கொடுத்த பதில் என்ன? அதெல்லாம் அமைச்சர்கள் தெரியாது செய்கிற காரியமல்ல. அவர்கள் அதிலே நம்பிக்கையோடு செய்கிறார்கள். இந்த பட்ஜெட்தான் சிறந்தது, இந்தச் சட்டந்தான் சிறந்தது என்ற நம்பிக்கையோ செய்வது தான் வருத்தத்தைக் கொடுக்கிறது. ஒரு பரீட்சை பார்த்தோம், லட்சியம் நிறைவேறவில்லை என்று அவர்கள் சொல்வதில்லை. ஆனால் இவர்களுடைய லட்சிய உபரி நிலத்தை விவசாயிகளுக்காகப் பெற்றுக் கொடுப்பதல்ல. நில உச்ச வரம்புச் சட்டத்தைக் கொண்டு வந்தோம், நிலச் சீர்திருத்தத்தைச் செய்தோம் என்று விளம்பரப்படுத்திக் கொள்ளக் கூடிய சட்டமாக இயற்றி விட்டு, அதன் காரணமாக இன்று விவசாயிகள் அந்தச் சட்டத்தின் பலனைப் பெற முடியாமல் உள்ள நிலைமையில் மறுபடியும் இன்னொரு சட்டம் தேவைப்படுகிறது. இன்று விவசாயிகள் நிலத்தை விட்டு வெளியேற்றப் படுகிற நிலைமையில், இந்தச் சட்டசபைக் கூட்டம் முடிவதற்குள்ளாகவே, குடியிருப்பு மனைப் பாதுகாப்புச் சட்டமும், சாகுபடியாளர்கள் நிலத்திலிருந்து வெளியேற்றப்படாமல் இருப்பதற்கு ஒரு பாதுகாப்புச் சட்டமும் கொண்டு வர நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொரு தவறையும் மறைக்கப் பார்க்கிறார்கள். இனாம் சட்டம் நிறைவேற்றப்பட்டது. அது பற்றிப் பல ஜில்லாக்களிலே இருந்து வரக் கூடிய புகார்கள், நூற்றுக்கணக்கான மனுக்கள் ஆகியவற்றையெல்லாம் கனம் முதலமைச்சர் அவர்களிடத்திலே கொடுத்திருக்கிறேன். உணவு அமைச்சர் அவர்களிடத்திலும் கொடுத்திருக்கிறேன். இன்னும் பல இனாம் எஸ்டேட்டுகள் சேர்க்கப்பட வேண்டியதெல்லாம் சேர்க்கப்படவில்லை. நிலத்திலுள்ளவர்களை அப்புறப்படுத்துகிறார்கள். கனம் அமைச்சர் ராமையா அவர்களுடைய புதுக்கோட்டைப் பகுதியிலேயே இன்னும் 400 எஸ்டேட்டுகள் இனாமாகக் கருதப்படவில்லை. அதற்காக விவசாயிகள் கிளர்ச்சி செய்து கொண்டிருக்கிறார்கள்.

ஆனால் என்ன நிர்பந்தச் சூழ்நிலையோ, தெரியவில்லை. அதில் துரிதமாக நடவடிக்கைகள் எடுக்கமுடியவில்லை. அப்படியானால் எப்படி உற்பத்தி பெருகும்? கவனம் செலுத்தத் தவறி விட்டோம் என்று சொல்வது எதற்காக என்றால், இந்த இரண்டு கோளாறுகளையும் மறைத்துக் கொள்ள திட்டத்தின் மேல் பழியைப் போட்டு. உருக்காலைகள் வைப்பது தவறு போலவும், கெமிக்கல்ஸ் உற்பத்திக்காக அதிகம் செலவிடுவது தவறு போலவும் சொல்லி உணவிற்காகவும், விவசாயத்திற்காகவும் அதிக நிதி ஒதுக்காதது திட்ட வேலையையே பாதிக்கும். தெரிந்தோ தெரியாமலோ மத்திய அமைச்சர்களும் நம் அமைச்சர்களும் அப்படிச் செய்கிறார்கள்.



5th March 1966] *[திரு. மீ. கலியாணசுந்தரம்]*

தவறான பாதையில் அவர்கள் செல்கிறார்கள். அது அபாயமான பாதை. அவர்கள் கொடுத்துள்ள புள்ளிவிவரங்களில் இருந்தே எடுத்துக் கூறினேன். சராசரியாக பருப்பு வகைகளையும் சேர்த்து 18 அவுன்ஸாவது நபர் ஒன்றுக்கு சாப்பிடுவதற்கு இருக்கிறது. அவை கிடைக்கவில்லை என்றால் காரணம் விலை ஏற்றமே. பற்றாக் குறை அல்ல அவை கிடைக்காததற்குக் காரணம். பிற நாடுகளில் உண்டியல் எடுத்து வசூல் செய்வதுபோல் இவற்றை வசூல் செய்கிறார்கள். அவ்வளவு கேவலமா நம் விவசாயிகள்? நம் விவசாயிகளுக்கு உற்பத்தியைப் பெருக்கும் சக்தியில்லையா? அவர்கள் என்ன உற்பத்தியைப் பெருக்க சக்தியற்றவர்களா? கஷ்டம் ஏற்பட்டால் அதைப் போக்கலாம். அது வேறு விஷயம். உணவுப் பிரச்னை நம்மால் தீர்த்துக் கொள்ள முடியாத பிரச்னையா? எங்கெங்கிருந்தோ உணவுப் பொருள்கள் இறக்குமதியாவது போல் பத்திரிகைகளில் செய்திகள் வருவதைப் பார்க்கிறோம். ஆனால் மொத்தம் எவ்வளவு வந்து இறங்கியிருக்கிறது என்ற புள்ளிவிவரம் இருக்கிறதா? நம் மெட்ராஸ் ஹார்பரில் கூட அப்படி வந்திறங்கியதாகப் பத்திரிகையில் பார்த்தேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** அது நமக்கு இல்லை. அது நமக்கு தேவை இல்லை.

**திரு. மீ. கலியாணசுந்தரம்:** முதல் அமைச்சர் அவர்களின் நல்மான உணர்வை பாராட்டுகிறேன். அவர்கள், வாங்க மாட்டோம், நம் விவசாயிகள் உற்பத்தி செய்வதைக் கொண்டு நம் தேவையை பூர்த்தி செய்து கொள்வோம் என்று வாக்குறுதி கொடுத்தால் நான் அதற்காக என் நன்றியைத் தெரிவிக்கத் தயாராக இருக்கிறேன்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** அப்படி ஒரு தடவையாவது சொன்னதற்காக நன்றியுடைத்தவர்களாக இருக்கிறோம்.

**திரு. மீ. கலியாணசுந்தரம்:** நம் உற்பத்தி பெருகாமல் இல்லை. ஆனால் விலை ஏறுகிறது, அதற்கு பற்றாக்குறைதான் காரணம் என்று சொன்னால் அது சரியல்ல. பற்றாக்குறை என்றால் எவ்வளவு விலை ஏறினாலும் அரிசி கிடைக்காமல் இருக்கவேண்டும். என் தகவல்படி சென்னையில் 2¼ ரூபாய் கொடுத்தால் ஒரு பக்கா படி நல்ல அரிசி கிடைக்கிறது. மற்ற நகரங்களில்கூட இரண்டு ரூபாய் கொடுத்தால் நல்ல அரிசி கிடைக்கிறது. ஆனால் ரூபாய் கொடுத்தால் அரிசி கிடைக்காமல் கஷ்டம் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. பற்றாக்குறை நிலைமை இருந்தால் எவ்வளவு கொடுத்தாலும் அது கிடைக்காமல் இருக்கவேண்டும். ஓரளவிற்கு நெருக்கடியிருக்கலாம். கஷ்டங்கள் இருக்கலாம். நம் நாட்டின் வளர்ச்சியின் கோளாறினால் பல கஷ்டங்கள் ஏற்படலாம். அதை எப்படித் தீர்ப்பது என்பதில் கவனம் செலுத்தவேண்டுமே தவிர பின்னால் வண்டியைத் திருப்பப் பார்க்கிறார்கள். அதுதான் பிரசாரத்தின் அர்த்தம். விவசாயத்திற்காக திட்டத்தில் அதிக நிதி ஒதுக்க வேண்டும். அவர்களுக்கு வேண்டிய சலுகைகள் கொடுக்க வேண்டும். அவர்களின் உரிமை பாதுகாக்கப்பட வேண்டும்.

நவீன முறைகள் ஆகட்டும் அல்லது கொடுக்கப்படுகிற மற்ற சலுகைகள் ஆகட்டும் பெரிய நிலப்பிரபுக்களுக்குத்தான் அவற்றைப் பயன்படுத்த முடிகிறதே தவிர ஏழைக்குடியானவனுக்கு, சாதாரண விவசாயிகளுக்கு அவற்றைப் பயன்படுத்த முடியவில்லை. ஏழை விவசாயிகளுக்கு இன்று கடன் சுமைதான் அதிகரித்து வருகிறது. ஆகவே, அவர்களுக்கு கடன் சுமையை குறைப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கவேண்டும். சாதாரண விவசாயிகள், ஏழைக் குடியானவர்கள் இவர்கள் நவீன முறைகளைப் பயன்படுத்தக் கூடிய முறையில் அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும். உணவுப் பிரச்னை நம்மால் தீர்க்க முடியாத பிரச்னை அல்ல. இந்த அமைப்பில் கூட ஓரளவிற்கு சமாளிக்கக் கூடிய பிரச்னைதான் இது. அரசாங்கக் கொள்கையில் உள்ள கோளாறு காரணமாக நம் நாட்டின் அந்தஸ்து, நம் நாட்டின் தன்மானம் இவை எல்லாம் பறிபோகும் நிலைக்கு இன்று உணவுப் பிரச்னை வந்திருப்பதற்குக் காரணம் மத்திய அரசாங்க உணவு கொள்கையும், விவசாய அமைச்சர் அவர்களின் கொள்கையும் நம் ராஜ்ய சர்க்கார் விவசாயிகளுக்கு செய்திருக்கக் கூடிய அநீதி இவைகள்தான் காரணம். ஆகவே, விவசாயிகளிடம் பாவ மன்னிப்பு கேட்டுக் கொண்டுதான் 1967 தேர்தலில் அவர்களிடம் போகவேண்டும். கடன் சலுகைகள் கொடுப்பதை இந்த சமயத்தில் நிறுத்தி விடாதீர்கள்.

விவசாயம் செய்கிறவர்களுக்கு அனத அந்த நேரத்தில் க்ராப் லோன் போய்ச் சேருவதில்லை. ஆபீசில் உட்கார்ந்து ப்ரோக்ராம் போட்டு விட்டால் போதாது. வயலில் விளைவதைப் பார்க்க வேண்டும். இவர்கள் போடுகிற ப்ரோக்ராம்படி விளையாது. ஒரு லோன் சாங்க்ஷன் செய்தால் அதை வாங்குவதற்கு நான்கு தடவை பாங்கிற்கு அலைந்து கொண்டிருக்கவேண்டியிருக்கிறது. 500 ரூபாய் வாங்குவதற்கு 50 ரூபாய் செலவு செய்வது என்றால் என்ன அர்த்தம்? ஆக, விவசாயிகளுக்கு கடன் நிவாரணம் அவசியம் வேண்டும். தனிப்பட்டவர்களிடம் கடன் பட்டிருந்தாலும் கூட அதை ஐந்து வருடங்கள் வசூல் செய்யக்கூடாது. அதை ஒத்திப் போடுவதற்கு ஏதாவது சௌகரியம் செய்ய வேண்டும். 1939-ம் ஆண்டு கடன் நிவாரணச் சட்டம் ஒன்று கொண்டுவரப்பட்டது. அம்மாதிரி ஒரு கடன் நிவாரணச் சட்டத்தைக் கொண்டு வந்து 25 ரூபாய்க்கு குறைவாக செலுத்தும் விவசாயிகளுக்கு ஒரு பாதுகாப்பு, சாகுபடி செய்யக் கூடிய விவசாயிகளுக்கும் பாதுகாப்பு அளிக்கவேண்டும். குத்தகை பாக்கி என்ற பெயரால் சிவில் கோர்டிலும், ஆர்.டி.ஓ. கோர்ட்டிலும் கேஸ் போட்டு பலர் வெளியேற்றப்படுகிறார்கள். அப்படியிருந்தால் அவர்களுக்கு என்ன உற்சாகம் இருக்கமுடியும்? குத்தகை பாக்கியை ரத்து செய்ய ஒரு ட்ரிப்யூனல் ஏற்படவேண்டும், அதற்காக சட்டத்தை திருத்தவேண்டும். குத்தகை பாக்கி ரசீது கொடுக்காமலேயே வசூலிக்கப்படுகிறது. நல்லுறவு உள்ளவரையில் பிரச்னை வருவதில்லை. ஆனால் சுதந்திரமாக பேச ஆரம்பித்தால் சிவில் கோர்ட்டில் கேஸ் போடப்பட்டு அவர்கள் வெளியேற்றப்படு





கிறார்கள். குத்தகை பாக்கியைக் குறைப்பதற்கும் ரத்து செய்வதற்கும், கடனை குறைப்பதற்கும் ரத்து செய்வதற்கும் சட்டத்தில் இடம் இருக்கும் வகையில் அமைச்சர் அவர்கள் அவசரமாக ஒரு சட்டத்தைக் கொண்டு வரவேண்டும். அதுதான் உண்மையில் விவசாயிகளுக்கு ஊக்கம் அளிக்கக்கூடிய சட்டமாக இருக்கும்.

கனம் முதல் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்த பட்ஜெட்டில் இன்னும் பல பிரச்னைகளைப் பற்றிச் சொல்வதற்கு நேரம் இல்லை. இதில் நல்ல அம்சங்கள் இல்லை என்று நாங்கள் சொல்லவில்லை. குறைகளைத்தான் நாங்கள் சொல்லவேண்டும். குறைகளை எடுத்துக்காட்டுவதற்காகத்தான் நாங்கள் இருப்பது. கல்விக்காக 45 கோடி ரூபாய் செலவு செய்கிறார்கள், சந்தோஷம், சராசரி செலவழிப்பதைப் பார்த்தால் தேசம் பூராவும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது கேரளா முதல் ஸ்தானம் வகிக்கிறது, சிறிய ராஜ்யமாகயிருந்தால்கூட. நம் ராஜ்யம் இரண்டாம் ஸ்தானத்தை வகிக்கிறது. செலவு செய்யக்கூடிய தொகையிலும், 1,000 ஜனத் தொகைக்கு இவ்வளவு பள்ளிக்கூடங்கள், இவ்வளவு மாணவர்கள் என்ற விதத்தில் நம் ராஜ்யம் இரண்டாவது ஸ்தானம் வகிக்கிறது என்பதில் எனக்குக் கூட மகிழ்ச்சியாகத்தான் இருக்கிறது. தரம் குறைந்து போவதை தடுத்து தரத்தை அபிவிருத்தி செய்ய நாம் முயற்சி எடுக்கவேண்டும் கல்விக்காக 45 கோடி ரூபாய் செலவு செய்தாலும் பலன் என்ன? எஸ்.எஸ்.எல்.சி. படித்து விட்டு வருகிறவர்களுக்கு தமிழில் அறிவு ஓரளவு இப்போது அபிவிருத்தியாயிருக்கிறது. ஆனால், பொது அறிவு குறைவாக இருக்கிறது. ஆகவே, பொது அறிவை வளர்க்கவும், பயிற்சி கொடுப்பவர்களின் தரத்தை உயர்த்துவதற்கும் விசேஷ முயற்சி செய்ய வேண்டும். அதற்கு ஒரு க்ராஷ் ப்ரோக்ராம் இருந்தால் நன்றாக இருக்கும். திட்டங்களில் முன்னேற்றம் இருக்கிறது, ஆனால் பலன் என்ன? யாருக்காக அவை ஏற்படுத்தப்பட்டிருக்கின்றனவோ அந்த மக்களுக்கு அதன் பலன் போய்ச் சேருவதில்லையென்பதை எடுத்துக் காட்டத்தான் இதைச் சொல்லுகிறேன். விவசாயத்திற்காக எல்லாம் செய்து விட்டார்கள் திட்டத்தில் என்று நான் பாராட்டுவதாக எடுத்துக்கொள்ளக் கூடாது. அதில் இன்னும் அதிகப்படி கவனம் செலுத்தவேண்டும். நவீன முறைகளை புகுத்தவேண்டிய அவசியம் இருக்கிறது. விநியோகத்தில் உள்ள கோளாறை வைத்துக்கொண்டு விவசாயிகளுக்கு செய்திருக்கக்கூடிய அநீதியை மறைக்க வேண்டாம்.

சோஷலிசம் பற்றியும் முதல் அமைச்சர் அவர்கள் குறிப்பிடத் தவறவில்லை. சோஷலிசப் பாதையை நோக்கிச் செல்கிறோம் என்று சொல்கிறார்கள். சோஷலிசப் பாதையில் தயாரிக்கப்பட்ட பட்ஜெட் என்று அவர்களும் சொல்லமாட்டார்கள். உட்கார்ந்திருந்த இடத்தில் உட்கார்ந்திருந்தாலும் இருக்கலாம். ஆனால் பின்னால் போகக்கூடாது. சோஷலிசம் என்றால் முதலாளிகளுக்கு கோபம் வருகிறது. அவர்களை ஆதரித்து பேசினால் தொழிலாளர்களுக்கு கோபம் வருகிறது, விவசாயிகளுக்கு கோபம் வருகிறது. கொள்ளை லாபம் அடிக்கிறவர்கள் கொள்ளை லாபம் அடிப்பதைத்

தடுத்தால் பெரிய வியாபாரிகளுக்கு கோபம் வருகிறது. விலைவாசி இறங்கவில்லை என்றால் என்.ஜி.ஓ.-க்கள், ஆசிரியர்கள், கடைநிலை ஊழியர்கள், ப்யூன்ஸ் இவர்களுக்கு கோபம் வருகிறது. எல்லோரையும் திருப்தி பண்ணப்போய் என்னவாகிறது என்றால் இரண்டு பேர்களுடைய சமமான கோபத்திற்கு ஆளாகி விடுகிறார்கள். இரண்டு குதிரைகளின் மேல் ஒவ்வொரு காலை வைத்துக்கொண்டு சவாரி செய்வது போன்ற நிலை அரசாங்கக் கொள்கைக்கு ஏற்பட்டு விடும் என்ற அச்சம் இருக்கிறது. ஒரே ஒரு பக்கத்தில் உறுதியாக இருக்கவேண்டும். அதுதான் சரியான வழி, சோஷலிசம் என்றால் சோஷலிசமாக இருக்கவேண்டும். சோஷலிசம் என்றால் யாரைப் பாதுகாக்க வேண்டுமோ அவர்களை பாதுகாக்கவேண்டும். சுரண்டப்படுகிறவர்களை பாதுகாக்கவேண்டும். இவர்கள் போகும் பாதை சுரண்டுகிறவர்களுக்கு சொர்க்க பூமியாக இருக்கிறது. திட்டத்தினால் ஏற்பட்டிருக்கக்கூடிய பலன் என்ன என்று
10-00 a.m. பார்க்கும் போது, சுரண்டப்படுபவர்கள் மேலும் ஏழைகளாகிக் கொண்டு வருகிறார்கள், சுரண்டுபவர்கள் மேலும் சுரண்டிக் கொண்டேயிருக்கிறார்கள்.

ஆகையால்தான், இன்றையதினம் எங்கு பார்த்தாலும், வேலை நிறுத்தங்கள், கிளர்ச்சிகள், உண்ணாவிரதங்கள்—சர்க்கார் ஊழியர்களிடையே உண்ணாவிரதம், மத்திய சர்க்கார் ஊழியர்கள் உண்ணாவிரதம், மாநில சர்க்கார் ஊழியர்கள் உண்ணாவிரதம்—இவை எல்லாம் ஏற்படுகின்றன. மேலும் சிக்கனம் என்று சொல்லப்படுவதில், நமது முதலமைச்சர் அவர்கள் தனது உரையில் குறிப்பிட்டிருப்பது தெளிவாக இல்லை. 'ஆபீசர் ஓரியன்டட்' என்று சொல்லியிருக்கிறார்கள். இதனால் ஆபீசர்கள் அதிகப்படுத்தப்படுவார்களா, அல்லது, இப்போது இருக்கின்ற ஆபீசர்களை மட்டும்தான் வைத்துக் கெள்ளார்களா? அப்படியென்றால், இப்போதுள்ள லோயர் டிவிஷன் கிளார்க், அப்பர் டிவிஷன் கிளார்க், சூப்பிரன்டண்ட் இவர்களுடைய நிலை என்னவாகும்? அல்லது வெறும் பத்து இருபது பியூன்களை வெளியில் அனுப்பிவிடுவதுதான் இந்தத் திட்டத்தின் முக்கிய பலனாக இருக்குமா? என்கின்ற சந்தேகங்கள் வருகின்றன. ஆகவே, இதைப்பற்றி என்ன யோசனை இருக்கிறது என்பதைத் தெரிவிக்க வேண்டுகிறேன். அப்படி ஏதாவது யோசனை இருந்தால் அதன் பேரில் ஒரு 'வொயிட் பேப்பர்' இந்த சபையின் முன்னால் வைத்து சுமார் 4 மணி நேரம் விவாதம் நடத்துவதற்கு சந்தர்ப்பம் கிடைத்தால், அதன் பேரில் எங்களைப் போன்றவர்களின்—எங்கள் அற்ப அறிவுக்கு எட்டிய சில கருத்துக்களை சொல்லக்கூடிய சந்தர்ப்பம் கிடைக்கும். அதுவும் அரசாங்கத்திற்கு பயன் தரக்கூடியதாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். ஆகவே இந்தத் திட்டத்தைப்பற்றி 'வொயிட் பேப்பர்' தயாரித்து இந்த சபையின் மேஜை மீது வைக்கவேண்டும். அப்போதுதான் இதைப்பற்றி எல்லோரும் தெளிவாக புரிந்து கொள்ளக்கூடிய வாய்ப்புக் கிடைக்கும், அதல்லாமல் இதில் பல குழப்பங்களுக்கு இடம் அளிக்கக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன். நிர்வாக சீர்திருத்





தத்தைப் பொறுத்தவரையில், சீர்திருத்தம் அவசியம் தான். ஆனால் சீர்திருத்தம் செய்யவேண்டிய முறையில் சீர்திருத்தம் செய்யவேண்டும். சிக்கனம் செய்யவேண்டிய முறையில் சிக்கனம் செய்யவேண்டும். சீர்திருத்தம், அல்லது சிக்கனம் என்று சொல்லிக்கொண்டு இப்போது இருக்கின்ற முறையையும் கெடுத்துவிடக்கூடாது என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

இன்னும் தொழில் வளர்ச்சியில்—சோஷலிச முறையில் எந்த அளவில் போய்க்கொண்டிருக்கிறது என்பதைப் பார்க்கவேண்டும். ராஜ்ய சர்க்கார் சம்பந்தப்பட்டவரையில் இரண்டு ஐந்தாண்டுத் திட்டகாலத்திலும் தனியார்த் தொழில்கள்தான் அதிகமாக வளர்ந்திருக்கின்றன. தனியார் மூலதனம் எவ்வளவு போடப்பட்டிருக்கிறது, அரசாங்க மூலதனம் எவ்வளவு போடப்பட்டிருக்கிறது என்பதையும் பார்க்கவேண்டும். சோஷலிசம் என்பது தனியாரைக் கட்டுப்படுத்துவது, அரசாங்கத்துறையை விரிவுபடுத்துவது என்பது தான். இந்த இரண்டும் இல்லாமல் இருந்து கொண்டிருக்கிறது. தனியார் தொழில்களை எடுத்துக்கொண்டால், அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள், அவர்களுக்குள்ளே சண்டை போட்டுக்கொண்டு முட்டிக்கொள்கிறார்கள் என்று. இன்று நிலைமை என்ன? ஓவர் காப்பிட்டலைசேஷன்தான். யாரோ இங்கு சொன்னார்கள், தனியார் துறையில் தான் சிக்கனம் ஏற்படுகிறது என்று, அது சரியல்ல. அரசாங்கத்தை எடுத்துக் கொண்டால், அதைக் கண்காணிப்பதற்கு சட்டசபை இருக்கிறது, பப்ளிக் அக்கௌன்ட்ஸ் கமிட்டி இருக்கிறது. அந்த நிலைமை தனியார் துறையில் இல்லை. முன்னால் என்ன நடந்தது, தனியார்கள் மூலதனம் போட்டால் பத்து பதினைந்து ஆண்டுகளாக தனியார்கள் கஷ்டப்பட்டு லாபத்தை சம்பாதித்து வந்தார்கள். இப்போது அப்படியல்ல. 20 கோடி மூலதனம் என்று சொல்லிக்கொண்டு ஆரம்பத்திலேயே இரண்டு கோடியை எடுத்துவிட்டு, தொழிலில் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது என்று சொல்லி வருகிறார்கள். இந்த நிலைமை தான் இன்றையதினம் தனியார் தொழில் துறையில் பெருகிவருகிறது. இதன் காரணமாகத்தான் விலைவாசிகள் எல்லாம் ஏறிக்கொண்டிருக்கிறது. கருப்புப் பணம் பெருகிக் கொண்டிருக்கிறது. இன்டர்நேஷனல் கருப்புப் பணமும் இதனால் தான் ஏற்படுகிறது, நாஷனல் கருப்புப் பணமும் இதனால் தான் ஏற்படுகிறது. ஆகவே தான் நான் கேட்டுக்கொள்வது, தனியார் தொழில்களை ஊக்குவிப்பது, அல்லது தனியார் தொழில்களை வளர்ப்பது நாட்டின் பொருளாதாரத்தை என்றைக்குமே சீர்படுத்தாது. இன்றைக்கு இருக்கின்ற நிலையில் பணத்தை அரசாங்கம் கூட பெற்றுக்கொள்ள முடியவில்லை, தனியார்களில் யார் போனாலும் கிடைக்கிறது. அந்த அளவிற்கு தனியார் கை வலுப் பெற்றிருக்கிறது.

அதே நிலைமைதான் கூட்டுறவு சொசைட்டிகளுக்கும், தனிப்பட்ட வியாபாரிகளுக்கும் இருக்கிறது. கூட்டுறவு சொசைட்டியில் விற்பனை வரி முதலியவைகள் ஒழுங்காக செலுத்தப்படவேண்டும்,

தனிப்பட்ட வியாபாரிகளை பொறுத்தமட்டில் அவர்கள் விற்பனை வரி போன்றவற்றில் இருந்து எப்படியோ தப்பித்துக்கொள்கிறார்கள், விலையையும் சற்று குறைத்துக் கொடுக்கிறார்கள். கூட்டுறவு சொசைட்டிகளினால் முடிவதில்லை. இதனால் இவர்கள் இரண்டு பேருக்கும் போட்டி ஏற்படுகிறது. தனியார் துறைக்கும் அரசாங்கத்துக்கும் போட்டி, கூட்டுறவு துறைக்கும் தனிப்பட்ட வியாபாரிகளுக்கும் போட்டி. இவையெல்லாவற்றுக்கும் காரணம் அரசாங்கத்தின் கொள்கைதான். இந்த நிலைமை நீடித்துக் கொண்டு போனால், நிச்சயமாக தனியார் துறை அரசாங்கத்தை கவிழ்த்துவிடும் என்பதை கூறிக்கொள்கிறேன். ஆகவே, தனியார் துறையை நம்பாதீர்கள், தனியார் துறைக்கு ஆதரவு கொடுக்காதீர்கள், தனியார் துறைக்கு ஊக்கம் கொடுக்காதீர்கள் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்த நிலைமை நீடித்துக் கொண்டிருந்தால் நிச்சயமாக நம்முடைய பொருளாதார நிலைமை சீர்குலைந்து போகும் என்பதையும் ஞாபகமூட்ட விரும்புகிறேன். இதே நேரத்தில் இன்றையதினம் யார் ஆட்சிக்கு வந்தாலும், இனிமேல் எதிர்காலத்தில் சோஷலிசத்தை—சோஷலிச பாதையை நோக்கித்தான் தங்கள் திட்டங்களைப் போட முடியும். ஆட்சியில் காங்கிரஸ் இருந்தாலும் சரி, திராவிட முன்னேற்றக் கழகம் இருந்தாலும் சரி, சுதந்திராக் கட்சி இருந்தாலும் சரி இந்தக் கொள்கையின் அடிப்படையில் தான் திட்டங்களை அமல் நடத்த முடியும். அதல்லாமல் இந்தப் பாதையின் பின்னால் போய்விடலாம் என்று யார் நினைத்தாலும் அது நடவாத காரியம், எந்த முறையில் இருக்கவேண்டும் என்கின்ற அடிப்படை உரிமை இன்றையதினம் தேசத்தின் மக்கள் கையில்தான் இருக்கிறது. அவர்கள்தான் இதை நிர்ணயிக்க வேண்டும். அந்த முறையில் நிச்சயமாக வருங்காலத்தில்—ஜனநாயக முறையில் சோஷலிச முறையைத்தான் ஆதரிப்பார்களே தவிர, சோஷலிசத்திற்கு எதிராக இருக்கக்கூடியவர்களுக்கோ, அல்லது சோஷலிசம் என்று சொல்லிக்கொண்டு ஏமாற்றுகின்றவர்களுக்கோ எதிர்காலத்தில் இடமில்லை என்பதை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். அந்த முறையில் பார்க்கும்போது நமது ராஜ்ய சர்க்கார் சோஷலிச பாதையில் செல்வதற்குரிய நடவடிக்கை எடுத்திருப்பதாக இந்த பட்ஜெட்டில் காண முடியவில்லை. திரு. கருணாநிதி அவர்கள் முன்பு சொன்னார்கள், 'காகிதப் பூ மணக்காது, காங்கிரஸ் சோஷலிசம் இனிக்காது' என்று. காகிதப் பூ என்றைக்குமே மணக்காது தான். அது காங்கிரசுக்கு மட்டும் அல்ல, திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இருந்தாலும் காகிதப் பூ, காகிதப் பூ தான், அது யாருடைய கையில் இருந்தாலும் மணக்காது என்பதை திராவிட முன்னேற்றக் கழக நண்பர்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன் . . . .

**கனம் திரு. பூ. கக்கன்** : காங்கிரஸ் சார்பில் காகிதப் பூ மணக்கும் என்று யாரும் சொல்லியதே கிடையாது . . . .

**திரு. மீ. கலியாணசுந்தரம்** : நானும் அதைத்தான் சொல்லுகிறேன். காகிதப் பூவை யார் வைத்திருந்தாலும்—காங்கிரஸ் அமைச்சர் வைத்திருந்தாலும் சரி, திரு. கருணாநிதி வைத்திருந்





தாலும் மணக்காது. ஆகவே, உண்மையான சீர்திருத்தம் வேண்டும் என்பதை வலியுறுத்துவதற்காகத்தான் இதைச் சொன்னேன். (மணி அடிக்கப்பட்டது.) இன்னும் இரண்டு நிமிடங்களில் முடித்துவிடுகிறேன்.

அடுத்து, தேர்தல் அண்மையில் வரக்கூடிய காரணத்தினால் மந்திரிசபை ராஜினாமா செய்யவேண்டும், ராஜ்ய மந்திரிசபை ராஜிநாமா செய்யவேண்டும், மத்திய அரசாங்க மந்திரிசபை ராஜிநாமா செய்யவேண்டும் என்று சொல்லப்பட்டது. ராஜிநாமா செய்து விடுவதால் மட்டும் பிரச்னை தீர்ந்து விடாது என்றுதான் நினைக்கிறேன். ராஜிநாமா செய்துவிட்டாலும் கூட, 18 ஆண்டு காலமாக ஆட்சியில் இருக்கும் காங்கிரசுக்கும் காங்கிரஸ் தலைவர்களுக்கும் நிர்வாகத்தில் இருக்கின்ற தொடர்பு அவ்வளவு சீக்கிரத்தில் விட்டுப் போய்விடும் என்று நம்புவதற்கில்லை. அப்படியே ராஜிநாமா செய்துவிட்டு கவர்னர் ஆட்சியின் கீழ், ஜனநாயக முறைப்படி அதிகாரிகள் ஆட்சி நடத்தினாலும், நம்முடைய பிரச்னை தீர்ந்துவிடாது. இன்றிருக்கின்ற அளவில் மந்திரிகளாவது ஓரளவுக்கு மக்களுக்கு பதில் சொல்லியாகவேண்டும், அந்த முறையில் ஏதாவது சிறிதளவு அச்சம் இருக்கும். ஆனால் அமைச்சர்கள் ராஜிநாமா செய்துவிட்டு வெளியே வந்துவிட்டால், வெளியே இருந்து கொண்டு எதைச் செய்யச் சொன்னாலும் கூட, அவர்கள் பதில் சொல்ல வேண்டிய தேவையில்லை, அதிகாரிகள் தான் பதில் சொல்லவேண்டும். ஆகவே, இப்போது இருக்கின்ற ஜனநாயகத்திற்கே ஆபத்து வந்துவிடுமோ என்று எண்ணுகிறேன். இன்றைக்கு போலீஸ் அமைச்சராக இருக்கக்கூடிய திரு. கக்கன் அவர்களுக்கு, ஐ.ஜி. ஏதாவது தவறு செய்தால் கூட, இங்கு பதில் சொல்ல வேண்டுமே என்ற அச்சம் இருக்கும். ஆனால் ராஜிநாமா செய்துவிட்டு வெளியே போய் ஐ.ஜி.-யிடம் இதைச் செய் என்று சொன்னால் அதற்கு பதில் சொல்லவேண்டிய பொறுப்பு அமைச்சர் அவர்களுக்கு இராது, ஐ.ஜி.-க்குத்தான் இருக்கும். இப்படிப்பட்ட ஆபத்தான நிலைமை வந்துவிடும் என்பதுதான் என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம். ஆகவே இப்போது இருக்கின்ற சூழ்நிலையில் இன்னும் ஆபத்தை ஏற்படுத்தவேண்டாம் என்பதுதான் என் அபிப்பிராயம். அப்படி வேண்டுமானால், எல்லாக் கட்சிகளும் சேர்ந்து ஒரு கொள்கையை வகுத்துக்கொள்ளலாம். கேரளாவிலுள்ள நிலைமையைப்பற்றி திரு. அரங்கண்ணல் அவர்கள் குறிப்பிட்டார்கள். மைனாரிட்டியாக கம்யூனிஸ்ட் கட்சி இருந்து கொண்டுதான் கேரளாவில் ஆட்சிக்கு வந்தது. ஒரு ராஜ்யத்தில் மட்டும் கம்யூனிஸ்ட் கட்சி ஆட்சி வந்துவிட்டால் அதிகாரம் முழுவதும் கம்யூனிஸ்ட் கட்சி கையில் வந்துவிட்டது என்று அர்த்தமா என்ன? மத்திய அரசாங்கம் யாருடைய கையில் இருக்கிறது என்பது தான் முக்கியம். அவர்கள் கையில் அதிகாரம் இருக்கும் வரையில் யாரும் எந்தவித தொந்தரவும் கொடுக்க முடியாது. இதை அவர்கள் நன்றாக தெரியாமல் சொன்னார்கள் என்று எண்ணுகிறேன். ஆகவே ஆளும்கட்சியாக 18 வருடங்கள் இருந்துவிட்டு தேர்தல் காலத்தில் வெளியில் வந்துவிடுவதால் மட்டும் பிரச்னை

*[திரு. மீ. கலியாணசுந்தரம்]* [5th March 1966

தீர்ந்துவிடும் என்று நினைப்பதற்கில்லை. இப்போது சட்டசபை அங்கத்தினர்களுக்கு ஒழுங்கு, நெறி இவற்றிற்கு கொள்கை இருக்க வேண்டும், மந்திரிகளுக்கு அதுபோன்று இருக்கவேண்டும் என்று சொல்வது போல், எந்தக் கட்சியும் தேர்தலுக்காக பணம் கொடுப்பதில்லை என்று பிரதிக்ஞை எடுத்துக்கொள்ளவேண்டும், அதற்கு எல்லாக் கட்சிகளும் தயாரா என்று பார்க்கவேண்டும். நான் சொன்னபடி சில விதி முறைகளை, ஒழுங்கு முறைகளை நாமே வகுத்துக்கொண்டு அதன்படி நடக்கவேண்டும், அவற்றை கண்காணிப்பதற்கு ஒரு கமிட்டியையும் வைத்துக்கொள்ளலாம், இதில் ஏதாவது தவறு நடந்தால் அதன் மூலமாக விசாரணை நடத்திக்கொள்ளலாம். இவ்வாறு சில பண்பாடுகளை ஏற்படுத்தி நம்மை நாமே காப்பாற்றிக்கொள்ள வேண்டும். அதோடு நான் முக்கியமாக கேட்டுக்கொள்வது, அமைச்சர்கள் செய்ய வேண்டிய வேலைகளை எல்லாம் அமைச்சர் என்ற முறையில் இன்னும் ஆறு மாதங்களுக்குள் செய்து கொள்ளட்டும், அதற்கு மேல் ஆறு மாதங்கள் எதையும் செய்யாதீர்கள் என்று கேட்டுக்கொள்கிறேன். அதிகாரிகளோடு போவது, அடிக்கல் நாட்டுவது, திறப்புவிழாக்களில் கலந்து கொள்வது போன்றவற்றில் தயவுசெய்து அமைச்சர் என்ற முறையில் குறைந்த அளவு ஆறு மதங்களுக்காவது, எதையும் செய்யாதீர்கள் என்று கேட்டுக்கொள்கிறேன் வெளியே செல்லும்போது மந்திரிகள் என்ற முறையில் போகாமல் சாதாரண பிரஜை மாதிரி போகவேண்டும். வேண்டுமென்றால் கட்சிக்காரராக போகட்டும்; மந்திரிகளாகப் போகக்கூடாது. கட்சிக் கூட்டங்களில் வேண்டுமென்றால் பேசட்டும், ஆனால் அரசாங்க மேடைகளில் பேசக்கூடாது. இதற்கெல்லாம் அடிப்படையாக எல்லாக் கட்சித் தலைவர்களையும் கூட்டி வைத்து, தேர்தல் ஒழுங்கினை கடைப்பிடிப்பது என்கின்ற ஒரு கட்டுப்பாட்டை நான் சொல்கின்ற அளவில் கூட அல்ல, அரசாங்கத்தின் முறைப்படி அமைத்துக் கொள்வது நல்லது என்று நினைக்கிறேன். கரப்ட் ப்ராக்டிஸ் அனுஷ்டிக்க மாட்டோம் என்பதை பொதுமக்களிடத்தில் சொல்ல வேண்டும், ஜனநாயகத்தில் நம்பிக்கை வைத்து இந்தக் காரியங்களை எல்லாம் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, எனக்கு இத்தனை நேரம் பேசுவதற்கு அவகாசம் கொடுத்ததற்கு கனம் சபாநாயகர் அவர்களுக்கு என் விசேஷ நன்றியைத் தெரிவித்துக் கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

*திரு. சா. கணேசன்: கனம் சபாநாயகர் அவர்களே, இப்போது நமது மாநிலச் சட்ட சபையிலே, கனம் முதல் அமைச்சர் அவர்களாலே சமர்ப்பிக்கப் பெற்றிருக்கிற பட்ஜெட்டின் மீது நடைபெறும் பொது விவாதத்தில் என்னுடைய கருத்துக்களைக் புலப்படுத்திக்கொள்ள முன் வருகிறேன்.

இந்த பட்ஜெட் வரி இல்லாத பட்ஜெட் என்று பாராட்டியும், அல்லது வேறு வகையாகவும் இங்கு பேசிய கனம் உறுப்பினர்கள் பலரும் குறிப்பிட்டார்கள். உண்மை. புது வரி இல்லாத பட்ஜெட் தான். அதற்காக நான் கனம் முதல் அமைச்சர் அவர்களைப் பாராட்டவும் செய்கிறேன், ஆனால் அந்தப் பாராட்டினாலே



5th March 1966] *[திரு. சா. கணேசன்]*

திருப்தி அடைந்து விடுகிறோம் அல்லது மக்கள் திருப்தி அடைந்து விடுகிறார்கள் என்பது பொருள் அல்ல. இந்த பட்ஜெட்டிலே வரி உயர்வு இல்லை என்பது உண்மை. இது இந்த மாநிலத்தில் மட்டும் அல்ல; இந்தியாவிலே எல்லா மாநிலங்களிலும் தான் இந்த முறை பட்ஜெட்டிலே வரி உயர்வு அல்லது புது வரி கிடையாது. இவர்கள் தனித் தனியாகப் போட வேண்டிய வரிகளையெல்லாம் மத்திய ஆட்சி ஏற்றுக்கொண்டு, ஒன்றாக இணைத்து, பொதுவாக, மொத்தத்தில் போட்டு விடுகிறது. அவர்கள் போட்டு விட்டு, நல்ல பெயரோ—கெட்ட பெயரோ, கஷ்டமோ நஷ்டமோ, அவர்கள் ஏற்றுக்கொண்டு, வருமானத்தைப் பிரித்துக் கொடுக்கும் அளவிலே மாநிலங்கள் பயன் பெற்று விடுகின்றன. ஆகவே, மத்திய சர்க்காராலே போடப்பட்ட புதிய அல்லது வரி உயர்வின் மூலமாகக் கிடைக்கிற பலன்களை மாநில சர்க்கார் பெறுகிறபோது இந்தச் சர்க்காரும் அந்த வரி உயர்வுக்கு ஒரு அளவுக்கு என்று கூட அல்ல, இந்தச் சர்க்காரும் அதற்கு ஒரு பொறுப்பு என்று கொள்ளுவது தான் நியாயமான அணுகும் முறையாக இருக்கும் என்பது என்னுடைய கருத்து. மக்களைப் பொறுத்த வரையிலே கேள்வி ஒன்றுதான். யாருக்கு வரி கொடுக்கிறோம் என்பது பிரச்னை அல்ல. எவ்வளவு வரி கொடுக்கிறோம் என்பது தான் பிரச்னை. பாட்டாளியோ, விவசாயியோ, நடுத்தரமானவனோ, பணக்காரனோ யாராக இருந்தாலும், வரி கொடுக்கிறவனுக்கு யாருக்குக் கொடுக்கிறோம் என்பது அல்ல பிரச்னை. மத்திய ஆட்சியானாலும் சரி, மாநில ஆட்சியானாலும் சரி, அல்லது தல நிர்வாக ஆட்சியானாலும் சரி, எதற்குப் போனாலும் சரி, 'எவ்வளவு போடப்பட்டது? அதைத் தாங்க முடியுமா? அது தன்னுடைய வருமானத்திற்கு ஒத்ததாக அமைகிறதா?' என்பது தான் பிரச்னை. யார் வரியைக் கட்டினார்கள், யார் வரியைப் போட்டார்கள் என்பது வினா அல்ல. எவ்வளவு வரி மக்கள் கொடுக்க வேண்டியிருக்கிறது என்பது தான் கேள்வி. அந்தக் கணக்கை மேற்கொண்டு பார்ப்போமானால், மக்களுக்கு வரி இந்த பட்ஜெட் காலத்திற்குப் பிறகு, நேற்று இருந்ததற்கு மேலே, அதிகப்பட்டிருக்கிறது என்ற உண்மையை மறைக்கவோ மறுக்கவோ யாராலும் முடியாது. தேசத்தின் முதுகெலும்பு போன்ற விவசாயிகளுக்கு வரி நிரம்பப் போடப்பட்டு விட்டது. சில மாதங்களுக்கு முன்னாலே கூட 50 சதமானம் போட்டோம். அதற்குக் கொஞ்ச நாள் முன்னே 50 சதமானம் போட்டோம். வரி இரட்டிப்பு என்ற நிலைமைக்கு வரி போடப்பட்டு விட்டது. அது அல்லாமல் பல வகையான வரிகள். அவைகளுக்கு பின்னே வருகிறேன். முன்னே, எனக்குத் தெரிந்ததை, நான் காணுவதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

இன்னொன்றையும் இங்கே குறிப்பிட வேண்டும். உள்ளபடியே மக்களுக்குத் திருப்தி ஏற்படவேண்டுமானால், அரசாங்கத்திற்கு நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டவர்களாக இருக்கவேண்டுமானால் இந்த ஆட்சி என்ன செய்திருக்கவேண்டும்? அபாய காலம் அல்லது நெருக்கடி காலம் என்று கட்டப்பட்ட வரிகள் இருக்கின்றனவே, இன்று டாஷ்கென்ட் ஒப்பந்தம் நிறைவேறி, கிட்டத்

[திரு. சா. கணேசன்] [5th March 1966

தட்ட அபாய நிலை இல்லை என்று ஏற்பட்டுவிட்ட பிறகு, அவைகளை வாபஸ் பெற்று, இந்த வரியினத்தை ரத்து செய்து விட்டோம் என்று சொல்லியிருப்பார்களானால் உள்ளபடியே மக்கள் அரசாங்கத்திற்கு நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருப்பார்கள்; அந்த நன்றியைப் பெற ஆட்சியாளர்களுக்கு முழுக்க முழுக்க உரிமையும் உண்டு. துரதிருஷ்டவசமாக அந்த நிலை இன்று இல்லாமல் போய்விட்டது. இந்த முறை நியாயம் அல்ல, அப்படிச் செய்யாமல் இருப்பது பொருத்தம் அல்ல, தவறு என்று பணிவோடு, சபாநாயகர் அவர்களே, உங்கள் மூலமாக நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதனாலெல்லாம் கிடைத்த பலன், நமது அமைச்சர் அவர்களுடைய இந்த நிதி நிலை அறிக்கையின் மீது ஆற்றிய உரை இருக்கிறதே, அதனுடைய பருமன், இங்கே நீளம், கூடியது. இவ்வளவு நீளமான உரையின் மூலமாகத் தான் மக்கள் உள்ளத்திலே வருத்தம் அல்லது துன்பம் அல்லது துயரம் ஏற்பட்டிருந்தால் அதைத் துடைக்க வேண்டுமென்ற பெருந்தன்மையான எண்ணத்தின் மூலமாக உரையின் நீளம் அதிகப்பட்டிருக்கிறது என்பது நமக்கு சூசகமாக உணர்த்தப்படுகிறது என்று நான் கணிப்பேன். ஆனால், அது நியாயம் அல்ல, தவறு என்று சொல்ல முடியாது என்று நான் எண்ணுகிறேன்.

இப்போது இருக்கிற பெரிய பிரச்னை விலைவாசி உயர்வு. இந்த விலைவாசி உயர்வுக்கு அடிப்படைக் காரணம் என்ன என்பதைப் பிரமாதமாக சோதித்து நிர்ணயிக்க வேண்டிய நிலையில் யாரும் இல்லை. பெரிய பொருளாதார சாஸ்திரிகள் வந்து புலப்படுத்த வேண்டிய பெரிய நுணுக்கமான விஷயமாகவும் அது இல்லை. அது சுலபமாக நமக்குப் புரியும். வரிகள், தீர்வைகள் அதிகப்படுத்தப் பட்டிருப்பது அடிப்படைக் காரணம். பல வகையான கட்டணங்கள் உயர்ந்தது மற்றொரு அடிப்படைக் காரணம். அந்தந்த தொழில் அல்லது வாணிபம் அல்லது விவசாயம் போன்ற துறைகளுக்குத் துணைக் கருவிகள் இருக்கின்றனவே, அவற்றுக்குத் தீர்வையோ அல்லது சேல்ஸ் டாக்ஸ் போன்ற வரிகளோ அதிகமான ஒரு தீமை, இவையெல்லாம் கூட அடிப்படையிலே விலைவாசி உயர வகை செய்து விடுகிறது. விலைவாசி உயரும்போது ஒன்றை மறந்து விடப்படாது. சர்க்காருக்கு ஐந்து ரூபாய் வருமானம் வருமானால், வாங்குகிறவர்களுக்கு 10 ரூபாய் இழப்பு ஏற்படுகிறது. சர்க்காருக்குக் கொடுப்பதற்கும் சேர்த்து லாபம், லாபத்திற்கும் சேர்த்து வரி—வட்டி, வட்டிக்கு வட்டி, ஆறு மாதத்திற்கு வட்டி என்று கணக்குப் போடுகிறார்களே அந்த மாதிரி நிலையில்—வரி மட்டும் அல்லாமல், வரித் தொகைக்கும் சேர்த்து லாபத்தைக் கணிக்கிறார்கள்; இரண்டாவது கட்டத்தில் வரி, லாபம் இரண்டுக்கும் சேர்த்து வரி என்று இப்படி கிட்டத்தட்ட . . . .

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** தனிப்பட்டவர்கள் வியாபாரத்தில் இருக்கிற கோளாறை கனம் அங்கத்தினர் எடுத்துக் காட்டுகிறார்கள் என்று நினைக்கிறேன்.



5th March 1966]

**திரு. சா. கணேசன் :** குறுக்கீட்டுக்குப் பதில் உரைக்க நேரம் தருவார்களானால் நான் செய்வேன். இருக்கிற நேரத்தில் எல்லாவற்றையும் கணித்து விட முடியும் என்று நான் எண்ணவில்லை. கனம் முதல் அமைச்சர் அவர்கள் அந்த மாதிரி எண்ணினால் அது நியாயம் ஆகாது, என்னுடைய குறிப்பில் இருப்பதைச் சொல்லுவதற்குக்கூட நேரம் இருக்காது என்ற காரணத்தினால் மேலே செல்லுகிறன்.

இதையெல்லாம் விட, இந்த இன்டைரக்ட் டாக்ஸஸ் என்று சொல்லுகிறார்களே—நேர்முகம் அல்லாத வரி—மறைமுகம் என்று சொல்லுகிற மரபு இன்று ஏற்பட்டு விட்டது—அந்த நேர்முகம் அல்லாத வரிகளால் எங்கே எப்படி என்று யாரும் அறியாமல் விலைவாசி உயர்ந்து விடுகிறது. இதை மனத்திலே கொள்ள வேண்டும்.

உணவு-விவசாயத் துறையை எடுத்துக்கொண்டோமானால், முதல் ஐந்தாண்டுத் திட்டம், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் ஆகிய இரண்டு திட்ட காலத்திலும் சிறிது விவசாயத்தில் தளிர்த்த அல்லது துளிர்த்த மாதிரி வளத்தைக் காண முடிகிறது, அரசினரால் தரப்பட்ட புள்ளிவிவரக் கணக்கிலிருந்து. ஆனால், மூன்றாவது திட்ட காலத்தைக் கணிப்போமானால் முழுக்க முழுக்க பரிபூர்ணமாகத் தோல்வி என்பதையே நாம் உணரக் கூடியதாக இருக்கிறது. ஆகவே, எங்கே என்ன குறை ? அந்தக் குறையை எப்படி, யாரைக் கொண்டு நிவர்த்திப்பது என்ற துறையிலே ஆட்சியாளர்களுடைய கவனம் முழுக்க ஈடுபடவேண்டும்.

உரவகை செம்மையாகக் கிடைக்கவில்லை என்ற குற்றச்சாட்டு கட்சி வேறுபாடு இல்லாமல் பல உறுப்பினர்களாலும் குறிப்பிடப் பட்டது. அதைப் போலவே தான் உழவுப் பணி கருவிகள் செம்மையாகக் கிடைக்கவில்லை, நியாயமான விலையில், நியாயமான காலத்தில் கிடைக்கவில்லை என்ற விதமான குறைபாடுகளும், அல்லது முறையீடுகளும் அல்லது குற்றச்சாட்டுகளும் இங்கே வெளியிடப்பட்டன. அடிப்படைக் காரணம் இதற்கெல்லாம் அன்னிய நாட்டுச் செலாவணி இல்லை என்ற ஒரு நாராயணாஸ்திரம் இருக்கிறது. எதை எடுத்தாலும், அன்னிய நாட்டுச் செலாவணி இல்லை என்பது ஆளும் கணத்தார்க்கு ஒரு சிறந்த பல்லவி போன்று அமைந்துவிட்டது. ஆனால், நான் ஒன்று கேட்க விரும்புகிறேன். நாம் இம்மாதிரி உரப்பண்டங்களுக்கு, உரப்பொருள்களுக்கு அன்னிய நாட்டுச் செலாவணி இல்லை என்று சொல்லுகிறோம் ? மனிதனுக்கு மிக இன்றியமையாத உணவுக்கு, உணவைப் பெருக்குவதற்கு, பற்றாக்குறை அல்லது தட்டு ஏற்படாமல் இருப்பதற்கு அடிப்படைத் தேவையான உரத்திற்கு அன்னிய நாட்டுச் செலாவணி இல்லை, ஆனால் காட்பரீஸ் சாக்லெட்டு வாங்குவதற்கு அன்னிய செலாவணி இருக்கிறது. பட்ஜெட்களை எடுத்துப் பார்க்க வேண்டும். இந்திய பட்ஜெட்டை, மாநில பட்ஜெட்களை எடுத்துப் பார்க்கவேண்டும். காட்பரீஸ் சாக்லெட்டுக்கு லட்சக்கணக்கான

ரூபாய், கோடிக்கணக்கான ரூபாய் அன்னியச் செலாவணி செலவழிக்கலாம். ஆனால் எங்களுக்கும், உங்களுக்கும் வேண்டிய அரிசி; கோதுமை, அல்லது கம்பு, சோளம் இதை அதிகமாக, கணிசமாக உற்பத்தி செய்வதற்கு உரம் வாங்குவதற்கு அன்னியச் செலாவணி இல்லை. இதை என்னவென்று சொல்லுவது? சொன்னால் கோபம் வரப்படாது. எனக்கு கடுமையான சொற்கள் சொல்ல வராது; சொல்லுவது மரபு இல்லை, பழக்கம் இல்லை. இதை எண்ணுகிற பொழுது நெஞ்சம் கொதிக்கிறது என்று மட்டும் சொல்லிக் கொள்ளுகிறேன். காட்பரீஸ் சாக்லெட்டு இல்லாவிட்டால் தமிழன் செத்துவிடுவானா? இந்தியன் யாரும் செத்துவிடுவானா? அரிசி, கோதுமை இல்லாவிட்டால் நிச்சயம் செத்துவிடுவான். இந்த நிலையை நாம் மனத்திலே கொள்ளவேண்டும்.

இதுவன்றி, அடுத்து மேலேமேலே கரும்பு ஆலைகளை பெருக்கிக் கொண்டு போவது நம்மை எங்கு கொண்டு போய்விடுமோ? இந்த மாநிலத்திற்கு வேண்டிய அளவுக்கு மேம்பட்ட ஜீனி இப்பொழுது உற்பத்தியாகிவிட்டது. இப்பொழுதே எல்லா மில்களும் குறைந்த நேரம் பணிபுரிகிற இப்பொழுதே, முழு நேரமும் பணி செய்தால் நமது கடற்கரைப் பரப்பிலே ஜீனியை பரப்பலாம் என்ற அளவுக்குக் கூட உற்பத்தி ஆகிவிடும்—அதிகமாக ஜீனி உற்பத்தி செய்யப்படுகிறது. இப்பொழுது ஒரு மோகம் நமக்கு, என்னையும் உள்படத் தான் சொல்லுகிறேன், எங்கள் ஜில்லாவுக்கு கரும்பு ஆலை இன்னும் வரவில்லை என்று பேசிக்கொண்டிருக்கிறோம்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அரிசியைவிட சர்க்கரை விஷயத்தில் பற்றாக்குறை இந்த மாநிலத்தில் இன்னும் இருக்கிறது. மேலும் மேலும் அதிக சர்க்கரை உட்கொள்ள மக்கள் முற்படுகிறார்கள்.

**திரு. சா. கணேசன் :** மன்னிக்கவேண்டும். இது கொஞ்சம் கருத்து வேறுபாட்டுக்குரிய விஷயம். அரசாங்கத்தின் புள்ளி விவரத்தை மட்டும் வைத்துக் கொண்டு கணித்தால் அமைச்சர் அவர்கள் சொல்லுவது முழுக்க முழுக்க சரி என்பதை நான் ஒத்துக்கொள்ளுகிறேன். ஆனால் உண்மையில் அதிகம் உற்பத்தியாகிறது. எவ்வளவு ஜீனி வேண்டுமாயினும் மூட்டைக் கணக்கில் எங்கும் கிடைக்கிறது. எப்படி பற்றாக்குறை நிலை? கண்டிரோல் ஒன்றை வைத்துவிட்டு, கூபன் ஒன்றை கொடுத்துவிட்டு, ஒவ்வொருவருக்கும் பதுக்குவதற்கு ஆர்வம் ஏற்பட இடத்தைக் கொடுத்துவிட்டு, அதன் மூலம் விலை ஏற, தேவை இல்லாதவரும்—தனக்கு 10 கிலோ வாங்கிக்கொள்ளலாம், ஆனால் ஒரு கிலோ தான் தேவை என்று இருந்தாலும், பாக்கி 9 கிலோவையும் அதிக விலைக்கு விற்கலாம் என்ற நிலையில் கிராமங்களில் கூட (குறுக்கீடு) டிமாண்டு இருக்கிறதா, இல்லையா என்பது கண்டிரோலை எடுத்த பிறகுதான் தெரியும். கலியாணம் முடிந்தபிறகு பைத்தியம் தெளியுமா, பைத்தியம் தெளிந்த பிறகு கலியாணமா என்பது போன்று . . .





**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** மக்கள் இனிப்பு சாப்பிடுவதற்கு தடை ஏற்படுத்திவிட்டால் சர்க்கரை பற்றாக்குறை இல்லை. ஆனால், எல்லா மக்களும் இனிப்பை சந்தோஷமாக, இஷ்டப்பட்டு, அனுபவித்து சாப்பிடுகிறார்கள்.

**திரு. சா. கணேசன் :** உண்மை. இனிப்பு சந்தோஷமாக சாப்பிடுகிறோம் என்பது உண்மை. ஆனால், இதுவரையில் உள்ள மரபுகள், இலக்கியக் கூற்றுகள் எதை எடுத்தாலும் ததியாராதனை என்று தான் சொல்லுகிறோமே தவிர, சர்க்கரைப் பொங்கல் சாப்பாடு என்று சொல்லுவதில்லை. ஏனென்றால், இந்த நாடு கடுமையான வெப்பம் உள்ள நாடு. ஆகையினால் தயிர், மோர் உப்பு, புளி, காரம், இவைகள் தான் இன்றியமையாதனவாக இருக்கின்றன. நாம் 'கஞ்சிக்கு விதி இல்லை' என்று தான் சொல்லுகிறோம். ரொட்டி, 'ப்ரெட்', 'லெட் அஸ் ஹாவ் ப்ரெட்' 'ரொட்டிலாவ்' என்று சொல்லுகிறார்கள். இவையெல்லாம் உணவு விஷயத்திலுள்ள மரபைப் பொறுத்த சொற்கள்தான் அந்தந்த இடத்தில் சொல்லப்படுகின்றன. இங்கு ஜீனி நமக்கு அதிகம் தேவையில்லை. இதையெல்லாம் பற்றி பேசிக்கொண்டிருந்தாலும் உள்ள நேரம் போதாது. ஆகவே, நான் இத்துடன் நிறுத்திக் கொண்டு மேலே போகிறேன். கரும்பு ஆலைகளை இப்படிப் பெருக்கிக்கொண்டே போனால் நமது உணவின் கதி என்ன ஆகிறது? நெல் போன்ற நஞ்சை உணவு தானியங்கள் உற்பத்தி அவ்வளவுக்கவ்வளவு மிகமிக குறைக்கப்பட்டு விடுகிறது. ஆலைக்காரர்கள் விவசாயிகளுக்கு தாராளமாக முன்னால் கடன் கொடுக்கிறார்கள், உரம் கொடுக்கிறார்கள், பூச்சி வந்தால் மருந்து தெளிப்பதற்கு தங்களுடைய விவசாயத் துறை நிபுணர்களை அனுப்புகிறார்கள், கரும்பை ஆலைக்குக் கொண்டு வருகிறார்கள். இப்படி கரும்பு விவசாயிகளுக்கு எல்லாவித தொந்தரவுகளும் தீர்ந்துவிடுகிறது. அதனால் விவசாயிகள் கரும்பு உற்பத்தி செய்வதில் ஈடுபடுகிறார்கள். இதை அரசாங்கம் விரும்புகிறதோ, விரும்பவில்லையோ, நேர்முகமாகவோ, அல்லது மறைமுகமாகவோ கரும்பு உற்பத்தி செய்வதற்கு விவசாயிகளுக்கு அரசாங்கம் ஆக்கத்தைக் கொடுக்கிறது. (குறுக்கீடு). துட்டும் அதிகம் கிடைக்கிறது என்று திரு. தக்ஷிணாமூர்த்தி கவுண்டர் அவர்கள் சொல்லுகிறார்கள். துட்டும் கிடைக்கிறது. பல வகையிலே அவர்களுக்கு இது அனுகூலமாக இருக்கிறது. இதை குறை சொல்லுவதற்காகச் சொல்லவில்லை. ஆனால், இருக்கிற நிலைமை அது தான். இம்மாதிரி பணப் பயிருக்கே ஊக்கம் கொடுக்கும் அளவிலே நம்முடைய ஆட்சி விவசாயிகளுக்கு ஒரு தூண்டுகோலாக இருக்கிறது என்பதை குற்றச்சாட்டாக இல்லாவிட்டாலும், குறையாகவாவது நான் சொல்லித் தான் தீரவேண்டிய கடமை எனக்கு இருக்கிறது என்று நான் கருதுகிறேன். பணப் பயிருக்கு ஊக்கம் கொடுத்துக் கொண்டே போனால் உணவுப் பயிர் உற்பத்தி எங்கே பெருகும்? இயற்கையாக ஒரு மனிதனுக்கு முதலில் வேண்டியது உணவு. அடுத்ததாக வேண்டியது நிழல். உணவுக்கு இப்பொழுது எவ்வளவோ கஷ்டப்படுகிறோம். இவ்வளவு துன்பம் உண்டாகக்

கூடிய நிலைக்கும் நாம் தான் வழி செய்திருக்கிறோம். அதற்கான அடிப்படையில் தான் நாம் செயல்படுகிறோம் என்று நான் சொல்ல வேண்டிய நிர்ப்பந்தத்தில் இருக்கிறேன்.

இனி, மற்ற வரிகளெல்லாம் உயர்ந்துகொண்டே போய்க் கொண்டிருக்கின்றன. முன்பு காந்தி இர்வின் ஒப்பந்தம் ஏற்பட்டதுபற்றி மன மகிழ்ந்தோம். அன்றைக்கோ சில பண்டங் களுக்கு வரி இல்லை. அதில் உப்பு குறிப்பிடத்தக்க ஒன்று. இப்பொழுது உப்புக்குக் கூட வரி வந்துவிட்டது.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** நான் சுதந்திராக் கட்சித் தலைவர் அவர்களை ஒன்று கேட்க விரும்புகிறேன். பயிர் செய்வதிலே கண்டிரோல் இருக்கவேண்டுமா ? கரும்பு பயிர் செய்யக்கூடாது, அல்லது இந்தப் பயிர் தான் செய்யவேண்டும் என்று இப்பொழுது அப்படி ஒன்றுமில்லை. இப்பொழுது கண்டிரோல் இல்லை. கண்டிரோல் வேண்டாம் என்பது என்னுடைய கருத்து. கண்டிரோல் வேண்டும் என்பது கனம் உறுப்பினர்களுடைய கருத்தா என்பதைச் சுருக்கமாக தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**திரு. சா. கணேசன் :** கிரிமினல் லாயர் மாதிரி கிராஸ் எக்ஸாமின் பண்ணுகிறார் கனம் முதல் அமைச்சர் என்று இங்கு ஒரு கனம் உறுப்பினர் சொல்லுகிறார். அப்படியெல்லாம் நான் சொல்ல மாட்டேன். கண்டிரோல் சுதந்திராக் கட்சிக்கு விரோதம். கண்ட்ரோலை விரும்புகிறார்களா என்ற முறையில் வினாவை விட்டு, என்னை மடக்கப் பார்க்கிறார் கனம் முதல் அமைச்சர் அவர்கள். சுதந்திராக் கட்சி கண்டிரோல் கூடாது என்று சொல்லவில்லை. ஒழுக்கத்தை கண்டிரோல் செய்யவேண்டும், தவறு செய்யப்படாது, கொள்ளை அடிக்கக் கூடாது, பொய் சொல்லக்கூடாது, பொய்க் கணக்கு எழுதக் கூடாது, வரி ஏமாற்றம் பண்ணக்கூடாது என்று தான் சொல்லுகிறோம். எத்தனையோ துறைகளில் ஒழுக்கஹீனங்கள் ஏற்படுகின்றன. அப்படி ஏற்படக்கூடாது என்று சொல்லுவது கண்டிரோல் இல்லை. கண்ரோல் என்பதற்கு நேரடியான பொருள் அறம் அல்ல; இன்னை துறையில் இன்னது செய் என்று வற்புறுத்துவது கண்ட்ரோல். 'அறம் என்பது டூ நாட்' 'டு' என்று சொல்வது அறம் இல்லை. அறம் என்ற சொல் 'அல்' என்ற பகுதியடியிடையாக வந்தது. இப்படிச் செய்யாதே என்று கட்டுப்பாடு விதிப்பது கண்டிரோல் அல்ல. உணவுப் பயிர் உற்பத்தி செய்கிற இடத்தில் பணப் பயிர் உற்பத்தி செய்யாதே என்று சொல்லுவது சரி. அது அறம். இந்தப் பொருளை உற்பத்தி பண்ணு, அதிக லாபம் கிடைப்பதற்கு வழி வகுக்கிறோம், ஃபாரின் எக்ஸேஞ்சு கொடுக்கிறோம். கரும்பு ஆலை ஏற்படுத்துங்கள் என்று சொல்லுவது தான் தவறு. அதுதான் கட்டுப்பாடு. பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். தயவு செய்து என்னுடைய போக்கை விட்டு என்னுடைய வழியிலிருந்து என்னை இழுத்து வேறு பக்கம் திருப்பிவிட்டுக் கொண்டிருக்கவேண்டாம், நேரம் போதாது.

உப்புக்கு வரி வந்தாகிவிட்டது. அரசாங்கம் இனி, வேறு என்னத்தை விட்டுவைத்திருக்கிறது ? செக் போஸ்டுகளைப்பற்றி சொல்ல விரும்புகிறேன். செக் போஸ்டுகளினால் எவ்வளவோ





கஷ்ட நஷ்டம் ஏற்படுகிறது. நான் சத்தியமாக நம்புகிறேன். மக்களுடைய ஒழுக்கத்தை அது பாழ்படுத்துகிறது என்பது எல்லோருக்கும் தெரியும். நாம் சிலவற்றை நிரூபிக்க முடியாது, சிலவற்றை சொல்ல முடியாது. எல்லா செக் போஸ்டுகளிலும் தானியங்கள் கடந்து செல்லுகின்றன என்பது காணமுடியாத ஒன்று அல்ல, பகிரங்கமாக நடக்கிற உண்மை. அங்கே ரூ. 100 500, 1,000 என்று கொடுத்துவிட்டு தானியங்கள் அந்த செக் போஸ்டுகளை கடக்கின்றன. இதன் மூலம் நிதர்சனமாகத் தெரிவது என்ன 10-30 a.m.
வென்றால் மக்கள் அனைவரையும் குற்ற பரம்பரையாக ஆக்கிய ஒரு கொடுமை.

இரண்டாவதாக, உணவுப் பண்டங்களின் விலைகள் விஷம் போல ஏறியிருக்கிறது. ஏறாமல் என்ன செய்யும் ? ஒரு பொருளை அடைவதற்கு 100 ரூபாய் லஞ்சம் கொடுக்கிறான், அதையும் அந்தப் பண்டத்தின் விலையில்தான் கூட்டுகிறான். ஆகவே, அவன் வாங்கி வியாபாரம் செய்யும் அரிசியிலே, நெல்லிலே, தானியங்களிலே, ஏற்றி விடுகிறான் அந்தச் செலவையும். இதையெல்லாம் மனத்தில் கொள்ள வேண்டும். ஆகவே இந்த செக்போஸ்டுகளை எடுத்து, அதனால் எவ்வளவு நஷ்டம் வந்தால்கூட பரவாயில்லை, ஒழுக்கம் பிழைக்கும், பொய் சொல்லித்தான் ஆகவேண்டும் என்கிற மனோ பாவம் போகும், என்கின்ற வாதத்தை நான் வலியுறுத்துகிறேன். இல்லையென்றால், உள்ளத்திலே தவற்றை வளர்க்கின்ற மனப்பாங்கு நிலைத்து, நின்று, வேரூன்றி வளர்ந்து, செழித்துக் கொழித்து, நாட்டிலே வெறுமனே உண்டுகளித்து உட்கார்ந்திருக்கும் வாழ்வு தான் வேண்டும் என்றாகிவிடும் என்பதை ஆட்சியாளர்கள் பெரு மனத்தோடு கவனித்து, இந்த மாதிரித் தவறுகள் ஏற்படுவதற்கு அரசாங்கம் தூண்டுதலாக, துணையாக, இருக்கின்றது என்கிறதை மாற்றி நல்ல நெறிமுறையை அமைக்க வேண்டும் என்று மன்றாடி பிரார்த்தித்துக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

இருக்கும் வரிகளைப் பார்த்தால், நம் மாநிலத்தில் மிக்க கடுமையாக இருக்கிறது. இன்றைக்கு மண்ணெண்ணெய் என்று எடுத்துக் கொண்டால், அதை என்ன பணக்காரர்களா உபயோகிக்கிறார்கள்? அடுத்து, துணி, பருத்தித் துணி, புகையிலைப் பண்டங்கள், நெருப்புப்பெட்டி, சர்க்கரை இவற்றையெல்லாம் பெரும்பாலும் ஏழை எளியவர்களே அதிகமாக உபயோகிக்கிறார்கள். நாங்கள் வேண்டாம் என்று சொல்லவில்லை, வெல்வெட்டுகள், ஸெடான் கார்கள் போன்றவை மீது போடுங்கள் ஆட்சேபிக்கவில்லை. ஆனால், அன்றாட வாழ்க்கைக்கு சம்பாதிக்கும், ஃபிக்ஸட் இன்கம் க்ரூப், ஒரே நிலை வருவாய் உள்ள மக்களுக்கெல்லாம் இப்படி வரிப் போடுவது சரியாகாது. வியாபாரிகளாக இருந்தால் கொடுக்கிற அளவுக்கு விற்று விடுவார்கள். ஆதலால் இன்றைக்கு ஒருநிலை வருமானம் உள்ளவர்கள் கஷ்டங்களை முக்கியமாகக் கவனிக்க வேண்டும்.

சர்க்கார் அல்லது, ஓரளவு சர்க்கார் துறை என்று கருதக் கூடிய பகுதிகளில் பணியாற்றுகின்ற ஊழியர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு டி.ஏ. கொடுப்பது பற்றி நம் மாநில சர்க்கார் முயற்சித்தது. மத்திய சர்க்காரும் இதற்கு உதவ வேண்டும் என்று

[திரு. சா. கணேசன்] [5th March 1966

வாதாடிக் கேட்டது. அப்படிக் கேட்ட பொழுதே இந்த மாநில சர்க்கார், இந்த ஊழியர்களுடைய டி.ஏ. யை அதிகரிக்கவேண்டும் என்பது முழுக்க முழுக்க நியாயம் என்கிற அடிப்படைக் கருத்தை முற்றிலும் ஏற்றுக்கொண்டு விட்டது. அதன் பிறகு, மத்திய சர்க்கார் இந்த டி. ஏ. ஏற்றத்திற்கு உதவி தாமுடியாது என்று மறுத்த பிறகு, இந்த மாநில சர்க்கார், தன்னுடைய வாதத்தின் முறையையே மாற்றிக் கொண்டு விட்டது, இங்கே நாம் சிறிது சிந்திக்க வேண்டும். அது நியாயமா என்பதை சிந்திக்க வேண்டும். ஒரு செயல் அல்லது ஒரு முறை நியாயம் என்று ஏற்றுக் கொண்டுவிட்டு, பிறகு அதையே திருப்பிப் போட்டு பேசத் தொடங்குவது நியாயமானதுதானா என்று சிந்திக்க வேண்டும். இன்றைக்குப் பல துறைகளில் அவசியம் ஏற்பட்டால், ஒரு துறையிலிருந்து மற்றொரு துறைக்கு மாற்றுவது என்கிற மரபு வேரூன்றி விட்டது. அந்த நிலையில் இந்தப் பிரச்சினையையும் கவனிக்க வேண்டும். இந்த விலையேற்றத்திற்குத் தேவையான அளவு, ஊதியத்தை தங்களுடைய ஊழியர்களுக்குத் தர முயற்சிக்க வேண்டும். ஊழியர் ஊழல் இன்றி, ஒழுங்காக, தவறுகள் இன்றி வாழ வகை செய்யாமல், பிறகு குற்றம் சாட்டுவது நியாயமாகாது. அவர்கள் இஷ்டப்பட்ட அளவு என்று சொல்ல இல்லை; இன்றியமையாத தேவைகளைப் பூர்த்தி செய்யும் அளவுக்குக் கொடுக்க வேண்டும். அப்படி ஊதியத்தைக் கொடுக்காமல், ஒழுக்கம் சிறக்க வேண்டும் என்று எதிர் பார்ப்பது, நியாயமாகாது, தர்மம் ஆகாது. சாத்தியமுமில்லை. ஆகவே, நியாயமான ஊதியத்தை தங்களுடைய ஊழியர்களுக்கு ஆட்சி வழங்க வேண்டும். அப்படியில்லை என்றால், பிற தொழில் துறைகளில் ஊழியர்களுக்கு சம்பளம் இப்படிக்கொடு, அப்படிக்கொடு என்று சொல்ல ஆட்சிக்கு என்ன அதிகாரம் இருக்கிறது, நியாயபூர்வமாக? சட்ட பூர்வமாக இருக்கலாம். இதை நெஞ்சாரச் சிந்தித்துப்பார்க்க வேண்டும். ஆகவே, தங்களுடைய ஊழியர்களுக்கு ஆட்சி அதிகப்படியைக் கொடுக்க வேண்டுவது அவர்களுடைய தலையாய கடமை.

பழைய காலத்தில் ப்ராவிடென்ட் பண்ட் பணங்களை மீட்டுவது, திரும்பப் பெறுவது எதற்காக என்று. வைத்துக் கொண்டிருந்தார்கள். வீட்டிலே ஏதாவது கலியாணம், அல்லது இழவு, அல்லது பிரசவம், அல்லது ஏதோ நோய், என்று இப்படி ஏதோ 4, 5 காரியங்களுக்குத்தான் ப்ராவிடென்ட் பண்டில் கை வைப்பார்கள். அதனால் தான் அதற்கு ப்ராவிடென்ட் பண்ட் என்ற பெயரே வந்தது. ஏதாவது விபத்துக்களுக்காக உதவும் வைப்புத் தொகை என்கிற பொருளிலே இருக்கிறது. இப்பொழுது அந்த நிலை மாறிவிட்டது. அதைச் சீர்படுத்தவேண்டும்.

ஏதோ சிலர் கூறுகிறார்கள், தேர்தலுக்கு முன்னால் ஆட்சி ஏதாவது கொடுத்துவிடுவார்கள் என்று. அப்படிக் கொடுத்தால் கெட்ட பெயர்தான் வரும். இந்த பட்ஜெட் பேச்சிலே தேர்தல் கண்ணோட்டமே எனக்கு இல்லை. யாராவது அப்படி நான் தேர்தல் கண்ணோட்டத்தோடு பேசுவதாக நினைத்தாலும், என்னை அந்த வழியில் இழுக்க வேண்டாம். இன்றைக்கு மக்கள் கஷ்டப்படு



5th March 1966] [திரு. சா. கணேசன்]

கின்ற நிலை இருக்கிறது. அந்த நிலையில் இந்த டி. ஏ. கொடுப்பதை துரிதப்படுத்த வேண்டும், ஆட்சி அப்படிச் செய்ய முன்வர வேண்டும் என்று தெரியப்படுத்துகின்றேன்.

தொழில் துறையை எடுத்துக் கொண்டால், வளர்ச்சியெல்லாம் கூட தடைப்பட்டு இருக்கிறது. அதற்குக் காரணம் என்ன? நாம் இன்றைக்கு ஆழ உழுதற்குப் பதிலாக அகல உழப்புகுந்து விட்டோம். 'expansion without intensification' என்று சொல்லுகிறார்களே அந்த வகையில் செயல்பட ஆரம்பித்து விட்டோம். ஒன்றிலே முனைந்து பூரணமாகச் செயல்பட வேண்டும் என்பதை மறந்து விரிவு படுத்த வேண்டும் என்கின்ற பிரசார மனோபாவம், ஆவல் தான் ஏற்பட்டிருக்கிறது. தரத்தை, செழுமையை முற்றிலும் மறந்து எண்ணிக்கையைப் பெருக்குவதிலேதான் அரசு அக்கறை கொண்டுவிட்டது. இதை ஏற்கனவே கூட உலக பாங்க் சம்பந்தப்பட்டவர்கள் சொன்னார்கள். நிறைவு பெற வேண்டிய விஷயத்தை விட்டு, எண்ணிக்கையிலே உயர்வதைக் கருத்தாகக் கொண்டிருப்பதைக் குறிப்பிட்டுக் காட்ட முடியும். ஒவ்வொரு யூனிட்டாகப் பார்க்கலாம்.

மாதவரம் பால் பண்ணையைப் பொறுத்த வரையில், பால் உற்பத்தி கொஞ்சங்கொஞ்சமாகக் குறைந்து கொண்டே வந்தாயிற்று. இன்னொரு நாற்பதாயிரம் காலன், ஐம்பதாயிரம் காலன் —அது சரியான கணக்கா என்று கணக்குத் தெரியாது—அதிகப்படியாகப் பக்குவம் பண்ணக்கூடிய ஒரு 'ப்ளாண்ட்' வைக்க வேண்டும் என்று ப்ரொபோஸில் வருகிறது. உள்ளதற்கே வேலையைக் காணோம். எதற்காக அதிக ப்ளாண்ட் வைப்பது? உள்ளதற்கு நிறைவு செய்யாமல் தேவை இல்லாமல் வளர்த்துக் கொண்டு போவானேன்? இப்படியே போனால், எங்கே போய்ச் சேரும்? வேண்டியதற்கு முடக்கப் பணம் இல்லை. வேண்டாததற்குக் கொண்டுபோய்க் கொட்ட எண்ணம் இருக்கிறது. இப்படி நியாயமில்லாத ஒரு பொருளாதார நெறியிலே நாம் செல்கிறோம் என்று எனக்குச் சொல்லத் தோன்றுகிறது.

தொழில் பேட்டைகளையெல்லாம் பார்க்கிறோம். சொல்வதற்கே வருத்தமாக இருக்கின்றது. அதில் என்ன இருக்கவேண்டுமோ அதைத் தவிர மற்றவை அதில் பலமாகக் காட்சி அளிக்கின்றன. ஜமீன்தார் பங்களா காம்பவுண்டு சுவருக்கு வண்ணங்கள் எல்லாம் பூசி தடபுடல் பண்ணுவது போல், அதைவிடப் பிரமாதமாக தொழிற் பேட்டைக் காம்பவுண்டு சுவர்களுக்கு டிஸ்டெம்பர் பெயின்ட் அடிக்கப்பட்டிருக்கிறது. அதுவும் வீதிப்புறமுள்ள சுவர்களுக்குக் கூட இப்படி டிஸ்டெம்பர் பெயின்ட் அடிக்கப்பட்டிருந்தது. எந்தத் தொழிற் பேட்டையைப் பார்த்தாலும் சரி, ஏறக்குறைய இப்படித்தான் இருக்கிறது. கட்டடங்கள் தேவை தான். ஆனால், அழகுணர்ச்சியை மட்டும் கொண்டு படாடோபமாகக் கட்டப்படுவானேன்? அழகு உணர்ச்சி வேண்டாம். ஆபாசமாகக் கட்டவேண்டும் என்று நான் சொல்லவில்லை. [திரு. மீ. கலியாணசுந்தரம் அவர்கள் குறுக்கீடு] கனம் அங்கத்தினரவர்களுக்குச் சந்தர்ப்பம் கிடைக்

[திரு. சா. கணேசன்] [5th March 1966

கும்போது அவருடைய கருத்தைச் சொல்லலாம். ஆகவே, இதுமாதிரி அழகுபடுத்தப்படுகிறது மேலும் ஆஸ்பெஸ்டாஸ் ஷீட் போடப்பட்டிருக்கும். கட்டடங்கள் பார்ப்பதற்குப் பிரமாதமான பெரிய ஜன்னா, பால்கனி, கட்டுவது மாதிரி அழகுபடுத்தப்பட்டிருக்கும். தொழிற்பேட்டைக்கு முன்னால் நாலைந்து ஏக்கர் நிலம் இருக்கும். அதில் அருமையான அழகுச் செடிகள் வளர்க்கப்பட்டிருக்கும். 'ஃப்ளவர் பெட்', 'லான்' இவையெல்லாம் போடப்பட்டிருக்கும். இவற்றிற்கு ஒரு நாளைக்குக் குறைந்தபட்சம் மட்டமாக கணக்குப் போட்டுப் பார்த்தால், ஆயிரம் காலன் தண்ணீருக்கு மேல் வேண்டியிருக்கும். சில இடங்களில் பத்தாயிரம் காலன் தண்ணீர் செலவழித்து வளர்க்கப்படக்கூடிய எஸ்டேட்டுகளும் உண்டு. ஆயிரம் காலன் தண்ணீருக்குக் குறையாமல் இந்தத் தேவையில்லாத 'ப்ரின்ஸ் ஆஃப் வேல்ஸ்' போன்ற செடிகளுக்குத் தண்ணீர் செலவழித்துக்கொண்டிருக்கிறார்கள். உணவுப் பொருள்களை உற்பத்தி செய்வதற்குத் தண்ணீர் இல்லை. வயலுக்குத் தண்ணீர் இல்லை, காய்கறித் தோட்டத்திற்குத் தண்ணீர் இல்லை என்று அவதிப்பட்டுக் கொண்டிருக்கும் இந்த நேரத்தில், இப்படிச் செய்வது சரியா? இதை மனத்திலே கொள்ள வேண்டும். உண்மையிலேயே பார்த்தால், தொழிற்பேட்டைகள் என்பவை பட்டறைகள் தானே? அவையெல்லாம் "ஆபாசமாக இருக்கவேண்டும், காற்றோட்டம் இல்லாமல் இருக்கவேண்டும்" என்று, நான் சொல்லவில்லை. வேண்டுமானால், ஐம்பது தூங்குமூஞ்சி மரங்கள் வைத்தால் போதும், மாம்பலச் சாலையைப் போல. ப்ரின்ஸ் ஆஃப் வேல்ஸ், போகன்வில்லா போன்றவற்றை எதற்காகக் கொண்டு வைக்கவேண்டும்? ஏன் அதற்காக தண்ணீரைக் கொண்டுபோய்க் கொட்டிக் கொண்டிருக்க வேண்டும்? அதற்குப் பதிலாகப் பயன்தரும் புளிய மரம் வையுங்கள்; மா, தென்னை நடுங்கள் காய்கறித் தோட்டங்கள் போடுங்கள். பலனை யார் வேண்டுமானாலும் அனுபவிக்கட்டும். தொழிலாளர்கள் வேண்டுமானால் எடுத்துக்கொள்ளட்டும். அல்லது சூபரின்டென்டே வேண்டுமானாலும் எடுத்துக்கொள்ளட்டும். அந்த அளவுக்காவது சிலரின் வயிற்றுப்பாடு தீருமே; தக்காளி செடி கூட வைக்கலாம். அம்மாதிரி வைப்பது நியாயம். காந்திய நெறியிலே, சோஷலிச முறையிலே போகிறோம் என்று சொல்லிக்கொள்ளுகிறோம். அப்படிச் சொல்லிக்கொள்ளுகிறவர்கள் இப்படிச் செய்யலாமா? இதை அரசாங்கமே செய்கிறது என்று நான் குற்றஞ்சாட்டவில்லை. அரசாங்கத்தைச் சேர்ந்த அமைச்சர்கள், பெரிய அதிகாரிகள் இவர்களுடைய கண்ணைக் குளிர வைத்து அதன் மூலமாக மனத்தைக் குளிர வைத்து விடலாம் என்ற நெறியிலே கையாளும் முறையிலே விளைந்த தீய வியாதிகள் என்று தான் இவற்றைப்பற்றி நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்த முறைகளை அகற்ற முயலவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கனம் அங்கத்தினர் அவர்கள், காந்தீய நெறியைப்பற்றி இதிலே குறிப்பிட வேண்டாம். காந்திஜிக்கு இம்மாதிரி (Aesthetic taste) உண்டு. அவர் இதைப் பாராட்டக் கூடியவர். இதில் ஏன் காந்தியை இழுக்கவேண்டும்?



5th March 1966]

**திரு. சா. கணேசன் :** கனம் சபாநாயகர் அவர்களே, திருப்பித் திருப்பிச் சொன்னால், பதில் சொல்லியாகவேண்டிய நிர்ப்பந்தம் எனக்கு வருகிறது. காந்தியடிகளுக்கு (Aesthetic taste) உண்டு. ஆனால், அதே நேரத்தில், பயனுள்ளதைத்தான் அழகு என்று அவர் கருதினார். அதில் அவர் வள்ளுவருடைய கொள்கையைக் கொண்டவர். உடல் அழகைவிட உள்ளத்தின் அழகே அழகு என்ற கொள்கையை உடையவர் அவர். அந்த நெறியிலே சர்க்காதான் அழகு என்று அவர் சொல்லியிருக்கிறார். தாமரையைவிட சர்க்காதான் அவருக்கு அழகாக இருந்திருக்கும். காந்தீயத்தைப் பற்றியெல்லாம் சர்ச்சை செய்ய இடம் இதுவல்ல. அதற்காகப் பட்டிமண்டபம் கட்டி விவாதிப்போம். நானும் காந்தீயத்தைப் பற்றிப் புத்தகங்கள் நிறைய வைத்திருக்கிறேன். மற்றவர்களோடு நானும் விவாதம் செய்து நான் கூறுவதன் உண்மையை நிலைநாட்டத் தயாராக இருக்கிறேன்.

உத்தியோக சிக்கனம் செய்வதைப்பற்றிக் கனம் முதல் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். பெரிதும் வரவேற்கத் தக்கது. இந்தத் தேசத்திலே இப்பொழுது எதெதெற்கெல்லாமோ உச்ச வரம்பு வந்துவிட்டது. இந்த உத்தியோகஸ்தர்களுக்குத்தான் உச்ச வரம்பு இல்லாமல் இருக்கிறது. எங்கே உத்தியோகஸ்தர்களுடைய எண்ணிக்கை கூடுகிறதோ அங்கே வேலை செம்மையாக நடக்காது என்று சொல்லுவார்கள். உத்தியோகஸ்தர்கள் கூடக் கூட வேலை நிறைவேறுவதில்லை. வேலைப் பளு மிகுகிறது. அதிக வேலையை உண்டாக்குகிறது. இந்த உண்மையைப் பல முறை பல துறைகளிலே பலரும் பார்த்திருக்கிறார்கள். நானும் என்னுடைய அனுபவத்திற்கும் ஈடுபாட்டுக்கும் தக்க அளவில் உணர்ந்திருக்கிறேன். இப்பொழுது போகிற போக்கிலே ஒன்றை மறந்துவிடப் படாது. தேவை இல்லாத இடங்களில் பெரிய ஆபீசர்கள் ஆயிரம், இரண்டாயிரம், சம்பளம் வாங்கும் ஆபீசர்கள் இருக்கிறார்கள். யார் பேரிலும் குற்றம் சுமத்த, உள்கோள் கொண்டு, எதையும் சொல்ல நான் விரும்பவில்லை. 15 குமாஸ்தாக்களைத் தூக்கி எறிவார்கள். 15 குமாஸ்தாக்களைத் தூக்கி எறிவதற்குப் பதிலாக ஒரு ஆபீசரை வேண்டாமென்று சொன்னால் 14 பேர்கள் பிழைப்பார்கள். இதைக் கவனிக்கவேண்டும். எத்தனையோ துறைகளில் பெரிய பெரிய சம்பளம் வாங்கிக்கொண்டிருக்கும் உத்தியோகஸ்தர்கள் இருக்கிறார்கள். அதை முதலிலே கணிக்கவேண்டும். அதற்கு மேலே இருக்கும் எல்லாத் துறைகளிலும் எவ்வளவு குறைக்க முடியுமோ அவ்வளவும் குறைக்க வேண்டும். இந்தக் கணிப்புக்காகப் போடப்படுகிற குழு இருக்கிறதே அது சர்க்கார் உத்தியோகஸ்தர்களைக் கொண்ட குழுவாக இருக்கக் கூடாது. அதற்காக அவர்கள் பேரில் நான் குறை சொல்லவில்லை. அப்படியிருந்தால், விளைவு எதிர்பார்ப்பதற்கு முற்றிலும் அனுகுணமான நிலையிலே வரமாட்டாது. ஆகவே, பொதுவாக நல்ல அரசியல் ஞானம், பொருளாதார அறிவு உள்ள, அரசாங்க உத்தியோகஸ்தரல்லாத சில அறிஞர்களைக் கொண்ட குழுவாக அது அமைக்கப்பட வேண்டும். அப்படி இல்லையென்றால், குளிக்கப் போய் சேற்றைப் பூசிக்கொண்ட கதையாக ஆய்விடும். குறைக்கப்போகிறோம் என்று சொல்லி, குறைப்பதற்காக

ஏற்பட்ட குழுவைச் சேர்ந்த இலாகாவுக்குள்ள சிப்பந்திகள், ப்யூன்கள், அடெண்டர்கள் எல்லாம் சேர்ந்து, அந்த வகையில் ஒரு ஐம்பது பேர்கள் கூடச் சேர்ந்துவிடும். ஆயிரத்தோடு இந்த ஐம்பது பேர்களும் கூடிவிடுமே தவிர, குறைந்ததாகக் கொள்ள முடியாது. வேறு இலாக்காவோடு இந்த இலாகாவும் சேரலாம் அல்லது புதிய இலாக்காவைத் தோற்றுவிக்கலாம். இந்த உத்தியோகக் குறைப்புக் குழுவே ஒரு இலாக்காவாகக் கூட மாறி, மற்ற இலாக்காக்களோடு இதுவும் ஒரு இலாக்காவாகிவிடக்கூடும். இதை மனத்திலே கொள்ளவேண்டும் என்றும் நான் சொல்லு கிறேன்.

இனி, நெய்வேலி முதலியவற்றைப் பற்றியெல்லாம் சொல்லப் பட்டது. நெய்வேலியில் 140 கோடி ரூபாய் 1965-ம் வருஷம் டிசம்பர் மாதம் வரையிலும் முடக்கம் செய்யப்பட்ட பணங்கள் என்று தெரிகிறது. உற்பத்தி 50 கோடி டன் வந்திருக்கிறது என்று நமக்குக் காட்டப்படுகிறது. அதன் நிலை என்ன? லாப நஷ்டம் என்ன? யார் யார் என்ன என்ன வேலை செய்துவருகிறார்கள் என்பது மேலே இருக்கிறவர் ஒருவருக்கும் தெரியாது. அப்படிச் சந்தைக்கூட்டம் மாதிரி இருக்கிறதே தவிர, நிரந்தரமான ஆபீஸ் மாதிரி, யார் எங்கே இருக்கிறார்கள், என்ன காரியம் நடக்கிறது என்பதும் அங்கே புரியவே புரியாது. நான் அதிலே நிபுணன் அல்ல. பொருளாதாரக் கணிப்புக்கு நான் போகவில்லை. என்னைப் போல் ஆயிரக்கணக்கானவர்கள் அங்கே வந்துகொண்டிருக் கிறார்கள். டாலர் கரன்சி மிச்சப்படுமா, படாதா என்று தெரி யாது. தொழிற்சாலைக்குரிய வளத்தை, லாபத்தை அல்லது பயனை விளைவிக்கின்ற ஒன்றாக இன்று அது புலப்படவில்லை. விளங்கவில்லை. என்னுடைய கருத்தைப் பொறுத்த வரையில், அது இதுவரை யிலும் செம்மையான காரியத்தைப் பண்ணவில்லை. எனக்கு வேடிக் கையாக இருக்கிறது. பிரமாதமாக இரும்பை உருக்கக்கூடிய கரி தருகிறது என்று சொல்லிப் பறைசாற்றிவிட்டு, இப்பொழுது அடுப்புக் கரியைத் தந்திருக்கிறது. அதுதான் இதுவரை கண்டிருக் கிற பெரும் பலன். (கனம் திரு. வெ. ராமையா: மின்சாரம்) ஏதோ கொஞ்சம் மின்சாரம் வருகிறது. எல்லாவற்றையும் கணக்கு போடவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். மின்சாரத்தை அந்தத் துறையில் வைக்காமல் வேறு துறையிலே எடுத்து வைத் துக்கொண்டு, கணக்குப் பார்த்தால் மின்சாரத்திற்காகப் போடப் படுகிற நிலக்கரி எவ்வளவு, இந்த நிலக்கரியின் விலை எவ்வளவு, நிலக்கரியினால் உற்பத்தி செய்யப்பட்ட மின்சாரத்திலிருந்து வருகிற வருமானம் எவ்வளவு என்று பார்த்தால், நிலக்கரி விலைக் கேற்ற அளவுக்கு மின்சார வருமானம் வரவில்லை என்பதைப் புலப் படுத்தி விட முடியும். இதையெல்லாம் பார்க்கவேண்டும் என்று நான் சொல்லத்துணிகிறேன்.

தங்கக் கட்டுப்பாட்டினால் ஒரு பலனும் இல்லை. எங்கே பார்த் தாலும் தீமை தான் ஏற்பட்டது. கஷ்ட நஷ்டம் தான் ஏற்பட்டது. தங்கக் கட்டுப்பாட்டினால் பாதிக்கப்பட்ட தொழிலாளர்களின் புனர்வாழ்விற்காக சுமார் இருபது கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டி ருக்கிறது. அது ஒரு வகையில் நஷ்டம். சேல்ஸ் டாக்ஸ் முதலான வற்றில் வந்துகொண்டிருந்தது தங்கக் கட்டுப்பாட்டுக் காலத்



திற்குப் பிறகு வராமல் போன வகையில் சுமார் முப்பது கோடிக்கு மேலே என்று கணக்கிடப்படுகிறது. அது வராத வகையில் ஏற்பட்ட நஷ்டமாகும். இனி வருமான வரியில் இதுவரையில் வந்துகொண்டிருந்தவை இந்தத் தங்கக் கட்டுப்பாட்டுச் சட்டத் தினால் வராமல் போனது 27 கோடி, இந்தச் சட்டத்தை நிலை நாட்ட, காக்க அமைக்கப்பட்ட அதிகாரிகளுடைய சம்பள வகையில் அரசாங்கத்திற்குச் செலவானது 25, 26 லட்சம் ரூபாய். ஆக மொத்தக் கணக்கில் தங்கக் கட்டுப்பாட்டினாலே ஏற்பட்டுள்ள நிகர நஷ்டம் இதுவரையில் 77 கோடிக்குக் குறைச்சலில்லை. பின்னாடி வருவனவற்யையும் சேர்த்துக்கொள்ள வேண்டும். இது புண்ணியமா, புருஷார்த்தமா? ஒன்று மக்களுக்கு நன்மை பயக்க வேண்டும்; அல்லது ஆட்சிக்கு வருமானத்தைக் கொடுக்க வேண்டும். இரண்டும் இன்றி "இது எங்கள் கொள்கை" என்று சொல்லிக்கொண்டு நாட்டுக்கும், நாட்டு மக்களுக்கும், நாட்டின் பொருளாதாரத்திற்கும் துயரப்பாடு செய்வது நியாயம் அல்ல, நெறி அல்ல, முறையும் அல்ல. இது மத்திய சர்க்காரின் பொறுப்பு என்று தட்டிக்கழிக்கப்படாது. தங்கத் தொழிலாளர்கள் என்று மொத்தமாக எடுத்துப் பார்த்தால் தமிழகத்தில் தான் அதிகம். பர்மா அகதிகள் என்கிறபோது எப்படி நம்மை அதிகமாக பாதிக் கிறதோ, அப்படித்தான் தங்கக் கட்டுப்பாடு என்கிற போது நம்மைத்தான் அதிகம் பாதிக்கிறது என்பதை நாம் மறந்துவிடப் படாது. 1951-52 ஆண்டு மத்திய சர்க்காரின் தீர்வை வருமானம் எப்படி இருந்தது, இன்றைக்கு எப்படி இருக்கிறது என்று பார்த் தால் மண்ணெண்ணெயின் மூலமாக அன்றைக்கு அவர்களுக்கு 28 லட்சம் ரூபாய் வருமானம் இருந்தது. இன்றைக்கு 49 கோடி ரூபாய் வருமானம். சர்க்கரையை எடுத்துக் கொண்டால் அன்றைக்கு அவர்களுக்கு வந்த வருமானம் ஆறு கோடியே 46 லட்சம் ரூபாய். ஆனால் இன்றைக்கு 53 கோடியே 66 லட்சம் ரூபாய். தீப்பெட்டியின் மூலம் முன்னர் 8 கோடி சுமாருக்கு வருமானம் இருந்தது. இப்போது 23½ கோடி ரூபாய் வருமானம் வருகிறது. புகையிலையை எடுத்துக்கொண்டால் அன்றைக்கு 32 கோடி ரூபாய் வருமானம். இன்றைக்கு 88½ கோடி ரூபாய் வருமானம் வருகிறது. தேயிலை வரி முன்னே 3,36 லட்சம், இப்போது 17 கோடி ரூபாய். துணிமணிகளின் மீதான வரி முன்பு 9¼ கோடி. இப்போது 48¾ கோடியாகும். இந்தமாதிரியாக மண்ணெண்ணெய், சர்க்கரை, தீப்பெட்டி, புகையிலை, தேயிலை, துணிமணிகள் ஆகியவற்றின் மீது போடப்பட்டிருக்கிற வரிகள் எல்லாம் பணக்காரர்களைப் பாதிக்கின்றவை அல்ல, முழுக்க, முழுக்க, ஏழை மக்களை பாதிக்கின்றவையாகும்.

இறுதியாக நான் ஒன்றைப் புலப்படுத்திக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன். இன்றைக்கு உணவுப் பிரச் சனை மிக முக்கியமாக இருப்பதால் அத்துறைக்கு முக்கிய பொறுப் பாளியாக இருக்கக் கூடிய ஒருவர் கருத்தை நாம் கவனித்துப் பார்க்கவேண்டும். முக்கியமாக திட்டக் கமிஷனில் விவசாயத் துறைக்கு பொறுப்பாளியாக இருந்துகொண்டிருக்கிற திரு. வி. கே. ஆர். வி. ராவ் குறிப்பிட்டுள்ளதைப் படித்தால் போதும் என்று நினைக்கிறேன்.

[திரு. சா. கணேசன்] [5th March 1966

"கூட்டுப்பண்ணை, கூட்டுறவுப்பண்ணை, சர்க்கார் பண்ணை ஆகியவை மூலம் விவசாயம் சீர்கெட்டுவிட்டது. உருப்படவும் மாட்டாது என்பதைத்தான் நிகழ்ச்சிகள் புலப்படுத்திக்கொண்டிருக்கின்றன".

என்பதாக அவர் கூறியிருக்கிறார். என்னைப் பொறுத்தவரையில் கூட்டுறவுத்துறையினிடத்தில் விரோதமோ காதலோ கிடையாது ஆனால் இன்றைக்கு நூற்றுக்கு 99.9 பங்கு அவற்றினால் தீமையே விளைந்து வருகிறது என்பது கண்கூடு. ஆகவே அத்தகைய முயற்சியை கைவிடவேண்டுமென்று மனமார, இருதயசுத்தியுடன் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த நிலையில் இந்த பட்ஜெட்டை அணுகி பல விஷயங்களைப் படிப்பதற்கும் உண்மை நிலையை எடுத்துச் சொல்லி விமர்சனம் செய்வதற்கும் ஒரு வாய்ப்பாக பட்ஜெட் உரையை நிகழ்த்திய கனம் முதல் அமைச்சர் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, பேசுவதற்கு எனக்குச் சந்தர்ப்பம் அளித்த சபாநாயகர் அவர்களுக்கும் என் நன்றியைக் கூறி முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* திரு. இரா. நெடுஞ்செழியன் : மதிப்பிற்குரிய அவைத்தலைவர் அவர்களே, 1966-67-ஆம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையை இந்த அவையின் ஆய்வுக்கு கனம் முதல் அமைச்சர் அவர்கள் வைத்துள்ளார்கள். அதுபற்றி கடந்த 6 நாட்களாக தொடர்ந்து விவாதம் நடைபெற்று வருகிறது. பொதுவாக நிதி நிலை அறிக்கை வரப்போகிறது என்றால் புது வரி வருமோ என்ற அச்ச உணர்வும், தாங்க முடியாத வகையில் இருக்கும் வரிச்சுமை ஏதாவது குறைக்கப்படலாமோ என்கிற ஆசை உணர்வும் இருப்பது உண்டு. பட்ஜெட் அறிக்கை என்பது மிக முக்கியமான அறிக்கை என்பதை நாம் உணர்வோம். இந்த அறிக்கையில் புது வரிகள் போடப்படவில்லை என்பதை ஆளும் கட்சியினர் குறிப்பிட்டார்கள். போடப்பட்டிருக்கிற வரிச்சுமை இறுத்துகின்ற அளவில் சிலபல நீக்கப்படலாமோ என்று பலர் நினைத்தார்கள் என்றாலும் அதுபோல இதுவரை நீக்கப்பட்டதற்கு உதாரணம் இல்லை. இந்த ஆண்டும் அத்தகைய முயற்சி எதுவும் மேற்கொள்ளப்படவில்லை என்பதையும் நாம் அறிவோம். இந்த ஆண்டு நிதி நிலை அறிக்கையில் புது வரிகள் போடப்படவில்லை என்றாலும் இந்த வரவுசெலவு திட்டத்திற்கு ஈடுகட்ட சென்ற ஆண்டே 8 கோடி ரூபாய்க்குப் புதுவரிகள் விதிக்கப்பட்டுவிட்டன என்பதை நாம் அறிவோம். முதல் அமைச்சர் அவர்களே இதைத் தம் உரையில் "நிதிக் கமிஷன் செய்த பரிவுரைகளின் பயனாய், இம்மாநிலத்துக்குரிய வரிப் பங்கு அதிகரித்தாலும், கடந்த நவம்பரில் இம் மன்றம் ஏற்றுக்கொண்ட கூடுதல் வரிவிதிப்பின் பயனாய் வருவாய் அதிகரித்தாலும் நடப்பு ஆண்டில் துண்டு விழுந்த பெருந்தொகை வரும் ஆண்டில் மறையுமென நம்புகிறோம்" என்று குறிப்பிட்டுள்ளார்கள். இது தேர்தல் ஆண்டு பட்ஜெட் ஆனபடியினாலே முதல் அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டு பட்ஜெட்டில் வரி விதிப்பு இருக்கக்கூடாது என்பதற்காகத்தான் கடந்த நவம்பர் மாதத்திலேயே தனியாக வரி விதிப்பு மசோதாக்களைக் கொண்டு வந்து தந்திரமாக நிறைவேற்றிக்



5th March 1966] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

கொண்டு விட்டார்கள். வரி விதிப்புக் கொள்கை பட்ஜெட்டோடு இணைந்து வருகிற ஒன்று. ஆயினும் இவ்வாண்டு முன்கூட்டியே இந்த பட்ஜெட்டி வரி விதிக்கப்பட்டுவிட்டதனாலே வரி விதிப்பு இல்லை என்றாலும் ஏற்கனவே போடப்பட்டுள்ள புது வரிகள் இந்தத் தேவையை ஈடுகட்டிக்கொள்ளும். அது மட்டுமல்லாமல் 11-00 a.m.
போட்டிருக்கிற வரிவிதிப்பினுடைய கொள்கையின் அடிப்படையிலே பார்க்கிறபோது திட்டமிடுகின்ற மதிப்பீடுத் தொகைக்கும் உண்மையாக வரக்கூடிய தொகைக்கும் இடையே வேறுபாடுகள் இருக்கத்தக்க அளவிலே மதிப்பிடுதல் பல ஆண்டு காலமாக இருந்து வருகிறது. மதிப்பிடுகின்ற பொழுதே குறைத்து மதிப்பிடுவதன்மூலம் அதிகமான வருவாயைப் பெறுகின்ற அளவுக்கும் அதன் மூலம் செலவுகளை ஈடுகட்டிக் கொள்கின்ற அளவுக்கும் மதிப்பிடுகின்ற தன்மையை உண்டாக்கிக்கொள்கிறார்கள்; அல்லது மதிப்பிடுகின்ற தன்மைகளில் தவறுகள் ஏற்பட்டிருக்கக்கூடும். நிதி இலாகாவினர் மதிப்பிடுகின்ற பொழுது அந்தத் தன்மைகளில் தவறுகள் ஏற்பட்டிருக்கும் என்று சொல்வதற்கு இல்லை. ஆகவே, மதிப்பிடும்பொழுதே குறைத்து மதிப்பிட்டு அதிகமான வருவாயைப் பெற்று செலவுகளை ஈடுகட்டிக் கொள்கிறார்கள். 1959-60-ஆம் ஆண்டில் மதிப்பிடப்பட்ட தொகை 73 கோடியே 6 லட்சம் ரூபாய். உண்மையிலேயே பெறப்பட்டது 81 கோடியே 11 லட்சம் ரூபாய், கூடுதல் 8 கோடியே 5 லட்சம் ரூபாய். 1960-61-ஆம் ஆண்டில் மதிப்பிடப்பட்டது 80 கோடியே 87 லட்சம் ரூபாய் கிடைத்தது 92 கோடியே 3 லட்சம் ரூபாய் கூடுதல் 11 கோடியே 16 லட்சம் ரூபாய் 1961-62-ஆம் ஆண்டில் எதிர்பார்க்கப்பட்டது 87 கோடியே 50 லட்சம் ரூபாய் பெறப்பட்டது 92 கோடியே 18 லட்சம் ரூபாய், கூடுதல் 4 கோடியே 68 லட்சம் ரூபாய். 1962-63-ஆம் ஆண்டில் எதிர்பார்க்கப்பட்டது 113 கோடியே 15 லட்சம் ரூபாய், கிடைத்தது 117 கோடியே 97 லட்சம் ரூபாய், கூடுதல் 4 கோடியே 82 லட்சம் ரூபாய். 1964-65-ம் ஆண்டில் கூடுதல் 7 கோடியே 34 லட்சம் ரூபாய். ஆகவே மதிப்பீடுகள் யாவும் குறைத்து மதிப்பிடப்பட்டு, அதிக வருமானத்தைப் பெறக்கூடிய அளவிலேதான் அமைந்திருக்கின்றன. இந்த நிதி நிலை அறிக்கை அந்த வகையில் பார்த்தால் சிறந்த முறையில் தயாரிக்கப்பட்டிருக்கிறது என்று சொல்வதற்கில்லை. சாதாரண மக்களைத் தாக்குகிற அளவுக்கு மறைமுகமாக வரிகள் வந்து விழுகின்றன. இந்த நிதி நிலை அறிக்கையில் வரிகள் என்று பெயர் குறிப்பிடவில்லை வரிகள் விளைவுகளை விதிக்கின்ற காலத்திலே பாகிஸ்தான் படையெ வரிகளின் விளைவுகளை நாடு ஏற்றுக் கொண்டுதான் தீரவேண்டும். அந்த வரிகளை விதிக்கின்ற காலத்திலே பாகிஸ்தான் படையெடுப்பு சூழ்நிலையில் சில பல வரிகளை ஏற்றுக்கொள்ளுகின்ற நிலைமைகள் ஏற்பட்டாலும் கூட நிலவரி, தண்ணீர் தீர்வை போன்ற வரிகளின்மேல் போடப்பட்ட அதிகமான வரிகளை எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் எல்லோரும் கண்டிக்கத்தக்க முறையில் தங்களுடைய கருத்துக்களை அப்பொழுதே இங்கே எடுத்து வைத்தார்கள். அவர்கள் அப்பொழுது எடுத்து வைத்த கருத்துக்களை நிறைவேற்றாமல் இருக்கும்பொழுது, புதிய வரிகளைப் போடவில்லை என்று இப்பொழுது சொல்வதற்கு இடமில்லை.

தனிநபர் வருமானத்தை எடுத்துக்கொண்டு பார்த்தால், இந்த மாநிலத்தின் தனி நபர் வருமானம், அகில இந்திய தனி நபர் வருமானத்தைவிடக் குறைவான அளவில் இருப்பதையும், ஆனால் அதேநேரத்தில் அகில இந்திய அடிப்படையிலே விதிக்கின்ற வரி விதிப்பிற்கும் அதிகமாக இந்த மாநிலத்தினுடைய வரிவிதிப்பு இருக்கிறது என்பதையும் உணருகிறோம். அகில இந்திய அடிப்படையிலே கிடைக்கின்ற தனிநபர் வருமானத்தைக் காட்டிலும் குறைந்தும், வரிகள் அதிகமாகவும் இந்த மாநிலத்தைப் பொறுத்த வரையில் இருக்கிறது என்பதை நாம் எல்லோரும் உணர்வோம். 1964-65-ஆம் ஆண்டிலே அகில இந்திய வரி விதிப்பு 14.48 ரூபாய் என்றால், தமிழகத்தினுடைய வரி விதிப்பு 18.95 ரூபாய் என்ற அளவுக்கு அதிகமாக இருக்கிறது. ஆகவே, அகில இந்திய வரிவிதிப்பைக் காட்டிலும் கூடுதலாக இந்த மாநிலத்தினுடைய மக்களின் மேல் சுமத்தப்படுகிறது. வரி விதிப்பு அதிகமாக இருக்கிற காரணத்தால் வரி விதிப்பு மக்கள் தாங்கமுடியாத அளவுக்கு அமைந்திருக்கிறது. நேரடியாக வரிகள் வசதியுள்ளவர்களையும், வாய்ப்பு உள்ளவர்களையும் சென்று தாக்காமல் வசதியற்றவர்களையும் சாதாரண மக்களையும் பாதிக்கக்கூடிய அளவுக்கு அமைந்திருப்பதைப் பார்க்கிறோம். ஒரு விவசாயக் குடும்பத்தை எடுத்துக்கொண்டால், புள்ளிவிவரங்கள் கூறுவதைப் பார்த்தால், 4½ மக்களைக் கொண்டது ஒரு விவசாயக் குடும்பம் என்று புள்ளி விவரம் கூறுகிறது. அந்தக் குடும்பத்தில் ஒரு ஆண்டுக்கு வருகின்ற வருமானத்தைவிட, செலவினம் தான் அதிகமாக இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. முந்நூற்றுச் சில்லரை ரூபாய் வருமானம் ஒரு ஆண்டுக்கு வருகிறது என்றால், நானூற்றுச் சில்லரை ரூபாய் வரையில் செலவு ஆகிறது என்று கூறப்புடுகிறது. ஆண்டுக்கு 112½ ரூபாய் வரை அந்தக் குடும்பம் கடன் வாங்கிச் செலவழிக்க வேண்டிய நிலைமையில் இருக்கிறது. தொடர்ந்து நாட்டு மக்களினுடைய நிலைமை, விவசாயிகளுடைய நிலைமை, கிராமத்திலே உள்ள சாதாரண மக்களுடைய நிலைமை மிகவும் நெருக்கடியாக இருக்கிறது. ஒருவர் கூறினார், இந்தியா, வளம் மிக்க நாடு, ஆனால் இந்தியர்கள் மிக ஏழைகளாக வாழ்கிறார்கள் என்று. நம்முடைய நாட்டிலே இயற்கை வளங்களைப் பார்க்கிற பொழுது இங்கே இருக்கின்ற வளங்களைவிடக் குறைந்த வளங்களைக் கொண்டே நாடுகள் பல இருக்கின்றன. வளமிக்க நாடுதான் ஆனால் ஏழைகள் அதிகமாக இருக்கிறார்கள் என்று கூறியிருக்கிறார். இங்கே இருக்கின்ற வளங்களைப் பயன் படுத்திக் கொள்ளமுடியாத அளவில், பயன் செய்து கொள்ளாத அளவில் இயற்கை வளங்கள் விடப்பட்டு இருக்கின்றன என்பதைச் சுட்டிக்காட்டினார்கள்.

கடந்த இரண்டு திங்களுக்கு முன்னால் போடப்பட்ட நிலவரி, தண்ணீர்த்தீர்வை இவைகளின் மேல் போடப்பட்ட வரிகளின் சுமை, ஏழை எளியவர்களின் மேல் விழுந்து கொண்டுதான் இருக்கிறது. மற்றைய ஆண்டுகளைவிட இந்த ஆண்டு விவசாயிகளுடைய நிலைமை மிக மோசமாக இருக்கிறது என்பதை எல்லாக் கட்சியைச் சேர்ந்தவர்களும் தெரிவிக்கின்ற முறையிலே அவர்





களுடைய கருத்துக்களை எடுத்துவைத்தார்கள் என்பதைத் தெளிவாக உணர்கிறோம். பருவ மழை தவறியதன் காரணமாக விவசாயிகளுடைய நிலைமை மிக மிகக் கெட்டிருக்கிறது என்பதையும் உணர்கிறோம். மேலும் மேலும் உணவு உற்பத்தியைப் பெருக்கக்கூடிய அளவிலே அவர்களுடைய உழைப்புத்தான் மற்றையத் துறைகளிலே உள்ளவர்களை வாழ்விக்கக்கூடிய அளவிலும், நாட்டினுடைய வருமானத்தை உயர்த்தக்கூடிய அளவிலும், ஏற்றுமதியை அதிகரிக்கக்கூடிய அளவிலும், அன்னியச் செலாவணியை அதிகமாகக் கிடைக்கச் செய்யக்கூடிய அளவிலும் இருக்கக்கூடியவர்களுக்கு ஊக்கத்தைத் தரக்கூடிய முறையிலும் நாம் வரிகளைப் போடக் கூடாது என்பதைச் சொல்லியிருக்கிறோம். விவசாயிகள் உற்பத்தியைப் பெருக்குகின்ற அளவுக்கு ஊக்கமும் ஆக்கமும் அவர்களுக்குத் தரவில்லை என்ற நிலைமையை எடுத்துக் காட்டினார்கள்; அவர்களுக்கு உற்சாகத்தை அளிக்க இந்த அரசாங்கம் தவறியிருக்கிறது என்பதையும் பலரும் சுட்டிக் காட்டினார்கள். இந்த ஆண்டு 182 கோடி ரூபாய் வருமானம் எதிர்பார்க்கப்படுகின்ற இந்த அறிக்கையிலே விவசாயிகளைப் பொறுத்தவரையில், இன்று மிக இன்றியமையாததாக இருக்கின்ற அத்தனை பேர்களுடைய கவனத்தையும் ஈர்த்துக்கொண்டிருக்கின்ற, எந்தப் பிரச்னையில் அதிக கவனம் செலுத்தப்படவேண்டுமென்று சொல்லப்படுகிறதோ அந்தப் பிரச்னையில் இதுவரை ஊக்கம் தருகின்ற முயற்சிகள் மேற்கொள்ளப்படவில்லையென்றாலும் இந்த ஆண்டாவது அதிகமாகப் பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறதா என்று பார்க்கும்பொழுது விவசாயத்திற்கு அதிகமாக ஒதுக்கப்படவில்லை என்பதைத்தான் அறிக்கை காட்டுகிறது. உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கான காரணங்கள் சொல்லப்படும்பொழுதே, போட்ட இலக்கைக் கூட எட்ட முடியாத அளவுக்கு உணவு உற்பத்தி இருக்கிறது என்பதை கவர்னர் அவர்கள் உரையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்த ஆண்டிலே நாம் எல்லாவற்றையும் எதிர்பார்ப்பது இதைப் பொறுத்துத்தான். உணவைப் பொறுத்த அளவில் அன்னியச் செலாவணியைக் குறைப்பதற்கும், இந்த நாட்டினுடைய தங்கம் பிறநாட்டுக்குச் செல்லக் கூடாததின் இன்றியமையாமையை நாம் உணர்கிறோம்.

இந்த ஆண்டு நீர்ப்பாசனத் திட்டங்களை அதிகரிப்பதில் நாம் கவனத்தைச் செலுத்த வேண்டும். இந்த ஆண்டு பட்ஜெட்டிலே ஊக்கம் தருவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படவில்லை என்பதைக் குற்றஞ்சாட்டி, நான் மட்டுமல்ல, எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களும் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். மன்ற உறுப்பினர் திரு. நடராஜன் அவர்களும் ஏட்டிலே தெளிவாக கூறியிருக்கிறார்கள். விவசாயத்தைப் பெருக்குவதற்கான முயற்சிகளில் ஈடுபடவேண்டுமென்ற வகையில் புள்ளிவிவரங்கள் தரப்பட்டாலும்கூட நடைமுறையில் அவை நல்ல முறையில் செயல்முறைக்குக் கொண்டுவரப்பட்டு நன்மைகள் தரக்கூடிய நிலைமை இல்லை. இராமநாதபுரம், திருநெல்வேலி, மதுரை மாவட்டங்களில் இயற்கை அமைப்பின் வளத்தை அடிப்படையாக வைத்துப் பார்க்கும்போது நல்ல பல வாய்ப்புக்கள் ஏற்படக்கூடிய சூழ்நிலைகள்

இருக்கின்றன. தென் மாநிலங்களைப் பொறுத்தவரையில் தனியாகத் திட்டங்கள் தீட்டப்படவேண்டுமென்று எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. நாளுக்கு நாள் பலர் இதே கருத்தை எடுத்துச் சொல்லிக்கொண்டு வருகிறார்கள். மாநில அளவிலே திட்டங்கள் போடுவது மட்டுமல்ல, அகில இந்திய அளவிலே திட்டங்கள் தீட்டப்படுவது மட்டுமல்ல, மண்டல அடிப்படையிலேயும் திட்டங்களைத் தீட்டவேண்டுமென்ற முயற்சிகளில் ஈடுபடுவதின் மூலம் எதிர்பார்க்கின்ற பலன்களை நாம் பெற முடியும். இன்னும் ஒரு மாநிலத்திற்கும், மற்றொரு மாநிலத்திற்கும் இடையேயுள்ள பிரச்னைகள் தீர்க்கப்படவில்லை. ஒரு மாநிலத்திற்கும் மற்ற மாநிலங்களுக்கும் இடையேயுள்ள மாச்சரியங்கள் அகற்றப்படவில்லை. ஒரு மாநிலத்திற்கும் அதனுடைய அண்டை மாநிலத்திற்கும் ஒப்பந்தங்கள் ஏற்படாத காரணத்தால் இயற்கை வளங்களைப் பயன்படுத்த முடியாத நிலைமை இருந்து வருகிறது. மாநில அளவிலே தீட்டப்படுகின்ற திட்டங்களுக்கும், அகில இந்திய அடிப்படையிலே தீட்டப்படுகின்ற திட்டங்களுக்கும் குந்தகம், பாதகம் ஏற்படாத அளவில் மண்டல அளவில் திட்டங்களை நிறைவேற்றவேண்டும். ஏற்கனவே ஐந்து மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது; தென் மண்டலத்தில் தமிழ்நாடு, ஆந்திரம், கர்நாடகம், கேரளம் என்ற நான்கு மாநிலங்களும் இருக்கும். அந்த முடிவுகள் நடைமுறைப்படுத்தப்படாமல் இருக்கின்றன. அந்த அளவில் திட்டங்கள் தீட்ட முயற்சி செய்யவேண்டும். இந்த நான்கு மாநிலங்களிலே, உணவுப் பிரச்சினையைப் பொறுத்தவரை உபரியான மாநிலம் எது, பற்றாக்குறை மாநிலம் எது என்பதையெல்லாம் ஆராய்ந்து, குறிப்பிட்ட அடிப்படையில் அந்தந்த மாநிலங்களின் உரிமைகள் பாதிக்கப்படாத நிலைமையில் ஒரு ஒப்பந்தத்தைச் செய்து கொள்ளவேண்டும். கேரளாவில் பயன்படாத தண்ணீர் முழுவதையும் நம்முடைய மாநிலத்திற்குக் கொண்டு வரலாம். இருக்கிற வசதிகளை இரு சாராரும் பயன்படுத்திக் கொள்ளுகிற வகையில் இந்த மாநிலத்திற்குத் தண்ணீரைப் பெற்றுக் கொண்டு நம்முடைய மாநிலத்திலிருந்து கேரள மாநிலத்திற்கு மின்சாரத்தைக் கொடுக்கலாம். அவ்வாறு மின்சாரத்தைக் கேரளத் தண்ணீருக்கு ஈடாகக் கொடுக்க முடியும் என்று பொருளாதார நிபுணர்கள், ஆலோசகர்கள் கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள். இதிலே அதிகக் கவனம் செலுத்தப்பட வேண்டும்.

மாநில அளவிலே திட்டங்கள் போடுவதோடு மாவட்ட அளவிலும் முரண்படாத வகையிலே திட்டங்களைத் தீட்டினால் ஆங்காங்கு இருக்கிற வேலை இல்லாத மக்களுக்கு அவர்களுடைய மாவட்டத்திலேயே வேலை வாய்ப்புக்கு வழி செய்ய முடியும். தொழில் வளர்ச்சியில் ஒரு மாவட்டம் வளர்ச்சியடைந்து இன்னொரு மாவட்டம் வளர்ச்சியடையாத நிலை இருக்குமானால் அந்த மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் தொழில் வளர்ச்சி பெற்ற மாவட்டங்களை நோக்கிச் செல்ல வேண்டிய நிலை ஏற்படுகிறது. அந்தந்த மாவட்டங்களிலே தொழில் வளர்ச்சி பரவலாக ஏற்படாமல் சென்னை, கோயம்புத்தூர் போன்ற மாவட்டங்களில் மட்டும் தொழில்கள் வளர்ந்து கொண்டே போகுமானால், அந்த மாவட்டங்கள் நோக்கி மற்ற மாவட்ட மக்கள் வந்து குடியேறுகிற





நிலை ஏற்படுகிறது. இதனால் சென்னை, கோயம்புத்தூர் போன்ற நகரங்களில் நெருக்கடி ஏற்பட்டு குடிதண்ணீர்ப் பிரச்சினை, வீட்டு வசதிப் பிரச்சினை போன்ற பல்வேறு பிரச்சினைகள் ஏற்படுகின்றன. ஆகவே, இந்த நிலைமைகள் ஏற்படாமல் இருக்க மாநில அளவிலே திட்டங்கள் தீட்டுவதோடு கூட, அந்தத் திட்டங்கள் பாதிக்கப்படாத அளவுக்கு மாவட்ட அளவிலும் திட்டங்கள் தீட்டி இரண்டுக்கும் தொடர்பும் பொருத்தமும் உள்ளதாகச் செய்து அந்தந்த மாவட்டத்தில் தொழில் வளர்ச்சிக்கு வழி செய்தால் திட்டங்களின் பலனை மக்கள் பரவலாகப் பெற முடியாத நிலைமைகள் ஏற்படா.

அந்த வகையிலே திட்டங்களைத் தீட்டும்போது ஏற்றுக் கொண்டுள்ள சமதர்மக் கருத்தின் அடிப்படையில் திட்டங்கள் அமைகின்றனவா என்று பார்க்க வேண்டும். திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரை சமதர்மக் கருத்தை ஏற்றுக் கொண்டிருக்கிறது. எந்தக் குறிப்பிட்ட தொழிலில் இருந்து வருகிற வருமானமானாலும் அது தனி நபர்களுக்குச் செல்லாமல் அரசுக்கு வருமானால் அது அத்தனை பேருக்கும் பயன்படும். உற்பத்தி செய்யப்படுகிற பொருள்களும் வசதியற்றவர்களுக்கும் பகிர்ந்து அளிக்கப்படுகிற நிலைமை உருவாகும். அடித்தளத்தில் இருக்கிறவர்கள் உயருகிற அளவுக்கு அந்த வருமானம் போய்ச் சேருகிற வகையில் திட்டங்களின் விளைவுகள் அமைய வேண்டும். அந்த அடிப்படையில் சமதர்மக் கருத்துக்கள் நிறைவேற்றப்பட வேண்டுமென்பதில் மறுப்பு இல்லை; திராவிட முன்னேற்றக் கழகம் அதை வலியுறுத்தி வருகிறது. ஆனால் போடப்பட்டுள்ள திட்டங்களைப் பொறுத்த நடவடிக்கைகள், செயல் முறைகள் ஆகியவற்றைப் பார்க்கும்போது சமதர்மக் கருத்துக்கு மாறாக, அந்த நோக்கத்திற்கு மாறாகச் சென்று கொண்டிருக்கிறது என்பதை நாம் காண்கிறோம். அந்த நோக்கம் நிறைவேற்றப்படக்கூடிய அளவுக்குத் திட்டங்களின் பலன் அமையவில்லை என்றுதான் எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள் அத்தனை பேரும் புள்ளிவிவரங்களோடு தெளிவுபட எடுத்துக் கூறியிருக்கிறார்கள். சமதர்ம நோக்கத்தை அரசு கொண்டிருந்தாலும் கூட, போடப்படுகின்ற திட்டங்களின் மூலம் வரக்கூடிய வருமானம் முழுவதும் ஒருசிலரிடத்திலே போய்க் குவியும் நிலைமை தான் இருக்கிறது. ஏழைகள் மேலும் ஏழையாகவும், வசதி படைத்தவர்கள் மேலும், மேலும் வளம் பொருந்தியவர்களாகவும் உள்ள நிலைமைதான் திட்டங்களினால் ஏற்பட்டிருக்கின்றன. இந்தக் குற்றச்சாட்டுகளை எல்லாம் எதற்காக எடுத்துச் சொல்கிறோம் என்றால், ஆளுங்கட்சியின் மீதுள்ள மாச்சரியத்தின் காரணமாக அல்ல; இந்தக் குறைகளைப் பற்றி ஆளுங்கட்சியைச் சேர்ந்த பலரும் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். அகில இந்தியக் காங்கிரஸ் கட்சித் தலைவர் அவர்களே கூட இதைப் பற்றித் தெளிவுபட எடுத்துக் கூறியிருக்கிறார்கள். அவரே சொல்லியிருக்கிறார் என்று சொல்லும்போது இந்தப் பிரச்சினையிலே எவ்வளவு முக்கியத்துவம் அமைந்திருக்கிறது என்பதை உணர வேண்டும். அண்மையில் நடந்த அகில இந்தியக் காங்கிரஸ் மாநாட்டில்,

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [5th March 1966

காங்கிரஸ் கட்சித் தலைவர் அவர்கள் பேசியிருப்பதைப் பார்க்கும்போது, எதிர்க்கட்சியினுடைய குற்றச்சாட்டு எவ்வளவு உண்மையின் அடிப்படையில் அமைந்தவை என்பதைத் தெளிவாக அறிந்துகொள்ள முடியும்.

"சோஷலிசம் நமது லட்சியம் என்று தெளிவாகவும் ஐயம் திரிபுக்கு இடமில்லாலும் நாம் ஏற்றுக்கொண்டு பதினொரு ஆண்டுகள் சென்று விட்டன. பணக்காரருக்கும் ஏழைக்கும் இருந்த ஏற்றத்தாழ்வு நீங்கிய பாடில்லை. குறைந்ததாகக் கூடக் காணவில்லை." என்று ஒன்பது ஆண்டுகள் இந்த மன்றத்தில் ஆளுங்கட்சித் தலைவராகவும் முதலமைச்சராகவும் இருந்த காங்கிரஸ் கட்சித் தலைவர் அவர்கள் கூறியிருக்கிறார்கள் என்றால் அந்தக் கருத்தின் அடிப்படையில் எவ்வளவு உண்மை பொருந்தியிருக்கிறது என்பதை உணரவேண்டும். அவர்கள் மேலும் கூறுகையில், "ஒரு புறம் வசதியும் செல்வமும் மிக்க ஒரு பிரிவினர் ஆடம்பரச் செலவுகளில் ஈடுபடுவதை நாம் பார்க்கின்றோம். மறு புறம் பல கோடி பாமர மக்கள் ஏழைமையிலும் இன்னலிலும் வாடுவதைக் காண்கின்றோம்" என்று கூறுவதிலிருந்து, திட்டங்களின் மூலம் ஏற்பட்ட பலன்கள் வசதியுடையவர்களுடைய ஆடம்பரத் தன்மையைப் பெருக்குகின்ற அளவில்தான் அமைந்திருக்கின்றன; ஏழைகளுடைய குறைபாடுகள் போகக் கூடிய அளவில் அமையவில்லை என்ற குற்றச்சாட்டின் உண்மையைத் தெளிவு படுத்துகிறது. "பாமர மனிதனுக்குத் தேவையான பொருள்களின் உற்பத்தியைப் பெருக்குவதற்குப் பதிலாக வசதிக்காரருக்கு வேண்டிய ஆடம்பரப் பொருள்களைப் பெருக்கும் போக்குதான் காணப்படுகின்றது" என்று அவர் கூறியிருக்கிறார். பொருளாதார சக்தியும், செல்வாக்கும் ஒரு சிலரிடம் மட்டுமே குவியச் செய்யும் ஏக போக உரிமைகளை ஆராய ஒரு கமிஷன் நிறுவும் யோசனை புவனேசுவரம் காங்கிரசு மாநாட்டில் கூறப்பட்டு கமிஷன் நிறுவப்பட்டு ஆராய்ந்து அந்த அறிக்கையில், "ஏகபோக உரிமைகளை நிலைநாட்டிக் கொண்டவர்களும் உற்பத்தித் துறையிலே பிரதான செல்வாக்கை ஏற்படுத்திக் கொண்டவர்களும் தங்கள் தொழிலுக்குப் போட்டியாகப் புதியவர்கள் இத்துறையில் புகுவதைத் தடுக்க பல வழிகளையும், சில சமயங்களில் கையாள்கிறார்கள்; சாதாரண உபயோகத்திற்குத் தேவையான சில பொருட்களுக்கு அத்து மீறிய விலைகளை வைத்து விற்கின்றனர்; பொருள்களைப் பதுக்கி வைத்து அதன் விளைவாக பற்றாக்குறை ஏற்படுத்துவதும் உற்பத்தியாளர்கள் கூட்டுச் சேர்ந்து அநியாய விற்பனை செய்வதும் போன்ற பழக்கங்கள் பெரும் அளவிற்கு மலிந்துள்ளன" என்று கூறப்பட்டிருக்கின்றது. இந்தக் குற்றச்சாட்டையும் எதிர்க்கட்சியினர் தெளிவாகச் சுட்டிக் காட்டினார்கள். இந்தக் குறைபாடுகளை எல்லாம் போக்குவதற்குத் தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். அத்தகைய முயற்சியிலே இந்த அரசு ஈடுபடவில்லை என்ற குற்றச்சாட்டைத்தான் எதிர்க்கட்சியினராகிய நாங்கள் இந்தச் சபை முன் எடுத்து வைத்தோம். "கூட்டு மூலதன கம்பெனிகளின் வளர்ச்சி, நிர்வாக ஏஜன்சி முறை கூட்டு நிறுவனங்கள் ஒன்றோடொன்று பின்னி ஒன்றின் நிதியை



5th March 1966] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

மற்றொன்றில் முதலீடு செய்து கொள்ளும் போக்கு ஆகியவற்றின் விளைவாக நாட்டிலே பொருளாதார சக்தி ஒரு சிலரிடம் சிக்கும் நிலை வளர்ந்துள்ளது" என்றும் அந்த அறிக்கையிலே சுட்டிக் காட்டியுள்ளார்கள். உண்மையான சமதர்ம நோக்கத்தை ஈடேற்றுவனவாகத் திட்டங்கள் அமையவில்லை; இதுவரை திட்டங்கள் அந்த நோக்கத்துடன் நிறைவேற்றப்படவில்லை என்று நாங்கள் மட்டும் கூறவில்லை. காங்கிரஸ் தரப்பிலிருந்தும் கூறப்படுகிறது; அதிலும் அகில இந்தியக் காங்கிரஸ் கட்சித் தலைவர் அவர்களே இதையெல்லாம் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள்.

அரசாங்கம் தொழில்களை ஏற்று நடத்துவதன் மூலமாக வரக்கூடிய வருமானத்தின் காரணமாக வரிச்சுமை குறையும் என்று எதிர்பார்க்கிறோம். அரசாங்கம் மேற்கொண்டு நடத்தும் அத்தனை தொழில்களும் நஷ்டக் கணக்கைக் காட்டுவதாகத்தான் புள்ளி விவரங்கள் இருக்கின்றன. நிறைவேற்றுகிற வேலைத் திட்டங்களில் கவனம் செலுத்தவேண்டும்; அக்கறை செலுத்தவேண்டும். கவனக் குறைவின் காரணமாக நஷ்டம் ஏற்படுமாயின் அந்த அதிகாரிகள் மீது தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்; அதன் போக்கிலேயே விட்டு விட்டுக் கொண்டிருப்பதால்தான் நஷ்டம் ஏற்படுகிறது. அப்படிப்பட்ட அதிகாரிகள் பாதிக்கப்படாத காரணத்தால்தான் அரசாங்கம் எவ்வளவு லட்சக்கணக்கான பணத்தைப் போட்டுத் தொழிலை ஆரம்பித்தாலும் அவர்கள் அசட்டையான போக்குடன் அலட்சியமாக இருக்கிறார்கள். திறமையைப் பயன்படுத்த வேண்டுமென்ற ஊக்கம் அற்றுப் போய்க் கொண்டிருக்கிறது. அரசாஙகத்திற்கு வருமானம் வரக்கூடாது என்று நாங்கள் சொல்லவில்லை. வருமானத்தை அதிகமாகப் பெற வேண்டுமென்றால் திட்டங்களைத் தீட்டி தொழில்களை அரசாங்கமே நடத்தி அதன் மூலம் வருமானத்தைப் பெற வேண்டுமே தவிர வரியின் மூலம் பெறுவது குறைக்கப்பட வேண்டுமென்றுதான் கூறுகிறோம். ஆனால், அரசாங்கம் நடத்துகிற பல தொழில்கள் நஷ்டக் கணக்கைத்தான் காட்டுகின்றன. மாதவரம் பால் பண்ணையை எடுத்துக் கொண்டால், 1961-62-ல் ஏற்பட்ட நஷ்டம் ரூ. 14.16 லட்சம், 1962-63-ல் நஷ்டக் கணக்கு வளர்ந்திருக்கிறது. அந்த ஆண்டு நஷ்டம் 24.10 லட்சம். 1963-64-ல் ஏற்பட்ட நஷ்டம் ரூ. 40.06 லட்சம்-மூன்று ஆண்டுகளில் மொத்த நஷ்டம் 78 லட்சம் ரூபாய். சாதாரண பால் பண்ணையை அரசாங்கம் ஏற்று நடத்துகிற வகையிலே இந்த அளவு நஷ்டம் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. அடுத்த ஆண்டு எவ்வளவு நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது என்று கணக்கு வரவில்லை. இனிமேல் அது வரும். மக்களுக்கு நன்மை செய்யவேண்டுமென்ற அளவிலேதான் அந்தப் பால்பண்ணை நடத்தப்பட்டு வருகிறது; மக்கள் மகிழ்ச்சியோடு இருக்கிறார்களா, மக்களுக்கு அந்த ஸ்தாபனம் பயன்படுகிறதா என்றுதான் பார்க்கிறோமே தவிர, அதிலே லாப நஷ்டத்தைப் பார்க்கவில்லை என்று கூறுவார்கள்.

மூன்று நாட்களுக்கு முன்பு ஒரு அறிக்கை வெளியிடப்பட்டிருக்கிறது. இப்போது கொடுக்கப்படுகிற பசுவின்பால் இனி கொடுப்பதற்கில்லை. இனிமேல் அங்கிருந்து, மாதவரம் பால் பண்ணையில் இருந்து, பசுவின் பால் வழங்கப்படமாட்டாது, எருமைப்பால்

மட்டும்தான் வழங்கப்படும், கலப்புப் பாலும் வழங்கப்படும், அதுவும் கேட்ட அளவிற்கு வழங்கப்படமாட்டாது, 50 சதவிகிதம் தான் கொடுக்கப்படும் என்று கூறியிருக்கிறார்கள். நோக்கம் நிறைவேறுகிற சூழ்நிலை அமையவும் இல்லை, மக்களின் தேவைகளும் நிறைவேற்றப்படவில்லை. அரசாங்கத்தின் 78 லட்சம் ரூபாய் வரிப்பணம் இந்த மூன்று ஆண்டுகளில் பாழாக்கப்பட்டிருக்கிறது. அரசாங்கத்திற்கு வருமானம் தேவைப்படுகிறது என்று நில வரியைத் தூக்குவதின் மூலமும், தண்ணீர் வரியைத் தூக்குவதின் மூலமும் 1½ கோடி ரூபாயை எதிர்பார்க்கிறது இந்த அரசு. ஒரு பக்கத்தில் வரிப் பணம் விரயமாகிக் கொண்டிருக்கிறது. அப்படி விரயமாவதைத் தடுத்து நிறுத்தினால் கூட விவசாயிகளைப் பாதிக்கக் கூடிய வரிகளைப் போடுவதைத் தடுத்து நிறுத்தியிருக்க முடியும். இதில் அதிகக் கவனம் செலுத்தப்படுதல் வேண்டும். குறைவான அளவிற்கு அரசாங்கம் மூலதனம் போட்டிருக்கிற தொழில்களில் நஷ்டம் ஏற்படுவதற்கு யார் காரணம் என்று கண்டுபிடித்து அவர்கள் மீது தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். இதில் நஷ்டம் தொடர்ந்துதான் ஏற்படும். மக்களின் வரிப் பணம் பாழாகும் என்ற நிலை இருந்தால் அந்தத் தொழில்களை திறமையற்ற முறையில் நடத்துவதை விட அவற்றை மூடினால் கூட ஓரளவிற்கு நல்லது. பொதுத் துறையில் தொழில்கள் தேவை இல்லை என்று நான் கூறவில்லை. தனியார் துறையை விட பொதுத் துறை திறம்பட இயங்க வேண்டும். தனியார் துறையில் கிடைக்கக்கூடிய லாபத்தைவிட பொதுத் துறையில் அதிகப்படி லாபம் கிடைக்க வேண்டும். தனிப்பட்டவர்களுக்கு கிடைக்கக்கூடிய வருமானம் அரசாங்கத்திற்குக் கிடைக்கக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டால் வரிச்சுமையை ஓரளவு தவிர்க்கலாம். இவற்றில் அரசாங்கம் அக்கரை செலுத்தவில்லை. அரசாங்கம் அசட்டையான, அலட்சியமான போக்கைத்தான் தொடர்ந்து கையாண்டு வருகிறது என்ற குற்றச்சாட்டை இந்த அவையில் நான் கூற விரும்புகிறேன்.

நிலச்சீர்திருத்தம் பற்றியும் எடுத்துக் கூறப்பட்டிருக்கிறது. நிலச் சீர்திருத்தத்தைப் பொறுத்தவரையில் இப்போதுள்ள அமைப்பில் அதுபற்றி நடவடிக்கைகள் எடுக்க மாதக் கணக்கில், வருடக்கணக்கில் காலமாகும் நிலைதான் இருக்கிறது. கனம் முதல் அமைச்சர் அவர்கள் கூட நிர்வாக அமைப்பு சீரான முறையில் அமைக்கப்படவேண்டும் என்று கூறியிருக்கிறார்கள். இது நெடுங்காலமாக எடுத்துச் சொல்லப்பட்டு வருகிறதே தவிர அதை நடை முறையில் இதுவரை கொண்டு வரவில்லை. பாராளுமன்றத்தில்கூட இந்தியாவின் தலைமை அமைச்சர் திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்கள்கூட

**The patterns of administration were designed when Government's main business was to keep law and order. They were not adequate for the challenges the country faces to-day.**

என்று எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இன்றைய அமைப்பு வெள்ளைக்காரன் காலத்தில் அமைதியையும், ஒழுங்கையும் நிலைநாட்டுவதற்காக, அவர்களின் ஆதிக்கத்தையும் அதிகாரத்தையும் நிலைநாட்ட எந்த அளவிற்கு பயன்படுத்த வேண்டும், அதற்காக



என்னென்ன முறைகளைக் கையாள வேண்டும் என்ற அடிப்படையில்தான் அந்த அமைப்பு ஏற்படுத்தப்பட்டது. இப்போது இந்நாட்டில் கொள்ளப்பட்டிருக்கிற நோக்கமும், குறிக்கோளும் மாறிவிட்டன. ஆகவே, நிர்வாக அமைப்பில் தீவிரமான மாறுதல்கள் செய்யப்படுதல் வேண்டும். நம்மை எதிர்நோக்கியுள்ள பிரச்னைகளை மனதில் கொண்டு அதற்கேற்றபடி நிர்வாக அமைப்பை சீர்திருத்தி அமைக்க வேண்டுமென்று எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஒரு வகையில் சிக்கனத்தைக் கடைபிடிக்கும் முயற்சிகள் பற்றியும் கனம் முதல் அமைச்சர் அவர்கள் எடுத்துத் தெரிவித்து இருக்கிறார்கள். அதைப் பல இடங்களிலும் வலியுறுத்தியும் இருக்கிறார்கள். இப்போது எடுக்கப்படுகிற சிக்கன முயற்சியின் காரணமாக அடுத்த ஆண்டில் நிதிநிலை அறிக்கையில் அதன் விளைவு பெரும் அளவில் அமையக்கூடும். அந்த அடிப்படையில் ஒரு கோடி ரூபாய் சிக்கனம் ஏற்படுத்த முடியும் என்று அவர்கள் அறிக்கையில் கூறியுள்ளார்கள். 180 கோடி ரூபாய் செலவு செய்கிற வகையில் முயன்று எடுக்கப்பட்டிருக்கின்ற சிக்கன நடவடிக்கைகள் ஒரு கோடி ரூபாய் அளவில்தான் நிற்கக் கூடும் என்று எடுத்துச் சொல்லப்படுகிற இந்தக் கணக்கு கூட மிக, மிகக் குறைவானது என்றுதான் கூற வேண்டியிருக்கிறது. எடுக்கப்படுகிற சிக்கன நடவடிக்கைகள் சீரான முறையில் எடுப்பதன் மூலம் மேலும் பல வரிகளுக்கு இடம் ஏற்படாத வகையில் சிக்கனத்தைக் கையாள்வதில், அதிகமான சிக்கனத்தை மேற்கொள்வதற்கு தீவிர நடவடிக்கைகள் உள்ளபடியே மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

சென்ற ஆண்டை விட இந்த ஆண்டு அதிகப்படியான ஊழியர்களை போட்டிருக்கிற கணக்கைப் பார்த்தால் சென்ற ஆண்டை விட இந்த ஆண்டு 33,000 பேர்களுக்கு அரசாங்கத் தரப்பில் புது வேலைகள் வழங்கப்படுகிற நிலைதான் ஏற்பட்டிருக்கிறது. புதிதாக ஏற்படுகிற பணிகளுக்கு பணியாளர்களை, அலுவலர்களை நியமிப்பது தவறு என்று நான் கூறவில்லை. குறைவாக இருக்கிறது என்று கணக்குச் சொல்வதற்குப் பதில் மேலும் 33,000 பேர்களுக்கு வேலை வாய்ப்பு தேடித் தரும் அளவிற்கு நிலைமை அமைந்திருக்கிறது. சிக்கன நடவடிக்கைகள் என்ற முறையில் பல நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன. தேவையற்ற இலாகாக்கள் இருந்தால் அவற்றை நீக்கி விட்டு அவற்றின் பணிகளைக் குறிப்பிட்ட சில இலாக்காக்களுக்குக் கொடுப்பதற்குள்ள முயற்சிகளை செய்யவேண்டும். அதிகாரிகளின் உதவிக்காக சேவகர்கள் வைக்கப்படுகிறார்கள். ஆனால், அந்த அதிகாரிகளே முன்வந்து சேவகர்கள் வேண்டாம் என்று கூறிவிட்டால் அப்படி கூறுகிறவர்களுக்கு 30 ரூபாய் ஈட்டுப்படி தருகிற அளவிற்கு ஒரு முறை, மூன்று ஆண்டுகளாக இருப்பதாக கேள்விப்படுகிறேன். இப்போது அந்த ஈட்டுப்படியை 30-ல் இருந்து 50 ரூபாயாக மாற்றியிருக்கிறார்கள். எங்களுக்கு சேவகர்கள் வேண்டாமென்று சொன்னால் 50 ரூபாயை வாங்கிக் கொண்டு அவர்களின் பணிக்காக வேறு சேவகர்களை வைத்து அவர்களின் அதிகாரத்திற்கு உட்பட்டவர்களை பயன்படுத்திக் கொள்கிற நிலை

வளர்ந்து இருக்கிறது என்று குற்றம் சாட்டப்பட்டு வருகிறது. அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலைக்கு இடம் தரக் கூடாது. அதிகாரிகள் யார் யாருக்கு சேவகர்கள் தேவைப்படுகிறார்களோ அவரவர்கள் வைத்துக்கொண்டு அப்படி வைத்துக் கொள்ளாதவர்களுக்கு இந்த ஈட்டுப்படி தரப்படுகிறது என்ற முறை இல்லாமல் வீணாக ஏற்படும் செலவினத்தைத் தடுக்க முயலவேண்டும். சிக்கன சீரமைப்பு நடவடிக்கைகளைக் கவனிப்பதற்கு என்று ஏற்படுத்தப் பட்டிருக்கிற குழு அதிகாரிகளைக் கொண்டே அமைக்கப்பட்டிருக்கிறது. எப்படியிருந்தாலும், எந்தப் பதவியையும் இழக்க எந்த இலாகாவும் தயாராக இருக்காது. செலவு செய்கிற பணத்தைக் குறைத்துக் கொள்ளவும் எந்த இலாகாவும் தயாராக இருக்காது. பொதுவாக நடுநிலையாக இருந்து கவனிக்கிற அதிகாரப் பற்றற்றவர்களைக் கொண்ட ஒரு குழு இருந்து இதை நிர்ணயிக்கக்கூடிய வகையில் உள்ள முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

பொதுநலத்துறை பற்றியும் கூறப்பட்டிருக்கிறது. பொது நலத் துறையையும், மருத்துவத்துறையையும் பொறுத்தவரையில் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் எந்த, எந்தத் தொகுதிகளில், எந்தெந்தப் பகுதிகளில் எவ்வளவு, எவ்வளவு இருக்கிறது என்பதை இந்த ஆறு நாட்கள் விவாதத்தில் இருந்து அறிந்து கொண்டோம். தேவையின் அளவைக் கணக்கிட்டுப் பார்க்கும் போது அதற்காக ஒதுக்கப்பட்டுள்ள தொகை மிகக் குறைவானதாகவே அமைந்திருக்கிறது என்ற கருத்து கூறப்பட்டிருக்கிறது. இங்கு அக்கருத்து பல முறை எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. பொது நலத்துறையையும் மருத்துவத் துறையையும் ஒன்றாக ஆக்குகிற அத்தகைய முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது என்று கூறப்படுகிறது. சென்ற மூன்று ஆண்டுகளாக இந்தக் கருத்து சொல்லப்பட்டு வருகிறது. ஆரம்ப காலத்தில் பொது நலத் துறையும் மருத்துவத் துறையும் ஒன்றாக இணைந்திருந்தது. பிறகு அவை ஒன்றாக இணைந்திருக்கிற காரணத்தினால் பணிகள் செம்மையான முறையில் நடக்கவில்லை என்ற காரணத்திற்காக அவை தனித்தனியாக இயங்க வேண்டும், ஆனால் ஒரே அமைச்சரின் கீழ் அவை இருந்து கண்காணிக்கப்பட வேண்டும் என்ற முறையில் செய்யப்பட்டது. இந்த இரண்டு துறைகளுக்கும் உள்ள வேறுபாட்டை நாம் அறிவோம். மருத்துவத் துறை என்பது ஒவ்வொருவருக்கும் தனிப்பட்ட முறையில் ஒவ்வொரு மருத்துவரும் கவனிக்கவேண்டிய ஒன்றாகும். ஒவ்வொரு நோயாளியையும் தனித்தனியாகக் கண்டு தனித்தனியாக அவர்களின் நோயைப் போக்கவேண்டிய துறையாகும் மருத்துவத் துறை. எல்லாக் காரியங்களையும் எல்லா டாக்டர்களும் செய்ய முடியாத அளவிற்கு ஒவ்வொருவரும் ஒவ்வொரு பிரிவில் தங்கள் திறமையைப் பெருக்கிக் கொண்டு இருதய நோயைக் கவனிக்க ஒரு டாக்டர் என்றும், எலும்பின் தன்மையைக் கவனிக்க ஒரு டாக்டர் என்றும், உடல் நோய், காய்ச்சல் போன்றவற்றைக் கவனிக்க ஒரு டாக்டர் என்றும் தனித்தனியான பிரிவை ஏற்படுத்திக் கொண்டு தனித்தனியாக அவர்கள் திறமையைப்



பெருக்கிக் கொள்ளுகிற அளவிற்கு மருத்துவத் துறை இருக்கிறது. ஆனால் பொது நலத் துறை, பொதுவாக மக்களின் சுகாதார நிலையைக் கவனிக்கக் கூடிய ஒன்றாகும். ஊரை பொறுத்து, குறிப்பிட்ட ஒரு இடத்தைப் பொறுத்து, நோய் கிருமிகள் பரவுகிற இடத்தைப் பொறுத்து, மலேரியா கிருமிகள் பரவுகிற இடத்தைப் பொறுத்து, ப்ளேக் கிருமி பரவுகிற இடத்தைப் பொறுத்து, கொசுக்கள் போன்றவை பரவுகிற இடத்தைப் பொறுத்து, பொதுவாக ஊரைப் பொறுத்து கவனிக்கவேண்டிய ஒன்றாகும். தனிப்பட்ட மனிதனின் நோய்களைக் கவனிக்க படிக்கிற படிப்பு வேறு, பொது சுகாதாரம் குறித்து எடுக்க வேண்டிய முயற்சிகள் வேறு. ஒரு 15 ஆண்டுகள் சுகாதார பொது நல அதிகாரியாக இருந்து ஒருவர் மருத்துவத்துறை பற்றிய அறிவை மறந்தவராகக் காணப்படுவார். மருத்துவத் துறை அறிவை பொது நலத் துறையில் பயன்படுத்தமுடியாது. பொது நலத் துறையில் உள்ள அறிவை மருத்துவத்துறையில் பயன்படுத்த முடியாது. இரண்டு ஆண்டு காலத்திற்கு மருத்துவத் துறையில் இருந்து பொது நலத்துறைக்கு மாற்றுவது அல்லது பொது நலத் துறையில் இருந்து மருத்துவத் துறைக்கு மாற்றுவது என்ற அளவிற்குக்கூட நிலைமை இல்லை. மருத்துவத்துறையிலேயே 11–30 a.m.
இன்னொரு துறையிலிருந்து மற்றொரு துறைக்கு, கண் மருத்துவத் துறையிலிருந்து காது மருத்துவத் துறைக்கு மாற்ற முடியாத சூழ்நிலையில், மருத்துவத்துறையும் பொதுத்துறையும் சேர்ந்திருப்பதால் பலவிதமான இன்னல்கள் நடைபெறுவதற்கு ஏதுவாய் இருக்கின்றது. வேறு இலாக்காக்களை எல்லாம் பிரிக்கின்ற அளவில் டிசென்ட்ரலைசேஷன் என்ற முறையில் பல துறைகளை பிரித்துக்கொண்டு வருகிறோம். அந்த முறையில் கல்வித்துறையில் இன்றையதினம், தொழில் நுணுக்கப் பிரிவுக்கு தனியாக இயக்குநரை நியமித்ததின் காரணமாக ஓரளவுக்கு அந்தத் துறையில் வளர்ச்சியை பார்க்கின்றோம். அதே போன்று தான் கல்லூரி நிலைக்கு ஒரு இயக்குநரையும், உயர்நிலை கல்விக்கு தனியாக ஒரு இயக்குநரையும் போட வேண்டும் என்று சொல்லப்பட்டு, அதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு, கல்லூரிக் கல்விக்கு ஒரு இயக்குநரும், உயர் நிலைக் கல்விக்கு ஒரு இயக்குநரும் அமைக்கப் பட்டார்கள். அதே போன்று ஆரம்பக் கல்விக்குத் தனி இயக்குநர் நியமிக்க வேண்டும் என்று சொல்லப்பட்டு வந்தது; இப்போதும் அதை நான் வலியுறுத்த விரும்புகிறேன். இன்றைக்கு பல லட்சக்கணக்கில் இருக்கின்ற ஆரம்ப பள்ளிகளுக்கும் தனியாக ஒரு இயக்குநரை நியமித்து அதையும் செம்மைப்படுத்த முயற்சிகள் எடுத்துக் கொள்ளவேண்டும். ஆரம்பக்கல்விக்கு ஒரு இயக்குநர், உயர்நிலைக் கல்விக்கு ஒரு இயக்குநர், கல்லூரிக் கல்விக்கு ஒரு இயக்குநர் என்ற அளவில் இருப்பது வேலைகள் சரியான முறையில் நடைபெறுவதற்கு நல்ல வாய்ப்பாக இருக்கும். அதே போன்று தான் மருத்துவக் கல்விக்கும் தனியாக இயக்குநர் என்று இருப்பதற்கு முயற்சிகள் எடுத்துக்கொண்டிருப்பது பாராட்டுதற்குரியது. இதைப்போலவே மருத்துவத்துறையும் பொது நலத் துறையும் பிரிக்கப்படாமல் ஒன்றாக இருந்துவருவதின் காரணமாக இந்தத்துறை சரியாக பணியாற்றவில்லை என்ற

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [5th March 1966

குற்றங் குறைகள் அதிகமாகிக் கொண்டே வருகிறது. ஒவ்வொரு துறையிலும் சரியானபடி வேலைகள் நடைபெறவில்லை என்ற குற்றச் சாட்டை அதிகமாக இந்த மன்ற உறுப்பினர்களே எடுத்துக்கூறக் கூடிய நிலைமை ஏற்படுகிறது. இவைகளுக்கெல்லாம் நிவாரணம் காணக்கூடிய முறையில் இந்த மருத்துவத்துறையும், பொதுத் துறையும் தனித்தனியாக பிரித்து முழு அதிகாரமுடையதாக ஆக்குவதின் மூலமாக பல்வேறுப் பிரச்சினைகளை தீர்க்க முடியும் என்ற காரணத்தால் இதில் முயற்சி எடுக்கவேண்டியது அவசியம் என்பதை நான் வலியுத்றுதிக்கூற ஆசைப்படுகிறேன். சில மாநிலங் களில் இம்முறை அமலுக்கு கொண்டு வரப்பட்டது என்றும், அதில் அங்குள்ள நிலைமையைப் பார்த்ததில் செம்மையாக நிறை வேற்றப்படவில்லை என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்திய அரசினர் மாநிலங்களின் கையில் இருக்கின்ற இது போன்ற துறை களின் அதிகாரங்களை எல்லாம் எடுத்துக்கொண்டு ஒரே சீராக பொதுநலத்துறை இருக்கவேண்டும் என்ற காரணத்தைக் காட்டி மாநிலங்களில் இருந்து வருகின்ற அதிகாரங்களை மத்திய அரசினர் வாங்கிக்கொள்வதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அதோடு பொதுநலத்துறையும் மருத்துவத்துறையும் தனித்தனி யாக பணியாற்றவேண்டும் என்ற கருத்தை நமது முதலமைச்சர் அவர்களும், கனம் சுகாதார அமைச்சர் அவர்களும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இப்போது அந்தக் கருத்தை வலியுறுத் துகின்ற நிலையில், இந்த அரசாங்கம் மத்திய அரசாங்கத்தினிடம் வற்புறுத்தலாம். அந்த அளவிற்கு நிலைமை வளர்ந்திருக்கின்ற நிலைமையில் இதை ஊக்குவிக்க அரசினர் முன் வரவேண்டும். இருக்கின்ற அதிகாரங்களை எல்லாம் மத்திய அரசாங்கத்தினிடம் ஒப்படைத்துவிட்டு அவர்களுடைய உத்தரவையும் கட்டளையையும் எதிர்பார்த்துக்கொண்டிருப்பது என்பது வருந்தத்தக்கது. எனவே இந்த நிலைமைகளை எல்லாம் முன்னாலேயே சில மாநிலங்கள் எண்ணிப்பார்க்காததன் விளைவுகள் தான் செம்மையாக நடத்த முடியவில்லை என்று சொல்வதற்கு காரணமாக அமைகிறது என்பதை பார்க்கின்றோம்.

"எண்ணித்துணிக கருமம், துணிந்த பின்
எண்ணுவம் என்பது இழுக்கு"

என்ற வாக்கின்படி, இப்போதே நம்முடைய கவனத்தை ஈடுபடுத் திக்கொள்வதின் மூலமாக, இவற்றை தனித்தனியாக வைத்து செம்மைப்படுத்திக் கொள்ளலாம். முக்கியமாக பொதுநலத் துறையில் மக்களிடத்தில் சொல்லப்படுவது குடும்பக்கட்டுப் பாடுதிட்டம் ஒன்று தான். பிரைமரி ஹெல்த் சென்டர் அளவில் ஆரம்பத்தில் சேர்ந்து இருந்து வருவதால் எந்தவிதமான தவறும் ஏற்பட்டுவிட முடியாது. ஆனால், நடைமுறையில் பார்க்கின்ற பொழுது, இரண்டு துறைகளும் தனித் தனியாகத்தான் தங்கள் பணிகளை, வேலைகளை அமைத்துக்கொண்டிருக்கிறார்கள். மருத்து வத்துறையின் ஆணையின் பேரில் பொதுநலத் துறை அதிகாரி செயல்படுவதில்லை, அதே போன்று பொதுநலத் துறையின் ஆணைகளை மருத்துவத் துறையில் பணியாற்றி வருகின்ற டாக்டர் ஈடேற்றுவதில்லை. இவ்விதம் இரண்டு துறைகளும் தனித்தனியாகத்



5th March 1966] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

தான் பிரைமரி ஹெல்த் சென்டர்களில் பணியாற்றிக்கொண்டு வருகின்ற நிலைமையை நாம் பார்க்க முடிகின்றது. வேண்டு மென்றால் இரண்டு துறைகளின் கீழ் பணியாற்றி வருகின்ற அலுவலகங்கள் ஒரே கட்டடத்தில் வேண்டுமென்றால் இருந்து வரலாம். அதுவும் ஒரே கட்டடத்தில் இரண்டு துறையிலுள்ள வேறுபட்டவர்கள் பணியாற்றுவது பொருத்தமாகவும் இருக்கக் கூடும். இங்கு கூட டி.எம்.எஸ். அலுவலகமும், டி.பி.எச்; அலுவலகமும் ஒரே காம்பவுன்ட்-க்குள்ளில் தான் அமைந்திருக் கின்றன. மக்களுக்கும் அது வசதியாகவே இருக்கிறது.

ஆரம்ப சுகாதார நிலையங்களைப் பொறுத்தவரையில் இந்த இரண்டு துறைகளும் ஒரே கட்டடத்தில் இருந்து பணியாற்றி வருவது மிக பொருத்தமாக இருக்கக் கூடியதொன்று தான். அந்த அளவில் இந்த இரண்டு துறைகளும் சரியான முறையில் பணியாற்றுவதற்குரிய வகையில் தனித்தனியாக இயங்கச் செய்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படவேண்டும், இதற் கான மறுபரிசீலனை செய்யப்பட வேண்டும், இது குறித்து மாநில அரசாங்கம் மத்திய அரசாங்கத்திற்குத் தெரிவிக்கவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன். இதன் மூலமாக இரண்டு துறை களையும் செம்மைப்படுத்துவதற்கான முயற்சிகளை உருவாக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன். மேலும் மருத்துவத் துறையைப் பொறுத்தவரையில், சென்ற ஆண்டு பட்ஜெட்டைப் பார்க்கும்போது, 1965-66-ல் கொடுத்துள்ள உரையைப்பார்த்தால் —120 ஆரம்ப சுகாதார நிலையங்களை திறப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது என்ற செய்தி தரப்பட்டிருக்கிறது. சென்ற ஆண்டில் சமர்ப்பித்த நிதி நிலை அறிக்கையில் அமைச்சர் அவர்கள் சொல்லும்போது. . .

'As part of such arrangements and in pursuance of our programme for augmentation of facilities for medical relief in rural areas, we have sanctioned the opening of 120 Primary Health Centres in different blocks. The Third Plan objective of setting up one primary Health Centre for every block will be realised".

என்று சொல்லியிருக்கிறார்கள். 120 ஆரம்ப சுகாதார நிலையங்கள் திறப்பதற்கு சாங்ஷன் செய்யப்பட்டிருக்கிறது என்று சொல்லப் பட்டிருக்கின்றது. ஆனால் இந்த ஆண்டு பட்ஜெட் உரையில் சொல் லப்பட்டு இருப்பதை பார்க்கும்பொழுது அதில் . ; .

"We would have by the end of the current year 210 Primary Health Centres in position and in next year's Plan we have made a provision of Rs. 61 lakhs for the setting up of 120 additional Primary Health Centres."

என்று கூறப்பட்டிருக்கிறது. சென்ற ஆண்டு திறக்கப்படவிருந்த 120 ஆரம்ப சுகாதார நிலையங்கள் என்னவாயிற்று? கழிந்த ஆண்டில் சொல்லப்பட்டிருந்த அதே எண்ணிக்கை தான் இந்த ஆண்டிலும் கூறப்பட்டிருக்கிறதா? இந்த ஆண்டில் சொல்லப் பட்டிருக்கின்றன 120 ஆரம்ப சுகாதார நிலையங்களை திறப்பதற்கு இத்திட்டத்தை மேற்கொள்வதற்கு 61 லட்சம் ஒதுக்கப்பட்டிருப்பு

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [5th March 1966

தாக கணக்கு சொல்லப்பட்டிருக்கிறது. அப்படியானால் சென்ற ஆண்டில் சொல்லப்பட்டிருப்பது, கடந்த ஓராண்டு காலமாக எந்தவிதமான முயற்சிகளும் மேற்கொள்ளப்படவில்லை என்பது தான் பொருளா? சென்ற ஆண்டில் இது முடிவுபெறவில்லை என்பதால் தான் இந்த ஆண்டு மீண்டும் அதே எண்ணிக்கை சொல்லப்பட்டிருக்கிறதா ? பாகிஸ்தான் படையெடுப்பால் இந்த வேலையை மேற்கொள்ளவில்லை என்றால்—அக்டோபர் மாதத்திற்குப் பிறகு தானே அந்த நிலைமை ஏற்பட்டது? அப்படியானால் இந்த ஆண்டில் ஏன் அப்படியே சேர்க்கப்பட்டிருக்கிறது? இதற்கு என்ன காரணம் என்பதை விளக்க வேண்டுகிறேன். சென்ற ஆண்டில் 120 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டிருப்பதாக சொல்லப்பட்டு, இந்த ஆண்டும் 120 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்காக 61 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அப்படியானால் சென்ற ஆண்டு எந்தவிதமான முயற்சியும் எடுத்துக்கொள்ளப்படவில்லை என்பதைத்தான் இவ்வுரைகளிலிருந்து நினைக்கவேண்டியிருக்கிறது. அதை முதலமைச்சர் அவர்கள் தெளிவுபடுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தொழில் கல்வியைப் பொறுத்தவரையில் ஏறத்தாழ 6 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருப்பது மகிழ்சிக்குரியதொன்று. இதன் அடிப்படையில் பார்க்கும் போது, கல்வி வசதியை பெருக்குவதற்கும், கல்வித்துறையை வளர்ச்சி அடையச் செய்வதற்கும் வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. தொழில் நுட்ப பள்ளிகளை அமைக்கின்ற விஷயத்தில் 65-க்கு முன்னால் 10 பள்ளிகள் இருந்ததாக கூறப்பட்டிருக்கிறது. சென்ற ஆண்டு நிதிநிலை அறிக்கையில், மேலும் 10 தொழில் நுட்ப பள்ளிகள் ஆரம்பிக்கப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதைப் பார்க்கின்ற நேரத்தில் நியாயமாக இன்றையதினம் 20 தொழில் நுட்பப் பள்ளிகள் அமைந்திருக்கவேண்டும். ஆனால் இந்த ஆண்டு 14 பள்ளிகள் மட்டுமே அமைந்திருக்கின்றன என்பதைத்தான் காண முடிகிறது. அப்ப்டியானால் 6 தொழில் நுட்பப்பள்ளிகள் அமையவில்லையா ? அதற்கான முயற்சிகள் எடுத்துக்கொள்ளப்படவில்லையா ? விடப்பட்ட அந்த 6 பள்ளிகள் என்னவாயின ? என்ன நிலைமையில் இருக்கிறது என்பதை நான் அறிந்து கொள்ள விரும்புகிறேன். அதோடு இந்த ஆண்டு தொழில் நுட்பப் பள்ளிகளை அமைக்கின்ற முயற்சிகள் எந்த அளவில் இருக்கின்றன என்பதையும் விளக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சென்ற ஆண்டு நிறைவேற்றப்படவேண்டும் என்று சொல்லப்பட்ட திட்டங்கள் இன்னும் நிறைவேற்றப்படாமல் இருக்கின்றனவா. அப்படியென்றால் அதற்கு காரணம் என்ன? உண்மையிலேயே தொழில் நுட்பப்பள்ளிகளை ஆரம்பிப்பதற்கு இடம் கிடைக்கவில்லை என்றால் உயர்நிலைப்பள்ளிகளுக்கு இடம் கொடுப்பதில் தொழில் நுட்பப் பள்ளிகளை அமைக்கவேண்டும் என்கின்ற ஆர்வத்தை அடிப்படையாக கொண்டு இந்த தொழில் நுட்பப்பள்ளிகளை அமைப்பதற்கு அரசினர் முன் வரவேண்டும். அப்போது தான் இதன் அடிப்படையில் பயிற்சி பெறுகின்றவர்கள் சிறிய சிறிய தொழில்களை



5th March 1966] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

அமைத்து, அதன் மூலமாக தங்களுடைய வாழ்க்கையை நடத்திக் கொள்வதற்கு தகுந்த முறையில், மாதம் 100 அல்லது 150 அல்லது 200 ரூபாய் சம்பாதித்துக் கொள்கின்ற அளவிற்கு தங்கள் வாழ்க்கையை அமைத்துக்கொள்ள முடியும். எனவே நாட்டில் தொழில் பெருகவேண்டும் என்கின்ற அடிப்படையில், தங்களுக்கு இருக்கின்ற தொழில் நுட்ப அறிவை அடிப்படையாக கொண்டு அதன் மூலம் பயிற்சி பெற்று வருகின்றவர்கள், அரசாங்க வேலைகளை எதிர்பார்க்காத வகையில், மற்றவர்களிடம் வேலைக்கு எதிர்பார்க்காத அளவுக்கு அவர்களாகவே சிறிய சிறிய தொழில்களை ஏற்படுத்தி அதன் மூலமாக தங்கள் வருவாயைப் பெருக்கி தங்கள் வாழ்க்கையை அமைத்துக்கொள்வதற்கு இப்படிப்பட்ட தொழில் நுட்பப்பள்ளிகள் கருவிகளாக விளங்குகின்றன. அந்த அடிப்படையில் பார்க்கும்போது தற்போது 14 தொழில் நுட்பப் பள்ளிகள்தான் இருக்கின்றன என்பதைப் பார்க்கும்போது, மாநிலத்தைப் பொறுத்தளவிற்கு மாநிலத்தின் ஜனத்தொகையைப் பொறுத்தளவிற்கு மிக மிகக் குறைவாகவே இருக்கிறது. ஆக, இனிமேல் ஆரம்பிக்கவிருக்கின்ற தொழில் நுட்பப்பள்ளிகளை கூட உயர்நிலைப் பள்ளிகளுக்கு கிடைக்கின்ற இடத்திலேயே இதையும் நிறுவுவதற்கு முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டும். இப்போது இருக்கின்ற உயர்நிலைப்பள்ளிகளின் நிலையை எடுத்துக்கொண்டால், தொழில் நுட்பப் பாடங்களை கற்றுக்கொள்வதற்கு வசதிகள் குறைவாகவே இருந்து வருகின்றன. இப்படிப்பட்ட பள்ளிகளில் மாணவர்களும் அதிகமாக சேருகின்றார்கள், இவர்கள் தொழில் கல்வியை கற்றுக்கொள்ளக்கூடிய வகையில் தொழில் நுட்பப் பள்ளிகளை உருவாக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆட்சிமொழிப் பிரச்னையைப் பொறுத்தமட்டில் பல உறுப்பினர்கள் கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள். ஆட்சிமொழியைப் பற்றி சொல்லுகின்ற இடத்தில் தமிழ் ஆட்சிமொழியாக இருக்க வேண்டும் என்பதைப்பற்றி பல எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கருத்து தெரிவித்து வற்புறுத்தி வந்திருக்கிறார்கள். சென்ற ஆண்டு இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி நடந்தபோது இன்றையதினம் இந்திய தலைமை அமைச்சராக இருக்கக்கூடிய இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் இங்கு வந்த நேரத்தில் ஆட்சி மொழி விஷயமாக 'ரீ திங்கிங்' ( Re-thinking ) மறு ஆலோசனை நடத்தப்பட வேண்டும் என்று தெரிவித்திருக்கிறார்கள். மேலும் கட்சி மாச்சரியத்தின் காரணமாக மொழிப் பிரச்னை விஷயத்தில் எதிர்பார்த்த விளைவுகள் ஏற்படவில்லை என்பதை அனைவரும் இன்றையதினம் உணர்ந்திருக்கிறார்கள். ஒவ்வொரு மாநிலத்திலும் தாய் மொழிக்கு மற்ற மொழிகளோடு சம அந்தஸ்து கிடைக்கவேண்டும், இந்திய மொழிகளோடு தங்கள் தாய் மொழியும் ஒன்றாக வைக்கப்படுதல்வேண்டும், அந்த வகையில் தமிழ்மொழியும் ஆட்சிமொழியாக அமைதல் வேண்டும், அதன் அடிப்படையில்தான் ஒற்றுமை உணர்ச்சி நாட்டில் ஏற்பட முடியும் என்கின்ற கருத்து பல நேரங்களில் வற்புறுத்தப்பட்டு வந்திருக்கிறது. அதல்லாமல் ஒருமைப்பாடு என்கின்ற வகையில் ஓரே மொழி, ஓரே சட்டம், ஓரே உணவு, ஓரே உடை என்பதின் மூலமாக மட்டும் ஒருமைப்பாடு

அமைந்துவிட முடியாது. யூனிஃபார்மிட்டியா அல்லது யூனிட்டியா என்பதிலே யூனிஃபார்மிட்டி என்பது புறத்தோற்றப் பொலிவைப் பொறுத்த ஒன்று. யூனிட்டி என்பது உள்ளத்தைப் பொறுத்த ஒன்று, யூனிஃபார்மிட்டி என்பது புறத்தோற்றத்தைப் பொறுத்த வரையில் ஒன்றாக, நடை, உடை, பாவனை ஒன்றாக அமைந்துவிடுவதன் மூலமாக ஏற்படுகிற ஒன்று. யூனிட்டி என்பது உள்ளத்தைப் பொறுத்து ஏற்படுகிற ஒன்று. பொறுமை, அன்பு போன்றவற்றின் அடிப்படையில் அவரவர்களுடைய உரிமைகள் காப்பாற்றப்படுகின்றன என்ற மன நிறைவு அடிப்படையில் ஏற்படுகிற ஒன்று. அந்த வகையிலே முக்கிய மொழிகள் அத்தனைக்கும் சம அந்தஸ்து கொடுக்கும் சூழ்நிலையில் அந்கந்த மாநிலத்தில் அந்தந்த மாநில மொழி ஆட்சி மொழியாகவும்; அகில இந்தியத் தொடர்புக்கு, அகில உலகத் தொடர்புக்கு, விஞ்ஞானத் தொடர்புக்கு இந்த மன்றம் எடுத்த முடிவுப்படி ஆங்கில மொழியாகவும், ஆங்கில மொழியில் கட்டாயப் பயிற்சி பெறும்படியும் வைத்து இரண்டு மொழிகள் அடிப்படையில் திட்டங்கள் தீட்டப்பட வேண்டும். மறு சிந்தனைக்கு இந்தக் கருத்துக்கள் உறுதுணையாக இருந்து, இந்த அடிப்படையில் முயற்சிகள் எடுக்கவேண்டுமென்று வற்புறுத்திக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

மேலும், பாதுகாப்புச் சட்டத்தைப் பற்றி கவர்னர் உரையின் போது கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன. சூழ்நிலை இப்போது மாறிய பிறகு அதை மீண்டும் பரிசீலனை செய்யவேண்டும். மக்களுடைய அடிப்படை உரிமைகளைப் பறிக்கும் அளவுக்கு இந்தப் பாதுகாப்புச் சட்டம் அமைந்திருக்கிறது. இதைப்பற்றி அரசாங்கத்திற்கு திரு. செட்டல்வாட் அவர்களும் கருத்துக்களை அடிக்கடி எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். தலைமை உயர் நீதி மன்றமும், டில்லியில் இருக்கிற மன்றம், அண்மையில் ஒரு வழக்கில் தீர்ப்பளிக்கும்போது, ஜனநாயகத்தைக் கொல்லும் ஒன்றாக, அடிப்படை உரிமைகளைப் பறித்து விட்டு, கருத்துக்களைத் தெரிவிக்கும் உரிமையைப் பறித்து விட்டு, காரண காரியங்கள் சொல்லப்படாத அளவுக்குப் பிடித்துச் சிறையில் அடைப்பது ஜனநாயகத்தைக் கொல்லும் ஒன்றாகத்தான் அமைய முடியும்; அதிக அளவில் துஷ்பிரயோகம் செய்யவில்லை என்றாலும், ஜனநாயகத்திற்குக் குந்தகம் விளைவிக்கும் ஒன்று என்று தலைமை உயர் நீதி மன்றம் தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறது. அந்த அடிப்படையில் இது மீண்டும் பரிசீலிக்கப்படும் என்ற கருத்து இந்திய அரசாங்கத்திலே உள்துறை அமைச்சராக இருக்கிற நந்தா அவர்களால் அறிவிக்கப்பட்டிருக்கிறது. அந்த முறையில் அது மீண்டும் பரிசீலிக்கப்படும் என்ற நம்பிக்கை இருக்கிறது. இந்த மாநில அரசும் மத்திய அரசுக்கு சிபாரிசு செய்ய வேண்டுமென்ற கருத்தை இந்த மன்றத்தில் எடுத்துத் தெரிவித்திருக்கிறார்கள். எல்லைப்புறத்தில், சீனாவைப் பொறுத்த வரையில், அபாயமான சூழ்நிலை இருக்கிறது என்ற தன்மை இருக்குமானால், அதை அறிந்து சொல்லும் நிலைமை மத்திய அரசுக்கு இருக்கிறது. பாதுகாப்பை வலியுறுத்தும் வகையில் இந்த நாட்டின் தந்திரத்தை, நாட்டு மக்களின் உரிமையைக் காப்பாற்ற அந்த



அளவுக்குப் பாதுகாப்புச் சட்டத்தைத் திருத்தும் முயற்சியை மேற்கொண்டு, எண்ண உரிமை, எழுத உரிமை, அன்றாட நடவடிக்கைகளில் ஈடுபடும் உரிமைகளைப் பறிக்கும் பகுதிகளை நீக்கிவிட்டு சூழ்நிலைக்கு ஏற்ப எந்த அளவுக்கு பாதுகாப்புச் சட்டத்தில் விதிகள் தேவையோ அவற்றை மட்டும் வைத்துக்கொண்டு, அடிப்படை உரிமைகளைப் பறிக்கும் பகுதிகளைத் திரும்பப் பெற வேண்டும். எண்ண உரிமை, எழுத உரிமை, அன்றாட நடவடிக்கைகளில் ஈடுபடும் உரிமைகளைக் காப்பாற்றும் அளவுக்கு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தூத்துக்குடி அனல் மின்சார நிலையத்தைப் பற்றியும் மன்ற உறுப்பினர்கள் பலர் கருத்துக்களை எடுத்துக் கூறியிருக்கிறார்கள். எதிர்க் கட்சி துணைத் தலைவர் திரு. கருணாநிதி அவர்களும் கருத்துக்களைத் தெளிவுபட எடுத்துக் கூறியிருக்கிறார்கள். மத்திய அரசு மாநில அரசுக்கு எந்த அளவுக்கு மதிப்பு அளிக்கிறது என்று எடுத்துக் காட்டாக அமைகிறது இந்த வரலாறு. மாநில அரசு மத்திய அரசினிடத்தில் அழுத்தம் திருத்தமாக இருந்து, மாநிலத்தின் உரிமைகளும் மற்றவைகளும் பாதிக்கப்படாத அளவுக்கு மேற்கொண்டு நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று இந்த வாய்ப்பிலே தெரிவித்துக்கொள்கிறேன்.

சேலம் உருக்குத் தொழிற்சாலை பற்றி விரிவாக எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. இன்னும் நம்பிக்கை தருகிற அளவுக்கு, 'நம்பலாம்' என்ற கருத்து இந்த உரையிலே தெரிவிக்கப்பட்டிருக்கிறது. சாதாரண அளவில் கூட இந்தத் தொழிற்சாலையைப் பெற முடியாமல் வைக்கப்பட்டிருக்கிறது. கேட்டால் தான் கொடுக்கப்படும், தட்டினால் தான் திறக்கப்படும் என்று ஏசு வேறு காரியத்திற்காக வேறு இடத்தில் சொல்லியதற்கு ஒப்ப, உண்மை நிலைமைகளை எடுத்துச் சொன்னாலும், அந்தச் சாக்கு ஒன்றை வைத்துக்கொண்டு 'தேவையில்லை' என்ற முடிவுக்கு வரும் சூழ்நிலை இருப்பதைக் காண்கிறோம். இந்த மன்றத்தில் வைக்கப்படுகிற கருத்துக்களை மத்திய அரசிடத்தில் இந்த மாநில அரசு எடுத்துக் கூறி, இந்த மாநிலத்தின் உரிமைகளை, வாய்ப்புகளை நிலைநாட்டி, வேண்டிய தேவைகளைப் பெற முயற்சி எடுத்து அவைகளைப் பெறுதல் வேண்டும். தொழில் ஏன் தென் பகுதியில் ஆரம்பிக்கவில்லை என்றால் ரயில் போக்குவரத்து இல்லை, அதனால் ஆரம்பிக்கவில்லை என்று காரணம் காட்டுகிறார்கள். ஏன் ரயில் பாதை இந்தப் பகுதியில் போடவில்லை என்று கேட்டால், பெரிய தொழில்கள் இல்லை, ஆகையால் பெரிய ரயில் பாதைகள் அமைக்கப்படவில்லை என்று சொல்லப்படுகிறது. பெரிய இருப்புப் பாதைகள் வடக்கே இருக்கிற காரணத்தினால்தான் தொழில்கள் அங்கே ஆரம்பிக்கப்படுகின்றன என்ற காரணமும், அங்கேதான் பெரிய தொழில்கள் அமைந்திருக்கிற காரணத்தினால் பெரிய ரயில் பாதைகள் போடப்படுகின்றன என்றும் காரணம் சொல்லப்படுகிறது. தென்னகத்தில் பெரிய ரயில் பாதைகளைப் போடுவதன் மூலம் வாணிபத்தைப் பெருக்க முடியும். தூத்துக்குடி துறைமுகம் மிகச் சிறப்பாக அமையவேண்டும். தென்னகத்திலேயே அந்தத் துறைமுகத்தின் மூலம் வெளிநாடுகளோடு தொடர்பு ஏற்படக்கூடிய நிலைமை இருக்கிறது.

கூடிய நிலைக்கும் நாம் தான் வழி செய்திருக்கிறோம். அதற்கான அடிப்படையில் தான் நாம் செயல்படுகிறோம் என்று நான் சொல்ல வேண்டிய நிர்ப்பந்தத்தில் இருக்கிறேன்.

இனி, மற்ற வரிகளெல்லாம் உயர்ந்துகொண்டே போய்க் கொண்டிருக்கின்றன. முன்பு காந்தி இர்வின் ஒப்பந்தம் ஏற்பட்டதுபற்றி மன மகிழ்ந்தோம். அன்றைக்கோ சில பண்டங்களுக்கு வரி இல்லை. அதில் உப்பு குறிப்பிடத்தக்க ஒன்று. இப்பொழுது உப்புக்குக் கூட வரி வந்துவிட்டது.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** நான் சுதந்திராக் கட்சித் தலைவர் அவர்களை ஒன்று கேட்க விரும்புகிறேன். பயிர் செய்வதிலே கண்டிரோல் இருக்கவேண்டுமா ? கரும்பு பயிர் செய்யக்கூடாது, அல்லது இந்தப் பயிர் தான் செய்யவேண்டும் என்று இப்பொழுது அப்படி ஒன்றுமில்லை. இப்பொழுது கண்டிரோல் இல்லை. கண்டிரோல் வேண்டாம் என்பது என்னுடைய கருத்து. கண்டிரோல் வேண்டும் என்பது கனம் உறுப்பினர்களுடைய கருத்தா என்பதைச் சுருக்கமாக தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**திரு. சா. கணேசன் :** கிரிமினல் லாயர் மாதிரி கிராஸ் எக்ஸாமின் பண்ணுகிறார் கனம் முதல் அமைச்சர் என்று இங்கு ஒரு கனம் உறுப்பினர் சொல்லுகிறார். அப்படியெல்லாம் நான் சொல்ல மாட்டேன். கண்டிரோல் சுதந்திராக் கட்சிக்கு விரோதம். கண்ட்ரோலை விரும்புகிறார்களா என்ற முறையில் வினாவை விட்டு, என்னை மடக்கப் பார்க்கிறார் கனம் முதல் அமைச்சர் அவர்கள். சுதந்திராக் கட்சி கண்டிரோல் கூடாது என்று சொல்லவில்லை. ஒழுக்கத்தை கண்டிரோல் செய்யவேண்டும், தவறு செய்யப்படாது, கொள்ளை அடிக்கக் கூடாது, பொய் சொல்லக்கூடாது, பொய்க் கணக்கு எழுதக் கூடாது, வரி ஏமாற்றம் பண்ணக்கூடாது என்று தான் சொல்லுகிறோம். எத்தனையோ துறைகளில் ஒழுக்கஹீனங்கள் ஏற்படுகின்றன. அப்படி ஏற்படக்கூடாது என்று சொல்லுவது கண்டிரோல் இல்லை. கண்ரோல் என்பதற்கு நேரடியான பொருள் அறம் அல்ல; இன்ன துறையில் இன்னது செய் என்று வற்புறுத்துவது கண்ட்ரோல். 'அறம் என்பது டூ நாட்' 'டூ' என்று சொல்வது அறம் இல்லை. அறம் என்ற சொல் 'அல்' என்ற பகுதியடியிடையாக வந்தது. இப்படிச் செய்யாதே என்று கட்டுப்பாடு விதிப்பது கண்டிரோல் அல்ல. உணவுப் பயிர் உற்பத்தி செய்கிற இடத்தில் பணப் பயிர் உற்பத்தி செய்யாதே என்று சொல்லுவது சரி. அது அறம். இந்தப் பொருளை உற்பத்தி பண்ணு, அதிக லாபம் கிடைப்பதற்கு வழி வகுக்கிறோம், ஃபாரின் எக்ஸேஞ்சு கொடுக்கிறோம். கரும்பு ஆலை ஏற்படுத்துங்கள் என்று சொல்லுவது தான் தவறு. அதுதான் கட்டுப்பாடு. பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். தயவு செய்து என்னுடைய போக்கை விட்டு என்னுடைய வழியிலிருந்து என்னை இழுத்து வேறு பக்கம் திருப்பிவிட்டுக் கொண்டிருக்கவேண்டாம், நேரம் போதாது.

உப்புக்கு வரி வந்தாகிவிட்டது. அரசாங்கம் இனி, வேறு என்னத்தை விட்டுவைத்திருக்கிறது ? செக் போஸ்டுகளைப்பற்றி சொல்ல விரும்புகிறேன். செக் போஸ்டுகளினால் எவ்வளவோ





படுகிறதே தவிர, திட்டவட்டமாக நிறைவேற்றப்படும் என்ற முடிவு எடுக்கப்படவில்லை. இந்தத் திட்டத்தை மேற்கொள்ள வேண்டுமென்று மீண்டும் வற்புறுத்திக் கூற விரும்புகிறேன்.

சென்னை நகரத்தைப் பொறுத்தவரையில் பக்கிங்ஹாம் கால்வாய், கூவம் பற்றி அடிக்கடி சொல்லப்படுகிறது. பத்து கோடி ரூபாய்க்குத் திட்டம் இருக்கிறது என்று பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். திட்டம் மேஜையில் இருந்தபடியே இருந்துகொண்டிருக்கிறதே தவிர நடைமுறையில் வரவில்லை. ஆறுகள் உயரத்தில் இருந்து கடல் தாழ இருந்தால் ஆற்று நீரை கடலுக்குள் செலுத்த முடியும். ஆறுகள் தாழ இருந்து கடல் உயரத்தில் இருந்தால் கடல் நீரை ஆற்றுக்குள் செலுத்த முடியும். அப்படி அல்லாது சம நிலையில் இருந்தால் சில முயற்சிகளை மேற்கொண்டு கூவம் நீர் கடலுக்குள் செல்லும்படியாகவோ அல்லது கடல் நீர் கூவத்திற்கு வரும்படியாகவோ செய்யலாம். ஆறு கடலோடு சேரும் இடத்தில் மணல் திட்டு இருக்கின்ற காரணத்தினால் தான் இந்த முயற்சிகளை மேற்கொள்ள முடியவில்லை, திட்டமும் அப்படியே இருக்கிறது. இந்தப் பிரச்னைகளைத் தீர்ப்பதன் மூலமாக சென்னையின் பிரச்னைகள் தீரும். மாநகராட்சியிடம் மொத்தப் பொறுப்பும் இல்லை. ஆற்றின் பொறுப்பு அமைச்சரிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. ஆற்றைச் சீர்படுத்தி கொசுக்களையும் மற்றவைகளையும் அழித்து மக்களுக்கு நன்மை செய்யும் பொறுப்பு அமைச்சருக்கு இருக்கிறது. திட்டம் தீட்டியும் பல்லாண்டு காலமாகத் திட்டத்தைப் பொறுத்த வரையில் குறிப்பே இல்லை. அதை நிறைவேற்றுவதில் காலதாமதம் இன்னமும் ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. அதில் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக, மன்ற உறுப்பினர்கள் பலரும் எடுத்துத் தெரிவித்தது போல என்.ஜி. ஓ.-க்களுடைய பஞ்சப்படி உயர்வு பிரச்னை இருந்து கொண்டிருக்கிறது. அதைப்பற்றி மன்ற உறுப்பினர்கள் எடுத்துரைக்க கடமைப்பட்டிருக்கிறார்கள். அந்தப் பிரச்னையைப் பொறுத்துத்தான் விலைவாசி மற்ற பிரச்னைகளும் அமைகின்றன என்று கணக்கு எடுத்துச் சொல்லப்படுகிறது. கனம் முதல் அமைச்சர் அவர்கள் இந்திய அரசு எந்த நிலையில் எந்த அளவுக்கு அவர்களுடைய ஊழியர்களின் பஞ்சப்படியை உயர்த்துகிறார்களோ, அதையொட்டி இந்திய அரசின் உதவி பெற்று, இந்திய அரசின் அனுமதி பெற்று; பஞ்சப்படி உயர்வு மாநில அரசு ஊழியர்களைப் பொறுத்த வரையில் நிறைவேற்றப்படும் என்று முன்பே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அண்மையில் சென்னையை 'ஏ' நகரமாக்கி, சென்னை நகரத்தில் பணியாற்றும் மத்திய அரசின் கீழ் பணிபுரியும் ஊழியர்களுக்கு ஈட்டுப்படி கொடுக்கும் முறையும் வகுக்கப்பட்டிருக்கிறது. எந்த வகையில் பார்த்தாலும் அவர்கள் அதிக ஊதியம் பெறுகிறார்கள், அவர்களுக்கு அண்மையில் பஞ்சப்படியும் உயர்த்தப்பட்டிருக்கிறது. சென்னை அரசாங்கத்தின் கீழ் பணிபுரிபவர்களுக்கு அந்த உயர்வு இன்னும் கொடுக்கப்படவில்லை; தரப்படும் என்ற எண்ணம் சொல்லப்பட்டிருக்கிறது. அது செல்லச் செல்ல

தேர்தல் நெருங்குகின்ற காலத்தில் தரப்படுமோ என்று எண்ண வேண்டியிருக்கிறது. எப்படி இருந்தாலும் சரி; தேர்தலுக்கு முன்பு அந்த உயர்வு தரப்பட்டாலும் சரி; அது மகிழ்ச்சிக்குரிய ஒன்றாக அமையக்கூடும். எப்படியாவது உயர்வு கிடைக்கவேண்டும், தேர்தல் காலத்தை ஒட்டி கிடைத்தாலும் சரி, அல்லது தேர்தலுக்கு முன்பு அளிக்கப்பட்டாலும் சரி. அது மகிழ்ச்சியை தரக்கூடிய ஒன்று. இப்பொழுதே கொடுக்கக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. கொடுக்கப்படும் என்ற கருத்து மட்டும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அநேகமாக அக்டோபர் அல்லது ஜூலை மாதத்தில் வரக்கூடிய ஒன்றாக அமையுமோ அல்லது எதிர்பார்க்கலாமோ என்னவோ. எப்படியிருந்தாலும் பஞ்சப்படி உயர்வு மாநில அரசின் கீழ் பணிபுரியும் ஊழியர்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கக்கூடும், அவர்களுக்கு இருக்கிற குறையை போக்கக்கூடும். அவர்களுடைய மனதிலே குறைபாடு இல்லாத நிலைமை இருந்தால் தான் நிர்வாகம் சிறந்த முறையிலே நடைபெறும் என்று நிர்வாகத்தைப் பொறுத்து சொல்லப்படுகிறது. மாநில அரசு ஊழியர்களைப் பொறுத்தவரையில் வீட்டு வாடகைப் படி ரூ. 15 தரப்படுகிறது, ரூ. 90 முதல் 299 வரை சம்பளம் பெறும் ஊழியர்களுக்கு ரூ. 15-ம், ரூ. 300 முதல் 500 வரை ஊதியம் பெறுபவர்களுக்கு ரூ. 20-ம் வீட்டு வாடகைப் படி தரப்படுகிறது. மத்திய அரசு ஊழியர்களுக்கு சம்பளத்தில் 15 சதவிகிதம் வீட்டு வாடகைப்படியாக தரப்படுகிறது. மேலும் அவர்களுக்கு நகர ஈட்டுப் படியும் கொடுக்கப்படுகிறது. ஆனால், இவர்களுக்குக் கொடுக்கப்படவில்லை. சென்னை அரசின் கீழ் பணிபுரியும் கீழ்நிலை உத்தியோகஸ்தர்களுக்கு எல்லாவற்றையும் சேர்த்து ரூ. 155 வரக்கூடிய நிலைமை இருக்கிறது. மத்திய அரசின் கீழ் பணிபுரிகிறவர்களுக்கு ரூ. 199 கிடைக்கிறது. அதே மாதிரி சென்னை அரசின் கீழ் மேல் நிலையில் பணிபுரியும் உத்தியோகஸ்தர்களுக்கு ரூ. 190-ம், மத்திய அரசின் கீழ் பணிபுரிகிறவர்களுக்கு ரூ. 220.50-ம் கிடைக்கிறது. அதுமட்டுமல்ல. சென்னை அரசின் கீழ் பணிபுரிகிறவர்களுக்கு பஞ்சப்படி உயர்த்தாதது மட்டுமல்ல. அவர்களிடமிருந்து பாதுகாப்புக்காக கட்டாய சேமிப்பு 5 சதவிகிதம் வசூலிக்கப்படுகிறது. ஆனால், இந்திய அரசின் கீழ் பணிபுரியும் ஊழியர்களைப் பொறுத்தவரையில், 5 சதவிகிதம் ஆக வசூலிக்கப்பட்டது 3 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டு, இப்பொழுது அதையும் நிறுத்திவிட்டார்கள் என்று சொல்லப்படுகிறது. அது எந்த அளவுக்கு உண்மையோ என்னவோ தெரியாது. ஆனால் சென்னை அரசின் கீழ் பணிபுரிகிறவர்களிடமிருந்து 5 சதவிகிதம் பாதுகாப்பு கட்டாய சேமிப்பு வசூலிக்கப்படுகிறது. அது இன்னும் நிறுத்தப்படவில்லை. நெருக்கடி நிலைமை இப்பொழுது இல்லாத சூழ்நிலை ஏற்பட்டிருந்தும், பஞ்சப்படி உயர்வு இன்னும் கொடுக்கப்படாத சூழ்நிலை இருந்தும், 5 சதவிகிதம் கட்டாய சேமிப்பு இன்னும் இவர்களிடமிருந்து வசூலிக்கப்படுகிறது, இது அவர்களை மிகவும் பாதிக்கிறது என்று சொல்லப்படுகிறது. இதில் தீவிர கவனம் செலுத்தி, இதைப் பிடிக்காமல் நிறுத்தி வைப்பதன் மூலமாக இவர்களுக்கு ஓரளவுக்கு சலுகை வழங்கப்படவேண்டும், அதையும் இந்த அரசு மேற்கொள்ளவேண்டும் என்று கூறிக்கொள்ளுகிறேன்.





நிதி நிலை அறிக்கையைப் பொறுத்த பல்வேறு கருத்துக்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. சீர்கேடான நிலைமைகளை மாற்றி அமைப்பதற்கான வழிவகைளை அரசு மேற்கொள்ளவேண்டும். நிதிநிலை அறிக்கையைப் பொறுத்தவரையில், செலவு இனத்தைக் குறைபாடான முறையில் கையாளுதல், தேவைகளைச் சரியில்லாத முறையில் கணக்கிடுதல், சில அரசாங்கத்துறைகளிடையே சரியானபடி கூட்டுறவு, ஒத்துழைப்பு இல்லாமையால் ஏற்படும் கூடுதல் செலவு ஏற்படுதல் அல்லது செலவு செய்யப்படாமல் மிச்சப்படுதல், இவைகளிலெல்லாம் மிக கவனம் செலுத்தி, செலவு இனத்தைச் சுருக்குவதன் மூலமாகவும், மற்றும் செம்மையான முறைகளைக் கையாளுவதன் மூலமாகவும் இந்தக் குறைபாடுகளை அகற்றுதல் வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

மன்ற உறுப்பினர்கள் பல்வேறு கருத்துக்களை எடுத்துரைத்திருக்கிறார்கள். அத்துணை கருத்துக்களையும் நிறைவேற்றுவதன் மூலம் அரசாங்கம் சிறப்பான சூழ்நிலையை உருவாக்குதல் வேண்டும். வரிச்சுமை நாளுக்கு நாள் அதிகமாகிக்கொண்டு வருகிறது, வரியற்ற வருவாய் பெருகுவதற்கான சூழ்நிலை ஏற்படவில்லை என்ற கருத்தும் தெரிவிக்கப்பட்டது. வரிச் சுமையைக் குறைத்து வீண் செலவைக் குறைத்து வரியற்ற வருமானத்தைப் பெருக்குவதற்கான வழிவகைகளை மேற்கொள்ளுதல் வேண்டும். வீணான செலவினங்கள், ஊழல்கள் பல இருக்கின்றன என்று தணிக்கை பற்றிய அறிக்கையிலும், பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கையிலும் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. அவைகளைப்பற்றியெல்லாம் மான்யக்கோரிக்கை விவாதத்தின்பொழுது இந்த மன்றத்தில் எடுத்துவைக்கப்படும். இதிலெல்லாம் தீவிர கவனம் செலுத்துவதின் மூலமாகத்தான் அரசாங்கம் கொண்டிருக்கிற நோக்கத்தை நிறைவேற்ற முடியும். இங்கே கூறப்பட்ட கருத்துக்கள் அத்துணையையும் அமைச்சர் அவை மனத்திலே வைத்துக் கொள்ளவேண்டும். உறுப்பினர்கள் சொல்லுவதற்கும், அமைச்சர்கள் சொல்லுவதற்கும், அதிகாரிகள் எடுக்கும் நடவடிக்கைகளுக்கும் ஒன்றுக்கொன்று தொடர்பு இல்லாமல் இருக்கிறது. இந்த நிலைமை தொடர்ந்து இருக்கிறவரையிலும் குறைபாடுகள் தொடர்ந்து இருக்கத்தான் செய்யும். உறுப்பினர்கள் கூறிய கருத்துக்களை மனதில் கொண்டு குறைபாடுகளைத் தவிர்த்து, சீரமைப்புச் செய்யவேண்டும். உறுப்பினர்களுடைய கருத்துக்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டும். அப்பொழுது தான் அதிகாரிகளும் அவைகளில் அக்கறையோடு கவனம் செலுத்துவார்கள். கூறப்பட்ட கருத்துக்களுக்கு, நியாயமானவை, நேர்மையானவை உண்மையானவை, செய்யப்பட வேண்டியவை, ஆகிய கருத்துக்களுக்கு அமைச்சர்கள் அதிக முக்கியத்துவம் கொடுத்தால் தான், முக்கியத்துவம் கொடுக்கவேண்டும் என்று அதிகாரிகளை வற்புறுத்துவதன் மூலமாகத்தான், அதிகாரிகள் மிக அக்கறையோடு அந்தக் கருத்துக்களை நிறைவேற்றிவைப்பதற்கும், அதற்கு மதிப்புக் கொடுப்பதற்குமான ஒரு சூழ்நிலை ஏற்படும். இருக்கிற குறைபாடுகளைப் போக்கி, சொல்லப்படுகிற கருத்துக்களை நிறைவேற்றுகிற சூழ்நிலையை ஏற்படுத்துவதன் மூலம் தான், அங்கத்தினர்கள் இங்கே

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [5th March 1966

கூறிய கருத்துக்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கவேண்டும், அவைகளைப்பற்றி தீவிர கவனம் செலுத்தவேண்டும் என்று அமைச்சர் அவை அதிகாரிகளுக்கு உத்தரவிடுவதன் மூலம் தான், இந்த மன்றத்திலே கூறப்படுகிற கருத்துகளுக்கு மதிப்பு ஏற்படும். உறுப்பினர்கள் பேசுவதற்கும், அமைச்சர்கள் கூறுவதற்கும், நடைமுறைக்கும் தொடர்பு இல்லாத சூழ்நிலை இப்பொழுது இருந்துகொண்டிருக்கிறது. ஆண்டுக்கு ஆண்டு சொல்லவேண்டியவைகளை சொல்லிக்கொண்டிருக்கிறோம், அமைச்சர்களும் சொல்லவேண்டியவைகளைச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள், நடைமுறைகள் அப்படியேதான் இருந்து கொண்டிருக்கின்றன. பல துறைகளிலும் இந்த நிலைமைகளைப் போக்குவதன் மூலம்தான் இந்த நிதிநிலை அறிக்கையில் கூறப்பட்ட நோக்கங்களை நிறைவேற்ற முடியும் என்று மீண்டும் வற்புறுத்திக் கூறுகிறேன். இப்பொழுது உடனடியாக ஏற்பட்டிருக்கிற விவசாயப் பிரச்சினையை, உணவுப் பிரச்னையைத் தீர்க்கக்கூடிய முறையிலே இந்த நிதிநிலை அறிக்கையின் போக்கு அமையவில்லை என்று வருத்தத்தோடு தெரிவித்துக் கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகிறேன். வணக்கம்.

*** கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கனம் சபாநாயகர் அவர்களே ஆறு நாட்களாக வரவு செலவுத் திட்டத்தின் மீது பொது விவாதம் நடைபெற்று இருப்பது குறித்து முதலில் என்னுடைய திருப்தியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். பாராட்டுதல் என்று கூறினால் அது முறையாக இருக்காது. முக்கியமாக விவாதத்தில் கலந்து கொண்டவர்களில் எதிர்க்கட்சியினர் பலர் இருக்கிறார்கள். அவர்களுக்கு எதிர்க்கட்சி என்ற உணர்ச்சி மிகவும் அதிகமாக இருக்கிறது. அது அப்படியே இருக்க வேண்டும் என்பதுதான் என்னுடைய விருப்பம் கூட, எப்பொழுதும் அப்படியேதான் விளங்கவேண்டும் என்பதல்ல. ஆனால், எதிர்க்கட்சி ஸ்தானத்தில் இருக்கிற வரையில் எதிர்க்கட்சியாகத்தான் இயங்கவேண்டும். எதிர்க்கட்சியாக இயங்குவது என்றால், அவர்கள் எங்களுடைய ஸ்தானங்களை நாற்காலியாக இருந்தாலும், பெஞ்சாக இருந்தாலும், மேஜையாக இருந்தாலும், அதை மேற்கொள்ள வேண்டும் என்று ஆசைப்படுவது ரொம்ப நியாயமான ஆசை. அது ஒன்றும் பேராசை அல்ல. இதைப்பற்றி என்னைப் பொறுத்த மட்டில் நான் பரிகாசமாகக் கூட பேச மாட்டேன். இல்லையென்றால் அவர்கள் எதிர்க்கட்சியாக இருக்க முடியாது. ஜனநாயகத்தில் எனக்கு பெருத்த நம்பிக்கை உண்டு. எங்கள் கட்சிக்கும் உண்டு. ஜனநாயகத்தில் ஒரு உருப்படியான எதிர்க்கட்சி இயங்க வேண்டும் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது, உருப்படியான எதிர்க்கட்சியாக இருந்தால், அந்த வகையிலே ஆளும் கட்சியின் நிர்வாகத்தில் இருக்கிற குற்றங்குறைகளை எடுத்துக் கூறத் தான் வேண்டும். அப்படிக் கூறுவது உண்மை அற்றதாக இருந்தால், நிலைமையை எடுத்து விளக்குவதற்கு எங்களுக்கு சந்தர்ப்பம் இருக்கிறது. ஆதாரம் அற்றதாக இருந்தால் நிலைமையை எடுத்துக் கூறுவதற்கு எங்களுக்கு சந்தர்ப்பம் இருக்கிறது. இங்கே நடைபெறுகிற விவாதத்தை வெளியிலே உள்ள



5th March 1966] [திரு. எம். பக்தவத்சலம்]

பொது மக்கள், மகாஜனங்கள் கூர்ந்து கவனித்துக்கொண்டு வருகிறார்கள். மேலும், நிலைமையை அவர்களுக்கு எடுத்து விளக்கக் கூடிய ஆற்றல் எதிர்க்கட்சிக்கு இருப்பது போல எங்களுக்கும் இருக்கிறது. நாங்கள் எடுத்துச் சொல்ல முடியும். ஆகவே, எதிர்க் கட்சியினர் இங்கே குறை கூறுகிறார்கள் என்று நான் குறை கூற மாட்டேன். அதை நான் வரவேற்கிறேன்.

மற்றொன்று, அடுத்த ஆண்டு வரவு செலவுத் திட்டத்தை நாம் விவாதிப்பதற்கு முன்பு தேர்தல் வர இருக்கிறது என்ற ஒரு சூழ்நிலை இந்த விவாதத்தில் ஏற்பட்டிருக்கிறது. அது நம் கண் முன்னால் இருக்கிறதோ, இல்லையோ மனதிலே இருக்கிறது. தேர்தல் வந்துவிட்டது, தேர்தல் வந்துவிட்டது என்ற சூழ்நிலை இருக்கிறது. அரசியல்வாதிகள் தேர்தலில் வெற்றி பெறவேண்டும் என்று ஆசைப் படுவது ரொம்ப நியாயமான ஆசை. போட்டி என்றால் யார் வேண்டுமானாலும் வெற்றி பெறலாம். மக்களுடைய ஆதரவைப் பொறுத்துத் தான் வெற்றி இருக்கிறது. மக்களுடைய ஆதரவை எப்படி திரட்டுவது என்பது தான் அரசியல் வாதிகளிடையே முக்கிய எண்ணமாக இருக்கிறது. அதில்தான் அனைவரும் கண்ணும் கருத்துமாக இருக்கிறார்கள். சில இடங்களில் விபரீதமான சம்பவங்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன என்பதை பத்திரிகைகள் வாயிலாக அறிகிறோம். அப்படியெல்லாம் இருந்த 12-00 noon. போதிலும், அதையெல்லாம் பார்க்கும்பொழுது, இந்த மன்றத்தைப் பொறுத்த மட்டில் ரொம்ப சாதகமான முறையிலே, இதுவரையில் இல்லாத முறையிலே, நாம் சற்று பெருமிதம் அடையக்கூடிய முறையிலே ரொம்ப சுமுகமாக இங்கே விவாதம் நடைபெற்றது. ஒருவருக்கொருவர் பரிமாறிக்கொண்டாலும், அளவோடு இருக்க வேண்டும். கொஞ்சம் அளவுக்கு மீறி இருக்கிறது. இருந்தாலும் அதிகமாக இல்லை. இது பெருமைப்படவேண்டிய விஷயம். மற்ற மாநிலங்களைக் குறைகூற வில்லை. பிறரைக் குறைகூறும் வழக்கம் எனக்கு கொஞ்சம்கூட கிடையாது. ஆனாலும் விவாதத்தின் போது நம் அங்கத்தினர்கள் நடந்து கொண்ட விதம், நம் தமிழ் நாட்டினுடைய பண்பாட்டிற்கு எடுத்துக்காட்டாக இருந்தது. தமிழ் நாட்டுப் பண்பு எப்படிப் பட்டது என்பதைத் தான் காட்டியது என்பதைக் கண்டு நான் மிக்க பெருமைப் படுவதுபோல இந்த மன்றத்தில் எல்லா தரப்பிலும் உள்ள எல்லா அங்கத்தினர்களும் பெருமைப்படுவார்கள் என்று நம்புகிறேன்.

இப்பொழுது, இந்த ஸ்தானத்தைக் கைப்பற்ற வேண்டும் என்று தேர்தலில் ஆசைப்படுவது நியாயந்தான். என் நண்பர்களுக்கு நான் அடிக்கடி சொல்லுவது வழக்கம். நான் அகங்காரம் உள்ளவன் அல்ல; அப்படி எதிர்க் கட்சிக் காரர்களுக்குச் சொல்லமாட்டேன். ஆசைப்படலாம். ஆனால் ஆசைப்பட்டால் மட்டும்போதுமா? ஒன்றுக்கு ஆசைப்பட்டால், அதை எப்படி அடைவது என்று தெரியவேண்டாமா? இல்லையென்றால், ஏமாற்றம். (frustration) —அதாவது வெறுப்பு வந்துவிடும். அதன் பேரில் எதைஎதையோ சொல்ல வேண்டும் என்று தோன்றுகிறது.

[திரு. எம். பக்தவத்சலம்] [5th March 1966

எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சிலர் பேசினார்கள். ஒரு பத்திரிகை கூட அது பற்றிக் குறிப்பிட்டு, மொனடனிக்குப் பிறகு இது ருசிகரமாக நடந்தது என்று சொல்லியிருந்தது. தெனாலிராமன் கதையைச் சொன்னார்கள் எதிர்க் கட்சித் துணைத்தலைவர். அது ஒன்றும் பிரமாதம் இல்லை. என் பக்கத்தில் இருக்கும் அங்கத்தினர்கள் அதை விபரீதமாக எடுத்துக் கொள்ள வேண்டியதில்லை; அதைப் பற்றி வருத்தப் படக் கூட வேண்டியதில்லை; இதெல்லாம் சகஜம். ஆனால், நான் தெனாலிராமன் கதையை படிக்க ஆரம்பித்ததற்கு முன்னால், தெனாலிராமனுடைய பல கதைகளைச் சொல்லக் கேட்டிருக்கிறேன். எங்கள் பாட்டி சொல்லியதைக் கேட்டிருக்கிறேன். (சிரிப்பு) அது இப்பொழுது எனக்கு நினைவுக்கு வருகிறது. கனம் எதிர்க் கட்சித் துணைத் தலைவர் சொன்ன தெனாலிராமன் கதையைக் கேட்டபோது, இன்னும் அதைவிட சிறந்த ஒரு தெனாலிராமன் கதையைச் சொல்லியிருக்கலாம் என்று தோன்றியது. ஆளும் கட்சியைத் தாக்குவதற்கும், வேறு நல்ல கதையைச் சொல்லலாம். அதைக் கூட எதிர்க் கட்சித் துணைத் தலைவர் சொல்ல முடியவில்லை. அதுதான் உண்மை நிலை. அவர்கள் சொன்னார்கள், ஏதோ மாட்டுச்சாணத்தை எடுத்து விளக்குமாறினால் கோடு இழுத்து, இது குதிரை வால் என்று சொன்ன கதையோடு நிறுத்திவிட்டார்கள். தாக்க வேண்டும் என்கிற எண்ணம் வந்து தெனாலிராமன் கதையை வேடிக்கையாகச் சொன்னாலும், அதை விட தரமான கதை எனக்கு நினைவுக்கு வருகிறது. நான் அவர்கள் ஸ்தானத்தில் இருந்தால் (திரு. மு. கருணாநிதி: அடுத்த வருஷம் இருக்கலாம்!) அதைச் சொல்லியிருப்பேன். எதிர்க் கட்சித் துணைத் தலைவர் ஒரு தீவிர வாதி. ஆனாலும் அவர் சொன்னதை விடக் கொஞ்சம் அதிகமாகத் தாக்கக் கூடிய கதை கூடத் தெரியும். அவர்கள் அந்தக் கதைகளையெல்லாம் படித்திருக்கலாம். ஆனால் நான் கேட்டதுதான், படிக்கவில்லை. இருந்தாலும், அப்படிச் சொல்வதற்கு இடம் இல்லை. அந்த வகையில் இந்த வரவு செலவுத் திட்டம் அமைந்திருக்கிறது. ஆனால் ஒன்று சொல்ல விரும்புகிறேன். ரொம்பக் காரசாரமாக இல்லாமல், சுமுகமாக நடந்தது இந்த விவாதம். ஒன்று இரண்டு நடந்திருக்கலாம், சில சமயங்களிலே. குறை இருக்கலாம்; அதை எடுத்துச் சொல்ல எதிர்க் கட்சிக்கு உரிமை இருக்கிறது. அவர்கள் அரசாங்கத்தைத் தாக்கலாம்; கட்சியைத் தாக்கலாம்; அமைச்சர்களைத் தனியான ஹோதாவில் தாக்கலாம். அப்படிக் கூறுவதை நான் உண்மையிலேயே குறைகூற மாட்டேன். அதற்காக வருந்த மாட்டேன். ஆனால், எதிர்க் கட்சித் துணைத் தலைவரும், எதிர்க் கட்சி உறுப்பினர்களும், மற்றவர்களும் சந்தேகத்தைத் தூண்டும் வகையில் பேசினால், அது சரியாகாது. தாக்குவதிலும், குறைகூறுவதிலும் கூட ஒரு முறையிருக்கிறது. அவர்கள் செய்வது நல்ல முறையல்ல என்றுதான் சொல்லுவேன். சும்மா தூசியைக் கிளப்பிவிடலாம் என்று செய்கிறார்கள். அமைச்சருடைய உறவினர் என்று சொல்லிவிடுவது. உறவினர் என்றால் எத்தனையோ பேர்களுக்கு யார் என்று கூடத் தெரியாது, தூரத்தில் ஒரு உறவினர் என்று சொல்லி, அமைச்சருடைய பங்கு





5th March 1966] [திரு. எம். பக்தவத்சலம்]

என்ன என்று சொல்லாமல், வெறுமனே தூசியைக் கிளப்பி விடுவது சரியல்ல, நியாயம் அல்ல. சொல்லுவதை விளக்கமாகச் சொல்ல வேண்டும். எதிர்க் கட்சி உறுப்பினர்கள் 'இன்ஸினுவேட்' செய்யும் வகையில் மண்ணைத் தூற்றலாம் என்று செய்வது சரியில்லை. செய்யக் கூடாது என்பது இல்லை. அதில் ஒரு முறையில்லையா? அதைத்தான் சொல்ல விரும்புகிறேன்.

நம்மைப் பொறுத்த வரையில், சபையில் இன்னும் கொஞ்சம் ஸென்ஸ் ஆஃப் ஹ்யூமர் வேண்டும். சில சமயத்திலே போதிய அளவு அது இருப்பதில்லை. மனிதனுக்கு ஸென்ஸ் ஆஃப் ஹ்யூமர் மிக அவசியம், நகைச் சுவை உணர்ச்சி வாழ்க்கைக்கு அவசியம். நான் ஏதோ குறைவாக சொல்லுகிறேன் என்று எடுத்துக் கொள்ள வேண்டாம். என்னுடைய சக அமைச்சர் எத்தனை இட்லி, எத்தனை வடை தின்பார் என்றார்கள். அது பெருமையாக எடுத்துக் கொள்ளப்பட வேண்டிய விஷயம். இதையெல்லாம் ஸீரியஸாக எடுத்துக்கொள்ள வேண்டியதில்லை. இதெல்லாம், அந்தப் பத்திரிகை கூறியது போல, கொஞ்சம் தூக்கம் வருகிறவர்களுக்கு அவர்களை சபாநாயகர் எழுப்புவதற்கு முன்னே, அவர்கள் தூக்கத்தைத் தடுக்க உதவியாக இருக்கும். ஆனால் அதெல்லாம் அவரவர்கள் சொல்லுகிற பாணியைப் பொறுத்தது. ஒருவர் ஒரு வகையில் சொல்லலாம், இன்னொருவர் வேறுவகையில் சொல்லலாம். அப்படி ஏதோ சொன்னாலும், அதையெல்லாம் ஸீரியஸாக எடுத்துக்கொள்ள வேண்டியது இல்லை.

ஆனால் முக்கியமாக, ஒன்றுமே இல்லை என்று சொன்னார்கள். அதுவும் சொல்லுகிற பாணி எப்படி? 18 ஆண்டு ஆட்சியில் விளக்குகளெல்லாம் அணைந்து போய் விட்டன, எங்கும் இருள் மயம், பஞ்சம், பசி, கொலை, மக்கள் அவதிப்படுகிறார்கள் என்று சொன்னார்கள். அது கூடச் சொல்லவில்லை என்றால் எதிர்க் கட்சியாகாது. இருக்கிற நிலையை நாங்கள் சொல்ல முடியும். சில சமயத்திலே ஒரு கொடிய நோய் வந்துவிடும். மஞ்சக்காமாலை என்று ஒரு நோய் வருகிறது. அது ரொம்பத் தொந்தரவு படுத்தும் வியாதி என்று டாக்டாகள், அதனால் அவதிப்பட்டவர்கள் சொல்லுவார்கள். அப்படிப்பட்ட வியாதியில் வெள்ளைக்காக்கையைப் பார்த்தேன் என்று ஒருவன் சொல்வதையும் அதை உறுதியாக்க திருப்பித் திருப்பி அதையே சித்தாந்தம் செய்யப் பார்ப்பதையும் என்னென்று சொல்லுவது? அது ஒரு பழக்கம். அது அரசியல். ஆனால், 18 ஆண்டுகளில் ஒன்றுமே செய்யாமல் போய்விட்டார்கள் என்று அவர்கள் சொல்லலாம். ஆனால், என்ன செய்தார்கள், என்ன செய்யவில்லை என்று விளக்க வேண்டும். பக்கத்து வீட்டுக்காரியைப்பார்த்து, உன் புருஷன் போரான், வரான், என்றால் ஒன்றும் செய்யவில்லை என்றால் அதைக் கேட்பவள் உடனே "டைவோர்ஸ்" க்கு போட்டுவிடுவாளா? (சிரிப்பு.) அவளுக்கு தன் கணவனைப் பற்றித் தெரியும்; அவள் ஆண்டு அனுபவிக்கிறவள்; எத்தனை புடவை வாங்கித்தந்திருக்கிறான்; தங்கக் கட்டுப்பாடு இருந்தாலும் எத்தனை தங்க நகை போட்டிருக்கிறான், கூப்பிட்டுக் கொஞ்சுகிறான். அவளுக்குத் தெரியும் அவனைப் பற்றி. பக்கத்து வீட்டுக்காரி சொல்லுவதற்காக ஏமாறமாட்டாள். நம் பெண்களை யாரும் ஏமாற்ற முடியாது. அவர்கள்—படிப்பு அதிக

[திரு. எம். பக்தவத்சலம்] [5th March 1966

மாகிக் கொண்டு வருகிறது—அதிகப படிப்பு இல்லாவிட்டாலும், ஞானம் உடையவர்கள். யாரும் அவர்களை ஏமாற்ற முடியாது. தீய சக்திகளுக்கு இரையாக மாட்டார்கள். ஒரே குடும்பத்திலே கூட ஒரு இளைஞன் தவறினாலும், பெண் அதற்கெல்லாம கொஞ்சம் கூட இடம கொடுக்க மாட்டாள். அதை எதிர்க் கட்சி உறுப்பினர்களும் ஒப்புக் கொள்வார்கள். ஆகையினால் ஒன்றுமே செய்யவில்லை எனறு சொல்லலாம்; என்ன செய்திருககிறோம் என்று நாங்கள் சொல்ல வேண்டும். அவர்கள் சொல்லலாம், ஒன்றுமே செய்யவில்லை என்று. போகட்டும் என்று சாபம் கொடுக்கலாம், விரும்பலாம்; அது தேர்தல் முயற்சி. இதெல்லாம் சரி. ஆனால், எந்தக் கட்சியைப் பார்த்து, எந்தக் கட்சியைச் சார்ந்தவர்களைப் பார்த்துச் சொல்லுகிறார்கள்? இந்த நாட்டையும், இந்த மாநிலத்தையும் எந்த கட்சி ஆண்டுக்கொண்டு இருக்கிறதோ, அந்தக் கட்சியைப் பொறுத்தவரையில், என்றென்றைக்கும், சாஸ்வதமாக ஆள வேண்டும் என்ற எண்ணம் சிறிதும் கிடையாது. இன்றைக்கு 18 ஆண்டு காலமாக ஜனநாயகத்தை நடத்திவருகிறோம். அந்நிய ஆட்சியை அகற்றிச சுதந்திரம் பெற்றோம்; சுதந்திரம் அடைய காங்கிரஸ் கட்சி மகத்தான பங்கு எடுத்துக்கொண்டது, ஏன் இது ஒன்றேதான் பங்கு எடுத்துக் கொண்டது என்று கூடச் சொல்லலாம்.

மற்றவர்கள், இன்றைக்கு வேறு கட்சியிலே இருக்கிறவர்கள், கம்யூனிஸ்டு கட்சித் தலைவரைப் போன்றவர்கள், சுதந்திராக் கட்சித் தலைவரைப் போன்றவர்கள்கூட அன்றைக்குக் காங்கிரசில் ஈடுபட்டவர்கள் தான். கனம் சோஷலிஸ்டு கட்சித் தலைவர் அவர்கள் இன்றைக்கு ரொம்ப சுமுகமாகப் பேசினார்கள். இது வரைக்கும் அவர் இப்படிப் பேசினதே இல்லை. அவர் ஒரு தீவிரவாதி. எப்போதும் தீவிரவாதிதான். நல்ல மனிதர். அவர் ரொம்ப சுமுகமான முறையில் இன்று பேசினார். அவர்கள் எல்லோரும் அந்தக் காங்கிரசிலே ஈடுபட்டவர்கள்தான. காங்கிரசைச் சேர்ந்தவர்களாகத்தான் இருந்தார்கள். 'காங்கிரஸ்' என்று சொன்னால் அன்றைக்கிருந்த காங்கிரஸ்பற்றி நான் சொல்லுகிறேன். காங்கிரசை விட்டுச் சில பேர் பிரிந்து பின்னால் வேறு வேறு கட்சிகளிலே சேர்ந்திருக்கலாம். அன்றைக்கிருந்த அந்தக் காங்கிரசைச் சேர்ந்தவர்கள் தான் நாங்கள் இன்று ஆட்சியை நடத்துகிறவர்கள் அந்தக் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் தான். இந்தக் காங்கிரஸ் அரும்பாடுபட்டு நாட்டுக்குச் சுதந்திரத்தைப் பெற்றுத் தந்தது என்று சொல்லும்போது, அந்தச் சுதந்திரம் மக்களுடைய நல் வாழ்வுக்காக வந்த சுதந்திரம் தானே தவிர, வெறும் அதிகாரத்தைச் செலுத்துவதற்காக அல்ல; அமைச்சர் பொறுப்பை ஏற்றுப் பதவி வகிப்பதற்காக அல்ல. மக்கள் எல்லோரும் இன்புற்று நல்வாழ்வு வாழவேண்டும் என்பதற்காகத்தான் அன்னிய ஆட்சி அகற்றப்படவேண்டும், சுதந்திரம் வேண்டும் என்று நாம் கோரினோம். அவ்வாறு அரும்பாடுபட்டுச் சுதந்திரம் பெற்றோம் என்றால், எதற்காக அப்படிச் செய்தோம்? மக்களுடைய நல்வாழ்வுக்குச் சுதந்திரம் பயன்படவேண்டும் என்ற மற்றொரு எண்ணம் அதற்குக் காரணம். இந்த இரண்டும் இந்தக்



5th March 1966] [திரு. எம். பக்தவத்சலம்]

காங்கிரஸ் கட்சிக்குப் பரிபூரணமாக இருக்கும் காரணத்தால் தான். மேலும் மக்களுடைய ஆதரவைப் பெறுவதில் ஈடுபடுகிறோமே தவிர, ஏதோ சுதந்திரத்திற்காக நாங்கள்தான் பாடுபட்டு விட்டோம், அது எங்களுடைய ஏகபோக உரிமை, அதற்காக நாங்கள்தான் இந்த நாட்டை ஆள உரிமை பெற்றிருக்கிறோம் என்று சிறிதும் அந்த உரிமையை நாங்கள் கோரவில்லை. ஆனால், எங்களுக்குக் கவலை இருக்கிறது. இதுவரையிலும் பாடுபட்டுக் கொண்டு வந்தோம், மக்களுடைய நிலை ஓரளவு சீர்பட்டிருக்கிறது, அது மேலும் சீர்படவேண்டுமே என்ற கவலை தான் அது. எந்த நாட்டிலும் பிரச்னை இல்லாமல் இல்லை. ஒவ்வொரு நாடாக நான் குறிப்பிட்டுக் கூறி இந்தச் சபையின் நேரத்தை நான் எடுத்துக் கொள்ள விரும்பவில்லை. மற்ற நாடுகளை எடுத்துப் பார்த்தால், பல்லாண்டுகளாகத் தங்கள் தங்களுடைய கொள்கைகளை, கோட்பாடுகளைத் தீவிரமான முறையில் கடைப்பிடித்து ஆட்சி நடத்திக் கொண்டு, கொள்கை. கோட்பாடுகளை நிறைவேற்றிக் கொண்டு வருகிற எந்த நாட்டிலும் இன்றைக்குப் பிரச்னை தீர்ந்து விட்டது என்ற நிலை இல்லை. எந்த நாட்டிலாவது லட்சியம் பரிபூரணமாக நிறைவேற்றப்பட்டிருக்கிறதா என்று பார்த்தால், பெரும் பெரும் தலைவர்கள் எல்லாம் அந்த லட்சியத்தை அடைய வேண்டும் என்ற வகையில்தான் இன்னும் தீவிரமாகப் பாடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். இவ்வாறுதான் எத்தனையோ பேர்கள் சொல்வதை நான் கேட்டிருக்கிறேன். பிரச்னை எல்லாம் தீர்ந்துவிட்டது என்று சொல்ல முடியாது. தீர வேண்டியது இருக்கிறது. அதுதான் காங்கிரஸ் கட்சியினுடைய கவலை. அதுதான் இந்தக் கட்சி உணருகிற பொறுப்பு. ஆகவேதான், தொடர்ந்து மக்களுடைய ஆதரவைப் பெற்று, மேலும் மக்களுக்காகப் பணி செய்யவேண்டும், இதுவரை செய்தது போக, மேலும் பணி புரியவேண்டும், மக்களுக்கு நிவாரணம் அளிக்கவேண்டும். மக்களுடைய குறைகளை நீக்க வேண்டும், மக்கள் எல்லோரும் இன்புற்று, குறைவற்ற வாழ்வு வாழவேண்டும் என்ற கவலையோடுதான் இன்றைக்கு மேலும் தொடர்ந்து மக்களுடைய் ஆதரவைப் பெற நாங்கள் முற்படுகிறோம்.

ஆனால், "நாங்கள் அதைச் செய்யமாட்டோமா? உங்களுக்குத் தான் தெரியுமா?" என்று மற்றவர்கள் கேட்கலாம். சுதந்திரப் போராட்டத்தில் அன்றைக்கு பங்கு கொள்ளாதவர்களாக இருந்தாலும்கூடக் கேட்கலாம். ஆனால், எதிர் கட்சியினர் எப்படிச் செய்யப்போகிறார்கள்? இன்றைக்குப் பார்க்கிறோம். இங்கே பேசுவது ஒன்று. இங்கே பேசும்போதுகூட, அனுபவபூர்வமான உணர்ச்சியோடு பேசுகிறார்களா என்றால், இல்லை. ஏதோ காங்கிரஸ் கட்சியின் கொள்கையைவிட தனியாக ஒரு கொள்கையைச் சொல்ல வேண்டும், அந்தக் கொள்கையை அனுசரிக்கவில்லையே என்று அரசாங்கத்தின் மீது குறை கூறவேண்டும், காங்கிரஸ் கட்சியின் மீது குறை கூறவேண்டும் என்று சொல்வார்கள். அடிக்கடி கனம் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சொல்வது என்ன? எல்லாத் தொழில்களையும் தேசியமயமாக்கவில்லை என்பது அவர்களுடைய

ஒரு பெரிய குற்றச்சாட்டு. இந்தக் கொள்கையை நிறைவேற்றுவதற்காக அவர்கள் ஆட்சிபீடத்தில் அமரவேண்டும் என்று கோருகிறார்கள், தெரிவிக்கிறார்கள். இந்தக் கொள்கையைப் பற்றி நான் பின்னால் குறிப்பிடுகிறேன். ஆட்சிபீடத்தில் அமர்ந்தால் இந்தக் கொள்கையை எவ்வாறு இவர்கள் நிறைவேற்றப் போகிறார்கள்? இன்றைக்கு எப்படியாவது காங்கிரசை ஒழிக்கவேண்டும், தொலைக்கவேண்டும், தோற்கடிக்கவேண்டும் என்பதற்கு அவர்களுக்கு வழிகாட்டியாக இருக்கும் பெரியவர் இருக்கிறார். அவருடைய உபதேசத்தை அப்படியே ஏற்றுக்கொண்டு இவர்கள் அதிலே மூழ்ந்து இருக்கிறார்கள். அதற்காகக் கூட்டு சேருகிறார்கள். எதற்காகக் கூட்டு சேருகிறார்கள்? கொள்கையை லட்சியத்தை நிறைவேற்றுவதற்காகக் கூட்டுச் சேருவதை நான் ஒத்துக்கொள்ளுகிறேன். அதிலே நான் தவறு காணவில்லை; குற்றம் கூறவில்லை. "காங்கிரஸ் கட்சியை ஒழித்தால்தான் நாட்டுக்கு விமோசனம்" என்று அவர்களுடைய பெரியவர் சொல்வதை அவர்கள் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, காங்கிரஸ் கட்சியைத் தேர்தலிலே ஒழிப்பதற்குக் கூட்டுச் சேரலாம். எப்படியாவது கூட்டுச் சேர்ந்து, காங்கிரஸ் கட்சியை ஒழித்தால்தான் மற்றபடி எல்லாவற்றையும் நடத்தலாம் என்று அவர்கள் கருதினால், அப்படியே ஒழித்து விட்டார்கள் என்று வைத்துக்கொண்டாலும், இன்றைக்கு எப்படிச் செய்யப் போகிறார்கள்? காங்கிரஸ் கட்சியை ஒழிப்பதற்குத் தங்களுக்குப் பலம் தேடுவதற்கு, தங்களுக்கு ஆதரவு தேடுவதற்கு வேறு கட்சியோடு கூட்டுச் சேருவது ஒரு விஷயம். ஆனால், அம்மாடு நிற்கின்றார்களா அவர்கள்? நான் சொல்வதில் தவறு இருந்தால் எதிர்க் கட்சித் தலைவரோ, துணைத் தலைவரோ, சொல்லலாம். பத்திரிகையில் பார்த்ததைச் சொல்லுகிறேன். பத்திரிகைகளில் செய்தி வருகிறது என்றால், அநேகமாகத் தெரிந்துதான் எழுதுகிறார்கள். சும்மா பத்திரிகைமீது குறை கூற மாட்டேன்—இப்பொழுது ராஜ்ய சபைத் தேர்தல் வருகிறது. இந்த மன்றம் தேர்ந்தெடுக்கவேண்டிய ஆறு ஸ்தானங்கள் இருக்கின்றன. அதில் நான்கு ஸ்தானங்களுக்குக் காங்கிரஸ் கட்சியிலிருந்து அபேட்சகர்களை நிறுத்தியிருக்கிறோம். இப்போது வந்த செய்தி என்னவென்றால், திராவிட முன்னேற்றக் கழகத்தினர் ஒரு பெரிய மில் முதலாளி ஒருவரைத் சுதந்திராக் கட்சிப் பிரமுகரைத்தான் தேர்ந்தெடுக்கப்போகிறார்கள், அல்லது ஆதரிக்கப் போகிறார்கள், அல்லது இடம் கொடுக்கப் போகிறார்கள் என்ற செய்தியைப் பார்த்தேன். அப்படியிருந்தால், இவர்களுடைய கொள்கை எங்கே போயிற்று? தேசியமயமாக்கும் விஷயம் பாராளுமன்றத்திலே வர வேண்டிய விஷயம். சுதந்திராக் கட்சிக்கென்று ஒரு கொள்கை இருக்கிறதா? தமிழ் நாட்டில் ஒரு கொள்கை, டெல்லியில் ஒரு கொள்கை. மொழிப் பிரச்னை என்றால், அதற்குக் கொள்கை இல்லை, அது கட்சி சாற்பற்றது என்று சொல்லி விடுகிறார்கள்.

* **திரு. சா. கணேசன்:** ஆன் எ பாயின்ட் ஆஃப் பர்சனல் எக்ஸ்ப்ளனேஷன், சார் "மில் முதலாளி திரு. சுந்தரம்" என்று அவர்கள் குறிப்பிட்டார்கள். (கனம் திரு. வெ. ராமையா:





பெயர் சொல்லவில்லை). பெயரை முதல் அமைச்சர் அவர்கள் குறிப்பிடவில்லையென்றாலும், அவர் பேசும்போது, அதுதான் அவருடைய உள்ளத்தில் தோன்றிற்று. குறிப்பிடப்படாமலேயே உண்மையாக உணர்த்திவிட்டது. பத்திரிகையில் பெயரும்தான் வந்தது. மில் முதலாளியாக இருப்பது பாவமா என்று நான் கேட்கிறேன். ஆதிகாலத்தில் உப்பு சத்தியாக்கிரகத்தில் பங்கெடுத்துக்கொண்டு சிறைக்குப் போய்க் கஷ்டப்பட்ட பரம தேசபக்தர் அவர். ஏற்கனவே காங்கிரஸ் சார்பாக நிற்கும்படி அழைக்கப்பட்டவரும்கூட! அது இருக்கட்டும். அடுத்து, "சுதந்திராக் கட்சிக்கு அங்கே ஒரு கொள்கை, இங்கே ஒரு கொள்கை" என்று முதல் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். சுதந்திராக் கட்சியின் கொள்கை என்ன என்பதைப் பல முறை நான் வாசித்துவிட்டேன். திரும்பத் திரும்பச் சொல்லப்போவதில்லை. சுதந்திராக் கட்சியினுடைய அடிப்படைக் கொள்கைகளையன்றி, மொழி போன்றவை பற்றிய வகையிலே அவரவர்களுடைய இஷ்டப்படி பேசலாம் என்பதுதான் எங்களுடைய கொள்கை என்பதைத் திரும்ப திரும்ப நான் சொல்ல வேண்டும் என்று முதல் அமைச்சர் அவர்கள் வைத்துக்கொள்ளக் கூடாது என்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

**திரு. இரா. நெடுஞ்செழியன்:** கனம் அவைத்தலைவர் அவர்களே, கொள்கையிலே வேறுபட்ட கட்சிகள், கொடுக்கப்படுகிற இடங்களை எப்படிப் பிரித்துக்கொள்ளுகிறார்கள் என்பதுபற்றிக் கனம் முதல் அமைச்சர் அவர்கள் கூறினார்கள். எதிர்க்கட்சிகளிலே பல் வேறு அரசியல் கட்சிகள் இருக்கின்றன. அரசியல் கட்சிகள் என்றால், கொள்கை, கோட்பாடுகளில் வேறுபடுவது நிச்சயம் உண்டு. அந்தக் கொள்கை வேறுபாட்டின்படி எந்த வகையிலே வேறுபடவேண்டுமோ அப்பொழுது வேறுபடலாம். சாதாரணமாக, பொதுக் கணக்குக் குழுவிற்கு நான்கு, ஆறு இடங்கள் தரப்படுகின்றன என்றால், நாங்கள் எடுத்துக்கொண்டு பிரித்துக் கொள்ளுகிறோம். யாரைப் போடுவது என்பதிலே கொள்கையைப் பொறுத்துக் கவலை இல்லை. கொள்கை அடிப்படையில் அது போடப்படுவதில்லை. அந்த அடிப்படையிலே, இந்த மன்றம் ராஜ்ய சபையில் ஆறு இடங்களுக்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கவேண்டும் என்றால், அதில் நான்கு இடங்களுக்குக் காங்கிரஸ் கட்சியினர் அபேட்சகர்களை நிறுத்துகிறார்கள். மீதம் உள்ள இரண்டு இடங்கள் இருக்கின்றன. அந்த இரண்டு இடங்களுக்கு அபேட்சகர்களை நிறுத்தும்போது, அது கொள்கையைப் பொறுத்து அமையும் ஒன்று அல்ல. கொள்கை அடிப்படையை விட்டுக்கொடுக்காத வகையில், ஆளும் கட்சியின் ஆதிக்கத்தைக் குலைக்கும் வகையில் தான், தகுதி அடிப்படையில் அபேட்சகர்களை நிறுத்துகிறோம். அதே அடிப்படையில் தான், கேரளாவில் காங்கிரஸ் கட்சியானது முஸ்லிம் லீக்கோடு கூட்டுச் சேர்ந்தது. அதே போல, கொள்கையிலே வேறுபாடு கொண்ட கம்யூனிஸ்டுக் கட்சியினருடன்கூட தேர்தல் சமயத்தில் சில நேரத்தில் காங்கிரஸ் ஒன்றுபட்டு வேலை செய்தது. ஆக, இரண்டு கட்சிகள் என்று வரும்

போது, இரு கட்சிகளும் தங்கள் தங்களுடைய கொள்கைகளை விட்டுக் கொடுக்காமல், தகுதி அடிப்படையிலே உதவி செய்வது ஜனநாயக மரபை ஒட்டியதுதான், அது கொள்கை அடிப்படையை விட்டுக்கொடுப்பதல்ல என்று பல தடவை எடுத்துச் சொல்லியிருக்கிறோம் என்பதைத் தங்கள் மூலமாக நான் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** கனம் சுதந்திராக் கட்சித் தலைவர் அவர்கள் அவருடைய கட்சித் தன்மையைப் பற்றி எடுத்துச் சொன்னார்கள். அடிப்படையான கொள்கை ஒன்றுதான். மற்றவற்றில் அவரவர்களுக்குச் சுதந்திரம் கொடுக்கப்பட்டு விட்டது, எதை வேண்டுமானாலும் செய்துகொள்ளலாம். அவர்களுடைய கட்சியின் பெயருக்கு ஏற்றபடியே கொள்கை அமைத்துக்கொண்டிருப்பதைச் சொன்னார்கள். ஆனால் தி.மு.க.வின் அடிப்படைக் கொள்கை அவர்களோடு மாறுபட்டிருக்கிறது என்பதைத்தான் நான் சொன்னேன். பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டி எஸ்டிமேட் கமிட்டி இவற்றுக்கு எல்லாம் ஸ்தானம் ஒதுக்குவது வேறு விஷயம். ஆனால் ராஜ்ய சபா ஸ்தானம் என்பது வேறு. அங்கே போகிறவர்கள் கட்சிக்கொள்கையையொட்டிச் செயல்பட வேண்டியவர்கள். நான் தனிப்பட்ட நபரைப்பற்றி ஒன்றும் சொல்லவில்லை. நாங்கள் வேறு கட்சியோடு தேர்தல் உடன்பாடு வைத்துக்கொண்டது இந்த அடிப்படையில் இல்லை. ஆனால் இங்கே தி.மு.க. வக்குக் கொள்கை என்று இருக்குமானால் இத்தகைய ஒரு உடன்பாடு செய்து கொள்ளமாட்டார்கள். நான் எதிர்க்கட்சிக்குப் பாடம் சொல்லவில்லை. அவர்கள் கொள்கையை நாம் மறந்தாலும் மக்கள் மறக்கமாட்டார்கள். அவர்கள் காணாமல் இருக்கமாட்டார்கள். காங்கிரஸ் கோளாவில் உடன்பாடு செய்துகொள்ளவில்லையா என்றவுடன் இங்கே மேசையைத் தட்டலாம்.

இன்றைக்கு காங்கிரஸ் கட்சியைப் பற்றி எத்தகைய குற்றச்சாட்டைச் சொல்கிறார்கள். இது பணக்காரர்கள் கட்சி, பணக்காரர்கள் தான் காங்கிரஸ் கட்சிக்கு ஆதரவு கொடுக்கிறார்கள் என்று அவர்கள் சொல்வதில் எவ்வளவு உண்மை உண்டு என்பதை மக்கள் அறிவார்கள். முன்பு பேசியவர்கள் கூட காங்கிரஸ் கட்சிக்கு நிதி சேகரித்ததைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். 20 லட்சம் ரூபாய் நிதி சேகரிக்கப்பட்டது என்று சொன்னார்கள். நான் அதைப்பற்றிய விவரங்களை எல்லாம் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியிடம் இருந்து கேட்டுப் பெற்றுள்ளேன். ஜில்லாவாரியான விவரம் என்னிடம் இருக்கிறது. திரு. காமராஜ் பிறந்த நாள் விழாவை வைத்து நிதி வசூல் செய்யப்பட்டது. அதை அவரிடம் கொடுக்கவில்லை. தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி நிதியாக வைத்துக் கொள்ளப்பட்டுள்ளது. இதில் மொத்தமாக வசூலாகியிருப்பது 15,61,212.34 ரூபாயாகும். ஜில்லாவாரியாகப் பார்க்கிறபோது திருச்சியை எடுத்துக்கொண்டால் ரூ. 12,60,088.84 ஆகும். இது எப்படி வசூல் செய்யப்பட்டது என்று பார்க்க வேண்டும். பணக்காரர்களிடம் கேட்டு வசூல் செய்து விடவில்லை. 100 ரூபாய், 50





ரூபாய், 10 ரூபாய், 5 ரூபாய், 1 ரூபாய் என்று ரசீது போட்டு ஏழைகள், நடுத்தர மக்கள் ஆகிய எல்லோருடைய ஆதரவைக் கொண்டுதான் நிதி திரட்டப்பட்டு இருக்கிறது. அதிலே ஒரு ரூபாய் ரசீது மூலம் 26,168 ரூபாய், 5 ரூபாய் வீதம் 22,270 ரூபாய், பத்து ரூபாய் வீதம் 23,410 ரூபாய, 25 ரூபாய் வீதம் 12,650 ரூபாய், ஐம்பது ரூபாய் வீதம் 15,200 ரூபாய், நூறு ரூபாய் வீதம் 19 ஆயிரம் தான் வந்திருக்கிறது. காங்கிரஸ் நிதிக்குப் பணம் கொடுத்திருக்கிறவர்கள் எல்லோரும் ஏழைகள், நடுத்தர மக்கள்—காங்கிரஸ் ஆட்சியை ஆதரிக்கிறவர்கள் தாம். பணக்காரர்கள், பணக்காரர்கள் என்றால் யார்? அவரவர்கள் தம்மை மற்றவரோடு ஒப்பிட்டு மற்றவரைப் பணக்காரன் என்று கருத முடியும். 50 ரூபாய் சம்பளக்காரனை விட 100 ரூபாய் சம்பளக்காரன், பணக்காரன், நூறு ரூபாய் சம்பளக்காரனைவிட ஐந்நூறு ரூபாய் சம்பளக்காரன் பணக்காரன், 500 ரூபாய் வாங்குகிறவனைவிட ஆயிரம் ரூபாய் வாங்குகிறவன் பணக்காரன். பணக்காரன்தான் கொடுத்தான் என்று ஏதோ சொல்லவேண்டியது—உபநிடதக்கதை சொல்லுவார்களே யானையை முறம் என்பது, இன்னொருவன் தூண் என்பது. இதுபோலத் தான்—பூரணமாக ஒரு விஷயத்தைப் பற்றித் தெரிந்து கொள்ளாமல் ஏதேதோ சொல்வது.

யுத்த நிதிக்கு பணம் வசூல் செய்யப் பட்டபோதே நான் சொன்னேன். ஏழைமக்கள், நடுத்தர மக்கள் தாம் அதிகமாகக் கொடுக்கிறார்கள். பணக்காரர்கள் என்று இருப்பவர்கள் அவ்வளவு அக்கறை காட்டவில்லை என்று குறிப்பிட்டேன். பணக்காரர்களாக இருப்பவர்கள் காங்கிரசை ஆதரிக்கலாம். காங்கிரஸ் யாரையும் புறக்கணிக்கவில்லை. அவர்கள் காங்கிரஸ் கட்சியை ஆதரிக்கிறார்கள் என்றால் எல்லோருக்கும் தெரியும், இது தான் ஸ்திரமான ஆட்சியைக் கொடுக்கும் என்று. ஸ்திரமான ஆட்சியைத்தான் எல்லோரும் விரும்புகிறார்கள். இன்றைக்கு அந்நிய நாட்டினர்கள் எல்லோரும் இங்கு இருக்கும் ஸ்திரமான ஆட்சியைத்தான் பாராட்டுகிறார்கள். காங்கிரஸ் கட்சி ஒன்றினால் தான் அதை அளிக்க முடியும் என்று உணர்கிறார்கள். இந்த நாட்டு அரசியலில் அவர்களுக்கு ஒன்றும் அக்கறை இல்லை. ஆகவே ஸ்திரமான ஆட்சியை விரும்புகிறவர்கள் காங்கிரஸ் கட்சியை ஆதரிக்கலாம். அதற்காக பணக்காரர்களுக்கு காங்கிரஸ் கட்சி தனிச் சலுகை அளிக்கிறது என்று சொல்ல முடியாது. அவ்வாறு அளிப்பதும் இல்லை.

எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தேர்தலுக்கு முன்பு ராஜிநாமாச் செய்யவேண்டும் என்று சொன்னார்கள். ஆனால் கம்யூனிஸ்டுக் கட்சி உறுப்பினர்—அனுபவத்தோடு சொன்னார்கள், எதற்காக ராஜிநாமாச் செய்யவேண்டும், அதிலே என்ன பயன்? அதனாலே அவர்களுடைய செல்வாக்குப் போய்விடுமா என்ற பொருளிலே சொன்னார்கள். நானே கூட நினைப்பது உண்டு. அவர்கள் தான் வந்துவிட்டுப்போகட்டுமே, நாமே விட்டுக்கொடுத்துவிடுவோம் என்றால்—அவர்களுக்கு என்ன கொள்கை இருக்கிறது? ராஜ்ய சபாத் தேர்தலைப் பார்க்கிறோம். அவர்களிடத்திலே விட்டுவிட்

[திரு. எம். பக்தவத்சலம்] [5th March 1966

டால் நாடு என்ன ஆவது? இதற்காகவா இவ்வளவு கஷ்டப்பட்டு சுதந்திரத்தைப் பெற்றோம்? ஸ்திரமான ஆட்சியை மக்களுக்கு அளிப்பதற்குப் பதிலாக தாட்சண்யத்தின்பேரால் நாட்டில் குழப்பமும், அராஜகமும் ஏற்படவா வழி செய்வது? அவர்களுடைய ஆட்சி என்று ஏற்படுமானால் அதைத் தவிர வேறு என்ன ஏற்படும்? இது எல்லாம் தான் எங்களுக்கு கவலையாக உள்ளது. விடுதலை பெற்று, நாட்டு மக்களின் நல்வாழ்வுக்காக இவ்வளவு பாடுபட்டு என்ன பயன்? ஆகவே தான் மக்கள் ஆதரவைப் பெறுவதற்கு

12-30 p.m. நாங்களும் முற்படுகிறோமே தவிர வேறு ஒன்றும் இல்லை. சுதந்திராக் கட்சித் தலைவர் அவர்கள் தேர்தல் நெறியைப் பற்றிச் சொன்னார்கள். (திரு. சா. கணேசன்: நான் சொல்லாததைச் சொன்னதாகச் சொல்லவேண்டாம்) மன்னிக்கவேண்டும். கம்யூனிஸ்டுக் கட்சித் தலைவர் சொன்னார்கள். சுதந்திராக்கட்சித் தலைவருக்கு தேர்தல் நெறியில் அக்கறை இல்லை. (சிரிப்பு) கம்யூனிஸ்டுக் கட்சித் தலைவர் சொன்னதை நான் முற்றிலும் ஏற்றுக் கொள்கிறேன். இதற்கு முன் நடந்த தேர்தல் காலங்களிலும் எல்லாக் கட்சியினர்களும் ஒன்றுகூடி இதுபோல ஒரு ஒழுங்குக் கட்டுப்பாட்டை வைத்துக்கொண்டோம். அதன்படி நடந்தும் கொண்டோம். இதில் கட்சி நடப்பது ஒன்று, கட்சி அபேட்சகர்கள் நடப்பது ஒன்று; தவறான பிரசாரங்கள் ஒரு பக்கம். பணம் செலவு செய்வது மற்றவற்றைக் கவனிக்க சட்டமே இருக்கிறது. தேர்தல் கமிஷன் இருக்கிறது. அதற்குமேல் நாமே ஒரு நெறியை ஏற்படுத்திக்கொள்வதும் நல்லது தான். ஆனால் இந்த அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் நெருக்கடி நிலை வேறு இருக்கிறது. முன்பெல்லாம் அவர்கள் சொல்லிக்கொண்டு வந்தது என்ன என்றால் நெருக்கடி நிலையில் தேர்தல் கூடாது, தேர்தல் வேண்டும் என்று சொன்னால் நெருக்கடி நிலையை எடுத்துவிட வேண்டுமென்று சொன்னார்கள். இங்கே அங்கத்தினர்களும் அதைப்பற்றிச் சொன்னார்கள். நெருக்கடி நிலைமை நம் கையில் இல்லை, எல்லையில் இருக்கிறது என்று சொன்னேன். அப்படி இருக்கிறபொழுது தேர்தலுக்காக நெருக்கடி நிலையை வேண்டாம் என்று சொல்வது சரியல்ல. நாட்டிலே சீனர்கள் தொல்லை அதிகப்பட்டிருக்கிறது என்பதை நம்முடைய பாதுகாப்பு அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். அந்தத் தொல்லை இருக்கிற வரையில் நெருக்கடி நிலையை எடுத்துவிடலாம் என்று எப்படிச் சொல்வது? டாஷ்கண்ட் ஒப்பந்தம் ஏற்பட்ட பிறகு பாகிஸ்தான் உறவு பொறுத்தவரையில் நிலைமை சீர்ப்பட்டிருக்கிறது, சீர்ப்பட்டு இருக்கிறது என்றுதான் சொல்லலாம், இன்னும் முடிவு ஏற்படவில்லை. ஆகவே, மற்றொரு பக்கத்தில் சீனர்களுடைய தொல்லை இருக்கிறபோது நெருக்கடி தீர்ந்துவிட்டது என்று எவ்வாறு சொல்ல முடியும்? டிஃபென்ஸ் ஆஃப் இண்டியா ரூல்ஸை எடுத்துவிட வேண்டுமென்று கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கூறினார்கள். பாதுகாப்புச் சட்டத்தைப் பொறுத்தவரையில் அவ்வப்போது இருக்கக்கூடிய நிலைமையைப் பொறுத்துத்தான் அது பிரயோகிக்கப்படும். முன்பு விபரீதமான ஒரு நிலை ஏற்பட்டது. ஏதோ ஒரு



5th March 1966] [திரு. எம். பக்தவத்சலம்]

கலவரம் தான் அது. அதைப் பலர் பயன்படுத்திக்கொண்டார்கள். பல அசம்பாவிதமான நிலைமைகள் ஏற்பட்டன. அராஜகம் கூட சிறிது காலம் இருந்தது. அதை அடக்க மக்களைப் பாதுகாப்பதற்காகப் பாதுகாப்புச் சட்டம் பயன்பட்டு வந்தது. நாட்டின் பாதுகாப்புக்கு உகந்த முறையில் தான் நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டது. கனம் சோஷலிஸ்ட் கட்சித் தலைவர் அவர்கள் இப்பொழுது கலவரங்கள் இல்லை, சுமூகமான நிலைமை ஏற்பட்டிருக்கிறது, வழக்குகள் எல்லாம் நடைபெறுகின்றனவற்றை வாபஸ் பெற வேண்டுமென்று கூறினார்கள். டாஷ்கண்ட் ஒப்பந்தத்தின் பிரகாரம் பாகிஸ்தான் உறவு முறையில் சுமூகம் ஏற்பட்டிருக்கிறது. ஆனால், அதற்காக நாட்டில் பலாத்காரச் செயல்களிலே ஈடுபட்டவர்கள் மீது உள்ள வழக்குகளுக்கு நாம் என்ன செய்ய முடியும்? மாணவர்களைப் பொறுத்தவரையில், யாராய் இருந்தாலும் விடுதலை செய்யப்பட்டுவிட்டார்கள். இன்றைக்கு ஒருசில மாணவர்களைப் பெரியவர்கள் தூண்டிவிடுகிறார்கள். அவர்களுக்கு ஏதாவது அச்சம் இருந்தால் நான் அவர்களுடைய சந்தேகத்தைப் போக்க முன்வருகிறேன். அதற்குத் தயாராக இருக்கிறேன். அவர்கள் சும்மா இருந்தால்கூட தூண்டிவிடக்கூடிய பெரியவர்கள், அரசியல் வாதிகள் இருக்கிறார்கள். அவர்கள் தாங்கள் நேராகப் போகாமல் மாணவர்களை எவ்வாறு பயன் படுத்திக்கொள்ளலாம் என்று தூண்டிவிடுகிறார்கள் என்ற விவரங்கள் என்னிடம் இருக்கின்றன. மாணவர்கள் நல்ல முறையில் இயங்கவேண்டுமென்று இருக்கிறபொழுது அவர்களைத் தூண்டிவிட்டு விபரீதங்களை ஏற்படுத்த முயற்சிப்பது நல்லதல்ல. இந்தி இந்த நாட்டின் ஒற்றுமைக்கு அவசியம் என்றால் இந்த நாட்டைப் பிரிப்பதற்கு நான் தயாராக இருக்கிறேன் என்று ஒருவர் பேசியிருக்கிறார், என்று தகவல் வந்தது. மாணவர்களிடம் எனக்கு நம்பிக்கையிருக்கிறது, மாணவர்கள் சிறிதும் தூண்டுதலுக்கு இரையாகமாட்டார்கள், ஏதோ; 1, 2 ஹாட் ஹெட்ஸ் மாணவர்கள் இருப்பார்கள், ஆனால் அவர்களும் இதில் நிதானத்திற்கு வந்துவிடுவார்கள் என்று நம்புகிறேன். மொழிப் பிரச்னையைப்பற்றி எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டார்கள். மற்ற உறுப்பினர்களும் குறிப்பிட்டார்கள். மொழிப்பிரச்னை இருக்கிறது. ஆனால் மொழிப் பிரச்னையை இந்த அரசாங்கம் தீர்க்கவில்லை என்று குறை கூறுகிறார்கள். மொழிப் பிரச்னையைத் தீர்ப்பதற்கு எதிர்க் கட்சியினர் என்ன வழி கண்டிருக்கிறார்கள்? ஒரு வழியாகவா பேசுகிறார்கள்? தி.மு.கவினர் மொழியைப்பற்றி ஏதாவது ஒரு வழியாகவா பேசுகிறார்கள்? அவ்வப்பொழுது மாறுபட்ட கருத்துக்கள் தான் வருகின்றன. ஆனால் அரசாங்கத்தின் போக்கு ஒரே போக்குதான், ஒரே கருத்து தான். எந்த மொழியும் திணிக்கப்படமாட்டாது. தாய் மொழியில் மாநில விவகாரங்கள் எல்லாம் நடைபெறும். நம்முடைய நாட்டில் பல மாநிலங்கள் சேர்ந்து இருக்கின்றன. இந்த நாட்டிலே எல்லாருக்கும் தொடர்பு வேண்டுமென்றால்—அகில இந்தியப் பொது விவகாரங்களில் தொடர்பு வேண்டுமென்றால் இந்திதான் வேண்டுமென்று போடப்பட்டிருந்தது. ஆனால் இத்தனை ஆண்டுகளுக்குப் பிறகு இந்தி என்று வந்துவிட்டால்

[5th March 1966

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : முதல் அமைச்சர் அவர்கள் நம்முடைய நாட்டிற்குத் தொடர்பு வேண்டும், தொடர்பு மொழியாக இந்தி இருக்கலாம் என்று சொல்கிறார்கள், இப்பொழுது தொடர்பு இல்லையா ? இந்தத் தொடர்பு நீண்டகாலத்திற்கு இருக்க முடியாது என்று நினைக்கிறார்களா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** தொடர்பு ஆங்கிலத்திலே இருக்கிறது. அது அன்னிய மொழி, அதுவே போதும் என்று கூறுவதை ஒப்புக்கொள்ள முடியாது. வேறு மாநிலங்கள் இருக்கின்றன. அங்கே நமக்குத் தெரிந்த ஆங்கிலம் கூட அவர்களுக்குத் தெரியாது. ஆங்கிலம் இருக்கிறது அதுபோதும் என்ற வாதம் இருப்பது, எனக்குத் தெரியும். ஆனால் அது ஒப்புக்கொள்ளக் கூடியதல்ல. அகில இந்தியக் காங்கிரஸ் கட்சியும், இந்த அரசாங்கமும் இந்தி மட்டும் இருந்தால் இந்தியைத் தாய் மொழியாகக் கொள்ளாத மாணவர்கள் பாதிக்கப்படுவார்கள், கொஞ்ச காலத்திற்கு ஆங்கிலமும் தொடர்ந்து இந்தியோடு இருக்கவேண்டுமென்ற கருத்துத் தெரிவிக்கப்பட்டது. அதை மத்திய அரசாங்கம் ஏற்றுக்கொண்டிருக்கிறது. எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டார்கள், பிரதம மந்திரி சொன்னார்கள் என்று திருப்பித் திருப்பிச் சொன்னார்கள். பிரதம மந்திரி என்ன சொன்னார்கள் ? சென்னை மாநிலத்திலே உள்ள மக்களுக்கு அச்சம் இருக்கக்கூடாது, அவர்களுக்கு எந்த விதமான பாதகமும் ஏற்படாத வகையில் உறுதியளிக்கவேண்டும் என்று இங்கே வந்திருந்தபோது குறிப்பிட்டார்கள். இந்தி பேசாத மக்கள் விரும்புகிற வரையிலே ஆங்கிலம் இருக்கவேண்டும், அதற்கு ஏற்ற வகையிலேதான் எல்லா விவகாரங்களும் நடைபெறும். மாநிலத்திலே உள்ள சர்வீஸ் கமிஷன் பரீட்சையைப் பொறுத்தவரையில் தாய்மொழியிலேயே விடையளிப்பதற்குப் படிப்படியாக நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும். மத்திய ஆட்சிப் பரீட்சையிலே எல்லா மொழிகளிலும் விடையளிக்கலாம் என்று கூறப்பட்டது. ஆனால், அதை இன்னும் பரிசீலனை செய்யவேண்டியிருக்கிறது. அப்படிச் செய்தால் இந்தியும் ஆங்கிலமும் கட்டாயப் பாடமாக இருக்கவேண்டியிருக்கும். 14 மொழிகளிலும் பரீட்சை எழுதலாம் என்று கொண்டுவந்தால் இந்தியும், ஆங்கிலமும் இருக்கவேண்டியிருக்கும். இந்தியிலும் விடையளிக்கலாம்; ஆங்கிலத்திலும் விடையளிக்கலாம் என்று இருந்தது. ஆனால், இப்பொழுது 14 மொழிகளிலும் விடையளிக்கலாம் என்று வரும்பொழுது இந்தியும் ஆங்கிலமும் இரண்டு மொழிகளையும் கற்கவேண்டியிருக்கும். இதை எப்படிச் செய்வது என்பது இன்னும் பரிசீலனையில் இருந்து வருகிறது . . .

திரு. மு. கருணாநிதி : இந்தி பேசாத மக்கள் விரும்புகிற வரையில், குறிப்பாக தமிழகத்தைப் பொறுத்த வரையில் தொடர்பு மொழியாக ஆங்கிலம் நீடிக்கும் என்பதற்குச் சட்டம் வரும் என்று முதலமைச்சர் அவர்கள் வாக்களித்தார்களே, அது எந்த நிலையில் இருக்கிறது ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** சட்டம் திருத்தப்படும் முடிவு மத்திய அரசாங்கத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. வேறு



5th March 1966] [திரு. எம். பக்தவத்சலம்]

பல அவசர அலுவல்கள் நிமித்தமாக பார்லிமெண்டு சபைக்கு அந்தச் சட்டம் கொண்டு வரப்படவில்லை. ஆனால், இப்போது மத்திய அரசாங்கம் அந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டால் எவ்வாறு நடைபெறவேண்டுமோ அவ்வாறு நடைபெற்றுக் கொண்டு வருகிறது. சட்டம் பார்லிமெண்டில் கொண்டு வந்து நிறைவேற்றக் கொஞ்ச நாள் ஆகும். ஆனால் அந்தச் சட்டத்தின் நோக்கம் அப்படியே கையாளப்பட்டு வருகிறது. எவ்வளவு சீக்கிரம் சட்டத்தைக் கொண்டு வர வேண்டுமோ அவ்வளவு சீக்கிரம் சட்டம் கொண்டு வரப்படும். ஸ்டாச்சூட் புக்கில் வராததால் பாதகம் இல்லை. எது ஒப்புக்கொள்ளப்பட வேண்டுமோ அது ஒப்புக் கொள்ளப்பட்டு நடைமுறையில் இருக்கிறது.

இந்த பட்ஜெட்டைப் பற்றித் தேர்தல் கால பட்ஜெட் என்று கனம் அங்கத்தினர்கள் சொன்னார்கள். இதற்குப் பதிலாக என் பக்கத்தில் இருப்பவர்கள் 'இது எலெக்ஷன் க்ரிடிசிஸம்' என்று சொல்லலாம். இந்த பட்ஜெட்டைத் தயாரித்த அரசாங்கத்தைப் பொறுத்தமட்டில் எலெக்ஷனைப் பற்றி ஒன்றும் நினைக்கவில்லை. எல்லோருக்கும் ஒரு பிரமை ஏற்பட்டு விடுகிறது. சாப்பிடும் போதும் எலெக்ஷன்தானா ? தேர்தலுக்கு இன்னும் கொஞ்ச நாள் இருக்கிறது. நோடிஃபிகேஷன் வந்த பிறகுதான் எலெக்ஷனைப் பற்றி நாங்கள் நினைப்போம்.

திரு. மு. கருணாநிதி : 'நோடிஃபிகேஷன் வந்த பிறகுதான் நாங்கள் தேர்தலைப் பற்றி நினைப்போம்' என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் காங்கிரஸ் கட்சி தேர்தல் நிதி ஓராண்டுக்கு முன்பிருந்தே வசூலிக்கப்பட்டு வருவதை அறிவார்களா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** எங்கள் காங்கிரஸ் ஸ்தாபனத்தைப் பொறுத்தமட்டில் தேர்தலைத் தவிர மற்ற வேலைகள் எல்லாம் இருக்கின்றன. காங்கிரசில் வேலை செய்பவர்கள் மக்களிடத்தில் பணி புரிகிறார்கள். எல்லாம் தேர்தல் மயம் என்று எடுத்துக் கொள்ளவேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன். நாம் நல்ல காரியம் செய்தால் கூட தேர்தலுக்காகத்தான் செய்கிறோம் என்று சொன்னால் வேறு எப்படித்தான் செய்வது ? வரி போட வேண்டுமென்றால் போடத்தான் வேண்டும். அதற்கு நான் சுணங்கவில்லை. போட அவசியம் இல்லையென்றால் போட மாட்டோம். 'முன்பு ஏன் வரி போட்டார்கள் ? இது தேர்தல் பட்ஜெட். வரி இல்லாத பட்ஜெட் என்று காட்ட வேண்டுமென்பதற்காகப் போட்டிருக்கிறார்கள்' என்று சொன்னார்கள். அவ்வளவு தூரம் ஜனங்கள் கூட ஏமாற மாட்டார்கள். முன்பு ஏன் வரி போட்டோம் ? திட்டத்தை நிறைவேற்ற வேண்டிய காரணத்தால், ஐந்தாண்டுத் திட்டத்திற்கு வழி காண வேண்டுமென்றுதான் அப்போது அந்த வரி போடப்பட்டது. இல்லையென்றால் அந்தத் திட்டம் சிறு திட்டமாகப் போயிருக்கும். எப்போது வேண்டுமோ அப்போது போடுகிறோமே தவிர, வரவு செலவுத் திட்டம் வரி இல்லாத திட்டமாக இருக்க வேண்டுமென்பதற்காக இப்படி அமைக்கவில்லை. மக்களுடைய தேவையைப் பூர்த்தி செய்வதற்காகத்தான் போடுகிறோமே தவிர, மக்களுக்குப் பாதகம் ஏற்பட வேண்டுமென்

பதற்காகப் போடவில்லை. ஒன்றுமே செய்யவில்லை, நிலைமை மோசமாக இருக்கிறது என்று எதிர்க்கட்சியினர் பேசினார்கள். ஆனால், உண்மையான நிலை என்ன என்பதை மக்கள் நன்றாக உணர்ந்திருக்கிறார்கள். ஒன்று தாழ்மையுடன் கூறிக் கொள்ள விரும்புகிறேன். அவர் சொன்னார், உங்கள் காங்கிரஸ் தலைவர் சொன்னார், உள்நாட்டு அமைச்சர் சொன்னார், ஃபினான்ஸ் கமிஷனுக்கு நீங்களே எழுதிக் கொடுத்திருக்கிறீர்கள் என்றெல்லாம் சொல்லுகிறார்கள். கனம் உறுப்பினர்கள் தங்களுடைய கருத்தைச் சொல்லலாம். 'கோட்' செய்து சொல்லுவதை 'காபி ரைட்' என்ற முறையில் சொல்லக்கூடாது என்று நான் சொல்லவில்லை. அந்த முறையே தவறுதல் என்று சொல்லவில்லை. நான் கல்லூரியில் வாசித்த போது பேராசிரியர் மாணவர்களுக்குச் சொல்லுவார்—'ஒரு ஆசிரியரை மேற்கோளாக எடுத்துக் காட்டுவதாக இருந்தாலும் கூட அதை உங்கள் கருத்தாகச் சொல்லுங்கள். As professor Jurie Says...' என்ற பீடிகை எல்லாம் வேண்டாமென்று சொல்வார். அது சிறு வயதில் கையாண்ட வரம்பு. காங்கிரஸ் தலைவர் 'செய்தது போதாது' என்று சொன்னார் என்றால் என்ன? நாங்களே சொல்லவில்லையா? செய்தது போதும் என்றால் 'இப்போதே நீங்கள் வந்து இங்கே உட்கார்ந்து கொள்ளுங்கள்' என்று சொல்லிவிட்டு போய்விடலாமே. செய்தது போதாது, இன்னும் லட்சியம் ஈடேறவில்லை. சோஷலிச லட்சியத்தை எவ்வளவு தூரம் அமலுக்குக் கொண்டு வரவேண்டுமென்பதை ஆராய ஒரு குழு போட்டார்கள். அதற்கு ஒரு தீர்மானம் கொண்டு வந்தார்கள். நாங்கள் எல்லாம் அதை ஏற்றுக் கொண்டோம். அதிலே என்ன தவறு? உள்துறை அமைச்சர் சொல்கிறார் என்றால் அவர் இருக்கிற நிலைமையைச் சொல்கிறார். இன்னும் செய்யவேண்டியது இருக்கிறது. செய்ததில் தவறு இல்லாமல் இருக்காது. இமயம் போன்ற மகத்தான குற்றங்களைச் செய்திருக்கிறேன்' என்று கூறிய மகாத்மா காந்தியின் பரம்பரையைச் சார்ந்தவர்கள் காங்கிரசில் இருப்பவர்கள். தப்பு இருந்தால் தப்பு என்று ஒத்துக் கொள்ளத் தயாராக இருக்கிறோம். தப்பைத் திருத்திக் கொள்ளுகிறோம். செய்தது போதாது, மேலும் செய்ய வேண்டுமென்று அவர்கள் எல்லாம் சொல்கிறார்கள். பினான்ஸ் கமிஷன் ஐந்தாண்டுக்கு ஒரு முறை நியமிக்கப்படுகிறது. எவ்வளவு தூரம் சலுகை பெறுவது, எவ்வளவு தூரம் உதவி பெறுவது என்பதற்காக நாங்கள் அங்கே வாதம் செய்வதை நீங்கள் திருப்பிச் சொன்னால் என்ன பிரயோசனம்? அவர்களுக்குச் செய்கின்ற வாதம் ஒன்று. அந்த மாதிரி வாதத்தைச் செய்து தமிழகத்திற்கு அதிக உதவி கேட்டுப் பெற்றது தப்பா? அதை வைத்துக் கொண்டு ஒன்றுமே நாங்கள் செய்யவில்லை என்று மேற்கோள் காட்டுவதில் என்ன பயன்? பினான்ஸ் கமிஷனில் இருந்து நாம் பெற்றிருக்கிற பங்கு நல்ல பங்கு என்றுதான் சொல்லவேண்டும். பின்னால் அதைப் பற்றி விவரமாகச் சொல்லுகிறேன்.

இந்த பட்ஜெட்டிலே சோஷலிசம் இல்லையென்று சொல்லுகிறார்கள். சோஷலிசத்தைப் பற்றிப் பல பேருக்குப் பல விதமான கருத்துக்கள், ஒவ்வொருவரும் ஒவ்வொரு



வகையில் சோஷலிசத்தை உணருகிறார்கள். சோஷலிசம் என்பது மகத்தான ஒரு லட்சியம். எல்லோருடைய வாயிலும் அது அடிபடுகிறது. நாம் எந்த வகையில் மக்களுடைய நல்வாழ்க்கைக்குரிய வேலைகளைச் செய்வது, திட்டங்களை நிறைவேற்றுவது என்ற முறையில் காரியங்களை செய்து கொண்டு வருகிறோம். சோஷலிச லட்சியம் மக்களிடையே உள்ள ஏற்றத் தாழ்வை அகற்றுவது. அடியோடு அந்த ஏற்றத் தாழ்வு அகற்றப்பட்டு விட்டது என்று நாங்கள் சொல்லவில்லை. ஆனால் ஏற்றத்தாழ்வு மறைந்து கொண்டிருக்கிறது என்பதை மறுக்க முடியாது. எப்படி அந்த சோஷலிச லட்சியத்தை அடைவது? பட்ஜெட்டில் சோஷலிசம் இல்லையென்று எதிர்க்கட்சியிலிருப்பவர்கள் சொன்னார்கள். எதைக் கொண்டு அவ்வாறு சொன்னார்கள்? எல்லாவற்றையும் தேசிய மயமாக்குவது தான் சோஷலிசமா? அவ்வாறு சொல்லுவது நான் சொன்ன உபநிஷத்து கதை மாதிரிதான் இருக்கிறது. எல்லாவற்றையும் நாஷனலைஸ் பண்ணுவதுதான் சோஷலிசம் என்பது ஒரு சாரார் கொடுக்கிற விளக்கம், வியாக்கியானம் அல்லது டெபனிஷன். அவரவர்களுக்குத் தோன்றும் வகையில் இதுதான் சோஷலிசம், அது தான் சோஷலிசம் என்று கூறிக் கொண்டிருக்கிறார்கள். இன்னொரு பக்கத்தில், 'என்னுடைய மதிப்புக்குரிய நண்பர் உள்துறை அமைச்சர் அவர்களுடைய பாக்கெட்டில் கையைப் போட்டு எடுத்துக் கொண்டு செல்வதுதான் சோஷலிசம்' என்று கூறலாம். ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு கருத்து இருக்கலாம். 'அடியோடு எல்லாவற்றையும் நாஷனலைஸ் பண்ணுவதுதான் சோஷலிசம், அதை இந்த அரசாங்கம் செய்யவில்லை; அது பற்றி இந்த பட்ஜெட்டில் ஒன்றும் காணப்படவில்லை' என்று சொல்வது சரியல்ல. நம்முடைய நாட்டு அமைப்பைக் கனம் உறுப்பினர்கள் எல்லோரும் உணருவார்கள். நம்முடைய பொருளாதாரத்தில் பாதி விவசாயத்தைச் சார்ந்ததாக இருக்கிறது. விவசாயம் தனியார் துறையில் தான் இருக்கும். நமது நாட்டில் பெரும்பாலோர் சிறிய விவசாயிகள்தான். அவர்கள் எல்லாம் தனிப்பட்ட ஹோதாவில் விவசாயம் செய்கிறார்கள். எல்லாவற்றையும் சேர்த்து வைத்து விவசாயம் செய்ய வேண்டுமென்ற எண்ணம் கொண்டவர்களுடைய எண்ணம் எல்லாம் கூடக் கரைந்து கொண்டு வருகிறது. விவசாயிகளுக்கு ஊக்கம் வேண்டும்; விவசாயிகளை ஊக்குவிக்கவேண்டும். இந்த எண்ணம் வேறு கருத்துக் கொண்ட நாடுகளிலே கூட இன்றைக்குப் பரவி வருகிறது. நம்முடைய நாட்டிலே உற்பத்தி செய்யக்கூடியவர்களிலே பாதிப் பேர் விவசாயம் செய்யக்கூடியவர்கள். அது ஒன்றை மட்டும் எடுத்துக் கொண்டால் கூட நமக்கு மிக்ஸ்ட் எகானமிதான். பொதுத் துறை, தனியார் துறை இரண்டையும் சேர்த்து வைத்துக் கொண்டுதான் செய்யவேண்டுமே தவிர, எல்லாமே பொதுத் துறை என்று செய்யமுடியாது. பொதுத் துறையும் தற்போது வளர்ந்து வருகிறது. தனியார் துறையை அடியோடு அகற்றிவிட முடியாது. அதற்கு விவசாயமே சிறந்த சான்றாகும். பப்ளிக் செக்டாரில் தொழில்கள் அதிகப்பட்டு வருகின்றன. மின்சாரத் துறை பப்ளிக் செக்டாரில் முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் வரும்போது 23 கோடி ரூபாய் முதல் போடப்பட்டது. இப்போது

[திரு. எம். பக்தவத்சலம்] [5th March 1966

200 கோடி ரூபாய் மூலதனம் போடப்பட்டிருக்கிறது. மின்சார போர்டைப் பற்றிச் சொல்லும்போது கனம் உறுப்பினர் திரு. மதியழகன் அவர்கள், சில புள்ளி விவரங்களைக் கூறி, மின்சார போர்டு வருமானம் குறைந்து விட்டது, வட்டி கூடக் கட்டவில்லை என்று சொன்னார்கள். அவர்கள் சொன்ன புள்ளி விவரம் சரியல்ல. அதை விளக்குவதற்கு நேரமாகும் என்ற காரணத்தால் விளக்கமாகச் சொல்ல முடியவில்லை.

அதை விளக்கலாம், ஆனால் நேரமாகும் என்பதால் விளக்கவில்லை. வட்டி எல்லாம் கொடுத்துக் கொண்டு வருகிறார்கள். மின்சார போர்டு நல்ல முறையில் இருக்கிறது என்று எடுத்துக்கூற விரும்புகிறேன். மக்கள் எல்லோருக்கும் பயன்படும் அளவில் பணி புரிவது சோஷியல் சர்வீஸ். மக்களின் வசதிகளைப் பெருக்குவதற்கும், அவர்களின் குறைகளை நீக்குவதற்கும், இதைச் செய்து வருகிறோம். இது சோஷலிஸம் இல்லையா ? எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கூறியது போல் கல்விக்காக 45 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பது நாளை மறுதினம் விவாதத்திற்கு வர இருக்கிறது. கல்விக்காகச் செலவு செய்ய 45 கோடி ரூபாய் வரையில் ஒதுக்குகிறோம், ஏழை எளிய மக்கள் எல்லாம் கல்வி வசதி பெற வழி செய்கிறோம். நம் மாநிலத்தில் உயர்நிலைப் பள்ளிகளில் கூட சம்பளம் இல்லை. ஆந்திரா மாநிலத்தில் அதைச் செய்வதாக இருந்தார்கள். அது இந்த வருடம் கிடையாது என்று தள்ளிப் போட்டு விட்டார்கள். இரண்டு வருடங்களாக நம் உயர்நிலைப் பள்ளிகளில் படிக்கிற மாணவர்களுக்கு சம்பளம் கிடையாது. அவர்களில் பெரும்பாலோர் ஏழைகள், நடுத்தர வகுப்பினரைச் சேர்ந்தவர்கள். அவர்களுக்குச் சம்பளம் என்ற கவலை இருக்கக்கூடாது என்று செய்திருக்கிறோம். பள்ளிகளைப் பெருக்கி வருகிறோம். பள்ளிக்கூடங்களில் உள்ள வசதிகளைப் பெருக்கிக் கொண்டு வருகிறோம். இந்த வரவு செலவுத் திட்டத்தில் எவ்வளவு சங்கடங்கள் இருந்தபோதிலும் ஆரம்பப் பள்ளிகளில் படிக்கிற முதல் மூன்று வகுப்புப் பிள்ளைகளுக்கு இலவசமாக பாடப் புத்தகங்கள் அளிப்பது—மதிய உணவு பெறுகிற ஏழைப் பிள்ளைகளுக்காவது இலவசமாக புத்தகங்கள் அளிக்க ரூ. 40 லட்சத்திற்கு மேல் நிதி ஒதுக்கியிருக்கிறோம் என்றால் அது சோஷலிச கொள்கையை ஒட்டி எடுக்கப்படுகிற நடவடிக்கை அல்லவா ? வேறு எவ்வளவோ செலவினங்கள் இருந்தாலும் இப்படி வசதி செய்ய முற்பட்டிருக்கிறோம்.

அதே மாதிரித்தான் சுகாதாரத் துறையிலும், மருத்துவத் துறையிலும் ஹரிஜனங்கள், பிற்பட்ட வகுப்பினர் அவர்களின் நலனை நாடுகிற வகையில் அவர்களுக்கு பல நிவாரணங்கள், பல வசதிகள் பல அபிவிருத்தித் திட்டங்கள் போன்றவற்றைச் செய்து வருகிறோம் என்றால் சோஷலிசக் கொள்கையை நாம் அடியோடு புறக்கணித்து விட்டோம் என்று எவ்வாறு கூறுவது ? ஏற்றத் தாழ்வுகளை அகற்றவேண்டும் என்பதுதான் இந்த அரசாங்கத்தின் எண்ணம். அதற்கு திட்டவட்டமான முறையில் நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டு வருகிறோம். இந்த சோஷலிசக் கொள்கைக்கு மிகவும் உகந்ததுதான் வரிக் கொள்கை. வரியே கூடாது என்று



5th March 1966] [திரு. எம். பக்தவத்சலம்]

கூறும் வகையில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கருத்து தெரிவித்திருக்கிறார்கள். வரியே இல்லாமல் இருந்தால் நல்லதுதான். வரியே அவசியம் இல்லை என்றாலும் சோஷலிச கொள்கையை மேற்கொண்டு செயலாற்றும் வகையில் வரி போடத்தான் வேண்டும். சோஷலிசத்தின் அடிப்படைக் கொள்கையே வரி போடுவது. வசதி உள்ளவர்கள் மீது வரி போடுகிறோம். வசதியற்றவர்கள், வரி கொடுக்காதவர்கள் அவர்கள் எவ்வளவு ஏழைகளாக இருந்தாலும் அவர்கள் மற்ற பணிகள் புரிய வேண்டிய வசதிகளைப் பெருக்க வேண்டும். ஆகவே இருக்கிறவர்களிடம் வரி போட்டு அவர்கள் தாங்கக் கூடிய அளவிற்கு வரி போட்டு மற்றவர்களுக்குக் கொடுக்கிறோம். சோஷலிசம் என்று சொல்லிக் கொண்டு வரி போட்டுக் கொண்டிருக்கிறார்களே என்று சொன்னால் எந்த நாட்டில் வரி போடவில்லை ? வரியே போடாமல் எங்கே அரசாங்கத்தை நடத்துகிறார்கள் ? ஒரு புள்ளிவிவரம் கூற விரும்புகிறேன்.

| Country. | Year. | Total tax of Central Government and lower tiers as percentage of national income. |
|---|---|---|
| Germany .. .. | 1954–55 | 33·8 |
| U. K. .. .. | 1954–55 | 30·8 |
| Mainland China .. | 1953 | 25·3 |
| Netherlands .. .. | 1954–55 | 29·6 |
| Norway .. .. | 1952–53 | 29·1 |
| Australia .. .. | 1953–54 | 28·0 |
| U. S. A. .. .. | 1952–53 | 27·4 |
| Sweden .. .. | 1953–54 | 23·7 |
| Denmark .. .. | 1952–53 | 23·5 |
| Israel .. .. | 1954–55 | 21·9 |
| Japan .. .. | 1953–54 | 19·5 |
| Italy .. .. | 1949–50 | 19·5 |
| Brazil .. .. | 1952–53 | 15·9 |
| Indonesia .. .. | 1952–53 | 11·3 |
| Pakistan .. .. | 1952–53 | 8·9 |
| India .. .. .. | 1952–53 | 6·86 |
| | 1957–58 | 8·66 |

**திரு. சா. கணேசன் :** அவர்களின் 'பெர் காப்பிட்டா' இன்கம் எவ்வளவு ? நாஷனல் இன்டஸ்ட்ரீஸில் எவ்வளவு பணம் போட்டது ? அதில் எவ்வளவு லாபம் அல்லது நஷ்டம் வந்திருக்கிறது ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** நாஷனல் இன்கம் விகிதாசாரத்தைச் சொன்னேன். இந்த மாநிலத்தின் வருவாய் அதிகப்பட்டிருக்கிறதென்று சொன்னார்கள். எப்படி அதிகப்பட்டது ?

[திரு. எம். பக்தவத்சலம்] [5th March 1966

அதிக வரி போட்டு விட்டீர்கள், இன்ஃப்ளேஷன் ஏற்பட்டு விலை அதிகமாகிவிட்டது, அதனால் பண வீக்கம் ஏற்பட்டு விட்டது என்று சொல்கிறார்கள். வரி புதிதாக போட்டீர்கள் அதனால் வருமானம் அதிகப்பட்டு விட்டது என்று திரு. மதியழகன் அவர்கள் சொன்னார்கள். மொத்தத்தில் ஆண்டுதோறும் வரி உயர்வைப் பார்த்தால் சராசரியாக 10.1 சத விகிதம் ஆக இருக்கிறது. முந்திய ஆண்டுடன் பார்க்கும்போது வரி உயர்ந்து கொண்டு தான் வருகிறது. நமது வருவாய் இனங்களில் விலைவாசி சம்பந்தப் படாத சில வருவாய்களும் இருக்கின்றன. நில வரி இருக்கிறது. மோட்டார் வெகிக்கிள்ஸ் வரி இருக்கிறது. குதிரைப் பந்தய வரி இருக்கிறது. அக்ரிகல்ச்சரல் இன்கம் டாக்ஸைக் கூட கம்யூட் செய்து விடுகிறோம். இவ்வளவு ஏக்கருக்கு இவ்வளவு என்று வாங்கிவிடுகிறோம். ஆகவே இம்மாதிரி எல்லாம் வருவதால் அதிக வரிகளின் விளைவால் இவ்வளவு வந்திருக்கிறது என்று சொல்வதற்கிடமில்லை. 1964-65-ல் வருவாய் அதிகப்பட்டிருப்பதைப் பார்த்தால் நம் மாநிலத்தில் மொத்தம் அதிக வருவாய் 35 கோடி ஆகிறது. வரியால் வந்தது, புதிய வரியால் கிடைத்து இருக்கிறது 14 கோடி தான். மீதி 21 கோடி ரூபாய் (I uoyant) வளர்ச்சியின் அறிகுறி என்றுதான் சொல்லவேண்டும். பாயன்ஸி என்ற நான் பெருமை அடித்துக் கொள்வதாக சொல்லவில்லை. இருக்கிற தகவலைச் சொல்கிறேன். புதிய வரி இல்லாமலேயே வருவாய் அதிகப்பட்டுக் கொண்டிருக்கிறது. வருவாய் எல்லாம் குறைந்து போய் விட்டது என்று சொல்ல இடமில்லையென்பதற்காகத்தான் இவை குறிப்பிட்டுச் சொல்கிறேன். இந்த ஆண்டு 50 கோடி ரூபாய் அதிக வருவாய் வருகிறது. அடிஷனல் டாக்ஸ் 23.8 கோடி ரூபாய்தான். ரூ. 26.2 கோடி 'பாயன்ஸி' தான். வருவாய் அதிகமாக வந்திருக்கிறது. நம் மக்களின் செல்வ நிலை, வருமானம் உயர்ந்திருக்கிறது என்பதைத்தான் இது எடுத்துக் காட்டுகிறது. ஒரு திருஷ்டாந்தம் சொல்ல விரும்புகிறேன். சென்ட்ரல் டாக்ஸ், ஸ்டேட் டாக்ஸ் எல்லாவற்றையும் வைத்துப் பார்த்தால் நம் நாஷனல் இன்கம் 14 சத விகிதம் தான் ஆகிறது. மற்ற நாடுகளைப் பற்றியெல்லாம் சொன்னேன். நமது உற்பத்திப் பெருக்கினால் வருவாய் அதிகப்பட்டிருக்கிறதா என்றால் ஒன்றுமே இல்லை என்று சொன்னார்கள். அதற்காகத்தான் இதை நான் சொல்கிறேன். மேட்டூரில் அமைக்கப்பட்டிருக்கிற அலுமினியம் தொழிற்சாலையை மட்டும் எடுத்துக் கொள்ளலாம். இந்த தொழிற்சாலையில் இருந்து மட்டும் ஆண்டு ஒன்றுக்கு அரசாங்கத்திற்கு இப்போது 15 லட்சம் ரூபாய் வருமானம் வருகிறது. லாபம் அதை விட அதிகப்படியாக வந்திருக்கிறது. ஒரு தொழிற்சாலையில் இருந்து மட்டும் 15 லட்ச ரூபாய் வருமானம் வருகிறது. இந்த வரிகள் அதிகப்படக் கூடிய அளவில் இல்லை, எலாஸ்டிக்காக இல்லை என்று இந்த விவாதத்தை தொடக்கி வைத்த திரு. மாதவன் அவர்கள் குறிப்பிட்டார்கள். எல்லாம் மத்திய அரசாங்கத்தினிடம் இருக்கிறது, நம் மாநிலத்தில் இருக்கிற வரி இனங்கள் அபிவிருத்தி அடையக் கூடியதாக இல்லை என்று சொன்னார்கள். ஒன்று நாம் உணர வேண்டும். இதையொட்டி மற்றொரு யோசனை கூட கூறினார்கள். திட்டங்களுக்கெல்



5th March 1966] [திரு. எம். பக்தவத்சலம்]

லாம் மத்திய அரசாங்கத்தையும் மத்திய திட்டக் கமிஷனையும் நாம் எதிர்பார்ப்பவர்களாக இருக்கிறோம், ஏன் இந்த மாநிலத்திற்காக தனியாக ஒரு திட்டக்குழு வைத்துக் கொள்ளக்கூடாது என்று கூறினார்கள். நம்முடைய அரசியல் அமைப்பே ஃபெடரல் டைப் பல மாநிலங்கள் சேர்ந்து இந்த ஆட்சி அமைக்கப்படுகிறது. பாரத நாடு ஒரே நாடு, ஒன்று பட்ட நாடு. இந்த நாட்டிற்கு எந்தவிதத்திலும் பலஹீனம் ஏற்படுத்த நாம் சிறிதும் நினைக்க மாட்டோம். அதற்குரிய யோசனைகளையும் நாம் கூற மாட்டோம், கூறவும் கூடாது, நாட்டுப் பாதுகாப்பு மத்திய ஆட்சியின் பொறுப்பில் இருக்கிறது; வேறு சில 1-00 p.m.
இனங்கள் மத்திய ஆட்சியில் இருக்கின்றன. அதற்குக் குந்தகம் விளைவிக்கக் கூடிய முறையில் நாம் ஒன்றும் நடந்து கொள்ளக் கூடாது. வருமான வரி இருக்கிறது, போதிய அளவில் இந்த வரி வரவில்லை என்று கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள். அதை நான் மறுக்கவில்லை, போதிய அளவில் வரவில்லைதான். நாம் எதிர்பார்த்த அளவிற்கு வரவில்லை. அதற்குப் பல காரணங்கள் இருக்கலாம். சில சமயங்களில் கணக்குகளைச் சரியாகக் கொடுப்பதில்லை. பாக்கியும் வருகிறது, அதையும் வசூலிக்கின்றோம். விற்பனை வரியும் அப்படித்தான்; ஆனால் இப்போது விற்பனை வரியைப் பொறுத்த அளவில், வருமானம் வந்து கொண்டிருக்கிறது. இன்கம் டாக்ஸை நாமே வைத்துக்கொள்ளலாமே என்ற கருத்தும் சொல்லப்பட்டது. கனடா, ஆஸ்திரேலியா போன்ற நாடுகள் நம்மைப் போன்ற அமைப்பைக் கொண்ட நாடுகள்தான். அந்த நாடுகள் இன்கம் டாக்ஸை நாங்களே போட்டுக் கொள்கிறோம் என்று சொல்லி அவர்களே போட்டுக்கொண்டார்கள். அதில் வருமானம் குறைவாகத்தான் வருகிறது என்று சொல்லப்பட்டது. அதிலும் எவேஷன் வந்து விட்டது, அது எலாஸ்டிக்காகத்தான் இருந்தது. அந்த முறையில் பார்க்கும்போது, இப்படிப்பட்ட வரிகளை நாம் எடுத்துக்கொள்வதில் உண்மையாகவே நல்ல பலன் ஏற்படுமா என்பதையும் நாம் பார்க்க வேண்டும். யுனைடெட் ஸ்டேட்ஸ் ஆஃப் அமெரிக்காவில் சில மாகாணங்களில் இன்கம் டாக்ஸ், எக்ஸைஸ் டாக்ஸ், கஸ்டம்ஸ் டாக்ஸ் இவைகளை எல்லாம் மாகாணங்களே எடுத்துக்கொண்டு வரி போட்டன. அப்படிப் போட்டதில் இன்கம் டாக்ஸ் 4.5 சதவிகிதம் தான் வருமானம் வந்தது. எஸ்டேட் டியூட்டி போட்டார்கள். அதில் 5.1 சத விகிதம்தான் வந்தது. ஆகவே இப்படிப்பட்ட வரிகளைப் போடுவதில் மாநிலங்களுக்கு வருமானம் அதிகமாக வராது. மத்திய ஆட்சியில் இருப்பது தான் நல்லது. எக்ஸைஸ், கஸ்டம்ஸ் இவை எல்லாம் மத்திய ஆட்சியில் இருந்தால்தான் மாநிலங்களுக்கு வசதி. இல்லையென்றால் ஒவ்வொரு மாநிலமும் தங்கள் இஷ்டம் போல் வரியைப் போட்டுக்கொண்டு இருப்பார்கள். அதனால் நமக்குத்தான் பாதகம் ஏற்படும். ஆகவே மத்திய ஆட்சியில் இப்படிப்பட்ட வரிகள் இருப்பதுதான் நல்லது. இவ்விதம் அவர்களிடத்தில் இருந்தாலும் வருமானத்தில் நாம் சரியாகப் பகிர்ந்து கொள்கிறோம். பகிர்ந்து கொள்கிற விஷயத்தில் நாம்

பாதிக்கப்படவில்லை. ஏதாவது 'டெவலூஷன்' ஏற்பட்டால் அதை ஃபைனான்ஸ் கமிஷனிடத்தில் சொல்லுகிறோம். முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் போது மத்திய வரிகளின் மூலமாக 326 கோடி ரூபாய் வருமானம் வந்தது. 103 கோடி ரூபாய் மான்யமாக வந்தது இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் வரிகள் மூலம் வருமானம் 712 கோடி ரூபாய், மான்யமாக வந்தது 207 கோடி ரூபாய், மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 1,191 கோடி ரூபாய் வரியாக வந்தது. மான்யமாக வந்தது 332 கோடி ரூபாய். நான்காவது திட்டத்தில் மதிப்பிடப்பட்டுள்ளது, வரியாக வருவது 1,860 கோடி ரூபாய், கிராண்டாக கிடைப்பது 600 கோடி ரூபாய் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. அவ்வாறு நாம் எவ்வளவு தூரம் மத்திய அரசாங்கத்திலிருந்து நமது பங்கை பகிர்ந்துகொள்ள முடியுமோ அந்த வகையில் இந்த அரசாங்கம் கவனம் செலுத்தி வருகிறது. ஆகவே நமது பொருளாதார நிலைமை சீர்பட்டு வருகிறது, அபிவிருத்தி அடைந்து வருகிறது என்பதைத்தான் இவையெல்லாம் காட்டுகின்றன.

மற்றொரு குற்றச்சாட்டு என்னவென்றால், இந்த நாட்டைக் கடனில் ஆழ்த்தி விட்டார்கள் என்பது. நம்முடைய சக்திக்கு மீறி நமது நாட்டைக் கடனில் ஆழ்த்தி விட்டோம் என்பதுதான் குற்றச் சாட்டு. எந்த நாடும் வெளிநாடுகளிலிருந்து கடன் வாங்காமல் தங்கள் நிலைமையைச் சமாளித்துக் கொண்டிருப்பதாகத் தெரியவில்லை. நம்மை விட நீண்ட காலத்திற்கு முன் சுதந்திரமடைந்த நாடுகள் கூட இன்றையதினம் கடன் பட்டுத்தான் இருக்கின்றன. நம்முடைய நாட்டில் 1965-ல் இருந்த கடன் நிலையை எடுத்துக்கொண்டால், அதாவது பப்ளிக் டெட்டை எடுத்துக் கொண்டால் 1965-ல் பப்ளிக் டெட் என்ற வகையில் பெர் காப்பிட்டா 178 ரூபாய். அமெரிக்காவில் 1963-ல் 7,715 ரூபாய். கனடாவில் 1961-ல் 6,951 ரூபாய். (திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : பெர் காப்பிடா இன்கம் எவ்வளவு என்றும் சொல்லுங்கள்) வருமானம் அதிகமாக இருக்கிறது என்றால் ஏன் இவ்வாறு கடன் பெற்றிருக்கிறார்கள்? நான் சொல்வது எந்த அளவிற்கு மற்ற நாடுகளுக்கும் கடன் இருக்கிறது என்பதைப்பற்றித்தான். யுனைடெட் கிங்டத்தில் 1961-ல் 7,150 ரூபாய் இருக்கிறது. நம்மிடத்திலே அவர்கள் கடன் பட்டிருந்தார்கள். இஸ்ரேலில் 1963-ல் 4,843 ரூபாய். சிலோனில் 1962-ல் 548 ரூபாய். தாய்லாந்தில் 1963-ல் 53 ரூபாய். பாகிஸ்தானில் 1963-ல் 51 ரூபாய். இவ்விதம் மொத்தத்தில் பார்த்தால் நாம் வாங்கியிருக்கக்கூடிய கடன் அதாவது எலக்ட்ரிஸிட்டி போர்டு வாங்கியிருக்கும் கடன் உட்பட சேர்த்துப்பார்த்தால் 428 கோடி ரூபாய் ஆகிறது. ஆனால் 428 கோடி ரூபாய் 'புக் வால்யு' என்றிருந்தாலும், நம்முடைய 'அஸெட்' என்ன என்பதைப் பார்த்தால் 564 கோடி ரூபாய்க்கு இருக்கிறது. 428 கோடி ரூபாய் கடன், இதற்கு நம்மிடம் இருக்கும் 'அஸெட்' அல்லது சொத்து 564 கோடி ரூபாய். ஆகவே நமக்கு இருக்கின்ற கடனை நினைத்து வருந்த வேண்டிய அவசியமில்லை என்பதைக் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.



மற்றொன்றையும் பார்க்கிறோம். தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் நாம் எவ்வாறு முன்னேற்றம் அடைந்திருக்கிறோம், எவ்வளவு தூரம் அபிவிருத்தி அடைந்திருக்கிறோம் என்பதையும், இன்னும் அபிவிருத்தி அடையாததற்குக் காரணம் என்ன என்பதையும் பார்க்கவேண்டும். அப்படிப் பார்க்கும்பொழுது, நம்முடைய தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் ஜனத்தொகை நெருக்கம் எவ்வாறு இருக்கிறது என்பதையும் நாம் உணரவேண்டும். தமிழ் நாட்டைப் பொறுத்தவரை ஒரு சதுர மைலுக்கு ஜனத்தொகை 669 ஆக இருக்கிறது. பாரத நாட்டைப் பொறுத்த வரையில் ஒரு சதுர மைலுக்கு ஜனத்தொகை 380 என்றிருக்கிறது. தமிழ் நாட்டில் இருக்கின்ற விஸ்தீரணத்தையும் அதோடு ஒப்பிட்டுப் பார்க்கவேண்டும். விஸ்தீர்ணத்தை எடுத்துப் பார்க்கும் பொழுது தமிழ்நாட்டில் 4.19 என்றிருக்கிறது. பாரத நாடு என்று பார்க்கும்போது 7.8 என்றிருக்கிறது. இந்த நிலைமையை நாம் உணர்ந்து கொண்டோமென்றால், நாம் அபிவிருத்தி அடைந்திருக்கிறோமா இல்லையா என்பதை நம்மால் உணர்ந்து கொள்ள முடியும். நமது நாட்டில் ஜனத்தொகை அதிகமாக இருக்கிறது. இதன் காரணமாக எவ்வளவுதான் அபிவிருத்தி பெருகியிருந்தாலும் சராசரி என்று பார்க்கும் போது குறைவாக இருக்கிறது. மொத்தத்தில் பார்த்தால் நாம் அபிவிருத்தி அடைந்து கொண்டுதான் இருக்கிறோம் என்பதை நம்மால் உணர்ந்து கொள்ள முடியும். நம்முடைய மாநிலத்தில் நீர்ப்பாசன வசதி பெற்றிருக்கின்ற இடங்களைப் பார்த்தால், உடனடியாக இதிலிருந்து பலன் எதிர்பார்க்க முடியாது என்றிருந்தாலும் கூட, ஓரளவுக்குப் பலன் பெற்றுத்தான் இருக்கிறோம். பாரம்பிக்குளம்—ஆளியாறு திட்டத்தைப்பற்றி திரு. மதியழகன் அவர்கள் குறிப்பிட்டார்கள். இந்தத் திட்டம் நீர்ப்பாசனத்திற்கு மட்டுமல்ல, மின்சார உற்பத்திக்கும் ஓரளவு பயன் அளிக்கக் கூடிய திட்டமாக இருக்கும். இதில் வட்டி கொடுக்க வேண்டியிருக்கிறதே என்பது நமது பிரச்னை அல்ல, மக்களுக்கு வசதி ஏற்படவேண்டும் என்பது தான் நமது குறிக்கோள். இந்த வகையில் அரசாங்கத்திற்கு ஓரளவுக்கு நஷ்டம் வந்தாலும் பரவாயில்லை என்ற முறையில் தான் இப்போது டிரான்ஸ்போர்ட் துறை நடந்து வருகிறது. அந்த எண்ணத்தின் அடிப்படையில் தான் நாம் எல்லாக் காரியங்களையும் நடத்தி வருகிறோம். இரிகேஷனைப் பொறுத்த வரையில் தமிழ்நாட்டில், 'Net area irrigated as percentage to the net area sown' 38.6 என்றிருக்கிறது. அகில இந்திய ரீதியில் இருப்பது 18.1 என்றிருக்கிறது. இதில் மட்டுமல்ல, மின்சாரத்தை உபயோகிக்கின்ற விஷயத்திலும், 'per capital consumption of electricity' தமிழ்நாட்டில் 76 யூனிட் என்றிருக்கிறது. அகில இந்திய ரீதியில் பார்த்தால் 55 யூனிட் தான் இருக்கிறது. மோட்டார் வெஹிக்கிள்ஸை எடுத்துக்கொண்டால், Number of motor vehicles per 100 square miles தமிழ்நாட்டில் 110 என்றிருக்கிறது. அகில இந்திய ரீதியில் 53 என்றிருக்கிறது. இதையெல்லாம் மனதில் வைத்துக்கொண்டு கவனம் செலுத்துவோம் என்றால், நாம் இதில் போதிய அளவிற்குச் சாதனைகளைச் சாதித்து வருகிறோம்

என்பது புலனாகும். அதே நேரத்தில் நமது பொருளாதார நிலையும் உயர்ந்திருக்கிறது. மக்களும் நல்ல வசதி பெற்றிருக்கிறார்கள் என்பது தான் புலப்படும்.

நம் சர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்குப் பஞ்சப்படி வழங்குவதைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். அதுவும் முக்கியமாகச் சுதந்திராக் கட்சித் தலைவர் அவர்கள் ஏதோ நாங்கள் ஒரு விதத்தில் திருப்பத்தில் ஈடுபட்டு விட்டோம் என்று சொன்னார்கள். மத்திய அரசாங்கத்திலே கொடுத்தால் கொடுப்பதாகச் சொன்னோம், இப்போது கொடுக்க இயலாது என்று சொல்லி எங்கள் போக்கையே மாற்றிக்கொண்டதாகச் சொன்னார்கள். அது முற்றிலும் தவறு. அதற்கு ஒன்றும் ஆதாரமே இல்லை. உத்தியோகஸ்தர்களைப் பொறுத்த மட்டில், நம் சர்க்கார் எதிர்க் கட்சியினர் சொன்னாலும், சொல்லாவிட்டாலும் அவர்களுக்காக அவர்கள் வாதாடினாலும் வாதாடாவிட்டாலும் இந்த அரசாங்கம் அவர்களுடைய கோரிக்கைகளைக் கவனித்துக்கொண்டு தான் வருகிறது. 1960-ம் வருஷத்தில் சம்பள விகிதத்தில் மாறுதல் ஏற்பட்டு, பஞ்சப்படியையெல்லாம் சம்பளத்தோடு சேர்த்து, அவர்களுக்கு ஆண்டு தோறும் ஐந்து கோடி ரூபாய் வருமானம் வரும் அளவுக்கு வகை செய்தோம். இன்க்ரீஸ்ட் ரிட்டயர்மென்ட் பெனிஃபிட்ஸ் எல்லாம் கொடுத்தோம். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் பஞ்சப் படியை 25 கோடி ரூபாய் அளவுக்குக் கூட்டிக் கொடுத்தோம்.

"The Family Pension Scheme was liberalised. Pension to the employee's wife for life in the event of the death of the employee has been given and the limit which was previously fixed for five years has been reduced to one year.'

இதெல்லாம் செய்திருக்கிறோம். அப்புறம் இந்த வரவு-செலவுத் திட்டத்தில் தெரிவித்துள்ளபடி ஆரம்ப ஆசிரியர்களுக்கு குறைந்தபட்ச பென்ஷன் தொகை ரூ. 20 ஆக்கப்பட்டிருக்கிறது. அதே மாதிரி ப்ராவிடென்ட் ஃபன்ட் திட்டத்திலும், நாம் அவர்களுக்காக ப்ராவிடென்ட் ஃபன்ட் வசூலித்த போதிலும் தாராளமாக அவர்களுக்கு வேண்டிய கடன்களைக் கொடுத்துக்கொண்டு வருகிறோம். அந்த வசதியை அவர்கள் பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். இதில் எல்லாம் எத்தகைய நிவாரணம் அளிப்பது, எப்படி அளிப்பது என்பதெல்லாம் அரசாங்கத்தின் கவனத்தில் இருக்கும் விஷயம். இந்தப் பஞ்சப்படி உயர்வும் தொடர்ந்து அரசாங்கத்தின் கவனத்தில் இருந்துகொண்டு இருக்கிறது. பஞ்சப்படியை உயர்த்துவது என்பது தான் அரசாங்கத்தின் எண்ணம். அதிலும் கனம் எதிர்க் கட்சித் தலைவர் மற்ற உறுப்பினர்கள் எல்லோருக்கும் தேர்தல் கண் முன்னே நிற்கிறது. தேர்தல் கட்டத்தில் கொடுக்கவேண்டும், தேர்தல் நெருங்கும்போது கொடுத்தால் நல்லது என்று நினைக்கின்றதாகச் சொன்னார்கள். தேர்தலுக்காகக் கொடுப்பது இல்லை. கொடுக்கவேண்டும். இதற்கு 3 கோடியே 30 லட்சம் ரூபாய் ஆகிறது. எப்படிக் கொடுப்பது, எங்கிருந்து கொடுப்பது என்று பார்த்துத்தான் செய்யவேண்டும். நான் கொடுப்பதாகத் தான் இருக்கிறேன். கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் தாராள





மாகச் சொன்னார்கள். அக்டோபர் வரை போகலாம் என்று சொன்னார்கள். இது வரையில் போகாது. அக்டோபர் என்று அவர்கள் தேர்தல் தேதியை வைத்துக்கொண்டு சொல்லலாம். இதில் தேர்தலே இல்லை. கணக்குப் பார்த்து, எப்படிக் கொடுப்பது என்று பார்த்துக் கொடுக்க வேண்டியிருக்கிறது. அந்த வகையிலும் கவனம் செலுத்திக் கொண்டு வருகிறோம்.

நில வரியைப்பற்றிப் பல உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். நான் முன்பே குறிப்பிட்டதுபோல நிலம் வைத்துக்கொண்டிருக்கிறவர்கள் குறைவு. நிலம் இல்லாதவர்கள் ஏராளமாக இருக்கிறார்கள். அவர்களுடைய வசதிகளையும் பெருக்கவேண்டும். நிலம் வைத்துக்கொண்டிருக்கிறவர்கள் குறைவாக இருந்தாலும் அவர்களிடத்திலே ஓரளவு வரி வசூலித்து, அதைக் கொண்டு அவர்களைவிட தாழ்ந்த ஸ்திதியில் இருக்கிறவர்களுக்கு வசதிகளைப் பெருக்கவேண்டும் என்ற நோக்கத்தோடுதான் நிலவரி இருக்கிறது. நிலவரியைப் பார்த்தால் அது அதிகம் என்றும் கூறுவதற்கில்லை. லோக்கல் செஸ்ஸாக வசூலிப்பது அந்தந்த இடத்தில் பஞ்சாயத்து யூனியனால் செலவழிக்கப்படுகிறது. பஞ்சாயத்து யூனியனால் செலவு செய்யப்படுகிற ஒரு நிலையிலேதான் லோக்கல் செஸ் வசூலிக்கப்படுகிறது. மற்றபடி மொத்தத்தில் பார்த்தால் சாதாரண ஆண்டில், தஞ்சையை எடுத்துக்கொண்டால், குறைந்தபட்சம் செலவெல்லாம் போக, சம்பா பயிர் சாதாரணமாக விளைந்தால், இப்போது இருக்கும் விலைப்படி நெட் இன்கம் ரூ. 300-க்குக் குறையாது இந்த வரி, செஸ், சர்சார்ஜ் எல்லாவற்றையும் சேர்த்துப் பார்த்தால் ரூ. 35-க்கு மேல் போகாது. இப்போது அதிகமாக 25 சதவிகிதம் என்று கூறினார்கள். 25 சத விகிதம் என்பது திட்டத்தை நிறைவேற்றவேண்டுமென்று, நெருக்கடி நிலையில், வேறு வருவாய் இல்லை என்று தான் போடப்பட்டது. ஆனால், அது எவ்வளவு ஆகிறது. சராசரி ஏக்கருக்கு 4½ ரூபாய் அல்லது 5 ரூபாய் ஆகிறது. அதைத் தொடர்ந்து என்ன செய்தோம் என்றால், நெல் விலையை ஏற்றினோம். நெல் விலையை அதிகப்படுத்தியதிலிருந்து அவர்களுக்கு எவ்வளவு வருகிறது என்று பார்த்தால் ரூ. 30 வருகிறது. விற்கிற நெல், வைத்துக் கொள்கிற நெல், உற்பத்தி ஆகிற நெல் எல்லாவற்றையும் கணக்கிட்டுப் பார்த்தால் அவர்களுக்கு அதிகமாக 30 ரூபாய் வருகிறது. முப்பது ரூபாய் நெல் விலையை உயர்த்தி, பயிரிடுகிறவர்களுக்கு அந்தச் சலுகையை அளித்து அவர்களிடமிருந்து 4½ ரூபாய், 5 ரூபாய் அதிக வரியாக வசூலிக்கப்படுகிறது. ஆகையால் இது அக்கிரமமான வரி, அநியாய வரி என்று கூறுவது பொருந்தாது என்று சொல்ல விரும்புகிறேன்.

ஆனால் இவ்வாறு வரி கொடுத்துக்கொண்டு வருகிறவர்கள் சில சமயங்களில் பாதிக்கப்படுகிறார்கள். சில சமயங்களில் அவர்களுக்குப் பயிர் கெட்டுப்போய் விடுகிறது. அல்லது பயிர்களுக்குப் போதிய தண்ணீர் இல்லாமல் அல்லது குறிப்பிட்ட காலத்தில் தண்ணீர் வராமல் அல்லது வேறு காரணத்தினால் பயிர்கள் அடியோடு கெட்டுப் போய்விட்டன என்றால் அதற்கு விதிகள் இருக்கின்றன. வரி வஜா செய்ய விதிகள் இருக்கின்றன. அது கவனிக்

கப்பட்டு வருகிறது. இந்த ஆண்டில் வரி வசூல் செய்வது தாராள முறையில் கவனிக்கப்படும் என்று குறிப்பிட விரும்புகிறேன். அதைப்பற்றி கலெக்டர்களுக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. கலெக்டர்கள் கவனம் செலுத்தி வருகிறார்கள். அதே மாதிரி சரியாக விளையாத இடங்களில் குத்தகைக்குச் சாகுபடி செய்கிறவர்கள் குத்தகை கொடுக்க முடியாமல் இருக்கிறார்கள், அவர்கள் அப்புறப்படுத்தப்படுகிறார்கள் என்று கனம் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் அவர்களும் மற்றவர்களும் குறிப்பிட்டார்கள். கனம் அங்கத்தினர் அன்பில் தர்மலிங்கம் அவர்களும் குறிப்பிட்டார்கள். அதுவும் அரசாங்கத்தின் கவனத்தில் இருந்து வருகிற விஷயம். ஆனால் கொடுக்கக் கூடியவர்களும் நிலைமையைப் பயன்படுத்திக் கொண்டு ஒன்றுமே கொடுக்க மாட்டோம் என்று சொல்வதும் முறை அல்ல. இருக்கிற சட்டத்தைப் பயன்படுத்திக் கொண்டு நிலத்தின் சொந்தக்காரர்கள் குத்தகைதாரர்களைத் துன்புறுத்துகிறார்கள் என்றால் அது கவனிக்கப்படும். வேண்டுமென்றால் அதற்காகச் சட்டத்தை மாற்றவும் அரசாங்கம் தயங்காது. குத்தகைதாரர்களும் நியாயமாக எவ்வளவு கொடுக்க வேண்டுமோ, அந்த அளவுக்குக் கொடுக்கவேண்டும் என்று அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். அவர்கள் தலைவர்களையும் கேட்டுக் கொள்கிறேன். அவர்கள் துன்புறுத்தப்படுகிறார்கள், அப்புறப்படுத்தப்படுகிறார்கள் என்றால் அதற்கு இடம் தராத வகையில் அரசாங்கம் வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டு வருகிறது மேலும் எடுத்துக்கொள்ளும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மொத்தத்தில் நெல் உற்பத்தியைப்பற்றி கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டார்கள். நெல் உற்பத்தியைப் பற்றிக் குறைத்துக் கூறவில்லை. இரண்டாவது திட்டத்தின் போது 53 லட்சம் டன். இப்போது 59 லட்சம் டன் ஆகியிருக்கிறது. 70 லட்சம் டன் வரையில் ஆகவேண்டுமென்று எதிர்பார்த்தோம். நான் இதைப்பற்றித் திருப்பித் திருப்பிக் கூறியிருக்கிறேன். இரசாயன உரம் எதிர்பார்த்த அளவு கிடைக்காதது தான் குறைபாட்டுக்குக் காரணம். மைனர் இரிகேஷனுக்கு இவ்வளவு, பூச்சி மருந்து உபயோகிப்பதால் இவ்வளவு, விதைகள் உபயோகிப்பதால் இவ்வளவு, மற்றவைகளால் இவ்வளவு என்று வைத்திருக்கிறோம். இரசாயன உரத்தை உபயோகிப்பதால் அதிக பட்ச உற்பத்தி பெருகுவது எவ்வளவு என்று திட்டம் போட்டிருக்கிறோம். அதில் எதிர்பார்த்த அளவு இரசாயன உரம் கிடைக்கவில்லை. அந்த அளவுக்குத்தான் குறையும். வேறு குறையாது. விவசாயிகளும் வேறு முறைகளையெல்லாம் கையாள முற்படுகிறார்கள். அதற்காக அவர்களைப் பாராட்டுகிறேன். அவர்களுக்கு மேலும் மேலும் எந்த எந்த வகைகளில் உதவி அளிப்பது, கடன் கொடுப்பது என்பதைப் பற்றியெல்லாம் அரசாங்கம் கவனம் செலுத்திக் கொண்டுதான் வருகிறது. அதோடு விவசாயிகள் அதிகமாக உற்பத்தியைப் பெருக்க தீவிரத் திட்டங்கள், க்ராஷ் ப்ரோக்ராம் எல்லாம் கூட அனுசரிக்கப்பட்டு வருகிறது. ஒரு பக்கத்தில்





உற்பத்தி பெருகியிருக்கிறது என்று சொல்லுகிறார்கள், மற்றொரு பக்கத்தில் உற்பத்தி போதிய அளவு இல்லை என்று சொல்லுகிறார்களே என்று சொன்னார்கள். ஒன்று அகில இந்தியாவைப் பொறுத்தது, மற்றொன்று தமிழ் நாட்டைப் பொறுத்தது. தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில் உற்பத்தி குறைந்துவிட்டது என்று சொல்லுவதற்கில்லை. ரேஷன் அளவு 16 அவுன்ஸ், 18 அவுன்ஸ் என்றெல்லாம் சொன்னார்கள். இருக்கிறதை யாரும் எடுத்துக்கொண்டு போகவில்லை. இந்த ஆண்டு வைத்துக் கொள்ளலாம். எப்படி இருந்தாலும் சேமித்துக்கொள்ள இடம் கொடுக்கவில்லை. இன்றைக்குச் சாப்பிடுகிறார்கள். பெரிய நகரங்களில் நாம் இப்பொழுது கூட கோதுமையையும், அரிசியையும் சேர்த்து 10 அவுன்ஸ் கொடுக்கிறோம். மற்றபடி தானியங்களும் வந்துகொண்டிருக்கின்றன. மற்றபடி தானியங்களும் இருக்கின்றன. 'மார்கெட்டின் ஸர்ப்ளஸைத்'தான் நாம் 'ப்ரொக்யூர்' செய்கிறோம். எல்லாவற்றையும் 'ப்ரொக்யூர்' செய்யவில்லை. எல்லாவற்றையும் சேர்த்தால் 16 அவுன்ஸ், 18 அவுன்ஸ் இருக்கிறது. கூடியவரைக்கும் விலையையும் கட்டுப்படுத்தியிருக்கிறோம் என்று நான் திரும்பவும் சொல்லுகிறேன். விலைக் கட்டுப்பாடு இருக்கிறது. பரிபூரணமாக விலைக் கட்டுப்பாடு இருக்கிறது என்று சொல்லவில்லை. நாம் விற்பது ரூ. 1.44 ரூபாய் 1.22-க்குக் கூட நல்ல பச்சரிசி கிடைக்கிறது. அந்த அளவுக்கு கிடைக்கிறது. நகரத்தில் மட்டும் அங்கு வசதி அதிகமாக இருக்கிறது என்றால் நகரத்தில் வாங்கும் சக்தி அதிகமாக இருக்கிறது. மக்களிடத்திலே வாங்கும் சக்தி அதிகரிக்கவில்லை என்பதை நான் ஒருக்காலும் ஒத்துக்கொள்ள மாட்டேன். வாங்கும் சக்தி அதிகரித்துத்தான் இருக்கிறது. விலைவாசி உயர்வுக்கு வாங்கும் சக்தி அதிகமாயிருப்பதும் ஒரு 'ஃபாக்டர்'. கேரளாவில் இவ்வளவு பற்றாக்குறை இருக்கிறது என்று சொல்லப்பட்டாலும், கேரளாவிலும் கூட மார்க்கெட்டில் அரிசி கிடைக்கிறது. ஓரளவுக்கு நாம் விலையைக் கட்டுப்படுத்தியிருக்கிறோம். இன்னும் அதைவிடக் குறைந்த விலைக்கும் அரிசி விற்கப்படுகிறது என்ற தகவல் வராமல் இல்லை.

**திரு. மீ. கலியாணசுந்தரம்:** விலை கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது என்று கனம் முதல் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இந்த ராஜ்ய அரசாங்கம் தயாரித்த புள்ளிவிவரப்படி ஜூலையில் கன்ஸ்யூமர் இன்டெக்ஸ் 672, டிசம்பரில் 710. அதிலே நிற்கிறது அப்படியே. இதற்குத்தான் விலை கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது என்று அர்த்தமா? 710-ல் கட்டுப்படுத்தியிருக்கிறோம் என்று திருப்தி அடைகிறார்களா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** இந்தப் புள்ளிவிவரத்தை நானும் பார்த்திருக்கிறேன். இந்த உயர்வுக்குக் காரணம் அரிசி மட்டும் இல்லை, வேறு பல பொருள்களும் இருக்கின்றன.

கொள்முதல் செய்வதுபற்றி கனம் உறுப்பினர் குறை கூறினார்கள். விவசாயிகளை ஊக்குவிக்கும் வகையிலே சமீபத்தில் ஒன்றிரண்டு நாட்களுக்கு முன்பு பிரத்தியேகமாக உரம் வாங்குவதற்கு

என்று மத்திய அரசாங்கத்தினிடம் சொல்லி, அவர்கள் ரூ. 1½ கோடி கடன் அனுமதித்திருக்கிறார்கள். பிரத்தியேகமாக இது வரையிலும் கொடுப்பதைத் தவிர்த்து அந்தக் கடன் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

தொழில் துறையிலும் உற்பத்தி பெருகிக்கொண்டிருக்கிறது. சிறு தொழில்கள் பற்றிக் குறிப்பிட்டார்கள். சிறு தொழில்கள் கார்ப்பரேஷன் மூலம் வருமானம் வந்தது தெரியாமல் இருக்கலாம். மொத்தத்தில் பார்த்தால் ஒரு ஆண்டில் மட்டும் ரூ. 28.5 லட்சம் லாபம் வந்திருக்கிறது. தொழில் துறையிலும் லாபம் வராமல் இல்லை, உற்பத்தி பெருகாமல் இல்லை. விவசாயத்திலும் முக்கியமாகக் கவனம் செலுத்தி, உற்பத்தியைப் பெருக்கிக்கொண்டுதான் வருகிறோம். விவசாயிகளுக்கு எந்த வகையில் ஊக்கமும் ஆதரவும் அளிக்கவேண்டுமோ, உதவி, சலுகைகள் அளிக்க வேண்டுமோ அவைகளையெல்லாம் அளித்துக்கொண்டு வருகிறோம். அந்த அளவுக்கு விலையையும் அவர்களுக்கு ஓரளவுக்கு உயர்த்தி சலுகை அளித்திருக்கிறோம். இப்பொழுது இருக்கிற 'கண்ட்ரோல்டு எகானமி' என்பது தவிர்க்க முடியாதது. நமது மாநிலத்தைப் பொறுத்த வரையில் இங்கே ஷார்டேஜ் இல்லாமல் இருக்கலாம். ஷார்டேஜ் இல்லாவிட்டாலும், அகில இந்திய ரீதியில் ஷார்டேஜ் இருக்கிறது. ஷார்டேஜ் இல்லாவிட்டாலும் மிகவும் உபரியாக இல்லாத நிலைமையில் அப்பொழுதும் நாம் கண்ட்ரோல் பண்ணவேண்டியது அவசியம். தவிர்க்க முடியாத வகையில்தான் கண்ட்ரோலை ஏற்படுத்தியிருக்கிறோம். கண்ட்ரோலில் இந்த அரசாங்கத்திற்கு மோகம் இல்லை. ஆனால் நாம் மக்களைப் பாதுகாக்க வேண்டும். சென்ற ஆண்டில் நடந்த சம்பவங்களை நாம் கண்டோம். நான்கு மாநிலங்களும் ஒரே ஸோனாக இருந்த பொழுது, எவ்வளவு தூரம் அதிகமாகத் தானியங்கள் இங்கிருந்து கேரளாவுக்குச் சென்றது என்பது நமக்குத் தெரியும். அதனால் இங்கு பற்றாக்குறை ஏற்பட்டு மக்கள் அவதிப்பட்டதை, மக்கள் க்யூ வரிசையில் நின்று தவித்ததை கனம் உறுப்பினர்கள் மறந்திருக்க முடியாது. அந்த நிலையைத் தவிர்க்க வேண்டும் என்ற நோக்கத்தோடுதான் 'ப்ரொக்யூர்மெண்ட்' ஏற்படுத்தியிருக்கிறோம். தனித் தனி ஸோனாக இருக்கவேண்டும் என்று வற்புறுத்தி வருகிறோம். அப்படியிருந்தால்தான் நாம் எவ்வளவு மிச்சம் பிடித்து கேரளாவுக்குக் கொடுக்க முடியுமோ அவ்வளவு கொடுக்க முடியும். தனித் தனி ஸோனாக இருப்பதை எடுத்துவிடவேண்டும் என்று சிலர் தெரியாமல் சொல்லுகிறார்கள், அல்லது வேறு எண்ணத்துடன் சொல்லுகிறார்களோ என்னவோ தெரியாது. ஸோனை எடுத்துவிட்டால், கண்ட்ரோல் முடியாது, ப்ரொக்யூர்மெண்ட் முடியாது. மக்கள் அவதிப்படுவார்கள். தனி ஸோன் இருப்பதை எதிர்க்கட்சி உறுப்பினர்கள் ஆதரித்திருக்கிறார்கள். தனி ஸோனாக இருப்பதுதான் நலம் என்று நாம் வற்புறுத்திக்கொண்டு வருகிறோம். நாம் மார்கெட்டில் ஸர்ப்ளஸைத் தான் ப்ரொக்யூர் செய்கிறோம். விவசாயிகள் சொந்த உபயோகத்துக்கு, விதைக்கோ அல்லது உணவுக்கோ வைத்துக்கொண்டது போக மீதியைத்தான் கொடுக்கச் சொல்லு



கிறோம். வெளியிலே விற்கக்கூடியதை அரசாங்கத்திற்கு விற்க வேண்டும் என்று கேட்கிறோம். வெளியிலே விற்றாலும் அரசாங்கம் நிர்ணயித்திருக்கிற கட்டுப்பாடு விலைக்குத்தான் விற்கவேண்டும். அப்படிக் கொடுக்கும்பொழுது அரசாங்கத்தினிடம் கொடுங்கள் என்று தான் கேட்கிறோம். அப்படி அவர்களிடம் வாங்கி அதை அரசாங்கம் பகிர்ந்து கொடுக்கிறது. நமது மாநிலத்தில் 6 மாவட்டங்கள் பற்றாக்குறை மாவட்டங்கள், 6 மாவட்டங்கள் உபரி மாவட்டங்கள். பற்றாக்குறை மாவட்டங்களுக்குக் கொடுக்க வேண்டும். பாக்கி இருப்பதை கேரளாவுக்குக் கொடுக்கவேண்டும். எல்லாவற்றையும் சேர்த்து இந்த மாநிலத்திற்கு ஒரு குறைவும் இல்லாமல், இந்த மாநிலத் தேவையைப் பரிபூரணமாகக் கவனித்துக்கொண்டு, மேலும் இருப்பதை கேரளாவுக்குக் கொடுக்கிறோம். அந்த வகையில்தான் கொள்முதலைக் கையாளவேண்டியிருக்கிறது. ஒன்றிரண்டு இடங்களில் ஏதோ சில குறைகள் இருக்கலாம். குறையை மிகைப்படுத்திச் சொல்லுவது நல்லது அல்ல. ஒரு ஏக்கருக்கும் குறைந்த அளவு நிலம் வைத்திருக்கும் விவசாயிகளைப் பொறுத்தவரையில் கொள்முதல் கட்டாயம் இல்லை. ஆனால் அவர்களும் அவர்களுடைய தேவையைப் பூர்த்தி செய்துகொள்ளுவதற்கு விற்றுத்தான் ஆகவேண்டும். அப்படி விற்கும் பொழுது அரசாங்கத்தின் ஏஜெண்டுகளிடம் கொடுங்கள் என்று தான் வாங்கிக்கொண்டிருக்கிறோம். அதற்கு மேலே இல்லை. ஒரு ஏக்கர் 2 ஏக்கர், 10 ஏக்கர் என்று நிலம் இருப்பதற்குத் தகுந்த மாதிரி 2 மூட்டை, 4 மூட்டை, 8 மூட்டை என்று கொள்முதல் செய்யப்படுகிறது. அதைக் கூட கலெக்டர்கள் கவனித்துக்கொண்டு வருகிறார்கள். 'விளைச்சல் இல்லை, என்றால் கொடுக்க முடியாது' என்று சொன்னால் அதற்குப் பரிகாரம் அளிக்கவேண்டும் என்று நாங்கள் குறிப்பிட்டிருக்கிறோம். அந்த வகையில் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

நிர்வாகத்தில் சிக்கனத்தைப்பற்றி பல உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். பரந்த நிர்வாகத்திலே எந்த வகையிலே சிக்கனம் செய்வது என்பதை நிர்வாகத்தில் உள்ளவர்களின் அனுபவத்தைக் கொண்டு ஆராயவேண்டும் என்பது தான் அரசாங்கத்தின் எண்ணம். அந்த வகையில் இப்பொழுது ஆராய்ந்துகொண்டிருக்கிறோம். அப்படி ஆராயும்பொழுது வேலையில்லாத் திண்டாட்டத்தைப்பற்றியும் கவனிக்கப்படும். வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதுதான் திட்டத்தினுடைய அடிப்படை. வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதைப் பொறுத்தவரையில், அரசாங்கத்தின் நிர்வாகத்தைப் பொறுத்தவரையில், எத்தனை பேர்களுக்கு வேலை கொடுப்பது, எப்படிக் கொடுப்பது, வேலை எப்படி செய்கிறார்கள், மக்களை எப்படித் திருப்தி செய்வது, மக்களுடைய தேவைகளை நாம் எவ்வாறு பூர்த்தி செய்வது, அதற்குரிய வகையிலே நாம் நிர்வாகத்தை எப்படி மாற்றி அமைப்பது, திருத்தி அமைப்பது என்பதைப்பற்றியெல்லாம் கவனம் செலுத்திக் கொண்டு வருகிறோம். இதுவரையிலும் வேலை செய்கிறவர்கள், அதிலும் முக்கியமாக ஒரு ஆண்டுக்கு மேலாக வேலை செய்கிறவர்

கள் ஒருக்காலும் வேலையை விட்டு நீக்கப்படமாட்டார்கள், அவர்களுக்கு வேலை அளிக்கப்படும், ஒன்றும் குறைவு இருக்காது. ஆனால் நேற்று, அல்லது முன் தினம் அல்லது 4 நாட்கள், 10 நாட்களுக்கு முன்பு வேலைக்கு வந்திருந்தால், தேவையில்லாவிட்டாலும் அவர்களையும் கூட நாம் பிடித்து வேலையில் வைத்துக்கொள்ளவேண்டும், அவர்களை வேலையை விட்டு நீக்கக்கூடாது என்ற நிலை இருக்க முடியாது. அனாவசியமாக நாம் மக்களுடைய வரிப்பணத்தைச் செலவழிக்கக்கூடாது. பயன் படுத்தக்கூடாது. எந்தெந்த வகையில் இதிலெல்லாம் நாம் கவனம் செலுத்தவேண்டுமோ, அந்த வகையில் கவனம் செலுத்திக்கொண்டு வருகிறோம். யாருக்கும் வேலை போய்விடும் என்று யாரும் நினைக்க வேண்டியதில்லை.

மதுவிலக்குத் திட்டத்தைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். மதுவிலக்குத் திட்டம் நல்ல முறையில் தான் அமல் நடத்தப்படுகிறது. எங்கோ ஒரு இடத்தில் கொலை நடந்துவிட்டது என்றால் அது தான் கொட்டை எழுத்தில் பத்திரிகையில் வந்துவிடுகிறது. அதனால் ஊர் பூராவும் கொலை மயமாகப் போய்விட்டது என்று அர்த்தம் இல்லை. எங்கேயாவது ஒன்றிரண்டு இடங்களில் தவறு நடக்கலாம், கள்ளச் சாராயம் காய்ச்சலாம். மதுவிலக்குச் சட்டம் வந்தபிறகு குடிப்பழக்கம் உள்ளவர்களில் 100-க்கு 80 பேர்கள் மீட்கப்பட்டிருக்கிறார்கள். எந்தச் சட்டமும் பரிபூரணமாக அமல் நடத்தப்படும், ஒரு குற்றம் கூட நடக்காமல் நிறைவேற்றப்படும் என்பது முடியாது. மதுவிலக்குத் திட்டத்தைப் பொறுத்தமட்டில் அதை மாற்றும் உத்தேசம் இல்லை. கூடியவரையில் அது சரியாகத்தான் அமல்படுத்தப்பட்டு வருகிறது. அதுவும் நம்முடைய உள்துறை அமைச்சர் அவர்கள் ரொம்பக் கண்டிப்பு. சட்டப்படி பெர்மிட் கேட்டால் கூட அவருக்கு பெர்மிட் கொடுப்பதற்கு கை வருவதில்லை, அவ்வளவு கண்டிப்பு. ஆகவே, மதுவிலக்குத் திட்டம் எந்தவிதத்திலும் தளர்த்தப்பட மாட்டாது. அதுபற்றி நல்ல வகையில் கவனம் செலுத்தப்பட்டுக் கொண்டுவருகிறது.

சேலம் ஸ்டீல் பிளாண்டைப் பற்றி ரொம்ப நாட்களாகச் சொல்லிக்கொண்டு வருகிறோம். இது ஒரு 'காம்ப்ளிகேடட் ப்ராஸெஸ்'. சாதாரணமாக ஒரு திட்டத்தை ஆரம்பிக்கிறோம் என்றால் எல்லாம் ஒரே மாதிரி இருக்காது. கர்ப்ப காலம் பலவிதம். யானைக்கு ஒரு காலம், பெண்மணிக்கு ஒரு காலம் என்று இருக்கிறது. எல்லாம் ஒரே மாதிரி இருக்கிறதா? இதிலே கவனம் செலுத்தப்பட்டுத்தான் வருகிறது. ஒரு நாள் கூட 'வேஸ்ட்' ஆகவில்லை (குறுக்கீடு) யானை கர்ப்ப காலத்திற்கு மேல் கூட ஆகலாம். இது ஒரு பெரிய திட்டம், இது நிறைவேற்றப்படவேண்டும். இதில் பெரிய கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. இது நிச்சயம் வரும். அப்பொழுது சொன்னதைத் தான் இப்பொழுதும் சொல்கிறேன். இதில் ஒன்றும் மாற்றம் இல்லை. கனம் எதிர்க்கட்சித் துணைத் தலைவர் முன்பு சொன்னதைத் திருப்பிச் சொல்லவேண்டியதில்லையே, திருப்பிச் சொல்லுவதினால் சந்தேகமா என்று கேட்டார். சொன்னதை மறந்துவிடக்கூடாது என்று ஞாபகப்படுத்துவதற்குத்





தான் திருப்பிச் சொன்னேன். இந்த அரசாங்கத்தைப் பொறுத்தமட்டில், இதில் தொடர்ந்து கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. இந்தத் திட்டம் சீக்கிரம் வரும் என்பதை கனம் அங்கத்தினர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

இன்னும் ஒன்று கனம் எதிர்க் கட்சித் தலைவர் சொன்னார்கள் 'மெர்ஜர்' பற்றிச் சொன்னார்கள், மெடிகல், பப்ளிக் ஹெல்த் டிபார்மெண்ட்-களை இணைப்பது பற்றிக் குறிப்பிட்டார்கள். அது நீண்ட நாட்களாக இருந்து வரும் பிரச்னை. பல நிபுணர் குழுவினர்கள் சிபாரிசு செய்திருக்கிறார்கள். அவர்கள் குறிப்பிட்டதுபோல, ப்ரைமரி ஹெல்த் சென்டர், ஃபாமிலி ப்ளானிங் இவற்றிலெல்லாம் ஒன்றுக்கொன்று தடை ஏற்படுகிறது. டாக்டர் கொடுப்பது ஒரு இலாகா, நிர்வாகத்தை நடத்துவது ஒரு இலாகா. அனுபவத்தில் சிரமமாக இருக்கிறது. பரிசீலனை செய்து கொண்டிருக்கிறோம். யாருக்கும் பாதகம் ஏற்படாது. காலரா, டைபாய்ட் என்றால், அது அவர் பொறுப்பு, இது அவர் பொறுப்பு என்று குற்றம் காண இடம் கொடுக்கக் கூடாது என்பதுதான் அரசாங்கத்தின் நோக்கம்.

சிக்கனத்தைப்பற்றிச் சொன்னார்கள். கனம் அங்கத்தினர் திரு. அன்பில் தர்மலிங்கம் என்று நினைக்கிறேன், ஒரு அருமையான யோசனையைச் சொன்னார்கள். கவர்னர் பதவி வேண்டாம் என்று சொன்னார்கள். கவர்னர் அவசியம், ஸ்மால் சேவிங்ஸ் கமிட்டி வைஸ்-சேர்மன் பற்றிச் சொன்னார்கள். யாரையோ போட்டு இருக்கிறார்கள், வேறு கட்சிக்காரர்கள் என்று சொன்னார்கள். காங்கிரஸ் கட்சிக்காரர் என்று ஒன்றும் இல்லை. நேற்று வந்தார்கள் என்று தள்ளவில்லை. அவசரமாகச் சேருங்கள், எல்லாவற்றையும் உங்களுக்குத் தருகிறோம் என்பதும் இல்லை. இன்றைக்கு அந்த வைஸ்-சேர்மன் நல்ல பணி புரிகிறார்கள். அந்த அம்மையார் ஹானரரியாக வேலை செய்கிறார்கள். சம்பளம் கிடையாது. அதே மாதிரித்தான் ப்ரஸ் ரிலேஷன்ஸ் ஆபீசர். அந்த இடத்திற்கு அதிகாரிகளைப் போடுவது சரியாகாது. ப்ரஸ்ஸோடு தொடர்பு உள்ளவராக இருக்க வேண்டும் என்று போட்டிருக்கிறது. அவருக்கும் ஹானரேரியம் 250 ரூபாய் தான். மந்திரிகள் சுற்றுப் பிரயாணம் பற்றிக் குறிப்பிட்டார்கள். அவசியத்திற்கு அதிகமாக எதுவும் செய்யவில்லை (குறுக்கீடு) அது அவரவர்கள் மனப்பான்மையைப் பொறுத்தது.

ரூ. 188 கோடியில் ஒரு கோடி ரூபாய்தானே சிக்கனம் என்று சொன்னார்கள். அதிகாரிகள் அதிகம் என்றால், அது அவசியமாக இருக்கிறது. வேலைகள் அதிகமாகிவிட்டன, திட்டம் அதிகமாகிவிட்டிருக்கிறது. போன திட்டத்தைவிட இந்த நான்காவது திட்டம் இரட்டிப்பு மடங்காக இருக்கிறது. திட்டத்தைப் போட்டால், அதை நிறைவேற்ற ஆட்கள் வேண்டும். அதனால்தான் அதிகாரிகள் அதிகமாகிறார்கள். எவ்வளவு தூரம் குறைக்க வேண்டும் என்பதைக் கண்காணிக்கத்தான் எகானமி கமிட்டி அமைக்கப்பட்டிருக்கிறது.

[திரு. எம். பக்தவத்சலம்] [5th March 1966

விஜிலன்ஸ் டைரக்டர்பற்றிச் சொன்னார்கள். ஓய்வு பெற்ற பிரதம செக்ரடரியைப் போட்டிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அவர் நல்ல வேலை செய்கிறார். நான் அதைச் சமீபத்திலே ஆராய்ந்தேன். முன்னே அது எக்ஸ் பிராஞ்சாக இருந்தது. இந்த ஸ்தாபனம் இருப்பதால், இந்த விஜிலன்ஸ் கமிஷன் இருப்பதால், எல்லோருக்கும் ஒரு அச்சம் ஏற்படுகிறது. லஞ்ச ஒழிப்பு விஷயத்திலே அவர் பணி புரிந்துகொண்டு வருகிறார். எனக்குத் திருப்தி இருக்கிறது. மற்றொன்று மேலே ஒருவர் கண்காணிக்கிறார் என்றால், அதிகாரிகளுக்கு நம்பிக்கை இருக்கும். அப்படிப் போடப்படுபவர் அதிகாரியாக இருக்கக்கூடாது. சரியாகச் செய்தால் கூட நம்பிக்கை வராது. ஆகவே, விஜிலன்ஸ் கமிஷன் டைரக்டர் இண்டிபென்டன்டாக இருக்கவேண்டும். அதிகாரிகளில் ஒருவரைப் போட்டால், இண்டிபென்டன்டாக இருக்க முடியாது. ஆகவே ஓய்வு பெற்றவரைப் போட்டிருக்கிறோம். அவருக்குக் கொடுக்கும் சம்பளம் ஒன்றும் அதிகம் இல்லை, மத்திய சர்க்காரிலே கூட அவரைக் கூப்பிட்டார்கள். அவரையும், அவர் கேட்டுக்கொண்ட ஐந்தாண்டுக்குத்தான் போட்டிருக்கிறோம். விசேஷ சலுகை ஒன்றும் கொடுத்து விடவில்லை. நீதிபதிகளில் ஓய்வு பெற்றவரைப் போடலாம். ஓய்வு பெற்ற பிரதம செக்ரடரியைப் போட்டிருக்கிறோம்.

அதே மாதிரி வேறு சில திட்டங்களைப்பற்றிச் சொன்னார்கள். தூத்துக்குடி அனல் மின்சாரம்பற்றிச் சொன்னார்கள். அதற்கு டெக்னிகல் சாங்ஷன் வேண்டியிருக்கிறது. எண்ணூர் திட்டம் எடுக்கப்பட்டிருக்கிறது. தூத்துக்குடித் திட்டமும் எடுக்கப்படும். அதிலே ஒன்றும் சந்தேகம் இல்லை. மத்திய சர்க்காரோடு பேசினால், அதனால் ஏதோ தகராறு வந்து விட்டது என்பதல்ல. இதெல்லாம் குடும்ப விவகாரம் போல. தூத்துக்குடித் திட்டம் சீக்கிரமே வரும். அதைப்பற்றி அரசாங்கம் போதிய கவனம் செலுத்தி வருகிறது. கவனம் செலுத்தவில்லை என்று தவறாக நினைக்க வேண்டாம் என்று கூறி, மற்ற உறுப்பினர்கள் குறிப்பிட்ட விஷயங்களும் தொடர்ந்து அரசாங்கத்தின் கவனத்தில் இருக்கும், அவைபற்றி மானியங்கள் வரும்போது விளக்கங்கள் கொடுக்கப்படும் என்று கூறி முடிக்கிறேன்.

**திரு. கே. ஏ. மதியழகன் :** தலைவர் அவர்களே, பே கமிஷன் பற்றி நான் பேசியபோது குறிப்பிட்டேன். இரண்டாவது பே கமிஷன் நியமிப்பது பற்றிய யோசனை இருக்கிறதா என்று கேட்டேன். . . .

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அப்படி யோசனை இருக்கிறது போல அங்கத்தினர் ஏதோ புதிதாகச் சொல்லுகிறார். பே கமிஷன் நியமிக்க உத்தேசம் இல்லை.

**திரு. மீ. கலியாணசுந்தரம் :** பே கமிஷன் அமைக்கும் பிரச்சினை இருக்கட்டும். மத்திய சர்க்கார் கிராக்கிப்படி உயர்வு கொடுத்தால் அதே உயர்வை மாநில சர்க்காரும் கொடுக்க ஒப்புக் கொண்டிருக்



5th March 1966] [திரு. மீ. கலியாணசுந்தரம்]

கிறது. அது தொடர்ந்து பரிசீலனையில் இருக்கிறது என்று சாமர்த்தியமாக சொல்லிவிட்டார்கள். அது ஒப்புக்கொண்ட பழைய முடிவு தானே, அதில் பரிசீலனைக்கு என்ன இருக்கிறது ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** தொடர்ந்து அவ்வாறு செய்து கொண்டு வந்திருக்கிறோம். மேலும் அப்படியே செய்வோம். வேறு கருத்துக்கு இடம் இல்லை. இருந்தாலும் வேஸ் அண்ட் மீன்ஸ் கண்டுபிடிக்கவேண்டும். சீக்கிரத்தில் அது நிறைவேற்றப்படும்.

**திரு. மீ. கலியாணசுந்தரம் :** மத்திய சர்க்காரோடு பேச்சு வார்த்தையில் உதவி கிடைக்கவில்லை என்றால் ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அவர்கள் கொடுத்தாலும், கொடுக்காவிட்டாலும், நம்முடைய வேஸ் அண்ட் மீன்ஸ் நிலையைக் கண்டுபிடித்துக் கொடுக்கப்படும்.

**MR. SPEAKER:** The House will now adjourn and meet again at 8-30 a.m. on Monday, the 7th March 1966. 1-38 p.m.

The House then adjourned.

### IV.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

*Nil*

## Appendix I.

[*Vide* answer to Starred Question No. 177 at page 559 supra.]

*A.*—(*a*) There were about 620 trainees undergoing training in the Training Centre in August 1965 in the Bharat Heavy Electricals, Limited, Tiruvarambur, Tiruchirappalli.

(*b*) Three trainees whose progress was unsatisfactory were discharged on the 16th August 1965 As a protest against this about 400 trainees abstained from classes from 17th to 20th August 1965 and organized demonstrations demanding the reinstatement of the discharged trainees. As the appeals made by the authorities had no effect, twenty-seven trainees, who had been participating in the demonstrations were discharged on the 20th August 1965 and were asked to quit the school premises. On their refusal to leave the place, they were taken into custody by the police. Most of the other trainees were then willing to resume studies. While they were screened and were taken to their classes after their signing an undertaking for good behaviour, a section of the trainees tried to force entry into the training centre. They were taken into police custody. All these trainees were later released after they gave an undertaking for good behaviour.

**பதில்**—(அ) திருச்சிராப்பள்ளி திருவெறும்பூர் பாரத் கனரக மின்சாரத் தொழிற்சாலை லிமிடெட்டைச் சேர்ந்த பயிற்சி நிலையத்தில் 1965 ஆகஸ்டில் சுமார் 620 பேர் பயிற்சி பெற்று வந்தனர்.

(இ) இவர்களில் மூன்று பேர் பயிற்சியில் திருப்திகரமான முன்னேற்றம் காட்டாததால் 1965 ஆகஸ்டு 16-ம் தேதி முதல் நிறுத்தப்பட்டனர். இதை எதிர்த்து, பயிற்சி பெற்று வந்த சுமார் 400 பேர் 1965 ஆகஸ்ட் 17-ம் தேதி முதல் 20-ம் தேதி வரை வகுப்புகளுக்குச் செல்லாமல் மேற்சொன்ன மூன்று பேரையும் மீண்டும் சேர்த்துக் கொள்ளுமாறு கிளர்ச்சிகள் செய்தனர். அவற்றை நிறுத்துமாறு அதிகாரிகள் எவ்வளவோ கேட்டுக்கொண்டும் பயனில்லாமற்போகவே, இக் கிளர்ச்சிகளில் கலந்து கொண்ட 27 பேர்களை ஆகஸ்ட் 20-ம் தேதியன்று நிறுத்தப்பட்டு பள்ளியை விட்டு வெளியேறுமாறு உத்தரவிடப்பட்டனர், அவர்கள் மறுத்ததால் போலீசார் அவர்களைக் கைது செய்தனர். பயிற்சி பெற்றுவந்த மற்றவர்களில் பெரும்பாலோர் வகுப்புகளுக்குச் செல்லத் தயாராக இருந்தனர். விசாரணை நடத்தி. அவர்களிடமிருந்து நன்னடத்தை உறுதிமொழி எழுதிப் பெற்றுக்கொண்ட பிறகு, அவர்களை வகுப்புகளுக்கு அழைத்துச் சென்றபோது, பயிற்சி பெற்று வந்தவர்களில் ஒரு பகுதியினர் பயிற்சி நிலையத்திற்குள் வன்முறையில் நுழைய முயன்றனர். அவர்களைப் போலீசார் கைது செய்தனர். இவர்கள் அனைவரும் பின்னர் நன்னடத்தை உறுதிமொழி ஒன்றைக் கொடுத்ததன்மேல் விடுதலை செய்யப்பட்டனர்.



## *How to use the index.*

The index is arranged alphabetically. The Main Headings are printed from the margin and the sub-headings are indented from the Main Headings.

Under every Main Heading including various names, entries pertaining to proceedings other than Questions are indicated by printing immediately after the subject-matter within brackets, e.g., (M) for Motion, (C.A.) for Calling Attention, (R) for Resolution, (St.) for Statement, etc. An entry without any such indication will mean that it pertains to a question. In the case of Bills and Financial Business, the entry will be self-explanatory.

All the Bills are alphabetically arranged under the Main Heading 'Bill(s)'.

Various bodies like Committees, Councils, Boards, Corporations, etc., are consolidated under the said Main Headings, i.e., 'Committee(s)', 'Council(s)', 'Corporation(s)', etc.

Various Schools, Colleges, Conferences, Ports, temples and similar other broad subjects are shown in alphabetical order under these very Main Headings.

All the Papers laid on the Table of the House are indexed only under the Main Heading "Papers Laid on the Table".

Rulings and Observations from the Chair are indexed under the Main Heading "Chair".

A list of abbreviations used in the Index is given below:—

| | |
|---|---|
| A.M./Ad. Motion .. .. | Adjournment Motion. |
| Ann. .. .. .. .. | Announcement. |
| B.O.H. .. .. .. .. | Business of the House. |
| C.A. .. .. .. .. | Calling Attention to a Matter of Urgent Public Importance. |
| C.A.St. .. .. .. .. | Calling Attention Statement. |
| Consid. .. .. .. .. | Consideration stage of a Bill. This stage includes—<br>(i) Motion to refer to Select/Joint Select Committee.<br>(ii) Amendment to refer to Select/Joint Select Committee.<br>(iii) Amendment to circulate.<br>(iv) Motion to consider as reported by Select/Joint Select Committee.<br>(v) Amendment to recommit to Select/Joint Select Committee, etc. |
| Consid. Cl. .. .. .. | Consideration of clauses of a Bill. |
| D.E.E. .. .. .. .. | Demands for Excess Expenditure. |
| Dis. S.D. .. .. .. | Discussion for Short Duration on an urgent matter of Administration. |
| D.S.G. .. .. .. .. | Demands for Supplementary Grants. |
| G.A. .. .. .. .. | Governor's Address. |
| G.D. .. .. .. .. | General Discussion. |

| | |
|---|---|
| H.A.H.Dis./H.H.D. .. .. | Half-hour Discussion. |
| Int. .. ... .. .. | Introduction stage of a Bill. |
| L.A. ... ... .. .. | Legislative Assembly. |
| L.C. ... .. .. .. | Legislative Council. |
| M. ... ... .. .. | Motion. |
| P.M. ... ... .. .. | Privilege Motion. |
| R/Res. .. ... .. .. | Resolution. |
| St. ... .. .. .. | Statement. |

# INDEX TO MADRAS LEGISLATIVE ASSEMBLY DEBATES

EIGHTH SESSION OF THE THIRD LEGISLATIVE ASSEMBLY UNDER THE CONSTITUTION OF INDIA.

**26th and 28th February and 1st to 5th March 1966.**

**Volume XXXIV (Nos. 1 to 7).**


PAGES.

A

ACCIDENTS—
Fire accidents in Vellore .. .. .. .. .. .. .. 234

ADHI, Sri MUNU—
Budget, 1966–67, G.D. .. .. .. .. .. .. .. 524–526

ADVERTISEMENTS—
Prime Minister's Visit to Madras .. .. .. .. .. 236–238

AGRICULTURE.—
Agricultural Schools—
Location .. .. .. .. .. .. .. .. .. 9–11
Special training for ryots .. .. .. .. .. .. .. 321–323

ALAGAMUTHU, Sri T. P.—
Baby food, distribution .. .. .. .. .. .. .. 390–394
Budget, 1966–67, G.D. .. .. .. .. .. .. .. 254–257
Panchayat Union Council, Tirupathur .. .. .. .. .. 17
Small Industries Corporation, Madras State .. .. .. .. 387–390

ANANDAN, Sri L.—
Industrial Training Institute, opening at Kallakurichi .. .. 562

ANANDANAYAKI, Srimathi T. N.—
Budget, 1966–67. G.D. .. .. .. .. .. .. .. 443–448

ARANGANNAL, Sri Rama—
Agricultural Schools in Madras State .. .. .. .. .. .. 9–11
Budget, 1966–67, G.D. .. .. .. .. .. .. .. 331–337
Explosion at Madras harbour .. .. .. .. .. .. .. 470–471
Land Ceiling Act, 1961, surplus lands .. .. .. .. 563–565
Motor Car (Distribution and Sale) Control Order, 1959, cases of infringement .. .. .. .. .. .. .. .. 316–320
Repatriates from Burma, financial assistance (A.M.) .. .. .. 170–171

ARUMUGAM, Sri S.—
Land Ceiling Act, 1961, surplus lands .. .. .. .. .. 563–565
Tirumanimuthar rives water, pollution .. .. .. .. .. 14

PAGES

## B


BABY FOOD—
- Distribution .. .. .. .. .. .. .. .. 390–394

BALAKRISHNAN, SRI A. G.—
- Budget, 1966-67, G.D. .. .. .. .. .. .. .. 210–215
- Engineering Colleges, admission .. .. .. .. .. .. 232–234
- Lands in Marakkanam, maintenance by Forest Department .. 163–164
- Seed farms in South Arcot District, loss .. .. .. .. 6–9

BHAKTAVATSALAM, SRI M.—
- Betterment Levy and land revenue, collection in Manimuthar area (A.M.) .. .. .. .. .. .. .. .. 168–169
- Budget, 1966–67, presentation .. .. .. .. .. .. .. 20–60
- Budget, 1966–67, G.D. .. .. .. .. .. .. .. 600, 630–661,
- Committee of Privileges, election (M) .. .. .. .. .. .. 244
- Dispute between Tenants and Mirasdar of A.K.R. Farm, Karuppur (A.M.) .. .. .. .. .. .. .. .. 243–244
- Drought conditions in Thanjavur District (A.M.) .. .. .. 170
- House Committee, Election (M) .. .. .. .. .. .. 244
- Questions, supply of full information in answers .. .. .. 19–20
- Repatriates from Burma, financial assistance (A.M.) .. .. 170–171
- Somasundaram Mills, Coimbatore, lock-out (A.M.) .. .. .. 569–570

BHARAT HEAVY ELECTRICALS, TIRUVARAMBUR—
- Training centre, discharged trainees' representation .. .. .. 560–562
- Training centre, Trainees .. .. .. .. .. .. 559

BRIDGE—
- Bridge over the Palar between Vellore and Katpadi .. .. .. 321
- Over-bridge near Vellore Town Railway Station .. .. .. 320–321
- Railway over-bridge, Kodambakkam .. .. .. .. .. 320

BUG POISON—
- Restrictions on sale and purchase .. .. .. .. .. .. 155–157

BUSINESS OF THE HOUSE— 171, 380–381

BUS PERMITS—
- New routes in North Arcot and Chingleput Districts .. .. .. 309–314


## C


CHAIR—
- Announcement—
  - B.O.H. .. .. .. .. .. .. .. .. .. 171–380 381
  - Committee of Privileges, election .. .. .. .. .. 245
  - House Committee, election .. .. .. .. .. .. 244
- Obituary reference—
  - Sri Abdul Hameed Khan .. .. .. .. .. .. .. 151
  - Sri V. D. Savarkar .. .. .. .. .. .. .. 151




PAGES

## C—*cont.*


CHAIR—*cont.*
- Rulings and observations.
  - Adjournment Motion.
    - While consent was withheld to raise a subject as an adjournment motion, the Speaker observed that the right to give notice of an adjournment motion was often misused for discussion of even individual matters and matters which were not of public importance and that such notices deserved to be rejected in his Chamber itself without being brought to the notice of the House .. .. .. .. .. .. 243
  - Debate—
    - Members should not make vague allegations and they should take full responsibility for any statement that they make on the floor of the House .. .. .. .. .. .. 449
  - Objectionable expression—
    - During the general discussion on the Budget, a Member stated that even after three Five Year Plans, if the food production had not reached the expected targets, it only revealed that there could not be a more disgraceful plan. On a Minister's objection to the use of the word 'கேவலம்' (disgraceful), the Chair asked the Member to refrain from the use of that word. 448
  - Question Hour.—
    - Supply of full information—
      - On a Member's complaint that full information was not supplied by Ministers when questions were put, the Chief Minister denied the allegation and said that full information was collected and furnished to them as far as possible. Thereupon, the Speaker pointed out that while he had no authority to direct a Minister to give answers, it was the duty of the Ministers to look into the matter and give all relevant information .. .. .. .. .. .. .. .. 19–20

CHEEMAICHAMY, SRI K.—
- Budget, 1966–67, G.D. .. .. .. .. .. .. .. 188–192
- Children's literature, award of prizes .. .. .. .. .. 325–326
- Drinking water supply for Madurai City .. .. .. .. 13–14
- Elementary schools, particulars .. .. .. .. .. .. 568
- Land Ceiling Act, 1961, surplus lands .. .. .. .. .. 563–565
- National Defence Fund, collections .. .. .. .. .. 474–477
- Statues of Britishers in Madras City .. .. .. .. .. 239–242
- Trees in Therkkumalai Estate, Courtallam, felling for charcoal .. 164–165

CHIDAMBARANATHA NADAR, SRI A.—
- Budget, 1966–67, G.D. .. .. .. .. .. .. .. 192–197

CHILDREN—
- Children's literature, award of prizes .. .. .. .. .. 325–326
- Deserted children, particulars .. .. .. .. .. .. 160

CHINNAMUNUSAMY CHETTY, SRI N.—
- Budget, 1966–67, G. D. .. .. .. .. .. .. .. 552–553

CHINNARAJE, SRI C. K.—
- Budget, 1966–67, G. D.. .. .. .. .. .. .. .. 454–456

CHINNASAMI, SRI T.—
- Budget, 1966–67, G. D.. .. .. .. .. .. .. .. 220–222

PAGES

C—*cont.*


CHIRANJEEVULU NAIDU, Sri C.—
Budget, 1966-67, G. D. .. .. .. .. .. .. .. 501-504

COLLEGES.—
Engineering, admission .. .. .. .. .. .. .. 232-234

COMMITTEES.—
Committee of Privileges, election (M and Ann.) .. .. .. 245, 246
House Committee, election (M and Ann.) 244

CO-OPERATIVE BANK.—
District Co-operative Central Bank, South Arcot, audit of accounts .. 395

CO-OPERATIVE SOCIETY.—
Central Co-operative Marketing Society, Pudukkottai fertilizer scandal .. .. .. .. .. .. .. .. .. 395-396
Co-operative Credit Society, Parambur .. .. .. .. 15-16, 459-462

CO-OPERATIVE STORES.—
Palayamkottai-Tirunelveli Co-operative Stores .. .. .. 14-15

CORPORATION (S).—
State Small Industries Corporation, setting up .. .. .. 387-390

D

DAKSHINAMURTHY GOUNDER, Sri A. S.—
Budget, 1966-67, G. D. .. .. .. .. .. .. 434-440

DAM.—
Construction in Kandanarayanpatti .. .. .. .. .. .. 470

DHANDAYUTHAPANI, Sri M.—
Budget, 1966-67, G. D. .. .. .. .. .. .. .. 250-254

DHARMALINGAM, Sri A. P.—
Budget, 1966-67, G. D. .. .. .. .. .. .. 402-409

DURAIYARASAN, Sri A.—
Budget, 1966-67- G. D. .. .. .. .. .. .. 423-426
Police station, opening at Thiruppannavasal .. .. .. 470
State seed farms, Nattumangalam .. .. .. .. .. 1-5
Sub-Registrar's Office, opening at Mimisal .. .. .. 235-236

E

ELECTRICITY.—
Rural electrification, pilot projects .. .. .. .. .. 230-231

ELUMALAI, Sri T. P.—
Baby food, distribution .. .. .. .. .. .. .. 390-394
Budget, 1966-67, G. D. .. .. .. .. .. .. .. 413-417

ENGINEERING GRADUATES.—
Concessions for joining Army Service .. .. .. .. .. 239




PAGES

E—*cont.*


EXPLOSION.—
Explosion in Madras harbour .. .. .. .. .. .. 470-471

F

FILMS.—
Activities of night clubs, prohibition of exhibition .. .. .. 161-163

FINANCIAL BUSINESS.—
Budget, 1966-67—
Presentation .. .. .. .. .. .. .. .. 20-60
G. D. .. .. .. .. .. .. .. .. 172-222, 245-302, 326-379, 398-456, 478-554, 570-661

G

GANESAN, Sri SAW.—
Budget, 1966-67, G. D. .. .. .. .. .. .. .. 594-608, 636-637

GOVINDAN, PULAVAR K.—
Budget, 1966-67 G. D. .. .. .. .. .. .. .. 197-201

GOVINDARAJULU NAIDU, Sri R.—
Budget, 1966-67, G. D. .. .. .. .. .. .. .. 517-520

H

HAJA SHERIFF, Sri K. S. G.—
Budget, 1966-67, G. D. .. .. .. .. .. .. .. 428-432

I

INDUSTRIAL ESTATE.—
Katpadi .. .. .. .. .. .. .. .. .. 390

INSTITUTES.—
Industrial Training Institute, opening at Kallakurichi .. .. 562

J

JAYARAJ, Sri P.—
Budget, 1966-67, G. D. .. .. .. .. .. .. .. 426-428

JEEVARATNAM, Sri R.—
Bridge over the Palar between Vellore and Katpadi .. .. 321
Budget, 1966-67, G. D. .. .. .. .. .. 509-514
Fire accidents in Vellore .. .. .. .. .. .. 234
Industrial Estate, Katpadi .. .. .. .. .. .. 390
Over-bridge near Vellore Town Railway Station .. .. .. 320-321
Railway line between Vellore and Kancheepuram, survey .. .. 562-563

PAGES

K


KALYANASUNDARAM, Sri M.—
- Betterment levy and land revenue, collection in Manimuthar area (A.M.) .. 168, 169
- Bharat Heavy Electricals' High Pressure Boiler Plant, Training Centre, Tiruvarambur, representation on behalf of discharged trainees .. 560–562
- Bharat Heavy Electricals, Tiruvarambur, trainees in the Training Centre .. 559
- Budget, 1966-67, G. D. .. 579–594, 655 660–661
- Palayamkottai-Tirunelveli Co-operative Stores .. 14–15
- Somasundaram Mills, Coimbatore, lock-out (A. M.) .. 569–570

KAMALANATHAN, Sri M.—
- Budget, 1966-67, G. D. .. 418–421

KARCHA GOWDER, Sri T.—
- Budget, 1966-67, G. D. .. 359–361

KARIAMANICKA AMBALAM, Sri KR. RM.—
- Budget, 1966-67, G. D. .. 326–328

KARUNANITHI, Sri M.—
- Budget, 1966-67, G. D. .. 478-494 642, 643
- Drinking water supply scheme for Coimbatore .. 11–13
- Prime Minister's vist to Madras, advertisements .. 236–238
- Questions, request for supply of full information in answers .. 19
- Special agricultural training for ryots .. 321–333
- Tamil Pandits (Second Grade), number of posts .. 566–568
- Treasure trove at Devimangalam Village .. 397–398

KOSALRAM, Sri K. T.—
- Budget, 1966-67, G. D. .. 271–276

KOTHANDARAMA BAGAVATHAR, Sri C.—
- Engineering Colleges, admission .. 232–234
- Panchayat Unions in North Arcot district, construction of Office buildings .. 166–167
- Panchayat Unions in North Arcot district without Primary Health Centres .. 471–474
- Stage Carriages, offences detected .. 314–316

KRISHNAMOORTHY, Sri V.—
- Budget, 1966-67, G. D. .. 276–279 642
- Milk powder, manufacture .. 394–395

KRISHNAVENI, Srimathi A.—
- Budget, 1966-67, G. D. .. 539–542

KULANDAIAMMAL, Srimathi C.—
- Budget, 1966-67, G. D. .. 491–501




PAGES

K—*cont.*


KULANDAISWAMY GOUNDER, Sri M.—
- Budget, 1966-67, G.D. .. 536–539

KUNJAN NADAR, Sri A.—
- Baby food, distribution .. 390–394


L


LAKSHMIKANTHAM, Srimathi P. K. R.—
- Budget, 1966-67, G.D. .. 410–413

LAKSHMINARASAMMA, Srimathi B.—
- Budget, 1966-67, G.D. .. 354–355

LANDS—
- Land Ceiling Act, 1961 surplus lands .. 563–565
- Marakkanam, maintenance by Forest Deparement .. 163–164


M


MADHAVAN, Sri S.—
- Budget, 1966-67, G.D. .. 172–180
- Dam, construction in Kandanarayanpatti .. 470
- Defence Funds, collections .. 477
- Village Officer, R. S. Mangalam, complaint against .. 235

MANI, Sri K. S.—
- Budget, 1966-67, G.D. .. 355–359
- Dispute between Tenants and Mirasdar of A. K. R. Farm, Karuppur (A. M.) .. 242–244
- Land Ceiling Act, 1961, surplus lands .. 563–565

MANI, Sri M. S.—
- Newsprint paper mills, starting .. 466-470

MANI, Sri V. S. S.—
- Budget, 1966-67, G.D. .. 205–207

MATHA GOWDER, Sri J.—
- Budget, 1966-67, G.D. .. 544–548

MATHIALAGAN, Sri K. A.—
- Budget, 1966-67, G.D. .. 341–348

MILK POWDER—
- Manufacture .. 394–395

MOOKIAH THEVAR, Sri P. K.—
- Spinning Mills in Madurai City, closure .. 462–465

MOTIONS—
- Adjournment motions—
  - Betterment levy and land revenue, collection in Manimuthar area —consent withheld .. 167–169
  - Dispute between Tenants and Mirasdar of A. K. R. Farm, Karuppur—consent withheld .. 242–244

PAGES

M—*cont.*

MOTIONS—*cont.*

Adjournment motions—*cont.*

Drought conditions in Thanjavur district—consent withheld .. 169–170

Repatriates from Burma, financial assistance—consent withhheld 170–171

Somasundaram Mills, Coimbatore, lock-out—consent withheld .. 569–570

Committee of Privileges, election .. .. .. .. .. 244

House Committee, election .. .. .. .. .. .. 244

MOTOR CAR (DISTRIBUTION AND SALE) CONTROL ORDER, 1959—

Cases of infringement .. .. .. .. . .. .. 316–320

MURUGAIYAN, SRI P.—

Budget, 1966–67, G.D. .. .. .. .. , .. 448–452

Central Co-operative Marketing Society, Pudukkottai, fertilizer scandal arrest, of Officials .. .. .. .. .. .. 395–396

Co-operative Credit Society, Parambur .. .. .. .. 15–16
459–462

High Schools, opening in 1965–66 .. .. .. .. .. 568–569

MUTHUKARUPPANNASWAMI GOUNDER, SRI M. P.—

Budget, 1966–67, G. D. .. .. .. .. .. .. 529–533

MUTHULINGAM, SRI S.—

Budget, 1966–67, G.D. .. .. .. .. .. .. .. 378–379

MUTHUVELAPPA GOUNDER, SRI P. K.—

Budget, 1966–67, G. D. .. .. .. .. .. .. .. 291–293

N

NALLAMUTHU, SRI R.—

Budget, 1966–67, G. D. .. .. .. .. .. .. .. 432–434

NALLASIVAM, SRI K. R.—

Budget, 1966–67, G. D. .. .. .. .. .. .. .. 575–579

NANJUNDA ROW, SRI S.—

Budget, 1966–67, G. D. .. .. .. .. .. .. .. 364–367

Primary Health Centres, opening at Eriyodu and R. Vellodu .. 47

NARAYANAN, SRI R.—

Budget, 1966–67, G. D. .. .. .. .. .. .. .. 367–370

NARAYANASWAMI PILLAI, SRI K.—

Budget, 1966–67, G. D. .. .. .. .. .. .. .. 440–443

NARAYANASWAMY NAIDU, SRI G.—

Budget, 1966–67, G. D. .. .. .. .. .. .. .. 279–286

NATIONAL DEFENCE FUND—

Collections .. .. .. .. .. .. .. .. .. 474–478

NEDUNCHEZHIYAN, SRI V. R.—

Budget, 1966–67, G. D. .. .. .. .. .. .. 608–630
637–638





PAGES

O

OBITUARY REFERENCE—

Abdul Hameed Khan, Sri .. .. .. .. .. .. } 151
Savarkar, Sri V. D. .. .. .. .. .. .. .. }

OIL—

Presence of oil off Coromandel Coast .. .. .. .. .. 307–308

P

PALANI, SRI K. B.—

Budget, 1966–67, G. D. .. .. .. .. .. .. .. 504–509

PANCHAYAT UNIONS—

North Arcot district, construction of office buildings .. .. 166–167

Tamilnad Panchayat Union Employees' Association .. .. 17–19

Tirupathur Panchayat Union, Malaysian citizen being member .. 17

PAPER MILLS—

Newsprint Paper Mills, starting .. .. .. .. .. 466–470

PAPERS LAID ON THE TABLE—

Agricultural Produce Markets Act, 1959, Notifications .. .. 60, 61
223, 224
456

Annual Financial Statement .. .. .. .. .. .. 224

Beedi Industrial Premises (Regulation of Conditions of Work) Act, 1958, notification .. .. .. .. .. .. .. 63

Budget Speech and Appendices .. .. .. .. .. .. 224

Buildings (Lease and Rent control) Act, 1960, notification .. .. 64

Catering Establishments Act, 1958, notification .. .. .. 60

Constitution of India, notification .. .. .. .. .. 63

Demands for Grants and Detailed Budget Estimates .. .. .. 224

Detailed Agriculture, Fisheries, Animal Husbandry and Forests Budget .. .. .. .. .. .. .. .. 224

Detailed Budget Estimates of Revenue .. .. .. .. 224

Detailed Industries Budget .. .. .. .. .. .. 224

Detailed Irrigation Budget .. .. .. .. .. .. 224

Detailed Public Works Budget .. .. .. .. .. .. 224

Entertainments Tax Act, 1939, notification .. .. .. .. 63

Fourth Five-Year Plan, Programme for 1966–67 .. .. .. 225

Fourth Five-Year Plan, review .. .. .. .. .. 225

General Sales Tax Act, 1959, notification .. .. .. .. 63

General Sales Tax Rules, 1959, notification .. .. .. .. 555

Government Commercial Undertaking .. .. .. .. 224

Hindu Religious and Charitable Endowments Act, 1959, notifications .. .. .. .. .. .. .. .. .. 61, 62
223

Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1963, notifications .. .. .. .. .. .. .. .. 223, 224

Introduction to Budget .. .. .. .. .. .. .. 224

Irrigation Works (Construction of Field Bothies) Act, 1959, notification .. .. .. .. .. .. .. .. .. 63

Legislative Council, Resume (Part I) for Twenty-seventh Session .. 555

PAGES

P—*cont.*


PAPERS LAID ON THE TABLE—*cont.*

Mines and Minerals (Regulation and Development) Act, 1951, notification .. .. .. .. .. .. .. .. .. 223

Motor Vehicles Taxation Act, 1931, notifications .. .. .. 62, 223

Notice for Demands for Grants during 1966-67 .. .. .. 225

Occupants of Kudiyiruppu (Protection from Eviction) Act, 1961, notification .. .. .. .. .. .. .. 61

Official Language Act, 1956, notification .. .. .. .. 60

Panchayats Act, 1958, notification .. .. .. .. .. 62

Parks, Play-fields and Open Spaces (Preservation and Regulation) Act, 1959, notification .. .. .. .. .. .. .. 223

Plantations Labour Act, 1951, notification .. .. .. .. 64

Prohibition Act, 1937, notification .. .. .. .. .. 62

Public Service Commission Regulations, 1954, notification .. .. 555

Registration of births and deaths in local areas, notification .. 64

Requisitioning and Acquisition Immovable Property Act, 1956, notification .. .. .. .. .. .. .. .. .. 63

Statement of Posts and Scales of Pay .. .. .. .. .. 224

Travancore-Cochin Agricultural Income Tax Act, 1950, notification .. .. .. .. .. .. .. .. .. 459

PARVATHI ARJUNAN, SRIMATHI—

Budget, 1966-67, G. D. .. .. .. .. .. .. .. 572-574

PERIANNAN, SRI V. R.—

Budget, 1966-67, G. D. .. .. .. .. .. .. .. 373-375

PERUMAL, SRI A.—

Budget, 1966-67, G. D. .. .. .. .. .. .. .. 553-554

PERUMAL RAJU, SRI G. D.—

Budget, 1966-67, G. D. .. .. .. .. .. .. .. 574-575

POISON—

Bug poison, restrictions on sale and purchase .. .. .. .. 155-157

POLICE STATION—

Opening at Thiruppannavasal .. .. .. .. .. .. 470

POLYTECHNIC—

Nazareth .. .. .. .. .. .. .. .. .. 231-232

PONNAMMAL, SRIMATHI A. S.—

Budget, 1966-67, G. D. .. .. .. .. .. .. .. 337-341

PONNAPPA NADAR, SRI R.—

Budget, 1966-67, G. D. .. .. .. .. .. .. .. 261-265

PONNIAN, SRI K.—

Budget, 1966-67, G. D. .. .. .. .. .. .. 375-378

PONNUSAMY, SRI C.—

Budget, 1966-67, G. D. .. .. .. .. .. .. .. 398-402




PAGES

P—*cont.*


PRIMARY HEALTH CENTRES—

Opening at Eriyodu and R. Vellodu .. .. .. .. .. 471

Panchayat Unions in North Arcot without Primary Health Centres .. .. .. .. .. .. .. .. .. 471-474

PROHIBITION—

Opinion of State Government, enforcement .. .. .. 157-160

PUBLIC HEALTH—

Tirumanimuthar river water, pollution .. .. .. .. .. 14


## Q


QUESTIONS—

Request for supply of full information in answers .. .. .. 19-20


## R


RAILWAYS—

Railway line between Vellore and Kancheepuram, survey .. .. 562-563

RAJAGOPALASAMY, SRI R.—

Budget, 1966-67, G. D. .. .. .. .. .. .. .. .. 370-373

RAJANGAM, SRI N.—

Budget, 1966-67, G. D. .. .. .. .. .. .. .. .. 361-364

RAMACHANDRA REDDY, SRI N.—

Budget, 1966-67, G. D. .. .. .. .. .. .. .. .. 520-522

RAMASWAMI, SRI S. J.—

Bridge over the Palar between Vellore and Katpadi .. .. .. 321

Bus permits for new routes in North Arcot and Chingleput districts .. .. .. .. .. .. .. .. 309-314

Deserted Children, 1964-65 .. .. .. .. .. .. .. 160

National Defence Fund, collections .. .. .. .. .. 474-478

Railway over-bridge, Kodambakkam .. .. .. .. .. 320

Teachers in Arkonam Panchayat, transfer .. .. .. .. 165-166

RAMASWAMY NAIDU, SRI S.—

Budget, 1966-67, G. D. .. .. .. .. .. .. .. .. 328-331


## S


SAMBANDAM, SRI K. R.—

Budget, 1966-67, G. D. .. .. .. .. .. .. .. .. 533-536

SANKARAN, SRI V.—

Baby food, distibution .. .. .. .. .. .. .. .. 390-394

Budget, 1966-67, G. D. .. .. .. .. .. .. .. .. 207-210

Bug poison, restrictions on sale and purchase .. .. .. 155-157

Engineering Graduates, joining Army Service, Concessions .. .. 239

Films on activities of night-clubs, prohibition of exhibition .. 161-163

PAGES

S—*cont*.


SANKARAN, SRI V.—*cont*.
Presence of Oil off Coromandal Coast .. .. .. .. .. 307–308
Prohibition, enforcement opinion of State Government .. .. 157–160
Rural Electrification .. .. .. .. .. .. .. 230–231
Scheduled Castes and Tribes, Industrial training and employment opportunitis .. .. .. .. .. .. .. .. 151–155
Slums, improvement and clearance .. .. .. .. .. 227–230
Small Industries Corporation, Madras State .. .. .. .. 387–390
Tamil publications, financial assistance .. .. .. .. .. 323–325

SASIVARNA THEVAR, SRI T. L.—
Budget, 1966–67, G. D. .. .. .. .. .. .. .. 245–250

SCHEDULED CASTES AND TRIBES—
Industrial training and employment opportunities.. .. .. 151–155

SCHOOLS—
Agricultur l schools, Location .. .. .. .. .. .. 9–11
Elementary schools in Tamilnad .. .. .. .. .. 568
High schools newly sanctioned for 1965–66 .. .. .. .. 568–569
Hindu Higher Elementary School, Arumuganeri, conversion into Basic school .. .. .. .. .. .. .. .. 566

SEED FARMS—
South Arcot district, loss .. .. .. .. .. .. .. 6–9
State Seed Farms, Nattumangalam .. .. .. .. .. .. 1–5

SELVARAJAN, SRI M. S.—
Budget, 1966–67, G. D. .. .. .. .. .. .. .. 215–220
Hindu Higher Elementary School, Arumuganeri, Conversion into Basic school .. .. .. .. .. .. .. .. 566
Jain temples in Madras State .. .. .. .. .. 396–397
Polytechnic at Nazareth .. .. .. .. .. .. .. 231–232

SENGOTTUVELU, SRI N. P.—
Budget, 1966–67, G. D. .. .. .. .. .. .. 570–572

SHANMUGAM, SRI P. U.—
Budget, 1966–67, G. D. .. .. .. .. .. .. .. 265–270

SIVASUBRAMANIAM, SRI S.—
Budget, 1966–67, G. D. .. .. .. .. .. .. .. 549–552
National Water Supply Scheme, revival for Chidambaram Taluk .. .. .. .. .. .. .. .. .. 565

SLUMS—
Improvement and Clearance .. .. .. .. .. .. 227–230

SMALL-POX—
Deaths in Tindivanam Town .. .. .. .. .. .. 160–161

SOUNDARAPANDIAN, SRI N.—
Budget, 1966–67, G. D. .. .. .. .. .. .. .. 527–529

SOUNDARAVEL SERVAI, SRI AT. AP.—
Budget, 1966–67, G. D. .. .. .. .. .. .. .. 452–454




PAGES

S—*cont*.


SPINNING MILLS—
Madurai City, closure .. .. .. .. .. .. .. 462–465

SRINIVASAN, SRI C.—
Budget, 1966–67, G. D. .. .. .. .. .. .. .. 421–423

SRIRAMULU, SRI P. V.—
Budget, 1966–67, G. D .. .. .. .. .. .. .. 542–544

STAGE CARRIAGES—
Offences detected during sudden check .. .. .. .. 314–316

STATUES—
Statues of Britishers in Madras City .. .. .. .. .. 239–242

SUBBIAH, SRI A. K.—
Budget, 1966–67, G. D. .. .. .. .. .. .. .. 351–354
Drought conditions in Thanjavur District (A. M.) .. .. .. 169–170
Tamilnad Panchayat Union Employees Association .. .. .. 17–19

SUBBIAH MUDALIAR, SRI A. R.—
Budget, 1966–67, G. D. .. .. .. .. .. .. .. 293–296

SUBRAMANIA GOUNDER, SRI K. S.—
Budget, 1966–67, G. D. .. .. .. .. .. .. .. 257–261

SUBRAMANIAM, SRI R.—
Budget, 1966–67, G. D. .. .. .. .. .. .. .. 201–204

SUB-REGISTRAR'S OFFICE—
Opening at Mimisal .. .. .. .. .. .. .. 235–236

SWAMIDHAS, SRI A.—
Budget, 1966–67, G. D. .. .. .. .. .. .. .. 281–291


T


TAMIL PUBLICATIONS—
Financial assistance .. .. .. .. .. .. .. 323–325

TEACHERS—
Arkonam Panchayat, transfer .. .. .. .. .. .. 165–166
Tamil Pandits (Second Grade), number of posts .. .. .. 566–568

TEMPLES—
Jain temples in Madras State .. .. .. .. .. .. 396–397

THANGAVELU, SRI A.—
Budget, 1966–67, G. D. .. .. .. .. .. .. .. 290–298
Bug poison, restrictions on sale and purchase .. .. .. .. 155–157
District Co-operative Central Bank, South Arcot, audit of account .. .. .. .. .. .. .. .. .. 395–
Smallpox, deaths in Tindivanam Town .. .. .. .. 160–161

THIAGARAJA PILLAI, SRI M. D.—
Budget, 1966–67, G .D. .. .. .. .. .. .. 522–524

PAGES

T—*cont.*

TREASURE TROVE—
Devimangalam Village .. .. .. .. .. .. .. 397-398

TREES—
Therkkumalai Estate, Courtallam, felling for Charcoal .. .. 164-165

U

URKAVALAN, Sri P.—
Budget, 1966-67, G. D. .. .. .. .. .. .. .. 298-300

V

VADIVEL, Sri D. N.—
Budget, 1966-67, G. D. .. .. .. .. .. .. .. 348-351

VADIVELU, Sri M. P.—
Budget, 1966-67 G. D. .. .. .. .. .. .. .. 514-517

VEERABAHU, Sri A. P. C.—
Budget, 1966-67, G. D. .. .. .. .. .. .. .. 180-188

VELAPPAN, Sri C. V.—
Budget, 1966-67, G. D. .. .. .. .. .. .. .. 548-549

VILLAGE OFFICER—
*Complaint* against Village Officer, R. S. Mangalam .. .. .. 235

W

WATER SUPPLY—
Drinking water-supply for Madurai *City* .. .. .. .. 13-14
Drinking water-supply Scheme for Coimbatore .. .. .. 11-13
National Water-supply scheme revival for Chidambaram Taluk .. 565

WILLIAM, Sri M.—
Budget, 1966-67, G. D. .. .. .. .. .. .. .. 390-392

600 008
437994
N8:1, 31 N66
N66-34